# திருவோணத் திருவிழா



பேரா.க.கிருஷ்ணமூர்த்தி

கோயம்புத்தூர் - 18

பாயுநீ ரரங்கந் தன்னுள் பாம்பணைப் பள்ளி கொண்ட

மாயனார் திருநன் மார்பும் மரகத வுருவும் தோளும்

தூயதாமரைக் கண்களும் துவரிதழ் பவள வாயும்

ஆயசீர் முடியும் தேசும் அடியரோர்க் ககல லாமே?

- ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகள் போற்றி!

1. கேசவன் - 1
2. நாராயணன் - 77
3. மாதவன் - 156
4. கோவிந்தன் - 236
5. விட்டுணன் - 310
6. மதுசூதனன் - 422
7. திரிவிக்ரமன் - 485
8. வாமனன் - 523
9. சிரீதரன் - 585
10. இருடிகேசன் - 661
11. பத்மநாபன் - 733
12. தாமோதரன் - 783

# கேசவன்!



புத்துலகம் செய்வோம் - சத்ய யுகம் புத்தகம் 2018 திசம்பர் இருபத்தியோராம் நாளன்று வலையேற்றப்பட்டது. கிட்டத்தட்ட எழுதி இருமாதங்கள் கழித்தே புத்தகத்தை வலையேற்றினோம். புத்தகத்தில் தமிழ் நிலத்தில் சாதி, மதம், மொழி சண்டையின் பேரில் மனிதர் இரத்தம் சிந்தக்கூடாது என எழுதியிருந்தோம். மாறாக, எங்கள் ஊரிலேயே சாதிச் சண்டையில் இரத்தம் சிந்தியது எமக்கு பெரியளவில் உளத்துயரைக் கொடுத்தது.

ஊரில் தேவருக்கும் (மறவர், சேர்வை) மற்றும் நாயக்கருக்கும், இறங்குமுத்தம்மன் கோவில் திருவிழா தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டு, அதன் தொடர்ச்சியாக இரு தரப்பினரும் மோதிக் கொண்டார்கள். மோதலில் எடுக்கப்பட்ட காணொளிகள், தொலைக்காட்சி செய்திகள், நாளிதழ் செய்திகள் என ஏராளமாக வெளிவந்துள்ளன. எனினும் உண்மையில் என்ன நடந்தது என்பது பற்றி ஊடகங்களில் தெளிவான விளக்கங்கள் வெளியிடப்படவில்லை.

எமது புகழ் மிக்க ஊர் இப்படி சாதிக்கலவரத்திற்குப் பெயர் வாங்கியது எமக்கு ஏற்புடையதல்ல. எமது ஊரைப் பற்றியும், ஊர் மனிதர்கள், சாதிகளைப் பற்றியும், ‘‘யாம் யார்’’ புத்தகத்தில் ஓரளவிற்குப் பதிவு செய்திருக்கிறோம். எமது ஊர் தொப்பலாக்கரை எனும் முறையில் யாம் சில உண்மைகளை அறிவோம்.

ஊரில் சாதிவெறி பலவிதங்களில் முன்னெடுக்கப்படுகிறது. குறிப்பாக, ஊருணிக்குள் தேவருக்குச் சிலை வைத்தபின், அதீத உணர்ச்சியுடன் தேவர் சாதிவெறி ஊட்டி வளர்க்கப்படுகிறது. முன்பு மறவர்களே சாதிப் பற்றில் தீவிரமாக இருப்பார்கள். சமீப ஆண்டுகளில் சேர்வையும் சேர்ந்துகொண்டதால், பலம் பெருமளவில் கூடிவிட்டது. அதற்கேற்ப சாதிவெறியும் பலமடங்கு அதிகரித்துவிட்டது. பொதுவான ஊர்த் திருவிழாக்களில்கூட தேவர் பாடல்கள் தவிர வேறு பாடல்களே போடுவதில்லை.

தேவரைப் பார்த்து நாயக்கரும் சாதிவெறியராக மாறிக்கொண்டு வருகிறார். நாயக்கருக்கு நூற்பு ஆலை வேலையால் நல்ல வருமானம். ஊரில் பல சாதியாரும் வயல்களை விற்றுவிட அதைப் பெரும்பாலும் நாயக்கரே வாங்கியிருக்கிறார். பொருளாதார பலமும் ஆள்பலமும் கூடிவிட்டதால் நாயக்கருக்கும் சாதிவெறி தலைதூக்கிவிட்டது.

ஊரில் பேருந்து நிறுத்தத்திற்கு அருகே நாயக்கர் – மறவர் சாதியினர் வைத்திருந்த சில பேனர்களை யாம் கவனித்திருக்கிறோம். தேவர் பேனர்களில் அருவாள் தூக்கிய மனிதர்களே இடம் பெறுகிறார்கள். போட்டியாக நாயக்கர் இனமடா என ஏகப்பட்ட வசனங்களோடு இவர்கள் பேனர் வைக்கிறார்கள். சமீபத்தில் ஒரு நாயக்கர் திருமண விழாவிற்கு வைத்திருந்த ஏராளமான பேனர்களில் பாகுபலியும், ஜெயம்ரவியும் மட்டுமே இடம் பெற்றிருந்தார்கள். ஜெயம்ரவி நாயக்கராமே.

தேவர் - நாயக்கர் சாதிச் சண்டையில் அரசியலும் கலந்திருக்கிறது. யாம் ஒரு சேர்வைக்காரரை நன்கறிவோம். அவர் மீது மிகுந்த மதிப்பும் கொண்டுள்ளோம். நீங்களுமா சண்டையில் கலந்துகொண்டீர்கள் எனக் கேட்டால், சாதிப் பஞ்சாயத்து, நாம மட்டும் விலக முடியாது என்கிறார். இதுதான் தமிழர்களின் சாதிய மனப்பாங்கு. சாதி என வந்துவிட்டால் எவராலும் விலக முடிவதில்லை.

சில வருடங்களாகப் புகைந்துகொண்டே இருந்த சாதிப் பிரச்சனை, 02.10.2018 ஆம் தேதியன்று சாதிச் சண்டையாக உருக்கொண்டுவிட்டது. சண்டையைத் துவக்கியது தேவர்கள்தான். அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாகவே கூடி முடிவெடுத்துவிட்டார்கள். இரண்டு நாட்களாக யாரும் சமைக்காமல் பொதுச் சாப்பாடு போட்டிருக்கிறார்கள். அப்போதே காவல்துறை சுதாரித்து நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும்.

நாயக்கர்கள் புரட்டாசி மாதம் அவர்களது குலதெய்வமான பட்டத்தரசியம்மனுக்கு விழா எடுப்பது வழக்கமானதுதான். முன்பு பட்டத்தரசியம்மன், இறங்குமுத்தம்மன் என இருகோவில்களிலேயும் இலந்தைமுள் வேலிதான் போட்டிருந்தார்கள். வசதி வாய்ப்பு கூடியதால், தற்போது சுற்றுச் சுவர் கட்டியிருக்கிறார்கள். தேவர்கள் சிறப்பாகக் கொண்டாடும் ஆடிமாத இறங்குமுத்தம்மன் கோவில் திருவிழா 2018ஆம் ஆண்டில் கொண்டாட முடியவில்லை. நாயக்கர்கள் வழக்குத் தொடுத்து, கோவிலுக்கும் பூட்டுப் போட வைத்துவிட்டார்கள். இறங்குமுத்தமனுக்கு திருவிழா கொண்டாடினால் எல்லோரும் சேர்ந்து கொண்டாடுங்கள் அல்லது கோவிலைப் பூட்டுங்கள் என நீதிமன்றம் சொல்லிவிட்டது.

நமது திருவிழாவைக் கொண்டாடவிடமால் அவர்கள் எப்படி திருவிழாக் கொண்டாடலாம் என்பது தேவர்தரப்பின் குமுறல். வேண்டுமென்றே போட்டிக்காக நாயக்கரின் புரட்டாசித் திருவிழாவின்போது தேவர்களும் காப்புக்கட்டி ஒலிபெருக்கி வைத்து திருவிழா போல் நடத்த ஆரம்பித்துவிட்டார்கள். தேவர்கள் எந்தக் காலம் புரட்டாசித் திருவிழா நடத்தினார்கள்? இருதரப்பிலும் ஏட்டிக்குப் போட்டியான முன்னெடுப்புகள், பாட்டுகள். தேவர்கள் கலவரம் செய்ய வேண்டுமென்றே பேருந்து நிறுத்தம் அருகிலிருந்த மாடியில் கற்களைக் குவித்து வைத்துவிட்டார்கள். பெட்ரோல் குண்டுகளும் தயார். தேவர் தரப்பிலிருந்து ராக்கெட் வெடிகளும் நாயக்கர்மேல் வீசப்பட்டிருக்கின்றன.

தேவர்கள் தாக்கலாம் என்பதையறிந்த உள்ளூர் நாயக்கர்கள், திருவிழா போர்வையில் பக்கத்து ஊர்க்காரர்களையும் துணைக்கு அழைத்துக்கொண்டதாகத் தெரிகிறது. பெரியளவில் நாயக்கர்கள் அணிதிரளவில்லை போலும். கலவரம் நடக்கிறது என்பதையறிந்து ஓடோடி வந்த பக்கத்து ஊர்களின் நாயக்கர்களை, காவல்துறையின் காடு மேடெல்லாம் விரட்டித் திரிந்தது தனிக்கதை. கலவரத்தில் ஈடுபட்டதாக தேவேந்திரர் தெருவுக்குள் நுழைந்து சிலரை காவல்துறையினர் கைது செய்திருக்கிறார்கள். தங்களுக்கும் கலவரத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லையெனக் கூறியும் காவல்துறை விடவில்லையாம். பெண்கள் திரண்டு நாங்க வேற சாதி, சண்டைபோட்டவர்கள் வேற சாதி, அவர்களைப் போய்ப் பிடியுங்கள் என வலுவாகச் சத்தம் போட்டே ஆண்களை விடுவித்திருக்கிறார்கள்.

கலவரம் நடந்த அன்று மதியம் எமது மைத்துனர் பெருமாள் தலவர் வீட்டின் மாடியில் கம்புகட்டும் வேலை பார்த்திருக்கிறார். தேவர் சாதி இளவட்டங்கள் ஓடிய போது, சிலர் இருங்கப்பா, அமைதியா இருங்கப்பா எனச் சத்தம் போட்டதாகவும், ஆனாலும் சற்று நேரத்திற்கெல்லாம் மறவரும், சேர்வைக்காரரும் கூடி கல்லெறிய ஆரம்பித்துவிட்டதாகவும், மேற்கொண்டு வேலை செய்யாமல் வீட்டிற்கு வந்துவிட்டதாகவும் மைத்துனர் கூறினார்.

கலவரம் தொடங்கியதுமே இராஜகோபாலபுரத்திலிருந்து நாயக்கர்கள் ஆயுதங்களோடு வந்துவிட்டார்களாம். அருந்ததியர் தெருவைக் கடந்து, ஊரின் மேற்குப்பகுதி வழியாக நாயக்கர்தெரு நோக்கிப் போனதாகவும், சற்று நேரத்திற்கெல்லாம் பொம்மநாயக்கம்பட்டியிலிருந்து நாயக்கர்கள் வந்துவிட்டதாகவும் பார்த்தவர்கள் சொல்கிறார்கள். பின்னர் காவல்துறையினர்

விரட்டியடித்தாகவும், சிலரைக் கைது செய்ததாகவும் தெரிகிறது. முக்கியமாக, சில இளம்காவலர்கள் வயல்களில் ஓடி, நாயக்கரோடு மல்லுக்கட்டி, சிலரைக் கைது செய்து, அடித்து இழுத்து வந்ததை எமது அக்கா உட்பட பலர் பார்த்திருக்கிறார்கள். அந்த இளம் காவலர்களின் செயல் பாராட்டத்தக்கது.

சாதிச் சண்டை தொடர்பாக வந்த செய்திகளில் ஒருசிலவற்றைக் கொடுக்கிறோம். News 18 தமிழ்நாடு - கோவிலுக்குச் சொந்தம் கொண்டாடிய இரு தரப்பினர். போர்க்களமான கிராமம். www.youtube.com. http://yout.be/sNLazKSylGC வெளியிட்ட நாள் 06.10.2018. 50,574 பேர் பார்த்திருக்கிறார்கள். 243 பேர் விரும்பியிருக்கிறார்கள். 45 பேருக்குப் பிடிக்கவில்லை. புதிய தலைமுறை தொலைக்காட்சி-விருதுநகர் அருகே இருதரப்பினர் இடையே மோதல். 500 காவல்கள் குவிப்பு - https://youtu.be/Bwtt5fpcswM. வெளியிட்ட நாள் 03.10.2018. பதிவை 22,269 பேர் பார்த்திருக்கிறார்கள். 100 பேருக்குப் பிடித்திருக்கிறது. 24 பேருக்கு விருப்பமில்லை. கிராமக் கோயிலில் சாமி குடும்பிடுவதில் இரு தரப்பினரிடையே மோதல் 2 பேர் காயம் - தினமணி மதுரைப்பதிப்பு. நாள் 03.10.2018.

சண்டைக்குப்பின் ஊரில் அதீத அளவில் காவலர்கள் குவிக்கப்பட்டிருக்கின்றனர். கிட்டதட்ட நானூறு பேருக்கும் அதிகமிருக்கும் என்கிறார்கள். நாயக்கரும், தேவரும் ஊரைவிட்டுச் சென்றுவிட, இத்தனை காவலர்கள் குவிக்கப்பட்டது தேவையற்றது. சிறுகிராமத்தில் குளிக்க, உடை மாற்ற, உணவுண்ண காவலர்கள் திண்டாடியிருக்கிறார்கள். எங்கள் வீட்டு வராந்தாவிலும் பல காவலர்கள் தங்கியிருந்தார்களாம். பக்கத்து ஊர்களிளெல்லாம் காவலர்கள் குவிக்கப்பட்டிருக்கிறார்கள். அன்று தொடங்கி, கடந்த ஆறுமாதங்களாக ஊரில் காவலர்கள் இருந்துகொண்டே இருக்கின்றனர்.

சாதிச் சண்டை தொடர்பாக செட்டிகுளத்துத் தேவர்கள் திரண்டெழுந்தது ஆச்சரியமானது. அங்கு நடந்த சமாதானக் கூட்டமும், தேவர் சமுதாயத் தலைவர்கள் பேசிய பேச்சுகளும் வலைத்தளத்தில் பதிவேற்றப்பட்டுக் கிடைக்கின்றன. ‘நம்ம சாதியில நாலைந்து பேர சண்டை போடுறதுக்குன்னே ஒதுக்கி வைக்கணும், மற்ற சமூகத்தார பயங்காட்டி வைக்கணும்’ எனும் ரீதியில் பேசிய ஒரு சாதித் தலைவரின் பேச்சு கண்டிக்கத்தக்கது. அவ்வாறே உண்மையில்

என்ன நடந்தது என்பதை அறியாமல் 04.10.2018 அன்று அவசரப்பட்டு யூபியுப்பில் பதிவேற்றம் செய்த தொப்பளக்கரை கலவரத்திற்கு யார் காரணம்? https://youtu.be/C13f8pbt71U பதிவும். இந்தப் பதிவை 57,056 பேர் பார்த்திருக்கிறார்கள். பதிவு 454 லைக்குகளும், 291 டிஸ்லைக்குகளும் பெற்றிருக்கிறது.

தேவர் சாதித் தலைவறொருவர் பேசுகிறார் - நாமும் அவங்களும் ஒன்னு, நாம எப்பவுமே சண்ட போட்டதில்லையே, அவங்களும் ராஜா நாமளும் ராஜா, நாம எப்பவும் மாமன் மச்சானாத்தானே பழகுறோம்.

எத்தனை ஆழமான பேச்சு. நாமளும் ராஜா, அவங்களும் ராஜா. உண்மைதானே. மதுரையை நாயக்கர் ஆண்டபோது, இராம்நாட்டிலும், சிவகங்கையிலும், புதுக்கோட்டையிலும் ஆண்டது முக்குலத்தவர்தானே.

மதுரை, திருச்சி, இராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருவிதாங்கூரின் ஒரு பகுதியை உள்ளடக்கியிருந்த மதுரை நாயக்கர் அரசாட்சியின் 72பாளையங்களில், பாளையங்காரர்களாக, ஜமீன்தாரர்களாக, மிட்டா மிராஜுதாரர்களாக இருந்ததும் முக்குலத்தோர்தானே.

விசய நகரத்தின் பாண்டிய மண்டலத்தில் குழப்பங்கள் தலைதூக்கியதால், அதனை அடக்க பெரும் படையுடன் மதுரைக்கு அனுப்பப்பட்டவர்தானே விசுவநாத நாயக்கர். அவர் ஆட்சிக்காலத்தில் பிரிக்கப்பட்டதுதானே பாளையக்கார முறை. வீரத்திற்கும் மானத்திற்கும் பெயர்போன மறவர்கள் விசுவநாத நாயக்கரின் தலைமையை ஏற்று பாளையக்காரர்களாக மாறியது எப்படி? மறவர் விசுவநாத நாயக்கர் தலைமையை ஏற்றுக் கொண்டார் எனில், அன்றைக்கு மதுரையில் நாயக்கர் ஆட்சிக்கு எதிராகக் கலகம் செய்தது யார்? எந்தச் சாதி? அன்றைக்கு மதுரையில் அதிகமாக இருந்த சாதி எது? மறவர் பாண்டியர் எனில் நாயக்கர் ஆட்சியை எதனால் ஏற்றுக்கொண்டார்? மறவரைவிட நாயக்கர் வீரமானவரென்றா? நிர்வாகத்திறன் அதிகம் கொண்டவரென்றா? மறவரைவிட அதிகம் படித்தவரென்றா அல்லது தமிழைவிடத் தெலுங்கு மொழி உயர்வானது என்றா?

கயத்தாறிலும், தென்காசியிலும் நாயக்கரோடு கடைசிவரை மல்லுக்கட்டி நின்றவர்கள் யார்? எந்தச் சாதிக்காரர்கள்? தென்காசிப் பாண்டியர்கள் யார்? மறவரா? நாடாரா? தேவேந்திரரா?

தேவேந்திரர் எனும் சொல்லே தேவர்களுக்குப் பிடிப்பதில்லை எனத் தெரிகிறது. மள்ளர் என்றோ, மல்லர் என்றோ அழைப்பதில்லை. குடும்பமார் எனவும் கூப்பிடுவதில்லை. பள்ளனும் போய், எஸ்.சி. எனக் கூப்பிடுவதில்தான் முக்குலத்தவருக்குத் திருப்தி. காணொளில் பேசும் தேவர் சாதித்தலைவர், தொப்பலாக்கரையில் நாயக்கர், நாடார், எஸ்.சி. இருக்கிறார்கள் என்கிறார். எஸ்.சி. என்றால்?

எப்போதிலிருந்து மள்ளருக்கு எஸ்.சி. பட்டம் முக்குலத்தோரே? பிங்கல நிகண்டு, திண்ணியோன் என்பதற்கு கொடுக்கும் விளக்கத்தைப் பாரும்.

வியவன் விண்டன் வீரன் மிண்டன்
விறலோன் பொருநன் விடலை மள்ளன்
றிறலோன் பண்ணவன் றிண்ணியோன் பெயரே - (பி.நி.145)

படைவீரர் யார் தெரியுமா?

மறவர் கூளியர் மள்ளர் பொருந
ரிகலர் செருநர் வாளாளர் வாளுழவர்
படரே வீரர் படையாளராரும் - (பி.நி.146)

மறவர், கூளியர், மள்ளர், பொருநர், இகலர், செருநர், வாளாளர், வாளுழவர், படர் இவர்கள்தான் வீரர்களாம் அன்று. அதாவது ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர். தமிழ் நிலத்தில் போர்த்தொழில் செய்தவர் மறவர் மற்றும் மள்ளர். மற்ற பெயர்களெல்லாம் மறைந்து விட்டன. மள்ளர்தான் பள்ளரா எனில், ஆம். முக்கூடற்பள்ளு தெளிவாகச் சுட்டுகிறது. பள்ளரின் பெயரே மள்ளர். மள்ளர் என்றால் வீரமானவர் எனப் பொருள். அருந்திறல் வீரர்க்கும் பெருந்திறல் உழவர்க்கும் மள்ளர் என்று பெயர்.

ஊரே சேர்ந்து எனச் சொல்லமுடியாவிட்டாலும், ஊரின் பெரும்பாலான சாதிக்காரர்கள் இணைந்து கும்பிடும் திருவிழாவில், ஏன் முத்துராமலிங்கத் தேவருக்கு அவ்வளவு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது? இறங்கிமுத்தம்மன் விழா என்றாலும் பல்லக்கில் எடுத்துவருவது மயில் வாகனத்தைத்தான். மயில் வாகனத்தை மறைத்து, முத்துராமலிங்கத் தேவர் படத்தை வைத்தது யார்? எப்போதிலிருந்து? கலவரத்திற்கு யார் காரணம் எனப் பதிவிட்ட மூவேந்தர் முன்னேற்றக் கழக இளைஞரணித் தலைவர் அறிவாரா? பிள்ளைமாரும், ஆசாரி, பூசாரியும் வரிக் கொடுத்துக் கொண்டாடும் திருவிழாவில், எதற்காக தேவர் சாதிப் பாடல்கள் மட்டுமே போடப்படுகின்றன? நாடகத்திலும் ஓயாமல் தேவர் பாடல்களையே பாடுவது ஏன்?

இறங்கு முத்தம்மன் கோவிலின் வரலாறென்ன? எத்தனை ஆண்டுகளாக ஊரில் இறங்கு முத்தம்மன் இருக்கிறார்? ஊரில் இறங்கு முத்தம்மன் எனப் பெயர் வைத்திருக்கும், வைக்கும் சாதிகள் எவையெவை? நாயக்கரில் யாருக்காவது இரங்கம்மாள், இரங்கு முத்தம்மாள் எனப் பெயர் வைக்கப்பட்டுள்ளதா? தேவருக்குக் குலதெய்வம் முனியப்பசாமிதானே. பட்டியருகே சுத்தமடம் செல்லும் சாலையில் சிறியதொரு மண்மேடாக இருந்தது. யாம் பார்த்திருக்கிறோம். சேர்வைகளுக்கு வாக்குவழி கருப்பசாமி குலதெய்வம். இறங்கு முத்தம்மன் யாருக்குச் சொந்தமானவர்?

இலந்தைமுள் போட்டிருப்பதால் எங்களுக்குச் சொந்தமானதென்கிறார் நாயக்கர். நாயக்கர் தொப்பலாக்கரையில் எப்போதிலிருந்து இருக்கிறார்? பூர்விகமாகவே தொப்பலாக்கரையைச் சேர்ந்தவரா அல்லது இடையிலிருந்து இருக்கிறாரா? இடையிலிருந்து எனில், நாயக்கர் மதுரையைப் பிடித்தபின் எனில் சரியாக இருக்குமா? என்னில் ஒரு முன்னூறு வருடத்திற்குமுன் தொப்பலாக்கரைக்கு குடி வந்தவர் நாயக்கர் எனலாமா?

தொப்பலாக்கரை நாயக்கர் தங்களை இராஜகம்பள நாயக்கர் என்கிறார். நாயக்கர் யார்? நாயக்கரில் எத்தனை பிரிவுகள், உட்பிரிவுகள் இருக்கின்றன? நாயக்கர்களின் குணமென்ன? அவர்களின் பண்பாடென்ன? பேசும் மொழி எத்தகையது? தொப்பலாக்கரையில் மறவர் சேர்வை பள்ளர் பறையர் நாடார் ஆசாரி பூசாரி மற்றும் பிள்ளை என இத்தனை தமிழ்ச் சாதிகள் இருந்தும் நாயக்கர் ஒற்றை சாதியாய் வீரம் காட்டுவது எப்படி? தொப்பலாக்கரையில் நாயக்கரை ஆதரித்தது

எந்தச் சாதி ? நாயக்கரோடு மாமன், மச்சான் எனச் சொந்தம் கொண்டாடி வந்தது எந்தச் சாதி?

நாடாரும், பள்ளரும், பறையரும், பிள்ளையும், மறவரும் ஒன்றிணைந்து எதிர்ப்பார்கள் எனும் நிலை இருந்திருக்குமேயானால், வெளியூர் நாயக்கர்கள் ஆயுதமேந்தி ஊருக்குள் நுழைய முடியுமா?

அருகேயிருக்கும் நாயக்கர்கள், தாம் நாயக்கர் சாதி என ஒன்றாக இணையும் போது, தமிழ்ச் சாதிகளால், நாங்கள் தமிழர்கள் என இணைவதைத் தடுப்பது எது? யார்? நாயக்கரை உறவினர் என ஏற்றுக்கொள்ளும் முக்குலத்தவர், தமிழ்ச் சாதிகளை புறம் தள்ளுவதும், அடக்குவதும், மோதுவதும், எதிரியாகக் கட்டமைப்பதும் எதனால்? எப்போதிலிருந்து? எதற்காக?

தொப்பலாக்கரையைச் சுற்றியிருக்கும் ஊர்களில் நாயக்கர்கள் பெருமளவில் வசிக்கின்றனர். நாயக்கர் என்றில்லாமல் தெலுங்குபேசும் செட்டியார்களும், கவுண்டர்கள், கன்னடம் பேசுபவர்களும் இருக்கின்றனர். அத்தனை ஊர்களிலும் பெருமளவிலான நிலங்களை வைத்திருப்பது அவர்கள்தான். இராசகோபாலபுரத்தில் நாயக்கரும் பறையரும் வசிக்கிறார்கள். பெருவாரியான நிலம் நாயக்கரிடமே இருக்கிறது. பொம்மநாயக்கம்பட்டியில் நாயக்கரும் பள்ளரும் இருக்கிறார்கள். நிலம் நாயக்கர் வசம். புல்லநாயக்கன்பட்டியில் நாயக்கரும் நாடாரும் இருக்கின்றனர். கிருஷ்ணாபுரம் எனும் ஊரில் மிகக் குறைவான மக்களே இருக்கின்றனர். கன்னடம் பேசும் இவர்களிடம் இருக்கும் நிலங்கள் மிக அதிகம். இவ்வாறே தெற்கத்தி கரிசல் நிலத்தில் ஏராளமான நிலங்களை வைத்திருக்கும் தெலுங்கு பேசும் மக்களுக்கு இவ்வளவு நிலங்கள் எப்படிக் கைமாறியது? இவர்கள் தமிழ் நிலத்திற்கு வருவதற்கு ன், இந்த நிலங்களெல்லாம் யாரிடம் இருந்தன? யாருக்குச் சொந்தமாக இருந்தன? நாயக்கர்கள் அத்தனை ஊர்களிலும் ஏராளமான நிலங்கள் வைத்திருக்கிறார்கள். குறிப்பிட்ட சாதிக்காரர்கள் நிலம் வைத்திருக்கக் கூடாது என சட்டம் போட்டது யார்? எப்போதிலிருந்து? கரிசல் காட்டில் இவ்வளவு தெலுங்குக்காரர்கள் இருப்பதற்கும், அன்றைக்கு இப்பகுதியில் பெரிய அரசாக இருந்த எட்டயபுர சமஸ்தானத்திற்கும் உள்ள தொடர்புகள் என்ன? தொப்பலாக்கரை ஊர் எட்டையபுர சமஸ்தானத்திற்குக் கீழே இருந்ததா அல்லது இராமநாதபுர சமஸ்தானத்திற்கு உட்பட்டு இருந்ததா?

தொப்பலாக்கரையின் பெரும்பாலான நிலங்கள் நான்கு பிராமணக் குடும்பங்களுக்கு மட்டும் சொந்தமானதாக இருந்தது எப்படி? தமிழ்ச் சாதிகள் நிலம் வைத்துக்கொள்ள உரிமையில்லை. பிராமணரும், நாயக்கரும் வைத்துக் கொள்ளலாம். ராஜா தமிழ் ராஜாதானே. ராஜா எல்லா மக்களுக்கும் ராஜாதானே. ராஜா அனைத்து மக்களையும் சமமாக நடத்த வேண்டும்தானே. ராஜா குடிமக்கள் அனைவருக்கும் ஒரே நீதி வழங்க வேண்டும்தானே. பிற சாதியாரை அர்ச்சகராக்கிவிட்டு, தமிழ்ச்சாதிகள் உள்ளே நுழைந்ததால் தீட்டாகிவிட்டது எனக் கோர்ட்டுக்குப் போகும் ராஜா யாருக்கு ராஜா? எந்தச் சாதிக்கு ராஜா? எந்த நாட்டுக்கு ராஜா? ராஜா எப்போதிலிருந்து ராஜாவானார்? எப்படி ராஜாவானார்?

போடும் பொய்த்திரையைக் கிழித்துவிடும் காலம் புரியும் அப்போது மெய்யான கோலம்.

காவலரே வேஷமிட்டால் கள்வர்களும் வேற்றுருவில் கண்முன்னே தோணுவது சாத்தியமே.

காத்திருந்து கள்வருக்கு கைவிலங்கு பூட்டிவிடும் கண்ணுக்குத் தோணாத சத்தியமே.

பொய்மை எப்போதும் ஓங்குவதும் இல்லை, உண்மை எப்போதும் தூங்குவதும் இல்லை.

(நன்றி - நினைத்ததை முடிப்பவன்)

தோழர் சு.வெங்கடேசன் எழுதி, 2011 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதமி விருது பெற்ற புதினமான காவல் கோட்டத்தில், மதுரை நாயக்கர் வரலாறு சுட்டிக்காட்டப்படுகிறது. அதோடு அன்றைய காவல்காரர்களான கள்ளர்களின் சரித்திரமும் நாவலில் இடம்பெற்றுள்ளது. பத்து ஆண்டுகள் கடும் உழைப்பில் தயாரானதாகக் கூறப்படும் இந்த நாவலுக்கான விதைநூல் மதுரா விஜயம்.

பதினான்காம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகக் கூறப்படும் மதுரா விஜயா அல்லது விக்ரகம்பராய சரித்ரா எனும் இந்த சமற்கிருத காவியம், காவியத்தின் தலைவனான இளவரசன் கம்பண்ணரின் மனைவியான கங்காதேவி அரசியாரால் இயற்றப்பட்டுள்ளது.

1916இல் வெளியிடப்பட்ட இந்த நூலுக்கு வழங்கப்பட்ட அணிந்துரைகளில் ஒன்றான செந்தமிழ் - (தொகுதி கரு. பகுதி 2) இவ்வாறு புகழ்கிறது. “இதிலுள்ள சுலோகங்கள் எல்லாம் சொற்சுவை பொருட்சுவை நிரம்பிய செவ்விய நடையுடையனவாக விளங்குகின்றன. பெண் மக்களுள் வடமொழி வல்லுநராய் வைதுஷ்யமும் சாஹித்தியசக்தியுமுடையவராய் காவ்யங்கள் செய்வோருமுளர் என்பதற்கு இது நிதர்சனமாயிருப்பது பற்றி மிகவும் பாராட்டற்பாலது”

நூலைப்பதிப்பித்தவர்கள் ஜி.ஹரிஹர சாஸ்திரி மற்றும் வி.ஸ்ரீநிவாச சாஸ்திரி. முன்னவர் சமற்கிருத பண்டிட். பின்னவர் தொல்லியல் பண்டிட். திருவனந்தபுரத்தில் பணி செய்திருக்கிறார்கள்.

நூல் முழுமையாகக் கிடைக்காவிட்டாலும் கிடைத்திருக்கும் 86 பாடல்கள் மூலமாக, தமிழகத்திற்கு வந்த நாயக்கரைப் பற்றிய தகவல்கள் அறியப்பட்டுள்ளன.

இருவரும் நூலைப் பற்றிய சிறந்ததொரு முன்னுரை வழங்கியிருக்கிறார்கள். திருவாங்கூர் மாநிலத்தின் தொல்லியல் கண்காணிப்பாளரான டி.எ.கோபிநாத், நீண்டதொரு முன்னுரையும் வழங்கியிருக்கிறார். நூல் விசயநகரத்தின் ஆரம்ப கட்டத் தகவல்களைத் தருவதோடு, தமிழக நாயக்கர் வரலாற்றிற்கும் தகுந்த சான்றாக அமைகிறது.

துங்கபத்திரை நதிக்கரையில் விசயநகரப் பேரரசை (1336-1646) உருவாக்கிய ஹரிஹரரின் தம்பி புக்க ராஜாவின் மகனே கம்பணன். பெரும்படையுடன் தலைநகரான பம்பாவிலிருந்து (கன்னடம் - ஹம்பா) கிளம்பிய கம்பணன், பல்லவப் பகுதியிலிருந்த சம்பா அரசை நோக்கி (சம்புவரையர்கள்) படை நடத்தியிருக்கிறார். பாலாற்றுக் கரையில் எதிர்த்த சம்பா மன்னர் பின்வாங்கியிருக்கிறார். பின்னர் காஞ்சி கோட்டையை முற்றுகையிட்ட சம்பணருக்கும், சம்பா மன்னருக்கும் நேருக்கு நேரான யுத்தம் நிகழ்ததாகவும், அதில் வென்ற கம்பணர், காஞ்சியின் மன்னராக ஆனதாகவும் மதுரா விஜயம் கூறுகிறது. மன்னரான காலம் கி.பி.1367 ஆக இருக்கலாம் எனக் கணிக்கப்படுகிறது. செஞ்சியைக் கைப்பற்றியதோடு மதுரை மீதும் கம்பணனருக்கு கவனம் இருந்திருக்கிறது.

மதுரை அப்போது தில்லி சுல்தானகத்தின் கட்டுப்பாட்டில் (1335 - 1378) இருந்தது குறிப்பிடத்தக்கது. திருச்சியிலும், மதுரையிலும் மதரீதியான

கொடுமைகளும், கட்டுப்பாடுகளும் மிகுந்திருந்ததாக அறியப்படுகிறது. 1310 - 11 இல் மாலிக்கபூர் படைகள் மதுரையைச் சூறையாடியதோடு, குவ்ராங்கான் (1318) மற்றும் உலுக்கான் (1323) போன்றோரும் மதுரையைத் தாக்கியிருக்கின்றனர்.

மதுரா விஜயத்தின்படி, கம்பண்ணன் திருமலைக்குச்சென்று வழிபட்டதாகவும், அப்போது அங்கே திருவரங்கத்தின் நம்பெருமாளின் வலசைக் கதை கேட்டுக் கலங்கியதாகவும் தெரிகிறது. திருச்சி, மதுரையில் நடந்த கொடுமைகள் கம்பண்ணனாரைக் கொதித்தெழச் செய்ததாகக் கூறப்படுகிறது. தக்க சந்தர்ப்பம் பார்த்துக் காத்துக்கொண்டிருந்த கம்பண்ணரின் அரசவைக்கு வந்த ஒரு பெண், மதுரையின் கொடூரங்களை எடுத்துரைத்து, மந்திர வாளளொன்றும் பரிசளித்தாராம். அந்த வாள் கொண்டே துவந்த யுகத்தில் மதுரை சிக்கந்தர் ஷாவைக் கொன்று, மதுரையும் ஜெயமாக்கப்பட்டதாம்.

மதுரா விஜயத்தோடு, திருவரங்கம் பற்றிய கோவிலொழுகு பதிவுகளும், இபின் பாதுஷா போன்ற வெளிநாட்டுப் பயணிகளின் பதிவுகளும் ஒப்பிடப்பட்டு மதுரை நாயக்கர் வரலாறு எடுத்தாளப்படுவது குறிப்பிடத்தக்கது.

அன்று தொடங்கி 1529 வரை விசய நகரப் பேரரசின் கட்டுப்பாட்டிலிருந்த தென்மதுரை, விசய நகரப் பேரரசு சரிவுறத் தொடங்கிய சமீபத்தில், தனித்த அரசாக மாற்றம் பெற்றிருக்கிறது. இதில் முதன்மை பெறுபவரே விசுவநாத நாயக்கர். அன்னாருக்கு அனைத்து வகையிலும் பக்கபலமாக மூளையாகச் செயல்பட்டவர் என தளவாய் அரியநாத முதலி குறிப்பிடப்படுகிறார். நாயக்கர் பட்டமும், முதலி பட்டமும் தென்மதுரைக்குப் புதிது என்பது வரலாற்று உண்மை.

மதுரை நாயக்கர் அரசின் முதல்ஐந்து அரசர்கள் விசய நகரத்தோடு தொடர்பில் இருந்ததாகவும், வரிவசூலித்து முறையாகக் கப்பம் செலுத்தி வந்ததாகவும் கூறப்படுகிறது. 1609 இல் முத்து வீரப்ப நாயக்கர் கப்பம் செலுத்த மறுத்து, மதுரை நாயக்கர் அரசுரிமையை சுதந்திரமான அரசாகக் கட்டமைத்ததாகப் பதிவுகள் சுட்டுகின்றன. மதுரை நாயக்கர் வரலாறு விசுவநாத நாயக்கர் தொடங்கி (1529), கடைசியாக இராணி மீனாட்சியோடு (1736) முடிவடைகிறது. ராணி மீனாட்சியை சிறை வைத்தவராக சந்தா சாகிப் அறியப்படுகிறார்.

அடுத்த நூறு வருடங்களில், அழகிய தென் மதுரை ஆங்கிலேயர்களால் முற்றிலுமாக மாற்றப்படுகிறது. கோவில் வீதிகளைச் சுற்றியிருந்த மதுரை

கோட்டைகள் இடிக்கப்பட்டு, மதுரை நகரம் விரிவாக்கப்படுகிறது. மதிலை இடித்து அப்புறப்படுத்துபவரே அந்நிலத்தை வைத்துக் கொள்ளலாம் என ஆங்கிலேயக் கலெக்டரால் அறிவிப்புச் செய்யப்பட, மக்கள் போட்டி போட்டு கோட்டையை இடித்து, அகழியை மூடினார்கள் என்பது வரலாறு.

மதுரை நாயக்கர் வரும்போதும், அதற்குமுன்னும், வந்தபின்னும், மதுரை மக்களின் சமூக, பொருளாதார, ஆன்மீக, சாதிய நிலைகள் எவ்வாறு இருந்தன? மதுரையில் செழித்திருந்த சாதிகள் எவை? ஏதேனும் ஆவணங்கள் உள்ளனவா? ஏதேனும் கணக்கெடுப்புகள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றனவா?

மதுரை சுல்தான்களின் அட்டூழியங்களை அடக்கவே, மக்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, புக்கராஜாவின் மகனான கம்பண்ணர் மதுரையைக் கைப்பற்றியதாகச் சுட்டும் வரலாற்றுக் குறிப்புகள், கருத்துகள், மதுரா விஜயக் காவியம் எந்தளவிற்கு உண்மை?

மனிதர்கள் வரலாற்றை, வரலாற்று நிகழ்வுகளை அறிய விரும்புகிறார்கள். வரலாறு, குறிப்பாக அரசியல் வரலாறு, மனித கற்பனைக்கும் எட்டாத ஆழமும், விரிவும் கொண்டதென்பதை மனிதர்கள் மறந்துவிடுகிறார்கள், ஆட்சியாளர்களின் அரசியல் கணக்குகளும், காய்நகர்த்தல்களும், தந்திரங்களும், வஞ்சங்களும், சூழ்ச்சிகளும் பெருமளவிலானவை. எளிய மனிதர்களுக்கு அப்பாற்பட்டவை. அரசியல் சாதுர்யங்கள் அரசுக்கு நெருக்கமான சிலர்தவிர பிறருக்குத் தெரியாதவை. மறைக்கப்பட்டவை. சாதாரண மக்களால் முற்றிலும் அறியப்பட முடியாதவை. முக்கியமாக ஆவணங்களற்றவை. உண்மையெனில், வரலாற்றை எப்படித்தான் அறிவது? அதுவும் துல்லியமாக, நேர்கோட்டில். நமக்கு வரலாறு இன்னதென்று கற்பிக்கப்பட்டுள்ளது. சிலரால் எழுதப்பட்டுள்ளது. அவ்வளவே. சொல்லப்பட்டுள்ள, எழுதப்பட்டுள்ள, அனைத்தும் வரலாறல்ல, உண்மையல்ல.

உதாரணமாக, மகாபாரத வரலாற்றை எடுத்துக்கொள்வோம். பாரதத்தின்படி உப்பாண்டவர்களும் முடிந்துவிட அபிமன்யுவின் மகனான பரீட்சித்து மகாராசாவிற்குப்பின் அவரது பேரனான அதாவது அர்ஜுனரின் கொள்ளுப் பேரனான சனமேசயன் அரசராகிறார். அவரும் சர்ப்பவேள்வியில் முடிந்துபோக, பாண்டவ அரசமரபு முடிவுக்கு வந்துவிடுகிறது. நமக்கு சொல்லப்பட்டுள்ள பாரதக் கதைமரபு அவ்வளவுதான். இப்படி முடிவதற்கா பாண்டவர்கள் அத்தனை பாடுபட்டார்கள்?

எத்தனை பராக்ரமம் படைத்த பாண்டவர்? எவ்வளவு பேராற்றல் படைத்தவர்கள் பாண்டவர்கள்? அதெப்படி அத்தனை பேராற்றல் படைத்த பாண்டவர்மரபு முடிவுக்கு வரும்? காலம் எதற்காக அர்ஜுனனை, தருமரும் திரௌபதியும் ஒன்றாக இருக்கும்போது அறைக்குள் அனுப்பியது? எதற்காக தருமர் தடுத்தும், காலம் அர்ச்சுனரை ஒருவருட நீராட்டலுக்கு அனுப்பியது? நீராட்டல் எனும் பெயரில் பார்த்தனை இந்தியா முழுக்கவே சுற்றி வரும்படிச் செய்த காலத்தின் மகிமைதான் என்ன? காண்டீபமெனும் வில்லுக்குப் பேர்போன அருச்சுனருக்கு எத்தனை மனைவிகள்? ஏதேனும் கணக்கிருக்கிதா? பாண்டவரான குந்தி மைந்தருக்கும், பாண்டியரான அல்லி ராணியின் தந்தைக்கும் உள்ள உறவென்ன? பாண்டியரும் பாண்டவரும் யார்? உறவென்ன? மதுராவுக்கும் மதுரைக்கும் உள்ள ஒற்றுமை எத்தன்மையது? மதராசப் பட்டினமும் சென்னப்பட்டினமும் ஒன்றா? மதராசப்பட்டினமா மதுராப் பட்டினமா? மதுரையும் மதராவும் ஒன்றா? மதரா, மதுரா, மருதாவா? மதுராவும் மெட்ராவும் ஒன்றா? ஆங்கிலேயர் மெட்ரா (Madra) எனச் சரியாகத்தானே உச்சரித்தார். அவர் வழக்கம் முன்னும் பின்னும் எஸ்-சேர்ப்பது, அவர் வழக்கப்படி மெட்ரா அதாவது மதுரா மத்ராஸ், மதராஸ், மெட்ராஸ் என மாறியது. இலங்கையின் தென்கோடி மதரா (Matra) துறைமுகத்திற்கும், மடகாசுகரின் மனகரா (manakara) துறைமுகத்திற்கும் உள்ள தொடர்பென்ன? Madagascar-யை மதராஸ்கர் எனலாமா? வெள்ளையர் வாயில் வந்தது தானே ஊர்ப் பெயர்களாக நிலை பெற்றிருக்கிறது. மதுரைக்கார், மதுரைக்காரர், மடகாசுகர் பொருத்தமல்லவா? Mada, madu, mada, Madi மாறுவது இயல்புதானே. தூத்துக்குடியை Tuticorin ஆக அக்கியது யார்? மடகாசுகார் மொழி பாண்டு (Pandu) அல்லவா?

இலவனோனோ (Lavanono), மரோலிண்டா (Marolinta), இடம்போலோ (Itampola), மரோமீனா (Maromena), அனகா (Anakao), தொளியரா (Toliara), அங்கிலிமணிலிகா (Anikilimanlinka), அம்பாதொமிலோ (Ambatomilo), ஆண்டவடோகா (Andavadoaka), மமோனோ (Mamono), பெல சுர் மேர் (Belo Sur Mer), மொரந்தவா (Morondava), தம்போகோரனோ (Tambohoarno), சோனங்கா (Sonenga), சோளலா (Soalala), சாம்பவ (Sambava) போன்ற இடப்பெயர்களின்

உண்மையான உச்சரிப்பு என்னவாக இருக்கும்? அம்போ, அந்தோ, அன்டோ போன்ற பெருமளவிலான இடப் பெயர்கள் எதைக் குறிக்கின்றன?

மதுரா, மாதுரா, மாதுரோ ஒன்றா?

மதுராவிற்கும் மருதாவிற்கும் உள்ள ஒற்றுமை என்ன? எங்கள் ஊர்களில் எவருமே மதுரைக்குப் போகிறோம், போய்ட்டு வருகிறோம், மதுரையில இத வாங்கினோம் எனச்சொல்லி யாம் கேட்டதே இல்லை. அவர்கள் வாயில் வருவது மருதைக்குப் போறோம் என்பதே. அதாவது மதுரையல்ல, மருதை. மருதையும் மருதமும் ஒன்றா? மதுரை மருத நிலமல்லவா? வைகையின் அழகையும், வயல்வெளிகளின் சிறப்பையும் இலக்கியங்கள் அழகாகச் சுட்டுகின்றனதானே. மதுரையே வேளாண்மைக்குப் பெயர்பெற்ற இடமல்லவா? மதுரையில் வேளாண்மை செய்தது, தற்போதும் செய்வது யார்? எந்தத் தமிழ்ச் சாதி? வேளாளர் யார்? வெள்ளாளர் யார்? வேளாளரும் வெள்ளாளரும் ஒன்றா? வேளாளர் என்பது சாதியல்ல, அது ஒரு பட்டம் என அத்தனை மேனுவல்களிலும் வெள்ளையர் எழுதிவைத்திருக்க, அதைச் சாதியாக்கியது யார்? வெள்ளாளரும் வெள்ளையரும் ஒன்றா? அறிவில்? குணத்தில்?

வெள்ளாளர் நிலத்தை உழுகிறாரா? முக்கியமாக, வெள்ளாளரான பிள்ளைமார் நிலத்தை உழுததுண்டா? நிலத்தை உழவில்லையெனில் அவறெப்படி வேளாளர்? எதனடிப்படையில் அவர் வேளாண்மைத் தொழில் செய்பவர்? பிள்ளை ஏன் ஏர் பூட்டி உழுவதில்லை?

மதுரை ஆவணம் - Madura Country manual எழுதிய கலெக்டர் நெல்சன் மிகத் தெளிவாக ஆவணப்படுத்துகிறார் - They (Vellelan) will not touch the plough. They do everything by means of hired servants. வெள்ளாளன் கலப்பையைத் தொடுவதேயில்லை. அனைத்துவிதமான வேளாண் பணிகளையும் கூலியாட்களைக் கொண்டே செய்கிறார்.

நெல்சன் துரை மேலும் ஆவணப்படுத்துகிறார் - Vellalan means a cultivator or irrigator of rice fields, rather than a man of particular tribe or country. வெள்ளாளன் என்பது நெல் வேளாண்மை செய்பவரையோ, நீர்ப்பாசனம்

செய்பவரையோ குறிக்குமேயன்றி ஒரு குலத்தையோ அல்லது நாட்டையோ குறிக்காது.

They came from old canara country, introduced in the Tondamandalam. இவர்கள் பழைய கன்னட நாட்டிலிருந்து தொண்டை மண்டலத்திற்கு வந்தவர்கள்.

வெள்ளாளர் தொண்டை மண்டலத்திலிருந்து சோழ நாட்டிற்கும், பின் அங்கிருந்து பாண்டிய நாட்டிற்கும், பின் அங்கிருந்து நாஞ்சில் நாட்டிற்கும் பரவினர் என்பதுதானே வரலாறு.

பிள்ளை ஏன் உழுவதில்லை? உழாமலேயே அத்தனை நிலங்களையும் பிடித்து வைத்துக்கொண்ட பிள்ளையின் புத்திசாலித்தனத்திற்கு ஈடேது. தமிழக, இந்திய வரலாறறிந்த எவருக்கும் தெரியும், சமணர் வேளாண்தொழில் செய்வதில்லை. சமணம் தழைத்திருந்தது கர்நாடகம். பிள்ளை முன்னால் சமணர் என்பதால்தான் நிலத்தை உழுவதில்லை. அசைவம் சாப்பிடுவதில்லை. சுத்த சைவம் என்பதில் பிள்ளைக்கு பெருமையோ பெருமை.

பிள்ளை தொண்டை மண்டலத்திற்கு வருவதற்குமுன், தொண்டை மண்டலம் எப்படி இருந்தது? குறிப்பாக, பல்லவர் காலத்தில் தொண்டை மண்டலத்தின் வரலாறென்ன? அன்று சமூக, அரசியல், வணிகநிலை, படைத்திறன் எவ்வாறு இருந்தது? பல்லவர் யார்? பல்லர் யார்? மல்லர் யார்? மள்ளர் யார்? தேவேந்திரன் யார்? மகேந்திரன் யார்? நரசிம்மன் யார்? சிம்ம விஷ்ணு யார்? சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறிய திருநாவுக்கரசர் யார்?

கிடைக்கும் சந்தர்ப்பத்தை, வாய்ப்பை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, திறமையாக மேலே மேலே போகிறவர் யார்? சமணக்காரர்கள் சைவத்தை உயர்த்திப் பிடித்தது எதற்கு? எப்போதிலிருந்து? பல்லவர் காலத்தில் செழித்திருந்த மதங்கள் எவை? குறிப்பாக, வைணவமும் புத்தமும் எப்படி இருந்தன? இடைக்காலச் சோழர் சைவத்தைத் தாங்கிப் பிடித்தது எவ்வாறு? இந்திர மரபினரான சோழர்கள், சைவர்களாக, பிருகதீசுவரர் கோவிலைக் கட்டுமளவிற்கு மாற்றம் பெற்றது யாரால்? இந்திர வழியரான கள்ளரும், மள்ளரும் சைவ வழியராக மாற்றப்பட்டதன் நுட்பம் எது?

சமணப் பாண்டியன் சைவப் பாண்டியனாக யாரால் மாற்றப்பட்டான்? மாற்றியதன் நோக்கம் என்ன? மாறியதால் பாண்டிய நாட்டில் நிகழ்ந்த சமய, சமுதாய, வேளாண் மாற்றங்கள் எத்தன்மையவை? உழுவதில்லை, நடுவதில்லை, களையெடுப்பதில்லை. அறுப்பதில்லை, களம் புடைப்பதில்லை. ஆனாலும் அறுவடை அத்தனையும் பிள்ளைக்கே சொந்தமானது எப்படி?

தொண்டையில் முதலி, சோழத்தில் வெள்ளாளர், பாண்டியில் வேளாளர், நெல்லையில் பிள்ளை, கொங்கில் கவுண்டர் என அனைவரையும் ஒன்றாக்கிய அந்த மகத்தான மூலதனத்திற்குப் பெயர் நிலமல்லவா? வெள்ளையர் அப்படியேயல்லவா கொடுத்துச் சென்றார். நிலத்தில் விளைந்ததை விற்பதற்கு வணிகம். வணிகத்தைப் பெருக்குவதற்கு தொழில்கள். தொழில்களை பேணுவதற்கு தொழிற் கல்வி. தற்போதைய கல்விக்கு வெள்ளைக்கார மெக்கலே கல்வியே மேல் என்பது திண்ணம்.

விசயநகரப் பேரரசிற்கும், இலங்கை விசயனுக்கும், தென்கிழக்கின் ஸ்ரீவிசயத்திற்கும், வியட்நாமின் சம்பா பேரரசிற்கும் உள்ள தொடர்புறவுகள் யாவை? விசயநகரப் பேரரசைத் தோற்றுவித்தவர்கள் ஏன் மகாபாரதத்தோடு தொடர்புடையவர்களாக இருக்கக் கூடாது? அரிகரரும் புக்கரும் யாதவர்கள் எனும் குறிப்பும் சுட்டிக்காட்டப்படுகிறதல்லவா. பல்லவருக்கும் பாண்டவருக்கும் உள்ள உறவுமுறை யாது? காதம்பர்கள் யார்? கடம்பர், காடர், கடையர், கரையர், காராளர் தொடர்புடையவரா?

அல்லி அரசாணி யார்? அரசாணியை வழிபடும் மக்கள் யார்? அரசாணியை நினைவுறுத்தும் விதமாக மணமகளுக்குப் பூச்சுட்டுவது எந்தச் சாதி? அருச்சுனன் யார்? தேவேந்திரன் யார்? தேவேந்திர குலத்தார் யார்? தேவேந்திர குல வேளாளர் யார்?

வேளாளர் பெயருக்குச் சொந்தமானவர், தகுதியானவர், உரிமையானவர் யார்? எத்தனை எதிர்ப்புகள், பேட்டிகள், முறையிடல்கள், வசைச்சொற்கள், மிரட்டல்கள், ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள். இன்றைக்கே இந்த நிலைமையெனில், அன்றைக்கு கேட்டிருக்க முடியுமா? கேட்டுவிட்டுத்தான் ஊரிலிருக்க முடியுமா? உயிரோடிருக்கத்தான் முடிந்திருக்குமா?

இந்திரவிழா கண்ட மரபு தீண்டாதார் சாதியாகியது எப்படி? எப்போதிருந்து? யாரால்? தீண்டாதார், காணாதார் யார்? பிரிவினையை உண்டாக்கியவர் எவர்? தம்மைப் பிராமணரைவிட மேயானவராகக் கருதிக்கொண்ட அன்னார் வயலில் உழுவதில்லை. உழுதவர் தீண்டாதவராக ஆக்கப்பட்டார். அன்னார் மாட்டுக் கறி உண்பதில்லை. உண்டவரோ, தோல் தொடர்பான தொழில் செய்தவரோ, தீண்டாதாராக்கப்பட்டார். அன்னார் கள் குடிப்பதில்லை. கள் தொழிலில் ஈடுபட்டவரோ காணாதவராக மாற்றப்பட்டார். அத்தனைக்கும் காரணம் நிலமுடைமையும், அரசதிகாரத் தொடர்புமல்லவா.

தமிழரின் கடந்துபோன ஆயிரமாண்டுச் சரித்திரம் முழுதும் சாதிய வரலாறல்லவா. பல்லவர் ஓரளவிற்குத் தாக்குப் பிடித்தார். சோழரோ பெரியளவில் இடம் கொடுத்தார். பாண்டியரோ முற்றாக மாறிப்போனார். விளைவோ தமிழருக்கு ஓராயிரமாண்டு அடிமை வாழ்க்கை. ஓராயிரமாண்டு சீரழிந்த சாதியப் பண்பாடு.

சனமேசயனோடு பாண்டவர்கள் முடிந்து விட்டார் எனப் பாரதத்தார் நினைத்துக் கொண்டாரோ? யாதவர் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு வீழ்ந்துவிட்டார் என்பதை அப்படியே நம்பிவிட்டாரோ பாரத தேசத்தார். கண்ணனும் வியாசனும் ஒன்றுமறியாதவர்களா தமிழர்களே. முல்லை நிலத்திற்கும் மருதத்திற்குமான உறவை தமிழர் அறிவாரல்லவா. சரயுவின் இராமனும், யமுனையின் கண்ணனும் மருதத்துக்காரர்களல்லவா. கம்பநாடனின் சரயு நதி வருணணையைத் தமிழர் படித்திருக்கிறாரா.

கண்ணனோடு பலராமனையும் ஒரு அவதாரமாகக் கொண்டாடுவது எதனால்? கோல் தூக்கிய கிருட்டிணனுக்கும் ஏர் தூக்கிய பலராமனுக்கும் உள்ள தொடர்பு யாது? மேய்ச்சல் முடிந்து பயிர்த் தொழில் தொடங்கிவிட்டதன் குறியீடா? பலராமனா பல்லராமனா? பயிர் செய்வதற்குப் பள்ளத்தில் நீரைத் தேக்க வேண்டுமல்லவா?

இயற்கை வழிபாடு போய், சாக்தராய் மாறி, சமணராய், பின் சைவராய், பின்னர் கௌமாரராய், தொடர்ந்து கணபத்திராய், தற்போது சாயராய் மாறிக்கொண்டிருப்பவர் யார்? காரணமென்ன?

திருப்பாதத்தைப் பார்த்த வேடன், மானென்று அம்புவிட, அதையே சாக்காக வைத்துக்கொண்டு, வைகுந்த நாட்டிற்கு எழுந்தருளினானாம் மாபாரதத்துக் கமலக்கண்ணன். நம்புவது போலவா இருக்கிறது பாரதத்தாரே? கடவுள் எனத்

தெளிவாக எடுத்துக் கூறியும், காட்டியும், புகட்டியும், இருதரப்பும் நம்பாமல், சொல் கேட்காமல் பொருதினார்கள் எனில், உண்மையிலேயே தாம் யார் எனச் சிந்தித்திருப்பானா இல்லையா? ஏன் என்ற கேள்வி அவன் உள்ளத்தைத் துளைத்திருக்குமா இல்லையா? யாரால் என விடை தேட முயன்றிருப்பானல்லவா. புத்தன் யார்? பாரத காலத்திற்கும் புத்தன் காலத்திற்குமான இடைவெளி எவ்வளவு? புத்தன் காலத்தில்தான், அதாவது பொதுஆண்டிற்கு முற்பட்ட ஐந்தாம் நூற்றாண்டில்தான் பாரதம் தொகுக்கப்பட்டது என்பதன் உண்மைத்தன்மை யாது? உண்மையெனில் அதற்கு முன், ஐநூறு அல்லது ஆயிரம் வருடங்களுக்கு முன் நிகழ்ந்ததே பாரதப் போர் எனலாமா? அல்லது இன்னும் வெகு தள்ளி காலத்தில் பின்னோக்கிப் போகலாமா?

தென் தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் பட்டி எனும் ஊர்களாக இருக்கின்றன. கவுண்டன்பாளையம், நாயக்கன்பாளையம் என கொங்கில் பாளையம். தெலுங்கு நாட்டில் பெருவாரியான ஊர்களின் பெயர் பள்ளி, கன்னட நாட்டிலோ ஹள்ளி. இந்தியிலோ கார். ஒரியாவில் புரி. பொங்காலில் பூர். தமிழின் ஊர்தானே பூர் என்றும், கீர், மூர், கார், கூர், தார், மீர் எனவும் மாற்றம் பெற்றிருக்கிறது. சொற்கள் கால மாற்றத்தில் சிதைந்து வேறொன்றாக மாறும் என்பதைத் தமிழர் அறிவாரல்லவா? ஊர் என்றால் அது மருத நிலத்துக் குடியையே குறிக்குமாம். ஊரும் பேரும் நூலில் ரா.பி.சேதுப்பிள்ளை ஆணித்தரமாக எழுதியிருக்கிறார்.

முன்னாள் மகதமான பீகாரின் தலைநகர் பெயர் பாட்னாவாம். தமிழர் அறியாமையில் இருக்கிறார்போல. தமிழ்ப் பட்டணமல்லவா பாட்னாவாக மருவி வழங்குகிறது. பட்டிணம் தமிழ் சொல்தானே.

பாட்னா என்பது பிராகிருதச் சொல்லாகச் சுட்டப்படுகிறது. எனில் பாட்னாவைச் சுற்றியிருக்கும் ஊர்களின் பெயர்களை கூகுள் வரைபடத்தில் எளிதாகக் காணலாமல்லவா. அனைத்தும் தமிழ்ப் பெயர்கள், தமிழறிஞர்கள் பிராகிருதம் என்பது சிதைந்த தமிழ் என்பதை நிறுவியிருக்க வேண்டும். தென் தமிழே வடக்கில் செல்லச் செல்ல, கொஞ்சம் கொஞ்சமாக மாறி, நாளடைவில் பிராகிருதமாகவும், பின்னர் சமற்கிருதமாகவும் மாறியிருக்கிறது என்பதை தமிழர் ஏன் திட்டவட்டமாக தக்க சான்றுகளோடு நிறுவவில்லை?

இமயத்திற்கு அப்பாலுள்ள சீனமொழி நெடுங்கணக்கும், தமிழ் நெடுங்கணக்கும் ஒத்துப் போவது எப்படி? சீனர்களின் பெரும்பாலான பெயர்கள் ஈரசைகளாக இருப்பதன் பொருளென்ன? சங், சாங், சுங், மங், ஷிங், ஷங், பிங், உங், முங், மிங், புங், விங், யிங், நிங் அழகிய பெயர்களல்லவா. சன், ஜின், சுன், மின், ஷின் அடுக்கிக் கொண்டே போகலாமா?

தமிழர்கள் வங்கத்தை அறிவார்களல்லவா. வங்கக் கடல்கடைந்த மாதவனாமே. வங்கம், துங்கம், தங்கம், சுங்கம், பங்கம், மங்கம், புங்கம், வெங்கம், கொங்கம், திங்கம், நுங்கம், நங்கம், அங்கம், ரங்கம். தமிழருக்கு அர்த்தம் தெரியுமல்லவா.

நுங்கம் பாக்கம் பள்ளமான ஊரமே. நுங்கு பள்ளத்திற்குள் இருப்பது. உள்ளே இருப்பது மீனம்பாக்கம் தாழ்வான பகுதியோ. தாழ்வான இடத்தில் ஏன் விமான நிலையத்தை வைத்தார்களாம். வங்கம், பெங்கம், பெங்காளம், பெங்கால் சொற்கள் திரியுமன்றோ. துங்கம் எனில் உயர்வாமே. அதனால்தான் மேடான பகுதியை, மேட்டு நிலத்தை பழந்தமிழர்கள் கொங்கம் எனப் பெயர் வைத்திருக்கிறார்கள். எத்தனை அறிவு, எத்தனை நுட்பம். மொழி வரலாற்றை தமிழர் சுத்தமாக மறந்தே போனார். ஆங்கிலத்தில் பெரும் புலமை பெற்றவரன்றோ தமிழர்.

தமிழுக்கும், செல்டிக் மொழியான ஆங்கிலத்திற்கும் உள்ள ஒற்றுமைகள் வியக்க வைப்பன தமிழர் ஏன் எனத் தெளிந்திருக்கிறாரா? தமிழருக்கு கொங்கர் தெரியும், சுங்கர், கங்கர், மேலைக்கங்கர், கீழைக் கங்கர். இந்தியில் பங்கர் பெயரும் உண்டல்லவா? விசயநகரப் பேரரசு சுங்க மரபினராகவும் சுட்டப்படுகிறது. பீஜப்பூரின் பழைய பெயர் விசயம், விசய நகரத்தார் தென் மதுரைக்கு ஏன் வந்தார்? அங்கே நிலவிய அரசியல் சூழல். குறிப்பாக பீசப்பூர், கோல்கொண்டா இசலாமிய சுல்தானகங்கள். ஐந்து சுல்தான்கள் ஒன்று சேர்ந்து வர, வீரத்துடன் எதிர்த்து நின்ற விசயநகர மன்னர் போற்றத் தகுந்தவரன்றோ, என்றேனும் இப்படியான சூழல் வருமென்று உத்தேசித்து, விசயநகரின் பெருஞ்செல்வம் தென்னகத்திற்கு முன்னரே அனுப்பிவைக்கப்பட்டுவிட்டதோ. படையெடுப்பு, வெற்றி என்பதெல்லாம் அரசியல் சொல்லாடல்கள். எந்த வருமானத்தை வைத்துக்கொண்டு அல்லது எந்த ஏற்றுமதி வணிகம் செய்து நாயக்க அரசர்கள் பெருஞ்செல்வத்தைத் திரட்டினார்கள்? மதுரை, நெல்லையில் வரி வசூலித்தா இத்தனை வானுயர்ந்த கோபுரங்களைக் கட்டினார்கள், திருப்பணிகள் செய்தார்கள், கண்மாய்கள் வெட்டினார்கள், சாலைகள்

போட்டார்கள், சத்திரங்கள் கட்டினார்கள், நாயக்க மன்னர்கள் செய்த கோவில் திருப்பணிகளுக்கெல்லாம் பணம் எங்கிருந்து வந்தது? பெருத்த செல்வங்களை அள்ளி இறைத்தே அன்றைக்கு எதிர்த்தவர்கள் அத்தனை பேர் வாயும் மூடப்பட்டது. கைகள் கட்டிப்போடப் பட்டன. மைசூர் மன்னர்களுக்கும் சந்தா சாகிப் போன்றோருக்கும் பெருமளவில் நிதி கைமாறியிருக்கிறது. அப்படியிருந்தும் சந்தா சாகிப்பால் விடம் அருந்திய இராணி மீனாட்சியின் நிலை பரிதாபமானது.

வெளிநாட்டு அறிஞர்களால் சீனத்தின் ஆங்காங் நகருக்கு அடுத்து மிக்க செல்வமிக்க நகராகப் பாராட்டப்பட்ட பாம்பி எனும் ஹம்பியின் செல்வம் எங்கே போனது? அத்தனை புகழ்பெற்றிருந்த விசயநகரத்தின் ஹம்பி உருத் தெரியாமல் சிதைக்கப்பட்டதற்குக் காரணமென்ன? விசயநகரம் உருவாகாமல் இருந்திருந்தால் தென்தமிழகத்தின் வரலாறு என்னவாக இருந்திருக்கம்? நாயக்கர் மதுரையில் நிலைகொள்ளாமல் போயிருந்தால் தமிழக வரலாறு முக்கியமாக, தமிழ்நிலத்தின் ஆன்மீக வரலாறு எப்படி மாறியிருந்திருக்கும்?

மாறவர்மன் குலசேகர பாண்டியனின் (1268 - 1311) இரு மகன்களும் சற்றே விட்டுக்கொடுத்துப் போயிருந்தால் எத்தனை பெருமைக்குரியதாக இருந்திருக்கும். தொல்மதுரையின் அரசுரிமைக்கு இருவரும் போட்டிபோட்டதால், தமிழ் நிலத்தில் நிகழ்ந்தவிட்ட அவலங்கள் எத்தனை எத்தனை. மாறவர்மன் எத்தனையோ போராட்டங்களுக்குப் பின்னல்லவா சோழர்களை வெற்றி கொண்டான். பாண்டியனுக்கு கொல்லங்கொண்டான் எனும் சிறப்புப் பெயரும் வழங்கப்பட்டிருக்கிறது. கொல்லத்தை வென்றதாலோ? கொல்லம் எனில்.

தமிழக மேற்குக் கடற்கரைக்கு ஆங்கிலேயர் வைத்த பெயர் மலபார் - Malabar. கிழக்குக் கடற்கரைக்கு சோழ மண்டலம் (Cholamandal). அதென்ன மலபார்? மலபாரா மல்லபாரா?

மலபாருக்குப் பெயர் மல்லபுரம். கேரளத்தில் மழப்புரம் உள்ளதல்லவா. மாமல்லபுரத்திற்கும் மல்லபுரத்திற்குமான தொடர்புகள் என்ன? மங்களூர் துறைமுகம் உள்ளதல்லவா? அது மல்லர் ஊர் எனல், பெங்களூர்? மங்கம் பெங்கம் என மருவும். மைசூர் மல்ல சூர். மல்லர் ஊர். மல்லிகார்ஜூனர் பெயரும் கோவில்களும் கருநாடகத்தில் அதிகம். அது மல்ல அர்ஜூனர், மல்லரான அர்ஜூனர் என்பது மல்லிகார்ஜூனர் என மருவியிருக்கிறதோ. மல்லீஸ்வரன், மல்லேஸ்வரன்.

மல்லரின் ஈஸ்வரன். மல்லாண்டார். மல்லர்களின் ஆண்டவர். இன்றும் மல்லாண்டாரை வழிபடுவது யாரெனத் தெரியுமா? மல்லரும் மள்ளரும் பேச்சுத் தமிழில், உச்சரிப்பில் ஒன்றெனவே வரும். எழுதும் போதே வேறுபாடு தெரியவரும். மல்லர், கொல்லர், சில்லர், வில்லர் எனத் திரிவது இயற்கை.

தமிழ் மல்லர் (mallar), ஜெர்மானியத்தில் முல்லர் (Mullar) ஆவதும், ஆங்கிலத்தில் மில்லர் (Miller) ஆவதும் எளிது. தூரம் அதிகரிக்க திரிவும் அதிகரிக்கும். ஆனாலும் மிகவும் ஆச்சரியமான ஒரு நிகழ்வாக தமிழின் மல்லர் தொலை தூரங்களில் மல்லர் எனவே வழங்குகிறது. உதாரணமாக தென் அமெரிக்காவில் மல்லர் பெயர், மல்லர் ஆறு, மல்லர் மலை, மல்லர் விளையாட்டு, மல்லர் படகு, மல்லர் என தற்போதும் அப்படியே புழக்கத்தில் இருக்கின்றன. தென் முனையின் மள்ளர், தொண்டை மண்டலத்தில் மல்லராகி, கிரேக்கத்தில் பள்ளராகி, அமெரிக்காவில் மீண்டும் மள்ளராகியிருப்பது தமிழ் மொழிப் பரவலுக்கும், அது பரவிச் சென்ற பாதைக்குமான நல்லதொரு சான்று.

தமிழ் நிலத்தில் பள்ளர் எனும் சொல் இழிவாகப் பார்க்கப்படுகிறது. அச்சொல்லை விடுத்து தம்மை மள்ளர் எனவும், தேவேந்திரர் எனவும் குறிப்பிட வேண்டுமென கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகிறது. வலுத்த போராட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆயினும் வியப்பான செய்தி, உலகமெங்கும் பள்ளர் எனும் சொல் தற்போதும் பெருமளவில் நடைமுறையில் புழங்கி வருகிறது. குறிப்பாக தென் கிழக்கு ஆசியா முழுவதும் பள்ளர் எனும் பெயர்கள் சுட்டப்படுகின்றன. முகநூலில் pallar எனத் தேடினால் இந்தோனேசியா, தாய்லாந்து, கம்போடியா, வியட்நாமியப் பெயர்களே பெருமளவில் வருகின்றன. அவ்வாறே கிரேக்க, ஸ்பானிய, போர்த்துக்கீசியப் பெயர்களிலும் பள்ளா எனும் பெயர் நிறையக் கிடைக்கிறது. தென்னமெரிக்காவிலும் பெரும்பாலான பெயர்கள் பள்ள, மள்ள எனப் பதிவிடப்பட்டுள்ளன. ஈரானிய, அரபி நிலங்களிலிருந்தும், முன்னாள் சோவியத் பகுதியிலிருந்தும் பள்ள, மள்ள பெயர்கள் பதிவிடப்பட்டள்ளன. பல இசுலாமியாப் பெயர்களோடு பள்ள, மள்ள, தேவேந்திர ஓட்டுகள் இடம் பெற்றிருப்பது ஆழ்ந்த கவனத்திற்குரியது.

உண்மையில் பள்ளர் என்பவர் யார்? தமிழர்கள் அறிந்திருக்கவில்லை. உண்மையில் தமிழ் நிலத்தில் வாழும் பள்ளர்களே தம்மை யாரென்று

அறிந்திருக்கவில்லை. அரசியலாளர்களும் மேம்போக்காகப் பேசுகிறார்களே தவிர, உண்மையான வரலாறு தெரிந்திருக்கவில்லை. மதிப்பிற்குரிய பாவாணர் அறிந்திருந்தபோதும் அவர் தமிழ்ப் புலவர் என்பதாலும், தமிழ்ப் புலவர் மரபு, என்றுமே சாதி மதத்திற்கு அப்பாற்பட்டது என்பதாலும், பாவாணர் பள்ளர் சாதி குறித்து எதையும் பதிவிடவில்லை. சாதிப் பெருமிதம் குறித்து எதுவுமே எழுதவில்லை. புலவர் பள்ளரைத் தமிழராய்ப் பார்த்தார் என்பதே திண்ணம்.

பள் என்னும் சொல்லுக்கு நிகண்டுகள் பலவிதமான பொருள்களைச் சுட்டுகின்றன. பள்ளர் எனில் தாழ் நிலத்தவர் அல்லது தாழ்வான நிலப்பகுதியில் வேளாண்மை செய்யும் பொருட்டு அங்கே வாழும் மனிதர். என்னில், மேட்டு நிலத்தில் வாழ்பவர் யார்? அவரது தொழிலென்ன? இந்த இரு கூறுகளே, அதாவது இருவேறு இடங்களில், பள்ளம் - மேடு எனும் இரு நிலங்களில் வாழும் இருவேறு மனிதர்களே, மனிதக் கூட்டங்களே, மானுட வரலாற்றின் அடிப்படை விசைகள். உதாரணமாக வங்கம் மற்றும் கொங்கம். வங்கமெனில் தாழ் நிலம். விரிகடா, வளைகுடா என்பனவெல்லாம் ஆழ்ந்த பொருள் கொண்டவை. கொங்கம் எனில் மேட்டுப்பகுதி, மேடு. மேடான நிலம் அதாவது முல்லை.

தத்துவார்த்த ரீதியில், பள்ளமில்லாமல் மேடில்லை. மேடு இருக்கிறதெனில் அங்கே பள்ளமிருக்கிறது என்றே பொருள், பள்ளம், மேடு இரண்டு மட்டும்தானா எனில் மூன்றாவது ஒன்றும் இருக்கிறது மலையொன்றிற்கு பள்ளம் (Valley) இருப்பது போலவே உச்சி அதாவது மலைமுகடும் (Apex) இருக்கும். இருப்பினும் இடையில் நடுப்பகுதி ஒன்றும் இருக்கும். உதாரணமாக ஒரு மலையின் சரிவு. எடுத்தவுடனேயே மலை உயரமாகிவிடாது, சரிவுப் பகுதி இருக்கும். மலையில் நடுப்பகுதியும் இருக்கும். சரிவற்ற சிறிய மலையெனில் அதற்கு குன்று என்றே பெயர்.

அவ்வாறெனில் மூன்று வகையான பகுதியைச் சுட்டலாம். நடுப்பகுதி, தாழ்வான கீழ்பகுதி, உயரமான மேல் பகுதி. கீழ் நடு மேல் அல்லது உள், மத்திய மற்றும் வெளி. நம்மொழியில் சொல்வதானால் முல்லை, மருதம் மற்றும் குறிஞ்சி.

பள்ளத்தில் வாழ்ந்தவர் பள்ளர். அவரோடு வாழ்ந்தவர் பலர். பள்ளர், அகமுடையார், பிள்ளைச் சாதிகளைக் குறிப்பிடலாம். எனில் மேட்டில் வாழ்ந்தவர்? பறையர், அவரோடு வாழ்ந்தவர் மறவர், குறவர். தமிழ் நிலத்தின் ஆகப்பெரும் இரு

கூட்டமைப்பு பள்ளச்சாதிகள் மற்றும் பறைச் சாதிகள். உண்மையா எனில் எமக்குத் தெரிந்தவரை, யாம் படித்தவரை உண்மையெனவே தெரிகிறது. உதாரணமாக குறிஞ்சி, முல்லை, மருதத்தை எடுத்துக் கொள்ளலாம், மூன்று பண்பாடுகளும் வேறுபட்டவை. மக்களும் வேறானவர்கள். மானுடர் தோற்றம் பெற வாய்ப்புள்ள பகுதி பள்ளமேயன்றி மேடல்ல. அடர்ந்த காடுகளில் மானுடர் உருமாறியிருக்க முடியாது. மருதத்திலேயே மக்கள் பெருக்கம் நிகழ்ந்திருக்க வேண்டும்.

உதாரணமாக, படுகரை எடுத்துக் கொள்ளலாம். ஆங்கிலேயருக்கு ஊட்டி கோடைகாலத் தலைநகராக இருந்ததால், பலரும் படுகர் குறித்து நிறைய ஆராய்ந்திருக்கிறார்கள். அத்தனை பேரின் முடிவும் சுட்டுவது படுகர் நீலகிரி மலையைச் சார்ந்தவர் அல்ல என்பதே. இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுக்கு முன்னர், மைசூருப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்களே படுகர் எனக் கண்டறிந்துள்ளனர். அவர்கள் பேசும் மொழி அன்று மைசூர் பகுதியில் பேசப்பட்ட தமிழ் கலந்த கன்னடம். எதோ ஒரு படையெடுப்பிற்கு அஞ்சி கூட்டாக இடம்பெயர்ந்திருக்கிறார்கள்.

படுகர் என்பதற்கு தமிழ் அகராதிகள் தரும் பொருள், தாழ் நிலத்தவர் என்பதே. படு எனில் தாழ், தாழ்வு என்பதே பொருள். உதாரணமாக, படுத்தல். படுகை எனில் தாழ்வான பகுதி - தாழ் நிலம். மடு எனில் தாழ்ந்த அல்லது கீழான எனப் பொருள். உதாரணம் மாட்டிற்கு மடி இருக்கிறது. மாடு எனில் உயரமானது. இரண்டு மாடி வீடு, உயரமான வீடு. மடி தாழ்வானது. மடி, மடித்தல். ஒன்றை மடிக்கும் போது அதன் உயரம் குறையும். போர்வைகளை மடித்து வைக்கிறோமல்லவா.

மடு - மாடு. சரியான உதாரணம். முன்னது உயரம் குறைவானது. பின்னது உயரமானது. ஒன்று தாழ்ந்தது. மற்றொன்று உயர்ந்தது. தங்கம் எனில் தாழ்வானது எனப் பொருள். மண்ணுக்குள் இருந்து வெட்டியெடுக்கப்படுவதால் அத்தகு பொருளில் சுட்டப்படுகிறது. பெங்கம் என்றாலும் தாழ்வு என்றே பொருள். பெங்காளம் தாழ்வான நிலம். பெங்காலம் - வங்காலம் என்பதற்கு கலப்பை என்றொரு பொருளும் சுட்டப்படுகிறது. அங்கம், மங்கம், பங்கம் போன்ற சொற்களுக்கும் தாழ்வுப் பொருள் கொண்டவையே.

ஏன் இவ்வளவு விளக்கமாக எனில், தமிழகத்தில் பள்ளரும் பறையரும் ஒன்றாகவே பிற சாதியரால் குறிப்பிடப்படுகிறார். எனினும் இருவருக்குமிடையே

அவ்வளவு ஒன்றுபடுதல், ஒற்றுமை இல்லை என்பது கண்கூடு. வெள்ளையர்களின் மாவட்ட ஆவணங்கள் - District gazatters அனைத்தும் ஆச்சரியமாகக் குறிப்பிடுவது பள்ளர்-பறையர் ஒற்றுமையின்மையை. இரு சாதியாரும் ஒருவருக்கொருவர் பகைகொண்டு எதிரிகள் போன்று செயல்படுகிறார் என நெல்சன் துரை குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

தமிழகப் பள்ளுக்கும், பறைக்கும் போட்டியா, பகையா எனில் ஆம் என்பதே பதிலாக இருக்கும்போல. தமிழ் நிலத்தில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்லாது, உலகெங்கிலும் இருவருக்கும் போட்டி நடந்தது, நடந்து கொண்டிருக்கிறது. ஒருபுறம் பறை மற்றும் பறை தொடர்பான சாதிகள். மறுபுறம் பள் மற்றும் பள்ளர் சம்பந்தமான சாதிகள். ஒருவர் தமிழ் எனில் ஒருவர் சமற்கிருதம். ஒருவர் சைவம். மற்றவர் வைணவம். ஒருவர் தெற்கு, இன்னொருவர் வடக்கு. இதில் தமிழ் யார்? சமற்கிருதம் யார்? சைவம் தமிழோடு தொடர்புடையதா அல்லது சமற்கிருதத்தோடா? சிவன் மொழி தமிழா சமற்கிருதமா? தமிழர் உலக வரலாற்றை ஆராய வேண்டும். சிந்திக்க வேண்டும். குறிப்பாக உலகின் பெரும் மதங்களை முன்னெடுத்த, உலகின் மத்திய நிலப்பகுதி வரலாற்றைத் தோண்ட வேண்டும்.

மனிதர்களே, ஆண் யார்? பெண் யார்? உலகம் இரண்டு தத்துவங்களில் உருவாக்கப்பட்டிருப்பது உண்மையல்லவா. இரண்டும் ஒன்றல்லவா. ஒன்றுக்குள் ஒன்றல்லவா. ஒன்றேயல்லவா. ஆனாலும் இரண்டாக இருப்பது எதற்காக?

துவாபர யுகத்தின் இறுதிக் காலகட்டத்தில் வாழ்ந்த அந்த மகத்தான இடையனைப் பற்றி உலகத்தவர் அறிந்தது வெகுசொற்பமே. முன்பு அளவிடமுடியாதவனாக வானுயர்ந்து எழுந்த அவன், கன்னங்கரிய இடையனாக வந்து பாரத நிலத்தில் ஆற்றிய பணிகள் சொல்லித் தீராதவை.

இடையரை தமிழ் நிலம் மறந்தே போய்விட்டது தெளிவாகத் தெரிகிறது. மீனவராவது பரவாயில்லை எனும் அளவிற்கே தமிழகத்து இடையர் வரலாறும் பண்பாடும் அறியக் கிடைக்கிறது. மருதத்திற்கும் குறிஞ்சிக்கும் இடையில் அமைந்திருந்த முல்லை நிலம், மாபெரும் வரலாறு கொண்டதென்பது தெளிவு. முல்லை நிலத்தார் கீழே இறங்கினால் மருதம். மேலே ஏறினால் குறிஞ்சி.

முல்லை - காடும் காடு சார்ந்த இடமும். மிகக் சிறந்த பிரிப்பு, ஆக்கம். அன்றைக்கு மேய்ச்சல் தொழில் செல்வாக்கானதாக இருந்திருக்கும். மந்தைகளோடு இடம் பெயர்ந்து செல்லும் வழக்கமுடைய இடையர்களே அன்று மக்களை இணைத்திருப்பார்கள். முதல் வணிகரும் இடையராகவே இருந்திருக்க வேண்டும்.

இடையருக்கும் பல்லவருக்குமான தொடர்புகள் என்ன? இடையருக்கும் குறும்பர்களுக்கும் உள்ள உறவு என்ன? குறும்பர்களும் குடும்பர்களும் தொடர்புடையவர்களா? காஞ்சிபுரத்தைச் சுற்றி தற்போதும் ஏராளமான இடையர்கள் வாழ்வது எதனால்? குறும்பர்கள் தமிழரும், தெலுங்கும், கன்னடமும் பேசுவது எதனால்? குறும்பு என்றாலே தமிழில் காடல்லவா.

தொப்பலாக்கரையில் எந்த சாதிக்காரர்கள் ஆடு மேய்த்தார்கள்? எமது இள வயதில் கவனித்தவரை நாயக்கரே அதிகமாக ஆடுகள் மேய்த்தார்கள். குறிப்பாக செம்மறியாடுகள் மேய்ப்பார்கள். தேவேந்திரரும் ஆடுகள் மேய்த்தாரெனினும் அவர் மேய்த்தது வெள்ளாடு. எமது மாமா ஒருவர் வாழ்நாளெல்லாம் ஆடுதான் மேய்த்தார். தொழிலே ஆடுமேய்ப்பதுதான். ஆட்டுக்காரர் என்றே அழைப்பார்கள். திருமலைபுரத்துத் தேவேந்திரர்களிலும் ஆட்டுக்காரர்கள் உண்டு. பிற சாதியார் வீடுகளில் ஒன்றிரண்டு ஆடுகள் கட்டி வைத்து வளர்த்தார்களே தவிர, மந்தையாய் ஆடுகள் மேய்த்துப் பார்த்ததில்லை, இராசகோபாலபுரம், சேதுபுரம் போன்ற ஊர்களைச் சேர்ந்த நாயக்கர்கள் பெரும் ஆட்டு மந்தைகள் வைத்திருந்தார்கள்.

இடையர் கோனாராகி தற்போது யாதவர் எனச் சொல்வதையே பெருமையாகக் கருதுகிறார். மதுரை, இராமநாதபுரம், நெல்லைப் பகுதிகளில் அதிகமாக வாழும் கோணார் போன்றே, கொங்கில் குறும்பர் அதாவது குறுமன்ஸ் அதிகமாக வசிக்கிறார்.

தொல்குடியான இடையருக்கும் ஆதிதிராவிடர் எனக் குறிப்பிடப்படும் பறையருக்குமான உறவுகள் எத்தன்மையவை? கண்ணனின் மகன் பெயர் சாம்பன் என்பதும், மனைவி சாம்பவதி என்பதும் ஏதேனும் பொருள் நிறைந்ததா?

ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் 1871ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட சென்னை மாகாண மக்கள் தொகைக் கணக்கெடுப்பு (The Report of the Census - 1891 by

H.A.Stuart) தெளிவான ஒரு சான்றினைத் தருகிறது. கால்நடை மேய்ப்போர் (Shepherds) எனும் பிரிவின் கீழ்வரும் இடையர்கள், அன்று 6,27,953 பேர் வாழ்ந்ததாகப் பதிவிடப்பட்டுள்ளது. இடையர்கள் அல்லது யாதவர்கள் - Ideiyars or Yadavars எனக் குறிப்பிடப்பட்டுள்ள இடையர் சாதியில், 408 உட்பிரிவுகள் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இடையரில் முக்கியமான உட்பிரிவுகளைக் கொடுக்கப்பட்டுள்ளவை,

| | | |
|---|---|---|
| கல்கட்டி (Kalkatti) | - | 29,892 பேர்கள் |
| கள்ளா (Kalla) | - | 34,126 பேர்கள் |
| கருத்தா (Karutta) | - | 19,292 பேர்கள் |
| பால் (Paal) | - | 6222 பேர்கள் |
| பஞ்சாரம்கட்டி (Panjaramkatti) | - | 46,339 பேர்கள் |
| பெண்டுக்கு மேய்க்கி (Pendukku Meekki) | - | 19,797 பேர்கள் |
| புதுநாட்டான் (Pudunaataan) | - | 17,420 பேர்கள் |
| சாம்பார் (Sambaar) | - | 1,03,044 பேர்கள் |
| சங்குகட்டி (Sankukatti) | - | 6886 பேர்கள் |
| சிவியார் (Siviyaar) | - | 21,617 பேர்கள் |
| சோழிய (Soliya) | - | 20,424 பேர்கள் |
| தூமாட்டு (Thumaattu) | - | 5106 பேர்கள் |
| தெலுங்கு (Telugu) | - | 20,004 பேர்கள் |

கணக்கெடுப்பில் 1,24,600 பேர் இடையரை சாதியாகவும், உட்சாதியாகவும் பதிவிட்டுள்ளனர். பெருவாரியான இடையர்கள் சாம்பார் எனப் பதிவிட்டுள்ளது எதைக் குறிக்கிறது? இடையர் தலைவனின் மகனான சாம்பானுக்கும், தென்முனையான குமரியில் வாழும் சாம்பாக்கமாருக்கும், குமரி மாவட்டத்தில் தற்போதும் வாழும் கிருஷ்ண புத்திரர்களுக்கும் ஏதேனும் தொடர்புள்ளதா? உண்மையில் மாபாரதம் எங்கு நிகழ்ந்தது? எத்தனை மதுராக்கள் பாரத நிலத்தில் இருக்கின்றன? பண்டு யார்? பாண்டி யார்? கௌரவர் யார்? காரவர் யார்? காரயர் யார்? கரவர், குருவர் யார்? பரதவர் யார்? பரவர் யார்? பறையர் யார்? மீன் பறையர் யார்? மினாப் பறையர் யார்? கோலியப் பறையர் யார்? கோலியர் யார்? சாலியர்

யார்? சேலையர் யார்? சோலையர் யார்? கருப்பசாமி யார்? வெள்ளைச்சாமி யார்? முனியசாமியும் மாடசாமியும் யார்? சின்னச்சாமியும் பெரியசாமியும் யார்?

1891கணக்கெடுப்பில், சென்னை மாகாணத்தில் 20,59,466 பேர் தங்களைப் பறையர் எனப் பதிவிட்டுள்ளனர். குறிப்பாக 11,95,692 பேர் சாதியாகவும், உட்சாதியாகவும் பறையர் எனக் குறிப்பிட்டுள்ளனர். குறிப்பிடத்தக்க எண்ணிக்கையுள்ள பறையர் உட்சாதிகள், அம்மா - 20,006, கட்டி 64,232, கீழக்கட்டி - 16,253, கோலியன் - 26,815, கொங்கன் - 27,931, கொரவா (Korava) - 18,155, கோட்டை - 18,907, முரசு (Morasu) 18,330, மொட்டை - 25,306, பச்சை (Pacchai) - 11,203, சாம்பான் (Saambaan) - 49,714, சங்கிடும் (Sangidum) - 30,459, சோழிய (Sozhia) - 36,602, தமிழ் (Tamil) - 36,062, தமிழன் (Tamilan) - 2,43,939, வலங்கமாட்டு (Valangamattu) - 67,036.

பறை என்பதற்கு பாறை என்றொரு பொருளும் சுட்டப்படுகிறது. பறை எனும் தோல் கருவி அடிப்பதால் பறையர் என அழைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. கணக்கெடுப்பில் குறிப்பாகக் கவனிக்க வேண்டியது சாம்பான் எனும் பிரிவில் வரும் எண்ணிக்கையே. இடையரில் இலக்கம் பேருக்கும் மேல் சாம்பார் எனக் குறிப்பிட, பறையரோ அரை இலக்கத்திற்கும் குறைவாகவே சாம்பான் எனப் பதிவிட்டுள்ளனர். தங்களன் (தமிழன்) எனும் பெயரில் இரண்டு இலக்கதிற்கும் மேல் பதிவிட்டுள்ளது அயோந்திதாசரால் எனில் பொருத்தமானதே. அன்று அவர்தான் தமிழன் எனக் குறிப்பிடுமாறு வலியுறுத்தியிருக்கிறார். தமிழில் பறையர் எனவும், மராத்தியில் பறவாரி (Paravaari) எனவும், ராஜ்மகாலில் பகாரி (Pahari) எனவும் அழைக்கப்படும் இந்த பெரும்மக்கள் திரளின் தோற்றம் என்ன? வரலாறென்ன? பண்பாடென்ன? சமூக, பொருளாதார, அரசியல், ஆன்மீகப் படிநிலைகள் எத்தகையது?

1891இல் சென்னை மாகாணத்தில் வசித்த மக்களில் மிகப் பெரும்பான்மையோர், அதிகமானோர் Filed Labourers எனக் குறிப்பிடப்பட்ட வயல் உழைப்பாளர்களே. அதாவது மொத்த மக்கள் தொகையில் இருபது சதமானம் (19.75%) நிலத்தில் உழைக்கும் மக்களே.

அன்று 70,36,838 பேர் உழைப்பாளர்கள் எனில், பள்ளிகள், வன்னியர்கள் அல்லது படையாச்சிகள் - Pallis, Vanniyans or Padaiyachis மட்டுமே 21,51,074

பேர்கள். பள்ளிகள் வடதமிழகத்தில் நிறைந்திருந்தார்கள் எனில் அன்றைய தென் தமிழக மாவட்டங்களான தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலியில் நிறைந்திருந்தது பள்ளர்கள். 7,80,558 பள்ளர்கள் அன்று தென் மாவட்டங்களில் வசித்திருக்கின்றனர். பள்ளரையும், பள்ளியையும் சேர்த்தால் மொத்த சனத்தொகையில் கிட்டத்தட்ட பாதிக்கு வந்துவிடுகிறார்கள். பள்ளோடு பறையையும் சேர்த்தால்? ஐம்பது இலக்கம் பேர் இருந்தும், எதனால் அடிமை வாழ்க்கை வாழ்ந்தார்கள் பள்ளும் பறையும்? பள்ளிகளையும், பள்ளர்களையும் ஒன்றாக்க விடாமல் தடுத்த நுட்பம் எது?

தஞ்சையில் அன்று அதிகம் வசித்தது எந்தச் சாதி? சாதிகள்? (Madras District Gazatteers by F.R. (Femingway I.C.S.) 1906 இன்படி, அன்றைய தஞ்சை ஜில்லாவில் அதிகம் வாழ்ந்தது பறையர் - 3,10,391. பள்ளிகள் அல்லது வன்னியர்கள் - 2,35,406. பள்ளன்கள் - 1,59,855. கள்ளன்கள் - 1,88,463. வலையன்கள் - 1,37,216, கரையன்கள் - 8737. நோக்கன்கள் - 2359, தமிழ் பிராமணர்கள் - 1,18,882. வெள்ளாளர்கள் - 2,12,168.

கணகெடுப்பின்படி, 100 வருடங்களுக்குமுன், தஞ்சையில் வாழ்ந்த மேளக்காரர்கள் எண்ணிக்கை 4565. மேளக்காரர்களில் தெலுங்கு மேளக்காரர்கள், தமிழ் மேளக்காரர்கள் என இருபிரிவுகள் சுட்டப்படுகின்றன. தெலுங்கு மேளக்காரர்கள் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் வசிக்க, தமிழ் மேளக்காரர்களோ மதுரை மாவட்டத்திலும் வாழ்ந்துள்ளனர். தமிழ் மேளக்காரரின் பழக்கவழக்கங்கள் வெள்ளாளனை ஒத்திருப்பதாக வெள்ளைக்காரத் துரை குறித்துள்ளார். தெலுங்கர் பெரியமேளம் எனவும், தமிழர் சின்னமேளம் எனவும் அழைக்கப்பட்டனராம். சின்ன மேளக்காரர்கள் தாசிகளின் கச்சேரிக்கு இசைப்பதுண்டாம். பெரிய மேளக்காரர்கள் கோவில்களிலும் திருமணங்களிலும் இசைப்பார்கள் எனக் கூறப்படுகிறது.

பள்ளர்கள் பொங்குகிறார்கள் - இசையோடு மட்டுமே தொடர்புடைய, அது மட்டுமே தெரிந்த மேளக்காரர்கள் எப்படி இசைவேளாளர்கள் ஆனார்கள்? வெள்ளாளர் போராடுகிறார் - தேவேந்திரர் என வைத்துக்கொள்ளுங்கள், தேவேந்திர குல வேளாளர் என வைக்கவிட மாட்டோம். அப்படியெனில் இசைப்பவர் எப்படி வேளாளரானார்? வேளாளரின் உண்மையான பொருள்தான் என்ன?

தஞ்சை வயல்களில் மாடாய் உழைத்தது பள்ளும் பறையுமல்லவா. அவர் வேளாளர் இல்லையெனில் வேறெவர் வேளாளர்? தேவேந்திர குலத்தாரைப் பாராட்ட வேண்டும். தேவேந்திர குலத்தார் என்றோ, தேவேந்திரர் என்றோ வைத்துக்கொள்ளாமல், நாங்கள் உழவர்கள், பயிர்த்தொழில் செய்பவர்கள் என்பதன் அடிப்படையில், தேவேந்திரகுல வேளாளர் எனக் கேட்பது பொருத்தமுடையது, போற்றத்தக்கது.

தமிழ் நிலத்தின் உழவர் யார்? உழுகுடி எது? சங்க காலத்தில் வீரத்திற்காகப் பெரிதும் போற்றப்படும் மழவர் யார்? அதியனை மழவர் என்பது எதனால்? மழவருக்கும் மள்ளருக்கும் உள்ள உறவென்ன? மழவருக்கும் பல்லவருக்கும் ஏதேனும் தொடர்புள்ளதா?

மழவருக்கும், மலையருக்கும், மலையாளத்தாருக்கும் தொடர்பு இருக்கிறதா? சேர நாட்டிற்கும், பல்லவ நாட்டிற்கும் உள்ள தொடர்புகள் என்ன? சேரர்தான் பல்லவரா? பொருத்தமுடையதுதானே.

உழவர் யார்? மழவர் யார்? பழையர் யார்? புலையர் யார்? ஈழவர் யார்? நளவர் யார்? கோவியர் யார்? தீயர் யார்? தெய்யர் யார்? நாயர் யார்? நாடார் யார்? சார்ணர் யார்? சாணார் யார்?

அவர் பழையரா புலையரா? அவர் ஈழவரா இழுவரா? இழுவர் எப்படி ஈழவர் ஆனார்? அவர் வில்லவர் அல்லவா. வில்லில் பெருத்த விசையோடு அம்பை எய்வதாலல்லவா, அவனுக்கு விசயன் எனும் பெயர் வந்தது. வில்லை இழுப்பவர் இழுவர். இராமணயத்தின் வில்லவர் தீண்டாச் சாதியானது எப்படி? எப்போது? யாரால்?

மலை நிலத்தார் மேடர் எனில், தாழ்வான நிலத்தார் ஈழவரோ. எனில் பள்ளர் பெயர்தான் இள்ளர், இல்லர், ஈழர், ஈழவர் என ஆகியதோ.

முக்குவர் சாதியாம். தமிழருக்கு வெட்கமில்லையா? பிழைநீக்கம் செய்வது எப்போது? முக்குவர், மூக்கவர், முக்குவா, Mukkuva.

அவர் மூழ்குபவரல்லவா. மூழ்கி முத்தெடுப்பதால் அவர் மூழ்குபவர். மூழ்குபவரை முக்கவர் ஆக்கியது பிழையன்றோ. மூழ்குபவர். எத்தனை

அருமையான தமிழ்ச் சொல். கரையை ஆள்பவர் கரையாளர். அவர் காரையராகிவிட்டார்.

கரை என்பது நெய்தல் நிலத்து ஊர்ப் பெயர். கரையைச் சேர்ந்தவர் எனும் பொருளில் கரையர், கரைக்காரர். கரையர் காரையர் எனத் திரிவது இயல்பு. கரையார்? வேலுப்பிள்ளை பிரபாகரன் கரையராம். அவரை முகநூல்களில் பள்ளர் சமூகத்தவர் எனச் சிலர் குறிப்பிட்டுள்ளதற்கு, பிள்ளைமார் கொதிக்கிறார். வேலுப்பிள்ளை என்பதால் பிள்ளை சாதியாம். பிள்ளைப் பட்டம் எல்லாச் சாதியாரும் வைத்துக் கொள்வது தெரியாதா? கோயில்பிள்ளை எனும் பெயர் எல்லாச் சாதியிலும் உண்டல்லவா. பள்ளன் வரலாற்றைத் திருடுகிறான், எல்லோரையும் பள்ளன் என்கிறான். ஏகப்பட்ட வசைகள், இழிவான சொற்கள்.

உண்மையிலேயே பிரபாகரன் என்ன சாதி? கரையன்தானா. மீனவரான கரையர் வெள்ளாளரெனில், சங்குத் தொழிலில் ஈடுபடும் கடையர் என்ன சாதி? கரையருக்கும் கடையருக்கும் உள்ள உறவு முறை எத்தகையது? கரையாளனுக்கும் காராளனுக்கும் உறவிருக்கிறதா?

கடையர் பள்ளரில் ஒரு பிரிவெனில், கரையர்?

புகழ்பெற்ற எர்கர் தர்ஸ்டனின் தென்னிந்தியக் குடிகளும் குலங்களும் மூன்றாவது தொகுதியின் ஆறாம் பக்கத்தில் கடையன் - Kadaiyan பற்றிய விவரங்கள் பதிவாகியுள்ளன. கடையன் எனில் கடைசி அல்லது குறைந்தவன் எனப் பொருளாம் - The name kadaiyan, meaning last or lowest, occurs as a sub-division of the pallan. அவர் பள்ளனின் உட்சாதியாம். கடையர் சுண்ணாம்புச் சிப்பி (Lime-shell) சேகரிப்பவராம். சிப்பி சுண்ணாம்பு சுடுபவராம். ராமேஷ்வரம் மற்றும் அதன் சுற்றுப் பகுதியைச் சேர்ந்த கடையர்களே முத்தெடுக்க மூழ்குபவர்களாக தர்ஸ்டன் காலத்தில் (1900) வேலைக்கு அமர்த்தப்பட்டார்களாம். மதுரை மற்றும் திருநெல்வேலிக் கடற்கரையிலுள்ள கடையன்கள் கிறித்தவராக இருக்கிறாராம். பரவர்களைப்போன்றே கடையன்களும் செயின்ட் பிரான்சிஸ் சேவியரால் மதமாற்றம் செய்யப்பட்டார்களாம்.

இதே புத்தகத்தின் 250வது பக்கத்தில், கரையான் - Karaiyaan பற்றி பதிவுகள் உள்ளன. A name of Tamil Sea - Fisherman, who live on the coast (Karai). The

fishing section of the Palles is known as palle kariyaalu. See Pattanavan. - கடற்கரையில் வாழும் தமிழ் கடல்மீனவர்களுக்கு கரையார் எனப் பெயர், பள்ளிகளில் மீன் பிடிப்பவர் பள்ளிகரையாளு என அறியப்படுகிறார். மேலும் விளக்கத்தை பட்டனவரில் காண்க.

பட்டனவர் யார்? பூம்பட்டினத்தார் யார்? காவேரிப் பூம்பட்டினத்தில், பைம்போதிப் பட்டினத்தில் நிறைந்திருந்தவர் எவர்?

கரிம்பாலன் - Karimpaalan என்பவர் மலபாரின் சிறியதொரு வேட்டை மற்றும் பயிர்த்தொழில் செய்யும் காடு வாழ் பழங்குடியாம். அவர் கரிம்பாலனா அல்லது கரும்பள்ளனா அல்லது குறும்பாடனா?

கரியா - Kariya - A sub-division of kudubi. குடும்பியும் குடும்பாவும் ஒன்றா வேறுவேறா? அவர் கரியாவா அல்லது கரையாவா? கரையர் தானே.

கடையர் யார்? ஆற்றின் கடைசிப்பகுதியில் வாழ்ந்தவர் கடையர். கடைமடை கேள்விப்பட்டதில்லையா. அழகிய தமிழ் பெயர் கடையர். கடையர் என்பது இழிவாகப் பார்க்கப்படுமெனில் உடையார் எப்படி உயர்வான சொல்லாயிற்று? உடைமை உடையவர் என்பதாலா? உடையர் எப்படி உடையார் ஆனார்? துடியர் யார்? மடைக்குப் பொறுப்பானர் மடையர். நீரைக்கட்டி வைப்பவர் நீர்க்கட்டி, வாய்க்காலில் நீர்ப் பாய்ச்சுபவர் வாய்க்காரர். வயல்காரன். மடையைப் பராமரிக்கும் பள்ளி மடைப்பள்ளி. அவர் இழிவானவர், அது இழிவான தொழில். கோவில்களில் சமையல் செய்யுமிடம் மடப்பள்ளி. சமையல் செய்யுமிடம் உயர்வானது. அவர் உயர்வானவர். ஏதேனும் நியாயமிருக்கிறதா.

தொப்பலாக்கரை பெரிய கண்மாயின் தலைமடையை அடைக்க எமது மாமாவைத் தேடி வருவார்கள். வாய்க்காலில் நீர் போய்க்கொண்டிருக்கும்போது மழை பெய்தால், உடனே மடையை அடைக்க வேண்டும். மழைநீரே போதுமல்லவா. எத்தனை பெரிய நீர்ச் சிக்கனம். மாமா போன்றவர்கள் எமது தெருவிலிருந்து ஓடுவார்கள். அவ்வளவு அக்கறை, கரிசனம். யாம்கூட ஒருமுறை மாமாவுக்கு உதவியிருக்கிறோம். சுழித்தோடும் மடையை அடைக்க அன்று படாதபாடுபட்டோம். செடிகளை வெட்டி, புல்லை அறுத்து, சகதியை உருட்டி, உள்ளுக்குள் முங்கி,

மடையை அடைப்பதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது. மாமாவும் மருமகனும் வெற்றியோடுதான் திரும்பினோம்.

காடர் - Kadir பற்றி தர்ஸ்டன் எத்தனை அழகான, ஆழமான விவரிப்புகள் கொடுத்திருக்கிறார்? எத்தனை மகத்தான உழைப்பு? எத்தகைய களப்பணி? எவ்வளவு துல்லியம்? மனிதர்களின் படங்களும் இடம் பெற்றுள்ளது எத்தனை அருமை. காடருக்கும் ஆப்பிரிக்கருக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? குமரிக் கண்டம் கொள்கை சரிதானோ. தமிழ் நிலத்தில் காடரும், கடயரும், பள்ளரும், பறையரும், தம்மை ஆப்பிரிக்கர் என்பதில் உடன்பாடு காணக்கூடும். பிற தமிழர்கள் மனம் ஒப்புவரோ?

தமிழகத்தில் ஆளாளுக்கு போட்டிபோட்டுக்கொண்டு அவரவர் சாதிக் தலைவர்களுக்கு பெரிய பெரிய சிலைகளாக எழுப்பும் சாதித் தமிழர்கள், எங்காவது எட்கர் தர்ஸ்டனுக்கு சிலை வைத்திருக்கிறார்களா? ஏதேனும் சாலைக்கு எட்கர் தர்ஸ்டன் சாலை எனப் பெயரிட்டிருக்கிறார்களா? தமிழ்நாட்டிலுள்ள ஏதேனுமொரு பாலத்திற்கு? ஏதேனுமொரு கட்டிடத்திற்கு?

வைக்கவில்லையெனில் யார் காரணம்? ஆட்சியதிகாரத்தில் இருந்தவர்களைத்தானே குற்றம் சொல்ல வேண்டும். தமிழ், தமிழர் எனக் கூப்பாடுபோட்டு ஆட்சிக்கு வந்தவர்கள், தமிழுக்கும், தமிழ்நிலத்திற்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் பாடுபட்டவர்களுக்கு சிலை வைத்தார்களா அல்லது தத்தமது சாதியைத் தூக்கிப் பிடித்தவர்களுக்கு, சாதி வெறியை வளர்த்தவர்களுக்கு, ஊரெல்லாம் சிலை வைத்தார்களா?

பெருமதிப்பிற்குரிய எட்கர் தஸ்டனுக்கு சிலை வைத்திருந்தால் மக்கள் யாரிவர் எனப் பார்த்திருப்பார்கள். இவர் என்ன செய்தார் எனக் கேட்டிருப்பார்கள், எழுதியதைப் படித்தும் இருப்பார்கள். தென்னிந்தியாவில் இத்தனை சாதிகளா என வியந்திருப்பார்கள். சாதிகளை மதித்துமிருப்பார்கள். தமிழ் நிலத்தில் இதெல்லாம் நடவாமல் போனதற்குத் காரணமென்ன? யாரை நோக்கி விரல் சுட்ட வேண்டும்?

தமிழ் நிலத்தில் டார்வினுக்கு எங்காவது சிலையுண்டா? மார்ச்சுக்கு? முடியுமா என்ன? தமிழ் நிலத்தில் கார்ல் மார்க்ஸ் சிலை இல்லாததற்கு யார் காரணம்? பொதுவுடமைக் கருத்து பரவிவிடும் எனும் அச்சமா? நிலத்தைப்

பொதுவுடமையாக்கக் கேட்டுவிடுவார்கள் எனப் பதற்றமா? தமிழ் நாட்டில் தால்ஸ்தாய்க்கு எங்கேனும் சிலை நிறுவப்பட்டுள்ளதா தமிழர்களே.

தமிழக்கத்தில் எங்கு நோக்கினும் பெரியார், அண்ணா சிலைகளே தென்படுவதன் காரணமென்ன? கருணாநிதிக்கும் ஊரெல்லாம் சிலை வைக்க ஆரம்பித்தாயிற்று. பெரியாரும், அண்ணாவும், கலைஞரும் யார்? மூவருக்குமுள்ள ஒற்றுமைகள் என்ன? மூவரும் திராவிடத் தந்தையர் எனில் தமிழத் தந்தை யார்? தமிழத் தந்தையர்கள் உண்டா?

தமிழ் நிலத்தில் திராவிடத்தால் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன? எதிலெல்லாம் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன? மாற்றங்கள் நன்மை தருபவையா அல்லது தீமையானவை? திராவிடத்தால் தமிழ்நாடு வளர்ந்திருக்கிறதா அல்லது தேய்ந்திருக்கிறதா? திராவிடம் தமிழை வளர்த்துள்ளதா அல்லது குறைத்துள்ளதா? திராவிடம் சாதியைப் போற்றியதா அல்லது சாதியை இல்லாமலாக்கியதா? திராவிடம் குறிப்பிட்ட சாதிகளுக்கு மட்டுமான அரசியல் செய்ததா அல்லது எல்லோருக்குமான அரசியல் செய்ததா?

திராவிட ஆட்சிகளில் ரெட்டியார், செட்டியார், நாயக்கர் போன்ற தெலுக்குச் சாதிகளைச் சேர்ந்தவர்கள் எத்தனை அமைச்சர் பதவிகளை அலங்கரித்தார்கள்? தமிழின் தொன்மைக் குடிகளான பள்ளர், பறையர், இடையர் சாதிகளிலிருந்து எத்தனை பேர் அமைச்சராக்கப்பட்டார்கள்? குறிப்பாக திமுக-வில்?

இச்சாதியரில் எத்தனை பேர் அதிகாரமிக்க பதவிகளில் அமர வைக்கப்பட்டார்கள்? மாவட்டத் தலைவர்களாக ஆக்கி அழகு பார்க்கப் பட்டார்கள்? எத்தனை பேர் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்? எத்தனை பேரை பொதுத் தொகுதி வேட்பாளர்களாகக் களமிறக்கின திராவிடக் கட்சிகள்?

மூன்று திரவிடத் தந்தையரும் தெலுங்குக்காரர்கள் என்பது உண்மைதானா?

எமது அழகிய தொப்பலாக்கரையில் தேவருக்கும் நாயக்கருக்கும் சண்டை. சண்டையில் இறங்குமுத்தம்மன் கோவிலுக்குப் பாத்தியப்பட்ட பிள்ளை, ஆசாரி, பூசாரி பங்கெடுத்துக் கொள்ளவில்லை. நாயக்கர் தெலுங்கு மொழி பேசுபவர், அயலார் எனில், தேவரோடு சேர்ந்து சண்டையில் குதித்திருக்க வேண்டுமல்லவா?

ஒருவேளை நாயக்கர் பக்கம்தான் நியாயம் இருப்பதாகக் கருதி பிற தமிழ்ச் சாதிகள் சண்டையில் பங்குபெறவில்லையோ?

தேவர் யார்? எமது அழகிய தொப்பலாக்கரையில், எமக்கு மச்சான் உறவுள்ளவர், மரப்பலகையில் உட்கார்ந்தார் என்பதற்காக அடிக்கப்பட்டார். ஊருணியருகே ஒரு வீட்டில் டாக்டர் - கிராம டாக்டர் மருத்துவம் பார்த்தார். மருத்துவம் பார்க்கப்போனவர், வீட்டின் வெளியறையில் உட்கார்ந்து காத்திருந்தார். எங்கயேடா வந்து பெஞ்சில் உட்காட்ந்திருக்கிறாய் என காய்ச்சலோடு வந்தவருக்கு அடி. அடித்தவர் மறவர்.

யார் தமிழர்? தெலுங்கர் யார்? கன்னட நாடு எது? மலையாள தேசம் எது? துளுவம்? தமிழர் திராவிடரா? திரமிலரா? திறமிலாதவரா? மறமில்லாதவர் யார்? அறமில்லாதவர் யார்? மருத்துவம் பார்க்குமிடத்தில் மரபெஞ்சில் எப்படியடா உட்காரலாம் என அடிக்கும் மறவர் திராவிடரா, தமிழரா, மனிதரா அல்லது தேவரா? தேவரென்னும் பெயர் பொருத்தமுடையதுதானா?

தேவர் யார்? உயர்ந்தோர் தேவர். சிறந்தவர் தேவர். அறிவிற்கூடினவர் தேவர். வீரத்திற்குப் பெயர் போனவர் தேவர். மனிதரைக் காப்பவர் தேவர். அடிப்பவர்?

சுரர் யார்? அசுரர் யார்? தேவர் யார்? சூரர் யார்?

இராவணன் பரம்பரையடா. வீரப் பறையனடா. இராவணனின் வாரிசுகளடா. இராவணன் படம்போட்டு, பலவிதமான வசனங்களோடு பறையர் பெயரில் முகநூல் பதிவுகள் காணக்கிடைக்கின்றன. இராவணன் பறையரெனில் இராமன் யார்? வில்லின் வேந்தன் யார்? சொல்லின் காவலன் யார்? வில்லும் சொல்லும் பல்லும் மல்லும் ஒன்றல்லவா.

இராமன் பேசிய மொழி எது? தமிழா? தமிழேதானா. கண்ணனின் திருவாயிலிருந்து வெள்ளமெனக் கொட்டிய அமுதச் சொற்கள் தமிழா.

அன்று இந்திய நிலம் எப்படி இருந்தது? மக்கள் தொகை. பேசிய மொழிகள். தமிழர் இந்திய வரலாற்றைப் படிக்க வேண்டும். வரலாறு அறிந்திருந்தால் ஆதிச்சநல்லூர் பண்பாட்டிற்கும், அரப்பா பண்பாட்டிற்குமுள்ள தொடர்புகள் எளிதில் விளங்கியிருக்கும். ஆதிச்சநல்லூரில் தற்போதும் வாழ்ந்து வருபவர்கள் யார்?

அந்தக் களம் யாருக்குச் சொந்தமானதாக இருக்கிறது? ஆதிச்சநல்லூரில் இருக்கும் பாண்டி ராஜா கோவிலின் முக்கியத்துவம் என்ன? அங்கே சித்திரை நாள் மகாபாரதக் கதையாய் நடத்துவது எதற்காக?

ஹரப்பா என்பதை விட கருப்பா, கருப்பூர் பொருத்தமல்லவா. மொகஞ்சதாரோ? பலுச்சிஸ்தான்? பலுசிஸ்தானத்தின் மொழியான பலுச்சி பள்ளிச்சி மொழியோ. பிராகுயி பற மொழியோ. ஈரானின் பகலவியும், ஆப்கானத்திள் பலுச்சியும் தொடர்புடையவையோ. பகலவி - பல்லவி - பல்லவ - பல்லவர். பகலவி - பகலவன் - பெர்சிய மித்ரனான சூரியனுக்குப் பெயர் பெற்றதல்லவா. பெர்சியா அர்த்தமென்ன? பெர்சியா, பெருசியா, பெருச்சியா, பறச்சியா மாறுமோ? பள்ளச்சி, பறச்சி, இப்படியும் வரலாற்றை முன்னெடுக்கலாமோ?

ஈரான், ஆப்கானித்தான் பலுச்சி மொழிக்கும், பீகார், வங்காளத்தின் மால்டோ மொழிக்குமான தொடர்புகள் யாது? மால்டோ பேசுவோர் மாலர் எனக் கூறுப்படுகின்றனர். மாலர் எனில் மனிதராம். மாலுக்கும், மாலருக்கும், திருமாலுக்கும் தொடர்பிருக்கும்தானே.

தேவருக்கும் நாயக்கருக்குமான உறவுக்கும், தேவேந்திரருக்கும் நாயக்கருக்குமான உறவுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் எவ்வளவு? நாயக்கருக்கும் பள்ளிகளான வன்னியருக்குமான ஒற்றுமை வேற்றுமைகள்? தெலுங்கு நிலத்தவருக்கும் தமிழ் நிலத்தின் வன்னியருக்கும் பள்ளி எனும் பெயர் அழகாகப் பொருந்துகிறதுதானே.

இருவருக்கும் பண்பாட்டு அளவிலும், மத அடிப்படையிலும், தொழில் முறையிலும் நெருங்கிய உறவிருப்பது கண்கூடல்லவா. இருபக்கத்தாரும் வேளாண்மைக்குப் பெயர் பெற்றவரன்றோ, குறிப்பாக நெல் வேளாண்மையில்.

இருதிறத்தாரும் பௌத்தரல்லவா? இருவருக்கும் பள்ளி எனும் பெயர் எதனால் வந்தது? பயிர் தொழிலுக்குப் பெயர் பெற்ற வடஆற்காடு தமிழ் பள்ளிகளுக்கும் தெலுங்குப் பாளிசாக்களுக்கும் என்ன ஒற்றுமை?

வெள்ளை ஆட்சியர் வெளியிட்ட மாவட்ட மானுவல்களில், பள்ளிகள் எப்படி சத்ரியர்களானார்கள் என்பது சுட்டப்படுகிறது. பள்ளிகளுக்கு சத்ரியர்க்குரிய குணம் இல்லையாம். வடதமிழகத்தில் பெருவாரியாக இடம் பெற்றிருந்த வன்னியர்கள்

சட்டத்தை மதிப்பவர்கள், விவசாயக் தொழிலாளர்கள், சிறு விவசாயிகள் என்றே ஆங்கிலேய ஆட்சியாளர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளனர். தஞ்சையில் மட்டும் படையாச்சிகளும், பள்ளரில் வரும் காலாடிகளும் சற்றே குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர் எனப் பதிவிட்டுள்ளனர்.

தெற்கிலிருந்து வடக்கே போகப் போக தமிழ் மொழி சிதைகிறது. பள்ளனின் மனைவி பள்ளி எனக் குறிப்பிடப்படுவதால், அப்பெயரை வெறுத்து தாங்களே வன்னியர் என அழைத்துக்கொண்டதாக திருச்சிராப்பள்ளி மாவட்ட மானுவல் குறிப்பிடுகிறது.

பள் எனில் பண்டு, பழமையாம். பள் எனில் பருத்தல், மிகுதல், முதிர்தல் எனப் பலவாம். பள் - பண்டு - பண்டியம் - பாண்டி - பாண்டியன் என வருமாம். பண்டு - பாண்டு - பாண்டிய - பாண்டவ எனவும் வருமாம். பள்ளுதல் எனில் உழுதலாம். பள்ளி எனில் கோயில், அரண்மனை, ஊர், இடம், படுக்கும் இடம், துயிலும் இடம், முனிவர் குடியிறுப்பு, சமணம் மற்றும் புத்தப் பள்ளி எனப் பல்வேறு பொருள்களில் புழங்குகிறது.

வன்னியர் எதற்காக பள்ளி பெயரைத் துறந்தாரோ, அதே காரணத்திற்காகவே பள்ளர் பெயரை தேவேந்திரரும் உதறத் தயாராகிறார். பள்ளர் எனும் சொல் குறைவானதாகவும் மள்ளர் எனும் சொல் பெருமையாகவும் சுட்டப்படுகிறது. மறவர் தேவரானது போல் எனில் சிறந்த ஓப்பீடே.

தெலுங்குக்காரரும் இப்படித்தான் பள்ளியைத் தவிர்த்துவிட்டு நாயக்கரானார். அன்று புத்தன் பேசிய பாளி மொழி மதிப்பிற்குரியதாக விளங்கியிருக்கும். பிராகிருத மொழியான பாளி - Paali பௌத்த சமயத்தின் மூலநூல்களைக் கொண்டுள்ள மொழி எனும் சிறப்பையும் கொண்டுள்ளது. பாளிக்கும் பள்ளிக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? தொலைதூரத்தில் பள்ளி உச்சரிப்பு பாளி எனத் திரிவது இயல்பன்றோ.

பாளி மகதத்தின் மொழியாகக் குறிப்பிடப்படுகிறது. மகதன் என்பதே மருதன் என்பதன் திரிபாகச் சுட்டலாமல்லவா? மகதனுக்கும் முத்தனுக்கும் ஒருமைப்பாடு உண்டே. மகதன், முகதன் முத்தன். அதென்ன மோரியர்? ஏன் மாரியர் என இருக்கக்கூடாது? மாரியர் மோரியராகத் திரிந்திருக்கலாம்தானே. மாரியர், மாரி எனில் மழை, மழையைப் போற்றுபவர் மாரியர்.

பாளி எனில் வரிசையாம். அதாவது Line, row, series. அதாவது வரிசையான புத்தகங்களாம். பல் வரிசை மாதிரி எனக் கொள்ளலாம் போல. பாளிக்கு பூதபாஷா எனப் பெயராம் - bhudabasha. பூதா எனில் கடந்ததாம். அதாவது Past, பாஷா எனில் மொழி. பூதபாஷா – கடந்த காலத்தின் மொழி, பழைய மொழி அதாவது Old Language. உண்மையெனில் சமற்கிருதம்? New language. புதிய மொழி. நன்றாகச் சமைக்கப்பட்டது. செய்யப்பட்டது. கிருதம், கிருத் என்பதற்கும் ஆங்கில ஸ்கிரிப்ட் - Script என்பதற்கும் ஒற்றுமை காணலாமல்லவா?

பாளியில் போதிக்கு அரசமரமென்று அர்த்தமாம். புத்தர்கள் என்பதற்காக பள்ளிகளான பள்ளியர்களுக்கு அரசப்பள்ளி எனும் பெயர் வந்ததா அல்லது அரசர்களின் வழித் தோன்றல்கள் என்பதற்காக அரசப் பள்ளி எனும் பெயர் வந்ததா? அவ்வாஹெனில் பந்த முட்டி? அது பந்த மூட்டியா அல்லது புத்த முட்டியா? புத்த முத்தன் கூட பந்த முட்டியாக மருவியிருக்கலாமே. முட்டி எனில் பானையா? அதனால்தான் வன்னியர் திருமணங்களில் தற்போதும்கூட முட்டிப் பானைகள் இடம் பெறுகின்றனவோ?

சமஷ்கிருத்தில் சாஸ்த்ரா - Saastra, சாஸ்திரம் என்கிறார்கள். பாளியில்? Sattha அதாவது சாத்தா. சாத்தன். சாத்தனார், சீத்தலை சாத்தனார் எத்தனை அழகிய பெயர். சீத்தலை என்பது ஊராக இருக்குமோ? செம்மையாக தலையையுடையவர், அறிவுடையவர் என்பதும் பொருத்தமுடையதன்றோ. சாத்தன்கள் தான் அன்று பூசகர்களாகவும், புலவர்களாகவும் இருந்துள்ளனர். சாத்தனூர் அழகிய ஊர்ப் பெயர். சாத்தன் ஊர் சாத்தனூர். சாற்றுவன் என்பது சாத்தன் என மருவியிருக்கலாம். எனில் சாற்றுவன், சொல்பவன், பறைபவன் எனும் பொருளிலும் வழங்கக்கூடும். பறைதல் தற்போதும் மலையாள வழக்கமன்றோ. பறைதல் சொல்லுதல். பறை, பறையும் - சொல், சொல்லும், பேசும். ஆண்டாள் வெற்றி எனும் பொருளில் பறை எனும் சொல்லைப் பயன்படுத்துவது அழகோ அழகு. நாராயணனே நமக்கே பறை தருவான், நாராயணன் நமக்கே வெற்றியைக் கொடுப்பான். நாம் எனில் ஆண்டாள் யாரை நாம் என்கிறார்? தமிழரையா, கண்ணனின் அடியார்களையா, நீராடும் பெண்களையா, பூமியின் புதல்வர்களையா, மானுடர்களையா?

சமஷ்கிருத அப்சரா- Apsara அதாவது அப்சரஸ்கள், தேவைதைகள். பாளியில் அச்சரா Acchara. அச்சன் எனில் மலையாளத்தில் ஆசான், ஐயா, பெரியவர், உயர்ந்தவர் எனப் பொருள். அய்யன், அச்சன், அச்சரன், அப்சரன், அப்சரஸ் எனத் திரிவது இயல்பு. சமஷ்கிருதத்தில் எஸ், ஷ் உச்சரிப்பு தனித்துவமானது. ஆங்கில - எஸ் (S) போல. தமிழாக்கத்தில் அதனை வடமொழி எழுத்தென ஒதுக்கிவிடுகிறோம். நமக்கு சனம். அவருக்கோ ஜனம். நமக்கு சட்டி, அவருக்கே ஷட்டி. ஷெட்டி. ஜெட்டி.

நமக்கு செப்பு எனில் அவருக்கோ ஜெபம். செப்பு - சொல்லு, பேசு, கூறு. அழகான தமிழ்ச் சொல். தெலுங்குக்காரர்கள் பயன்படுத்துகிறார்கள். தமிழில் சொல், சொல்லு என்பது நிலைத்துவிட்டது. ஜெபம் எனில் மனதுக்குள் ஜெபித்தல். அதாவது மனதில் ஒன்றை தொடர்ந்து சொல்லுதல், நினைத்தல். செப்பம் எனில் திருத்தமாக, நேர்த்தியாக, சரியாக. சேப்பல் - chappel- கிறித்தவக் கோவில்.

தமிழ் எழுத்தை முன்னும் பின்னும் வெட்டியும், ஒட்டியும், வேறொரு மொழியாகச் சமைத்துவிடாலாம்தானே. உதாரணமாக உயிர்த் தொழில் நுட்பமான மரபணு மாற்றத்தில் நிகழ்வதுபோல். மரபணு மாற்றத்தில் என்ன செய்கிறார்கள்? ஜீன்களை அதாவது மரபணு எழுத்துக்களை, மரபணு வரிசையை மாற்றி விடுகிறார்கள், இடம் மாற்றி வைத்துவிடுகிறார்கள். இடம் மாறியவுடன் பொருளும் மாறிவிடுகிறது. புரதமும் மாறிவிடுகிறது. பண்பும் மாறிவிடுகிறது. மரபணு மாற்றப்பட்ட வாழைப்பழம் எத்தனை நாட்களானாலும் பழுப்பதேயில்லையல்லவா.

சமஷ்கிருத உற்சவா (utsava) பாளியில் உச்சவா (Ussara). தமிழில் உசவல் என்றொரு அழகிய சொல்லிருக்கிறது. உசவல் எனில்? அதுதான் உச்சவல் ஆகி பின்னர் உற்சவர் ஆகிவிட்டது. கோவில்களில் உற்சவர்தான் ஊர் சுற்றுகிறார். மூலவர் கருவறையைவிட்டு வெளிவருவதில்லை.

ஈஸ்வரா (Isvara) பாளியில் ஈச்சரா (Issara). தமிழில் இறைவன். வள்ளுவர் பயன்படுத்திய பகவன் அழகிய சொல். சுவாமி (Swami) - சாமி (Saami). ராஜ்யா Rajya - ரச்சா (Rajja). கர்மா (Karma) பாணியில் கம்மா (Kamma). கம்மாநாயுடு புத்த மதத்தார். ஆனால் என்ன சொல்லப்பட்டுள்ளது? கம்மா எனில் காதில் அணியும் ஒருவகை ஆபரணமாம். அதை அணிந்த நாயக்கர் கம்மா நாயக்கராம்.

ஆங்கிலத்தில் Indus Civilization. தமிழில் சிந்துச் சமவெளி நாகரீகம். அது இந்துச் சமவெளி. சிந்துச் சமவெளியல்ல. இந்தரச் சமவெளி. இந்திர நாகரீகம். Indus - Indras - இந்திர நாகரீகம். சிந்தியர்கள் - இந்திரர்கள். பார்த்தியன்கள் - பார்த்தன்கள். வில்லுக்குப் பெயர் பெற்றவர்கள் பெர்சியாவின் பார்த்தியன்கள் என்பது வரலாறு.

தமிழில் இன்று எனில் இன்றைய நாள். இன்று -Today என்பதற்கு பெர்சிய மொழியில் Emrooz, இம்ரூஷ், எம்ரூஷ். வணக்கம் - சலம், செலம் Selam. அதுவே சலாம் - சலாம் போடுதல் - வணக்கம் வைத்தல். அரபியிலும், துருக்கியத்திலும் அஸ்ஸலாமு அழைக்கும் - Assalamu Alaykum. அழைக்கும்? அழை - அழைத்தல். அலை?

Peki, Neden Futbolcu Olmak Istiyorsun. So, why do you want to be a football player? பிறகு, நீங்கள் ஏன் கால்பந்தாட்டக்காரராக விரும்புகிறீர்கள்? அப்படியே தமிழோடும், தமிழ் இலக்கண அமைப்போடும் கச்சிதமாகப் பொருந்துகிறதல்லவா இந்த துருக்கிய மொழி -Turkish.

Istiyorsun - இஷ்டப்படுகிறீர், விரும்புகிறீர். இஷ்டம் - இஷ்டர் - எஸ்டர். அதற்கு மாற்று கஷ்டம், நஷ்டம், சேஷ்டம். சேஷ்டா தேவி எனில்? மூத்த தேதி எனப் பொருளாம். ஒரு காலத்தில் மூத்த தேவிக்கு தமிழ் நிலத்தில் கோவில்கள் இருந்தனவாம். பதிவுகள் கிடைக்கின்றன. அப்படியாயின் இளைய தேவி? இலக்குமி. இலக்குவன் எனில் இளையோன். இலக்குவன். இலங்குவன், இளங்குவனன். இளங்கோவன் - இளம் வயதினன், தம்பி. இள, இளம், இளையவன். இல - இள - இளமையானது. இள நங்கை. இலங்கை. இலக்கு, இலக்கை, எல்லை. லக்கக் தீவு, இலக்கைத் தீவு - தூரமான தீவு. எல்லைத் தீவு.

துர், துருக், துருக்கி (Turkey). Tuurk - துர்க், துர் - துர் எனில் ஊர். தூர் - ஊர். Old Turkic - Kook Turuk. தமிழில் தொல் துருக்கி - தொல்லூர். துருக்கியின் மாநிலங்கள் Khanate or Khaganate என அழைப்படுகின்றன. கானேட், கானேடு - நாடு. நாடு எனில் நிலத்தின் பிரிவு. துருக்கியின் பல்வேறு மாநிலங்களின் பெயர் அப்படியே தமிழ்ப் பெயராக தற்போதும் வழங்கி வருவது வியப்பானது.

துருக்கியிலும் குறிஞ்சி, முல்லை, மருதப் பிரிவுகள் நிலவியிருக்கின்றன. உண்மையெனில் தமிழர் யார்? இங்கிருந்து அங்கா அல்லது அங்கிருந்து இங்கா?

துருக்கியின் மொழியான Turkish மொழிக்கும், ஈரானின் பெர்சிய மொழிக்குமான தொடர்புறவுகள் யாவை? அவ்வாறே இரண்டு நாடுகளுக்கும் இடைப்பட்ட நிலமான குர்திஸ்தான்? குருதிஸ்தானம், Kurdish பகுதியின் சிறப்பென்ன? யார் இந்த குருதுக்கள்? ஆடு மேய்க்கும் மேயச்சல் நில மக்களான குருதுக்களுக்கும், பல்லவ குறும்பர்களுக்கும், மத்திய இந்தியாவின் கொர்கு - Korku - தொல் குடிகளுக்குமான பந்தங்கள் எத்தகையவை? மத்தியப்பிரதேசத்திள் கொர்க் பழங்குடிகளும், தொலை தூரத்திலிருக்கும் குர்து நிலத்தில் வாழும் பழங்குடி குர்துக்களும், ஒன்று போலவே கைகளைக் கோர்த்துக் கொண்டு வட்டமாகச் சுழன்று நடனமாடுவது எப்படி? எதனால் இந்த ஒற்றுமை?

மத்தியப் பிரதேசத்தில் காமன் விழாக் கொண்டாடும் தொல் குடிகளான பில்கள் - Bhils யார்? மத்திய பிரதேசம், இராசஸ்தான், குசராத் மற்றும் மராட்டியத்தில் வாழும் வில்லெறிவதில் வல்லவர்களான இந்த பிள்கள் யார்? பாக்கித்தானின் சிந்து மாகாணம் வரை பரந்து வாழும் பிள்கள், தனித்துவமான மொழியும், பண்பாடும் கொண்டிருப்பது எப்படி? மத்தியப்பிரதேசப் பிள்களை பள்கள் எனலாமா? பள்ளுக்கும் பிள்ளுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? நெல்லையில் வாழும் பள்ளர்கள் புள்ளர்களாம் - Puller. அப்படித்தான் பதிவிட்டுள்ளார் தின்னவேலி மானுவல் எழுதிய ஆங்கிலத்துரை. புள்ளர்கள். அழகிய பெயர். ஆண்டாள் புள்ளரையன் கோவில் என்கிறார். புள் என்றால் பருந்தாம். அப்படியாயின் புல்? புல் - பைங்கூழாம். அருமையான தமிழ் வார்த்தை. வித்துவக்கோட்டு வைபவத்தில் குலசேகரப் பெருமாள் பாடுகிறார் - எத்தனையும் வான் மறந்த காலத்தும் பைங்கூழ்கள், மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் - வித்துவக் கோட்டில் உறைகின்ற பெருமாளே! மேகம் எவ்வளவு காலம் மழை பெய்யாவிடிலும் பசுமையான தாவரங்கள், கருநிறம் கொண்டு ஆகாயத்தில் தோன்றும் பெரிய மேகங்களையே எதிர்நோக்கி இருக்கும்.

தமிழ்ப் பற்றில் சிறந்தவர்கள் பாண்டியர்கள் எனப் புகழப்படுகின்றனர். சேரரும் குறைந்தவரல்லர் என்பது திண்ணம். இப்போதும் சங்கத் தமிழோடு கொஞ்சி விளையாடுவது சேரர்களல்லவா? மலையாளிகள் மெல்லினத்தை சிறப்பாகப்

பயன்படுத்துகின்றனன்றோ? உண்மையெனில் பாண்டியர் வல்லினமோ, சோழரை இடையினமாகக் கொள்ளலாம் போல.

லட்சுமி (லக்ஷ்மி) - Lakshmi, லக்சி (Laksi) - லக்கி - lakkhi - சமஷ்கிருத லக்குமி பாளியில் லக்கி. இலக்குமி - இலக்கி. இலக்கி இசக்கியாவது இயல்புதானே. கேள்வி என்னவெனில் தமிழ் இசக்கி, லக்கியாகி, லட்சுமியானாரா அல்லது சமஷ்கிருத லட்சுமி பாளியில் லக்கியாகிப் பின்னர் தமிழில் இசக்கியானாரா? இசக்கி எப்போதிலிருந்து இசக்கியம்மனானார்? தமிழ் நிலத்தின் எல்லையம்மன் யார்?

Tiksna (தீக்ஷ்ணா) - (Tiksa) தீக்ஷா- Tikka - திக்கா - தக்கா - தக்கணை. வக்கணை என்பது தமிழெனில் தக்கணை? வக்கணையா வந்துட்ட என்பது தென் பகுதியில் ஏச்சு வழக்கம். எனில் பொருள் இல்லாமல் வந்தவரைச் சுட்டகிறதோ. பொருள் கொடுப்பது தக்கணை, தட்சணை, வரதட்சணை. ஆரிய (Arya ) - பாளியில் அய்ய (Ayya). புண்யா (Punya) - பாளியில் புண்ணா (Punna).

பாளி எனும் பள்ளி மொழி தமிழ் எனில், தமிழ்மொழி யாருடையது? புல்லரும், புள்ளரும், பள்ளரும், மள்ளரும், சொல்லரும் யார்? நெல்லை விதைத்தவர்தானே சொல்லையும் விதைத்தவராக இருப்பார்.

கந்தன், கந்தசாமி தமிழ்ப் பெயர்கள்தான். கந்தன் சொல் காந்தன், சாந்தன், சாத்தன் எனத் திரியும். சாத்தன் பெயர் மாத்தன், மூத்தன், தாத்தன், பாத்தன், வேத்தன், சீத்தன் எனப் பலவாகப் பிரியும். அவ்வாறே கோத்தான், கோந்தன் கொண்டன் எனவும் திரியும்.

கொந்தன்? கோண்ட்? காண்ட்? இந்தியாவின் மத்திய பாகத்தில் வாழும் பழங்குடி மலைமக்களுக்கு கோண்ட் மக்கள் எனப் பெயர். கோண்ட் எனில் மலையாம். மலைகளில் வாழும் மக்கள் கோந்துக்கள். அவர்கள் மொழி கோந்து அல்லது கோண்டி - Gondi. கோண்டி மொழி முக்கியமானதொரு நடுத்திராவிட மொழியாக சுட்டப்படுகிறது. யார் இந்த கோண்டர்கள்?

குண்டூர் பொருளென்ன? அது குன்றூரா அல்லது குண்டூரா? குண்டு (பருத்த) ஊர் என வருமா? குண்டு என்பதை சிறிய நீர்நிலை எனக்கொண்டால் குண்டு ஊர்,

நீர்நிரம்பிய ஊர் எனப் பெயர் வரும். குன்று என்பதற்கு வயல் எனவும் பொருள் உண்டு. அவ்வாறெனில் வயலூர், வயல்கள் நிறைந்த ஊர். குன்றூர்.

உண்மையெனில் நெல்லூர்? நெல் விளையும் ஊர் நெல்லூர். நெல்லூர் எப்படி ஆந்திராவிற்குச் சொந்தமானது? நெல்லூருக்குச் சொந்தமானவர்கள் யார்? பென்னையாற்றங்கரையில் அமைந்துள்ள இந்த நெல்லூரின் வரலாறென்ன? தமிழர் ஏன் நெல்லூரை விட்டுக் கொடுத்தார்? அதுவும் நெல்லூரைச் சேர்ந்த பொட்டி ஸ்ரீராமுலுவின் உண்ணாவிரதமே, மொழிவாரி மாநிலங்களுக்கு வித்திட்டது எனும் போது?

சென்னைக்கு அருகிலிருக்கும் இந்த நெல்லூருக்கு நெல்லூர் எனும் பெயர் எப்படி வந்தது தெரியுமா? விக்கிபீடியா சொல்கிறது - நெல்லி மரத்தின் கீழ் கல்வடிவில் ஒரு லிங்கம் இருந்ததாம். அந்தப் பகுதியே நாளடைவில் நெல்லி ஊரு - Nelli Ooru என மாறியதாம். தெலுங்கில் நெல்லி என்பது Emblica Tree - யைக் குறிக்குமாம். இப்படித்தான் அனைத்தையும் சைவத்தோடும், சைவ மரபோடும் பிணைத்து எழுதி வைத்துள்ளார் ஒரு சாரர்.

நெல்லின் ஊர், நெல்விளையும் ஊர் என்பதுதானே வெகு பொருத்தப்பாடுடையது. நெல்லூரில் நெல் விவசாயம்தான் அதிகம் என்பதும் ஒப்பு நோக்கத்தக்கது. நெல்லூர் பல்லவ காலம் தொட்டு, பிற்காலச் சோழர் வரை தமிழ் நிலமாகத்தான் இருந்திருக்கிறது.

பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை நெல்லூர் விக்ரம சிம்மபுரி - Vikrama Simhapuri என்றே அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. 1096இன் சோழர் காலக் கல்வெட்டு, நெல்லூரை Jummaluru எனக் குறிப்பிடுகிறது. தமிழறிந்தவருக்குத் தெரியும் அது ஜிம்மலூரல்ல சிம்மலூர். சிங்க ஊர். நரசிங்க ஊர். நரசிம்மன் ஊர். சிங்கக் கொடியுடையோர் பல்லவர். அவர் பெயரால் உருவாக்கப்பட்ட ஊர் சிம்மளூர். சான்றுக்கு குண்டூர் நெல்லூர் வழித்தடத்தில் ஏராளமான கோவில்களும், கல்வெட்டுக்களும் இடம்பெற்றுள்ளது அறியத்தக்கது. உண்டாவள்ளியில் பைரவ் கொண்டாவுக்கு அமைக்கப்பட்டுள்ள நான்குமாடி குடைவரைக் கோவில் புகழ் பெற்றதாகக் கூறப்படுகிறது. ஊர்ப் பெயர் உண்டாவள்ளியா அல்லது கொண்ட பள்ளியா? ஆந்திரா பள்ளிகளுக்கே பெயர் பெற்றது. நெல்லூரின் புகழ் பெற்ற மனிதர்கள் முன்னால் முதல்வர் நெடுருமள்ளி - Nedurymalli சனார்த்தன ரெட்டி,

மற்றும் இடதுசாரித் தலைவர் புச்சலப்பள்ளி - Puchalapalli சுந்தரய்யா. தமிழக எல்லையான நெல்லூரே நெல்லி ஊர் என மாற்றப்பட்டிருக்கிறதெனில் தொலை தூரத்திலிருக்கும் பெல்லாரி? பல்லாரி மாவட்டம் பெல்லாரியாக மாறியிருக்கிறது. பல்லாரி என்பதை பள்ளர் ஊர் பள்ளூர் எனச் சுட்டுவதே பொருத்தம்.

பெங்களூருவிலிருந்து 311 கி.மீ. தூரத்திலும், ஐதராபாத்திலிருந்து 354 கி.மீ. தூரத்திலும் அமைந்திருக்கும் கருநாடக மாவட்டமான பெல்லாரி - Bellary அல்லது பல்லாரி மாவட்டத்தின் வரலாறென்ன? பள்ளாரியின் தற்போதைய துணை மேயர் மிஸ். மாலன் - Malan எனப் பதிவு சுட்டுகிறது. மாலன் மள்ளன் எனில் தவறாகுமா?

Balla எனில் - a measuring cup or seru used to measure grain. தானியங்களை அளக்கும் ஒரு பாத்திரத்திற்குப் பெயர் பல்லாவாம். தமிழருக்குத் தெரியும் அது மரக்கால் என்பது. நெல்லை அளக்கும் அந்த மரக்காலுக்கு பள்ளக்கால் எனவும் பெயருண்டு. அன்று தமிழர் பயன்படுத்திய மரக்கலத்திற்குப் பெயர் பள்ளக்கால். பள்ளமாக இருப்பதால் பள்ளக்கால். அதுவே கிரேக்கப் பகுதிகளில் கப்பலுக்கு பள்ளா எனும் பெயர் வைக்கவும் காரணமாயிற்று. தற்போதும் மேற்கில் கப்பல்களுக்கு பள்ளா கப்பல் எனப் பெயரிடுவது நடைமுறையில் இருப்பது கவனிக்கத்தக்கது.

பெல்லேஸ்வரா அல்லது ஈஸ்வரா எனும் பெயர் மல்லேஸ்வரா என மருவியதாம். இன்னொரு கதையாக, அங்கு வாழ்ந்த பல்லா எனும் ராக்சசரை இந்திரன் அழித்தானாம். அதன் காரணமாக பல்லா எனும் பெயர் வந்ததாம். Balla-ari - பல்லர்களின் எதிரி எனும் பெயரில் பல்லாரி எனும் பெயர் வந்ததாம். பழைய கன்னடமான வல்லாரை, வல்லபுரி என மருவி பின்னர் பெல்லாரியாகி விட்டதாம். அனைத்தும் விக்கிபீடியா பதிவுட்டுள்ளவை. ஆங்கில விக்கிபீடியாவில் பதிந்தவருக்குக் தெரிந்திருக்காது அது பள்ளர் ஊர் என்பது. தமிழின் ஊர், ஊரு, ஊரே, ஊரி, பூர், பூரி எனத் திரிவது இயல்பல்லவா. பள்ளர் ஊர் பள்ளர் பூர், பள்ளப் பூர், பள்ளூர், பள்ளூரி, பள்ளுரி, பள்ளாரி, பெள்ளாரி (உதாரணம் பிலாஸ்பூர் பிலாஸ் - பள்ளாஸ் - பள்ளாஸ் ஊர் - பள்ளர் ஊர்). நவம்பர் ஒன்று 2014 இல் பெல்லாரி மாவட்டம் பல்லாரி என மீண்டும் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. பெல்லாரி பல்லவராலும், சோழராலும் ஆளப்பட்டிருக்கிறது. விசய நகரத்தின் ஆட்சிக்கும்

உட்பட்டிருந்த பெள்ளாரியில், ஆங்கிலேயர் படை முகாமை அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. காரணம் பெள்ளாரி வீரத்திற்குப் பெயர் பெற்ற ஊராம்.

பெயர்கள் இப்படியெல்லாம் மாறுமா எனில் நிச்சயமாக மாறும். ஒப்பு நோக்க அய்யா, அய்யர், அய்யரு, அய்யங்காரு, அய்யங்காருலு, அய்யங்காருடு. குட்டன், குட்டையன். குட, குட்டா, கோட்டா, கோட்டையா, கோண்டையா, கொண்டையன், கோண்டா, முண்டா, கிண்டா, எண்ணற்ற வழிகளில், விதங்களில் சொல் மாறிச் செல்லும். கோண்டையன் - மலை வாழ்பவன். கெண்டை விழி – பெரிய விழி. கொண்டல் - கொண்டை - பெரியதாக இருப்பதால், முடியை பெரிதாக்கிக் கட்டுவதால் கொண்டை. ஒப்பு நோக்க கெண்டை - பெரிய மீன், வட்ட மீன். சுண்டல் - சிறியது.

தமிழ் ஒலி மாறும் இயல்புடையது. தமிழில் மெல்லொலிகள் மாறுவதற்கென்றே இடம் பெற்றுள்ளன.

குட - மலை – குடவர் - மலையர். குடவர் - கடவர். கடவர் - காடவர். காடவர் - கடம்பர். கடம்பர் - குடம்பர் - குடும்பர், குறும்பர் எனத் திரியும். கடம்பா - குடும்பா - குடுவா - கொடுவா - கடுவா - கவடா - கவுடா. தேவகவுடா அழகிய பெயர். மலைத் தேவர் எனப் பொருள்படுமோ.

தமிழின் அழகியதொரு சொல் உப்பு. உப்பு, உப்புதல் எனும் பொருளில் வருகிறது. உப்புதல் எனில் உயரமாதல், பெரிதாதல், விரிவாதல், கூடுதல், அதிகரித்தல். கடல்நீரைத் தேக்கி வைத்து, நீர் ஆவியாகி, உப்பு விளையும். உப்பு மண்ணுக்கு உவர் என்று பெயர். உவர் எனும் சொல்லே உயர்வு கருதி உமர் என வழங்குகிறது. நூர் எனில் கூடுதல் என அர்த்தம். நூர் - நூறு. நூர்ஜகான் - மிக்க அழகுள்ள பெண், அறிவுள்ள பெண்.

உப்பு விளையும் வயலுக்கு உப்பளம் எனப் பெயர். உப்பு வணிகர் உமணர். உப்பர், உப்பரு. உப்பாரு - பெரிய மனிதரைக் குறிக்கும். மரியாதையைக் குறிக்கும். உப்பர், உம்பர் எனத் திரியும். உம்பர் - வானுலகத்தவர். மனிதரைவிட மேலானவர். உயரத்தில் இருப்பவர். எம்பர், தும்பர், கம்பர் பெரியவர் எனப் பொருள். வம்பர் - வம்புக்கிழுப்பதில் பெரியவர். கொம்பர் - கொம்பு என்பதே உயரமானது எனப் பொருளில் ஆளப்படுகிறது. உதாரணம் கொம்மங்கதிரு. மாட்டுக் கொம்பு.

உத்தரன் - உயர்ந்தவன். உப்பர் - மேலே. ஊப்பர், அப்பர் ஒரே பொருளுடையவை. அப்பர் பெர்த் எனில் மேல் படுக்கை என்று பொருள். ஊபர் - மேன்மையானது. பெரியது, உப்பரம், உம்பரம். உம்பரம் - ஆகாயம், பெரியது. உபேரன், குபேரன் - செல்வத்தில் பெரியவன்.

இந்தியில் உப்புக்கு நமக் எனப் பெயர். நமக் விற்பவர் நமனர் எனில், தமிழ் உமணரே நமணர் என்பது தெளிவு. உமணர் விற்பது ணமக். பெர்சிய, உறுதி மொழிகளிலும் ணமக் என்றே பெயர். ஆங்கிலத்தில் சால்ட். கடலுக்கு Sea எனப் பெயர். கடலிலிருந்து கிடைப்பதால் சால்ட். பிரெஞ்சில் செல் (Sel) ஜெர்மானியத்தில் சால்ஸ் (Salz). செக் மொழியில் சூல் (Suul). குரோசியனில் Sel, சொல் (Sol). கேட்டலனில் (Catalan) சால் (Sal). கிரேக்கத்தில் ஆலன் (Aalas). இத்தாலியில் சாலி (Salr). போலந்தில சோல் (Sool). எஸ்பானியத்தில் சால் (Sal). இலத்தீனில் சாலிஸ் (Salis). தமிழ், கன்னடத்தில் உப்பு. சப்பு எனில்? சப்புதல் - குறைதல். சப்பென்று இருக்கிறது - உப்பு குறைவாக இருக்கிறது.

பூரி - பூரித்தல், பெரிதாதல். ஊர் - ஊர்தல் - பெரிதாதல், வளர்தல். வளர்வது ஊர். ஊருதல் - கேணி, ஊருணி. ஊற்று - அதிகரித்தல்.

தலை, அலை, மலை, முலை, குலை, கலை, சிலை உயர்வான பொருளில் கையாளப்படுகிறது. தலை உயர்த்தியிருப்பது. அலை சமதளத்திலிருந்த மேலே எழுவது. தமிழின் சொற்கள் பொருள் மிக்கவை.

தமிழ்ச் சொற்கள் தெலுங்கில் எப்படியெல்லாம் மருவி, மாறி, சிதைந்து வழங்கிவருகிறது என்பதற்கு நெல்லூர் பகுதியின் ஊர்ப் பெயர்களை வைத்தே நிறுவிவிடலாம்.

சென்னைக்கு அருகில் மிகப் பெரிய புலிகாட் - Pulicat ஏரி இருக்கிறது. புலிகாட் எனில் புலிகள் வாழும் காடோ எனில் இல்லை. தமிழில் பழவேற்காடு ஏரி பழவேற்காடு எப்படி புலிகாட் ஆனது? புலிகாட் போன்றே மேற்குக் கடற்கறையில் காலிகட் - Calicut இருக்கிறது. ஒப்பு நோக்க வங்களத்தின் கல்கத்தா - Calcutta, ஒடிசாவில் கட்டக் - Cuttaak. புலிக்கட் எனில் புலிக் கூட்டமோ? தமிழின் கோட்டம் என்பதே குட்டம், கூடம், கூட்டம், கொட்டம் எனப் பலவாறாக மருவியிருக்கிறது. கோட்டம் எனில் வளைந்தது எனப் பொருள். அதாவது வட்டம். ஒப்பு நோக்க

கோட்டை. கோட்டை - வளைந்த மதில் சுவர். கோட்டம் எனில் மக்கள் கூடும் இடம். பழங்காலத்தில் கோவில்கள் கோட்டம் என்றே அழைக்கப்பட்டிருக்கின்றன. அன்று கோவில்கள் வட்ட வடிவமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. குமரிக் கோட்டம். காளி கோட்டம். தோட்டம் எனில் பலவகைச் செடிகள் இருக்கும் இடம் அல்லது பயிர்க் கூட்டம் எனப் பொருள். விட்டம் - வட்டத்தில் பாதி. முட்டம் - வானம். மூட்டம் - கூட்டம். மேகமூட்டம்.

பழவேற்காடு? ஏற்காடு எனில் மலைக்காடு. பழ ஏற்காடு? பழங்கள் விளையும் காடா? செங்கல்பட்டின் முன்னைப் பெயர் செங்கழு நீர்ப்பட்டாம். பட்டு எனும் பெயரில் தமிழகத்தில் ஊர்கள் உண்டா? பட்டி ஏராளம். பட்டி எனில் எல்லைக்குள் அடங்கியது எனப் பொருள். பட்டியில் அடைத்தல். குறிப்பிட்ட இடத்திற்குள் அடைத்தல். பட்டு எனும் பெயர்?

திருவள்ளூர் மாவட்டத்தில் அத்திப்பட்டு எனும் ஊர் இருக்கிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நவப்பட்டு எனும் ஊர் குறிப்பிடப்படிருக்கிறது. பள்ளிப்பட்டு திருவள்ளூர் மாவட்டத்து ஊர். ஆந்திர எல்லையில் அமைந்துள்ளது. பேராண்பட்டு வேலூர் மாவட்டத்திலுள்ள இரண்டாம் நிலை நகராட்சி. இது ஆந்திர எல்லையில் உள்ளது. ஜல்லடியம்பட்டு காஞ்சிபுரம் மாவட்டம். பொருள்பட்டு, வேப்பம் பட்டு திருவள்ளூர் மாவட்டப் பெயர்கள்.

பெரும்பாலான பட்டு எனும் ஊர்கள், ஆந்திர - தமிழக எல்லையான திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் வேலூர் மாவட்டங்களிலேயே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. சென்னை நகரில் ஏராளமான பேட்கள் உண்டு. ராயப்பேட் எனில் ராயப்பேட்டை. சிந்தாதிரிப்பேட் எனில் சிந்தாதிரிப் பேட்டை. கேளம் பாக் எனில் கேளம் பாக்கம்.

பேட் என்பது பேட்டை என்பதன் மருவு. பேட்டை மக்கள் கூடும் இடம். அதாவது சந்தை. பேட்டை எனும் பெயர் பலவாறு திராவிட மொழிகளில் சிதைந்துள்ளது. பேடு, பேட், மட், முட், கட், பட். இப்படிப் பலவிதம்.

பேட்டா எனில் பேட்டை. நெல்பேட்டா எனில் நெல் பேட்டை. நெல்லின் சந்தை. ஸ்ரீகரிகோட்டா? கோட்டை இருந்ததோ? கோட்டம் - வளைந்தது. வளைவான கடல் கொண்டது வளைகுடா. சென்னைக்கும் ஸ்ரீகரி கோட்டாவுக்கும் இடையில்

ஏராளமான பேட்டாக்கள் இருக்கின்றன. ஒரு ஊரின் பெயர் நெலப்பட்டு - Nelapattu என வழங்குகிறது. இந்த ஊர் சுல்லூர் பேட்டாவிலிருந்து - Sullur 10 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. நெலப்பட்டு பறவைகள் சரணாலயத்திற்குப் பெயர் பெற்றது. சென்னையிலிருந்து பலரும் சென்று வருவதாகப் பதிவுகள் சுட்டுகின்றன. சுல்லூர் பேட்டை செங்கல்லம்மா கோவிலுக்குப் பெயர் பெற்றது. சுல்லூர் பேட்டை சதீஷ் தவான் வானூர்தி நிலையத்தின் முகப்பில் அமைந்துள்ளது.

தெலுங்கில் Sullu எனில் வளைவாம். Sudulu எனில் நீர்ச் சுழலாம். Peta எனில் நகரம். செங்கல்லம்மா நீர்ச்சுழலிலிருந்து கண்டெடுக்கப்பட்டதால் இவ்வூருக்கு சுல்லூர் பேட்டா எனும் பெயர் வந்ததாம்.

தமிழருக்குத் தெரியும் அது சுள்ளு அல்ல சுழல். உண்மையெனில் சுழல் எனும் தமிழ்ச் சொல் தெலுங்கில் சுள்ளு எனத் திரிகிறது. சுழல் - சுழலு - சுளளு. சுள்ளு. அப்படியாயின் சுழலம்மா என்றுதானே பெயர் இருக்க வேண்டும்? அதென்ன செங்கல்லம்மா? நீர்ச்சுழலலம்மா செங்கல்லம்மாவாக பெயர் மாற்றம் பெற்றுவிட்டாரோ?

சுள் - அதிகம், பெரிது எனவும் பொருள் கொள்ளும். ஒப்ப - சுள்ளென்று, சுரீரென்று வெயில் அடிக்கிறது. சுள்ளென்று கோபம் கொண்டார். அதிகமான வெய்யில், அதீதமான கோபம் எனப் பொருள். நீர்ச்சுழலுக்கு தெலுங்கில் சுள்ளு எனில் அதிகமான நீர் எனும் பொருளில் ஆளப்படுகிறதோ. நீர்ச்சுழல் - நீலு, சுளளு.

நெல்ப்பட்டு, நீலப்பட்டுக்கு பொருள்? காலை வெயில்பட்டு நிலம் நீலமாகத் தெரிகிறதாம். அதனால் நீலப்பட்டாம். உண்மையல்லவே. நெல் பேட்டை எனும் அழகிய சொல்தான் நெலப்பட்டு எனத் திரிந்திருக்கிறது.

கவனிக்க வேண்டியது நெல்பட்டு அருகில் நெலப்பள்ளி (Nelaballi) ஊர் அமைந்துள்ளது. அருகே புதூரு (Puduru), புன்னப்பள்ளி (Punnepalli), சில்லமதுரு (Chilamathuru), மீனகுரு (Menakuru), பெல்லாகுரு (Pellakuru), செம்பேடு (Chembedu), புனபாகா (Pungabaka) போன்ற ஊர்கள் உள்ளன.

நெல்ப்பட்டுக்கு கீழே பொளிரெட்டி (Polireddy), கோட்ட பொளூர் (Kota Polur) போன்ற ஊர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. புலிக்காட்டு ஏரிக்குள் வேணாடு (Venadu) தீவு இடம் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

நெலப்பட்டு அருகிலிருக்கும் ஊர்ப் பெயர்கள் உணர்த்துவதென்ன? மீனகுரு, பெல்லகுரு, செம்பேடு. அவர்கள் மீன்தொழிலோடு சம்பந்தப்பட்டவர். செம்பேடு - செம்படவர். உண்மைதானா எனில், ஆம். அருகிலேயே ஸ்வர்ணமுகி ஆறு ஓடுகிறது. சுவர்ணமுகிதான் காளகத்தியில் ஓடுகிறது. அகன்ற செழிப்பான ஆறு. சொர்ணம் எனில் தங்கம். முகி எனில் முகமா? முகிலா? தங்கமுகில்? தங்கமுகம்? தங்கத்துகள்களைக் கொண்டு வரும் ஆறோ?

அருகில் தங்க ஆறு பாய்வதால் உறுதியாக நெல்பேட்டைதான் நெல்ப்பட்டு என மாறியிருக்கிறது. அவ்வாறெனில் நல்லபள்ளி, புன்னைப்பள்ளி, சிலமதுரு ஊர்கள் எதைக் குறிக்கின்றன? சிலமதுரு எனில் சின்னமருதூரா அல்லது பள்ளி மருதூரா? புனபாகா என்பது புனப்பாக்கமோ.

சின்ன மதுரு, மதுராந்தகம், மதுரா பட்டினம். எதன் குறியீடு? சிங்கப்பட்டூர், சிங்கப்பேட்டை, சிங்களர் பேட்டை என்பதுதான் செங்கல்பேட்டாக மாறியதோ. பல்லருக்கும் இலங்கைக்கும் மிக நெருங்கிய தொடர்புடையதல்லவா? சிங்களம் என்பதே பல்லவரின் சிங்கத்தைக் குறிக்குமோ. சிங்க நாடு - சிங்கள நாடு, சிரீலங்க நாடு, இலங்கை. செங்கழுநீர்ப்பட்டு என்பது செங்கமலநீர்ப் பட்டுரோ. செங்கழுநீர் எனில் சிவந்த அழுக்கு நீர் என்று வருமோ? கழு எனில் கழுவுதல், தூய்மையாதல் எனும் பொருளிலும் வருகிறது. கழுவாய் எனில் துன்பம் தீர்த்தல். ஒன்றை விலக்குதல். தூய்மையாதல். செங்கமல நீர் எனில் பொருத்தப்பாடுடையதே. சிவந்த கமலம், தடாகம் உள்ள ஊர். அதாவது தாமரைத் பொய்கையுள்ள நீர். எனினும் சிங்கள வணிகத்தின் பொருட்டு கூடிய பேட்டை எனில் சிங்களப் பேட்டை. அது நாளடைவில் செங்கல் பேட்டாக மாற்றம் பெற்றிப்பது சாத்தியம்.

தமிழக, ஆந்திரப் பகுதிகளின் செயற்கைக்கோள் வரைபடத்தை - Satelite Map உற்று நோக்கினால், ஆந்திரத்தின் பெரும்பாலான ஊர்ப் பெயர்கள், பள்ளி எனவும், கருநாடக ஊர்ப் பெயர்கள் ஹள்ளி எனவும் நிலைபெற்றிருக்க, தமிழகப் பகுதியில் குறிப்பாக அன்று பல்லவர் நெடுங்காலம் அரசு புரிந்த திருவள்ளூர்,

காஞ்சிபுரம், வேலும், தருமபுரி, கோவைப் பகுதிகளில் பள்ளி எனும் பெயர் இல்லாமல் போனதற்கு என்ன காரணம்? யார் காரணம்?

திருவள்ளூர் தாலுக்காவில் 133 ஊர்ப் பெயர்கள் இடம் பெற்றுள்ளன - Census - 2011. ஒன்றின் பெயர் கூட பள்ளா என இல்லை. புள்ளரம் பாக்கம் (Pullarambakkam) எனும் ஊர் இருக்கிறது. புளியூர் (Puliyur) உண்டு. பிள்ளையார் குப்பம் உண்டு.

பள்ளிப்பட்டு வட்டம் உண்டு. எனினும் இவ்வட்டத்தில் வேறு பள்ளி பெயர்கள் இல்லை. கும்மிடிப் பூண்டி வட்டத்தில் பல்லவடா (Pallavada), பலவாக்கம் (Palavakkam) உண்டு. நாய்டு குப்பம் (Naidu Kuppam) இடம் பெற்றுள்ளது வியப்பு. பொன்னேரி வட்டத்தில் புலிகாட், வல்லூர் (Vallur) உண்டு. ஊத்துக்கோட்டை வட்டத்தில் ரல்லபாடி (Rallapadi) இடம் பெற்றுள்ளது. பூந்தமல்லி வட்டத்தில் வெள்ளவேடு (Vellavedu) உள்ளது. அம்பத்தூரில் வெள்ளனூர் (Vellanur), பளவேடு (Palavedu), வெளச்சேரி (Vellacheri) உள்ளன. மாதவரம் தாலூகாவில் புள்ளில்யோன் (Pullilyon) ஊர் உண்டு. திருத்தணி தாலுக்காவில் குறிப்பிடும்படி ஒன்றுமில்லை.

ஒன்பது தாலுக்காக்கள் இடம் பெற்றுள்ள திருவள்ளூர் மாவட்டத்தில், சுமார் 37,28,114 பேர் வசிக்கும் பல்லவர் காலத்து மாவட்டத்தில், பள்ளி எனும் பெயரில் ஊர்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

மைசூரு கன்னடத்து ஊர். அவ்வூரைச் சுற்றிலும் நடனஹள்ளி (Nadanahalli), சிக்கள்ளி (Chikkalli), சோரனஹள்ளி (Choranahalli), அயரஹள்ளி (Ayarahalli), குடனஹள்ளி (Kudanahalli), பயத்தஹள்ளி (Byathahalli), ஹலளு (Halalu), கேர்ஹள்ளி (Kerhgalli), தனஹள்ளி (Danagalli), முள்ளூர் (Mullur), பள்ளஹள்ளி (Ballahalli), பசவனஹள்ளி (Basavanahalli), அங்கனஹள்ளி (Angahalli), மனுகனஹள்ளி (Manuganahalli), பிள்ளிகேரி (Billikere), ககனஹள்ளி (Gagenahalli) போன்ற ஏராளமான பள்ளி ஊர்கள் இடம்பெற்றுள்ளன. ஹள்ளி என்பதை தமிழில் பள்ளி என எழுதுவதே பொருத்தம்.

தமிழின் பகரம் கன்னடத்தில் ககரமாக மாறும் என்பதைத் தமிழர் அறிந்திருந்தால், கள்ளி (Halli, galli) என வரும் பெயர்கள் அத்தனையும், பள்ளி (Palli) என்பதைத் தெளிவர். உதாரணமாக பள்ளர் என்பது கன்னடத்தில் கள்ளர் என மாறும். சமஷ்கிருதம் முன்னிட்டு கள்ளர் ஹள்ளராவார்.

கருநாடகத்தின் இரண்டாவது மிகப்பெரிய நகரம் ஹுப்ளி (Hubli). அதன் முழுப்பெயர் ஹுப்பள்ளி (Hubballi). அவ்வாறெனில் வங்கத்தின் ஹுக்ளி?

கிழக்கு வங்காளத்தின் தேசீய மீனாகக் கொண்டாடப்படுவது தேனுலோசா இலிசா (Tenulosa Illisha). கிழக்கு மற்றும் மேற்கு வங்கத்தில் இம்மீன் பள்ளர் மீன் (Palla Fish) என்றே அழைக்கப்படுகிறது. இலிஸ், எலிஸ், ஹில்சா எனக் குறிப்பிடப்படும் பள்ள மீன், குசராத்தியில் பள்வா (Palva) எனவும், சிந்தியில் பள்ளோ மச்சி (Pallo Macchi) எனவும், தெலுங்கில் புலசா (Pulasa) எனவும் குறிப்பிடப்படுகிறது. தமிழில் தூளமாம். பெங்காளின் முக்கிய விழாக்களின்போது குறிப்பாக துர்கா பூசையின்போது ஒரு இணை பள்ளமீன்களை லெட்சுமிக்கு காணிக்கையாகக் கொடுப்பது வழக்கமாம். வங்காளிகள் திருமணத்தின்போது மணமகள் வீட்டாருக்கு ஒரு இணை பள்ளா மீன்களைக் கொடுப்பார்களாம்.

வங்காளத்திற்கும், தமிழுக்குமான உறவுகள் என்ன? மொழியுறவுகள், கலாச்சார உறவுகள்? நெல்லூர் மாவட்ட ஆவணம், தமிழ் - தெலுங்கு மொழி மாற்றத்திற்கான ஆவணம் எனில், தெலுங்கு - ஒரிய மொழிகளின் உறவை அறிய கஞ்சம் மாவட்டம் போதுமோ? தெலுங்கு தேசத்தின் வட எல்லையில் ஸ்ரீகாகுளம் மாவட்டம் இருக்கிறது. அதென்ன குளம்? குளம் தமிழ் சொல்தானே? அருகிலிருக்கும் பள்ளகொண்டா (Palakonda)? கொண்டா மலை எனில், அது பள்ளமலை.

தெலுங்கானாவின் வட எல்லையிலிருக்கும் பளர்ச்சாமுண்டி (Palarchamundi)? பள்ளர் சாமுண்டியோ? பரளச்சிமுண்டி எனக்கொண்டால் தொப்பலாக்கரை அருகிலிருக்கும் பரளச்சியின் பொருளென்ன? பளர்ச்சாமுண்டி அருகேயிருக்கும் பொப்பிளி (Bobbili)? கோரப்பூர் (Korapur) கருப்பூர்தானே, பளசரா (Palasara) பெள்ள குந்தா (Bellaguntha) - பொருள்?.

ஒடிசாவில் தென்கோடியிலிருக்கும் மகாநதியின் தென்கரைக்கருகே இருக்கும் பளுகயான் (Balugaon), போலாகார்க் (Bolagarh), தஸ்பள்ளா (Daspalla), புல்பாணி (Phulbani) பெயர்களின் அர்த்தமென்ன? போலாகார்க் எனில் பள்ளியூர்தானே. ஊர், பூர், கார், கூர், தார் எனத் திரிவது இயல்பு. தாக்கூர், தாகூர் பொருளென்ன? தகடூர்?

ஒடிசாவின் பாலாசூர்? தமிழின் ஊர் சூர் என மாறியதோ? பள்ள ஊர் மருவி பாளசூர் ஆகிவிட்டதா? மேற்கு வங்கத்தின் மெதினிப்பூர் (Medinipur), பின்பூர் (Binpur)? மதினன் எனில்? தமிழ் மைத்துனனா? மைத்துனன், மித்துனன், மிதுனன், மிதுன் என மாறிவிட்டதோ? சக்ரவர்த்தி, சக்ரபோர்த்தியாகி, சத்ரபதி ஆனது போல். பின்பூர் - மீன் ஊரோ?

பங்காள தேசத்தின் மதரிபூர் (Madaripur), நர்சிங்டி (Narsindi), தாம்ரை (Dhamrai), மதுப்பூர் (Madhupur), புள்பூர் (Phulpur), செர்பூர் (Sherpur)? செர்பூர் சேரர் ஊரோ? நர்சிங்டி - நரசிங்கபட்டனமோ?

மொகம் சதாரோ அருகிலிருக்கும் மெக்ராப்பூர் (Mehrabpur), கைர்பூர் (Khaipur), ரசூல்பூர் (Rasoolpur), மிர்பூர் (Mirpur) ஊர்களின் பொருளென்ன? பூர் ஊர் தானே. குச்தார் (Khuzdar)? ஊர் தாராகிவிட்டதோ? தோர் எனவும் மாறுமல்லவா? கராச்சி (Karachi) கரையரோடு தொடர்புடைய பெயரோ?

கருநாடகத்திலிருக்கும் முப்பது மாவட்டங்களில் ஒன்று சிக்கபள்ளப்பூர் - Chikkaballapur. தென் கருநாடகத்தில் அமைந்தள்ள சிக்கபள்ளப்பூர் மாவட்டத்தின் தலைநகர் சிக்கபள்ளாப்பூர். கன்னட மாவட்டங்கள் கரவளி (Karavali), மேல்நாடு (Western Ghats, Uttara Kannada) மற்றும் பாயலு சீமா (Balaya Seema) மற்றும் தக்காணத்தின் சமவெளி என மூன்று முக்கியப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

கன்னடத்தில் சிக்க என்றால் சிறிய எனப் பொருளாம். பள்ளா எனில் தானியங்களின் அளவை முறையாம். முற்காலத்தில் இவ்வூரில் தானியங்கள் அளக்கப்பட்டதால் சிக்கப்பள்ளபூர் எனப் பெயர் வந்ததாகச் சுட்டுவது பொருத்தப்பாடுடையதுதானா?

சிங்கப்பல்லர் ஊர் என்பதுதானே முறை. பல்லவருக்கு உட்பட்டிருந்த நிலம் என்பதும் உண்மையல்லவா. கோலார் மாவட்டத்திலிருந்து பிரித்து உருவாக்கப்பட்ட சிக்கப்பல்லப்பூருக்கு தமிழ்பெயர் வழங்கியிருப்பதுதானே ஏற்புடையது.

குறிப்பு இவ்வாறு சுட்டுகிறது - Thus, it is a place where people used to use small measure to quantify the food grains in ancient times. பொருத்தமில்லை. சிக்கபள்ளப்பூரைப் பற்றிய மற்றொரு குறிப்பு - The place has always been known as a agricultural centre for the region. சிக்கபள்ளபூர் அந்தப் பகுதியில் விவசாயத்திற்குப் பெயர் பெற்ற ஊராம். எனில் பயிர்த்தொழிலுக்குப் பெயர் பெற்றவர்கள் பள்ளரன்றோ? சிங்கப்பள்ளப்பூர் என்பதே சிக்கபள்ளப்பூர் அதாவது சின்னப்பள்ளியூர் என மாற்றப்பட்டிருப்பது தெளிவு.

அவதி மள்ளபீர் கௌடாவின் - Mallabire Gowda மகன் மாரிகவுடா - Marigowda, ஒரு நாள் கொடிமஞ்சனஹள்ளி காட்டில் வேட்டையாடினாராம் - தொடர்ந்து முயல் - நாய்க் கதை சொல்லப்படுகிறது. இதே கதையை கட்டபொம்மு வரலாற்றிலும் உண்டு. வேட்டை நாயை முயல் எதிர்த்த கதை. உடனே வீரமான மண் என அறிந்து அங்கே பெரியதொரு கோட்டையை அமைத்தாராம். மல்லபீர் கவுடா யார்? மல்லர் என்பது யார்? பீர் என்பது தமிழரின் வீரமல்லவா? தமிழ் வீரர் தான் பீர், லீர், மார் என மாறியிருக்கிறது.

அருகிலிருக்கும் முத்தனஹள்ளியில்தான் புகழ்பெற்ற மோக்சகுண்டம் விஸ்வேஸ்வரய்யா பிறந்திருக்கிறார். சர்வபள்ளியில் பிறந்த இராதாகிருஷ்ணன் போல.

சிக்கபள்ளபூர் மாவட்டத்தின் வட்டங்கள் சிக்கபள்ளபூர், காரிப்பிடனூர் (Gauribidanur), பாகிபள்ளி (Bagepalli), சிட்லகட்டா (Sidlaghatta), குடிபாண்டா (Gudibanda) மற்றும் சிந்தாமணி (Chinthamani).

தமிழின் கரு வடக்கில் கர், கார் என மாறுகிறது. பாகிபள்ளி, பாகுபலியோ? பாகுபள்ளி - வீரப்பள்ளி, உயர்வான பள்ளி. குடிபாண்டா பாண்டவர் குடியோ. சிந்தாமணி - தமிழருக்குத் தெரிந்ததுதான். வட்டப் பெயர்களும் சிங்கப்பள்ளர் ஊர் என்பதையே சான்றாக்குகின்றன. உண்மையெனில், ஏன் உண்மையான வரலாறு

அழிக்கப்பட்டிருக்கிறது? வரலாற்றை மாற்றியது, அழித்தது யார்? வரலாற்றை எச்சமில்லாமல் அழிப்பவர் எவர்? முடியுமா?

சிக்கப்பள்ளபூர் சிங்கப் பள்ளர் ஊர் எனில் சிக்மகளூர் அல்லது சிக்க மகளூரு (Chikmagalur or Chikkamagaluru)? சிக்கமகளூரு - சிங்க மள்ளர் ஊர் என்பதுதான் சரியோ. மகளூர், மங்களூரு - திரிவது இயல்பு. மள்ளர் ஊர் மள்ளரூர், மக்களூர், மங்களூர், பெங்களூர் சாத்தியமானதே.

சிக்மளூரில்தான் இந்தியாவிலேயே முதல்முதலாக காப்பி பயிரிடப்பட்டதாம். கர்நாடகத்தில் மிக உயரமான மலைமுடியான (சிகரம்) முலையநகரி (Mullayanagari) இம்மாவட்டத்தைச் சேர்ந்ததாம். தமிழில் மலைய நகர், மலை நகர். தமிழ் மலையை கன்னடர் முலையாக்கிவிட்டார். வேர்ச்சொல் தமிழ் என்பதால் சொல்லை எப்படித் திரித்துதாலும் பொருள் மாறாதல்லவா.

இங்கிருக்கும் குதிரைமுக அருவியை கன்னடர் குத்ரிமூக் - Kudremukh என்கிறார்கள். அழகிய சொல்லான முகம், மூக் என மாறிவிட்டது. இப்படித்தான் வடக்கே மூக்கை நாக் என்கிறார்கள்.

சிக்மளூர், சிக்மகளூர் எனில் சிறிய மகளின் நகரமாம். தமிழன் மகள் மட்டும் கன்னடத்தில் மகள் எனவே வழங்குமாம். சிக்மகளூர் - சின்ன மகள் ஊர். அப்படியாயின் பெரிய மகள் ஊர்? இருக்கிறது. சிக்மகளூருக்கு ஐந்து கிலோ மீட்டர் தள்ளி ஹிரமகளூர் நகர் இருக்கிறதாம். அதென்ன Hiremagaluru? Hire- வீரமல்லவா. வீரமள்ளர் ஊர் ஹிரமகளூர் ஆகிவிட்டதோ. சின்னமள்ளர் ஊர், பெரிய மள்ளர் ஊர். எப்படியெல்லாம் பொருள் திரிந்து வழங்குகிறது. அவ்வாறெனில் சிமோகா மாவட்டத்தின் உண்மைப் பெயர்?

தமிழ்மொழி வடக்கே செல்லச் செல்ல சிதைந்து புழங்குகிறதா எனில் ஆம். பாவாணர் தக்க சான்றுகளோடு நிறுவியிருக்கிறார். கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம் பெரும் புலமை கொண்டது.

பாவாணர் இந்தியை சிதைமொழிக்கு மிகச் சிறந்த உதாரணமாகச் சுட்டுகிறார். இந்தியில் போல் எனில் சொல், பேசு எனப் பொருள். அது புகல் எனும் தமிழ் சொல்லாம். புகல் தூய தமிழ்ச் சொல். சொல் என்பதும் பேச்சு வழக்கில் குறிப்பிடுவதுதான். சொல் என்பது கூட இந்தியில் போல் எனத் திரிந்திருக்கலாம்.

சில நூற்றாண்டுகள்தானே ஆகிறது. உண்மையெனில் புகல் எனும் தூய தமிழ்ச்சொல் வெகு பழங்காலத்திலேயே போல், போலு என மருவியிருக்கும்.

நோக்கு - தேக் என மாறிவிட்டது. நோக்கு - நேக்கு - தேக்கு - தேக். கொஞ்சம் - குச்சாகிவிட்டது. கொஞ்சம் - குஞ்சம் - குச்சம் - குச்ச, குச். நேரம் இந்தியில் தேர். நேரம், நோரம், தேரம், தேர, தேர். மருவும். கருமம் - இந்தியில் காம்.

எத்தனை அறிவுள்ள தமிழறிஞர். ஏன் உரிய மதிப்புக் கிடைக்கவில்லை? Luxemberg - தச்சன் புரியாம். Homosapien - மதிமாந்தன், Homo erectus - நிமிர் மாந்தன். Homo habilis - கற்கருவி மாந்தன். அழகிய தமிழாக்கமல்லவா.

Parliament - பாராளுமன்று. தமிழர் ஏன் அதை பாராளுமன்றம் என்கிறார்? சீடர் - பின்பற்றி. காங்கிரஸ் - பெருங்கூட்டம். டைவர்ஸ் - மணமுறிப்பு. அனைத்து நாளிதழ்களும் விவாகரத்து என்றே குறிப்பிடுகின்றன. அது மண முறிவு அல்ல. மணமுறிப்பு. மணமுறிவு எனில் தானாகவே முறிப்பது, விக்குவது, உடைப்பது. இது மணமுறிப்பு. அவர்களாகவே முறித்துக் கொள்கிறார்கள். எத்தனை ஞானம்.. எஞ்சின் - சூழ்ச்சியம். மெசின் - பொறி. பிராக்கெட் - பிறைகோடு. இன்ஸ்பெக்டர் - உண்ணோக்காளர், இன்ஸ்பென்ட் - உண்ணோக்கு. பினாமினன் - phenomenon - தோற்றரவு.

தீபாவளி - விளக்கணி விழா. ஜன்னல் எனக் கூறக் கூடாதாம். அது போர்த்துக்கீசியச் சொல்லாம். பலகனி அல்லது சாளரம். விவசாயம் வடசொல்லாம். மாற்றாக உழவு, பயிர்த்தொழில், பாண்டியம், வெள்ளாளம், சாகுபடி போன்ற சொற்களைத்தான் பயன்படுத்த வேண்டுமாம்.

தியரியை (Theory) எப்படி மொழிபெயர்ப்பது? பிராக்டிக்கல் (Practical) எனில் எளிது. அது செய்முறை. அது செய்முறையில்லையாம். அது தெரியியல். தெரிந்து கொள்வது, தேர்ந்துகொள்வது. தியரி? புரியியல், புரிந்து கொள்வது புரியியல். தமிழ்ப் பேரறிஞர் வருத்தத்தோடு பதிவிட்டிருக்கிறார். மேலை நாடுகளில் அறிஞர்களுக்கே வேலை கிடைக்குமாம்.இங்கு அவர்க்கே கிடைக்காது. பேரறிஞரோடு யாமும் உடன்படுகிறோம்.

அறிஞர் யார்? பேரறிஞர் யார்? ஆசிரியர் யார்? பேராசிரியர் யார்? வருத்தம் தமிழ்ச் சொல் இல்லையோ? உளநெகிழ்வு என்பது சரியானதோ? உளவிலக்கம்?

Shimoga மாவட்டம் ஷிவமோகா, ஸிவ்மொக்க, ஸிமோகா, சிமோகா என அழைக்கப்படுகிறது. விக்கியில் சீமக்கா மாவட்டம். சீமக்கா நகரில் தமிழர் அதிகம் வாழ்வதன் பொருளென்ன? சிமக்கா பச்சைப் பசும் வயல்களுக்குப் பெயர் பெற்றது எப்படி?

லார்டு சிவா துங்கா நதியின் நீரை முகத்தால் - Mogge குடித்தாராம். அதனால் ஸிவ்மொக்கா எனப் பெயராம். Sihi - Sweet, Mogg pot - இனிப்பான மண்பாண்ட ஊர். பொருத்தமாகவா இருக்கிறது?

தமிழக எல்லையிலிருக்கும், ஆந்திர சித்தூர் - Chitoor மாவட்டத்தில் ஏராளமான பள்ளிகள் அமைந்திருக்கின்றன. அம்மகாரி பள்ளி, பைரெட்டி பள்ளி, சிந்தாமக்குல பள்ளி, சௌடி பள்ளி, திருவமச பள்ளி, எர்ர பள்ளி, கொங்சிவரி பள்ளி, குடரெவு பள்ளி, குடு பள்ளி, களி பள்ளி, கொப்பரவாண்ட பள்ளி, லிங்கன பள்ளி, மொசிலிவரி பள்ளி, முடிபள்ளி, நகரிபள்ளி, நரவரி பள்ளி, நிம்மனபள்ளி, போட்டம்வரி பள்ளி, புள்ளாயகரி கள்ளி, ராசவெடிவரி பள்ளி, சாமகோடவரி பள்ளி, சாமிரெட்டி பள்ளி, சுருட்ட பள்ளி, தலபுள்ளபள்ளி, தாம்பாள பள்ளி, தவனம் பள்ளி, துருபு பள்ளி, வாசல பள்ளி, யடவாரி பள்ளி, எல்லம் பள்ளி, எரடோட்டிப் பள்ளி, எரத்துவாரிப் பள்ளி.

பள்ளர், மள்ளர், தேவரா எனும் பெயருள்ள ஊர்களும் பல உள்ளன. உதாரணமாக குடிமள்ளம், குடிமளா, நெரனபைய்ளு, பள்ளமங்கலம், பள்ள சமுத்திரம், தேவார கொண்டா, பாண்டிவாண்ட்லூரு.

பெரும்பாலானவை தமிழ் பெயர்களே. பீரகுப்பம் - வீரகுப்பம் அல்லது பெரியகுப்பம். குரபல கோடா (Kurabalakota) - வீரப்பள்ளர் கோட்டை. குடே - கோட்டே - கோட்டை. Kute - Kottai.

கடைச்சங்கத் தமிழகத்தின் வடஎல்லையான திருப்பதி, சித்தூர் மாவட்டத்திலேயே இடம் பெற்றுள்ளது. தொல் தமிழ் நிலமான திருமலை அருகே இத்தனை பள்ளிகள் ஏன் இருக்கின்றன? பள்ளிகளாக அடைந்திருப்பதால்தான்

திருவேங்கடவனை புத்தன் என்கிறார்களோ? ஆந்திராவில் பள்ளி என்பது புத்த மதத்தின் குறியீடா? கன்னடப்பள்ளி சமணத்தின் குறியீடா? அவ்வாறெனில் ஈராயிரம், ஆயிரத்து ஐநூறு வருடங்களாக பள்ளி எனும் பெயர்கள் கன்னட, ஆந்திர நிலங்களில் புழங்கிவர, தமிழகத்து ஊர்களில் மட்டும் ஏன் பள்ளி எனும் பெயர்கள் மறைந்தன? மறைத்தது யார்? தமிழகத்து ஊர்ப்பெயர்கள் மட்டும் எதனால் முழுமையாக மாறிவிட்டன? மதுரைக்கருகில் சமணம் செழித்திருந்ததே. தற்காலத்திலும் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, விழுப்புரம் பகுதிகளில் சமணர்கள் வாழ்ந்தும் வருகிறார்களே.

கள்ளக் குறிச்சி பள்ளக் குறிச்சியோ? பெரம்பலூர் பெரும் பள்ளூரோ. திருவள்ளூர்? திரு என்பது நவீன காலத்துச் சேர்க்கை எனில், வள்ளூர் என்பது பள்ளூர் என்பதன் திரிபோ? சென்னையின் பள்ளிக்கரணை? பள்ளமான பகுதி என்பதாலோ? பல்லாவரம் பல்லவர் ஊரோ. உண்மையெனில் அருகிலிருக்கும் வேளச்சேரி பள்ளிச்சேரியோ. பள்ளச் சேரியை வெளச்சேரியாக மாற்றியது யார்? அல்லிக் கேணி, திருவள்ளிக்கேணி பள்ளிக் கேணியோ? அல்லி குளத்தில்தான் தாமரை வளரும், மலரும். கேணியில் எப்படி? பள்ளமான கிணறோ? பள்ளமான கேணி? பார்த்த சாரதியை சொந்தம் கொண்டாடுவது தற்போதும் முன்னாள் பள்ளிகளான வன்னியரல்லவா. மயிலாப்பூர்ருக்கும் வன்னியர்கள்தானே சொந்தம் கொண்டாடுகிறார்.

மல்லாங்கிணர்? மல்லன் கிணறோ? மள்ளன்கிணறு மல்லாங்கிணர் ஆயிற்று போலும். அங்கு தற்போதும் பெருவாரியான மள்ளர்கள் வசிக்கிறார்களல்லவா. மள்ளன் கிணற்றிற்கு நாயக்கர்கள் எப்போது வந்தார்கள்? பள்ளூர் சந்தை குல்லூர் சந்தை ஆனதோ? குல்லூர் எனில்? சிறிய ஊரோ? குளத்தூரோ? குளத்தூர் குல்லூராகியிருக்கலாமோ? பள்ளத்தூர்? பள்ளமான ஊரா பள்ளமான ஆத்தூரா? ஆறு எனில் பள்ளம்தானே.

அதென்ன பொறவச்சேரி (Poravacheri)? பறச்சேரிதானே. வடுகச்சேரி (Vadugacheri) எனில் வடுகர், நாயக்கர் சேரியா? நாகபட்டினத்தில் எப்படி வடுகச்சேரி? கீழசெட்டிச்சேரி? மேலச் செட்டிச்சேரி? நாகபட்டினம் பகுதியில் பெரும்பாலான ஊர்கள் கீழ், மேல் என வழங்குவது எதனால்?

அதென்ன போம்ப்புக்கார் மீனவர் கோலோனி ஸ்ட்ரீட்? இது தமிழ்நாடுதானா? பூம்புகார் மீனவர் குடியிறுப்பல்லவா. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டத்தில் அமைந்திருக்கும் பூம்புகார், புத்தத்தோடு எத்தனை தொடர்புடையது? ஏன் பள்ளிப் பெயர்களே இல்லை? திருக்காட்டுப்பள்ளி பொருள் என்ன? மல்லுகுடி (Mallukudi) மல்லர் குடியோ? முல்லிபட்டினம்? அது முல்லைப்பட்டினமா, முன்னைப் பட்டினமா அல்லது பள்ளிப் பட்டினமா? பரதன் பள்ளி? பரதன் பள்ளிக்கும் பொறையூருக்கும் ஏதேனும் தொடர்புண்டோ? பரதன் பள்ளியில் பாரதமாதா அரசு உதவுபெறும் பள்ளி வந்ததெப்படி? பரதர்தான் பாரதரா? தலைஞாயிறு வட்டத்தின் பலன்கள்ளிமேடு (Palankallimedu) பழங்கள்ளி மேடோ? பள்ளன்கள்ளியோ? நெல்லுக்குப் பெயர் பெற்ற நாகப்பட்டினத்தில் கள்ளிமேடு இருக்குமோ? கள்ளன்மேடோ? மறச்சேரி (Marachery) இருக்கிறதே.

தர்மபுரியின் மாரண்டஹள்ளி பாராண்டபள்ளியோ? பள்ளி என்பது இடப்பெயர், ஊர்ப்பெயர் உனில் மாரண்ட? வீரமான, பெரிய எனப் பொருளோ? வேலூர் என்பதே பாளூர், பள்ளூர், பள்ளவனூர் என இருந்திருக்குமோ? பள்ளிகொண்டா? பள்ளிகொண்டானா அல்லது பள்ளிமலைவா? பல்லவன்சாத்து?

தமிழ் நாட்டில் இல்லாத பள்ளிப் பெயர் அரபு நாட்டில் வழங்குவது எப்படி? அப்துல்லா (Abdulla or Abdalla) - பொருளென்ன? பல்லா, துல்லா, குல்லா, தல்லா, மல்லா, பில்லா, புல்லா. அடுக்கலாமே. மொகம்மது, முகம்மது, முகமது முகம் அது. மொகமது, மொகமட். முகம்மது - அழகிய தமிழோ? அழைக்கும் - பொருளுடைய சொல்லோ?

பாலமடை எனில் பாளமடைதானே. மடைகண்மாய் மடை எனில், பள்ளர் மடை என்பது தானே சரி. பாலமலையா? பால மலை எனில் இளம் மலையோ?

சின்னாளபள்ளி, கோதபள்ளி, மொரசுப்பள்ளி, பள்ளாள குப்பம், வசனம் பள்ளி, கொண்டாரெட்டிபள்ளி, பாளூர் (Balur), புட்டவரிப்பள்ளி, செம்பள்ளி, தட்டிமணப்பள்ளி, வீர செட்டிபள்ளி, பாதளெ பள்ளி, தனக்கொண்ட பள்ளி, குண்டல பள்ளி, வரதரெட்டி பள்ளி, கொல்லபள்ளி, விண்ணம்பள்ளி, குடிமள்ளூர் – வேலூர் மாவட்டத்து பள்ளி ஊர்கள்.

தர்மபுரி மாவட்டப் பள்ளிகள் - அனுமப்பள்ளி (Anumepalli), அவளப் பள்ளி பஸ்தளப்பள்ளி, பீரப்பள்ளி, செம்பரசனப்பள்ளி, சின்னக்குடிபாளா, தேவரக்குட்டப்பள்ளி, தொட்டகௌனிபள்ளி, கொல்லபள்ளி, கோசபள்ளி, கருபள்ளி, கோட்டசபள்ளி, மாரண்டபள்ளி, நாகொண்டபள்ளி, பண்ணபள்ளி, செட்டிபள்ளி, சித்தனபள்ளி, சொக்கரசனபள்ளி, சூடுகொண்ட பள்ளி, தட்டிகன பள்ளி, துப்புகனபள்ளி, வாதிரிபள்ளி, அகசிபள்ளி, அரியனபள்ளி, பாயனபள்ளி, பெல்லாரப்பள்ளி, பொம்மரசனபள்ளி, சென்ற பள்ளி, சின்னம்தட்டறபள்ளி, கோட்டாஹள்ளி, அலசபள்ளி, அத்வானபள்ளி, ஆம்கொண்டபள்ளி, அமுதுகொண்டபள்ளி, அயரானபள்ளி, படதபள்ளி, பலிகனபள்ளி, பெதபள்ளி, பெகுபள்ளி, பௌத்தூர், சென்னபள்ளி, தேரிபள்ளி, எழுகபள்ளி (Elugapalli), கோபனபள்ளி, குடுசல பள்ளி, இமிடிநாயகனப் பள்ளி, கீழவரப் பள்ளி, கொடிக திம்மனபள்ளி, கோத கொண்ட பள்ளி, கோதபள்ளி, குள்ளூர், மள்ள சந்திரம், மருதனப்பள்ளி, மூகொண்டபள்ளி, மொட்டம்பள்ளி, ஓடப்பள்ளி, முகம்பள்ளி, முத்துகான பள்ளி, ஓடப்பள்ளி, பலவனபள்ளி, பட்டகுருபரபள்ளி, பெத்தசிங்கர்லபள்ளி, பூனபள்ளி, சமணப்பள்ளி, சபரபள்ளி, சிக்களபள்ளி, சொரகயலபள்ளி, திண்ணபள்ளி, தியாகர்சனபள்ளி, தொரபள்ளி, தும்மனபள்ளி, உத்தனபள்ளி, பாளனபள்ளி, பனிநயனபள்ளி, பாணிபள்ளி, பாட்லபள்ளி, போகனபள்ளி, சின்னதிம்மயணபள்ளி, தசிகெனரிபள்ளி, தாசிரிபள்ளி, இடயரப்பள்ளி, எர்ரபள்ளி, கொல்லபள்ளி, நல்லம்பள்ளி..

இத்தனை பள்ளிப் பெயர்களும் புத்த மதத்திற்காகத்தான் வைக்கப்பட்டுள்ளவனா? ஒவ்வொரு ஊர் பெயரும் ஒரு பொருள் கொண்டு விளங்குவது தெளிவு.

பெதபள்ளி - பெத்தபள்ளி - பெரியபள்ளி, பெகுபள்ளி - பாகுப்பள்ளி - பெரியபள்ளி, பௌத்தூர் - பள்ளத்தூர்.

அமுது கொண்ட பள்ளி. எத்தனை அழகிய பெயர் பெத்த சிங்கர்லபள்ளி - பெரிய சிங்கப்பள்ளி. மருதனப் பள்ளி - மருதப் பள்ளி. பல்லவர்கள் பயிர்த்தொழிலை பெருமளவு வளர்த்தனர், போற்றினர் என்பதே வரலாறு. ஏரி, குளங்களை பெருமளவில் உருவாக்கியவர் பல்லவரே. சிக்கரி, சிக்கனப் பள்ளிகள் - சிங்கப் பள்ளி - ஒரு வேளை நரசிங்கப்பள்ளியாக இருக்கலாம். வீர்சிங்க - நரசிங்கப்பள்ளி.

கேள்வி - பல்லவர் கோலோச்சிய காஞ்சியின் சுற்றுப்புறங்களில் எதனால் பள்ளிப் பெயர் மறைந்தது?

மறைத்தவர் யார்? முதலி என்பது மூத்த பள்ளியோ? முதல் பள்ளியாகவும் இருக்கலாம். ஆம் எனில் புத்தத்திற்கு முதலில் மாறியவர் எனும் பெயரில் முதலியானாரோ? தமிழ் முதலி கன்னடத்தில் முத்தல்லி என்றே வழங்கும். முதலி, முத்தலிக்கும், அராபியாவின் முத்தாலிக்கும் (முத்தலிப் - Muttalib) என்ன உறவு? முகம்மது நபி முத்தாலிக் குலத்தவராகச் சுட்டப்படுவதன் பொருளென்ன? கன்னடத்தின் முதலிக் யார்?

தமிழக முதலி பெயரின் பின்னால் முதலிப் பட்டம் போடுகிறார் எனில், அரபில் முதலிப் பெயருக்கு அவர் வழக்கப்படி பெயருக்கு முன்னால் வருகிறது – முத்தாலிப் இபின் அப்துல்லா.

ஆந்திரப் பிரதேசத்தின் நல்கொண்டா (Nalgonda) மாவட்டத்தில் குண்ட்லப்பள்ளி (Gundla Palle) மண்டலத்தில் (Mandal), கீழ்காணும் ஊர்கள் இடம் பெற்றுள்ளன (2011),

| | | |
|---|---|---|
| போகுலடோனா | - | 2080 பேர்கள் |
| பொல்லனபள்ளி | - | 2716 |
| பிரமண பள்ளி | - | 932 |
| செருக்கு பள்ளி | - | 5015 |
| தாசரிளி மலிப்பூர் | - | 1019 |
| கொணபொய்ன பள்ளி | - | 4502 |
| கோணகொலி | - | 705 |
| குண்ட்லபள்ளி | - | 5562 |
| காமதேணிக்கோவரரம் | - | 676 |
| காமபள்ளி | - | 1658 |
| கண்டுகுர் | - | 3208 |
| காணபூர் | - | 1520 |
| ரக்மத்பூர் | - | 1626 |
| சிங்கராஜ் பள்ளி | - | 1350 |
| டி.கோவரதம் | - | 1826 |

| | | |
|---|---|---|
| தங்களபூர் | - | 4799 |
| வவிகோலி | - | 2758 |
| வீரபோய்ன பள்ளி | - | 2824 |
| எர்ரரம் | - | 1605 |

ஐதராபாத் அருகிலிருக்கும் நலகொண்டாவின் பெயருக்குக் காரணமாக நல்லா - கருப்பு, கொண்டா - மலை எனப் பொருள் கொண்டு, கருப்பு மலை எனச் சுட்டப்படுகிறது. முன்னர் இதற்கு நீலமலை எனப் பெயர் வழங்கியதாம். கொண்டா எனில் கருப்பு. ஒப்பீட்டுக்கு கொண்டல் வண்ணன் - மேகம் போன்று கறுத்தவன். கொண்டல் - உயர்ந்த வண்ணம் கொண்டவன். நீலமலை என்பது நலி மலை, நலகொண்டா எனவும் மாறியிருக்கலாம். தமிழில் நல்ல என்பதற்கு கருப்பு எனும் சொல் வராது. நல கொண்டாவிற்கு அருகில் நகார்சுன கொண்டா, தேவரக்கொண்டா போன்ற மண்டலங்களும் இடம் பெற்றுள்ளன. தேவரக்கொண்ட மாவட்டத்தில் பெத்த ஆதிசேர்ல பள்ளி (Pedda Adiserla Pally)/ நாற்கெட் பள்ளி (Natket pally) போன்ற ஊர்கள் இடம் பெற்றுள்ளன.

நாற்கெட்பள்ளி எனில்? நெற்கட்டும் பள்ளியோ? பெத்த ஆதிசேர்ல - பெரிய ஆதிசேரனோ? பெரிய ஆதி சேசனோ? தேவர கொண்டா பெயர் தேவேந்திரனோடு தொடர்புடையதோ? காமப்பள்ளி, காமனபள்ளி, சிங்கராஜ் பள்ளி, சேரப்பள்ளி (Cherkupally), வீரம்போனபள்ளி (Veera boinapally) போன்ற ஊர்ப் பெயர்கள் பல்லவரோடு தொடர்புடையதாய் இருப்பது தெளிவு. பள்ளி எனும் பெயர் புத்த, சமணத்தோடு மட்டும் தொடர்புடையதாய் இல்லாமல் பல்லவரோடும் ஒன்றியிருப்பது அறியத்தக்கது.

தமிழகத்தில் குறிப்பாக தென் மாவட்டங்களில் எப்படி இத்தனை பட்டிகள் முளைத்தன? தொட்டி, செட்டி எனப் பெயர்கள் வைத்திருந்தவர்கள் தமிழர்களின் ஊர்ப் பெயர்களை மாற்றிவிட்டார்களோ? பட்டி (Patti) பெயர்கள் முன்னர் பள்ளி (Palli) என இருந்திருக்கலாமோ? மதுரை மாவட்டத்தில் எப்போது முளைத்தன இவ்வளவு பட்டிகள்? சமணத்திற்காகவும், சமணப்பள்ளிகளுக்காகவுமே பள்ளி என கன்னடத்தில் பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன எனில், சமணத்திற்குப் பெயர் பெற்றிருந்த தென் மதுரையில் ஏன் ஒரு பள்ளி கூட இல்லை? பள்ளி எனும் பெயர் பள்ளி சாதிக்காக வைக்கப்பட்டிருக்கிறது எனும் கூற்று உண்மைதானா?

மதுரை, மேலூர், உசிலம்பட்டி என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது மதுரை மாவட்டம். மதுரை - வடக்கு, மதுரை - மேற்கு, திருப்பரங்குன்றம், வாடிப்பட்டி, மேலூர், மதுரை - கிழக்கு, மதுரை - தெற்கு, உசிலம்பட்டி, திருமங்கலம், பேரையூர், கள்ளிக்குடி என மதுரை பதினோரு வட்டங்களாக அமைந்துள்ளது.

மேலூர் வட்டத்திலுள்ள 84 வருவாய் கிராமங்களில், அனேகமாக ஒரேயொரு ஊர் மட்டுமே பள்ளபட்டி என இடம் பெற்றுள்ளது. பெரும்பாலும் பட்டிகள்தான். உசிலம்பட்டி வட்டத்தில் ஒரு ஊர் புள்ளனேரி (Pullaneri) என இருக்கிறது. நூற்றுக்கும் மேற்பட்ட ஊர்கள் உள்ள திருமங்கலம் வட்டத்தில் பள்ள என ஒரு ஊரையும் காணோம். மறவன் குளம் இடம் பெற்றுள்ளது. செட்டிகுளம், வண்ணான் குளமெல்லாம் இருக்கிறது. பாரைக்குளம் எனில் என்ன பெயரோ? பேரையூர் வட்டத்தில் பாப்பிநாயக்கனூர், துள்ளுக்குட்டி நாயக்கனூர், சீலநாயக்கன்பட்டி, கவுண்டன்பட்டி, வன்னிவேலம்பட்டி என்றெல்லாம் பெயர்கள் இடம்பெற்றுள் போதிலும், பள்ளி எனும் பெயரில் ஊர்கள் இல்லை. மள்ளபுரம் என ஒரு ஊர் இருக்கிறது.

இன்றைக்கிருக்கும் மதுரையில் பள்ளி, பள்ளர் பெயர்கள் இடம்பெறவில்லையெனினும், வெள்ளையர் ஆட்சியர், மதுரையில் அதிகளவில் வாழ்ந்தது பள்ளர்களே என்பது வியப்பானது. இன்றைக்கு சுமார் 170 வருடங்களுக்கு முன் எடுக்கப்பட்ட ஆங்கிலேயர் கால மக்கள்தொகை கணக்கெடுப்பில் (1950-51), 1,54,022 பேர் தங்களைப் பள்ளன் எனப் பதிவிட்டுள்ளனர்.

கள்ளன் - 1,23,244, அகமுடையார் - 77,299, மறவன் - 79,876, பறையன் - 1,00,902, இடையன் - 1,02,370, வலையன் - 86,459, கம்மாளன் - 53,451, கவரை - 66,050, தெலுங்கு லெப்பை - 73,426, ரோமன் கத்தோலிக் - 53,543, வெள்ளாளன் - 1,04,801 அல்லது 1,64,801.

அன்றைக்கு மதுரையிலிருந்ததாக நெல்சன்துரை பதிவிட்டுள்ள 94 சாதிகளில், மற்றவரெல்லாம் ஐம்பதாயிரத்திற்கும் குறைவு, உதாரணமாக அம்பட்டன் - 15,066, பிராமணர் - 32,593, சக்கிலியன் - 44,994, தமிழ் தாசி - 1963, குறவன் - 3293, அரசபள்ளி - 505, படையாச்சி - 1855, நாட்டக்கோட்டை செட்டி - 3262, முதலி - 3863, பாணன் - 772, பண்டாரம் - 2879, பரவன் - 35, பளியன் - 2, புலையன் -

2000, புதரவண்ணான் - 664, சோழியன் - 4555, சாணான் - 48305, செம்படவன் - 86, செம்மான் - 526, வள்ளுவன் 1317, வன்னியன் - 5257, வண்ணான் - 9220, கூத்தாடி - 45.

தெலுங்கு சாதிகளில், தொம்பன் - 174, கைக்கோளன் - 14,687, குரும்பன் - 10,734, (தமிழ், தெலுங்கு), ரெட்டி - 23,835, சாலியன் - 4555, சேனியன் - 3189, தொட்டியன் - 47,880 (தமிழ், தெலுங்கு).

பட்டுநூல்காரன் - 21546 (சௌராட்டி), ராஜா - 2652, ராஜ்புத் - 312 (மராத்தி), மொகமடன் - 34,125, ஆண்டி - 10,035 (கன்னட) மொழி பேசுவோரும் மதுரை மாவட்டத்தில் வசித்திருக்கின்றான்.

அன்றைய மதுரை மாவட்டம் எத்தனை பெரியது? சுமார் 8789 சதுர மைல்கள். தற்போதைய மதுரையே 1444.69 சதுரமைல்கள் பரப்பளவு மட்டுமே கொண்டது. இத்தனை தூரம் பரந்து விரிந்திருந்த அன்றைய மதுரை மாவட்டத்தில் 17,44,587 பேர் மட்டுமே வாழ்ந்ததாகக் நெல்சன் கலெக்டரின் ஆவணம் பதிவு செய்திருக்கிறது. இதில் தமிழரல்லாதவர் கிட்டத்தட்ட 3,00,000 பேர்.

அப்போதைய தமிழ் பிரிவில், பறையர்கள் வலங்கைப் பிரிவிலும், பள்ளர்கள் இடங்கைப் பிரிவிலும் இடம் பெற்றுள்ளனர். வெள்ளையரின் பல மானுவல்களிலும் அன்று நிலவிய இந்த இடங்கை - வலங்கைப் பாகுபாடு சுட்டிக் காட்டப்படுகிறது. பள்ளர்கள் இடங்கையாம். அன்னார்களின் மனைவிகளான பள்ளிகள் வலங்கையாம். இடங்கை - வலங்கைப் பாகுபாடு வந்தால், வலது கையால் சாப்பாட்டுத் தட்டை வைக்காமல் இடதுகையாலேயே சாப்பாட்டைப் பரிமாறுவார்களாம். இதை திருச்சிராப்பள்ளி மேனுவல் சுட்டிக்காட்டுகிறது.

மதுரை போன்றே திருச்சியிலும் வெள்ளாளர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்திருக்கிறனர். தமிழ்ச் சாதிகளில் வெள்ளாளரே பெருமதிப்பிற்குரியவராக இருந்திருக்கிறார். பிராமணத்துவத்தில், பிராமணன் போன்ற வாழ்க்கை முறையைப் பின்பற்றியதில் தமிழர்க்கு வெள்ளாளரே முன்னோடியாக இருந்துள்ளார். தற்காலத்திய வெள்ளைக்கார நாகரிகத்தை முன்னெடுத்ததைப் போல.

ஹேமிங்வே கலெக்டரின் மானுவலில் The Vellaalans are very common in Trichinopoly. Their name is said to be derived from Velaanmai cultivation and

they are the great land - owning caste of the Tamil country. They are generally admitted to be the highest in the social scale among the non-brahman castes. திருச்சினாப்போளியில் வெள்ளாளன்கள் நிறையப் பேர் வாழ்கிறார்கள். வேளாண்மை என்பதிலிருந்து இவர்களது பெயர் உருவானதாகச் சொல்லப்படுகிறது. இவர்கள் தமிழ் நாட்டின் மிகப்பெயரிய நிலவுடமைச் சாதியினர். பிராமணரல்லாதோர் சாதியில் இவர்களே சமூக அடுக்கில் உயர்வாக உள்ளனர் என்பது பொதுவில் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியது.

Notless than 20 endogamous sub divisions of them occur in thje district அதாவது அகமணம் செய்துகொள்ளக் கூடிய இருபத்துக்கும் குறையாத உட்பிரிவுகள் திருச்சினாப்போளி மாவட்டத்தில் இருக்கிறார்களாம். அகமணம் எனில் ஒரு குறிப்பிட்ட சமூகக் குழு வகுப்பு அல்லது இனப்பிரிவுகளுக்கு உள்ளேயே திருமணம் செய்து கொள்ளும் முறையைக் குறிப்பது. சாதியைப் பேணுவதில், சாதியடுக்கைக் கட்டுக்குலையாமல் வைத்திருப்பதில் முக்கியப் பங்காற்றுவது இந்த அகமணமுறையே என்பது தெளிவு.

1. தொண்டை மண்டலம் முதலிகள் அல்லது கொண்டைக் கட்டிகள், 2. தக்ஷினநாட்டான்கள், 3. காரைக்காட்டான்கள், கார்காத்தான்கள் அல்லது பாண்டியர்கள், 4. பஞ்சுக்கார செட்டிகள் அல்லது ஆடூர் - உபாக்யாம்கள் (Aduur - Upaak yams), 5. சோழபுரம் செட்டிகள், 6. சோழியாக்கள் (Chooliyas), 7. ஊத்துநாட்டுகள் (Uuttunaattus), 8. கொங்கர்கள், 9. ஆறு - நாட்டுக்காரர்கள் அல்லது மொட்டைகள், 10. ஏழூர்க்காரர்கள் (Yeeluurs), 11. துளுவர்கள், 12. மலைக்-கந்தன்கள், 13. சித்தக்காட்டு செட்டிகள், 14. பொன்னேரி முதலிகள், 15. பூந்தமல்ல முதலிகள், 16. காணியாளர்கள், 17. கொடிக்காலர்கள், 18. அரும்புக்கட்டிகள், 19. பண்டாரங்கள் அல்லது குருக்கள் 20 நைனாக்கள் (Nainaans).

ஒன்று முதல் ஐந்து வரையிள்ளோரும், பண்டாரங்களும், நயினார்களும், சைவ உணவாளர்களாம், முதலி, கவுண்டன், பிள்ளை போன்ற பட்டங்களை பிற சாதிக்காரர்களும் பயன்படுத்துவதுண்டாம்.

The Kongu Vellaalans differ so strikingly from the rest to many of their customs - பண்பாட்டில் பிற வெள்ளாளர்களிலிருந்து கொங்கு வெள்ளாளர்கள் பெருமளவில் வேறுபடுகிறார்கள். They Gongu Vellalans do not seem to hold such a high place in society as the latter vellalans - சமூகத்தில் பிற வெள்ளாளர்கள் போல் கொங்கு வெள்ளார்களுக்கு அவ்வளவு உயர்வான மதிப்பில்லையாம். They are cultivators, but not well off and their dwellings are generally thatched huts containing only one room. கொங்கு வெள்ளாளர்கள் பயிர்தொழில் செய்தாலும், அதில் அவ்வளவு சிறந்தவர்களில்லை. ஒருயொரு அறை மட்டுமே கொண்ட ஓலைக் குடிசைகளே அவர்களது வீடுகள்.

இது சுமார் நூறு வருடங்களுக்கு (1907) முன்பு பதிவு செய்யப்பட்டது. நூறு வருடங்களுக்குள் கொங்குநாடு எவ்வளவு முன்னேறிவிட்டது? அதிலும் சுதந்திரத்திற்குப் பிறகான கொங்குப் பகுதியின் வளர்ச்சி மிகப் பெரியது. என்னில், காரணமென்ன?

அன்று கொங்கிலிருந்த பயிர்த்தொழில் எத்தகையது? இன்றைக்கு எப்படி மாற்றம் பெற்றுள்ளது? அன்று வானம் பார்த்த வறண்ட பூமி. மேட்டு நிலமென்பதால் நீரெல்லாம் ஓடிவிடும். நீரைத் தேக்கி அணைகள் கட்டியதே கொங்குப் பகுதியின் பெருத்த வளர்ச்சிக்கு, மாற்றத்திற்குக் காரணமெனில் மிகையாகுமா? மேட்டூர், பவானி அணை, ஆழியாறு அணை, திருமூர்த்தி அணை என பெரியதும் சிறியதுமாக எத்தனை அணைகள். எத்தனையாயிரம் கிலோ மீட்டர்களுக்கு வாய்க்கால்கள். கொங்குப் பகுதி முழுவதுமே வலைப்பின்னல் போலல்லவா வாய்க்கால்கள் இடம் பெற்றுள்ளன. மேட்டூரின் நீரும் வாய்க்கால்கள் மூலம் பாய்கிறதுதானே.

மிகையான நீரால் இருமுறை பாசனம் உண்டாயிற்று. பயிர்த்தொழில் செழித்தது. உழைப்பதற்கொன்றே பிறந்தவர் போன்று அருந்ததிய பண்ணையாட்கள் கிடைத்தார்கள். பண்ணையம் வளர்ந்தது. பாளையம் விரிவடைந்தது. உபரி வருமானம் கிடைத்தது. செல்வம் பெருகியது. பணம் முதலீடானது. கொங்கர்கள் படித்தனர் கல்வி வளர்ந்தது, தொழிலுக்கான மூலதனம் வாய்த்தது. தொழில்கள் பெருகின நாயக்கரும், செட்டியாரும், முதலியாரும், பிள்ளையும், கொங்குப் பகுதிக்கு மாறினார்கள். கவுண்டம் பாளையங்களும் நாயக்கன்பட்டிகளும் முளைத்தன. புதிய பொருளாதரக் கொள்கையால் தென் தமிழகத்தவர் வேலைக்கு

வந்தனர். நூற்பாலைகள் பெருகின. ஏற்றுமதி வாய்ப்புக் குவிந்தது. நகரங்கள் வீங்கின, கொங்கு ஏற்றம் பெற்றது. கொங்கர்களும் வாழ்வில் மாற்றம் பெற்றார்கள்.

கொங்குப் பகுதிக்கு, குறிப்பாக கோவைப்பகுதிக்கு தேவர்களும் நிறைய குடிபெயர்ந்திருப்பது தெரிகிறது. இல்லையெனில் கோவை மாநகரில் ஸ்ரீதேவர் பெயரில் நகரப்பேருந்து எப்படி ஓடும்? மேலூரிலிருந்து நத்தம் சாலைவழியில்தான் ஸ்ரீதேவர் பேருந்து பிரபலம். கோவையில் எப்படி? வட்டித் தொழிலும் கோவையில் பெருக்கெடுத்து ஓடுகிறதல்லவா?

கொங்கின் மாற்றத்திற்குக் காரணம் நீரல்லவா. மாற்றம் நிலவுடமையானரான வெள்ளாளக் கவுண்டர் வாழ்வில் எத்தகைய மாற்றத்தை உருவாக்கியிருக்கிறது? நிலமற்ற அருந்ததியர்கள் வாழ்வில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது? கொங்குப் பகுதியின் தேவேந்திர குலத்தார் வாழ்க்கையில்.. மாற்றமனைத்தும் நிலத்தால் வந்ததெனில், கொங்கில் நிலம் யாருடையது? சேரர் யார்? சேற்றில் உழலும் சேறர் யார்? நீருக்கு உரிமையான நீரர் யார்? நெல்லர் யார்? தீரர் யார்? வேரர் யார்? மூரர் யார்? மூர் யார்? தேர், பார், கார் யார்? சேரர், பாரர் எவர்?

தொப்பலாக்கரை சேறர் சேரில் உட்கார்ந்ததற்கு அடி வாங்குறார் எனில், கொங்கின் சேரர் கதை எழுதியதற்கு உதை வாங்குகிறார். கட்டி வைத்து அடித்தார்களாமே. அந்தக்கதை எழுதியிருக்க வேண்டியதில்லை. சேரர் எழுதுவதற்கு, பதிவதற்கு எத்தனை எத்தனையோ இருக்கிறது. எனினும் பொய்யில்லையே. கதாசிரியருக்குத் தெரியவில்லை போலும். தர்ஸ்டன் அதைக் குறிப்பிட்டுள்ளார். வெள்ளைக்காரத் துரையை அடிக்க முடியுமா?

வெள்ளையர்களின் மேனுவல்கள் மிகச் சிறப்பாவையே. அவர்களது அறிவுத்திறனும், உழைப்பும், விசயங்களைப் புரிந்து கொள்வதில் அவர்களுக்குரிய மதிநுட்பமும், அக்கறையும் வியக்க வைக்கின்றன. பெரும்பாலான வெள்ளையர்கள் நேர்மைக்குணமும் கொண்டிருந்தது சிறப்பு. தர்ஸ்டன் குடிகள், குலங்கள் பதிவுகள் போன்று இனி வருவது அரிது.

தர்ஸ்டனின் பதிவுகளிலும், மாவட்ட மாறுவல்களிலும் பிழைகள் இருப்பது வியப்பில்லை. பெரிய அளவில் இருப்பதற்கு வாய்ப்பில்லை. அதற்காக அப்படியே ஏற்றுக்கொள்ளவும் வேண்டியதில்லை. பிழைகள் இருக்கலாம். வெள்ளையர்

வேண்டுமென்றே செய்திருக்க மாட்டார். வெள்ளையருக்கு பக்கபலமாக, உறுத்துணையாக இருந்தவர் பிராமணரும் முதலி, செட்டி, பிள்ளை போன்ற வெள்ளாளருமே. இவர்களது உழைப்பும் பங்களிப்பும் வெள்ளையர் உழைப்பில் பெரும்பங்கு வகிப்பவை.

வெள்ளையருக்கும், வெள்ளாளருக்கும் எளிய மனிதர்களது வாழ்வியலும், பழக்கவழக்கங்களும், சடங்கு முறைகளும் தெரியாதவை, புரியதாவை, அறியாதவை. பிராமணர் போன்றே வெள்ளாளரும் தனித்துவாழும் இயல்பினரே. உண்மையெனில் தொல்குடிகளில் வாழ்வியலை எவ்வாறு அறிவார்?

எது எப்படியிருப்பினும், பதிவுகள் பெருமைக்குரியவை. அக்காலத்தின் கண்ணாடி. உதாரணமாக தர்ஸ்டனின் காடர்கள் - Kaadir பற்றிய பதிவுகள் மெச்சத்தக்கன. எத்தனை நுட்பமான தகவல்கள்? நம்மவர்களான பிராமணரும், வெள்ளாளரும் சில மாற்றங்களைச் சுட்டியிருக்கலாம். ஒருவேளை துரையிடம் எப்படிச் சொல்வது என நினைத்தார்களோ? அது Kaadir அல்ல Kaadar எனச் சொல்லியிருக்கலாமே. Kaadir க்கும், காதீர்க்கும், கதிருக்கும் ஒற்றுமை இருப்பது வியப்பானதன்றோ. அன்றைய அரேபியர் காதர், நமது காதீர் போலவேதான் இருந்திருப்பார். மெக்கா ஒருவேளை மக்காவோ? மக்கள், மக்கா, மெக்கா. சரிதானோ. மெக்கா, மிக்கா, மிக்கையேல், மிக்கையில், மிகைல், மைக்கேல். மிக்க - மிகுந்த. மிகை - மிகுதியான. மிக்கேல் - பெரியவரோ?

தமிழில் முகில் - உயர்வான எனும் பொருளில்தானே ஆளப்படுகிறது, முகில் - மேலுள்ளது. மேகம்.

மெக்கா (Mecca), ஷெட்டா (Jeddah), மெதினா (Medina).. ஜிட்டா என்பது சித்தாவோ? சித்தா எனில் சிறியதோ. அன்னை, சிற்றன்னை, சிறிய அன்னை. சித்தப்பா - சிறிய அப்பா, பெரிய அப்பா பெத்தப்பாதானே. சித்த - பெத்த, மெக்கா - மெதினா - ஜெத்தா - பெரிய, நடு, சிறியதோ, மதினா - மத்தினா, மத்தியானம். மதினா நடு - இடை. ஜிம்மா எனில் சிம்மாவோ. சிம்மா - பெரிய ஜும்மா மசூதி - பெரிய மசூதியோ. பக்றா - Bahrah, குரன் - Ghran, குலை - Khulais. அல்யுதமா - Alyutamah, உசராக் - Ushayrah, அப்யார் - Abyar, மின்டசா - Mindassah,

முலாலிக் - Mulaylih. Mulaylih - மலை, முலே (கன்னட முலை) Abyar - Ubyar - Ubar உயரமானது எனும் பொருளல்லலா.

அரேபியாவின் கிழக்கு முனையில் அமைந்துள்ள ஓமன் நாட்டின் Ras Madraksh - ரஸ் மத்ரரகாக் பொருளென்ன? மத்ராகாக் எனில் மத்ரா, மதுரா, மதுரையோ?

தமிழர் சேர, சோழ, பாண்டிய எல்லைகளை, கடைச்சங்கத்தை மட்டும் வைத்து வெகுவாகச் சுருக்கிவிட்டார் என்பது திண்ணம். தமிழில் மிக அதிகமாக எழுதியுள்ள பிள்ளைமார் உண்மையில் சங்க காலத்திய பெருமையை அறியவில்லையோ? தோய்ந்த தமிழறிஞர்கள் எடுத்தியம்பிய முச்சங்கத்தையும் குமரி நாட்டையும் நம்பாமல், பொத்தாம் பொதுவாக தமிழைப் பற்றி எழுதிவிட்டார். தமிழ் வேந்தர்களின் பரவல் மிகப் பெரியது என்பது திண்ணம். குறிப்பாகச் சேரர். சேரர் நிலம் வெகு பரந்தது. இமயம் வென்றான் என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். சேரன் கொடி வில்லம்பு எனில் அவரே விசயனின் வழித்தோன்றலாக இருக்க முடியும். மகாபாரதம் போரில் சோறிட்டது சேரர் எனில் எத்தகைய பழைமையானவர் சேரர்?

மேற்கில் வலிமை கொண்டு பரவியது சேரர் நாகரிகம் எனில் மிகையாகாது. தற்போதைய ஈரானில் இலம் (ilam) எனும் பெயரில் பெரியதொரு மாநிலமே அமைந்திருக்கிறது. இலம் மாநிலம் 1600 கி.மீ. நீளமுள்ள சக்ரோஸ் (Zagros) மலைத்தொடருக்குப் பெயர் பெற்றிருக்கிறது. இப்பகுதியில் இலமைட்டுகள் (Elamites) வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. இம்மலைத் தொடர் ஈராக்கின் மெசபதோமிய சமவெளிக்கும் இரானிய மேட்டு நிலத்திற்கும் இடையில் அமைந்துள்ளது. ஈரானிய நாகரிகத்தில் மீடியர்கள் (Medias) என்பவர்கள். ஈரானிய மேட்டு நிலத்தில் வாழ்ந்தவர்கள் எனில் அது மேடர்கள், மேட்டு நிலத்தவர்கள் என்பதுதானே சரியாக இருக்கும்? மேலே வாழ்ந்தவர்கள் மேடர்கள். கீழே வாழ்ந்தவர்கள்? இலாம் (Elam) என்பதை பள்ளம் எனக் கொண்டால்? ஈழம், இலம், இல்லம், பள்ளம். பெர்சியன் வளைருயவில் அமைந்திருக்கும் இலம் மாகானத்தின் கடற்கரையையொட்டி ஏராளமான தமிழ் பெயர்கள் சுட்டிக்காட்டுவது எதை? ஈரான், ஆப்கன் பகுதயில் தற்காலத்திலும் ஏராளமான பெயர்கள் தமிழ் பெயர்களாகப் புழங்குவது எப்படி?

ஈழம் பெயர்க் காரணம் என்ன? ஈழவர் யார்? இல்லத்துப் பிள்ளைமார் யார்? இல்லம், இலம், ஈழம் மருவுமே. மேலம், கீழம் எனவும் வழங்கலாம். மேல் நாடு, கீழ் நாடு போல. இலம், நளம், நளமர், நளவர். ஈழத்தின் நளவர்?

நளவர் சாதியினர் இலங்கைத் தமிழ்ச் சமூகத்தில் மட்டுமே காணப்படுகின்றனராம். நளவர் தொழில் பனை ஏறுதலும், கள் இறக்குதலுமாம். அவ்வாறாயின் நளவர் யார்? நாடார் யார்? நாயர் யார்? சாணார் யார்? சாறுனர் யார்? இல்லர் யார்? இல்லத்துப் பிள்ளை யார்? பள்ளைக்கும் பிள்ளைக்குமான தொடர்பென்ன? பள்ளையும், பாளையும், பிள்ளையும் ஒன்றா? பாளை விடுதல்? இளையோர் எனும் பொருளில் பிள்ளை ஆளப்படுகிறதோ? அன்றைய தமிழர் தொண்டையிலிருந்து வந்தவரை இளையோர் எனும் பொருளில் பிள்ளை என்றாரோ? தமிழகத்திற்கு, தென் தமிழகத்திற்கு பிள்ளை இளையோர் எனில் இலங்கைக்கு?

இலங்கையில் நளவரும் பள்ளரும் கோவிலுக்குள் போக, நுழைய முடியாதாம். தடுத்தது யார்? நல்லூர் என்பதே பள்ளூர் என இருந்திருக்கலாமே. நல்லூர் நளவூர் எனவும் இருந்திருக்கலாம். நல்லூருக்கு முருகன் எப்போது வந்தார்?

இலங்கையின் பள்ளர் யார்? யாழ்ப்பான மாலை சுட்டுகிறது - அந்த நாட்களில் ஒரு பெருங்கலகமுண்டுபட்டதனால், கலகத்துக்குப் பயந்து சில விட்டுணு சமயப் பிராமணக் குடிகளும், சிவசமயப் பிராமணக் குடிகளும் உத்தரகோசமங்கை என்னுமிடத்திலிருந்து, ஆணும் பெண்ணுமாகக் காரை தீவில் வந்திறங்கி, அங்கே குடியிருந்தார்கள். சோழ நாட்டிலிருந்து சில பட்குடிகள் வேளாளரின் கீழ்ப்பயிர்க் குடிகளாயிருந்து பிழைக்கலாமென்றெண்ணி வந்திறங்கித் தாங்கள் எண்ணி வந்தபடி பிழைக்க இடங்காணாததனாற் சில குடிகள் தங்கள் ஊருக்குத் திரும்பினார்கள். சிலர் சாணாரைப் போல் பனையேறுந் தொழிலைப் பயின்றார்கள். நளவரும் பள்ளரும் பனையேறத் தொடங்கிக் கொண்டதனாற் சாணாருக்குப் பிழைப்புக் குறைந்தது. அதனால் சில சாணார் வெள்ளைக்காரர் வீடுகளிலே ஆணும் பெண்ணுமாகப் பணிவிடைகளில் ஏற்பட்டுச் சீவியம் பண்ணினார்கள். சிலர் வலை வீசிப் பிழைத்தார்கள்.

இலங்கையின் கோவியன் யார்? மலை கூறுகிறது - முன் வந்த பள்ளர் நளவரிற் பிழைப்புக்கு வழியில்லாதிருந்தவர்கள், தங்களை வேளாளர்

முதலானவர்களுக்கு அடிமையாக எழுதிக் கொடுத்திருந்தார்கள். முன்னாட்களிலே சில வறிய குடிகள் தங்களைக் கோவில்களுக்கு அடிமைகளாக எழுதிக் கொடுத்துக் கோவிற்பணிவிடை செய்து சீவனம் பண்ணிக் ‘கோவிலான்’ என்று அழைக்கப்பட்டு இருந்து பின்பு ‘கோவியர்’ எனப் பெயர் பெற்றார்கள்.

இரானிய ஈழத்தின் உட்பிரிவுகளாகக் குறிப்பிடப்படுபவை - டெக்லோரன் (Dehloran), மேக்ரன் (Mehran), மலேன்ஷகி (Malekshaki), இலம் (Ilam), ஐவன் (Eyvan), சர்தவோல் (Chardavol), சிர்வன் (Sirvan), பத்ரே (Badreh), தார்ரேஷகர் (Darrehshahr), அப்தனன் (Abdanan).

இலம் மாகாணத்தின் பிரிவுகளில் தமிழ்ப் பெயர்கள் மருவி இருப்பதை எளிதாகத் கண்டறியலாம். இலம் மாநிலத்தின் தெற்குக் கடற்கரையையொட்டி அமைந்திருக்கிறது டெல்லோரன். அதை தெற்கின் ஓரம் எனக்கொண்டால், அதற்கு மேற்கே அமைந்திருப்பது மேக்ரன் - மேற்குப் பகுதி. தெக்கன் - மேற்கன் எனில் சரியோ? வடக்கன் என்பது தமிழ் மரபுதானே. மலேக்கசி - மலைவாசியாக இருக்கலாம். ஐவன் - பாரதமெங்கும் பஞ்ச பாண்டவர் தொடர்புடைய பெயர்கள், இடங்கள் இருப்பது போல் அன்று ஈரானின் இலோமிலும் இருத்திருக்கலாம். சர்த - சேர்த, சேராவாக இருக்கலாம். சர்தவோலன், சர்தலன் - புத்ரன் - மகன் எனும் பொருளா அல்லது மலையா?

சர்தர்- சர்தார் எனில் பெரியவர் எனும் பொருளோ? சர்தார் பாரசீகச் சொல்லாம். மேலானவர் அதாவது அரபு அமீர் போன்று. அமீர் - தலைவன், படைத்தலைவன், பெரியவன்.

சமஷ்கிருதத்திற்கும் ஈரானிய நாட்டுக்கும் மிக நெருங்கிய தொடர்புள்ளதை யாரும் அறிவர். வேத வழிபாடும், நெருப்பு வணக்கமும், வேள்வி முறையும் பண்டைய பெர்சியாவோடு நெருங்கிய தொடர்புடையது. சமஷ்கிருதமும், பாரசீகத்தின் பழைய ஜெந்த்அவத்தாவும் மிக மிக நெருக்கமனவை. தற்காலத்திய ஈரானிய மொழிக்கும் பழைய ஈரானிய மொழிக்கும், பரந்துபட்ட வேற்றுமை இருப்பதைக் கவனித்தில் கொள்ள வேண்டும்.

கொங்கருக்கும் சேரருக்கும் உள்ள உறவு எத்தகையது? சேரர்க்கும் மராத்தியருக்கும்? சேரர்க்கும் பஞ்சாபியருக்கும்? சேரர்க்கும், ஆப்கன் மற்றும் அராபியருக்கும் உள்ள உறவுகள்?

தொடர்புறவுகளை அறிய தொல்குடிகளின் வாழ்க்கை முறையை, அவர்களது சொற்களை அறிவது முக்கியம். தொல்குடிகள் மிக மெதுவாக மாறுவார்கள். மெதுவாகவே மாற்றத்தை ஏற்றுக் கொள்வார்கள்.

தமிழ் நிலத்தில் தற்போதும் தொல்குடிகள் வாழ்ந்து வருகிறார்களா? ஆம் எனில், அவர்கள் ஏதேனும் தொன்மையான பழக்க வழக்க முறைகளைப் பின்பற்றி வருகிறார்களா? தமிழ்ச் சாதிகளில் தற்போதும் தொல்முறைகளைப் பின்பற்றி வரும் சாதிகள் என எதை, எவற்றைச் சுட்டலாம்? அட்டவணையினைரயா, அட்டவணைப் பழங்குடியினரையா, மலைக் குடியினரையா, மிகவும் பிற்படுத்தப்பட்டவரையா, பிற்படுத்தப்பட்டவரையா அல்லது முன்னேறியவரையா? முன்னேறியவர், முற்பட்டவர் எனில் எதில் முன்னேறியவர், முற்பட்டவர்? மற்றவர் பசித்திருக்கும் போது தாம் மட்டும் உண்பவர் எப்படி முன்னேறியவராவார்? பெருந்தொகையினர் எழுதப் படிக்கத் தெரியாதபோது, தாம் மட்டும் இலக்கியம் படைப்பவர் எப்படி முற்பட்டவராக இருக்க முடியும்?

தமிழகத்தின் தொல்குடி யார்? அவருக்குத்தான் இந்த நிலமும், பண்பாடும், மொழியும் சொந்தமாக இருக்க முடியும். யார் அவர்? பறையரா? பள்ளரா? சக்கிலியரா? சக்கிலியர் தெலுங்கு பேசுபவர். எனினும் அவர் மூதாதையும் தமிழே பேசியிருக்க வேண்டும். தமிழர்க்கு தமிழ்தானே உலகின் முதுமொழி. உலகின் மூத்த மொழி.

தொண்டை மண்டல வேளாளர் அழகாகக் கொண்டை போடுவாராம். மறவரும் போடுவார். வேறுசில சாதிகளும் கொண்டை போடுவார்கள். நாயர்கள் கொண்டைக்குப் பெயர் பெற்றவர்கள். நம்பூதிரியிலும் உண்டு. முன்பு நம்பூதிரியின் பெண்கள் தனியாக வெளியில் போகக் கூடாதாம். யாரேனும் ஒரு நாயர் பெண்ணை அழைத்துக் கொண்டே வெளியில் போக வேண்டுமாம். நாகரிகத்தில் முன்னேறியவராகக் குறிப்பிடப்படும் நம்பூதிரியின் இதே முறை இரான், இராக், துருக்கி நாடுகளின் எல்லையில் வாழும் குறுக் பழங்குடிகளிலும் உண்டாம். அவர்களும் தமது பெண்களைத் துணையில்லாமல் தனியே அனுப்பமாட்டார்களாம்.

நம்பூதிரி யார்? 800 -1000 ஆண்டளவில் கேரளாவிற்கு வந்தவர் எனில் எங்கிருந்து வந்தார்? வந்தவுடன் இவர் கைக்கு நிலமனைத்தும் எப்படி வந்தது? பல்லவர் அரசுரிமை முடிவிற்கும், கேரள நம்பூதிரி இடப் பெயர்வுக்கும், குறுக் மக்களின் வாழ்க்கை முறைக்கும் ஏதேனும் தொடர்பிருக்குமா? ஆடு மேய்க்கும் குறும்பர்களுக்கும், அரேபிய குறுக்குகளுக்கும் நிலவும் தமிழ்ப் பண்பாட்டு ஒற்றுமை எத்தகையது? அண்மைக் கிழக்கின் குறுக்குகள், பல்லவர் பேரரசின் பகுதியாய் இருந்து, பின் இடம் பெயர்ந்து சென்றிருப்பரோ? மாடு ஓட்டிச் செல்பவரைவிட ஆடு மேய்ப்பவர்தான் அதிகமும் இடம் பெயர்வார் என்பதும் வரலாற்று உண்மையல்லவா?

பல்லவர் பகுதியின் குறும்பர்கள், பேரரசின் முடிவிற்குப்பின் அதாவது ஆயிரம் ஆண்டுகளுக்குமுன், மேற்கு நோக்கி மத்திய இந்தியா, வட இந்தியா, இரான், துருக்கி என ஆட்டு மைந்தைகளோடு புலம் பெயர்ந்திருப்பார்களோ? ஆயிரம் வருடத்தில், மொழி, உடை, நிறம் என அனைத்தும் மாறியிருந்தும் தமிழ்ப் பண்பாடு இன்றும் மாறாமல் இருக்கிறதோ? குர்துக்களின் மொழி ஈரானிய மொழியின் மாற்று வடிவமாக இருப்பது ஏன்? குர்துக்களின் எண்ணுப் பெயர்கள் தமிழ்பெயர்களாகவே இருப்பது எப்படி? குர்துக்கள் இலம் மாகாணத்தில் குறிப்பாக ஈரான், ஈராக் நாடுகளின் எல்லையொட்டிய பகுதியில் பரவி வாழ்வதெப்பது? வேறுபகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வந்ததால்தான், அவர்கள் மத்திய ஆசியாவில் நாடோடிகளாகவே கருதப்படுகிறார்களா? குர்திஸ்தான் எனும் தனி நாட்டிற்குப் பலகாலமாகப் போராடி வரும் குர்துக்கள் பல்லவ நாட்டில் வாழ்ந்த குறும்பர்களா? வடக்கில் போனவர் குறும்பர் எனில் தெற்குப் பகுதிக்கு வந்தவர் குடும்பரோ? தொல் தமிழில் மள்ளர் என வழங்கிய சொல், பள்ளர் என மாறியது எப்போது? ஒருவேளை பள்ளர் என்பவர் வேறு, மள்ளர் என்பவர் வேறா? அப்படியெனில் குடும்பர்?

சோழர்கள் வென்றதால் பல்லவ நாட்டினர் இடம் பெயர்ந்தார்களா? தமிழர்கள் போர் வரலாற்றை அறிந்திருக்கிறார்களா எனத் தெரியவில்லை. இன்றைக்கும் ஒரு சிறு தகராறு நடந்தாலே ஊரைக்காலி செய்து ஓடும் மக்கள் இருக்கும் தமிழ்நாட்டில், அன்று மாற்றார் வெற்றி பெற்றுவிட்டால் என்னாகும் என்பதை அறியாமலா வாழ்ந்திருப்பர்?

வெள்ளையரைப் பாராட்டலாம். எதிர்த்தவர்களைக் கொடூரமாக ஒடுக்கியதாகப் பதிவுகள் கிடைக்கிறதோயொழிய, எளிய மக்களை அழித்தார்,

கொடுமைகள் இழைத்தார் எனப் பதிவுகள் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ் அரசர்கள்? சோழரை வென்ற பாண்டியன் மாறவர்ம குலசேகரன், சோழ நாட்டை என்னவெல்லாம் செய்தான்? தமிழர் படித்திருக்கிறாரல்லவா?

அன்று சோழர் பல்லவரை வென்றார் எனில் அது பல்லவ மக்களுக்கு மிகப் பெரிய இழப்பாகவே முடிந்திருக்கும். மக்கள் சோழர் பிடியிலிருந்து, அவரது ஆட்சிக்குட்பட்ட பகுதியிலிருந்து வெகு தூரம். சென்றிருப்பார்கள். அவ்வாறு சென்ற புதிய இடங்களில் எத்தகைய வாழ்வு கிடைத்திருக்கும்? வாழ்வாதாரங்களை விட்டுவிட்டு பிறிதோர் இடத்திற்குச் செல்பவருக்கு பெரிய அளவில் வாய்ப்புகள் கிடைத்திருக்காது. அங்கு நிலைத்து நிற்பதற்குக் காலமாகும். ஒருவேளை எளிய மக்களெனில் மிகுந்த சுரண்டலுக்கும் வன்முறைக்கும் உள்ளாக்கப்படவும் நேரிடும். அதிலிருந்து மீளமுடியாமல் பழைய நிலையை விடத் தாழ்நிலைக்குப் போய்விடவும் வாய்ப்புண்டு.

மத்திய இந்தியாவில் வாழும் கொர்கு இனப் பழங்குடிகள் அடிப்படையில் பயிர்த் தொழில் செய்பவர்களாம். ஏறத்தாழ 97 சதமான மக்கள் கிராமங்களில் வாழ்கிறார்களாம். Gonds and Korks are excellent agriculturist - கோண்டுக்களும் குறுக்குகளும் வேளாண்மையில் மிகச் சிறந்தவர்கள். They possess age old traditional system - அவர்கள் பழங்காலத்தைய முறையைத் தற்போதும் பின்பற்றுகிறார்கள். இவர்கள் மிகப்பெரிய அளவில் நிலக்கிழர்களாலும், வணிகர்களாலும் சுரண்டப்படுகிறார்கள். பதிவுகள் சுட்டுகின்றன.

ஏய் காலாவதி கொர்கு பாடல் - Aie Aadiwasi Kalavathi Korku Song- யூடியுப்பில் வலையேற்றம் செய்யப்பட்டுள்ளது. பாட்டில் மானம் மரியாத போன்ற சொற்கள் இடம்பெற்றுள்ளன. இன்னொரு பாடலில் அம்மாமாரே, ஊரான் போன்ற சொற்கள் தெளிவாக இடம்பெற்றுள்ளன.

விந்திய சாத்புரா மலைகளின் தப்தி நதியின் இருமருங்களிலும் வாழும் இந்த கொற்கு மக்கள் யார்? இவர்களது மொழி திராவிடமா அல்லது ஆத்திரோ - ஆசியாட்டிக்கா?

மாளவத்தின் மலவா, பில், பிலாலா ஆதிவாசிகளின் மொழி என்ன? பில்கள் மத்தியப் பிரதேசத்தின் பகோரியாவிற்கு (Bhagoriya), வில் அம்போடு ஆட்டம்

பாட்டம் என காமன் விழா (இந்திர தனுஷ்விழா) கொண்டாடுவது எதற்கு? இந்திரனுக்கும், பாண்டவருக்கும், சேரருக்கும், பல்லவருக்கும், தேவேந்திர குலத்தவருக்கும், இராசபுதனத்தின் மலவாக்களுக்கும் உள்ள தொடர்பென்ன? அனைவரையும் இணைப்பது வில் அம்போ? இந்திரன் எனும் ஒற்றை சொல்லோ? அது இந்திர விசயன் வில்லா அல்லது இராமனின் வில்லா? சேரர் வில் அம்பு விசயனுடையதா, இராமனுடையதா? இராமகாதை கேட்ட நம் குலசேகரர், இலங்கைக்குப் படை நடத்தினாராமே.

வடஇந்தியாவின் இத்தனை படையெடுப்புகள், மாற்றங்களுக்குப் பின்னரும், தற்போதும் பழமை மாறாமல், தங்களுக்கேயான மொழி, உடை, நடனம், திருமணம், பாரம்பரியம் என வாழ்ந்து வரும் இந்த பீல்கள் யார்? விந்திய மலைகளின் மேற்கே, மத்தியப்பிரதேசம், மகாராட்டி, மத்தியப்பிரதேசம், குசராத் போன்ற மாநிலங்களில் வாழ்ந்துவரும் பில்கள் பள்ளுகளோ?

இந்தியாவில் எத்தனையோ தொல்குடிகள் வாழ்ந்தாலும் பில்களே மிகச் சிறப்பாக வில், அம்பைப் பயன்படுத்துபவர்கள் எனப் பெயர் பெற்றிருப்பது எவ்வாறு? இரண்டு பெரிய பில்கள் குலப் பிரிவில், தமிரபருணி பில்கள் எனும் ஒரு பிரிவும் இடம் பெற்றுள்ளது எப்படி?

தாமிரபருணி பில்கள் எனில் அது தென் தமிழகத் தாமிரபருணிதானே? பருணி, பரணை, தாம்ர பர்ணா என வடமேற்கு ஆசியாவில் பெயர்கள் இடம் பெற்றுள்ளன என்பதும் கவனிக்கத்தக்கதோ. தாமிரபருணி பில் எனில் அது பில் அல்ல பள். பள்ளர் என்பதே சரியானது. தொலைதூாரத்தில் பள் பிள்ளாகியிருக்கலாம். மள்ளவம் மாளவம் ஆகியிருக்கலாம். வடமேற்கு இந்தியா மல்லர்களுக்குப் பெயர் பெற்றதன்றோ? வில்லர் பில்லராவதும் கூடுமன்றோ.

பில்கள் தாமிரபருணி பிள்கள் எனில் கொர்க் மக்கள் கொற்கை மக்கள் என்பது தெளிவு. அதனால்தான் மானம் மரியாதை போன்ற சொற்களை இன்னமும் ஞபாகத்தில் வைத்திருக்கிறார்கள்போல. உண்மையெனில், பாண்டியர்களின் தொடக்க காலத்திலோ, இடைச்சங்க காலத்திலோ, இந்த மக்கள் இடம் பெயர்ந்திருக்கலாம். இவர்களது மொழியும் பண்பாடும், வரலாறும், தமிழ் நாகரிகம் தென்னிந்தியா, மத்திய இந்தியா, வடக்கு வடமேற்கு இந்தியா, மேற்காசியா,

வடக்கு ஆசியா என எப்படிப் பரவியது என்பதற்கு தக்க சான்றாய் அமையும். இந்திரச் சமவெளி நாகரிகமும் நன்கு புலப்படும்.

தமிழர்கள் தென்தமிழகத்திலிருந்து வடமேற்கில் சென்றார்கள் எனில், வடமேற்கிலிருந்து தமிழகத்திற்கும் வந்திருக்கலாமல்லவா? ஒருவேளை போயும், வந்துமிருந்தால்? அங்கே படையெடுப்புகள் நிகழ்ந்து இங்கேயும், இங்கே படையெடுப்புகள் நடந்து அங்கேயும் இடம் பெயர்ந்திருந்தால்? படையெடுப்பின்றி, பழங்காலத்தில் மேய்ச்சலுக்கும், வணிகத்திற்கும் இடம் பெயர்ந்திருப்பர். எனினும் அத்தகைய இடம் பெயர்வு குறைவாகவும் குறைந்த எண்ணிக்கையிலேயுமே நிகழ்ந்திருக்கும்.

வடமேற்குப் பிள்களில் Bhilala, Batilia, Barela, Rathya என நான்கு சாதிகள் உண்டாம். படிலியா பாண்டியாவோ. ரத்யா - இந்தியில் கருப்பினத்தவரைக் குறிக்கும் சொல்லல்லவா. பறேலா - பறையரோ. தங்களின் முக்கியத் தெய்வமாக பாபா தேவ் என இந்திரனைக் கும்பிடும் பில்களின் குலதெய்வ கோவில் வழிபாட்டில் குதிரைகள் பெருமளவில் இடம்பெறுவது ஏன்?

பிள்களின் சமய நம்பிக்கையில் சடங்கு நிறைவேற்றுபவராக பர்வா (Barwa) குறிப்பிடப்படுகிறார். தமிழகத்தின் சில கோவில்களில் தற்போதும் பூசகர்களாக பறையர் இருப்பது கவனிக்கத்தக்கது. தமிழகத்தில் நிகழ்வதுபோல் பில்களும் பறவைக் காவடி எடுப்பது வியப்பு. அவர்கள் கடவுள் மொர்கு தேவாவாம் - Morgi Deva. தமிழருக்குத் தெரியும் அது முருகன். முருகன் மொர்கனாக மாறிவிட்டார். இப்படித்தான் தண்டாயுபாணி, தெண்டாயுபாணியாக மாறியிருக்கிறார். பில்கள் பசுக்களை ஓடவிட்டு கீழே படுத்து மிதிவாங்குகிறார்கள். அது சல்லிக்கட்டின் மாற்று வடிவமோ? பில்கள் புல்லாங்குழலுக்கும் மிகுந்த மதிப்பளிப்பது தெரிகிறது. வடமேற்கில் வாழும் மற்றவர்கள் வெள்ளைவெளேர் என இருக்க, பிள் சமுதாயத்தினர் இன்னும் திராவிட நிறம் கொண்டிருப்பது எப்படி?

இந்த நவீன அணுயுகத்திலும் வில் அம்பை விடாமல் தூக்கித் திரியும் இந்தப் பில்களுக்கும், தமிழக வரலாற்றிற்குமான தொடர்பு எத்தகையது? பில்களின் மொழி இந்தோ - ஆரியமா அல்லது திராவிடமா?

பில்வாரா (Bhilwara) - பிள் ஊர்தானே. அது பில் ஊரா - பள்ளூரா? பத்மாவதியின் கூமர் - Ghoomer நடனம் யாருடையது? அது சுமர் நடனமா, காமர் நடனமா?அது யாருக்காக ஆடப்படும் ஆட்டம்? அது கூமர், கூம்பர் நடனமா அல்லது உம்பர் நடனமா? கூமரா குறும்பரா? உம்பர் யார்? தேவர்களின் தலைவன் யார்?

# நாராயணன்!



வட ஆற்காடு மாவட்ட ஆவணம் பகுதி - இரண்டின் புள்ளியியல் விவரம் (Madras District Gazetteers - Statistical Appendix for North Arcot District 1905) அட்டவணை - 1901இன் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் பகுதி - நான்கின் Castes, Tribes and Races in 1901, தெளிவானதொரு சான்றைக் கொடுக்கிறது.

இந்து மற்றும் விலங்கைக் கும்பிடுவோர் பிரிவில் தமிழ் சாதிகளும், தெலுக்குச் சாதிகளும் இடம் பெற்றுள்ளன. தமிழர்கள் 10,66,797 பேர்கள். தெலுங்கர்கள் 9,61,207 பேர்கள். கன்னடர் 31,150. ஒரியர் - 10. மலையாளத்தவர் - 62. மற்றவர் 14,005 பேர்கள். வெளிநாட்டவர்கள் 293 பேர். சாதியைக் குறிப்பிடாதவர் - 15 பேர்.

முஸ்லீம்கள் - 1,03,038 பேர்களும், கிறித்தவர்கள் 22,964, ஜெயின்கள் 8128 பேரும், பிற மதத்தவர் என 43 பேரும், ஆக மொத்தம் மாவட்டத்தில் 22,07,712 பேர் வாழ்ந்ததாகப் பதியப்பட்டுள்ளது.

அன்றைய வட ஆற்காடு மாவட்டத்தில் ஆரணிப் பிரிவில் ஆரணி, போளூர், வந்தவாசியும், சித்தூர் பிரிவல் சித்தூர், பால்மனீர், புங்கனூருவும், இராணிப்பேட்டை பிரிவில் சந்திரகிரி, காளகஸ்தி, புத்தூர், திருத்தணி, வாலஜாபேட்டையும், வேலூர் பிரிவில் ஆற்காடு, குடியாத்தம், கங்குண்டு, வேலூர் பகுதிகலும் இடம் பெற்றிருந்திருக்கின்றன. மாவட்ட நகரங்கள் - 12. கிராமங்கள் - 3912.

தமிழர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பள்ளி | - | 3,56,832 | பறையன் | - | 1,92,643 |
| வெள்ளாளா | - | 1,65,694 | இடையன் | - | 74798 |
| கைக்கோனான் | - | 55,251 | பிராமன் | - | 26,398 |
| கம்மாளன் | - | 26,086 | இருளா | - | 23,493 |
| கணக்கன் | - | 21,104 | வாணியன் | - | 16,954 |
| அம்பட்டன் | - | 14,749 | வண்ணான் | - | 14,284 |
| சாணான் | - | 12,346 | குசவன் | - | 11,048 |
| அகமுடையான் | - | 9451 | செம்படவன் | - | 6732 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வள்ளுவன் | - | 6665 | குறவன் | - | 6217 |
| செட்டி | - | 5890 | வேடன் | - | 5249 |
| பணிசன் | - | 5049 | பண்டாரம் | - | 4955 |
| எருகலா | - | 2405 | மொண்டி | - | 616 |
| சுடர்மாண் | - | 471 | தாசி | - | 330 |
| சன்யாசி | - | 281 | ஒச்சன் | - | 139 |
| நட்டமான் | - | 122 | பம்பைகாரன் | - | 112 |
| மற்றவர் | - | 433 | | | |

**தெலுங்கு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| காப்பு | - | 148,604 | மாலா | - | 1,43,690 |
| பாலிஜா | - | 1,30,646 | கம்மா | - | 1,24,466 |
| கொல்லா | - | 56,916 | முத்துராஜா | - | 48,104 |
| ரெட்டி | - | 46,305 | மடிகா | - | 31,713 |
| ராஜு | - | 21,187 | நசகலா | - | 19,096 |
| கோமட்டி | - | 17,951 | சும்சலா | - | 16,794 |
| சக்கலியன் | - | 16,697 | போய | - | 16,376 |
| கண்ட்லா | - | 13,314 | சாலி | - | 11,745 |
| பிராம்மன் | - | 11,630 | வேலமா | - | 9834 |
| மங்களா | - | 9379 | ஏனாதி | - | 7575 |
| கும்மரா | - | 7535 | தேவாங் | - | 5596 |
| பெஸ்தா | - | 3855 | ஜோகி | - | 2945 |
| தாசரி | - | 2617 | உப்பரா | - | 2497 |
| சட்டாளி | - | 1871 | தொம்மரா | - | 1796 |
| ஜானப்பா | - | 1320 | மேடரா | - | 1081 |
| பத்ரா | - | 1054 | பிச்சிகுண்டா | - | 1040 |
| தோகடா | - | 187 | போகம் | - | 810 |
| பதரிஜு | - | 654 | ஜெட்டி | - | 497 |
| பனச | - | 430 | வைஸ்ய | - | 346 |
| பண்டா | - | 231 | செஞ்சு | - | 158 |
| மற்றவர் | - | 187 | | | |

**கன்னடர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குறுபா | - | 16,884 | ஜங்கம் | - | 7986 |
| பிராமண் | - | 3360 | கன்னடியன் | - | 2716 |
| லிங்காயத் | - | 187 | மாற்றவர் | - | 23 |

**மற்ற மொழிக்காரர்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மராத்தா | - | 3510 | பிராமண் | - | 3506 |
| பட்டுநூல்காரன் | - | 2508 | பிண்டிலி | - | 972 |
| ராஜ்புத் | - | 861 | காட்டுமராட்டி | - | 260 |

**முசல்மான்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சேக் | - | 46,565 | லப்பை | - | 33,384 |
| சயத் | - | 12582 | பதான் | - | 6489 |
| முகல் | - | 1351 | துடிகுல | - | 701 |
| முசல்மான் | - | 568 | சோனகன் | - | 400 |
| நரயாத் | - | 137 | மற்றவர் | - | 855 |

**கிறித்தவர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உள்நாட்டு கிறித்தவர் | - | 22,069 | யுரேசியன் | - | 679 |
| இங்கலீஸ் | - | 142 | மற்றவர் | - | 74 |

அட்டவணையில் அன்றைக்கு வடஆற்காடு மாவட்டத்தின் தமிழ், தெலுங்கு சாதிகளைப் பற்றிய விவரங்கள் எண்ணிக்கையோடு கொடுக்கப்பட்டுள்ளன.

சென்னை மாகாண ஆவணங்கள் - வடஆற்காடு, ஆர்தர். எ∴ப் காக்ஸ் தொகுத்த ஆவணம் ஒன்றில் (1895), மாவட்டத்திலுள்ள சாதிகளைப் பற்றிய சுருக்கமான அறிமுகம் இடம் பெற்றுள்ளது. பகுதி நான்கு மாவட்டத்தின் மக்களைப் பற்றிய விவரணைகள் கொண்டுள்ளது.

பாலாறுக்கு தெற்கே தமிழரும், வடக்கே தெலுங்கரும் அதிகமாக இடம் பெற்றுள்ளதால் பாலாற்றை இரு பகுதிகளுக்கும் எல்லையாகக் கொள்வது சரியாம். வடஆற்பாட்டின் முக்கியத் தெய்வமாக இருப்பது கங்கம்மா. மற்ற புகழ்பெற்ற தெய்வங்கள் அங்காளம்மா, முத்தியாளம்மா, கன்னியம்மா, பொன்னியம்மா, எல்லம்மா, போலேரம்மா (Pooleeramma) மற்றும் மேலும் பலர்.

மாவட்டத்திலிருக்கும் நான்கில் மூன்று பங்கு மக்கள் அரிசிக் சோற்றை தொட்டுக்கூடப் பார்த்திருக்க மாட்டார்களாம். மலிவான தானியங்களான கேப்பை, சோளம், கம்புதான் அவர்களது உணவாம் - Fully Three - Fourths of the population hardly ever touch nice.

பாலிஜாக்கள் தெலுங்கைப் பூர்வீகமாகக் கொண்ட வணிக சாதியாம். The name is derived from the Sanskrit words bali, a sacrifice and ja, born, the performance of a yaagam - பாலிஜாக்களின் பெயர் சமஷ்கிருத வார்த்தைகளான பலி - பலியிடல் மற்றும் ஜா- பிறப்பு என்பதன் அடிப்படையில் தங்களை யாகத்திலிருந்து பிறந்தவர்களாக்க கூறிக்கொள்கிறார்களாம்.

இதையேதான் வன்னியர்களாக மாறிய பள்ளிகளும் வன்னிய புராணத்தில் கூறுகின்றனர். யாகத்திலிருந்து பிறந்தவர்கள் வன்னியர்கள். தமிழகப் பள்ளிகளும் தெலுங்கு பாளிசாக்களும் ஒன்றுதானே. தெலுங்குப் பள்ளிகள் ஒரு வடமொழி ஜா-வை பின்னோட்டாகக் கொண்டு பள்ளி சாதிய அடையாளத்தையே மாற்றிவிட்டார்கள். பல்லவர்கள் சோழர்களிடம் வீழ்ந்தபின், பெருமளவில் பெயர் மாற்றங்கள், இடமாற்றங்கள் நிகழ்ந்திருக்கும் என்பது திண்ணம்.

பாலிஜாக்களில் ஏராளமான உட்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அப்பள, அவுளா, பரத்வாஜ், கந்தம், ஜனகுல, ஜிலிகார, மாரேடு, மிரியாளா, முடியாளா, நாரிகெல்லா, நெமலி, பகடாளா, பாடிளா, பள்ளவாண்ட்ளா, ரத்னஎலா, சாலியா, உங்கராளா, ஏனுமுளா, எசோன்ளா.

கன்னடப் பகுதியிலிருந்து வட ஆற்காட்டிற்குக் குடியேறியவர்கள் லிங்க பாலிஜாக்களாம்.

காப்பு அல்லது ரெட்டிகள் தெலுங்குப் பகுதியின் பெருவாரியான வேளாண்மைக்காரர்கள். தமிழக நிலவுடமையாளர் வெள்ளாளர் எனில் தெலுங்கில் ரெட்டிகள்.

தமிழ்நாட்டின் இடையர்கள் கோனார் எனில் தெலுங்கின் இடையர்கள் கொல்லாக்கள் - Gollas. ஆட்டு மந்தையரான குறும்பர்கள் தமிழ் பேசவில்லையாம். பல்வேறு விளக்கக் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. களவு செய்பவர் கள்வர்

என்பது போல் குறும்பு செய்யபவர்கள் குறும்பர்களாம். குறுநில மன்னர்கள் குறும்பிக்களாம். காப்பு சாதியின் ஒரு பிரிவு குறும்பர்களாம்.

குறும்பர்களின் உட்பிரிவுகளில் சில - அலிசி (ஒருவகைக் கம்பு), அலு (பால்), அந்தர (பந்தல்), ஆனே (யானை), அவு (பாம்பு), பண்டி (வண்டி), பெலா (Babul tree) கரு வேலம், பெல்டா (Wood - Apple), பெல்லி (வெள்ளி), போளா (வளையல்), சேளு (தேளு), சில்லா (ஒரு வகை மரம்), தேவா (பைன் மரம்), எம்மி (எருமை), காடா (தலைவன்), குலிமி (கோடா), இபாபிர் (ஆமை), இருளா (இரவு), இருவு (கருப்பு எரும்பு), ஜெல குப்பா (மீன்), கல்லே (உளுந்து), மல்லி (மல்லிகைப்பூ), மிஞ்சு (மிஞ்சி), மீச (மீசை), நாயி (நாய்), சின்னடா (தங்கம்), உட்பிரி (மண்ணுப்பு)

குறும்பர்கள் விலங்குகளைக் கும்பிடுவதைத் தவிர, பட்டியப்பா, இருசிகப்பா, பீரப்பா, ஒலகர சித்தப்பா போன்ற குல மூதாதையரையும் வணங்குகிறார்களாம்.

ஒலகர சித்தப்பா - அளக்கிற சிற்றப்பாவோ? உலகை அளந்தவர் வாமனமூர்த்தி. அவர் சிற்றப்பா. பெரியப்பா தேவேந்திரன். ஆடு மேய்ப்பவர்களுக்கு இவ்வளவு ஞானமோ? கரையர் தங்களை கரவர், கௌரவர் என மகாபாரதக் குரு மரபோடு இணைப்பது போல், குறும்பர்களும் குருமரபோடு இணைத்துப் பேசப்படுவது வியப்பு.

முக்கூடற் பள்ளுவில் உலகை அளந்த உபேந்திரருக்கு, இளமுறைக் கோன் எனும் ஒரு பெயர் சுட்டப்படுகிறது. இளமுறைக் கோன். எத்தனை அழகிய பெயர்.

பிங்கள நிகண்டு ஆட்டுக்கு அருணம், கொச்சை, துருவை, மேழகம், அசல், உதன், துள்ளல், மறி, மை(ய்), வெறி, கொறி, புருவை, சாகம் எனும் பெயர்களைச் சுட்டுகிறது.

செம்மறி - உதன், கொறி, துருவை, புருவை, அருணம், மேடம்.

வெள்ளாடு - வெள்ளை, வற்கலி, கொச்சை.

குறும்பாடு மேய்ப்பவர் குறும்பர். குறும்பாடு-குள்ளமான ஆடு. உரோமத்திற்காக அதாவது கம்பளிக்காக வளர்க்கப்படும் ஆடு. குறும்பாடு சரபம் எனவும் சுட்டப்படுகிறது. எனில் அரவம்? ஆள் அரவமற்ற காடு என்கிறார்கள். எனில்

ஆட்களோ சத்தமோ இல்லாத காடோ? சத்தமில்லாமல் வருவது அரவம். சத்தமிட்டுக் கொண்டே திரிவது ஆடு.

பள்ளாடும் உண்டு. பள்ளை, வரையாடு, மோளை வகைகளும் இருக்கின்றன. வரையாடு எனில் மலையாடு. வரை - குவடு, குன்று, மலை. சங்கத்தில் மரை எனில் வரையாடாம். மரை என்பதில் ஒரு மான்வகையும் உண்டாம். போரை - போரையாடு, அதிலும் கரும்போரை, செம்போரை உண்டா.

பள்ளையாடு – குள்ளமான ஆடு குள்ளாடு. குள்ள ஆடு அல்லது சீன ஆடு சிறிய கொம்பும் மூளிக்காதும் அடையாளங்கள். பள்ளையாடுகள் அதிகம் இருப்பது வடதமிழகப் பகுதியில்.

மருக்கை எனில் பெண் ஆடு. காராடு கறுத்த ஆடு, கருப்பாடு, கருப்பு ஆட்டை தமிழர் வெள்ளாடு என்கிறார். பொருத்தமில்லை. ஒருவேளை பள்ளாடு என்பதைத்தான் வெள்ளாடு என மாற்றிவிட்டாரோ. (நன்றி - Digital Dictionaries of South Asia)

மெய்யில் முடியும் தமிழ் எழுத்துக்கள், தெலுங்கு மொழியில் விடப்பட்டிருக்கிறது அல்லது காலப்போக்கில் மாறிவிட்டது. உதாரணமாக பள்ளன் என்பதன் னகரம் விடப்பட்டு பள்ள, பள்ளி என்றாகியிருக்கிறது. கன்னடத்திலும் அதுதான் நடந்திருக்கிறது.

குறும்பர்கள் பாலை ஆலு என்கிறார்கள். எனில் ஆலு வெண்மை நிறத்தைக் குறிக்கிறதோ. ஆலு - ஆலவாய் - சுண்ணாம்புக் காளவாசல். ஆலவாயன். நிறத்தை வைத்து தமிழின் பால் பழங்கன்னடத்தில் ஆலு என வழங்குகிறதோ? தமிழில் பால். பாலு என்பது காலு, ஆலு என மாற்றி உச்சரிக்கப்படுகிறதோ? அடி எனில் பாம்பாம். வெள்ளியைப் பெல்லி என்பதும் பால் - ஆல் போல்தானே. எருமைக்கு எம்மி. தமிழ் மீசைக்கு மீச.

குறும்பு - காடு, குறும்புக்காடு சிறு காடோ? காடு - காடா, காடே, கவுடே, கவுடா, கவந்தா, கந்தா, கந்தப்பன், கந்தப்பசாமி, கந்தப்பசுவாமி.

வேடு - வேட, வேடன், வேட்டுவன் - வேட்டுவக் கவுண்டனோ? ஹெக்டா, ஹெக்டே?

காடு - காடர் காடவர் - கடம்பர் - கதம்பர் - குதம்பர் - கொதம்பர் - கோத்தர் மாறுமோ?

காடு - காடர் - மாடர் - வேடர் - தோடர் - காடர் - கோடர்.

குட, குடக, குடகு, குடகர்.

குட - குடகு - கொடகு, குட நாடு - கொடநாடு.

கர், கார், கரு, கருள், இருள், இருளர், இருளரு

Erla. Eralru - மொழியறிஞர் கமில் சுவலபில் குறிப்பிடும் வார்த்தைகள் இவை. எர்லரு எனும் சொல் சேரர்லரு என்பது போல் ஒலிப்பு கொண்டுள்ளது கவனிக்கத்தக்கது.

இருளர் பேசும் மொழி தமிழின் பேச்சுமொழி என அறியப்பட்டிருக்கிறது - I have some renson to belive that, it is a distinct south Dravidian language, very near to old tamil - kamil zvelebil.

இருள் - கருப்பு, கருமை, கருமையானவர் கருப்பானவர் இருளராம். Irulan – dark coloured man.

இருளர் அம்மாவை அரே (Agre) என்கிறார்களாம். அப்பாவுக்கு அம்மே (Amme). உடும்பு - உருகு (urugu). இடை (waiste) - எடு (edu). தாத்தா - எட்டபா (Ettapa) (எட்டப்பன் எனில் தாத்தாவோ - எட்ட அப்பன்) எட்டி - பாட்டி. மனிதன், மலை - காலா. குழி, பள்ளம் - குயி (Kuyi). குரங்கு- குடோக் (Kudog). கைக்கு (Hand) - கொயி (Koyi). கயிறு - கொரு (Koru). வீடு - சேரி, நரி - நிரி (niri). மழை - மா (Me/ma/mea). மலை - வெரி (Uere). உடல் (body) - வொரு (Voru).

தமிழின் சிதைவிற்கு குறும்பர் மொழியும், இருளர் மொழியில் நல்ல உதாரணங்கள்.

சமதளத்தில் வாழ்ந்த மக்கள் மலை வாழ்விடங்களுக்குப் போய் தனித்து வாழ்ந்த காரணத்தால், சிறிது சிறிதாக மொழி திரிவடைந்து விட்டது. நாளடைவில் அது ஒரு தனித்த பேச்சு மொழியாக மாற்றம் பெற்றிருப்பது கண்கூடு.

பழைய தமிழுக்கும் பழைய பார்சி (பாரசீக) மொழிக்கும் நெருங்கிய தொடர்பிருப்பது எதனால்? பார்சி என்பதே பேர்சி, பேசி என்பது போல் அமைந்துள்ளதே. பெரு - பேர்சி, பெர்சி - பார்சி. பெரியமொழியோ.

கமில என்பதே தமிழின் மாற்றுரு என்பதை நிரூபித்துவிடலாமே. செக்கோஸ்லாவிய மொழியில் திருக்குறளை மொழிபெயர்த்த மொழியறிஞரான கமில் வாக்லெவ் சுவலபில் எனுப் பெயருக்கான பொருளென்ன?

கமில என்பதை கமில், கமல் எனக் கொண்டால் அது கமலம் - கமலப்பூ, தாமரைப் பூ. பூ - புலர் - புளோரா. புலர்தல் - Flora - Flower. புலர் - அலர் - மலர். புலர்தல், அலர்தல், மலர்தல், புளேரா - புலோரா - புலர்தல் - புலோலா - புமோலா, புமலா - பொமலா - பொமிலா - சுமிலா - சுமலா - சுமல் - கமல்.

தமிழ்ப் பெண்பால் பெயர் – கமலா. கமலம் தாமரை போன்றவள், தாமரையாள்.

கமலா - கமிலா, கமீலா, பமிலா. பமீலா - பமீலா ஆண்டர்சன். Anderson - ஆண்டர்சன் - அந்தரசன். Ande - Andes - மலை. உண்மையெனில், Anderson - மலையரசன். மலைராஜன். தமிழ்க்குறவன். தமிழறிஞர் உறுதியாகக் கூறுகிறார் - தமிழே முன்பு உலகெல்லாம் வழக்கிலிருந்தது. உண்மையான உண்மைதானே.

வட ஆற்காடு மாவட்டத்தின் ஆவணம் ஒன்றில் பள்ளன் - 4 பேரும், கள்ளன் - 91 பேரும் வாழ்ந்ததாகப் பதிவு சுட்டகிறது. எனினும் இந்தப் பெயர்கள் 1901-ல் வெளியிட்ட, பின் இணைப்புப் பட்டியலில் இடம் பெறவில்லை எனத் தெரிகிறது.

தற்காலத்தில் சாதி போற்றும், சாதிப் பெருமை பேசும் தமிழ்ச் சாதிகள், ஆங்கிலேயரின் மாவட்ட மேனுவல்கள், கெஜட்டிகள், தர்ஸ்டன் பதிவுகளைப் படித்துப் பார்த்தால் வெட்கப்படக்கூடும். தற்காலத்தில் ஓரளவிற்கு முன்னேறி, நல்ல நிலையிலிருக்கும் பல சாதிகளின் முன்னை வரலாறு அவ்வளவு புகழ்பெற்றதாக இல்லை. குறிப்பாக பள்ளர்கள், கொங்குக் கவுண்டர்கள் பற்றிய பதிவுகள்.

மதுரை கள்ளர்களைப் பற்றி மிகப் பெருமையாக, விரிவாகக் குறிப்பிட்டுள்ள நெல்சன் கலெக்டர், பள்ளர்களைச் கடுமையாக விமர்சித்துள்ளார். புதிதாக வந்த

ஆங்கிலக் கலெக்டருக்கு எத்தனை தூரம் தமிழ்ச் சாதிகளைப் பற்றித் தெரியும்? துரைக்கு கணக்கெடுப்பில் உதவியவர்கள் யார்?

தஞ்சாவூர்க் கலெக்டரோ பள்ளர் சாதிப் பெயர்களைப் பற்றி கடுமையான சொல்லைக் கையாண்டிருக்கிறார். தின்னவேலிக் கலெக்டரோ பள்ளர்களை புள்ளர்கள் (Puller) என்றே மானுவல் முழுக்கப் பதிவிட்டுள்ளார். அதென்ன தின்னவேலி? ஏன் அது திருநெல்வேலி என துரையிடம் எடுத்துச் சொல்லி Tirunelveli எனப் பெயர் மாற்றம் செய்யவில்லை அன்றைக்கு நெல்லையில் படித்திருந்த சாதிக்காரர்கள் யார்? அன்று நெல்லையில் படித்த சாதிகள் எவை? நெல்லைக்கு ரெட்டியும், செட்டியும், ராஜுவும், நாயக்கரும், எப்போது வந்தார்? பிள்ளை? நெல்லை, குமரிக்கு சோழ, பாண்டிய நாட்டிலிருந்து வந்தாரா அல்லது பல்லவ, சேர நாட்டிலிருந்து பிள்ளை வந்தாரா?

திரு அடைப்புக்குறியை நீக்கிப் பார்த்தால் அது நெல்வேலி. நெல்லுக்கு வேலியாம். வேலியை பாளி, பள்ளி எனக் கொண்டால் அது நெல் பள்ளி. நெல் பள்ளி, நெல் பாளியாகி நெல்வேலியாகிவிட்டதோ. நெய்வேலி நெல்வேலிதானே. Nelveli - Neyveli.

பெண்ணையாறு, கெடிலாறு, மணிமுத்தாறு, வெள்ளாறு போன்ற புகழ்பெற்ற ஆற்றுப் பகுதிகளுக்கிடையே அமைந்திருக்கும் நெய்வேலி – நெல்வேலிதானே.புரம் (Villupum)? வில்லுக்குப் பெயர்பெற்றதோ. பள்ளுப்புரம்? பள்ளுஊர். போரில் விழுப்புவண் பட்டவர் அதிகமிருந்த ஊரோ, உளுந்தூர் பேட்டை, Ulundurpet - பளந்தூர் - பள்ளந்தூர் - பள்ளர் ஊரோ. அருகிலேதானே பெரம்பலூர் இடம் பெற்றுள்ளது. உளுந்து அதிகம் விளையும் ஊரோ? உளுந்து ஊர் உளுந்தூர். எனில் அருகிருக்கும் கள்ளக்குறிச்சி? அதென்ன பளுவூர் (Paluvur)? அதிகப் பளு தாங்கும் ஊரோ? கரூர் - பெயர்க் காரணம் என்ன? கருத்த ஊரா? கருப்பான மண் கொண்ட ஊரா? கர் - கார் - மழைக்கு, நீருக்குப் பெயர் பெற்ற ஊரா? கர் ஊர், கரு ஊர். அமராவதியும், காவிரியும் கலப்பதால் கலக்கும் ஊர் - கலவூர், கரூர் என மாறிவிட்டதோ? சேரர்களின் தலைநகரான கரூருக்கும் அமராவதி எனப் பெயர் கொண்டோடும் ஆற்றுக்கும், அமராவதியை ஆளும் தேவேந்திரனுக்கும் உள்ள தொடர்பு என்ன?

குலாளர் யார்? குயவர், குசவர், குலாலர், குலாலா யார்? கேரளத்தின் கும்பாரர் யார்?

வெள்ளாத்தை ஆள்பவர் வெள்ளாளர் எனில் குலாலர்? மண்ணோடு தொடர்புடையவர் மண்ணாளர், மண்ணை ஆள்பவர் மண்ணாளர். ஏன் குலாலர்? ஏன் அது குலாளர் என இல்லை?

சால் - சாலியர், சேல் - சேலியர், சட்டி - சட்டியர், செட்டி - செட்டியர்.

மட்பாண்டங்கள் செய்தவரே அதை விற்கவும் செய்தார் எனில், அவர்தானே தொடக்க கால வணிகராக இருந்திருக்க வேண்டும். எனில் செட்டி யார்? தமிழில் சட்டி, கலம், சேல், குடம், பானை, கும்பா என்றெல்லாம் வழங்குகிறதல்லவா. சட்டி செய்வதற்கு நல்ல மண்ணும், நன்னீரும் வேண்டுமெனில், இயல்பாகவே குலாளருக்கு யாருடன் நெருங்கிய தொடர்பிருந்திருக்க முடியும்?

இன்றைக்குப்போல் அன்று மண்ணை ஊர்திகளில் கொண்டு வந்து குவித்திருக்க மாட்டார்கள். பள்ளம் தோண்டியே மண்ணை அள்ளியிருப்பார்கள். பள்ளம் குளமாகும். குள, குள ஆளர், குளவாளர், குளாளர், குளாளர். குளத்தை ஆள்பவர் எப்படி குலாலரானார்? குளம் - குலம் வேறுபட்ட பொருளுடையது. குலாலர் ஆந்திரத்தோடு தொடர்புபடுத்தப்படுகிறார். எனில் தமிழ் குயவர் வேறு - ஆந்திரக் குலாலர் வேறா? தமிழகக் குயவர், தெலுங்கில் குலாலர். சேர நாட்டில் கும்பாரர் ஆனாரோ? சங்கத்தின் மண்ணுடையார் யார்? கலம் செய்கோரி யார்?

தின்னவேலி மானுவல் எழுதிய ஸ்டார்ட் (A.J.Stuart – 1879), வாட்ச்மேன் (Watchman) சாதி பற்றியும் பல இடங்களில் குறிப்பிடுகிறார். வாட்ச்மேன் காவல்காரராம். பல இடங்களிலும் வாட்ச்மேனே திருடிவிடுகிறாராம். காவலரை சோல்ஜர், வீரர், மறவர் என்பதுதான் வழக்கம். வெள்ளையர் ஏன் வாட்ச்மேன், காவல்க்காரர் என எழுதினார்கள்? நாயக்கர், வெள்ளையர் ஆட்சியில் வாட்ச்மேன் வேலை பார்த்த தமிழ் சாதி சாதிகள் எவை? வாட்ச்மேன் எனில் கங்காணி எனவும் பொருள்படுமன்றோ.

அன்றைய திருநெல்வேலி மாவட்டத்தின் வடக்கு எல்லையாக விருதுபட்டி இருந்திருக்கிறது. மாவட்டத்தில் 1871 இல் 16,93,959 பேர் வாழ்ந்தார்கள் எனில், 1822 இல் வசித்தவர்களோ ஏறக்குறைய 5,64,957. வெள்ளைத்துரை அழகாகப்

பதிவிடுகிறார். கடந்த ஐம்பதாண்டுகளில் மாவட்டத்தின் மக்கள்தொகை மூன்று மடங்கு அதிகரித்திருக்கிறது துரை என்னவோ இருமடங்கு என்றுதான் குறிப்பிடுகின்றார். அவ்வாறே மாவட்டத்தின் மேற்கே இருக்கும் மலைகள் 5430, 6200 அடிகள் உயரமானவை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

1879 இன் மாவட்ட மானுவலின்படி, அன்றைய ஆங்கிலேயே நெல்லை மாவட்டத்தில் 1824 ஊர்கள் இருந்தனவாம், இவற்றுள் 1094 ஊர்கள் ஆங்கியே அரசின் நேரக் கண்காணிப்பில் வருபவை. 570 ஜமீன்தார்களுக்கானவை. 160 ஊர்கள் இனாம். இனாம் - கொடையளிக்கப்பட்டவை.

அன்றைக்கு 40,383 வீடுகள் இருந்தனவாம். 93.5 சமமான வீடுகள் பலையோலை வேயப்பட்ட குடிசைகளாம். மக்களில் 89 சதமானம் இந்தக்கள். 5 சதமானம் மொகம்மதியர்கள், 6சதமானம் உள்ளூர் கிறித்தவர்கள். உள்ளூர் கிறித்தவர்கள் எண்ணிக்கை இருபது வருடங்களில் 74 சதமானம் கூடிவிட்டதாம். இந்துக்களில் 2,36,717 பேர் வைணவர்களாம், 12,69,393 பேர் சைவர்களாம். வைணவர்கள் சாத்தூர் மற்றும் திருவில்லிபுத்தூரில் அதிகமாம்.

துரையின் கணக்கீட்டின்படி, அன்று நெல்லை மாவட்டத்தில் அதிகமிருந்தவர்கள் வன்னியர்கள். வன்னியன் - 3,67,887 பேர்கள். அதாவது 22.9 சதமானம். வெள்ளாளர் - 341331. 21.2 சதமானம். பறையர்கள் - 1,67,671 (10.4), கிறித்தவர்கள் - 1,02,249 (பாதிப்பேர் ரோமன் கத்தோலிக்கர் - பரவர், மற்றவர் சீர்திருத்த சபையின் சாணார்). பிராமணர்கள் - 56,866, கம்மாளர்கள் - 62793. கைக்கோளர் - 52,476, கொசவன் - 1149, செம்படவன் - 13,425. அம்பட்டன் - 19,913, வண்ணான் - 20,315. இடையன் - 8739. செட்டி - 24,414. சத்ரியர் - 1055. சதானி - 2754. மற்றவர் - 53,082.

The vannian caste, known inintinnavelly as maravars, are chiefly agricultural servants - திருநெல்வேலியில் மறவர்கள் வன்னியர் என அழைக்கப்படுகிறார்கள், அவர்கள் பயிர்த்தொழில் பணியாளர்களாக இருக்கிறார்கள். துரை குறிப்பிடுவது வன்னியர்களா எனில் இல்லை. பள்ளி, பள்ளர் என்பதை வைத்து பள்ளர்களை வன்னியர் எனச் சுட்டுவது கண்கூடு. Increasing proportion of this caste are becoming the ryotwari owners of land - இந்தச் சாதியில் அதிகமானோர் ரயத்வாரி நிலவுடமையாளர்களாகி வருகின்றனர்.

நெல்லைப் பகுதியில் வன்னியர் எனும் பெயரில் இன்னும் மக்கள் வாழ்ந்து வருகிறார்களோ.

The shanars are a caste peculiar to Tinnevelly - தின்னவேலி மாவட்டத்தின் தனித்தவமான சாதி சாணார்கள். அவர்களிடையே கிறித்தவம் வேகமாக முன்னேடுக்கப்பட்டு வருகிறது. கோவிலினுள் நுழைவதும், நீதிமன்றங்களில் நுழைவதும் மறுக்கப்பட்டுள்ளது.

சாணார்கள் கள் வடிப்போர் - Toddy Drawers என்றே குறிப்பிடப்படுகிறார்கள். திருநெல்வேலி, திருவாங்கூர் பகுதியில் குறிப்பிடத்தக்க அளவில் வாழ்ந்த சாணார்களில், அன்று நெல்லையில் மட்டும் 2,91,053 பேர் வாழ்ந்திருக்கின்றனர்.

When we possessed of Tinnevelli, we found by very far the greatest part of the lands held by sudras chiefly vellalans, nayakas of the Reddies and Razus. But there were also many colonies of Brahmins occupying generally the west portion of the most fertile villages. Thus two classes or castes above could be entitled to be considered as landholders or proprietors. The great maravar caste was employed otherwise than in agriculture. The pariahs and pullers owned no land and were little else then serfs attached to the lands; while shanars followed their hereditory pursuit of palmyra – climbing; the weavers of weaving; the artisan & handicrafts; and chettis and komaties & wholsale and retail trade and money lending.

The sudras largely cultivate their lands themselves assisted by pariahs and pullers as farm servants.

The Brahmins never followed the plough.

அதாவது, வெள்ளையர் வருவதற்குமுன் தின்னவேலியின் பெரும்பாலான நிலங்கள் சூத்ரர் சாதிகளான வெள்ளாளர்கள், நாயக்கர்கள், ரெட்டிகள் மற்றும் ராஜுக்களே வைத்திருந்தனர். மாவட்டத்தின் மேற்கிலிருந்த வளமான பல கிராமங்கள் பிராமணருக்குரியனவாக இருந்தன. இவர்கள் இரு சாதியார் மட்டும் நிலவுரிமையாளர்கள் அல்லது சொத்துள்ளவர்கள். புகழ்பெற்ற மறவர்கள்

பயிர்த்தொழில் தவிர்த்து பிறபணிகளில் ஈடுபட்டனர். நிலமற்ற பறையர்களும் புள்ளர்களும் நிலத்தோடு பிணைக்கப்பட்டிருந்தனர். சாணார்கள். பரம்பரையாக பணை ஏறும் தொழிலைப் பின்பற்றினர். நெசவாளர் நெசவு செய்தனர். ஆசாரிகள் நகைத்தொழில்களைச் செய்தனர். செட்டிகளும் கோமட்டிகளும் மொத்த வியாபாரமும், சிறு வியாபாரமும், வட்டித் தொழிலும் செய்தனர்.

சூத்ரர்கள், பறையர் புள்ளரைக் கொண்டு பயிர்த்தொழில் செய்துகொண்டனர்.

பிராமணர்கள் உழுவதே இல்லை.

தமிழ்நிலத்தில் சூத்ரர், சத்ரியர் பாகுபாடு இல்லை எனச் சுட்டப்படுகிறது. எனினும் வெள்ளையத்துரை அன்றைய மேல் சாதிகளை சூத்ரர் என்றே குறிப்பிடுகிறார்.

அன்றைக்கு பிராமணர்கள் நீர்வளம் மிகுந்த கடையநல்லூர் போன்ற நெல்லை - மேற்குப் பகுதிகளில் அதிகமாக வசித்தது எதனால்? மானுவலில் அன்றைக்கு நெல்லைப் பகுதியில் நிலவிய ஊர்க் கட்டமைப்பும், சாதிகளின் எண்ணிக்கையும், ஆட்சியாளர்கள் என எவரும் இல்லாமலேயே, எவ்வாறு ஊர்கள் தம்மளவில் தன்னிறைவாகச் செயல்பட்டன என்பதும் துரையால் வியந்தோதப்பட்டுள்ளது. துரை இங்கிலாந்தின் ஊரையும், நெல்லையின் ஊரையும் ஒப்பிட்டு, அவர்களது ஊர்களைவிட நெல்லையின் ஊர்களும், நிர்வாக முறையும் பலமடங்கு மேம்பட்டிருந்தாகக் குறிப்பிட்டுள்ளார்.

அத்தனை போர்களுக்கும், அத்தனை படையெடுப்புகளுக்கும், அத்தனை பஞ்சங்களுக்கும், நோய்களுக்கும் தாக்குப்பிடித்த தமிழக ஊர்களின் கட்டுமானம் எத்தகையதாக இருந்தது? தமிழக ஊர்களில் சாதிய அடுக்கு, படிநிலை எப்படி காப்பாற்றப்பட்டது முக்கியமாக சாதியரின் எண்ணிக்கை எவ்வாறெல்லாம் கட்டுப்படுத்தப்பட்டது? கட்டுப்படுத்தியவர் யார்?

பிராமணரிடமும், வெள்ளாளரிடமும் நிலமிருந்தபோது, தமிழ் நிலத்தில் பசியால், பஞ்சத்தால் சாவுகள் நிகழ்ந்தனவா அல்லது வெள்ளையரிடம் நிலம் போனபின்பு தமிழகத்தில், இந்திய அளவில், பசியால் மக்கள் மாண்டார்களா? ஆம் எனில், வெள்ளையரின் நிர்வாகம் எப்படி இருந்தது?

வெள்ளையர் நிர்வாகமும் கம்பனி ஆட்சி எப்படி இருந்தது? நேரிடையான பிரித்தானிய ஆட்சியில் எப்படி இருந்தது? கம்பனி ஆட்சி மக்களை பசியால் மாளச் செய்ததெனில், அதற்கு கம்பனியின் பணத்தாசையும், இலாபம் ஒன்றே குறிக்கோள் எனும் கொள்ளையும்தான் காரணமா?

குளத்தின் மண்ணை எடுத்து, ஆற்று மணல் சேர்த்துப் பதமாக்கி, மிதித்து, கூட்டி, மெழுகி, சேர்த்து, வழித்து, அப்பி, குழைத்து, பிடித்து, சுற்றி, வளைத்து, நெளித்து, அறுத்து, அடித்து, சுட்டு – ஒரு மண் சட்டி செய்வதற்குள் குயவர் படும்பாடு எத்தனை? எத்தனை கடின உழைப்பு அது? எத்தனை செய்நேர்த்தி? எவ்வளது துல்லியம்? நாள் முழுதும் சகதி மண்ணிலேயே உழலும் குலாளருக்கும், சேற்றில் உழலும் வாழ்க்கை முறையைக் கொண்ட பள்ளருக்கும் உள்ள ஒற்றுமை என்ன? ஒருவர் மண்ணிலிருந்து பானையைப் பெருக்கினார் எனில், ஒருவர் மண்ணிலிருந்து விளைச்சலைப் பெருக்குகிறார். அலுமினியம், எவர் சில்வர் வருவதற்கு முன் மண்பாண்டம் செய்பவருக்கு மண்பானைத் தொழிலுக்கு எத்தனை மதிப்பிருத்தது எனத் தற்காலத்திய தமிழ் இளைஞர் அறிவரோ?

நந்தவனத்திலோர் ஆண்டி, நாலாறு மாதமாய் குயவனை வேண்டி. அழகிய பாடல். ஒரு பானையை உருவாக்குவதற்கு எத்தனை உழைப்பு தேவைப்படுகிறது? அதையே உடைப்பதற்கு? உடைப்பது கடினமா அல்லது படைப்பது கடினமா? படைப்பதற்கல்லவோ அறிவும், ஊக்கமும், உழைப்பும் வேண்டும். தமிழ் எழுத்துக்கள் மண்பாண்டங்களில் பொறிக்கப்பட்டிருப்பதே தமிழ் எழுத்து மொழிக்கான தொன்மைச் சான்றாகக் கொள்ளப்படுவதும் சிறப்பு. அவ்வளவு பெரிய ஈமத்ததாழிகளை எப்படிச் செய்தார்கள்? பெரிய சக்கரங்கள் தேவைப்பட்டிருக்குமோ? ஒருவரே செய்யமுடியாதல்லவா? அதெப்படி உலகமெங்கும், ஒரே மாதிரியான மண்பானை செய்யும் நுட்பம் உருவாகியது?

மண்பானை செய்வதற்கு அறிவு, நுட்பம் வேண்டுமா? பயிர்த்தொழில் செய்வதற்கு அதிக நுட்பம் வேண்டுமா அல்லது பனைமரத்திலிருந்து சாறு வடிப்பதற்கு நுட்பம் வேண்டுமா? பனைமரத்திலிருந்து சாறு வடிக்கலாம், அதை நுரைக்க வைத்து மதுவாக்கலாம் என்பதை எப்படிக் கற்றார்கள்? சட்டி செய்த குலாளர், செட்டியாராகி வணிகரானதைப் போன்றே, பனஞ்சாறு இறக்கிய சாணாரும், தற்போது வணிகத்தில் சிறந்து விளங்குகிறார். பனைச் சாறு, பனைத்

தொழில் சார்ந்த வாணிப அனுபவம்தானே பின்னாட்களில் நாடார்களைப் பெரியளவில் வணிகர்களாக ஆக்கியிருக்கிறது. அனுபவம் பெரிதல்லவா?

சாறு - Saaru; Toddy - கள். Saau - Span, naar - fibre or sting, used to climbing palm tree. நார் போன்ற கயிற்றைக் கொண்டு பனைமரத்தில் ஏறி சாறு வடிப்பவர் எனும் பொருளில் சாறுநர் என வழங்கப்பட்ட பெயர், சாணார் என மருவியதாம். அன்றைக்கு சாறுநர் என்பது போன்ற தூயதமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தியிருக்கலாம். தமிழில் ஒரு சொல்லானது மிக்க கவனத்துடனேயே உருவாகும் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது. தமிழில் பொருளற்ற சொற்களை உருவாக்க மாட்டார்கள், பயன்படுத்தவும் மாட்டார்கள்.

நூற்பு என்பது எப்படி நெசவானது? நூல் நூற்றல், பஞ்சு நூற்றல், நூற்றல், நெய்தல் போன்ற சொற்களிருக்க நெசவு, நெசவாளர், நெசவுத் தொழில், ஜவுளி, ஜவுளிக் கடை போன்ற சொற்கள் தமிழுக்கு எப்படி வந்தன? நிறையக் கடைகளின் விளம்பரத்தில் தற்போதும் ஜவுளிக் கடை என்ற சொல்லே பயன்படுத்தப்படுகிறது. ஜவுளிக் கடையல்ல, ஜவுளிக்கடல். துணியகம் என யார் சொல்கிறார்?

நெய்தல் எனில் நெருக்குதலோ. இழைகளை நெருக்கமாக அமைத்தல் நெய்தல். நெருக்கமாக அழுத்துதல், கசக்குதல், நசுக்குதல். நசுக்குதல் - நெசக்குதல் - நெய்தல். குசக்குதல் குசவரோ. பச, குச, பிச, உச. உசவல் எனில் நடையோ. உசாவல் - பேச்சு. நலம் விசாரிப்போ. உச உஷாக் காலம். காலை - உஷா - கலைக்குரிய தெய்வம், உலாவல் - உசாவலாகி, உஷா என்றாகியதோ சூரியனின் காலை நடைதானே உஷா. உஷா அதிகாலை நேரம். சூரியன் எழும் நேரம்.

நூல்இழைகளை ஒன்றுடன் ஒன்று நெசக்குவதால் நெசவு. நெசக்குபவர் நெசவாளர். தமிழ் நசுக்கு தெலுங்கில் நெசுக்கு, நெசவு என உருமாறுவதும் இயல்பு. நெசவு செய்தவர் நெசவுச் செட்டியார், துணிச் செட்டியார். துணியைத் துடி என்கிறார்கள். ஆடைதான் அங்கு துடை, துடியாகிவிட்டதோ. துகில் - துணி எனில் அது துடியென மருவுமா?

தமிழ் சீலை, சேலை, தெலுங்கில் சேலி, சாலி, ஷாலி, ஷாலியர் எனத் திரிந்திருக்கவும் அதிக வாய்ப்புண்டு. சேலை எனில் துணி எனக் கொள்வதே

பொருத்தமுடையது. ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒற்றைத் துணிதான் உடுப்பு. நெல்லையில் துணிநெய்யும் வாதிரியார் யார்? வாதிரி எனில் அறிவுடையவரோ? வாதிரி - சாயமிடுபவரோ?

சாறுநர் சாணாராக மருவி இருக்கலாமா? இருக்கலாம். சாணார் பதத்தை தமிழக வரலாற்றைவிட, சேரள வரலாற்றோடும், பண்பாட்டோடும் பொருத்திப் பார்ப்பதுதான் முறை. சங்கத் தமிழ்ச்சொற்களை, ஆயிரமாண்டுக்கு முன்பிருந்த தமிழ்ச் சொற்களை, இன்றளவும் பயன்படுத்தி வருவது சேரளத்தவரே. நாடார் சேரளத்தவர். நாடார் நூறு ஆண்டுகளுக்குமுன் மதுரையிலும் கோவையிலும் இடம் பெற்றிருந்தாலும் நெல்லை, திருவாங்கூரின் மக்கள் தொகையே பெருமளவு. சாணார், நாடார் வரலாற்றை நாயரோடு பொருத்துவமும் முறையே. நாயர் என்பது தமிழக நாயக்கர் போல், ஆந்திர நாயுடு போல், மராத்தியப் நாயக் போல், உயர்வுக்காக கேரள நாடார் வைத்துக் கொண்ட ஒரு உயர்வுச் சொல்லாக இருக்கலாமோ?

மனிதர்கள் இப்படி உயர்வான சொல்லை வைத்துக் கொள்வார்களா எனில், ஆம், வைத்துக் கொள்வார்கள். ஆதாயங்களுக்காக, அதிகாரத்திற்காக, பதவிகளுக்காக, மனிதர் சட்டென பெயரை, உடையை, நடையை, மொழியை மாற்றிக் கொள்வார் என்பதும் வரலாறு.

தற்போதைய தமிழகத்தில் தேவர் எனும் சொல் உயர்வாகச் சுட்டப்படுகிறது. வெள்ளையர் வருவதற்கு முன் பிள்ளை. அதற்கும் முன் நாயக்கர். அதற்கும் முன் முதலி. அதற்கும் முன்? பள்ளியா இருந்திருக்கும்.

ஒரு குலம், ஒரு அரச மரபு, ஒரு பண்பாடு நிலைபெறும்போது, உயரும் போது, அது மக்கள் வாழ்வியலில் உண்டாக்கும் மாற்றங்கள் அளப்பரியவை.

ஒப்பீட்டுக்கு, ஐம்பது ஆண்டுகளாக தமிழகத்தில் ஆட்சி செலுத்தும் திராவிட ஆட்சி தமிழகத்தில் நிகழ்த்திய மாற்றங்கள் எவ்வளவு? எத்தகையது? எதிலெதில் மாற்றங்கள்? மாற்றங்கள் நல்லவையா இல்லையா என்பது முக்கியமல்ல. மாற்றங்கள் நிகழ்ந்துள்ளனவா?

ஆம், மிகப்பெரிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. எத்தகைய மாற்றங்கள் என்பது அடுத்து வரும் ஒரு நூற்றாண்டில் கண்கூடாகத் தெரிய வரும்.

தற்போதைக்குக் கண்ணுக்குத் தெரியும் மாற்றங்கள்? நிலம் கடுமையாக மாறிவிட்டது. தமிழக ஊர்கள் முற்றாகச் சிதைந்துவிட்டன. இது உலகெங்கும் நிகழ்வதுதானே எனில், திராவிடம் அந்த மாற்றத்தைத் தடுத்ததா பேணியதா, பெரிதாக்கியதா என்பதே கேள்வி. திராவிடம் பெரிதாக்கியது. நிலத்தைக் கூறுபோட்டு விற்க அனுமதியளித்தது. தொல் தமிழர் கட்டிக்காத்து வந்த ஆன்மீகச் செல்வத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டது. உதாரணம் தமிழகத்தில் கோவில்கள் பராமரிக்கப்படும் முறை. கடவுள் இல்லை என்றதால் தமிழர் மனம் மாறிவிட்டது அனைத்து நிலைகளிலும் அப்பட்டமாகத் தெரிகிறது. குடியும், குற்றச் செயல்களும் மலிந்துவிட்டதற்கு அறவுணர்வு குறைந்ததே காரணம். தம் குடிமக்களை நல்மக்களாக மாற்ற திராவிடம் என்ன செய்தது? கல்வியை வளர்த்தது எனில் எப்படிப்பட்ட கல்வியை வளர்த்தது? ஐம்பதாண்டுகளில் தமிழகம் முன்பைவிட எப்படி இருக்கிறது என்பதே அதன் தாக்கம்.

திராவிடம் ஐம்பதாண்டுகள் ஆட்சியிலிருக்கிறதா எனில் அதுவும் இல்லை. அண்ணாவின் இரு வருட ஆட்சி, கலைஞரின் முதல் நான்காண்டு ஆட்சி என ஒரு ஆறாண்டு காலமே தமிழகத்தில் திராவிட ஆட்சி நடந்ததாகச் சொல்லலாம். எம்.ஜி.ஆர். ஆட்சியோ, ஜெயலலிதா ஆட்சியோ, அவரோடு மல்லுக்கட்டி நடத்தின கருணாநிதி ஆட்சியோ திராவிடத் தத்துவம் கொண்டதல்ல. உண்மையெனில், ஒரு பத்து வருடம் தமிழகத்தை ஆண்ட திராவிடக் கட்சியின் ஆட்சியே இத்தகைய மாற்றங்களை உருவாக்க முடியுமெனில், நூற்றுக்கணக்கான ஆண்டுகள் ஒரு ஆட்சி நிலைத்து, இம்மண்ணில் நிலைபெறுமேயானால்? அது நிகழ்த்தும் மாற்றங்கள் குறிப்பாக சமயத்தில், மொழியில், பண்பாட்டில் எத்தகையதாக இருக்கும்?

தமிழர் வரலாற்றை மறந்து விட்டார் என்பது திண்ணம். தமிழருக்கு உண்மையில் வரலாற்றுணர்வு உள்ளதா என்பதே ஐயப்பாடுதான். தமிழகத்தின் தொண்டை மண்டலத்தில் நிலைபெற்றிருந்த பல்லவர்கள், பொது ஆண்டின் 300 தொடங்கி 900 வரை, ஆறு நூற்றாண்டுகள் அரசு புரிந்தார்கள். தொடக்கம், முடிவு என நூறாண்டுகளைக் குறைத்துவிட்டாலும் ஏறக்குறைய அரை ஆயிரமாண்டு காலம் தமிழகத்தின் வடக்கு நிலத்தில் வலிமையாக நிலைபெற்றிருந்தார்கள் எனில் அது எத்தகைய மாற்றங்களை உருவாக்கியிருக்கும்? தெற்கே மதுரை வரையிலும் வடக்கே ஒரியா வரையிலும் பரந்து விரிந்த நிலத்தை ஆண்ட பல்லவர்கள், தமிழக

வரலாற்றில் மக்கள் வாழ்க்கையில் நிகழ்த்திய மாற்றங்கள் எந்த அளவிற்கு இருந்திருக்கும்?

தென் தமிழக வரலாற்றில் பல்லவர் ஆட்சிக் காலம்போல் மாற்றங்களை, தாக்கங்களை நிகழ்த்திய பிறிதொரு ஆட்சி இல்லை எனலாம். கிழக்கு ஆசியாவிலும், இலங்கையிலும், வடபுலத்திலும், பல்லவர் செங்கோல் நிகழ்த்திய மாற்றங்கள் அளப்பரியவை.

தமிழர்க்கு பல்லவர் யார் என்றே தெரியவில்லை. அவரெதற்குத் தெரிந்துகொள்ள வேண்டும்?

வரலாற்றுப் படிப்பு சோறிடுமா? பல்லவர் சமயப்பொறை அற்று இருந்தார். சமயங்களை விவாதிக்கச் செய்தார். அனைத்துச் சமயங்களையும் சமமாக நடத்தினார். அனைத்துக் கடவுளருக்கும் கோவில்களை உண்டாக்கினார். மொழியில் மாற்றங்களை உருவாக்கினார். தமிழோடு சமஷ்கிருத்தையும் பேணினார். நிலத்தை வளப்படுத்தினார். நீர்ப்பாசனத்தைப் பெருக்கினார். நாட்டில் அமைதியை நிலை நாட்டினார். மக்களின் அச்சத்தை விலக்கினார்.

பல்லவர் யார்? மன்னன் மன்னவன் ஆவதை தமிழர் ஏற்றுக்கொண்டால் பல்லன் பல்லவனாவான். பல்லன் என்பதற்கும் பள்ளன் என்பதற்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? தமிழில் பல் - பள் எனத் திரிவது இயல்வதுதானே. பல் எனில் வாய்ப்பல் - பல். பல, பலம், பலமானது. வலிமையானது. உறுதியானது. பல் - ஆயுதம். பல் - பன்மை. பல. மல் எனில் வீரம், பலம், பல் - மல் எனத் திரியும், மல் - மள் என்ன வேறுபாடு? மள் என்றாலும் வீரம். மள்ளர் எனில் வீரர்.

தென் மள்ளர், வட மல்லர், எப்போது பள்ளரானர்? தெற்கே பள்ளர் எனவும், வடக்கே பள்ளி எனவும், இம்மக்களை இழிவு எனும் பொருளில் கொண்டது யார்? பள்ளர், பள்ளவர், பள்ளாளர் எனும் சொல் மதிப்புக் குறைந்தது எப்போது? யாரால்?

பள்ளு இலக்கியங்கள்தான் பள்ளர் எனும் பெயரை அறிமுகப்படுத்துகின்றன. கம்பராணமாணத்திலும், திருவிளையாடல் புராணத்திலும் மள்ளர் என்னும் சொல்லே கையாளப்பட்டுள்ளது. எனில், முன்னூறு ஆண்டுகளுக்குமுன் உருவாக்கிய முக்கூடற் பள்ளுவில் பள்ளர் எனக் குறிப்பிட்டது ஏன்? இத்தனை

பள்ளுவகைப் பிரபந்தங்களை தென் தமிழகத்திலும், இலங்கையிலும் இயற்றியது யார்? தெலுங்கரா, வெள்ளாளரான பிள்ளையா?

திருமால் பக்தனான பள்ளனுக்கு இரு மனைவிகள். மூத்தவள் வைணவம். இளையவள் சைவம். இருவருக்கும் கருத்து மோதல்கள். ஒருவர் சாமியை அடுத்தவர் வசைபாடுகிறார். பள்ளனோ உழவை மறந்து இளையாள் வீட்டிலேயே கிடக்கிறான். மூத்த பள்ளி ஆண்டானான பிள்ளையிடம் முறையிடுகிறார். பண்ணை பண்ணையாளை அடித்துத் திருத்துகிறார். இனி ஒற்றுமையாக இருப்போம், ஒழுங்காக வயலில் உழுகிறோம் என உறுதிமொழி கொடுக்கிறான் பள்ளன். ஆங்காங்கே உழவரின் மேன்மைகள், குடிப்பிறப்பு, மழைப் பெருமை, இயற்கை வருணனை என ஒன்றுபோலவே அமைக்கப்பட்டிருக்கும் பள்ளு இலக்கியத்தின் நோக்கம் என்ன?

திருவரங்கம் கோயிலொழுகு நூலின்படி, சுமார் அறுநூறு ஆண்டுகளுக்குமுன் திருவரங்கன் வீதியுலாவின்போது, குறிப்பாக, திருவூறல் விழாவின் போது, பெருமாளுக்குமுன் பள்ளுப்பாட்டும் ஆட்டமும் இடம் பெற்றிருந்தாகக் சுட்டப்படுகிறது. பின்னர் வந்த வருடங்களில் பள்ளு பாடுவதை விட்டுவிட்டார்கள் போலும். பள்ளுக்கு மதிப்புக் குறைந்தது காரணமாயிக்குமோ?

பள்ளுவகைப் பாடல்கள் தெலுங்கு நிலத்தில் தோன்றிருக்குமோ? அங்கே பலகாலங்கள் நிகழ்ந்தப்பட்ட ஏசல் பாடல்கள், கதைகள், நாயக்கரோடு மதுரைக்கு வந்திருக்குமோ? நாயக்கர் வரவிற்குப் பின்னர்தான் தமிழ் நிலத்திலும் இலங்கையிலும், பள்ளுப் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன என்பது கவனிக்கத்தக்கது.

பள்ளி, பள்ளர்களுக்குள்ளேயே, பாடப்பட்டு வந்த பாடல்கள், பின்னர் ஆண்டான் - வேலையாள் எனும் அளவில் இயற்றப்பட்டிருக்கலாம். பல்வலம் எனில் குளமாம். அது பல்லவம் என மருவுவது இயல்பன்றோ. எனில் பல்லவர் - குளத்துக்காரர். குளம் - பள்ளம். பள்ளர். மழைநீரை மட்டுமே தேக்கி வைப்பது குளமாம். குளம் சுனை, கயம், பொய்கை, ஊற்று, இலஞ்சி, மடு எனும் பொருளும் கொள்கிறது. குட்டை, ஊருணி, ஏரி, ஏந்தல், கண்மாய், கிணறு, தடாகம், மார்கழி, நெற்றி, சருக்க, வெல்லம் எனும் பெயர்களிலும் குளம் ஆளப்படுகிறது.

பிங்கல நிகண்டு இலைஞ்சி, ஏல்வை, குண்டம், அலந்தை, பொய்கை, வலயம், சுனை, சிறை, பட்டம், உடுவை, பயம்பு, படுகை, குட்டம், தாங்கல்,

கோட்கம், ஏரி, உவளகம், மடு, ஓடை, படு, தடம், வாவி, தடாகம், ஆவி, ஆழி, கிடங்கு, சலதரம், கேணி, பணை, கயம், பல்வலம், நளினி, இலந்தை, மூழி, குழி, குளம் எனும் பல்வேறு பெயர்களைச் சுட்டுகிறது.

அளக்கர் எனில் கடலாம். காயல், களப்பு, கயவாய், கடற்கழி, உப்பளம் நீர் நிலைகள். சேறு பொருந்திய பள்ளத்திற்கு அள்ளல். அகழி, அயம், அசம்பு போன்ற பெயர்களும் நீர்நிலைக்கு உண்டாம். தருவை எனில் பெரிய ஏரி. தருவைக் குளம் - பெரிய குளம்.

உழவுத் தொழில் நடைபெறும் ஊருக்கு பள்ளி எனப் பெயர். நாயக்கர் ஆட்சியில் தமிழக ஊர்களெல்லாம் பட்டி என மாற்றம் பெற்றிருக்கிறது. புதிதாகக் குடியேறிய தெலுங்கர்கள் பட்டி எனும் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். அன்று பள்ளி எனும் பெயர் இருந்த ஊர்களோடு நாயக்கன்பட்டி எனும் பெயர்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

பள்ளி எனில் ஊர், பள்ளிக்கூடம் அல்லது கலாசாலை. பொலிஸ் எனில் உதாரணமாக (மெட்ரே) பொலிஸ் - நகரம். பொலிஸ் பள்ளியின் மருவுதானே. பொலிஸ் - பள்ளி - பள்ளிஸ். பொலிஸ் திரளாக மக்கள் வாழும் இடம். அதாவது பெரிய பள்ளி பேரூர். பேலஸ் - அரண்மனை - அரசகுடி.

ஊர் - ஹீப்ரூவில் ஆர், பாபிலோனில் எர், அசிரியத்தில் உரு.

பல் - பன்மை, பலர். புலு - சமஷ்கிருதம் - மிகுதி எனும் பொருள். புல் (Bull) - மாடு. புல்லஸ் - விலங்குகளின் கன்றுகள்.

வல் - வலிமை. வள் - வளம், மிகுதி, வேள் - விருப்பம், வேட்கை.

தமிழில் போ எனில் ஹீப்ரூவில் வா எனும் பொருளாம். நாக்க மூக்க போல். தமிழில் அவரு - இவரு எனில் தெலுங்கில் வாரு - வீரு, நெருப்பு - நிப்பு, எறும்பு - எம்மு. எருது - எத்து. மருந்து - மத்து. அவனுக்கு - வானிகி. அவளுக்கு - வாரிகி.

தமிழின் அங்கு இங்கு, திராவிட மொழிகளில் அவ்விட இவ்விட, அல்லி இல்லி, அக்கட இக்கட எனத் திரிந்துள்ளதல்லவா.

தமிழில் மரங்கள். மலையாளத்தில் மரங்நுள். தெலுங்கு - குர்ரமுலு, குர்ராலு, பழைய கன்னடம் - மரகள். துளு - மரொகுளு, கூர்க் - மர.

ஒருவன் - ஒப்பனு, ஒப்பளு - கன்னடம். ஒன்று - ஒண்ணு (பேச்சுத் தமிழ்). ஒண்டு - தெலுங்கு, ஒன்து - கன்னடம். ஒன்ஜி - துளுவம். உன்தீ - கோண்டு. ஒத்த தொதுதவர், ஊன்தா - ஒரிய. சமஷ்கிருதம் - ஏக, பிரதம.

ஒன்று, இரண்டு - ஓர், இர் - பின்னிஷ், காகேசிய மொழிகள்.

இரண்டு - எரடு (க), ரெண்டு (தெ), ரெண்ட்(ம), ரட்ட(து), தண்டு(கூர்), ரென்த்(கோ), இரத் (பிராகி).

மூன்று - மூரு (க), மூடு (தெ), மூன்று (கூ), மூனன் (ம), முகி (து), மூன்த் (கோ), ஒதன் (ஒரியா).

மா எனில் பெருமை, கருமை, சூதகம், நாற்றங்கால், வண்டு, பூ-உறை, திரு(மகள்).

திராவிட வேர்ச்சொல் அகராதி (Dravidian Ehmology Dictionay) குறிப்பிடுகிறது - மல் - செல்வம். மல்லை - செல்வம் மிகுந்தது, திண்மை, செழுமை, வளப்பம்.

மால் - மாயோன், மயக்கம், வேட்கை, மேகம், காற்று, பெருமை, சோழன், புதன்.

பள் - சாதி, பண்.

பள்ளம் - நெள்ளல், தாழ்வு, படுகர், அவல், குழி, இழிவு, பயம்பு.

மேடு - உயர்நிலம், திடல், சுவல், ஓங்கல், திட்டை, மிசை, மோடு.

குன்று, குண்டு, கோண்டு, மோண்டு, மவுண்ட்டு - மவுண்டுக்கும், கோண்டுக்கும் என்ன வேறுபாடு? கோண்டு மலை எனில், உயரமான நிலம் எனில் மவுண்ட்டன் (Mountain) ஆங்கிலமா?

மில்க் - Milk? தமிழின் பால், ஆல் என மாறுமெனில், மீல். மில், மில்க் எனவும் மாறுமன்றோ?

பல்க் - Bulk ஆங்கிலச் சொல். பல்க்கு எனில் மிகப் பெரியது. பல் - பலம், பலுக்கு தமிழன்றோ. Bulk - Hulk, Mulk,

மத்திய ஆசியாவின் Melek - மெல்க் எனும் பெயர்?

Malik -மாலிக். மாலிக் அரபுப் பெயரோ? மல்லுக் - மல்லு - வீரமன்றோ. மாலிக், மலிக், சலிக் - சாலிக் - சலிம், சலீம், அலிம், ஆலிம், ஆலம். ஆலம் - பெரியது. ஆலம்பனார் - பூதமோ?

மல்லையா? சோமாலியா? ஆப்ரிக்காவின் சோமலியா நாட்டின் பெயருக்குப் பொருளென்ன? தமிழ் மல்லு - தெலுங்கில் தெல்லு, ஒரியத்தில் கல்லு, பெங்காலில் பெல்லு. தமிழிலேயே பலம் பெலம் தானே. பலசாலி - பெலசாலி. பெருச்சாளி?

தமிழுக்கும் தெலுங்கு மொழிக்கும் உள்ள வேறுபாடே, தெலுக்குக்கும் ஒடியத்திற்கும் உள்ளது. அவ்வாறே அதுவே நெடிலில் ஒடியத்திற்கும் வங்காளத்திற்கும் உள்ள வேறுபாடு. தமிழின் கூட்டெழுத்து முறையே பலவாறான மாற்றங்களுக்குக் காரணமெனில் மிகையாகது.

பகரம் பாகரமாகும். படு - பாடு. பகரம் மகரமாகும். படு. படு - பட - மடு, சடு, விடு போன்று மாறும். பாடு - மாடு, சாடு, வீடு எனப் புழங்கும்.

முன்னால் எனும் தமிழ்ச்சொல் மலையாளத்தில் முன்னில் எனப் புழங்குகிறது. உண்மையில் முன்னில் என்பதுதான் பழங்சொல். சிறு வேறுபாடுதான். ஆனால் அதைக்கொண்டு சொற்களின் பொருள் மாறும். மலையாள சேரனுக்கும், சார்க்கண்டின் சோரனுக்கும் என்ன தொடர்பு? சார்க்கண்டு - ஜார்க்கண்டு (Jharkhand) எனக் குறிப்பிடப்படுகிறது? கண்டு - கோண்டு, Gond - மலை. சார், சேர், ஜார் - அரசர்கள். மலை அரசர்கள். சார் - பெரிய. பெரிய மலையை ஆள்பவர்கள். மக்களை ஆள்பவர்கள். இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் வாழும் சோரர் பழங்குடிகள் வியட்நாமியக் குடிகளின் பண்பாட்டோடு, மொழியோடு ஒத்திருப்பது எங்நுனம்?

In Bihar, the chero are known as charwa or cheru and in palamu they are known as the Barahazari - பீகாரில் சேரர் சேரோ, சர்வா அல்லது சேரு என அறியப்படுக்கின்றனர். பலமுவில் அவர்கள் பரகஜாரி என அறியப்படுகின்றனர். பரகஜாரி - பரகேசரி - சிங்கம் போன்ற அரசர். பர - அரசர். கேசரி - சிங்கம்.

Palamu - சார்க்கண்டின் ஒரு மாவட்டம், ஒரு பகுதி. 12 ஆம் மற்றும் 18 ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட பகுதியில், தற்போதைய பீகார், உத்தரப் பிரதேசம், சார்கண்ட் பகுதியில் வலுவாக இருந்த அரசாட்சி - சேரோ அரசாட்சி (Chero Dynasty). இப்பகுதியில் முன்னர் இருந்தது பாலா (pala) அரசுரிமை. சேரர்கள் முகலாயர்களை தீரத்துடன் எதிர்த்தவர்கள். தங்களுக்குள் ஒன்றுமையின்மையால் ஆங்கிலேயரிடம் வீழ்த்தவர்கள், பலமு கோட்டைகளுக்குப் பெயர்பெற்ற ஊர்.

சார்கண்டின் சேரோ மக்கள் வேளாண்மையைத் தொழிலாகக் கொண்டவர்கள். ஜார்கண்ட் எனில் புதர் நிலமாம். Land of forest - காட்டு நிலமாம். Jhar - Bugh, Khand - land - bughland) இந்தோ ஆர்யன் மொழியில் அந்நிலம் ஜார்கண்ட் தமிழில்? திராவிடத்தில்?

Marandi - மராண்டு - மலையாண்டியோ?

Hebrew - ஹிப்ரூ - Ibru - இப்ரூக்குமான வேறுபாடு எவ்வளவு? இப்ரு - ஈப்ரு - உப்ரு - ஊப்ரு - ஊப்பரு - உப்பரு - உப்பாரு - உம்பாரு - உம்பர் - மேலோர்.

கிழக்கு சாருக்கண்டின் Korwa மக்களுக்கும் மேற்கின் Koruku மக்களுக்கும் உள்ள உறவு? சாருக்கண்டின் சேரோ பழங்குடிக்கும், அதன் Bhar - பார், Kol (கொல்) பழங்குடிகளுக்குமுள்ள ஒற்றுமை. Bhar - படகு மக்களாம். தமிழில் கரை. சாந்தல் மொழியில் பாரோ கரை, கார், பர் - Bhar. Kol - குடையாம். குடை பிடிக்கும் பழக்கமுள்ள மக்களோ? குடை பிடிக்கும் பழக்கமுள்ளவர் மலையாளத்தாரன்றோ? தமிழர் எத்தனை மழைபெய்தாலும், எவ்வளவு வெயிலடித்தாலும் குடையைத் தூங்கிச் செய்வதில்லைதானே.

தமிழ் லெக்சிகன் (tamil lexicon), அதாவது அகரமுதலி சொல்கிறது.

Sa - se - so - sor - sora - sorah.

சாரர் - சேரர் - சோரர்.

சோரர் - மாரர் - மூரர் - மேரர்.

மாரர் - மாறர் - மறவர்

ர -ற, ஒரு எழுத்தை மாற்றிவிட்டால் எத்தனை மாற்றமாகி விடுகிறது?

அச்சன் - குச்சன்.

பச்சன் - புச்சன் - பாச்சன், கோச்சன்.

புச்சன் - புச்சானன். குட்டன் - குச்சன் - மலையாளம்.

பச்சன் - கொங்கணி, புச்சானன் - ஆப்ரிக்கா?

சேரர்களின் வில் அம்புச் சின்னம் எதைக் குறிக்கிறது? மாரனின் வில் அம்போ? மாரன் யார்? ரதியார்? கரும்புவில் யாருடையது? இந்திர மரபை முன்னெடுத்த பல்லவர் எங்கிருந்து வந்தார்?

சேரர் தலைநகர் கரூர். சேரர் நிலப்பகுதி கொங்கு. எனில் கொங்கிலிருந்து காஞ்சிபுரத்திற்கு எளிதாகப் பரவியிருப்பாரல்லவா? வில் அம்பு இல்லாமல் சிம்மக் கொடியை, பல்லவர் முன்னெடுத்தது ஏன்? அன்று நிலவிய அரசியல் நிலைமைகளாக இருக்கலாமோ?

பல்லவர் ஆட்சியின் முடிவுக்கும், நம்பூதிரி மலையாளத்திற்கு இடம் பெயர்ந்ததற்கும் தொடர்புண்டோ? மலையாள மொழி உருவாக்கம் நம்பூரிதியின் வருகைக்குப் பின்னர் நிகழ்ந்ததோ?

மாபலியோடு தொர்புபடுத்திய ஓணம் - வாமனமூர்த்தியின் விழாவல்லவா. வாமனர் இந்திரர் தம்பி உபேந்திரர் எனில் நம்பூதிரி தம்மைப் பூத்தேவர் என அழைத்துக் கொண்டது பொருத்தம்தானே?

நம்பூதிரியோடு நாயரும் வந்தாரோ? நாயர்?

நாடார் - நாயர்.

நாய் - நாயர். சாய் - சாயர். குறும்பர்களின் ஒரு பிரிவிற்கு நாயி Naayi எனும் பெயருண்டாம்.

நாயர் - நியர் - New - Newer - ஆங்கிலத்தில் New, neo எனவும் சுட்டப்படுகிறது. new - neo - புதிய. நியர், நயர், நாயர் - புதியவர். சுட்டலாமோ.

Naadava - நாடவன் - தெற்கு கருநாடகத்தின் வேளாண் குடி.

நாகலிகா - Naagalika - வேளாண்மையில் ஈடுபட்டுள்ள கன்னடத்தின் லிங்காயத்துகள். Nagaraalu - நாகராளு - ஆந்திர விசாகப்பட்டின வேளாண் சாதி.

Naagavaasulu - விசாகபட்டின வேளாண்மையாளர். Nanchinaad - நாஞ்சில் நாடு. நாங்குடி வெள்ளாளர். Nangudi vellala - சவளைப் பிள்ளை - தின்னவேலி. நாட்டாடி - Nattati - சாணாரின் உட்பிரிவு, Nayadi -?

நாயாடி - Hunters, good archers, வேட்டைக்காரர்கள், திறமையான வில்லாளிகள்.

நாயாடிகளின் முக்கியச் சாமிகள் மல்லன் (Mallan), மலவழி (malavazhi) பறக்குட்டி (Parakutti). சாமிகளுக்கு கள்ளும், அரிசிச் சோறும், குரங்குக் கறியும் படைப்பது நாயடிகளின் வழக்கம். பறக்கட்டி - வேட்டைக்குத் துணைபுரியவும், கொடிய காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாக்கவும் நாயடிகளால் வணக்கப்படும் தெய்வம், நாயடிப் பூசாரி மூப்பன்.

நளி - நள்ளி - Nali - Nalli - குரும்பா சாதி. நாளி. மூங்கில். மூங்கில் குறும்பர், nali - pali - அளக்கும் கருவி - நாழி.

Naayinar - நாயினார் - நயினார் - சமணர்களின் உட்பிரிவு கைக்கோளன் - பள்ளிகளின் பிரிவு.

Neeyigee - நீயிகி மைசூரின் தறியாளர்கள்.

Neyyala - நெய்யலா - விசாக், கஞ்சம் மாவட்ட மீனவர்கள். நெய்யலா - நெய்தலோ? நீலக்காரா - Nilagara - சாயமிடுபவர் - நிலி - சாலி - nili - Sale. நுளையன் Nulayan - மலையான மீனவர் மற்றுப் படகுக்காரர்.

நாயர் - Naayar - Title name - பட்டப்பெயர். நாயர் என்பது உண்மையில் படைவீரர் (Original Naayar were military body). கன்னட மற்றும் தமிழ்ப் பகுதியிலிருந்து கேரளத்திற்கு வந்திருக்கலாம். அனேகமாக மலையாளத்திற்கு இவ்வாறு வந்த முதலாவது குடியேறிகள் (Invaders) நாயர்களாக இருக்கலாம்.

Nambuutiri - Nambu - நம்பு, Sacred (Trustworth) - புனிதமானவர், நம்பக் கூடியவர்.

nam (vedam) poorayithi namboothiri - vedam - வேதம் - வேதத்தை முழுமையாக அறிந்தவர் நம்பூதிரியாம். நம்பூதிரி புத்த அரசர்களுக்கு ஆலோசகர்களாக இருந்தது ஏற்புடையதில்லையாம் - A sacred version is that the word nambudheeran a name given to the trusted advisors of the earlier Buddist king become Namboothiri, who intact, had been advisors to Korda Kings. This has been rejected by most since budhist influence had waned several centuries earlier.

தர்ட்ஸ்டன் நம்பூதிரி, நாயர் பற்றி ஏராளமாகக் குறிப்பிட்டுள்ளார். அன்று மலையாளத்தில் இவர்கள்தான் கற்றிருந்தவர் என்பதால் இவர்களிடமிருந்து மிக அதிகமான தகவல்களைத் தாட்ஸ்டன் பெற்றிருக்கிறார். இவர்களின் பிறப்பு - இறப்பு - சடங்குகள், திருமண முறைகள் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன.

நாயர் யார், நாடார் யார் என்பதை இரு சாதியரின் உட்பிரிவுகளைக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால்?

சாதியை இவ்வளவு ஆராய்ந்து பார்க்க வேண்டுமா?

உண்மையில் சாதிகளை அறிவதற்கு, சாதிகளை உற்று நோக்குவதற்கு, சாதிகளை ஒப்பிடுவதற்கு. அவர்களின் உப - சாதிகளை, உட்பிரிவுகளை - குலங்களை அறிவது அவசியம். பெரிய சாதிகள் நூற்றுக்கணக்கான பிரிவுகளாகப்

பிரிந்திரிக்கின்றன. எனினும், சாதிகளின் உட்பிரிவுகள் என்னுடன் ஒன்றுப் பின்னப் பிணைந்திருப்பது வியப்பானது.

தமிழ் எழுத்தாளர்களால் மதுரை நாட்டு மேனுவல் மிகச் சிறப்பானதகாக் கொண்டாடப்படுகிறது. ஜேம்ஸ் பெஹன்றி நெல்சனின் உழைப்பும், புத்திக் கூர்மையும் மதுரை நாட்டு வரலாற்றில் வியப்பான முறையில் வெளிப்படுவது அபாரம்.

எட்கர் தர்ட்ஸ்டனின் தென்னியக் குடிகளும் குலங்களும் மாபெரும் படைப்பு. அபாரமான உழைப்பு, ஞானம் போற்றத்தகுந்த பதிவு. தர்ஸ்டன் மெச்சத் தக்கவர்.

போற்றுதலுக்குரிய தர்ஸ்டன் தொகுதி தொகுதியாக வெளியிட்டுள்ள குறிப்புகள் மலைக்க வைப்பன. பொரும்பாலான தமிழ் எழுத்தாளர்கள், அறிஞர்கள் தட்ஸ்டனின் கடும் உழைப்பை, பெரும் பணியை அறியவில்லையோ?

ஆங்கிலேயர் மேற்கொண்ட இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்புகள், இந்திய மக்களைப் பற்றி அறிவதற்கு, குறிப்பாக, ஆங்கிலேயர் காலத்தில் இருந்த இந்தியச் சாதிய அமைப்பை அறிவதற்கு, மிகச் சிறந்த சான்றுகள் எனில் மிகையில்லை. இந்தியாவை அறிவதற்கு அன்றிருந்த சென்னை, கல்கத்தா மற்றும் பாம்பே மாகாணங்கள் மக்கள் தொகைப் புள்ளி விவரங்கள் போதுமானவை. வெறுமனே எண்ணிக்கையும், புள்ளிவிபரங்களும் மட்டும் இல்லாமல், ஒரு குறிப்பிட்ட சாதியின் எண்ணிக்கை, அதன் முக்கியமான உட்பிரிவுகள், அச்சாதி குறித்தான சிறு குறிப்புகள் என ஆங்கிலேயர்கள் அழகாகப் பதிந்துள்ளனர். உண்மையில் நூற்றாண்டுக்கு முன்னர் இந்தியச் சாதியமைப்பு எப்படி இருந்தது என்பதற்கு அன்றைய இந்தியச் சமூகம் பற்றிய புரிதல்களுக்கு, இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்புகள் கருவூலம் போன்றவை எனில் மிகையாகாது.

பிரிந்தானிய ஆட்சியில் 1865 முதல் 1947 வரை பத்தாண்டு இடைவெளியில் பலமுறை கணக்கெடுப்புகள் நிகழ்ந்துள்ளன 1871, 1881, 1891, 1901 மற்றும் 1931 கணக்கெடுப்புகளில், முதலாவது கணக்கெடுப்பில் ஏராளமான தவறுகள் நிகழ வாய்ப்பிருக்கிறது. இரண்டாவது கணக்கெடுப்பு சற்றே மேம்பட்டதாக இருந்திருக்கும். மூன்றாவது கணக்கெடுப்பு - 1891 ஓரளவிற்கு அனைத்து வகையிலும் சிறப்பானதாக அமைந்திருக்கும். அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புகனோ

பெரியளவில் வேறுபாடின்றி, முந்தைய தகவல்களையொட்டி மேம்போக்காக எடுக்கப்பட்டிருக்கலாம்.

Census of india, 1891, Volume - XIII - Madras - The report of the census by H.A.Stuart - 1893, மிக அழகாக அன்று நிலவிய சென்னை மாகாணத்தின் சமூக அமைப்பைச் சித்தரிக்கிறது. தமிழகத்தில், சாதி போற்றும் மனிதர்கள், சாதியத்தை முன்னெடுக்கும் தலைவர்கள், சாதியைப் பற்றிப் பேசும், எழுதும் இலக்கியவாதிகள், அவசியம் படிக்க வேண்டிய புத்தகம் சென்னை மாகாண மக்கள்தொகை அறிக்கை - 1893. 1891இன் கணக்கெடுப்பில், அதற்கு முன்னர் எடுக்கப்பட்ட இரண்டு கணக்கெடுப்புகளோடும் ஒப்பிட்டு கருத்துக்கள் பதிந்திருப்பது கூடுதல் சிறப்பு. கணக்கெடுப்பு எத்தனை தூரம் துல்லியமானது? நம்பகத்தன்மை கொண்டது? அன்றைய கல்வியறிவு சாதிகள் கல்வி இல்லாத சாதிகள் எவ்வாறு தங்களைப் பற்றிய விவரங்களைப் பதிந்தனர்? இன்றைய நவீன காலத்திலேயே கணக்கெடுக்க அரசு திணறுகிறதெனில் அன்றைக்கு? கணக்கெடுப்பைச் சரிபார்க்க ஏதேனும் அமைப்புகள் இருந்தனவா?

In spite of the length of time which I have taken to finish the report, I am conscious that much has been left undone, that many matters have not been fully examined while conclusions in some cases have not been tested so thoroughly as I could wish.

அறிக்கையைத் தயாரிக்க அதிக காலம் எடுத்துக்கொண்ட போதிலும், இன்றும் முடிக்கப்படாமல் இருப்பது அதிகம் என்பதை அறிந்துள்ளோம். சரிபார்க்கப்பட்ட தகவல்கள் இன்னும் நிறைய உள்ளன. சிலவற்றைப் பற்றிய முடிவுகளுக்கான தரவுகள் முற்றாக சரிபார்க்கப்படாமலே இருக்கின்றன. சரிபார்க்கப்பட வேண்டுமென்பதே எமது விருப்பம்.

தலைமைக் கண்காணிப்பாளரான தத்தருக்கு (ஸ்டர்ட்டு) ஒன்பது துணைக் கண்காணிப்பாளர்கள் உதவினார்களாம்.

ராய் பகதூர் சு.கல்யாண சுந்தரம் செட்டியார் அவர்கள் - the Doyen of Madras Census Official. doyen - பழுத்த, அனுபவமுள்ள. செட்டியார் இதற்கு முன் எடுத்த இரண்டு கணக்கெடுப்பிலும் புள்ளியியல் ஒடுக்குனராக இருந்தாராம்.

சென்னை மாகாணத்தின் மொத்த மக்கள் தொகை (சதேசி சமஸ்தானங்கள் தவிர்த்து) - 3,56,30,440. இதுவே 1881ல் 48,03,327. பத்து வருடத்தில் பதினைந்தரைச் சதமானம் கூடியிருக்கிறதாம்.

1891 கணக்கெடுப்பில் இறப்பிற்கும் பிறப்பிற்குமான விகிதத்தில் மாற்றமுள்ளதும் சுட்டிக்காட்டப்பட்டள்ளது. சுமார் 24,23,133 பேர் கூடுதலாகச் சேர்க்கப்பட்டள்ளனர்.

கணக்கீட்டின்படி, சென்னை மாகாணத்தில் இந்துக்கள் - 3,24,71,053. முகம்மதியர்கள் - 22,47,172. கிறித்தவர்கள் - 8,65,528. 1881இன் கணக்கீட்டோடு ஒப்பிட்டால், முகமதியர்களும், கிறித்தவர்களும் இந்துக்களைவிட அதிகளவில் கூடியிருக்கிறார்கள்.

சீர்திருத்தக் கிறித்தவத்திற்குப் பெயர்பெற்ற நெல்லை மாவட்டத்தில் சீர்திருத்தக் கிறித்தவர் எண்ணிக்கை 1881இல் இருந்ததைவிட எட்டு சதமானம் குறைந்து விட்டதாம். அதற்கு ஸ்டார்ட் கூறும் விளக்கம், 1881 இல் அப்போது ஏற்பட்ட பஞ்சம் காரணமாக கிறித்தவர் எண்ணிக்கை கூடியதாம். 1891 இல் பஞ்சம் தீர்ந்தால் பழையபடியும் தாய் மதத்திற்கே மாறிவிட்டார்களாம்.

மாகாணத்தில் கிறித்தவர்களின் எண்ணிக்கை கூடியதற்கு மதமாற்றமே காரணமாம் - The high increase among Christians attributed entirely to conversion.

1871, 1881, 1891 கணக்கீட்டின் ஒப்பீட்டில், மாகாணத்தில் மூளைக் குறைபாடு, தொழுநோய், கண்நோய் போன்றவை குறைந்து வருவது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

கணக்கெடுப்பில் சுமார் 92 சதமான மக்களுக்கு எழுதப் படிக்கத் தெரிந்திருக்கவில்லை எனக் குறிப்பிட்டப்படுள்ளது. பெண்களில் இது 99 சதமானமாம் - சுமார் நூற்றி இருபத்தைத்து வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த மக்களின் கல்வியறிவு வியப்பளிக்கிறது. சுதந்திரம் பெற்று நூறு வருடத்திற்குள் இந்தியா அடைந்த கல்வி முன்னேற்றம் பாராட்டத்தக்கதல்லவா.

கணக்கீட்டிற்கு நகராட்சி வருமானத்திலிருந்து ரூபாய் 4,72,022 செலவாடப்பட்டிருக்கிறது. இது ஆயிரம் பேருக்கு ரூ.13.4 ரூபாயாம்.

சென்னை மகாணம் பற்றிய புவியியல் சார்ந்த விவரணைகள் - மலைகள், ஆறுகள், ஏரிகள், காலநிலை, வெப்பநிலை, சாலைகள் மற்றும் தொடர்வண்டிகள், மாவட்ட நிர்வாகம் - வருவாய் அதிகாரிகள், குற்றவியல் நடுவர்கள், சிவில் பணிகள், சாலைகள், மருத்துவ அதிகாரிகள், பதிவுகள், காடுகள், பொதுப்பள்ளி, உள்ளாட்சி, கல்வி, மருத்துவமனைகள், சுதேச சமஸ்தானங்கள், போன்றவை விவரிக்கப்பட்டுள்ளன. அடுத்ததாக பரப்பளவு சுட்டப்படுகிறது. தொடர்ந்து மக்கள், நகரங்கள் மற்றும் கிராமங்கள், வீடுகள், சென்னை மாநகர் பள்ளிய விவரங்கள் தரப்பட்டுள்ளன.

இரண்டாம் பகுதியில் மக்கள் கூட்டத்தின் இடப்பெயர்வு இடம் பெற்றுள்ளது. மூன்றாவது பகுதியில் மதங்கள் பற்றிய பதிவுகள். நான்கில் வயது. நான்கு மற்றும் ஐந்தாவதில் பொது நடைமுறைகள் (சிவில்) கொடுக்கப்பட்டுள்ளன. ஆறாவதில் சுகாதார நிலைமைகள், ஏழு கல்வி, எட்டு மொழிகள், ஒன்பது பிறப்பிடம்.

பத்தாவது பகுதியில் சாதி, குலம் அல்லது இனம் (Caste tribe or race) விவரமாக வகைப்படுத்தப்படட்டுள்ளன, அன்று சென்னை மாகாணத்தில் நிலவிய சமூக அடுக்கை, சாதிகளை, 55 வகையாக வகைப்படுத்தியுள்ளனர். ஒவ்வொரு வகையிலும் உட்பிரிவுகளும் உண்டு.

பகுதி - 11 இல் தொழில்கள், 12 வது தொகுப்பில் கணக்கெடுப்பு வகைகள், இறுதியில் வருங்கால கணக்கெடுப்புக்கான ஆலோசணைகள், முடிவாக சில அட்டவணைகள், சில வரைபடங்கள்.

மொத்தத்தில் கணக்கெடுப்பு விவரங்கள் மிகச் சிறந்ததொரு ஆவணம்.

எட்டாவது பகுதியின் மொழி எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்கது. இந்திய மொழிகள், இந்தியாவில் பேசப்படும் அந்நிய மொழிகள் என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, சிறந்தொரு அட்டவணையும் தரப்பட்டுள்ளது.

ஆரிய மொழி, இரானிக் (Eranic) மற்றும் இந்திய (Indic) எனும் பெரும் பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இரானிக் பாஸ்து (பேசுவோர் - 67), பலோச்சி - (பேசுவோர் - 77) என மேலும் இரண்டாகக் பகுடுக்கப்பட்டுள்ளது.

அன்று சென்னை மாகாணத்திலிருந்த இந்திய மொழிகளை பேசுவோரின் எண்ணிக்கை,

| | | | |
|---|---|---|---|
| 1. | காஷ்மீரி | - | 1 |
| | பஞ்சாபி | - | 498 |
| | சிந்தி | - | 68 |
| | இந்தி | - | 339 |
| | இந்துஸ்தானி | - | 8,17,146 |
| | தெக்கனி | | |
| | முராடி | - | 1108 |
| | போண்டிலி | - | 110 |
| | நாடோடி (ஜிப்சி) பேச்சுமொழி | | |
| | லம்பாபடி | - | 27,099 |
| | குசராத்தி - குசராத்தி | - | 6863 |
| | பட்டுநூல் - சராட்டிரம் | - | 73,352 |
| | காட்சி | - | 558 |
| | கத்ரி | - | 37 |
| | மராத்தி | | |
| | மராத்தி | - | 1,20,607 |
| | ஆரி | - | 2903 |
| | கொங்கணி | - | 132783 |
| | கோனிசு அல்லது கோமந்தசி | - | 96 |
| | பெங்காலி | | |
| | பெங்காலி | - | 1142 |
| | சிட்டகோனி | - | 31 |
| | உரியா | | |
| | உரியா | - | 12,92,163 |
| | பஸ்தாரி | - | 346 |
| | போராஜா | - | 15037 |

| | | | |
|---|---|---|---|
| | சமஷ்கிருதம் | - | 151 |
| 2. | திராவிடம் | | |
| | தமிழ் | - | 1,40,76,989 |
| | எருகுலா அல்லது கொரவா | - | 37,536 |
| | இருளா | - | 16,14 |
| | கசுவா | - | 316 |
| | தெலுங்கு | - | 1,36,53,674 |
| | மலையாளம் | - | 26,88,332 |
| | மாய்ல் | - | 3167 |
| | கன்னடம் (Canarese) | | |
| | கன்னடம் | - | 14,45,650 |
| | படகா | - | 30,656 |
| | குறும்பா | - | 3742 |
| | துளு | | |
| | துளு | - | 4,61,176 |
| | கொரகா | - | 1868 |
| | பெல்லரா | - | 668 |
| | கோந்து (Khond) | - | 1,90,893 |
| | கோண்டு (Gond) | - | 6694 |
| | கோட்டே | - | 353 |
| | கோய | - | 36503 |
| | தோடா | - | 736 |
| | தோடச் | - | 1201 |
| | கொடகு | - | 947 |
| 3. | கோலரியன் | | |
| | கயா | - | 29,414 |
| | சவரா | - | 1,01,638 |
| 4. | திபெத்தோ | | |
| | பர்மன் - பர்மீஸ் | - | 872 |
| | அரகனீஸ் | - | 24 |
| 5. | தாய் அல்லது - ஷான் | - | 5 |
| 6. | சினிடிக் - கரீன் | - | 5 |

அந்நிய மொழிகள் பேசுவோரில் குறிப்பிடத்தக்கவர்,

| | | |
|---|---|---|
| பெர்சியன் | - | 213 |
| இத்தாலியன் | - | 43 |
| பிரெஞ்ச் | - | 554 |
| போர்ச்சுக்கிசு | - | 2896 |
| ஜெர்மன் | - | 334 |
| இங்கிலீஷ் | - | 36,951 |
| ஐரிஷ் | - | 67 |
| வேல்ஸ் | - | 14 |
| அரபிக் | - | 3083 |
| சைனீஸ் | - | 77 |

அன்றைய சென்னை மாகாணத்தின் மொத்தப் பரப்பளவு - 1,22,022 சதுர மைல்கள். சுதேசி சமஸ்தானங்களான திருவாங்கூர், கொச்சின், புதுக்கோட்டை, பங்கனபள்ளி மற்றும் சந்தூரின் பரப்பளவு - 9609 சதுர மைல்கள்.

அன்றைய சென்னை மாகாணம் 22 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஆந்திராவில் 10 மாவட்டங்கள் - கஞ்சம், விசாகபட்டினம், கோதாவரி, கிருஷ்ணா, நெல்லூர், கடப்பா, கர்நூல், பெல்லாரி, அனந்தப்பூர் மற்றும் வட ஆற்காடு.

தமிழகத்தின் 10 மாவட்டங்கள் - மெட்ராஸ், செங்கல்பட்டு, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி, தென்னாற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி (Trichinopoly), மதுரை, திருநெல்வேலி (Tinnevely).

கேரள வடபகுதி - மலபார் மாவட்டம். கருநாடகத்தின் தென்பகுதி - தெற்கு கன்னடா (South Canara). ஆக மொத்தும் இருபத்தியிரண்டு.

அன்று நகரங்களின் சராசரி மக்கள் தொகை - 13,867, கிராமங்களின் மக்கள் தொகை - 692.

அன்றைக்கு ஆயிரம் பேருக்கும் மேற்பட்டு கிறித்தவர்களாக மதம் மாறிய சாதிகள் - The only cates in which over 1000 individuals have returned their religion as Christian are,

| | | |
|---|---|---|
| அகமுடையார் | - | 1032 |

| | | |
|---|---|---|
| சத்ரியா | - | 2773 |
| மறவன் | - | 1627 |
| காம்பு | - | 2031 |
| நாட்டமான் | - | 2244 |
| வெள்ளாளர் | - | 8541 |
| மாலா | - | 1420 |
| பள்ளன் | - | 6874 |
| பள்ளி | - | 2986 |
| பறையன் | - | 25,461 |
| கம்மாளா | - | 1831 |
| பரவன் | - | 4949 |
| சாணான் | - | 21,836 |

(சத்ரிய கிறித்தவர்கள் - சாணார்கள்)

சாதிகள் பிரிவில்,

| | | |
|---|---|---|
| வேளாண் சாதிகள் | - | படை மற்றும் ஆதிக்கம் செய்வோர் |
| | - | பயிரிடுவோர் |
| | - | கால் நடை வளர்ப்போர், மேய்ச்சல்காரர் |
| | - | வேளாண் தொழிலாளர்கள் |
| | - | காடு மற்றும் மலைவாழ் மக்கள் |
| தொழில் செய்வோர் | - | பூசாரிகள் |
| | - | பக்தர்கள் |
| | - | கோவில் பணியாளர்கள் |
| | - | எழுத்தாளர்கள் |
| | - | சோதிடர்கள் மற்றும் மருத்துவர்கள் |
| | - | இசைக்காரர்கள், மேளக்காரர்கள் |
| | - | ஆட்டக்காரர், பாடுவோர் மற்றும் நடிகர்கள் |
| வணிகர்கள் | - | வியாபாரிகள் |
| | - | கடைக்காரர்கள் |
| | - | சிறு வியாபாரிகள் |
| | - | சுமை தூக்கிகள் |
| | - | பொற் கொல்லர்கள் |

| | | |
|---|---|---|
| | - | முடி திருத்துவோர் |
| | - | இரும்பு கொல்லர்கள் |
| | - | தச்சர்கள், கொத்தன்கள், துளையிடுவோர் |
| | - | தாமிரத் தொழில் செய்வோர் |
| | - | தையல்காரர் |
| | - | வாசனைப் பொருள், வெற்றிலை விற்போர் |
| | - | பூவியாபாரிகள் |
| | - | துணி வெளுப்பவர் |
| கைத்தொழிலாளர்கள் | - | ஆடு மேய்ப்போர் |
| | - | எண்ணெய் பிழிவோர் |
| | - | குசவர்கள் |
| | - | கண்ணாடி மற்றும் வளையல்காரர்கள் |
| | - | வண்ணமடிப்போர் |
| | - | உப்புத் தொழிலாளர் |
| | - | செங்கல் சூளை தொழிலாளர் |
| | - | தங்கத் துகள் சேகரிப்போர் |
| | - | மீனவர், படகுக்காரர் மற்றும் பல்லக்குத் தூக்கிகள் |
| | - | தனிப்பட்ட வேலையாட்கள் |
| | - | சாராயம் மற்றும் கள் வடிப்போர் |
| | - | ஊர்க் காவலர்கள் |
| | - | சுத்தம் செய்வோர் |
| | - | அம்மி கொத்துபவர் |
| | - | மண் தொழிலாளர் |
| | - | சேனை பிடிப்பவர் |
| | - | பாய் முடைபவர் |
| | - | கூடை பின்னுவோர் மற்றும் மூங்கில் பிளப்பவர். |
| நாடோடிகள், சிறுகலைஞர்கள் மற்றும் நடிகர்கள் | - | வேட்டையாடுபவர் |
| | - | பிச்சைக்காரர் |
| | - | கழைக் கூத்தாடிகள் |
| | - | பாம்பாட்டிகள் |
| | - | மிருகக் காட்சியர் |

| | | |
|---|---|---|
| | - | மந்திரவாதி |
| | - | பேயோட்டுபவர் |
| இனம் மற்றும் நாடுகள் | - | இந்தியரல்லாத ஆசிய நாட்டவர் |
| | - | ஆசியரல்லாதவர் |
| | - | யுரேசியர் |
| | - | கிறித்த மதமாறிகள் |
| தனிப்பட்டவர் மற்றும் தெரியாதவர் | | |
| | - | பட்டப்பெயராளர் |
| | - | நிலத்தோடு தொடர்புடைய பெயருள்ளவர் |
| | - | தெரியாதவர் |

திராவிடக் குடிகளின் பெரும்பாலான சாதிப் பெயர்கள் மல் (mal) மற்றும் கு (ku) போன்றவற்றிலிருந்து உருவாக்கப்பட்டுள்ளன. அதாவது m - p, r - h, l - r, k - g.

Mal - மாலர்கள் (maalas), மல்லர்கள் (mallas), மலையாளிகள் (malayalis), மகர்கள் (mahars), மறவர்கள் (maravars).

Ko - கோலிஸ், கோய்ல், கோடா, கோந்தா, கொரவா, கொடுகா, கும்மி, குறும்பாஸ்.

திராவிடர் பண்பாட்டில் தாய்மண்ணுக்கு பெரியளவில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

முன்னால் போர்ச் சாதிகள், தற்போதைய வேளாண் சாதிகள் எனும் பிரிவில் 46 சாதிகள் இடம் பெற்றுள்ளன எண்ணிக்கை - 23,20,288 (6.5%).

கள்ளர்கள் குறும்பரில் ஒரு பிரிவாகக் சுட்டப்படுகிறார்கள். இவர்களில் 411 கிளைகள் உண்டாம். கள்ளர்கள் அதிகமிருக்கும் மாவட்டங்கள் - தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் புதுக்கோட்டை. மறவர் அதிகமிருப்பவை மதுரை மற்றும் திருநெல்வேலி, குறிப்பாக இந்த இரு மாவட்டங்களின் கடற்கரையொட்டிய பகுதிகளில் அதிகம் வசிப்பதாகக் சுட்டப்படுகிறது. 254 – உட்பிரிவுகள் உள்ளனவாம்.

இளமகன் அல்லது அம்பலக்காரன் மறவரின் பிரிவிலொன்றாம். தெலுங்கின் முத்ராசாக்களோடு தொடர்புபடுத்தப்படுகின்றனர். அதிகமும் திருச்சி பகுதியில் உள்ளனர்.

வேலம்மா Velama, தெலுங்கு - விசாகபட்டினம் மற்றும் கஞ்சம் பகுதியின் குறிப்பிடத்தக்க பயிர் செய்வோர். குறிப்பாக ஏராளமான ஜமீன்களும், பொப்பிலி ராஜாவும் வேலமாக்கள். 142 – உள் பிரிவுகள் உண்டு.

நாயர்கள் பெயர் சமஷ்கிருத நாயகாவிலிருந்து வந்ததாம். நாயக்கா - நாயகா, நாயுடு, நாயர். சந்தேகத்திற்கிடமில்லாமல் நாயர் சாதியினர், முன்பு போர்த் தொழிலோடு தொடர்புள்ளவர்தானாம் - Nayars were undoubtly a military body. presently traders, artisans, even barbers and waterman - தற்போது வணிகராகவும், கைவினைஞர்களாகவும் இருப்பதோடல்லாமல் முடிதிருந்துநர் மற்றும் சலவை செய்வோராகவும் இருக்கினறனர்.

நாயரில் 138 பிரிவுகள் உள்ளன. சில பிரிவுகள் குடும்ப அளவில் (தரவாடு) இருக்கின்றன. உண்மையில் கிரியாட்டில் புறத்து சார்ண, அகத்து சார்ண உட்பிரிவுகளே, முன்பு போர்த்தொழிலோடு தொடர்புள்ளவர் என்பது தெளிவு - Strictly Kriyattil, Purattu Chaarna, Agattu Chaarna are the only sub-division which may be said to have been military and dominant in former days.

நாயர் பற்றி தகவல்கள், கணக்கெடுப்புப் பணியில் துணைக் கண்காணிப்பாளராகப் பணியாற்றிய எம்.கோவிந்த மேனன் அவர்களால் சரிபார்க்கப்பட்டதாகக் (Furnished) சுட்டப்படுகிறது.

முக்கியமான நாயர் பிரிவுகளின் எண்ணிக்கை,

| | | |
|---|---|---|
| அகத்து சார்ண | - | 32,446 |
| அட்டிகுறிசி | - | 13,680 |
| கிரியாட்டில் | - | 1,15,125 |
| பளிச்சன் (Pallicchan) | - | 16,668 |
| புறத்து சார்ண | - | 1,09,396 |
| சுத்ரா | - | 42,429 |
| வட்டக்காடன் | - | 30,980 |

அன்றைய நாயர்களின் மொத்த எண்ணிக்கை 8,93,768.

நாயரில் இருமானும் (Erumaan) உண்டு. கட்டுபட்டன் (Katupattan) காரிங்காராவன், கரோபணிக்கன், கோலயன், மணியாணி, மாறயாணி, மூத்தன் (Muuttaan), பாள் சூத்ரா (Paal suudra), செருவன் (Seruvan), ஊராலி போன்ற பல உட்பிரிவுகளும் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன. கிரியாட்டில் பிரிவே சமூக அடுக்கில் மேலானதாம்.

கிரியாட்டில், கிரியாத்தில் நாயர் எனில்? கிரியா - கிரியாஸ் - யோகமுறை. நாயர்கள் யோகத்தில், ஆன்மீகத்தில் சிறந்தவர் என்பதால் கிரியாட்டில் பெயரா? கிரி - சமற்கிதத்தில் மலை, யாட்டில் - ஆத்தில் - அகத்தில் - அகம் - வீடு. கிரியாட்டில் மலைவீடர் - மலை இல்லத்தார் - மலைமக்கள் - மலை நாடர்.

பிராமணர் பேச்சில் ஆத்து - வீடு, இல்லம். திரைப்படங்களில் வசனமெழுதுகிறார்கள். ஆத்துலதாண்ட மீன் இருக்கும்? உங்க வீட்டு ஆத்துல எப்டிடா மீன் இருக்கு? ஆத்து - அகத்து - அகம். எங்க ஆத்துல - எங்கள் அகத்தில் - எங்கள் இல்லத்தில். அழகிய தமிழ்ச் சொல்.

மலையாளத்தவர் தூய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துபவரல்லவா? கிரி - குரி - குறு, ஆட்டில் - ஆட்டு, ஆடு. குறு ஆடு - குறும்பர். குறு ஆட்டுக்காரார் - கிரியாட்டில். சிறிய ஆட்டுக்காரர். கிரி - பெரி - பெரிய ஆட்டுக்காரர்.

ஆடு - Sheep என்பதற்கு மலையாளத்தில் ஆட்டுக்கல் - Aatukal. எனில், கிரியாட்டில் - குறுஆட்டுக்காரர்தானே. என்னில் அவர் குறும்பர்தானே.

கரம்பை - சொரம்பை - குறும்பை - குறும்பர்.

கர - குர - சொர - மர - புர - தர.

வேதத்தில், வேத சாத்திரத்தில் சிறந்தவரன்றோ நம்பூதிரி. பல்லவர் சமற்கிருதத்தை பெரியளவில் முன்னெடுத்ததற்கும் நம்பூதிரிக்கும் தொடர்பிருக்கிறதா?

பல்லவர் வீழ்ச்சிக்குப் பின் நம்பூதிரியும் மலையகத்திற்கு வந்துவிட்டாரோ? நம்பூதிரி பற்றி மலையாளத்தில் பழைய மலையாள இலக்கியப் பதிவுகள் ஏதேனுமுண்டோ? நாயர் குறித்து?

நாயரும் நம்பூதிரிக்கும் எதனால் அந்தளவுக்கான நெருக்கம் உண்டானது? இருவரும் பெண்கள் தொடர்பை சாதாரணமாக எடுத்துக் கொண்டார் எனில், காமத்தில் சிறந்திருந்தார் எனில், அது காமன் பண்பாட்டின் எச்சமா?

மலையாளமான கேரளத்தின் அட்டவணை மற்றும் அட்டவணைப் பழங்குடிகளின் பெயர்கள் எப்படிப் புழங்குகின்றன? அவ்வாறே கருநாடகம், ஆந்திரம் மற்றும் தமிழ்நாட்டின் அட்டவணை சாதிப் பெயர்கள், பழங்குடிகளின் பெயர்களை ஒப்பிட்டுப் பார்ததால்?

மலையாளப் பழங்குடியான குறிச்சியன், குறிச்சன் யார்? குறிச்சனா, குறிச்சியானா, தமிழ் குறிஞ்சியானா? குறிஞ்சி - மலை, மலையன் - குறிச்சியன். குறிச்சியன், குறியச்சனுக்கும், கிரியாச்சனுக்கு, கிரியாட்டிலுக்கும் உள்ள வேற்றுமை எவ்வளவு?

பெயர் உட்பட அனைத்தையும் புற உலகிற்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்பவர் சமூக அடுக்கின் மேலுள்ளேரே. தொல் குடிகள் அவ்வளவு எளிதாகப் பெயர்களையே, மொழியையோ, தெய்வங்களையோ மாற்ற மாட்டார்கள். முதலில் ஆங்கிலம் படித்தது யார்? நம்பூதிரிதானே. அடுத்து நாயரோ? பழமைக்குப் பெயர் போன நாயரிடமும் கல்வி கற்றவுடன் எத்தனை எத்தனை மாற்றம்.

அட்டவணையினா் - செம்மான், பெம்மான், பெருமான், செருமான் - எத்தனை அழகிய பெயர்கள். கூடன் (Koodan), கூட்டன் (Kootan), மலையன், புலையன், குடும்பன், குறும்பன், பாணன், கணக்கன்.

தொல்குடிகளோ அதியன், இருளன், அரையன், மூப்பன், கணிகள், காடன், பளியன், பள்ளேயன்.

குறுமன் (Kuruman) பழங்குடியில் எத்தனை வகை? மல்லு குறும்பன் (Mallu Kurumban) யார்? முல்லா (mulla), மால (Mala) எனும் பெயரை ஒட்டாகக் கொண்ட சாதிகள் மலையகத்தில் எத்தனை உண்டு?

செருமாருக்கும் கர்நாடக மற்றும் ஆந்திரத்தின் சாமருக்கும் உள்ள தொடர்புபென்ன? சாமர் (Chamar) - சாம்பருக்குள்ள (Chambar) உறவு? சாமர்க்கும் சாணர்க்கும் (Channar) உள்ள ஒற்றுமை?

மலையாளத்தின் அட்டவணைப் பட்டியலிலுள்ள Sidhanar - சீத்தனார் யார்? தமிழ் சாத்தனாரா?

சாணார் கள் தொழிலை வைத்தே இழிவு செய்யப்பட்டார், ஒதுக்கப்பட்டார் என்பது உண்மைதானா? உண்மையெனில், கள் தொழிலை இழிவான தொழிலாக அன்று கண்டவர் யார்? கள் குடிக்காதவர்தானே? அன்று கள் குடிக்காதவர் யாராக இருந்திருக்க முடியும்? போர்ச் சாதியான நாயரா? வேளாளராக மாறிய நாயரா? நிலவுடமையாளராக மாற்றம் பெற்ற நாயரான பிள்ளையா? பிள்ளையும் நாயரும் ஒன்றா? ஒன்று எனில் எதிலெல்லாம் ஒன்று?

தமிழகத்துச் சமணர் யார்? எந்தச் சாதி?

தமிழில் சாணை பிடிப்பவர் யார்? அது சாணையா சேனையா?

சேனை - படை, சேனாவீரர் - படைவீரர் - சேனை வீரர் - சேனர். சேனர் - சேரர். சேரனாத் - சாரநாத். நாத் - நாதன் - தலைவன். சாரநாத் - சார் - நீர். நீரின் தலைவன். நீரின் தலைவன் யார்? மழையின் கடவுள் யார்?

சேனை - சானை - சோனை - சோனமுத்து - சோனகர் - சோளகர்.

பணை - திண்ணியது. பனையர் - திண்ணியவர். சேனையன் - தானையன் - வீரமானவன்.

மகன் எப்படி மலையாளத்தில் மோனாகியது? எண்ட மோனே - என்ற மகனே?

மகன் - மகனே - மொகனே - மோனே - மோன். கூடிய விரைவில் மீனே, மானே என மாறினாலும் வியப்பில்லை. மானே - மகனே, மேனே- மேனனே.

மேனன் - மேனன் யார்? மூன் யார்? முன் - முன்னில் யார்? மகம் - அகம் - குகம். குகம் - குகன். குகன் - கருப்பானவன், கறுத்தன். அழகிய தமிழ்ச் சொல்லோ?

அதென்ன முத்துக்குப் பெயர் பெற்ற ஊருக்கு தூத்தக்குடி? முத்துக்குப் பெயர் பெற்ற ஊர் முத்துக்குடி என்றுதானே இருந்திருக்க வேண்டும், இருக்க வேண்டும். முத்து - ஊர் - முத்தூர். முத்தெடுக்கும், முத்துக் குளிக்கும் ஊர் முத்தூர். முத்துக்குடியினர் வாழும் இடம் முத்துக்குடி. தூத்துக்குடிக்குக் கீழ்க்கரையில் தூத்தூர் எனும் பெரியதொரு மீனவர் ஊர் இருக்கிறதல்லவா? அதுவும் முத்துக்குடியோ? மேலே இருக்கும் சாயல் குடி, காயல் குடியோ? சாயல்குடி - கடற்கரை அருகிலுள்ளது. மீனவர் செறிந்து வாழும் கடற்கரை கொண்டது. சாயல் - காயல் தானே. அவ்வூரில் காயலும் இருக்கிறது. சாயர்புரம்? காயல்புரமோ?

மாட்டை மேய்த்தவர் மாடரோ? அவர் சாமியாக வணங்கப்படுகிறார் எனில் அவர்தான் மாடசாமியோ. எனில் மாடு மேய்த்தவன் யார்?

மல் - மால் - திருமால்.

திருமால் - திருமாலன் - போற்றத்தக்க வீரமானவன். திருஆளன் - திருவாளன் - திருவை ஆள்பவன் - கணவன் - திருவின் கணவன். பெருமால் - பெருத்த மாலன் - பெருத்தவீரன். பெருமாலன் - பெருமாளன் - பெருமான். பெரிய ஆட்சிக்கு உரியவன். பேரரசன். பேரரசன் - விண்ணுக்கும் மண்ணுக்கும்.

முல்லையின் திருமால் யார்? மா - பெரியது, ஞாலம், வீரம், செல்வம்.

மாட்டை ஆண்டவர் மாடர். நாட்டை ஆண்டவர் நாடர்.

நாடர் - நாட்டர்.

நாடார் - நாடமாட்டார்.

எதை நாட மாட்டார் - மதுவையா.

நாடியதால் தரம் குறைந்ததா?

நாடார் - மாமிசத்தை நாடார்.

நாடியதால் புகழ் குறைந்தாரா? நாடார் நாடினாரா இல்லையா?

தொப்பலாக்கரையில் தோல்தொழிலில் இரண்டு நாடார்கள் ஈடுப்பட்டிருந்தார்கள். ஆட்டை அறுப்பதும் அவர்கள்தான்.

தோல் தொழிலோடு தொடர்புடையவருக்கு வட நிலத்தில் என்ன பெயர்? சாமர் (Chamar). சாமருக்கும் சாணர்க்கும் (Chanar) உள்ள பெயர் ஒற்றுமை? தொழில் சார்ந்த பெயர்தானே அது.

சமந்தன் நாயர் (Samantan) நாயர் யார்? இல்லத்து நாயர்? அகத்துச் சார்ணர், புறத்துச் சார்ணர் யார்?

வெள்ளையரால் **முன்னால் போர்த்தொழில் சாதிகள்** எனக் குறிப்பிடுபவரின் எண்ணிக்கை,

| | | |
|---|---|---|
| அகமுடையான் | - | 2,96,849 |
| அம்பலக்காரன் | - | 1,67,573 |
| கள்ளன் | - | 4,09,811 |
| மறவன் | - | 3,08,175 |
| ராயர் | - | 3,93,768 |
| ராஜு | - | 68,354 |
| வேலமா | - | 3,81,860 |
| சத்ரியா | - | 1,53,312 |

பயிர்த் தொழில் சாதிகளின் மொத்த எண்ணிக்கை 70,16,140 (19.69%).

வெள்ளாளர் என்பது பள்ளன், பள்ளி என்பதோடு தொடர்புடைய சொல்லாம் - Vellalar to be etymologically connected with pallar, palli, the word meaning the lord of the vellas or pallas - Dr. Oppert, Madras Journal of Literature and Science - 1987 - 88 - page 133.

வெள்ளாளர்களால் 930 உட்சாதிகள் உள்ளனராம். குறிப்பிடத்தக்க சாதிகள்,

| | | |
|---|---|---|
| அகமுடையான் | - | 42,443 |
| கார்காத்த (Karaikkaat) | - | 1,37,245 |

| | | |
|---|---|---|
| கொடிக்கால் | - | 45,836 |
| கொண்டக்கட்டி | - | 31,012 |
| கொங்க (Kunga) | - | 4,19,526 |
| நாச்சை (Naacchail) | - | 9996 |
| பூந்த மல்லி (Punamalli) | - | 22,086 |
| செந்தலை (Sandalai) | - | 1,67,183 |
| சோழிய | - | 2,27,076 |
| தென்திசை | - | 23,137 |
| தொண்டை மண்டலம் | - | 61,837 |
| துளுவ | - | 1,91,098 |
| உடையான் | - | 17,550 |
| வெள்ளிக்கை (Vellikkai) | - | 14,098 |

காப்பலியன் - 37,677, கருநாடகத்தின் வொக்கலிகரின் முக்கியமான ஒரு உட்பிரிவு. உடையார் என்பது பட்டப் பெயர். நத்தமான், மலைமான், சுடர்மானின் முக்கியமான உட்பிரிவுகளாம். சுடர்மன் - குயவனாம்.

காப்பு - 24,53,842. சென்னை மாகாணத்தின் மிகப்பெரிய சாதி, காப்பு - கவனித்தல், காவக்காரர் - Watchman. காப்பு எனில் தெலுங்கில் குடியானவர், வேளாண்மைக்காரர், ரெட்டி (Reddi), இரட்டி (Iretti), ரட்டி (Ratti), ராஷ்ரகூட (Rhastrakuta). 840 உட்சாதிகள் உண்டு. காசுலா (Gaazula - 3,02,462), பண்டா (Panta) - 4,55,134. காசுலா பாலிசாக்களின் முக்கியமான உட்பிரிவிலும் உள்ளார். வணிகம் செய்தாலும், பெரும்பான்மையினர் பயிர்த்தொழிலும் ஈடுபட்டுள்ளனர். பயிர்த்தொழிலில் சிறந்தவரான தெலுங்கின் காப்பு சாதியின் பெரிய உட்பிரிவான பாண்டா (பாண்டியர். பாண்டவர் தொடர்புடையதோ).

கணக்கெடுப்பின்படி, கம்மா (Kamma) - 8,50,827 பேர். மலபார், கர்நாடக மாவட்டகள் தவிர்த்து, பெரும்பாலான மாவட்டங்களில் உள்ளனர். கோதாவரி. கிருஷ்ணா, நெல்லூர், வட ஆற்காடு மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றனர். கம்மா எனில் ear rings கம்மல் பொருந்தும்படி இல்லையல்லவா?. ஒரு வேளை தனித்துவமான கம்மல் அணிந்தாரோ? அவர் வேளாண் சாதியாகக் குறிப்பிட்டப்படுவதால், தமிழ் கண்மாய், கம்மாய் - கம்மா என மாறியிருக்க அதிக வாய்ப்புண்டு. கம்மாய் என்பதை பள்ளம் எனக் கொண்டால், பள்ளியில் ஒரு வகை

என்றே குறிப்பிட்டிருக்க வேண்டும். பள்ளவ ஆட்சிக்குப்பின் பெயர் மாற்றம் நிகழந்திருக்கலாம். கம்மா சாதியில் 23 உட்சாதிகள் உண்டாம்.

தொட்டியன் அல்லது கம்பளத்தான் - 1,45,603, மதுரை, நெல்லை, கோவை, சேலம் பகுதிகளில் குடியேறிய தெலுங்கு சாதி. தங்களைக் கோபியர்களின் வழியினராகக் கூறிக் கொள்ளும் கம்பளத்தாரின் பழந்தொழில் கால்நடை வளர்ப்பு.

தொட்டியரின் உட்பிரிவான கொல்லர் அல்லது எரகொல்லர், (Kolla, yerakolla) செம்மறி ஆட்டு இடையர்கள். (இடயர் - இடையர் - கிடையர் கிடைக்காரர் - கிடாரி - மாடாரி - மாதாரி. கிடாதாரி - கிடாரி - கிதாரி - கீதாரி. கீதாரி - ஆடு மேய்ப்பவர்)

இடையர்பாடி - எடையர்பாடி - எடப்பாடி.

இடையர் பாடி - எடையர் பாடி - கடையர் பாடி - கடைப்பாடி - கடப்பாடி - கடப்பா.

கடல்பாடி?, கடல்பாடி - கடப்பாடி - கடப்பா - நெய்தல் நிலத்தில் பாடி இடம் பெறாது. முன்னைத் தமிழில் அப்படியான பெயரை வைக்கமாட்டார். ஒவ்வொரு சொல்லையும் பொருள்படுத்தியே கையாண்டிருப்பர். கடற்கறையில் பாடி எனும் ஊர்ப் பெயர் இருந்தால் அது பட்டினமாக இருந்திருக்கும். அது பட்டி, பேட்டி, பேட்டை, பேட்ட, பேட, பேடி, பாடி என்பது போல் மாறியிருக்கும். ஒப்பு நோக்க தரங்கம் பாடி, கடலருகே அமைந்துள்ள ஊர். தரங்கம் பட்டினம்.

பாடி எனில் உயரமான மேலான எனும் பொருளில் கையாளப்படுகிறது. படி - படிக்கட்டு. சமதளத்திலிருந்து உயர்ந்திருப்பது. படி - படித்தல் - அறிவை உயர்த்துதல். பாடிவீடு - படிக்கட்டு உள்ள வீடு, மாடி வீடு. பெரிய வீடு. கட்டுள்ள வீடு - அறைகளுள்ள வீடு, கட்டுமான வீடு. பாடி - பந்தல். பந்தல் - மேடு, உயரம். பந்தளம் - அந்தளம் - அந்தரம். அந்தரம் - வானம்.

மேடு - மேட்டு - மேட்டு ஊர் - மேட்டூர்.

ஆறு - ஆற்று ஊர் - ஆற்றூர் - அத்தூர்.

ஆத்தூர் - ஆட்டூர் - ஆடூர் - அடூர்.

ஆட்டூர் - ஆடு - ஊர் , ஆட்டு ஊர். எனில் மாடு - ஊர் - மாட்டு ஊர் - மேட்டு ஊர் - மேட்டூர் வராது.

பாலாறு - பால் போன்ற ஆறா? பால் போன்ற தண்ணீர் ஓடிய ஆறா? எனில் தேனாறு, அமுத ஆறு, நெய்யாறு உண்டா? நெய்யாறு கேரளாவில் உண்டு. அது நெய்யாறா நொய்யாறா? நொய் சிறிய. ஒப்ப நொய்யரிசி - உடைந்த அரிசி. நோஞ்சன் - சிறியன். சிறிய ஆறு - நொய்யாறு - நெய்யாறு.

பாலாறு - பள்ளாறு என இருப்பின் பள்ளமான ஆறு. பள்ளம் - குழி - ஆழம் - ஆழமான ஆறு.

காவிரி - கார் விரி - விரிந்த நீர் ஆறு - அகன்ற ஆறு.

கார் - ஊர் - கார் ஊர் - காரூர் - கரூர்.

காவாரி - அதிக வெள்ளம் வரும் ஆறு. காஆறு - காவாறு - காவேறு - காவேரி - காவிரி - Cauvery.

வார் - வாரி - நீர், மழை (ஒப்ப - மாரி - மழை). வாரி - ஓடுதல். வாரி - தெப்பம் - குளித்தல் - ஸ்ரீவாரி - நீராட்டு. அம்மவாரி - அம்மவாரு - பெண் தெய்வம் - மழைத்தெய்வம். வாரி - வெள்ளம். வாரி - கடல். வாரி - வழி, வாயில்.

புளுவன்கள் (puluvans - 6846) - கோயம்புத்தூர் பகுதியின் பயிர்த் தொழில் செய்வோர். புளுவன்களின் பெயர் சரியான பெயர் சந்தேகமாக இருக்கிறதாம். புளுவன் - புள்ளுவன் - புள்ளவன் - பள்ளவன் - பள்ளன். pallan பெயர் தான் புள்ளன் எனக் குறிப்பிடப்பட்டள்ளது எனில் பொருத்தமே. குலுவன் - மலை நாடன்.

கணக்கெடுப்பில் சமணர்கள் - ஜெயின் Jain - 25,716 பேர். சென்னைப் பிரசிடென்சியின் பெரும்பாலான ஜெயின்கள் வேளாண்மை செயிகிறார்களாம் - many of them are cultivators in Madras presidency. 28 உட்பிரிவுகள் உள்ளன. சமணர்களில் ஜெயின் பிராமின், சத்ரியர், பாண்டாக்கள், வெள்ளாளர்கள், சவராக்கள் (Savaras - கர்நாடகம்) உள்ளனர்.

வடக்கின் ஜெயின்கள் தென்னாட்டில் சமணர் என அழைக்கப்படுகின்றனர். சிரவணர் - சமணர். தமிழில் சரவணன் எனில் முருகன், சரவண குளத்தில்

பிறந்ததால் சரவணன். சரம், சலம் - நீர். வெப்பமான நீர் வெந்நீர். தண்மையான நீர் தண்ணீர், குளிர்ச்சியான நீர்.

அருகன் - சமண முனிவர் - மகாவீரர். முருகன் - மருகன் - மருமகன் - திருமால் மருமகன். சேரலர் மருக. சேரலரின் மருமகன்.

முருகு - இளமை, அழகு, மணம், வேள்வி, எழுச்சி, தேன், கள், காதணிவகை, திருவிழா. இளமையானவன் எனும் பொருளில் இளையோன்.

முருகன் - இளமையாவன், அழகன். அப்பனுக்கு இளையவன்.

அருகன் - சமணன், சமண மதத்தினன்.

அருகக்கடவுள் - Arhat, அர்ஹத் - அருகத் - அர்கர் - அர்கன் - அருகன்.

அர்கத் - அறிவானவன், உயர்ந்தவன்.

தீர்த்தன் - வினைகளைத் தீர்ப்பவன், துன்பங்களைப் போக்குபவன், அறிவுரை சொல்பவன் - தோழன்.

அருகன் - அருக - அருகில் - அருமை - நெருக்கம் - தோழன்.

அருகர் - நோன்புடையவர், தவர்.

காடா - கௌடா - Gauda - கன்னடம்

காடோ - கௌடோ - Gauda - ஒடியம்

Gauda - mountain - மலை

கவுடர் பயிர்த்தொழில் செய்தாலும் அவர்களுக்கு கால்நடை மேய்ப்பே பரம்பரைத் தொழில். உட்பிரிவுகள் - சுல்லோ கொண்டியா (Sullo Khondia) - போலோடியா (Bolodia), கோபபுரியா (Gopapuria), மதுரபுரியா (madura Puria), , கவுட என்பதை ஹாலுவக்கீகளும் (Haaluvakkis), வக்கலிக்கர்களும் (Vakkaligal) பட்டப் பெயராகப் பயன்படுத்துகிறார்கள்.

(சுல்லோ கொண்டியா - கல்லுக் கட்டியோ. கோபபுரியா, மதுரபுரியா - கோபியர் மதுராபுரியோ)

வக்கலிகா - கோயம்புத்தூர் மாவட்டத்தில் பெரும்பான்மையாக உள்ளனர். சிறு எண்ணிக்கையில் சேலம், மதுரை, பெல்லாரி, நீலகிரி, தெற்குக் கன்னட மாவட்டங்களிலும் இருக்கின்றனர். முக்கியத் தொழில் வேளாண்மை. ஒக்கலு (Okkalu) எனில் பயிர்த்தொழில், வேளாண்மை. 92 உட்பிரிவுகளில், பெரும்பான்மையாக இருப்பவர் இடையர் குடி.

**வேளாண் தொழிலாளர்கள்** - அன்றைய சென்னையின் அதிகமான மக்கள் தொகைக் கொண்ட பிரிவு இதுவே. சுமார் 70,36,838 பேர். அதாவது 19.75 சதமானம். இனவரைவியலில் இப்பிரிவின் சில சாதிகள் மிகுந்த முக்கியத்துவம் கொண்டவை.

பறையர் - 20,59,466 பேர்.

பள்ளி, வன்னியர்கள் அல்லது படையாட்சிகள் - 21,51,072 பேர்.

பள்ளி மக்கள் தமிழக மாவட்டங்கள் அனைத்திலும் இருந்த போதிலும், சேலம், வட, தென் ஆற்காடுகளில் அதிகமாக வாழ்கின்றனர். மதுரை - 20,000 பேர். திருநெல்வேலி - 2402. பள்ளி மற்றும் பள்ளர் ஒரே பொருள் கொண்ட போதிலும், தற்போது இரு சாதிகளும் வேறுபட்டவையாக இருக்கின்றன - Palli and Palla are etymologically the same, but the castes are now quite destinct.

வன்னி என்பதற்கு அக்னி, குதிரை, கிளி, வாள், போதி, வீரம் எனப் பல பெயர் சுட்டப்படுகிறது. சம்பு முனிவரின் வேள்வியிலிருந்து பிறந்தவர்கள் வன்னியர்கள் எனப்படுகிறது. வன்னி - வாஹ்னி (Vahni), நெருப்பு எனக் கொள்ளப்படுகிறது. படையாட்சி பிற்காலத்தியப் பெயர் - Patayachi is of late origin.

வன்னியர்களில் 366 உட்பிரிவுகள் உள்ளன. முக்கியமானவற்றின் எண்ணிக்கை,

| | | |
|---|---|---|
| அகமுடையான் | - | 50,614 |
| அக்னி | - | 1,09,348 |
| அரசு | - | 1,82,277 |
| சத்ரியன் | - | 1,02,413 |
| நாகவடம் | - | 29,497 |

| | | |
|---|---|---|
| நத்தமான் (Nattamaan) | - | 34,571 |
| ஓலை (Oolai) | - | 56,689 |
| பந்தமுட்டு (Panda muttu) | - | 79,626 |
| பெருமாள் கோத்ரம் | - | 14,818 |

பள்ளி என 13,11,276 பேர் பதிந்துள்ளனர். ஆவணத்தில் வன்னியர்கள் சடங்கு முறைகள் வெகுவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அம்மன் வழிபாட்டில் சிறந்தவர்கள் - Addicted to the worship of Sakthi. சக்தி - திரௌபதியம்மன்.

அன்றைய சென்னை மாகாணப் பள்ளன்களின் மக்கள் தொகை - 7,80,558. வேளாண் தொழிலாளர்கள். தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலியில் அதிகமானோர் வாழ்கின்றனர். சேலம், கோயம்புத்தூர் பகுதிகளிலும் பரவலாக உள்ளனர். பிற தமிழ் மாவட்டங்களில் குறைந்த எண்ணிக்கையில் இருக்கின்றனர்.

பள்ளரில் 200 பிரிவுகள் சுட்டப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| ஆயா (Aiya) | - | 12,991 (மதுரை) |
| அம்மா (Amma) | - | 1,05,607 (மதுரை, நெல்லை) |
| அஞ்ஞா (Ajnna) | - | 1,00,056 (மதுரை, நெல்லை) |
| தேவேந்திரர் | - | 75,780 (சேலம், கோயம்புத்தூர், தஞ்சை, திருச்சி) |
| கடையன் | - | 18,830 (மதுரை) |
| மங்க நதி (Manga nati) | - | 15,544 (மதுரை) |
| சோழிய | - | 41,015 (மதுரை - 22,963) |
| தொண்டமான் | - | 49,231 (திருச்சிராப்பள்ளி) |

பள்ளன் என 2,13,222 பேர் பதிந்துள்ளனர். பள்ளன் எனப் பதிந்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

இறைச்சி, குடி உண்டு. எனினும் பள்ளர்கள் மாட்டுக் கறி உண்பதில்லை - The use of flesh, liquor is allowed but the pallas will not eat beef.

பாதுவான பட்டங்கள் மூப்பன், குடும்பன் மற்றும் மன்னாடி - Common titles are muuppan and kudumban and some style themselves mannadi.

குடும்பன், குறும்பன் என்பதன் ஒரு வகையாக இருக்கலாம். மன்னாடி என்பது பல்லவர்களின் (குறும்ப மக்களின்) உரிமைப் பட்டமான மன்றாடியின் திரிபாக இருக்கலாம் -Kudumban is probably a form of kurumban and mannadi is a corruption of manraadi, a title borne by the pallava (Kurumba people), it thus seems not improbable that the pallas are representatives of the old pallavas or kurumbas. எனவே, பள்ளர்கள் பழைய பல்லவர்கள் அல்லது குறும்பர்களைச் சேர்ந்தவர்கள் என்பது தவறாக இருக்க முடியாது.

மூப்பன் - 29,635 பேர். தஞ்சாவூர் மக்கள். ஒரு சிலரைத் தவிர பெரும்பாலானவர்கள் வேளாண் தொழிலாளர்கள். மூப்பன்கள் கள்ளர்களின் பிரிவாக இருக்கலாம்.

ஊராலி - 42,295 பேர். மதுரை, நெல்லை மாவட்டங்களில் அதிகம் வாழும் வேளாண்மைத் தொழிலாளர்கள். ஊராலி - ஊர்களின் ஆட்சியர்கள். முத்துராசாக்களின் உட்பிரிவாகச் சுட்டப்படுகின்றனர். குரும்பர்களின் ஒரு பிரிவு.

மாலாக்கள் (Maalas) - தெலுங்கின் பறையர்கள் - Pariahs of Telugu country. மொத்தமுள்ள 13,62,531 மக்களில் பாதிப்பேர் கோதாவரி மாவட்டத்தில் வாழ்கின்றனர். வங்காளத்தில் மார் (maar), மகர் (Mhaar), மா (Maa) எனச் சுட்டப்படுகின்றனர். பறையர் போன்றே மாலாக்களும் நெசவாளர்கள் எனக் கூறப்படுகின்றனர் - as pariah, malas also said to be weaver.

பணியன் - 33,282 பேர். வேளாண் பணியாளர்கள். மலபாரின் வயநாடு, கோட்டயம் பகுதிகளில் அதிகமும் வசிக்கின்றனர்.

செருமான் அல்லது புலையன் - 2,58,402 பேர். தென் மலபாரில் செருமான் எனவும், வட மலபாரில் புலையன் எனவும் அழைக்கப்படுகின்றனர். செருமான் எனில்

சிறுமனிதன் (சிறுமான்?). 39 உட்பிரிவுகள் உள்ளன. முக்கியமானவை - கணக்கன், புலசெருமான், ஈராளன், கூடன், கோலன. உயரம் குறைவானவர்கள். அடர் கருப்பு நிறமானவர்கள். வயல் வேலைக்காரர்கள்.

செருமான், சிறுமனிதன் - சிறுமான்? பொருத்தமில்லையே. செரு - வீரம். வீரமானவர். ஈராளன் - ஈரடியால் அளந்தவனோ. இருஉலகத்தை ஆள்பவனோ. புலையன் - புலை என்பதை இறைச்சியோடு ஒப்பிட்டு, சமூக அடுக்கில் புலையர் மக்கள் மிகக் குறைவாக மதிக்கப்பட்டிருக்கின்றனர். புலை எனில் மீன் எனவும் பொருளுண்டு. வங்கத்தில் புலையா எனில் மீனவர். மீனோடு தொடர்பு கொண்டவர். எனில் சேரள புலையரும் முன்பு மீனவராக இருந்திருப்பர். கால மாற்றத்தில் மாட்டோடும் தோலோடும் தொழில்படுத்தப்பட்டிருப்பர். ஒருகாலத்தில் இந்தியா முழுக்கவே, குறிப்பாக தென்னாடு முழுமையும் திருமால் மரபே பெரும் புகழோடு இருந்திருக்கிறது. கடந்த ஆயிரம் ஆண்டுக் காலத்திலேயே, சைவம் வெகுவாக பரப்பப்பட்டு, சைவமதம் பெருமதமாக முன்னெடுக்கப்பட்டு வளர்ந்திருக்கிறது. சைவத்தைப் பரப்ப முனைந்தவர் திருமால் மரபினரை மட்டுப்படுத்தினாரோ? அவரது சமூக அடுக்கைக் குறைத்தாரோ? தொல்குடிகளெல்லாம் தீண்டாதாராக்கப்பட்டதன் உண்மையான காரணமென்ன? உதாரணமாக - பள்ளர், பறையர், சாணார் மூன்று குடிகளுமே திருமால் மரபினரே. தற்போது இம்மூவரும்தான் தங்களை சிவமரபென்று ஓங்கி ஒலிக்கின்றனர்)

ஹோலியா (Holeya) - 1,34,835 பேர். கன்னட பறையர் சாதி - Cannarese pariah caste. Holian - Canneries form of palla, palli, paraiyan, palayan - கோலியன் என்பது கன்னட பள்ளன், பள்ளி, பறையன், பளயன். தென் கருநாடகத்தில் அடர்த்தியாக வாழ்கின்றனர். கோயம்புத்தூர், நீலகிரியிலும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் உள்ளனர்.

(பள்ளன் எனும் பெயர் பழையன் என்பதன் திரிபாக இருக்கலாமோ? பழயன் என்பதை பழையன், பழமையானவன் எனச் சுட்டலாமன்றோ. பழமையான ஐயன் - பழையன். உழதவன் உழவன். பழையன் பெயர் பழயன் மழயன் மழவன் எனத் திரிந்திருப்பதும் ஒப்பு நோக்கத்தக்கது. பறை ஐயன் - மொழித்திறன் கொண்டவன் பறையன்)

பைடிகள் (paidis) - 24,665 பேர். விசாகப்பட்டின மாவட்ட வேளாண் பணியாளர்கள்.

ரெல்லிகள் (Rellis) - கஞ்சம், விசாகப்பட்டின வேளாண் தொழிலாளர்கள், தோட்ட வேலைக்காரர்கள். ரெல்லி அல்லது ரெல்லி எனில் புல் எனப் பொருள்.

**மலைவாழ் மற்றும் காடுவாழ் பழங்குடிகள்** - இவர்கள் பிராமணியத்தால் மிகவும் குறைவான தாக்கங்களுக்கு உட்ப்பட்ட மக்கள்.

கோந்துக்கள் (Khond) – 3,26,586 பேர். தெலுங்கு மலைக் காடுகளில் வாழ்கின்றனர். கொண்டா - தெலுங்கில் மலை. 58 உட் பிரிவுகள் உள்ளனர்.

குறுமன் - 16,857 பேர். நீலகிரி, வயநாட்டில் உள்ளனர். மரம் வெட்டும் தொழில். இவர்கள் குறும்பர்களின் மற்றொரு வகையினர். குறும்ப நாட்டின் அரசுரிமை கொண்டிந்தவர்கள். உட்பிரிவுகள் - முல்லு குறுமன் (Mullu Kuruman), வேட்ட குறுமன், ஊராலி குறுமன், தென் குறுமன், தச்ச நாடன் (Tacchanadan).

மலையன் - 7785 பேர். மலபாரின் அனைத்து வட்டங்களிலும் உள்ளனர். ஆற்காட்டில் மலையாளி (malayali) எனப்படுகின்றனர்.

**பூசகர்கள் பிரிவில்,** பிராமணர் - **11,21,110** பேர், தென்னிந்தியப் பிராமணர்கள் தூய ஆரியர்களல்லர். திராவிடர்களோடு கலந்தவர்கள். பல்லவ அரசுரிமைகளின் போது நிலங்கள் கொடுக்கப்பட்டனர். கடம்பர் அரசில் பிராமணர்கள் குடியிருப்புகள் இருந்தன. ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண்டில், பாலாற்றைக் கடந்து வட தமிழகத்திற்கு வந்தனர். ஐந்து மற்றும் பத்தாம் நூற்றாண்டுக்குள் சோழ மற்றும் பாண்டிய அரசோடு நெருக்கமாகிவிட்டனர்.

பட்டங்கள் - முன்பு சர்மா (Sarma), நம்பி - உயர்ந்த மனிதன். சைவம் - குருக்கள், வைணவம் - அர்ச்சகர், பட்டர், அய்யங்கார். தீக்ஷதர், சாஸ்த்ரி, பட்டாச்சாரியர், பண்டிட். ஆந்திரா - பந்துலா - ராவ், ராயர், அய்யன்.

பண்டாரம் - 41,738 பேர்.

பிராமணல்லாத பூசகரில் 115, உட்பிரிவுகள் உள்ளன. முக்கியமான இரண்டு பிரிவு - ஆண்டி, லிங்கதாரி.

வள்ளுவன் - 89,831 பேர், பறையர், பள்ளரின் பூசகர்கள். பிராமணர்களின் வருகைக்கு முன் பல்லவர்களின் பூசகர்களாக இருந்தனர். (வள்ளுவன் - இத்தளி உவச்சன ஸ்ரீ வல்லுவம் பூவணவன் நியதம் ஆளாளிட்டு உவச்சப்பணி செய்பவன் - திவாகர நிகண்டு) (உவச்சன் - ஒச்சன் - அச்சன்) (Sri Valluva Puuvanavan, the uvaccchan of this temple will employ daily six men for doing the temple service) வள்ளுவரில் 82 உட்பிரிவுகள்.

பறையன் - 3461 (தென்னாற்காடு - 2297)

தாவிடதாரி (Taavidadaari) - 3286 (தென்னாற்காடு - 3102),

திருவள்ளுவன் - 3388 (சேலம் 780, கோயம்புத்தூர் - 1120)

வள்ளுவன் சாதி மற்றும் உட்பிரிவு எனப் பதிந்தவர் - 22,875. சோதிடராகவும் மருத்துவர்களாகவும் பணிபுரிந்தனர் கூலியாக அறுவடையின் போது தானியங்கள் வழங்கப்பட்டன.

ஜங்கம் - 87297 பேர். லிங்காயத்துகளின் பூசாரிகள் - சங்கமா லிங்காயத்துகள். 388 உட்பிரிவுகள்.

**கோவில் பணியாளர்கள்** - ஒச்சன் (Occhans) - 3330 பேர், அம்பலவாசி - மலபாரில் மாரயான் (maarayan) எனப்படுகின்றனர். வாரியன் (Variyan) - 4796 பேர், பொதுவாள் (Poduvaal) - 4908 பேர்.

**எழுத்தர்களில் -** கணக்கர் - 40192 பேர். ஊர்க் கணக்கர்கள். பட்டப் பெயர் வேலான், பிள்ளை.

கர்ணம் - 54,168 பேர் - தமிழ் - கணக்கன். தெலுங்கு - கர்ணம் (Karnam). இந்தி - கிராணி (Kiraani).

**சோதிடர்கள்** - கணிசன் (Kanisan) – 14,922 பேர், மலபாரில் கணியன், திய்யன் (Tiyyan) பெயரும் உண்டு.

புள்ளுவன் - 1846 பேர்.

**வணிகர்கள்** - செட்டி (Chetti) - 6,38,127 பேர். செட்டி என்பது சாதியாகவும் பட்டமாகவும் வைத்துக்கொள்ளப்படுகிறது. 183 பிரிவுகள்உள்ளன.

| | | |
|---|---|---|
| பேரி (Beri) | - | 33,631 |
| தேவாங்க (Devanga) | - | 35,598 |
| சானப்பன் (Janappan) | - | 15,735 |
| காசுக்காரர் (Kaasukkar) | - | 9312 |
| கோமடி (Koomati) | - | 96,297 |
| மஞ்சபுத்தூர் | - | 10,146 |
| நகரத்து | - | 22,167 |
| நாட்டுக்கோட்டை | - | 7851 |
| பாப்பட | - | 2801 |
| சேனைக்குடையான் | - | 9023 |
| சோழியன் | - | 22,617 |
| தெலுங்கன் | - | 45,366 |
| வாணியன் | - | 47,599 |
| வெள்ளாளன் | - | 32,743 |
| வயநாடு | - | 1404 |

தமிழ் செட்டிகள். தெலுங்கில் கோமட்டிகள். கோமட்டிகள் - 287,722 பேர். கோ-மதி கோ-மாடு. கோ-நரி. கோமதி - சிறிய வீடு. மடிகா - பெரிய வீடு. கோமட்டிகளுக்கும் மடிகாக்களுக்கு சமய சார்பில் உடன்பாடு உள்ளதாம்.

லெப்பைகள் (Labbaid) - 3,47,950 பேர். சோரகன், ராவுத்தன், மரைக்காயன் பெயர்கள். 55 உட்பிரிவுகள். பெரும்பான்மையினர் வணிகர்கள். சிலர் கோரைப்பாய் பின்னுவதில் ஈடுபட்டுள்ளனர். மற்வபர் முத்துக் குளித்தல், சங்குத் தொழிலில் உள்ளனர். வீட்டில் பேசுவது தமிழ். மரக்கலம் ஓட்டுபவர் மரைக்காயா., ராவுத்தர் - குதிரைவீரர்.

வடுகன் (Vadugan) - 1,80,884 பேர். தமிழில் வடக்கன். பாலிஜாக்கள். கம்மா வடுகன் - மதுரை, நெல்லையில் அதிகம். கவரா வடுகன் - கோவை, தஞ்சை, மதுரை, நெல்லையில் அதிகம்.

பாலிஜா (Balijas) - 7,11,370 பேர். பொதுவான பெயர் நாயடு. மாகாணத்தில் பரவலாக வாழ்கின்றனர். கலப்பானவர்கள் - Mixed one. 650 உட் பிரிவுகள். உப்பு அல்லது பெரிக்கி (பெரிய) பாலிகா - உப்பு வியாபாரம். கசுலா – வளையல். லிங்கபாலிசா - கன்னடம். தோட்ட பாலிகள் - (Toda) - தோட்ட வேலை. வட (Vaada) பாலிசா - வடம், வல்லம் (Boat). ரல்லா (Ralla) பாலிசா - கல். முத்தியாலா (Mutiaala) முத்து. பகடிலு (pagadilu) பவளம். கெம்புளு (Kempulu) ரூபி. துணி (Duudi).

முத்து கம்மல் (Mutu kammala) எனும் தனித்த ஒரு கம்மலை அணிகின்றனர். கௌரியை வணங்குபவர்கள். பாலிசாக்கள் வழிபடும் கௌரி சிலையும், நகைகளும் மாலாக்களிடமே கொடுத்துவைக்கப் படுகிறது - malas are the hereditary custodian of the idol of Gauri and her jewels. பாலிசாக்களின் விவரங்களில் பாலாறு பிளந்து வழிவிட்ட கதையெல்லாம் விவரிக்கப்பட்டுள்ளது.

(கௌரி - காரி - மழை)

கவரை 1,68,966 பேர். கவரை என்பது தெலுங்கு பாலிஜாக்களின் தமிழ்ப் பெயர்.

மாப்பிள்ளா - 8,2,2904 பேர். மலையாளத்தின் வணிக சாதி. உட்பகுதிகளில் வேளாண்மை செய்கின்றனர். அரபு - உள்நாட்டவர் திருமணத்தால் உருவனவர்கள் எனக் கூறப்படுகின்றனர். நஸ்ராணி மாப்பிள்ளை (Nazrani), யூத மாப்பிள்ளை (Juda), சோனகர் மப்பிள்ளை (Jonaka) என உண்டு. 4540 பேர் புலைய மாப்பிள்ளை எனப் பதிவு செய்துள்ளனர். மீனவரான மூக்கவர் இசுலாமிய மதத்திற்கு மாறியும் மாப்பிள்ளையாகியுள்ளனர்.

அரபிக்கடல் லக்கத் தீவின் (லட்சத் தீவு) மாப்பிள்ளைகள் தனித்துவமானவர்கள். அவர்கள் மாப்பிள்ளை என அழைத்துக் கொள்வதில்லை - People are not called maappilas).

லக்கத் தீவுகளின் தொல் மக்கள் கூயா (Kooya), மாலுமி (Malumi), ஊருக்காரன் (urukkaaran), தக்ரு (Takru), மிலிக்கன் (Milikkan), Melacchen (மிலேச்சன்) எனக் குறிப்பிடப்படுகின்றனர்.

கூயா, கோயாக்கள் நிலம் மற்றும் படகு வைத்திருப்பவர். உயர்ந்த குலம். மிலேச்சர்கள் கோயக்களிடம் பிணை போன்று இருப்பவர்கள். மற்றவர் ஒரு படகு வைத்திருப்பவர், கோயாக்களின் நிலங்களில் பயிர் தொழில் செய்யபவர்கள். இருபது சதவித விளைச்சலை கோயக்களிடம் கொடுத்துவிட வேண்டும்.

தொல்மக்கள் மாப்பிள்ளா போன்று உடையணிகிறார்கள். எனினும் மிலேச்சர்கள் முரடான துணி அணிகிறார்கள். மிலேச்சர்கள் மற்றவர் வீடுகளில் பெண் எடுக்க அனுமதியில்லை.

கோயா - நம்பூதிரியின் வழியினராகக் கூறப்படுகிறது. மிலேச்சன் - தியன், முக்குவர் மற்றும் நாயர் மரபினர். கோயார்கள் (Kooyaars) கார்ணவர் (Kaarnavar) எனவும் அழைக்கப்படுகின்றனர்.

மாகாணத்தில் முட்டான் (Muttan) - 7909 பேர், தரகன் (Tarakan) - 5963 பேர் வாழ்கின்றனர். இவர்கள் நாயர்களின் உட்பிரிவாகக் கூறப்படுகிறது. காளி கோவில் பூசகர்கள்.

**சுமை தூக்கி விற்பவர்களில்** லம்பாடிகள் (Lambadi) – 37,894 பேர் உள்ளனர். பஞ்சாரிகள் (Baajaaris) மற்றும் சுகாலிகள் (Sugaalis) எனவும் அழைக்கப்படுகின்றனர். தென்னிந்தியாவின் நாடோடு வணிகர்கள். வாலி (Baali), சுக்ரீவனின் வழித்தோன்றல்களாகக் கருதப்படுகின்றனர். கன்னடம் மற்றும் தெலுங்கு பேசுகின்றனர். பஞ்சாரி பெண்கள் உயரமாகவும் அழகாகவும் உள்ளனர். கால்நடைக் களவாளர்கள், வழிப்பறியர்கள் எனப் பெயரெடுத்துள்ளனர். ஊர்த் தெய்வங்களான குட்டலம்மா (Guttulamma), கம்பலம்மாவை (Kampalamma) வணங்குகின்றனர். வழியில் குட்டாலம்மாவுக்கு ஒரு கல்லெட்டுத்துப் போடுவது வழக்கம்.

**கைத் தொழிலாளர்களில்** கம்மாளர்கள் 4,70,410 பேர். கணக்கெடுப்பில் தட்டன், கொல்லன், தச்சன் போன்றோர், அதே பெயரிலேயே பதிவு

செய்திருக்கிறார்கள். ஏராளமான கம்மாளர்கள் உட்பிரிவுகள் குறிப்பிடாமல் பதிந்துள்ளனர். கம்மியன், கம்மாளன் தம்மை பிராமணருக்குச் சமமானவராகக் குறிப்பிடுகிறார். விஸ்வகர்மா, பானோஹாலி (Paanohaaly), விஸ்வ பிரமா, ஆசாரி எனக் குறிப்பிடப்படும் கம்மாளர்களின் பிரிவுகள்,

தட்டன் (Tattan) அல்லது கம்சலா (kamsala) - பொன்செய்பவர் - பொற்கொல்லன்.

கன்னான் (Kannaan) அல்லது கஞ்சரா (Kanchara) - தாமிர ஆசாரி.

கொல்லன் (Kollan) அல்லது கம்மரா (Kammara) - இரும்பு ஆசாரி

தச்சன் (Taccchan) அல்லது வத்ரா - மர ஆசாரி,

கல்தச்சன் - சிற்பி (Silpi) - கல் ஆசாரி.

ஐந்து பிரிவுகளுக்குள்ளும் பொதுவாக திருமணம் நடைபெறுவதில்லை - Five Divisions generally not Intermarry. ஆசாரிகளில் 412 உட்பிரிவுகள் உள்ளன. வடஆற்காடு, செங்கல்பட்டு, தென்னாற்காடு மாவட்டங்களில் அதிகமுள்ள கருமான் (Karumaan) எண்ணிக்கை – 2,11,900 பேர். பல்லவர் காலத்திற்குப் பின், சோழரின் காலத்தில் கம்மாளர்கள் சமூக அடுக்கில் மதிப்புக் குறைந்தவராக இருந்துள்ளனர்.

பூப்படைதலுக்கு முன்னரே திருமணங்கள் நடைபெற்றன. மறுமணம் பின்பற்றப்படுவதில்லை. இறைச்சி, மது சற்றே மறைக்கப்பட்டவையாக இருந்திருக்கின்றன - Nominally forbidden flesh, liquor. இறந்தோரை உட்காரும் நிலையிலேயே அடக்கம் செய்வர்.

ஆசாரி, ஆச்சாரி, பாட்டன் போன்றவை பட்டப்பெயர்கள்

(பிராமணர் - பட்டர். ஆசாரி - பாட்டையா. பாட்டையா - பட்டாச்சார்யாவின் சுருக்கமோ)

கம்சலா (Kamsala) தெலுங்கு ஆசாரிகள் - Telugu equivalent of Tamil Kammalan. 198 உட்பிரிவுகள் உண்டு. முக்கியமான பிரிவு ஆச்சாரி (Achaari). 1,31,000 பேர் கம்சலா எனப் பதிந்துள்ளனர். தெலுங்கிலும் தமிழின் ஐந்து பிரிவுகள் உண்டு.

முடிதிருத்துவோரான அம்பட்டன் (Ambattan) - 1,80,144 பேர்,.ஆண்கள் நாட்டு மருத்துவராகவும், பெண்கள் பிள்ளைப் பேறு மருத்துவச்சிகளாகவும் இருந்தனர். 164 உட்பிரிவுகளில் முக்கியமானவை - கொங்கர், பாண்டியன், தமிழ், வேட்டுவன். 97,200 பேர் அம்பட்டன் எனக் குறிப்பிட்டுள்ளர். மாகாணத்தில் நாட்டு மருத்துவர்கள், பரியாரி (Pariyaari), பண்டிதன், நாவிதன் (Naavidan), நாசுவர் (Naasuvar) எனப் பல பெயர்களில் குறிப்பிடப்படுகின்றனர்.

மங்கலா (mangala) - 1,52,865 பேர். அங்காரக்குடு (Angaarakudu), பஜந்திரி (Banjantri), கல்யாண குலம் எனும் பெயர்களால் குறிப்பிடப்படும் தெலுங்கு மாவட்ட முடிதிருத்தும் சாதி.

(அங்காரமு - நெருப்பு, கரித்தூள், எரியும் கரித்துண்டு. அங்காரக் குடு - புதன் கோள். அங்காரக வாரமு - செவ்வாய், மங்கள வாரமு)

மங்லா - தெலுங்கில் முடிதிருத்துவோர், மங்லாவினரும் நாட்டு மருத்துவர் மற்றும் தாதிகள். பட்டப்பெயர் அண்ணா மற்றும் காடு (Gaadu).

முடிதிருத்துவோருக்கு (Barber) இந்துஸ்தானத்தில் - ஹசாம் (Hajaam). உரியாவில் பண்டாரிகள் (Bhandaris),

மரயன், மாராக்கள் (Marayan, Maaraas) - தென் கன்னடம், காசக்கோடு மற்றும் தெற்கு மலபார் வட்டங்களில் முடிதிருத்துவோர், நாயர் மற்றும் உயர் சாதியினருக்கான முடிதிருத்துவோராம்.

**நெசவு சாதிகளில்** கைக்கோளன் (Kaikolan) - 3,12,506 பேர். கைக்கோளன் - சமஷ்கிருத வீரபாகு (Virabaahu) என்பதற்கு இணையானது. செங்குந்தர் என அழைக்கப்படுகின்றனர். பழைய தமிழ் இலக்கியத்தில் (மதுரைக்காஞ்சி) கம்மியன் (Kammiyan) எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். 111 உட்பிரிவுகளில் முக்கியமானவை, கொங்கன் - 11,040, நட்டுவன் - 10,824, செங்குந்தன் 1,13,611. பட்டப்பெயர்கள் - முதலி, நாயனார்.

பட்டுநூல்காரன் - 72,200 பேர். பட்டு நூல் நெசவுக்காரர். சௌராட்டிரப் பிராமணர். மதுரை, சேலம், திருச்சி, நெல்லையில் உள்ளனர். குசராத்திலிருந்து

குடி வந்தவர்கள். 54 உட்பிரிவுகள். ஆயினும் உண்மையாகத் தெரியவில்லை - But not real it seems. 7487 பேர் பிராமணர் எனவும், 4341 பேர் செட்டி எனவும், 17,200 பேர் சௌராட்டிரர் எனவும் பதிவிட்டுள்ளார். தங்களை அய்யர் என அழைத்துக்கொண்டாலும் பொதுவில் செட்டி என்றே குறிப்பிடப்படுகிறார்கள் - They called themselves as Iyer and are generally called Chetti. தமிழோடு தெலுங்கும் பேசுகிறார்கள்.

ஜானப்பன் - 14,043 பேர். Janapa – சணல் (சணல் பைய் நெசவாளர்) பாலிஜாக்களின் ஒரு பரிவு. செட்டி, சாத்துமடம் (Sathumadam) எனப் பதிந்துள்ளனர்.

சலுப்பன் (Saluppan) - 11,541 பேர் . ஷானப்பனின் தமிர் மாற்று.

சேடன் (Seedans) - தமிழக்கத்தில் தங்கியுள்ள கன்னட நெசவாளர், தெலுங்கு நெசவாளர்.

சேனியன் (Seniyan) - 18,941 பேர். சாலியரின் உறவுமுறைச் சாதி. பத்ம சாலியன் எனவும் பெயருண்டு.

சாலியன் (Saliyan) – 51,161 பேர். தஞ்சையில் அதிகம். சமஷ்கிருத Saalika பொருள் செநவாளர். நெசவுக் கடவுளான மிருகண்டரின் (Mrikanda) வழியினராகக் கூறுகின்றனர். ஆந்திரத்தவரான சாலியர், இராசராசன் காலத்தில் அழைத்துவரப்பட்டனராம். 15 உட்பிரிவுகளில், பத்மா - 6306 பேர். வலங்கை - 3010. பட்டப் பெயர் - செட்டி.

தேவாங்கர் (Devanga) - 1,33,498 பேர். தெலுங்கர். மாகாணத்தில் அனைத்துப் பகுதியிலும் உள்ளனர். தேவ (Deeva) - அங்கம் (Angam) - கடவுளின் கையாம். 116 உட்பிரிவுகள். 98,900 பேர் தேவாங்கர் எனக் குறிப்பிடடுள்ளனர். இறந்தோரை உட்கார வைத்துப் புதைக்கும் பழக்கம் பின்பற்றப்படுகிறது. பட்டப் பெயர் - செட்டி.

சுலிஸ் (Suules) - 2,31,634 பேர். தெலுங்கு நெசவாளர். லிங்காயத்துக்களின் வழக்கத்தைப் பின்பற்றுபவர். 201 உட்பிரிவுகள். பட்டு சாலே, பத்ம சாலே 1,67,625 பேர்.

தொகடர் (Togata) 58,898 பேர். தொம்பர் (Dombas) 74,249 பேர் - தெலுங்கு நெசவாளர்கள்.

சகல (Tsakala) – 3,26,649 பேர் தெலுங்கின் வண்ணான் (Washerman) சாதி. சகலகர் பான - baana - large pot - பெரிய பானை எனவும், குன (Guuna), வேலமா சகல எனவும் குறிப்பிடப்படுகின்றனர். 150 உட்பிரிவுகள்.

தோபி (Dhobis) - 25262 பேர் - ஊரியாவின் வண்ணான் சாதி.

அகச (Agasa) - 11,142 பேர். கன்னட வண்ணான். அகசி - துண்டு. 20 உட்பிரிவுகள். துளுவ, மடிவாலா முக்கியமானவை.

வெளுத்தேடன் (Veluttedon) - 10,660 பேர். நாயர் மற்றும் உயர் சாதியினர் துணி வெளுக்கும் சாதி. நாயர் எனப் பதிந்துள்ளனர். வண்ணாட்டான் - வட மலபார் துணி வெளுக்கும் சாதி.

தூடிக்குலத்தவர் (Duudekulas) - 51,058 பேர் (துணிக்குலம்?) பருத்தித்துணி சுத்தம் செய்பவர் (சலவைக்காரர்?) (Cotton cleaners). தமிழ் - பஞ்சாரி, பஞ்சுக்கட்டி. முசுலிம்களாக இருப்பினும் இந்து மதத்தவர் வழக்கங்களைப் பின்பற்றுகின்றனர்.

**இடையர்கள்** மொத்தம் 6,27,953 பேர். இடையர்கள் அல்லது யாதவர்களில் 408 பிரிவுகள் சுட்டப்படுகின்றன

**குறும்பர்கள்** - 3,36,003 பேர். குறும்பர்கள் கர்நூல், கடப்பா, பெல்லாரி, அனந்தபூர், வட ஆற்காடு, தென்னாற்காடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மாவட்டங்களில் அதிகம் உள்ளனர். பல்லவர் அல்லது குறும்பர்கள் ஒரு காலத்தில் தென்னிந்தியாவில் வலிமையானவர்களாக இருந்திருக்க வேண்டும். எனினம் தற்போது அவர்களது சிறப்பை அறிய மிகச் சிறிதளவே கிடைக்கிறது - Representative of ancient kurumbar or pallavas, who were of ancient kurumbars or pallavas, who were once so powerful throughout south India, but very little trace of their greatness now remains.

ஏழாம் நூற்றாண்டில் பல்லவர்கள் உச்சத்தில் இருந்ததாகத் தெரிகிறது. எனினும் சிறிது காலத்திலேயே, கொங்கு, சோழ மற்றும் சாலுக்கியத் தலைமைகள், பல்லவர்களை பல போர்களில் வெற்றி கொண்டனர்.

ஏழாம் நூற்றாண்டுக்குப்பின் குறும்பர்கள் சிதறினர். தொலை தூரங்களுக்குப் பரவினர். பலர் மலைப் பகுதிகளுக்கு தப்பினர். நீலகிரி, வயநாடு, குடகு, மைசூர் போன்ற பகுதிகளின் பரந்த வெளிகளில் நாகரிகமடையாத பழங்குடிகளாகத் தற்போதும் வாழ்ந்து வருகிறன்றனர். படையெடுப்புகள் நிகழாதிருந்தால் குறும்புகள் மிகவும் முன்னேறியவர்களாக இருந்திருப்பார்கள் - Elsewhere the Kurumbans are more advanced).

743 உட்பிரிவுகள் உள்ளன. உட்பிரிவுகள் பலவாகப் பிரிக்கப்படுகின்றன. மந்தை வைத்திருப்பவர் (herdman) குடு, கௌடு (Goudu) என அழைக்கபடுகிறார். பட்டியப்பா (Battiappa), இர்சிகப்பா (Irsikappa) போன்ற மூதாதையர் வழிபாடும் உண்டு. பாதக் குறும்பர்கள் (Paatha) தலையில் தேங்காய் உடைக்கும் வழக்கத்தவர்.

குறும்பர்களின் கோவில்கள் பரந்தவை. கருவறை சிறியதாக அமைந்தள்ளன. கோவில் திருவிழாவின் போது மட்டுமே சிலைகள் வைக்கப்படுகின்றன. குறும்பர்களின் கோவில்கள் பாண்டவர் கோவில்கள் என அழைக்கப்படுகின்றன. குறும்பர் வாழ்விடங்களில் பாண்டவர் கோவில்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன.

ஆளவந்தார் (Alavanta) - பல்லாரில் வாழும் குறும்பர்கள்.

கொல்லாக்கள் 7,88,775 பேர். தெலுங்கு மாவட்டங்களின் புகழ்பெற்ற இடையர்கள். கிருஷ்ணரின் வழிமரபினராகக் கருதப்படுகின்றனர். ஆடு, மாடு, பால் விற்றுப் பிழைக்கிறார்கள். பலர் நிலங்கள் வைத்து வேளாண்மையும் செய்கின்றனர். சிலர் அரசுப் பணிகளிலும் உள்ளனர். 274 உட்பிரிவுகள்.

ஆலு கொல்லா (Aalu Kolla) - 1,35,569 பேர். விசாகப்பட்டினத்தில் மட்டும் - 1,14,820 பேர்.

எர்ர (Erra) - 72,633

| | | |
|---|---|---|
| கர்ன (Karna) | - | 92,425 |
| மேகல (Meekala) | - | 23,202 |
| பாகநதி (Paakannati) | - | 16,747 |
| பூஜா (Puuja) | - | 1,55,075 |
| பூணி (Puuni) | - | 94,252 |
| பூரி (Puuri) | - | 33,381 |

தற்போதும் பணம் கொண்டு செல்லும் உதவியாளர்கள் கொல்லர் எனவும், பணம் எடுத்துச் செல்லும் பைகள் கொல்லா (gollas) எனும் பெயரையும் கொண்டுள்ளன. (கொல்லா - கொள்வார்?) போக்ஷ கொல்லா - கருவூலக் கொல்லராம். குறிப்பிட்ட அளவிற்கு கொல்லாக்களுக்கு சமூக மதிப்பும் உள்ளதாம். கொல்லர்கள் சட்டானிகளை (Saataanis) பூசகர்களாகக் கொண்டுள்ளனர் (சட்டானி - சாத்தனோ). கொல்லா - கோபால (Gopala) என்பதன் குறுவடிவமாக இருக்கலாம் - Gollas may be shortened form of goopala). நாயக், பிள்ளை பொதுவான பட்டங்கள்.

**வாணியர்களில்** (Vaniyans) - 1,51,719 பேர். வாணியன் எனக் குறிப்பிட்டுள்ளவர் - 86290. 126 உட்பிரிவுகள். பெரும்பாலும் வெள்ளாளரை ஒத்துள்ளனர்.பட்டப் பெயர் செட்டி. மலபாரில் 58,894 வாணியர். நாயரை ஒத்திருக்கின்றனர். இவர்களில் 32,746 பேர் நாயர் என்றே பதிந்துள்ளனர்.

காண்ட்லா (gaandla) - 32,189 பேர். தெலுங்கு எண்ணெய் பிழிபவர்.

கணிகா - (ganiga) - 17691 பேர். கன்னட எண்ணெய்க்காரர்.

பானை செய்பவர்களான குசவர்கள் (Kusava) - 1,24,332 பேர். 45,800 பேர் குசவன் எனப் பதிந்துள்ளனர்.

கும்மார (Kummaara) - 1,48,854 பேர். தெலுங்கு. கன்னடத்தில் - கும்பாரா. உரியாவில் கும்பரோத. கும்பக்காரர் - பானை செய்பவர். 233 உட்பிரிவுகள். தெலுங்கு கம்மராக்கள் அரசருக்குச் சமைப்பவர்களாம்.

உப்புக்காரான உட்பிலியர்கள் (Uppiliyargal) – 36,931 பேர். முன்பு உப்புத் தொழில் செய்தவர்கள் தற்போது வேளாண்மையும் பொது வேலைகளும் செய்கிறார்கள். 45 உட்பிரிவுகள். பட்டம் - நாயக்கன்.

உப்பார் (Uppara) - 1,00,141 பேர். தெலுங்கு உப்புக்காரர். குளம் தோண்டுவதும், மண் வேலைகளும் உணடு. மண்ணுப்புக்காரர். 195 உட்பிரிவுகள். பாலிஜா - 13,509, தெலுகா - 12,786. குல தெய்வங்கள் சுங்கலம்மா, ஜம்புலம்மா, திம்மப்பா (Thimappa).

கடுப்பாட்டான் - 17,746 பேர். எழுத்தச்சன் (Ehuttaccchan). பல்லக்குத் தூக்குபவர்கள். உப்பு மற்றும் எண்ணெய் கொண்டு செல்பவர். கல்வியாளர்கள் - Profession by teaching. நாயர் போலுள்ளனர்.

**மீனவர், படகுக்காரர் மற்றும் பல்லக்குத் தூக்கிகளில்** (fisherman, Boatman, Palki - bearers) - செம்படவன் - 51,793 பேர். செம்படவன் - Good boatman - செம்மையான படகுகாரனாம். 66 உட்பிரிவகள். பட்டனவன் - 8369, வலையன் - 6831. பெரும்பாலும் சைவர்களாம். சிலர் அங்காயி (angaayi) (அங்காளம்மன்) கும்பிடுகின்றனர். பட்டம் - நாட்டன் (Naattan), கவந்தன் (kavandan).

சிவியன் (Siviyan) - 5679 பேர். பல்லக்கத் தூக்கிகள். பெயர் பொருத்தம் சந்தேகமானது எனக் குறிப்பிடப்பட்டள்ளது - doubt. உட்பிரிவுகள் இடையன், செம்படவன்.

தொரயா (Toreya) - கோயம்புத்தூர், சேலத்தில் அதிகம். மீனவராக இருப்பினும் தற்போது பயிர்த்தொழில் செய்கின்றனர். 49 உட்பிரிவுகள். பரிவாரம் (Paarivaaram) - 1022 பேர் முக்கியமான பிரிவு. விஷ்ணுவை வழிபடுகிறார்கள். பட்டம் - செட்டி.

பெஸ்தா (Besta) - 34,565 பேர். தெலுங்கு - வேட்டைக்காரர். மீனவர். தற்போது பெருமளவில் பயிர்த் தொழில். 111 உட்பிரிவுகள். விஷ்ணு வழிபாட்டாளர்கள். பட்டம் - நாகுடு (Naagudu).

போயா (Boya) - 3,51,536 பேர். தெலுங்கு வேடர்கள். கிராதகர் (Kirathagar) என்று பெயர். நிறைய ஜமீன்தார்கள் உண்டு. வைணவர்கள். பூசகர்கள், சத்தானிகள். பட்டம் - நாயர், நாயுடு, தொர (dora).

பள்ளிகள் (Palles) - 1,30,146 பேர். தெலுங்கு மாவட்டகளின் மீனவர்கள். இவர்கள் மிகச் சிறந்தவரான பள்ளிகள் அல்லது வன்னியரின் குலம் போன்று தெரிகிறது - It seems propable that, they are a brach of the great palli or vanniya tribe).

புச்சனன் குறிப்பில் (Buchanan's Mysore, Canara and Malabar Volume 1.p.182) மீன்பள்ளி (mina palli)/ வான் பள்ளி (Vaan Palli) குறிப்பிடப்பட்டிருக்கிறது. உட்பிரிவுகள் - மர்க்கால (Markaalu) (மரக்கலம்) மற்றும் சென்டிகா (Sendiga) (செம்படவா?)

கெவுட்டோ (Kevutos) - கஞ்ச் மாவட்ட மீனவர்கள் - (கெவுட்டோ - கட்டுமரமோ?) வங்காளத்தின் கைபர்டாக்களின் வழித்தோன்றல்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். வைணவர்கள்.

பாரி (Bauri) - 74812. உரியாவின் பயிர்த் தொழில் மற்றும் பல்லக்குத் தூக்கிகள். கஞ்சம் மாவட்டத்தில் மட்டும் உள்ளனர்.

முக்குவன் (Mukkuvans) - மலபாரின் கடல் மீனவர்கள். முகயன் - ஆற்று மீனவர்கள். கன்னடத்தில் மொகர் (Mogeer)/ மகர் (Mager).முக்கவர்களில் இல்லம் எனும் பிரிவுகளுள்ளன. 14 உட்பிரிவுகள். அதிகமாக சடங்கு முறைகள் கொண்டவர்கள் - having elaborali ceremonies. இல்லங்களின் தலைமையானவரே பூசகர். அரயன் (arayan) பரம்பரையாக வருவது. கடவன் (Kadavan) - நியமிக்கப்படுவது. பெரும்பாலானவர்கள் இசுலாமியர்களாக மாறியுள்ளனர். 1881 - கணக்கீட்டில் 15,587 பேர்.

**சாராயம் மற்றும் கள் தொழில் தொடர்புடைய சாதிகளில்,** கள்ளோடு தொடர்புடைய சாணான் (shannaan) 5,51,481 பேர். சாணான், கிராமணி, நாடன் (naadaan), சான்றோர் (saanror) பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

துணைக்கண்டத்தின் தெற்கிலுள்ள சாணான்கள் கள் இறக்குவதற்குப் பெயர் பெற்ற சாதி -The shaanaans are the grand toddy-drawing caste of the south of the peninsula. தமிழ் மாவட்டங்கள் அனைத்திலும் காணப்பட்ட போதிலும், திருநெல்வேலி, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் அதிகமாக உள்ளனர். சமூக அடுக்கில் பள்ளர் மற்றும் பறையருக்கு சற்று மேல இடம் பெற்றுள்ளனர் -In social position they are usually placed only a little above the pallas and the paraiyans. நாடார்கள் முன்பு தீட்டுச் சாதியாக -Polluting caste குறிப்பிடப்பட்டாலும், பிற்காலத்தில் பலர் சத்ரியர் எனக் கூறிக்கொள்கின்றனர். கணக்கெடுப்பில் 24,000 பேர் சத்ரியர் எனக் குறிப்பிட்டுள்ளனர். இது ஏற்றுக்கொள்ள இயலாதது. ஏனெனில் திராவிடத்தில் சத்ரியர் இல்லை -This is of course, absurd as there is no such thing as a dravidian kshatriya, but it by no means certain that the shaanaans were not as one time a war like castes of the south, such as the Billavas (Bowman)/ Haleo Paik (the old foot soldiers), kumara Paik (the junior foot). இருப்பினும், சாணான்கள் ஒருகாலத்தில் போர் சாதியாய், இருந்திருப்பதை மறக்க இயலாது. ஏனெனில் போர்த் தொழிலோடு தொடர்புடைய தென்னிந்திய சாதிகள் கள் இறக்கும் தொழிலோடு தொடர்புள்ளதை அறிய முடிகிறது. பில்லவாக்கள் (வில்லவர்கள்), காலாட்படையினர் (haleepaik) போன்றே போர்ச் சாதியினர் கள் இறக்குகின்றனர். மைசூரின் கடம்பா மன்னர்கள் கூட கள் இறக்கம் சாதி எனவே குறிப்பிடப்படுகின்றனர். பணை மரத்தின் ஒரு வகையான கடம்ப மரத்திலிருந்தும் கள் இறக்கப்படுகிறது.

தெற்கு - மேற்கு இந்தியாவில் பல்வேறு பெயர்களில் பரவியுள்ள தொல்குடிகளில், கள் இறக்குவது தனித்த தொழிலாக இருக்கிறது. இவர்கள் முன்பு காலாட்படையிலும், மெய்க்காப்பாளராகவும் அவர்களது நம்பகத் தன்மையின் பொருட்டு நியமிக்கப்பட்டிருந்தனர்.

சாணான் என்பது பொதுவில் சாறு - கள் எனும் பொருளில் சுட்டப்படுகிறது. எனினும் படித்த கிறித்தவர் -Learned Missionary- சா (Saau) அளவு, நீளம் naar - fiber - string. மரமேறப் பயன்படும் கயிரின் அளவைக் கொண்டு, ஒரு தாவில் ஏறும் அளவைக் கொண்டு, சாணான் எனப் பொருள் சுட்டுகிறார். 324 - உட்பிரிவுகள் உள்ளன.

| | |
|---|---|
| கருக்கு மட்டை | - 93,886 (நெல்லை - 86,265, மதுரை - 7359) |
| கொங்க | - 48,459 (கோவை - 26649) |
| மேல்நாடு | - 10,816 (நெல்லை - 9011, மதுரை - 1805) |
| நாடான் | - 13,842 (மதுரை - 4178) |
| தென்னம் (Tennam) | - 11,244 (தஞ்சை - 11048) |

சாணான் என்பதை சாதியாகவும், உட்சாதியாகவும் பதிவிட்டவர் எண்ணிக்கை – 1,03,561 பேர்.

கருக்குமட்டை - பணை மட்டை, தென்னம் - தென்னைமரம் - மதுரை - இனிப்பான கள், மேல்நாடு - மேற்கு நாடு, நாடான் - நாட்டை ஆள்பவர் அல்லது நாட்டில் வாழ்பவர்.

The shaanaans are a hard working industrious people and pauperism is almost unknown among the. சாணான்கள் கடின உழைப்பிற்கும் தொழிலுக்கும் பெயர்பெற்றவர்கள். பரம எழை என்பது அவர்கள் அறியாதது. பலர் பயிர்த்தொழில் செய்பவர். பலர் வெற்றிகரமான வணிகர். குறைந்தபட்சம் ஒரு ஜமீன்தார் உள்ளார். கிறித்தவப் பரவலாக்கம் அவர்களின் வாழ்க்கையில் மிகப் பெரிய முன்னேற்றத்தைக் கொடுத்துள்ளது - The spread of christiannity among them has done much to improve their material position only one section, the marameeri shaanaans, allows the remarriage of widows. மரமேறி சாணான் மட்டுமே மறுமணம் செய்துகொள்வதை அனுமதிக்கிறார். தெற்கு சாணான்களின் பட்டம் - நாடான், நாடாவி (Naadavi). வடக்கு - கிராமணி (Graamani).

கள் (toddy) என்பது பணை, தென்னை போன்ற மரங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் ஒரு வகையான போதை எற்படுத்தும் பானம். பனை அல்லது தென்னை மரங்களின் பாளையினை வெட்டி, அதிலிருந்து வடியும் பால் போன்ற திரவம் மண்பானைகளில் சேகரிக்கப்படுகிறது. இந்த பானம் புளிப்பு கசந்த சுவையுடன் உள்ளது. அருந்துபவருக்க போதை எற்படுகிறது. பனை - பனங்கள், தென்னை - தென்னங்கள். அதிக போதை தருவது பனையின் கள்.

கள் ஏராளமான பெயர்களில் சுட்டப்படுகிறது. மது, அம்பி அம்மியம், அரியல், அருத்தி, இலா, ஈழம், கஞ்சா, களி, சுதொம்பரி, காவீ, கொங்கு, சாராயம், சாறு, சுரம், சுரா, சரை, சேரா, சேறு, சொல் விளம்பி, சோபம், நறவம், நாற்றம், நுதம்பு, பழை, பாணி, பாரி, மகரந்தம், மதிரை, மரத்துப்பால், மருள், மாலி, மௌலி, யாது, வாணிதம், விளம்பி, வெறி, வெள்ளைக் குதிரை, வேம்பனம், வேரி.

இழுவன் (Iluvan) - 1,21,245 பேர். மலபாரில் மலையாளமும், நெல்லையில் தமிழும் பேசுகின்றனர். மலையாள சமூக அடக்கில் மிகவும் குறைவாகக் சுட்டப்படுகின்றனர். திய்யன் மற்றம் தண்டனுக்கும் கீழே உள்ளனர். (நாயர் போல் அல்லாமல்) தந்தை - மகன் உறவுமுறையைப் பின்பற்றுகின்றனர். இழுவன் எனில் ஈழத்தைச் சேர்ந்தவராம் -Ilavan means a native of Ceylon)

இழுவர் (ஈழவர்) இலங்கை என்னில், தமிழ்நிலத்திற்கு இளையவரோ. ஆயின் இளவன் என்பதே பொருத்தமன்றோ.

இடிகா (Idiga) - 1,54,277 பேர். தெலுங்கில் கள் வடிப்பவர். இச்சு - Idchu - to draw - கள் இறக்குபவர் - இச்சுபவர். (தமிழில் கள் இறக்குபவர். காய்ச்சுபவர்) பாலிசாக்களின் உட்பிரிவாகக் கருதப்பட்டாலும், கள் தொழில் காரணமாக விலக்கப்படுள்ளதாகத் தெரிகிறது - suppossed to be branch of balija tribe separated on account of occupation) - பட்டம் - காடு (Gaudu)

கமல்லாக்கள் (Gamallas) - 1,22,337 பேர். தெலுங்கு. 49 உட்பிரிவுகள். சத்தானிகள் இறப்புச் சடங்கு செய்பவர்.

யாடா (Yata) - 49,223 பேர். விசாக், கஞ்சம் பகுதியின் கள் இறக்குவோர். Yaath - இடா (Ita) யின் மருவு. இடா - ஈச்ச மரம் (ஈச்சமரத்திலிருந்து கள் இறக்குவோர்)

திய்யன் (Tiyyan) - 5,37,032 பேர். ஈழத்திலிருந்து வந்தவரெனக் கருதப்படுகிறார். திரிபா (dripa) தீபம் - Tiyyar, Dvipar - Divar. (Divar - திவர் - தென் கன்னடத்தில் ஒரு சாதி) மலபாரின் வடக்குத் திய்யன்கள் பெண் வழியினர். தெற்குத் தீய்யன்கள் ஆண் மரபினர். வடக்கு திய்யன்கள் வசதியானவர். நன்றாகப் படித்தவர். அரசுப் பணிகளில் உயர் பதவியிலிருப்பவர். தெற்குத் திய்யன்கள் -

வசதிக் குறைவு, படிப்புக் குறைவு, சமூக அடுக்கும் குறைவு. தியயன்கள் இல்லம், கிரியம் எனும் பிரிவுகள் (வீடு) கொண்டுள்ளனர்.

பில்லவர்கள் (Billavas) - 1,25,671 பேர். தெற்குக் கன்னடாவின் கள் இறக்கும் சாதியர் (பில் - வில்). முன்னர் அதிக எண்ணக்கையில் வில் வீரர்களாக இருந்தனராம் - Said to be largely employed as archers for the ancient native rulers), name is connected to lluva - ஈழவரோடு பெயர்ப்பொருத்தம் சுட்டப்படுகிறது. பில்லவர்கள் பைட்டியாஸ் (Baidyas) எனவும் அழைக்கப்படுகின்றனர். (பைட்டியா - மருத்துவர் - பூசகர்) (பைட்டியா – பாண்டியாவே). பில்லவர் தெய்வங்களான கொடி பைட்யா (Koti Baidya) மற்றும் சென்னைய பைட்யா (Chennya) கோவில்கள் நிறைய உள்ளன. இந்த பைடோருலு (Baidorulu (பாண்டவருலு?) பாண்டவர்களால் (Bants) வணங்கப்பட்டனராம். 26 உட் பிரிவுகள் - மலையாளி - 13,606, துளு - 77,851, பில்லாரா - 72,706. பில்லவ சாதி பதினாறு கூட்டங்களாக அல்லது பள்ளிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சாதி மூத்தவராக குறிகாரர் எனப் பெயர். வீட்டில் பேசும் மொழி - துளு.

ஹாலிபைக் (Halepaik) - 21,665 பேர். கன்னட கள் இறக்கும் சாதி. Hale - பழைய, paalka - வீரர் - பழைய வீரர். Hale - கால், பைக்கா - படை - காலால் பாடை. பாளையக்காரர்களின் படைகளில் இருந்தனராம். சில இடங்களிலும் முற்றிலும் பயிர்த் தொழில் செய்கின்றனர்.

(ஹாலிபைக் - என்பது மல்யுத்த வீரர் எனும் பொருளைச் சுட்டுமோ? Hale paalka - பல்கா - படை, படைக்கா என வருமோ? அதைவிட மல் யுத்த வீரர், பெரிய மல்லர் எனில் பொருத்தப் பாடு கூடுகிறதோ.கன்னடத்தில் ப - க எனத் திரியுமெனில் ஹாலே - பாலே யல்லவா. எனில் பள்ளி வீரர் பொருத்தம்)

**தோல் தொழிலில்** சக்கிலியன்கள் (chakkiliyans) - 4,43,771 பேர். தெலுங்கு மற்றும் கன்னடத்திலிருந்து தமிழகத்திற்கு குடிவந்தவர்கள். தெலுங்கு, கன்னட மொழி பேசுபவர்கள். 41 உட்பிரிகள்.

| | | |
|---|---|---|
| அனுப்பன் | - | 17,302 (கோவை, மதுரை, நெல்லை) |
| காப்பு | - | 8810 (திருச்சி, சேலம்) |

| | | |
|---|---|---|
| கொல்லர் (Golla) (Kollar) | - | 19,298 (கோவை, சேலம், மதுரை, நெல்லை) |
| மாதாரி (Maatari) | - | 27,809 (கோவையில் மட்டும்) |
| முரசு | - | 10,963 (கோவை, சேலம், மதுரை) |
| தமிழ் | - | 11,707 (தென்னாற்காடு - 1609) |
| தோட்டி (Tooti) | - | 1,66,370 (மதுரை, கோவை, நெல்லை) |

சக்கிலியன் எனப் பதிந்தவர் 92500. சமூக அடுக்கில் கீழாக உள்ளவர். ஆவாரம் செடி மதிப்பானதாகக் கருதப்படுகிறது. மணமகன் மகமகளை விட வயதில் குறைந்தவராக இருக்கலாம். கறி உண்பவர் என்பதால் சக்கிலியர் (சமஷ்கிருதம் - கறி - சக்கிலி Shakuli). பட்டப் பெயர் -பகடை.

செம்மான்கள் (Semmans) - 1871 பேர். மதுரை, நெல்லையின் தோல் தொழிலாளர். கணக்கெடுப்பில் தையல்காரர், சுண்ணாம்புக்காரர் எனப் பதிந்துள்ளார். சந்தேகத்திற்கு இடமின்றி தோல் தொழிலார்கள்தான் - Undoubtedly leather worker. பறையர்களின் உட்சாதி. இவர்களே தமிழ் நிலத்தின் பழமையான தோல் தொழில் செய்தவர்களாக இருக்க வேண்டும் - Sub caste of Paraiyar and they must be original leather worker of Tamil).

மாடிகா (Madiga) - 6,78,307 பேர். தெலுங்கின் மிகச் சிறந்த தோல் தொழிலாளர்கள். மாதங்க முனியின் (Maatanga Muni) வழித்தோன்றலாகக் கூறப்படுகின்றனர். முன்பு கன்னடம் பகுதியின் மாதங்க அரசுரிமை வைத்திருந்தவர்கள். 443 உட்பிரிகள்.

| | | |
|---|---|---|
| கம்பா (Gampa) | - | 9199 |
| கோகன்கி (Googangi) | - | 7374 |
| மாதங்கி | - | 23,817 |
| ஊரு (Uuru) | - | 29,767 |

மாடிகா எனப் பதிந்தவர் - 5,32,500. முக்கியத் தெய்வம் மாதங்கி (மாதங்கி - காளி). தாசரிகள் - மாதிகர்களின் பூசாரிகள்.

**ஊர்க் காவல்காரர்** (Village Watchman) பிரிவின் ஈகரி (Ekari) - 24,894 பேர். கடப்பாவிலும் வட ஆற்காட்டின் அருகாமை வட்டங்களிலும் அதிகம்.

முத்ரசா (Mutracha) - 1,14,176 பேர். தெலுங்கு சாதி. கிருஷ்ணா, நெல்லூர், வடஆற்காட்டில் அதிகம். பாளையக்காரர்களின் எல்லைகளைக் பாதுகாக்க, விசயநகர மன்னர்களால் நியமிக்கப்பட்டவர்கள். அம்பலக்காரனோடு தொடர்புள்ளவர்கள். 80 உட்பிரிவுகள்.

முத்திரையன் (முத்தரையன்) - 34,401 பேர். முத்ரசாக்களின் தமிழப் பெயர். 29 உட்பிரிவுகள்.

**மண் தொழிலாளர்கள்** - ஒட்டி (Odde) - 4,58,485 பேர். ஒட்டன் (oddan, Vodde, wudder) குழி - (Tank - dioggers) - கிணறு வெட்டுபவர்கள், கல்லுடைப்பவர்கள் மற்றும் மண்ணோடு தொடர்புடைய வேலைகள் செய்பவர்கள். மாகாணத்தில் அனைத்துப் பகுதிகளிலுமின்றி, இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் வாழ்கின்றனர். உயரமானவர். திடகாத்திரமானவர்கள். ஒட்ட, ஒட்டன், என்பது ஊரிய என்பதன் மருவாக இருக்கலாம். 69 உட்பிரிவுகள்.

| | | |
|---|---|---|
| கல்லு (Kallu) | - | 36,146 |
| கொங்க | - | 28,834 |
| மண்ணு (mannu) | - | 59,827 |
| மண்டி (manti) | - | 15,774 |
| ராடி (Raati) | - | 15,901 |
| ஊரு (Uuru) | - | 22,179 |

ஒட்ட எனப் பதிந்தவர்கள் - 1,72,202

பன்றி இறைச்சி உண்பதால், சமூக அடுக்கில் குறைவானவராகக் கருதப்படுகின்றனர். எளிய முறையில் செலவில்லாமல் திருமணம் நடத்துகின்றனர். ஆண், பெண், குழந்தைகள் என அனைவரும் குடிப்பார்கள். பலதார மணம் உண்டு. ஏழு கணவர் கொண்ட பெண்களுக்கு சிறந்த மரியாதை. திருமணம் போன்றவற்றில் இவர்கள் ஆசி பெறுவது நல்லது.

**பாய் பின்னுபவர்கள், பிரம்புத் தொழிலாளர்கள்** - கொராவா (Korava) - 1,33,572 பேர். தெலுங்கில் எருகலா (Eyarukala), எருகலவாண்ட்லு அல்லது கொறச்சவாண்ட்லு. மாகாணம் மட்டுமின்றி இந்தியாவெங்கும் உள்ளார். குறவர் பேசும் தெலுங்கு மொழி குர்று (Kurru). எர்ரு கெசவாண்ட்லு - குறி சொல்பவர்கள். திருடுவதில் கெட்டிக்காரர்கள். 475 உட்பிரிவுகள்.

| | | |
|---|---|---|
| டாபி (Dobbe) அல்லது டப்பய் | - | 8185 |
| கொங்கு | - | 5984 |
| உப்பு | - | 12,842 |

தாபை (Dabbai) தர்ப்பை - மூங்கில் பின்னுபவர்கள் - கூடை பின்னுபவர்கள். கழுதையில் உப்பு விற்பவர்கள். உப்பு, வைணவர்களாக இருக்கலாம். குலதெய்வம் உண்டு. கூட்டமாக (Gangs) வாழ்கின்றனர். கூட்டங்களுக்குள்ளேயே திருமணம் நடக்கிறது. பெண்களுக்கு கோழிகள் என்றும், ஆண்களுக்கு சேவல்கள் என்றும் பெயர்.

**வேட்டைக்காரர்களில்** - வேடன் (Vedan) – 42,376 பேர். கன்னட பேடர் (Bedar) - 52,387 பேர். இருவருக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. பேதர்களில் மையாச (Myaasa) மற்றும் ஊரு (uuru) பிரிவுகளுண்டு. பேடர்கள் ஹைதர், திப்பு படைகளில் வீரர்களாக இருந்தனர். வேடர்கள் இருக்கையின் வெட்டார்கள் போல் இருக்கின்றனர்.

காராளன் (Karalan) - சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களின் மலைப்பகுதிகளில் வாழும் வேட்டையர்கள் மற்றும் வேளாண்மைக் காரர்கள். நான்கு உட்பிரிவுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| கொல்லி (Kolli) | - | 10230 | - | சேலம் |
| பச்சை | - | 4751 | - | சேலம் |
| பெரியனன் | - | 7182 | - | தென்னாற்காடு. |
| பெரிய | - | 8612 | - | சேலம் |

வலையன்கள் (Valaiyans) - 28,576 பேர். மதுரை மற்றும் தஞ்சையில் வாழும் வேட்டைக்காரர்கள்.

குறிச்சன் (Kuricchan) - 9876 பேர். மலபாரின் வேட்டைக்காரர்கள். மிகத்திறமையான வில்லாளர்கள். வயநாட்டில் அதிகம். தெய்வம் மூத்தப்பன் (Muttappan) - மூத்த ஆப்பன். தற்போது, சுழற்சி பயிரிடுதலுக்கு (Shifiting cultivation) பெயர் பெற்றவர்கள். குறிச்சன்கள் வீட்டிக்குள் பிராமணர்கள் நுழைந்தால் அவர்கள் போனபின் சாணம் கொண்டு வீட்டைச் சுத்தம் செய்வது குறிச்சன்கள் வழக்கம்.

**பிச்சைக்காரர்களில்** (பூசாரிகள்) - ஆண்டி (Andi) - 89,630 பேர். தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ளார். மற்ற சாதியினர் யார் வேண்டுமானாலும் ஆண்டியில் போகலாம் - Person of any caste may join in their community. சிலர் ஊர்ப் பூசாரிகளாக உள்ளார். பூசனையில் ஆடு, எருது, பன்றி பலியிடல்களில் உதவி செய்பவர்கள். 105 உட்சாதிகள் - ஜங்கம், கோமணாண்டி, லிங்கதாரி, முதவாண்டி, உப்பாண்டி.

பணிசவன் - 14173 பேர். பூசகர்கள் சாதி. சிவ, விஷ்ணு ஆலய வழிபாடு. இறப்புச் செய்தியைச் எடுத்துக் செல்பவர்கள். 29 உட்பிரிவுகள்.

தாசரி (Dasari) - 31,658 பேர். தாதன் (taadan) வைணவப் பூசகர்கள்.

**கழைக் கூத்தாடிகள் நாடோடிகளில்** - தொம்மரா (Dommara) - 16,189 பேர். சிறந்த கூத்தாடிகள். பெண்கள் கொம்பு மற்றும் மரத்தாலான சீப்பு செய்வதில் சிறந்தவர்கள். வைணவர்களாக இருக்கலாம். அனைத்தையும் உண்பவர்கள்.

புலவர்களில் பாணன் (Pannan) - 13,418 பேர். வேலன் (Velan) - 3364 பேர். இருவரில் வேலன் மரியாதை அதிகமானவர்.

வேலன் சாதி கொப்பாளன் (Koppaalan), மன்னுட்டான், அஞ்சுட்டான் எனவும் அறியப்படுகிறது. இருவருக்குள்ளும் திருமண உறவில்லை.

**மாகாணத்திலிருந்தும் இந்தியாவில்லாத ஆசியர்கள்** - பதான் - 1,08,827 பேர், சையத் - 1,10,318 பேர், சேக் - 6,18,327 பேர், அமெரிக்கா. ஆத்திரேலியா உள்ளிட்ட ஐரோப்பியர்கள் - 13,417. இவர்களில் ஆண்கள் - 8350, பெண்கள் - 5067.

கிறித்தவத்திற்கு மாறியவர்கள் - 7,31,052.

(கணக்கெடுப்பில் சாதி அடையாளம் அறிய முடியாதவர்கள் என பெரியதொரு பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. (சற்றே முயன்றிருந்தால் கண்டறிந்திருக்கலாமோ) உதாரணமாக, போடோ சத்தியா (Bodo Satiya) சாதி. இது போது சத்துவர் அல்லவா. சாதி இல்லையெனில் புத்த மதமாகக் கணக்கிட்டிருக்கலாம். அவ்வாறே புத்தலியவாரரு (Buddiliyavaru). புத்த மதத்தவர்.

சென்னை மாகாணத்தின் 1881இன் கணக்கெடுப்பில், கள் இறக்கும் சாதிகளின் தொகை - 48,03,322. அதுவே 1891இல் 19,12,678 பேர். எப்படி பத்தாண்டுகளில் இவ்வளவு பேர் அதாவது பாதிக்கும் மேல் குறைந்தார்கள்?

கள் இறக்குவோர் எண்ணிக்கை குறையக் குறைய சாராயம் காய்ச்சுவோரின் எண்ணிக்கை கூடியிருக்குமோ? உண்மையெனில் சென்னை மாகாணத்தில் குறிப்பாக தமிழகத்தில் சாராயம் காய்ச்சிய சாதி,சாதிகள் எவை? விற்றவர் யார்? அரசே சாராயம் காய்ச்சி விற்ற பின்னும் கள்ளச்சாரயம் காய்ச்சி வீற்றவர் யார்? தமிழ் நிலத்தில் எந்தச் சாதி மீது சாராய வழக்குகள் அதிகமிருந்தன?

முன்பு தமிழகத்தில் மது போதைக்கு அடிமையானவர் எந்தச் சாதி? தற்போது எல்லாச் சாதியுமே அடங்குமோ?

தமிழகத்தின பள்ளர் பறையர் சாணார் யார்? சேர, சோழ, பாண்டியர் யார்? பறவரும், குறவரும் மறவரும் யார்?

சேரர் யார்?

சேரர் - புள்ளியை எடுத்தால் சேரா

சேரார் - ஒரு துணைக்கால் சேர்த்தால் சேரமாட்டார்.

சோரர் - சோர்ந்து போகிறவர்.

சோரார் - சோர்ந்து போகாமல் இருப்பார்.

சே - சு - சேரர்  - சுரர் - சுரா, சுரர் பானம் - கள்ளோ?

சேரர் -  சூரர், வீரர், மாரர், ஏரர், பூரர், தேரர், காரர், சீரர், மூரர், பேரர், நீரர், ஊரர்.

சே - சீ - sea - கடல், சோர் - shore - கரை.

Sea shore - கடற்கரை - கடலாளர், கரையாளர், கடற்கரையாளர்

கடற்கரைக்காரர்  - வெகு பொருத்தமன்றோ.

சேரர் - சேறர் -  சேற்றர் - சேற்றுக்காரர்.  அதுவும் பொருத்தமன்றோ.

கேரளம் சேற்று நிலம்தானே.

சேற்றில், சேற்று நிலத்திலேயே நெல் வளரும். தேவேந்திர குலத்தவரின் தொன்மக் கதையின்படி, வானத்திலிருந்து இந்திரன் எடுத்து வந்ததே நெல். எனில் மலையரான சேர்தான் முதலில் நெல்லை அடையாளம் கண்டாரோ? சேர்தான் நெல்லை அறிமுகப்படுத்தினாரோ? இன்றும் நெல் அறுவடையை விழாப்போல் கொண்டாடுவது மலைமக்களன்றோ. குறிப்பாக நீலகரியின் மலைமக்கள் நெல் விதைப்பிற்கு, புதுநெல் அறுவடைக்கு எப்படித் தயாராகிறார் என்பதைத் தமிழ் வேளாண்முடிகள் அறிந்துள்ளாரா? நெல் குலையைக் கும்பிடுவது, பத்தரிசி விழா எடுப்பது யார்? தமிழர் மறந்துவிட்ட முறைமைகளை தற்போதும் மலைமக்களான கேரளத்தவர் பின்பற்றி வருவது எப்படி?

தமிழர் குடகு மக்களின், தொல்குடிகளின் பழக்கவழக்கங்களை எந்தளவிற்கு அறவார்? குறிப்பாக, தமிழும், மலையாளமும், கன்னடமும், துளுவும் ஒன்றிணையும், ஒன்றுசேரும், ஒன்றுகலக்கும் நீலகிரி, கூடலூர், வயநாடு, மைசூர் மற்றும் குடகுப் பகுதிகளின் தொல்குடிகள் ஒற்றுமைகள், அவர்களது பண்பாடுகள், மொழிகள், குலதெய்வங்கள் பற்றி.

யாம் புத்தகங்கள் வாயிலாக சற்றே அறிந்திருக்கிறோம். நிலகிரி மாவட்ட மேனுவல்கள் சிறந்த தகவல்களை அளிக்கின்றன. தர்ஸ்டன் பதிவுகள் அருமை. எனினும் அந்த மக்களோடு நேரில் பழகியவரே அவர்களை சிறப்பாக அறியமுடியும்.

யாம் அறிந்த சிறிய அளவில், இந்த தொல் மக்கள் திருமால் வழிபாட்டோடு நெருக்கமாக உள்ளனர். குறிப்பாக பல்லவர்களின் சமயச் சார்பு தெரிகிறது. இவர்களது பண்பாட்டை மகாபாரதப் பண்பாட்டோடு இணைத்துப் பார்க்க முடியுமா? யாரேனும் முயன்றுள்ளரனரா?

நீலகிரியின் குறிப்பிடத்தக்க தொல்குடிகளாக படுகர், கோடர், தோடர், இருளர் மற்றும் குறும்பர்கள் குறிப்பிடப்படுகின்றனர். வயநாட்டில் பனியன்கள், செட்டிகள். வயநாடு செட்டி, நாகரீக செட்டி போல் பல பழக்கங்களைக் கொண்டுள்ளதாக மானுவல் சுட்டுகிறது.

நிலகிரியின் ஐந்து முக்கிய தொல் குடிகளுக்குள்ளும் பல வேறபாடுகள் இருப்பது சுட்டப்படுகிறது. அவர்கள் பண்பாட்டளவில் இரு தொகுப்பாக உள்ளனராம். படுகர், கோடர், தோடர் ஒரு தொகுப்பு. இருளரும் குறும்பரும் இன்னொன்று. முதல் தொகுப்பில் கூட படுகரும் தோடரும் மிக நெருக்கமாக உள்ளனராம். இருவருக்கும் பிறப்பு இறப்பு சடங்குகள் பெருமளவில் ஒத்துப் போகிறதாம்.

தோடர்களின் முதன்மைத் தெய்வங்கள் எனச் சுட்டப்படுபவை ஒன் மற்றும் அவரது தங்கையான தெய்கிர்சி - Two deities predominant - On and a goddess (his sister) known as teikirzi. வெள்ளையர்கள், இந்தப் பழங்குடிகளின் பேச்சை எந்தளவுக்குப் புரிந்து உள்வாங்கியிருப்பர் என்பது ஆராயத்தக்கது. எனினும் அவர்கள் ஆய்வாளர்கள் என்பதால் உள்நோக்கமின்றி தகவல்களைப் பதிந்திருப்பார்கள் என நம்பலாம்.

யார் இந்த teikirzi? On யார்? தெய்கிர்சி தென்னரசியோ? தென்திசை அரசியோ? எனில் கொற்றவையோ. தொல்குடிகள் எருதைப் பலியிடுபவர்களல்லவா? அதனால்தானே மைசூருவின் மகிஷாசுரமர்த்தினி புகழ்மிக்கவராக இருக்கிறார். எனில் அவரது அண்ணனான ஒன் யாராக இருக்கும்? தெய்கிர்சி - தீர்க்கரசியோ? தெய்கிர்சியை தெய்வரசி எனக் கொண்டால்? தெய்வரசன் யார்? தெய்வத்திற்கு ஈடான அரிசியாக இருக்கலாமோ? எனில் அண்ணன் ஒன்? கண்ணனும் அவரது தங்கையான சுபத்ரையுமோ? சுபத்ரை தெய்கிரிசியாக மாற்றம் பெற்றிருப்பாரா? சுபத்ரைக்கு வேறு ஏதேனும் சிறப்புப் பெயர்கள் உள்ளனவா? ஒடிசாவில் சுபத்ரை தற்போதும் பல்வேறு வடிவங்களில்

வணங்கப்படுகிறார் எனில், முன்பு பாரத நிலமெங்கும் வணங்கப்பட்டிருக்கலாமன்றோ?

ஒன் கடவுள் பிதியின் Pithi மகனாம். எனில் இந்த பிதி யாராக இருக்கும்? பிருத்வியாக இருக்குமோ? இது தொடர்பாக தோடர்களிடம் புழங்கும் கதையின் பொருளென்ன? பூமிக்குள்ளிருந்து ஒன்றன்பின் ஒன்றாக வந்த எருமைகளின் காலைப் பிடித்துக்கொண்டு மேலை வந்த அந்த முதல் தோடன் யார்?

This is the death of Andi,
In his memory the calf of the cow Belle has been set free,
From this world to the other,
He goes in a car,
Everything the man did in this world,
All the sins committed by the ancesters,
All the sins committed by his forefathers,
All the sins committed by his parents,
All the sins committed by himself,
Shifting the boundary line,
Telling lies,
Troubling the poor and cripples,
Being jealous of the good criops of others,
Using a calf set free at a funeral,
Carrying tales to the higher authorities,
Killing snakes and cows,
Showing a wrong path,
…………
Though there be three hundred such sins,

Let them all go with the calf set free today,

May the sin be completely removed

Holding the feet of the calf set free to day,

May he reach the abode of **Siva**!

இருளர்கள் விஷ்ணு வழிபாட்டாளர்கள் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. குறும்பர்கள் சிவ வழிபாட்டாளர்களாம். இருவரின் வேரும் பல்லவ மரபோடு அப்படியே ஒத்துப்போவது வியப்பு. இருவரின் உடலமைப்பும் பெருமளவில் ஒத்துள்ளதாம். இருளர் குடியின் தலைவர் பல்லக்காரனாம் - pallakaran. துணைத் தலைவர் கோல்காரன் - kolkaran. பவானிப் பகுதியின் இருளருக்கு முதுவன் எனப் பெயராம். அழகிய சொல்லல்லவா (மூப்பன் போன்று. மூப்பன் பள்ளரின் பிரிவு எனில் முதுவன்? பல்லக்காரன் என்பதையே பல்லவக்காரன், பள்ளக்காரன் எனச் சுட்டலாமல்லவா) அமினகுடியின் இருளருக்கு கசுவன் எனப் பெயராம்.

குறும்பர்கள் மூன்று முக்கியமான தெய்வங்களை வழிபடுகின்றனர். Kallatha (goddess), Airu Billi and Kaadu Billala. இவற்றை எப்படி தமிழ்ப்படுத்துவது? கல்லாத்தா அல்லது காளியாத்தா? தாயை ஆத்தா என அழைக்கும் தமிழ்ச் சாதிகள் எவை? அய்ரு பில்லி - ஏறு பள்ளியோ? இரு பள்ளியோ? இரு பள்ளிகள் கொண்டவன் திருமாலல்லவா? பில்லி என்பது வில்ல, வில்லாளி என்பதன் திரிபாக இருக்கலாமோ. எனினும் இவர்கள் வில் வைத்து வேட்டையாடுவது போல் பதிவுகள் சுட்டவில்லையே. மாடுகளின் பால்தான் முக்கியமான உணவாக இருந்திருக்கிறது.

Kaadu Billala - காடு பில்லாலா. பில்லாலா அல்லது வில்லாளா? வில்லாளன் எனில், காடு? காட்டு வில்லாளனோ? காடு என்பதை கடு எனக் கொண்டால்? கடு - விரைவு. வேகம். வேகமான, விரைவான, துரிதமான வில்லாளன் யார்? பாரத நிலத்தின் அந்தப் பெருஞ்சண்டையில் வில்லுக்குப் பெயர் பெற்றவன் யார்? அவனின் தந்தை யார்? அவரும் பெருவில்லரன்றோ? மகனின் வில் வதைக்குமெனில் தந்தையின் வில்லோ இனிக்கும்.

அந்தப் பெருவில்லவர்களுக்கும், காஞ்சியைப் பெருங்காலமாண்ட பெரும்புகழ்ப் பல்லவருக்கும், பல்லவ நாட்டிலிருந்தே வந்திருக்கவேண்டுமென வெள்ளையர்கள் குறிப்பிடும் இந்த மலைமக்களுக்குமான தொடர்புறவுகள் யாவை?

தோடர்களின் Terkosh goddess யாராக இருப்பார்? தெர்கோசும் தெய்கிர்சியும் ஒத்துள்ளதல்லவா. தெய்கோஷ் - துருக்கையோ. துர்க்கைதான் இப்படி மருவியுள்ளதோ?

ஆப்பிரிக்கர் போலவே இருப்பதாகச் சுட்டப்படும் வயநாட்டின் பனியன்கள் paniyans - யார்? தற்போதும் தமிழ்க் குடிகளில் சிலரை ஆப்பிரிக்கர் போல் இருப்பதாகச் சுட்டலாமே. எமக்கு பரிணாமம் போன்றே மிகவும் பிடித்த மற்றொரு பாடம் மரபியல். யாம் மரபியல் குறித்தெல்லாம் எதையும் எமது புத்தகங்களில் வலியுறுத்திக் காட்டவில்லை. எனினும் தமிழ் நிலத்தில் நடந்து வரும் மரபியல் ஆய்வுகளையும், பேச்சுக்களையும் கவனித்தே வருகிறோம். தமிழர் யார் எனப் பேச்செழுந்தால் இனி அது மரபியல் திசையிலேயே பயணிக்கும் என்பது திண்ணம். அப்படி நிகழ்வது தமிழருக்குப் பொருத்தமல்ல. தமிழின் புகழை அது சிறுமையே செய்யும். தமிழின் உன்னதம் யாதும் ஊரே யாவரும் கேளிர்.

மரபியல் ரீதியாக, பண்புகள் ரீதியாக, சில தமிழ்க்குடிகளை ஆப்பிரிக்கா நோக்கித் தள்ளமுடியும். அதைப் பெருமையாக எடுத்துக்கொள்ளவேண்டுமேயொழிய, தமிழின் வேருக்குச் சான்றாகக் கொள்ளவேண்டுமேயொழிய, இக்குடிகளை மாற்றார் எனவோ, ஆப்பிரிக்காவிலிருந்து வந்தவரென்றோ பேசுவது எழுதுவது அறப்பிழையாகக் கொள்ளப்பட வேண்டும். இன்றைய அறிவியல் அறிவு - ஆப்பிரிக்காவே மனித குலத்தின் தாய். மண்ணின் மூதாதையர் அனைத்து வகைகளிலும் மதிக்கப்படவேண்டும். அவர்கள் ஒட்டுமொத்த மனித குலத்தின் சொத்து.

பனியர்களின் முக்கியக் கடவுள் காட்டுப் பகவதி - Bagavathi of Woods. தலைமைப் பூசகர் நொளம்புக்காரன் எனக் குறிப்பிடப்படுகிறார் - nolambukaaran. நொளம்புக்காரன் பொருளென்ன? நொளம்புக்காரனும் நம்பூதிரியும் பொருளுடையதோ. நுளம்பு எனில் கொசு, மின்மினி. இலங்கையில் கொசுவை நுளம்பு என்றே சுட்டுகின்றனராம். எனில், கனியர் பூசகருக்கு எதனால் நொளம்புக்காரன் எனும் பெயர்? கொசுவை விரட்டுவதுபோல் துன்பங்களை விரட்டுவாரோ? நீலகிரி மலைப் பகுதியில் கொசுக்கள் இல்லையல்லவா? உறுதியாக இல்லைதானே. கொசு இனப்பெருக்கம் செய்ய குறிப்பிட்ட வெப்பநிலை வேண்டும். மலைப்பகுதிகளில் வெப்பநிலை குறைவு என்பதால், கொசுக்களால்

அங்கு இனப்பெருக்கம் செய்ய முடியாது. இனப்பெருக்கம் இல்லையேல் உயிரிகள் தழைத்துவாழ இயலாது. பூமிப்பந்தின் வடபகுதியில், அதாவது பனிநாடுகளில் கொசுக்கள் இல்லாதற்கு அங்கு உறைபனி நிலவுவதே காரணம்.

நொளம்புக்காரன் என்பதை நூலம்புக்காரன் எனக் கொண்டால்? நீளம்புக்காரன் எனக் கொண்டால்? வில்லம்புக்காரன் எனக் கொள்வோமாயின்? குளம்புக்காரன் எனப் பொருள் கொண்டால்? வில்லம்புக்காரன் - திரேதா யுகத்தில் இராமன். துவாபர யுகத்தில் அருச்சுனன். குளம்புக்காரன்? குளம்பி - குதிரை. குதிரைக்காரன். குதிரையில் வருபவன் எவன்? அவன் பெயரென்ன?

**அவன்,**

போர்முகத்தில் அருச்சுனர்க்கு கீதை சொன்னான் - மனிதர்
புகழோங்க வாழ்ந்திருக்கும் பாதை சொன்னான்
தேர் நடத்தி பாரதத்தில் நிலையாய் நின்றான்
**சிலையாய் நின்றவன் யார்? அன்பு மலையாய் நிற்பவன் யார்?**

மனக்கோவில் கொண்டெழுந்தான் பரந்தாமன்
கீழ்மலை நாட்டிலே இளங்கும் தமிழ்வீட்டிலே - தமிழர்
மனக்கோவில் கொண்டெழுந்தான் பரந்தாமன்
**மலைநாட்டில் தமிழ்வீட்டில் எழும் அந்தப் பரந்தாமன் யார்?**

தமிழர் மனக்கோவில் கோண்டெழும் அந்தப் பரந்தாமன், மத்மநாபன்,
பரிமளநாதன், பாண்டுரங்கன் யார்?
**மூவடியில் உலகளந்து மோகனமாய் நின்றவன் பெயரென்ன?**

# மாதவன்!



சேரன் - சேடன், சேட்டன், சேச்சி.

கொச்சச்சன் - கொச்சச்சி

கொச்சன் - தச்சன்

குச்சன் - புச்சன்

குச்ச, பிச்ச, கச்ச, கொச்ச, குச்ச, குச்சி, குச்சில் (குச்சில் - சின்ன இல்), இல் - வீடு, சிறிய வீடு,

பிச்ச - பிச்சி - சிறிய மலர், பிச்ச - பிய்த்தல் - கச்ச - மார்புப் துணி, சிறிய துணி,

கொச்ச - சிறிய, துண்டு.

மானுடவியல் என்ன சொல்கிறது? மலையில் வாழும் மக்கள் குட்டையாக குருப்பாரா, உயரமாக இருப்பாரா?

சேரலர் கோன் - கோன் - பெரியவர், சிறந்தவர் எனில் எதில்? வீரத்திலா, அறிவிலா, வணிகத்திலா? அல்லது தமிழ்ப் பற்றிலா?

தமிழ்ப் பற்றில் சிறந்தவர் பாண்டியரா, சேரரா?

அரசர் என்பதற்கு பார்த்திபர், இறைவர், காவலர், பதிகள், கோக்கள், வேந்தர், செற்றவர், புரவலர், பொருநர், மன்னர், பூபாலர், நிருபர், முதல்வர், ஏந்தல், குரிசில், மகிபாலர், தலைவர் எனப் பொருள் சுட்டப்படுகிறது (பி.நி)

குரிசில் பொருள் யாதோ.

பொருநைத் துறைவன், பொன்னித் துறைவன், வையைத் துறைவன்.

யமுனைத் துறைவன். அவன் மட்டும் சமற்கிருதம் பேசினானோ?

செழியன், சோழியன், பூழியன். அண்ணன் தம்பிகளாக இருக்க வேண்டும். பெயர்ப் பொருத்தம் அத்தனை அழகு.

சோழியன் கிழக்குக் கடற்கரை எனில் பூழியன் மேற்கு.

செலயன், செலயான், செல்லையா, செல்லியன் பெயர்கள். செலயன் செழியனோ? செழியன் கொள்ளையழகு.

செழியன் - செலயன் - சலயன் - சாலயன் - சாலியன் - சாலுயன், சாலுக்யன்.

சால் - சாள் - சாளுக்யன் - பெரியவன்

குள்ளன் - குட்டன் - கிட்டன் -- கிட்டனன் - கிரிட்னன் - கிருட்னன் - கிருஷ்ணன்.

கிருட்ணன் - கருப்பன். அடர் கருப்பன்.

சேரரின் தொல் குடிகள் அடர் கருப்பன்றோ.

கிரி - மலை. கிரிட்ணன் - மலையன், மலையாளன், மலைநாடன், மலைக்கு உரியவன்

கிருட்ணன் - கிருட்ணா, கிட்ணா, கிச்சா, கிச்சன், குச்சன்

குச்சன். அச்சன், பச்சன், புச்சன், புச்சனன்

குச்ச - குச், கொஞ்சம் - குச், குச் - கச், கட்ச், ஹட்ச், ஹெட்ச், குச் வளைகுடா- கச் வளைகுடா,

குச் - கூர்ச், கூர்ச்சத் - கூர்ச்சரத் - குசராத், குஜராத், குச்ராத், குச்ராத் - துண்டு நிலம் - சிறிய நிலம்? மகாரபித் - மகாரார்த் - மகாராட்டிரத், பெரிய நிலம், பெருநிலம்.

சேரர் வழியாகத் தமிழ் - கொங்கு - கொங்கனி - மேலக் கடற்கரை வழியாகப் பரவயது எனில், பெர்சியாவில் இரு பிரிவாகப் பிரிந்திருக்கும். ஒன்று அனடோலியா வழியாக - ஈரான் - துருக்கி - கிரேக்கம் - இலத்தீனம் - ஐரோப்பாவை குறிப்பாக பிரித்தானித்தை அடைந்திருக்கும். இன்னொரு பிரிவில் உக்ரேன் - ஜெர்மனி மூலம் பிரித்தானியத்திற்குள் நுழைந்திருக்கும். அனடோலியா வழியில் பரவியது பலவாறாக மாறியிருப்பது திண்ணம். கிழக்கு அய்ரோப்பா வழியில் பரவியதோ மூலம் சிதையாமல் பெருவாரியாக அதே உச்சரிப்போடு பிரித்தானியரின்ஆங்கிலத்தில் கலந்துவிட்டது. இது பல்லவர் ஆட்சிக் காலத்திலோ

அல்லது அதற்குச் சற்று முன்பானவோ நிகழ்ந்திருக்கலாம். தொலை தூரத்தில் போகப் போக சிதைவு அதிகமாக இருந்திருக்கும்.

பெர்சியாவான ஈரானுக்கும், தமிழின் கேரளத்திற்கும் நெருங்கிய தொடர்பிருப்பது இருவருக்கும் இடையே முன்பு நேடியான உறவிருந்ததைச் சுட்டிக்காட்டுகிறது. இருவரும் அக்னி குலத்தவர் - நெருப்பு. இரு நிலத்திலும் தேவேந்திரர் பெருமையானவர். இரு நிலத்திலும் சமற்கிருதம் பெரிய செல்வாக்கைப் பெற்றுள்ளது.

தமிழ் சமற்கிருதமாக மாற்றம் பெற்றது வட இந்தியாவிலேயே என்பது தெளிவு, மாற்றம் வடமேற்கு இந்தியா வழியாக பெர்சியாவில் நிலை கொண்டு பலவாறான மாற்றங்களுக்கு ஆளாகியிருக்க வேண்டும். தமிழ் சமற்கிருதமாக மாறி, மீண்டும் தமிழ் நிலத்திற்குள்ளேயே வந்தது வியப்பு. சமற்கிருதக் கல்வி கற்றவர், உயர்ந்த நிலையிலிருந்தவர், குறிப்பாக, பிராமணர் மட்டுமே பயன்படுத்தினார் என்பதே வரலாறு. வெகு சொற்ப எண்ணிக்கையிலேயே அம்மொழி பேசப்பட்டிருக்கிறது. சென்னை மாகாணக் கணக்கெடுப்பில் -1891 வெறும் 150 பேருக்கும் குறைவு. ஒருவேளை வடமாகாணங்களில் சற்றே அதிகமிருக்கலாம். பத்துக் கோடி மக்களுள் ஆயிரம் பேர் மட்டுமே பேசிய ஒரு மொழி, எப்படி இத்தனை மதிப்புக் கொண்டதாகக் கட்டமைக்கப்பட்டது? வேதங்கள் அம்மொழியில் உருவானதாலோ? வேதங்கள் எங்கு உருவாகியிருக்கும்?

இந்தியாவிலிருந்து வெளிப்புறத்திற்கும், வெளிப்புறத்திலிருந்து இந்தியாவிற்குள்ளும் பெரியளவில் மக்கள் இடப்பெயர்வு நிகழ்ந்திருக்கிறது. சென்றவர் திரும்பி வரும்போது புதியவராக வந்தார் என்பதே வரலாறு.

சோழர் கிழக்கில் கடற்கரையையெட்டி மிகப் பெரிய பரவலை, பண்பாட்டை முன்னெடுத்திருக்கிறார். கிழக்கின் தெலுங்கம், கலிங்கம், வங்கம், பர்மியம் என நிலவழியாகப் பண்பாட்டை எடுத்துச் சென்றவர், பர்மியத்தில் இரு பிரிவாகி இருக்கிறார். வடக்கே சீனத்திற்கும், தெற்கே மலேயா, சுமத்ராவிற்கும், அங்கிருந்து பிலிப்பைன் வரையிலும் சோழர் தாக்கம் இருந்திருக்கிறது. அவ்வாறே தாய்லாந்து, கம்போடிய, லாவோசு, வியட்நாம், கொரியம் வரையிலும் பண்டைய சோழப் பேரரசின் பரவல் நிகழ்ந்திருக்கிறது. பின் வந்த பல்லவர்கள் கிழக்கில் மிகப் பெரிய அளவில் பண்பாட்டுப் புரட்சியைச் செய்துள்ளனர்.

உண்மையெனில் பாண்டியர்? ஒரு காலத்தில் இந்தியா முழுக்கவே பாண்டியர் நிலமாகவே இருந்திருக்க வேண்டும். அத்தகைய பழங்காலத்திலேயே மகாபாரதப் போர் நிகழ்ந்திருக்கலாம். அவ்வாறாயின் சேரர்? வடமேற்கு இந்தியா, அதற்கும் தொலைதூரம். பின்னாட்களில் மாற்றலரின் நெருக்குததால் சேரர், சோழர் தங்களது மேற்கு, கிழக்கு எல்லைகளிலிருந்த, இந்திய நிலத்திற்குள் பின்னகர, சிறிது சிறிதாக பாண்டியன் எல்லை சுருக்கிக் கொண்டே வந்திருந்து, இறுதியில் மதுரை, நெல்லை, திருவனந்தபுரம் என்பதாக மாறிப்போனது. உண்மையெனில், பாண்டியர் பாரத நிலமெங்கும் பரவிருந்த காலத்தில் முதல் சங்கமும், தென்னிந்தியா முழுக்க நிலை கொண்ட போது இடைச் சங்கமும், தென் மதுரையில் நிலைபெற்றபோது கடைச் சங்கமும் தோற்றம் பெற்றிருக்கலாம். அவ்வாறெனில், குமரி நிலத்தின் கடல்கோள் கருத்து தவறென்றாகிவிடும். கடல்கோள் நிகழ்ந்திருப்பினும், சிறிய அளவில் இருந்திருக்கலாமேயொழிய, ஒரு பெருநிலப்பரப்பு கடலால் கொள்ளப்பட்டது என்பது அறிவியலாளர்களால் ஒப்ப முடியவில்லை.

கடைச்சங்கத்தின் எல்லை வடக்கே வேங்கடம், தெற்கே குமரி எனச் சுருங்கியபின், தமிழர் வாழ்வியலில் நடந்த மாற்றங்கள் எத்தகையவை? பாரதத்தின் வடக்கில், தமிழ் வேறுவேறு மொழிகளாகச் சிதைய ஆரம்பித்துவிட்டது. இது நிகழ்ந்தது ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் எனில் பொருத்தமுடையது. புத்தர் பேசியது பாளி எனில் அதுவே தமிழின் முன்னைத் திரிபாக இருக்கலாம். அதற்கும் முன்னர் அதாவது புத்தரின் காலம் 2500 ஆண்டுகளுக்குமுன் எனில், 3000 ஆண்டுகளுக்கு முன்பு, பாரதம் எவ்வாறு இருந்திருக்கும்? வரலாற்று ரீதியாகப் பெரும்பாலும் எவ்விதத் தடயங்களும் இல்லை. அரச மரபுகள் நிலைகொண்டிருந்ததாகக் குறிப்புகள் கிடைக்கவில்லை. ஒருவேளை 3000 - 4000 ஆண்டுக் காலத்தில் பாரதப் போர் நிகழ்ந்ததாகக் கொண்டால், அப்போது பாரதர் எப்படி இருந்தார்?

பாரதக் காலத்தில், வடக்கே பல்வேறு நாடுகள் இருந்ததாகப் பாரதம் குறிப்பிடுகிறது. வடமேற்கில் தற்பொதைய ஆப்கானித்தான் வரையிலும், கிழக்கே தற்போதைய மியன்மர் வரையிலும் பரவியிருந்த அகன்ற பாரதமாகக் குறிப்பிடுகிறது. அப்போதே, அதாவது பாரதப்போர் காலத்திலேயே மக்கள் பெரியளவில் பணிபட்டவராகக் காட்டப்படுகிறார் எனில், மூவாயிரம் ஆண்டுகள் கழித்து, தற்போதும் பாரதமெங்கும் ஏராளமான தொல் குடிகளும் அட்டவணைக்கு

குடியினரும், எப்படி நிலைகொண்டுள்ளனர்? அதே பாரதகால வாழ்நிலையில். கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக அவர்கள் வாழ்வில் எவ்வித மாற்றத்தையும் அடையவில்லையா? மத்திய இந்தியா, கிழக்கு இந்தியா, தெற்கின் மலபார் பகுதிகள் முழுக்கப் பரவிக் காணப்படும் இந்தப் பழங்குடிகள் யார்? இவர்கள் பழங்குடிகள் எனில், இதேநிலத்தில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அந்தப் பாரதப் போரின் பழங்குடிகள், குடிகள் யார்? அதற்கும் முன்பான இராமாயண காலத்திலேயே மக்கள் பண்பட்டிருந்தது எவ்வாறு? அன்றே அரச மரபுகள் இருந்ததெனில், அவர்கள் யார்?

பாரதப் போர் சித்தரிக்கும் காட்சிகள், நிலப்பரப்புகள், வாழ்வியல் நுட்பங்கள் எந்தளவிற்குச் சரியானவை? பாண்டிச்சேரியில் பணியாற்றிய முன்னாள் தமிழ்ப் பேராசிரியரான திரு. ராஜ் கௌதமன், ஒரு கருத்தை முன்வைக்கிறார். சங்ககாலம், சங்கத்தின் பாடல்கள், அவை சித்தரிக்கும் காட்சிகள், வருணனைகள், காலத்தால் மிகவும் பிந்தியவை என்கிறார். என்றோ நடந்த நிகழ்வுகளை, பின் வந்த புலவர்கள் வருணித்துப் பாடியுள்ளனர் என்கிறார். சுருக்கமாகச் சொன்னால் கனவு கண்டதைப் போல. பழைய ஏக்கம். சங்கப் பாடல்கள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அல்லது பொது ஆண்டிற்கு முன் 2500 தொடங்கி பொது ஆண்டின் 1500 களில் பாடப்பட்டுள்ளன எனில், பேராசிரியரின் கூற்றுப்படி, அவை பாடப்பட்ட காலத்திலிருந்து குறைந்தது ஆயிரம் ஆண்டுகள் பின்னோக்கிய வாழ்வியலை அதாவது, பொது ஆண்டிற்கு முன்னான 3000 - 3500 ஆண்டுக் காலத்தைச் சேர்ந்தவை. சுருக்கமாகச் சொன்னால், கடைச் சங்கத்தின் பாடல்கள், அதற்கு முன்னிருந்த இடைச்சங்க வாழ்வியலைச் சுட்டுபவை.

பேராசிரியரின் கூற்று ஆய்வுக்கு உரியது. புலவர்களின் பாடல்களில் தம்மை ஆதரித்த மன்னர்களின் பெயர்கள் சுட்டப்படுகின்றன. எனில் அப்பாடல்களில் சுட்டப்படும் மன்னர்கள் காலத்தை ஆராய வேண்டும். இன்னொன்று, பாடல்கள் ஒரு தொகுப்பாகச் சுட்டப்பட்டாலும், பாடல்கள் இயற்றப்பட்ட காலம் வேறுபட்டிருக்க வாய்ப்புள்ளளது. அகத்தையோ புறத்தையோ குறிக்கும் பாடல் எனப் பொதுவில் ஒன்றாகக் தொகுக்கப்பட்டுள்ளன. அனைத்துப் பாடல்களும் சமகாலத்தில் இயற்றப்படவில்லை என்பது தெளிவு.

அவ்வாறெனில் இடைச் சங்கத்தின் பாடல்கள் கிடைத்திருக்குமேயானால், அவை முதற்சங்க வாழ்வியலைப் பாடியிருந்திருக்க வேண்டும். கிடைக்காததற்கு

கடல் கொண்டது என்பதைவிட, அவை காலத்தால் மிகவும் முந்தயவை எனக் கொள்வதே பொருத்தமுடையதாக இருக்கும். அவற்றைப் பதிந்து வைத்திருந்தாலும், இத்தனை காலங்கள் அவற்றைப் பாதுகாத்து வந்திருப்பது இயலாத செயலாகிவிடும்.

இடைச் சங்க வாழ்வியலைச் சுட்டுபவைதான் வேதங்களோ? இருக்கலாம். வேதங்கள் எழுதப்படாமல், வாய்மொழிப் பாடமாகவே - Oral traition எடுத்துவரப்பட்டதால், அவை மாற்றத்திற்கு உள்ளாகாமல் கிடைக்கின்றன. அது சமற்கிருதப் பாடலாக இருக்கின்றனவே? அவ்வாறெனில் இடைக் காலத்தின் தொலை தூரத்தில் அதாவது, மத்திய ஆசியாவில் அல்லது வடமேற்கு ஆசியாவில் புழங்கிய மொழி சமற்கிருதமாக மாற்றம் பெற்றிருக்கலாம், அல்லது வடமேற்கு ஆசியாவில் புழங்கிய இடைச் சங்கப் பாடல்களை சமற்கிருதம் பேசிய மக்கள் தம்மொழிக்கு மாற்றம் செய்து, தமது மொழியில் பாடியிருக்கலாம், அல்லது கடைச் சங்கத்தில் தமிழ் நிலத்தில் பாடல்கள் இயற்றப்பட்டதுபோல், அதே காலத்தில் வடக்கே அல்லது வடமேற்கே இடைச்சங்க வாழ்வியலை வேதங்களாகப் பாடியிருக்கக் கூடும். அதுவே பொருத்தப்பாடுடையதாகவும் தோன்றுகிறது. தமிழரின் கடைச் சங்கத்திலேயே, பாரத நிலத்தில் பல்வேறு மொழிகள் தோன்றியதையும் ஒப்புநோக்க வேண்டும். மலையாளம் 500 ஆண்டுகளுக்குமுன் தோன்றியது எனில், கன்னடமும் தெலுங்கும் 1500 முதல் 1000 வருடங்களுக்குமுன் எனக் கொள்ளலாம். பாளி உள்ளிட்ட பிராகிருத மொழிகள், 2000 - 3000 ஆண்டுகளுக்குமுன் எனலாம். உண்மையெனில், இதுவே கடைச் சங்க காலம். அதற்கு முன்னுள்ள காலம் இடைச்சங்க காலம். இடைச் சங்க காலத்தில் அகன்ற பாரதம் முழுக்கவே அதாவது பெர்சியா முதல் தாய்லாந்து வரை, வடகிழக்கு - வட மேற்கு . தெற்காசியா முழுவதுமே தமிழ்மொழி பேசப்பட்டது என்பது திண்ணம். அவ்வாறெனில் அரேபிய நிலத்தில் பேசப்பட்ட மொழி எது? அதுவும் தமிழாகவே இருந்திருக்க வேண்டும். ஒருவேளை தமிழின் சற்றே மாறுபட்ட ஒரு பேச்சு மொழியாக இருந்திருக்க வேண்டும். இக்காலத்திலேயே சுமர்கள், சுமேரியர்கள் மிகுந்த ஏற்றம் பெற்றிருந்தனர். சுமர், குமர் எனும் சொற்கள் இளைய எனும் பொருளிலேயே கையாளப்படுவது கவனிக்கத்தக்கது.

அரப்பா பண்பாடு இக்காலத்தியதாக இருக்கவேண்டும். மேய்ச்சல் முடிந்து மக்கள் நிலையான வாழ்வை நோக்கி முன்னேறியிருக்க வேண்டும். உண்மையில்

இடைச்சங்க காலத்தில்தான் மக்கள் பல்வேறு விதங்களில் இடம்பெயர்ந்து சென்றிருப்பவர். இடைச்சங்கத்தின் மக்கள் மிகப்பெரிய போர்களில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள். மக்கள் கலப்பது இயல்பாக நிகழ்ந்திருக்கும். இடைச்சங்கத்தில் புதிது புதிதாகக் கருவிகள் தோற்றம் பெற்றிருக்கும். உண்மையில், இடைச்சங்க காலம் மக்கள் வாழ்வியல் மிகப்பெரும் மாறுபாடுகளை உண்டாக்கியதெனில் மிகையாகாது. எழுத்தை உருவாக்கியது இக்காலத்தின் உச்சம் எனலாம்.

பாரத - சுமேரியர்களின் தெய்வங்களை அறிவது, ஒப்பிடுவது, ஒருவேளை இடைச்சங்க வாழ்வியலைப் புரிந்து கொள்ள உதவக்கூடும். ஏனெனில் மக்கள் தங்கள் அன்புக்குரிய தெய்வங்களை மறப்பதில்லை, ஒதுக்குவதில்லை, எந்நிலையிலும். ஏனெனில் அது அவர்களின் மூத்தோர் சொல்லன்றோ.

சுமேர்களின் மர்டுக், மருதுக் யார்? சுமர் இலக்கியத்தில் பதியப்பட்டுள்ள கடல்கோள் எது? அதற்கும் குமரிக் கடல்கோளுக்குமான தொடர்பு என்ன?

அது மர்டுக்கா, மருதுக்கா, மருதமா. அவன் மதுரையானோ? உண்மையை எப்படி அறிவது? உலகின் வியப்பான, விந்தையான ஒன்று, உண்மை மறைவதேயில்லை. உண்மை ஏதோ ஒரு இடத்தில் ஏதோ ஒரு வடிவில் இருந்து கொண்டேதான் இருக்கிறது. அதைக் கண்டடைபவரே ஞானி எனப் போற்றப்படுகிறார். ஞானத்திற்கு முதல்படி அறிவு. அறிஞரே ஞானத்தைத் தேட முடியும். கண்டடைந்த அறிவைப் பங்கிட்டால், வாரி வழங்கினால், அவர் ஞானி. தமக்கென வைத்துக் கொண்டால் அவர் இறுதிவரை அறிஞரே. ஒருபோதும் ஞானியாக மாட்டார்.

மத்திய, மேற்கு ஆசியாவைச் சேரர் நிலமெனக் கொண்டால், ஆப்பிரிக்கா பாண்டிய மண்ணாகிறது. வடக்கு மற்றும் கிழக்காசிய சோழர் புலமாகிறது.

உலகின் மத்திய நிலம் பாண்டியம் எனில், மேற்கு சேரமாகிறது, கிழக்கு சோழமாகிறது.

இந்திய நிலத்தின் இரு கரைகளிலும் சேர, சோழர் எனில், மத்தி பாண்டியருக்குரியது.

தெற்கே குடும்பர். வடக்கு மல்லர். கிழக்கில் பள்ளரெனில் மேற்கிலோ தேவேந்திரர்.

தற்காலத்தியத் தமிழர் எப்படி நினைத்துக் கொள்கிறார் எனில், பாண்டியர் கன்னியாகுமரி முதல் மதுரை வரை அரசாண்டவர். சோழர் தஞ்சையை அரசாண்டவர். சேரர் - கேரளத்தை அரசு புரிந்தவர்.

தற்போதைய கேரளத்தின் பெரும்பாலான பகுதிகள், அன்று பாண்டிய அரசுக்கு உரியதாக இருந்தது. வயநாடு தொடங்கி தற்போதைய கர்நாடகம் முழுக்க சேரர் நிலம். சோழமோ தஞ்சை முதல் தற்போதைய ஆந்திரம் முழுதும். அதற்கும் மேலேதான் கலிங்கம் இருந்தது. சுருங்கச் சொல்வதானால், விந்திய மலைகளுக்குத் தெற்கில் மூவேந்தர் ஆட்சியே.

இந்தக் காலத்தில்தான் வடக்கே குறிப்பிடத்தக்க அரசுகள் உருவாகின்றன. குறிப்பாக, முன்னிருந்த மோரியா ஆட்சியில், தெற்கின் எல்லை பெரிதாக விரிவடையவில்லை என்பது திண்ணம்.

வடக்கில் குப்தரும், தெற்கில் பல்லவரும் நிலை கொண்டதே இந்து சமற்கிருத மறுமலர்ச்சிக்கு வித்திட்டது எனில் மிகையாகாது. இவர்கள் காலத்திலேயே சமற்கிருதம் ஏற்றம் பெற்றது. பிராமணர்கள் உச்சம் பெற்றார்கள். குறிப்பாக, பல்லவர்கள் பௌத்த மரபிலிருந்து இந்து மரபிற்கு விலகியது, தமிழக வரலாற்றில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

தமிழகம் ஆன்மிகத்தில் சிறந்ததெனில், அதற்கு வித்திட்டவர்கள் பல்லவர்கள். அதைத் தொடர்ந்தவர்கள் சோழர்கள். அழியாமல் பாதுகாத்தவர்கள் நாயக்கர்கள். நாயக்கர்கள் யார்? பல்லவர் காலத்தில் அவரும் தமிழரே. அரச மொழி பெரும்பாலும் தமிழ்தான். தற்போதைய தெலுங்கான பகுதியில் சற்றே மொழி மாறுபட்டிருக்கலாம். அவ்வாறு உத்தர கன்னடத்தில் சற்றே மொழி திரிவடைந்திருக்கும். கன்னடமும், தெலுங்கும் தனித்துவமான மொழிகளாக உச்சம் பெற்றது விசயநகரத்தின் போதுதான். அதுவும் குறிப்பாக கிருஷ்ணதேவராயர் காலத்தில். உண்மையெனில் ஐநூறு - அறுநூறு ஆண்டுகளுக்கு முன்.

சேரன் இமயத்தில் கல்லெடுத்து வந்தானா? வந்திருப்பான். அன்று மத்தியப் பிரதேச எல்லைவரை சேரர் நிலம் எனில், எளிதாகக் கொண்டு வந்திருப்பான்.

சேரன் பாரதப் போரில் இருபடைகளுக்கும் சோறு போட்டானா? என்றோ நடந்தது சேரர் மரபில் செவிவழியாக கடத்திவரப்பட்டிருக்கும். அந்த வாய்மொழி வரலாற்றை கடைச்சங்கப் புலவர் பாடியிருப்பார்.

தற்போதைய தகவல் யுகத்தில், சேரா் சோறு போட்டது சதகா்னிகள் போரில் எனச் சுட்டப்படுகிறது. ஏனெனில் அப்பழம்பாட்டில், இருபடையினரும் முற்றாக மாண்டுவிட்டதாகச் சுட்டப்படுகிறது. எனில், அப்போரில் பாண்டவத் தலைவா்கள் எஞ்சினாா்களே எனும் கேள்வி முன்வைக்கப்படுகிறது. அனைவரும் முடிந்தாா் எனில், தம் படையினா் முடிந்தால், தம் இளவல்கள் முடிந்தால், அது அக்காலத்தில் மன்னவா் முடிந்ததாகவே கருதப்பட்டிருக்கும். அந்த அடிப்படையிலும் பாடல் இயற்றப்பட்டிருக்கலாமன்றோ?

கண்ணன் பிறந்த மதுரா எது? யமுனை எங்குள்ளது? பொருனை என்பதன் பொருள் என்ன? மதுரா - பாண்டு - பாண்டவர் - குரு பரம்பரை - மீனவர் தொடர்பு - மண்ணுக்காக நிகழ்ந்த போர் - ஆயர் குலக் கண்ணன் - கதை வரலாறு - நிலவியல் - மானுடப் பண்பாடு - பெயர்கள் அனைத்தையும் வைத்துப் பார்த்தோமானால், அது தமிழோடு, பாண்டியர் காலத்தோடு தொடர்புடையது என்பது தெளிவு. பாண்டியருக்கு மீனவர் எனவும் பெயருண்டல்லவா. என்றோ நிகழ்ந்த போா், பிற்காலத்தில் சமற்கிருத மொழியில் இயற்றப்பட்டிருக்கலாமன்றோ.

இடைச் சங்கம் இறுதியில் நிகழ்ந்த அந்தப் போா், பாரத நிலமெங்கும் மிகப்பெரிய தாக்கங்களை உண்டாக்கியிருப்பது தெளிவு. முக்கியமாக, அப்பெரும்போரில் நேரடியாகப் பங்குப் பெற்ற குலங்கள், மாபெரும் வீழ்ச்சியை சந்தித்திருக்கின்றன. போரில் ஈடுபடாத சாதிகள் அதன்பிறகான காலத்தில் பெரும் ஏற்றம் பெற்றுள்ளன. முக்கியமாக, வணிக சாதிகள். அனேகமாக பாரதப் போருக்குப்பின், பாரத மண்ணில் உண்மையான வீரம் வெளிப்படவில்லை என்பது திண்ணம். வணிகர் ஏற்றம் பெற்றதும், வணிகத்தால் வந்த பெருஞ்செல்வம் நிலமாக மாற்றப்பட்டதும், நிலம் வணிகர்களால் வியாபாரப் பொருளாக்கப்பட்டதும், வணிகச் செல்வம் கலைகளை வளர்ப்பதற்குப் பயன்படாமல் கேளிக்கைக்கு மடைமாற்றப்பட்டதும், குலங்கள், சாதிகள், உட்சாதிகளாக குழுக்களாகப் பிரிக்கப்பட்டு வயிற்றுப் பிழைப்புக்காக ஒன்றுடன் ஒன்று முட்டிமோதவைக்கப்பட்டதும், பாரதப் பண்பாட்டை கீழமைக்குக் கொண்டு சென்றன. தமிழ் நிலம் இந்தப் பாதிப்புகளை சற்றே பிந்திப் பெற்றது என்னில் பொருத்தமே.

வணிகருக்கு ஏற்றாற்போல் வாய்த்தவை சமணமும், புத்தமும். உண்மையில் இம்மதங்கள் முளைத்ததே அந்தப் பெரும்போரின் அழிவுகளைக் கண்டே, துயரங்களை அறிந்தே. உயிர்களைக் கொல்லாதே, துன்புறுத்தாதே, புலால் உண்ணாதே, பொய் பேசாதே, ஆசையை வளர்க்காதே, சிற்றின்பத்தில் நாட்டம் கொள்ளாதே. இரு மதங்களும் பாரதப் போரின் விளைவுகளே எனில் மிகையாகாது. அப்பெரும் போர் உண்டாக்கிய அழிவு அத்தகையதாக இருந்தது.

இந்திய நிலம் உருவாக்கிய அந்தணர், வீரர், வணிகர், உழைப்பாளர் உண்மையில் அழகிய பிரிவு. பின்னாட்களில் உண்டாக்கப்பட்ட கட்டித்தன்மை, இறுக்கம், பாகுபாடு மட்டும் இல்லாதிருந்தால், இதுவே சிறந்ததொரு சமூக அமைப்பு. அன்று கற்றவர் யாராயினும் அவர் அந்தணராகவே மதிக்கப்பட்டிருக்கிறார். யாராயினும் வீரர் வீரரே. நாட்டை ஆள்வது வீரர்க்கே உரியது. வணிகர் நாடாண்டால்? அவர் மானுட வாழ்க்கையையும் பொருட்களாகப் பாவித்துவிடும் வாய்ப்புண்டு. வணிகருக்கு எல்லாமே இலாப - நட்டக் கணக்கே. அரசர் என்பவர் இலாபம் ஈட்டுபவரல்ல. அவர் குடிகளைக் காப்பவர். அரசர் எனில் காப்பவன் என்பதே முதன்மையான பொருள். அரசன் மக்கள் திரளைப் பாதுகாப்பவன். நாட்டின் தலைமைக் காவலன்.

வணிகன் அரசரானால் நாட்டின் தலைமை வணிகராகிவிடும் வாய்ப்புண்டு. அன்று வணிகர்களே படித்தவர்களாக இருந்திருப்பார்கள் எனில், அவர்களே அன்றைய புது மதங்களான புத்தத்திற்கும் சமணத்திற்கும் மாறியிருப்பார். படிக்காதவர் மாறமாட்டார். மேலும் திருடாதே என்பது அன்றைய பழங்குடி வாழ்க்கையில் வணிகருக்கே பெருமதிப்புடையது.

கடைச் சங்கத்தில் முன்னெடுத்துச் செல்லப்பட்டது வணிகமே. அரசர்கள் வணிகத்தின் மூலம் பெருஞ்செல்வம் திரட்டினர். அரசர்களுக்கு அனைத்து வகையிலும் ஆதரவாக இருந்தது வணிகர்களே. உண்மையில் பல வணிகர்கள் அனைத்து வகையிலும் அரசர்களைவிட மேம்பட்ட வாழ்க்கை வாழ்ந்ததாகப் பதிவுகள் சுட்டுகின்றன. வணிகர் எண்ணிக்கையில் பெருகி, இடம் மாற ஆரம்பித்தார். விரைவிலேயே இந்திய நிலமெங்கும் வணிகராக, வணிக மையங்களாக மாற்றம் பெற்றுவிட்டன.

புத்தமும், சமணமும் பெரியளவில் பரவின. புத்தருக்குப் பின்னான ஆயிரம் வருடங்களில் அதாவது 2500 - 1500க்கு இடைப்பட்ட காலத்தில், அது இந்திய நிலமெங்கும் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. முக்கியமாக வணிகர்கள் இரு மதங்களையும் போற்றினர். எனினும் பெரியதொரு வியப்பாக, எளிய குடிகள் மதம் மாறவில்லை என்றே தெரிகிறது. மதம் மாறியிருந்தால் இந்திய மண்ணைவிட்டு புத்தம் மறைந்திருக்காது. சமணம் குறைந்திருக்காது. பொதுவில் இரு மதங்களும் வணிகத்தோடு அறிவையும் முன்னெடுத்தவை, முன் நகர்த்தியவை.

வணிகர்களின் செல்வம் புத்த சமணக் கோவில்களாக மாறின. அரசர்கள் மதம் மாறினார்கள். மாற்றப்பட்டார்கள். அரசத் தொடர்பால் மக்கள் வாழ்வியலில் இரு மதங்களும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தின. குறிப்பாக, தமிழ் நிலத்தில் நிகழ்ந்ததாகச் சொல்லப்பட்டுள்ள பதிவுகள், சான்றுகள் ஆச்சரியமானவை. பாண்டியர் சைவம், சமணம் என மாறிக் கொண்டிருக்க, சோழரோ சைவம் - பௌத்தம் என மாற்றம் கண்டிருந்தார். இம்மாற்றங்கள் தமிழ் மண்ணில் நிகழ்ந்து கொண்டிருந்தபோதே, பல்லவர்கள் அரசுரிமைக்கு வருகின்றனர். அவர் வரவு தென்னிந்திய, தமிழக வரலாற்றில் ஒரு மைல்கல். வடக்கின் மதங்களையும், தெற்கின் இயற்கை வாழ்வியலையும், சமப்படுத்தியவர்கள் பல்லவர்கள். வடக்கின் வேதத்தையும் தெற்கின் தமிழையும் கலந்தவர்கள் பல்லவர்கள். தெற்கு - வடக்குப் பண்பாட்டை ஒன்றாக்கியவர்கள் பல்லவர்கள்.

சோழர், பாண்டியரில் பிற்கால மரபு சுட்டப்படுகிறது. அவர்களில் முற்கால, இடைக்கால மற்றும் பிற்காலத்திய அரசுமரபு உண்டு. ஆயினும் சேரர் மரபில் பிற்காலத்தவர் எனக் குறிப்பிடுவதில்லை. எனினும், பல்லவர்களை பிற்காலச் சேர மரபாகக் கொள்ளலாம். இருவரும் தேவேந்திர மரபினர் என்பது ஒப்பம். முற்காலச் சேரர் சங்கப் பாடல்களில் பாடப்படுகிறார். இடைக்காலத்தவர் பல்லவர். எனில் பிற்கால சேரர்? குலசேகரர் மரபைக் கொள்ளுதல் சாலச் சிறந்தது.

பாண்டியர் சந்திர மரபு, சோழர் சூரிய மரபு, சேரர் நெருப்பு மரபினர். வெப்பமான பாண்டியருக்கு குளிர்ச்சியான சந்திரன் எனில் பொருத்தமே. ஒப்புநோக்க அராபியர் சந்திர வழியினர். சேரருக்கு நெருப்பு எதனால்? அவரது நிலம் குளிர்ச்சியானதாக இருந்திருக்க வேண்டும். அவருக்கு வெப்பம் இன்றியமையானதாக இருந்திருக்க வேண்டும். சேரரை மலைநாட்டார் எனக்கொண்டால் நெருப்பு மிகவும் அவசியமானதாகிறது.

சோழர் சூரிய வழிபாட்டினராக இருக்க வேண்டும். பயிர்த்தொழிலுக்கு சூரியனே முதன்மை என்பதைக் கொண்டு, சோழர் சூரியன் பெருமைப்படுத்தப்பட்டிருக்கலாம். புலிக்கொடி? எவ்வளவுதான் உற்று நோக்கினாலும், சோழர்கள் நிலத்தில் புலிகள் இருந்திருக்கும் என்பதை ஏற்க இயலவில்லை. தஞ்சை முதல் கலிங்கம்வரை புலிகள் இருந்திருப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. அப்படியே இருந்தாலும் அதிக எண்ணிக்கையில் இருந்திருக்க மாட்டாது. கலிங்கத்திற்குமேலே சென்றால் வங்கத்தில், அதன் அழகிய காட்டில், அதாவது சுந்தர வனத்தில் புலிகள் பெருமளவில் வாழ்கின்றன. சேரரை ஈரான், அதன் வடக்கு எனக் கொள்வது போல், சோழரை வங்கம், பர்மியம், அதன் கிழக்கு எனக் கொண்டால் புலிக்கொடிக்குப் பதில் கிடைக்கிறது.

கரிகால் பெருவளத்தான் அணைகட்டி விளைச்சலைப் பெருக்கினார் எனில், பயிர்த்தொழிலைப் போற்றினார் எனில், அதற்குப் பெருமளவில் துணைபுரிந்தவராக அன்றைய மக்கள் இருந்திருப்பர். அன்றைய மக்கள் எனில் பள்ளரும் பள்ளியும்தானே.

தற்போதும் தஞ்சையில் சேற்றில் உலமுவது இம்மக்களன்றோ. காட்டைத் திருத்திக் கழனியாக்கியது இம்மக்களாகத்தானே இருக்க முடியும்? அதனால்தானே காடுவெட்டிகள், மரம் வெட்டிகள் எனப் பெயர் நிலைத்திருக்கிறது. இவர்கள் காடுவெட்டியா அல்லது காடு திருத்தியா? கழனிபோல் பழனியும் மருத நிலமாம். நெல்லுக்கு நிலம் சேறாக இருப்பது அவசியம். உண்மையில் சேற்று நிலத்திலேயே நெல் நன்றாக வளரும். உண்மையில் சேற்று நிலத்திற்குப் பெயர் பெற்றது வங்கமல்லவா. வங்கத்திலும் பள்ள அரசாட்சி மரபு உண்டென்பது கவனிக்கத்தக்கது.

பங்கம் எனில் சேறாம், சேற்று நிலமாம். பூழி எனில் சேறு, சேற்று நிலத்தவர் என்பதால்தான் அவருக்கு பூழியர் எனும் பெயர் வந்தது. செழியன் - சேழியன் - சேழி - சேறு. ஒப்ப - தொளி. பூழி - சேறு. சோழி - சேறு. மூவரும் சேறோரு தொடர்புடையவர் எனில் பயிர்த்தொழிலை முன்னெடுத்தவர் என்பதல்லவா பொருள். சேர, சோழ, பாண்டியர் என மூவேந்தரும் தாங்களே எனத் தேவேந்திர குலத்தவர் கூறுவது பொருளுள்ளதோ. தமிழின் மூவேந்தரும் பயிர்த்தொழிலிலும் சிறந்திருந்ததால்தான் அவர் நாட்டின் மக்கள் பசியாற்றி இருந்தனர். எனில்

சங்கத்தின் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ள பசி சித்தரிப்புகள்? அதற்கு முற்பட்ட காலமாக இருக்கலாம்? உண்மையில் அது பாலை நிலச் சித்தரிப்பன்றோ.

மருத நிலமெனில் தமிழர் என்ன நினைத்துக் கொள்கிறார் எனில், நூறு கிலோ மீட்டர் பாய்தோடும் தாமிரபருணியே மருதம். உண்மையில் தமிழகத்தில் மருத நிலம் எது? மதுரைக்குக் கீழுள்ளது மருத நிலமாகாது. அவ்வாறே நெல்லைக்குக் கீழுள்ளது மழை நிலம். குறிப்பாக, மலை நிலம். தாமிரபரணியின் இரு மருங்கிலும் சற்றே பயிர்த்தொழில் சிறந்துள்ளது. அதுவும் பல தடுப்பணைகள் கட்டியபின்னேதான். நூறு வருடங்களுக்கு முன், தாமிரபருணியில் எத்தனை அணைகள் இருந்தன? ஆற்று நீர் எத்தனை கால்வாய்கள் வழியாக கொண்டு செல்லப்பட்டது?

தமிழ் நிலத்தில் மருதம் எனில் அது காவிரி நிலமே. குறிப்பாக, திருச்சி தொடங்கி வட ஆற்காடு வரை அழகிய மருத நிலம். இன்னும் சொல்லப்போனால், கிருஷ்ணா, கோதாவரி, மகாநதி, கங்கை, சரஸ்வதிவரை மருத நிலம்தான். அப்படியே கம்போடியா வரையும் மருதத்தை நீட்டிப்புச் செய்ய முடியும்.

இந்தியாவில் மேற்கே மருத நிலம் எங்குள்ளது? வடக்கே மராத்தியம் தொடங்கி குசராத் வரை, நர்மதை, தபதியை ஒட்டி கொஞ்சம் உள்ளது. உண்மையில் அன்றைய பஞ்சாப் பகுதி மருத நிலம். அதற்கு மேலுள்ள நிலமும். மேற்கு நிலமும் முற்றிலும் மலைகள். ஈரான் முழுக்கமே மேட்டு நிலம். மத்திய ஆசியாவில், அன்றைய மெசபதோமியாவான ஈராக்கின் இரு பெரும் ஆற்றுப் பகுதியே உண்மையில் மாமருத நிலம். தெற்கு, கிழக்கு அரேபியா பெரும் பாலை. மேற்கின் துருக்கி மலைப்பகுதி. சோர்தான் ஆற்றினால் அந்நிலப்பகுதி சற்றே மருதம். எனினும் அது மிகவும் குறுகிய நிலமெனில் மிகையாகாது. ஆப்பிரிக்காவின நைல் நதி மிகச்சிறந்த மருதம். அந்நிலத்தில் இன்னும் பல மருத நிலங்களுண்டு.

இரு பெரிய ஆறுகள் அருகருகே பாயும் ஈராக்கின் செழிப்பான நீண்ட மெசபதோமியப் பகுதி, உண்மையில் பயிாத்தொழில் செய்வதற்கு உகந்த பகுதி. செழிப்பான மருத நிலம். இந்நிலத்தில் மக்கள் பல்கிப் பெருகியிருப்பார்கள். சுற்றியுள்ள நிலங்களெல்லாம் பாலை எனில், இந்நிலத்தை நோக்கி, பல திசைகளிலிருந்தும் மக்கள் புலம் பெயர்ந்து வந்திருப்பார்கள். அரசியல் உள்ளிட்ட

பல்வேறு காரணங்களால் இங்கிருந்தும் மக்கள் பல திசைகளை நோக்கிப் புலம் பெயர்ந்தும் போயிருப்பர்.

அன்றைக்கு அய்ரோப்பிய நிலத்தில் மக்கள் குடியேற்றம் குறைவாகவே இருந்திருக்கும். பெரும்பாலும் வறண்ட மலைகள். கடுமையான குளிர், பனிப்பொழிவு. மக்கள் திரள் குறைவாகவே குடியேறியிருக்கும். கிழக்கு ஐரோப்பாவின் ஆற்றுப் பகுதிகளில் குறிப்பாக வோல்கா நதியையொட்டிய உக்ரேனின் சமவெளிப்பகுதிகளில் ஓரளவிற்கு மக்கள் வாழ்ந்திருக்கலாம். வரலாற்றில் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். ஐரோப்பிய வரலாறு ஆயிரம் ஆண்டுகள் கொண்டதே. தமிழருக்குச் சொல்வதனால் பல்லவா் காலத்திற்கும் பிற்பட்டதே. ஆயிரம் வருடப் பழமையிலும் ஆசிய நிலத்தவரே, அய்ரோப்பிய குளிர் நிலத்தில் பரவினர் எனக் கொள்வதே பொருத்தமுடையது.

பாண்டியர் நிலமெது? குறிஞ்சியா? முல்லையா? அல்லது மருதம், நெய்தலா? மீன், மீனவரோடு நெருங்கிய தொடர்புள்ளது பாண்டிய மரபு. எனில் மீனவர் யார்? மீனவரிலும் கடல் மீனவர், ஆற்று மீனவர் என உண்டு. பாண்டியர் கடலா ஆறா? ஆறு எனில் மருதமாகிறார். தற்போதைய பாண்டிய நாட்டில் எங்கிருக்கிறது ஆறு? வைகையாறு மதுரை வரையிலும் மலைகளுடே ஓடி வருகிறது. மதுரை முதல் வங்களா வரிகுடா வரை எத்தனை துாரம்? வையை என்ன வற்றாத நீர்ப்போக்குக் கொண்டதா? அணைகளில்லாத காலத்தில் கோடையிலும் சற்றே நீர் ஓடியிருக்கும். எனினும் பெருத்த ஆறல்லவே. பாண்டியருக்குக் கடலோடுதான் நெருக்கம் அதிகம். எனில் வணிகத்தை பெருமளவில் முன்னெடுத்திருப்பார். அதற்கேற்றாற்போல், பாண்டிய நாட்டில் சமணம் பெரியளவில் பரவியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

நாடார் பாண்டியரா? ஆம் எனில், மீனவர்? நாயர்? தெய்யர்? ஈழவர்? தற்போது பள்ளரும், பறையரும், மறவரும், பிள்ளையும் நெல்லையில் அதிகம். எனினும், அந்நிலத்தின் முன்னைப் பழமையான குடிகள் யார், யாரார்? மதுரைப் பகுதியில் இடையரும் கூடுதல். இவர்களில் நெய்தலோடு தொடர்புடைய வாழ்வியலைக் கொண்டவர் யார்? நெல்லையும், மதுரையும் மருதம் எனில், மருதத்தோடு தொடர்புடைய வாழ்வியலைக் கொண்டவர் யார்?

நூல் வைத்தாற்போல் நிலத்தை குறிஞ்சி, முல்லை, மருதம் எனப் பிரிப்பது சாத்தியம்தானா? கோட்பாட்டு அளவில் சரி. மக்களின் வாழ்வியலில்? மக்களின்

இடப்பெயர்வில்? இடப்பெயர்விலும் ஒன்றைக் கவனத்தில் கொள்ளவேண்டும். மீனவர் எங்கு சென்றாலும் மீன்பிடித் தொழில்தான் செய்வார். அவர் ஒருபோதும் பானை செய்ய மாட்டார். பயிர்த் தொழில் செய்பவர் மீனும் பிடிப்பாரேயொழிய, அதைத் தொழிலாகக் கொள்ளமாட்டார். படகு வழிக்கும் மீனவர் ஏரோட்டுவது அரிதினும் அரிது.

நாடார் மீன் தொழிலோடு தொடர்புள்ளவரா? மீனை வலைவீசிப் பிடிக்கிறாரா? நாடார் சாதியின் உட்பிரிவில் மீனவச் சாதியினர் உண்டா?

இன்னொற்றையும் தமிழர் கருத்தில் கொள்ள வேண்டும். பாண்டிய மரபு முச்சங்கத்தையும் தொட்டு நீள்கிறது. முதல்சங்கம், இடைச்சங்கம் மற்றும் கடைச்சங்கம். கடைச்சங்க காலத்திலும், முற்காலப் பாண்டியர், இடைக்காலப் பாண்டியர், பிற்காலப் பாண்டியர், தென்காசி, கொல்லம் பாண்டியர் எனச் சுட்டப்படுகின்றனர். இத்தனை பாண்டியரில் நாடார் யார்? அல்லது அனைவரும் நாடார் தானா?

நாடார் தொல்குடியெனில் அல்லது நாடார் முன்பு சாணான் என அழைக்கப்பட்டார் எனில், ஏன் தென்னிந்தியக் குடிகளில் நாடார், சாணான் எனும் பெயர் பரவலாக இடம் பெறவில்லை. உதாரணமாக பள்ளன், பறையன், சாதியினர். இரு சாதிப் பெயரும் தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம் மற்றும் கேரளச் சாதிகளின் பட்டியலில் அதே பெயரோடு இன்றளவும் இடம்பெற்றுள்ளது எப்படி? நூறு வருடங்களுக்கு முந்தைய கணக்கெடுப்பில், கள் இறக்குவதே முக்கியத் தொழில் எனில், அதற்கும் முன்னர் நாடாருக்கு தொழில் என்னவாக இருந்தது?

இன்னொன்றையும் கவனிததில் கொள்ள வேண்டும். நெல்லையின் குறுகிய பகுதிக்குள் தமிழின் நான்கு வகை நிலமும் அமைந்திருப்பது விந்தை. மேற்கே குறிஞ்சி, தொடர்ந்து முல்லை, பின்னர் மருதம், முடிவில் நெய்தல். தேரிக்காட்டை பாலை எனக் கொண்டால், சற்றே பாலையும் இருக்கிறது. இதுவே சோழனுக்கு? அவருக்குப் பெரும்பாலும் மருதமே. நெய்தல்கூட பாண்டியர்போல் அந்தளவிற்கு சிறப்பாக முன்னெடுக்கப்படவில்லை. தற்காலத்திய சேரருக்கோ குறிஞ்சியும், நெய்தலும். கூடவே கொங்கின் தாழ்நிலப் பகுதியான மருத நிலமான கரூர்ப் பகுதியும், கருநாடாக மைசூர்ப் பகுதியும். மூன்று நிலத்தையும் சிறப்பாகப் பயன்படுத்தியவர் எனச் சேரனைக் குறிப்பிடலாம்.

சேரர், கொங்கிலிருந்து பின் சேரளம் சென்றாரா அல்லது சேரளத்திலிருந்து கொங்கிற்கு வந்தாரா? மலைச்சரிவான அரபிக்கடல் பகுதியில் முன்னர் அதாவது இடை, கடைச்சங்க காலத்தில் எவ்வளவு மலைச்சரிவு, சமவெளிப் பரப்பு இருந்திருக்கும்? எனில், இங்கிருந்துதான் அங்கு என்பது உறுதியல்லா. அன்று கரூர் புகழ்பெற்ற சேரர் தலைநகராக இருந்திருக்கும்.

அத்தனை வலிமையானவர்களாகப் புகழப்பெற்ற சேர, சோழ, பாண்டியர்களின் தலைநகர்கள் அருகருகே இடம் பெற்றிருந்தது எப்படி? ஒரு காலத்தில் ஒற்றுமையாக, அண்ணன் தம்பிகளாக அரசாண்டிருப்பார்களோ? பாண்டியர்களின் தலைநகரான மதுரையிலிருந்து தஞ்சாவூரும், கரூரும் எவ்வளவு தூரம்?

பறையருக்கும், மீனவரான பரதவருக்கும், பாண்டியருக்கும் என்ன தொடர்பு? பறையரில் மீன் பறையர் பிரிவுண்டா? பறையடிப்பதால் மட்டும் பறையராகிவிட மாட்டார். வேறு தொழில்கள் செய்திருக்க வேண்டும். பறையரில் சாம்பவ குல வேளாளர் பிரிவு சமீப காலத்தில் சுட்டப்படுகிறது. பறையர் நெசவுத் தொழிலோடு தொடர்புள்ளவர் என நூற்றாண்டுக்கு முன்புள்ள வெள்ளையர் ஆவணங்கள் சுட்டுகின்றன. அவ்வாறே பறையர் புத்த மதத்தோடு தொடர்புடையவராகவும் பண்டிதர் அயோத்திதாசரால் காட்டப்படுகிறது. பறையர் பௌத்தரா சமணரா?

மீனவரான பாண்டியருக்கும், மறவருக்குமான உறவென்ன? மறவர்தான் பாண்டியரா? நெய்தல் நிலமான கடற்கரையையொட்டி, அதுவும் குறிப்பாக இராமநாதபுரம், நெல்லைக் கடற்கரையையொட்டி மட்டும் குறிப்பிடும்படியான எண்ணிக்கையில் வாழும் மறவர்தான் பாண்டியரா? நெல்லைக்கும் நாயக்கர் மற்றும் வெள்ளையர் ஆட்சியிலேயே மறவர் இடம் பெயர்ந்ததாகச் சுட்டப்படுவதில் உண்மையிருக்கிறதா? குமரித்துறைவன் பாண்டியன் எனில், ஏன் குமரியிலோ, திருவாங்கூரிலோ மறவர் சாதி இல்லை? மறவர் முத்துக் குளிப்பதுண்டா? மறவர் மீன் பிடிப்பதுண்டா? மீனவருக்கு வட்டிக்குக் கொடுத்து தொழில் பண்ணுகிறார். பெரிய பெரிய படகுகளுக்கு உரிமையாளராக இருக்கிறார். படகுகளை மீனவரிடம் விட்டு பணம் பண்ணுகிறார். எனினும் மீன் பிடிக்கிறாரா? மறவருக்கும் மீனுக்குமான தொடர்பு எத்தகையது? பாண்டியனை அடக்கி, அழித்தே நாயக்கர் ஆட்சியுரிமை பெற்றார் எனில், அவர் ஆட்சிக்குட்பட்டு ஜமீன்களாக மறவர் இடம் பெற்றது முரணல்லவா? அதெப்படி அவ்வளவு சிறப்பான பாண்டிய அரச மரபு, அத்தனை

உயர்ந்த பாண்டிய அரசர்கள், மாற்றாருக்கு ஜமீனாக இருக்க ஒப்புவார்கள்? அதுவும் வரி வசூலித்துக் கொடுக்கும் பாளையக்காரர்களாக?

பாண்டியர் மீன் ஆற்று மீனோ? மீன் எத்தனை அழகியதொரு விலங்கினம்? மீன்தான் நீரைவிட்டு வெளியில் வந்து தவளையாகியதாம். மீனின் முன்பக்கத் துடுப்புகள் தவளையின் முன்னங் கால்கள். பின்பக்கத் துடுப்புகள் பின்னங் கால்கள். மீனின் வால்துடுப்பு தவளைக்கு வால். தவளையின் வால் இளமைக்காலத்தில் தோன்றி பின் வளர வளர காணாமல் போய்விடுகிறது.

மீனுக்கு சுவாச உறுப்பு செவுள். என்னும் சில மீன்களில் நுரையீரல் போன்ற உறுப்புகள் உண்டு. அவைகளுக்குப் பெயரே சுவாச மீன்கள். அவையே நீரைவிட்டு முதலில் நிலத்திற்கு வந்த மீன்களாக இருக்க வேண்டும். நீரிலிருந்து நிலத்திற்கு இடம் மாறியது பரிணாமத்தில் பெருமாற்றம். அதாவது ஜெயன்ட் லீப்.

நுரையீரலும் கால்களும் வந்தபின், விலங்குகள் வெகுவேகமாக மாறிவிட்டன. நிலத்தில் வாழ்ந்த போதிலும், முட்டைகள் போட தவளை நீருக்குத்தான் வந்தாக வேண்டும். ஆனால் பல்லிக்கோ அது அவசியமில்லை. முட்டைகளை நிலத்திலேயே போட்டு விடும்.

நீரில் வாழ்ந்த மீன், நீர்நிலமான தவளையாகி, நிலமான பல்லியானது மிக மிக விந்தையான உடலியல் மாற்றம். பல்லிகளில் ஒரு வகையே வானத்தில் பறந்தது. பல்லிகளில் ஒரு வகையே குட்டிபோட்டு பாலூட்டியது. அதுவே பின்னர் மனிதனாக மாறியது. அதுவே அறிவியலை முன்னெடுத்து நவீன மனிதனாகவும் மாறியது.

பல்லி, பள்ளி. ல் - ள் - ழ் எத்தனை பொருள் மாற்றம். அளவில் சிறியதெனில் பல்லி. பெரியது கௌளி. இன்றும் பெரிது ஓணான். அதற்கும் பெரியது உடும்பு. மிகப் பெரியது டைனோசர்.

குமரி நாடார் கருப்பாக உயரமாக இருக்கிறார். இராம் நாடு மறவர் உயரம் குறைவாக சற்றே நிறமாக இருக்கிறார். பரதவர் உயரமாக நிறமாக இருக்கிறார். பரதவர் கடற்கரையிலிருந்தாலும் நாடார்போல் அடர் கருப்பாக இல்லை. சாம்பவ பறையர் உயரம் குறைவாக அடர் கருப்பாக இருக்கிறார். வட தமிழக பறையர் சற்றே உயரமாக கருப்பாக இருகிறார். கள்ளர் உயரம் குறைவு. ஊர்களில் வாழும்

கள்ளர்கள் இன்னும் பழமை மாறாமல் இருப்பது வியப்பு. கள்ளர் பழமையான குடி என்பது தெளிவு. கள்ளர் கொஞ்சம் கலவையாகவும் இருக்கிறாரோ? அகமுடையாரே வெளுப்பு. நாயக்கர் உயரமாக ஒல்லியாக இருக்கிறார். கன்னடரோ உருளை போன்று திரளாக இருக்கிறார். களியால் இருக்கலாமோ? தமிழகப் பிள்ளையும் கன்னடரும் உருவத்தில் ஒத்திருக்கிறார்கள். முதலி தெலுங்கரை ஒத்திருக்கிறார். கள்ளர், மறவர் குல முறையில், சாதி ஆச்சாரங்களில் தீவிரமாக இருக்கிறார். எளிதில் மாறுவதில்லை. அகமுடையாரோ எளிதில் மாறக் கூடியவராக இருக்கிறார். எதையும் எளிதாக எடுத்துக் கொள்கிறார்.

பள்ளர்கள் பொதுவில் உயரம் குறைவாக இருக்கிறார்கள். நெல்லைப் பகுதியினர் நல்ல கருப்பு நிறம். மறவர் அளவுக்கு இல்லையெனினும், குலமுறையில் சுட்டுப்பாடும் உண்டு. குலதெய்வ நம்பிக்கையும் பெருமளவில் உள்ளது. வன்னியருக்கும் இவை பொருத்தும் எனவே தெரிகிறது. ஆனாலும் அவர் நிறம் பள்ளரைவிட சற்றே வெளுப்போ? நெல்லையின் அந்தக் கருப்பு இல்லைதானே? குமரி, நெல்லையின் கருப்பு விருதுநகரிலேயே இல்லையோ?

ஒருவரின் உணவுக்கும் உடலின் தன்மைக்கும் தொடர்பிருக்கிறது. நன்றாகச் சாப்பிடுபவரின் உடல் கெட்டித்தன்மை கொண்டுவிடும். அவ்வாறே கறி சாப்பிடுபவர் உடலும். பல தலைமுறைகளாக நன்றாக உண்டவர் உடலமைப்பிற்கும், போதிய அளவு உணவு உண்ணாதவர் உடலமைப்பிற்கும் பெரியளவில் மாற்றமிருக்கும்.

பள்ளர் பெண்களும், மறவர் பெண்களும் கரடுமுரடாக இருக்கின்றனர். அகமுடையார் பெண்கள் அழகு. நாடார் பரவாயில்லை. பறையர் கருப்பெனினும் பரவாயில்லை. அருந்ததியர் வீட்டுப் பெண்களின் முகம் அத்தனை அழகு. வெள்ளையர் அழகாகக் குறித்துள்ளார் - அவர்கள் பத்மினியாம். பத்மினி - அழகான முகமுள்ளவர்.

பாண்டியர் மீன் நெல்வயல் மீனோ? சால்மீன் - சாலமீன் - சாலமோன் - சாலமன் - சல்மன் - சல்மான் - சாலிமான் - தேளி மீன் - பூழி மீன்.

தேளி - சேற்று மீன். முதுகலைப் படிக்கும்போது பேராசிரியரின் ஆராய்ச்சிக்காக இந்த மீன் வாங்க பழையகாயல் கண்மாய்களில் சுற்றித் திரிந்தது நினைவுள்ளது. கன்னங்கரேலென்றிருக்கும். கொடுக்கு குத்தினால் மிகுதியாகக் கடுக்கும்.

சேற்றுக்கு எத்தனை பெயர்கள். அளறு, பூழி, அளக்கர், சேதகம், அரறு, பங்கம், அள்ளல், குழை, தொளி, கொள்ளம், செய்யல், கும்பி, குழம்பு, தொள்ளி, சகதி, தொய்யல், நுரம்பு, அசம்பு, செதும்பு, ஆங்கணம், பூதி (பி.நி).

சேரள கொல்லம் கொள்ளமோ? கொள்ளம் - வடிகால் பகுதி. வல்லம் மருவி கொல்லமாகிவிட்டதோ. கொல்லை எனில் புறம், புறக்கடை. மலையின், நிலத்தின் கடைசிப் பகுதி கொல்லம்தானே.

மீன் மச்சம் எனப்படுகிறது. மீன்தான் மனிதத் தோற்றத்திற்கு மூலம் எனில், உலகின் தோற்றத்திற்கு உயிர்களின் தோற்றத்திற்கு மச்சாவதாரமோ? மீனாக உருவெடுத்தது யார்? மீன் யார்? மச்சம் எனும் பெயர் எதனால்?

காலத்திற்கும், யுகக்கணக்கிற்கும், பாண்டியர் சங்கத்திற்கும் தொடர்பிருக்குமோ? திரேதா யுகத்தின் முடிவில் இராமன் எனில், துவாபர யுகத்தின் முடிவில் கண்ணன். இராமன் முதல் சங்கம். கண்ணன் இடைச் சங்கம். என்னில் கடைச்சங்கத்தின் இறுதியில்?

யுகம் என்பது கால மாற்றம் எனில், பாண்டியர் சங்கம்? தமிழ்ச் சங்கமும் காலத்தின் குறியீடோ? இராமனுக்கு இராமாயணம். கண்ணனுக்கு மகாபாரதம். எனில் பரியனுக்கு? வாளேந்தி வருவானாம்.

வாள் என்பதற்கு தமிழில் வள் என்னும் பொருள் சுட்டப்படுகிறது. வால் - வெண்மை, பெருமை, சுத்தம், தொகை (மனிதர் பெருமையைத் தொலைத்து விட்டாரோ?) வாள் - வாளாயுதம், ஒளி. ஒருவேளை கண்ணன் ஒளி கொண்டு வருவானோ? பாரதி சொன்னதுபோல் இருளைத் தீர்க்க. தீர்ப்பான் இருளை. எத்தனை உறுதி கண்ணன்மேல். பேர்ப்பான் கலியை. வருவானா அந்த மாயன், மாதவன். பேர்ப்பானா அந்த கோவிந்தன் கலியை.

வள் - பற்றிரும்பு, வாள், காது, வலிமை, கூர்மை. வள்ளென (கூர்மை) இருப்பதால்தான் வாளோ. வில் என்றாலும் ஒளி.

என்மனார் புலவ. தொல்காப்பியர் சுட்டுவது - என்பார்கள் புலவர்கள். தொல் காப்பியம் பழமையான நூல் எனில் என்மனார்கள் எவர்? தொல்காப்பியருக்கும் தொன்மையானவர்கள். இடைச்சங்கம் தானே? இடைச்சங்கத்தின் தலைமை நூல்

எப்படி இருந்திருக்கும்? நூல் வடிவில்தான் இருந்திருக்குமா? வேறு ஏதேனும் வடிவத்திலும் இருந்திருக்குமா? புலவர்களுக்குள் விவாதங்கள் நடந்திருப்பின் எவ்வாறு இருந்திருக்கும்?

கலியின் கணக்கென்ன? தொல்காப்பியனைத் தொடக்கமாகக் கொண்டால் பாரதிதான் கடைச்சங்கத்தின் இறுதிப் புலவனோ.

பாரதி காலத்தில் சாதிகள் கூர்மை கொண்டிருந்தன என்பது உண்மை. திராவிடமும், பிராமணரல்லாதார் முன்னெடுப்பும் தொடங்கிவிட்டிருந்தன. பாரதி பாண்டி நாட்டவன் என்பதால் சாதிகளைப் பற்றி நன்றாகவே அறிந்திருப்பான். அன்றைக்கு எத்தனையோ சாதிகள் இருக்க, எதனால் “ஆடுவோமே பள்ளு பாடுவோமே, ஆனந்த சதந்திரம் அடைந்து விட்டோம்” எனப் பாடினான். பள்ளரைப் பற்றி பாரதி அறிந்திருந்தானோ? எட்டையபுரத்துச் ஜமீனில் புலவராக இருந்ததால் நாயக்கர் வரலாற்றையும் அறிந்திருப்பானல்லவா. பள்ளர்கள்தான் பாண்டியர்கள் என்பதும், அவர்களே தேவேந்திர குலத்தவர் என்பதும் அறிந்துதான் பாடியிருப்பானோ?

பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம், பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம். அவன்தாள் பணிந்து, மனமுவந்து, அன்புடன் பாரதி பாடிய அந்த பரிபூரணன் யார்?

பள்ளரே பாண்டியர் என்பதை அடுக்கடுக்கான ஆதாரங்களோடு நிரூபித்துள்ளார் செந்தில் மள்ளர். இவர் பாண்டி நாட்டுக்காரர்தான். முதுநிலை வரலாறு படித்தவர் என்பதால் ஏராளமான சான்றுகளை, ஆவணங்களை சுட்டிக்காட்டி, பெருநூலாகப் படைத்துள்ளார். மீண்டெழும் பாண்டியர் வரலாறு – குடிமரபியல் ஆய்வு எனும் வரலாற்றியல் தமிழ் நூலில் (2012) பாண்டியர் யார் எனும் வினா எழுப்பி அதற்கு அறிவுப்பூர்வமான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நூலை அதன் ஆசிரியர் ஏழு ஆண்டுகள் ஆராய்ச்சி பணியில் ஈடுபட்டு 644 ஆவணங்களை ஆய்ந்து எழுதியுள்ளதாகக் குறிப்பிடுகிறார். நூலில் சற்றே குறையாக சுட்டிக்காட்டப்படவது ஒரு சில சொற்களையே. அவற்றை நீக்கிவிட்டு, மாற்றிவிட்டு, புத்தகத்தை வெளியிடலாம் என நீதிமன்றம் அனுமதியளித்து விட்டது.

அந்தச் சொற்பிரயோகம் தவறா? பயன்படுத்தியிருக்க வேண்டியதில்லையோ? நாயக்கரும் நம் உறவுதானே. முன்னாள் தமிழர். பின்னாட்களில் தமிழ் திரிந்து தெலுங்கமாக மாறிவிட்டது. மதுரையை வெற்றிகொண்டு பாண்டிய அரசுரிமையை அழித்துவிட்டாரே எனும் கொதிப்பில் அந்தச் சொற்களை செந்தில் மள்ளர் பயன்படுத்தி விட்டாரோ? உண்மையில் அன்னார் சுட்டியதுகூட இழிவுச் சொல்லாகாது. எல்லாம் அரசியல்.

ஒரு அரசு வெற்றிகொள்ளும்போது அப்படித்தான் நடந்து கொள்ளும். தமக்கு வேண்டியவர்களுக்கு சலுகைகள் அளிக்கும். எதிர்ப்பவரை முரட்டுத்தனமாக ஒடுக்கும். எதிரியாக மாறலாம் என நினைப்பவரை அழிக்கும். நிலத்தைப் பிடுங்கும். அவர் மக்களைக் குடியேற்றும். வரியில் விலக்களிக்கும். சட்ட திட்டங்களில் வேறுபாடு காட்டும்.

நாயக்கர் மதுரையைப் பிடித்தபின் பெருமளவிலான தெலுங்கு, கன்னட மக்கள் தமிழகத்திற்கு இடம் மாறியுள்ளனர். அவர்களது கிராமங்களில் பள்ளரும், பறையரும், ஆசாரிகளும் குடிவைக்கப்பட்டிருக்கின்றனர். கிராமங்களின் காவல்காரர்களாக மறவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். நிலம் ஜமீன்களுக்கும், பிள்ளை, ரெட்டி, செட்டி, பிராமணர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. பிராமணர்களிலும் தெலுங்குப் பிராமணர் அதிகமாக குடிவைக்கப்பட்டுள்ளனர். ஒருவேளை தெலுங்குக் காரர்களுக்கென சிறப்புச் சலுகைகளும் கொடுக்கப்பட்டிருக்கலாம். நாயக்கர் ஆட்சியின் பெருவாரியான ஆவணங்கள், பதிவுகள் தெலுங்கில் உள்ளனவாம். அவை ஆவணமாக்கப்படவில்லை என்றே சுட்டப்படுகிறது.

நாயக்கர் தமிழ்ச் சாதிகளை அடக்கி ஒடுக்கினாரா? பதிவுகள் இருப்பதாகத் தெரியவில்லை. சுதந்திரத்திற்குப்பின் அட்டவணை சாதியாராக மாற்றம் பெற்ற பள்ளன், பறையன், சக்கிலியன் போன்ற சாதியாரின் அன்றைய நிலை, அதாவது நாயக்கர் ஆட்சியில் இவர்கள் எப்படி இருந்தார்கள்? இவர்களை நாயக்கர் ஆட்சி பாதுகாத்ததா? ஆதரித்தாரா? ஏதேனும் நன்மைகள் செய்தாரா? தெரியவில்லை. நாயக்கர் காலத்தில் பிராமண வாழ்க்கைமுறையே மதிப்பிற்குரியதாக இருந்ததால், சாதிய ஏற்றதாழ்வுகள் பெருமளவில் முன்னெடுக்கப்பட்டிருக்கும். இன்னொன்றையும் கவனத்தில் கொள்ளவேண்டும். மதுரை நாயக்கர் நேரடியாக ஆட்சி செய்யவில்லை. பாளையக்காரர்கள்தான் ஆட்சியாளர்கள். பாளையக்காரர்கள் யார்? அவர்கள்

குணமென்ன? அவர்கள் மக்களை எப்படி ஆட்சி செய்தார்கள்? எப்படி வரி வசூல் செய்தார்கள்?

நாயக்க ஆட்சியாளர்களோ, நாயக்கர் சாதியினரோ எளிய மக்களான பட்டியல் மக்களுக்கு கொடுமைகள் இழைத்தார்களா? இருந்திருக்காது என்பதை உறுதியாகச் சொல்லலாம். அங்கிருந்த வந்தவர்களும் எளிய மக்களே. குறிப்பாக தமிழக ஊர்களில் தங்கிய நாயக்கர்கள் பெரும்பாலும் ஆட்டுக்காரர்களே. நிலம் பெரும்பாலும் ஜமீன்களிடமும், பின்னர் ரெட்டி, ஐயர் போன்றவரிகளிடமும் இருந்திருக்கும். பின்னாட்களில் அதாவது சுதந்திரம் பெற்ற பின்பு, பிறர் நிலங்களைச் சேர்ந்திருப்பார்கள். சுதந்திரத்திற்குப் பின்பு பட்டியல் சாதியினரும் நிலம் வாங்கினார்கள் என்பதும் உண்மையல்லவா.

ஜமீன்கள் ஆளுகையில் பல்வேறு சட்டதிட்டங்கள் விதிக்கப்பட்டன எனக் கொள்ளலாம். பதிவுகளிலிருந்து சமீன்கள் குறுநில மன்னர்கள் போன்றே இருந்துள்ளனர். பெரும்பாலும் சாதியக் கண்ணோட்டமே இருந்துள்ளது. நிலம் இன்னார் வைத்துக் கொள்ளலாம், இன்னார் கூடாது, இன்னார் இன்ன தொழில்தான் செய்யவேண்டும் என்பன போன்ற ஏராளமான கட்டுப்பாடுகள் இருந்துள்ளன. ஆட்சியாளர்கள் அப்படித்தான் மக்களை அடக்கி, ஒடுக்கி ஆள நினைப்பார்கள். எனினும் மேலை நாடுகளில் நடந்தது போன்ற கொடுங்குற்றங்கள் செய்யவில்லை என்பதை உறுதியாகச் சொல்லலாம். செய்திருந்தால் ஏதேனும் ஒரு விதத்தில் அது இம்மண்ணில் மக்களால் நினைவு கூறப்பட்டிருக்கும். கடத்திவரப்பட்டிருக்கும்.

சனநாயகக் காலத்திலேயே, அதுவும் மக்களே ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கலாம் எனும் நிலையிலேயே, ஆட்சியதிகாரத்திற்கு வருபவர்கள் எப்படியெல்லாம் நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, அந்தக் காலத்தைப் பரவாயில்லை என்றே சொல்லலாம். ஐந்து வருடம் முடிந்தபின் மறுபடியும் மக்களிடம் போயே ஆக வேண்டும் எனும் நிலையில், ஆட்சிக்கு வந்தவுடன் என்னவெல்லாம் செய்கிறார்கள்? தமது கட்சிக்காரர் பார்த்து, தமது சாதிக்காரர் பார்த்து, எத்தனை பதவிகளை அள்ளிக் கொடுக்கிறார்கள். பல்கலை துணைவேந்தர் பதவிகளுக்குக்கூட கட்சியும் சாதியும் பார்கிறார்கள் எனில் என்னத்தைச் சொல்ல.

சாதி, மத, அரசியல், மொழி, நாடு, இனம் என்பதைத் தாண்டிய பொதுமனிதராக, அறிஞராக இருக்க வேண்டிய, செயல்பட வேண்டிய, சிந்திக்க வேண்டிய துணை வேந்தர், அவரது அரசு வாகனத்தில் கட்சிக் கொடி பறக்க விடுவது எந்த விதத்தில் ஏற்புடையது? கட்சிக்காரர்போல் செயல்படும் இவரெப்படி துணை வேந்தர்? எப்படி பல்கலையின் தரம் உயரும்? பல்கலை துணைவேந்தர் என்பது எத்தனை மதிப்பான, பொறுப்பான பதவி? பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பயிலும் பல்கலையின் துணை வேந்தரின் ஒவ்வொரு செயலும், பேச்சும் எத்தனை தெளிவாக, உயர்வாக அமைந்திருக்க வேண்டும்?

மீண்டெழும் பாண்டியர் வரலாறு - குடிமரபியல் ஆய்வு நூல் புத்தகத்திற்குத் தடை போட்டார்கள். அது அரசியல். அதிகாரம் அப்படித்தான் செய்யும். தேசத் துரோகச் குற்றச்சாட்டு எதனால்?

வெள்ளையர் பாரதியின் நூல்களுக்குத் தடைபோட்டார் எனில், அது மாற்றார் ஆட்சி. அவர் அப்படித்தான் இருப்பார், நடப்பார். சட்டப்படி எழுத்துரிமையுள்ள, உரிமை வழங்கப்பட்டுள்ள சனநாயக ஆட்சியில்? இப்பவும் ஆட்சியாளர்கள் நினைத்தால் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்பதுதானே உண்மை நிலை.

மீண்டெழும் பாண்டியர் வரலாறு எழுதிய செந்தில் மள்ளர் சவால் விட்டிருக்கிறார். பள்ளரே பாண்டியரென்றும், இல்லை என மறுத்து நிரூபித்தால் பத்து இலக்கம் பணமுடிப்பு தருவதாகவும். யாரும் முயற்சிக்கவில்லை எனத் தெரிகிறது.

நூலின் ஆசிரியரான திரு. செந்தில் மள்ளர் கடுமையாக உழைத்திருக்கிறார். நுட்பமான தகவல்களைத் திரட்டியிருக்கிறார். வரலாற்றுக்கு, வரலாற்று ஆய்வுக்குத் தேவை தக்க சான்றுகள். சான்றுகள் கொண்டே வரலாறு எழுதப்பட முடியும், வரலாற்றை நிலைநிறுத்தவும் முடியும். சான்றுகள் கொண்டே எழுதப்பட்டுள்ள வரலாற்றை நிலைநிறுத்தவும் முடியும். எழுதப்பட்டுள்ள வரலாற்றை தக்க சான்றுகள் கொண்டு மறுக்கவும் முடியும். பள்ளர்களே பாண்டியர்கள் என்பதை நிரூபிக்க தோழர் செந்தில் மள்ளர் சான்றுகள் கொடுத்திருக்கிறார். மறுப்பவர்கள் தக்க சான்றுகளோடு மறுக்கலாம்.

பள் எனும் வேர்ச்சொல்லிலிருந்து கிளைத்ததே பாண்டியர்களாம். பாண்டியர்கள் வேளாண் மரபினராகக் குறிப்பிடப்படுவதும் கவனிக்கத்தக்கது. வி.கனகசபைபிள்ளை, ந.சி.கந்தசாமிப்பிள்ளை, கா.அப்பாத்துரை போன்ற

அறிஞர்கள் சேர, சோழ, பாண்டிய அரசர்கள், வேளாண் மரபில் தோன்றியவரே எனக் குறிப்பிட்டுள்ளனராம். உண்மையெனில் தமிழ் நிலத்தில் வேளாண் மரபினர் யார்? எந்தச் சாதி? வேளாண்மைக்கு எது முக்கியம்? ஏர்தான் எனில் ஏரோட்டியவரே வேளாளர். உழுதோரே பயிர்த்தொழில் செய்தோர். பிள்ளையும், பிராமணரும், வெள்ளாளர் எனக் கூறிக்கொள்ளும் பிற சாதியாரும், நிலத்தை உழுததில்லை எனில், அவர் உழவராக மாட்டார். பயிர்த்தொழிலுக்கு மண்ணை உழுவதும், களையெடுப்பதும், அறுப்பதும், களம் காண்பதும் அத்தியாவசியம். இவற்றைச் செய்தவரே, தொழிலாகக் கொண்டவரே வேளாளர்.

வேளாளர் ஏன், எதனால், எப்படி வெள்ளாளரானார்? ஆங்கிலேயரின் அத்தனை பதிவுகளிலும் வெள்ளாளர் என்றே குறிப்பிடப்பட்டள்ளது. ஆங்கிலேயர்கள் தமிழிலும் குறித்துள்ளனர். வெள்ளாண்மை செய்வதால் வெள்ளாளர். வெள்ளாண்மையும் வேளாண்மையும் ஒன்றா? உண்மையெனில் ஏன் வேளாளர் என இல்லாமல் அச்சொல் வெள்ளாளராகிறது?

பதில் நிகண்டுகளில் உள்ளது. பிங்கல நிகண்டு வேளாளர் என்பதற்கு சூத்திரர் எனப் பொருள் சுட்டுகிறது. சதுர்த்தருங் கொடைவள் ளலும்வே ளாளர் (பி.நி.1085) வேளாளர் என்பது சூத்திரர், கொடையாளர்.

வேளாண்மை - மெய்ம்மையுங் கொடையும் வேளாண்மை யாகும். வேளாண்மை என்பது - உண்மை, கொடுத்தல்

சூத்திரர் என்பதனால்தான் வேளாளர் வெள்ளாளரானாரா? ஆயின் கொடையாளர் எனும் பெயரும் உண்டே. வேளாளர் கொடைக்குப் பெயர் பெற்றவரா?

வேள் என்பதற்கு சாளுவன் என்றொரு பொருளும் உண்டு. தார காரியுஞ் சளுக்கியர் வேந்தனம் வேனி லாளனும் வேளென லாகும் (பி.நி.1086).

பல்லவர் - சாளுக்கியர் போர்கள் தமிழக வரலாற்றில் புகழ் பெற்றவை. சாளுக்கர் யார்? வேளாண்மை செய்தவர்.

பல்லவர் - பயிர்த்தொழிலை சிறப்பாகக் கட்டமைத்தவர். சாளுக்கியர் வேளாளர் எனில் பல்லவர்?

பல்லவர் கீழோராம். யாரெல்லாம் கீழோர்? பிங்கல நிகண்டு சுட்டுகிறது - பல்லவர், பதகர், நீசர், புல்லர், பூரியர், புள்ளவர். ஏராளமான பெயர்கள். முதல் பெயரே பல்லவர்தான்.

எத்தனை மாண்புடையவர் பல்லவர்? எதனால் பல்லவர் கீழோர் என நிகண்டில் சுட்டப்பட்டார்? பயிர்த்தொழிலைச் சிறப்பித்ததாலா? உழவுத் தொழிலைச் சிறப்பித்ததாலா? நிலத்தை உழுததாலா?

அன்றைக்கு, அதாவது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, தமிழில் நிகண்டுகள் எதனால், யாரால் தோற்றவிக்கப்பட்டன? காரணமென்ன? தமிழ் தெரியாதவருக்கே நிகண்டுகள் தேவைப்பட்டிருருக்கும். எனில், அன்றைக்கு பல்லவர் காலத்தில் யாருக்கு தமிழ் தெரிந்திருக்காது? வெளியிலிருந்து வந்தவருக்கு. அன்று வெளியிலிருந்து தமிழ் நிலத்திற்குள் வந்தவர் யார்? எங்கிருந்து வந்தார்? உத்தர கன்னடத்திலிருந்து எனில் பொருத்தமல்லவா? அவர் சமணரெனில் இன்னும் பொருத்தமல்லவா? அவர்தான் பிள்ளையோ? உத்தர கன்னடத்திற்கு கங்கைக் கரையிலிருந்து வந்தார் எனில் பொருத்தமல்லவா. கங்கைக்கு? ஐந்திர நிலமான சிந்துவிலிருந்து எனச் சொல்லலாமா.

நிகண்டுகள் எழுதியவர் சமணராக இருக்க, புத்தகங்களில் சைவத் தொடர்பான கடவுள் வாழ்த்துக்கள் இடம்பெற்றுள்ளது எவ்வாறு? ஏன்? புத்தகங்களைப் பதிப்பிப்பவர் அதில் என்னவேண்டுமானாலும் மாற்றங்களைச் செய்யலாமோ? யார் இந்த உரிமையைக் கொடுத்தது? பாடல்களையும் எளிமையாக்கித் தருகிறோம் என பலவாறாக பிரித்துப் போட்டிருக்கிறார்கள். இது அந்தப் பெரும் புலவர் மரபுக்கு அளிக்கப்பட்ட பிழையன்றோ. சங்கப் புத்தகங்களில்கூட கடவுள் பெயரைச் சேர்த்தது எதற்கு? எத்தனையோ கடவுள்கள் இருக்க, நெடுநல்வாடை நூலின் தொடக்கமாக கணபதி துணை எனச் சேர்த்தது எதனால்? எப்படிச் சேர்க்கலாம்? பிங்கல நிகண்டிலும் கணபதி பாடல் இடம்பெற்றுள்ளது எவ்வாறு? புத்திசாலிப் பிள்ளையன்றோ.

இழிசினன் எனும் சொல் சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ளதைச் சுட்டிக்காட்டி, சிலர் அந்தக் காலத்திலேயே சாதியப் பாகுபாடு இருந்ததாகக் கட்டமைக்க முயல்கின்றார். அந்தப் பாடல்கள் பிற்காலத்தவையாக அதாவது தமிழகத்தில் பல்லவர் காலத்தியதாக இருக்க வேண்டும். சினன், சினர் என்பது

புத்தனுடைய ஒரு பெயர். அடக்கியவன் எனும் பொருள். ஆசையை, கோபத்தை அடக்கியவன். புத்தனை இழிவு செய்யும் நோக்கில் அந்த இழிசினன் வார்த்தை ஆளப்பட்டுள்ளதாகக் கொள்ளலாமோ. ஆம் எனில் அது மதக் காழ்ப்பன்றோ.

தமிழகத்திற்குள் மதக் காழ்ப்பு எப்போது வந்தது? பல்லவரின் இறுதிப் பகுதியான ஆழ்வார், நாயன்மார் காலத்தில். அதாவது களப்பிரருக்குப் பின். களப்பிரர் காலத்தில் என்ன நடந்தது? பெரியளவில் ஒன்றும் தெரியவில்லை. ஆழ்வார்கள் பாடல்களிலிருந்து சமணமும், பௌத்தமும் பெரியளவில் பரவியிருந்ததைக் காணமுடிகிறது. குறிப்பாக சமண, பௌத்தக் கோவில்கள்.

சமணத்திற்கு மாற்றாக வைணவத்தை முன்னெடுத்தவர்கள், சைவத்தை ஆதரித்தவர்கள் பல்லவர்களே. மாமல்லபுரக் கடற்கரைக் கோவிலும், காஞ்சி வரதராசர், ஏகாம்பரர் மற்றும் இன்ன பிறக் கோவில்களுமே சான்றுகள். பல்லவர்கள் பௌத்தத்தையும், சமணத்தையும் ஆதரித்திருக்கின்றனர். அதனால்தான் பௌத்தக் காஞ்சி, சமணக் காஞ்சி என தற்போதும் காஞ்சியில் (பெரிய காஞ்சி, சின்னக் காஞ்சி) இடப்பெயர்கள் உள்ளன. அன்றைய காஞ்சியின் சமணர்கள் யார்?

அன்றைய கன்னடத்தார். கன்னடர் யார்? சாளக்கியர். சாளுக்கியர் யார்? அன்றைய வேளாள். அன்றைய வேளாளரே சமணராக முதலில் மாறியது.

காஞ்சியின் பௌத்தர் யார்? அன்றைய தெலுங்கு நிலத்தார். தெலுங்கர் யார்? பௌத்தர் யார்? பள்ளி யார்? பல்லவர் யார்?

புத்த பள்ளி பயிர்த்தொழில் செய்தவர். சமண வேளாளர்? வேளாண்மையை விட்டுவிட்டு வணிகத்தைத் தொடங்கியிருக்க வேண்டும். பயிர்த்தொழில் தவிர்த்த பிற தொழில்களில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

சாளுக்கியத்திலிருந்து வந்தவர் வேளாளர் எனில், அவர் ஏன் பள்ளராக இருக்கக் கூடாது? கள்ளராகவும் இருக்கலாமே. பகரம் ககரமாக மாறியிருக்கலாமல்லவா. பள்ளர் கள்ளரோடு வேளாளரும் வந்திருக்கலாம். ஒருவேளை வேளாரர் சைவ சமயத்தவராக இருந்திருந்தால்?

கன்னடத்திற்கு சைவம் எப்படி, எப்போது வந்திருக்கும்? காசுமீர சைவ வரலாற்றை அறிந்திருக்க வேண்டும். காசமீருக்கு எங்கிருந்து வந்திருக்கும்?

அதற்கும் பின்னோக்கிச் சென்றால், அரப்பா, மொகஞ்சதாரா பண்பாட்டில் கொண்டுபோய்ச் சேர்க்கும். அங்கிருந்து எடுத்தாளப்படுவதுதான் பசுபதிபாசம், பாசுபத மதம், பாசுபதம், பாசவம். பசவன்னம் - வீரசைவம். எனில், உண்மையில் என்ன நடந்திருக்கும்?

பல்லவர் வரலாறு ஓரளவிற்கு நுட்பமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதற்கு அவர்களது சமயப் பங்களிப்பே, கோவில் சான்றுகளே அடிப்படை.

வேளாள சமணர்தான் சைவரானாரா? அப்படித்தான் தெரிகிறது. திருநாவுக்கரசு நாயினர் பாடல்கள் வழியாக உறுதியாகச் சுட்டலாமோ. சமணரான நாவுக்கரசர் சைவராக மாறுகிறார். இதுவே தமிழ் நிலத்திற்கு சைவம் வந்ததன் தொடக்கம் எனச் சுட்டலாம். அதற்கு முன்? தமிழ்நிலத்தில் சைவம் பெரியளவில் இருந்ததற்கான சான்றுகள் இல்லை. முருகன் அணக்காக அதாவது தெய்வமாகக் கொள்ளப்பட்டு, மக்களால் வணங்கப்பட்டிருக்கிறார். தமிழர் திணை மரபில் சிவன் இல்லை. இலக்கியங்களில் சுட்டப்படவில்லை. ஒருவேளை வேறுபெயர்களில், குலதெய்வ வழிபாடுகளில், சிவன் இடம்பெற்றிருந்திருக்கலாம். புறநானூற்றுத் தொகுப்பில் முதல் பாடலாக இடம்பெற்றுள்ள சிவபெருமான் பாடல் ஆராய்ச்சிக்குரியது. தொகுத்தவர்கள் எத்தகைய சமயப்பொறை கொண்டவர்கள் என்பது கவனிக்கத்தக்கது. அன்று தமிழ் நிலத்தில் முருகனே பெருந்தெய்வம். முருகு எனில் அழகன். இந்த அழகன் யார்? ஆண்டாள் கண்ணனைப் பாடும்போது ‘‘நின் கையில் வேல் போற்றி’’ என்கிறார். கையில் வேல்பிடித்திருக்கும் வேலன் யார்? மாலன் யார்? வேலுக்கும் மாலுக்கும் என்ன தொடர்பு? ஒரு எழுத்து மாற்றம் தானே? இருவரும் மயிற்பீலியோடு இருப்பது எதனால்? வெல், வேல் எனில் வெற்றியல்லவா. மூங்கிலுக்கு வேல் எனும் பெயர் உண்டல்லவா. எனில் கண்ணன் கையிலிருப்பது வேலா, புல்லாங்குழலா.

நாயன்மார்கள் ஏன் சமண, பௌத்தத்தை விட, வைணவத்தை அதாவது திருமாலை குறைத்து பாடல்கள் புனைந்துள்ளனர்? ஆழ்வர்களில் குறிப்பாகத் தொண்டரடிப்பொடியாழ்வார், குளிக்காத சமணரையும், காவியுடை பௌத்தரையும் ஒதுக்குமாறு பாடியது எதனால்?

காஞ்சிச் சமணம் மதுரைக்கு வந்ததெப்படி? சோழர் பல்லவரை வீழ்த்தி ஆட்சியைப் பிடித்ததெப்பது? தமிழகத்தில் சைவம் தழைத்தோங்கியது யாரால்?

எப்போதிருந்து? தமிழ் நிலமெங்கும் சிவனார் கோவில்களைக் கட்டியது யார்? எதனால்?

முன்னர் இந்நிலமெங்கும் செழித்திருந்த இந்திர வழிபாடு என்ன ஆனது? இந்து எனில் நிலாவாமே.

அனைத்திற்கும் விடை காஞ்சியில் இருக்கிறது. இழிவானவர் யார்? இழிசினர் யார்? இழிவான மக்கள் யார்? பட்டியல் சாதியிலிருக்கும் பள்ளர்கள் யார்?

மத்திய இந்தியாவையே ஒரு சேரக் கட்டியாண்ட பல்லவரே இழிந்தவர் எனச் சுட்டப்பட்டாரெனில், அவர்களுக்குப் பின்னான பள்ளர்கள், பள்ளிகள் நிலை எப்படி இருந்திருக்கும்?

சோழனுக்கும், சேரனுக்கும், பாண்டியனுக்கும் அடுக்கடுக்கான பட்டங்களைச் சூட்டியுள்ள நிகண்டு, பல்லவனை ஏன் இழிவாகப் பார்க்கிறது?

அங்கிருந்தே துவங்குகிறது தமிழரின் தாழ்ந்த வரலாறு. அங்கிருந்தே துவங்குகிறது தமிழரின் தரம் தாா்ந்த அரசியல். அங்கிருந்தே துவங்குகிறது தமிழரின் சாதிப் பற்று, மத வெறி, நிலவுடமை அரசியல்.

பல்லவர் ஆட்சியின் இறுதிக்காலத்திலோ அல்லது அதற்குச் சற்றுப் பின்னான காலத்திலோ பிறந்தவர்தான் இராமனுஜர் எனில் அவர் அறிந்திருப்பார் - காஞ்சியில் என்ன நடந்ததென்று? குளத்துக்குள்ளிலிருந்து நாற்பதாண்டுகளுக்கொருமுறை எட்டிப் பார்க்கிறானே தேவராஜன் - அவனறிவான் காஞ்சியில் என்ன நடந்ததென்று. அவர் ஏன் நாற்பதாண்டுகளுக்கொருமுறை நீரைவிட்டு வெளியில் வருகிறார்? நாற்பத்தெட்டு நாட்களுக்குப்பின் தேவையெனில் கூடுதலாக ஒரு நாற்பத்தெட்டு நாட்கள் திருமுகம் காட்டிவிட்டு, மறுபடியும் நீருக்கடியில் நித்திரை கொள்கிறார்? பேரரறிவாளனான அவன் கணக்குத்தான் என்ன? யாரறிவார் அவனன்றி.

வடக்கே தோன்றிய சமணமும் பௌத்தமும், தெற்கு நோக்கிப் பரவியபோது கருநாடகமும், ஆந்திரமுமே முதலாவதாக மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கும். இவர்களது நிலத்தைக் கடந்துதானே தென்னாடு வந்திருக்க இயலும்? தெலுங்கு நிலத்தில் புத்தமும், கன்னடத்தில் சமணமும் நிலைபெற்றிருந்தபோது, தமிழகத்தில்

மதம் எப்படி இருந்திருக்கும்? பண்டைத் தமிழரின் மதத்தை சங்க இலக்கியம் வழி தெளிவாக அறியக்கூடுமா?

முருகன், திருமால், தேவேந்திரன், வருணன் மற்றும் கொற்றவை. முருகன் யார்? அணங்கு, சிறு தெய்வம். குறிஞ்சி வேடர்களின் தெய்வம். வேடர்கள் வலிமையான அரசுக்கு சொந்தக்காரர்களாக இருந்தார்கள் என்பதை வரலாற்றறிந்த எவரும் ஒப்ப மாட்டார். தேனும் தினைமாவும் உண்ட, பண்பாட்டில் பழமையான அந்த வேடர்குடி, எளிய குடியினராகவே இருந்திருக்க வேண்டும். மறவர் எனில் வேடர் எனவும் பொருளுண்டு. மறவரின் குலமுறை வரலாற்றை அறிந்த எவரும் ஒப்புவர். முக்குலத்தவர் எனச் சுட்டப்பட்டாலும் மூவருக்கும் தனித்த அடையாளங்களும் குலமுறைகளும் உள்ளன. மறவர் பெரும்பாலும் திருடுவதில்லை. சொல்லிலும் நேர்மை இருக்கும். மறவர் அத்தனை சாதிவெறி கொண்டவரும் அல்ல. காலமாற்றம் எல்லாவற்றையும் மாற்றிவிடும்போல.

தற்காலத்திய தமிழ் நிலத்தில் எங்காவது தேவேந்திரன் வழிபடப்படுகிறானா?

எங்கேனும் கோவிலுண்டா? தேவேந்திரனைப் பற்றி ஏதேனம் பேச்சுண்டா? தமிழக மக்களில் தேவேந்திர குல வேளாளர் அன்றி வேறு எவரேனம் தேவேந்திரனை, தேவேந்திர குலத்தைச் சொந்தம் கொண்டாடுகிறாரா? இல்லையெனில் ஏன்? பள்ளர், குடும்பர் மட்டுமே தேவேந்திர குலத்தவரா? மருத நிலத்தில் இவர் மட்டுமேதான் வாழ்ந்தாரா? தஞ்சைப் பகுதி முழுக்கவே மருதம் எனில், அங்கு முன்னர் வாழ்ந்த, தற்போதும் வாழும் சாதிகள் எவை? அவர்களின் குல தெய்வம் எது?

சமணமும் புத்தமும் தமிழ்நிலத்திற்குள் வருவதற்குமுன் இங்கு செழித்திருந்த தெய்வங்கள் எவை? அந்த மக்கள் யார்? உறுதியாகத் தொல்குடியினர்தானே. உண்மையெனில் தமிழகத் தொல்குடிகள் யார்?

இருநூறு ஆண்டுகளுக்குமுன் மதுரையில் அதிகளவு வாழ்ந்த தொல்குடிகளைச் சுட்டலாமல்லவா? சரியானதாகவும் இருக்குமல்லவா? அதற்கு முன்பு கணக்கெடுத்திருக்க மாட்டார்கள் என்பதும் தெளிவு. அன்று யாரெல்லாம் மதுரையில் இலக்கம் பேருக்கும் மேல் வாழ்ந்தார்? பள்ளர், கள்ளர், இடையர், பறையர். வெள்ளாளரும் ஒரு இலக்கத்திற்கு மேல் இருந்தாரெனினும், வெள்ளாளரில் பல சாதிகள் கலந்திருப்பதால், அவரை ஒரு சாதியாக அதாவது

பிள்ளை எனச் சுட்டமுடியாதல்லவா. ஐம்பதினாயிரம் பேருக்கும் அதிகமாக வாழ்ந்தவர் வலையர், மறவர், அகம்படியர், கம்மாளர். சாணாரும் கிட்டத்தட்ட ஐம்பதாயிரம் பேர் வாழ்ந்துள்ளார். இவர்கள்தான் தமிழ்மொழி பேசிய தமிழ்க் குடிகள். அன்றைய மதுரையில் அமிழ்தினும் இனிய தமிழைப் பேசியவர்தானே அன்று தமிழராக இருந்திருந்த வேண்டும்? அவரைத்தானே நாம் தமிழராகக் கொள்ளமுடியும்.

தமிழ் பேசிய தமிழச் சாதிகளிலும், அன்றைக்கு தமிழர் எனச் சுட்டாமல், ஊருக்கு வெளியே பள்ளச் சேரி, பறைச் சேரி மற்றும் இடைச் சேரியில் வாழ்ந்த மக்கள் யார்? பள்ளர், பறையர் மற்றும் இடையர். எனில் இவர்கள் மூவரும் யார்? இவர்களுக்குள்ள உறவென்ன? இவர்களது தொழிலென்ன? இவர்களது பண்பாடென்ன? இவர்களது சமய நம்பிக்கை என்ன? இவர்களது கடவுள்கள் யார்?

பள்ளர், பறையர், இடையர்களான இம்மூவரையும் தொல்தமிழர் எனச் சுட்டலாமெனில், இந்த மூன்று தொல் தமிழரின் வரலாறென்ன? பண்பாடென்ன? இவர்களது வரலாறுதானே தமிழ்ப்பண்பாடாக இருந்திருக்க வேண்டும்?

கள்ளரையும், அகமுடையரையும், மறவரையும் எதில் சேர்ப்பது? முக்குலம் எனில், பண்டு தொடங்கி தற்போது வரையிலும் உண்மையான தமிழர், தமிழ்க்குடி, குலம் பார்ப்பதில்லையே. சாதி போற்றுவதில்லையே. அதுதானே தமிழரின் உயர்வுக்கும் பெருமைக்கும் தனிச் சிறப்பு. உலகம் தமிழருடையதன்றோ. எனில் சாதி பார்த்து, குலம் பார்த்து யாரை ஒதுக்குவது, யாரை வெறுப்பது? தமிழ் தன்னிகரில்லா உயர்ந்த மொழி. தமிழர் பெருமாண்பு கொண்டோர். தமிழ் வேந்தர்கள் சாதி, குலம், மதம் பார்ந்திருக்க மாட்டார்கள். உறுதியாக. எனில் இம்மூன்று குலத்தாரும் தமிழ்ச்சாதிகளிடையேயே பெருமளவு சாதிபார்க்கிறாரெனில் எப்படி இவர்களைத் தமிழர் என்பது.

அன்று மதுரையில் பெரு எண்ணிக்கையிலிருந்த வலையர் யார்? கம்மாளர் யார்? மதுரையிலும் நெல்லையிலும் அதிகமாக வாழ்ந்த நாடார் யார்? கரையோரங்களில் குவிந்திருந்த பரதவர் யார்? இவர்களை என்ன பெயரில் சுட்டுவது?

அன்று தமிழ்நிலம் குமரி முதல் வேங்கடம் வரைப் பரவி விரிந்திருந்ததெனில், தொல் குடிகள் என்போர் அன்றைய தமிழ்நிலம் முழுமையும் பரவி வாழ்ந்திருக்க

வேண்டும். உண்மையெனில் குமரி முதல் வேங்கடம் வரைப் பரவியிருக்கும் தொல் தமிழர் யார்? தொல் குடி எது?

பள்ளரும், பறையும், இடையரும் எனில் ஒப்பமல்லவா? பள்ளர் குமரி முதல் வேங்கடம் வரை திரண்டு வாழ்ந்து வருகிறார். ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். பள்ளி வன்னியராகியது சமீபத்திலேயே. அதற்கு முன் அவர் பெயர் பள்ளிதான். மறுக்கவே முடியாது.

பறையர் குமரி முதல் வேங்கடம் வரை பரவலாக இடம் பெற்றுள்ளார். பறையர் தொல்குடி என்பதில் ஐயமில்லைதானே.

இடையர் குமரி மாவட்டத்தில் இருக்கிறாரா? அங்கே மேய்ச்சலுக்கு நிலமுள்ளதா? ஒருவேளை பருவத்திற்கேற்றவாறு இடப்பெயர்வு செய்யக்கூடும். வெள்ளையர் கணக்கெடுப்பில் நெல்லையில் குறைவான எண்ணிக்கையே இடையர் சுட்டப்படுகிறார். இடையரும் கடைச் சங்கத்தின் தமிழ் நிலத்தில் பரந்து வாழ்கிறார் என்பது திண்ணம்.

நாடார்? நாடார் நெல்லை, குமரியில் மட்டும் செறிந்து வாழ்வதன் பொருளென்ன? பள்ளர், பறையர், இடையர் போல் சாணார் பெயர் தொழிலைச் சுட்டாததன் காரணமென்ன? ஒருவேளை மாட்டோடு தொடர்புடைய சாணம் என்பதைக் கொண்டு, சாணார் என அழைக்கப்பட்டிருப்பாரோ? நாடாரிடம் முல்லை நிலக்கூறுகளே அதிகமும் உள்ளது ஒப்புநோக்கத்தக்கது. நாடார் தமிழ்நிலத்தின் தொல்குடி எனில், எதனால் மற்ற மூன்ற தொல்குடிபோல், தமிழ்நிலம் முழுதும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் பரவவில்லை? தற்காலத்தில் நாடார் தமிழகம் முழுவதும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் பரவியுள்ளார் எனில் அது வணிக்கத்திற்காகவல்லவா? நாடார் இலங்கையிலிருந்து தமிழ் நிலத்திற்கு வந்தவர் என்பதில் எந்தளவிற்கு உண்மையிருக்கிறது? இலங்கை சாதிப்பெயர்களிலும் சாணார், நாடார், கிராமணி போன்ற பெயர்கள் இல்லாதிருப்பதன் பொருளென்ன?

இடையர் அவரது மேய்ச்சல் தொழில் காரணமாக தமிழ்நிலமெங்கும் பரவியிருப்பார். பள்ளரும் பறையரும் எப்படிப் பரவினார்? வடக்கின் பள்ளரும், பறையரும் வேளாளரோடே சேர்ந்து சோழ, பாண்டிய, நாஞ்சில் நாடுகளுக்கு அவர்களது நிலத்தில் பயிர் செய்யும் பொருட்டு கூடவே கூட்டிச் செல்லப்பட்டார்

என்பதன் உண்மைத்தன்மை எவ்வளவு? இலங்கைக்கும் அப்படித்தான் அழைத்துச் செல்லப்பட்டாரா?

பள்ளரும் பறையரும் யார்? அன்று காஞ்சியில் பள்ளரும், பறையரும் எப்படி வாழ்ந்தார்?

தொல் தமிழரின் ஆன்மீகம் எத்தகையதாக இருந்தது? தற்போது எப்படி இருக்கிறது?

இடையருக்கு கண்ணனே எல்லாமும். இடையரில் சிவ வழிபாடு இருக்கிறதா? சமீப காலங்களில் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கலாம். பறையர்? பறையரில் பெரும்பாலானவர் சிவ வழிபாட்டோடே தொடர்பு கொண்டுள்ளவராகத் தம்மைச் சுட்டுகிறார். பறையரில் திருமால் வழிபாட்டை மேற்கொண்டிருப்பவர் உண்டா?

வெள்ளையரின் மேனுவல்கள் ஒன்றைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன. மற்ற சாதியினருக்குச் சுட்டாத ஒன்று பள்ளருக்கு நுட்பமாகச் சுட்டப்படுகிறது. pallans are saivites, vaishnavites - பள்ளன்கள் சைவராகவும், வைணவராகவும் உள்ளனர்.

ஆங்கிலேயரின் ஆவணங்கள் மட்டுமின்றி, ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட மூத்த பள்ளு இலக்கியமான முக்கூடற்பள்ளு சுட்டுவதும் அதுவே. முக்கூடற்பள்ளுவின் திருமாலான செண்டலங்காரரை குலதெய்வமாகக் கொண்ட பள்ளனுக்கு இரு மனைவியர். மூத்த பள்ளி வைணவம், இளைய பள்ளி சைவம். ஒரு பள்ளி வடகரை எனில் இன்னொரு பள்ளி தென்கரை. மூத்த பள்ளி அவரது முக்கூடல் நகரின் பெருமையைப் பாடுகிறார் -

கொணடல் கோபுரம் அண்டையில் கூடும்
　　கொடிகள் வானம் படிதர மூடும்
கண்ட பேரண்டந் தண்டலை நாடும்
　　கனக முன்றில் அனம்விளையாடும்
விண்ட பூமது வண்டவிட் டோடும்
　　வெயில்வெய் யோன்பொன் ளெயில்வழி தேடும்
அண்டர் நாயகர் செண்டலாங் காரர்

அழகர் முக்கூடல் ஊர்எங்கள் ஊரே.

மேடை யேறித்தன் காலைப் பவுஞ்சு

வரித்த பிலி மயிலெட்டிப் பார்க்க

பேடை மாங்குயில் வாய்கொண்டு சேவல்

பிளந்த வாய்தனைக் பேசாமல் மூடக்

கோடை போய்விட்ட சோபனங் கொண்டு

குளிர்ந்த கொண்டற் குறுந்துளி யோடே

வாடை யோடி வரக்களி கூர்வது

வளமை ஆசூர் வடகரை நாடே.

இளைய பள்ளி என்ன குறைந்தவரா, அவர் மருதூர்க்காரராச்சே. அவர் பாடுகிறார் -

சங்கம் மேடைகள் எங்கும் உலாவும்

தரங்க மீன்பொன் னரங்கிடை தாவும்

திங்கள் சோலை மரங்களை ராவும்

தெருக்கள் தோறும் மதுக்களைத் தூவும்

பொங்க ரூடிளம் பைங்கிளி மேவும்

புவை மாடப் புறாவினங் கூவும்

வங்க வாரிதி வெங்கடு உண்ட

மருதீசர் வாழ்மரு தூர்எங்கள் ஊரே

வென்றல் லோவிடு வேனென வேளிரு

வேழங் கூடி மதிக்குடை தாவக்

குன்றி லாதர வில்லையென் றாடவர்

கொம்ப னார்முலைக் குன்றிற் பதுங்க

மன்றல் சேர்கிள வேனில் புகப்புக

மாங்குயி லுக்கு மாராயஞ் சொல்லித்

தென்ற லோடி வரக்களி கூர்வது

சீவல மங்கை தென்கரை நாடே.

பள்ளுவில் மழை வருவதற்கான மழைக்குறிப் பாடல், நுட்பமாக பாடப்பட்டுள்ளது அழகு.

முத்திதர வந்ததிரு முக்கூடல் மாதவர்தாள்

பத்திமற வாதபண்ணைப் பச்சேரிப் பள்ளரெல்லாம்

புத்தியொடு தெய்வநிலை போற்றியபின் வானமுகில்

எத்திசையும் பெய்யமழை யின்குறியணன் டாகியதே

பள்ளரெல்லாம் முக்கூடல் மாதவர்தாள் பணிந்தவுடன் மழை வருவதற்கான குறிகள் தென்படுகிறதாம். புலவர் திருகூட ராசப்பக் கவிராயர் மிக அழகாகக் கவி இயற்றியுள்ளார்.

ஆற்று வெள்ளம் நாளை வரத் தோற்றுதே குறி - மலை

யாள மின்னல் ஈழ மின்னல் சூழ மின்னுதே

நேற்று மின்றும் கொம்பு சுற்றிக் காற்றடிக் குதே - கேணி

நீர்ப்படு சொறித் தவளை கூப்பிடு குதே

சேற்று நண்டு சேற்றைக் குழைத் தேற்றடைக் குதே - மழை

தேடி யொரு கோடி வானம் பாடி யாடுதே

போற்று திரு மாலழகர்க் கேற்றமாம் பண்ணைச் - சேரிப்

புள்ளிப் பள்ளர் ஆடிப் பாடித் துள்ளிக் கொள்வேமே.

(புள்ளிப் பள்ளர் - சிறந்த பள்ளர்)

முக்கூடற் பள்ளுவில் வரும் பள்ளிகளின் பெயர்கள் அக்காலத்தில் பள்ளக்குடியின் பெயர்கள் எப்படியிருந்திருக்கும் என்பதற்குச் சான்று. பள்ளியருக்கு எத்தனை அழகிய பெயர்கள்.

சின்னி குருந்தி அருதி மருதி

செல்லி இருளி எல்லி கலிச்சி

திருவி அணைஞ்சி வெழுதி பெரிச்சி

செம்பி வம்பி தம்பிச்சாள்

நன்னி உடைச்சி சடைச்சி குமுச்கி

நல்லி, பூலி, ஆலி வேலி

நாச்சி பேச்சி சுந்தி எழுவி

நாகி போகிலாள்

பொன்னி அழகி நூவி சேவி

பூவி சாத்தி காத்தி அம்மச்சி

சாமி வேம்பி கருப்பி

புலிச்சி அங்காளி

கன்னி பொதுவி அன்னம் பாலி

கள்ளி யுங்கலந் தொருவர்க் கொருவர்

கைவி ரசலாய் நடுகைச் சமர்த்தைக்

காட்டும் பள்ளீரே

உழும் பள்ளரின் வகைகளைப் பாருங்கள்.

சாத்தான் பெரியான்கொன்னைத் தாண்டி அரியான்

சடையான் உடையான் கட்டைச் சங்கன் புங்கன்

போத்தன் அருகன் கோணப் பூவன் மருதன்

பூலான் வயித்திவேலான் புலியன் கலியன்

காத்தன் வெருகன்கப்புக் காலன் முருகன்

கண்டன் கறுத்த முண்டன் கங்கன் சிங்கன்

கூத்தன் முதலாயுள்ள பள்ளெ ரெல்லாம்

குரவையிட் டேரைப்பூட்டிக் கூடி யுழுதார்

எத்தனை அழகிய தமிழ்ப்பெயர்கள். முத்து முத்தான பெயர்களல்லவா.

இரண்டு பள்ளிகளின் ஏசல்களில் மாட்டிக் கொண்டு மருதீசரும் கூடலழகரும் படும்பாடு இருக்கிறதே.

மூத்த பள்ளி பாடுகிறார்,

மாதொருதிக் காசைப்பட்டுப் பொன்னின் மயமாம் - பனி
மலையேறிப் போனா னுங்கள் மத்த னல்லோடி

(உமா தேவிக்காக சிவபெருமான் பனிமலைக்கு ஏறிப் போனாராம்)

இளைய பள்ளியின் எதிர்ப் பாட்டு,

காதலித்துத் தம்பியுடன் சீதை பொருட்டால் - அன்று
கடலேறிப் போனா னுங்கள் கண்ண னல்லோடி

(சீதையைத் தேி இளையவருடன் கடலில் சேது கட்டிப் போனது கண்ணனாம்)

மூத்த பள்ளி -

வலிய வழக்குப் பேசிச் சுந்தரன் வாயால் - அன்று
வையக் கேட்டு நின்னா னுங்கள் ஐய னல்லோடி

இளைய பள்ளி -

புலிபோல் எழுந்து சிசு பாலன் வையவே - ஏழைப்
பூனை போல நின்றான் உங்கள் நீல னல்லோடி.

மூத்த பள்ளி -

ஏற ஒரு வாகனமும் இல்லாமையினால் - மாட்டில்
ஏறியே திரிந்தா னுங்கள் ஈச னல்லோடி

இளைய பள்ளி -

வீறு சொன்ன தென்ன மாடு தானு மில்லாமல் - பட்சி
மீதி லேறிக் கொண்டா னுங்கள் கீத னல்லோடி.

நல்லவேளையாக இரு பள்ளியரும் சமாதானமடைந்து விட்டார்கள். இல்லையெனில் இருபள்ளிகளிடமும் மாட்டிக்கொண்டு இருகடவுளரின் பாடும் இன்னும் திண்டாட்டமாகியிருக்கும்

சொன்னா லென்ன நீயும் பொறு ஞானும் பொறுத்தோம் - கிளை

சூழ்ந்திருக்க நாமே கூடி வாழ்ந்திருக்கலாம்

பன்னகத்தி லாடிய முக் கூட லழகர் - திருப்

பாத மலர் வாழ்த்தி யாடிப் பாடுவோமே.

முக்கூடற்பள்ளுவில் அழகிய தமிழ்ச் சொற்கள் அழகுற இடம்பெற்றுள்ளன. இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு முன்பு வரைக்கும் கூட இப்படியான அழகுப் பெயர்களே பள்ளர் குடும்பங்களில் வைக்கப்பட்டிருந்தது விந்தை.

கள் - பொல்லாத தண்ணீர். அது பேய்த்தண்ணீர் எனவும் சுட்டப்படுவது வெகு பொருத்தமன்றோ. ஆற்றுக்காலாட்கள் - மருத நிலப்பெண்டிர். ஆற்றுக் கால் - ஆற்றிலிருந்து பிரிந்து வரும் வாய்க்கால் (மலையாளத்தில் ஆட்டுக்காலாகிவிட்டதோ) வீவி - அலங்காரம் செய்த பெண் (இசுலாத்தில் பீவியோ - பாத்திமா பீவி - அழகான பெண்). சங்கை எனில் வெட்கம். கடல் - வேலாவலயம்.

தானக் கயிறு - மதயானை. ஏனக்களிறு - பன்றி. மதுபானக்குளவி - தேனி. உளுவை - ஆற்றுமீன் வகை. குளுவை - வரால் மீன் வகை. கூளி - இரால் மீன் வகை. துக்குனி - சிறிதளவு. தூக்குனி - மானமற்றவர். சொக்காரி - சொத்துடையவள். கச்சற்காய் - முற்றாத இளங்காய். காமன் கழப்பை - யாழ். கோனேரிக் கோன் - இடையன். கொழியல் அரிசி - தீட்டாத அரிசி. முளை - முளைத்துவரும் நாற்று. கடி - வயல். பசப்பு.- பச்சை. முகிழ்த்தம் - முகூர்த்தம். குழகர் - இளையவர். நத்து - சங்கு. களமர் - உழவர். தேர்ப் பாலழகர் - பார்த்த சாரதி. வெள்ளானைக்கிறை - இந்திரன். உடையார் - தெய்வம். புங்கன் - சிறந்தவர்.

மாடுகளின் வகைகள் சிறப்பு. அதிலும் படப்புப் பிடுங்கி, கொட்டைப் பாக்கன் அருமை. குடைக்கொம்பன் வளைந்த கொம்புடையது. செம்மறையன் - சிவப்பு. கருமறையன் கரிய கறையுடையது, குத்துக் குளம்பன், குடைச் செரியன்.

உழுத உழவைக்கண்டு களித்தான் - பள்ளர்

உள்ள பேரைஎல்லாம் விளித்தான்

தொழுது தெய்வக்கடன் கழித்தான் - அந்தத்

தொளியில் விதைகள்எல்லாந் தெளித்தான்.

தெய்வக் கடன் - எத்தனை பொருள் கொண்ட சொல்? மனிதர் தெய்வங்களுக்குக் கடன்பட்டவரன்றோ. தெய்வங்களின்றோ அன்பின் ஊற்றுக்கள்.. அறிவின் நாற்றங்கால்கள்..

முத்துக்குடும்பன், இருவக் குடும்பன், ஈச்சக் குடும்பன், சருவக்குடும்பன் போன்ற பெய்ர்கயோடு மள்ளர் பெயரும் சுட்டப்படுவது, குடும்பர், பள்ளர், மள்ளர் ஒருவரே என்பதற்குத் தகுந்த சான்றாகிறது.

முக்கூடலில் நெல் வகைகளும் பலவாறு எடுத்தாளப்பட்டுள்ளன - மலைமுண்டன், பூம்பாளை, புத்தன், குலைவாழை போன்ற நாற்பதற்கும் மேலான நெல்வகைப் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. அவ்வாறே மீன் வகைகளும்.

உழவரான அழகக் குடும்பனின் வாழ்க்கையைத் சித்தரிக்கும் முக்கூடற் பள்ளுவில், எளிமையான பாடல்கள் இடம் பெற்றுருப்பினும், அவை அழகுற அமைக்கப்பட்டுள்ளது சிறப்பு. நூலில் குடும்பருக்கே உரிய எளிமையும், மொழியும் வெகுவாகப் பொருந்தி.வருகிறது. இயற்கை வருணனைகளையும் மிகவும் புகழத்தக்கன.

மு.அருணாச்சலம் அவர்கள் பதிப்பித்த முக்கூடற்பள்ளுவின் இறுதிப்பகுதியில் நாற்பதற்கும் மேற்பட்ட பள்ளு வகை இலக்கியங்கள் சுட்டப்பட்டுள்ளன.

ஈழத்திலும் ஏராளமான பள்ளுப் பிரபந்தங்கள் இயற்றப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்துப் பள்ளு வகைகளில் முந்தியதெனச் சொல்லத்தக்கது கதிரைமலைப் பள்ளுவாம். இலங்கையிலுள்ள கதிர்காமத்தில் எழுந்தருளியிருக்கும் முருகவேல் மீது செய்யப்பட்டிருப்பது கதிரைமலைப்பள்ளு. ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை.

இயேசு நாதரின் புகழைப்பாடும் விதத்தில் ஞானப் பள்ளு எனும் பெயரிலும் ஒரு பள்ளு பாடப்பட்டிருப்பதாகச் சுட்டுப்படுகிறது. பள்ளுப் பிரபந்தங்கள் பொதுவான பள்ளு அமைப்பில் பாடப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு பள்ளுவிலும் ஒரு தனித்துவம் அமைக்கப்பட்டுள்ளதாகப் பதிவுகள் சுட்டுகின்றன.

தமிழ் நிலத்தில்தான் அழகக் குடும்பன் பண்ணை எனில், ஈழத்திலும் அதுதான் போலே. அங்கும் பண்ணையாக இருந்தது பிள்ளையல்லவா.

பண்ணை எனில் வயல் எனப் பொருளாம். ஊர் என்பது எப்படி மருதத்து ஊரைச் சுட்டுகிறதோ அவ்வாறே பண்ணை என்றாலும் அது மருதத்தின் நிலமாம். மருத நிலத்திலுள்ளதே வயலாம். மற்ற நிலங்களில் பயிர்த் செய்தாலும் அவை வயலாகமாட்டாபோல. வயல் எனில் நெல் விளைய வேண்டும். கரிசல் வயல் என்பது சொல் வழக்கன்று. அது காடு, கரிசல் காடு, செவல்காடு. நெல் வயலுக்குப் போகிறோம் என்றுதான் சொல்வார்களே தவிர, நெல்காட்டுக்கு எனச் சொல்லமாட்டார்கள். அவ்வாறே கரிசல் காட்டுக்கு என்றுதான் சுட்டுவார்கள்.

யாழ்ப்பாணம் அழகிய பெயர். பல்வேறு விதமாகப் பொருள் கொள்ளப்படும் யாழ்ப்பாணம் பெயர், இசைக் கருவியான யாழோடு பெரும்பாலும் தொடர்பு படுத்தப்படுகிறது. யாழ்ப்பாண வைபம மாலையின்படி, யாழில் சிறந்திருந்த ஒருவருக்கு அளிக்கப்பட்ட இடம், பின்னர் யாழ்ப்பாணமாகியதாம். சிங்களத்தில் யஹபனே எனில் நல்ல ஊராம். சிங்கள இலக்கியங்களில் யாபாட்டுள எனும் சொல் குறிக்கப்பட்டுள்ளதாம்.

யாழோடு தொடர்புடையதால் யாழ்ப்பாணம் எனில், திருநெல்வேலி எனும் பெயர் யாழ்ப்பான குடாவில் எப்படி வந்தது? நெல்லோடு தொடர்புடைய நெல்வேலி. பனை மரங்கள் செழித்திருக்கும் யாழ் குடாநாட்டில் எப்படி? அது தொன்மையான ஊரா அல்லது நெல்லையின் பிள்ளை உருவாக்கிய ஊரா?

இலக்கையின் வடக்கு முனையில் அமைந்துள்ள பலாலி (palely) ஊருக்கு என்ன பொருள்? பலாலி சாலை? பலாலியின் விமானத்தளத்திற்காக அகற்றப்பட்ட குரும்பசிட்டி ஊருக்கு என்ன அர்த்தம்?

பலாலியின் வடக்கே பரந்து விரிந்த கடலள்ளவா? அங்கிருங்கு கோடியக்கரை எவ்வளவு தூரம்? ஏராளமான அழகிய ஊர்கள் சூழ, வடக்கில் கரைமணலும், அதனைத் தொடர்ந்து கிராய்மண்ணும், தென்பகுதியில் செம்மண் கொண்டதும், தென்னந்தோப்புகளும், பனையடைப்புகளும், விவசாய நிலங்களும், மேய்ச்சல் நிலப்பரப்புகளும், மீன்பிடி வளங்களும் நிறைந்த அழகுமிகு ஊராம் பலாலி.

பலாலியில் எத்தனை கோவில்கள் உள்ளன? எப்போது கட்டப்பட்டன? கட்டியது யார்? பலாலியின் பெரிய கோவிலாகச் சுட்டப்படும் சித்தி விநாயகர் எப்போது பலாலைக்குக் கொண்டு வரப்பட்டார்? கண்ணகி அம்மன் ஆலயம்? இராசேஸ்வரி? பலாலையில் ஏராளமான கிறித்தவ தேவாலயங்கள் இருப்பதாகச் சுட்டப்படுகிறது. அந்தக் கிறித்தவர்கள் யார்?

இந்து சமயத்தவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட கொக்குவில் (Kokkuvil) ஊரில், மஞ்சவனப்பதி முருகன் கோவில், மணியர்பதி சிவசுப்பிமணியர் கோவில், நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் கோவில், கிருபாகர சிவசுப்பிரமணி கோவில், பொற்பதி விநாயகர் கோவில், ஸ்ரீஞான பைரவர் கோவில் போன்ற பல இந்துக் கோவில்கள் உள்ளன.

யாரிந்த மனோன்மணி அம்பாள்? பார்வதியோ? சரசுவதி கோவிலா அல்லது பல்லவர் காலத்து மனோன்மணியா?

கொக்குவில் எனில்? கொக்கு எனில் கரும்பு, இதனால் கொக்குவில் கரும்பு வில் என்று பொருள் படும். இரண்டாம் பொருள் வில் என்பது சங்க காலத்தில் குளம் என்ற பொருள் படும். கொக்குவில் - கொக்குகள் நிறைந்த குளம் உடைய ஊர் என்று பொருள் படுமாம்.

ஆம் எனில், சங்ககாலத்திலிருந்தா அவ்வூரின் பெயர் அப்படியே மாறாமல் வழங்கி வருகிறது. தமிழகத்தின் அனைத்து அரசுகளோடும் தொடர்புடைய இடத்தில், ஆரியச் சக்ரவர்த்திகள் தொடங்கி, ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என இலங்கையின் சுதந்திரக் காலம் வரை எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்திருந்தும், கொக்குவில் எனும் பெயர் மட்டும் மாறாமல் இருந்தது விந்தையிலும் விந்தை.

கரும்பு வில் எனில் அது மன்மதனோடல்லவா தொடர்புடையது. மன்மதன் இந்திரனல்லவா. மிருசுவில் - மிருசு - வண்டு. எனில் வண்டுகள் அதிகமிருக்கும் குளமோ. அவ்வாறெனில் கோண்டாவில்? கோம்பாவில்? மட்டுவில்? தம்பிலு வில்?

கோண்டா வில் - கோதண்டவில்லோ? மருவி இருக்கலாம்தானே. கோதண்டராமன் நாணேற்றியதாகச் சொல்லப்படும் நிலம்தானே. கோதண்டவில் எனில் பெயர்ப் பொருத்தம் பொருந்தி வருகிறதல்லவா.

வில் எனில் கோதண்டமாம். வில் - சிலை, கொடு மரம், துரோணம். துரோணோச்சாரியார் - வில்லாசிரியர். அம்பு - பகழி, வாளி, தோணி, பாணம், கதிரம், பல்லம், கணை, கோல், சரம், வண்டு, பத்திரம், சிலிமுகம், விசிகம், உடு.

கதிர்காமம் - கதிரம் - வில் எனில், வில்லோடு தொடர்புடையதெனில், அது மன்மத வில்வொடு தொடர்புடையதா, இராம பாணத்தோடு தொடர்புள்ளதா? இலங்கையின் புகழ்பெற்ற சுமன் கடவுளர்? அவன் சுமனா காமனா? கதிர்காமம் எப்போதிருந்து முருகனோடு தொடர்புபடுத்தப்பட்டு வருகிறது. பிள்ளை அங்கு போனதிலிருந்தோ?

பல்லர் - வில்லாளி, அம்பு விடுவதில் வல்லலவர். பல்லர் - பல்லவர்.

மிருகவில் - அம்பு வில், வில் அம்பு. தம்பிலு வில் - பெரிய வில். ஒப்பு நோக்க தம்பிரான் - இறைவன் - தலைவன், பெருமான், பெருமானின் வில் - பெருமாள் - ஸ்ரீஇராமன், சீராமன், சிரீராமன்.

மட்டு வில் - சிறிய வில், சிறிய, எல்லை கொண்ட, எல்லை. அலம்பில் - கொடிய வில். அலம் - வலி, துன்பம். அலம் - கலப்பை.

யாழ்ப்பாணம் - வில்லம்பு. யாழ் - வில்லின் மருவாகியிருக்க வேண்டும். வில் - வளைவு எனில் வளைந்த ஊர். குடா - வில்லின் வலைவு போன்ற இடம், ஊர். வில்குடா - யாழ்க்குடா. பானம் - பாணம் - வளைந்த நீருள்ள, கடலுள்ள ஊர் - வளைகுடா.

தமிழில் உச்சம் கண்டிருந்த யாழ் நகரத்து வெள்ளாளர்கள், ஏன் இராமனை, இராமனின் அம்பைக் கொண்டு பொருள் கூற முயலவில்லை? மட்டு வில் எதனால் கொக்குக் குளமாகியது? சைவத்தை மட்டும் முன்னெடுத்ததாலா? சைவம் யாருடையது?

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் நிறைந்திருக்கும் தமிழ் நிலத்தின் ஊர்ப் பெயர்கள் எவ்வாறு இருக்கின்றன? தமிழர் மாவட்டங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் ஊர்ப் பெயர்கள் எப்படியிருக்கின்றன? சிங்களர் பகுதியையும் சேர்த்து, மொத்த இலங்கையிலுமே ஊர்ப் பெயர்கள் எந்தப் பெயரில்,

என்ன பொருளில் அமைந்திருக்கின்றன? தமிழருக்கு ஊரும் பேரும்தானே மிகுந்த பொருள் கொண்டவை.

இலங்கை வரலாற்றாசிரியர் ஏன் விக்ரம சிங்கனை ஆரியச் சக்கரவர்த்திகள் என அடையாளம் காண்கிறார்? விக்ரம சிங்கன் - பல்லவன் பெயர். பல்லவன். அவர்கள் சேர குலத்தவர், தேவேந்திரர் என்பதால், உலகளந்த எனும் பொருளில் விக்ரம எனும் பெயரைச் சூட்டிக் கொண்டார்கள். அவர்கள் சமற்கிருதத்திற்கு ஏற்றம் தந்தவர்கள் எனில் அதுவும் அவர் மொழியன்றோ. தமிழின் வட்ட எழுத்தை உருவாக்கியதும், வட எழுத்தைப் புகுத்தியதும் அவர்தானே. தென்னகத்தின் பெருங்கலைகளை அறிமுகப்படுத்தியதும், செழிப்பாக்கியதும் அவரல்லவா. இலங்கையின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்திருப்பவர் பல்லவர். பல்லவரின் வழி மரபில்தான் வன்னி அரசு வந்தது. ஆரியச் சக்ரவர்த்திகளும் பல்லவர் மரபே.

ஜெயவர்த்தன, ஜெயவர்த்தனே என்கிறார்கள். அது ஜெயேந்திரனின் திரிபு. மகிந்த - மகேந்திரன். பலப்பிட்டியா - நெல்பேட்டை. கண்டி - கண்டியூர், பாண்டி என்பதன் திரிபாக இருக்கலாம்.

தமிழ் திரியும். மருவும். ஆண்பிள்ளை - ஆம்பளை. ஆம்பளை என்பதைப் பிரித்துப் பொருள் கண்டால் என்னாகும்? ஆம் பளை. என்ன பொருள் கொள்வது? பளை - விலங்குகளின் வாழ்விடம் எனக் கொண்டால்? ஆம்பிளைக்குப் பொருள் காண்பதற்கு முன், அது ஆண்பிள்ளை என்பதன் திரிப்பு என்பதை அறிந்திருக்க வேண்டுமல்லவா?

பாளை - தென்னை, பனைகளின் குருத்து எனில், பாளையங்கோட்டைக்கு இவ்வாறு பொருள் கொள்ள முடியுமா? பாளை எனில் நெல். நெல்வயல்கள் சூழ்ந்த இடம் எனில் பொருந்தமன்றோ. தாமிரவருணி ஊரல்லவா. நெல்வேலி என்பதைவிட நீர்வேலி எனக் கொள்ளவும் கூடும். நீர்வேலி நீரால் சூழப்பட்ட நிலம். வேலி - வேலி, எல்லை எனில், வேளி? வெளி. வெளி - ஊருக்கு வெளியே.

யாழ்ப்பானத் தமிழுக்கும் மட்டகளப்புத் தமிழுக்கும் வேறுபாடு உண்டா இல்லையா? தமிழில் இகர உகரங்கள், எகர ஒகரங்களாகத் திரியும். இடம் - எடம், குடம் - கொடம், ஒன்று - ஒண்டு. முன் சொல் குறையும். நாங்கள் - நாங்க. இடையில் குறுகும். இவர்கள் - இவையன்

தாத்தாவையும் பாட்டியையும் அப்பப்பா, அம்மம்மா என மாற்றியது யார்? முன்பு அப்பா அப்பு. அதனால்தான் அப்புச்சி. அப்பு - அப்பா - அப்பு - வாங்கப்பு, போங்கப்பு, பெரியப்பு, சித்தப்பு.

சிறுவன் சிறுமி பெடியன், பெட்டையானது எப்படி? எப்போது?

யாழ்ப்பாணத் தமிழில் போர்த்துக்கீசியரின் தாக்கம் அதிகமாம். 1551 - 1620 இல் போர்த்துகீசியம் கட்டுப்பாட்டிலிருந்தது காரணமாகச் சுட்டப்படுகிறது. 1620 - 1658 இல் அவர்களது நேரடி ஆட்சியின் கீழிருந்த போது மிகுந்த தாக்கம் இருந்திருக்கலாம். அதன் பின்? ஆங்கில ஆட்சிக்குக் கீழ். அக்காலத்தில் ஆங்கிலத்தின் தாக்கம் அதிகமிருந்திருக்கும்.

போர்த்துக்கீசிய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள Henramana Cinga Cumara எனும் பெயர், எதிர்மன்ன சிங்க குமாரன் என மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. Hendra - ஏன் இலங்கை அறிஞர்களால் எதிர் எனப் பொருள் கொள்ளப்பட்டுள்ளது? இந்திர எனக் கொண்டால் இந்திரமன்ன - இந்திர மரபு. சிங்க குமரன் - நரசிங்கன். நரசிங்கனின் குமரன். சிங்க குலத்தில் தோன்றிய இளையோன். இந்திரனைப் போற்றிய அரச மரபு பல்லவர் என்பதும், பல்லவா் சிங்க மரபினா் என்பதும் ஏன் மறந்தது? மறந்ததா அல்லது மறக்கடிக்கப்பட்டதா? இந்திர மன்னன் எதனால் எதிர்மன்னன் எனப் பொருள் கொள்ளப்பட்டான்? இந்திரனை இலங்கையா், இலங்கைத் தமிழா் மறந்தே விட்டாரோ? மறந்தது இலங்கைத் தமிழரா அல்லது இலங்கைக்குப் போன பிள்ளையா?

இலங்கையோடு பிற்காலச் சோழர்க்கு உள்ள உறவு குறித்து நிறைய எழுதப்பட்டிருப்பது மெச்சத்தக்கது. எனினும் அவருக்கு முன்பே இலங்கையில் நெடிய ஆட்சி கொண்டிருந்த பல்லவ மன்னர்களது இலங்கைத் தொடர்பு குறித்து ஏன் அதிகம் அறியப்படாமல் அல்லது வெளிப்படுத்தப்படாமல் இருக்கிறது? சோழன் சைவா் என்பதாலா? பெருங்கோவில் கட்டியதாலா? ஆம் எனில் சோழா் சைவ மரபா, இந்திர மரபா?

குலோத்துங்க சோழனா அல்லது குலத்துங்க சோழனா? குலம் தெரியும். அதென்ன குலோ? குலத்துங்கன்தான் குலோத்துங்கனாக மாறிவிட்டதோ? குலோ - குல. எனில் துங்கன்? துங்க, துங்கு - துங்கவன் எனில் துங்கவன் யார்?

பொருளென்ன? பிங்கவன் திரிபுவனச் சக்கரவர்த்தி. புவனம் - உலகம். உலகத்தை ஆள்பவன். உண்மையெனில் உலகாளும் குலத்தைச் சேர்ந்தவன், குலத்தவன் எனப் பொருள். எனில் உலகாள்பவன் யார்? உலகைக் காப்பவன் எவன்?

திரிபுவனச் சக்கரவர்ததி யார்? மூன்று உலகங்களையும் ஆள்பவன். இராசராசன் திரிபுவனச் சக்கரவர்த்தி எனப் புகழப்படுகிறான். தஞ்சையை ஆண்ட, தமிழகத்தை, தென்னிந்தியாவை ஆண்ட, இராசராசனா மூவுலகத்தையும் ஆண்டான்? அது அவனது பெருமையை, புகழை, வியந்தோதுவதற்காகச் சொல்லப்படுவதன்றோ.

அரசன் எனில் காப்பான், காப்பவன். அவன் தனது நாட்டை, நாட்டு மக்களை காப்பவன். எனில் புவனத்தைக் காப்பவன் யார்? உலகைக் காப்பவன் யார்? உலகைக் காக்கும் கடமைக்குரியவர் யார்? யாரால் உலகங்கள் காக்கப்படுகின்றன? உலகைப் படைப்பவன் பிரம்மன், தக்சன் போன்ற பிரசாபதிகள். ருத்ரன், அக்னி, யமன் போன்றோர்கள் அழிக்கும் பொறுப்பிலுள்ளவர்கள். எனில் காப்பவன்? காக்கும் கடமையுள்ளவன்? இந்திரன்..

உலகங்களைக் காப்பவன் இந்திரன், தேவேந்திரன், தெய்வேந்திரன். அவனே தேவர்களின் தலைவன். அவன் மனிதரை, தேவரை, தெய்வங்களை, இறைகளைக் காக்கும் கடைமையுள்ளவன். அவன் காப்பான்களின் தலைவன். அவன் இமையவன். இமயம் - உயர்ந்த மலை. இமையம் - இமை, பொழுது. இமை - இமைத்துக் கண்ணை மூடும் உறுப்பு. இமையா - இமைக்காதவா். இமையவர் - கண் மூடாதவர். உலகைக் காக்கும் கடமையில் தேவர்கள் கண் துஞ்சமாட்டார்கள். அவர்கள் கண் மூடுவதேயில்லை. பொருள் - அவர்கள் உறங்குவதே இல்லை. இமையவர்கள் தூங்காதவர்களா எனில் அந்தளவிற்கு, கண்ணும் கருத்துமாகக் காக்கும் கடமையைச் செய்யக்கூடியவா்கள் எனப் பொருள். கடமை தவறாதவா்கள். தேவர்கள் உலகம் காக்கும் கடைமையில் பெரியவர்கள், சிறந்தவா்கள் எனில், அவா்களின் தலைவனான தேவேந்திரன் எத்தனை கடமையுள்ளவனாக இருப்பான்? தேவர்களின் தலைவன், அமராபதி, காப்பான் தூங்கினால் என்னாவது?

அமராபதி - அமரர்களின் பதி. அமரர்களின் இறைவன், தலைவன், தெய்வம், அமரர் - தேவர்.

விண்ணுலகின் அதிபதியான அந்த விண்ணவன் எப்படி உலகைக் காக்கிறானோ, அவ்வாறே மண்ணுலகின் பதிகளான அரசர்கள் மண்ணுலகைக் காப்பவர்கள். இன்னும் சொல்லவேண்டுமெனில் விண்ணையாளும் இந்திரனின் சார்பாக, மண்ணுலகத்தை ஆள்பவர்கள். தமிழ் மூவேந்தர் மரபும் இந்திர மரபே. உண்மையில் சோழர்களே இந்திர மரபை உயர்த்திப் பிடித்தவர்கள். ஏனெனில் சோழ நிலமே தமிழ் நிலத்தின் ஆகச்சிறந்த மருதம். மருதத்திற்கு சொந்தக்காரர்கள் மருதர்கள்.

தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டிய, பல்லவர்கள் இந்திர மரபினர் என்பதற்குச் தெளிவான சான்றுகள் இருந்தும், ஏன் இந்த வரலாறு மூடி மறைக்கப்பட்டது? தஞ்சை பெரிய கோவிலில் இந்திரனுக்கென்று தனிக் கருவறை இருந்ததா? இந்திரனுக்கு சிலை வழிபாடு இருந்ததா? மதுரை அழகர்கோவிலின் உள் சுற்றின் படியருகே வைக்கப்பட்டிருக்கும் அந்தத் தேவன் யார்? இந்திர மரபு தலைதூக்கி விடுமென்றா இப்படி மறைக்கப்பட்டிருக்கிறது? அல்லது இந்திர குலத்தார் தங்களை அறியக்கூடாது என்பதற்காகவா? தாங்கள் யாரெனத் தெரிந்தால், இந்நிலம் யாருடையது எனக் கேள்வி வந்துவிடுமென்ற பயமோ? உண்மையை மூடி மறைப்பவர் யார்? உண்மையை மறைக்க, ஒளிக்க, மாற்ற, மறக்க முடியுமா மனிதர்களே, தேவர்களே.

மூவேந்தர் மரபில், சோழ மரபை இந்திர மரபென சான்றாக்க அவசியமில்லை. சோழர் மருதர், இந்திர மரபினர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. பல்லவ அரசுரிமை இந்திரர் அரசென்பதில் துளியும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. மீதமிருப்பது சேரர் மற்றும் பாண்டியர். பாண்டியரே பள்ளர் என நிரூபிக்கப்பட்டுவிட்டது. தகுந்த சான்றுகளோடு மறுக்கும் வரை அதுவே உண்மையாக இருக்கும்.. சேரர் யார்? சேரரும் இந்திர மரபே என இப்புத்தகத்தில் எடுத்தாளப்பட்டுள்ளது. சேரர் இந்திர மரபினரே என இங்கு விரிவாக விளக்கப்பட்டுள்ளது. சான்றுகள் இணைக்கப்பட்டுள்ளனவா எனில் தேவையில்லை. ஓரளவிற்கு, மேலோட்டமாகவாவது தமிழக வரலாறு தெரிந்தவர்களுக்குப் புரியும் வண்ணம் இங்கே சுட்டிக்காட்டப்படுள்ளது. சேரர் யார் என்பதைத் தமிழருக்குச் சொன்னால் போதும். அடுக்கடுக்கான சான்றுகளோடு அதை உலகத்தின் முன் நிரூபிப்பது அவசியமில்லை. மேலும் இங்கே பல்லவர், சேரர் குலத்தின் தோன்றல் எனச் சுட்டிக்காட்டப்படுவதால், இருவரில் ஒருவரையறிந்தாலே போதும் என்பது

ஏற்கக்கூடியதே. மகனைத் தந்தை வழியில் அறியாமெனில், மகன் மூலமாகத் தந்தையையும் அறியலாமன்றோ.

தமிழின், தமிழகத்தின், புகழ்பெற்ற மூன்று அரச மரபுகளும் தேவேந்திரர் மரபு எனில், தேவேந்திரர் யார்? தேவேந்திரனைக் குலதெய்வமாக வழிபடும் தேவேந்திர குலத்தாருக்கும், தேவேந்திரனுக்குமுள்ள உறவு எத்தகையது? தேவேந்திர குலத்தவர் தற்போதும் இந்திரனை வழிபடுகின்றனரா? ஆம் உறுதியாக. அவர்களது பிறப்பு, இறப்புச் சடங்குகளில், குறிப்பாக, இறப்பிற்குப் பின்னான சடங்கு முறைகளில் தேவேந்திரனிடம் அப்பா எனும் உரிமையில் சொர்க்கம் வேண்டப்படுகிறது.

துங்கம் - உயர்ந்தது, பெருமை, மலை, வெற்றி. துங்கன் - உயர்ந்தவன். குலத்துங்கன் - உயர்ந்த குலத்தவன். உயர்ந்த குலம் எது?

பிற்காலச் சோழர் காலத்திலேயே சாதிப் பாகுபாடு தீவிரமாக எழுந்ததாகப் பதிவுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. குறிப்பாக இடக்கை - வலக்கைப் பிரிவுகள், சாதித்திரட்டுகள் காரணமென்ன?

கேள்வி என்னவெனில் கரிகால் பெருவளத்தான் சாதியை முன்னெடுத்ததாக இலக்கியச் சான்று சுட்டப்படுகிறதா? முற்காலச் சேரர்கள்? பாண்டியர்கள்? இல்லை என்பது பதிலெனில், பிற்காலத்திய அரச மரபுகளில் சாதியம் நுழைந்ததெப்படி? யார் நுழைத்தது?

சிங்கவாகுவின் குமாரன் விஜயன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் குடியேறியதால் அந்நாடு, சிங்க - சிங்களம், சிங்களர், சிறிலங்கா என அடையாளம் பெற்றதாம். கலிங்க நாட்டவராகச் சுட்டப்படும் இந்தச் சிங்க பாகு யார்?

அன்றைய கலிங்கம் - மேகவாகனப் பேரரசு என அறியப்படுகிறது. மேக வாகனன் யார்? மேகத்தை வாகனமாகக் கொண்டவன் எனில் இந்திரன். மேகவண்ணன் எனில் கண்ணன். மேக வாகனப் பேரரசு - இந்திர மரபுதானே.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த கலிங்கப் பேரரசு, ஆந்திராவின் விசாகப்பட்டிணம், காஞ்சம் மாவட்டங்கள் வரைப் பரவியிருந்திருக்கிறது. அவர்களது மதமாகச் சுட்டப்படுவது சமணம். சமணர்களாக இருந்த போதிலும் அவர்கள் அனைத்து மதங்களையும் ஆதரித்தனராம்.

இந்தியர் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். புத்தமும் சமணமும் உருவாவதற்கு முன், பாரத நிலத்தில் பெரிய மதங்களோ மதக்கோட்பாடுகளோ இருந்ததாகத் தெரியவில்லை. புத்தமும் சமணங்களும் கூட மதங்களாகத் தோற்றம் பெற்றவையல்ல. வாழ்வியல் முறைகளே. பின்னாட்களில் மதங்களாகச் சுட்டமைக்கப் பட்டிருக்கின்றன.

சமணம், பௌத்தத்தைப் பார்த்து, குறிப்பாக, புத்தமதச் செல்வாக்கைப் பார்த்தே, அன்றைக்கு கருத்தக்களாக, தத்துவங்களாகப் பேசப்பட்டு வந்தவை சமயங்களாக சமய மறுப்புகளாக மேலெழுதிருக்கின்றன. அன்றிருந்து வேள்விச் சடங்குகள் கொண்ட பிராமணர் மதமே. அது மக்கள் மதமாக இல்லை. புத்தத்தைப் பார்த்தே வேதங்களின் கடவுளர்கள் பல்வேறு மதப் பிரிவுகளாக வளர்த்தெடுக்கப்பட்டனர். பல்லவர் காலத்தில் சிறந்திருந்த மணிமேகலை காப்பியத்தில், மணிமேகலை பல்வேறு சமயவாதிகளிடம் பேசுவதாக, கலந்துரையாடுவதாக சாத்தனார் நுட்பமாகச் சுட்டுகிறார். அன்று மதங்களுக்கிடையே குறைந்தது உரையாடலாவது இருந்திருக்கிறது. இத்தனை உயர்வான மனிதராக மாறிவிட்ட போதிலும், இன்றைக்கு அத்தகைய உரையாடல் அறவே இல்லையென்பது ஒப்பு நோக்கத் தக்கது.

முன்பு பல சமயங்கள் ஒரு சேரச் செழிந்திருந்த தமிழ் மண்ணாம் இது. வைதீகம், ஆசிவகம், பௌத்தம், சாங்கியம், பூதவாதம் எனப் பல நெறிகளும் செழித்திருந்த காலம் மட்டுமல்ல, அவற்றுக்கிடையே சிறந்த வகையில் விவாதமும் நடந்து கொண்டிருந்ததாம் - நன்றி - பேராசிரியரும் மூத்த தோழருமான திரு. ஆ. மார்க்சு - மணிமேகலை காப்பியம் பற்றிய தீராநதி இதழின் ‘‘நெஞ்சில் கனல் மணக்கும் பூக்கள்’’ தொடர்.

‘‘பூக்காத வஞ்சியில் பூத்த வஞ்சி மலர்களைச் சூடிய வீரர்கள் வலம் வரும் சேர நாட்டுச் செங்கோல் வேந்தன்’’ என செங்குட்டுவனை சாத்தனார் புகழ்கிறார். சேரநாட்டு வீரர்கள் தாம் செல்லும் நாட்டை எல்லாம் சேர நாடாக ஆக்கும் வல்லமை பெற்றவர்களாம்.

அன்று இந்தியத் துணைக் கண்டத்திலும் தமிழகத்திலும் முகிழ்ந்திருந்த முக்கிய பல சமயங்களின் கருத்தாக்கங்களையும், அவற்றில் பௌத்தம் எவ்வாறு

மேம்பட்டு நிற்கிறது என்பதையும் திறம்பட எடுத்துரைக்கிறார் பெரும் புலவர் சாத்தனார்.

காரவாளரான கலிங்கர் சமணர் எனில் சாதவாகனர்? காரவாளர் – கரையரோ? கரையை ஆள்பவர். கார வாகனர் - கார் வாகனர் - கார் - மேகம் - நீர் - நீரை ஆள்பவர். காரை ஆள்பவர் காராளர். காரை ஆளும் வேளாளர் காரவேளரோ. வேளாளர் - கார் வெள்ளாரர் - கார் காத்த வெள்ளாளர்?

வெல்லத்தை அதாவது நீரை ஆள்பவர் வெல்லாளர். வெள்ளத்தை ஆள்பவர் வெள்ளாளர். வெல்லமா அல்லது வெள்ளமா? வெல்லம் - நீர். வெள்ளம் - பெருநீரோட்டம்.

சாதவாகனர்? சதகர்ணி - சாதவாகனரென சுட்டப்படுகிறார். கர்ணி பொருளென்ன? கர்ணி - கண்ணியோ? சதம் - நூறு. சத கண்ணி - பெரிய ஆட்சியாளர்களா? தொடர்ந்து வரும் ஆட்சியாளர்கள்? பெரிய மாலை சூடியவர்கள் - வெற்றிமாலை. தெலுங்கில், உரியத்தில் பொருளைத் தேடவேண்டுமோ? மேட்டு நிலத்தவரோ - கார வாகனர் கடற்கரை எனில், சாத வாகனர் ஆந்திர, மராத்திய, கருநாடாக மேட்டுப் பகுதியைச் சேர்ந்தவராகக் குறிப்பிடப்படுவது பொருத்தமே. சாதவாகனர் - சாதவனரோ? சாதவாகனர், மேகவாகனர் என்பதை சாத, சத எனச் சரக்கலாமோ? சத- சாத்த- சாத்தன். சாத்தனார். உனில் வணிக சாதியோ? வணிகரோ? வணிகர் என்பதும் ஆராயத்தக்கதே. சதவாகனர் பௌத்தமல்லவா. ஆந்திர அமராவதியில் பௌத்தமரபை முன்னெடுத்ததில் சதவாகனரே பெரும்பங்கு வகிப்பதும் ஒப்பு நோக்கத்தக்கது.

சாதவாகனர் என்பதை சார்தவாகனர், சார்தவாகனப் பேரரசு எனக் கொண்டால்? சார்த - பெரிய, சார்தர் - தலைவர். ஒப்புநோக்க சர்தார் - தலைவர், வீரர். வாகனம் - வண்டி. எனில் வண்டித் தலைவர். வணிகவண்டிக்குப் பொறுப்பானவர். அன்று வணிக வண்டிகளுக்கு கண்டிப்பாக காவல் இருந்திருக்கும். இப்பொழுது அனைத்தும் துலக்கமாகிறதன்றோ.

கலிங்கர், சாதவாகனரைத் தொடர்ந்து கிழக்குக் கடற்கரையில் நிலை கொண்டது பல்லவம். முற்காலப் பல்லவர்களில் முதலாவது பல்லவரெனச் சுட்டப்படும் பப்பதேவரின் காலம் தோராயமாக பொது ஆண்டிற்குப் பின்னர் 250

முதல் - 300 எனக் கொள்ளளாமெனில், அதுவே சாதவாகன அரசின் வீழ்ச்சிக் காலம் எனக் கொள்வது பொருத்தமுடையது. சில குறிப்புகளின்படி, சாதவாகனரின் நீட்சியாகவும் பல்லவ மரபு சுட்டப்படுகிறது. எனில் பல்லவா் வணிகத்தோடு தொடா்புடையவரா அல்லத வேளாண்மையோடா. சான்றுகள் காட்டுவதென்ன.

முதலாம் மகேந்திர வா்மனின் ஆட்சிக்காலம் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. அதாவது ஏழாம் நூற்றாண்டின் தொடக்கம் (600 - 630). மகேந்திரரது தந்தையே களம்பிரரை அடக்கி, மீண்டும் பல்லவ ஆட்சியை நிலைநாட்டியதாகச் சுட்டப்படுகிறது. சிம்ம விஷ்ணுவான அவா் வைணவராகக் கூறப்படுகிறது. ஆனால் மகேந்திரரோ சமணா், பின்னா் சைவா் என மனத்தடுமாற்றம் கொண்டிருந்ததாகச் சுட்டப்படுகிறது. இதுவே தமிழகத்தின் மதமாற்றத்திற்கான தொடக்க மனநிலையெனில் சரியே.

தமிழகத்தை ஆண்ட களப்பிரருக்கும் கலிங்க காரவேலருக்கும் பெயரொற்றுமை நிலவுகிறது. களப்பிரக் காலத்தில் சமணம் சிறப்பாக முன்னேடுக்கப்பட்டதெனில் அக்காரணமும் பொருந்துகிறது. வட இந்திய அரசு மரபுகளையும், அரசா் பெயா்களையும், ஊா்பெயா்களையும் தமிழா் வடமொழியோடு தொடா்பு படுத்தியே அறிந்து வந்துள்ளாா். சொற்களைத் தெளிவாக அறிவதோடு, தமிழின் சொற்கள் எப்படி சிதைந்திருக்கலாம் என்பதையும் நுட்பமாக அறியுந்தோறும், இந்திய வரலாற்று பல புதிய முடிவுகளைக் கண்டடையக்கூடும்.

தமிழ்ச் சொல்லின் மத்திய பகுதி பெரும்பாலும் மாறாது. பின்னொட்டு மாறாமல் எதுகை மோனையோடு இயைந்து வரும். ஒப்பு நோக்க வில். வில் வடக்கே பில்லாகும். முன்னொட்டு மெய்யெனில் பெரும்பாலும் மாற்றம் கண்டிருக்கும். வில் - பில் - பிலு - பிலு - குலு - புலு. புலு – புல்லு, புல்லா- புலா - பலா - பிலா - பில்லா. சொல் மாறினாலும் அச்சொல் தொழில் சாா்ந்ததெனில் பழைய தொழிலையே சுட்டி நிற்கும். இடப்பெயரைக் கண்டறிய அருகாமை இடம்பெயா்களை ஒப்பு நோக்குவது அவசியம். பள்ளம் - குல்லம் - மல்லம்.

கிளிநொச்சி மாவட்டத்தின் வடக்குக் கரையோரத்தில் பளை எனும் ஒரு சிறு நகரம் உள்ளது. பளை, (Pallai). பளையா பள்ளையா? இரு எல் வருவதால் பள்ளையாக இருக்கலாம்.. எனில் பள்ளியோ? பள்ளை நகரம் அமைந்திருப்பது பச்சிலைப்பள்ளி பகுதியில் எனில் உறுதியாக அந்நகரின் பெயா் பள்ளியாகத்தானே

இருக்க வேண்டும். பள்ளி எப்படி பளையாகியது? பாலாவி, புலோப்பளை போன்ற பெயர்களும் பள்ளியின் மருவாக இருக்கலாம்.

தமிழர் மாவட்டங்களான மன்னார், வவுனியா முழுக்கவே ஏராளமான குளப் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. திருகோணமலையில் குழி எனும் பெயரிலும், மட்டக்களப்பில் கேணி எனும் பெயரிலும், அம்பாளையில் சேனை எனும் பெயரிலும் ஏராளமான ஊர்ப் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. கேணிதான் சேணி - சேனையாகிவிட்டதோ?

ஈளத்தின் Pallegama பள்ளிகாமா தானே. காலிவாலா (galewala), பள்ள போலா (Pallapola), கேகெல்லே (Kogalle), பிலவாலா (pilawala), பாதுலிலா (Badulla), பிலனா (Pilona), பலவட்டா (palawatta).. எத்தனை எத்தனை ஊர்கள் தற்போதளவும் பள்ளி பெயரில், அதன் மருவில் அமைந்துள்ளன. பள்ளியின் பொருள் சிங்களருக்கு வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாம். தமிழருக்கு?

அனுநாதபுரத்தின் மிகிந்தல் (mikintal) பெயருக்கு அர்த்தம் என்ன? மகா தேரரா, மகேந்திரரா? பொலனருவையின் பலுகஸ்தமனா (palugastamana), நிசங்கமல்லபுரா (nissanka mallapuram) - தெளிவாகத் தெரிகிறதே – அது நரசிங்கமல்லபுரமல்லவா. வேறென்ன சான்று வேண்டும்?

ஸ்ரீலங்காவின் கடற்கரைகளில் அமைந்திருக்கும் ஊர்களில் சில - தலெல்லா கடற்கரை (talalla beach), பொல்ஹினா (Polhena) தங்கல்லி (tangalle), வலசுமுல்லா (walasmulla), நூர்ன வாலா கடற்கரையருகே பழமையான சிங்க சேனா (Sinhasena devalaya) தேவாலயம் உள்ளதாம். அது நரசிங்கர் ஆலயமல்லவா?

ஆத்திரேலியாவின் கடற்கரையெங்கும் தமிழ்ப் பெயர்கள் பரவலாகக் காணக் கிடைப்பது எப்படி? பெல்லவ் தீவு (Pallew island), பீடமுல்லா (Peeda mulla) - பெரிய மல்லாவோ? பால்லிடு (Ballidu, மொல்லரின் (mollerin - மொல்லர் - மல்லர்). பின்டி (Bindi - பாண்டி) மின்னிவலி (minnivale - மீன்பள்ளி), பாண்டியா (baandea) - தம்மின் - (tammin), பல்குளின்ங் (Bal Kulling - பள்ளக்குளம்), பள்ளி - பள்ளி (bally bally), புள்யி (bulyee - பள்ளி), மின்யிர் (minyirr - மீனவர்), புரூம்

(Broome பொருனை) பிளிங்கூர் (bilingurr - பள்ளன் ஊர்) கலும்புரு (Kalumburu), தாம்ரூர் (thamarurr- தாமிரபருணி) துண்டி கடற்கரை (Dundee beach), மணிங்கிரிடா (maningrida -மணிமுத்தாறு), மிலிங்கிம்சி (milingimsi), களிவிங்கு ( galiwinku).

களிவிங்கு என்பதை இந்தோனேசியாவின் களிமந்தனோடு ஒப்பிடுவது ஒருவேளை பண்டைய தமிழர் பாவலை அறிய இடம் தரலாமோ. வெள்ளையர் இருநூறாண்டுக்கு முன்பு ஆத்திரேலியாவிற்கு வந்தும் இன்னும் அதன் உட்பகுதிகளில் குடியேறவில்லை என்பது தெளிவு. கடற்கரையை யொட்டியே இத்தனை இடப்பெயர்கள், அதுவும் கிட்டத்தட்ட தமிழ்ப் பெயர்களிலேயே, பொருள்களிலேயே வழங்கி வருகிறதெனில், சற்றே உள்நோக்கி ஆராய்ந்தால், அது தமிழர் வாழ்ந்த, பரவிய மண் என்பதை எளிதில் நிரூபித்துவிடலாமல்லவா. ஏன் தமிழர் இவற்றையெல்லாம் ஆராயவில்லை? ஆட்சிக்கு வந்தவர்கள் தமிழுக்கும், தமிழருக்கும் என்னதான் செய்தார்? யாம் சுட்டுவது உண்மையான தமிழர்க்கு?

துருக்கியின் மெனுயா (manua) எனும் சொல்லுக்கு தமிழில் எழுதப்பட்டுள்ள விளக்கங்கள் விந்தையாக உள்ளன. தமிழில் மேன் உய்ய - மேனன் - உய்யன் என செப்பமாகப் படிக்கலாமாம். கேள்வியென்னவெனில் ஏன் மீனவா - மீனவர் என்றே அழகிய பொருள் தருகிறதே. Manua துருக்கியின் பழமையான சொல்லாம். எவ்வளவு பழமை? ஈராயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட சொல்லாம். துருக்கியின் இடப்பெயர்கள். ஆட்களின் பெயர்கள் மற்றும் மொழி பற்றி, இணையத்திலேயே எளிதாக அறிந்துவிடலாம் எனும் நிலையில் அத்தனை தமிழோடு உறவுடையதாக இருக்கிறது.

மனுவா - மீனவர் தானா என்பதை ஏற்றுக் கொள்ளலாமா? ஆம். துருக்கியத்தின் Erimena - எரிமினா எனும் சொல்லை ஒப்பு நோக்கலாம். எரி தமிழில் எல் - எரி எனத் திரியும், இதற்குச் சிவப்பு, தறி எனப் பொருள் உண்டு, எனவே அது எரிமீனாம். அதாவது எரிநட்சத்திரம். ஏன் அதை ஏரி மீன், ஏரி மீனவர் என்றே பொருள் கொள்ளலாமே. மீனவர் எனும் தமிழ்ச்சொல் துருக்கியில் அப்படியே வழக்கத்திலிருக்காதல்லவா? காலமாற்றத்தில் தமிழ் சற்றேனும் மாறியிருக்கும். எனினும் ஒட்டுமொத்தமாக மாறியிருக்காது.

ஈழம் என்பதன் பொருள் என்னவாக இருக்கும்? ஈழம் சிறிலங்கா நாட்டைக் குறிக்கும் சொல். ஒப்புமைக்கு ஈழத்துப் பூதந்தேவனார் (குறுந்தொகை - 348, அகநானூறு 88) நன்று. ஈழத்துப் பூதந்தேவனார் எனில்? ஈழம் என்பதை நீர் எனக் கொண்டால்? ஈளை.. ஈளை - நுரையீரலில் நீர் கோர்த்துக் கொள்வது. ஈள நோய் - இழுவை நோய். மூச்சு இழுத்துவிடச் சிரமப்படும் நோய். ஈழத்துப் பூதந்தேவனார் - நீர்நாட்டுப் பூதந்தேவனார். இல்லத்து - மலைநாட்டு.

நீரால் சூழப்பட்டது ஈழம். தாழ் நிலம். ஒப்பு நோக்க ஈழவர், குறைந்தவர், தாழ் நிலத்தவர். ஈழம் - கள், கள் அருந்துபவர், கள்ளோடு தொடர்புடையவர் ஈழவர். ஈழப்பனை - பனைமரம். ஒப்பு நோக்க - ஈச்சமரம்.

ஈழம், வெழல, ஹெல, சிஹல, சிங்கள எனும் சொற்களின் பொருள் ஒன்றெனக் கொள்ளப்படுகிறது. தமிழின் ஈழம் பெயரே சிங்களம் என வழங்கிற்று. சங்கத்தின் - சிறுபாணாற்றுப்படையில் தொன்மாவிலங்கை எனக் குறிப்பிடப்படுகிறதாம். சிலம்பு தொல் இலங்கை எனச் சுட்டுகிறதாம். இலங்கும் பொருள் இலக்கம். அதாவது தெளிவாகத் தெரிவது. இலங்கை என்பதற்கு ஒளி நாடு, கண்ணுக்குப் புலனாகும் நாடு எனப் பொருளாம். கொலுவிய நகரம் அதாவது ஒளிரும் நகரம் கொழும்புவாம். ஆகவே இலங்கை கொழும்பு வாயிற்று.

ஈரானின் ஈலோம் பகுதியை ஒப்பு நோக்க தாழ்வான நிலம் எனும் பொருளிலேயே ஈழம் சுட்டப்படுகிறது என்பது பொருத்தமுடையதாகிறது. நிலம் என்பது கூட இலம், ஈழம் என மாறியிருக்கலாம்.

பாரத கண்ட, ஜம்புத் தீவ என சடங்குகளில் பிராமணர்களால் உச்சரிக்கப்படுகிறது. சம்புத் தீவு என்பதைக் கொண்டு தமிழ் நிலம் சாம்பத் தீவு, சாம்பன் தீவு எனவும், சம்பு முனிவர் பெயரால் சம்புத்தீவு எனவும் அர்த்தங்கள் எடுத்தாளப்பட்டு வருகின்றன.

சிங்களத்தில் ஜம்பு எனில் பாம்பு. எனில் பாரத கண்டம் பாம்பு நாடு அதாவது நாகர்களின் நாடாகிவிடும். இலங்கையைக் குறிப்பது தான் சம்புத் தீவா எனில் ஏற்கத் தக்கதே. இலங்கை நாகர்களோடு தொடர்புடையதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. நாகரும், இயக்கரும், திமிலரும், வேடரும், முக்கவரும் இலங்கையின் தொல்தன்மையோடு தொடர்புபடுத்தப்படுவது ஒப்பு நோக்கத் தக்கது.

பம்பல - சிங்களத்தில் ஜம்புல. பம்பல சிங்கள மொழியில் பலவாகத் திரியும் - அம்பல, தம்புல, அத்துல. தமிழில் பேட்டை சிங்களத்தில் பெற்றா (Petra, petro) புறக்கோட்டை - பிட்டுக்கொட்டுவா.

மொழி எப்படி மாறும்? தமிழில் சார், இலங்கையில் சேர், மலையாளத்தில் சாரே. பேசும் - கதையும் - பறையும்.

கலிங்கரோடும் வங்கரோடும் தொடர்புபடுத்தப்படும் சிங்களர், ஏன் துங்கரோடு தொடர்புபடுத்தப்படவில்லை? துங்கன் யார்? துங்கன், சிங்கன், பிங்கன் எனும் பெயர்கள் வைத்திருந்த முக்கூடற்பள்ளன் யார்?

ஈழம் பெயருக்கும் கிரேக்கத்தின் இலியம் (illium), இலியட் (iliad) பெயர்களுக்கும் ஏதேனும் தொடர்பிருக்கிறதா?

துருக்கியின் யலோவா (yalova) மாகாணம், இசுரேலின் இலாட் (Eilat) இடப்பெயரின் பொருளென்ன?

இலங்கையை வடக்கு, தெற்கு என இருபெரும் பிரிவுகளாகப் பார்த்தோமெனில், வடக்கு முற்றிலும் சைவம். தெற்கோ முழுவதும் சிங்களம். வடக்கு தமிழர். தெற்கு சிங்களவர். வடக்கின் தந்தை ஆறுமுக நாவலர். தெற்குக்கு அநாகரிக தர்மபால.

பௌத்த சிங்களத் தந்தைக்கும், சைவ தமிழ்த் தந்தைக்கும், இலங்கையின் நவீன வரலாற்றில் என்ன பங்களிப்பு? தமிழர் பகுதி, வெள்ளாளர் - சைவம் என மாற்றப்பட்டதெனில், சிங்களவர் பகுதி கொவிகாம - பௌத்தம் என மாறியது எப்படி? இலங்கை மோதலே வெள்ளான - கொவிகாம போட்டி என்பதன் உண்மைத் தன்மை எந்தளவு? கோவிகாமா - சிங்கள வெள்ளாளரோ?

கம - ஊர், ஜனதாவா - கிராம மக்கள். கமக்காரன் - வேளாண்மை செய்பவன். கமக்காரன் - புத்தரின் தந்தை நல்ல கமக்காரன். கந்தன் நல்ல கமக்காரன். கம – கிராம – கிராமம். பொருத்தமன்றோ.

கோவிகாம (Govigama) - இலங்கையின் நெல் பயிரிடும் பௌத்த சாதி. பாத் - நெல். கம - ஊர், பாத்கம (Bathgama) - நெல் பயிரிடும் பௌத்த சாதி. ரத் - ராயல் தொடர்புபடுத்தப்படும் சிங்கள சாதி - ரத்குல, ரதல (Radala).

1901 இல் இலங்கையின் மக்கள் தொகை,

சிங்களவர் - 23,30,800.

இலங்கைத் தமிழர் - 9,51,700

இலங்கை இசுலாமியர் - 2,28,000,

மலாய் - 11,900,

பர்க்கர் (burgher) - வெளிநாட்டவர் - முக்கியமாக அய்ரோப்பியர்) - 23,500.

நூற்றாண்டுக்குப் பின் 2001 இல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில்,

இலங்கையின் மொத்த மக்கள் தொகை - 1,87,97,257

சிங்களவர் - 1,38,76,248 (82%)

இலங்கைத் தமிழர் - 7,32,149 (4.3%)

இந்தியத் தமிழர் - 8,55,025 (5.1%)

இலங்கை இசுலாமியர் - 13,39,331 (7.9%)

பர்க்கர் - 38,388,

மலாய் - 55,352

மற்றவர் - 37,197.

2012இன் மக்கள் தொகையின் படி, மொத்தம் - 2,03,59,439 பேர்கள்.

சிங்களர் - 1,52,50,081

இலங்கைத் தமிழர் - 22,69,266

இந்தியத் தமிழர் - 8,39,504

இலங்கை இசுலாமியர் - 18,92,638

பர்க்கர் - 38,293

மலாய் - 44,130

மற்றவர் - 18,215

100 வருடங்களில் இலங்கைத் தீவின் மக்கள் தொகை நான்கு மடங்கு அதிகரித்துள்ளது. 2001இல் தமிழர் பகுதியில் சரிவர கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை எனத் தெரிகிறது. அதனால்தான் இலங்கைத் தமிழர் எண்ணிக்கை குறைவாக கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

1901 - இன் கணக்கெடுப்பில் இடம் பெறாத இந்தியத் தமிழர் (Indian Tamil) அதாவது மலையகத் தமிழர் -1911, இல் 5,31,000 பேர்கள், 1931 இல் 8,18,500, 1963 இல் 11,23,000, 1971 இல் - 8,55,724.

2012 இன் கணக்கெடுப்பின் படி, இலங்கைத் தீவின் புத்த சமயத்தவர் 70%. இந்துக்கள் - 12.6% . இசுலாமியர் 9.7%. கிறித்தவர் 7.6%.

இலங்கையில் போர்த்துக்கேயர்கள் காலத்தில் டொன் பட்டமும், ஒல்லாந்தர் காலத்தில் வெள் பட்டமும், ஆங்கிலேயர் காலத்தில் சர் பட்டமும் வாங்குவது பெருமதிப்பிற்குரியதாக இருந்திருக்கிறது. அன்றைக்கு இலங்கையில் படித்த சாதிகளாக இருந்த கொவிகாம மற்றும் வெள்ளாள சாதிகள், ஐரோப்பிய ஆட்சியாளர்களுக்கு அனைத்து வகையிலும் ஒத்துழைத்ததாகப் பதிவுகள் சுட்டுகின்றன. காலனிய காலத்திற்கு முன்வரை நிலம் அரச மரபுகளுக்கே சொந்தமாக இருந்திருக்கிறது. காலனிய காலத்தில், பெரும்பாலான நிலம் இரு சாதியாருக்கு மட்டுமே கிடைத்திருக்கிறது. நிலவுடைமையும், ஆங்கிலக் கல்வியும் கிடைக்கப் பெற்ற இருசாதியினரும், அரசுப்பணி, வணிகம், அரசியல் பதவிகள், மதம் என அனைத்து வகைகளிலும் முன்னேறியிருக்கின்றனர். இவர்களோடு சேர்ந்து இலங்கையின் பொருளாதாரமும் மளமளவென உயர்ந்திருக்கிறது. இரண்டு தரப்பிலும் மதங்கள் பெருவளர்ச்சி பெற்றிருக்கின்றன. விளைவாக, இருவருக்குள்ளும் அரசியல், பதவி, அதிகாரம் போன்றவற்றில் முரண்பாடுகள் தோன்றி, அதுவே இலங்கை உள்நாட்டுப் போருக்கும் காரணமாக அமைந்திருக்கிறது.

இலங்கைத் தமிழர், மலையகத் தமிழரைத் தமிழர் என ஏற்றுக்கொள்வதில்லை போலும். பல பதிவுகள் அவர்களை மிகவும் குறைவாகவே மதிப்பிடுகின்றன.

ஒரு முகநூல் வலைப்பதிவின் பின்னூட்டம் இது - மலையகத் தமிழன் என்பவர் இந்த நாட்டுக்கு உழைக்க வந்தவன், இந்த மலையகத் தமிழனை வடக்கு, கிழக்கு தமிழர்களுடன் எவ்வாறு ஒப்பிடுவது - தோட்டக்காட்டானுங்களை வடக்கு, கிழக்கு தமிழன் ஏற்றுக்கொள்ளமாட்டான், பஞ்சம் பிழைக்க வந்த நா.

மலையகத் தமிழர் ஒரு பின்னூட்டம் இட்டிருக்கிறார் - நாங்கள் ஒரு சோற்றுப் பருக்கைக்குக் கூட கையேந்தாத உழைப்பாளர்கள்.

நாட்டைவிட்டு துரத்தியடிக்கப்பட்ட இந்த மலையகத் தமிழர் யார்? தமிழர் என ஏற்றுக் கொள்ள முடியாததற்கு அவர்களது சாதிதானே தடையாக இருக்கிறது? எனில் அவர்களது சாதி என்ன? இலங்கையில் என்னென்ன சாதிகள் வசிக்கின்றனர்? அப்படி வசிப்பவர்களில் இலங்கைக்கு குடிபோனவர்கள் யார்? ஆங்கிலேயர் காலத்தில் குடிபோனவர் தமிழர் இல்லை எனும் போது, அதற்கு முந்தைய காலங்களில் போனவர் மட்டும் எப்படி அந்நிலத்திற்குச் சொந்தக்காராக இருக்க முடியும்?

தமிழக நிலம் போன்றே இலங்கைத் தீவிலும் சாதியைக் கட்டமைத்தவர் யார்? அங்கே அனைத்து அதிகார நிலையிலும் பரவியிருந்த, பரவியிருக்கும் சாதி எது? புலித் தலைமையும், புலிகளும் சாதி பார்ப்பதில்லை அல்லது சாதியை வெளிப்படுத்தாமல் இருந்தார் எனில், புலிகளின் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் யார்? எந்த சாதிக்காரர்கள்? புலிகளின் அரசியல் ஆலோசகர்கள் யார்? ஊடகத்துறையைப் பார்த்துக் கொண்டவர்கள் யார்? புலிகளின் ஆயுதக் கொள்முதலுக்குப் பொறுப்பானவர்கள் யார்?

1810 - 1815 ஆம் ஆண்டுகளிலேயே அதாவது சுமார் இருநூறு ஆண்டுகளுக்கே முன்பே இலங்கையின் தோட்டத் தொழிலுக்கு வந்தவிட்டவர்களை, ஏன் இலங்கைத் தமிழராக ஏற்றக் கொள்ள இயலவில்லை? அவர்கள் எளிய சாதித் தமிழர்கள் என்பது தானே அடிப்படை.

இந்திய நிலத்தில் இந்து சனாதன முறை எனில், இலங்கை தமிழ் நிலத்தில் இருந்தது சைவ சனாதன முறை. மறுக்க முடியமா? சில தமிழ்ச் சாதிகள் சைவர்களாக இருந்தாலும், சிவனையே கும்பிட்டாலும் அவர்களை சைவர்களாக, தமிழர்களாக ஏற்றுக் கொள்ளாமல் தடுத்தது எது?

1830 இல் ஜப்னா மாவட்டத்தின் கணக்கெடுப்பு, அன்றைக்கிருந்த இலங்கை தமிழ்ச் சாதியமைப்பை துல்லியமாகக் காட்டுகிறது எனலாமோ? கணக்கீட்டின் படி,

| | |
|---|---|
| பரங்கிகள் | - 477 |
| பிராமணர் | - 1935 |
| செட்டி | - 1807 |
| மடப்பள்ளி | - **12,995** |
| முஸ்லிம் | - 2166 |
| பரதேசி வெள்ளாளர் | - 1830 |
| மல்லாகமர் (சிங்களர்) | - 1501 |
| கரையார் | - **7562** |
| வார்ப்படக்காரர் | - 105 |
| கொத்தனார் | - 47 |
| டன்னர்ஸ் (Tuners) | - 76 |
| வெல்பர் (Welper) | - 50 |
| கைக்கோளர் | - 1043 |
| சாண்டார் | - 2173 |
| சாயக்காரர் | - 902 |
| செவ்வியர் | - 1593 |
| பண்டாரம் | - 41 |
| பரவர் | - 35 |
| தனக்காரர் | - 1391 |
| செவ்வியர் | - 1593 |

| | |
|---|---|
| பண்டாரம் | - 41 |
| பரவர் | - 35 |
| தனக்காரர் | - 1391 |
| பொற்கொல்லர் | - 899 |
| கருமான் | - 904 |
| தச்சர் | - 1371 |
| அம்பட்டன் | - 1024 |
| அட்மைபெர்க்கா | - 18 |
| வண்ணார் | - 2152 |
| முக்குவர் | - 2532 |
| மலையாளி | -210 |
| கோவியர் | - **6401** |
| கொம்பனி நளம் | - 739 |
| பள்ளர் | - **6313** |
| பறையர் | - 1621 |
| துடும்பர் | - 137 |
| நெசவுக்காரர் | - 272 |
| கவரா ரெட்டி | - 18 |
| தவசி | - 437 |
| நட்டுவன் | - 22 |
| எண்ணெய் விற்பவர் | - 7 |
| திமிலர் | - 1291 |
| பள்ளிவிலி | - 376 |
| செம்படவர் | - 40 |
| கடையார் | - 970 |
| நளவர் | - **7559** |

| | |
|---|---|
| குயவர் | - 329 |
| கப்பல் கட்டும் தச்சர் | - 33 |
| மறவர் | - 54 |
| குழிதோண்டுபவர் | - 408 |
| பரம்பர் | - 362 |
| சுதந்திர அடிமை | - 348 |

நூறு ஆண்டுகளுக்கு முன் ஜாம்னாவில் வாழ்ந்த சாதிகளைப் பற்றிய கணக்கில், ஆறாயிரம் பேருக்கும் அதிகமிருந்த சாதிகள் பள்ளி, பள்ளர், கோவியர், நளவர் மற்றும் கரையார். வெள்ளாளர் பற்றிய எண்ணிக்கை குறிப்பிடப்படவில்லையெனினும், தனி ஈழப்போராட்டத்திற்கு முன்வரை சாப்னா பகுதியில், யாழ் வளைகுடாவில், ஐம்பது சதவீத எண்ணிக்கையில் வெள்ளாளர் வாழ்ந்திருந்ததாகக் குறிப்புகள் சுட்டுகின்றன. போரினால் அதிகளவில் இடம் பெயர்ந்தது வெள்ளாளர் எனவும், தற்போது அயல்நாடுகளில் இருந்துகொண்டே இலங்கையிலிருக்கும் தமது நிலத்தையும், வீடுகளையும் விற்பதாகவும், அவ்வாறு விற்கும் போதுகூட பிற சாதியாருக்கு விற்பதில்லை எனவும் குறிப்புகள் சுட்டுகின்றன. அயல் நாடுகளின் மணமக்கள் விளம்பரத்திலும் உயர் வெள்ளாளர் எனும் பதம் இடம்பெற்றுள்ளது எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. யாழ் உயர்குல வேளாள இனத்தைச் சேர்ந்த மணமகனுக்கு அதே இனத்தைச் சேர்ந்த மணமகள் தேவை - இது கனடா விளம்பரம்.

வெள்ளாளர் அதிகளவு வசித்த யாழ்ப்பானம் பகுதியில் அறுபத்தைந்திற்கும் மேற்பட்ட சாதிகள் புழக்கத்திலிருந்ததாகத் தெரிகிறது. ஈழப் போராட்டத்தில் அதிகம் பங்கு கொண்டோர் கரையர், நளவர், பள்ளர் என்றே பதிவுகள் சுட்டுகின்றன. வெள்ளாளர் நிலவுடைமையோடு வியபாரத்திலும் ஈடுபட்டிருந்தனர். ஈழப் போராட்டம் வெடித்த போது தங்கள் பிள்ளைகளைப் போரிலிருந்து பாதுகாத்து வெளிநாடுகளுக்கு அனுப்பினர். போராட்டத்திற்கு நிதி வழங்கி தங்களை தற்காத்துக் கொண்டனர். எனில், போர் முனையில் தீரத்துடன் சண்டையிட்டு மாண்டது?

நளவர் என்பவர் ஈழத்தில் கள் இறக்குபவராகக் குறிப்பிடப்படுகிறார். மலையாளத்தின் ஈழவரே ஈழத்தில் நளவர் எனக் குறிப்பிடப்படுகிறார். அல்லது

நாடார் என்பது நளவர் எனத் திரிந்திருக்கலாம். நளவர், நாடார், ஈழவர் - பெயர்ப் பொருத்தமட்டுமல்லாது, செய்தொழிலும் ஒத்துள்ளது கவனிக்கத்தக்கது.

யாழ்ப்பாணச் சாதியில் பிராமணர் - கோவில் குருக்கள். சைவக் குருக்கள் - பிராமணர் அல்லாத கோவில்களில் பூசகர். ஆறுமுக நாவலரின் கருத்தாக்கத்தின்படி, சைவ வெள்ளாளர் பிராமணரை விட உயர்ந்தவர். சைவரை ஆதிசைவர், மகாசைவர், அநுசைவர், அவாந்தர சைவம், பரவர சைவர், அந்திய சைவர் எனும் பிரிவுகளாகப் பிரித்த நாவலர், சைவமே உயர்ந்த நெறி எனப் பரப்பியதோடு, பிற சாதியினர்மீது ஏராளமான கட்டுப்பாடுகள் விதிகப்படவும் காரணமாக இருந்திருக்கிறார். வெள்ளாளர் பார்ப்பனருக்கும் ஆசிரியராகலாம் என்ற நாவலர், நான்கு வருணத்திற்கு உட்படாதவர் ஆசிரியராகத் தகுதியில்லை எனவும் குறிப்பிட்டிருக்கிறார். நான்கு வருணத்திற்கு உட்படாதவர் எனில், அவர் பஞ்சமர்தானே. இலங்கையில் பஞ்சமராகக் குறிப்பிடப்பட்ட சாதிகள் எவை? விபூதி பூசும் போது பஞ்சம சாதியர் எதிரே வரக்கூடாதாமே.

யாழ் வெள்ளாளரை சற் சூத்திரர் என்கிறார் நாவலர். சற் - உயர்ந்த, மேலான. மேலான சூத்திரர். பிராமணர் உட்பட மற்றவர் அசற்சூத்திர. அதாவது சற்சூத்திரர்க்கு கீழே.

யாழின் வெள்ளாளர்கள் - நிலவுடமையாளர்கள். விவசாயிகள். பண்டாரி - பூமாலை கட்டுபவர், கோவில் உதவியாளர். கோவியர் - வீட்டு வேலைகள் செய்பவர். (கோவியர் சாதியை சிவியர் எனக்கொண்டால் அவர் பல்லக்குத் தூக்குபவர், சிவிகை - பல்லக்கு. அன்றைய யாழ் சாதிகளில் ஏழு சதமானம் கோவியர் இருந்தனர்) கரையார் - ஆழ்கடல் மீனவர். சுமார் - 10 சதமான யாழ் மக்கள் கரையாரே. நட்டவர் - மங்கள வாத்தியங்கள் இசைப்பவர். கைக்கோளர் - துணி நெசவு செய்பவர். சாண்டார் - நல்லெண்ணெய் பிழிபவர். குயவர் - மண்பாண்டத் தொழில். முக்குவர் – ஆழமற்ற பகுதி மீனவர். வண்ணார் - துணி வெளுப்பவர். அம்பட்டர் - முடி திருத்துபவர். பள்ளர் - வேளாண் தொழிலாளர். நளவர் - கள் இறக்குதல், வேளாண் தொழிலாளர். பறையர் - பறை மேளம் அடிப்பவர்.

யாழ்ப்பாணக் குடா நாட்டின் 1958 - 68 காலகட்டத்தில், அதாவது போருக்கு முன் சுமார் 90 சதமான ஆசிரியர்கள் வெள்ளாளர் என்றே பதிவுகள் சுட்டுகின்றன. 80% தேனீர்க் கடைகள், 40 % பாடசாலைகள், வெள்ளாளருக்கே

சொந்தமானவைகளாக இருந்தனவாம். பாடசாலைகளிலும் 80% பாடசாலைகளில் சமத்துவம் மறுக்கப்பட்டதாகவே குறிப்புகள் காட்டுகின்றன. தமிழ் இலக்கியத்திற்கும், சைவ மேன்மைக்கும் பாடுபட்ட ஈலத்தின் வெள்ளாளர்கள், சாதியத்தையும் உயர்த்திப் பிடித்ததாகவே இலங்கையின் வரலாறு பதிவிட்டுள்ளது.

தற்போதைய சிங்களர் சாதியில் பதின் மூன்று முக்கியமான சாதிகள் உள்ளனவாம். ரடல (Radala), கோவிகம, பத்கம, தேவ, நிகதி (nekathi), போதிவன்ஸ்ல (bodhivansla), ரசக (Rajaka), கும்பை (kumbai), குறு (hunu), துரவ (durava), கரவ (karava), சலகம (salagama), நவந்தன்ன (navadanna).

தேவ (deva) - கோவில் பணியாளர்கள். போதிவம்ச அல்லது போத்கர மகா போதி மரத்தின் பாதுகாவலர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். பன்னதுர, வில்லி துர எனும் பெயரில் குறிப்பிடப்படும் இவர்கள் துரை சாதியாகக் கூறப்படுகின்றனர்.

ரச - அழுக்கு. ரசக - அழுக்கு நீக்குபவர். சிங்கள வண்ணார் சாதி.

கரவா - தமிழ் கரையர் போன்று சிங்கள மீனவர் சாதி.

இலங்கை சிங்கள சாதியத்தைக் குறிப்பிடும் மிகவும் பழமை வாய்ந்த மானுடவியல் நூலான ஜனவங்சய, இருப்பத்தாரு சிங்கள சாதிகளைக் குறிப்பிடுகிறதாம். முக்கியமான சாதிகளில்,

| | | |
|---|---|---|
| நவந்தன | - | கலைஞர்கள் |
| கராவ | - | வேட்டையாடல், மீன்பிடித்தல் |
| துராவ | - | கள் இறக்குதல் |
| ரதா | - | உடை துவைப்பவர் |
| ஹன்னாலி | - | நெசவு செய்பவர் |
| படஹெல | - | மட்பாண்டம் செய்பவர் |
| அம்பெட்ட | - | முடிதிருத்துபவர் |
| ஹாலி | - | நெசவாளர் |
| ஹக்குறு | - | கருப்பட்டி உற்பத்தி |
| ஹறுனு | - | சுண்ணாம்பு உற்பத்தியாளர் |

| | | |
|---|---|---|
| பண்ண | - | புல் வெட்டுவோர் |
| பெரவா | - | தாள வாத்தியம் |
| பது | - | பல்லக்குத் தூக்குவோர் |
| கஹல | - | தண்டனை நிறைவேற்றுவோர் |
| ஹலி, பலி | - | குறைந்த சாதியருக்கு துணி துவைப்பவர் |
| ஹின்ன | - | மாவு சலிப்போர் |
| கின்னற | - | பாய் பின்னுவோர். |

பேராசிரியர் நந்த தேவ விஜேகசேகர எழுதிய இலங்கை மக்கள் எனும் நூலில் 43 சாதிகள் இடம் பெற்றுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. மேலே குறிப்பிட்டுள்ள சாதிகளோடு, பணிக்கி, பட்டி, பண்டார, பெத்தே, மரக்கல், முக்கரு, ரொடி, லன்சி, லோகர, வக்கி, வன்னி, ஹின்ன, உழன்ன, ஹளவாரி, காப்பிரி, கெத்தர, நெக்கத்ச, பத்கம, வகுட்பா போன்ற சாதிகளும் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

சிங்களச் சாதிய முறையில் தமிழ்சாதிகளைப் போன்ற இறுக்கம் இல்லை எனச் சுட்டப்படுகிறது. சிங்கள சாதிகளில் அதிகாரம் மிக்கவை என கொவிகாம, கரவா சாதிகள் குறிப்பிடப்படுகின்றன.

ரிஸ்வான் எம் (Riswan. M) - ஸ்ரீலங்கா தென் கிழக்கு பல்கலைக்கழகம் - வெளியிட்டுள்ள ஆராய்ச்சிக் கட்டுரை - A historical survey of social class and caste system in Sri Lanka - KALA International Journal of Faculty of Art and culture, Vol. III (1), June 2014, இலங்கை சாதியத்தை சுருக்கமான முறையில் சுட்டிக் காட்டுகிறது.

சிங்கள சாதியில், மத்திய கண்டி பகுதிக்கும் தெற்குப் பகுதிக்கும் சாதியக் கட்டமைப்பில் வேறுபாடு இருக்கிறதாம். அவ்வாறே தமிழ் சாதிகளிலும் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் வேறுபட்ட சாதியமைப்பு உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. வடக்கில் பள்ளர் பண்ணைத் தொழிலாளர் எனக் குறிப்பிட்டிருக்க (Farm hands), மறவர் நிலவுடமையாளர் எனக் குறிப்பிடப்படிருக்கின்றனர். குரும்பர் - நளவர் மற்றும் குறைந்த சாதியார் வண்ணாராம். திமிலர் - மீனவர். கரையர் - மீனவர், படைவீரர் மற்றும் நிலக்கிழார்.

கிழக்குப் பகுதியின் முக்குவர் - நிலவுடமையாளர், மீனவர் மற்றும் பண்ணை வேலை. வேடர் - வேட்டையாடுபவர். வன்னியர் - நிலவுடமையாளர்.

சிங்களவரில் கோயிகாம - தொல் பயிர்த் தொழில், நில வேலையாள், மேய்ச்சல்காரர், சலகாம - ஏலக்காய் தொழில், படைவீரர், நெசவாளர். கரவா - பாரம்பரிய மீனவர், கடல் வீரர், கடல் வணிகர், படகு செய்பவர், தச்சர் மற்றும் முன்னோடி தோட்டத்தொழில். துரவர் - புராதன படைவீரர் மற்றும் கள் வடிப்பவர். அகின் குண்டைய (Ahin Kuntaya) - நாடோடி. வகுபுரா (Wahupura - dewa) - வணிகர், தோட்டப்பயிர், போர்த்தொழில். பாமுனு (Pamunu) - வாரப் பயிர்த்தொழில். பொரவக்கரா (Porowakkara) - மரவெட்டிகள். கட்டார (Gattara) - பயிர்த்தொழில். பணிக்கி - முடிதிருத்தவோர். தமிழின் கக்குரு சிங்களத்தில் ஹக்குறுவோ?

சிங்கள சாதிப் பெயர்களை சற்று உற்றுப் பார்த்தாலே அவை தமிழின் திரிபுச் சொற்களாக உள்ளதை அறிய முடிகிறதே. தமிழின் கரையர்தான் சிங்களத்தில் கரையா என மாறியுள்ளது. தமிழில் கரையோடு, கடற்கரையோடு, கடலோடு தொடர்புடையவர் கரையர் எனில், சிங்கள மொழியில் கரை, கடல், மீன்பிடிதொழில் என்பதற்கு என்ன சொற்கள் புழங்குகின்றன? பாமுனு பல்லவனோ? பொரவக்கரா மரமறுப்பவரோ? பெரவா பறையர்தானே.

ஒப்பந்தத் தொழிலாளர்களாக இலங்கைக்கு அழைத்து வரப்பட்டவர்களில் (Indentured labourers) பெரும்பாலானவர்கள் இந்திய நிலத்தில் எளிய சாதிகளைச் சேர்ந்தவர்கள்.

மலையகத்தின் சாதியமைப்பு பொதுவில் தமிழகத்து ஊரினை ஒத்திருக்கிறது. பேராசிரியர் பெட்ரம் பாஸ்டியன்பிள்ளையின் படி (Bestram Bastianpillai) தோட்டத் தொழிலாளர்கள் திருநெல்வேலி, திருச்சி, மதுரை மற்றும் தஞ்சாவூர் பகுதிகளிலிருந்த கொண்டுவரப்பட்டனராம். 1827 முதல் மலையகத்தின் தோட்டங்களில் பணியமர்த்தப்பட்டனராம்.

உயர்சாதியினராக அறியப்படும் மறவர், கள்ளர், அகமுடையார், வெள்ளாளர் போன்றவர் முதல்வரிசை வீடுகளிலும், குறைந்த சாதியரான பள்ளர், பறையர்,

சக்கிலியர், சலவைக்காரர் மற்றும் முடிதிருத்துவோர், தள்ளியிருந்த பகுதிகளில் - distant or lower குடிவைக்கப்பட்டனர்.

உயர் சாதியினர் தொழிற்சாலை வேலை, தேயிலை அரைத்தல் போன்ற மதிப்பான வேலைகள் செய்தனர். தொழிலாளர்களாக இருந்தாலும், தேயிலை உற்பத்தியாளர்கள், கண்காணிப்பாளர்கள் மற்றும் பிற அலுவலரிடம் இவர்களுக்கு மரியாதை இருந்தது.

இசுலாமியர்கள் கல்வி, வணிகம், சொத்து மற்றும் அதிகாரம் போன்றவைகளால் சமூக வேறுபாடு கொண்டிருந்தாலும், அவர்களிடையே சாதியப் பாகுபாடு இல்லை. தமிழர் மற்றும் சிங்களவர் போன்று இலங்கை இசுலாமியரிடம் சாதியமைப்பு இல்லை. -Muslims in Sri Langa have not associated with any kinds of caste formations like Sinhalese and tamil communities in the country.

ஈழத்தோடு தமிழ்ப் பெருவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்களுக்குள்ள உறவு எத்ததையது? ஈழத்தோடு ஒவ்வொரு அரச மரபுக்கும் உள்ள தனித்துவம் எது? ஈழத்துடனான பல்லவர்களின் உறவு எத்தகைய மதிப்பு மிக்கது?

மன்னார் மாவட்டத்தில் குளம் எனும் பெயர் கொண்ட சில ஊர்கள் - மன்னார் நகரம் - உப்புக்குளம், கொள்ளன்குளம், நறுவிலிக்குளம், முள்ளிப்பள்ளம், பறங்கிசிரூக்குளம், சிறுநாவற்குளம், கனகன்குளம், உயிலங்குளம், பெரிய ஆலங்குளம், கோட்டைக்குளம், இலுப்பைக்குளம், பாப்பான்குளம், உதுவயாங்குளம்.

மாந்தை மேற்கு - வெள்ளாங்குளம், குருந்தன்குளம், கறுக்காக்குளம், சாவிரிக்குளம், கோயிற்குளம், புதுக்குளம், மிலப்பாணிக்குளம், பட்டாணிக்கட்டைக்குளம், செட்டுக்குளம், வண்ணாகுளம், கள்ளிக்குளம், கலையப்பெருமாள்குளம், சாலம்பைக்குளம், மரியபுளியங்குளம், கரம்பைக்குளம், ஆலங்குளம்.

நானாட்டான் - நறுவிலிக்களம், வண்ணாகுளம், கொவ்வான்குளம், அச்சன்குளம், இலந்தைக்குளம், நளவன்குளம், கொல்லர்சிறுகுளம், பெரியவண்ணாங்குளம், நொச்சிக்குளம், சாம்பன்புளியங்குளம், மூக்கறையம்குளம்,

அகத்திக்குளம், காளிமோடடைப் புளியங்குளம், அடியாகுளம், மகிழங்குளம், மயிலா்குளம், கொம்பன்சாய்ந்தகுளம்.

முசலி - அளவக்கைச்சிறுகுளம், சடையப்பன்குளம், இத்திக்குளம், கூமக்குளம், ஆலடிக்குளம், கோட்டைக்குளம், பாலையடிச்சிறுகுளம், கூழாங்குளம், பெருங்கட்டச்சிறுகுளம், பெரியநொச்சிக்குளம், இலைக்கறிக்குளம், தாண்டிக்குளம், புளியங்குளம், முள்ளிக்குளம்.

மடு - பாயாங்குளம், புலவிற்குளம், கிஞ்சுட்டான்குளம், பரியாரிப்பெரியகுளம், விளாத்திகுளம், உமையார்துவரங்குளம், வன்னிக்குளம், வவுனியான்பெரியகுளம், பனிச்சைக்குளம், காக்கையன்குளம், கனகராயன்குளம், பண்டாரைலுப்பன்குளம், ஆவாரங்குளம், மாவிலங்கள்குளம், உவர்க்குளம், இரணைஇலுப்பைக்குளம், சின்ன அரசன்குளம், நெடுங்குளம், தம்பனைக்குளம், பாலையடிக்குளம், குண்டுமணிக்குளம், சின்னக்குஞ்சுக்குளம், சாலம்பைக்குளம், வயிரண்டகட்டுக்குளம், உவயாத்திக்குளம், உளியன்குளம், சின்னக்குஞ்சுக்குளம், கள்ளிக்குளம், அட்டாஞ்சிக்குளம்.

மடு, தாழ்வு, குளி போன்ற பெயர்களிலும் பல ஊர்கள் காணப்படுகின்றன. நொச்சி - மருத நிலத்து ஊர்.

ஈழமெங்கும் பின்னிப் பிணைந்துள்ள குளம், பள்ளி எனும் ஊர்ப்பெயர்களும், அங்கு முன்னெடுத்து வரப்பட்டுள்ள பயிர்த் தொழில் செழுமையும், வன்னி அரச மரபும், பள்ளி பள்ளன் சாதியரின் அதிக எண்ணிக்கையும், சமன், சுமன் எனும் பெயரில் முன்னெடுத்துவரப்படும் இந்திர விழா மரபும், ஈழத்தோட பல்லவ மன்னர்களின் நெருங்கிய தொடர்பை விளக்கும் சான்றுகளாக அமைகின்றன. பல்லவர் காலத்திலேயே அங்கு ஏராளமான குளங்கள் தோண்டப்பட்டிருக்க வேண்டும். அவர் காலத்திலேயே அங்கு பயிர்த் தொழில் செழித்திருக்க வேண்டும். பின்னர் வந்த சோழ மரபு அதைத் திறம்பட முன்னெடுத்திருக்க வேண்டும். பல்லவர் காலத்தில் பள்ளர், பள்ளி போன்ற சாதிகள் ஈழத்திற்கு பெருமளவில் குடிமாறியிருக்க வேண்டும். பிற்காலச் சோழர் காலத்தில் வெள்ளாளர் சாதிகள் ஈலத்திற்கு குடிபுகுந்திருக்க வேண்டும்.

பல்லவர் காலத்திலேயே, சமற்கிருதம் பெருமளவில் கலந்துள்ள சிங்கள மொழி, ஒரு தனித்த மொழியாக மாற்றம் பெற்றிருக்க வேண்டும், மலையாளம்

போலவே, சிங்கள மொழியும் தமிழ் மற்றும் சமற்கிருதம் கலந்த மொழியாகவே இருப்பதும் ஒப்பு நோக்கத்தக்கது. சிங்கள மொழி உருவாக்கத்திற்கு, சிங்களவர் தீவின் தெற்குப் பகுதியில் ஒதுங்கி வாழ்ந்ததும் ஒரு காரணம். தனித்தப் புழங்கிய மொழி நாளடைவில் தமிழிலிருந்து பெருவாரியாக மாற்றம் பெற்று, சிங்களம் எனும் புதுமொழியாக மாற்றம் பெற்றிருக்க வேண்டும். கரையர் கரவ எனவும், பறையர் பெரவ எனவும்,பேட்டை பெற்றா எனவும், ஈழவர் நளவர் எனவும், பண்ணை பண்ணா எனவும், தேவர் தேவ எனவும், பணிக்காரன் பணிக்கி எனவும், கோட்டை கோட்டி, கொட்டா, கொடா எனவும் சிங்களத்தில் மருவியருப்பதே போதுமான சான்றுகளாகும். பெருவாரியான சிங்களச் சொற்கள் முதல் பார்வையிலேயே தமிழின் திரிபு என அறியத்தக்க விதத்திலேயே அமைந்திருப்பது கண்கூடு.

இலங்கைத் தீவு மலைநாடென்பதால் இயல்பாகவே சேரத்தோடு நெருக்கம் கொண்டிருப்பது இயற்கை. அதற்கேற்ப மலையாளத்தோடு இலங்கை மிக்க உறவுள்ளதாய் இருப்பதும் ஒப்பு நோக்கத்தக்கது. குறிப்பிடத்தக்க அளவில் மலையாளப் பண்பாடும் ஸ்ரீலங்காவோடு இரண்டறக் கலந்துள்ளதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

ஈலம் எனும் பெயர் பொதுவாக கடற்கரைப் பகுதிகளிலேயே வழங்கி வருவதால், அது தாழ்நிலம் எனும் பொருளிலேயே வழங்குவதாகக் கொள்வதே சிறந்த முடிவாகும். இலாம், இலம், ஈலம் என்பது தமிழ் மொழியில் புழங்கும் பள்ளம் என்பதன் திரிபாகக் கொள்வதும் சாலச் சிறந்தது. ஈழவர் - பள்ளவர்.

இசுரேல் நாட்டின் தென்முனையில், அகபா (agaba) குடாவில் அமைந்துள்ள நகரம் இலாட் - eilat. அருகிலேயே இலோட் - eilot எனும் ஊரும் குறிப்பிடப்பட்டுள்ளது. இலாட் - ஒற்றைப்படைப் பெயராம், இலோட் - பன்மைப் பெயராம்.

ஈப்ரு மொழியில் அலியாக் - Aliyah எனில் மேலே அதாவது - going up. அலி - உயர்ந்தவர். ஒப்பு நோக்க - அமின். அமீன் - amen – உயர்ந்தவர். அல் அமீன் - வானம், மேலே, உயர்ந்த, உலகம், மேலுலகம். அல்அமீன் - மிக உயர்ந்தவர் எனில் பொருத்தமுடையதே. அதாவது கடவுள், அரசர் போன்று.

அல் - AL - உயர்ந்தது, மேலள்ளது எனில், இல் IL, EL தாழ்ந்தது, கீழுள்ளது. தமிழின் மேலே கீழே போன்று, மலையும் மடுவும் போல. மலை - உயர்ந்ததது, உயரமானது, மேலானது. மடு - பள்ளம் - தாழ்ந்தது, பள்ளமானது.

EL - வானம், மேலே, உயர்ந்தது. எல் - தேவர், கடவுள். அல் - குறைவு. தாழ்ந்தது.

சற்றே குழப்பமாக உள்ளதல்லவா? மேற்கின் சொற்கள் பல்வேறு மொழிகளில் புழங்குவதால், பல்வேறு விதங்களில் பொருள்கொள்ளப்படுகிறது. இந்தச் சொல்லுக்கு இன்னதுதான் பொருள் எனச் சுட்டமுடியாது போலும். தமிழக்கும் இது பொருந்தும்.

கடி - கடித்தல், விரைவு, மிகுதி.

கடி என்னும் உரிச்சொல் காவல், கூர்மை, விரை (வாசனை), விளக்கம் (பிரகாசம்), அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஆர்த்தல் (ஒலித்தல்), வரைவு - (நிக்கல்), மன்றல் (திருமணம்) மற்றும் கரிப்பு அகிய பதின்மூன்று பொருள்களை உணர்த்தும். எனவே கடி எனும் சொல் ஒரு பல்குணம் தழுவிய உரிச்சொல்லாகும்.

அல்லில்லா - எனில் அல் இல்லாத எனப் பொருளா? என்னில் அது அழகிய தமிழ்ச் சொல்லல்லவா. அல்லா - அல் இல்லாதவனாமே. குற்றம் குறை இல்லாதவனோ? தாழ்ச்சி இல்லையோ? அல் - இருள். என்னில் இருளற்றவனோ.

இந்த மேலே - கீழே, உயரம் - தாழ்வு, வானோர் - கீழோர், மலை - மடு, பள்ளம் - மேடு எனும் தமிழ்ச் சொற்கள் மேற்கு ஆசியாவின் அத்தனை மொழிகளிலும் அப்படியே வழங்கி வருவது மிகவும் வியப்பானது. அதே பெயரில், அதே பொருளில், அதே உச்சரிப்பில், தற்காலத்திலும் புழங்கி வருவதைக் கற்றறிந்த தமிழர் எடுத்துரைக்கத் தவறிவிட்டார் என்பது திண்ணம். எடுத்துரைக்கத் தவறினாரா அல்லது வேண்டுமென்றே தவிர்த்தாரா என்பது ஐயப்பாட்டிற்குரியது. ஏனெனில் பள்ளம், குளம் என்பது பள்ளர் சாதியோடு தொடர்புடையது என்பது திண்ணம். மேற்கு ஆசிய நாடுகளிலும், கிரேக்கம், இத்தாலி, ஸ்பெயின் மற்றும் அய்ரோப்பிய நாடுகளிலும் தற்காலத்திலும் அதே பெயரில், அதே பொருளில் வழங்கி வரும் ‘‘பள்ளன்’’ பெயரை அறியாமல் இருந்தாரா என்பது ஐயப்பாட்டுக்கு இடமளிப்பதுதான்.

உதாரணத்திற்கு பல்கேரிய நாட்டின் பிளவன் (Pleven) மாகாணத்தின் பெயரைக் காணும் தமிழருக்கு ஏன் அது பள்ளன் எனத் தோன்றவில்லை? பல்கேரியா என்பதே பள்ளமான நாடுதானே. எனில் தமிழரைப் பொருத்தவரை அது பல்கேரியா அல்ல அது பள்கேரியா. பல்கேரியா - பள்கேரியோ - பள்ளர் வாழ்ந்த இடம். மலை நாடு என்பதால் பள் சேர நாடு. பள் - தொன்மையான. எனில் தொன்மையான சேர நாடு எனும் பெயர் காலப்போக்கில் பல்கேரியாவாக மாறிவிட்டதோ.

பள் என்பதைப் பள்ளம் எனக் கொண்டால் ஏரி என்பதை பெரிய குளம் எனக் கொள்வது சரியே. பல குளங்களை, ஏரிகளைக் கொண்டது பல்கேரியா. ஏரியா (area) என்பதை நிலம் எனக் கொண்டால் பள்ளமான நிலப்பகுதி பள்கேரியா.

பள்கேரியா பள்ளமான நிலம்தானா? ஆம். பல்கேரியாவின் பால்கன் மலைமுகட்டிற்கு கீழேயுள்ள பகுதிகள் பள்ளமானவையே. அதென்ன பால்கன் - Balkan. பால்கன், பால்கன் தீபகற்பம் என்பது அய்ரோப்பிய நிலத்தின் தென் கிழக்கு பகுதிக்குப் பெயர். பல்கேரிய - செர்பிய எல்லை தொடங்கி, கருங்கடல் வரையிலான பகுதி பால்கன் பகுதி. பால்கன் தீபகற்பம் மேற்கில் அட்ரியாட்டிக் கடலாலும், தென் கிழக்கில் அயோனியன் கடலாலும், தெற்கு மற்றும் தென்கிழக்கில் கருங்கடலாலும் சூழப்பட்டுள்ளது. பால்கன் மலைத் தொடரின் உயர்ந்த சிகரமாக 9596 அடிகள் உயரமுள்ள முசலா - musala குறிப்பிடுகிறது. அதென்ன முசலா? மலை - மலா - முலா - முசலா? முசல் - உயரம், முயல் - இலக்கையடைய முயற்சி செய். இலக்கு - தூரம், உயரம். தமிழின் முகடு முசலாகிவிட்டதோ? முசலா எனில் ஒட்டமான் காலத்திய துருக்கிய மொழியில் கடவுளுக்கு நெருக்கமான, தொழுகைக்கான இடம் எனப் பொருளாம். முசலா சல்லா -Salla எனும் வேரிலிருந்து வந்த சொல்லாம். சல்லா எனில் தொழுகைக்கு -To pray, தொழுக்கைக்கான இடம். ஒரு வேளை சல்லா என்பதை மேற்கூரை எனக் கொண்டால், முசலா கூரையுள்ள, உயர்ந்த மலை எனும் பொருள் கொண்டதாகிறது.

பால்கன் பெயரிலிருந்து பல்கேரியன் எனும் பெயர் வந்ததாம். பல்கர்கள் - bulgars எனில் துருக்கிப் பகுதியில் வாழ்ந்த போரிடும் நாடோடி இனக்குழுவாம் - The bulgars also bulghars, bulgari, bolgars, bolghars, bolgari were Tukie semi - nomadic warrior tribes that flourished in the pontie, Caspian steppe and the

Volga region during the 7th century- போல்கர்கள் வோல்கா புல்வெளிப் பகுதிகளில் ஏழாம் நூற்றாண்டில் செழித்திருந்தார்கள்.

போல்கார்கள் என்பதை பொலிகர்கள், பொல்கர், பல்கர் எனக் கொண்டால். பளிகர்கள், பாளையக்காரர்கள் எனக் கொண்டால்? பாளையம் - நிலம், ஆட்சிக்குப்பட்ட நிலம். பாளையக்கார் - ஆட்சியாளர். பாளையம் - தமிழ்ச்சொல்தானே? போல்கார்கள் என்பதை பால்கர்கள், பல்லவர்கள் என்பதோடு ஒப்பிட்டால், பெயர்ப் பொருத்தமும், மேய்ச்சல் நிலமும், குறும்பர்கள் பெயரும் பொருத்தமுடையதாகவே தோன்றுகிறது. எனில் வோல்கா என்பதே பால்கா, பல்கா, பல்லா என்பதன் திரிபாக இருந்திருக்கும். பால்கா, பலுக்கா - பெரிய. பெரிய ஆறு. தமிழருக்கு எங்கிருந்தாலும் மேடான பகுதி மலைதான். பள்ளமான பகுதியெனில் அது பள்ளம்தான். ஆறுகள் பள்ளத்தை நோக்கியே ஒடிவரும் என்பதால் பள்ள என்பதே ருஷ்ய மொழியில் வோல்கா - அதாவது பள்ளமான ஆறு எனப் பெயர் மாற்றம் பெற்றிருக்க வேண்டும்.

உண்மைதானா என்பதற்கு பல்கார்கள் பின்பற்றிய மதம் ஆம் எனும் பதிலையே சான்றாக்குகிறது. துருக்கி, மங்கோலியா, அங்கேரி போன்ற நாடுகளில், குறிப்பாக மத்திய ஆசிய நாடுகளில், புகழ்பெற்றிருந்த மதமாக தங்கிரினிசம் - Tangrinism சுட்டப்படுகிறது. துருக்கியில் துருக் தாங்கிரிஸ் -Turuk Tangris - அதாவது துருக்கியின் கடவுள் - god of turke. சீன மாண்டரின் மொழியில் டியன் - Tian. அதாவது வான் கடவுள். தியன் - வானம். ஜப்பானியத்தில் தென் -Ten.

தெங்ரி மத்திய ஆசியப் புல்வெளிகளின் அரச குடிகளால் ஆறு மற்றும் ஒன்பதாம் நூற்றாண்டுக் காலத்தில் வணங்கப்பட்ட முக்கியக் கடவுள் - Tengiri - chief diety worshipped by the ruling class of the central asian steppe peoples in 6th to 9th centuries. This religion declained due to manichenism in 8th centuary - எட்டாம் நூற்றாண்டின் மணிச்சயிச மதத்தால் இது மறைந்துபோனது.

யார் இந்த தெங்ரி - Tengri? துருக்கியில் தன்ரி, தங்ரி – Tanri. தொல் துருக்கியில் தென்ரி -Tenri. மங்கோலியத்தில் இங்ரி - Tngri. Tengri was known to make plants grow and lighining flask - தெங்ரி தாவரங்களை வளரச் செய்வதற்கும், மின்னலுக்கும் அறியப்பட்டவர். எனில் மழைக்கடவுள். Tengiri -

Ingiri - Indri - இந்திரன். இந்திரனைத்தான் இந்ரி, இங்ரி, தெங்ரி என அழைத்திருக்கின்றனர் மத்திய ஆசியாவினர். அதாவது வானக்கடவுள், பெரிய கடவுள் எனும் பொருளில் இவ்வாறு இந்திரன் வணங்கப்படுகிறார்.

Tengrism was brought to easter Europe by Bulgars - பல்கார்களே கிழக்கு ஆசியாவிற்கு இந்திர சமயத்தை கொண்டு சென்றனர். Tengrism played large role in Mongol Empire - மங்கோலிய அரசுமரபில் இந்திர சமயம் மிகப் பெரிய முக்கியத்தவம் பெற்றிருந்தது. பின்னர் புத்த மதத்தோடும் தொடர்புடையதாகியது.

பல்கார்களை பல்லவர்கள் எனக் குறிப்பிடலாமல்லவா? பல்லவர்களுக்கு பக்லவர்கள் எனும் பெயரும் சுட்டப்படுகின்றதல்லவா. இருவரும் இந்திர மரபைத் தாங்கியவர்கள். பல்லவர்கள் பயிர்த் தொழிலில் சிறந்திருந்தவர் எனில் போல்கர்கள்? பல்கேரியாவின் வடக்கு எல்லையில்தான் புகழ்பெற்ற டான்யூப் பேராறு பாய்கிறது. அங்கே அமைந்திருப்பதுதான் பெலவன் மாகாணம் எனில் அதை பள்ளன் மாகாணம் எனக் குறிப்பிடுவதே பொருத்தம்.

Ministry of Agriculture, Food and Forests in Bulgaria - வெளியிட்டுள்ள பல்கேரியாவில் நெல் உற்பத்தி, வணிகம் மற்றும் ஆதரவு - Rice production trade and support in Bulgaria - May 2017 இன் படி, பசர்டிக் - Pazardzhik, பிலோவ்டிக் - Plovdic மற்றும் ஸ்தர ஸகோர - Stara Zagora மாகாணங்களில் அதிகளவு நெல் உற்பத்தி நடைபெறுகிறது. ஆண்டிற்கு 65-70 ஆயிரம் டன்கள் நெல் விளைகிறது. பல்கேரியாவில் பண்ணைகள் உள்ளன. பண்ணைகள் சராசரியாக 150 ஏக்கர்கள் கொண்டவை. பல்கேரியர்களின் வருட நெல் நுகர்வு 32-35 ஆயிரம் டன்கள். ஒரு வருடத்தில் ஒரு பல்கேரியர் எடுத்துக்கொள்ளும் சராசரி அரிசி ஆறு முதல் ஐந்து கிலோ.

பிலோடிக் மாகாணத்தில் மட்டும் 51 நெல் பண்ணைகள் அமைந்துள்ளன. அரிசி ஆலைகள் 13 உள்ளன.

அதென்ன பிலோடிக் மாகாணம்? Pazardzhik பள்ளர் குடியோ? பிரோடிக் மாகாணத்திற்கு தெற்கே, கிரேக்க எல்லையில் ஸ்மோல்யன் - Smolyan - மாகாணம் உள்ளது. வடக்கே லோவெக் மாகாணமும், அதற்கும் மேலே பலிவனும்

உள்ளன. பிலிவன், துரோயன் - troyan-, டெடிவன் - teteven, இடிமன் - ihtiman, தேவின் - devin போன்ற பெயர்கள் சுட்டுவது எதை? அன் என முடிவது தமிழில் மட்டுமே எனத் தெரிகிறது. தமிழில் குமரா எனச் சுட்டமாட்டார்கள். அது குமரன் எனவே சுட்டப்படும்.

பல்கேரியா நெல்லோடும், நெல் நாகரிகத்தோடும் தொடர்புடையதெனில், கிரேக்கம்? துருக்கி? மால்டோவா? லெபனான்? இசுரேல்?

பாலத்தீன் பள்ளத்தீனோ? லெபனான் லெபள்ளனோ? லே - தாழ்ந்த நிலம். ஒப்பு நோக்க லேக் - ஏரி, பள்ளம். லெபல்லம் - லேபள்ளம் - பள்ளமான நிலம். லெபனான் பள்ளத்தில்தானே - labanon valley அமைந்துள்ளது. புகழ்பெற்ற தொல் நகரான பாப்லோஸ் பள்ளோசோ? எனில் பாபிலோன் பள்ளன் நிலமோ? உண்மையெனில் கிரேக்கத்தின் புகழ்பெற்ற கெல்லினிஸ், பல்லினிஸ் தான். தமிழின் பகரம் - கன்னட ககரம் - என மாறியது போல், மத்திய ஆசியாவின் ரகரம் - கிரேக்கத்தில் னகரம் எனவும் மாற்றம் பெற்றிருக்கக்கூடும். அது ககரம் எனவும் மாற்றம் பெற்றிருக்கக் கூடும். கிரேக்கத்தின் பல்ல, பல்லடின் போர் வீரனன்றோ. உண்மையெனில் இசுப்பானியத்தின் பிலிப் - Philip பெலிப், பலிப், பள்ளிப், பள்ளன் என வரும். பைபிள் - bible பெலிப், பெல்லோப், பள்ளோப், பள்ள. உண்மையெனில் அல்லா யார்? ரமல்லா யார்? இடமா? பெயரா? இடமெனில் Ramallah என்பதன் பொருளென்ன? பொல்லா யார்? முல்லா பல்லா எனில் பெல்லா யார்?

பால்கன் எனில் ஒட்டாமன் காலத்திய துருக்கி மொழியில், மரங்களடர்ந்த மலைத்தொடர் என அர்த்தமாம் - chain of wooded mountains. இது ஏற்கத்தக்கதல்ல. காரணம் பால்க் - baalk என்பதற்கு பெர்சிய மொழியில் சேறு - mud எனப் பொருளாம். துருக்கியத்தில் அன்கோ என்பதற்கு காடு எனப் பொருளாம். பால்கன் எனில் swampy forest அதாவது சேறான காடு, சதுப்பு நிலம் எனப் பொருள் கொள்வது பொருத்தம்.

பெர்சியத்தில் பலா - balaa என்பதற்கு பெரிய எனப் பொருள் சுட்டப்படுகிறது. Bala khaana எனில் பெரிய, உயர்ந்த வீடாம். கானா என்பதை கானகம், காடு எனக் கொண்டால் பெருங்காடு என்றாகுமல்லவா. பெருங்காடு கொண்டது பல்கேரியா.

பல்கேரியர்களின் பல்கார் - bulgar மொழியில், மலியா - Rumalia எனில் மலையாம். (ருமனியா - மலை நாடோ). அல்பேனியத்தில் பிண்டுஸ் - Pindus எனில் மலையாம். (கோண்ட், கோண்டுஸ் - மலை). மலைக்கு Ceraunian எனவும் ஒரு சொல் சுட்டப்படுகிறது. (சேரனோ?). அல்பேனியத்தின் கொரப் - korab மலைக்கு, அல்பேனிய மொழியில் mali i korabit. குறிஞ்சி மலையோ. mali - மலை. korab - குறவோ. குறிஞ்சி - மலை). கொரப் மலைத்தொடர் vargu lindor எனவும் அழைக்கப்படுகிறதாம். ஒருவேளை vargu - மேற்கோ? எனில் மேற்குத் தொடர்ச்சி மலைகளோ (lindor - link - chain - தொடர்).

Bulgars என்பதைப் பெரியவர்கள், உயர்ந்தவர்கள் எனக் கொண்டால், மலை நாட்டுக்காரர்கள் எனும் பொருள் கிடைக்கிறது. எனில் பால்கன் மலைக்காரர்கள் குறிஞ்சிக்காரர்கள். அவர்களே Korga - குறவர்கள். பயிர்த் தொழில் செய்தவர்கள் மருதர்கள். தமிழ் நிலம் போன்றே அங்கும் ஐந்திணைக் கோட்பாடு உருவாகியிருக்கலாம். அதைவிட அங்கு முன்னைத் தமிழர்கள் பரவி, தமது மொழியையும், பண்பாட்டையும் பரப்பினர் எனக் கொள்வது பொருத்தம். எனில் முன்னைத் தமிழர் அங்கு எங்போது சென்றிருப்பார்?

பல்கேரியாவில் 681இல் தோன்றிய முதலாவது பல்கேரியப் பேரரசு (7 - 11ஆம் நூற்றாண்டுகள்) பல்கள் குடிகளால் எற்படுத்தப்பட்டது. பல்கேரியப் பேரரசு போன்றே, வோல்கா நிலத்திலிருந்த பல்கேரியர், வோல்கள் பேரரசை நிறுவினர். தற்காலத்திய தெற்கு உக்ரைன் மற்றும் தென்மேற்கு ரசியா நிலத்தில், டிரிஸ்டர் மற்றும் கீழ்வோல்கா ஆறுகளுக்கிடையான பகுதியில் தோன்றிய பல்கேரியப் பேரரசு (ரேச - 668) சிறந்த பல்கேரியா - Great Bulgaria or old great Bulgars என அழைக்கப்படுகிறது. துருக்கிய வரலாற்றில் ஒனோகுர்குகள் - Onogurs என அறியப்படும் இந்த பல்கோ - வோல்கோ பேரரசு, பைசாந்தியப் பேரரசின் அறிந்தேற்றம் பெற்றிருத்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. பைசாந்தியக் கிரேக்கத்தில் பலையா மெகால வுல்காரியா - palaiaa megaala voulgaris) என அறியப்பட்ட இப்பேரரசு லத்தீனில் மேக்னா - Magna பல்கேரியா எனவும் சுட்டப்பட்டிருக்கிறது. palaiaa - பழைய எனச் சுட்டலாம்தானே. – megaala – மலையோ.

மத்திய உக்ரைன் பகுதியில் பாயும் வோர்க்ஸ்லா - vorskla ஆற்றின் கரையிலுள்ள ஒரு நகருக்குப் பெயர் பொல்டாவா - poltava. வோர்க்ஸ்லா என்பதே ஆறு எனும் ஒலிப்பில் வருவது கவனிக்கத்தக்கது. (வோர் - ஆறு). பொல்டாவா படை வில் அம்புக்குப் பெயர் பெற்றதாகச் சுட்டப்படுகிறது. எனில் வில்படைதானே. வில் - பெல் - பொல் என மாறலாம்தானே.

பால்கன் போன்றே, ஐரோப்பாவின் வடக்கில் அமைந்திருக்கும் பால்டிக் - Baltic கடலைச் சுற்றிலும் பல நாடுகள் பல் எனும் ஒட்டைக் கொண்டு அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. உதாரணமாக பெலாரஸ், பெல்ஜியம், போலந்து, லிதுவேனியா, லேட்வியா, பின்லாந்து, ஆலந்து.

வடக்கு அங்கேரியிலும், தெற்கு சுலோவாக்கியாவிலும் வாழும் மக்கள் பலோக் -Palooc மக்கள் என்றே குறிப்பிடப்படுகின்றனர். சுர், குர் - gur என்பதை ஊர் எனக் கொண்டால், பல்க்கர் - பல்க்கூர். பல் , ஊர் - பள்ளர் ஊர் - பள்ள ஊர் - பள்ளூர் - பளோர் - பளோக் எனத் திரிந்திருக்குமோ? எனில் தமிழகத்திலிருக்கும் போளூர்?

பல்கேரியா என்பதை பால் கேரியா எனவும் பொருள் கொள்ளலாமே. பால் அதிகமிருக்கும் நாடு. பால்கேரியா - பல்கேரியா. முல்லை நிலம். குறிப்புகள் அவ்வாறு இல்லை என்பது கருதத்தக்கது.

பள் எனும் ஒற்றைச் சொல்லை வைத்துக் கொண்டு உலகினர் அனைவரையும் அடையாளம் சுட்ட முடியுமா? பள் எனும் ஒரு வேர்ச் சொல்லைக் கொண்டு உலகின் வரலாற்றை, மானுட வரலாற்றைக் கண்டறிய முடியுமா? ஒற்றை மரபணுவை வைத்துக்கொண்டு மனிதப் பரிணாமத்தை, மனிதப் பரவலை, மனித உறவைக் கண்டறிய முடியுமெனில், ஒற்றைச் சொல்லைக் கொண்டு ஏன் முடியாது?

பள் எனில் பள்ளம். பள்ளத்தில் வாழ்பவர் பள்ளர். தமிழகத்தில் மட்டும் பள்ளர் அல்ல. உலகில் எங்கு பள்ளத்தில் வாழ்ந்தாலும் அவரும் பள்ளர்தான். பள்ளத்தின் சிறப்பு என்ன? நீர். மழைநீர் தேங்குவது. நீரின்றியமையாத உலகு என்பது மூத்தோர் சொல். மனிதக் குடியிருப்பிற்கு மிகவும் அத்தியாவசமானது நீர். நீர் எங்கு தாராளமாகக் கிடைக்கிறதோ அங்கே மனிதர் செழித்து வாழ்வார். திரளாக வாழ்வார். மனிதர் எப்போது ஊராகத் திரண்டு வாழ்கிறாரோ அப்போதே

அவர்களுக்குள் பல்வேறு விதமான தொடர்புகள் பரிமாற்றங்கள் ஏற்படும். மலையில் நீர் தேங்காது. பாய்ந்தோடி கீழே வரும். கீழே தேங்கும், ஓடும், பரவும் நீரைக் கொண்டு, தாவரங்கள், விலங்குகள் பல்கிப் பெருகும். அவற்றை உணவாக்கி மானுட சமூகமும் பலவாகப் பெருகும்.

அறிவியலின்படி, மனிதத் தோற்றத்திற்கு அடிப்படை கடல்கள். அவை பெரும் பள்ளங்களன்றோ. அன்று பூமியில் கொட்டிய அத்தனை மழைநீரையும் தேக்கிக் கொண்டவை இந்தப் பெரும் பள்ளங்களல்லவா. பரிணாமக் கொள்கையின்படி, கடலிலிருந்தே முதல் உயிரிகள் தோற்றம் பெற்றன. அதனால்தான் பாரத நிலத்தார் கடலில் நீராடுவதையும், கடலில் நீத்தார் சடங்காற்றுவதையும் பழக்கமாக்கிக் கொண்டுள்ளார். கடல்களே ஆறுகள் என்னில் தத்தவார்த்த ரீதியில் சரியே. கடல்நீரே ஆவியாகி, மேகமாகி, குளிர்ந்து, மழையாகிப் பூமியில் கொட்டுகிறது, துருவங்களில் பனியாகப் பொழிகிறது.

மானுடத்தின் பண்பாட்டு வரலாற்றில், ஆதியில் தோன்றியது தமிழ் எனில், அதன் வேர்கள் உலகின் அத்தனை பகுதிகளிலும் பரவியிருத்தல் வேண்டும். எனில் தமிழின் சொற்கள் அவ்வப்பகுதிகளில் திரிந்தும், மாறியும், பிறிதாகியும் வழங்குதல் முறையே. முன்னை மொழி தற்போதும் அப்படியே இருக்காது. மொழியியல் கோட்பாடுகளின்படி, இவ்வாறான திரிபு அருகாமையில் குறைந்தும், தூரத்தில் சற்றே மாறியும், தொலை தூரத்தில் சிதைந்தும் வழங்கி வருதல் இயல்பே.

மொழி மாறினாலும் அதன் பேர், வேர்ச்சொல், வேர்த்தன்மை மாறாது. வியப்பிற்குரியதுதான் இது. உதாரணமாக பள்ளம். உலகெங்கும் நீர்தேங்கும் நிலம், பகுதி, பள்ளம் எனும் பொருளிலேயே தற்போதும் ஆளப்படுவதன் காரணம் என்னவாக இருக்கும்? காரணம் என்னவாக இருக்க முடியும்? உலகின் அனைத்துப் பகுதிகளிலும் ஒரே நேரத்தில் தமிழ் தோன்றியதென்றும், அனைத்து இடங்களிலும் பள்ளத்தைக் குறிக்க, பள்ளம் எனும் சொல்லையேக் கண்டறிந்தனர் என்பதும் ஏற்புடையதல்ல. எனில் தொல்காலத்தில் தமிழ் பேசிய மானுடர், உலகெல்லாம் பரவியிருந்தார் எனக் கொள்வதே சாலச்சிறந்தது. ஆம் எனில், பள்ள எனும் சொல் பள்ள, பல, பல்ல, மல்ல, முல்ல, பில்ல, ∴பில்லா, பில, புல, புல்ல, புள்ள, குள, குள்ள, கள்ள, கள எனப் பலவாறாகப் பிரிந்திருப்பினும் அதன் லகரம் - ட வேர்ச்சொல் ஒருபோதும் பிரிவதே இல்லை. ஒரு நீர் நிலை தமிழில் குளம் எனச்

சுட்டப்பட்டாலும், பிறிதொரு மொழியில் குல்ல எனச் சுட்டபட்டாலும், அது ஒன்றேதான், ஒரே பொருளைக் குறிப்பனவேதான்.

தமிழில் பள்ளி என்பது இடத்தைக் குறிக்கும். அது லி -ly என வழங்கலாம். பிலி - Ply என இருக்கலாம். போல் - pol என மருவலாம். எனினும் இல் - ட இடம் பெற்றே தீரும்.

உதாரணமாக, துருக்கியின் தலைநகரான தற்போதைய இஸ்தான்புல் மாநகர். இஸ்தான்புல் - istandbul எனில்? புல் என முடிவதாலும் அது நகரமாக மக்கள் வாழும் இடமாக இருப்பதாலும், புல்லை தமிழின் பள்ளியோடு தொடர்புபடுத்தலாம். உறுதிசெய்ய, அந்நகரின் பழைய பெயரை, இதற்குமுன் அந்நகரக்கு வழங்கப்பட்ட பெயர்களை அறியவேண்டும். இஸ்தான்புல்லின் முன்னைய பெயர் கான்ஸ்டைன்டைன் அது கிழக்கு உரோமப் பேரரசின் கான்ஸ்டான்டைன் பேரரசரின் பெயர். அவர் பெயராலேயே அந்நகரம் சுட்டப்படுகிறது. அவரது காலத்தில் அந்நகரின் பெயர் கான்ஸ்டாண்டி நோபிள். கான்ஸ்டான்டின் - அரசர். எனில் பிள்? அது பிலிஸ். அதாவது பொலிஸ் - polis எனும் கிரேக்கச் சொல்லின் மருவு. பிலிஸ் - பொலிஸ். பொலிஸ் -Polis எனில் கிரேக்க மொழியில் நகரம் எனப் பொருள். அறிய வேண்டியது பொலிஸ் எனும் கிரேக்கச் சொல்லுக்கும், பள்ளி எனும் தமிழ்ச் சொல்லுக்குமான உறவென்ன? தெரிய வேண்டியது கிரேக்கப் பொலிஸ் தமிழில் பள்ளியாகியதா அல்லது தமிழ் மொழியின் பள்ளி கிரேகத்தில் பொலிஸ் ஆகியதா என்பதே? கிரேக்கத்தின் எஸ் - சொல்லை நீக்கிவிட்டால் அது பொலியாகி விடுகிறது. பள்ளி - பளி - பொளி என்பது யாவரும் ஏற்கக் கூடிய ஒரு திரிபே. உண்மையா என அறிய தற்போதும் அச்சொல் அதே பொருளில்தான் வழங்கப்படுகிறது என்பதை அறிய வேண்டும்.

பள்ளி என்பது தமிழில் பல்வேறு பொருளில் அறியப்படுவது போலவே, கிரேக்கத்திலும் பள்ளி, பள்ள, பள்ளர், மள்ள, மள்ளன் எனும் சொற்கள் அதே பொருளில் அதேவிதத்தில் கையாளப்படுவது வியப்பு. கிரேக்கத்தில் பள்ளாடின் - pallardin படைவீரன். பலான்ஜ - phalanx- படை அணி - battalion. பலான்சர் - படைவீரர். அதுவே எசுப்பானியத்தில் ப்பாலன்கா - Falanga.

தமிழகத்தில் வாழும் பள்ளர் அலெக்சாந்தர் படையெடுப்பின்போது வந்தவராம். இப்படியும் சில பதிவுகள் முக்குலத்தவரால் பதிவிடப்பட்டுள்ளன. எனில் அக்கூற்றின் உண்மைத்தன்மையென்ன? தமிழகத்தில் வாழும் ஒரு குறிப்பிட்ட மக்களுக்கு மட்டுமே தற்போதும் பள்ளர் எனும் பெயர் சுட்டப்படுகிறது. (எமது சாதிச் சான்றிதழில் பள்ளன் என்றே சுட்டப்பட்டுள்ளது. 'ன்' என்பதை 'ர்' என அதாவது பள்ளர் என எமது மகனுக்கான சாதிச் சான்றிதழ் விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்தோம். வட்டாச்சியர் அலுவலகத்தில் எமது முதுநிலை மாற்றுச் சான்றிதழில் பள்ளன் 'ன்' என்றுதான் குறிப்பிடப்பட்டள்ளதாகக் கூட்டிக்காட்டி, மகனுக்கும் 'ன்' விகுதியோடே சான்றிதழ் தரப்பட்டுள்ளது. பள்ளன் என்பதை பள்ளர் என மாற்றினால் மரியாதை கிடைத்துவிடுமாம். கேள்வி - ஏன் தமிழக அரசு எந்தச் சாதிக்கும் 'ன்' விகுதி போடக்கூடாது என அரசாணை வெளியிடவில்லை) எமக்குத் தெரிந்து பள்ளி எனும் பெயரில் யாருக்கும் சாதிச் சான்றிதழ் வழங்கப்படுவதில்லை. அவர் சாதிச் சான்றிதழ் வன்னியகுல ஷத்திரியர் என்றே சுட்டுகிறது. வேறு எந்தச் சாதிக்கெல்லாம் 'ன்' விகுதி சேர்க்கப்படுகிறது தமிழகத்தில்?

ஆர்வமானதொன்று, அலெக்சாந்தர் காலத்தில் வந்திருப்பினும், அடிமையாகவே கொண்டுவரப்பட்டனராம். கிரேக்கத்தின் பள்ள, சொல்லிற்குப் பல்வேறு பொருளிருக்க, அடிமை என்பதை மட்டும் சுட்டுவானேன்? பள்ள, பள்ளர் போர்த்தொழிலோடு தொடர்பு கொண்டிருக்கிறது என்பது சான்று. தமிழகத்திலும் ஒரு காலத்தில் பள்ளர், மள்ளர் எனும் பெயரில் போர்ச்சாதியாகவே அறியப்படுவதும் ஒப்பு நோக்கத்தக்கது.

அவ்வாறெனில் எப்படி இந்த ஒற்றுமை? இரண்டும் தொல்குடிகள் எனில் மிகப் பழங்காலத்திலேயே ஒன்றையொன்று அறிந்திருந்தனவா? அல்லது ஓரிடத்திலிருந்து பிரிந்து இரண்டும் வேறுவேறு பாதையில் பயணித்தனவா? இருவரும் நெருங்கிய உறவுடையவரெனில் எதனை முன்னிட்டு அந்த உறவு? நெல்லை முன்னிட்டா? எனில் தற்போதும் தமிழகத்தில் பள்ளர் பயிர்த்தொழிலுக்கு குறிப்பாக நெல் பயிரிடும் தொழிக்கு சிறப்புப் பெற்றுள்ளனர். ஆம் எனில் கிரேக்கர்? அவர் தற்போதும் நெல் பயிரிடுகிறாரா? கிரேக்கம் சிறு நிலமன்றோ? அங்கே பெரிய அளவில் பயிர்த்தொழில் வளர்ந்திருக்க வாய்ப்பில்லையல்லவா? எனில் முன்னர் சிறப்பாக நெல் விளைந்த மண் இருவருக்கும் பொதுவானதாக இருக்கக் கூடும்.

கிரேக்கர் முன்னர் நெல்லோடு பண்பாட்டுறவு கொண்டிருந்தார் எனில், அது தற்போதும் எதேனும் ஒரு முறையில், வடிவத்தில் முன்னெடுக்கப்பட்டே வரும்.

இருவருக்கும் நெல் நாகரிகத்தால் உறவில்லை எனில் சமயத்தால்? தமிழகப் பள்ளருக்கும் கிரேக்கத்திற்கும் இந்திரனைக் கொண்டு உறவுள்ளதை அறியலாம். இருப்பினும் அவர் வானத்துக் கடவுளை, மழை இடி மின்னல் அதிபதியை ஜுயுஸ் எனக் குறிப்பிடுகிறார். இந்தியப் பள்ளரோ இந்திரன், தேவேந்திரன் என்கிறார். இரு நிலத்திலும் இந்திரனின் மேன்மை, குணம் ஒன்று போலவே இருப்பது கவனிக்கத்தக்கது. ஜுயுஸ் என்பது தியஸ் - தேவஸ் - தேவ என்பதன் திரிபல்லவா.

தமிழ்ப் பள்ளரும் கிரேக்கப் பள்ளர் மரபும் மொழியால் தொடர்புகொண்டவையா? தற்போதும் அத்தொடர்பை அறிய முடியுமா? மொழி, பண்பாடு, சமயம் உட்பட அனைத்திலும் பழைய கிரேக்கம் பெருமளவில் மாறிவிட்டது. இன்றிருப்பதோ அதி நவின கிரேக்கம். தமிழ் பள்ளரின் தொல் தமிழோ சிறிதளவே மாற்றம் கண்டுள்ளது. தமிழ்ப் பள்ளர் கிரேக்கப் பள்ளாவைவிட தமது மொழியில், மொழிப் பற்றில் சிறந்திருக்கிறாரல்லவா.

இருவரது மொழியும் ஒரு பொதுவான இடத்திலிருந்து தோற்றம் பெற்றிருக்கலாமோ? எனில் இருவருக்கும் இடையிலிருப்பது அரேபியா. குறிப்பாக மத்திய ஆசியா. மத்திய ஆசியாவின் மொழியைப், பண்பாட்டை அறிவது, தமிழுக்கும் கிரேக்கத்திற்குமான உறவை விளக்கப் போதுமானதா? ஆம் போதும். இலத்தீனத்தோடும், பிரெஞ்சு, ஸ்பானியத்தோடும் ஒப்பிட்டுப் பார்க்கத் தேவையில்லை. பின்னவை கிரேக்கத்தோடு, கிரேக்கத்திலிருந்து கிளைத்தவை, கிரேக்கத்தோடு தொடர்புடையவை என்பதே மொழியியலாளர் முடிவு. எனில் ஆங்கிலம்? அது பின்னை மொழி. செல்டிக் மொழியைத் தொல் மொழியென மொழியறிஞர் ஒப்பமாட்டார். அய்ரோப்பிய மொழிகள் அனைத்தும் பழைய இலத்தீனத்தின் திரிபுகள் என்பதே உண்மை.

கிரேக்கத்தில் நெக்ரோபொலிஸ் எனில் இறந்தோரைப் புதைக்கும் இடம். தமிழில் முன்னர் அதற்குப் பெயர் பள்ளிப்படை. அதாவது தமிழ் மரபில் அரசர்களை, உயர்ந்தோரை நல்லடக்கம் செய்து அங்கே சிறுகோவிலொன்று எழுப்பி, தெய்வமென வணங்குபவர். அந்த இடத்திற்குப் பெயர் பள்ளிப்படை.

இக்ரோபொலிஸ் எனில் கோவில் நகரம். அக்ரோ - கோவில் (அதிலிருந்தே அக்ரஹாரம் எனும் சொல் கிளைத்ததோ?) அக்ரோ எனில் அரண்மனை எனவும் பொருளுண்டு. அரசர் வாழுமிடம். கோவில். பள்ளி. உதாரணத்திற்கு திருச்சிராப்பள்ளி - திருசீரங்கன் பள்ளிகொள்ளும் கோவில் நகரம். பெரிய நகரம். அக்ரகாரம் - அகரம் - முதல் - முதல், முதன்மையான ஊர். பொருத்தமல்லவா.

மெகலோபொலிஸ் எனில் மாநகரம். ஹிலியோ பொலிஸ் - சூரிய நகரம். (ஹிலியோ - சூரியன் - ஒளியோ?)

கிரேக்க பொலிஸ் பல்வேறு அர்த்தங்களில் எடுத்தாளப்படுகிறது. பொலிட்டிக்ஸ் - Politics, பொலிஸ் - police, சந்தை திறந்த வெளி, கோபுரம், கடவுளர் சிலைகள், கோவில்கள், விழாக்கள், நாணயங்கள் எனப் பலவாறாகப் பொருள் சுட்டுகிறது.

கிரேக்கத் தீபகற்பத்திற்கே குறிப்பாக அதன் தென்பகுதிக்கு பெலப்போனிஸ் - Peloponnese peninsula) என்றே பெயர். பெலப்போனிசு - முன்னர் இங்கே வாழ்ந்த தொல் குடிகள். தொல் காலத்தில் பெலிக் திவில் வாழ்ந்த மக்களை, பெலிப் எனும் அரசர் ஒருங்கிணைத்து, பெலிப் அரசுரிமையைத் தொடங்கினாராம். எனில் இக்காலத்தை தமிழரின் முற்காலத்தைய அரச மரபோடு ஒப்பிடலாம். கடற்கரைப் பகுதிகளில் பயிர்த் தொழில் மேம்பட்டதாம். இது அலெக்சாந்தருக்கு முற்பட்ட நாகரிகக் காலம். அலெக்சாந்தருக்குப்பின், அதாவது பொ.ஆ.முன். 323 முதல் 146 வரைக்குமான காலம் ஹெல்லினிஸ்டிக் காலம். அக்காலத்திற்குப்பின் அதாவது, பொ. ஆ. முன்னான 146 ஆம் ஆண்டிலிருந்து கிரேக்கத்தில் உரோமர்களின் ஆதிக்கம் மேலெழுந்தது. கேள்வி முன்னர் இருந்தது பெலினிஸ்டிக் எனில் அதன் தொடர்ச்சி எதனால் ஹெலினிஸ்டிக் - Hellenistic காலமாக மாறியது? பெலன் எப்படி ஹெலன் ஆனது?

தொல் கிரேக்க பெலப்பன், பெலன் அதாவது பலன், பள்ளன் ஹெலனாகி, அவனே மிலனாகவும் எவ்வாறு மாறினான்? மலன், மல்லன், மிலன், மில்லன். ஏன் சொல்லக்கூடாது? பள்ளி palli, Pauli, paul எனில் ஒப்பும்தானே. பால் - paul எனில் தூய்மையானவராம், உயர்ந்தவராம். எனில் பள்ளி - உயர்ந்த இடம், கற்கும் இடம், அறிவைக் கொடுக்கும் இடம், இறைவன் கோவில் கொண்டுள்ள இடம். பள்ளி -

உயர்ந்தவர், அறிவானவர், வீரமானவர். Paul – பால் என்பதை பல், பள் எனக் கொண்டால் தவறாகுமா தமிழர்களே.

Pallares - பள்ளர்கள். பொருளென்ன? எஸ்பெய்னில் அதிகமாகப் புழங்கும் பெயர்களில் ஒன்று.

# கோவிந்தன்!



பள்ளாடின் யார்? Who is paladin?

The paladin is a class of warriors that is fully devoted to kidness and ridding the universe of evil. They are very religious and have an extremely strict honour code as well as a soft spot for children and animals. In combat, a paladin with a cause is almost impossible to defeat - Paladins fear nothing, for Evil fears them.

பள்ளாடின்கள் போர் வீரர்கள். கனிவானவர்கள். கெட்ட உலகத்தை ஒழித்துக் கட்டுபவர்கள். அவர்கள் மதப்பற்றுடையவர்கள். கடமையில் கருத்தானவர்கள். குழந்தைகளையும் விலங்குகளையும் நேசிப்பவர்கள். போரில் அவர்களைத் தோற்கடிப்பதென்பது இயலாத காரியம்.

பள்ளாடியர்கள் எதற்கும் பயப்படமாட்டார்கள். கெட்டவர்கள்தான் அவர்களுக்குப் பயப்படுவார்கள்.

மேற்குறிப்பிட்டள்ளது காணொளி விளையாட்டின் பள்ளாடியன்கள் பற்றிய பெருமைகள். எனில், கிரேக்கம் முழுதும் புகழ்பெற்றிருக்கும் பள்ளாக்கள் - Pallas யார்? Pallas - Giant - a son of Uranus - யுரேனசின் மகன் பள்ளா. பள்ளா என்பவர்கள் மிக வலிமையானவர்களில் (Giants) ஒருவர். கிரேக்கம் மற்றும் உரோம புராண மரபில், பள்ளர்கள் பலத்திற்கும், வலிமைக்கும், போருக்கும் பெயர் பெற்றவர்கள் - In Greek and Roman mythology the giants also called gigantes were a race of great strength and aggression - கிரேக்க மற்றும் உரோம புராணங்களில், ஜியன்ட்கள் மிகுந்த வலிமைக்கும், ஆதிக்கத்திற்கும் பெயர்பெற்றவர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

Giant pallas - எனில் பெரும் பள்ளனோ?

Pallas (Titan) - was one of the Titans According to Hesiod (Hesiod was a greek poet generally thought by scholars to have been active between 750 and 650 BC around the same time as Homer. He in generally separated as the first written poet in the western tradition), he was the son of Crius and Eurybia, the

brother of Astraeas and Perseus, the husband of Styx and the father of Zelus (Zealor Emulation), Nike (Victory), Kratos (Strength or power), and Bia (Might or force).

ஹெசியாய்டின் கூற்றின்படி, பள்ளா டைட்டன்களில் ஒருவர். அவர் கிரையஸ் மற்றும் யூரிபியாவின் மகன். ஆஸ்ரேயஸ் மற்றம் பெர்சியஸின் சகோதரர். ஸ்டிக்சின் கணவர். ஜெலுஸ், நைக், கிராடோஸ் மற்றும் பயாவின் தந்தை.

Hyginus says that pallas whom he calls ‘The Gaint’, also fathered with Styx, Scylla, Fontes (Fountains) and Lacus (Lakes). (Hyginus - Gaius Julius Hyginus (64 BC - AD 17) was a Latin author, a pupil of the famous Alexander polyhistor and a freedman of Caesar Augustens).

டைட்டனான பள்ளன் யார்? வெற்றியின் தந்தை. பலத்தின் தந்தை. வலிமையின் தந்தை.

Pallas was sometimes regarded as the Titan God of warcraft and of the spring time Campaign Season - பள்ளா போர்திறனுக்கான டைட்டன் கடவுளாகவும், வசந்த காலத்தின் கடவுளாகவும் கருதப்படுகிறார்.

எனில், தமிழ்நிலத்தில் போர்க் கடவுளாகவும், வசந்த காலத்தின் கடவுளாகவும் போற்றப்படுபவர் இந்திரனல்லவா.

ஸ்டிக்ஸ் யார்? ஸ்டிக்ஸ் ஆற்றின் பெண் கடவுள். பாண்டஸ் - நீரூற்று. லேகஸ் - ஏரி.

என்னில், தமிழ் நிலத்தில் ஆறு, ஏரி குளத்தோடு தற்போதும் தொடர்புடையவர் யார்? பள்ளர் எனில், கிரேக்கப் பல்லா, பள்ளா யாராக இருக்க முடியும்? வேறு ஏதேனும் சான்று அவசியமா?

பள்ளா - டிரைடனின் மகள் - Daughter of Triton. டிரைடன் - கடல் தூதர். பொசைடனின் மகன்.

பள்ளா - அதினாவின் ஆசிரியர். அதினா - ஞானம், கைத்தொழில் மற்றும் போர்க் கடவுள். ஜீயசின் மகள். பள்ளா எனும் பட்டப் பெயர் கொண்டவர்.

பள்ளா - பாண்டியோனின் மகன் - Son of Pandian - II). பாண்டியோன் - அதினா நகரின் அரசன். 50 பள்ளான்டைடுகளின் (Pallantieles) தந்தை. பள்ளா - இரண்டாம் பாண்டியனின் நான்கு மகன்களில் ஒருவர். பாண்டியனுக்குப்பின், அதினா நகரின் அரசப் பதவியைப் பெறுவதில் பள்ளாஸ், ஏசியஸ், நிசோஸ் மற்றும் லைகோன் இடையே வேறுபாடு ஏற்படுகிறது. முன்பு பாண்டியனை வீழ்த்தி அதினாவைக் கைப்பற்றியவன் மெட்டியோன். அவனை வென்று அதினாவை மீட்ட பின்பு, அதினா நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. பள்ளாவுக்குக் கிடைத்தது பரலியா பகுதி (Paralia). பள்ளாவின் 50 மகன்களே பள்ளான்டிகள். இவர்களுக்கு அதினாவின் அரியணையை முன்னிட்டு, தாய் மாமாவான ஏசியஸ் மற்றும் அவரது மகன் திசியஸ் உடன் மோதல் இருந்து வந்தது.

பள்ளா - எனிட் காவியத்தின் பெருமையான கதாப்பாத்திரம். எனிட் காவியத்தின்படி, பள்ளா இவாண்டரின் மகன். இவாண்டர் என்பது உரோம மரபில், நல்லவன் அல்லது வலிமையானவன் என்பதைக் குறிப்பிடப் பயன்படுத்தும் சொல். உரோமில் கதாநாயகனின் நற்குணத்தைக் குறிப்பிட அவனை இவாண்டர் எனக் கூறுவது மரபு.

இனிட் காவியத்தில், ருடுலியன்களோடு நடைபெற்ற போரில், பள்ளா வீரத்துடன் போரிட்டு, தம்மை போர்வீரன் என நிருபித்தாராம். - In battle, pallas proves he is a warrior killing many Rutulians.

தொல் கிரேக்கக் கடவுளர்களில் மக்களால் அதிகம் விரும்பப்பட்டவராகப் புகழப்படும் அப்பல்லோ - Apollo யார்? கிரேக்க புராணத்தின்படி, மாபெரும் வில்லாளி. மகாபாரத அருச்சுனர் போன்று எனலாம். அர்ஜுனன் இந்திரனின் மகன்.

அப்பல்லோ ஜீயஸ் மகன். அதாவது கிரேக்க இந்திரனின் மகன். அப்பலோ, அப்பல்லோ என்பதை அப்பள்ளோ எனக் குறிப்பட்டால், எழுதினால் என்ன தவறு? தமிழில் ஏன் அப்பள்ளோ என இல்லாமல் அப்பல்லோ எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது? அப்பள்ளோ எனக் கூறினால் தமிழகத்துப் பள்ளரோடு உறவுடையவராகி விடுவாரோ? உறவுடையவர்தானே. மறுக்க முடியுமா?

அப்போல்லோ என்பதை அம்புப்பல்லோ எனக் கொண்டால், அம்புப் பள்ளன். பள்ளா என்பதை வீரன் எனக் கொண்டால் வில்வீரன். பள்ளா என்பதை வெற்றி எனக் கொண்டால் வில்வெற்றியாளன் - வில்லுக்கு விசயன். சயன் - வெற்றியன். வில் விசயன்.

அப்போலோ என்பதை அப்பால் எனில் அப்பால் அடிப்பவன். அம்பால் அடிப்பவன். அழகிய தமிழ்ப் பெயராகிவிடுகிறதல்லவா. அப்பல்லோ - அம்பல்லோ - அம்புப்பள்ளோ - பொருத்தப்பாடுடையதுதானே. பெரும்பள்ளி சாலப்பொருத்தமன்றோ.

Centre of Hellinic Study, Harvard universityயின்படி, He is of the "apellia", is the god of autharitative speech, the one who presides overall manner of speech - act. தமிழில் சொல்வதானால் வாக்குத் தவறாதவன். அப்பல்லோ எனும் சொல்லுக்கு வேர்ச் சொல் ஆய்வுகள் தாராளமாகக் கிடைக்கின்றன. புராணம் - Mythology என்பதைக் கொண்டு Muuthos அதாவது Speech - act பேசுதல் எனும் பொருளிலும் பெயர்க் காரணம் சுட்டப்படுகிறது. பேசுபவன், நன்றாகப் பேசுபவன், பேச்சை, சொன்ன சொல்லை மீறாதவன், கொடுத்த வாக்கைக் காப்பாற்றுபவன் எனும் பொருள் கொண்டு அப்போலோ பெயருக்கான மூலமும் சுட்டப்படுகிறது. எனில் அதுவும் தமிழோடு தொடர்புடையதே. பல் - பேச்சுக்கு உதவுவது. அப்பல்லோ பெரும்பல்லோ? எனில் பெரும் பல்கொண்டவன். இங்கு பல் என்பதைப் பேச்சு எனக் கொண்டால், நன்றாகப் பேசுபவன், சிறந்த உரையாற்றுபவன் எனும் பெயரும் பொருத்தமுடையதாகிறது. தமிழன் தொல் போர்க்களங்களில் வஞ்சினம் உரைப்பதும் வழமையன்றோ. போர்க்களத்தின் நிகழ்த்தப்படும் சிறந்ததொரு உரை, வீரர்களை எழுச்சியடையச் செய்து வெற்றிக்கு வித்திடும் என்பதும் போர்மரபே.

Harvard universities Centre for Hellinic Studies was founded in1960. It was made possible by a grant of the old dominion foundation, the predecessor of the mellon foundation. The land on which the Centre was built was donated by Mrs.Marie Beale to the foundation, in memory of her son Walker Blaine Beale, Harvard College class of 1918, who died in world war I.

The gift was made exclusively for the establishment of an educational centre in the field of Hellenic Studies designed to rediscover the humanism of the Hellenic Greeks, The Centre's administration was entrusted to Harvard University.

ஹெல்லினிக் கிரேக்கர்களின் மனிதாபிமானச் செயல்களைக் மறுகண்டுபிடிப்புச் செய்யவே இந்த அறக்கட்டளை உருவாக்கப்பட்டதாம். அறக்கட்டளை உருவாக்கத்திற்கு நிலமளித்தவா் திருமதி. மரியே பீலி. தமிழில் மரியாள் அல்லது மரியா பள்ளி. உருவாக்கியது மெல்லோன் அறக்கட்டளை. மெல்லோன் - மெல்லன் - மல்லன். பொருத்தமே. ஹெல்லினிஸ்டிக் என்பதை-பல்லினிஸ்டிக் எனவும் சுட்டலாமே - தமிழ் பகரம் கன்னட ககரமானதைப் போல. ஹார்வர்டு - Harvard - Harvest - அறுவடை. ஹார்வஸ்ட்டுக்கும் அறுவடைக்கும் மொழித் தொடர்பு இருக்கிறதெனில், உண்மையில் மக்களும் தொடர்புடையவராகவே இருப்பர் என்பது திண்ணம்.

கிரேக்கத்திற்கும் உரோமத்திற்கும் உள்ள தொடர்புறவுகள் உலகறிந்தவை எனில் கிரேக்கத்திற்கும் துருக்கிக்குமான உறவு எத்தகையது? கிரேக்கத்திற்கும் மத்திய ஆசியாவிற்குமான உறவுகள்? கிரேக்கத்திற்கும் எகிப்திய நிலத்திற்குமான உறவுகள்? கிரேக்கத்திற்கும் அரேபியாவிற்குமான உறவுகள்? அவ்வாறே மத்திய ஆசியாவிற்கும் எகிப்துக்குமான தொடர்புகள்? இவை அனைத்தோடும் தமிழுக்கும் தொல் தமிழருக்குமான தொடர்புறவுகள்?

துருக்கியின் கணக்கலி - Canakkale மாகாணம் பல வரலாற்றுச் சிறப்புக்களைப் பெற்றது. ஆசியத் துருக்கியின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள குறுகிய, இயற்கையான வளைகுடா டார்டனெல்லியா - Dardanellia என அழைக்கப்படுகிறது. அப்பகுதியின் கடலுக்கு டார்டனெல்ஸ் என்று பெயர். துருக்கிமொழியில் கணக்கலி பொகாஸி, கிரேக்கத்தின் ஹெல்லிஸ் புராணத்தைக் கொண்டு, ஹெல்லிஸ் போண்டஸ் - Hellespontus or Ellespontus எனப் பெயரிடப்பட்டுள்ளது.

கணக்கலி நகரில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள டிராய் திரைப்படத்தின் மரக்குதிரை (Troy - 2004), அந்நகரின் சிறப்பிற்குக் கூடுதல் அழகு சேர்க்கிறதாம்.

கணக்காலி நகருக்கு அருகில்தான் புகழ்பெற்ற டிரோசன் போர் நடந்த தொல்டிராய் நகரம் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

துருக்கியத்தில் கணக் - Canak எனில் மண்ணாம். கலசி - Kalesi மதில், கோட்டை. மண்கோட்டை அதாவது Pot Fortress என்பதே கணக்கலி எனச் சுட்டப்படுகிறதாம். கணக் - என்பதை மண் எனக் கொண்டால் அதை தமிழில் மண் கோட்டை எனலாம். கலசி என்பதை மதில் எனக் கொள்வதும் தகுந்ததே. எனினும் அகழி எனில் பொருத்தமாக இருக்கிறதல்லவா. அகழியோடு கூடிய கோட்டையாக இருந்திருக்குமோ? கடற்கரையில் அகழி தோண்டுவதுண்டா? அரண் எனக் கொண்டால் கோட்டை அரண் அதாவது பாதுகாப்பான கோட்டை எனப் பொருளாகுமல்லவா.

கணக்காலி அருகிலிருக்கும் சிறிய ஊராக கும்கலி - Kumkale அறியப்படுகிறது. புகழ்பெற்ற காலிபோலி - Gallipoli போரின் பகுதியாக இருந்த கும்காலி ஊர், போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. தற்காலத்தியத் துருக்கியத்தில் ஜெலிபோலு - Gelibolu என அழைக்கப்படும் இவ்வூரில் நடைபெற்ற காலிபோலி போர், ஒட்டமான் துருக்கிப் படைக்கும், பிரித்தானியக் கூட்டுப்படைக்குமிடையே நிகழ்ந்த முதலாம் உலகப் போர் என்பது குறிப்பிடத்தக்கது.

கணக்காலி நகருக்கு அருகிலிருக்கும் ஹிசர்சிக் - Hisalik பகுதியில்தான் டிராய் பெரும்போர் நிகழ்ந்திருக்க வேண்டும் என வரலாற்றாய்வாளர்களால் சுட்டப்படுகிறது. ஷிசர்லிக்கில் அமைந்துள்ள கோட்டை கொத்தளங்களின் சிதைவுகள் மற்றும் அகழாய்வுகள் மூலம், அப்பகுதியே பண்டைய டிராய் போர் நிகழ்ந்த இடமாக இருக்கக்கூடும் எனக் குறிப்பிடப்படுகிறது. ஹிசக்லிக் எனில் கோட்டைகளின் பகுதியாம். தமிழில் கோட்டை மேடு எனில் பொருத்தம்.

தொல் கிரேக்க மொழியில் டிராய் எனில் Troia, illion, illios - டிரோயா, இலியன், இலியஸ் எனவும் சுட்டப்படுகிறது. இலத்தீனத்தில் டிரோய், இலியம் -Troia and illivm. துருக்கியின் தொல் குடிகளான இட்டைட்டுகளின் இட்டைட் - Hittite மொழியில் விலுசா அல்லது ட்ருவிசா - Wilusa or Truwisa. துருக்கியத்தில் ட்ருவா அல்லது டுரோயா - Truva or Troya.

டார்டனெல்ஸ் நீரிணைக்கும் இடா மலைக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்திருந்த டிராய் நகரில் நடந்த மாபெரும் டிராய் போரைப் பற்றிய கதைப் பாடல்களே மகாகவி ஹோமரின் இலியட் - Iliad.

இலியட் எனில் இலியத்தின் பாடல்கள் - song of illion or song of ilivon. துருக்கியின் மொழிக் குறிப்பின்படி, டிராய் நகரின் பெயர் த்ருவா அல்லது துரோயா. துருக்கியின் துரோய் என்பதை தமிழின் துறை எனக் கொண்டால் மிகச் சரியாகப் பொருந்துகிறது. துறை, துறைமுகம், துறைமுக நகரம், கோட்டை நகரம், கோட்டைகளின் நகரம் என அனைத்தும் சரியாகப் பொருந்தி அமைகிறது. டிராய் அருகிலிருக்கும் கணக்காலி, கும்காலி கெலிபோலி போன்றவற்றையும் தமிழ்ப் பெயர்களாகக் கொண்டால், அதாவது எல் - ட எனும் ஒலிக் குறிப்பைக் கொண்டு, போலியைப் பள்ளி எனக் கெண்டால் அதுவும் தமிழ் மொழியோடு சரியாகப் பொருந்துகிறது. உண்மையெனில் முன்னர் துருக்கியிலும், கிரேக்கத்திலும் புழக்கத்திலிருந்தது தமிழ் என்பது உறுதியாகிறது.

டிராய் - Troy என்பது பல்வேறு மொழிகளில் - டிரோய், த்ரோய், ட்ருவிசா, த்துருவிசா போன்று பலவாறாகச் சுட்டப்படுவதிலிருந்து, தொல்காலத்திய அந்நகரை மகாபாரதக் கண்ணனோடு தொடர்புடைய துவாரகை - Dwarka, Dvarka எனச் சுட்டலாமோ? துவாரகை என்பது த்ரோவா, த்வார்கா, திவார்கா, துவார்கா எனச் சுட்டப்படுகிறது. தமிழில் துவாரகை. பழந்தமிழில் துவரை. துவாரகை எனில் நுழைவாயில் எனப் பொருளாம். துவாரகையும் திராய் போன்று கடற்கரையிலேயே அமைந்திருக்கிறது. திராயில் பெரும்போர் நடைபெற்றதாகக் கூறப்படுவது போலவே துவாரகையிலும் போர் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. துவாரகை பழமையான நகரென்பதும், தொல்லியல் முக்கியத்துவம் நிறைந்த பகுதி என்பதும் ஆராயத்தக்கது.

துருக்கியில் அமைந்திருக்கும் இந்த திராய் பகுதியைத்தான் உண்மையிலேயே நுழைவாயில் - Gate way என அழைக்கமுடியும். அந்தளவுக்கு மிக முக்கியமான, குறுகலான பகுதியில் அமைந்திருக்கிறது இந்த இடம். எனில் அதுதான் துருக்கிக்கான நுழைவாயில் எனக் கருதப்பட்டிருக்கும். துருக்கியின் புவியியல் அமைப்பை உற்றுப் பார்த்தாலே இது எளிதில் புலனாகிவிடும்.

என்னில், குசராத்தின் துவாரகைக்கும், துருக்கியின் ட்ரோய்க்கும் என்ன உறவு? பெயர்ப் பொருத்தமும், பெயர்க்காரணமும் மிகவும் பொருந்தி வருகிறது. இரண்டும் தொல்காலத்தோடு, பெரும் வரலாற்றோடு தொடர்பு கொண்டிருக்கிறது. திராயில் நடைபெற்ற பெரும் போரைப் பற்றிய காப்பியங்களே கிரேக்கத்தின் புகழ்பெற்ற இலியமும், ஒடிசியும். துவாரகைக் கண்ணனோடு தொடர்புடையதே புகழ்பெற்ற மகாபாரதம்.

இலியத்தின் கதாநாயகன் அக்கிலிசு - Achilles. அவன் குதிகாலில் அம்புபட்டு முடிந்தான் எனப் பாடப்படுவதற்கும், கண்ணன் கால்பாதத்தில் அம்பு எய்தப்பட்டான் என்பதற்கும் உள்ள ஒற்றுமைகள் எதைக் காட்டுகின்றன? இருவருமே ஒருவரோ? கண்ணனின் இளமைக்கால வரலாறு, கண்ணனை மாவீரன் என்றே சுட்டுகிறது.

அக்கிலீசின் தந்தையின் பெயர் பீலியஸ் - Peleus. பீலியசு என்பதற்கு Muddy என அர்த்தமாம். அதாவது சேறு. சேறு, சேற்று எனப் பெயர் புழங்குவதற்கும், பலியா, பெலியா எனப் பெயர் சுட்டப்படுவதற்கும் ஏதேனும் தொடர்பிருக்குமா? அது சேற்றோடு, சேற்று நிலத்தோடு தொடப்புடைய பள்ள எனும் பெயர்த் திரிபுதானே.

பால், பாலர் எனப் பாலோடு தொடர்புடைய மக்களுக்கும், வேளாண்குடிகளான பள்ள மக்களுக்கும் பெரிய அளவில் வேறுபாடுகளோ முரண்பாடுகளோ இருப்பதாகச் சுட்ட முடியாது. அதாவது முல்லையும், மருதமும் நெருங்கிய தொடர்புடையவை. மொழியிலும் பால - பள்ள என்பது அத்துனை வேறுபாடு கொண்டதல்ல. இவை எளிதில் திரியும். எழுத்தில் பதியாதவரை அதாவது பேச்சு வழக்கில் இது வேறெனத் தெரியாது. பலராமன் பெயரையும். கலப்பை அடையாளத்தையும் நினைவில் கொள்வது பொருத்தம். பீலியின் மகனான அக்லீசுக்கும், பீலீ சூடிய கண்ணனுக்கும், பலராமனுக்கும் என்ன உறவென்பதே இங்கு கவனிக்கத்தக்கது.

இலியத்தின் பாத்திரப் படைப்புகள் இராமாயணத்தையும், மகாபாரதத்தையும் கலந்து செய்யப்பட்டுள்ளனவோ? இக்கோணத்தில் ஆராய்ச்சிகள் நிகழ்ந்துள்ளனவா? இராமாயணமும், மகாபாரதமும் உண்மையிலேயே எங்கு நிகழ்ந்தது?

இலியம், இலியட் எனில்?

சுமேர் உள்ளிட்ட மத்திய ஆசியப் பகுதியில் முன்னர் எல், இல், அல், பல், குல், மல், லில், உல் போன்ற ஈரெழுத்துச் சொற்களே பெரியளவில் புழங்கியிருக்கின்றன. இவை பெரும்பாலும் இடப்பெயர்களாக இருக்கலாம். தற்காலத்திலும் பெரும்பாலான மலைகள் மல, மல், மல்லு எனம் பெயர்களிலேயே சுட்டப்படுகின்றன. அவ்வாறே தொல் தமிழின் மலையைக் குறிக்கும் குடா, குடகு சொற்களும் சற்றே ஒலிமாறுபாடுடன் புழங்கி வருகின்றன. உதாரணம், துருக்கியின் இடா - Ita, மத்திய கிழக்கின் ஜூடா - Juda மலைகள். பொலிஸ் - Polis என்பது பேரூர் எனில், இலி, இலிஸ் என்பது சிற்றூரோ? இலி - தாழ்வான பகுதியோ? ஒப்பு நோக்க மல். மல் - உயர்ந்த.

அல், இல், உல், எல் போன்ற சொற்கள் உணர்த்தும் பொருள் யாது? பாவாணர் போன்ற தமிழறிஞர்கள் இவற்றையே வேர்ச்சொல் என்கிறார்கள். அதாவது மூலச்சொற்கள். இவை போன்ற மூலச்சொற்கள் பரந்து, விரிந்து, பல்கிப் பெருகியே, இன்றைக்கு இலக்கக்கணக்கான சொற்களாகத் திரண்டு அமைந்துள்ளன. எனில், ஒரு மொழியில் புழங்கும் சொல் அந்த மொழிக்குரியதா அல்லது வேறு மொழியிலிருந்து பெறப்பட்டதா என்பதை, அந்தக் குறிப்பிட்ட சொல்லின் மூலத்தை அறிந்தால், அதன் வேர்ச்சொல்லை அறிந்தால் எளிதாகக் கண்டறிந்து விடலாம்.

தொல்காப்பியம் சுட்டுவது எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே. பொருளின்றி, அர்த்தமின்றி, தமிழில் எந்தச் சொல்லும் கிடையாது. அதாவது, தமிழ் மொழியில் உள்ள அனைத்துச் சொற்களும் தமிழிலேயே வேரை, மூலத்தைக் கொண்டுள்ளன. அதாவது தமிழ் சொற்கள் சுயமாக தமிழில் மொழியிலிருந்து கிளைத்துப் பரவியிருக்கின்றன. உலகின் பிறமொழிகள்?

ஒப்புநோக்க ஆங்கிலச் சொற்கள். ஆங்கிலச் சொற்களுக்கான மூலச் சொற்கள் செருமானியத்தில் உள்ளன. செருமானியத்திற்கு? உரோமத்தில். உரோமத்திற்கு? கிரேக்கத்தில். எனில் கிரேக்கத்திற்கு? தமிழறிஞர் சுட்டுவது தமிழில். தமிழறிஞர் சுட்டுவது சரிதானா எனில் ஆம். பள்ளர் எனும் ஒரு சொல் போதுமே. ஒரு பானைக்கு ஒரு சோறு பதம். எனில் எப்போது, எங்கிருந்து தமிழின்

சொற்கள் கிரேக்கமாகின? கிரேக்கத்திற்குப் போயின? அதற்கு மொழியறிவும், வரலாற்றறிவும், சமய அறிவும் அறிந்திருப்பது அவசியம்.

பாவாணரின் கருத்துப்படி, உல் எனும் ஒற்றைச் சொல்லிலிருந்தே, அதாவது மூலத்தைக்கொண்டே, தமிழின் அத்தனை சொற்களும் தோன்றின.

கல் எனும் சொல்லை ஆராய்ந்தால்? க - ஒன்று, முதலாவது. க - உடல், காற்று, நெருப்பு, பிரமன். பிரமன் - அறிவு. நெடில் கா - காவல். சோலை. கா பெயர்சொல்லாகவும், வினைச் சொல்லாகவும் இடம்பெறும். ஒப்பு நோக்க கண். கண் - கருமையைக் குறிக்கும். கருப்பாய் இருப்பதால் அது கண். அதுவே காண் எனில் காணுதல், பார்த்தல். கண் - பெயர்ச்சொல். காண் - வினைச்சொல்.

தமிழறிஞர்களுக்கு தற்போதைய தமிழ் நிலத்தில் கிஞ்சித்தும் மதிப்பில்லை. நடிகரொருவருக்குக் கிடைக்கும் இலக்கத்தில் ஒரு பகுதி மரியாதை, மதிப்புக்கூட, தேர்ந்த ஒரு தமிழறிஞருக்குக் கிடைப்பதில்லை. இதுவே சங்க காலமெனில் அத்துணை மதிக்கப் பெற்றிருப்பார். காரணம் அவர்களது தமிழ்ப் புலமையே. என்றைக்கு தமிழ் மண்ணில் புலமைக்கு, கல்விக்கு மதிப்பில்லாமல் போனதோ, அன்றே தமிழரின் தரம் தாழத் தொடங்கிவிட்டது.

தமிழின் ஒவ்வொரு சொல்லும் பொருள் நயமும், ஓசை நயமும் கொண்டவை. எனில் இச்சொற்களை உருவாக்கியது யார்? தானே, அதாவது மக்களே உருவாக்கியதாகச் சொல்லலாம். மக்கள் என்ன அத்தனை நுட்பமானவர்களாக, படித்தவர்களாக, பண்பட்டவர்களாகவா அன்றைக்கு இருந்திருப்பார்கள்? ஏதேனுமொரு காரணத்தோடே சொல்லொன்று உருவாகும். இலக்கின்றி யாரேனும் அம்பெய்வரோ?

வாயைக் குறிக்க ‘‘வாய்’’ எனும் சொல் எப்படித் தோன்றியது? அது ஏன் காய் எனும் சொல்லால் குறிப்பிடப்படவில்லை? வாய் - வாயில். நுழைவாய். வாய் - வாயில் - வழி. உடலுக்கு உணவு செல்லும் வழி என்பதால் அதற்கு வாய். தோற்றுவாய் - மூலம். வாயிலிருந்து சொற்கள் தோன்றுவதால், சொற்ளைத் தோற்றவிப்பதால் அது தோற்றுவாய். அதாவது மூலகாரணம். வாயின்றி சொல் தோன்றுமோ? வானொலி பேசுகிறதே? ஒலிபெருக்கிக் கருவியின்றி வானொலியும் பேசக்கூடுமோ?

தமிழில் சொற்கள் மிகவும் நுட்பமாக, ஆழ்ந்து, அழகோடு, மதியோடு உருவாகியுள்ளன, உருவாக்கப்பட்டுள்ளன. அதனாலேயே தமிழறிஞர் அத்தனை செருக்கோடும், தலைநிமிர்ந்தும் இருக்கிறார். அது அவருக்கு தமிழறிவால் வந்த செருக்கு எனலாம். அதே நேரம் தமிழறிஞர் தன்னடக்கத்தோடும் இருப்பார். அவருக்கு தாம் கற்றது கையளவே என்பதும் தெரியும். ஏனெனில் தமிழ் கடல் போன்றது. அவ்வளவு பெரியது, ஆழமானது, பழமையானது.

கல் - திரண்டது. நிலையானது. கருப்பானது. பெயராதது. அதுவே கால் எனில் நடப்பது. கால் - நடக்க உதவும் உறுப்பு. கா - நடப்பன.

நில் - நிலையானது. நீல் - ஓடுவது. நீள் - நீண்ட. நீளம் - நீளமான, பெரிய, ஆழமான. நீள் - ஒளி. நீலம் - நீலநிறம். (நன்றி - தமிழறிஞர் மா.சோ.விக்டர்)

தமிழின் உயிலெழுத்து, மெய்யெழுத்துக் கோட்பாடு ஆழ்ந்த பொருள் கொண்டது.

இல் - il- இடம் எனில் மிகப் பொருந்துகிறது. இல், இலியா, இலிஸ், இலியம், இலிடம், இடம் - பொருந்துகிறதோ. ஒப்பு நோக்க பல்லடம். பொருளென்ன? பல் இடம் - பல்லிடம் - பல்லடம். பலர் இடம். பலரும் வசிக்கும் இடம். பல் - பல. பல்பொருள் அங்காடி, பலசரக்குக் கடை. எனினும் பல்லடம் என்பதன் பெயர்க்காரணம் பொருந்தி அமையவில்லை. பல்லயம் பல்லடமாக மாறியிருக்கலாமோ? பல்லாடம் - லாடம் - குதிரைக்குக் காலில் மாட்டும் இரும்புத்தகடு, சல்லாடம் - குதிரை வீரர்கள் அணியும் உடை. அதுவே பள்ளிடம் எனில் வாழுமிடம், வசிக்கும் இடம். சரியாகப் பொருந்துகிறது. கொள்ளிடம் - கொள்ளும் இடம். பொன்னியில் திரண்டு வரும் அதிகப்படியான நீரைக் கொள்ளும், வாங்கிக் கொள்ளும் இடம். கள்ளந்திரி - கள்ளன்காடு, கள்ளன் ஒளிந்திருக்கும் இடம். எனில் பள்ளிடம் - பள்ளர் வாழுமிடம். பல்லடம் பகுதியில் பள்ளர் சமூகத்தவர் வசிக்கிறார்தானே.

அலியாக் - மேலேறுவது, மேல் செல்வது, உயருவது, உயர்ந்தது எனில் கிரேக்க, இலியாச் - அதற்கு மாறானதாகவே இருக்க வேண்டும். தாழ்ந்தது. தாழ்ந்த நிலம், அல்லது தாழ்வான இடம்.

தாழ்வான இடம் தானா? துருக்கியின் கணக்காலி மாகாணத்திற்கு மேலே, மரமா கடலின் - marama கிழக்கெல்லையில் எலோவா - yalova மாகாணத்தில் அமைந்துள்ளது. கடற்கரையில் அமைந்திருப்பதால், அது தாழ்நிலத்தில் அமைந்துள்ள இடம் எனக் கொள்ளலாம். எலோவா நகருக்கான பெயர் துருக்கியத்தின் - எலோவா - எலியோவா -Yaliova என்பதிலிருந்து தோன்றியதாம். யலி எனில் கடற்கரை வீடு - House in the coast. ஓவா -ova எனில் தரை- plain.

ஒவா என்பதுதான் லோவா - லோயர் - lower அதாவது தாழ்வானது என ஆகியிருக்குமோ. எலோவா எனும் துருக்கியச் சொல்லுக்கு பள்ள, பள்ளமான எனும் பொருளே சரியாகச் சுட்டுகிறது எனலாம். எலோவா மாகாணம் நெல்விளைச்சலுக்குப் பெயர் பெற்றது என்பதும் ஒப்பு நோக்கத் தக்கது. நெல் பள்ளத்திலேயே, அதாவது பள்ளமான பகுதியிலேயே விளையும். நெல்லுக்கு நீர் தேங்கியிருப்பது அவசியம்மல்லவா?

கிழக்குப் பகுதி கிரேக்கத்தின் ஒரு பிரிவுக்கு இலிஸ் அல்லது இலியா (Elis or ilia) எனும் பெயர் வழங்குகிறது. பெலப்போனஸ் தீபகற்பத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள இலிஸ் பகுதியில் பாயும் ஆறுகள் அயோனியன் கடலில் கலப்பதால், இலிஸ் பகுதி தாழ்வான நிலம் கொண்டுள்ளது என்பது தெளிவு.

இத்தாலியின் சலெர்னோ (Salerno) மாகாணத்தில் அமைந்துள்ள கடற்கரை நகர் வெலியா (Velia). நகரை அமைந்தவர்கள் கிரேக்கர்கள் என்பதால் (538 – 535 BC) அது முதலில், இலி, இலியா (Ele, Elea) என அழைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக Hyela - ஹையலா எனும் பெயரில். எனில், கிரேக்க இலியா எனும் பெயரே பின்னர் உரோமத்தில் வெலியா எனத் திரிந்திருப்பது பொருத்தமுடையது.

ஈக்குவடார் நாட்டின் கடற்கரையில் சாண்டா இலியா (Santa Elea) நகரும், சிப்ரஸ் நாட்டின் கடற்கரையில் இலியா (Elia) ஊரும் இடம் பெற்றுள்ளன. அனைத்தும் கடற்கரையில் இடம் பெற்றுதுள்ளதால் இவை நிலத்திலிருந்து தாழ்வான பகுதி எனும் பொருளில் இலியம் என அழைக்கப்படலாம் என்பது தெளிவு.

இலியம் காப்பியத்தின் கதைமாந்தர் பெயர்கள் இந்திய, இலங்கைப் பகுதியில் வாழும் லங்கூர் வகைக் குரங்குகளுக்கு இடப்பபடிருக்கின்றன என்பது

வியப்பானது. லங்கூர் குரங்குகள் என்பவை புனிதமானவை எனும் பொருளில் (Sacred Langurs) என அழைக்கப்படுகின்றன. சாம்பல் லங்கூர்கள் (Gray Langurs), இந்தியன் லங்கூர் அல்லது அனுமன் லங்கூர் எனவும் அறியப்படும் இவை செம்னோபிந்திகஸ் (Semnopithecus) பேரினத்தில் இடம் பெற்றுள்ளன. நீலகிரிப் பகுதியில் வாழும் லங்கூர் குரங்குகள் நீலகிரி லங்கூர் (Nilgiri Langur) (Semnopithecus Johni).

தென்னிந்தியா மற்றும் இலங்கையின் தென்கிழக்கில் வாழும் குரங்குகள் குடுமி சாம்பல் லங்கூர்கள்(Tufted Gray Langurs). பழங்களையும் கொட்டைகளும் உண்ணும் இவற்றின் அறிவியல் பெயர் செம்னோபித்திகால் பிரியம் - S. Priam) செ.ஹெக்டர் நேபாளத்தின் தரை நாம்பல் லங்கூர்கள். செ. அசக்ஸ் - காஷ்மீர சாம்பல் லங்கூர்கள். பிரியம், ஹெக்டர் மற்றும் அசக்ஸ் - இலியம் காப்பியத்தின் பெயர்கள்.

இலங்கையின் மத்திய பகுதி ஈரக் காடுகளில் வாழ்பவை நீலமுக இலை தின்னும் லங்கூர்கள் (Purple - faced leaf langur). இவை இலையை உண்ணும் குரங்குகள். சிங்களத்தில் கல வந்துரா (Kalu Wandura) எனப் பெயர். இலங்கையில் மட்டுமே இருக்கும் லங்கூர் குரங்கு. கொட்டை உண்ணும் லங்கூர்கள் ஹலி வாந்துரா (Hali Wandura).

சிங்கள மொழியில் வந்துரா - குரங்கு எனில் கலு, காலி Kalu, Hali? Kalu- கல். கல் - உயரமானது. எனில் உயரமான இடத்தில் அதாவது மரத்தில் வாழும் குரங்கு. ஒப்புநோக்க இலங்கையின் குருணாகல் (Kurunegala). கண்டியிலிருந்து 42 கி.மீ. தூரத்திலிருக்கும் குருணாகல் நகரின் பட்டப் பெயர் எட்டுக்கல்புரம் (Ethugalpura). சற்றே உயரமான இடத்தில் அமைந்திருக்கும் நகரில் எட்டு பாறைகள் இருக்கின்றனவாம். இதன் பழைய பெயர் ஹஸ்திசைலபுரா அதாவது யானைப் பாறை நகர். சைல - மலை. ஹஸ்தி சைலம் - யானைமலை, உயரமான மலை, உயரமான பாறை.

ஹலி, ஹெலி உயரம் எனில், இலி, இல - பள்ளம்.

சைலம் - மலை எனில் ஜெருசைலம்? அதாவது ஜெருசலம்? தமிழில் எருசலேம் எனக் குறிப்பிடப்படும் Jerusalem ஜூடா அதாவது யுதா மலைத்தொடரின் உயரமான பகுதியிலேயே அமைந்துள்ளது. இசுரேலுக்கும் மேற்குக் கரைக்கும் இடையிலுள்ள ஜூடா மலைத் தொடரின் உயரமான பகுதி 3366 அடிகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. யெருசலேமின் உயரம் 2474 அடிகள். தொல் யூதத்தில் முக்கியப் பங்காற்றும் ஜூடா மலையும், அதன் மலைத்தொடர்களும், பள்ளத் தாக்குகளும் வரலாற்றில் முக்கிய இடம்பெற்றுள்ளன.

ருசாலீம் (Russalim), உருசலிம் (Urussalim) என்றெல்லாம் சுட்டப்படும் எருசேலம் நகருக்கு, சுமேரிய மொழிகளில் எரு - Yeru அதாவது குடியிருப்பு - Settlement எனப் பொருள் சுட்டப்படுகிறது. சலேம் (Shalem) - கடவுளின் பெயர். எனில் கடவுளின் பெயரிலான குடியிருப்பு, சலம், சலோம் (Salam, Shalom) எனில் அமைதி (Peace) எனப் பொருள் கொள்ளப்பட்டு, அமைதி நகரம் (City of peace) எனவும் பொருள் சுட்டப்படுகிறது.

அயிம் (Ayim) என்பதற்கு இரண்டு, இரட்டை (Dual) எனப் பொருள்கொள்ளப்பட்டு, இரண்டு மலைகளின் மீதுள்ள நகரம் எனும் பொருளில் ஜெருசலம் எனும் பெயர் வழங்கியதாகவும் சுட்டப்படுகிறது.

சலம், சலீம் மலை எனில், எரு? செட்டில்மெண்ட் - குடியிருப்பு உண்மையான பொருள் எனில், எரு - தமிழின் ஊர், ஊரு என்பதன் திரிபு என்பது உறுதியாகிறது. ஒப்பமெனில், எருசலேம் அழகான தமிழ்ப் பெயர். அதாவது மலையூர். மலையில் அமைந்துள்ள ஊர். மலையூர் என்பது தமிழ் எனில் தொல் இசுரேல் நிலத்தில் பேசிய மொழி தமிழாகவே இருந்திருக்க வேண்டும். எனில் இசுரேலிலும், கிரேக்கத்திலும் முன்பு தமிழ்மொழியே புழங்கியிருத்தல் தெளிவு. இசுரேல் - இசுரவேலர் நாடு எனில் இசுரவேலர் யார்? அவர் பேசிய மொழி தமிழ் எனில் அவரது கடவுள் யார்?

இசுரவேலரின் எபிரேய மொழிக்கும், தமிழ் மொழிக்குமான உறவு எத்தகையது? இரு நிலத்தாருக்குமான பண்பாட்டுறவு? அவ்வாறே சமயத் தொடர்புகள்? ஏதேனும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?

எல் (El), இல் (Il) என்பதற்கு கடவுள் எனும் பெயர் சுட்டப்படுகிறது. ஜூடா என்பது மலை எனில், அதாவது உயர்ந்த இடம், உயர்ந்தது, மேலானது எனில், எல், இல் என்பதும் உயர்ந்தது எனும் பொருள் கொண்டதாகிறது. எனில் இலம், இலாம்? இலோம், சலோம் எனில் உயர்ந்தது, வணக்கத்திற்குரியது. அரபி சலாம் - வணக்கம். ஈப்ருவில் சலோம். அல்லா (Allah) - உயர்ந்தவன், மேலான கடவுள்.

மத்திய கிழக்கிலும், வடக்கு ஆப்பிரிக்காவிலும் பயிர்த்தொழிலுக்கு, பயிர்த் தொழிலாளருக்கு ∴பெல்லா (Fellah) என்று பெயராம். பன்மையில் பெல்லாகீன் (Fellaheen). பெல்லாகீன் பெயர் தமிழ் நிலத்தில் பயிர்த்தொழில் செய்யும் பள்ளன் எனும் பெயரோடு அப்படியே ஒத்துப் போவது விந்தையிலும் விந்தை. பெல்லா வார்த்தை அரபி மூலமான உழவன் அல்லது துளையிடுபவன் (குழிதோண்டுபவன்) எனும் வார்த்தையிலிருந்து தோன்றியதாம் - Fellah (Arabic Fallah, Plural Fellaheen or Fellahin, fellahin) is a farmer or agricultural laborer in the middle east and north africa. The word derives from the Arabic word for ploughman or tiller.

Due to a continuity in beliefs and lifestyle, the fellahin of Egypt have been described as the true Egyptians - பெல்லான்களின் நீண்ட பாரம்பரியத்தையும் வாழ்க்கை முறையையும் கொண்டு அவர்களே தொன்மையான, உண்மையான எகிப்தியர்கள் எனக் கருதப்படுகிறார்கள்.

எனில் தமிழ்நிலத்தின் தொல்குடி?

பெல்லாகின் எனில் ஊர்க்காரர்கள் மற்றும் வேளாண்மைக்காரர்கள். பெல்லாகின் வாரத்திற்குப் பயிர் செய்பவர் அல்லது வேளாண் தொழிலாளர். எனில் அங்கு நிலவுடைமையாளர்? அவர் எபாண்டி (Effendis). அரபியில் அபாண்டி (Afandis). எபாண்டி எனில் கடவுள் அல்லது எசமான். ஆங்கிலத்தின் சார் போன்றது. எபாண்டி எனும் சொல் ஒட்டாமன் துருக்கியில் மிகவும் மதிப்பிற்குரிய சொல்லாக இருந்திருக்கிறது. படித்தவர், அறிவுள்ளவர் என்பதைச் சுட்டவும் எபாண்டி வார்த்தை பயன்பட்டிருக்கிறது. எபாண்டிற்கு ஆதென்டிக் (Authentes) எனில் பொருத்தமாக இருக்கும் எனலாம். எகிப்து, ஜோர்தான் மற்றும் துருக்கியில், தற்போதும் எபாண்டி எனும் சொல் மதிப்புமிக்கதாகவே இருந்து வருவதாகப் பதிவுகள் சுட்டுகின்றன.

எனில் எபாண்டி எனும் சொல்லிற்கும் பாண்டி, பாண்டியர்களுக்குமான உறவென்ன? எகிப்தில் பாண்டி எனும் சொல் எப்பொருளில் பயன்படுத்தப்படுகிறது? பல்லாகின் உழவர் எனில் எபாண்டி? எகிப்திலும் ஒரு காலத்தில் உழவுக்குடி மதிப்பானதாக இருந்து பின்வந்த காலங்களில் மதிப்பிழந்ததோ?

எகிப்திய மக்கள் தொகையில் அறுபது சதமானம் மக்கள் பெல்லாகின்கள். அவர்கள் தற்போதும் எளிய மண் குடிசை வீடுகளில் வாழ்கிறார்களாம். 1927 இல் நடத்தப்பட மானுடவியல் ஆய்வில் (The Fellahin of Upper Egypt - Winifred Blackman) தொல் எகிப்தியர்கள் போன்றே, தற்காலத்திய பெல்லாகின்களின் மதநம்பிக்கையும் அவர்களது வாழ்க்கை முறையும் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

Fallah is an Arabic name for boys that means farmer - ∴பல்லா என்பது பயிர்த்தொழில் செய்யும் ஆணைக் குறிக்கும் அரபிச் சொல். எனில் Falah ? ∴பலா - வெற்றியைக் குறிக்கும் அரபிச் சொல்,

∴பலான் - Falan - கொலம்பியா நாட்டின் தொலிமா (Tolima) பிரிவிலிருக்கும் ஒரு பழமையான ஊர். தொலிமா மாகாணத்தில் முக்கியத் தொழில் வேளாண்மை. பாலன் ஊரில் தேயிலையும், பழங்களும் விளைவிக்கப்படுகின்றன.

Falan, Fallen, Phalen போன்ற பெயர்கள் அரபு, அமெரிக்கா நாடுகளில் வழக்கத்திலிருப்பது குறிப்பிடத்தக்கது.

தமிழில் பால, பாலன் எனும் பெயர்கள் பொதுவானவை. இவற்றின் பொருள் பாலகன், சிறுவன் என்பதே. இவை இடத்தையோ, தொழிலையோ குறிப்பதில்லை. கருப்பன் எனில் கருப்பு நிறமுள்ளவன் என்றே பொருள். வெளுப்பான மனிதனுக்குக் கூட கருப்பசாமி எனப் பெயர் இருக்கலாம். அப்பெயர் மரபாகப் பின்பற்றி வரப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. எனில் வெளிநாடுகளின் Fala, Falan, Balan, Pala எனும் பெயர்கள் தொன்மையானவை எனில், அவற்றை பயிர்த்தொழிலோடு தொடர்பு கொண்டு பள்ள எனக் குறிப்பிடுவதே பொருத்தமானது. ஏனெனில் பள் - பள்ள - பள்ளத்தோடு, இடத்தோடு, தொழிலோடு தொடர்புடையதாகப் புழங்கி வருவது ஒப்புநோக்கத் தக்கது.

ஒரு சொல் உலகின் அனைத்துப் பகுதிகளிலும், அனைத்து மொழிகளிலும் ஒன்று போல் உச்சரிக்கப்படுவதில்லை. முஸ்லீம் என்பது மஸ்லிம் எனவும் உச்சரிக்கப்படுகிறது. முஸ்லின் துணி, மஸ்லின் துணி என்றே உச்சரிக்கப்படுகிறது. எனில் Fallak, Allah, Mullak என்பதன் உச்சரிப்பு, ஒற்றுமை என்ன? ஒன்றுக் கொன்று தொடர்புடையவையா? இதே பெயர்கள் எகிப்தியத்திலும், அரபியிலும், ஈப்ருவிலும், துருக்கியத்திலும், கிரேக்கத்திலும் எவ்வாறு உச்சரிக்கப்படுகின்றன? அவற்றின் பொருளென்ன?

அல்லா - Allah என்பதற்கு, கடவுள் - The God எனப் பொருள் சுட்டப்படுகிறது, Al - the, ilaah - god - the god. கடவுள் என்பதற்கு ஈப்ரு மொழியில் இல் - El, அரபிக் மொழியில் இலாக் - Elah.

அரபி மற்றும் ஈப்ரு போன்ற தொல்மொழிகளுக்கு மூலமொழியாகக் குறிப்பிடப்படும் அரமிக் மொழி - Aramaic, ஒரு காலத்தில் மேற்கு ஆசியாவில் மிகப்பெரிய செல்வாக்கோடு விளங்கியிருக்கிறது. இயேசுநாதர் பேசிய மொழி எனும் புகழுக்குரிய அரமேயம், தற்போது மீள்கட்டமைப்பு செய்யப்பட்டு வருவதாகவும், சிரியா நிலத்தில் அரமேயம் தற்போதும் சிறிய குழுக்களால் பேசப்பட்டு வருவதாகவும் பதிவுகள் சுட்டுகின்றன. யூடியுப்பின் சில பதிவுகள், அரமேய மொழி தமிழோடு நெருங்கிய தொடர்பு கொண்டதாக இருக்கலாம் என்பதைத் தெளிவாக்குகின்றன. தமிழின் ன்- ஈறு அரமேயத்திலும் பெருவாரியாக கையாளப்படுவது தெரிகிறது.

இலா (Ilaah) என்பது கடவுள் மற்றும் தெய்வங்களைக் குறிக்கும் சொல்லாக எடுத்தாளப்படுகிறது. இலோகிம் (Elohim) - ஈப்ருவில் கடவுளைச் சுட்டும் சொல். இம் - இம் என்பது பன்மையில் ஆணைக் குறிக்கிறது - Im - normally indicates a musculine plural. எனினும் ஈப்ருவில் இலோகிம் எனில் ஒருவறையே குறிக்கிறதாம். அதாவது ஒரே கடவுள். மேற்கு ஆசியாவில் கடவுள் எனில் பொதுவில் படைப்புக் கடவுளையே (Creator God) சுட்டுவதாகவும் பதிவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இலா எனும் சொல் மிகுந்த ஆய்வுக்குரியது. இசுரேல் நாட்டில் தற்போதும் அம்மாலைக் குறிக்க ஆயா எனும் சொல்லே சுட்டப்படுகிறதெனில், இந்த ஆயா சொல் கிரேக்கத்தில், உரோமில், பிற மொழிகளில் எப்படி மருவியுள்ளது என்பது

ஆராயத்தக்கது. ஆயா - இயா - இலா- இல - நில - நிலா. தமிழில் நிலம், மண் பெண்ணோடு தொடர்புபடுத்தப்பட்டு பெருந்தெய்வமாக வணங்கப்பட்டு வருவது கவனிக்கத் தக்கது. இலா -ஈலா - ஈவா - ஈவ் - Eve. ஈவ் என்பது தமிழில் ஏவாள் என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஈவ் சொல் ஆவ், ஆவே எனவும் உச்சரிக்கப்படுகிறது. எனில் இங்கு கவனிக்கத்தக்கது அச்சொல் அதாவது ஆங்கில ஈவ், ஈப்ரு பைபிளில் என்ன பொருளில் சுட்டப்பட்டள்ளது என்பதே. ஈப்ரு மொழியின் தொல் பைபிளில் அம்மாவைக் குறிக்கும் சொல் எது? ஆயா அல்லது ஈவ்?

சிரியாக் -Syriac மொழியில் கடவுள் என்பதற்கு அலகா (Alaha) எனும் பெயர் சுட்டப்படுகிறது. அல் - நீளுதல், பரப்புதல், விரிதல். அல் - இரவு. அலம் எனில் கலப்பை. மண்ணுள் கலப்பை நீள்வதால் அதற்கு அலம் எனப் பொருள். அலவாங்கு - கடப்பாறை - மண்ணுக்குள் ஆழமாக உட்புகுவதால். அலரி - கதிரவன். கதிர்களைப் பரப்புவதால் அவன் அலரி. அலவன் - நண்டு. ஆல் - ஆலமரம். அல்லம் - இஞ்சி. அலக்கு - தொரட்டுக் கோல் - தொரட்டி. அலகு - பறவையின் மூக்கு. அலகா (Alaha) - பொருளென்னவாக இருக்கும்?

தமிழில் அணங்கு எனில் தெய்வம். அணங்கு அலகா என மாறியிருக்கலாமோ? தமிழின் புகழ்பெற்ற அணங்கு அழகனான முருகன். முருகு – அழகு. அலகை அழகு, அழகா, அழகன் எனக் கொண்டால்? அதாவது முருகன் எனக் கொண்டால். சிரியா மற்றும் ஈராக் நிலத்தில் தற்போதும் பின்பற்றப்பட்டு வரும் மயில் வழிபாடு பொருள் நிறைந்ததாகத் தோன்றுகிறதல்லவா.

அல்லாஹ் எனும் அரபுச் சொல்லுக்கு வேர்ச்சொல் அலாஹா, அதாவது வணங்கப்படுவது. குறிப்பாக வணக்கத்திற்குத் தகுதியான ஒரே இறைவன். இலாஹ் - வணங்கப்படுபவை. அல்லாஹ் - வணங்கப்படுபவைகளுள் உயர்ந்தது. அல்லாஹ் - பால் விகுதி அற்ற சொல். சுருக்கமாக அல்லாஹ் எனில் பெரிய கடவுள்.

எல் - El - என்பதன் உச்சரிப்பு ஆங்கிலத்தில் அல் எனச் சுட்டப்படுகிறது எனில் El - அல் என்றாகிறது. Eli - அலி, Eli - கடவுள். Elohi, Eloh - Alah - Allah.

லாயிலாஹ இல்லல்லாஹ் என்பதற்கு (வணக்கத்திற்கு உயிரியவன்) அல்லாஹ்வைத் தவிர வேறெதுவும் இல்லை எனப் பொருள் சுட்டப்படுகிறது. ல -

இல்லை. இல் - இல்லை, இல்லா - இல்லை. அதாவது அல்லாவைத் தவிர இன்னொன்று இல்லை என்பது பொருள்.

எனில் தமிழில் இல், அல், குல், போன்ற ஈரசைச் சொற்கள் எந்தப் பொருளில் வழங்கப்படுகின்றன?

தமிழில் இல் - இல்லை, நீக்கு. இல் - வீடு. இல் - துயிலும் இடம். இல் - வேற்று ஆள்.

அல் - மிகுதி - அதிகம், உணவு, இரவு, இலக்கு, மேலே, கொடை. அல் - இயலாதது.

மல் - செயல், தனித்த, உறுமல், நிரப்பப்படாதது. ஒழுக்கம், நியதி, ஊழி, நீக்கு, விலக்கு.

அல்லல் - துன்பம், கடினம் எனில் அல்லில் - துன்பமில்லாததோ? துன்பத்தைப் போக்குவதோ. அல்இல்லா - அல்லில்லா - அல்லலில்லாக் - அல்லாக் - துன்பம் இல்லாதது.

அல் - மேலே, மேலானது, உயர்வானது. மேலே - வானம் (அல் - வீடுகளின் உத்தரத்தைத் தாங்கும் மரக்கட்டை) அல் - வானம் எனில் அல்லாஹ் - வானத்திலிருப்பவர். மேலே இருப்பவர்.

அல்குல் - புருவ நெற்றி. அவ்வரி அல்குல் (அகம் - 117). அல்குலாள் - அகன்ற புருவத்தை உடையவள். நெற்றியைப் பிறையுடன் ஒப்பிட்டால் இசுலாத்தின் பிறைச் சின்னத்திற்கும் சிறந்ததொரு பொருளாக அமைகிறது.

அல்லில்லா - குறைவில்லா, குறையில்லா.

அப்துல்லா - பொருளென்ன? Abdul - Allah - எனில் அல்லாவின் அடிமை எனப் பொருள் சுட்டப்படுகிறது. தமிழில் அத்த, அத்தா, அத்தன் எனில் தந்தை, அத்தல்லா - அல்லாவின் தந்தை. தமிழ் இசுலாமியரிடையே தந்தையை அத்தா என அழைக்கும் பழக்கம் இருப்பதாகச் சுட்டப்படுகிறது எனில் Allah என்பதை பில்லா, பிள்ளை எனப் பொருள் கொண்டால்?

அத்தா - தந்தை எனில் முத்தா? முத்தாலிக்? முத்தாலிக் - மூத்த தந்தை எனலாமோ? மூத்த மாலிக் எனில் பெரிய வீரன் எனும் பொருள் வருமோ? Muhtarlik - ஊர்த் தலைவன். எனில் ஆள் பெயர் lik - லிக். இலிக் - இடமெனில் ஊர்த் தலைவரின் இடம், அலுவலகம், வீடு. முத்தர்லிக், முத்தாலிக் ஒன்றா வேறுபட்ட சொற்களா?

முக்தர் - Mukhtar, Muktar - எனில் ஊர்தலைவன், ஊர்த் தலைவனை பெரியவன், மூத்தவன் எனக் கொண்டால் தமிழில் மூத்தன், மூப்பன் போன்ற அழகிய சொற்களிருக்கின்றன.

கேள்வி - தமிழின் மூப்பரும், அரபின் முத்தரும் ஒன்றா? அரபு என்றில்லாமல் மேற்கு ஆசியா முழுவதும் குறிப்பாக துருக்கி போன்ற பழமையான நிலங்களில் தற்போதும் புழங்கி வரும் இந்த முத்தர் சொல்லின் மூலம் எது?

முக்தர் - Chosen - தேர்ந்தெடுக்கப்பட்டவராம். தற்காலத்திய நடைமுறையில் முக்தர் மக்களால் வாக்களித்து தேர்வு செய்யப்படுகிறாராம். எனில் முற்காலத்தில், சனநாயக முறைகளுக்கு முன்பான காலத்தில், பெரும்பாலும் வயதின் அடிப்படையிலேயே ஊர்த் தலைவர்கள் தேர்வு செய்யப்பட்டிருப்பர். எனில் முக்தர் என்பது மூத்தர், மூப்பர் எனும் தமிழ்ச் சொல்லோடு ஐயமற உடன்படுகிறது எனக் கொள்ளலாமல்லவா.

அரபு முக்தர் மகல்லி எனும் பெயரிலும் அழைக்கப்படுகிறார். மகல்லி எனில் அருகிலிருப்பவர் (Neighbourhood). அருகிலிருப்பவர்கள் ஓட்டளித்து அல்லது தேர்ந்தெடுத்து வெற்றிபெறச் செய்பவர் அல்லது மக்களுக்கு உதவி செய்ய அருகிலிருப்பவர்.

மகல்லி (mahalle) என்பது இடத்தை, நிலத்தைக் குறிக்கும் அரபிச் சொல். அதாவது ஒரு நிர்வாகப் பகுதி. தமிழில் மண்டலம், மாவட்டம் போல். பெர்சியத்தில் மண்டகஸ் (mantagas). அதிலிருந்தே மண்டலம் எனும் சொல் வந்திருக்கலாம். தமிழில் மாவட்டம், வட்டம் எனப்படுகிறது. இவை மசூதி அளவிலும் நடைமுறையில் உள்ளது. தமிழில் பள்ளிவாசல் எனும் பெயர் மகல்லி அதாவது மஹள்ளி - மாபள்ளி எனும் பெயரிலிருந்து உருவாகியிருக்கலாம்.

ஹள்ளி - தமிழில் பள்ளி. மஹல்லா - கூட்டம், அமைப்பு. மகால் - பள்ளி, பள்ளி வாசல்.

அரபியில் முக்தசிப் (Muhtasib) - வணிக, கடை மேற்பார்வையாளர். பஜார் என்பதன் மூலம் சசானிய Waazaar. வஜார்பெட் - கடைவிதி கண்காணிப்பாளர். (வாலஜா பேட்டை - கடைவீதியோ?)

முக்தர் ஊர்த் தலைவரெனில் அத்தர் - Akhdar? அக்தர் என்பதற்கு அரபியில் மலை (mountain) எனும் பொருள் சுட்டப்படுகிறது. உதாரணத்திற்கு, ஜெபல் அக்தர் (Jebal Akhdar) எனில் பச்சை மலையாம் (Green Mountain). கிழக்கு அராபியாவின் உயர்ந்த சிகரம் (10089 அடிகள்) கொண்ட ஜெபல் அக்தர், பச்சை மலையாம். பெயர்ப் பொருத்தம் ஏற்புடையதாக இல்லையல்லவா.

முக்தர் என்பதை மூத்தவர், மூப்பர் எனக் கொண்டால், அக்தர் பெரியவர், உயர்ந்தவர் எனக் கொள்வது பொருத்தமானது. ஒப்பு நோக்க அக்பர் (Akbar). அக்பர் எனில் மிகப் பெரியவர் (The Great) எனப் பொருள். நபி காலத்திய தமிழின் அப்பர் போன்று (அப்பர் - தந்தை).

எனில் அக்தர் எனும் பெயர் உயர்ந்தது, பெரியது எனும் பொருளில் எடுத்தாளப்படுவது உறுதி. எனில் Jebel - மலை. சைலம் (Sailem) எனில் மலை. ஜீலம் - மலை. சலம் - நீர் (எனில் சேலம் ஊரின் பெயர் சைலமோ, சேலம் - மலைகளுள்ள ஊர், மலையூர்).

சைலம் - சேலம், சாலம், சலீம் (Shalem) சலோம் (Shalom) என மாற்றம் பெற்றிருக்குமோ? உண்மையெனில் அது மலையைக் குறிக்கிறது. பண்டைய ஈப்ருவின் சலேம் நகரம் (Salem) ஜியோன் மலை மீது இருந்ததாகச் சுட்டப்படுகிறது. எனில் சலாம், சலோம் என்பவை மலை (உயர்ந்த) எனும் பொருளிலேயே சுட்டப்படுவது தெளிவாகிறது. ஒரு வேளை மலையைத்தான் தெய்வமாக மேற்காசிய மக்கள் வணங்கி வந்திருப்பார்களோ? இந்திய மரபிலும் கைலம், கைலாயம், கயிலாயம், புகழ் பெற்றதன்றோ. தமிழ் நிலத்தில் அண்ணாமலையல்லவா - மலையே இறைவனன்றோ.

ஜிபல் அக்தர் எனில் உயர்ந்த மலை என்பதே பொருத்தம். பின் எப்படி பச்சை மலையானது? மேற்கின் மொழிகள் இடமிருந்து வலமாக வாசிக்கப்படுபவை. உயர்ந்த மலை என்பது மலை உயர்ந்தது எனும் பொருளில் வாசிக்கப்படுகிறதோ? மலை உயர்ந்த (து) என்றாலும், உயர்ந்த மலை என்றாலும் பொருள் ஒன்றுதானே. தற்காலத்திய அரபியில் பொருள் விளக்கத்திற்கு அடைப்புக் குறி இடுவதும், சொற்களுக்கு வலிந்து பொருள் காண்பதும் பரவலாக இருப்பதாகச் சுட்டப்படுகிறது.

ஜெருசலம், ஜெரூசெலம் - தமிழில் மலையூர் எனக் கொண்டு இட வலமாக வாசித்தால் அசலான பொருள் கிடைக்கிறது. ஜெலம் - செலம் - மலை, ஜெரு - ஊரு - மலை ஊர் - மலையூர். அதையே தமிழில் போல் வட இலமாக வாசித்தால் - ஊரு மலை. ஊர் (மலை). தமிழில் ஊர் மலை என வராது. அதை விளக்க அடைப்புக் குறி அவசியமாகிறது.

மல்லல் - வளம், வலிமை, மிகுதி, பொலிவு, அழகு, செல்வம் எனப் பலவாறாக எடுத்தாளப்படுகிறது. மல்லல் மூதூர் - வளமான, தொன்மையான ஊர். மல் - மலை, பெரியது, உயரமானது எனில் மலை எனும் தமிழ்ப் பெயரே மத்திய ஆசிய நாடுகளில் தற்போதும் மல எனும் பெயரில் புழங்கி வருவது கண்கூடு.

அள்ளல் - அள்ளுதல், சேற்று நிலப் பரப்பு.

மள்ளல் - வலிமை. மல்லல் - வலிமை, மல்லர் - வலிமையானவர், எனில் ரமல்லா? ரமல்லா (Ramallah) என்பதற்கு அரமேயத்தில் உயரமான இடம் அல்லது மலை எனப் பொருளாம். எனினும் ரமல்லா என்பதற்கு அரபியில் ஒரு பொருள் சொல்லப்படுகிறது. ராம் (Ram), உயரம் (Height), Allah - God (கடவுள்) உயரமான கடவுள், அதாவது அரபியில் எழுதினால் கடவுள் உயரம். மேற்குக் கரையிலிருந்து பத்து கி.மீ. தூரத்தில் அமைந்திருக்கும் இந்த ரமல்லா நகரின் தொல் வரலாறு என்ன?

மல்லா (mallah) என்பது மலையைக் குறிக்குமெனில் பள்ளா (Pallah)?

பாலஸ்தீனம் (Palestine) என்பதற்கு சரியான பெயர்க் காரணம் விளக்கப்படவில்லை. பாலஸ்தீனம் என்பது ஒரு புவியியல் சார்ந்த பெயராகச் சுட்டப்படுகிறது எனில் பாலஸ்தீனியர்கள்?

இசுரேலியர்கள் (Judean) மலைகளில், உயரமான பகுதிகளில், மேடான இடங்களில் வாழ்ந்தார்கள் எனில், பள்ளமான பகுதிகளில் வாழ்ந்தவர்கள் யார்? மலையில் வாழ்ந்தவர்கள் மலையர்கள் எனில் பள்ளத்தாக்கில் வாழ்ந்தவர்கள் பள்ளர்கள்தானே.

மலை (மேடு), பள்ளம் என்ற இந்த இருமைப் பண்பு, உலகின் அனைத்துப் பகுதிகளிலும் பரவியிருக்கிறது. உண்மையில் வரலாறே இந்த இருவருக்குமான உறவுகள் மற்றும் பிணக்குகளே எனில் மிகையாகாது.

மலைக்கும் மடுவுக்கும் என்ன வேறுபாடு? ஒன்று உயர்ந்தது. மற்றொன்று தாழ்ந்தது. அது Upland. இது low land. ஒன்று uphill. மற்றொன்று foot hill. மேலே இருப்பது வேட்டை சமூகம். கீழே பயிரிடும் சமூகம். நடுவே மேய்ச்சல் சமூகமோ? மேலே இருக்கும் சமூகங்கள் சிறியவை, தனித்தவை, மாறாதவை அல்லது மிக மிக மெதுவாக மாறக் கூடியவை. கீழே உள்ளது மாறிக்கொண்டே இருப்பது. பல்வேறு விதங்களில் பாதிக்கப்படக் கூடியது. அனைத்திலும் முன்னகரக் கூடியது.

பாலத்தினியர்களை பள்ளத்தினியர்கள் எனக் கொள்ளலாமா? தாரளமாக. தற்போதைய பாலத்தினத்தின் புவியியல் அமைப்பைக் கருத்தில் கொண்டால், அவ்வாறுதான் அழைக்க முடியும். தற்போது ஜோர்தான் பிளவுப் பள்ளத்தாக்கில்தான் பெருமளவிலான பாலத்தினியர்கள் வாழ்வதும் குறிப்பிடத்தக்கது. மேற்குக்கரை என்பதே யோர்தான் ஆற்றின் மேற்குக் கரைதானே.

மேற்குக் கரையிலும், மத்தியதரைக் கடலின் சிறியதொரு நிலமான காஜா கடற்கரையிலும் வாழும் பாலத்தினியர்களின் வரலாறு எத்தகையது? 1948ற்குமுன் எவ்வளவு நிலத்தில் வாழ்ந்தார்கள்? முதலாம் உலகப் போரில் என்ன நடந்தது? அதற்கு முன்னான ஒட்டமான் காலத்தில் பாலத்தினியர்களின் நிலை எப்படி இருந்தது? ஒட்டமான்களுக்கு முன்பு? சிரியர்களின் அதாவது அசிரியர்களின் காலத்தில்? அதற்கும் முன்பான ரோமர்களின் ஆதிக்கத்தில்? கிரேக்க அலெக்சாந்தர் ஆட்சியில்? இசுரேலியர்களின் எக்ஸோடஸ் (நாடு திரும்புதல்) காலத்தில்? அதாவது பெர்சிய சைப்ரஸ் ஆதிக்கத்திலும், அதற்கு முன்பான மோசேயின் இசுரேலியர் மீட்புக் காலத்திலும், பாலத்தீனியர்கள் எப்படி இருந்தார்கள்? எவ்வாறு வாழ்ந்தார்கள்? பாலத்தீனியர்களும் இசுரவேலர்களும் ஒன்றா அல்லது வேறுவேறா?

பாலத்தீனத்தின் நீண்ட வரலாறு இசுரவேர்களின் நெடிய வரலாற்றோடு பின்னிப் பிணைந்துள்ளது. 1967, ஆறுநாள் போருக்குமுன் பெரியளவில் நிலம் கொண்டிருந்த பாலத்தின், பின்னர் மேற்குக்கரை மட்டும் எனச் சுருக்கப்பட்டது. 1988இல்தான் காசா பகுதி முறையான ஒப்பந்தங்களோடு திரும்பக் கிடைத்திருக்கிறது. பாலத்தீனம் சுருங்கியதற்கும், இசுரேல் பெருத்ததற்கும், அமெரிக்காவின் அரசியல் ஆதிக்கமே முக்கியக் காரணமெனில் மிகையாகாது.

மேற்கு ஆசியப் பிரச்சனைகள் மிகவும் சிக்கலானவை, நெடிய வரலாறு கொண்டவை. இசுரேலியப் பதிவுகளின்படி, ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலான போராட்ட வரலாறு உடையவை. காரணம் அங்கிருக்கும் செழிப்பான யோர்தான் பள்ளத்தாக்கே. மேற்கு ஆசியாவின் பெரும்பாலான நிலம் வறண்ட பாலையாகவும், மணல் குன்றுகளாகவும், மண்மேடுகளாகவும் இருக்க, ஜோர்தான் ஆற்றின் பள்ளத்தாக்கோ மிகச்சிறப்பான நீர் வசதியும், மேய்ச்சல் நிலமும் கொண்டிருக்கிறது. அதுவே அத்தனை முரண்களுக்கும், படையெடுப்புக்களுக்கும் அடிப்படை. மேற்கு ஆசியா உரோமானியர்களின் ஆதிக்கத்தின்கீழ் இருந்தபோது, யோர்தான் பள்ளத்தாக்கில் பயிர்செய்து, அவர்கள் நாட்டிற்குக் கொண்டு சென்றதாகப் பதிவுகள் சுட்டப்படுவது ஆழ்ந்து நோக்கத்தக்கது.

அனைத்திற்கும் காரணம் சிரியாவின் வடமேற்கிலிருந்து, செங்கடல்வரை நீண்டு அமைந்திருக்கும் யோர்தான் பள்ளத்தாக்கு அல்லது ஜோர்தான் பிளவுப் பள்ளத்தாக்கு அல்லது சிரியா - ஆப்பிரிக்கா பள்ளம். இருநூற்று ஐம்பது கி.மீ. நீளமுள்ள யோர்டான் ஆறும், அதன் துணையாறுகளும் இருபுறத்துமுள்ள மலைப் பகுதிகளிலிருந்து பள்ளத்தாக்குப் பகுதிக்குள் பாய்கின்றன. மேற்கு ஆசிய வரலாற்றில் பெரியாறு (யூப்ரதிசு) மற்றும் சின்னாறு (திக்ரிசு) எவ்வளவு முக்கியமான வரலாறு, பண்பாடு கொண்டுள்ளதோ, அதே அளவிற்கான வரலாற்று முக்கியத்துவம் கொண்ட பகுதியாக ஜோர்தானிய ஆற்றுப் படுகையும் அமைந்திருக்கிறது. அருகிலிருக்கும் நைல்நதிப் படுகையையும் இவற்றோடு இணைத்துக் கொள்ள வேண்டும். மூன்றும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடையவை. ஒன்றின் தாக்கம் மற்றவற்றிலும் எதிரொலித்திருக்கும். சுமேரிய, மேற்கு அராபிய (இஸ்ரேல், பாலத்தீன், யோர்தான்) மற்றும் எகிப்தியப் பண்பாடுகள், மானுட வரலாற்றில் மிகுதியான தாக்கம் செலுத்தியவை எனில் மிகையாகாது.

கிரேக்கம் பண்பாட்டில் செழித்திருந்தது எனில் அதன் எகிப்தியத் தொடர்புகளும் முக்கியக் காரணமானவை. அவ்வாறே கிரேக்கத்திற்குப் பிறகான உரோமமும். உரோமத்தின் பெரும்பாலான பண்பாடுகளில் எகிப்தின் பங்களிப்பு உள்ளதெனில், எகிப்தின் பண்பாட்டில் சுமேரியர்களின் தாக்கம் மிகுதி.

யோர்தான் ஆறும், சிற்றாறுகளும் இணைந்து கலிலியோக் கடல் (Sea of Galilee) எனும் மிகப் பெரியதொரு நன்னிர் ஏரியையே உருவாக்கியிருக்கின்றன. தற்போதைக்கு யோர்தான் ஆற்றின் வடக்குப் பகுதி இசுரேலின் கட்டுப்பாட்டில் இருப்பினும், முன்னர் சிரியா, பாலத்தின் பகுதியாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

யோர்தான் ஆறு ஓடும் பகுதி கடல்மட்டத்திலிருந்து சுமார் 9232 அடிகள் உயரமுள்ளது. எனினும் யோர்தான் ஆறு 1365 அடிகள் பள்ளமான பகுதிக்குள் பாய்ந்தோடி, கலிலிகடலுக்கு கீழே அமைந்துள்ள சாக்கடலுக்குள் கலந்து விடுகிறது. கலிலிகடல் உலகின் மிகவும் பள்ளமான நன்னிர் ஏரியே. எனில், சாக்கடல் உலகின் மிகவும் பள்ளமான நிலப்பகுதி. சுமார் ஐம்பது கி.மீ. நீளமும், பதினைந்து கி.மீ. அகலமும் கொண்டுள்ள சாக்கடல், கடல் மட்டத்தை விட 1412 அடிகள் தாழ்வாக அமைந்துள்ளது.

இசுரேலியப் பைபிளின்படி, அது உப்புக்கடல் அதாவது யாம் ஹே மெலாக் (Yaam ha melah). மெலாக் - கடல்.

மேற்கு ஆசியா மலைப் பகுதிக்குள், நீண்டதொரு பள்ளம் இயற்கையாகவே உருவாகியிருக்கிறது. மலைப்பகுதிகள் மேய்ச்சலுக்கு உகந்தவை, எனில் பள்ளத்தாக்கோ பயிர்த் தொழிலுக்கு ஏற்றது. இசுரேலியர்கள் மேய்ச்சல்காரர்கள் எனில் பாலத்தினியர்கள் வேளாண்மைக்காரர்கள். மேய்ச்சல் நிலத்தவர் பின்னாட்களில் சிறந்த வணிகர்களாக மாற, பயிர்தொழில் செய்தவரோ அதிலேயே உழன்று வந்துள்ளார். வணிகத்தை முன்னிட்டு இசுரேலியர் உலகின் பல பகுதிகளுக்கும் இடம் பெயர, பாலத்தினியரோ அங்கேயே வாழ்ந்து வந்திருக்கிறார். பாலத்தினியர்கள் எளிய குடிகளாக இருக்க, இசுரேலியரோ வட்டித் தொழில் உட்பட பல்வேறு தொழில்களிலும் சிறந்து விளங்கியிருக்கின்றனர். இருவருக்குமான மோதல் போக்கு இங்கிருந்தே துவங்குகிறது.

டான் - டின் - தான் - நிலம். பால - பாலை - நிலம். பாலத்தீனம் பாலை நிலமல்ல. எனில் பால என்பதை பள்ள எனக் கொண்டால் பள்ள நிலம். எனில் பாலத்தீனம் - பள்ளத்தீனம். பள்ள அல்லது பள்ளஸ்? எஸ் எழுத்தைச் சேர்ப்பது கிரேக்கர்களின் வழக்கம் போலும். கிரேக்கர்களுக்கு அது பள்ளஸ்தீனம், தமிழருக்கு அது பள்ள நிலம்.

பால - பால் எனக் கொண்டால்? பால் - பால் அதிகம் கிடைக்கும் நிலம் - பாலத்தீனம். உண்மையா எனில், நாட்டின் பெயர்கள் பெரும்பாலும் இடத்தை வைத்துத்தான் வழங்குகின்றனவேயொழிய, அங்கு கிடைக்கும் பொருளைக் கொண்டு அல்ல. ஒருவேளை முன்னர் அவ்வாறான பெயர்கள் இருந்திருக்கலாம். உண்மையெனில் பாலத்தீனத்தில் முன்பு பால் அதிகம் கிடைத்திருக்குமா? பாலத்தீனப் பகுதிகளில் ஆடுகள் பெருமளவில் இருந்திருக்கலாம். எனினும் மாடுகள்? ஆடுகள் இறைச்சிக்காவும், தோல் கம்பளிக்காகவும் பெரிதும் வளர்க்கப்பட்டிருக்கும். மாடுகள் பெரும்பாலும் பாலுக்கே அதிகம் வளர்க்கப்பட்டிருக்கும். மேற்கு ஆசியாவின் புவியியல் மாடுகளைப் பெருமளவில் மேய்ப்பதற்கு உகந்தவையல்ல. ஒருவேளை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர், இப்பகுதியின் நில அமைப்பு மாறுபட்டு இருந்திருக்கலாம் என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கது. சிரியாவின் மேற்குப் பகுதிக் குன்றுகள் அதாவது பெரியாற்றின் மேற்குப் பகுதிகள் மேய்ச்சலுக்கு ஏற்றவையாக இருந்திருக்கலாம். வரலாற்றில் பண்டைய அசிரிய நிலமான இப்பகுதியிலேயே மேய்ச்சலும், பயிர்த்தொழிலும் தோன்றியிருக்கக் கூடுமென்ற கருத்தும் வரலாற்றில் உண்டு.

பாலத்தீனத்தில் பால் அதிகம் கறக்கப்பட்டதனால்தான் அது பாலத்தீனம் எனும் பெயர் பெற்றதா? இசுரேல் மேய்ச்சலுக்கு உகந்தது. குறிப்பாக செம்மறியாடுகள். மறி - ஆடு. சிவப்பாக இருப்பதால் செம்மறி அதாவது செம்மறியாடு. எனில் அப்பகுதியில் புகழ்பெற்றிருந்த பால் (Baal) கடவுள் யார்? பால் எனும் பெயருக்குப் பொருளென்ன? இசுரேலிய ஒரு கடவுள் கொள்கைக்குமுன் (தோராயமாக மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன்), மேற்கு ஆசியப் பகுதியின் புகழ்மிக்க கடவுளாக இருந்தவர் பால். பால் தலைமைக் கடவுள் எனவும், வானத்துக் கடவுள் எனவும் குறிப்பிடப்படுகிறார். மேலும் அவர் மழைக்கான கடவுளாகவும், இடி மின்னலுக்கு உரியவர் எனவும் குறிப்பிடப்படுவதால், அவரை இந்திரனாகக் கொள்வதும் பொருத்தமே.

பால் கடவுளை இந்திரனாக் கொண்டால், அது பள்ள நிலம் என்பது தெள்ளத் தெளிவாகிறது. ஏனெனில் மழைநீா் பள்ளத்திலேயே தேங்கும். அதுவே பயிர்த்தொழிலுக்குப் பயனாகக் கூடியது. குளம் என்பதை ஆங்கிலத்தில் பூல் (Pool) என்கிறோம். அது குளத்தின் மருவு என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. எனில் பாண்ட் (Pond) Pool ன் ஆக்கமே. Pond எனில் அதுவும் பள்ளத்தின் திரிபே.

பாலத்தீனின் காஸா (Gaza) பகுதி மடுதரைக் கடலிலுள்ள சிறு நிலப்பகுதி. தெற்கே எகிப்தும், மற்ற திசைகளைச் சுற்றி இஸ்ரேலும் உள்ளன. காஸா எனில் வலிமை என ஒரு பொருள் சுட்டப்படுகிறது. அது கசம், கெசம் எனவும் பொருள் கொள்ளும். எனில் கசம் - ஆழம், அது ஆழமான பகுதி என்பதால் கசம் என அழைக்கப்பட்டு பின்னா் காசா என மருவியிருக்கலாம். காஸா என்பது வலிமை எனில் அதுவும் இந்திரனோடு தொடர்புடையதே. ஒப்பு நோக்க கஜேந்திரன் - வலிமையான யானை. கிரேக்க அலெக்சாந்தரின் பெயரை அலெக்ஸாந்திரன் எனக் கொண்டார்? இந்திர மரபோடு தொடா்புடையதாகிவிடுகிறதல்லவா. இந்திரன் என்பது சந்திரன், ஸாந்திரன் என மாறுவதும் இயல்புதான். அலெக்சந்திரன் என்பதாக வழங்கியிருப்பினும் அப்பெயரும் இந்திரனோடு தொடா்புடையதே.

உதாரணமாக, கதே ஸாந்திர பள்ளன் (Khate Xandra Pallan) எனும் முகநூல் பதிவு, ஸ்பெயினின் மாலயா (Maalaya) எனும் நகரத்துப் பெண்மணியால் பதியப்பட்டுள்ளது. கதே ஸாந்திர என்பதை கஜேந்திர எனக் கொள்வது மிகப் பொருத்தமல்லவா? ஸ்பெயினில் கதே ஸாந்த்ர எனும் பெயரின் பொருள் தெரியாமலே கூட அப்பெயர் வைக்கப்பட்டிருக்கலாமல்லவா?

உண்மையில் பள்ளன் (pallan) எனும் பெயரிலான முகநூல் கணக்குகள் வியப்பான ஒரு தகவலை அளிக்கின்றன. Palla, Pallas, Balea, Balla, Ballan, Pallaine, Pallaire, Pallandi, Pallantza, Pallani, Pallante, Pallangyo, Pallenen, Palan, Pallen, Pallantino, Pallin, Pallango, Pollen, Pallanan, Pillan, Pallyn, Palean, Pallon, Pallanca, Pallanis, Pallangan, Pallanch, Paylan, Palland, Palian, Balan, Ballanes, Pillan, Pellan, Pallance, Paulan, Billan, Pallante, போன்ற பல்வேறு பள்ளா பெயர்களில் பதிவுகள் காணக்கிடைக்கின்றன. கிழக்கே பிலிப்பைன் தொடங்கி, மேற்கே பொலீவியா வரை அனைத்து நாடுகளிலும் பள்ளன்

பெயரில் முகநூல் கணக்குகள் பதியப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமான பெயர்கள் பெருவாரியாகப் பதியப்பட்டுள்ளன. உதாரணமாக, துருக்கியில் Pallandi, Pallani பெயர்கள் அதிகம். நெதர்லாந்தில் Palland பெயர்கள் அதிகமாக உள்ளன. கிரேக்கத்தில் Pallanza, கென்யா - Pallance.

மத்திய ஆசியா நாடுகளில் பள்ளன் - ballan எனும் பெயர் பெரும் எண்ணிக்கையில் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக சிரியா, ஜோர்டான், லெபனான் போன்ற நாடுகளில். இசுரேலிலும் பெருமளவு பள்ளன் பெயர்கள் காணப்படுகின்றன. குறிப்பாக Balan. ஒருவேளை Baal கடவுளின் ஞாபகமாக இருக்கலாமோ?

உலக நாடுகளின் பள்ள பெயர்கள் பள்ளத்தோடு மட்டும் தொடர்புகொண்டவையாக இருப்பது போல் தெரியவில்லை. ஒவ்வொரு நாட்டிலும் அப்பெயருக்கு ஒரு பொதுவான பெயர் வழங்கலாமோ? ஒரு வேளை பலம் எனும் பொருளில் வழங்குகிறதோ? அழகு எனும் பொருளும் இருக்கலாம். ஏராளமான பெண் பெயர்கள் இருப்பதால் காமத்தோடும் தொடர்பு இருக்கலாமோ?

எபிரேயத்தில் ஷ்பெலா (Shfela) அல்லது ஷிபெலா (Shephalah) எனில் பள்ளமாம் (Low Land). என்னில், அது தமிழின் பள்ளம்தானே. Shfela - பள்ள நிலம். ஷ்பெலட் எகுடா (Spfelat Yehuda) எனில் யுதா மலையின் அடிவாரம் (The Judaen Foot Hills). மலையடிவாரம் எனில் பள்ளத்தாக்கு. பள்ளமான பகுதி.

பயிர்த் தொழிலாளர் அல்லது விவசாயி என்பதைக் குறிக்கும் பாலத்தீனச் சொல் ∴பலா - Falah. எனில் அது பள்ளம் - பள்ளன் என்பதன் அர்த்தத்தைக் கொடுப்பது பொருத்தம். பாலத்தீனப் பகுதியில் பிளின் (Bilin), பூர், மலா எனும் பெயர்களில் ஏராளமான ஊர்கள் காணப்படுவதும் ஒப்பு நோக்கத்தக்கது.

பாலத்தீன் எனும் பெயருக்கு எகிப்திய மொழியில் பெலசிட் (Peleset). எபிரேயத்தில் Peleshet. அசிரியன் மொழியில் பலஸ்து (Palastu, Pilistu). கிரேக்கத்தில் அல்லோபுலோய் (Allophuloi). பழைய பிராஞ்சியத்தில் பிலிஸ்டின் (Philistin). செவ்வியல் கிரேக்கத்தில் பிலிஸ்டினஸ் (Philistinus). எகிப்தியத்தில் பலுசடா (Palusata).

பாலத்தீன் பகுதியைக் குறிக்கும் பிறநாட்டவரின் அனைத்துப் பெயர்களும் பள்ள என இருப்பது அறியத்தக்கது.

பிலிஸ்டின் (Philistine) எனில் பிலெஸ்ட் மக்கள் (People of Plest) எனப் பொருள்.

பிலிஸ்தினியர்கள் ஆராய்வதற்குரியவர்கள். அவர்கள் பைபிளின் தொல் மரபோடு தொடர்புள்ளவர்களாகக் கருதப்படுகின்றனர். 1846 முதல் ஆராய்ச்சியாளர்கள் பைபிளின் பிலிஸ்தினியர்களை, எகிப்திய பெலிசெத்களோடு தொடர்புபடுத்துகின்றனர் - The Philistine are the subject of research and speculation in biblical archarology since 1846 scholars have connected the biblical Philistines with the Egyptian Peleset.

செவ்வியல் கால கிரேக்க இலக்கியவாதிகள் பெலாஜியன்கள் - பெலஸ்கோய், ஒருமையில் பெலஸ்கோஸ் எனும் சொல்லை, கிரேக்கர்களின் மூதாதையர்களைக் குறிக்க அல்லது செவ்வியல் காலத்திற்கு முந்தைய கிரேக்க உள்நாட்டு மக்களைக் குறிக்கப் பயன்படுத்தினார்கள் - Palagians - Pelasgoi, Singular, Pelasgas was used by classical greek writers to either refer to populations that were the ancestors or forerunners of the Greek or to signify all pre - classical indigenes of greek).

பாலத்தீன் என்பதற்கு இவ்வளவு விளக்கம் தேவையா எனில் இவ்வளவு விளக்கமும் பாலத்தீனத்தை பள்ள நிலம் என்பதை நிரூபிப்பதைக் காட்டிலும் அப்பெயர் தமிழ்ப் பெயர் எனக் சுட்டிக்காட்டுவதற்கே. தமிழ்ப் பெயர் எனில் தமிழர் யார் எனும் கேள்வி வந்தே தீரும். ஏனெனில் இசுரேலியர் எனில் உலகில் எங்கிருந்தாலும் அவர் இசுரேலியர்தான். ஆனால் தமிழருக்கு? அவர் எந்தச் சாதித் தமிழர் எனும் கேள்வி தமிழர் மனத்தில் எழுவதைத் தடுக்க இயலாது. ஏனெனில் தமிழர் தம்மை சாதியாகவே உணர்கிறார்.

இசுரேலிலும், பாலத்தீனத்திலும், அரேபியாவிலும், மெசபடோமியாவிலும் முன்பு தமிழே பேசப்பட்டது எனில் பேசிய தமிழர் யார்? பாபிலோனியத்திற்கு பாபில், பாபிலி (Babili) எனும் பெயரும் வழங்கியிருக்கிறது. பெயர்கள் ஆங்கிலத்தின் மொழிபெயர்ப்பு என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். உண்மையில் பாபில்

என்பதை எப்படி உச்சரித்தார்கள் என்பது தெரியாது. தமிழில் ல, ள, ழ என மூன்று உள்ளன. ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பொருள் கிடைக்கும்.

பாபிலி பள்ளதோடு தொடர்புடையதா எனில், உறுதியாக என்பதே பதில். உதாரணமாக முன்னாள் பாபிலோனியாவான தற்போதைய இராக்கின் அல் அன்பர் (Al Anbar) மாகாணத்தில் இடம்பெற்றுள்ள பல்லுஜா (Fallujah) எனும் ஊரின் வரலாற்றைப் பார்க்கலாம். யூப்ரதஸ் நதியின் கரையில் அமைந்துள்ள பல்லுஜா மிகவும் பழமையான ஊராக அறியப்படுகிறது. பல்லுஜா எனும் பெயரின் மூலமாக சரியத்தின் பல்குத்தா (Pallgutha) சுட்டப்படுகிறது. பல்குத்தா எனில் கால்வாய் பராமரிப்பவர் (Canal Regulator) எனப் பொருளாம். தமிழருக்கு நன்றாகத் தெரியும். கால்வாய் பராமரிப்புப் பணியும், வாய்க்கால்களில் நீரைப் பகிர்ந்தளிப்பதும் பள்ளர்களுக்கு உரிமையானது என்பது. யூப்ரதிஸ் நதி கால்வாய்களாகப் பிரியும் இடத்தில்தான் பல்லுஜா ஊர் அமைந்தள்ளது என்பது ஒப்பு நோக்கத்தக்கது. செவ்வியக் காலத்தில் பள்குத்தா, பள்ளிக்கோட்டை (Pallacottas) எனவே குறிக்கப்பட்டிருக்கிறது. முன்பு பல்லுஜா நகரில் ஏராளமான யூதர்களும் வாழ்ந்திருந்தனராம். யூதர் மொழியில் அந்நகருக்கு பும்பதிடா (Pumbedita) என்று பெயராம். பும்பதிட்டா எனில் ஆற்றின் வாய் எனப் பொருளாம் (The Mouth of River). பும்பதிட்டா என்பதை பூம்பு (கார்) எனக் கொண்டால்? பூம்புகார் ஆற்றின் கழிமுகத்துவாரம். பண்டைய மொழியில் பெயர்கள் மிகவும் பொருள்மிக்கதாய் இருப்பது வியப்பு.

அன்பர் எனும் மாகாணம் ஈரானிய சகானியப் பேரரசின் காலத்தில் (224 - 651) கட்டப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. பெர்சியர்களால் பிர்ரோஸ் ஷபோர் அல்லது பெரிசபோர் (Firuz Shapur or Perisapore) எனக் குறிப்பிடப்பட்ட அன்பர் நகரம், பெல்லுஜா ஊரிலிருந்து வடக்கே இரண்டு கி.மீ. தூரத்தில் அமைந்திருந்ததாம். சசானிய அரசர் இரண்டாம் ஷபூர் (Shapur - II) நினைவாகக் கட்டப்பட்ட அன்பர் நகரம், உரோமன் அரசர் ஜூலியனால் முற்றாக அழிக்கப்பட்டதாகக் குறிப்புகள் சுட்டுகின்றன. பெர்சிபோரா நகரம் பின்னர் அன்பர் (Anbar) எனும் பெயரால் அறியப்பட்டு, தற்காலத்தில் மாகாணத் தலைநகராக வளர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. பெரிசபோரா என்பதை பெரிய ஊர் எனச் சுட்டலாமோ?

பண்டைய பாபிலோனியமான ஈராக்கில் தற்போதும் ஏராளமான இடப் பெயர்கள் ஊர் என்றே அறியப்படுகின்றன. பாக்காத் பெயருக்கு பல்வேறு பொருள் காரணங்கள் கூறப்படுகின்றன. பாக் - கடவுள், தாத் - கொடுத்தது (Bagh - god, daad - given) உச்சரிப்பில் பகதத் எனக் குறிப்பிடப்படுகிறது. தமிழில் பக - பகவன், தத் - தந்தது - பகவன் தந்தது எனச் சுட்டினால் பொருத்தமன்றோ

பாக் - பாகு - பெரிய. பெரிய பட்டினம் எனவும் பொருள் கொள்ளலாம். பக்டாடு (Bagdaadu) / (Bagdatha) என்பதை பட்டணம் என்பதன் திரிபாகவும் சுட்டலாம்.

பாகு என்பதற்கு கரை எனவும் ஒரு பொருளுண்டு. எனில் பாக்தாத் கரையில், அதாவது திக்ரிசு நதிக்கரையில் அமைந்த நகரம், நிலம் எனவும் பொருள் கொள்ளலாம். பாகு என்பதை சேறு எனப் பொருள் கொண்டால், சேற்றுப் பாங்கான ஊர் எனவும் பொருள் கிடைக்கிறது. சர்க்கரைப் பாகு என்பதில் நெகிழ்வான எனும் பொருளில் பாகு கையாளப்படுகிறது. பாகு - சூரியன். சூரிய வழிபாட்டில் சிறப்பிடம் பெற்றிருந்த ஊா ் பாக்தாத் எனலாமோ. பகு, பாகு என்பதைப் பெரிய எனும் பொருளில் கடவுளை அதாவது பெரிய கடவுளைக் குறிக்க மேற்குலகில் பயன்படுத்துகிறாா்கள் எனத் தெரிகிறது. ஒப்புநோக்க ஆங்கில பேக் - பெரிய பைய்.

மக்கா நகரம் முன்பு பக்கா (Bakkah) என சுட்டப்பட்டிருக்கிறது. பகா (Baca), புகா (Bukkah), பெகா (Beca), பெக்கா (Bekka) என்றெல்லாம் வழங்கிய பெயர்களை நோக்கினால், அவற்றை தமிழின் பாக்கம் என்பதோடு ஒப்பிடலாம். பாக்கம் என்பது தமிழின் நெய்தல் நிலத்துப் பெயர். உண்மையில் மெக்கா ஊரும் செங்கடல் அருகாமையில் அமைந்திருப்பதால் பண்டு அவ்வூர் பாக்கம் என அழைக்கப்பட்டிருக்க வாய்ப்புகள் அதிகம். அவ்வாறே பாக்கம் எனும் தமிழ்ப் பெயர் மருவி பாக்தாத் ஆகியதாகவும் கொள்ள இடமிருக்கிறது.

மேற்கில் எல்லாமே தமிழ்ப் பெயர்கள் எனக் கொள்வது ஏற்புடையதா எனில், உச்சரிப்புகள், பழைய பெயர்கள் அத்தகைய முடிவுகளுக்கே இட்டுச் செல்கின்றன. உதாரணமாக மேற்கு மெசபதோமியாவின் அசூர் நகர்.

ஹரப்பா என்பதைக் கூட அரப்பா (Arrappa) எனக் கொள்ளலாமோ? அரப்பா என்பதை ஆற்றுக்கு அருகில் எனக் கொண்டால் அரப்பா, ஆறப்பா, ஆற்று ஊர், ஆற்றூா், ஆத்தூா் எனவும் சுட்டலாமே. உண்மையில் அரப்பா ரவி

ஆற்றங்கரையில்தானே அமைந்திருக்கிறது. அய்ராவதா, ஐராவதம் என்பது கூட அரப்பா எனத் திரிந்திருக்க வாய்ப்புள்ளது. ஏனெனில் பண்டைய காலத்தில் ராவி ஆறு ஐராவதி, இராவதி (Iravati) எனும் பெயரிலேயே அழைக்கப்பட்டிருக்கிறது. ரவி என்பதற்கு பருசாணி (Parushani) என்றொரு பெயரும் உண்டாம். எனில் பறளியாற்றின் குறுக்கே சுட்டப்பட்டுள்ள கன்னியாகுமரி மாவட்ட பெருஞ்சாணி அணையின் பொருளென்ன? இந்திரனின் மனைவி அரசாணியைத்தான் பருசாணி என்கிறார்களோ? ஐந்து ஆறுகள் ஓடும் பஞ்சாப் நிலத்தில் முன்னர் இந்திரன் பெருந்தெய்வமாக வழிபடப்பட்டு வந்துள்ளான் என்பதற்கு நல்லதொரு சான்றாகவும் அமையும்.

குமரிப் பகுதியில் மகேந்திரி எனும் பெயரில் மலை சுட்டப்படுகிறது. மகேந்திரி என்பது இந்திராணியின் பெயர். மகேந்திர கிரி என்றால் மகா இந்திர மலை. மிகப்பெரிய மலை. வடமொழியில் சசி (Shachi), அண்ரிலா (Aindrila), புலோமி (Poulomi). சப்தகன்னிகள் ஒருவராக வணங்கப்பெறும் இந்திராணி, அழகுக்குப் பெயர் பெற்றவராகவும் புகழப்படுகிறார். புராண இந்திரனுக்கும் இந்திராணிக்கும் ஜெயந்தன், ஜெயந்தி, தேவசேனை மற்றும் சித்ரகுப்தன் எனும் பிள்ளைகள் உண்டு. தேவசேனை (தேவாசனா, தேவானை, தேவயானை, தெய்வானை) தேவ சேனாதிபதியான முருகனின் மனைவி. ஐராவதத்தால் பேணப்பட்டதால் தெய்வானை என அழைக்கப்பட்டாராம். முருகனுக்கும், தெய்வானைக்கும் மதுரை, திருப்பரங்குன்றத்தில் திருமணம் நடந்ததாக குறிப்பிடப்படுகிறது. அதனடிப்படையில் இன்றும் தேவேந்திர குலத்தார் மண்டபத்திற்கு மறுமகனாக வந்து வீற்றிருக்கிறான் முருகன்.

பாகித்தான், ஆப்கானித்தான் பகுதிகளில் பாயும் ஆறுகளின் பெயர்கள் தமிழ்ப் பெயர்களோடு ஒத்துள்ளன. உதாரணம் குண்டார் (Kundar), குன்னார் (Kunar), குன்கர் (Kunhar), குர்ரம் (Kurram).

சினாப் (Chenab) ஆறு, முன்னர் சந்திரபாகா ஆறு (Chandrabhaga) எனும் பெயரில் அழைக்கப்பட்டு வந்தள்ளது. சந்திரா, பாகா எனும் இரு ஆறுகள் ஒன்று சேர்ந்து சினாப் ஆற்றை உருவாக்குவதால் அப்பெயராம். இது ரிக்வேதத்தில் அசிக்னி (Asikni) எனவும், அதர்வனத்தில் கிருஷ்ணா (Krishna) எனவும்

அழைக்கப்பட்டதாம். அசிக்னி பின்னர் இஸ்தாமதி (Iskamati) எனத் திரிந்ததாம். சினாய் என்பது சந்திரபாகா என்பதன் சுருக்கம்.

இமாச்சல பிரதேச மாநிலம் லேக் - மணாலி நெடுஞ்சாலைப் பகுதியின் 16,043 அடிகள் உயரத்தில் அமைந்துள்ள பர ளச்சலா (Bara - lachala) எனும் பகுதியிலிருந்தே செனாப் ஆறு தோன்றுகிறதாம். பரளச்சலா எனில் சாலைச் சந்திப்பு (Summit With Gross Roads). மலைப்பாதை (mountain pass). பரளச்ச, பரளச்சி என்பது தமிழ்ப் பெயரோ. யாம் படித்த ஊர் பரளச்சி. அதுவும் சாலைச் சந்திப்பே. முக்கியமாக இரண்டு சாலைகள் அருப்புக்கோட்டை - சாயல்குடி, விளாத்திகுளம் - கமுதி சாலைகள் குறுக்காகச் சந்திக்கின்றன. இத்தகைய அழகிய பெயர் கொண்ட ஊரை மேலையூர் என எதற்கு மாற்றினார்களோ? மேலானவர்கள் வசிப்பதால் மேலையூரோ?

தேவேந்திர குலத்தவர் வாழும் ஊர் தற்போதும் பரளச்சி என்றே அழைக்கப்படுகிறது. முன்பு கீழப்பரளச்சி. மேலையூர் - மேலப் பரளச்சி. பர - பரன் - உயர்ந்தது, மேலானது, வானம். லச்சி - பாதை, வழி. உயர்ந்த பாதை. மலைப்பாதை. உயர்ந்த பாதையில் செல்லும் மக்கள் வாழும் ஊர். மேலானவர்களின் ஊர். தொப்பலாக்கரையில் பெருமாள் கோவில் கல்வெட்டில் பரளச்சி பெயர் இடம் பெற்றுள்ளது. தொப்பலாக்கரையில் சமணப் பள்ளியும் இருந்துள்ளது. சமணத்திலும் தேவேந்திரனுக்கு பெருஞ்செல்வாக்கு இருந்திருக்கிறது. தீர்த்தங்கரர்கள் பிறக்கும்போது, வாசவனும், சசியும் ஐராவதத்தில் வந்து நல்வாழ்த்துக்கள் உரைப்பர் என்பதும் சமணத்தில் மரபாகச் சுட்டப்படுகிறது.

உலக மொழிகளில், ஒலிப்பு முறைகள் சற்றே மாறுபடும். எனினும் பொருள் மாறாது. ஒரு சொல் எதைக் குறிக்க, எந்தப் பொருளைக் குறிக்கப் பயன்படுகிறது என்பதைக் கொண்டு ஒலிப்பு முறைகளில் சற்றே மாறுபாடு இருந்தாலும், அவ்வொலிப்பின் உண்மையான அர்த்தத்தை ஓரளவிற்குக் கண்டுபிடித்து விடலாம். உதாரணமாக இந்திய மரபில் சப்த (Sapta) எனில் ஏழு. உதாரணம் - சப்த ரிஷிகள், சப்த கன்னிகள். ஏழு என்பதற்கு பெர்சிய அவந்தாவில் ஹப்தா (Hapta) எனப் பொருள். சப்த சிந்து எனில் ஏழு நதிகள். பெர்சியத்தில் ஹப்த ஹிந்து (Hapta Hindu). அதன் பொருளும் ஏழு நதிகளே. சிந்து - இந்து - ஒரே பொருள்தான்.

அவர்கள் மொழியில் சில ஒலிப்புகள் இல்லாமல் இருக்கலாம். தமிழில் வடமொழி எழுத்துக்கள் இல்லாததுபோல.

ஹப்த - ஸப்த எனில், பழைய ஈரானிய மொழியின் அதாவது அவஸ்தா மொழியின் ஹ - ஒலிப்பு, சமற்கிருதத்தில் ஸ - என மாறி ஒலிக்கப்படுகிறது. எனில், சமற்கிருதத்திற்கும், வேதங்கள் உருவாகியிருந்த பண்டைய வேதமொழிக்கும் எத்தகைய மாற்றங்கள் நிகழ்திருந்திருக்கும்? குறிப்புகளின்படி, அவஸ்தா மொழியிலேயே அதாவது ஏறக்குறைய மூவாயிரமாண்டுக் காலத்திலேயே பழைய பாரசீகத்தில் இந்திரக் கடவுளுக்கு மதிப்புக் குறைந்ததாகத் தெரிகிறது. அதற்கு முன்னுள்ள காலத்தில், மேற்கு ஆசியா மொழிக் குறிப்புகளில், இந்திரன் புகழ்பெற்ற கடவுளாகக் குறிக்கப்பட்டுள்ளான். எனில், பாரசிக நிலத்திலேயே இந்திர மரபில் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன எனச் சுட்டலாமோ? அவந்தாவில் சுரர் - அசுரர் என்பதற்கு அரக்கர் - தேவர் எனும் பொருள் சுட்டப்படுகிறது. தமிழ் நிலத்தில் இது அப்படியே மாறிப் புழங்குகிறது. தேவர் - பெரியவர், மதிப்பானவர். பாரசிக மொழி இட வலமாகப் படிக்கப்படுவதால், தொல் தமிழின் பொருள் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்குமோ? தமிழ் மரபோடு தொடர்புடையதாகக் கருதப்படும் சிந்துச் சமவெளி மொழியும் இட - வலமானதாகச் சுட்டப்படுவது ஒப்புநோக்கத் தக்கது.

சிந்து எனில் எல்லை நதியாம் (Border River). சிந்து நதி பெர்சியத்தில் இந்துவாகி, கிரேக்கத்தில் இன்டோஸ் (Indos) மற்றும் உரோமனியத்தில் இந்தஸ் (Indus) எனவும் மாறிவிட்டது. சமற்கிருதத்தில் பெரும் நீர், கடல், சமுத்திரம் எனும் பொருளில் சிந்து (Sindhu) எனும் சொல் வழங்கப்படுகிறது.

சிந்து நிலத்தின் வழியாகப் பாய்த்தோடுவதால் அந்நதிக்கு சிந்து எனப் பெயராம். அதுவே பின்னர் இந்து ஆறு என அழைக்கப்பட்டு, பின்னர் இந்து, இந்தஸ் என மாறியதாம் - India is a greek and latin term for the country of the River Indus.

சீன மொழியில் இண்டு (Yindu). திபெத்தியத்தில் செங்கி சங்போ (Seenggee Zangbo). அதாவது சிங்க ஆறு. பஞ்சாபியில் அபாசின (Abaasin) - ஆறுகளின் தந்தை (Father of Rivers).

3187 கி.மீ. நீளத்திற்குப் பாய்ந்தோடும் சிந்து நதி, ஆசியாவின் மிகப் பெரும் ஆறாகப் போற்றப்படுகிறது. காபுல் ஆற்றோடு சேர்ந்து, ஏழு ஆறுகள் ஒன்று சேர்ந்து பாகித்தானின் சிந்துப் பள்ளத்தாக்கை பெரும் உணவு உற்பத்தி மையமாக மாற்றியுள்ளன. பண்டைக் காலம் தொட்டே, மானுட குலப் பண்பாட்டின் முக்கியமான களமாகத் திகழ்ந்து வருகின்றன சிந்து மற்றும் அதன் கிளை ஆறுகள்.

காஷ்மீர் பள்ளத்தாக்கு வழியாகப் பாயும் 32 கி.மீ. அகலமும், 135 கி.மீ. நீளமும் உடைய ஜீலம் (Jhelum) ஆற்றுக்கு, பல்வேறு பெயர்கள் சுட்டப்படுகின்றன. ஜல் (Jal) - தூயநீர், ஹம் (Ham) - பனி, ஜீலோம் - பனிநீர். சமற்கிருதத்தில் விதஸ்டா (Vitasta) எனச் சுட்டப்படுகிறது. அலெக்சாந்தர் ஜீலம் நதிக்கரையில் எதிர்க்கப்பட்டதால், அவர்கள் மொழியில் ஹைடெஸ்பஸ் (Hydasper).

470 கி.மீ. நீளமுள்ள பியாஸ் ஆறு இமாச்சல் மாநிலத்தின் மையப் பகுதியில் உருவாகி பஞ்சாப் மாநிலம் வழியாக ஓடுகிறது. 1500 கி.மீ. பாய்ந்தோடும் சட்லெஜ் ஆறு, இந்தியா மற்றும் பாகித்தான் பகுதிகளை வளமாக்குகிறது. 430 கி.மீ ஓடும் காழல் ஆறு ஆப்கானித்தான் மற்றும் பாகித்தனை செழிப்பாக்குகிறது.

சிந்து, சீலம் செனாப், ரவி, பியாஸ், சட்லெஜ் மற்றும் காபுல் நதிகள் சப்த நதிகள் எனப் புகழப்படுகின்றன. தொல் பாரதப் பண்பாட்டைக் கட்டியெழுப்பியதில் இந்த ஏழு நதிகளுக்கும் பெரும்பங்குள்ளது. அவ்வாறே இப்பகுதியில் செழித்திருந்த வேளாண்குடிகளுக்கும், அங்கு வந்து சேர்ந்த வேதக்காரர்களுக்கும் அதாவது மேய்ப்பர்களுக்கும்.

ஈராக்கிய தற்போதைய சலாடின் (Saladin) மாகாணத்தில் அமைந்திருந்த தொல் நகரமான ஆசூர் (Assur, Ashur) பழைய அசிரியன் அரசுரிமையிலிருந்து (பொ.ஆ.முன். 2025 - 1750, பிந்தைய அரசுரிமையக் காலமான 911 - 608 பொ.ஆ.மு வரையுலும்) புகழ்பெற்றிருந்த ஒரு நகரமாகக் குறிப்பிடப்படுகிறது. திக்ரிஸ் நதியின் மேற்குக் கரையில் அசூர் நகரின் எச்சங்கள் கிடப்பதாகக் கூறப்படுகிறது. இறுதியாக பதினான்காம் நூற்றாண்டின் தைமூரால் நிர்முலமாக்கப்பட்ட அசூர் நகரம், தற்போது உலகப் பாரம்பரியக் நினைவுச் சின்னமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

அசிரியா (Assyria) எனும் பெயருக்குக் காரணமாகச் சுட்டப்படுகிறது அசூர் என்னும் பெயர். அசிரியா அல்லது அசிரியப் பேரரசு, தற்காலத்திய வடக்கு ஈராக்,

வடகிழக்கு சிரியா மற்றும் தென்கிழக்கு சிரியாவை உள்ளடக்கியிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

சிரியா எனும் பெயர் Assurayu (Assyria) என்பதிலிருந்து உருவானதாகக் கூறப்படுகிறது. அசுர், அசூர் என்பதற்கான பொருத்தமான விளக்கம் சொல்லப்படவில்லை. அரசூர், அரசர் ஊர் எனத் தமிழ்ப்படுத்தினால் பொருத்தமாக உள்ளது. ஒப்பு நோக்க, எகிப்தில் எல்மரசி (Elmarassi) எனும் பெயரில் ஏராளமான முகநூல் கணக்குகள் பதியப்பட்டுள்ளன. அரசி என்பதை அழகிய தமிழ்ச் சொல்லாக எடுத்துக்கொள்ளலாம். எனில் எல்மா, எல் என்பதை உயர்ந்த எனக் கொண்டால், உயர்ந்த, பெரிய அதாவது பேரரசி எனப் பொருள் வரும். எல்மரசி என்பதை எழிலரசி, அதாவது எழிலான, அழகான, அரசி எனக் கொள்வதும் சாலச் சிறந்தது. எகிப்தில் அழகான அரசியான கிளியோபாத்தராவின் நினைவாக எழிலரசி எனும் பெயரை வைத்திருக்கிறார்களோ? கிளியோபத்ரா - தமிழ்ப் பெயரோ, தமிழில் பேசியிருப்பாரோ? கிளி - தமிழ். பத்ரா? புத்ரியோ? கிளி (Cleo) என்பதை இளைய, இள எனக் கொண்டால் இளைய புத்ரி - இளமகள் எனும் பொருள் வருமோ? கிளி போல் பேசுவாரோ? கிளிப்பேச்சுக்காரி. அழகுப் பெண் என்பதைத்தான் ரோமானியர்கள் கிளியோ பத்ரா எனக் குறித்தார்களோ? மாதரசியைத்தான் மராஸ்சி என்கிறார்களா?

அசூர் - அரச ஊர். எனில் நினவே மாகாணம் (Nineveh Governorate)? நினவே மாகாணம் என்பதை விக்கிபீடியாவில் துஹாக் கோவெர்னோரே என மொழிபெயர்ந்திருக்கிறார்கள். டைகரிஸ் ஆற்றின் கிழக்குக் கரையில் நினவே நகரம் அமைந்திருக்கிறதெனில், அதன் மேற்குக் கரையில் அமைந்திருப்பது மொசூர் நகரம். மொசூர் நகரமே நினவே மாகாணத்தின் தலை நகரமாக இருக்கிறது.

ஈராக்கின் நினவா (ninawa) தொன்மையான நகரம். அசிரியப் பேரரசின் பகுதியாக இருந்த நினவே பகுதி பல்வேறு காலச்சாரங்களுக்கும், இனங்களுக்கும், மொழிகளுக்கும் பெயர் பெற்றதாக விளங்கி வந்திருக்கிறது.

நினவா எனும் ஆங்கிலப் பெயர் இலத்தீன் நினிவே (Ninive) என்பதிலிருந்து எடுத்தாளப்பட்டதாம். அக்காடியத்தின் நினா (Nina) என்பதை கிரேக்கர்கள் நினியே

(nineuce) எனக் குறிப்பிட்டார்களாம். பழைய பாபிலோனிய மொழியில் நினுவா (ninuwa) பெயருக்கு பொருத்தமான விளக்கம் கிடைக்கவில்லையாம். அந்நகரின் காவல்தெய்வத்தின் பெயராக இருக்கலாமாம். ஆப்பெழுத்துக்களின்படி நினா (Nina) என்பது மீனைக் குறிக்கிறதாம். அரமேயத்தில் மீனுக்கு நுனாவாம் (nuna). எனவே மீனின் இடம் என்பதைக் குறிப்பதாக நினவே இருக்லாமாம். டைக்ரீஸ் ஆற்றங்கரையில் அமைந்திருப்பதால் மீனோடு தொடர்புபடுத்தவது சரியாக இருக்கும். ஒருவேளை மீனவர் குடியிறுப்பாக இருந்து, பின்னர் நகரமாக மாறியிருக்குமோ? மீனவர், மீன் என்பது நினவர், நினவே என காலப்போக்கில் மாற்றம் பெற்றிருக்கலாம். மீனவர் ஊர் - மீனவூர், மினவே என மாற்றம் பெற்றிருப்பது பொருத்தமானதே.

ஈராக்கின், அதாவது தொல் மெசபதோமியத்தின் மொழி எது என்பதற்கு தமிழ் என்பதே பொருத்தமுடைதாக இருக்கிறது. சுராப்பாக்கம், நிப்பூர், நினவூர் போன்ற பெயர்கள் தமிழாகச் சுட்டப்படுகின்றன. நிப்பூர் உப்பூர் எனலாம். சுரப்பாக்கம் - கரைப்பாக்கம் என்பதாக இருக்கலாம்.

துருக்கி, ஈரான் மற்றும் அரபு நாடுகள், ஆட்சிப் பகுதிகள் அதாவது மாநிலங்கள் (Province State, Governorate) என்பதைக் குறிக்க விலயாஹ் (Wilayah) எனும் சொல்லைப் பயன்படுத்துகின்றன. அரபியில் விலாய (Wilaaya), உருது மற்றும் பெர்சியத்தில் வெலாயத் (Velaayat), துருக்கியில் விலாயிட் (Vilayet). இதைத்தான் தமிழில் பாளையம் என்கிறார்களோ? பாளையங்கள், பாளையக்கட்டுகள் எனில் நிலத்தைப் பிரிப்பதுதானே. பாளையும், வில்லாயா என்பதிலிருந்து உருவானது எனில் வில்லாயா, தமிழின் பள்ளயம் எனில் சொல்லின் திரிபாகக் கருதலாமோ? பள்ளயம் எனில் பிரிப்பது எனும் பொருளுண்டு. பள்ளயம், வில்லயாவாகி, மறுபடியும் பாளையமாக மருவியதோ?

காஸ்பியன் கடலில் அமைந்திருக்கும் பகு (Baku) மாநகரம், அஜெர்பைசான் (Azerbaijan) நாட்டின் புகழ்பெற்ற தலைநகரம். பழமையான இந்த நகரின் பாகு பெயரின் காரணம் பொருத்தமற்றதாகத் தெரிகிறது. வேகமாகக் காற்றடிக்கும் பகுதியில் உள்ளதால் பாகு எனும் பெயர் வந்ததாம். Baad - tube - wind pounded city எனப் பொருள் கூறப்படுகிறது. பாகுய் (Bahkuy) - கடவுளின் நகரம் (God’s

Town). baga, (now bagh) - கடவுள் கு - (Kuy) - கடவுள் (பெர்சியன்) - எனவே கடவுளின் நகரம்.

கடற்பகுதியில் அமைந்திருப்பதால் பாக் - பாக்கம் எனும் தமிழ்ப் பெயரே பொருத்தமாக உள்ளது. மேலும் பாகு நகரம் கடல் மட்டத்திலிருந்து 92 அடிகள் பள்ளத்தில் அமைந்துள்ளது. மேலும் பள்ளமான நகரம் எனும் பொருளில் - The Bakili எனவும் சுட்டப்படுகிறது. பள்ளமான பகுதி என்பது நாளடைவில் பாகிலி. பாகி என மாற்றம் பெற்றிருப்பது சாத்தியமே. எனினும் பெரிய ஊர் எனும் பொருள் பொருத்தமாக உள்ளது.

பாகு பலி என்பதை பாகுபள்ளி அதாவது பெரும்பள்ளி எனக் கொள்வதே பொருத்தம். சொற்கள், பெயர்கள் பல்வேறு விதங்களில் புழங்கும். பொருள் மாறும். அம்ராபலி என்கிறார்கள். இது அமரேந்திர பாகுபலி என்பதன் சுருக்கம் எனில் ஏற்புடையதே. எனில் பாகுபள்ளி எனக் கொள்வதும் பொருத்தமே.

இராஜஸ்தானம், மராத்தியம் மற்றும் பஞ்சாப் போன்ற பகுதியில் பவார் (Pawar) எனும் பெயரில் ஒரு சாதி குறிப்பிடப்படுகிறது. புவர் (Puar), (Puwar), பர்மர் (Parmar), பன்வர் (Panwar), பொவர் (Powar), பிரமர் (Pramar) எனப் பல்வேறு பெயர்களில் குறிப்பிடப்படும் இச்சாதி, ராஜபுத அக்னி குலமாகச் சுட்டப்படுகிறது.

பவர், பவார் எனில் பொருளென்ன? ஆங்கிலத்தில் பவர் (Power) எனில் பலம், ஆற்றல். பவார் என்பதும் அதே பொருள் கொண்டதே. இராசஸ்தானத்தில் பவ்வர் என ஆண் பிள்ளைகளையும், பவ்வரி எனப் பெண் பிள்ளைகளையும் அழைப்பது இயல்பாகச் சுட்டப்படுகிறது. அங்கு பவ்வர் பட்டியல் சாதியில் இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. பவர், பவ்வர் என்பது பல்வர் (Palwar) என்பதன் திரிபாக இருக்கலாம். பல்வார் சாதி மராத்தியத்தில் பிற பிற்பட்டோர் பட்டியலில் இடம்பெற்றுள்ளது. மச்சேந்திர (Macchindra), தேவச (Divasa) போன்ற சாதிகளும் பிற பிற்பட்டோர் அதாவது ஒ.பி.சி. பட்டியலில் இடம் பெற்றுள்ளது கவனிக்கத்தக்கது.

பல்வார் அதாவது பல்லவர் என்பது பவ்வார், பவார் எனத் திரிந்திருக்கலாமோ? ராஜபுதரித்தில் மேவார் (Mewar), மாவர் (Mawar - Marwar) போன்ற சாதிகள் இடம்பெற்றுள்ளது ஒப்பு நோக்கத்தக்கது. மேவார் - மாவார் -

மல்வார் - மல்லவார் - மல்லர். மல் - வீரத்திற்குப் பெயர் பெற்றது. ஒப்பு நோக்க பில்வார் (Bheel).

பல்வார் பாய் (Palwar Bhai) என்பதை பள்ளர் எனக் கருதவும் இடமுண்டு. பல்வார்கள் மீனோடு தொடர்புபடுத்தப்படுவது இங்கு கவனிக்கத்தக்கது. பல்வார், மீனா (Meena) சாதி எனக் குறிப்பிடப்படவதோடு, அவர்கள் பில் மக்களின் ஒரு பிரிவு எனவும் சுட்டப்படுகிறது. மல்லா (Mallah) சாதி, வட மற்றும் கிழக்கு இந்தியாவில் ஆற்றோடு தொடர்புடையதாகச் சுட்டப்படுகிறது. மல்லா - படகு விடுபவர்கள். எனினும் பயிர்த்தொழிலோடு தொடர்புடையவராகவே பெரிதும் அறியப்படுகிறார்கள். வங்காளத்தில் புல்வார் (Palwar) எனில் படகோட்டுபவர் எனச் சுட்டப்படுகிறது.

இராஜ்தானில் பெர்வா (Berwa), (Bairwa) சாதி, பட்டியல் சாதியில் இடம் பெற்றுள்ளது. பெர்வா எனில் ராஜ்புதன மொழியில் வீரமாம். பெர்வாக்கள் கால்நடை வளர்ப்பிற்கும், பயிர்த் தொழிலுக்கும் பெயர் பெற்றவர்கள். பெர்வா மக்கள் 1930கள் வரை, பள்ளைஸ் (Balais), பள்ளே (Bhalay) என்றே அழைக்கப்பட்டு வந்திருக்கிறார்கள் - Until the 1930s, they were called Balais. The claimed Kshatriya status - பள்ளை என்பது பள்ளி எனில் தமிழகத்தில் பள்ளி என்பதோடு இராசபுதன பள்ளைகளை ஒப்பிடலாமல்லவா. பள்ளிகள் வன்னியராகி, சத்திரியராகவும் மாறிவிட்டாரல்லவா.

Most of the workers were cultivators. They speak Dingal and use Devanagari characters - பெரும்பாலானவர்கள் பயிர்த்தொழில் செய்பவர்கள், அவர்கள் திங்கள் மொழியைப் பேசுகிறார்கள். எழுதுவது தேவநாகரியில். திங்கள் மொழி எனில்? தமிழ் மொழியைத்தான் திங்கள் என்கிறார்களோ? திங்கள் மொழி மிகப் பழமையான இந்திய மொழியாம். அது இலக்கியத்திற்கும், செய்யுள்களுக்கும் பெயர் பெற்றதாம். சரண்கள் இம்மொழியை முதன்மையாகப் பயன்படுத்தினார்களாம். - It was primarily used by charans. சரண் யார் எனில் - The Charan are a caste living in Rajasthan and Gujarat States of India. Members of the castes are considered to be divine by a large section of society. சரண்கள் சமூகத்தில் தேவர்கள் போன்று மதிக்கப்பட்டவர்களாம். சரண்கள் தமிழில் சேரன்கள், சேரர் எனில் பொருத்தம்தானே.

தங்கள் என்பதோடல்லாமல் இப்பகுதியில் சிந்து, இங்கள் (Ingal), பிங்கள் (Pingal) எனும் பெயர்களில் கூட மொழிகள் இருந்தனவாம். அவை பிராகிருத மொழியின் வடிவங்களாம்.

தமிழின் சங்கப் பாடல்களில் பாலை நிலத்தைப் பற்றிய வருணனைகள் மிகவும் அழகாக பதிவு செய்யப்பட்டுள்ளன. சில விவரணைகள் மிகவும் வியப்பான முறையில் விவரிக்கப்பட்டள்ளன. ஒரு வருணனையில், உணவுக்கு வழியில்லை எனில் ஒட்டகம் எலும்பைத் தின்னும் எனும் குறிப்பு மருதன் இளநாகனாரால் சுட்டப்படுகிறது. தமிழகத்தில் பாலையே இல்லாதபோது, தமிழ் நிலத்தில் ஒட்டகங்கள் இடம் பெற்றிருக்காதபோது, எப்படி இவ்வளவு துல்லியமான பதிவைச் செய்ய இயலும்? மணல்வாரி அதாவது மணல் மழை பற்றியும் குறிப்புகள் உள்ளன. உறையூர் தஞ்சையின் உறையூர்தானா? ஒருவேளை பண்டைய மூவேந்தர் நிலத்தை இந்தியா முழுமைக்குமானதாகக் கருதினால், சங்கப் பாடல்களின் குறிப்புகள் முழுமையாகப் பொருந்தி வருகின்றனவல்லவா.

பாலை நிலம் பற்றிய சங்கப் பாடல்கள் இராஜபுதன தார் பாலையைக் குறிப்பன எனில் அதையே அரேபிய, ஆப்ரிக்க பாலைக்கும் ஏன் நீட்டிக்கக் கூடாது? யூதர்களின் பழைய ஏற்பாட்டில் சுட்டப்படும் சேரத்தைட்டுகள் மற்றும் பெலத்தைட்டுகள் (Cherathites and pelethites) யாராக இருப்பார்கள்? பொது ஆண்டுக்கு முற்பட்ட ஆயிரம் ஆண்டுக் காலத்தில் யூதர்களோடு பெருமளவில் முரண்பாடுகள் கொண்டிருந்தவராகக் குறிப்பிடப்படும் சேர மற்றும் பள்ள அரசர்கள், அதன் பின்னான ஐந்நூறு வருடத்தில் அதாவது பொ.ஆ.மு.500 இல், எந்தவிதத் தடயமும் இன்றி மறைந்துவிட்டதாக யூதக் குறிப்புகள் சுட்டுகின்றன. தமிழகத்தில் அதே காலத்தில்தான் அதாவது சுமார் ஈராயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில்தான் முற்கால சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் அரசு புரிந்ததாகச் சான்றுகள் சுட்டப்படுகின்றன.

ஆப்பிரிக்காவிலிருந்தும், மேற்கு ஆசியாவிலிருந்தும் அதாவது எகிப்தியம் - யூதம் - சுமேரியம் - பெர்சியம் - வட இந்தியா - தமிழகம் என தமிழர் பரவலை எடுத்துக் கொள்வதா அல்லது அதன் எதிர் திசையிலா அதாவது தென் தமிழகத்திலிருந்து - ஆப்பிரிக்காவுக்கு என எடுத்தாள்வதா? இதிலுள்ள சிக்கல், எதனால் பாகித்தான், ஆப்கானித்தான் மற்றும் ஈரான் நிலங்களில், தற்போதும்

பண்டைய தமிழ்ப் பெயர்கள் அதே வடிவத்தோடே புழங்கிவருகின்றன என்பதே. ஒன்றல்ல, இரண்டல்ல. இந்நிலங்களில் கொத்துக் கொத்தாக, கூட்டம் கூட்டமாகத் தமிழின் முன்னைப் பெயர்கள் அப்படியே வழங்கிவருகின்றன. கொற்கை, வஞ்சி, தொண்டி, முசிறி, மதுரை, பூம்புகார், காஞ்சி போன்ற தொல்பெயர்கள் அங்கும் எப்படி வழங்குகின்றன? விந்தையான செய்தியாக இப்பெயர்கள் ஆப்பிரிக்காவின் மேற்குக் கரையோர நாடுகளிலும் புழங்குவதாகச் சுட்டப்படுவது எவ்வாறு? எனில் மானுடவியல், மரபியல் ஆய்வுகள் முன்வைக்கும் ஆப்பிரிக்காவிலிருந்து மனிதப் பரவல் நிகழ்ந்தது என்பதற்கான முக்கிய மொழியியல் சான்றாக, தமிழ் மொழிப் பரவலையும் கருத்தில் கொள்ளலாமோ? ஆப்பிரிக்க மாந்தர் உலகின் பிற பகுதிகளுக்கு பரவத் தொடங்கிய அந்தத் தொல்காலத்திலேயே மொழியைத் தெளிவாக அறிந்திருந்தார் என்றும், அம்மொழி தமிழ்மொழியே என்றும் ஏன் அறுதியிடக் கூடாது? ஆப்பிரிக்காவிலிருந்து, மேற்கு ஆசியா, பின்னர் அங்கிருந்து உலகின் அனைத்துப் பகுதிகளுக்கும் பரவியிருப்பது சாத்தியமே. யூத மதம் முன்வைக்கும் இசுரேலில் மாந்த இனம் தோன்றியது என்பதை ஏற்றுக்கொண்டாலும், அந்த ஆதி மாந்தர் பேசிய மொழி தமிழ் என்பதும் பொருத்தமன்றோ.

பண்டைய அவெஸ்தா மொழியிலிருந்து தற்காலத்திய பாரசிக மொழி பெருமளவு மாறிவிட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. பாரசீகம் அரபு மொழியாலும், இசுலாமிய மதத்தாலும் பெருமளவு மாறிவிட்டதைக் கருத்தில் கொண்டு, அதன் அருகிலே அமைந்திருக்கும் அசர்பெய்ஜான் (Azerbaijan) நாட்டையும், அதன் அஜர்பெய்ஜி மொழியையும் உற்று நோக்கினால், தமிழின் பரவலுக்கு உறுதியான சான்றுகள் கிடைக்கலாமோ?

அஜர்பெய்ஜி துருக்கியத்தோடு நெருங்கிய தொடர்புடையது. அசர்பெய்ஜான் நாட்டின் அமைவிடம் மிகுந்த முக்கியத்துவமுள்ளது. கிழக்கு ஐரோப்பாவுடன் இணைப்புப் பாலமாக அமைந்திருக்கும் அஜர்பெய்ஜான், துருக்கி, ஈரான் எல்லையில் அமைந்திருப்பதோடு, காஸ்பியன் மற்றும் கருங்கடல் பகுதியிலும் குறிப்பிட்ட நாடாக இடம்பெற்றுள்ளது. மேலும் மேலே அமைந்துள்ள வோல்கா ஆற்றுச் சமவெளியோடு தொடர்பு கொள்ளும் நிலமாகவும் இருப்பதால், மக்கள் பரவலில் குறிப்பாக மேற்கு ஆசியாவிலிருந்து ஐரோப்பாவிற்கு மக்கள் இடம் பெயர்ந்ததில் முக்கியமான பங்கினை வகித்திருக்கும். ஐரோப்பிய மற்றும் ஆசியத் துருக்கிக்கு இடையில் குறுகிய கடல்பகுதி இருப்பதால் ஆரம்பகால மாந்தர்

இடப்பெயர்வில் அதாவது படகு கண்டுபிடிப்பதற்கு முந்தைய மாந்த இடப்பெயர்வில் அது தடையாகவே இருந்திருக்கும். எனில் ஆப்பிரிக்க மற்றும் மேற்கு ஆசிய தொல்குடிகள் ஐரோப்பாவிற்கு நகர்ந்திருக்க வேண்டுமெனில் காஸ்பியன் மற்றும் கருங்கடலுக்கு இடைப்பட்ட பகுதி பொருத்தமான பகுதியாக இருந்திருக்கலாம். அய்ரோப்பியர் வெள்ளைத் தோலோடு இருக்கிறார் எனில் அவரது அமைவிடமே அதற்குக் காரணமாக இருக்கலாம். அய்ரோப்பா வடபுலத்தில் அமைந்துள்ளது. வெப்பம் மிகவும் குறைவு. ஒரு தலைமுறையிலேயே தோலின் நிறம் மாறுமெனில் ஓராயிரமாண்டுக் காலத்தில் உறுதியாகத் தோலின் நிறம் மாறிவிடும். அய்ரோப்பியர் திருத்தமான முக அமைப்புக் கொண்டிருக்கிறார் எனில், அதுவும் அகமணமுறையால் சாத்தியமானதே.

மேலோட்டமான பார்வையிலேயே அசர்பெய்சாணி (Azarbaijani) மொழி, தமிழோடு நெருங்கிய தொடர்புடையதை அறிய முடிகிறது. தமிழில் போலவே அசர்பெய்சியிலும் பன்மை - கள் என்றே முடிகிறது - அவா் - அவா்கள். தமிழின் வாக்கிய அமைப்பே அசர்பெய்சியிலும் இடம்பெற்றுள்ளது. எங்கே, ஏன் போன்ற வினா வார்த்தைகள் சிறிய மாறுபாட்டோடு அப்படியே இடம்பெற்றுள்ளன. மொழி ஒப்பீட்டில் எண்ணுப் பெயர்கள் மிகமுக்கியமான சான்று எனில், அசர்பைசியின் எண்கள் தமிழோடு அச்சு அசலாக ஒத்துப்போகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்று | - | பீர் | - | Bir |
| இரண்டு | - | இகி | - | Iki |
| மூன்று | - | யுக் | - | Uc |
| நான்கு | - | தோர்ட் | - | Dort |
| ஐந்து | - | பெஸ் | - | Bes |
| ஆறு | - | ஆல்ட | - | Alti |
| ஏழு | - | எட்டி | - | Yeddi |
| எட்டு | - | செக்கிஷ் | - | Sekkiz |
| ஒன்பது | - | தொக்குஷ் | - | Dogguz |
| பத்து | - | ஓன் | - | On |

| | | | | |
|---|---|---|---|---|
| பதினொன்று | - | ஓன்பீர் | - | On bir |
| பன்னிரெண்டு | - | ஓன் இகி | - | On Iki |
| பதின்மூன்று | - | ஓன் யுச் | - | On Uc |
| பதினான்கு | - | ஓன் தோர்ட் | - | On Dort |
| பதினைந்து | - | ஓன் பெஸ் | - | On Bes |
| பதினாறு | - | ஓன் ஆல்ட | - | On Alti |
| பதினேழு | - | ஓன் எட்டி | - | On Yeddi |
| பதினெட்டு | - | ஓன் செக்கிஷ் | - | On Sekkiz |
| பத்தொன்பது | - | ஓன் தொக்குஷ் | - | On Dogguz |
| இருபது | - | இயர்மி | - | Iyirmi |
| இருபத்தியொன்று | - | இயர்மி பிர் | - | Iyirmi Bir |
| முப்பது | - | ஒதுஷ் | - | Otuz |
| நாற்பது | - | கர்க் | - | Qirx |
| ஐம்பது | - | எல்லி | - | Elli |
| அறுபது | - | ஆட்மிஸ் | - | Altmis |
| எழுபது | - | எட்மிஸ் | - | Yetmis |
| எண்பது | - | செகசென் | - | Seksen |
| தொன்னூறு | - | தொக்சான் | - | Dozsan |
| நூறு | - | யூஷ் | - | Yuz |

இருநூற்றி ஐம்பத்தி மூன்று - Iki Yuz Elli Uc.

(நன்றி - ரு.ஃபாட் தர்ஹகிலி (Rufat Dargahli, Learn Azerbaijani – Tim)

(நன்றி - துருக்கி எண்கள் - அய்லின் உஸ்போலட் - Aylin Ozpolat).

இங்கு கவனிக்க வேண்டியது அசா்பைய்சி மொழிக்கும், துருக்கியின் துருக்கியத்திற்கும் உள்ள உறவென்ன என்பது? உண்மையில் அசா்பைய்சியின்

மொழி துருக்கியத்தோடே பெருமளவு ஒத்துள்ளது. குறிப்புகளின்படி, அசப்பைசான் மொழி, துருக்கியத்திலிருந்தே தோற்றம் பெற்றுள்ளது. துருக்கியத்தின் எண்ணுப் பெயர்களும் அச்சு அசலாக இதே. கேள்வி - அருகிலிருக்கும் பெர்சியத்தைப்போல் அல்லாமல், அசர்பெய்சானின் மொழி ஏன் துருக்கியத்தை ஒத்துள்ளது? அவ்வாறே ஈரான் அருகிலிருந்தும் காஸ்பியன் கடல் நாடுகளின் மொழிகள் அந்நாடுகளிலிருந்து தொலைவிலிருக்கும் அதாவது ஈரானைத் தாண்டியிருக்கும் துருக்கியத்தை ஒத்திருப்பது எதனால்? சுற்றிலுமுள்ள நாடுகளிலிருந்து ஈரானின் பெர்சியம் மட்டும் தனித்த மொழியாகத் தோற்றம் பெற்றது எப்படி? பெர்சியமும் சமற்கிருதமும் எதனால் மிகவும் நெருக்கமாக உள்ளன?

துருக்கி ஒட்டமான் பேரரசின் தாக்கம் மத்திய ஆசியா, மேற்காசியா மற்றும் கிழக்கு அய்ரோப்பாவில் மிகுந்திருக்கும். அது மொழி உட்பட. அனைத்து விதமான பண்பாட்டுக் கூறுகளிலும் தாக்கத்தை உண்டாக்கியிருக்கும் என்பது தெளிவு.

புவியியல் அடிப்படையில், தற்போதைய அசர்பைசான் மற்றும் சார்சியா நாடுகளின் வழியாக கிழக்கு அய்ரோப்பிய நிலத்திற்குள் போவதும் வருவதும் நிகழ்ந்திருக்கும். எனில் இந்த நாடுகளின் பண்பாட்டை, மொழியை அறிவது ஒருவகையில் கிழக்கு அய்ரோப்பிய மானுடப் பரவலை அறிவதற்கும், அவர்களது மொழித் தொடர்புறவுகளைக் கண்டறியவும் உதவக்கூடும்.

மேலே சுட்டப்பட்டுள்ள துருக்கிய, அசர்பைய்சி எண்ணுப் பெயர்களைக் கவனித்தால், சிறு பிழையொன்று நிகழ்ந்திருப்பது தெரிகிறது. பத்து என்பது ஒன் எனச் சுட்டப்படுகிறது. அதற்கு மாற்றாக ஒன்பதைக் குறிக்கும் தொக்குஷ் பெயர் தமிழின் பத்துக்கு பொருத்தமாக இருக்கிறது. பத்து - தொக்கு. பத்து - தொத்து - தொக்து - தொக்குஷ். அவ்வாறே தமிழில் ஒன்று துருக்கியத்தில் பத்து அதாவது ஒன் எனச் சுட்டப்படுகிறது. ஒன்று என்பதைத் துருக்கியத்தில் பிர் என்கிறார்கள். இங்கே சிறு மாறுபாடு நிகழ்ந்திருக்கிறதோ? பூச்சியம் என்பதற்கு பிர், சிபிர், சைபர் என்கிறார்கள். உதாரணமாக அரபியில் பூச்சியம் செ.ஃ.பிர், சி.ஃ.பிர் - Sifr எனப்படுகிறது. இதை அதாவது பூச்சியத்தை முதலாவதாகக் கொண்டு, துருக்கியத்தில் எண்ணுப் பெயர்களைத் தொடங்கி விட்டார்களோ? ஆம் எனில், தமிழின் எண்ணுப் பெயர்களோடு, துருக்கியத்தின் எண்ணுப் பெயர்கள் அப்படியே பொருந்தி வருகின்றன. துருக்கியத்தின் எண்ணுப் பெயர்கள் தமிழோடு பொருத்தம் கொண்டுள்ளன எனில், எத்தகைய முடிவுகளுக்கு நாம் வரலாம்? பெர்சியத்தைத்

தாண்டியிருக்கும் துருக்கியின் எண்ணுப் பெயர்கள் தமிழோடு ஒத்திருக்க, பெர்சியத்தின் எண்ணுப் பெயர்கள் மாறுபட்டிருப்பது எதனால்?

**பெர்சிய (பார்சி) எண்ணுப் பெயர்கள்,**

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்று | - | ஏக் | - | Yek |
| இரண்டு | - | தோ | - | Do |
| மூன்று | - | சே | - | Se |
| நான்கு | - | சஹார் | - | Chekar |
| ஐந்து | - | பான்ஞ் | - | Panj |
| ஆறு | - | ஜேஸ் | - | Shesh |
| ஏழு | - | ஹாப் | - | Haft |
| எட்டு | - | ஹாஸ்ட் | - | Hasht |
| ஒன்பது | - | நோ | - | Noh |
| பத்து | - | த்தா | - | Doh |
| பதினொன்று | - | யாஸ்டா | - | Yazdah |
| பன்னிரெண்டு | - | தவாஸ்டா | - | Davazdah |
| பதின்மூன்று | - | சீஸ்டா | - | Seezdah |
| பதினான்கு | - | சஹார்டா | - | Chehardan |
| பதினைந்து | - | பாஞ்ச்டா | - | Panzdah |
| பதினாறு | - | ஷாண்டா | - | Shanzdah |
| பதினேழு | - | ஹெப்டா | - | Heftah |
| பதினெட்டு | - | ஹெஸ்டா | - | Hejdah |
| பத்தொன்பது | - | நூஸ்டா | - | Noozdah |
| இருபது | - | பீஸ்ட் | - | Beest |
| இருபத்தியொன்று | - | பீஸ்ட் டோ எக் | - | Beest - o - yek |

| | | | | |
|---|---|---|---|---|
| இருபத்தி இரண்டு | - | பீஸ்ட்டோ தோ | - | Beest - o - do |
| முப்பது | - | சீ | - | See |
| நாற்பது | - | ஸெகேல் | - | Chehal |
| ஐம்பது | - | பஞ்சா | - | Panjah |
| அறுபது | - | ஷாஸ்ட் | - | Shast |
| எழுபது | - | ஹப்டாட் | - | Haftad |
| எண்பது | - | ஹஸ்டாப் | - | Hashtaad |
| தொன்னூறு | - | நவாட் | - | Navad |
| நூறு | - | சாத் | - | Sad |
| இருநூறு | - | திவிஸ்ட் | - | Deveast |
| முந்நூறு | - | சீஸாட் | - | Seesad |
| நாநூறு | - | சஹார்சாட் | - | Cheharsad |
| ஆயிரம் | - | ஹெசார்சாட் | - | Hezarsad |

**சமற்கிருதத்தில் எண்ணுப் பெயர்கள்,**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | - | ஏகம் | - | Ekam |
| 2 | - | துவே | - | Dve |
| 3 | - | த்ரீனி | - | Trini |
| 4 | - | சத்வாரி | - | Catvari |
| 5 | - | பஞ்ச | - | Panca |
| 6 | - | ஸாட் | - | Sat |
| 7 | - | ஸப்த | - | Sapta |
| 8 | - | அஷ்ட | - | Asta |
| 9 | - | நவ | - | Nava |
| 10 | - | தஸ | - | Dasa |

11 - ஏக தஸ

12 - துவா தஸ

13 - த்ரையோ தஸ

14 - சதுர் தஸ

15 - பஞ்ச்தஸ

16 - ஷோடஸ

17 - சப்தஸ

18 - அஷ்டதஸ

19 - நவ்தஸ

20 - பிஸ்தஸ

(நன்றி - Laksya Yoga)

**வட இந்தியா மற்றும் பாகித்தானியில் பெருவாரியாகப் பேசப்படும் இந்தியில் எண்கள்**

1 - ஏக்

2 - தோ

3 - தீன்

4 - சார்

5 - பஞ்ச்

6 - சே

7 - சாத்

8 - ஆட்

9 - நௌ

10 - தஸ்

11 - கியாரா

12 - பாரா

13 - தேரா

14 - சோதா

15 - பந்த்ரா

16 - சோலா

17 - சத்ரா

18 - அட்டாரா

19 - உன்னீஸ்

20 - பீஸ்

உருது, பார்சி மற்றும் அரபு மொழிகளின் கலவை மொழியே இந்தி. அரசின் ஆதரவும், அரசியல் செல்வாக்கும் பெற்றால் ஒரு மொழி எப்படிப் பரவும் என்பதற்கு சிறந்த உதாரணம் இந்தி மொழி. தமிழ்நாடு நீங்கலாகப் பெரும்பாலான இந்திய மாநிலங்களில் பெரும் செல்வாக்குப்பெற வைக்கப்பட்டுள்ள இந்தி மொழி, கிட்டத்தட்ட இந்தியாவின் பெரிய, சிறந்த மொழியாக உலக நாடுகளில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்திமொழியால் முன்பு பிகார் போன்ற மாநிலங்களில் புகழோடு விளங்கிய போஜ்பூரி, மைதிலி போன்ற மொழிகள் பெரும் தாக்கத்தைச் சந்தித்தது குறிப்பிடத்தக்கது.

இந்திய நிலத்தில் தொல்காலம் தொட்டே புழங்கி வரும் தமிழுக்கு, உலக நாடுகளிடையே ஏன் அவ்வளவு முக்கியத்துவம், செல்வாக்கு கிடைக்கவில்லை? தமிழ்நாடு மாநிலமாக அறியப்படுவதால், உலகின் கவனத்தை ஈர்க்கவில்லை. உலகினர் இந்திய மொழி என இந்தியைத்தான் அறிவார்களே தவிர, மாநிலங்களின் மொழிகளை அவ்வளவாகக் கருதமாட்டார்கள்.

ஒரு மக்கள் கூட்டம் மேலெழும்போது அவர்களின் பண்பாடு, மொழி, உடை, உணவு, கடவுள் என அனைத்தும் மேலெழுந்து வரும். இந்தி சில நூற்றாண்டுக்குமுன் தோன்றிய கலவை மொழி எனில், இந்தியின் உருவாக்கத்திற்கு முக்கியக் காரணமான உருது மொழி?

உருது மொழி பதின்மூன்றாம் நூற்றாண்டில் உருவான கலப்பு மொழி. அதிகமான பார்சி சொற்களும், குறிப்பிட்ட அளவில் அரபுச் சொற்களும், சிறிய

அளவில் துருக்கியச் சொற்களும் கலந்து உருவானதாகச் சுட்டப்படுகிறது. உருது மொழி பெரும்பாலும் பாரசீகத் தொடர்பினால், அதன் ஆதிக்கத்தால், வடமேற்கு மற்றும் வட இந்தியாவில் உருவாகி நிலைபெற்றிருந்த மொழி வடிவம். முகலாயர் காலத்தில் மிகுந்த ஏற்றம் பெற்ற உருது, பின்னர் வந்த ஆங்கிலேயர் காலத்திலும் அலுவல் மொழி எனும் அளவிற்கு செல்வாக்குப் பெற்றிருக்கிறது. உருதுவும், இந்தியும் சேர்ந்ததே இஸ்துஸ்தானி. அதாவது மூன்று மொழிகளும் கிட்டத்தட்ட ஒன்றே எனில் மிகையாகாது.

பாகித்தான் அலுவல் மொழியாகவும், இந்தியாவின் 22 அட்டவணை மொழிகளுள் ஒன்றாகவும் மதிப்புப் பெற்றுள்ள உருதுவும், இந்தியும் ஒரே மாதிரியான எண்ணுப் பெயர்களையே கொண்டுள்ளன.

**அக்கேடியன் - பழைய பாபிலோனியத்தின் எண்ணுப்பெயர்கள்,**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | - | Tisteen | - | இஸ்டின் |
| 2 | - | Sina | - | சினா |
| 3 | - | Salas | - | சலஸ் |
| 4 | - | Erbe | - | எர்பே |
| 5 | - | Hamis | - | ஹமிஸ் |
| 6 | - | Sedis | - | சேடிஸ் |
| 7 | - | Sebe | - | செப |
| 8 | - | Samuna | - | சமுன |
| 9 | - | Tise | - | இசி |
| 10 | - | Esser | - | எஸர் |

**எபிரேயம் - பைபிள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | - | எகத் | - | Ehad |
| 2 | - | சன்னாயின் | - | Senayim |
| 3 | - | சலோஸ் | - | Salos |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | - | அர்பா | - | Arba |
| 5 | - | ஹமிஸ் | - | Hames |
| 6 | - | சீஸ் | - | Ses |
| 7 | - | செபா | - | Seba |
| 8 | - | சமூன | - | Semune |
| 9 | - | டெஸா | - | Tefa |
| 10 | - | ஐசர் | - | Eser |

**செமித்திய சிரியாக் மொழியில்,**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | - | Had | - | ஹத் |
| 2 | - | Tren | - | த்ரீன் |
| 3 | - | Tlot | - | த்லாட் |
| 4 | - | Arba | - | அர்பா |
| 5 | - | Hammes | - | ஹம்மிஸ் |
| 6 | - | Set | - | செத் |
| 7 | - | Sbe | - | ஸ்பா |
| 8 | - | Tmang | - | ட்மாண |
| 9 | - | Tsa | - | ஸா |
| 10 | - | Sar | - | அஸர் |

**செவ்வியல் அரபியில்,**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | - | Wahidun | - | வாஹிடுன் |
| 2 | - | Itnum | - | இஸ்னானிம் |
| 3 | - | Taluhm | - | தலாடும் |
| 4 | - | Arbaun | - | அர்பஹன் |
| 5 | - | Hamsun | - | ஹம்சுன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | - | Sittun | - | சிட்டுன் |
| 7 | - | Sabun | - | சபஹுன் |
| 8 | - | Tamanin | - | சமானின் |
| 9 | - | Tisun | - | திஸ்ஆன் |
| 10 | - | Asrin | - | அஸ்ருன் |

**எந்தியோப்பிய பழைய மொழியான ஜெஸ் (Geez) பேச்சுமொழியில்,**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | - | Ahadu | - | அகடு |
| 2 | - | Kaletu | - | கலிட்டு |
| 3 | - | axbatu | - | சலஸ்டு |
| 4 | - | Arbatu | - | அர்பகடு |
| 5 | - | Hamestu | - | ஹமெஸ்டு |
| 6 | - | Sedestu | - | செடிஸ்டு |
| 7 | - | Sabatu | - | செபாடு |
| 8 | - | Samanitu | - | சமானிடு |
| 9 | - | Tesatu | - | திசாடு |
| 10 | - | Asarthu | - | அசர்டு |

**எகிப்திய  எண்கள் (சமீபத்திய வடிவில்),**

| | | |
|---|---|---|
| 1 | - | ஓய் |
| 2 | - | ஸ்னோ |
| 3 | - | சொம்த் |
| 4 | - | ஸ்டொவ் |
| 5 | - | டியு |
| 6 | - | சௌ |
| 7 | - | சஸ் |

| | | |
|---|---|---|
| 8 | - | சுவீன் |
| 9 | - | சீட் |
| 10 | - | மீட் |

(நன்றி - Ancient Semitic)

**கிரேக்கத்தில் எண்ணுப் பெயர்கள்,**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | - | Ena | - | எனா |
| 2 | - | Dio | - | டியோ |
| 3 | - | Tria | - | த்ரியா |
| 4 | - | Tesera | - | தெசரா |
| 5 | - | Pende | - | பென்டே |
| 6 | - | Exi | - | எக்ஸி |
| 7 | - | Etta | - | எட்டா |
| 8 | - | Okto | - | ஒக்டோ |
| 9 | - | Enea | - | என்னேயா |
| 10 | - | Deka | - | தேகா |
| 0 | - | Meden | - | மீடன் |
| 11 | - | Endeka | - | என்டேகா |
| 12 | - | Dodeka | - | தோடேகா |
| 13 | - | Dekatria | - | டெகாத்ரியா |
| 14 | - | Dekatesera | - | தெகாதேசரா |
| 15 | - | Dekapendu | - | தெகாபென்டே |
| 20 | - | Ikosi | - | இகோசி |
| 30 | - | Trianda | - | திரியான்டா |
| 40 | - | Saranda | - | சரான்டா |

| | | | | |
|---|---|---|---|---|
| 50 | - | Peninda | - | பெனின்டா |
| 60 | - | Exinda | - | எக்ஸின்டா |
| 70 | - | Evdominda | - | எவ்டோமின்டா |
| 80 | - | Ogdonda | - | ஒக்டோன்டா |
| 90 | - | Eneninda | - | எனினீன்டா |
| 100 | - | Ekato | - | எகடோ |
| | | (நன்றி | - | Learn Greek - Christi) |

**இலத்தீனத்தின் எண்ணுப் பெயர்கள் - Cardinal - Counting Numbers,**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | - | Unus, unna, unum | - | உன்னோஸ், ஆ, உம் |
| 2 | - | Duo, Duae | - | டுவோ, டுயா |
| 3 | - | Tres, Tris | - | திரைஸ், த்ரிமா |
| 4 | - | Quattuor | - | குவாட்டோர் |
| 5 | - | Quinque | - | குயின்கை |
| 6 | - | Sex | - | சிக்ஸ் |
| 7 | - | Septem | - | செப்டம் |
| 8 | - | Octo | - | ஆக்டோ |
| 9 | - | Novem | - | நோவம் |
| 10 | - | Decem | - | டெகம் |
| 11 | - | Undecim | - | உன்டெகம் |
| 12 | - | Duodecim | - | டியோ டெகம் |
| 13 | - | Trecim | - | திரைடெகம் |
| 14 | - | Quattuordecim | - | குவாட்டர்டெகம் |
| 15 | - | Quindecim | - | குயின் டெகம் |
| 16 | - | Sedecim | - | சேடெகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 17 | - | Septendecim | - | செப்பன்டெகம் |
| 18 | - | Duodeviginti | - | டியோடிவிகண்டி |
| 19 | - | Undeviginti | - | உன்டேவிகண்டி |
| 20 | - | Viginti | - | விகண்டி |
| 21 | - | Viginti Unus | - | விகண்டி உனஸ் |
| 30 | - | Triginta | - | பரிகிண்டா |
| 40 | - | Quadraginta | - | குவாட்ரகிண்டா |
| 50 | - | Quinquaginta | - | குயின்காகிண்டா |
| 60 | - | Sexaginta | - | சிக்ஸாகிண்டா |
| 70 | - | Septuaginta | - | செப்டுகிண்டா |
| 80 | - | Octoginta | - | ஆக்டோகிண்டா |
| 90 | - | Nonaginta | - | நோனாகிண்டா |
| 100 | - | Centum | - | செண்டம் |
| 101 | - | Centum et unus | - | செண்டம் எட்டுனஸ் |
| 1000 | - | Mille | - | மில்லே |

(நன்றி - Latin Tutorial)

இலத்தீனில் இருந்து உருவானதாகக் குறிப்பிடப்படும். பிரெஞ்சியம், ஸ்பானியம் மற்றும் இத்தாலியத்தில் - ஒன்று, இரண்டு, மூன்று .

பிரெஞ்சியம் - Un, Deua, Tois

ஸ்பானியம் - Uno, Dod, Tree

இத்தாலியம் - Uno, Due, Tre

**ஜெர்மானியத்தில்,**

| | | | | |
|---|---|---|---|---|
| 0 | - | Null | - | நுல் |
| 1 | - | Eins | - | ஐன்ஸ் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | - | Zwei | - | ஜவாய் |
| 3 | - | Drei | - | த்ரைய் |
| 4 | - | Vier | - | ப்பியர் |
| 5 | - | Funf | - | ப்பின்ப் |
| 6 | - | Seehs | - | செக்ஸ் |
| 7 | - | Sieben | - | சீபன் |
| 8 | - | acht | - | ஆக்ட் |
| 9 | - | Neun | - | நைன் |
| 10 | - | Zehn | - | ஜேன் |
| | | (நன்றி | - | Learn German) |

**ஆங்கிலத்தில்,**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | - | One | - | ஒன் |
| 2 | - | Two | - | டு |
| 3 | - | Three | - | திரி |
| 4 | - | Four | - | ∴போர் |
| 5 | - | Five | - | ∴பைவ் |
| 6 | - | Six | - | சிக்ஸ் |
| 7 | - | Seven | - | செவன் |
| 8 | - | Eight | - | எயிட் |
| 9 | - | Nine | - | நைன் |
| 10 | - | Ten | - | டென் |
| | | (நன்றி | - | ராபின் (Robin) |

**சீன மொழியில் எண்கள்,**

| | | | | |
|---|---|---|---|---|
| Yi | - | ㆒ | - | ஒன்று |

| | | | | |
|---|---|---|---|---|
| Er | - | அர் | - | இரண்டு |
| San | - | சான் | - | மூன்று |
| Si | - | ஷி | - | நான்கு |
| Wu | - | வு | - | ஐந்து |
| Liu | - | லியு | - | ஆறு |
| Qi | - | சி | - | ஏழு |
| Ba | - | பா | - | எட்டு |
| Jiu | - | ஜியு | - | ஒன்பது |
| Shi | - | ஸி | - | பத்து |

சீன மொழி அரிச்சுவடியில் 47 எழுத்தக்கள் இடம் பெற்றுள்ளன. பின்யின் (Pinyin) வரி வடிவத்தில் அதாவது ரோமன் எழுத்தில் எழுதப்படும் சீன ஒலிகள் எளிமையாக, குறிப்பாக அயல் நாட்டவர் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. சீன எழுத்தில் முதலாவது மற்றும் இறுதி என எழுத்துக்கள் பிரிக்கப்பட்டுள்ளன, ஆரம்ப நிலை (Initials) எழுத்துக்களை உயிரெழுத்துக்கள் போன்று சொல்லலாம். அதில் அ, ஒ, எ, இ, உ, யு, அய், எய், உய், அவ், ஒவ், யுவ், இர், யுர், அர், அன், என், இன், உன், (An, en, in, un) அன்ங்க் (Ang), என்ங்க் (Eng), இன்ங்க் (Ing), ஒன்ங்க் (Ong) போன்ற 23 எழுத்துக்கள் உள்ளன. இறுதி எழுத்துக்களில் (Finals), பா (b), பி (p), எம் (m) போன்ற 34 எழுத்துக்கள் இடம் பெற்றள்ளன. சீன மொழி நுண்ணிய ஒலி வேறுபாடு (Tonal Language) கொண்டது. உதாரணமாக ம (ma), மா (maa), மாா (maaa), ம்மா (mma) போன்ற ஒலிகள் வேறுபட்ட பொருளுடையவை.

**ஜப்பானிய மொழியில் எண்கள்,**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | - | Ichi | - | இச்சி |
| 2 | - | Ni | - | னி |
| 3 | - | San | - | சான் |
| 4 | - | Shi | - | ஷி (Yon - யோன்) |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | - | Go | - | கோ |
| 6 | - | Roku | - | ராக்கு |
| 7 | - | Nana | - | நானா (Shichi - சிஷி) |
| 8 | - | Hachi | - | ஹச் |
| 9 | - | Kya | - | கியு (ku - கு) |
| 10 | - | Jyu | - | ஜீ (Juu) |

ஜப்பானிய அரிச்சுவடியான கிரகனா (Hirahana), சீன, சப்பானிய எழுத்துக்களை எழுதப் பயன்படுத்தப்படுகிறது. பிற மொழிச் சொற்களை எழுத கடகனா (Katakann) வரி வடிவம் பயன்படுத்தப்படுகிறது. சப்பானியத்தில் தெளிவான குறில், நெடில்கள் சுட்டப்படுகின்றன. எனினும் நெடில் எழுத்துக்கள் சேர்த்தே எழுதப்படுவதாகக் கூறப்படுகிறது.

**சப்பானிய மொழியின் உயிரெழுத்துக்கள்,**

அ இ உ எ ஒ (A I U E O). இவற்றோடு மெய்யெழுத்துக்கள் இணைந்து k, s, t, n, h, m, y, r, w, g, z, d, b, p, ky, shy, chy, ny, hy, my, gy, ju, by, py கூட்டெழுத்துக்களை உருவாக்குகின்றன. உதாரணமாக,

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | அ | இ | உ | எ | ஒ | | |
| க (k) | - | க, | கி, | கு, | கே, | கோ | - | Ka, Ki, Ku, Ke, Ko |
| ந (n) | - | ந, | நி, | நு, | நே, | நோ | - | Na, Ni, Nu, Ne, No |
| ம (m) | - | ம, | மி, | மு, | மே, | மோ | - | Ma, Mi, Mu, Me, Mo |
| கை (ky) | - | கியா, | கியு, | கியோ | | | - | Kya, Kyu, Kyo |
| பை (py) | - | பியா, | பியு, | பியோ | | | - | Pya, Pyu, Pyo |

**சப்பானியத்தின் கடகனா எழுத்து வடிவம்,**

| | | | | |
|---|---|---|---|---|
| அ | இ | உ | எ | ஒ |
| க | கி | கு | கே | கோ |

| | | | | |
|---|---|---|---|---|
| ச | சி | சு | சே | சோ |
| ட | ட்சி(chi) | டு | டே | டோ |
| ந | நி | நு | நே | நோ |
| ஹ (ha) | ஹி | ஃபூ(Pu) | ஹே | ஹோ |
| ம | மி | மு | மே | மோ |
| யா | யி | யோ | | |
| ரா | ரி | ரு | ரே | ரோ |
| ல | லி | லு | லே | லோ |
| வி | வு | அன் | | |

ஏறக்குறைய 3,03,70,000 சதுர கிலோமீட்டர்கள் பரப்பளவு கொண்ட ஆப்பிரிக்கா கண்டத்தில் 2016ஆம் ஆண்டின் கணக்கீட்டின்படி, மக்கள் தொகை 122,50,80,510 பேர்கள். சுமார் 1250 முதல் 3000 வரையிலான சொந்த மொழிகள் பேசும் ஆப்பிரிக்கக் கண்டம், மிகுந்த தனித்துவமும், இயற்கை வளமும், மனித ஆற்றலும் கொண்டது. ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய மொழிக் குடும்பமாக நைசர் - காங்கோ உள்ளது. 1500க்கும் மேற்பட்ட மொழிகள் கொண்டுள்ள நைசர் - காங்கோ, சுமார் 70 கோடிக்கும் (2015) அதிகமான மக்களால் பேசப்படுகிறது. நைசர் - காங்கோ மொழிக் குடும்பத்திலுள்ள யொருபா (Yoruba) மொழி, மேற்கு ஆப்பிரிக்காவில் அதிகம் பேசப்படுகிறது. யொருபா மொழி நைஜீரியா, பெனின், டோகோ போன்ற நாடுகளின் தேசிய மொழி.

ஆப்பிரிக்காவின் புலா (Pula), சோனா (Shona), அம்காரிக் (Amharic), செவா (Chewa), சொதோ (Sotho), சோக்சா (xhosa), ஆப்பிரிக்கன்ஸ் (Africans), இப்போ (Igbo) போன்றவை குறிப்பிடத்தக்க நைசர் - காங்கோ மொழிகள்.

ஆப்பிரிக்காவின் சகாரா பாலைக்குக் கீழே (Sub - Saharan Africa) பேசப்படும் முக்கியமான மொழியாக பாண்டு - Bantu மொழி அறியப்படுகிறது. கிழக்கு ஆப்பிரிக்காவின் சுவாகிலி மொழி (Swahili), பாண்டு மொழியின் குறிப்பிடத்தக்க மொழியாகச் சுட்டப்படுகிறது. நைசர் - காங்கோ மொழிக்

குடும்பத்தின் பாண்டு மொழிப் பிரிவின் சுவாகிலி மொழி, கென்யா, தான்சானியா, உகாண்டா. மொசாம்பிக், சாம்பியா, காங்கோ மக்களாட்சிக் குடியரசு போன்ற நாடுகளில் அதிகமும் பேசப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

வடக்கு ஆப்பிரிக்காவின் நைல் - சகாரா மொழிகள் (Nilo - sahara), மேற்கே அல்ஜீரியா முதல் பெனின் வரையிலும், மத்தியில் லிபியா முதல் காங்கோ வரையிலும், கிழக்கே எகிப்து முதல் தான்சானியா வரையிலுமாக, சுமார் பதினேழு நாடுகளில் பரவலாகப் பேசப்படும் மொழிகளாக அறியப்படுகின்றன. நைல் - சகாரா குடும்பத்தின் முக்கியமான மொழியாக கிழக்கு சூடானிய மொழி குறிப்பிடப்படுகிறது. வடக்கு, தெற்குக் கிளையாகப் பிரிக்கப்பட்டுள்ள கிழக்கு சூடானிய மொழியின், வடக்குக் கிளை மொழியான நுபியா (Nubiyyah), பழமையான வரலாறு கொண்டதாகச் சுட்டப்படுகிறது. எகிப்தியர்களைப் போன்றே மிகப் பழமையான வரலாறு கொண்ட சூடானின் நுபியன் மக்கள், மிகுந்த பண்பாடு கொண்டவர்களாக, குறிப்பாக, வில், அம்பில் மிக வல்லவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர்.

எத்தியோப்பியாவின் தனா ஏரியில் தொடங்கும் நில நைல்நதியும், தான்சானியாவின் விக்டோரியா ஏரியில் தொடங்கும் வெள்ளை நைல்நதியும், சூடான் சமவெளிகளில் பாய்ந்து, கர்தௌம் எனும் இடத்தில் ஒன்றாக இணைந்து, சூடான் மற்றும் எகிப்து நாடுகளைச் செழிப்பாக்குகிறது. நீல நைல் ஆற்றினால் எத்தியோப்பியாவும், வெள்ளை நைல் ஆற்றால் தெற்குசூடான் மற்றும் சூடான் நாடுகளும் பெரிதும் பயன்பெறுகின்றன. எகிப்தில் நைல் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அசுவன் நீர்த்தேக்கம் மிகப் பெரியதாகச் சுட்டப்படுகிறது. நீர்த்தேக்கம் கட்டியதில் இருபதுக்கும் மேற்பட்ட தொல்லியல் களங்கள் வேறிடத்திற்கு மாற்றப்பட்டதாம். சில அரிய தொல்பொருட்கள் அணைக்கட்ட உதவிய நாடுகளுக்கு பரிசாகவும் அனுப்பப்பட்டனவாம்.

நைல் நதிக்கரையின் நுபியா மொழி, பண்டைக் காலத்தில் புகழ்பெற்றதாக இருந்திருக்கிறது. எகிப்திலும், சூடானிலும் ஏற்பட்ட இசுலாமிய ஆதிக்கம், வடக்கு ஆப்பிரிக்க மக்களின் வாழ்வியலை மாற்றியதோடு, அவர்களது தொல்மொழியையும் வெகுவாக பாதித்திருப்பது கண்கூடு. சூடானிய நிலத்தில் பதினைந்தாம் நூற்றாண்டில் நிகழ்ந்த இசுலாமியத் தாக்கம் அளப்பரியதாகக்

கூறப்படுகிறது. ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய நாடாக இருந்த சூடான் தற்போது இசுலாமியர் பெரும்பான்மையான சூடான் எனவும், கிறித்தவர் அதிகமான தெற்கு சூடான் எனவும் பிரிந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆப்பிரிக்காவின் தொன்மையை தமிழர் சரியாக உள்வாங்கவில்லை எனத் தெரிகிறது. குறிப்பாக, மொழியியலில் தமிழர் ஆப்பிரிக்காவின் மொழிகளைப் பற்றி சிறுஅளவில்கூட அறிந்திருக்கவில்லை. மொழியைப் பற்றிய அறிவும், ஒப்பீட்டு மொழியிலும் மானுட வரலாற்றைப் புரிந்துகொள்ள, வெகு சிறப்பான சான்றுகளே. ஆப்பிரிக்க மொழிகளுக்கும், தமிழுக்கும் நெருங்கிய உறவிருக்கிறது என்பதை நிரூபிக்க முடிந்தால், அது மானுடப் பரவலை விளக்கும் அளப்பரிய சான்றாக அமையக் கூடும். குமரிக் கண்ட கருதுகோளுக்கும் வலுச் சேர்க்கும்.

எனில், இயல்பாகவே ஆப்பிரிக்கக் கண்டத்தின் கிழக்குப் பகுதியே தமிழ் மொழியோடு நெருங்கிய தொடர்பில் இருந்திருக்கக் கூடும். ஆனால் வியக்கத்தக்க வகையில், ஆப்பிரிக்காவின் மேற்குப் பகுதி நாடுகளின் இடப்பெயர்கள் தமிழோடு நெருங்கிய தொடர்புள்ளவையாகக் கண்டறியப்பட்டுள்ளன. இடப்பெயர்களின் ஆய்வில் ஈடுபட்டுவரும் திரு.ஆர். பாலகிருஷ்ணன் (இந்திய ஆட்சிப்பணி), மேற்கு ஆப்பிரிக்காவில் குறிப்பாக நைஜீரியப் பகுதியில் தமிழ்ப் பெயர்கள் அதிகம் இடம் பெற்றுள்ளதாகச் சுட்டிக் காட்டுவது வியப்பை ஏற்படுத்தவல்லது. உண்மையெனில், ஒரு காலத்தில் ஆப்பிரிக்கக் கண்டத்தில் தமிழ்மொழி பரவலாகப் பேசப்பட்டதாக எடுத்துக்கொள்வது பொருத்தமானதாகிவிடும். எனினும் இயல்பாக எழும் கேள்வி, பரந்து விரிந்திருக்கும் ஆப்பிரிக்கக் கண்டத்தின் மேற்குப் பகுதியில், தமிழ் மொழியின் கூறுகள் எவ்வாறு இருக்க முடியும் என்பதே. அதற்கு விடை அங்கு வாழும் பள்ளர்கள். மேற்கு ஆப்பிரிக்காவின் சகாரா பாலைவனத்திற்கு கீழே இருக்கும் நாடுகளிலும், மத்திய ஆப்பிரிக்க நாடுகளிலும், பரவலாக வாழும் மேய்ச்சல் நில மக்கள் பளார் (palaar) எனப்படுகின்றனர். அவர்கள் பேசும் மொழி ஃபுலா அல்லது ஃபுலானி (Fula or Fulani). புலா மொழி Phwla, Peulhs, Pullo, Fullah, Balejo, Poulo எனும் பல்வேறு பெயர்களில் குறிப்பிடப்படுகிறது. இந்த புலா மொழி, சகாரா பாலையில் இருக்கும் நாடுகளில் பளர் (palar) மொழி என அறியப்படுகிறது.

ஆப்பிரிக்க கிழக்குக் கடற்கரையின் சோமாலியா தொடங்கி மத்தியில் இருக்கும் காங்கோ மக்களாட்சிக் குடியரசு ஊடாக மேற்குக் கடற்கரையின் மருதானியா (Maruthania) வரைப் பரவியிருக்கும் இந்த பள்ளர் மக்கள் யார் என்பதும், அவர்கள் பேசும் புளானி மொழி தமிழோடு எத்தகைய தொடர்பைக் கொண்டுள்ளது என்பதும், மானுடவியலில், மரபியலில், மொழியியலில் குறிப்பிடத்தக்க ஒளிப் பாய்ச்சலை நிகழ்த்தக் கூடும்.

சோமாலியா, எத்தியோப்பியா, கென்யா போன்ற நாடுகளின் மொழிகள் சோமாலி, ஒரோமா மற்றும் அம்காரிக் எனக் குறிப்பிடப்பட்டாலும், இவற்றின் மொழியியல் அடிப்படையில் அம்காரியம் (Amkaric) எனும் பொதுப் பெயரில் சுட்டப்படுகின்றன. செமித்திய மொழியாகக் குறிப்பிடப்படும் அம்காரிக் எத்தியோப்பிய நாட்டின் தேசிய மொழியாக விளங்குகிறது.

சகாரா பாலையில் அமைந்திருக்கும் லிபியா, டுனிசியா, அல்ஜீரியா, மொரக்கோ, மருதானியா, மேற்கு சகாரா போன்ற நாடுகள் வடமேற்கு ஆப்பிரிக்கா அல்லது வடக்கு ஆப்பிரிக்கா அல்லது மெக்ரப் (Maghreb) என அழைக்கப்படுகின்றன. பெர்பர் (Berber) எனும் பெயரிலும் சுட்டப்படும் இப்பகுதியின் பெரும்பான்மையான மொழிகள் ஆப்பிரிக்கா - ஆசிய மொழிக் குடும்பத்தை (Afro - Asiafic) சேர்ந்தவையாக இருக்கின்றன. இப்பகுதியில் குறிப்பிட்ட அளவில் பளர் (Palar) மொழி பேசப்படுவதாகக் குறிப்புகள் சுட்டுகின்றன. வடக்கு ஆப்பிரிக்காவின் பளர் (Palar) மொழியும், மேற்கு ஆப்பிரிக்காவின் பளார் (Palaar) மொழியும் குறிப்பிட்ட அளவில் வேறுபாடு கொண்டவை எனக் குறிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. சில குறிப்புகளில் இரண்டு மொழியும் ஒன்று எனவும் சுட்டப்படுகிறது.

ஆப்பிரிக்காவின் நடுப்பகுதி, கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் பாண்டு மொழி பெருமளவில் பேசப்படுகிறது. கிழக்கில் குறிப்பாக தான்சானியா, கென்யா, உகாண்டா, ருவாண்டா போன்ற பகுதிகளில் பாண்டு மொழியான சுவாஹிலி அதிகமும் பேசப்படுகிறது. சுவாகிலியில் அரபு மொழியின் தாக்கம் அதிகம் எனச் சுட்டப்படுகிறது. காங்கோ ஆற்றுப் பகுதியில் இசிலுபா (Ishiluba), லிங்கலா (Lingala) போன்ற மொழிகள் பரவலானவையாகக் கூறப்படுகின்றன.

தென்னாப்பிரிக்காவில் சோசா (Xhosa), சுலு (Zulu), ஆப்பிரிக்கன்ஸ் (Afgricans) போன்ற மொழிகள் பெருவாரியானவை.

முபுன்டு (Mbundu) மொழியில் கிம்புண்டு (வடக்கு), உம்புண்டு (தெற்கு) என இருப்பிரிவுகள் சுட்டப்படுகின்றன. கிம்புண்டு அங்கோலா நாட்டில் அதிகம் பேசப்படுவதாகவும், அங்கோலா நாடு போர்த்துக்கீசியர் பிடியில் இருந்ததால், இங்கு போர்த்துகிசிய மொழியின் தாக்கம் அதிகம் இருப்பதாகவும் சுட்டப்படுகிறது. ருண்டி மொழி (Rundi) புருண்டி, தான்சானியா, உகாண்டா நாடுகளில் அதிகமும் பேசப்படுகிறது. சோனா (Shona) மொழி ஜிம்பாப்வே, ஜாம்பியா, போஸ்ட்வானா, மொசம்பிக் போன்ற நாடுகளில் அதிகமாகப் புழங்குகிறது. பாண்டு மொழியில் மட்டும் ஐநூறுக்கும் அதிகமான குழுக்கள் - குழு மொழிகள் இடம்பெற்றுள்ளது கவனத்தில் கொள்ள வேண்டியது.

ஆப்பிரிக்கக் கண்டத்தின் வரலாற்றையும், அதன் மக்களையும், மொழிகளையும், அவர்களின் பண்பாடுகளையும் அறிவது அத்தனை எளிதன்று. அதுவும் ஆப்பிரிக்காவோடு எந்தவிதமான நேரடியான அனுபவங்களோ, பயணமோ இல்லாமல், வெறுமனே விக்கிபீடியா, யூடியுப் போன்ற தளங்களின் தகவல்களைக்கொண்டு முடிவுகளுக்கு வருவது பொருத்தமுடையதாகாது. அங்கே மக்கள் நெருக்கியும் வாழ்கிறார்கள். மக்கள் வாழாத பகுதிகளும் அதிகமுண்டு. ஒருபுறம் தினமும் மழை (காங்கோ காடுகள்). மறுபுறம் பத்தாண்டுகள்கூட ஒரு துளி மழைகூடப் பெய்யாத பாலைப் பகுதிகள். ஆயிரம்பேர் மட்டுமே பேசக் கூடிய மொழிகள் உண்டு. கோடிக்கணக்கானோர் பேசக்கூடிய மொழிகள் உண்டு. வெள்ளை ஆப்பிரிக்கர் முதல் மாநிறமான, கருப்பான, அடர்கருப்பான ஆப்பிரிக்கரும் அங்கே வாழ்கிறார்கள். அனைத்து ஆப்பிரிக்கரும் தட்டையான மூக்கைப் பெற்றிருக்கவில்லை. மூக்கில்கூட ஏராளமான வேறுபாடுகள் உண்டு. கென்யர்கள் மிகவும் உயரமானவர்கள் எனில் காங்கோ காடுகளில் வாழும் ஜிப்சி மக்கள் மிகவும் உயரம் குறைந்தவர்கள். ஒரு பக்கம் நவநாகரீக உடையணிந்தவர்கள், மறுபக்கம் தற்போதும் ஆடையணியாத பழங்குடிகள்.

ஆப்பிரிக்கா இந்தியாவைப்போல் பத்து மடங்கு பெரியதான நிலம் கொண்டது. எனினும் இந்தியாவைவிட ஒட்டுமொத்த ஆப்பிரிக்கர்களின் எண்ணிக்கை குறைவு. இந்திய நிலத்தில் இன வேறுபாடு இல்லையெனினும், சாதிய

வேறுபாடு பெருமளவில் உண்டு. ஆப்பிக்காவில் சாதி போன்றவை சுட்டப்படாவிட்டாலும், இனம், குழு போன்றவை பெரியளவில் இருப்பது தெரிகிறது. இன்னும் அங்கே மக்கள் இனங்களாக, குழுக்களாக, பிளவுபட்டு இருப்பதை பதிவுகள் சுட்டுகின்றன.

ஆப்பிரிக்கக் கண்டத்தின் மக்கள் எளிமையானவர்கள், எளிதானவர்கள், இளகிய மனம் கொண்டவர்கள் என்பதால், அங்கே சற்று புத்திக் கூர்மையுள்ளவர்கள் பெருமளவில் நிலமும், பிற வசதிவாய்ப்புகளும் பெற்றுள்ளார்கள் என்பதை பதிவுகள் வழியாக அறிய முடிகிறது. குறிப்பாக, நிலங்கள் அங்கு முறையாகப் பகிர்ந்தளிக்கப்படவில்லை எனத் தெரிகிறது. நிலமில்லாதவர் பிறரால் எளிதில் சுரண்டப்பட முடியும் என்பதே உலக நியதி.

ஆப்பிரிக்காவை இந்தியாவோடு ஒப்பிடுவது பொருத்தமாக இருக்கும். இந்தியாவும் ஏராளமான மொழிகள், பலதரப்பட்ட பண்பாடுகள், ஏற்ற தாழ்வான வாழ்வியல் முறைகள், பல்வேறு மதங்கள், குழுக்கள் என மிகப்பெரிய வேறுபாட்டைக் கொண்டிருந்தாலும், இங்கு மிகப்பெரிய வன்முறைகள், அழிப்புகள், மோதல்கள், நிகழ்ந்ததாக வரலாறு இல்லை. குறிப்பாக, சுதந்திரம் அடைந்தபின் முற்றாக இல்லை எனலாம். சிறியளவில் அங்கொன்றும், இங்கொன்றுமாக மோதல்கள், வன்முறைகள் நிகழ்ந்துள்ளனவேயொழிய, மொழி, மதம், இனம், சாதி ரீதியிலான மிகப்பெரும் வன்முறைகள் நிகழவில்லை. அவ்வாறே மிகப் பெரியளவிலான இடமாற்றங்களும், அதாவது மோதல்களினால் ஏற்படக்கூடிய இடப்பெயர்கள் நிகழவில்லை.

எனினும் சுதந்திரத்திற்குப் பின்னான இந்தியா - பாகித்தான் பிரிவினையின்போது ஏற்பட்ட அந்த கொடிய நிகழ்விற்குக் காரணமென்ன? மதம் எனில் மிகையாகாது. மதத்தின் பெயரால், மொழியின் பெயரால் தமக்கு அநீதி இழைக்கப்படுகிறது எனும் பெயரில் மக்கள் திரளை ஒன்றுகூட்டி எளிதில் உணர்ச்சியைத் தூண்டிவிடலாம் என்பது வரலாறு. ஆப்பிரிக்காவில் தற்போதும் நிகழும் பெரியளவிலான வன்முறைகள் அதைத்தான் சுட்டுகின்றன. ஆப்பிரிக்கர்களுக்கு, குறிப்பாக வன்முறையைக் கையிலெடுப்பவர்களுக்கு, கொடூர ஆயுதங்களை வாங்குவதற்கான பணம் எங்கிருந்து கிடைக்கிறது? ஆப்பிரிக்க குழுச் சண்டைகளில, கலவரங்களில் பயன்பெறுபவர்கள் யார்?

விடை எளிது. உலகின் பல நாடுகளும் கள்ளத்தனமாக ஆப்பிரிக்கக் குழுக்களுக்கு ஆயுதங்களைக் கொடுக்கின்றன. இதனால் அவர்களுக்கு என்ன லாபம்? ஆப்பிரிக்காவில் கொட்டிக் கிடக்கும் இயற்கை வளங்கள் எனில் மிகையாகாது. எளிய உள்ளம் படைத்த ஆப்பிரிக்கர்கள் தலைவர்களாவதால், அவர்களை புத்திசாலி நாடுகள் தங்களது கைப்பாவையாக மாற்றிவிடுவது எளிதில் நடக்கிறது. பெரும்பாலான ஆப்பிரிக்க நாடுகளில் தரமான, சரியான அரசியல் தலைவர்கள் இல்லாதது, உருவாகாதது பெருங்குறை. இதை இந்திய நிலைமையுடன் ஒப்பிடலாம். இங்கும் சமீப ஆண்டுகளில் கொள்கையே பெரிது எனச் செயல்படும் அரசியலாளர்கள் அரிதாகிவிட்டனர். இன்னும் சொல்லப் போனால், அத்தகைய அரசியலாளர்கள் சமீப காலங்களில் அறவே இல்லை என்றே சொல்லிவிடலாம். தற்காலத்திய அரசியலாளர்களுக்கு தேர்தல்வெற்றி மட்டுமே ஒரே குறிக்கோள். தேர்தலில் ஏன் வெற்றி எனில் அரசியல் அதிகாரம் பெறுவதே. அரசியல் அதிகாரம் பெற்றுவிட்டால் அனைத்தையும் பெற்றுவிடலாமல்லவா? அரசியல்வாதிகளை யார் கேள்வி கேட்பது?

இந்தியா போன்ற நீண்ட அரசியல் அனுபவம் கொண்ட நாட்டிலேயே, காந்தி நேரு, அம்பேத்கார் போன்ற ஆகச் சிறந்த அரசியலாளர்கள் தடம்பதித்த இந்தியத் திருநாட்டிலேயே, மிகச்சரியான, ஆகச்சிறந்த, தரமான, அனைவருக்குமான அரசியலை முன்னெடுக்க இயலவில்லை எனும்போது, ஆப்பிரிக்க நாடுகளில் எப்படி முடியும்? ஆப்பிரிக்காவில் மிகச்சிறந்த அரசியல் தலைவர்கள் உருவாவார்கள் என்பதை எப்படி எதிர்பார்க்க முடியும்? எனினும் அங்கும் சிறந்த, பெருமைக்குரிய அரசியல் தலைவர்கள் இருக்கத்தான் செய்திருக்கிறார்கள். தற்போதும் இருக்கிறார்கள். என்றாலும் அவர்களால் ஆதிக்க நாடுகளின் நிர்ப்பந்தங்களுக்கு அடிபணியாமல் இருக்க முடியவில்லை போலும்.

அரபுக்காரர்கள் புத்திசாலித்தனம் மிக்கவர்கள். தங்கள் நாடுகளில் இயற்கையாகக் கிடைக்கும் எண்ணெய் வளத்தை எவ்வளவு புத்திக் கூர்மையோடு விற்கிறார்கள்? தங்களுக்குள்ளேயே ஒரு அணியாகத் திரண்டு, உலக நாடுகளின் எண்ணெய்த் தேவையை எவ்வளவு நுட்பமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்? எப்பொதும் எரிபொருளுக்கான தேவையை உருவாக்கிக்கொண்டே இருக்கிறார்கள். அதிகமாகவும் எண்ணெய்யை உறிஞ்சுவதில்லை. அப்படிச் செய்தால் விலை குறையுமல்லவா? இயற்கையின் அருங்கொடையான எண்ணெய்

விற்பனையில்தானே அரபு நாடுகள் செல்வச் செழிப்பில் திளைக்கின்றன. பாலை நிலத்தில், மண் வீடுகளில் வாழ்ந்த பெருவாரியான அரபு மக்கள், இன்று பலமாடிக் கட்டிடங்களில் ஜில்லென்ற குளிர்சாதன வசதியில் வளமாக வாழ்கிறார்கள் எனில் அதற்கு எண்ணெய்தானே காரணம்.

அரபுக்காரர்களைப்போன்று ஆப்பிரிக்கர்களும் ஏன் ஒன்றாகத் திரள முடியவில்லை? அரபுபோன்றே ஆப்பிரிக்காவிலும் எண்ணெய் வளம் கொட்டிக் கிடக்கிறது. ஆப்பிரிக்க நாடுகள் தங்களது எண்ணெய் வளத்தைச் சரியாகப் பயன்படுத்தினால் உலகின் எண்ணெய் விலையும், எரிவாயு விலையும் மிகக் கணிசமாகக் குறையும் என்பது திண்ணம். எதனால் அது நிகழவில்லை? அதைத் தடுப்பது யார்? இங்குதான் அரசியல் இருக்கிறது. உலகின் அரசியல் மிகவும் சுயநலமாக இயங்குகிறது. வல்லரசு நாடுகள், முன்னேறிய நாடுகள் அனைத்திலும் தங்கள் நாடு, தங்கள் மக்கள், அவர்களது வசதியான வாழ்க்கை குறித்து மட்டுமே சிந்திக்கின்றன, செயல்படுகின்றனவேயொழிய, அனைத்துலகிற்கும், அனைத்து மக்களுக்குமான நல்வாழ்விற்கு சிந்திப்பதில்லை, செயல்படுவதில்லை. உலகின் பல நாடுகளும் அவரவர் மக்களுக்கு மிகவும் ஆடம்பரமான, சுயநலமான, பேராசையான வாழ்க்கை முறைகளைக் கற்றுக் கொடுத்துவிட்டன. இனி அந்த வாழ்வில் எற்படும் மாற்றங்களை அவர்களால் தாங்க இயலாது என்பதே எதார்த்த நிலை. குளிர்சாதன வாழ்க்கைக்குப் பழகிவிட்டார். அது இல்லையெனில் என்னாவார்? அதைத் தக்கவைத்துக்கொள்ள அன்னார் என்ன வேண்டுமானாலும் செய்வாரன்றோ?

அரபு மற்றும் அய்ரோப்பிய பேராசைக்கு, ஆப்பிரிக்கக் கண்டம் பலியாக்கப்பட்டதெனில் மிகையாகது. ஆப்பிரிக்கக் கனிமவளம் கொள்ளையிடப்படுவதாக பெரும்பாலான ஆப்பிரிக்கரின் பதிவுகள் சுட்டிக் காட்டுகின்றன. ஆயிதக் குழுக்களால் கட்டுப்படுத்தப்படும் ஆப்பிரிக்க கனிம வளம், பல்வேறு நாடுகளால் சட்டவிரோதமாக சொற்ப பணம் கொடுத்து வாங்கப்படுவதாக பதிவுகள் சுட்டுகின்றன. இத்தகைய சட்டவிரோத கனிமக் கொள்ளை மூலமான பணமே, ஆயுதக்குவிப்பில் கொட்டப்படுகிறதாம். நவீன ஆயுதங்கள் வைத்திருக்கும் கும்பல், அரசியல் அதிகாரம் பெற்று, அனைத்து விதங்களிலும் மக்களைச் சுரண்டுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

மாடு மேய்க்கும் ஆப்பிரிக்கர் எதற்காக ஏ.கே.47 துப்பாக்கி வைத்திருக்க வேண்டும்? முன்னர் ஆப்பிரிக்கக் கண்டத்தில் மேய்ச்சல் நிலம் அபரிமிதமாக இருந்திருக்கும். அன்றைக்கு ஆயிரக்கணக்கான மாட்டு மந்தைகள் சுதந்தரமாக மேய்ந்து திரிந்திருக்கும். பாசன வசதிகள் பெருகி பயிர்தொழில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டுவரும் தற்காலத்திய ஆப்பிரிக்காவில், பாரம்பரிய மேய்ச்சல் வாழ்க்கை சாத்தியமாவது கடினமல்லவா? எனினும் தற்போதும் மேய்ச்சல் வாழ்க்கையைக் கொண்ட ஆப்பிரிக்கர் ஏராளமாக இருப்பதாகப் பதிவுகள் சுட்டுகின்றன. வருடம் முழுதும் உழைத்து, கண்ணும் கருத்துமாகப் பராமரிக்கப்படும் வயலை, மாடுகள் மேய்ந்து அழித்துவிட்டால், அந்த விவசாயி என்ன செய்வார்? அவரால் தட்டிக் கேட்கவும் முடியாதாம். மேய்ச்சல்காரரிடம் இருப்பது நவீன துப்பாக்கியல்லவா. இப்படியான மேய்ச்சல் - வேளாண்மை மோதல்கள் ஆப்பிரிக்க நாடுகள் தோறும் பெருமளவில் நடைபெறுவதாகக் குறிப்புகள் சுட்டுகின்றன. குறிப்பாக ஃபுலா மக்கள் அதிகம் வாழும் மேற்கு மற்றும் நடு ஆப்பிரிக்க நாடுகளில் மேய்ச்சல் நிலத்தை முன்னிட்டு பெரியளவில் உயிரிழப்புகள் நிகழ்வதாக காணொளிகளின் பின்னூட்டங்கள் சுட்டுகின்றன.

தற்போதும் ஆப்பிரிக்காவில் நாடோடி மேய்ச்சல் இனங்கள் பெரிய எண்ணிக்கையில் இருக்கின்றனர். அவ்வாறே நவீன நாகரிகத்தை எட்டாத பழங்குடி வேட்டைச் சமூகமும் இருக்கிறது. பயிர்த்தொழிலில் சிறந்த ஆப்பிரிக்காவும் உள்ளது. மிக நவீனமான கோட்சூட் அணிந்த ஆப்பிரிக்கர்களும், வணிகத்தின் மூலம் பெருந்செல்வம் ஈட்டும் மில்லினர் ஆப்பிரிக்கர்களும் உண்டு. இத்தகைய கலந்துபட்ட வாழ்க்கை முறையில், பல்வேறு சிக்கல்கள், வேறுபாடுகள் எழுவது இயற்கையானதுதான். இதற்கு முன்பும் இப்படியான சிக்கல்கள் இருந்தபோதும், அவை வன்முறையை நிகழ்த்தவில்லை, உயிரிழப்புகளை, நிகழ்ந்தவில்லை என்பது அறியத்தக்கது. குறிப்பாக ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு முன்புவரைக்கும் கூட, ஆப்பிரிக்கக் கண்டம் அனைத்து மனிதர்களுக்கும், பல்வேறு வாழ்வியல் நிலைகொண்ட அனைத்து சமூகங்களுக்கும் பொதுவானதாகவே இருந்து வந்திருக்கிறது. எத்தகைய கடினமாக சூழ்நிலையிலும் ஆப்பிரிக்கக் குடிகள் ஒருவரையொருவர் அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதேயில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. ஏதோ ஒருவிதத்தில் ஒன்றாக இணைந்து வாழ்ந்த ஆப்பிரிக்க மக்களால், தற்போது ஏன் ஒன்றாக, ஒற்றுமையாக வாழ இயலவில்லை என்பது சிந்திக்கத்தக்கது. ஏனெனில் அன்று மதங்கள் இல்லை. மதத்தை முன்னிட்டு

பழைய ஆப்பிரிக்கர்களுள் மோதல்கள், வன்முறைகள், வெறுப்புகள் இல்லை. தற்போதோ ஆப்பிரிக்காவின் அந்த எளிய மக்கள், இருபெரும் மதங்களுக்குள் மாட்டிக்கொண்டு அல்லாடுகிறார்கள். இசுலாமும், கிறித்தவமும் போட்டி போட்டுக்கொண்டு எளிய மனம் கொண்ட ஆப்பிரிக்க மக்களை, மத, மொழி, இன வெறி கொண்ட கொடூரர்களாக மாற்றி வருவது கண்கூடு. வடக்கு ஆப்பிரிக்கா இசுலாமிய ஆப்பிரிக்காவாகவும், தெற்கு கிறித்தவ ஆப்பிரிக்காவாகவும் மாற்றப்பட்டு விட்டதெனில் மிகையாகாது. சமீப காலமாக சீர்திருத்தக் கிறித்தவம் ஆப்பிரிக்க நிலத்தில் முன்னெடுத்தவரும் மாற்றங்கள் சகிக்காதவை. ஏற்கனவே பல்வேறு குழுக்களாகச் சிதைந்துள்ள ஆப்பிரிக்கர்களை, சீர்திருத்த கிறித்தவமும் அதன் பங்குக்கு மேலும்மேலும் பிரித்து மோதல்களைத் தூண்டி விடுகிறது. நாடோடி புலா மக்கள் மேலான வெறுப்பிற்கு அவர்கள் அனைவரும் இசுலாம் சமயத்தவராக இருப்பதும், நைஜீரியா போன்ற நாடுகளில் அவர்களுக்கு எளிதாக ஆயுதங்கள் கிடைப்பதும் ஒரு காரணமாகச் சுட்டப்படுகிறது.

தமிழ் நிலத்தில் இன்றைக்கு வேட்டையாடி பிழைக்கும் மக்கள் கூட்டம் இல்லை என உறுதியாகச் சொல்லலாம். தற்போதும் வேட்டைச் சமூகங்கள் எலி, முயல் போன்ற சிறிய விலங்குகளை குறிப்பிட்ட அளவில் வேட்டையாடுகின்றன. எனினும் அவை மிகக் குறைவானவை. பொழுதுபோக்காகவும் செய்யப்படுகின்றன என்பதைக் கவனிக்க வேண்டும். பழைய வேட்டைச் சமூகங்கள் பயிர்த்தொழில் சார்ந்த உழைப்பாளிகளாக பல காலத்திற்கு முன்பே பண்பட்டு விட்டனர். அவ்வாறே மேய்ச்சல் வாழ்க்கையும் தமிழ் நிலத்தில் தற்போது நடைமுறையில் இல்லை. குறிப்பாக சுதந்திரத்திற்கு முன்பு வரைக்கும்கூட பெருமளவிலிருந்த நாடோடி மேய்ச்சல் வாழ்க்கைமுறை, தற்போதோ முற்றாக இல்லாமலாகிவிட்டது. தற்போதும் மாடுகள் உள்ளதெனினும் அவை குறிப்பிட்ட ஊர்களிலேயே வளர்க்கப்படுகின்றன. மாடுகள் மந்தைகளாக ஊர் ஊருக்கு மேய்ந்தபடியே கொண்டு செல்லப்படுவதாகக் குறிப்புகள் இல்லை. சிறிய அளவில் இருக்கலாம். ஆட்டு மந்தைகள் உண்டெனினும் அவையும் முன்புபோல் பெரும் எண்ணிக்கையில் இல்லை. வெகு தூரங்களுக்கும் ஆட்டு மந்தைகள் இடம் பெயருவதும் இல்லை.

மாறாக, ஆப்பிரிக்க நிலத்தில் தற்போதும் வேட்டைச் சமூகங்களும், மேய்ச்சல் சமூகங்களும் அதிகளவில் உள்ளன. வேட்டையாடுதல் சட்டப்படி தவறு என்றாலும், சட்டம் அங்கு கடுமையாக பின்பற்றப்பட இயலாத நிலைமையுள்ள

நாடுகளில், வேட்டையாடுதல் மூலமான உணவுபெறுதல் நிகழ்வதாகவே பதிவுகள் சுட்டுகின்றன. ஆப்பிரிக்காவின் மத்திய, கிழக்குப் பகுதிகளின் சவன்னாப் புல்வெளிகள் மேய்ச்சலுக்கு உகந்த பகுதியாக இருப்பதால், தற்போதும் மேய்ச்சல் வாழ்க்கையில் பெருமளவு மனிதர்கள் ஈடுபட்டுள்ளனர். எனினும் நிலச் சீர்திருத்தம் காரணமாக அங்கே, கிராமங்களும், அதைச் சார்ந்த பயிர்த்தொழில் வாழ்க்கையும் மேம்பட்டு வரும் சூழலில், மேய்ச்சல் - பயிர்த்தொழில் சமூகங்களுக்கிடையே மோதல்கள் நிகழ்வது தடுக்கயியலாததாகி விடுகிறது. முன்பு மிகவும் எளிய மக்களாகவும், அன்பான மக்களாகவும் அறியப்பட்ட மேய்ச்சல்காரர்கள், தற்போது கொடூரமானவர்களாகச் சித்தரிக்கப்படுவதன் பின்னணி இதுவே.

ஆப்பிரிக்கர்கள் தங்களது அபரிமிதமான நீர் வளத்தை, தற்போது முறையாகப் பயன்படுத்தத் துவங்கியிருக்கிறார்கள். ஆப்பிரிக்காவின் மிகப்பெரும் ஆறுகளான நைல், காங்கோ, நைசர், செனகல், சாம்பசி, லிம்போபா, ஆரெஞ்சு போன்ற பல ஆறுகளிலும், நீர்ப்பாசன வசதிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் பாசனம் அதிகரிப்பதோடு, குடிநீர், மின்சாரம் போன்றவையும் கிடைக்கப்பெறுகின்றன. வேளாண்மைப்பரப்பு அதிகரிப்பது எனில் மேய்ச்சல் நிலத்தைக் குறைக்கிறது என்றே பொருள். முன்னர் காடுகள் மேய்ச்சலுக்கே பெருமளவில் பயன்பட்டிருக்கும். நவீன சூழலில் பெருவாரியான காடுகள் வனவிலங்குகளின் புகலிடங்களாகப் பாதுகாக்கப்பட்டு வருவதால், அதனை முன்னிட்டும் மேய்ச்சல் நிலம் சுருங்குகிறது. எளிய வாழ்க்கைமுறை கொண்ட ஆப்பிரிக்கருக்கு, மேய்ச்சல் மூலமான வருவாயே போதுமானதாக இருக்கும். அவரது மேய்ச்சல் நிலம் சுருங்குவது அவரது வாழ்வை கேள்விக்குள்ளாக்குகிறதல்லவா. எப்படித்தான் கவனமாக மந்தைகளை ஓட்டினாலும், விளைநிலங்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க இயலாது. விளைவோ மோதலில் முடிகிறது. பயிர்த்தொழில் செய்பவர்கள் மேய்ச்சல்க்காரர்களின் தற்காலிகக் குடியிறுப்புகளை அழிக்கிறார்கள். மேய்ச்சல்க்காரர்களோ நவீன ஆயுதங்களை வாங்கிக் கொள்கிறார்கள். விளைவாக நாடுகள் திணறுகின்றன. சிறுமோதல்கள்கூட அதீத ஊடகக் கவனம் பெற்று, இசுலாமியர் அழிக்கப்படுவதாகவும், கிறித்தவர் பாதிக்கப்படுவதாகவும் செய்திகள் பரப்பப்படுகின்றன.

ஆப்பிரிக்க இனக்குழு மோதல்களில் வேட்டை - மேய்ச்சல் - வேளாண்மை எனும் மோதல் போக்கையும் கவனத்தில் கொள்ள வேண்டும். பாதிக்கப்படும் மக்கள்திரள் நகரங்களுக்கு இடம் பெயர்கிறது. உலகமெங்கும் நடைபெறும் நகரமயமாக்கம் ஆப்பிரிக்காவிலும் நிகழ்கிறது. நகரங்களில் போதுமான இடங்களோ, வாய்ப்புகளே கிடைக்காத நிலையில், பல்வேறு சமூக அவலங்கள் நிகழ்கின்றன. திருட்டும், பாலியல் சுரண்டலும், போதையும் அதிகரிக்கும் ஆப்பிரிக்க நகரங்கள் குற்றங்களின் இருப்பிடங்களாக மாறிவருகின்றன.

ஆப்பிரிக்கர்களின் சமீபத்திய ஏராளமான பதிவுகள் வியப்பான ஒரு செய்தியை அளிக்கின்றன. அதாவது பெரும்பாலான பதிவுகள் தாங்கள் எந்த இனம் என்பதை அறிய டி.என்.ஏ. சோதனை செய்ததாகச் சுட்டுகின்றன. குறிப்பாக, சிலநூற்றாண்டுகளுக்கு முன்னர் அமெரிக்கா போன்ற வெளிநாடுகளுக்குக் கடத்தப்பட்ட ஆப்பிரிக்கர்களின் வழித்தோன்றல்கள், தங்களது முன்னோர்களை அறிய, தங்கள் முன்னோர் எந்த ஆப்பிரிக்க நாட்டவர் என அறிய, அவர்களின் தாய்மொழி எது எனக் கண்டறிய, இத்தகைய மரபியல் சோதனைகளைச் செய்து, தாங்கள் இந்த இனத்தவர், இன்ன இனத்தவரோடு தமது மரபணு அதிக நெருக்கம் கொண்டுள்ளது என்பதை அறிவித்துள்ளனர். பெருவாரியான பின்னூட்டுகளில், அவற்றின் உரையாடல்களில், டி.என்.ஏ. சோதனையின் முடிவுகள் கேட்கப்படுகின்றன, அதைப்பற்றிய விளக்கங்கள் கோரப்படுகின்றன. இது ஒரு அபாயகரமான போக்கு என்பதை அன்னார்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

இத்தகைய டி.என்.ஏ. ஒப்பீடுகள், சோதனைகள், ஆப்பிரிக்காவின் இயல்பை அடியோடு மாற்றும் வல்லமை கொண்டவை. இதையே வரும் காலங்களில் அனைத்து மக்களுக்குமான அளவுகோலாகக் கொண்டால் என்னாகும்? குறிப்பிட்ட நாட்டில் அனைவரும் டி.என்.ஏ. சோதனை மேற்கொள்ள வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கினால், டி.என்.ஏ.சோதனையின்படி, ஒரு குறிப்பிட்ட மக்கள் திரள் மட்டுமே ஒரு நாட்டைச் சொந்தமாக்க முயன்றால், மிகமிக மோசமான விளைவுகள் உண்டாகும் என்பது தெளிவு.

தற்போதைய உலகில் எந்த மக்கள் கூட்டமும் தாங்கள் தனித்துவமானவர்கள், தூய்மைனவர்கள், அசலானவர்கள் என உரிமை கொண்டாட முடியாது என்பது திண்ணம். மக்கள் பழங்காலத்திலிருந்தே பழகி வாழ்ந்திருக்கிறார்கள். போர்களினாலும், மேம்பட்ட வாழ்க்கைக்காகவும் மக்கள்

கூட்டம் கூட்டமாக இடம் பெயர்ந்தே வந்துள்ளார்கள். படையெடுப்புகளின் வெற்றிகள் பெண்களை பலவந்தமாகப் புணர்கின்றன எனில் மிகையாகாது. அன்றைக்கு இப்படியான மனிதக் கலப்பும் அதிகளவில் நடந்தேறியிருக்கும். அடிமைகளாகப் பிடிக்கப்படலாம், அவர்களை எத்தகைய சுரண்டலுக்கும் ஆட்படுத்தலாம் என்பதும் நடைமுறையில் இருந்திருக்கும்போது, மரபணு சோதனை பண்ணி எவ்வாறு இனத் தூய்மையை அறிய முடியும்? அப்படி அறிவதால் யாருக்கு என்ன பயன்? ஒருவர் மரபணு சோதனை செய்துதான் தான் இன்னார், இன்ன இனத்தவர் என்பதை நிரூபிக்க வேண்டுமா?

ஆப்பிரிக்கர்கள் கருப்பு எனப் பொதுப் புத்தியில் உறைந்துள்ளது. எனினும் ஆப்பிரிக்கர்கள் வெள்ளை முதல் அடர் கருப்பு வரை பல்வேறுபட்ட நிறங்களில் இருக்கிறார்கள். அரபின் தாக்கத்தால் வட ஆப்பிரிக்காவின் மக்கள் வெள்ளையாக உள்ளனர். சோமாலியா, எத்தியோப்பியா போன்ற நாடுகளின் மக்கள் அதாவது குசைட்டுகள் சற்றே நிறம் கொண்டுள்ளனர். நடுஆப்பிரிக்காவின் மனிதர்கள், குறிப்பாக காங்கோ காடுகளின் மனிதர்கள் அடர்கருப்பாக இருக்கிறார்கள். தெற்கு ஆப்பிரிக்காவில் சற்றே நிறம் மாறுபட்டுக் காணப்படுகிறது. அவ்வாறே தோலின் தடிமனும், மூக்கின் நீளமும், முடியின் அமைப்பும் பல்வேறு விதங்களில் அமைந்துள்ளன. இவ்வேறுபாடுகளை ஆப்பிரிக்கர் அல்லாதவர் எளிதில் அடையாளம் காண இயலாதெனினும், அங்கேயே பலகாலம் வாழும் ஆப்பிரிக்கர்களால் எளிதில் அறிய இயலுமல்லவா? இப்படியான அடையாளம் கண்டே, அங்கே எளிதாக இனமோதல்கள் அரங்கேறுகின்றன. இந்நிலையில் டி.என்.ஏ. சோதனையும் சேருமானால், அது ஆகப்பெரும் அழிவுகளை உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இத்தகைய நிலையிலேயே ஆப்பிரிக்கர்களை தமிழரோடு ஒப்பிடுவதையும் அடையாளம் காணுவதையும் மிகுந்த எச்சரிக்கையோடு செய்ய வேண்யுள்ளது. குறிப்பிட்ட ஆப்பிரிக்க மக்கள் தமிழரோடு நெருங்கியுள்ளனர், அடையாளம் கொண்டுள்ளனர் எனில், அவர் ஆப்பிரிக்கர் அல்லாதவர் எனும் நிலைக்கு எளிதில் ஆளாக்கப்படலாம். உலகமெங்கும் உரக்க ஒலிக்கப்படும் மண்ணின் மைந்தர் கோசத்திற்கு ஆப்பிரிக்கரும் விதிவிலக்கல்ல. சொல்லப்போனால் கூடிவாழ்ந்த ஆப்பிரிக்கர்களை இத்தகைய மண்ணின் மைந்தர் கோசங்களே வெறிகொண்டு எழச் செய்கின்றன.

உதாரணமாக, மேற்கு ஆப்பிரிக்க நாடுகளான நைஜீரியா, கினியா, செனகல், மாலி, கேமரூன், நைஜர், புர்கின ஃபசா மருதானியா, கானா, பெனின், கினியா - பெசா, காம்பியா, சியாரா லியோன், டோகோ போன்ற நாடுகளிலும், நடுப்பகுதி நாடுகளான சாட், காங்கோ மக்களாட்சிக் குடியரசு, சூடான், போன்ற நாடுகளிலும் பரவி வாழும் ஃபுலா (Fula) மக்களின் மொழியும், கலாச்சாரமும், வாழ்க்கை முறையும் சொந்த ஆப்பிரிக்க - Native மக்களைவிட வேறுபட்டிருப்பதாகப் பதிவுகள் சுட்டுகின்றன. எனில், இவர்களை சொந்த ஆப்பிரிக்கர், ஆப்பிரிக்கர் அல்லாதவர் எனும் வரையறைக்குள் கொண்டு வந்துவிட வாய்ப்புகள் எழுகின்றன. நாடோடி மேய்ச்சல் சமூகமான ஃபுலா மக்கள், எப்போதிலிருந்து ஆப்பிரிக்காவில் வாழ்கிறார்கள் எனில் மிகப் பழங்காலத்திலிருந்து என்பதே பதில். மேய்ச்சலை வாழ்க்கையாகக் கொண்டதென்பதால் நிச்சயம் தொல் சமூகத்தவராகவே இருக்க முடியும்? இவரை எப்படி ஆப்பிரிக்கர் அல்லாதார் எனக் கருத முடியும்?

தமிழரின் மானுடப் பரிணாமம், கலாச்சாரப் பரிணாமம் என்பது வேட்டை - மேய்ச்சல் - பயிர்த்தொழில் என்பதே. வேட்டையில் மீன் பிடித்தலையும் சேர்த்துக் கொள்ளலாம். மீன் பிடித்தலும் சிறந்த வேட்டைதானே. ஆப்பிரிக்க புலா மக்களை தமிழரோடு அடையாளம் காண இயலுமா எனில் அவர்களது பெயர் புலா, பலார், பளார் என்பதை வைத்து மொழியியல் ஒப்பீட்டை முயன்று பார்க்கலாம். அந்த மக்களின் உடற்கூறு, மதநம்பிக்கை, சடங்குமுறைகள், மனஇயல்புகள், விளையாட்டுகள் போன்றவை தமிழரோடு எந்தளவிற்கு ஒத்துள்ளன என்பதை ஆராயலாம். ஆராய்ந்து அன்னார் தமிழ் நிலத்தோடு நெருங்கிய தொடர்புடையவர் எனில், தமிழரின் பண்பாட்டுப் பரவலுக்கு அம்மக்கள் வலுவான சான்றாக அமையலாம். எனினும் அம்மக்களின் நாளைய நிலை?

புலா, பலா, பலார் என்பதை பால், பாலர் என்பதோடு பொருத்தினால் மிகச் சரியாகப் பொருந்துகிறது. மேலும் அவர்கள் மேய்ச்சல் மக்களாக இருப்பதும் கூடுதல் வலு சேர்க்கிறது. தமிழகத்தின் தொல்கோனார் வாழ்வியலோடு ஆப்பிரிக்க பாலர் மக்களின் வாழ்வியல் ஒத்து போகிறதா என்பதை அறியலாம். தமிழில் பல்லான் எனில் பல ஆன் அதாவது நிறைய ஆன்களுக்கு, மாடுகளுக்கு சொந்தக்காரன் எனவும் சுட்டலாம். எனினும் இது பொதுப்பேச்சில் வருமா என்பது ஆராயத்தக்கது.

இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியது புலா மக்கள் அத்தனை பேரும் மேய்ச்சல் சமூகமல்ல. புலா மக்கள் கலந்துபட்டு வாழ்கிறார்கள். புலாக்களில் பயிர்த்தொழில் செய்பவரும் அதிகம். பரவலாக சிறுவியாபாரிகளாக, கடைவணிகர்களாகவும் உள்ளனர். சிலர் பெருத்த வணிகமும் செய்கின்றனராம். அரசுப் பணிகளிலும் அதிகமுள்ளனர். முக்கியமாக, புலா மக்கள் பெருங்கூட்டமாக வாழும் நாடுகளில், பகுதிகளில், பெரிய அரசியல் சக்தியாகவும் உருவெடுத்துள்ளனர். சில நாடுகளின் உச்ச அரசியில் தலைமையே புலா மக்கள் எனச் சுட்டப்படுவது கவனிக்கத்தக்கது.

ஆப்பிரிக்காவில் பால், பாலர், பாலோடு தொடப்புடையவரைத்தான் புலா, புலானிகள், புலா மக்கள் என்கிறார்களோ? எனில், ஆப்பிரிக்க மொழிகளில் பால் - milk என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல் என்ன என்பதைக் கவனிப்பது பொருத்தமாய் இருக்குமல்லவா. பாலைக் குறிக்க பா, பல, பால, பால், புல், புல போன்ற பெயர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. பெரும்பாலான பெயர்கள் பெரியளவில் மாறுபட்டுள்ளன. ஆப்ரிகன்சு மொழியில் மெல்க் - melk என்கிறார்கள். அது ஆங்கிலத்தின் தாக்கத்தால் வந்திருக்கும். அதுகூட சமீபத்திய சொல்லாகவே இருக்கும். இணையத்தில் தேடுவதில் பிழை நிகழலாம். ஏனெனில் இணைபத்தைப் பயன்படுத்துபவர் மிகவும் படித்தவர். அவரது மொழியே இணையத்தில் கிடைக்கக்கூடும். எங்கோ ஒரு சிறிய ஊரில் பாலுக்கு வேறொரு சொல் புழக்கத்தில் இருக்கலாம். எனில், அந்தச் சொல்லே உண்மையான ஆப்ரிக்கன்சு மொழியின் சொல்லாக இருக்கும்.

பால் என்பதற்கு செச்சுவா - mkaka, கசுவா (Hasua) - madara, இக்போ - mmiri ara, செசதோ - lebese, சோமாலி - caanaha, சுவாகிலி - maziwa, யோருபா - wara, சுலு - ubisi. புலா (Fula) மக்களின் புலானிமொழியில் பாலுக்கு என்ன பெயரென்று சட்டென்று தேட இயலவில்லை. எனினும் பொருபா மொழியில் - வாரா என்பது கவனிக்கத்தக்கது. யொருபாக்களுக்கும் புலாக்களுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பது அறியத்தக்கது. கசுவா மொழியின் மடாரா என்பதை மதுரா என எடுத்துக்கொண்டால் சற்றே பொருள் கிடைக்கிறது. மதுரா கண்ணன் பாலோடு தொடர்புடையவனல்லவா? சுவாகிலி உச்சரிப்பில் மஜீவா என்கிறார்கள். இன்னொரு பெயராக காம (kama) என்பதும் சுட்டப்படுகிறது. காம என்பதை தமிழின் விருப்பம் என்பதோடு நோக்கி, மிகவும் விருப்பமானது பால் என்கிறார்களோ? ஒருவேளை

காமம் என்பதற்கு அதாவது ஆண்பால். பெண்பால் என்பதுபோல் அங்கு காமம் பொருள்கொள்ளப்படுகிறதோ? சோமாலியின் கானகா?

புலா என்பதை பளா, பள்ளா என்பதன் திரிபாகக் கொண்டு, பள்ளா, பள்ளர் எனக் கொள்வதும் மிகவும் பொருத்தமுடையதே. எகிப்திலிலும், மேற்கு ஆசியாவிலும் வேளாண் குடிகள் பள்ளா பெயரிலேயே அறியப்படுவது ஒப்புநோக்கத்தக்கது. ஆப்பிரிக்காவின் தொல் பள்ளா மக்கள் மேய்ச்சல்காரர்களாக இருந்து, பின்னர் பயிர்த்தொழிலுக்கு மாறியிருக்கலாம். இவர்களின் ஒரு பிரிவு நைல் நதிப் படுகைக்கு இடம் பெயர்ந்து அங்கே மிகப்பெரும் நாகரிகங்களைத் தோற்றுவித்திருக்கலாம். இவர்களே அதாவது மேற்கு ஆப்பிரிக்க புள்ளாணி மக்களே எகிப்தின் பயிர்த்தொழிலில் சிறந்து விளங்கிய, விளங்கும் பெள்ளாக் மக்களாக மாற்றம் பெற்றிருக்கலாம். எகிப்திலிருந்து பள்ளத்தீனத்திற்கும் அங்கிருந்து மெசப்தோமியாவிற்கும் பின்னர் ருஷ்யாவின் வோல்கா பள்ளத்தாக்கிற்கும் பயிர்த்தொழிலைக் கொண்டு சென்றிருக்கலாம். மாறாக பண்டு பயிர்த்தொழிலிலும், மேய்ச்சலிலும் சிறந்திருந்த சுமேரிய மக்கள் பாலத்தீனம், எகிப்து, சூடான், நைசர், நைஜீரியா என இடப்பெயர்வு செய்திருக்கவும் வாய்ப்புகள் உண்டு.

ஆப்பிரிக்காவின் புல்லாணி மக்கள் ஆப்பிரிக்காவிலேயே தோற்றம் பெற்றார்களா அல்லது வேறு பகுதியிலிருந்து இடம் பெயர்ந்தார்களா என்பதற்கும் விடை காண வேண்டும். புல்லாணி மக்கள் கிழக்கு ஆப்பிரிக்காவோடும், குறிப்பாக சோமாலியா, கென்யா, தான்சானியாவோடும் தொடர்புள்ளவராக இருப்பதால், பண்டைய தமிழ் நிலத்திலிருந்து, ஆப்பிரிக்காவிற்கு இடம் பெயர்ந்திருக்கவும் வாய்ப்புள்ளது. இத்தகைய தொடர்புக்குச் சான்றாக சோமாலியா, எத்தியோப்பியா, புலா மொழிகளை தமிழோடு ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்தமாக இருக்குமல்லவா.

# விட்டுணன்!



ஆப்பிரிக்க மனிதருக்கும் இந்தியத் துணைக் கண்டத்து மனிதருக்கும் மிகநெருங்கிய உறவிருப்பது கண்கூடு. குறிப்பாக தென்பகுதியின் தமிழர்கள் ஆப்பிரிக்க, ஆத்திரேலிய மாந்தரோடு நெருங்கிய உறவுடையவராய் இருக்கின்றனர். எனில், தொல்தமிழர்களின் மொழியும் ஆப்பிரிக்கவோடு தொடர்புடையதாக இருத்தல் அவசியம். தமிழறிஞர்கள் கூற்றின்படி, பண்டு ஆப்பிரிக்க, இந்திய, ஆத்திரேலிய நிலங்களிடையே பரந்து விரிந்த குமரிக் கண்டம் இருந்தது. அங்கேதான் மாந்தரின் தோற்றம் நிகழந்தது. உண்மையாக இருக்குமோ எனில் இருக்கலாம். தற்காலத்திய அறிவியல் வளர்ச்சி, மாந்தர் வரலாறு, பரிணாமம் அவ்வாறான கூற்றை புறந்தள்ள இயலாததாக உள்ளது.

பண்டைக் காலத்தில் நிலங்கள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை உறுதியாகச் சொல்ல முடியவில்லை. முன்னர் கடல் பகுதியாக இருந்தவை தற்போது நிலமாக இருக்கின்றன. எனில், முன்னர் நிலமாக இருந்தவை கடலுள் அமிழ்ந்திருக்கவும் வாய்ப்புண்டு. எனில் அதை எவ்வாறு அறிய இயலும்?

உதாரணமாக, பூம்புகாருக்கும் இலங்கைக்கும் இடையிருக்கும் கடல் பகுதி தொல்காலத்தில் நிலமாக இருந்திருக்குமோ? அவ்வாறான நிலப்பகுதி இருந்த காலத்தில், அதாவது இலங்கை இந்தியாவோடு இணைந்திருந்த காலத்தில் தமிழகக் காடுகளில் வசித்த யானைகள் இலங்கைக்கு இடம் பெயர்ந்திருக்குமோ? ஒருவேளை தொல்காலத்தில் ஆப்பிரிக்க கொம்புப் பகுதியோடு, அதாவது சோமாலியாவோடு, அல்லது கென்யா, தான்சானியாவோடு தமிழகம் நிலத்தால் இணைந்திருந்து, அதன் மூலமாக ஆப்பிரிக்க யானைகள் தமிழக நிலத்திற்குள் நுழைந்திருக்கலாமோ?

யானை, சிங்கம் புலி, பெரிய குரங்கு தென்னமெரிக்காவில் இல்லை. எனில் இவற்றின் தோற்றம் நிகழ்வதற்கு முன்பே அமெரிக்க நிலம் ஆப்பிரிக்காவிலிருந்து நகரத் தொடங்கியிருக்கலாம். அல்லது இவ்விலங்குகள் ஆப்பிரிக்காவில் கிழக்கே தோற்றம்பெற்று, மேற்குக்கரையை அடையும் காலத்திற்குள் அமெரிக்க நிலம் பிரியத் தொடங்கியிருக்கலாம். இதற்கு மாறான கொள்கையாக குமரி நிலத்தில் தோற்றம் பெற்ற இந்த விலங்குகள், ஆப்பிரிக்க நிலத்திற்கு இடம் பெயர்ந்தன என்பதையும் கருத்தில் கொள்ளலாம். இக்கருத்து ஏற்புடையதா எனில், இலங்கையில்போல் ஏன் மடகாசுகர் தீவில் யானைகள் இல்லை? அவ்வாறே ஆத்திரேலிய நிலத்திலும் ஏன் இல்லை? குமரியில் தோற்றம் பெற்றிருப்பின்

ஆத்திரேலியாவிற்கு இடம் பெயர்ந்திருப்பது எளிதுதானே. குமரியிலோ, ஆப்பிரிக்காவிலோ யானைகள் தோற்றம்பெற்று, அவை பல்கிப்பெருகி இடம் பெயரும் காலத்திற்குள்ளாக ஆத்திரேலியா நகர்ந்து விட்டதாகக் கொள்ளலாமா?

நவீனத் தகவல்காலம் கருத்துக்களை, கோட்பாடுகளை, விளக்கங்களை அள்ளியிறைக்கின்றன. தற்காலத்திய தொல்லியல் சான்றுகள், முன்பு தென்னமெரிக்க நிலத்திலும் யானைகள் போன்ற பெரிய பாலூட்டிகள் இருந்ததைச் சுட்டுகின்றன. எனில் அவை எப்போது, எவ்வாறு அழிந்தன?

ஆப்பிரிக்காவின் பெருமையான அடையாளங்களில் ஒன்றான ஆப்பிரிக்க யானைகள், சகாரா பாலைக்குகீழே பெரும்பாலான நாடுகளில் பரவி வாழ்கின்றன. கென்யா, தான்சானியா, ஜாம்பியா போன்ற கிழக்கு நாடுகளில் செறிந்தும், மற்ற பகுதிகளில் பரவியும் காண்ப்படும் யானைகள், ஆப்பிரிக்க புதர் யானைகள் (African Bush Elephants - Loxodonta africana) எனப்படுகின்றன. புதர்யானைகள் அதன் பரவலை வைத்து தெற்கு, கிழக்கு, மேற்கு மற்றும் வடக்குப் புதர்யானைகள் என நான்கு வகையாகச் சுட்டப்படுகின்றன. மேற்கே காங்கோ ஆற்றின் வடிகால் பகுதியான கவான், நடக்கினியா போன்ற நாடுகளில் வாழும் யானைகள் ஆப்பிரிக்க காட்டு யானைகள் (African Forest Elephants - L.cyclotis) எனப்படுகின்றன. முன்னர் ஒரே இனமாகக் கருதப்பட்டு வந்த இரு யானை இனங்களும் சமீபத்தில் மரபியல் ரீதியாகத் தனித்துவமானவை என அடையாளம் காணப்பட்டுள்ளன. காட்டு யானைகளின் எண்ணிக்கை ஏறக்குறைய ஒரு இலக்கம் இருக்கலாம் என மதிப்பிடப்படட்டுள்ளது. புதர்யானைகள் ஏறத்தாழ மூன்று இலக்கம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றின் ஆயுட்காலம் எழுபது ஆண்டுகள் எனக் கருதப்படுகிறது.

ஆசிய நிலப்பகுதியில் இந்திய யானைகள் (Elephant Maximus indicus), இலங்கை யானைகள் (E.M. maximus), சுமத்ரா யானைகள் (E.M. sumatranus) மற்றும் போர்னியோ யானைகள் (E.M. borneensis) என நான்கு வகையான யானைகள் இருக்கின்றன. இதில் போர்னியோ யானைகள் அங்கு கொண்டுசென்று காட்டில் விடப்பட்டதால், மொத்தம் மூன்று வகையான யானைகள் உள்ளன என்பதே பொருத்தமானது.

இந்திய யானைகள் இந்தியா, நேபாளம், கிழக்கு வங்காளம், பூடான், மியான்மார், தாய்லாந்து, மலாய தீபகற்பம், லாவோசு, சீனா, கம்போடியா மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளின் காடுகளில் வாழ்கின்றன. பெரும்பாலான யானைகளின் வாழ்விடங்கள் பாதுகாக்கப்பட்ட பகுதி என்பது குறிப்பிடத்தக்கது. திறந்த காடுகளில், சுதந்திரமாக யானைகளால் நடமாட இயலவில்லை என்பது கருத்தில் கொள்ளத்தக்கது. இந்தியாவில் மட்டும் முப்பதாயிரத்திற்கும் மேல் யானைகள் வசிக்கலாம் எனக் கண்டறியப்படடுள்ளது. நேபாளில் 100-125, பூடானில் 250 - 500, மியான்மரில் 4000-5000, தாய்லாந்தில் 2500 - 3200, லாவோசில் 500 - 1000, சீனாவில் 200 - 250, கம்போடியாவில் 250 - 600, வியட்நாமில் 70 - 150 யானைகள் வரை இருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது.

இந்தியாவில் மேற்குத் தொடர்ச்சிமலைக் காடுகள் யானைகளுக்குப் பெரும் புகழ்பெற்றவை. தமிழகம், கேரளம், கர்நாடகம், உள்ளடக்கிய மேற்குக் காடுகளில் ஐம்பது சதமான இந்திய யானைகள் வாழ்வது அறியத்தக்கது. அவ்வாறே இப்பகுதியில் அதிகமான சதமானத்தில் புலிகள், சிறுத்தைகள் வசிப்பதும் குறிப்பிடத்தக்கது. மேற்கு வங்கம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் முப்பது சதமானமளவிற்கு இந்திய யானைகள் வாழ்கின்றன. மீதமுள்ளவை இமயமலைச் சரிவிலும் (உத்தராகண்ட்), ஒடிசா, சத்திஸ்கர் பகுதிகளிலும் பரவலாக வாழ்கின்றன.

இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்கில் யானைகளின் வாழ்விடங்கள் அமைந்துள்ளன. குறிப்பாக, உதவலவே தேசியப் பூங்கா, யல, லுனுகம் வசிரா, வில்பட்டு மற்றும் மின்னரியா தேசியப் பூங்காக்களில் யானைகள் அதிகளவில் உள்ளதாகக் குறிப்புகள் சுட்டுகின்றன. இலங்கை யானைகள் 6.6 முதல் 11.5 அடிகள் வரை உயரமுடையவையாகவும், 2000 முதல் 5500 கிலோ எடை கொண்டவையாகவும், 60 முதல் 75 ஆண்டுகள் உயிர் வாழ்பவையாகவும் சுட்டப்படுகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 12000 முதல் 10000 வரை இருந்த யானைகள் எண்ணிக்கை, ஒரு நூற்றாண்டுக்குள் கணிசமாக குறைந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. காரணம் வேட்டையாடியதே. ஒரேயொரு வெள்ளைக்காரத்துரை மட்டும் 1500 யானைகளை வேட்டையாடினாராம். 2000மாவது ஆண்டின் கணக்கெடுப்பின்படி 3150 - 4400 யானைகள் வரை வாழ்வதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. 2011இன் கணக்கீட்டின்படி, 5879 யானைகள் இலங்கையில் வாழ்கின்றன.

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் வாழும் சுமத்ரா யானைகள் மிக அருகிய இனம் (Critically Endangered) எனும் காப்பு நிலையில் இடம்பெற்றள்ளன. அதாவது மிகவும் அச்சுறுத்தலான இடத்தில் வாழ்கிறது, அதன் வாழிடம் மிகுந்த சூழியல் இடருக்கு உள்ளாகியுள்ளது என்பது பொருள். தகுந்த முன்னெடுப்புகள், பாதுகாப்பு முறைகள் இல்லையெனில் மிக அருகிய இனம் பட்டியலின் விலங்குகள், இயலிடத்தில் அற்றுவிட்ட இனமாக (Extinct in wild) மாறக் கூடும். அதன் அடுத்த நிலை இன அழிவு (Eatinct). அதாவது முற்றிலுமாக பூமியில் இல்லாத நிலையை அடையும்.

2007இன் கணக்கின்படி, சுமத்ராவில் 2400 - 2800 யானைகள் வரை வாழ்கின்றன. சுமத்ரா தீவுகள் அதீத காடழிப்புக்கு உள்ளாகி வருவது ஏற்கத்தக்கதல்ல. குறிப்பாக மலேசியா, இந்தோனேசிய போன்ற நாடுகள் இயற்கையின் பொக்கிசங்களான மழைக்காடுகளை முற்றாக அழித்து வருவது உயர் பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு மிகப்பெரும் அச்சுறுத்தல். 1985 - 2007க்கு இடைப்பட்ட காலத்தில், அதாவது இருபது வருடத்திற்குள்ளாக மட்டும் சுபத்ரா யானைகள் ஐம்பது சதமானம் அழிந்து விட்டதாகப் பதிவுகள் சுட்டுகின்றன. பெரும்பாலான யானைகள் பனைத்தோட்டங்களுக்கருகில் இறந்துள்ளன. குறிப்பாக விடம் வைத்தும், மின்சாரவலை மாட்டியும், பொறிகள் மூலமும் ஏராளமான யானைகள் மடிந்துள்ளன. சுமத்ரா என்றில்லாமல் தமிழ்நாட்டிலும் இத்தகைய போக்குகள் அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. அடர்ந்த காடுகளின் வழியாகப் போடப்படும் இருப்புப்பாதைகளின் தொடர்வண்டி மோதலாலும் யானைகள் இறக்கின்றன. காடுகளின் ஓரங்கள் வேளாண்மைக் காடுகளாக மாற்றப் படுவதாலும் யானைகளின் அழிவு அதிகரித்து வருகிறது.

மனிதருக்கு மட்டுமே இந்தப் பூமி சொந்தமானதல்ல. உலகின் அனைத்து உயர்களுக்கும் இந்த அழகிய பூமி உரிமையானது என்பதை மனிதர் எப்போது தெளிவரோ?

விலங்குகளின் பரவலுக்கும் அவற்றின் பரிணாமத்திற்குமான தொடர்பு குறித்து பெருமளவிலான ஆராய்ச்சிகள் நிகழவில்லை. எதனால் ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் மட்டுமே யானைகள் பரவியுள்ளன எனில், முன்னர் இரு கண்டங்களும் அருகருகே இருந்தன, இணைந்திருந்தன என்பதே பதிலாக

இருக்கிறது. எனில், இலங்கையிலும் சுமத்ரா தீவிலும் யானைகள் இருப்பது எப்படி? எதனால் சப்பானில் யானைகள் இல்லை? உயிரினப் பல்வகைமைக்குக் பெயர் பெற்ற தென்னமெரிக்காவில் ஏன் யானைகள் இல்லை? யானைகள் பரிணமிக்கும் முன்பே தென்னமெரிக்கா பிரிந்துவிட்டதெனில், எதனால் மத்திய ஆசிய நாடுகளில், வடக்கு ஆசிய நாடுகளில் யானைகள் பரவியிருக்கவில்லை? ஆர்டிக் பனிப்பாறைகளில் மிகப்பெரிய யானைகளான அதாவது தற்காலத்திய யானைகளின் முன்னோடியாகக் கருத்ததக்க மம்மூத் அதாவது ஆகப்பெரிய -Mammoth - யானைகள் கிடைப்பது எப்படி? ஆப்பிரிக்காவில் தோன்றிய யானைகள் ஆர்டிக் பகுதி வரைப் போயிருக்க முடியும் எனில், ஆர்டிக்கில் தோன்றி ஆப்பிரிக்காவுக்கும் பரவ முடியுமல்லவா? துருவங்களின் பனிமூடியிருக்கும் நிலங்கள் முன்னர் நிலமாக இருந்திருக்கவும் வாய்ப்புள்ளதல்லவா? தற்போது மழைக்காடுகளாக இருப்பவை முன்னர் வறண்ட பகுதிகளாகவும் இருந்திருப்பதற்கு வாய்ப்புக்களும் உண்டல்லவா? பூமியின் நில அமைப்பு, காலநிலை மாற்றங்கள் தற்போது போலவே நிச்சயம் இருந்திருக்காது. உறுதியாக.

மிக அதீத பல்வகைமை கொண்ட ஆப்பிரிக்கக் கண்டத்தில் புலிகள் (Tigers) ஏன் இல்லை? தற்போது இல்லை என்பதால் முன்னரும் இல்லை எனக் கருத முடியுமா? ஒருவேளை முன்னர் ஆப்பிரிக்காவில் புலிகள் வாழ்ந்திருந்து, பிற்காலத்தில் அழிந்துவிட்டன எனில், ஆயிரக்கணக்கான பிற விலங்குகள் அழியாமல் தற்போது வரைக்கும் வாழும்போது, புலிகள் மட்டும் எவ்வாறு அழிந்தன எனும் கேள்வி எழுமல்லவா? ஆப்பிரிக்காவில் புலிகள் தோன்றவில்லையெனில், ஆசியக் கண்டத்தின் புலிகள், இந்தியத் துணைக் கண்டத்தில் தோன்றி, ஆசியா நிலமெங்கும் பரவியதாகக் கருதலாமா? ஆம் எனக் கொண்டால், இந்தியாவிற்கு அருகிலிருக்கும் இலங்கையில் புலிகள் ஏன் இல்லை? சிங்களச் சிறுத்தைகள் வாழும் இலங்கையில், புலிகள் இடம்பெறாதது எதனால்? முன்னர் இலங்கையிலும் குறிப்பாக ரத்னபுரி மலைப்பகுதிகளில் புலிகளின் தொல்லெச்சங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுவதால், முன்னர் இலங்கையிலும் புலிகள் வாழ்ந்திருந்ததாகக் கருதக்கூடும். உண்மையெனில், இலங்கைத் தீவில் புலிகள் எதனால், எப்போது அழிந்தன? தேசியக் கொடியில் சிங்கத்தை வைத்திருக்கும் இலங்கையில், முன்பு சிங்கங்கள் வாழ்ந்திருந்ததாகவும் அகழாய்வுச் சான்றுகள் சுட்டுகின்றன.

விலங்கினப் பரவலை வைத்து பரிணாமத்தை விளக்குவதில் இத்தகைய சிக்கல்கள் எழும். தற்போதைய விலங்கினப் பரவலை வைத்து மட்டும், எந்த முடிவுக்கும் வர இயலாது. உதாரணமாக, ஈரானில் தற்போது சிங்கங்களே இல்லை. எனில் அங்கு சிங்கங்களே இருந்ததில்லையா? அங்கு 1850கள் வரைக்கும்கூட சிங்கங்கள் வாழ்ந்திருந்தனவாம். பதிவுகள் இருக்கின்றன. மக்கள் பெருக்கம், காடுகள் அழிப்பு, பருவநிலை மாறுபாடுகள், உணவுச் சங்கிலியில் நிகழும் மாற்றங்கள் போன்றவை காட்டுயிர்களை வெகுவாகப் பாதிக்கும். எங்கோ நடக்கும் சிறு மாற்றம் கூட விலங்குகளின் உயிர் வாழ்க்கையை அச்சுறுத்தக் கூடும். யானைகளுக்கு மழைக்காடுகள் அவசியம். பெரிய விலங்குகள் என்பதால் உணவுத் தேவையும் பெரிது. எனவே யானைகள் இடம் பெயர்ந்து கொண்டே இருக்கும். இடம் பெயர்ந்தாலும் அதன் பழைய வாழ்விடத்திற்குத் திரும்பிவிடும் குணமும் யானைகளுக்கு உண்டு. யானைகள் மிகவும் நுட்பமானவை. அதீத புத்திக்கூர்மை கொண்டவை. மிகவும் பொறுமையானவை. குடும்பமாக, கூட்டமாக வாழக் கூடியவை. எனினும் ஆண் யானைகள் தனித்தும், சுதந்திரமாகவும் வாழ விரும்பும். யானைகள் உணவைத் தேர்ந்தெடுத்து உண்ணக் கூடியவை. குறிப்பாக மூங்கில்கள். அஸ்ஸாம், நாகலாந்து காடுகளில் ஆயிரக்கணக்கான யானைகள் வாழ்வதற்கு, அங்கே அபரிமிதமாகக் கிடைக்கும் ருசியான மூங்கில் குருத்துக்களும் ஒரு காரணம்.

ஆசியாவில் யானைகளின் பரவலை ஒத்ததாகவே புலிகளின் பரவலும் அமைந்திருப்பது சிந்திக்கத்தக்கது. யானைகள் எங்கெல்லாம் அதிகம் வாழ்கின்றனவோ, அதே நிலங்களில் புலிகளும் உள்ளன. புலிகள் ஆசியப் புலிகள் (Panthera tigris), வங்காளப் புலிகள், தென்சீனப் புலிகள், காஸ்பியப் புலிகள், சைபீரியப் புலிகள், இந்தோசைனா புலிகள், மலேயப் புலிகள் எனப் பலவாறாக அழைக்கப்படுகின்றன. சுமத்ராவின் புலிகள் P.T. sondaica - அதாவது சுந்தா தீவுப் புலிகள் எனப்படுகின்றன. இவற்றில் சாவக, பாலித்தீவுப் புலிகள் மறைந்துவிட, சுமத்ரா தீவில் மட்டும் புலிகள் தற்போதும் வாழ்கின்றன.

துருக்கியின் கிழக்கே தொடங்கி, இமாலயம் வழியாக இந்தோனேசிய பாலித் தீவு வரைக் காணப்படும் புலிகளின் பரவல் காட்டும் பரிணாம முக்கியத்துவம் யாது?

இந்தியாவில் யானைகளின் வழித்தடத்திலேயே புலிகளும் அமைந்திருக்கின்றன. விதிவிலக்காக சுந்தரவனச் சதுப்புப் புலிகள். மேற்குத் தொடர்ச்சி மலை, மத்திய இந்தியா, வட மற்றும் வடகிழக்கு இந்தியப் பகுதிகளில் புலிகள் அதிகம் வாழ்கின்றன.

ஆப்பிரிக்காவில் யானை, புலிகள் தோற்றம் பெற்றன எனில், வடக்கு ஆப்பிரிக்கா, மேற்கு ஆசியா, அராபியா போன்ற பகுதிகளிலும் அவை வாழ்ந்திருக்கக் கூடும். ஏனெனில் அவ்வழியான நில இணைப்பின் மூலமே, புலிகள் ஆசிய நிலத்திற்குள் நுழைந்திருக்கக் கூடும். மேற்கு ஆசியாவில் தொல் காலந்தொட்டே மக்கள் வாழ்ந்து வந்ததால், ஒருவேளை மிகப் பழைய காலத்திலேயே புலிகள் இந்நிலங்களில் அழிக்கப்பட்டிருக்கலாம். ஒப்பு நோக்க, வட ஆப்பிரிக்கா, மேற்கு ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் வடக்கு ஆசியா போன்ற நிலங்களிலும், பண்டு சிங்கங்கள் வாழ்ந்திருந்ததாகக் குறிப்புகள் சுட்டுகின்றன. ஆரம்பகட்ட மனிதப் பெருக்கம், நாகரிக மாற்றம் காரணமாக இங்கு வாழ்ந்திருந்த சிங்கங்கள் அழிவைச் சந்தித்திருக்கலாம். பதிவுகளின்படி, மேற்கு ஆசியாவில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும் சிங்கங்கள் இருந்துள்ளன. படிப்படியாக சிங்கங்களின் எண்ணிக்கை குறைந்து இறுதியில் இந்தியாவின் கிர்காடுகள் மட்டுமே சிங்கத்திற்கான இடமாகிப் போனது சிங்கங்களுக்கு பேரிழப்பு. ஆப்பிரிக்காவில் தற்போது கிழக்கு, மேற்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் சிங்கங்கள் வாழ்ந்துவந்த போதிலும், அவற்றின் எண்ணிக்கை பெறுமளவில் குறைந்துவிட்டதாகப் பதிவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

யானை, சிங்கம், புலி போன்றே சிறுத்தை, கரடி, மூக்குக் கொம்பன் (காண்டாமிருகம்) நீர் யானை, ஒட்டகச் சிவிங்கி, காட்டெருது, குரங்குகள், மான்கள், பறவைகள், ஊர்வன, இருவாழ்விகள், மீன்கள், பூச்சிகள் எனப் பல்வகை விலங்குகளின் பரவலையும் உற்றுநோக்கி பரிணாமத்தின் பாதையை, வரலாற்றை, திசையை, எதிர்காலத்தை ஆராய முனையலாம்.

யானைகள் தடத்திலேயே மூக்குக் கொம்பனும் பரவியிருப்பது விந்தையானது. ஆப்பிரிக்கா, இந்தியா சாவகம், சுமத்ராவில் மூக்கும் கொம்பன்கள் உள்ளன. இவற்றில் கருப்பு, வெள்ளை என இருவகைக் கொம்பன்கள் இடம்பெற்றுள்ளன. ஆப்பிரிக்கா, சுமத்ரா மூக்கன்களுக்கு இரு கொம்புகள். இந்தியா, சாவகக் கொம்பன்களுக்கு ஒற்றைக் கொம்புகள். யானைகள்

தந்தங்களுக்காக கொல்லப்படுகின்றன எனில், மூக்கன்கள் கொம்புகளுக்காக கொல்லப்படுகின்றன. குறிப்பாக, வியட்நாமிய கள்ளச் சந்தையில் இவற்றின் கொம்புகள் தங்கத்திற்கு நிகராக விற்கப்படுகின்றனவாம்.

நீர்யானை, ஒட்டகச் சிவிங்கி போன்றவை ஆப்பிரிக்காவில் மட்டுமே தற்போது வாழ்கின்றன. வடக்கு எகிப்திய நைல்நதியில் பிளினி காலம் வரைக்கும்கூட அதாவது ஈராயிரம் வருடங்களுக்கு முன்பு வரைக்கும்கூட, நீர் யானைகள் பெருமளவில் வாழ்ந்தனவாம். காங்கோ காடுகளின் நீராதாரங்களில் பெருமளவில் பரவியிருந்த நீர்யானைகள், அங்கு நிகழ்ந்த உள்நாட்டுப் போர்களால் பெருமளவு அழிக்கப்பட்டுவிட்டதாகக் குறிப்புகள் சுட்டுகின்றன.

உலகின் அறுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் பழுப்புக் கரடி, துருவக் கரடி, ஆசியக் கருங்கரடி, அமெரிக்க கருங்கரடி, தேன் கரடி, சோம்பல் கரடி, கண்ணாடிக் கரடி மற்றும் பெரிய பாண்டா போன்ற பலவகையான கரடிகள் வாழ்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது. பூமிப்பந்தின் வடக்கோளப்பகுதி பழுப்புக் கரடிகளுக்குப் பெயர் பெற்றது. வடதுருவத்தில் பனிக்கரடிகள் பரவலாக உள்ளன. தென்னமெரிக்காவின் வடமேற்கில் அதாவது வெனிசுலா, கொலம்பியா, ஈக்வடார் பெரு, பொலிவியா போன்ற நாடுகளின் கடற்கரையொட்டிய மலைப் பகுதியில், மூக்குக் கண்ணாடி கரடி - Tremarctus ornatus வாழ்கின்றன.

இந்தியாவில் பழுப்புக் கரடி, கருப்புக் கரடி, தேன் கரடி (Honey Bear) போன்ற கரடி வகைகள் அறியப்பட்டுள்ளன. தேன் கரடிகள் வடகிழக்கு இமயமலைப் பகுதியிலும், பழுப்புக் கரடிகள் இமயமலை அடிவாரங்களிலும் காணப்படுகின்றன. பழுப்புக் கரடிகள் அளவில் பெரியவை.

இந்தியத் துணைக்கண்டத்தில் மத்திய பகுதி நீங்கலாக பிற பகுதிகளில் பரவலாகக் காணப்படும் கரடிகள் சோம்பல் கரடிகள் (Sloth Bear) எனப்படுகின்றன. இவற்றின் கீழுதடு பூச்சிகளை உறிஞ்சுவதற்கேற்ப நீண்டிருக்கும். 2016 ஆம் ஆண்டின் கணக்கீட்டின்படி, தமிழக சத்தியமங்கலம் காடுகளில் ஐம்பதிலிருந்து நூறுகரடிகள்வரை வாழ்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

ஆசிய கருப்புக் கரடிகள் இமயமலை, இந்தியாவில் வடபகுதி, கொரியா, வடகிழக்கு சீனா, சப்பான், தைவான் போன்ற பகுதிகளில் பரவலாக வாழ்கின்றன. சப்பானின் மிகப்பெரிய நில விலங்குகளாக கரடிகளே குறிப்பிடப்படுகின்றன.

சன் கரடிகள் (Sun Bear) தேனடை மற்றும் தேனை உணவாகக் கொள்வதால் தேன் கரடிகள் எனப்படுகின்றன. இவை பூடான், மியான்மர், தாய்லாந்து, மலேசியா, சாவகம், சுமத்ரா மற்றம் போர்னியோ பகுதிகளில் பரவலாகக் காணப்படுகின்றன.

இந்தியாவில் யானை, புலிகளின் பாதுகாப்புக்குத் தரப்படுவது போன்ற முக்கியத்துவம் கரடிகளுக்குக் கிடைப்பதில்லை. புலிகளைப் போன்று கரடிகள் மனிதர்களைப் பெரியளவில் அச்சுறுத்தக் கூடியவை இல்லையெனினும், அதன் வாழ்விடத்திற்குள் மனிதர்களைத் தாக்கக் கூடியவையாக கரடிகள் கருதப்படுகின்றன. கரடிகளும் உயிர்ச் சூழலில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றுகின்றன. இவற்றைப் பாதுகாப்பதும் சூழியல் முக்கியத்துவமானதே.

ஆசியா, ஐரோப்பா, வடக்கு மற்றும் தெற்கு அமெரிக்காவில் வாழும் கரடிகள், ஆப்பிரிக்காவில் இடம்பெறாதது ஆச்சரியமானது.

பெலிடே (Felidne) எனும் பூனைக் குடும்பத்தின் சிங்கம், புலி, பூனை, காட்டுப் பூனை போன்றே சிறுத்தைகளும் முக்கியமான விலங்குகள். சிறுத்தைகளில் Leopard, panther, Jaguar, Cheetah என பல வகைகள் உள்ளன. சிறுத்தைப் புலிகள் (ஜாக்குவார்) மன்பு அமெரிக்க கண்டங்கள் முழுவதும் பெரும்பான்மையாக வாழ்ந்திருந்ததாக அறியப்பட்டுள்ளது. எனினும் கடந்த நூற்றாண்டிலேயே அமெரிக்க ஐக்கிய நாட்டில் முற்றாக அழிந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. தற்போது மெக்சிகோவின் மேற்குப்பகுதி, நடுஅமெரிக்கா மற்றும் தென்னமெரிக்காவின் மையப் பகுதி வரைப் பரவலாகக் காணப்படும் சிறத்தைப் புலிகள், இந்நிலப் பகுதியில் குறிப்பாக மாயன் நாகரீகத்தில் மிகப் பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. பூமா, பாந்தர், மலைச் சிங்கம் எனப் பல பெயர்களில் சுட்டப்படும் மலையரிமா (பூமா), மெச்சிகோ, நடு மற்றும் தென் அமெரிக்க நிலத்தில் பரவலாக வாழும் பூனைக் குடும்ப விலங்காகும். இது பூனைக் குடும்பத்தின் பெலினே துணைக் குடும்பத்தில் இடம்பெற்றுள்ளது.

சிறுத்தை (Panthera pardus), கீழ் சகாரா ஆப்பிரிப்பாவில் பெருமளவிலும், இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, பாகித்தான், சீனா, இந்தேனேசியா, மியான்மார், கம்போடியா, லாவோஸ், மலேசியா, தாய்லந்து மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலும் வாழ்கின்றன. பெரிய புள்ளிச் சிறுத்தை (Clouded leopard), கிழக்கு இமாலயம் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பரவலாக இடம் பெற்றுள்ளது.

இந்தியச் சிறுத்தை (P. p. fusca) இந்தியத் துணைக்கண்டத்தில் பரவலாகக் காணப்படுகிறது. உயிரினக் காப்பு பட்டியலில் அருகிய இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ள இந்தியச் சிறுத்தைகள், நேபாளம், சீனா போன்ற நாடுகளுக்கு தோல் மற்றும் உடல் உறுப்புகளுக்காக சட்டவிரோதமாகக் கடத்தப்படுகின்றன. முன்பு இந்தியாவில் வாழ்ந்ததாக அறியப்படும் சிவிங்கிப் புலிகள் (Cheetah) தற்போது இந்தியாவில் இல்லை என அறியப்பட்டுள்ளது. நில விலங்குகளிலேயே அதிவேகமாக மணிக்கு 112 முதல் 120 கி.மீ வேகத்தில் ஓடக் கூடிய சிவிங்கிப் புலிகள், தெற்கு ஆப்பிரிக்க நாடுகளில் அதிகம் வாழ்வது குறிப்பிடத்தக்கது.

கருஞ்சிறுத்தைகள் (Black Panther) ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளில் வாழ்கின்றன. கருநிறமும், பட்டுத் துணி போன்ற மென்மையான உரோமமும், ஒளிரும் கண்களும் அடையாளமாகக் கொண்டுள்ள கருஞ்சிறுத்தைகள், அடர்ந்த மலைக் காடுகளில், வெளிச்சம் அதிகம்படாத இடங்களில் வாழ்வதாகக் குறிப்பிடப்படுகிறது.

மத்திய ஆசியாவின் உயரமான மலைத்தொடர்களில் வாழும் பனிச் சிறுத்தைகள் (Snow Leopard), மற்ற சிறுத்தைகளை விட அளவில் சிறியவை. இவை பனிச்சூழலில் வாழ்வதற்கேற்ப பல்வேறு தகவமைப்புகளைக் கொண்டுள்ளன. பனிச் சிறுத்தைகள் சீனா, மங்கோலியா, நேபாளம், இந்தியா போன்ற நாடுகளில் அதிகம் காணப்படுகின்றன.

வேங்கை, வியானம், பாய்மா, தரக்கு, சித்திரகாயம், சார்த்தூலம், வயவரி, வல்லியம், கொடுவரி, வழுவை, குயவரி, வயமா, புல், தீவி எனப் பல பெயர்களில் அறியப்பட்ட புலிகள், சங்க இலக்கிய காலம் தொட்டே தமிழ் நிலத்தில் நன்றாக

அறியப்பட்டு வந்திருக்கின்றன. அவ்வாறே யானைகளும். தும்பி, கரிணி, தோல், கும்பி, குஞ்சரம், பகடு, களிறு, கரி, மாதங்கம், வழுவை, வேழம், வாரணம், மொய், உம்பல், எறும்பி, உவா, பொங்கடி, தந்தி, அத்தி, கடிவை, கயம், நாகம், தூங்கல், நிருபதம், நால்வாய், புகார்முகம், தந்தாளம், நால்வாய், கைம்பி, பெருமா, மதமா, அயமா, மந்தமா, மதகயம், ஆம்பல், இயம், போதகம், களபம், பூட்கை போன்ற ஏராளமான பெயர்களில் யானைகள் அழைக்கப்பட்டு வந்துள்ளன. மதயானைக்கு மதகரி, தந்து, களிறு எனப் பெயர். பெண் யானை அத்திரி, கரிணி, வடமை, பிடி.

தொல்காலத்திய தமிழ் நிலத்தின் கிழக்குப் பகுதியில் சிங்கங்கள் காணப்பட்டதாக கூறப்படுகிறது. வீரத்திற்குப் பெயர் பெற்ற சிங்கங்களுக்கும் தமிழர்கள் பல பெயர்கள் வழங்கியிருக்கின்றனர். குறிப்பான பெயர்கள் - ஆளி, வாளரி, அரி, கோளரி, காண்டீரவம், பஞ்சானனம், சீயம், மடங்கல், கேசரி, முடங்குளை, அரிமா, வியப்போத்து, வயமா, வயப்புலி.

தமிழகம் மற்றும் இந்தியப் பகுதியில் காணப்படும் விலங்கினப் பரவல், குமரிக் கண்டத் தேற்றத்திற்கு சான்றாகுமா? தற்போதுள்ள நில அமைப்பையும், விலங்கினப் பரவலையும் கொண்டு எத்தகைய முடிவுக்கும் வர இயலாது. அறிவியலாளர்கள் சான்றுகளின் அடிப்படையில் சில விளக்கங்களை, கொள்கைகளை, உண்மைகளை வெளியிடுகிறார்களேயொழிய அவை முற்றான உண்மைகளல்ல. அறிவியலில் உண்மைகள் மாறும். புதிதான ஒரு கண்டுபிடிப்பு முன்னர் சொல்லப்பட்ட அனைத்ததையும் மாற்ற வல்லது.

முன்னர் தென்னமெரிக்கா, ஆப்பிரிக்கா, அரேபியா, இந்தியா, ஆத்திரேலியா, அன்டார்டிக்கா ஒரே நிலப்பரப்பாக இணைந்திருந்தனவா எனில், கண்டப் பெயர்ச்சிக் கோட்பாடு ஆம் என்ற பதிலையே அளிக்கிறது. ஆயினும் அவை இணைந்திருந்த காலத்திலேயே அனைத்து உயிரினங்களும் தோன்றிவிடவில்லை. மேலே உதாரணத்திற்கு எடுத்துக்கொண்ட சிங்கம், புலி, யானை போன்ற பாலுட்டிகள்.

கண்டப்பெயர்ச்சிக் கொள்கையின்படி, இந்திய நிலம் பழைய கோண்டுவனக் கண்டத்திலிருந்து 135 மில்லியன் ஆண்டுகளுக்குமுன்பு, அதாவது 13.5 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பிரியத் தொடங்கியது. இது நடுயுகத்தின் (மீசோசோயிக்) டிரையாசிக் காலத்திலோ அல்லது ஜுராசிக் காலத்திலோ நிகழ்ந்திருக்கலாம் எனக் கணிக்கப்படுகிறது. உண்மையெனில், இக்காலத்திலேயே ஆரம்ப கட்ட பாலூட்டிகள்

தோற்றம் பெறுகின்றன. உதாரணத்திற்கு, இந்தியப் பெருநிலம் பிரிந்த அதே காலத்தில், ஆப்பிரிக்காவிலிருந்து பிரிந்த மடாகசுகர் தீவு நிலத்தைக் காணலாம். இத்தீவின் விலங்குகள் மிகச் சரியாக ஆரம்ப நிலைப் பாலூட்டிகளை மட்டுமே பெருவாரியாகக் கொண்டிருப்பது பொருத்தமானது.

உண்மையெனில், அன்றைய இந்தியப் பெருநிலம் கிட்டத்தட்ட மடகாசுகர் போன்றே இருந்திருக்கும் எனக் கொள்ளலாமோ? சுமார் 13.5 கோடி ஆண்டுகளுக்கு முன்பு கோண்டுவனத்திலிருந்து தனியே பிரிந்த இந்தியத் துணைக்கண்டம், ஏறக்குறைய 2.5 கோடி ஆண்டுகளுக்கு முன்பு, ஆசியப் பெருநிலத்தில் (லாரேசியாவில்) அதாவது தற்போதைய வடக்கு இமயமலைப் பெருநிலத்தில் முட்டியதாகக் கருதப்படுகிறது. அந்த முட்டலில் மேலெழுந்ததே இமயம் மற்றும் அய்ரோப்பாவின் ஆல்பஸ் மலைகள் என்பது குறிப்பிட்டத்தக்கது.

எனில், தற்போதைய இந்தியா, குறிப்பாக இமயமலைக்குத் தெற்கேயுள்ள நிலப்பகுதி, கிட்டத்தட்ட பதினோறு கோடி ஆண்டுகள் மற்ற நிலப்பகுதியோடு தொடர்பில்லாமல் தனித்தே இருந்ததாகச் கருதலாம். எனில் பதினோறு கோடி வருட இடைவெளியில் உயிரினங்கள் எவ்வளவோ மாற்றம் அடைந்திருக்க வாய்ப்புப்புண்டே. மேலும் இந்திய நிலத்தின் உயிரினங்கள் உலகின் மற்ற விலங்கினங்களை விடத் தனித்தும், பல வகையான சிறப்பியல்புகள் பெற்றும் பரிணாமித்திருக்க வாய்ப்புள்ளது. ஆயினும், ஆப்பிரிக்க மற்றும் இந்திய உயிரினங்களை ஒப்பிட்டு நோக்கும்போது பெரியளவில் வேறுபாடுகள் இல்லை. ஆப்பிரிக்காவில் வாழும் வரிக்குதிரை, ஒட்டகச்சிவிங்கி, நீர்யானை, சிம்பன்சி மற்றும் கொரில்லா போன்ற குறிப்பிட்ட சில பாலூட்டிகள் தவிர்த்து, பெரும்பாலான பாலூட்டிகள் இந்தியப் பெருநிலத்திலும் வாழ்கின்றன. அவ்வாறே ஊர்வன, இருவாழ்விகள், மீன்களிலும் பெரியளவில் வேறுபாடுகள் இல்லை. இந்தியா இத்தனை கோடி ஆண்டுகள் தனித்த தீவுப்பகுதியாக இருந்திருப்பின், இத்தகைய ஆப்பிரிக்க நிலம் போன்ற விலங்கு ஒற்றுமை கேள்விக்குறியே. ஏனெனில் தனித்திருக்கும் தீவுகளில் தற்போதைய பல்லுயிர்ப் பெருக்கத்தின்படி, ஏராளமான தனித்துவமுள்ள உயிரின பல்வகைமை காணப்படுகிறது. உதாரணத்திற்கு மன்னார் வளைகுடாவையே எடுத்துக்கொள்ளலாம். தென் தமிழகத்திற்கும், வடமேற்கு இலங்கைக்கும் இடையில் அமைந்துள்ள இந்த சிறு கடல்பகுதியில், சுமார் 3600 வகையான உயிரினங்கள் கண்டறியப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கண்டப் பெயர்ச்சிக் கொள்கையின் அடிப்படையில், இலங்கை இந்தியப் பெருநிலத்திலிருந்து விலகிக்கொண்ட ஒரு தீவாகக் கருதப்படுகிறது, சுற்றிலும் நீரால் சூழப்பட்ட நிலப்பகுதி தீவு எனப்படுகிறது. தீவுகளில், கண்டத் தீவு மற்றும் கடல் தீவு என இருவகையான தீவு சுட்டப்படுகிறது. கண்டத் தீவு அருகிலுள்ள பெருநிலத்திலிருந்து தனித்துப் பிரிந்தோ, அதன் கண்டச் சரிவிலோ அமைந்திருக்கும். கடல் தீவுகள் பெரும்பாலும் எரிமலைக் குழம்பு கட்டியாகி உருவானவை. பவளத் தீவுகள் கடலில் வாழும் குழியுடலி விலங்குகளின் பவளக் கட்டுமானத்தால் தோன்றுபவை. எளிய முதுகுநாணற்ற உயிரிகளான பவளங்கள் அதாவது கோரல்கள் (Corals), மெல்லிய இழைகள் போன்ற பாலிப்புகளைப் பெற்றுள்ளதால், அவற்றைப் பாதுகாக்க கால்சியம் கார்பனேட்டைச் சுரந்து, பாறை அடுக்குப்போன்று பல்வேறு வடிவங்களில் தமது வாழ்விடங்களைக் கட்டுகின்றன. இவையே பவளப் பாறைகள் (Coral Reefs) எனப்படுகின்றன. பல்லாயிரம் பவளங்கள் இப்படிச் சேரும்போது, நாளடைவில் அவை இறுகி, உறுதியான பாறைகளாகிவிடுகின்றன. இவையே பவளத்தீவுகள். பவளங்கள் நிலநடுக்கோட்டிற்கு அருகிலேயே பெருமளவில் உள்ளன. ஏனெனில் அவை பல்கிப் பெருகுவதற்கு சரியான வெப்பமும், ஆழமற்ற கடற்பகுதியும் தேவையாகிறது. இவை வெப்ப, மிதவெப்பப் பகுதிகளில் பெருவாரியாகக் கிடைப்பதால், இப்பகுதிகளில் ஆயிரக்கணக்கில் பவளப்பாறைகள் உருவாகியுள்ளன. இவ்வாறான பவளத் தீவுகள் வெப்ப மண்டல (Tropical) தீவுகள் எனவும் குறிப்பிடப்படுகின்றன.

நாற்புறமும் கடல் சூழ்ந்திருந்தாலும் ஆத்திரேலியா தீவு எனப்படுவதில்லை. ஏனெனில் அது ஆத்திரேலிய நிலத் தட்டில் (Tectonic) அமைந்துள்ளது. இலங்கைத் தீவோ இந்தியத் தட்டில் பொருந்தியுள்ளது. எனவே அது தீவு. தீவு நீர்சூழ் நிலம். சிறிய நிலப்பகுதி எனில் அது கடற்திட்டு (Islets). கடலிலிருந்து மணற்திட்டுகளால் பிரிக்கப்பட்ட ஏரி போன்ற உப்பு நீர்த்தேக்கம் காயல் அல்லது கடற்கழி (Lagoon). காயலைச் சூழ்ந்த பவளத் தீவு அடோல் (Atoll). பவளத் தீவுகள் வளையல் போன்ற அதாவது வட்ட வடிவமான அல்லது மோதிரம் போன்ற (Ring) பவளத் திட்டுகள். பவளத் திட்டுக்களில் சுற்றிலும் அதாவது சுற்றிலும் பவளப்பாறைக் கரையும் நடுவில் கடல் நீரும் அமைந்திருக்கும். குளம் போல எனில் குளத்தில் கரை சிறியதாகவும், நீர் அதிகப் பரப்பிலும் இருக்கும். பவளத்தீவில் கரை சற்றே அதிகமான பரப்பில் இருக்கக் கூடும். பவளத் தீவு நான்கு பக்கமும் திட்டாக இல்லாமல் ஒரு பக்கத்தில்

திறந்திருந்தால், திட்டின் இறுதிப்பகுதி பரப்பு (Bank). வளையம் போல் இல்லாமல் பவளத்தீவு கோடு போன்றும் உருவாகும். பவளத் தீவுக்கு சிறந்த எடுத்தக்காட்டு மாலத்தீவுகள்.

தீவுகள் கூட்டாக இருந்தால் அவை தீவுக்கூட்டங்கள் (Archipelago). பெரும்பாலான தீவுகள் தீவுக்கூட்டங்களாகவே அமைந்துள்ளன. உதாரணத்திற்கு பிலிப்பைன், இந்தோனோசிய மற்றும் ஐக்கிய ராஜியம் போன்றவை.

கண்டத்தீவு, எரிமலைக் குழம்புத் தீவு, பவளத்தீவு போன்றே ஆழ்கடலிலுள்ள பெருமலைகளின் மேல் பகுதி அதாவது உச்சிப் பகுதியும் தீவாக அமைந்துவிடும். உதாரணமாக செசல்ஸ் தீவு.

இந்தியப் பெருநிலம் ஆப்பிரிக்கப் பெருநிலத்திலிருந்து தோராயமாக பத்துக்கோடி ஆண்டுகளுக்கு முன்பு பிரிந்ததெனில், இந்தியப் பெருங்கடலில் தற்போதுள்ள தீவுகள் எப்போது தோன்றியிருக்கும்? இந்தத் தீவுகளின் உயிரினங்கள் எவ்வாறுள்ளன? அவற்றிற்கும், ஆப்பிரிக்க மற்றும் இந்திய உயிரினங்களுக்கும் எத்தகைய தொடர்புகள் உள்ளன? இத்தீவுகளின் உயிரினங்கள் இரு பெருநிலத்தின் உயிரினங்களை இணைக்கும் இணைப்புச் சங்கிலி போன்று (connecting link) உயிரினப் பல்வகைமை கொண்டுள்ளனவா?

ஆம் எனில் எத்தகைய முடிவுகளுக்கு வரலாம்? இல்லையெனில்?

இந்தியா ஆப்பிரிக்காவிலிருந்து நகர்ந்து வந்ததெனில், குமரிக் கண்டத் தேற்றம் கேள்விக்குறியாகும். இல்லையெனில் குமரிக் கண்டக் கொள்கை வலுப்படும்.

ஆப்பிரிக்கா, இந்தியா என உயிரினங்களை ஒப்பிடும்போது தமிழகத்தின் உயிரினப் பரவலையும் கவனத்தில் கொள்ளவேண்டும். ஏனெனில் தற்போதைய சூழலில் வட - தென் இந்தியாவிற்கிடையே பூகோள ரீதியான வேறுபாடுகள் நிலவுகின்றன. மக்களின் நிறத்தில் வேறுபாடு சுட்டப்படுகிறது. வடஇந்தியப் பகுதியினர் ஆரிய - இந்தியர்கள் என அழைக்கப்பட, தமிழகத்தினரோ திராவிடர்களாகச் சுட்டப்படுகின்றனர். வட இந்தியர்கள் பொதுவில் ஆரியர்கள் எனச் சுட்டப்பட்டாலும், அதிலும் மாநிலங்கள் வாரியாக, சாதி ரீதியாக பல்வேறு மாறுபாடுகள் நிலவுகின்றன. கடந்த நூற்றாண்டில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்ட

இத்தகைய மானுடவியல் தேற்றங்கள், தற்போதைய அறிவியலில் பெரிதாகப் பேசப்படுவதில்லை. எனினும் முன்னா் பேசப்பட்டது என்பதும் கவனித்தில் கொள்ளத்தக்கதல்லவா.

திராவிடர்களெனக் கூறப்படும் தமிழர்கள் மானுடவியலில் ஆத்திரேலிய, ஆப்பிரிக்க இனங்களோடே அதிகமும் ஒத்துள்ளனர். சில பண்புகளில் மங்கோலிய இனத்தோடும் ஒத்துள்ளனர். தமிழர்களிலும் சில குடியினர் இந்தோனேசிய அதாவது மெலனேசியர்களை ஒத்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

திராவிடர்கள், ஆப்பிரிக்கர்கள், ஆத்திரேலியர்கள் மற்றும் பப்புவா நியூகினிய மக்களின் உருவமும், நிறமும் பெருமளவில் இசைந்துள்ளன. சில குறிப்பிட்ட பண்புகளில் வேறுபாடுகள் இருப்பினும், இவர்களிடையே பொதுவான ஒற்றுமைகளும் உள்ளன. தமிழர்களிலும் தென்பகுதியினா் அதிகமும் ஆப்பிரிக்கப் பண்புகளைப் பெற்றுள்ளதாகத் தெரிகிறது. பறையர்கள் ஆத்திரேலியப் பண்புகளோடு ஒத்துப்போக, பள்ளர்கள் கிழக்காசியாவோடு உடன்படுவதுபோல் தெரிகிறது. இது இன்னும் நுட்பமாக ஆராய்ந்து உறுதிசெய்ய வேண்டியதென்பதும் நினைவில் கொள்ளத்தக்கது. ஏனெனில் மேலோட்டமாகச் சொல்லப்படும் இத்தகைய கருத்துக்களால் தமிழர்கள் சலனமடையக் கூடும்.

மானுட அடையாளங்கள் பலவிதமாய் உள்ளன. மானுடவியலில் மனிதர்களது நிறம், வடிவம், அமைப்பு போன்றவை முக்கியமானவை. நிறத்தில் தோல், தலைமயிர், கண்களைச் சுட்டலாம். வடிவம் - தலைமயிர், மேல் இமை, மூக்கு, உதடுகள். அமைப்பில் - முகம், தலை. அவ்வாறே உடலின் நீளம், கைகள், விரல்கள், மார்பளவு, உயரம், எடை என உடலின் பல்வேறு அளவுகளும் மானுட ஒப்பீட்டில் எடுத்தாளப்படுகின்றன. முன்னா் இப்படி மிகக் கடினமாகக் கண்டறியப்பட்ட ஒப்பீடுகள், தற்காலத்தில் மரபியல் ஒற்றுமை எனும் ஒற்றைக் காரணியால் தீா்மானிக்கப்படுகின்றன என்பதும் அறியத்தக்கது.

தலைமயிரை மட்டும் எடுத்துக் கொண்டால் அது நேரானது, அலை படிந்தது, சுருட்டையானது என உண்டு. நேரான தலைமயிரிலும், முரடானது, மென்மையானது என உண்டு. உதடில் மெல்லியது, நடுத்தரமானது, பருத்தது, உப்பியது என உள்ளன.

**ஆத்திரேலியர்கள், பாப்புவன்கள், கினியன்கள், டாசுமேனியர்கள் உள்ளிட்ட ஆத்திரேலியர்களின் உடற்பண்புகள்,**

கரும் பழுப்பு அல்லது சாக்லேட் கறுப்புத் தோல்.

அலை படித்த கருமயிர்.

உடல், முகத்தில் குறிப்பிடத்தக்க மயிர் வளர்ச்சி.

குறுகலான முகம்.

போதிய அளவு சாய்வான நெற்றி.

கரும் பழுப்பு விழிகள்.

பருத்த மூக்கு.

தடித்த உதடுகள்.

சிறிதே தெரியும் மோவாய்ப் பிதுக்கம்.

நீள் மண்டை.

சராசரிக்கும் மேலான, உயரமான உடல் வளர்ச்சி.

**ஐரோப்பிய அல்லது காகசாய்டு இனத்தின் பொதுப்பண்புகள்,**

வெளுத்த, மங்கிய, பழுப்பு தோல்.

ரோஜா அல்லது சிவப்பு நிற முகம்.

தலைமயிர் மென்மையானது, அலைபடிந்தது. கறுப்பு அல்லது வெளிறிய நிறம்.

நடுத்தரமான அல்லது அடர்ந்த உடல் மயிர்.

அடர்ந்த தாடி, மீசை.

நேரான, சரிந்த நெற்றி.

குறைவாகப் புடைத்த கன்ன எலும்பு, தாடை கண்களின் ஓரங்கள் ஒரே மட்டமானவை.

பெரும்பாலான விழிகள் தவிட்டு நிறம். வெளிறிய சாம்பல், நீல, இளநீல விழிகளும் உண்டு.

மூக்கு குறுகலானது. முன்னே வெகுவாய் துருத்தி இருக்கும்.

உதடுகள் மெல்லியவை, நடுத்தரமானவை. முன்னே துருத்தியிருப்பதில்லை.

மோவாய்ப் பிதுக்கம் நடுத்தரம்மனது அல்லது நன்கு வளர்ந்தது.

குண்டை மண்டை. நடு, நீள மண்டையும் உண்டு.

ஐரோப்பியரை தெற்கு அல்லது மத்திய தரைக்கடல் பகுதியினர் மற்றும் வடக்கு அல்லது பால்டிக் அல்லது அட்லாண்டிக் பகுதியினர் எனவும் பிரிக்கலாம். தெற்கு ஐரோப்பியரின் தோல், மயிர், விழித்திரை கருமையானது. வடக்கினருக்கு வெளிறியது. தெற்குப் பிரிவில் இந்தியர், தாஜிக்குகள், ஆர்மீனியர்கள, கிரேக்கர்கள், அரேபியர்கள், இத்தாலியர்கள், எசுப்பானியர்கள் அடங்குவர். வடக்கில் ருஷ்யர்கள், பெலோருஷ்யர், போலந்துக்காரர், நார்வேக்காரர், செருமானியர், ஆங்கிலேயர், பிற ஐரோப்பியர் அடங்குவர்.

மங்கோலியர் மஞ்சள் இன வகையினர். பெரும் பகுதியினர் வடக்கு, கிழக்கு ஆசியாவில் உள்ளனர். ஓஷானியா மற்றும் அமெரிக்காவிலும் உள்ளனர்.

**மங்கோலியர் பண்புகள்,**

தோல் மஞ்சள் அல்லது மஞ்சள் பழுப்பு சாயலுடன் வெளிறியோ ஆழ்நிறம் கொண்டோ இருக்கும்.

தலை மயிர் நேரானது, முரடானது அல்லது விரைப்பானது. கருமை நிறம்.

தாடி, மீசை காலம் கடந்து, அடர்த்தி இன்றி இருக்கும். உடல்மீது பெரும்பாலும் முடி இருப்பதில்லை.

பெரிய முகம்.

கன்ன எலும்புகள் தடித்து இருப்பதால் முகம் பெருமளவு தட்டையானது.

தவிட்டு நிறக் கண்.

இமை மடிப்பு நன்கு வளர்ந்து, கண்ணின் உள் ஓரத்தையும், கண்ணீர் சுரப்பியையும் மூடி இருக்கும்.

மூக்கு நடத்தர அகலமானது.

உதடுகள் மெல்லியது, நடுத்தரமானது. மேல் உதடு சற்றே முன் துருத்தி இருக்கும்.

நடுத்தர வளர்ச்சியுடைய மோவாய் பிதுக்கம்.

நடுத்தர மண்டை.

மங்கோலியரில் வடக்கு ஆசியக் கண்ட வகை அல்லது மத்திய ஆசிய வகை, தெற்கு அல்லது தென் கிழக்கு அல்லது ஆசிய - பசிபிக் வகை, அமெரிக்க (இந்திய) வகை எனப் பிரிவுகள் உள்ளன. வடக்குக் கிளையில் மங்கோலியர்கள் இடம் பெற்றுள்ளனர். இவர்களுக்கு தாடி பெரும்பாலம் முளைப்பதில்லை. உதடு மெல்லியது, தெற்கு வகையில் மலாயர்கள், ஜாவாக்காரர்கள் உள்ளனர். கருமையான தோல் உடையவர்கள். உதடு நடுத்தர பருமன். அரிதான இமையோர மடிப்பு கொண்டுள்ளனர். தாடி ஓரளவிற்கே வளர்கிறது. உடல் வளர்ச்சி குட்டையானது. மங்கோலியர், சீனர்களைக் காட்டிலும் குறைந்தது.

நீக்ரோ அல்லது நீக்ரோ ஆத்திரேலிய வகை அல்லது ஆப்பிரிக்க - ஓஷானிய நிலநடுக்கோட்டுப் பெரிய இனம் அல்லது **கருப்பு இனத்தின் குறிப்பிடத்தக்க பண்புகள்,**

கருமை நிற தோல், மயிர், கண்கள்.

அலை படிந்த அல்லது புரிவடிவ தலைமயிர்.

முகம், உடலில் அருகிய மயிர். சிலருக்கு அடர்த்தியானது.

தாடைப்புறம் அகன்ற முகம்.

தாடையற்ற மூக்கு அல்லது குறைந்த வளர்ச்சி.

துருத்திய மேல் தாடை.

நீட்டமான தாடை.

தடித்த உதடுகள்.

மேல் உதடு மேல்துருத்தியிருக்கும்.

அகன்ற வாயப் பிளவு.

உடல் நீளத்தை விட கால்கள் நீளமானவை.

(நீக்ரோ - Negro எனும் சொல் மதிப்புக் குறைவானதாகச் சுட்டப்படுகிறது. உதாரணமாக, உடற்குறைபாடு கொண்டவர்கள் தற்போது மாற்றுத் திறனாளிகள் என்றே குறிப்பிடப்படுகின்றனர். அவ்வாறே நீக்ரோ எனும் சொல் கருப்பின மக்கள் என்றே சுட்டப்படுகிறது. எனினும் முன்னர் இப்பெயரால் சுட்டப்பட்டனர் என்பதைக் குறிக்கவே இங்கு அச்சொல் கூறப்பட்டுள்ளது).

சகாராவிற்கு தெற்கே அதாவது சூடானிய கருப்பினத்தவரில் சிலருக்கு தோல் சற்றே வெளுப்பாக இருக்கும். உடலும் சம அளவில் அமைந்திருக்கும். நீள் மண்டையினர்.

**திராவிடர்களின் பொதுவான பண்புகள்,**

கருமை படர்ந்த அல்லது நடுத்தர பழுப்பு நிறத் தோல்.

அலை படிந்த ஒப்பு நோக்கில் மெல்லிய தலைமயிா.

உடலில் மிதமான மயிர் வளர்ச்சி.

சிறிது சாய்ந்த, போதிய அகலமான நெற்றி.

நன்கு புலப்படும் கண் மேல் வரம்புகள்.

ஒப்பு நோக்கில் தாழ்வான கண் குழிகள்.

நடுத்தர அல்லது சிறிது அகலமான தவிட்டு நிறக் கண்.

மடிப்பு அற்ற மேல் இமை.

தாழ்ந்த மூக்குப் பொருத்து.

நேரான சற்றே மேல் வளைந்த மூக்குத் தண்டு.

அகன்ற மூக்கு மடல்கள்.

ஓரளவு தடித்த உதடுகள்.

குறைவான அல்லது நடுத்தரமாகத் தென்படும் மோவாய்ப் பிதுக்கம்.

தாடை ஓரளவு நீட்டம் கொண்டது. மேல் தாடை சற்று துருத்தி இருக்கும்.

தலை பெரிதும் உயர்ந்தது, நீண்டது.

நீள்மண்டை.

கிழக்கு ஆப்பிரிக்க எத்தியோப்பியர் திராவிடரோடு பொதுவான ஒற்றுமை கொண்டுள்ளனர். ஒப்பீட்டு நோக்கில் திராவிடர்கள், கிழக்கு ஆப்பிரிக்கர் மற்றும் ஆத்திரேலியர்களை நெருங்கியுள்ளனா். திராவிட இனத்தின் பண்புகள் ஐரோப்பிய, ஆப்பிரிக்க, ஆத்திரேலியர்களோடு நெருங்கி இருப்பதால், திராவிடர்கள் இம்மூவருக்குமான தொடர்பு இனமாக இருக்கலாம். ஆத்திரேலிய - ஆப்பிரிக்க வகை தன்மை கொண்ட தொன்மைக்குழு, தெற்கு ஆசியாவில் எங்கோ, இந்தியாவிலோ, இந்தோ சீனத்திலோ, ஒருவேளை இன்னும் மேற்கேயோ,

பின்தொன்மைக் கற்காலத்தின் தொடக்கத்தில் வாழ்ந்தது என்றும், பின் இது மேற்குக் கிளையாகவும், கிழக்குக் கிளையாகவும் பிரிந்தது என்றும், பின் தொடர்பை இழந்துவிட்டது எனவும் கருதலாம்.

மங்கோலிய வகையினரின் முதல் தாயகம் ஆசியக் கண்டத்தின் கிழக்குப் பகுதி எனத் தோன்றுகிறது. தொன்மை மங்கோலிய வகையினா் தெற்கேயும், தென்கிழக்கேயும் இருந்தே ஆசியாவின் வடகிழக்குப் பகுதிகளில் குடியேறினார்கள் என்பது அனுமானம். தோல் மஞ்சள் பாரித்த பழுப்பாய் இருப்பது தெற்குப் பகுதியில் வாழ்ந்த முன்னோரின் ஆழ்நிறத் தோல் ஓரளவு நிறம் இழந்ததன் விளைவாகும். மங்கோலியரின் மூடிய கண்இமை சூழ்நிலையால் தோன்றிய பண்பு. ஆப்பிரிக்க புஷ்மென் வகையிலும் மூடிய கண் இமை உண்டு.

ஆப்பிரிக்கர்களுக்கும் ஆத்திரேலியருக்கும் ஒற்றுமை அதிகமெனினும் வேறுபாடுகளும் உண்டு.

ஆப்பிரிக்கருக்கு,

உடல் மயிர் வளர்ச்சி குன்றியது. பலர் மீது பெரும்பாலும் இல்லை.

சுருண்ட தலைமயிா.

நெற்றி நேரானது.

கண் மேல் வரம்பு வளர்ச்சி குறைந்தவை.

ஆத்திரேலியருக்கு,

அடர்த்தியான உடல் மயிர்.

தலைமயிர் அவ்வளவு சுருள்வதில்லை.

நெற்றி சாய்வானது.

கண்மேல் வரம்பு தீவிர வளர்ச்சி உடையது.

**சிம்பன்சிக்கும் மனிதருக்குமான ஒற்றுமை - வேற்றுமைகள்,**

| | | |
|---|---|---|
| சிம்பன்சி | - | நெற்றி மிகவும் சாய்வானது. |
| மனிதர் | - | ஓரளவு நேரானது. நெற்றித் தோல் மயிர் இல்லாதது. புருவங்கள் தெளிவான வரைவு உள்ளவை. |

சிம்பன்சி - மூக்கு சிறியது. அகலம் அற்றது.

மனிதர் - நன்கு வளர்ந்த வெளி மூக்கு.

சிம்பன்சி - உதடு சிவப்பு நிற இடைவெளி அற்றது.

மனிதர் - வளர்ச்சி குன்றிய, நடுத்தர, உப்பியது. (நியாண்டல்தல் மனிதருக்கு தென்பட மட்டுமே இருந்திருக்கும் அல்லது மிகச் சிறியதாக இருந்திருக்கும்).

சிம்பன்சி - பின்னே துருத்திய மோவாய்.

மனிதர் - முன்னே துருத்திய மோவாய்.

சிம்பன்சி - உடல் மயிர்கள் அடர்த்தி.

மனிதர் - இனங்களிடையே மாறுபாடு உண்டு.

சிம்பன்சிகளும், மனிதர்களும் முகபாவங்கள், பற்களின் கூட்டமைப்பு, மூளைச் செய்ல்பாடு, தட்டையான நகம் போன்ற பண்புகளில் ஒத்துள்ளன.

ஆப்பிரிக்கர்கள் மூக்கின் வடிவில் சிம்பான்சிகளை மிகவும் ஒத்திருந்தாலும், மற்ற பண்புகளில் ஐரோப்பியரைக் காட்டிலும் மிகத் தொலைவாக வேறுபடுகிறார்கள். அதாவது ஆப்பிரிக்கரைக் காட்டிலும் ஐரோப்பியரே சிம்பான்சிகளோடு நெருக்கமாக உள்ளனர்.

குரங்குகளுடனான மரபுவழி உறவுகள் எல்லா மனித இனங்களிலும் ஓரளவு காணப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட மனித இனத்தை சிம்பான்சி நெருங்கியது என்றோ மற்றது விலகியது என்றோ கூற இயலாது.

மேலே குறிப்பிட்டுள்ள இனங்கள் (races) பற்றிய தகவல்கள், ருஷ்ய மானுடவியல் அறிஞரான பேராசிரியர் மிகையில் ∴பெடரோவிச் நெஸ்தூர்க் (Mirkail Fedorovick Nesturkh) அவர்களின், The Races of Mankind எனும் புத்தகத்தின் தமிழாக்கத்திலிருந்து (மனித இனங்கள் - மி. நெஸ்தூர்க் - மக்கள் வெளியீடு) எடுத்தாளப்பட்டிருக்கிறது. பேராசிரியர் மிகையில் புத்தகம், 1960களில் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

(யாம் மனித இனங்கள் புத்தகத்தை 22.06.2006 இல் குறிப்பெழுதத் தொடங்கியிருக்கிறோம். அக்காலத்தில் யாம் படித்த புத்தகங்களை குறிப்பெடுத்து வைக்கும் பழக்கத்தை கொண்டிருந்தோம். இப்புத்தகத்தைப் படிப்பதற்கு முன்பு டேவிட் அட்டன் பரோவின் பரிணாமத்தின் பாதை (Life on earth) புத்தகத்தின் தமிழாக்கத்தைப் படித்து (டோரதி கிருஷ்ணமூர்த்தி) அதையும் குறிப்புகளாக எழுதி வைத்திருக்கிறோம். அதன்பின் காலந்தோறும் சாதி - அரங்க மு. முருகையன் (காரனேசன் பதிப்பகம்) படித்து குறிப்பெடுத்திருக்கிறோம். பின்னர் மனித இனங்கள் முடித்துவிட்டு, தமிழர் சரித்திரம் - ந. சி. கந்தையா (அமிழ்தம் பதிப்பகம்) குறிப்பெடுத்திருக்கிறோம். தொடர்ந்து பின் நவீனத்துவம் - பித்தும் தெளிவும், அஸ்வகோஷ் எழுதிய புத்தகத்தின் குறிப்புகள் எடுத்துள்ளோம். பின்னர் நா. கதிரைவேற் பிள்ளையின் தமிழ்மொழியகராதி பார்த்திருக்கிறோம்.

தலித் கலை இலக்கியம் அரசியல் - தொகுப்பாசிரியர் ரவிக்குமார், சமணமும் தமிழும் - மயிலை சீனி. வேங்கடசாமி, சேது முதல் சிந்து வரை எம். கே. ஈ. மவ்லானா (மணிமேகலை பிரசுரம்), சூத்திரர் யார்? பி. ஆர். அம்பேத்கார் - மொழிபெயர்ப்பு வேம்படி தாளம் பெ. சுந்தரம் (சாந்தா பதிப்பகம்), அடிமை முறையும் தமிழகமும் - ஆ. சிவ. சுப்பிரமணியன் போன்ற பல்வேறு நூல்களையும் படித்து குறிப்புகள் எடுத்திருக்கிறோம்.

இதை இங்கு குறிப்பிடக் காரணம் எமது மனைவியே. யாம் அன்று எழுதிவைத்த நெஸ்தூர்க் குறிப்புகளை தற்போது படித்துப் பார்க்கும்போது, இதையெல்லாம் எப்போ எழுதினீங்க எனக் கேட்கிறார். யாம் இவ்வளவு படித்தும், அதைக் குறிப்புகள் எழுதியும், அவர் அதைப்பற்றி அறியாமல் இருந்திருக்கிறார்.

பேரா. நெஸ்தூர்க் மனித இனங்களை நீக்ராய்டு (Negroid), யூரோபாய்டு (Europoid) மற்றும் மங்கோலாய்டு (Mangoloid) எனும் மூன்று பெரும் மனித இனங்களாக (Great Race) வகைப்படுத்துகிறார். நீக்ராய்டை நிலநடுக்கோட்டு இனமென்றும் (Equatorial), யூரோபாய்டை யூரேசியன் (Eurosian - European Asian) இனமென்றும், மங்கோலாய்டை (Asia - American) இனமென்றும் குறித்துள்ளார்.

நீக்ராய்டு பெருஇனத்தை நீக்ராய்டு ஆப்பிரிக்கன், ஆஸ்ட்ரலாய்டு - ஓசியனிக் அதாவழ கடல்மக்கள் எனவும் இரு இனங்களாகப் பிரிக்கிறார். நீக்ராய்டு ஆப்பிரிக்க இனத்தில் தெற்கு ஆப்பிரிக்கர்கள் (புஷ்மன்), நடு ஆப்பிரிக்கர்கள் (குள்ளமானவர் - Pygmy), சூடானியர்கள், மற்றும் கிழக்கு ஆப்பிரிக்கர்கள் (எத்தியோப்பியன்) எனச் சுட்டுகிறார். ஆத்திரேலிய (Austroloid) கடல் மக்கள் பிரிவில், அந்தமானியர்கள் (Negritos), மெலனேசியர்கள், ஆத்திரேலிய தொல் குடிகள் (Aborigine), குரில் (Kuril - Ainu), சிலோன் (வேடர் - Veddah) போன்ற இனங்கள் இடம் பெற்றுள்ளன.

யூரோப்பியன் பெரிய இனத்தில் தெற்கு யூரோப்பியன் - இந்தோ மெடிட்டிரேனியன்) பிரிவில் தென்னிந்தியர்கள் (திராவிடர்கள்), மேல் பகுதி ஆசியர்கள் (Anterior Asian)/ மத்திய - பால்கன்கள், அட்லாண்டிக் கருங்கடல்காரர்கள், கிழக்கு யூரோப்பியன்கள் உள்ளனர். வடக்கு ஆப்பிரிக்காவில் அட்லாண்டிக் - பால்டிக்காரர்கள், வெள்ளைக்கடல் - பாலடிக் மக்கள் இடம் பெற்றுள்ளனர்.

மங்கோலாய்டு பெரிய இனத்தில், வடக்கு மங்கோலாய்டு - ஆசியக் கண்டத்தினர் இனப் பிரிவில், ஊராலியர்கள், தெற்கு சைபிரியர்கள், மத்திய ஆசிரியர்கள், பைங்கா சைபீரியர்கள், ஆர்டிக், கிழக்கு ஆசியர்கள் இடம் பெற்றுள்ளனர். தெற்கு மங்கோலாய்டு (ஆசியா - பசிபிக்) இனத்தில், தெற்காசியர்கள், பாலினேசியர்கள் உள்ளனர். அமெரிக்கரில் (அமெரிக்க இந்தியர்) வடக்கு அமெரிக்கர், மத்திய அமெரிக்கர் மற்றும் படகோனியர்கள் (தென்னமெரிக்காவின் தென்பகுதி) இடம் பெற்றுள்ளனர்.

உருஷ்யா மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள 136 பக்கங்கள் கொண்ட சிறிய நூலில், தெளிவான படங்கள் இடம்பெற்றுள்ளன. புத்தகத்தில் இனங்களும் மொழியும் எனும் தலைப்பும் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. புத்தகம் எழுதி அரை நூற்றாண்டு ஆகிவிட்டபடியால் சற்றே பழமையானதாகத் தெரிகிறது. இருப்பினும் மானுட இனங்கள் பற்றிய அறிமுகமும், விளக்கங்களும் சிறப்பே.

தற்போதைய அறிவியல் முன்னேற்றத்தில் மானுடவியல் பண்புகளைவிட, மரபணு ஒற்றுமைக்கே (Gene Homology) அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது.

குறிப்பிட்ட ஜீனின் இருப்பும், அமைவிடமும், பரவலும் கொண்டு உலக மாந்தரின் கொடிவழி, மூதாதையர் தொடர்பு, இன உறவு கண்டறியப்படுகிறது. முன்னர் இரத்தப் பிரிவுகள் கொண்டும் மனித இன உறவுகள் அறியப்பட்டன என்பதும் நினைவு கூறத்தக்கது.

நவீன மரபியல் நுட்பத்தில் மூதாதையர் அடையாளக் குறிப்பான்கள் (Ancestry Informative Markers) கொண்டு ஒருவரின் இன உறவுகள் கண்டறியப்படுகின்றன. இதற்கு மரபணுப் புரதங்கள் அதாவது ஒற்றை நியூக்ளியோடைடு புரதங்கள் (Single Nucleotide Proteins) பயன்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட மரபணுவில், அதே இடத்தில் அடினைன் (A) இருக்கிறதெனில், அம்மரபுவழியினருக்கும் அதே இடத்தில் அடினைன் இடம் பெற்றிருக்கும். ஒருவேளை அடினைனக்குப் பதிலாக T - தையமின் இருந்தால்.. அது அதன் பல்லுருவாக (Polymorph), அதாவது அதன் இணையாகக் (அல்லீல்) கருதப்பட்டு மூதாதையர் ஒற்றுமை அறியப்படும்.

பொதுவாக, மானுடவியலில் ஆத்திரேலியர்களைத் தனியாகச் சுட்டவதே மரபு. காரணம், ஆப்பிரிக்கருக்கும் ஆத்திரேலியருக்கும் குறிப்பிட்ட அளவில் உடல் ரீதியான வேறுபாடுகள் உள்ளன என்பதே. அந்த வகையில் திராவிடர்களை ஆத்திரேலியர்களுடன் அதிகமும் ஒற்றுமை காணப்பட்டே வந்துள்ளது. நவீன மரபணு அறிவியல் இதுபோன்ற கருத்துக்களை, முடிவுகளை மாற்றக் கூடியதாக இருக்கிறது.

தமிழர்கள் திராவிடர்களா அல்லது ஆதிதிராவிடர்களா? சமீப ஆண்டுகளில் திராவிடர் எனும் பதம், குறியீடு பெரும்பாலான தமிழர்களுக்கு மனவிலக்கத்தைக் கொடுக்கக் கூடியதாக இருப்பது கண்கூடு. பின் எப்படி ஆதிதிராவிடர் என்பது? தமிழர்களின் நிறம் நன்றாக மாறிக்கொண்டிருக்கிறது. இன்னும் சில தலைமுறைகளில் தமிழர்கள் முன்பு கருப்பாக இருந்தார்கள் எனக் குறிப்பிடும் நிலை வரும் போல. சில தலைமுறைகளுக்குப்பின் தமிழர்கள் எப்போதுமே வெள்ளை வெளோ் நிறமாகவே இருந்தார்கள் என எழுதி வைத்தாலும் ஆச்சரியமில்லை.

தமிழர்கள் பலதரப்பட்ட உடற்பண்புகள் பெற்றுள்ளனர். கலவையான எனில் பொருத்தமாக இருக்கும். எமது அப்பாவுக்கு உடல் முழுக்க முடி இருக்கும். யாம்

சிறுவயதில் அவரது மார்புமுடியை இழுத்தெல்லாம் விளையாடி இருக்கிறோம். தலைவாரும்போது இரண்டு மூன்று பள்ளமாக (ஓடையாக) தலைமுடியைச் சீவுவார். தலைமுடியை பின்னுக்குச் சீவி, சீப்பின் பின்பக்கத்தை முடியில் அழுத்தி, இந்த ஓடைகளை உண்டாக்குவார். தலைமுடியும் அவருக்கு சற்றே சுருண்டதாக இருக்கும்.

யாம் முதுநிலை படிக்கும்போதுகூட பெரும்பாலும் முகச் சவரம் செய்ததில்லை. காரணம் எமது உடலமைப்பு அம்மாவை ஒத்தது. அம்மா வழியில் அதாவது மாமாக்களுக்கு உடலில் முடி இல்லை. மீசையும் சற்று சுமாரே. எமது அம்மா, மாமாக்கள் போன்று உயரமானவர். எமது மாமா, அம்மா வழி மாமாக்கள், நல்ல கருப்பாக இருப்பார்கள். உயரமானவர்கள், மூக்கு நீளமானவர்கள், ஒல்லியானவர்கள், ரோசமானவர்கள், புத்திசாலிகள். அப்பா வழியில் நேர் எதிர். குட்டையானவர்கள், சற்றே நிறமுள்ளவர்கள், விளையாட்டாய்ப் பேசுபவர்கள். அவ்வளவாக சம்பாதிக்கத் தெரியாதவர்கள், இளகிய மனமுள்ளவர்கள். உருளை வடிவமாக இருப்பார்கள். மூக்கு குட்டையாக அகன்று இருக்கும்.

எமது அப்பா வழியினர் ஆத்திரேலிய இனத்தினர் போன்று எனில் பொருத்தமாக இருக்கும். அம்மா வழியினர் ஆப்பிரிக்கர் போன்றவர் எனில் சரியானதே. எமது அம்மாயி கரிய நிறத்தில் உயரமாக இருப்பார். அப்பத்தாவோ சற்றே வெளிறி, குட்டையாக இருப்பார். தாத்தாக்களைப் பார்த்ததில்லை.

எமது உறவினர்கள் போல் ஊரிலுள்ளவர்களை ஒப்பிட முடியமா? அப்படியே பக்கத்து ஊர்க்காரர்கள், மாவட்டத்துக்காரர்கள், தமிழர்கள், இந்தியர்கள்.

உடலமைப்பில் எமது அப்பா வழியினரைப் போன்று எமது ஊர் மறவர்கள் இருப்பார்கள். அம்மா வழியினர் போன்று நாடார்கள் இருப்பார்கள். ஆச்சரியமான ஒற்றுமை எமது மாமாக்களுக்கும், பெரும்பாலான நாடார்களுக்கும் குலதெய்வம் சோலைசாமி.

எமது இளவயது அனுபவத்தில் சொல்வதானால், இராசகோபாலபுரத்து பறையர்களில் சிலர் அச்சுஅசல் ஆத்திரேலியர்கள் போலவே இருப்பார்கள். உருவமும், முடியும், நிறமும் ஒன்று போலவே இருந்தது வியப்பானது.

தமிழர்களின் பொதுநிறம் கருப்பே. தமிழர் என்றில்லை, இந்தியர்களின் பொதுவான நிறமே கருப்புதான். தென்பகுதி திராவிடர் என்றில்லாமல் கிழக்கு, வடக்குப் பகுதியின் இந்தியர்களும் கருப்பு நிறமே. தற்காலத்தில், அதுவும் நகரங்களை மையமாக்கியே பெரும்பாலான இந்தியர்களின் நிறம் பழுப்பாக, வெளுப்பாக இருக்கிறது. எனினும் மானுடவியலில் வடஇந்தியர்களை ஆரியர் பிரிவில் சேர்ப்பது எதனால் எனத் தெரியவில்லை.

திராவிடருக்கும் இலங்கையின் வேடருக்கும் ஒப்புமை இருக்கிறது. அவ்வாறே இவர்கள் இருவரோடு அந்தமான் பழங்குடிகளுக்கும் ஒற்றுமை இருக்கிறது. திராவிடர், வேடர், அந்தமானியரோடு, மலேயத் தொல்குடியினர் தொடர்புடைவர். இவர்கள் அனைவரும் ஆத்திரேலியப் பழங்குடியோடு நெருங்கிய உறவுடையவர். ஆத்திரேலியர் டாஸ்மேனியரோடு தொடர்புடையவர். ஆத்திரேலியர் பழங்குடியினரே இந்தோனேசிய பாப்புவ, நியுகினியப் பகுதியின் மெலனேசியர்கள். மெலனேசியர்கள் கருப்பு நிறமெனில், அதற்கும் அப்பாலுள்ள பசிபித் தீவுகளைச் சேர்ந்தவர்கள் பாலினேசியர்கள். பாலினேசியர்கள் உருவ அமைப்பில் மெலனேசியர்களே. நிறத்தில் சற்றே மாறுபட்டுள்ளனர். அவ்வாறே தென் மற்றும் வட அமெரிக்கத் தொல்குடிகளும்.

விலங்கினப் பரவலின்படி, வட - தென் அமெரிக்காக்களை இணைத்துக் கொண்டிருக்கும் தற்போதைய பனாமா நிலஇணைப்பு அதாவது இஸ்துமஸ் தொல்காலத்தில் இல்லை. இரண்டு கண்டங்களும் நீரினால் பிரிக்கப்பட்டிருந்தன. சமீப காலங்களிலேயே குறிப்பாக, பனியுகத்திலேயே பனாமா இணைப்பு உருவாக்கியிருக்க வேண்டும். இணைப்பு ஏற்படுவதற்குமுன் ஆசிய, வட அய்ராப்பிய நிலம் வழியே விலங்குகளும், மனிதர்களும் வடஅமெரிக்காவுக்கு இடம்பெயர்ந்துவிட்டனராம். பனாமா நிலஇணைப்பு ஏற்பட்டபின், வட அமெரிக்காவிலிருந்து தென்னமெரிக்க நிலத்திற்குள் புகுந்த கொன்றுதின்னிகள், தென்னமெரிக்கக் காடுகளில் வாழ்ந்த ஏராளமான விலங்குகளை அழித்துவிட்டனவாம். யானைகள் உட்பட.

பசிபிக் கடலின் பிஜித்தீவு மக்கள், அருகிலிருக்கும் ஆத்திரேலிய, மங்கோலியரோடு கொண்டிருக்கும் உறவுகளை விட, ஆப்பிரிக்கரோடு கொண்டிருக்கும் உறவுகள் நெருக்கமானதாகக் குறிப்பிடப்படுகிறது. எனில், பிஜித்தீவின் மூதாதையர்கள் ஆப்பிரிக்காவிலிருந்து பதினைந்தாயிரம் கி.மீ.

தூரத்திற்கும் அதிகமான பிஜித் தீவுகளுக்கு எப்படி இடம் பெயர்ந்தனர்? அதற்கான காரணம் என்னவாக இருக்கும்? நிச்சயம் இடப்பற்றாக்குறையாக இருக்காது. மழைக் குறைவும் இருந்திருக்காது? வேறென்ன காரணமாக இருந்திருக்கும்?

முன்னர் மனிதர்கள் எதற்காக இடம் பெயர்ந்திருப்பார்கள்? மனிதர்கள் மட்டுமின்றி மனித இனத்தின் மூதாதையரான வால் மனிதர்களும் இடம்பெயர்ந்தார் எனில், எதற்காக? எதனால் இந்தியாவின் ராமாப்பித்திகஸ் மனிதக் குரங்கும், சாவகத்தின் சாவக மனிதக் குரங்கும், சீனாவின் பீகிங் மனிதக் குரங்கும், ஆப்பிரிக்காவிலிருந்து இத்தகைய தொலை தூரங்களுக்கு இடம் பெயர்ந்து வந்தன? இந்தியாவும், அரேபியாவும் ஒரே மூலத்திலிருந்து அதாவது ஆப்பிரிக்காவிலிருந்து இடம்பெயர்ந்து வந்தும், தற்போதைய அரேபியாவில் உயிரினப் பல்வகை குறைந்து, அழிந்து போனதற்கான காரணம் என்னவாக இருக்கும்? அரேபியர்கள் அய்ரோப்பியர் போன்று நிறம், உடலமைப்பு பெற்றது எப்படி? அரேபியரின் உண்மையான பண்பு எத்தகையது? ஓமானியரும், ஏமானியரும் யார்? அவர்களது தற்போதைய நிறமென்ன? பண்டைய நிறமென்ன? அங்கு தற்போதும் என்னென்ன உயிரினங்கள் வாழ்கின்றன? இருவரும் இந்தியரோடு குறிப்பாக திராவிடரோடு அதிக நெருக்கமுடையவரா, கிழக்கு ஆப்பிரிக்க சோமாலிரோடு அதிக நெருக்கமாவரா அல்லது அரேபிய, மத்திய ஆசியாவோடு அதிக நெருக்கமானவரா?

மூன்று, நான்கு தலைமுறைகளில், நூறுவருடங்களுக்குள்ளாகவே மனிதப் பண்புகளில், சமூக அமைப்புகளில், உணவில், வாழிடத்தில், சூழ்நிலையில் மாறுபாடுகள் உண்டாகிவிடுகின்றன எனில், பல்லாயிரம் வருடப் பரிணாமம் கொண்ட மனித இனத்தில் பண்புகள் மாறாமல் உள்ளன என்பதை எப்படி ஏற்றுக்கொள்ள இயலும்? ஒரு குறிப்பிட்ட சமூகம் சத்தான உணவுண்ணுகிறது எனில், இரு தலைமுறைகளிலேயே அவர்களது உடலின் பண்புகள் மாறிவிடும். அவ்வாறிக்க, ஆதிமனிதர் போன்றே தற்போதைய மனிதரும் உருவ அமைப்புக் கொண்டுள்ளனர் என்பதை எவ்வாறு ஏற்க இயலும்? சிம்பன்சி போன்ற மனிதக் குரங்குளிலிருந்து மனித இனம் பரிணமித்தது எனில், தோராயமாக இருபது இலக்கம் ஆண்டுகளுக்குப்பின், தற்போதும் அதே சிம்பன்சி அளவுள்ள மனிதர்களாகவே இருப்பது (உதாரணம் சிப்சி மனிதர்கள்) எவ்வாறு? குறிப்பிட்ட சிம்பன்சிக் கூட்டம் மட்டும் மனிதாராகப் பரிணாமம் அடைந்ததெனில், அதற்கு என்ன காரணமாக இருக்கும்? ஒருவேளை கடவுள் கொள்ளகையின்படி, கடவுள் அந்த ஒரு

கூட்டத்தை மட்டும் மனிதராக மாற்றமடையச் செய்ததேன்? எதனால் ஆத்திரேலியாவின் கங்காருகள் மனிதனாகப் பரிணமிக்கவில்லை? ஏன் வடதுருவத்தின் கரடிகள் மனிதராக மாறவில்லை? கடவுள் மற்ற அனைத்து விலங்குகளையும் தவிர்த்து, சிம்பன்சி போன்ற மனிதக் குரங்குகளை மட்டும் மனிதராக மாறத் தேர்வு செய்தது ஏன்? கடவுளுக்கு அனைத்து விலங்குகளும் சமம்தானே. கடவுள் நினைத்தால் எந்த விலங்கை வேண்டுமானாலும் மனிதராக்க முடியுமன்றோ?

ஒருவேளை கடவுள் ஒவ்வொரு பெருயுகத்திலும் ஒவ்வொரு விலங்கை மனிதராக்குகிறாரோ? இம்முறை குரங்கை குரங்கு மனிதராக்கி, மனிதராக்கி, அதற்கும் மேம்பட்ட நாகரிக மனிதராக்கினாரோ? எனில் அடுத்த பெருயுகத்தில்?

குழந்தை பத்து மாதமானால் தாயின் வயிற்றிலிருந்து பிறந்துவிடுகிறது. காலமெல்லாம் தாயின் வயிற்றுக்குள் இருப்பதில்லை. அவ்வாறே விலங்குகள் குறிப்பிட்ட காலத்தில் மனிதராகி, பின் அதற்கும் மேம்பட்ட நிலைக்கு உயர்கின்றனவோ? காலாகாலத்திற்கும் பூமியில் இருக்க முடியாதுதானே.

இந்து மதத்தின் காலக்கணக்கு பொருள் பதிந்ததோ?

இந்தியாவின் கடலோரங்களிலும், ஆப்பிரிக்காவின் கடலோரங்களிலும் பெரியளவில் தீவுகள் இல்லை. ஆனால் பசிபிக் கடலில் குறிப்பாக இந்தியப் பெருங்கடலின் கிழக்கு எல்லையில் சுமத்ரம், சாவகம், போர்னியா, நியுகினியா போன்ற பெருந் தீவுகள் முதல், சில ஏக்கர் மட்டுமேயான தீவுகள் வரை ஏராளமாக அமைந்துள்ளன. அதிலும் இந்தோனேசியா, பிலிப்பைன், நிப்பான் நாடுகள் தீவுக் கூட்டங்களாகவே அமைந்துள்ளன. நியுகினியா தாண்டி, அமெரிக்கா கண்டம் வரை, நெடுகிலும் ஆயிரக்கணக்கான தீவுகள் அமைந்துள்ளன. உண்மையில் ஒருவர் நியுகினியாவிலிருந்து ஒவ்வொரு தீவாகப் போய் முடிவில் மத்திய, தென்னமெரிக்க நிலத்திற்குப் போய்விடலாம் போல. அவ்வளவு தீவுகள். அனைத்தும் கடல் தீவுகள். முன்னர் எரிமலை வெடித்ததால் உண்டான பாறைத் தீவுகள். பல தீவுகள் தற்போதும் குமுறிக் கொண்டிருப்பவை. அவ்வப்போது குழம்பைக் கக்கும் எரிமலைகளும் நிறைய உண்டு. இந்தியாவின் மேற்கே இருக்கும் தீவுகளை இலட்சத் தீவுகள் என அழைக்கிறார்கள். அது தவறான சொல்லாடல். உண்மையில் தெற்குப் பசிபிக் கடல் பகுதியையே இலட்சத் தீவுகள் என அழைக்க வேண்டும்.

இந்திய நிலத்திற்கு மேற்கே, கிழக்கே, தெற்கே இருக்கும் தீவுகள் எத்தகையவை? அத்தீவுகளின் உயிரின வகைமை மற்றும் மனித இனம் கொண்டு, இந்திய நிலத்தின் பரிணாமத்தை அறிய முடியுமா? குமரிக்கண்டக் கொள்கைக்கு இந்தத் தீவுகள் எந்தளவிற்கு அணுக்கமானவை?

தீவு - ஐலேண்டு (Island). ஐலேண்டு எனும் சொல்லின் தோற்றம் பற்றி பலவாறாகக் கூறப்படுகிறது. மத்தியகால ஆங்கிலமான Iland என்பதன் பொருள் நீரால் சூழப்பட்ட நிலமாம். அதுவே Igland என மருவி Island ஆனதாம். Isle எனில் தீவாம். அது இலத்தீனின் இன்சுலா - Insula என்பதன் மருவாம். டச்சு மொழியிலும், ஜெர்மானியத்திலும் Eiland எனக் குறிப்படுகிறது. இலத்தீனத்தில் அகுவா (Aqua) எனில் நீர்.

கடலால் சூழப்பட்ட சிறிய நிலம் தீவு Illois அதாவது Isle - Island. Is - Isle - Ille - சிறிய நிலம். il - சிறிய, Land - நிலம். நிலம் எனும் தமிழ் வார்த்தையும் லாண்ட் - Land எனும் ஆங்கில வார்த்தையும் நெருங்கிய தொடர்புள்ளது போல் அமைந்திருக்கிறது. தரை என்பதும் Terrain, Terra, Terrestrial போன்ற பதங்களால் சுட்டப்படுவதும் குறிப்பிடத்தக்கது. பழைய ஆங்கிலத்தில் ஆ - aee எனில் ஆறாம் - River. தமிழுக்கும் ஆங்கிலத்திற்கும் குறிப்பாக பழைய ஆங்கிலத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பிருப்பது உள்ளங்கை நெல்லிக்கனி. பேசு பேச்சு எனில் அங்கே ஸ்பீச் - Speech, Speak. உடனே எனில் அங்கே சடன் - Sudden. இரண்டிலும் எஸ் - S எழுத்தை நீக்கிவிட்டால் ஆங்கிலம் அச்சுஅசலாக தமிழாகி விடுகிறது. இவ்வாறு ஆயிரக்கணக்கான ஆங்கில வார்த்தைகளை தமிழோடு அடையாளம் காண இயலுமென ஆய்வாளர்கள் சுட்டுகின்றனர்.

Island - என்பதை இளநிலம் எனத் தமிழில் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானது. உண்மையில் அது இளமையான நிலமே. முன்னர் அவ்வாறுதான் குறிப்பிட்டிருக்க வேண்டும். அதுவே கிரேக்கம், இலத்தீனம், பிரெஞ்சு, செருமன் எனத் திரிந்து, ஆங்கிலத்தில் Eiland, Island ஆக மாற்றம் பெற்றிருக்கக் கூடும்.

இந்தியப் பெருங்கடல் உலகின் மூன்றாவது பெரிய கடலாகக் குறிப்பிடப்படுகிறது, மேற்குக் கரையில் ஆப்பிக்கா தொடங்கி கிழக்கே

ஆத்திரேலியா வரை பரந்து விரிந்துள்ளது. சராசரி ஆழம் 12,760 அடிகள் எனவும் அதிகபட்ச ஆழம் 24,442 அடிகள் எனவும் அறியப்பட்டுள்ளது.

ஆப்பிரிக்காவின் தெற்குமுனைமுதல் ஆத்திரேலியாவின் கிழக்குமுனைவரை அதாவது பாஸ் நீரிணைப்பு (Bass Strait) வரையிலான நீளம் 10,000 கி.மீ. எனப்படுகிறது. பசிபிக் கடலின் நீளமோ அங்கிருந்து தென்னமெரிக்காவின் முனைவரை 20,000 கி.மீ. என அறியப்படுகிறது.

இந்தியாவின் மேற்குக்கரைக்கும் அரேபிய கிழக்குக் கரைக்குமான அதிகபட்ச தூரம் 2400 கி.மீ. எனப்படுகிறது. அவ்வாறே கிழக்குக் கரைக்கும் மலாயத் தீபகற்பத்திற்கும் இடையேயான தூரம் 2600 கி.மீ. எனக் கருதப்படுகிறது. கிழக்கில் சாவகக் கடல்வரை இந்தியப் பெருங்கடலின் எல்லையாகவே குறிப்பிடப்படுகிறது. மேற்காணும் எல்லைக்குள் மடகாஸ்கர், சும்த்ரா, சாவகம், இலங்கை போன்ற மிகப் பெரிய தீவுகளும், சிறிய தீவுகளும் உண்டு. ஏராளமானவை தீவுக் கூட்டங்களாகவே அமைந்திருக்கின்றன.

இந்திய அரபிக் கடலில் இலட்சத் தீவுகள் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டாலும், அவற்றின் எண்ணிக்கை 36 என்றே குறிப்பிடப்படுகிறது. அவற்றிலும் குறிப்பிட்ட சில தீவுகளிலேயே மனிதக் குடியேற்றம் உண்டு. பெரும்பாலானவை மனிதக் குடியேற்றம் அற்றவை.

இந்தியப் பெருங்கடலில் இடம்பெற்றுள்ள குறிப்பிடத்தக்க தீவுகள் - அந்தமான் நிக்கோபார் தீவுகள், லக்கத் தீவுகள் (இந்தியா). மன்னர் தீவுகள் (இலங்கை) மாலத் தீவுகள், ரீயூனியன் தீவு, செசல்ஸ் தீவு, மயோட்டே தீவுகள் (கொமரோஸ்), சொகட்ரா தீவு (ஏமன்), மசிரா தீவுகள் (ஓமன்), லமு தீவுகள் (கென்யா,) பெம்பா, சன்சிபர் தீவுகள் (தான்சானியா), பாசுன் தீவுகள், ் ய்லா தீவுகள் (சோமாலியா), மொர்குய் தீவுகள் (மியான்மர்), லங்காவி தீவுகள் (மலேசியா), புக்கெட் தீவு (தாய்லந்து), பர்மா, தாய்லந்து மற்றும் சுமத்ரா பகுதிகளில் ஏராளமான தீவுக் கூட்டங்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்டுள்ள தீவுகள் தவிர, மாலத் தீவுகளுக்குத் தெற்கே 500 கி.மீ. தூரத்தில் அதாவது கன்னியாகுமரியிலிருந்து 4723 கி.மீ. தெற்கே, சாகோஸ் தீவுகள் அமைந்துள்ளன. இவை பிரித்தானிய மற்றும் அமெரிக்க கடற்படைக்குச்

சொந்தமானவையாகக் குறிப்பிடப்படுகின்றன. சாகோஸ் தீவுகளுக்கும்கீழே பிரெஞ்சின் தெற்குத் தீவுகள் அமைந்துள்ளன. அதற்கும் தெற்கே அமைந்துள்ள ஆத்திரேலியாவிற்குச் சொந்தமானதாகக் குறிப்பிடப்படும் ஹேர்ட் மற்றும் மெக்டொனால்டு தீவுகள், மிக உயரமான மலைகளாகவும் (கடல் மட்டத்திலிருந்து 2745 மீட்டர்), தற்போதும் எரிமலைச் சீற்றம் உள்ளவையாகவும் அறியப்படுகின்றன.

இந்தியப் பெருங்கடலில் மேற்குக் கரையோரம் கொமரோஸ் தீவுகள் அமைந்துள்ளன. கிழக்குக் கரையோரம் அந்தமான் மற்றும் நிகோபர் தீவுகள். இடம்பெற்றுள்ளன. இரண்டு தீவுக் கூட்டங்களின் உயிரினப் பல்வகைமையை ஒப்பிட்டுப் பார்த்தால், கொமரோஸ் தீவுகள் மடகாசுகர் பல்வகைமைப் பெரும்பிரிவில் இடம்பெறுகின்றன. கொமரோஸ் தீவுகளின் உயிரினங்கள் மடகாசுகர் தீவோடும், மொசாம்பிக் மற்றும் கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளோடும் பெருமளவில் ஒத்துப் போகின்றன. அந்தமான் தீவுகளின் பல்வகைமை மலாயா, தாய்லாந்து மற்றும் மியன்மரோடும், நிகோபர் தீவுகளின் உயிரினங்கள் இந்தோனேசியாவோடும் (சுமத்ரா தீவு) அதிகம் ஒத்துள்ளன. வியப்பிற்குரிய ஒன்றாக, இந்தியத் துணைக்கண்டம் தொலைவில் இருப்பினும் அந்தமான் மற்றும் நிகோபாரின் பெரும்பாலான உயிரினங்கள், இந்தியத் துணைக்கண்டத்தை ஒத்துள்ளதாகக் ஆராய்ச்சி முடிவுகள் சுட்டுகின்றன.

பதிவுகளிலிருந்து அந்தமான் வடக்கு முனைக்கும், மியான்மரின் தெற்கு முனைக்குமான தூரம் 300 கி.மீ. நிக்கோபார் தீவுகளுக்கும் சுமத்ராவிற்குமான தூரம் 100 கி.மீ. தென்னிந்தியாவின் குறிப்பாக தமிழ்நாட்டின் கிழக்குக் கரையிலிருந்து அந்தமான் 1350 கி.மீ. தூரத்தில் இருப்பினும், எதனால் அந்தமான் நிக்கோபார் தீவுகளின் விலங்குகள் தென்னிந்தியாவை ஒத்துள்ளன? இன்னுமொரு வியப்பான தகவல், அந்தமானில் மட்டுமே காணப்படும் ஒருவகைப் பல்லிகள் (Day Gecko) எத்தியோப்பிய செக்கோ பல்லிகளை ஒத்திருக்கின்றனவாம். அந்தமான் அமைந்திருப்பது ஓரியண்டல் அதாவது உலகின் கிழக்குப் பகுதியில். இங்கிருக்கும் பல்லி அருகிலிருக்கும் மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்தின் பல்லிகளைப்போல் அல்லாமல், தொலை தூரத்திலிருக்கும் ஆப்பிரிக்கப் பல்லியை ஒத்திருப்பது எப்படி?

அந்தமானின் உயிரியல் பல்வகைமை பற்றி இணைய தளங்களில் பல மாறுபட்ட தகவல்கள் கூறப்பட்டுள்ளன. குறிப்பாக சுற்றுலாவை மையப்படுத்திய

தளங்களின் தகவல்கள். ஒரு இணையதளத்தில் அந்தமான் தீவில் யானைகள் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இத்தகவல் உண்மையல்ல. அந்தமானில் மிகப்பெரிய விலங்குகள் குறிப்பாக பாலூட்டிகள் இல்லை என்பதே அதிகாரப் பூர்வமான கணக்கெடுப்பு.

இந்திய அரசின் இந்திய விலங்குகள் கணக்கெடுப்பு (Zoological Survey of India), கொல்கத்தா மையத்தின் அறிக்கையின்படி (Endemic Fauna of Andaman and Nicobar Islands - 2013), அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகளில் நிலம் மற்றும் கடல் என இரு வாழ்விடங்களிலும் 8386 வகையான விலங்குகள் அதாவது இனங்கள் வாழ்கின்றன. நில வாழ்விகள் - 3212. கடல் வாழ் விலங்குகள் - 5174. இவற்றுள் 1117 இனங்கள் (13.31%), அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகளில் மட்டுமே வாழ்பவை. விலங்குகளில் பெரிய விலங்குகளே அதிகளவில் அந்தமானுக்கேயுரிய விலங்குகளாக உள்ளன. பூச்சிகள் அதிக எண்ணிக்கையில் இருந்தும். தீவுகளுக்கே சொந்தமானவை குறைவு. மீன்களில் 1358 இனங்கள் வாழ்ந்த போதிலும், தீவுகளுக்கே உரியவை இரண்டு மட்டுமே. கடல்லாழ் பாலூட்டிகளில் மூன்று இனங்கள் மட்டுமே - கடற்பசு, டால்பின், திமிங்கலம் தீவுகளில் உள்ளன. 1282 வகையான மெல்லுடலிகளில் 128 இனங்கள் தீவுகளுக்கே சொந்தமானவை. 2506 பூச்சியினங்களில் 604 வகைகள் தீவுகளுக்கே உரியவை. 270 வகையான பறைவைகளில் 90 வகைகள் சொந்தமானவை. 17 இருவாழ்விகளில் 6 மட்டுமே தீவுகளுக்குச் சொந்தம். ஊர்வன விலங்குகளில் பாதிக்குப் பாதி அதாவது 64 ஊர்வனவற்றில் 32 விலங்குகள் தீவுகளுக்கே உரித்தானவை.

பாலூட்டிகளில் பெரும்பாலானவை வெளவால்கள் மற்றும் எலிகள். 23 வகையான வெளவால்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றின் இரண்டு மட்டுமே தீவுகளுக்கு உரியவை. தீவுகளின் பெரிய விலங்கு பன்றி (Sus serofa). பன்றிகள் மைய நிலங்களிலிருந்து தீவுகளில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. வெகுகாலம் தீவுகளிலேயே தனித்து வாழ்ந்ததால் அவற்றின் பண்புகள் மைய நிலப் பன்றிகளிலிருந்து சற்றே மாறுபட்டு, தீவுகளுக்கே உரியவை போன்று தோன்றுவதாகக் கூறப்படுகிறது. தீவுகளின் ஒரே பூச்சியுண்ணிகளான அணில்களில் - Shrew, (Shrew - சுண்டெலி போன்ற தோற்றமுடையவை எனினும் எலி வகையில் இடம்பெறுவதில்லை) மூன்று அந்தமான் பகுதியிலும், ஒன்று

நிக்கோபார் பகுதியிலும் இடம்பெற்றுள்ளன. ஆறு வகையான எலிகளில் மூன்று இனங்கள் தீவுகளுக்கே உரியவை.

நண்டு தின்னும் குரங்கு (Crab eating monkey) அல்லது நிகோபர் குரங்கு Macaca fascicularis umbrosa) மட்டுமே முதனிகளுக்கு (Primate) உரியவை.

நீர்உடும்பு (Uaranus salvator andamanensis) அந்தமான், நிகோபார் தீவுகளில் பரவலாக இடம் பெற்றுள்ளன. அந்தமான் நாகம் (Naja sagittifera) கண்ணாடி விரியன் (Bungarus andamanensis), மூன்று வகையான கட்டுவிரியன்கள், கொலுபிரிடே குடும்பத்தைச் சேர்ந்த சில பாம்புகள் என பலவகையான பாம்புகள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் 18வகையான பாம்புகள் தீவுகளுக்கே உரியவை.

வங்காள விரிகுடாவின் நடுவில், குறிப்பிடத்தக்க பரப்பளவில், 350க்கும் மேற்பட்ட தீவுகள், ஏராளமான பாறைகள், 8293 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு, 1962 கி.மீ கடற்பரப்பு என அடர்ந்த மழைக்காடுகளுடன் அழகுற அமைந்துள்ள அந்தமானில், 2500க்கும் மேற்பட்ட பூக்கும் தாவரங்கள் இடம் பெற்றுள்ளன - (Biodiversity of Andaman and Nicobar Islands - M. Balakrishnan *et. al*., 2015, Biobytes. Vol - 3). பெரும்பாலான அந்தமான் தாவரங்கள் இந்தியா - மியான்மர் - தாய்லாந்து தாவரங்களை ஒத்திருப்பதாகவும், நிகோபர் தாவரங்கள் மலேசியா - இந்தோனேசிய தாவரங்களை ஒத்திருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது. தீவுகளில் 110 வகையான ஆர்க்கிட் மலர்கள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

அந்தமான் நிக்கோபர் தீவுகளில் முக்கியமான தானியப் பயிர் நெல். தீவுகளில் பயிர் செய்ய ஏதுவான 19,901 ஏக்கர் நிலத்தில், நெல் மட்டுமே 12,000 ஏக்கரில் பயிர் செய்யபடுகிறது.

கடற்பாசிகளில் 55வகைகள் பொருளாதார முக்கியத்துவமானவை என அறியப்பட்டுள்ளன. அந்தமான நிகோபர் தீவுகளில் ஏராளமான பழ வகைகள் இடம்பெற்றுள்ளன. தீவுகளில் 200க்கும் மேற்பட்ட மர வகைகள் உள்ளன. அந்தமானிய படாக் மரங்கள் (padauk) உலகப் புகழ் பெற்றவையாம்.

உலகின் பல்லுயிர் வனப்பகுதிகளில் ஒன்றாக அறியப்படும் அந்தமான் நிக்கோபர் தீவுகள், தொல் காலத்தில, மியான்மர் மற்றும் சுமத்ரா இடையே இருந்த அரகன்யோமா மலைத்தொடரில் (Arakan Yoma Hill Range) இடம் பெற்றிருந்ததாகக் கருதப்படுகிறது. காலமாற்றத்தில் மலைத்தொடரின் தாழ்வான பகுதிகள் கடலுக்குள் அமிழ்ந்துவிட, உயரமான மலைப்பகுதிகள் மட்டுமே தற்போதைய அந்தமான் - நிக்கோபர் தீவுகளாக நிலைபெற்றுள்ளன. வெப்ப மண்டலத்தில் அமைந்துள்ளதால் அதிக மழையும், ஈரப்பதமும் பெறும் அந்தமான் தீவுகளில், அடர்ந்த காடுகளும் அதற்கேற்ப வனவிலங்குகளும் பல்கிப் பெருகியுள்ளன.

கவனத்தில் கொள்ளவேண்டியது முன்னர் அந்தமானிய தீவுகள் பர்மிய - சுமத்ரா மலைத்தொடரில் இடம்பெற்றிருந்தன என்பதே. எனில் இந்த மலைத்தொடர் எப்போது உருவானது? உருவானதா அல்லது இந்தியப் பெருநிலம்போல் இந்தியப் பெருங்கடலில் மேற்கிலிருந்து தெற்காக நகர்ந்து வந்ததா?

அந்தமான் நிகோபரின் தாவர, விலங்குகளைவிட அதிகமான வியப்பைத் தருபவை அந்தமானிய தொல் குடிகள். குறிப்பாக ஜரவா மற்றும் சென்டினல்கள். சிறிய கருப்பு மனிதர்கள் எனும் பொருளில் நீக்ரிட்டோ (Negrito) என அழைக்கப்படும் இம்மக்கள், அந்தமான் நிக்கோபர் தீவுகள், மலேசியா, பிலிப்பைன் (லுசான், பலவான், பனா, நெக்ரோ மற்றும் மின்டனா பகுதிகள்) மற்றும் தெற்கு தாய்லாந்து பகுதிகளில் வாழ்கின்றனர்.

இந்தியக் கரையோரங்களிலும், ஆறுகளின் கழிமுகங்களிலும் ஏறக்குறைய 2000 தீவுகள் இருக்கலாம் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் பெரும்பாலானவை அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகள், குசராத்தின் கட்ச் வளைகுடாப் பகுதிகள், மராத்தாவின் கடற்கரைப் பகுதிகள். கோவாவின் காயல்களில் ஏராளமான தீவுகள் உள்ளன. கேரள உப்பங்கழிகளிலும் குறிப்பாக கொச்சிப் பகுதியில் நிறையத் தீவுகள் அமைந்துள்ளன. தமிழகக் கடற்கரையில் சில தீவுகளே இருக்கின்றன. அவற்றுள் பெரியது பாம்பன் தீவு. பாம்பன் தீவு மிகவும் அண்மைக் காலத்திலேயே உருவாகியிருக்கிறது. இந்தியக் கடற்கரையை ஒட்டியிருக்கும் தீவுகளில் பரிணாம முக்கியத்துவம் கொண்டவையாக லக்கத் தீவுகளைக் குறிப்பிடலாம். எனினும் அவற்றின் குறைந்த பரப்பினாலும் (36 தீவுகள் - 30 சதுர கி.மீ), பல்லுயிர்

பெருக்கமின்மையாலும், அவற்றைக் கொண்டு ஆப்பிரிக்க இந்தியத் தொடர்பை விளக்குவது சாத்தியமல்ல.

முன்னர் மினிக்காய், அமிந்திவு தீவுகள், கன்னனூர் தீவுகள் என அழைப்பட்ட தீவுகள், 1973 இன் நாடாளுமன்றச் சட்டம் மூலம் லக்கத் தீவுகள் என மாற்றம் பெற்றுள்ளன. கேரளக் கடற்கரையிலிருந்து தென்மேற்கில் சுமார் 200 - 300 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள லக்கத் தீவுகளில் முக்கியமானவை கவராட்டி, மினிக்காய் மற்றும் அமினி.

4.22 சதுர கி.மீ. பரப்பு மட்டுமே கொண்ட மினிக்காய் தீவு உள்ளூர் மக்களால் மாலிக்கு என அழைக்கப்படுகிறது. லக்கத் தீவுக் கூட்டத்தின் தென்கோடியில் அமைந்துள்ள மினிக்காய் தீவு, தென்னை மரங்களுக்கு பெயர் பெற்றது. 2011 இன் கணக்கெடுப்பின் படி, 8459 மக்கள் வாழும் மினிக்காய் தீவு, ஒன்பது ஊர்களாகப் பிரிக்கப்படுள்ளது ஊர்களின் பெயர்கள் - கேண்டி∴பர்டி, ∴பல்லச்சேரி (Fallessery), குடகி, ∴புன்கிலோறு, அலூடி, செடிவலு, ராம்மெடு, பொடுஅத்திரி, ஔமாகு, படாமினிக்காய். தீவு மக்களின் சமயம் இசுலாம். தீவின் பெரும்பாலானவர்கள் மலையாளிகள்.

தமிழ் இலக்கியக் குறிப்புகளின்படி, லக்கத் தீவுகள் சேர மன்னருக்குச் சொந்தமானவையாக இருந்துள்ளன. பின்னர் பல்லவர்களுக்கு உட்பட்டிருந்த காலத்தில் புத்தமதம் பரவியிருந்ததாகச் சான்றுகள் கிடைத்துள்ளன. பதினோறாம் நூற்றாண்டுக் காலத்தில் சோழ ஆட்சிக்கு உட்பட்டிருந்த இத்தீவுகள், பின்னர் கேரள கன்னனூர் அரச மரபுக்குச் சென்றுள்ளன. திப்பு சுல்தான் ஆளுகையிலும், தொடர்ந்து பிரித்தானிய ஆட்சிக்குட்பட்டும் இருந்த தீவுகள், சுதந்திரத்திற்குப்பின் சென்னை மாகாணத்திலிருந்து பிரிக்கப்பட்டு (1956), யூனியன் பிரதேசமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் ஒரு பகுதியாக இருப்பினும், இலக்கத் தீவுகளுக்கு சுற்றுலா செல்ல விரும்பும் இந்தியர்கள், நடுவன் அரசிடம் அனுமதி பெறுவது கட்டாயமானது என்பது குறிப்பிடத்தக்கது.

மினிக்காய் தீவு மக்கள் இந்தியக் கலாச்சாரத்தைவிட, மாலத்தீவுகளின் கலாச்சாரத்தையே பெரிதும் ஒத்துள்ளதாகக் கூறப்படுகிறது. காரணம், இந்தியா 450

கி.மீ. தொலைவிலிருக்க, மாலத்தீவோ 140 கி.மீ. தூரத்திலேயே இருப்பதுதான். அதாவது மினிக்காய் தீவு மாலத்தீவிற்கு அருகிலுள்ளது.

முன்னர் நிகழ்ந்த கடற்பயணங்களில், இலக்கத் தீவுகள் மற்றும் மாலத்தீவுகள் மிக முக்கியமானவைகளாக இருந்திருக்கும். குறிப்பாக, ஆப்பிரிக்கா, மேற்கு அய்ரோப்பா உடனான வணிகத்திற்கு, இந்தப் பாதை வழித்தடமாக அறியப்பட்டிருக்கும். அவ்வகையில் மினிக்காய், மாலத்தீவு, மொரிசியஸ், ரீயூனியன், மடகாசுகர் போன்ற தீவுகள் மிகவும் பயனுள்ளவையாக இருந்திருக்கும். பண்டைய தமிழ் வேந்தர்கள் மற்றும் இலங்கை அரசர்களின் அரேபிய வணிகத்திற்கு இலக்கத் தீவுகள் பெருமளவில் உதவியாக இருந்திருக்கும். கிழக்கு ஆப்பிரிக்கா உடனான வணிகத்தில் செசல்சு தீவுகளுக்கும் குறிப்பிட்ட செல்வாக்கு இருந்திருக்கும்.

வாசுகோடகாமா ஆப்பிரிக்கத் தென்முனையைச் சுற்றி இந்தியாவிற்குக் கடல்வழி கண்டுபிடித்தபின், இந்தப் பகுதியின் தீவுகள் குறிப்பாக மொரிசியசு, மாலத்தீவுகள் மிகப் பெரியளவில் வளர்ச்சி அடைந்திருக்கின்றன. இவற்றின் வளர்ச்சி, இத்தீவுகளின் உயிரினப் பல்வகைமையைப் பெருமளவில் பாதித்துவிட்டதும் அறியத்தக்கது. குறிப்பாக மிகப் பெரிய தீவான மொரிசியசின் சிறந்த பலவகைமை, சமீப காலங்களில் பெரிய நெருக்கடிக்கு ஆளாகியுள்ளதாகப் பதிவுகள் சுட்டுகின்றன.

மாலத்தீவின் தீவுகள் மாலைபோன்று இருப்பதால் மாலைத் தீவுகள் (Maldives) என அழைக்கப்படுகின்றனவாம். பெரும்பாலான தீவுகள் பவளத் தீவுகள். எனில், சமீப காலத்திலேயே தோன்றியவை.

தமிழகத்திலிருந்து சுமார் 1000 கி.மீ. அப்பாலிருக்கும் மாலத்தீவில் 26 பவளத்தீவுகள் ஒரு தீவுக் கூட்டமாக அமைந்துள்ளன. தோராயமாக 298 சதுர கி.மீ. பரப்பளவு கொண்டவையாக அறியப்படும் மாலத் தீவுகள், கடல் மடத்திலிருந்து 4 அடி 11 அங்குல உயரம் மட்டுமே கொண்டவையாகக் குறிப்பிடப்படுகின்றன.

மாலத்தீவர்களின் மொழி திவெகி (Dhivehi) எனப்படுகிறது. இந்தோ - ஆரிய மொழியாகக் கருதப்படும் திவெகி மொழி, முன்பு எலு (Elu, Hela, Helu) என

அறியப்பட்டிருக்கிறது. பொது ஆண்டிற்கு முன்னான இந்த பிராகிருத எலு மொழி, சிங்களத்திற்கும், தீவகி மொழிக்கும் மூல மொழியாகக் கருதப்படுகிறது.

மாலத்தீவுகள் சிறிய நிலப்பரப்புக் கொண்ட தீவுகள் என்பதால் பெரியளவில் உயிரினப் பல்வகைமை இடம்பெறவில்லை. ஏராளமான மீன்வகைகள் இருக்கின்றன. அவ்வாறே பவளங்களும் அதிகளவில் இடம் பெற்றுள்ளன. சில பல்லி இனங்கள், தவளை இனங்கள், பறவைகள் மட்டுமே அறியப்பட்டுள்ளன. பாலூட்டடிகளில் பறக்கும் வௌவால் மட்டுமே தீவுக்குக் சொந்தமானதாகக் அறியப்படுள்ளது. பூனைகள், எலிகள், சுண்டெலிகள் இருப்பினும் அவை வெளியிலிருந்து வந்தவையே. தீவுகளில் உள்ள சிலந்திகள் இந்திய, இலங்கைக் கரையோர சிலந்திகளை ஒத்திருப்பது பரிணாம முக்கியத்துவமானது.

மாலத்தீவுகளில் தாவரங்கள் செழிப்பாக வளர்ந்துள்ளன. குறிப்பாக மூன்று வகையான தாவரத் தொகுதிகள் அதிகளவில் இடம் பெற்றுள்ளன. தீவுகளில் ஏராளமான தென்னைகள் இடம் பெற்றுள்ளன.

இந்தியத் தென்முனையிலிருந்து சுமார் 4000 கி.மீ. (3835 கி.மீ) தொலைவிலும், ஆப்பிரிக்கக் கிழக்குக் கரையிலிருந்து சுமார் 2000 கி.மீ. தூரத்திலும் அமைந்திருக்கும் மொரிசியசு தீவு, 1865 கி.மீ. பரப்பளவு கொண்டது. அங்கிருந்து கிழக்கே 560 கி.மீ. தூரத்திலிருக்கும் ரோட்ரிகசு தீவு 108 கி.மீ. பரப்பு கொண்டவை. மோரிசியஸ் தீவில் அகலிகா, புனித பிராண்டன் போன்ற தீவுகளும் இடம்பெற்றுள்ளன. 2018 இன் கணக்கின்படி, மொரிசியசு குடியரசின் மக்கள் தொகை 12,65,577. இவர்களில் ஏராளமான தமிழர்களும் உள்ளனர். தோராயமாக 55000 பேர். தமிழர்கள் மொரிசியசு தீவுகளின் கரும்பு வயல்களில் பணிக்குச் சென்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மொரிசியஸ் உலகின் பல்வகைமைப் பகுதிகளில் ஒன்றென அறிவிக்கப்பட்டுள்ளது. பெரிய தீவு என்பதால் உயிரினப் பல்வகைமையும் அதிகம் கொண்டுள்ளது. தீவில் 92 ஆறுகளும், 232 சிற்றாறுகளும் பாய்வதாகக் குறிப்பிடப்படுவதால், நீர்வளம் மிகுதியான தீவு என்பதை அறிய முடிகிறது. குறிப்புகளின் படி, நெல் பயிரிடுதல் சிறப்பாக நடைபெறுகிறது. வெள்ளையர்கள் மொரிசியஸ் எனப் பெயர் வைத்ததாகக் குறிப்புகள் சுட்டுகின்றன - டச்சு இளவரசர் மாரிசு நினைவாக - Maurice Van Nassau. ஆறுகள் அதிகமிருப்பதைக் கொண்டும்,

நெல் விளைவதைக் கொண்டும், தமிழ் முறைப்படி மருதத் தீவு எனவும் அழைக்கலாமன்றோ. மருசியஸ் தீவு (Mauritius) - மருதத் தீவு.

மொரிசியஸ் தீவின் வேளாண் நிலத்தில் 85சதமானம் கரும்பு பயிராவதாகக் குறிப்பிடப்படுகிறது. தீவின் பாதிக்கும் மேலான தொழிலாளர்கள் கரும்புத் தோட்டங்களிலும், சர்க்கரை ஆலைகளிலும் பணியாற்றுகின்றனர். தீவில் மீன்பிடித்தலும் முக்கியத் தொழில். தீவில் உள்ள 340 மீன் வகைகளில், 42 வகைகள் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவை. தீவில் 7240 மாடுகள், 25,702 வெள்ளாடுகள், 2500 செம்மறியாடுகள், 15,961 பன்றிகள் உள்ளன (2013).

மருதத் தீவில் செழிப்பான உயிரினப் பல்வகைமை இருந்தபோதிலும், பாலூட்டிகள் இடம் பெறாதது ஆராயத்தக்கது. மருதத் தீவில், வௌவால்கள் மட்டுமே தீவிற்கே உரிய பாலூட்டிகளாக அறியப்பட்டுள்ளன. அருகிலிருக்கும் மடகாசுகர் தீவில் முதனிவகைப் பாலூட்டியான லெமூர்கள் செழித்திருக்க, மருதத் தீவில் அவை இடம்பெறாதது வியப்பானது.

மொரிசியஸ் தீவுகளின் விலங்குகளில் குறிப்பிடத்தக்கவை தீவுக்கே உரியவையாக அடையாளம் காணப்படுள்ளன. மொரிசியஸ் தீவின் 691 வகை விலங்குகளில், 273 வகைகள் தீவுக்கே உரியவை. அவ்வாறே ரோட்ரிக்ஸ் தீவின் 150 வகைகளில், 47 வகைகள் அத்தீவுக்கே சொந்தமானவை.

ஐந்து பாலூட்டிகளில் (வௌவால்கள்) ஒரு இனம் மட்டுமே தீவுக்கு உரியது. மொரிசியஸ் பறவைகள் 28இல் 14கும், ரோட்ரிக்ஸ் பறவைகள் 14இல் 13றும் தீவுகளுக்கே உரியவை. மொரிசியசின் பூச்சிகளில் 35க்கு 10, நத்தைகளில் 206க்கு 46 தீவுகளுக்கே சொந்தமானவை.

மொரிசியஸ் தீவுகளில் தாவர வகைகளும் ஏராளமாக இடம் பெற்றுள்ளன. பூக்கும் தாவரங்கள் எழுநூறில், இருநூற்றி நாற்பத்தி ஆறு வகைகள் தீவுகளுக்கே உரியவை. மொரிசியஸின் மழைக்காடுகளில் செழித்திருந்த தென்னை மரங்கள் அழிக்கப்பட்டு, பிற பகுதிகளின் தாவரங்கள் அறிமுகபபடுத்தப்படுவதால், தீவின் தாவரப்பன்மையில் மாற்றங்கள் நிகழ்வதாகக் குறிப்பிடப்படுகிறது. எனினும் பல்வேறு பூங்காக்கள், காப்புக்காடுகள் போன்றவற்றை ஏற்படுத்தி உயிரினப்

பல்வகைமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் சுட்டப்படுகிறது.

மொரிசியஸ் தீவுக்கு தென்மேற்கே 175 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது ரீயூனியன் தீவு. பிரெஞ்சு நாட்டிற்குச் சொந்தமான இத்தீவில், தமிழர்களும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் வாழ்கின்றனர். 63 கி.மீ. நீளமும், 45 கி.மீ. அகலமும் கொண்டுள்ள ரீயூனியன் தீவு, கடல் மட்டத்திலிருந்து 10,069 அடிகள் உயரமுள்ள பிடன் (Piton Des Neiges) மலை எரிமலைக்கும், பனிச்சிகரத்திற்கும் பெயர் பெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது. முப்பது இலக்கம் ஆண்டுகளுக்கு முன்பான எரிமலை வெடிப்பால் தோன்றியதாகக் கருதப்படும் ரோட்ரிகசு தீவில், ஏராளமான பூக்கும் தாவரங்கள் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. தீவில் ஆல்காக்கள் - 179, பவளப் பாறைகள் 148, மெல்லுடலிகள் 2500, மீன்கள் - 858 என மொத்தம் 4374 வகையான விலங்குகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

வடமடகாசுகருக்கும், மொசாம்பிக் நாட்டின் வடகிழக்குக்கும் இடையில் அமைந்துள்ள கொமரோசு (Comoros), தீவுகளால் ஆன நாடு. அரபியில் குமர் (Gamar) எனில் சந்திரன். சந்திரத் தீவு எனும் பொருளிலேயே கொமரோசு நாடு என இத்தீவு அழைக்கப்படுகிறது.

640சதுர கி.மீ. பரப்பளவு கொண்டுள்ள கொமரோ தீவுகளில், முதலாவதாகக் குடியேறியவர்கள் பாண்டு இன மக்கள். மூன்று பெரிய தீவுகளையும், ஏராளமான சிறிய தீவுகளையும் கொண்டுள்ள கொமர் நாட்டின் தேசியமொழி கொமரியன் (Comorian). கொமர் நாட்டுப் பெண்களின் பாரம்பரிய உடையாக சேலை போன்ற சிரோண்மணி (Shiromani) உடை குறிப்பிடப்படுகிறது. கொமர் பெண்கள் சந்தனக் குழம்பையும், மிசின்சனோ எனும் பவளப் பாறையையும் முகத்தில் பூசுவார்களாம். மலையாளப் பெண்கள் போல் குமர் பெண்களும் முண்டு கட்டுவது சிறப்பு.

குமர் தீவுகளின் உயிரினப் பல்வகைமை மடகாசுகர் தீவினை ஒத்திருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. எரிமலைக் குளம்பினால் ஆன தீவுகள் என்பதால், குமரின் தாவரப் பெருக்கம் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. காப்புக் காடுகள் அதிகம். தென்னை மரங்கள் பரவலானவை. பாலூட்டிகளில் லெமூர்களும், கடல் பாலூட்டிகளும், வௌவால்களும் இடம்பெற்றுள்ளன. துடுப்பு மீன்களான சீலோகாந்துகள் பரவலாக அறியப்பட்டுள்ளன.

பதிவுகளின்படி (dahariccomores.org), கொமர் தீவுகளில் தோராயமாக 2000 தாவர வகைகள் இடம் பெற்றுள்ளன. பறவைகளின் 101 இனங்களில் 56 சொந்தமாவை. அன்சுவான் தீவில் 19, பெரிய குமரில் 27, மொகலியில் 22 இனங்கள் உள்ளன. கொமரில் ஆந்தைகள் குறிப்பிடத்தகுந்தவை. 24 ஊர்வன இனத்தில், 10 கொமருக்கே உரியவை. 62 பட்டாம்பூச்சிகளில் 14 தீவுக்கே உரியவை.

கொமர் தீவுகளுக்கும் மடகாசுகருக்கும் நடுவிலுள்ள மயோட்டி தீவும் (மயோர்), அருகாமை சிறு தீவுகளும் பிரெஞ்சு நாட்டுக்குச் சொந்தமானவயாகக் குறிப்பிடப்படுகின்றன. 374 சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட மயோட்டி தீவு மக்கள், பண்பாட்டு ரீதியாக கொமர் தீவு மக்களோடு நெருங்கிய உறவுடையவர்களாக அறியப்படுகின்றனர்.

தான்சானியாக் கரையிலிருந்து 25 - 50 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சான்சிபார் தீவுகள் (Zanzibar) குறிப்பிடத்தக்கவை. சான்சிபர் தீவுகளில் பெரிய தீவான உங்குசா 85 கி.மீ. நீளமும், 30 கி.மீ. அகலமும் கொண்டது. இரண்டாவது பெரிய தீவு பெம்பா. முன்னர் தனி நாடாக அறியப்பட்ட சான்சிபர், 1964 இல் தான்சானியாவுடன் இணைக்கப்பட்டு, அந்நாட்டின் ஒரு மாநிலமாக மாற்றம் பெற்றுள்ளது.

சான்சிபர் நகரமாகவும், அடர்ந்த மக்கள் கூட்டமும் கொண்டுள்ளதால், தீவுகளில் உயிரினப் பல்வகைமை பெரிதும் மாற்றப்பட்டுவிட்டது. பெரும்பாலான காடுகள் அழிக்கப்பட்டு தானியப் பயிர்களும், வாசனைப் பொருள்களும் பயிரிடப்படுகின்றன. தீவுகளில் தென்னை மரங்கள் பெருமளவில் உள்ளன. பாலூட்டிகளில் வௌவால்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன. சான்சிபர் சிறுத்தை அழிந்துவிட்டதாகப் பதிவுகள் சுட்டுகின்றன.

கென்ய நிலத்திலிருந்து 1600 கி.மீ. கிழக்கே, மாலத் தீவுகளிலிருந்து 2100 கி.மீ. தென் மேற்கே அமைந்துள்ள செசல்சு (Seychelles) நாட்டில், 155 தீவுகள் இடம்பெற்றுள்ளன. சுமார் 459 கி.மீ. பரப்பு கொண்ட செசல்சு தீவு நாடு, ஆப்பிரிக்காவிலேயே மிகக் குறைந்த மக்கள் தொகை கொண்ட நாடாக (94,228 - 2016 கணக்கு) அறியப்படுகிறது.

செசல்சு தீவுகள் கிரானைட் தீவுகள் (44), பவளத் தீவுகள் (29), உயர்ந்த அல்லது மேலெழுந்த பவளத் தீவுகள் (67) என அடையாளம் சுட்டப்படுகின்றன. செசல்சு தீவுகள் வெப்பமண்டல மழைக்காடுகள் என்பதாலும், மனிதர்கள் 1770 ஆம் ஆண்டு தொடங்கியே வாழ்வதாலும், பெரும்பாலான காடுகள் பாதுகாக்கப்பட்டவையாக சுட்டப்படுகின்றன. எனினும் தற்காலத்திய அபரிமிதமான சுற்றுலா வளர்ச்சியால் செசல்சு தீவுகளின் பல்லுயிர்ப் பெருக்கம் பாதிக்கப்படுவதாக குறிப்புகள் சுட்டுகின்றன.

செசல்சு தீவுகளுக்கே உரியதாக பல தென்னை மரங்கள் அறியப்பட்டுள்ளன. அவ்வாறே பெரிய ஆமைகள் (Aldabrachelys) அதீத கடற்பறவைகள், ஆயிரத்திற்கும் மேலான மீன் வகைகள், பவளப் பாறைகள், நண்டுகள், தவளைகள் (ஆறு வகைகளில் ஐந்து வகை தீவுக்கே உரியவை) இருபது வகையான பல்லிகள், இருவகையான தீவு பாம்புகள் போன்ற ஏராளமான விலங்குகளும் அடையாளம் காணப்பட்டுள்ள.

செசல்சு தீவுகளின் மக்கள் தொகையில் நான்காயிரம்பேர் வரை தமிழர் என அறியப்படுகிறது. செசல்சு மற்றும் ரீயுனியன் தீவுகள் பிரெஞ்சு நாட்டோடு தொடர்புடையதால், ஏராளமான தமிழர்கள் குறிப்பாக பாண்டிச்சேரி தமிழர்கள் இத்தீவுகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். பல தலைமுறைகளுக்கு முன்பே குடியேறியிருந்தாலும் தமிழ் மொழி, தமிழர் பண்பாடு தற்போதும் ஓரளவிற்குப் பேணப்படுவதாகக் கூறப்படுகிறது முத்துச்சாமி எனும் பெயர் மூடுசாமி என மருவியுள்ளதாம். வள்ளியம்மா வலியமா என மாறிவிட்டாராம்.

இருநூற்றாண்டுக்குள்ளாகவே தமிழை இப்படி மறந்துவிட்ட தமிழர்கள் இருக்கும் நிலையில், ஆப்பிரிக்காவில் ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் நிலைபெற்று வருவது எத்தனை வியப்பானது, போற்றுதலுக்குரியது.

இந்தியப் பெருங்கடலின் சுகுத்ரா தீவு (Socotra) ஆப்பிரிக்க கொம்புக்கு அருகில் அமைந்துள்ள நான்கு தீவுகள். இத்தீவுகள் தனித்திருப்பதன் காரணமாக மிகப் பரவலான தனித்துவமிக்க தாவர வகைகளைப் பெற்றுள்ளன. குறிப்பாக டிராகன் சிவப்பு மரம் (Socotra Dragon Tree), தனிச் சிறப்பானதாக் கூறப்படுகிறது.

சுகுத்ரா, சுகோத்ரா எனும் பெயர் சுமத்ரா போன்று ஒலிக்கிறது. எனில் கிழக்கின் சுமத்ரா தீவு போன்று மேற்கிலும் சுமத்ரா எனும் பெயர் தொல்தமிழரால் இடப்பட்டிருக்கலாம். ஒப்பு நோக்க சுகுத்ராவிலிருந்து 1000 கி.மீ. தூரத்திலிருக்கும் ஓமனின் மசிரா தீவு (Masirah). இப்பெயரும் மதுரா போன்றோ ஒலிப்பது குறிப்பிடத்தக்கது. தூரமான மதுரா என்பது தூரமதுரா தூமதுரா, துமத்ரா. சுமத்ரா என மாறியிருக்லாமோ? சு – பெரிய – பெரிய மதுரையோ. சுகுத்ரா பெயர் சமுத்ரா என்பதன் மருவாகவும் இருக்கலாம். சமுத்ரா - சமுத்ரா - சமுத்ராத் தீவு. பதிவுகளின்படி, சுகந்தரும் தீவு என்பதே சுகத்ரா என மருவியதாம். இது ஏற்புடையதாகத் தெரியவில்லை.

132 கி.மீ. நீளமும் 50 கி.மீ. அகலம் கொண்ட பெரிய தீவான சுகோத்ரா தீவு சோமாலியாவிலிருந்து 240 கி.மீ. தொலைவிலும், ஏமனிலிருந்து 380 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. தீவுக்கே உரிய உயிரினங்கள் குறிப்பாக தாவர இனங்கள் சோகோத்ரா தீவுகளில் அதிகம். 825 தாவர வகைகளில், 307 தீவுகளுக்கே உரியவை. முதுகெலும்புள்ளவைகளில் ஆறு பறவை இனங்கள், ஒரு பாலூட்டி தீவு விலங்குகளாக அறியப்பட்டுள்ளன. தீவுகளில் இருவாழ்விகள், ஊர்வன அறியப்படவில்லை என்பது வியப்பானது. பல சிலந்தி வகைகளும், மூன்று நன்னீர் நண்டுகளும் தீவுக்கு உரியவையாகக் குறிப்பிடப்படுகின்றன.

இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேலாகத் தொடர்ந்து மனிதர்கள் சகோத்ரா தீவில் வசித்து வருவதால். அதன் ஏராளமான விலங்குகள் அருகாமை நிலத்திலிருந்து தீவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சிலநூற்றாண்டுகளுக்கு முன்புவரையும் ஆறுகளும். சதுப்பு நிலங்களும் சகுத்ரா தீவில் காணப்பட்டதாக பதிவுகள் உள்ளன. பல்வேறு மாற்றங்களை சந்தித்து வந்துள்ள சகுத்ரா தீவு, தற்போது வெளிக் கோளச் சூழல் (Outer planet) போன்ற தோற்றத்தைப் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

செங்கடலிலும், பெர்சியன் வளைகுடாவிலும் ஏராளமான தீவுகள் இடப்பெற்றுள்ளன. ஏமனுக்கும் எரித்ரியாவிற்கும் இடையிலுள்ள நீரிணைப்பு அதாவது செங்கடலும் ஏடன் குடாவும் இணையுமிடமான கடற்பகுதி 26 முதல் 29 கி.மீ. தூரம் மட்டுமே கொண்டுள்ளது. இதுவே செங்கடலில் குறைந்த இடைவெளி. அதிகபட்ச அகலம் 306 முதல் 355 கி.மீ. என அறியப்படுகிறது. செங்கடலின்

அதிகபட்ச நீளம் 2250 கி.மீ. சராசரி. ஆழம் 1607 அடிகள். அதிகபட்ச ஆழம் 9970 அடிகள். செங்கடலின் மேற்குக் கரையில் எகிப்து, சூடான், எரித்ரியா, ஜிபோடி நாடுகளும் கிழக்கில் சௌதி அரேபியா, ஏமன் நாடுகள் இடம்பெற்றுள்ளன.

பாரசீக வளைகுடா அதிக பட்சமாக 989 கி.மீ. நீளமுடையது. சராசரி ஆழம் 160 அடிகள். அதிகபட்ச அழம் 300 அடிகள். பாரசீக வளைகுடாவின் பெரும்பாலான பகுதியில் வடக்கே ஈரானும், தெற்குப் பகுதியில் சௌதி அரேபியாவும் இடம் பெற்றுள்ளன. கொர்முச் நீரிணையில் மிகக் குறைவான அகலம் 39 கி.மீ. மிக அதிகமான அகலம் 340 கி.மீ.

செங்கடல் உயிர்ப் பல்வகைமைத் திட்டத்தின் ஆய்வுகளின்படி, செங்கடல் பகுதியில் 320 வகையான பவளப் பாறைகளும், 1078 வகையான மீன்களும் அறியப்பட்டுள்ளன. இவற்றில் 10 முதல் 15 சதமானம் வரை செங்கடலுக்கே உரியவையாக உள்ளன.

இந்தியப் பெருங்கடல் தீவுகளின் அமைவிடமும், அவற்றின் உயிரினப் பல்வகைமையும் விலங்கினப் பரவலுக்கு, பரிமாணத்திற்கு, குறிப்பாக மனிதன் இடம்பெற்றுள்ள பாலூட்டிகளின் பரவலைப் பற்றிய புரிதலுக்கு, தெளிவுக்கு, துணைபுரிகின்றனவா எனில் அவ்வளவு உறுதியாகச் சொல்ல இயலவில்லை. பெரும்பாலான ஆழ்கடல் தீவுகள் எரிமலை வெடிப்பால் தோன்றியுள்ளன. எனில் அவை கண்ட நகர்வுக் கொள்கைக்கு துணை புரியாது. பெரும்பாலான தீவுகளில் குறிப்பிட்ட சில முதுகுநாணிகளே இடம்பெற்றுள்ளன. பாலூட்டிகளில் வௌவால்கள் மட்டுமே உள்ளன. இருவாழ்விகள், ஊர்வன விலங்கினங்களிலும் மிகமிகக் குறைவான எண்ணிக்கையிலேயே விலங்குகள் இடம்பெற்றுள்ளன. மனிதர்களும் சமீப காலங்களிலேயே வாழத் துவங்கியுள்ளனர்.

கண்ட நகர்வுக் கொள்கை குறித்து பல விமர்சனங்கள் எழுந்துள்ளன. கண்ட நகர்வு, சரிவு, உரசல் என்பதற்கு மாறாக, கண்டத் தட்டுக்கள் இடப்பெயர்வு பற்றி அதிகம் பேசப்படுகிறது. வேக்னர் ஏதனால் கண்டங்கள் இடம்பெயருகின்றன என்பதை அறுதியிடாவிட்டாலும், நவீன அறிவியல் அதை எளிதாக விளக்குகிறது. பூமியின் மையத்திலிருந்து அதீத வெப்பம் வெளியேறுகிறது. அவ்வெப்பத்தை பூமிக்கு வெளியேவிடாமல் பூமியின் மேற்பரப்பு, மேற்தோல் தடுக்கிறது. எனவே வெப்பம் பூமிக்கு அடியே குறிப்பிட்ட திசையில் நகர்கிறது, சுழல்கிறது. எனவே

கண்டத் தட்டுக்களும் நகர்கின்றன. தட்டுகள் ஒன்றைவிட்டு ஒன்று விலகியோ, மோதியோ, சறுக்கியோ நகர்கின்றன. மோதினால் மலைகள் உருவாகும். விலகினால் பள்ளங்கள் தோன்றும். சறுக்கினால் உராய்வின் காரணமாக நில நடுக்கம் போன்றவை நிகழலாம். எனினும் கண்டத் தட்டுகள் நகர்வுக் கொள்கையிலும் பல குழப்பங்கள் சுட்டப்படுகின்றன.

ஆப்பிரிக்கா அதன் இடத்திலேயே அமைந்திருக்க, எதனால் மற்ற கண்டங்கள் நகர்ந்து சென்றன அல்லது செல்கின்றன? கண்ட நகர்வுக் கொள்கையின்படி, தென்கோளத்தில் ஆப்பிரிக்கா, இந்தியா, ஆத்திரேலியா, அமெரிக்கா கண்டங்கள் இணைந்தே இருந்தன. பின்னர் கண்டங்கள் நகரத் தொடங்கின. ஆப்பிரிக்காவை விட்டு விலகிய பின்பும் இந்தியா, அரேபியா, மடகாசுகர் போன்றவை ஒன்றாக இணைந்திருந்தன. அதன்போது ஆப்பிரிக்கா, ஆத்திரேலியா, தென்னமெரிக்கா ஒரு இணைப்பாக இருந்தன. தொடர்ந்து இந்தியா, மடகாசுகர், அரேபியா தனித்தனியாகப் பிரிந்தன. இக்கருத்தில் புரியாத ஒன்று இந்தியா, அரேபியா வெகு தொலைவில் நகர்ந்து விட்டிருக்க மடகாசுகர் நிலம், ஆப்பிரிக்கா கண்டத்தின் அருகிலேயே இருப்பதன் காரணமென்ன? மடகாசுகர் சிறிய நிலப்பரப்பாக இருப்பதனால் அதுதானே அதிகமாக நகர்ந்திருக்க வேண்டும்?

பெருங்கண்டங்களின் ஓரப்பகுதிகளையும் அதாவது கடற்கரைப் பகுதிகளையும், அருகிலிருக்கும் தீவுகள், பிற நிலங்களையும் உற்று நோக்கினால் அவை மிகச் சரியாக ஒன்றுடன் ஒன்று பொருந்துவதுபோல் உள்ளன. ஆப்பிரிக்கா - தென்னமெரிக்கா, ஆப்பிரிக்கா - மடகாசுகர் உதாரணமாகக் கூறலாம். எனில், இந்தியாவின் மேற்குக் கடலும், அரேபியாவின் தெற்கு, ஆப்பிரிக்கக் கொம்புப் பகுதியை ஒத்திருப்பதாகக் கூறலமா? அல்லது இந்தியாவின் மேற்குப் பகுதி மடகாசுகரின் கிழக்குப் பகுதியை ஒத்திருப்பதாகக் கருதலாமா?

ஆப்பிரிக்காவின் கொம்புப் பகுதியோடு முன்னர், இந்தியத் துணைக் கண்டம் ஒட்டியிருந்ததாகக் கருதினால், பல்வேறு கேள்விகளுக்குமான விடை கிடைக்கிறது, இவற்றின் கடற்கரை அமைப்பும் கிட்டத்தட்ட ஒத்தே இருக்கிறது. ஆப்பிரிக்காவின் வடகிழக்கும், இந்தியாவின் தென்மேற்கும் இணைந்திருந்தன எனில், விலங்கினப் பரவலும், மொழி, பண்பாடு உள்ளிட்ட மானுடகுல வளர்ச்சியும் எவ்வாறு உலகமெல்லாம் கிளை விரித்தன என்பதை எளிதில் விளக்கி விடலாம்.

செங்கடலின் இருமுனைகளும் அழகாகப் பொருந்துகின்றன. பாரசீக குடாவின் தெற்கும், வடக்கும் சரியாக இணைகிறது. தெற்குக் கரையின் நீட்சியான கோம்ருச் வடக்கின் பள்ளத்தோடு சரியாகப் பொருந்துகிறது. ஆப்பிரிக்காவின் கொம்பு ஏமனின் நிலத்தோடு ஒத்துப் போகிறது. எனில் கண்டங்கள், கண்டத் தட்டுகள் ஒன்றையொன்று நெருக்குகின்றனவா அல்லது விலகுகின்றனவா? விலகுகின்றன என்பதே பொருத்தமோ?

சமீபகால இணையவளர்ச்சி, கண்டத்திட்டுக் கொள்கையிலும் எதிரொலிக்கிறது. கண்ட, கண்டத் திட்டு கொள்கை குறித்து ஏராளமான வரைபடங்கள், வரைகலை யுத்திகள், விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. சில தளங்கள் அல்லது சிலர், 25 கோடி வருடங்களுக்கு முன்னர் கண்டங்கள் எப்படி இருந்தன என்பதிலிருந்து, அடுத்து வரும் 25 கோடி வருடங்களில் கண்டங்கள் எப்படி இருக்கும் என்பதுவரை வரைகலையாக, நிரலாகக் காட்டுகின்றன. நாளை என்ன நடக்கும், அடுத்த வருடம் எப்படி இருக்கும் என்பதை அறுதியிட முடியாத நிலையில், அடுத்துவரும் 25 கோடி ஆண்டுகளில் (250 மில்லியன்) கண்டங்கள் எப்படி நகரும் என்பதைக் கணிப்பது வேடிக்கை.

ஒரு இணையதளம் அனைத்து நாடுகளையும், நிலங்களையும் அப்படியே மடக்கி, பின்னா் தற்போதுள்ளதுபோல் அப்படியே வெளியே கொண்டு வருகிறது. மரக்கிளையை வளைத்துத்பின் மீட்பது போல், கிழக்கு, தெற்கு, ஆசியா அப்படியே வளைந்து ஆப்பிரிக்காவோடு ஒட்டி, பின் மீள்கிறது. பெருநிலமும் அருகிலுள்ள நிலத்தோடு சரியாகவே பொருந்துகிறது. உலகின் புவியியல் அமைப்பில் கடலுக்கு இந்தப்புறம் நீட்டம் உள்ளதெனில், அந்தப் பக்கம் சரியாக உட்குழிவு உள்ளது. இதை வைத்து நிலப்பரப்புகளை சரியாக இணைக்கலாமெனில், நிலத்தில் மேடுபள்ளங்கள், மலைகள் எவ்வாறு தோன்றின என்பதை எப்படி விளக்குவது? கண்டங்கள் தோன்றும்போதே, பூமி தோன்றும்போதே மலைகளும் தோன்றிவிட்டனவோ?

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளில், மிகமிக மெதுவாக நிகழ்ந்த கண்ட இடப்பெயர்வை, இரண்டு மூன்று நிமிடங்களில் அழகாகக் காட்டுகிறார்கள். தென்கோடியிலிருந்து இந்தியத் துணைக்கண்டத்தைக் கிளப்பி, வேகமாக நகா்த்திக் கொண்டுவந்து, ஆசியாவோடு மோத விடுகிறார்கள். மெதுவாக மோதினால் இமயமலை எப்படி அவ்வளவு உயரத்திற்கு எழும்பும்? அவ்வளவு வேகமாக எந்தக்

கண்டமும், கண்டத்தட்டும் நகர்வதில்லை. நிலத்தட்டுகள் மிகமிக மெதுவாக, ஆண்டுக்கு இரண்டு, மூன்று சென்டிமீட்டர்கள் தூரமே நகர்வதாக அறிவியலாளர்கள் எடுத்துரைக்கின்றனர். எனில் மிகமிக மிகமெதுவாகவே பெருநிலங்கள் நகரும். அது புரியாமல், இந்தியா ஆசியாவோடு மோதிய வேகத்தில், தென்கிழக்கு ஆசியாவின் தீவுகள் மைய நிலத்திலிருந்து சிதிறியதாக, கிராபிக்ச்சில் காட்டுகிறார்கள். தென்கிழக்காசியாவின் தீவுகள் முன்னர் பெருநிலமாக இருந்து, காலப்போக்கில் ஒன்றிலிருந்து ஒன்றி பிரிந்திருக்குமோ?

நெடுங்காலத்திற்குமுன் மலாய்த் தீபகற்பம், சுமத்ரா, சாவகம் ஊடாக ஆத்திரேலியாவிற்கு நிலத்தொடர்பு இருந்திருக்க வேண்டும். அதன் மூலமே அந்தமானின் தொல்குடிகளை ஆத்திரேலியாவோடு இணைத்துப் பார்க்க இயலும். ஏனெனில் பண்டு, படகுகள், கப்பல்கள் மூலம் தென்கிழக்காசியாவிலிருந்து ஆத்திரேலியாவிற்குச் சென்றார்கள் என்பது ஏற்புடையதாக இருக்காது. நடந்தே உலகம் முழுதும் மக்களினம் பரவியிருக்க வேண்டும். அதன் பின்னரே திட்டுத்திட்டாக நாகரிக வளர்ச்சி தோன்றி, அருகருகே பரவி, காலமாற்றத்தில் உலகெலாம் கொண்டு செல்லப்பட்டிருக்க வேண்டும்.

ஓரிடத்தின் மாந்தர் எதற்காக, எதை வேண்டி அன்றைக்கு இடம் மாறியிருப்பர்? அன்றைக்கு தேவைகள் அதிகமிருந்திருக்காது. அரசுகள் இருந்திருக்காது என்பதால் எதிரிகளும், போர்களும் இருந்திருக்காது. நோய்களும் பெரியளவில் இருந்திருக்காது. விலங்குகளினால் தொல்லை இருந்திருக்கலாம். எனினும் கொன்றுதின்னும் விலங்குகளுக்கும் அன்று தாவர உண்ணிகள் அதிகமாகவே கிடைத்திருக்கும். பின் எதற்காக அன்றைக்கு மக்கள் இடம் பெயர முனைந்திருப்பார்கள்? அதுவும் ஆப்பிரிக்காவிலிருந்து பல்லாயிரம் கி.மீ. தூரம் தாண்டி, பாப்புவா, நியுகினியா வரை, சாலமன், ஈஸ்டர் தீவுகள் வரை, அதற்கு அப்பால் கொனலுலு தீவுவரை, அதற்கும் அப்பால் அமெரிக்கா வரை.

விலங்குகளின் பரிணாமத்திற்கும், தாவரங்களின் பரிணாமத்திற்கும், அவ்வாறே இரு உயிர்த்தொகுதிகளின் பரவலுக்கும் வேறுபாடுகள் நிறைய உள்ளன. விலங்குகள் இடம்பெயர்வது எளிது. எனில் தாவரங்கள்?

பூமியில் மரங்களற்ற ஒரு காலம் இருந்திருக்கும் என்பதையும் மறக்கச் கூடாது. தாவரங்களின் பரவல் மெதுவாகவே நிகழும். பெரும்பாலான தாவரப் பரவல்

அருகருகேதான் நிகழும். இந்தியத் தாவரங்கள் அருகிலிருக்கும் மியன்மர் நிலத்திற்குப் பரவிய பின்னரே மலேயா நிலத்திற்குள் பரவ முடிந்திருக்கும். என்னில், உலகின் அனைத்துப் பகுதிகளிலும் பரவியிருக்கும் புற்கள், செடிகள், கொடிகள், மரங்கள் எப்படிப் பரவின? எப்போது பரவின?

பரிணாமத்தின் பாதை (Path of Evolution) புத்தகத்தில் திரு. அட்டன்பரோ தாவர, விலங்குகளின் தோற்றத்தை அழகாக விளக்கியுள்ளனார். பூமியில் உயிரினப் பரிணாமத்தின் மொத்த ஆண்டுகளை, ஒரு வருடக் காலத்தில் நிகழ்ந்ததாக உருவகம் செய்துகொண்டால், முதல் செல் உயிரினங்களே (Protista) செப்டம்பர் மாத ஆரம்பத்தில்தான் தோன்றுகின்றனவாம். அதாவது 1200 மில்லியன் ஆண்டுகளுக்கு (120 கோடி ஆண்டுகளுக்கு) முன்னர். அவ்வாறெனில் ஆதியில் தோன்றிய பூமி, தற்போதுள்ள பூமிபோன்று ஆகி, உயிர்கள் வாழ்வதற்கான சூழல் பெற்ற பூமிப்பந்தாக மாற்றம் பெறுவதற்கு ஒன்பது மாதங்கள் ஆகியிருக்கிறது எனப் பொருள்.

முதல்செல் விலங்குகள் பச்சையம் கொண்ட தாவரங்கள். தொடர்ந்து இவற்றை உணவாகக் கொண்ட ஆரம்பநிலை விலங்குகள். அக்டோபர் மாதத்தில் செல்கூட்டமைப்பு கொண்ட கடற்பஞ்சுகள் தோன்றினவாம், நவம்பர் மூன்றாம் வாரத்தில் மீன்கள் தோற்றம் பெற்றன. திசம்பரில் சின்னஞ்சிறு பல்லியினம் கடல் மணலில் ஊர்ந்து சென்றது. திசம்பர் 31வரை மனிதன் தோன்றவில்லை. இதன் பொருள், திசம்பரின் இறுதியில் வரும் சில மணிநேரங்களில் மனிதன் தோன்றினான்.

தாவரங்கள் மிகவும் அற்புதமானவை. அழகானவை, சிறப்பானவை. தாவர உலகம் பெருமதிப்புடையது, மதிப்பிற்குரிய நம் பாவாணர் தாவரங்களை நிலைத்திணை என்னும் சொல்லால் சுட்டுகிறார். மிகவும் பொருத்தமான மற்றும் அழகான சொல்.

தாவரங்களே விலங்கின வாழ்விற்கு அடிப்படை. தாவரங்களை உண்டு வாழும் விலங்குகள், சிறிய கைமாறாக அவற்றைப் பரப்பவும் செய்கின்றன. நீரின் மூலமும் காற்றின் மூலமும் தாவரங்கள் பெருமளவில் பரவுகின்றன. எனினும் பறவைகள், வௌவால்கள், யானைகள் போன்ற பிறவிலங்குகளும் குறிப்பாக பூச்சிகள் தாவரப் பெருக்கத்திற்கு அரும்பணியாற்றுகின்றன.

மரபான தாவரவியல் வகைப்பாடு அண்மைக்காலத்தில் கலனிழையம் (Vascular tissue) போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு சற்றே மாற்றப்பட்டுள்ளது. குறிப்பாக தலோபைட்டா, பிரையோபைட்டா போன்ற தாவரப் பிரிவுகளுக்கு கலனிழையம் கிடையாது என்பது குறிப்பிட்டத்தக்கது.

தற்போதைய தாவர வகைப்பாட்டில் பச்சைநிறமாக உள்ளவையே தாவரங்களாகக் கருதப்படுகின்றன. முன்னர் பூஞ்சைகள், நீலப்பாசிகள் மற்றும் பழுப்புப்பாசிகள் (Algae) போன்றவையும் தாவரத் தொகுப்பில் இடம் பெற்றிருந்தன.

தாவரப் பல்வகைமை, பூக்காத தாவரங்கள் - கிரிப்டோகேம்கள் மற்றும் பூக்கும் தாவரங்கள் - பெனரோகேம்கள் என இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. பூவாத் தாவரங்கள் தாலோபைட்டா (வேர், தண்டு, இலை, கலனிழையம் அற்றது), பிரையோபைட்டா (நீர், நில, வாழ் தாவரங்கள்), டெரிடோபைட்டா (விதையற்ற தாவரங்கள் - பெரணிகள்) எனப் பிரிக்கப்படுகின்றன.

பூக்கும் தாவரங்கள் திறந்த விதைத்தாவரங்கள் (ஜிம்னோஸ்பெர்ம்கள் - சைகஸ், பைனஸ்) மற்றும் மூடிய விதைத்தாவரங்கள் (ஆன்ஜியோஸ்பெர்ம்கள் - தென்னை, வேம்பு) என அறியப்படுகின்றன. முடிய விதைத்தாவரங்கள் ஒரு வித்திலைத் தாவரங்கள் - மோனோ காட்டிலடன் - நெல், கோதுமை மற்றும் இரு வித்திலைத் தாவரங்கள் (ஆமணக்கு) என இருபிரிவாக உள்ளன.

தாவர உலகின் மிக அதிகமான தாவர இனங்கள் பூக்கும் தாவரங்களே. உலகில் பச்சைநிறத் தாவரங்கள் மூன்று இலக்கத்திற்கும் அதிகம் எனில் அவற்றில் 85 - 90சதமானம் பூக்குள் தாவரங்களே. மனிதர்களின் வயிற்றை நிரப்பும் நெல், கோதுமை, சோளம் போன்ற முக்கியமான தானியப்பயிர்கள் புற்கள் வகையைச் சார்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

பச்சைத் தாவரங்களில் (Viridi Plantae), பச்சைப்பாசிகள் (Chlorophyta, Charophyta) 6500 முதல் 10000 வரையும், பிரையோபைட்டுகள் (Bryophytes, Liverworts, Hornworts, Mosses) 18,000 வரையும், டெரிடோபைட்டுகள் - Ferns, Club Mosses) 12,000 வரையிலும், விதைத் தாவரங்கள் 2,60,000 வரையிலும் அறியப்படுள்ளதாகக் கூறப்படுகிறது.

கண்ணுக்கினிய மலர்களைக் கொடுக்கும் ஆர்க்கிட்டுகளில் 20,000 வகைகள் அறியப்பட்டுள்ளனவாம்.

தாவரங்கள் உணவாகின்றன. தாவரங்கள் மருந்தாகின்றன. தாவரங்கள் வீடாகின்றன. தாவரங்கள் குளிர்ச்சி. தாவரங்கள் மழை. தாவரங்கள் பச்சை. அழகு, மணம், அறிவு, தெய்வம், முன்னோர்.

கடலில் பலதரப்பட்ட உயிர்னங்கள் தோன்றி வளர ஆரம்பித்த சமயத்தில் நிலப்பரப்பு வெறுமையாகவே இருந்தது. 42கோடி ஆண்டுகளுக்குமுன்பு சில கடற்பாசிகள் நிலத்தில் அமைந்தன. எனினும் இவற்றால் முற்றிலும் நிலத்தைச் சார்ந்திருக்க இயலவில்லை. இவற்றின் இனப்பெருக்கம் நீரையே சார்ந்திருந்தது.

வேர்கள் இல்லாத மாஸ்தாவரங்கள்தான் ஆரம்பகால நிலத்தாவரங்கள் (ஐயமறச் சொல்ல இயலாது). இவை 40 கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டவை. தொன்மை கால மாஸ்களும், ஈரலுருத் தாவரங்களும் (Liverworts) Worts - சிறு செடிகள் - ஈரலின் தோற்றத்தை ஒத்த சிறுதாவரங்கள்), பின்னிப் பிணைந்து மரகதப் போர்வை போல் படர்ந்து சின்னஞ்சிறு காடுகளாக கழிமுகத்துவாரப் பகுதிகளிலும் ஆற்றோரங்களிலும் பரவின.

கடலிலிருந்து வெளிவந்த முன்னோடி விலங்கினங்கள் அதாவது மரவட்டைகள் - Millipedes இங்கு வந்து சேர்ந்தன. இவைகள் நிலத்தில் வாழ்வதற்குரிய கைட்டினாலான தகவமைப்பை முன்பே பெற்றிருந்தன.

ஆரம்ப காலத் தாவரங்களுக்கு உண்மையான வேர்கள் இல்லை. சூரிய ஒளியைப் பெற உயரம் அவசியமானது என்பதால், ஆரம்ப கால தாவரத் தொகுப்புகள், தமது தண்டினுள் பெற்றிருந்த புதிய பலத்தைப் பயன்படுத்தி உயரமாக வளர்ந்து மரங்களாயின. செண்டு மாஸ்களும், குதிரை வார்ட்களும் சதுப்புநிலக் காடுகளில் அடர்ந்து நெருங்கி முப்பது மீட்டர் உயரம் வரை வளர்ந்திருந்தன.

இறக்கைகள் கொண்ட பூச்சிகள் 30 கோடி ஆண்டுகளுக்கு முன்பு தோன்றின. அறியப்பட்டுள்ள இறகுள்ள பூச்சிகளில் தட்டான்களே மிகத்தொன்மையானவை. பரிணாமத் தோற்றத்தின் மற்ற விலங்குகள் போன்றே, தட்டான்களின் ஆரம்பகாலச் சிற்றினங்களும் மிகப் பெரிய உடலைக் கொண்டிருந்தன.

பூச்சிகள் தோன்றும்வரை தாவரங்களின் பாலின இடப்பெயர்ச்சி நீர் வழியாகவே நடந்தது. மரங்கள் முன்னோடித் தாவரங்களான மாஸ்கள் போலவே, பாலின மற்றும் பாலிலா சந்ததிகளான இரண்டு மாற்று உடல் வடிவங்களைக் கொண்டிருந்தன. கூம்புத் தாவரங்கள் மகரந்தத்தையும், அண்டங்களையும் உருவாக்கக் கூடிய இரு கூம்புகளையும் ஒரே மரத்திலேயே தோற்றுவித்தன.

பூச்சிகள் தோன்றியதால் காற்றின் மூலமாகப் பரவும் நிச்சயமற்ற கருவுறுதலுக்கு மாற்றாக, பூச்சிகள் மூலமான நிச்சயமான கருவுறுதல் சாத்தியமானது. மரங்கள் புத்திசாலித்தனமாக, மிக எளிய நிச்சயமான கருவுறுதல் முறைக்காக பூக்களைத் தோற்றுவித்தன. வண்டுகளைக் கவர பூந்தாது, தேன் முதலியவற்றையும் பூக்கள் சுரந்தன. மலர்களின் அழகிய வண்ணங்கள் தேன் மற்றும் பூந்தாதுவை பூச்சிகளிடம் விளம்பரப்படுத்தவே தோன்றின.

முதுகெலும்புடைய உயிரினங்களுக்கு முன்பே பூச்சிகள் பூமியின் நிலப்பரப்பில் குடியேறிவிட்டிருந்தன.

தாவரங்கள் நீர் மூலமாகப் பரவும். உதாரணம் தென்னை. காற்று மூலமாகப் பரவும். அதாவது - ஸ்போர்கள் மூலம். விலங்குகள் மூலமாகவும் பரவும். எனினும் பூச்சிகள் தோன்றியவுடன் தாவரங்களின் பரவல் மிக எளிதானதோடு, மிக விரைவாகவும் நடந்திருக்கும். முக்கியமாக தேனீக்கள், வண்ணத்துப் பூச்சிகள் போன்றவை, பூக்கும் தாவரங்களை மிகப் பரவலாக்கியதில் பெரும்பங்கு வகித்திருக்கும். பூக்கும் தாவரங்களும், பூச்சிகளும் இணைந்து இப்பூமியை பச்சையாகவும், செழிப்பாகவும், அழகாகவும் மாற்றிவிட்டன எனில் மிகையாகாது.

கிழக்கு ஆப்பிரிக்கா முற்காலத்தில் அரேபியாவோடு இணைந்திருந்து, பாரசீகக் குடாப் பகுதியும் நிலமாக இருந்திருக்குமேயானால், ஆப்பிரிக்கக் கிழக்குப் பகுதியில் தோன்றிய விலங்குகளும், தொல்மனிதர்களும் எளிதாக இந்தியாவின் வடபுறத்தை அடைந்து, தொடர்ந்து தென்னிந்தியாவிற்கும் வந்திருக்கக்கூடும். எனினும் இயல்பாக எழும் கேள்வி, எதற்காக அல்லது எதைத்தேடி, தொல் மனிதர்கள் இடம்பெயர்ந்திருப்பார்கள்? அவ்வாறே தாவரங்களும் எதை நோக்கி இடம் யெர்ந்திருக்கும்?

தற்காலத்திய உயிரினப் பல்வகைமையில் ஆப்பிரிக்காவை அதிகம் ஒத்திருப்பது இந்தியாவே. குறிப்பாக, இந்திய துணைக்கண்டம். ஆப்பிக்காவோடு

ஒப்பிடுகையில் தென்னிந்தியா மிகவும் சிறியது. கர்நாடகம் - 1,91,791 கி.மீ., தெலுங்கானா - 1,12,077 கி.மீ, ஆந்திரா - 1,62,968 கி.மீ, தமிழ்நாடு - 1,30,058 கி.மீ., புதுச்சேரி - 492 கி.மீ. மற்றும் கேரளா - 38,863 கி.மீ. என மொத்தம் 6,36,249 கி.மீ. பரப்பளவே தென்னிந்தியா கொண்டுள்ளது. இது ஆப்பிரிக்காவின் மடகாசுகர் தீவை விட 49,208 சதுர கி.மீ. பரப்பு மட்டுமே அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் இந்தப் பரப்புக்குள் வாழும் மக்களும், அவர்களது மொழியும், பண்பாடும், நிலைத்திணைகளும், நிலமும் பெருமளவில் ஆப்பிரிக்காவை ஒத்திருப்பது வியப்பானது.

எனில், ஆப்பிரிக்காவை மையம் கொண்ட உயிரினத் தோற்றம் பற்றிய கோட்பாடை, இந்திய நிலத்தை மையமாக்கிப் பார்ப்பது சரியோ? ஒருவேளை மாந்தர் பரிணாமம் பற்றிய வரலாற்றை இக்கோட்பாடு சீராக்கலாமோ?

தமிழின்மேல் பெரும்பற்றுக் கொண்ட புலவர்களும், அறிஞர் பெருமக்களும், தென்தமிழகத்திற்குத் தெற்கே பெருநிலம் இருந்ததென ஐயமறச் சுட்டுகின்றனர். மிகப் பெரிய நிலப்பரப்பு இருந்ததாகக் கருதாவிட்டாலும், சில நூறு கிலோமீட்டர் தூரத்திற்காவது நிலத்தொடர்ச்சி இருந்ததாகக் கருதலாம். செயற்கைக்கோள் வரைபடங்கள் தென்முனைக்குத் தெற்கே மேடான பகுதி இருப்பதைக் காட்டுகின்றன. எனினும் பாரசீக குடா போன்றோ, சாவகக் கடல் பகுதி போன்றோ அதிகளவு மேடாகத் தெரியவில்லை. பண்டைய சேர நாட்டிற்குத் தென்மேற்கே இருக்கும் லக்கத் தீவுகளும், தொடர்ந்து வரும் மாலத்தீவுகளும் இப்பகுதி மேடானது என்பதைச் சுட்டுகின்றன. இங்கிருக்கும் சாக்கோ - லக்கத்தீவு வரம்பு (Chagos - Laccadive Ridge), அங்கு நீளமான மலைத்தொடர்கள் உள்ளதைக் காட்டுகின்றன. ஆப்பிரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையே தற்போது நில இணைப்பு இல்லாவிட்டாலும், முன்னர் ஓரளவிற்குப் பெரியதொரு நில இணைப்பு இருந்திருக்கச் சாத்தியமுள்ளது. அவ்வாறே அந்தமான் தீவு தொடங்கி ஆத்திரேலியாவிற்கும் ஒரு நில இணைப்பு இருந்திருக்கலாம். எப்படிப் பார்த்தாலும், விலங்குகளும் மனிதர்களுமே இடம்பெயர முடிந்திருக்குமேயொழிய காடுகள் இடம்பெயர்ந்து வந்திருப்பது அதிசயம்தான். ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் விளையும் கம்பு, அருகாமைக் காலங்களில் கோடிக்கணக்கான எளிய மக்களின் பசிப்பிணியைத் துடைத்தது பாராட்டக்குரியது.

எதுவாயினும், இந்தியாவிற்கும் குறிப்பாகத் தென்னிந்தியாவிற்கும் ஆப்பிரிக்காவிற்கும் குறிப்பாக கிழக்கு ஆப்பிரிக்காவிற்கும் இடையேயுள்ள தொடர்பு மிக நெருங்கியது என்பது திண்ணம்.

வடக்கு மற்றும் நடு இந்தியப் பெருங்கடலுக்குள் சுமார் 2500 கி.மீ. தூரத்திற்கு நீண்டு கிடக்கும் சாக்கோ - லக்கத் தீவு மலைத்தொடர், இந்தியப் பெருங்கடலில் பீடபூமி போன்று அமைந்துள்ளது. எரிமலைச் சீற்றமுள்ளதாகக் கருதப்படும் சாக்கோ - லக்கத் தீவு மலைத்தொடர், லக்கத்தீவு, மாலத்தீவு மற்றும் சாக்கோசு பகுதிகளாகக் குறிப்பிடப்படுகிறது. நிலநடுக்கமற்ற பகுதியாகச் சுட்டப்படும் சாக்கோசு - லக்கதீவு மலைத்தொடர், சராசரியாக 270 கி.மீ. அகலமுள்ளதாக அறியப்பட்டுள்ளது.

சாக்கோசு - லக்கத்தீவிற்கு மேற்கே அமைந்திருக்கும் நடுஇந்திய மலைத் தொடர், ஆப்பிரிக்கத் தட்டையும், இந்தோ-ஆத்திரேலியத் தட்டையும் பிரிக்கிறது. இந்தியப் பெருங்கடலுக்கு மேற்கே சுமத்ரா முதல் ஆத்திரேலியா வரை 5000 கி.மீ. நீளமுள்ள ஈஸ்ட் (90˙ E ridge) மலைத்தொடர் அமைந்துள்ளது. இதில் 3200 கி.மீ. தூரத்திற்கு சுந்தா (Sunda) கடல்பள்ளம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. தொன்னூறு டிகிரி கிழக்கு மலைத்தொடரிலிருந்து தெற்கே 1200 கி.மீ. நீளமுள்ள புரோகன் மலைத்தொடர் (Broken ridge) ஆத்திரேலியாவின் தென்மேற்கு முனைவரை பரவிக் காணப்படுகிறது. இதன் அகலம் 400 கி.மீ.

சுமத்ரா, பொருணியோ உள்ளிட்ட இந்தோனேசியப் பகுதிகளிலிருந்து ஏறக்குறைய 6000 கி.மீ. தொலைவுக்கு அப்பாலிருக்கும் மடகாசுகர் தீவுக்கு வந்து, அந்நாட்டவரான மெலனேசியர்கள் பல்கிப் பெருகி வாழ முடியுமெனில், பண்டைய சேர நாட்டின் எல்லையிலிருந்து ஈராயிரம் கி.மீ. தொலைவிலிருக்கும் கிழக்கு ஆப்பிரிக்காவுக்கு தமிழர் குடியேறி, நீடித்து வாழ்ந்து வருவதும் பொருத்தமானதுதானே. அதிலும் கடல் பயணத்தில், வணிகத்தில் சிறப்புற்றிருந்த தொல் தமிழருக்கு ஈராயிரம் கி.மீ. என்பது வெகு குறைவல்லவா.

கிழக்கு ஆப்பிரிக்கர்கள் கடல்வழியாக தமிழகத்திற்கு வந்து குடியேறியிருக்கவும் வாய்ப்புள்ளது. அதுவும் சாத்தியமே. ஆப்பிரிக்காவிலேயே பெரியளவில் நாகரிகம்பெற்று அரசுகள் அமைந்திருக்கவும் வாய்ப்புண்டு. உண்மையில், வரலாற்றின்படி, ஆப்பிரிக்காவிலேயே மிகப்பழைய நாகரிகங்கள்,

அரசுகள் அமைந்திருந்தன. எனில், அவர்கள் பாண்டியர்கள் எனவும், அவர்கள் பேசிய மொழி தமிழ் எனவும் கொண்டு, அவர்களே தமிழகத்தில் முதன்முதலாக அரசமைத்தவர்கள், அதாவது முற்கால பாண்டியர்கள் எனக் கருத இடமுண்டல்லவா?

ஆப்பிரிக்காவில் மட்டுமே உயிரினங்கள், மனிதர்கள் தோன்றி, உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவின என்பதற்கு மாற்றாக, சமீப காலங்களில் பல இடக் கோட்பாடு குறித்தும் ஆராய்ப்பட்டு வருகிறது. குறிப்பாக, மானுடர் தோற்றத்தில். ஆப்பிரிக்கா, ஆசியா, குறிப்பாக இந்தியாவில் மானுடம் தோற்றம் பெற்றிருக்கலாம் எனக்கொண்டால், மனிதப் பரவலை எளிதாக விளக்க முடிகிறது. இந்தியப் பெருநிலத்தில் தோற்றம் பெற்ற மானுடர், கிழக்கும் மேற்கும் பரவினர் எனக் கொண்டால், பொருத்தமாக இருக்கிறது. தமிழ்புலவர் மரபு அவ்வாறுதான் கருதுகிறது. தற்போது அதற்கான சான்றுகள் உறுதியாகத் தெரியவில்லையே என்றால், குமரிக் கடல்கோள் கொள்கை முன்வைக்கப்படுகிறது.

ஆப்பிரிக்காவிலிருந்து மானுடம் உலகெங்கும் பரவியது எனில், அதற்குப் பெரும் தடையாய் இருந்திருக்கக் கூடியது பெருமலைகளும், பேராறுகளும், அடர்நத் காடுகளும் எனில் மிகையாகாது. தொல்மனிதர்கள் இவற்றை எப்படிக் கடந்திருப்பார்கள்? ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு, தமிழகத்திற்கு மாந்தர் இடம்பெயர்ந்து வந்தாரெனில், அன்றைக்கு எவ்வாறு அது சாத்தியமாகியிருக்கும்? ஆப்பிரிக்காவில் அதீதமாக மாந்தர் பெருகினார் என்பதை ஏற்க இயலாது. ஏனெனில் ஆப்பிரிக்க நிலம் மிகப் பெரியது. கிழக்கு ஆப்பிரிக்காவில் பெருகினர் எனில் அருகிலிருக்கும் தெற்கு, மேற்கு, வடக்குப் பகுதிகளிலேயே முதலில் பரவியிருப்பர். அன்றைக்கு சகாரா பாலை வேறுவிதமாக இருந்திருக்கும். ஆப்பிரிக்க நிலத்தைச் சுற்றிலும் நீர்தான் இருந்திருக்கும். தற்போதும் அப்படித்தான் உள்ளது. இருந்த, இருக்கும் ஒரே வழி செங்கடலுக்கும் மத்திய தரைக்கடலுக்கும் இடையேயுள்ள சிறு நிலப்பகுதி மட்டுமே. ஆப்பிரிக்காவின் கிழக்கு அல்லது மைய நிலத்தில் தோன்றிய மாந்தர், உடனேயே அந்த சிறு இணைப்பு வழியாக உலகின் பிற பகுதிகளுக்கு வெளியேறினர் எனக் கருத முடியுமா? காரணமின்றி தொல்மாந்தர் இடம்பெயர்ந்திருக்க மாட்டாரன்றோ?

பரிணாமக் கோட்பாடுகள், மனிதக் குரங்கு நிலையிலேயே அதாவது செங்கடல், பெர்சியக் கடல் போன்றவை நிலமாக இருந்திருக்கக் கூடிய

காலத்திலேயே, தொல்மாந்தர் ஆப்பிரிக்க நிலத்திலிருந்து வெளியேறி உலகமெங்கும் பரவி விட்டனர் எனச் சுட்டுகிறது. அதன் பொருளிலேயே அய்ரோப்பிய நியாண்டால்தால் மனிதர்கள் குறிப்பிடப்படுகின்றனர். எனில், மாந்தர் இனத்தின் தொல் மூதாதையர் என ஆப்பிரிக்க நிலத்தை எடுத்துக் கொள்ளலாம். நவீன மாந்தர் வளர்ச்சி, மாந்தர் பண்பாடு, மாந்தர் அறிவுப் பெருக்கம், ஆப்பிரிக்க நிலத்திற்கு வெளியேயும் நிகழ்ந்திருக்க வாய்ப்புள்ளது. எனில், மானுட அறிவுப் பெருகியது, மானுடர் அறிவை அறிவியலை நோக்கி அடியெடுத்து வைத்தது இந்தியாவில், குறிப்பாக, தமிழ்நிலத்தின் குமரிப் பகுதியில் நிகழ்ந்ததாகச் கொள்ளலாம். எனில் தொல்மானுடர் மூதாதை நிலமாக ஆப்பிரிக்காவையும், மானுட மூதாதை நிலமாக இந்தியாவையும் சுட்டலாம்.

இந்தியாவில் தொல்மானுட அறிவுப் பெருக்கமடைந்து, மானுடர் உலகின் மேற்கிலும், கிழக்கிலும் பரவினர் எனக் கொள்ளலாம். கிழக்குக் கடற்கரை வழியாக வங்கம், பர்மியம் எனப் பரவி, அங்கே கிளை பிரித்து, சீனம், இந்தோ - சீனப் பகுதிக்கும், மலாய் பகுதிக்கும் பரவினர் எனக் கொள்ளலாம். மலாயிலிருந்து இந்தோனேசியா, நியுகினியா, பிலிப்பைன் எனவும், ஆத்திரேலியா எனவும் பரவியிருக்க வேண்டும்.

மேற்கே சிந்துவைத் தாண்டி பாரசீகம், அங்கே கிளை பிரித்து, மங்கோலியும், துருவப் பகுதி எனவும், மத்திய ஆசியா, துருக்கி, ஐரோப்பா எனவும் பரவியிருக்கக் கூடும். இந்திய முன்னோடிமாந்தர் மட்டும் எவ்வாறு பெருமலைகளையும், பேராறுகளையும் கடந்திருப்பர் எனில், அதற்கான அறிவைப் பெற்றே, அத்தகைய வளர்ச்சியை அடைந்தே, துணிந்து முன்னேறியிருப்பர். அறிவைப் பெற்றவுடன் அதை வெளிக்காட்டிட, பகிர, மற்றவரைத் தேட, அவரோடு உறவாட, மானுட மனம் விழைவது இயற்கை. உண்மையெனில் மானுட உடல் வளர்ச்சி ஆப்பிரிக்க நிலத்தில் நிகழ்ந்தது எனவும், மானுட பண்பாட்டு வளர்ச்சி, அறிவுப் பெருக்கம் இந்திய நிலத்தில் நிகழ்ந்தது எனவும் கொள்வது மிகப் பொருத்தமுடையதே, ஏற்கக் கூடியதே. தொல்காலம் முதலே இந்திய நிலம் அறிவுக்குப் பெயர் பெற்று விளங்குகிறது எனில் உலகினர் அனைவரும் ஒப்புவரன்றோ.

ஆப்பிரிக்கத் தொல்மாந்தர் எப்படி பெருங்கடல்களையும் பேராறுகளையும் கடந்திருப்பர்? இந்திய மானுடர் கடல்களையும் ஆறுகளையும் படகுகள் மூலமும், ஓடங்கள் மூலமும் எளிதாகக் கடந்திருப்பர். தமிழர் தொல்காலம் முதலே

கடற்பயணங்களில் சிறந்திருந்தது ஒப்புநோக்கத்தக்கது. இந்திய வாசனைப் பொருள்கள் உலகமெங்கும் கொண்டு செல்லப்பட்டதை, உலகின் வரலாறு அறிந்த அனைவரும் ஏற்றுக் கொள்வர். முன்பு மூவேந்தரும் கடல்வழியாகவே பெருவணிகத்தை மேற்கொண்டனர் எனில், அந்த அறிவு அவருக்கும் மூத்தோரிலிருந்து கடத்தப்பட்டிருக்கும்.

ஓடங்கள் செய்யக் கற்றுக்கொண்ட அறிவு, ஆறுகளை எளிதாகக் கடக்க உதவியிருக்கும். அந்த நுட்பம் உலகின் அனைத்துப் பகுதிகளுக்கும் விரைவாகப் பரவியிருக்கும். அன்று ஒவ்வொரு சிறு கண்டுபிடிப்பும் முக்கியமானதாக இருந்திருக்கும். ஓரிடத்தில் ஓடங்கள் மூலம் ஆற்றைக் கடப்பதைக் கண்ணுற்ற மனிதர்கள், தாங்களும் அவ்வாறு செய்ய முனைந்திருப்பர். ஒருவரைப் பார்த்து இன்னொருவர் என அந்த அரிய கண்டுபிடிப்பு, உலகின் அனைத்துப் பகுதிகளுக்குப் பரவியிருக்கும். அவ்வாறே படகுகளும், படகுகளைத் தொடர்ந்து கப்பல்களும். கப்பல்கள் செய்யக் கற்றுக்கொண்டபின் தூரம் என்பது வெகுவாகக் குறைந்திருக்கும்.

மிகத் தொல்காலத்திய மாந்தர் அதாவது ஆப்பிரிக்கத் தொல்மூதாதையர் ஆறுகளை எப்படிக் கடந்திருப்பர்? அதுவும் பெண்கள் குழந்தைகள் எனக் கூட்டாக இடம் பெயர்ந்திருப்பர் எனில், வருடம் முழுதும் பெரும் நீர்ப்பாய்ச்சலை நிகழ்த்தும் சிந்து போன்ற பேராறுகளை எப்படிக் கடந்திருப்பர்? நீந்திக் கடந்ததாகக் கருத முடியுமா? மனிதருக்கு இயற்கையாக நீச்சல் வருவதில்லை. அது பழக்கத்தால் கற்றுக்கொள்ளல் மூலமே மனிதருக்கு வாய்க்கிறது. தொல்காலத்திலும் அவ்வாறே இருந்திருக்கக் கூடும். எனில் நீச்சலைக் கற்றுக் கொண்டபின்பே ஆறுகளைக் கடந்திருக்க வேண்டும். குழந்தைகளும் பெண்களும் பேராறுகளை நீந்தியே கடந்தனர் என்பது ஏற்கக் கூடியதாக இல்லை. மேற்கின் சிந்து முதல் கிழக்கின் கங்கைவரை இந்திய நிலத்தில் ஏராளமான ஆறுகள் பாய்கின்றன. தென்னிந்தியாவிலும் காவிரிவரை பேராறுகள் பல உள்ளன. கோதையாற்றையும் மகாநதியையும் மிகத் தொல்காலத்தில் எவ்வாறு கடந்திருக்க முடியும்? ஆறுகளைக் கடக்கத் தெரிந்தவரே முன்னும் பின்னும் பரவியிருக்கக் கூடும். எனில் அக்காலத்தில் கண்டுபடிக்கப்பட்ட சிறு ஓடம் எத்தகையதொரு அருங்கண்டுபிடிப்பாக, மானுடப் பண்பாட்டுப் பரிணாமத்திற்கு எவ்வளவு பெரிய அருங்கொடையாக அமைந்திருக்கும்? ஓடம் கண்டுபிடித்த நுட்பம் உலக மாந்தரை

பரவச் செய்ததிலும், ஒருவரையொருவர் நெருங்கிவரச் செய்ததிலும் முக்கியப் பங்காற்றியிருக்கும்.

எனில் ஓடத்தை யார் கண்டுபிடித்திருப்பர்? யாருக்குத் தேவையோ அவர்களே கண்டறிந்திருப்பர். யாருக்குத் தேவை? மலை மக்களுக்கும், பாலை மக்களுக்கும் ஓடங்களின் தேவை இருந்திருக்காது. தமிழர் மொழியில் குறிஞ்சிக்கும், முல்லைக்கும் ஒடங்கள் தேவையில்லை. குறிஞ்சியில் பேராறுகள் இருக்காது. அவ்வாறே முல்லையிலும். குறிஞ்சியில் சிறுசிறு ஓடைகளாகப் புறப்படும் ஆறுகள், முல்லையில் சிற்றாறுகளாகக் கிளம்பி, மருதங்களிலேயே ஆறுகளாக மாறுகின்றன. குறிஞ்சிக்கும் முல்லைக்கும் ஓடம் தேவையில்லை எனில் மருதத்தார்களுக்கே ஓடங்கள் மிகவும் பயனுள்ளவை. ஆற்றின் இக்கரை மக்கள் அக்கரை மக்களோடு இணைய, அதுவும் வருடம் முழுதும் பெருநீர் ஓடும் நைல், சிந்து, கங்கை, காவிரி போன்ற பேராறுகளை ஓடங்களே இணைந்திருக்கும். அன்று காவிரியில் வருடம் முழுதுமே நீர் ஓடியிருக்கும். மேட்டூர், கிருஷ்ணசாகர் அணைகளுக்கு முன்புவரையில் காவிரியாற்றில் பெருநீர் பாய்ந்தோடியிருப்பது ஒப்பு நோக்கத்தக்கது.

அன்று, அதாவது ஓடங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், இந்தியத் துணைக்கண்டத்திற்குள் மானுடர் இடம் பெயர்வது அத்தனை கடினமாக இருந்திருக்காது. தென்னகத்தின் பெரும்பாலான ஆறுகள் கோடையில் வற்றுபவை அல்லது குறைவான நீரோட்டம் உள்ளவை. இவ்வாறுகளை பரிசல்கள் மூலம் கடந்து குமரி முதல் இமயம் வரைப் பயணித்திருப்பது எளிதே.

ஆறுகளைக் கடப்பது எளிதானபின் மனிதர்கள் கடல்களையும் கடக்க முடியும் எனும் தன்னம்பிக்கை வரப் பெற்றிருப்பர். ஆறுகளைக் கடக்க உதவியவர் ஓடக்காரராக மாற்றம் பெற்றிருப்பார். அவரே பரிசல்காரர். அவரது தொழிலே பரிசல் ஓட்டுவதாக இருந்திருக்கும். இக்கரையிலிருந்து அக்கரை செல்ல கொஞ்சம் தானியம் கேட்டிருப்பார். அதைவைத்து தமது குடும்பத்தை நடத்தியிருப்பார். அவரது மகனும் ஓடக்காரராக ஆகியிருப்பார். குடும்பம் பெருகி ஓடத்துறையை உருவாக்கியிருப்பார்கள். குறிப்பிட்ட ஊர் வழியாக அந்த ஆற்றை எளிதாகக் கடக்கலாம் எனும் நிலை அடையப்பட்டிருக்கும். ஓடக்காரர்களின் சந்ததிகள் பெருகி அருகிலேயே புதிய ஓடத்துறையை உருவாக்கியிருப்பார்கள். ஓடம் மூலமாக மீன் பிடிப்பது தொழிலாக மாறியிருக்கும். மீனவரும், ஓடக்காரரும் இரு சமூகங்களாக

வாழ்ந்திருப்பார்கள். அன்று தொடங்கிய ஓடத்தொழிலும், மீன் பிடித்தலும், இந்தியா சுதந்திரம் பெறும்வரை அப்படியே நீடித்து வந்தது வியப்பானதல்லவா.

கடல்களைக் கடந்தவர் படகுக்காரர். அவர் படகோட்டி. படகுகளை எப்படிக் கண்டுபிடித்தார்கள்? மரங்கள் நீரில் மிதக்கும் என்பதை எவ்வாறு அறிந்தார்கள்? நீரில் கட்டைகள், மரங்கள் மிதப்பதை கண்டிருப்பார்கள். மரத்தைப் பிளந்து, கட்டைகளாக்கி, அவற்றை ஒன்றாகக் கட்டி, தெப்பமாக்கி, நீரில் மிதந்து சென்றிப்பார்கள். நீரில் மிதக்கலாம், மூழ்காமல் பயணிக்கலாம் எனும் அறிவு, கண்டுபிடிப்பு மகத்தானது. முதல் படகுக்காரர்கள் மிகுந்த பாராட்டுக்குரியவர்கள். முதலில் சிறிது தூரமே சென்று திரும்பியிருப்பார்கள். கொஞ்சம் கொஞ்சமாகத் தூரத்தை அதிகரித்திருப்பார்கள். கரை கண்ணுக்குத் தெரியும் தூரத்தில் கவனமாக இருந்திருப்பார்கள். கரையைத் தொட்டபடியே தொடர்ந்து பயணித்திருக்கக் கூடும். தங்கள் படகை மற்றவர்க்குக் காட்டி பெருமிதம் கண்டிருக்கவும் கூடுமன்றோ.

ஓடக்காரருக்கும், படகுக்காரருக்கும் சிறிய வேறுபாடுதான். அவர் ஆற்றைக் கடப்பவர். இவர் கடலைக் கடப்பவர். முன்னவர் துறையர். பின்னவர் கரையர். ஒருவர் மருதர். இன்னொருவர் நெய்தலர்.

முந்து மாந்தர் தோன்றியது ஆப்பிரிக்காவில். அவர் மாந்தராகத் தோற்றம் பெற்றது இந்தியாவில். குறிப்பாகக் குமரியில். தமிழ் புலவர் மரபு அத்தனை உறுதியாக முன்னெடுத்துவந்த மாந்தரின் குமரித்தோற்ற வரலாறு மிகுந்த பொருளுடையது எனக் கொள்ளலாம்.

முந்துமாந்தரை மாந்தராக்கியது அவரது பண்பாடே. மாந்தரின் பண்பாட்டுக்கு, மாந்தரின் பண்பாட்டுப் பரிணாமத்திற்கு முதற்காரணம் மொழியே. மாந்தரை ஒன்றாக, கூட்டமாக, சமூகமாக மாற்றியது மொழியே. மாந்தர் மொழியால் பிணைந்தார், மொழியால் கலந்தார், மொழியாலேயே ஒன்றானார்.

மொழியை அறிந்தபின், அறிந்து கொண்டபின், மாந்தருக்கு எல்லாமே இலகுவாகிவிட்டது. மாந்தர் பல்கிப் பெருகினார். அனைத்து இடங்களுக்கும் பரவினார். எங்கெல்லாம் உணவும், நீரும், மகிழ்ச்சியான வாழ்வும் கிடைக்கப் பெற்றாரோ, அங்கே நிரந்தரமாகத் தங்கினார். எத்தனை தூரம் சென்றாலும் திரும்பி வந்தார். ஒரு சாரர் பயணிப்பதையே வாழ்க்கை முறையாகக் கொண்டார். கொஞ்சம் கொஞ்சமாக மாந்தர் வாழ்க்கை மேம்பட்டுக்கொண்டே வந்து, இன்றைக்கு மாந்தர்

வாழ்வு, ஆலமரம்போல் கிளைபரப்பி, வேரும் விழுதுகளுமாய் ஓங்கி உயர்ந்து நின்றிருக்கிறது..

உயிரியலில் பரிணாமத்திற்கும் (Biological Evolution), பண்பாட்டுப் பரிணாமத்திற்கும் (Cultural Evolution) பெரிய வேறுபாடு உள்ளது. முன்னது சூழ்நிலையால் நிகழ்வது. பின்னது தேவையால் நிகழ்வது. மனிதர் படகைக் கண்டு பிடித்தது தேவையின் பொருட்டே. சிந்தித்துப் பார்த்தால் கடலின் முன்னோடிகளே, கடலைக் கடந்தவர்களே பெரும் நாகரிக மாற்றங்களை சமைத்திருக்கிறார்கள். ஒப்புநோக்க, தற்காலத்திய மானுடர் பண்பாட்டிற்கு, ஈராயிரம் ஆண்டுகளுக்கும்மேல் பழமையான நாடு, மொழியைச் சேர்ந்த மக்களே மிகுந்த பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். குறிப்பாக, தீபகற்பங்களான இந்தியா, கிரேக்கம், உரோமம் தொன்மையான பண்பாட்டு, வணிக நாகரீகங்கள். சீனம் நில வழியாகவே குறிப்பாக பட்டுப் பாதை வழியாகவும் தென்சீனக் கடல் வழியிலும் கிழக்கே சிறந்த பண்பாட்டு மாற்றங்களை முன்னெடுத்திருக்கிறது. தொடர்ந்து நவீன காலத்தில் போர்ச்சுக்கல், எசுப்பானியம், டச்சு, பிரெஞ்சு, நாடுகளும் பின்னர் பிரித்தானியமும் கடல்களால் உலகை ஒன்றாக்கின, சிறிதாக்கின எனில் மிகையாகாது.

எனில், அதற்கும் முற்பட்ட காலத்தின் பண்பாட்டுப் பரிணாமத்தை முன்னெடுத்த நாடுகள், மொழிகள் எவை? எவையெவை? இந்திய நிலத்திற்கும், தமிழர் மொழிக்கும் உறுதியான இடமிருக்கிறதல்லவா?

நிலத்தினூடாகப் பயணிப்பதைவிட கடல்களில் பயனிப்பது மிக எளிது. நிலப்பரப்பில் ஏராளமான தடைகள் இருக்கும். நதிகளைக் கடக்க வேண்டும். மலை மேலேற வேண்டும். பள்ளத்தாக்கில் நடக்க வேண்டும். காடுகளைக் தாண்ட வேண்டும். பாலைகளையும் சந்திக்க நேரலாம். மிருகங்கள் தொல்லை, விடசந்துகள் பற்றிய அச்சம், கள்வர்கள் பயம். பெண்கள், குழந்தைகள் இருந்தால் மிகுந்த கவனம் தேவை. நீண்ட பயணம் எனில் உணவைப் பெறுவது கடினமாக இருக்கும். பசி, தாகம், களைப்பு என வெகு சிரமத்திற்கு ஆளாக நேரிடும்.

கடல் பயணமெனில், மனதில் தைரியம் இருந்தால் போதும். காற்றின் திசையில் பயணம் அமைவதால் பெரும் உழைப்பு தேவைப்படாது. மரக்கலங்களில், தோல்பைகளில், மூங்கில் கழிகளில், சுரக்குடுக்கைகளில் நீரெடுத்துக் கொள்ளலாம். வழியில் மழைபெய்தால் மழைநீரையும் பிடித்துக் கொள்ளலாம்.

பசிக்கு கிழங்குகள், உலர் பழங்கள், காய்கள், கனிகளை வைத்துக் கொள்ளலாம். வழியில் மீன்களையும் பிடித்துக் கொள்ளலாம். கவனத்தில் கொள்ள வேண்டியது பயணம் சரியான திசையில் செல்கிறதா என்பது மட்டுமே. கடல் முன்னோடிகள் சூரிய, சந்திர பாகைகள், நட்சத்திரக் கூட்டங்களின் அமைப்பை வைத்து மிகச் சரியாக திசைகளை அறிந்தது வியப்பானது. கடலின் தொல்மாலுமிகள் மிகுந்த பாராட்டுக்குரியவர்களன்றோ.

மத்தியதரைக் கடலின் மாலுமிகள் தைரியமாக படகுகளைச் செலுத்தியிருப்பார்கள். ஏனெனில் எப்படிப் பயணத்தாலும் ஏதேனுமொரு நிலப்பகுதியை அடைந்து விடலாம். இதுவே பெருங்கடல்களில் பயனிக்கும்போது, வழிதவறிவிட்டால் மிகுந்த சிரமமாகிவிடும்.

தொல்தமிழர்கள் முன்னோடிக் கடலோடிகள் எனில் மிகையாகாது. தொல்தமிழர் கடலின் மதிப்பை, நன்மையை, தொல்காலத்திலேயே அறிந்திருக்கவேண்டும். கடல் வழியைக் அறிந்தபின்பே வாசனைப் பொருள்களின் ஏற்றுமதியை அதிகளவில் முன்னெடுத்திருப்பார்கள் எனக் கொள்ளலாம். தமிழ் இலக்கியப் பதிவுகள் மூவேந்தரின், முன்னைத் தமிழரின் கடல்வணிகத்தை சிறப்பாகப் பாடுகின்றன. பண்டைய கிரேக்க, உரோம, சீனப்பதிவுகளும் அதற்குச் சான்றுரைக்கின்றன.

மிளகையும், ஏலக்காயையும் வண்டியில் ஏற்றி, வடஇந்தியா, சிந்து, பெர்சியா, பாபிலோனியா, அரேபியா, மத்தியதரைக்கடல் எனப் பயணமாவதைவிட, கடல்வழியாக நேராக அரேபியாவிற்கோ, எகிப்திற்கோ சென்று விற்பது எவ்வளவு எளிது. தரைவழியாகக் சென்றால் எவ்வளவு காலமாகும்? கடல்வழியாக எனில் நாளுக்கு நூறு கிலோ மீட்டர் பயணித்தால்கூட, ஒரு மாதத்தில் அரேபியாவை அடைந்துவிடலாம். முன்னைத் தமிழர்கள் புத்திசாலிகள். மனிதருக்கே புத்திசாலி விலங்கு என்றுதானே பெயர்.

தமிழர் மானுடகுலத்தின் பண்பாட்டுப் பரிணாமத்தை முன்னெடுத்தவர் என உறுதியாகக் கூறலாமா எனில் துணிந்து கூறலாம். உடற்சான்றும், மொழிச்சான்றும், இலக்கியச் சான்றும் உலகெங்கும் கொட்டிக் கிடக்கின்றன. உலகினரால் மறுக்க இயலாது என்பது திண்ணம்.

உடற்கூற்றின் அடிப்படையில் தமிழர் உலகின் அனைத்து மானுடரோடும் ஒன்றுபடுகிறார். கூடவே தனித்தும் சில உடற்கூறுகளைக் கொண்டிருக்கிறார். தமிழர் ஆப்பிரிக்கரோடு ஒத்த உடற்பண்களைக் கொண்டிருப்பது போலவே, மங்கோலியர் மற்றும் ஐரோப்பியரோடும் ஒற்றுமை பெற்றுள்ளார்.

தமிழரும் ஆத்திரேலியரும் பெருமளவு ஒன்றுபடுகின்றனர். எப்படி இது நிகழ்ந்திருக்கும்? ஆத்திரேலியத் தொல்குடிகளின் மொழி தமிழோடு நெருங்கியிருப்பதை யாரால் மறுக்க இயலும்? தற்போதும் கடலோரங்களின் பெருவாரியான ஊர்ப் பெயர்கள் தமிழாக, தமிழின் சிதைவாக இருப்பது எவ்வாறு?

இந்தியாவின் தென்பகுதி மொழியான தமிழ் அதன் மொழிவளத்தால், பண்பாட்டால், பயிர்த் தொழிலால் உலகத்தை இணைத்தது எனில், அதன் வடபகுதி மொழியாகிய சமற்கிருதம், அதன் ஒலியால், ஆன்மீகத்தால், மதத்தால் உலகினரின் அறிவைப் பெருக்கியது. இந்தியாவின் இரு மொழிகளான தமிழும், சமற்கிருதமும் கலந்த கலவையே அதன் பிறகான பெரும்பாலான மொழிகள் எனில் வியப்பாகாது. வெகுகுறைவான மொழிகளே, அதுவும் தனித்து இருந்த, ஒதுங்கியிருந்த மொழிகளே சமற்கிருதத்தின் தாக்கம் இன்றி உள்ளன. பிற மொழிகள் அனைத்திலும், இந்தியாவின் வடமொழிகள் அனைத்திலும், இந்தியாவின் வடமொழியான சமற்கிருதத்தின் தாக்கம் நிகழ்ந்துள்ளது. தமிழிலும் அதன் தாக்கம் உள்ளது. எனினும் தாக்கம் மிகக் குறைவே. சமற்கிருதத்தை நீக்கியும், அது இல்லாமலும் தமிழால் இயங்க முடியும், தனித்திருக்க முடியும் என்பதே தமிழின் சிறப்பு. அதுவே அதன் முந்தைக்குச் சான்று.

தெலுங்கால் சமற்கிருதமின்றி தனித்தியங்க முடியமா எனில் மிகக் கடினம். முடியும் எனில் அது நல்ல தமிழாகிவிடும். கன்னடம்? அதுவும் அப்படியே. மலையாளம்? சமற்கிருதத்தை எடுத்துவிட்டால் தூய தமிழாகிவிடும். அதாவது சங்கத் தமிழாகிவிடும்.

தென்னிந்திய மொழிகளில் தமிழ் அதிகமும், சமற்கிருதம் குறைவும் கொண்டுள்ளன. வடஇந்திய மொழிகள் சமற்கிருதம் அதிகமும், தமிழ் குறைவாகவும் பெற்றுள்ளன. எனினும் அவை பிற மொழிகளின் குறிப்பாக பாரசீக மொழிகளின் தாக்கத்தையும் அதிகம் கொண்டுள்ளன. சமற்கிருதத்தை நீக்கினாலும் அவை தனித்தியங்கும். எனில் பாரசீகத்திற்கும்

சமற்கிருதத்திற்குமான தொடர்பு. தற்போதைய மொழியறிவின்படி, சமற்கிருதம் பாரசீகத்திலேயே தோற்றம் பெற்றிருக்கக்கூடும். பாரசீகத்தின் பண்டைய அவெத்தாவும் அதாவது பழைய இரானியும், சமற்கிருதமும் மிக நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளன என்பதை உறுதியாகக் கூறலாம். பழைய அவெஸ்தாவிலிருந்தே சமற்கிருதம் செய்யப்பட்டிருக்க வேண்டும். எனில், பண்டைய அவத்தம் எதிலிருந்து தோற்றம் பெற்றிருக்கும்? குமரிக் கொள்கையின்படி, தமிழ்தான் உலகின் மூத்தமொழி எனில், மானுடப் பண்பாட்டைக் கட்டியெழுப்பியது தமிழர்தான் எனில், அவத்தாவுக்கும், தமிழுக்குமான தொடர்புகள் என்ன?

முன்பே சுட்டிக்காட்டியதுபோல், வடஇந்தியாவில் தோரயமாக மூவாயிரம் ஆண்டுக் காலத்தில் தமிழ்மொழி மாற்றத்திற்கு உள்ளாகியது எனில், அதற்கும் சற்றுமுன்பே அதாவது மூவாயிரத்து ஐநூறு ஆண்டுகளில், தமிழ்நிலத்திலிருந்து சற்றே தொலைதூரத்திலிருந்த பாரசீகத்தில் மாற்றம் நிகழ்ந்திருக்க வேண்டும். உண்மையெனில் அதற்கும் ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு அதாவது நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், மெசபதோமியாவின் தமிழில், அதன் ஒலிப்பில் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும். அதற்குக் காரணம் புதிதாகத் தோன்றிய சமற்கிருதமாக இருந்திருக்க வேண்டும். பாரசீகத்திலிருந்து மெசபதோமியா அருகாமைதானே. மெசபதோமியாவிலிருந்து அரேபியப் பாலைக்குள் மாற்றம் நுழைந்திருக்கும். எனினும் தமிழோடு கொண்டிருந்த நெருக்கமான வணிகத்தொடர்பால், அரேபியப் பாலையின் கிழக்குப் பகுதியில் தமிழின் சிதைவு குறைவாகவே இருந்திருக்கும். மேற்கிலோ பெருமாற்றம் நடந்திருக்கும். சோமாலியா, எத்தியோப்பியா, மற்றும் எகிப்தின் கரையோரங்களில் தமிழ் சற்றே மாற்றமடைந்திருக்கும். எனினும் பெருமாற்றம் நிகழ்ந்திருக்காது. காரணம் ஆப்பிரிக்கர்கள் மிகமெதுவாகவே மாற்றத்தை ஏற்றிருப்பார்கள். அரேபியர் வணிகர் என்பதால் சட்டென மொழியை, பண்பாட்டை மாற்றியிருப்பார். பண்பாட்டைப் பொறுத்தவரை, வணிகர்களே முதலில் மாறக்கூடியவர்கள் என்பதும் உலக வரலாறு. அது மொழியாகட்டும், மதமாகட்டும், உடையாகட்டும், உணவாகட்டும். ஆப்பரிக்க மக்கள் வணிகர்களல்ல. எனவே சட்டென மொழியை மாற்ற உடன்பட மாட்டார்கள்.

முன்னர் மெசபதோமியாபோல் எகிப்து மாறியிருக்காது. எகிப்த்தின் பண்பாடு இரண்டாயிரத்து முந்நூறுகளிலேயே அதாவது கிரேக்கப் படையெடுப்புகளாலேயே

மிகவும் பாதிப்படைந்தது. கிரேக்கர்களைத் தொடர்ந்து உரோமானியர்கள் எகிப்தை குறிப்பாக மேல்எகிப்தை மாற்றினார்கள். பின்னர் நிகழ்ந்த இசுலாமியத் தாக்கம் எகிப்தின் பண்பாட்டை, வாழ்க்கைமுறையை, அதன் தொன்மைச் சிறப்பை, அடியோடு மாற்றிவிட்டது.

பண்டைய பாரசீகத்தில் சமற்கிருதம் தோன்றும் முன்னர் அப்பகுதியில் தமிழ் இருந்தது என்பதற்கு ஈலமைட் சிறந்த சான்று. இப்புத்தகத்தில் ஈழம் எனும் சொல் குறித்து பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது காரணத்தோடே சொல்லப்பட்டுள்ளது. ஈலம் எனில் நிலம் என உறுதியாகச் சொல்லலாம்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பாரசீகத்திலிருந்த ஈலமொழியின் சொற்கள், தமிழை, திராவிட மொழிகளைப் பெரிதும் ஒத்திருப்பது சான்றுகளோடு உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழ் உண், உண்ணு (Un, Unnu) என்பது ஈல மொழியிலும் அதே - உண் (Un). தமிழின் ஊர், ஊரு (Uru), ஈல மொழியில் வூர் (Vur). தமிழின் அப்பா அதாவது அட்டன், அத்தன் (Attan) ஈலத்தில் அட்டா, அத்தா (Atta). அம்மா (Amma) ஈலத்தில் அம்ம்மா (Ammma). கொல், கொல்லுதல் என்பது ஈலத்தில் கொல் (Kol). தமிழின் எள்ளு (Ellu), ஈழமொழியில் இள்ளு (illu),

பண்டைய பாரசீக ஈழத்தில் எள்ளு அதிகமாக விளைந்ததாம். அங்கிருந்து மெசபதோமியாவுக்கு எள்ளு எண்ணெய் அதிகம் கொண்டு செல்லப்பட்டதாம். அதை முன்னிட்டு எள்ளு அதிகம் விளையும் நிலம் என்பதைக் குறிக்க மெசபதோமியர்கள் அந்நிலத்தை எள்ளமைட், ஈலமைட் எனும் பெயரில் சுட்டினராம்.

ஈலமைட் (Elamite) என்பதே ஈலமொழி என்பதன் சிதைவாக இருக்கலாம். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது ஈலமொழி, உறுதியாக செமித்திய மொழி இல்லை என்பதே. குறிப்பாக ஈலமொழி தமிழைப்போல் சொற்கூட்டுமொழியாக (Agglutinative Language) என அறியப்படுகிறது.

சமற்கிருதம் தோன்றி ஆதிக்கம் பெறப்பெற, தமிழின் இடம் குறைந்து கொண்டே வந்தது அறியத்தக்கது. அதற்குக் காரணம் அதன் ஆன்மீகத் தொடர்பும், அம்மொழியை முன்னெடுத்தோரின் புத்திசாலித்தனமும் எனில் மிகையாகாது. இங்கு கவனித்தில் கொள்ள வேண்டியது, அதற்கு முன்பு, தமிழ்மொழியும் அவ்வாறான சிறப்புப் பெற்றே உலகமெங்கும் பரவியிருந்திருக்கும்.

சமற்கிருதம் பாரசீகத்திலிருந்து மேற்கே அரேபியா, பாலத்தீனம், கிரேக்கம், உரோமம் என விரைவாகப் பரவியது ஆச்சரியம். கிழக்கில் வடஇந்தியாவின் பிராகிருதத்தின் இடத்தைப் பிடித்துக் கொண்டது சாதனை. எனினும் கவனிக்க வேண்டியது, சமற்கிருதம் அது பரவிய எந்த நாட்டிலும் தனித்து இயங்கவில்லை. குறிப்பிட்ட எந்த ஒரு நாட்டின் மொழியாகவும் அது இருந்ததாக வரலாறு இல்லை. அது முன்னரே அங்கு பரவியிருந்த மொழிகளோடு கலந்து உறவாடி, அந்தந்த மொழிகளுக்குள் ஊடுறுவி விட்டது. வடஇந்தியாவில் சமற்கிருதம் பரவிய போதிலும், அது மக்களின் மொழியாக எப்போதும் இருந்ததில்லை. அது வடஇந்தியா மற்றும் மேற்கு இந்தியாவில் சற்றே மாற்றத்திற்கு உள்ளாகியிருந்த தமிழோடு அதாவது பிராகிருதமாயிருந்த தமிழோடு உறவாடி, பல்வேறு மொழிகளை உருவாக்கிவிட்டது. வடக்கு, வடமேற்கோடு ஒப்பிடும்போது கிழக்கிந்தியாவில் சமற்கிருதத்தின் தாக்கம் ஒப்பீட்டளவில் குறைவு. தெற்கில் சமற்கிருதத்தை அதிகம் முன்னெடுத்தவர் பல்லவர் என்பதும், அவரை பாரசீக மரபோடு சுட்டுவதும் ஒப்பு நோக்கத்தக்கது. பல்லவருக்குப்பின் சேர நாட்டில் பெரியளவில் சமற்கிருதம் புழங்கியதும், அங்கே முன்னர் புழங்கி வந்த சங்கத் தமிழ், சமற்கிருதக் கலப்பால் மலையாளமாக மாற்றப்பட்டதும் வரலாறு. சேரரே பல்லவர் என இங்கு விவரிக்கப்பட்டுள்ளதும் ஒப்பு நோக்கத்தக்கது.

தமிழ் பயிர்த்தொழிலைச் சார்ந்து உலகின் பண்பாட்டை முன்னெடுத்ததால் அது அவ்வளவு எளிதில் மக்களின் பண்பாடுகளிலிருந்து மறையாது. மறையவில்லை என்பதே வரலாறு.

மக்கள் தங்கள் வரலாற்றை, மொழியை, பண்பாட்டை மறக்கமாட்டார்கள் என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகளைச் சுட்டலாம். அரேபியா எனும் பெயரை அரைப்பாலை எனக் கொண்டால் பொருத்தமாக இருக்கிறதல்லவா. முன்னைத் தமிழர் அந்நிலத்தை அரைப்பாலை என அழைத்திருக்கலாம். அது அரேபியா என மருவுயிருக்கக் கூடும். எரித்திரியா கடல் வெப்பக்கடல் எனும் பொருளில் எரிதரைக்கடல் என அழைக்கப்பட்டிருக்கலாம். ஒப்பு நோக்க மத்தியதரைக் கடலும் தமிழாகவே இருக்கிறது. சூடான் சூடான நிலம் எனும் பொருளைக் கொடுக்கிறது.

தொல் அரேபிய நிலம் தமிழ் நிலம் என்பதற்கு நிறையச் சான்றுகள் உள்ளன. தமிழகத்தின் மேற்குக் கரைக்கும், அரபு மூவலத்தீவுக்கும் நெருக்கம் அதிகம்.

ஏமன், ஓமன் நாடுகளின் பெயருக்கு தற்போது வரையும் சரியான பொருள் அறியப்படவில்லையாம். ஏமன் என்பது எமண் எனில் பொருத்தம். மண் எனில் நிலம். கடலுக்கு அந்தப் பக்கம் இருந்ததால் அதன் மதிப்புக் கருதி நிலமென்னும் பொருளின் மண் எனும் பெயர் சேர நாட்டவரால் புழங்கப்பட்டிருக்கலாம். ஏமண் - தெற்குப் பகுதி மண் அதாவது நிலமெனில், ஓமன் - வடபகுதி மண். இக்கரை மண் - அதாவது இம்மண் காலப்போக்கில் இமண் - எமண் - ஏமன் (Yeman) என மருவியிருக்கலாம். அவ்வாறே அக்கரைமண் அப்பகுதி மண் - அம்மண் என்பது அமண் - ஒமண் - ஓமண் - ஒமன் (oman) என மாற்றம் பெற்றிருக்கலாம். ஏமன் நாட்டின் பெயர் தெற்குத் திசை - Probably referring direction எனும் பொருள் சுட்டுவதாகக் குறிப்பிடப்படுவது ஒப்புநோக்கத் தக்கது. ஏமன் - எமன். எமன் தென்திசைக்கு அதிபதி. எனில் முன்பு அந்நாடு தெற்குமண் எனும் பொருளிலேயே வழங்கப்பட்டிருக்கும் என்பதை உறுதியாகச் சுட்டலாமன்றோ.

அரபுமொழிக்கும் தமிழுக்கும் மிகநெருங்கிய உறவுள்ளது, எனினும் அம்மொழி என்ன காரணத்தாலோ இடவலமாகப் படிக்கப்பட்டதால் சொற்களின் பொருள் மாறிவிட்டதாகக் கொள்ளலாமோ. எனினும் அதன் நடு, பின்பகுதிகள் பெருமளவு தமிழிலேயே தற்போதும் புழங்குகின்றன. ல, லா எனில் இல்லை என்றே பொருள். தமிழின் இல்லை எனும் சொல்லில் - லை மட்டும் எஞ்சியுள்ளது. இல் மறைந்து விட்டது. லை - இடமிருந்து வலதாக முதலாவது எழுத்து என்பது அறியத்தக்கது. இல்லா - இல்ல ல. ல - இல்லை. தமிழிலும் இத்திரிபு உள்ளது. இல்லை என்பதை இல் எனவும் சுட்டலாம். எனினும் தமிழின் பலபொருள் தன்மையால் அதன் பொருள் வீடு எனவும் வழங்கப்பெறும். இல்லல்லா எனும் சொல்லில் இல் என்பது இல்லை எனும் பொருளிலேயே சுட்டப்படுகிறது.

தமிழின் ஞான் அரபியில் அன் எனப்படுகிறது. என்னே ஒற்றுமை. பால் என்பதற்கு அலிப் எனும் சொல் எழுத்தாளப்படுகிறது. அலிப் என்பதை இடமிருந்து வலமாகப் படித்தால் பால் எனும் சொல் வருகிறது. வளத் எனில் பையனாம். அது வளர், வளர்கிற, வளர்ந்த எனும் பொருளைக் கொடுக்கிறதல்லவா. வா என்பதற்கு தாள். தாள் - கால் பாதம், கால். எத்தனை அழகுத் தமிழ் தாள். தூய தமிழ்ச் சொல். தமிழின் பெயர்ச்சொல் அரபியில் வினைச்சொல்லாக மாறிவிட்டது எனலாமோ. பெண்குழந்தைக்கு பென்த் எனப் பெயராம். அது தமிழின் பெண்தானே.

முஅல்லிம் எனில் ஆசிரியர் (ஆண்). பெண்ணாசிரியருக்கு முஅல்லிமா அதுவே முவல்லி மௌலவி, மௌலி எனச் சுட்டப்படுகிறது. மௌலவி - ஆசான். அறிவில் உயர்ந்தவர், மேலானவர் என்பதே முஅல்லி. ஒப்பு நோக்க அல்லி மலர். அல்லி நீருக்கு மேலேயே இருக்கும். அதாவது உயர்வாக, உயர்ந்து இருக்கும். கபீர் எனில் பெரிது. ஹஹீர் எனில் சிறியது. தமிழின் சற்றே திரிந்த வடிவம் எனில் மிகையில்லை. சூரா சூரா எனில் வேகமாக. தமிழின் வேகமாக எட்டுவைத்து என்பது போல். சுரா எனில் தமிழில் பெரியது, அதிகமானது எனும் பொருள் உண்டு. சூர் - பெரியது. சூர் - சூரி - சூரியன் - பெரியவன். சமற்கிருதத்தில் சூர்ய. வீர் - வீர - வீரன் - வீரமானவன். சமற்கிருதத்தில் வீர்ய. சுரா என்பதற்கு சூடான எனும் பொருள் உண்டா என்பதும் ஆராயத்தக்கது. ஏனெனில் சகாரா என்கிறோர்கள். அது பாலைவனம். சகாரா எனில் சூடான, வெப்பமான எனும் பொருள் சுட்டப்படுகிறது. சகாரா - வெப்பமான நிலம், பாலை. ஆங்கில உச்சரிப்பில் அது சஹரா என அழைக்கப்படுகிறது. சகாரா (Sahara) என்பதை தமிழாகக் கொள்ளலாமோ. சக்கரை - இனிப்பு அதிகமுள்ள பொருள், பண்டம். சமற்கிருதத்தில் சாகர் எனில் கடல். அது நீர் அதிகமுள்ள இடம் என்பதைச் சுட்டுகிறதல்லவா. சாகர் கடலெனில், சகாரா? சாகர்- சகாரா- மணல் அதிமுள்ள இடமென்றாகுமோ? அதாவது மணல்கடலோ? தமிழில் சக்க, சக்கை எனும் சொல் உண்டு. சக்கை எனில் ஒன்றுமில்லாதது எனப் பொருள். கரும்புச் சக்கை - சாறு எடுத்தபின் மீந்துவது, சாறு இல்லாதது. பயனில்லாதது. எனில் சகாரா என்பதை சக்கரா எனச் சுட்டலாமன்றோ. சக்கரா - ஒன்றுமில்லாத நிலம். ரா என்பதை சிறியது அதாவது சிறு மணல் எனக் கொள்வதும் பொருத்தம். ராகி - சிறு உருண்டை. சகாரா - சக்காரா - ஒன்று மில்லாத சிறுமணல். அரபியில் மணல் பாலை. அரபியில் சக்க, சக்கண என்பது பெரிய, எனும் பொருளிலும் எடுத்தாளப்படுகிறது. சக்கண - சக்கணன் எனில் ஆளுநர், அரசன் எனப் பொருளாம். சகரா - பெரிய பாலை நிலமெனில் பொருத்தமே.

உலகின் எம்மொழிச் சொல்லையும் தமிழின் வழி நின்று ஆராயலாம். ஏதேனும் ஒரு வழியில் அது தமிழோடு தொடர்புடையதாகவே இருக்கும். உறுதியாக. அதுவே தொல்காலத்தில் உலகமெங்கும் தமிழின் வேர் இருந்தது என்பதற்கான சான்று. பிறமொழிச் சொற்களை ஆராய்பவருக்கு தமிழின் அருங்கொடையான சங்கச் செய்யுள்களில் புலமை இருப்பது சிறப்பு. அவ்வாறே தென்தமிழராய் இருப்பது கூடுதல் பலம். தமிழின் முன்னை வடிவம் தற்போதும் தென்நிலத்தில் பயின்று வருவது நன்று. தற்காலத்தில் அங்கும் பெருமாற்றங்கள்

நிகழ்ந்து வருகின்றன. எனினும் தமிழ்ப்பெண்ணின் வரமாக, தென்தமிழகத்து பெரும்புலவர் மரபின் நீட்சியான தற்காலத்திய, சற்று முந்திய காலத்திய இலக்கியக்காரர்கள், எழுத்தில் அனைத்தையும் (பெரும்பாலானவற்றை) பதிந்து வைத்துவிட்டனர். அது என்றும் தமிழின் அறிவுக்குக் பயனாகும் என்பது உறுதி.

அரபு மொழியில் அடி அல்லது பாபா எனில் அப்பாவாம். அம் அல்லது உம் அல்லது மாமா எனில் அம்மாவாம். இப்ன் - மகனாம். அம்மா - மம்மா - மாமா என மருவியதா அல்லது இடவலமாகப் படித்ததால் (அ) ம்மா - மாமா என மாறியதா? தமிழில் மாமா எனில் அம்மாவின் சகோதரர். எனில் இருவரும் ஒன்று எனக் கொள்ளலாமன்றோ. அம்மாவும் மாமாவும் ஒன்றுதானே. மாமா என்பதுதான் ஆங்கிலத்தில் மம்மா ஆகிவிட்டதோ. அம்மா என்பதைவிட குழந்தைகளுக்கு மம்மா எனச் சொல்வதுதான் எளிது. மழலைப் பேச்சில் மாமா எனச் சொல்லிவிட்டால் அம்மா மகிழ்ந்து விடுவாள். அவரது அண்ணன் தம்பியைச் சொல்கிறதாம். குழந்தை அப்பா என சற்று பிந்தியே பேசும். மா - ம்மா - மாமா - அம்மா. த்தா - தாதா - தாத்தா. பா - ப்பா - பாபா - பாப்பா. பாப்பா - அப்பா. கண்ணுக்குள் பொத்தி வளர்க்கும் அப்பா கடைசியில். அப்பா - தமிழ் இசுலாத்தில் வாப்பா.

முந்தைய கிரேக்கர்களின், உரோமானியர்களின் இலக்கியவாதிகள், வரலாற்றாசிரியர்களின் புத்தகங்களில் அரேபிய நிலம் இந்தியா எனவே குறிக்கப்பட்டுள்ளதாம். பெர்சியர்களும் அவர்களது எழுத்தில் ஓமன், ஏமன் பகுதிகளைக் குறிக்க இந்தியா எனும் சொல்லையே பயன்படுத்தினார்களாம். பாரசீகர்களைப் பொருத்தவரை சிந்துக்கு கிழக்கே இருந்தவர்கள் சிந்துக்கள், அவர்கள் கருப்பானவர்கள். அன்று ஓமன், ஏமனில் இருந்தவர்களும் கருப்பானவர்கள். எனவே அவர்களும் சிந்தியர்கள் அதாவது இந்தியர்கள்.

கிழக்கு அரேபியர்கள் கருப்பாக இருந்ததால் அன்று இந்தியர்கள் என அழைக்கப்பட்டார்களாம். எனில் அன்று இந்தியா முழுமையுமே கருப்பாகத்தான் இருந்தார்கள். உண்மையெனில் இந்தியர்கள் எப்போது வெள்ளையானார்கள்? குறிப்பாக வடஇந்தியர்கள்? தென்னிந்தியர்கள் எப்படி வெள்ளையர்களாக மாறினார்கள்? எந்தச் சாதி முதலில் மாறியது? தமிழருக்கு எதிலும் சாதிதானே.

குமரி மாவட்டத்தில் பெரும்பாலும் கருப்பானவர்கள்தான். மலையாளத்தார்கள் வெளுப்பாக இருக்கலாம். தமிழ்ச் சாதிகள் கருப்புத்தான்.

குமரியோடு ஒப்பிடும்போது நெல்லை சற்றே குறைந்த கருப்பாகத் தெரிகிறது. அதிலும் நெல்லைச் சீமையின் மேற்கு வெளுப்பாக இருக்கிறது. கிழக்கு நல்ல கறுப்பாகத் தெரிகிறது. மதுரை நெல்லைபோல் கருப்பில்லை. சற்றே பழுப்பு எனச் சொல்லலாம். திருச்சி ஓரளவிற்கு நல்ல வெளுப்பாக உள்ளது. மேலே செல்லச் செல்ல கருப்பு குறைந்து வெளுப்பு கூடிக்கொண்டே போகிறது. இமயமலை அடிவாரத்திற்குச் சென்றுவிட்டால் வெள்ளை வெளேர் என இருக்கிறார்கள்.

குமரி முதல் இமயம்வரை எல்லோரும் வெளுப்பாக இல்லாமல், குறிப்பிட்ட சில சாதிகளே வெள்ளையாக இருப்பது எதனால்? இவர்கள் யார்? தோலின் நிறத்தை வைத்து மனிதர்களைப் பகுத்தது யார்? தற்போதும் கருப்பாகவே இருக்கும் மனிதர்கள் யார்?

இந்தியாவின் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்குப் போலவே ஆப்பிரிக்காவும் இருப்பது அதிசயம். வடக்கே வெளுப்பு. வடமுனையில் நல்ல வெளுப்பு. தெற்கே அடர்கருப்பு. இந்தியாவின் வடபகுதியின் வெளுப்புக்குக் காரணம் ஆரியர் எனில் ஆப்பிரிக்க வடக்கின் வெளுப்புக்குக் காரணம் யார்?

எகிப்து, எத்தியோப்பியா, சூடான், சோமாலியா போன்ற நாடுகளின் மக்கள் தமிழர் போன்று உள்ளனராம். முன்பு இந்தியாவைக் குறிக்க கிழக்கு எத்தியோப்பியா எனும் சொல் பயன்படுத்தப்பட்டதாம். அந்தளவுக்கு இருவரும் ஒத்த பண்புகளைக் கொண்டிருந்தனர் எனில், மொழியிலும் ஒற்றுமை இருக்கும்தானே.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழர் எப்படி இருந்திருப்பார்? மூவாயிரம், நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு? பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்? ஆப்பிரிக்கர் போன்றே இருந்திருக்கக் கூடும். நிலநடுக்கோட்டுக்கு சற்றுமேலே இருப்பதால், தோல் மெதுவாக வெளுக்க ஆரம்பித்திருக்கலாம். இமயம் அருகில் இருந்தவருக்கு சற்றே கூடுதலாகத் தோல் வெளுத்திருக்கும். எனில், இமயத்தின் மேலே, அதற்கும் மேலே, அதற்கும் மேலே அதாவது பனிப்பகுதிகளில் மக்களின் தோல் இன்னும் கூடுதலாக தோல் வெளுத்திருக்கும். கருப்புக்கரடி, பழுப்புக்கரடி, வெள்ளைக் கரடியை ஒப்பிடலாமோ?

குளிர் அதிகமாக அதிகமாக வெப்பத்தின் தேவை அதிகரிப்பது இயல்பு. குளிர் நாடுகளில், பனி நாடுகளில் வெப்பம் இன்றியமையாதது. எனில் நெருப்பு அதிக முக்கியத்துவம் பெற்றிருப்பது இயற்கை. அது வணக்கத்திற்குரியதாகக்கூட

மாறியிருக்கும். நெருப்புமூட்டி சுகமானதாக இருந்திருக்கும். தற்போதுகூட கேம்ப் பயர் (Camp Fire) என நெருப்பைக் கொழுத்திக் கொண்டு சுற்றிவந்து ஆடுகின்றார்கள்.

குளிர் மக்களுக்கு நெருப்பு முக்கியமெனில், வெப்ப நாடுகளுக்கு நீர் மிகவும் இன்றியமையாதது. தற்போதுகூட கோடையில் நீரின்றி விலங்குகள் இறந்து கிடப்பதாகச் செய்திகள் சுட்டுகின்றன. இத்தனைக்கும் அரசாங்கம் காடுகளில் நீர்த்தொட்டிகள் அமைக்கவென நிதி ஒதுக்குகிறது. வாயில்லா ஜீவன்களுக்கு ஒதுக்கப்படும் நிதியை முறையாகப் பயன்படுத்தாதது, அதிலும்கூட முறைகேடு செய்வது எத்தனை அயோக்கியத்தனம். அரசு காடுகளில் உப்பைக்கூட வைக்கச் சொல்கிறது.

வெய்யிலில் அலைந்து திரிந்தபின் ஒரு வாய்த் தண்ணீர் குடிப்பது சுகமானது. அமிர்தமாயிருக்கும். வெப்பப் பகுதியில் தண்ணீர்க் கஞ்சி சாப்பிடலாம், கூழ் குடிக்கலாம். குளிர்ப் பகுதியில் முடியாது. அங்கே அனைத்தும் சூடாக வேண்டும். நீடித்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு பழக்கம், குறிப்பிட்ட பண்பாடாக மாற்றம் பெறுவது எளிது.

ஆப்பிரிக்கர்களின் சமீபகாலப் பேச்சும், எழுத்தும் ஒன்றைத் திட்டவட்டமாக வலியுறுத்துகிறது. நாங்கள்தான் உலகுக்கு நாகரிகத்தைக் கற்றுக் கொடுத்தோம். குறிப்பாக எகிப்து, சூடான் பகுதியில் பரவியிருந்த நூபியன் பண்பாடே உலகின் மிகத் தொன்மையானதாகக் கொண்டு, இவ்வாறான பதிவுகள் முன்னெடுக்கப்படுகின்றன. கிடைத்திருக்கும் வரலாற்றின்படி, இப்பகுதியிலேயே மிகத்தொன்மையான நாகரீகம் செழித்திருந்திருக்கிறது. ஆப்பிரிக்கரின் பதிவுகள் மெச்சத்தக்கது, வரவேற்கத்தக்கது. எனினும் அது உண்மைதானா என்பதில் சற்றே கவனம் கொள்ளலாமல்லவா?

நூவியன்களே, குசைட்டுகளே, ஆசும்களே உலகின் மிகப் பழைய, மிகப் பெரிய பண்பாட்டை முன்னெடுத்தவர்களாக இருக்கட்டும். அது ஆப்பிரிக்காவிக்குப் பெருமையெனில் தமிழருக்கும் மிக்க பெருமையே. கிடைத்திருக்கும் பரிணாமச் சான்றுகளின்படி அவர்களே மூத்தோர். மானுட குலத்தின் மூத்தோர் வணக்கதிற்குரியவர். மாந்த இனத்தின் மூப்பர்கள் பெரும் புகழுடையவர்கள். மானுட

குலத்தின் பெருந்தந்தையர், பேரன்னையர் போற்றுதலுக்குரியவர்கள். என்றென்றும் அன்புக்குரியவர்கள், நினைவுக்குரியவர்கள்.

**தொல்மூதாதையர் வாழி!**

மானுட குலத்தின் தொல் அன்னையரும், தந்தையரும் பேசிய மொழி எது? தமிழரின் கூற்றுப்படி அம்மொழியின் பெயர் தமிழ். தமிழ் நிலத்தில், மிக மிகத் தொன்மைக் காலத்திலேயே, உலகின் முந்துமொழி தமிழே எனும் சொல் நிலைபெற்று விட்டது. தமிழரைப் பொறுத்தவரை தமிழே எல்லாமும். தமிழ் தமிழருக்கு உயிரினும் மேலானது. தமிழும் தமிழரும் வேறல்ல.

தமிழர் தாம் சென்ற இடமெல்லாம் தம் மொழியையும், பண்பாட்டையும் எடுத்துச் சென்றார். தற்காலம் வரைக்கும் அதுதான் உண்மை. தமிழர் அவர்தம் முன்னோர் சொல் மதிப்பவர், மீறாதவர். தமிழர் மரபின்படி, மூன்று சங்கம் வைத்து தமிழ் முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. எனில் மிகப்பழங்காலத்திலேயே தமிழ் இலக்கண, இலக்கிய மொழியாக மாற்றம் பெற்றுவிட்டது என்பதே பொருள். அது உண்மையும் கூட.

ஆப்பிரிக்க நிலமெங்கும் தமிழரும், தமிழ்ப் பண்பாடும் கொட்டிக் கிடக்கிறது எனில் மிகையில்லை. கடல்வழி உறவு, வணிக உறவு மட்டுமே எனில், இந்தளவுக்கு ஒற்றுமை இருக்க வாய்ப்பில்லை. நிலம் வழியாக மிகப்பெரும் மொழி உறவு இருந்தாலொழிய, பரந்து விரிந்த ஒருமைப்பாடு உண்டாகியிருக்க முடியாது. இதை இரு வழிகளில் எடுத்துக் கொள்ளலாம்.

ஒன்று, ஆப்பிரிக்காவிலேயே தமிழ் தோன்றியது. அங்கு தோன்றி உலகின் அனைத்துப் பகுதிகளிலும் பரவியது. முதல் சங்கம் ஆப்பிரிக்காவில் தோன்றியது. இரண்டாம் சங்கம் மெசபதோமியாவில் தோற்றுவிக்கப்பட்டது. மூன்றாம் தமிழ்ச் சங்கம் குமரியில் தோற்றம் பெற்றது. எனில், ஆப்பிரிக்காவிலேயே திருந்திய வடிவம் பெற்று, அதன் பின்னர் மானுடர் பிற பகுதிகளுக்குப் பரவினார். அவர் உலகில் பரவும்போது, கூடவே மொழியறிவும் பரவியது.

இரண்டு, ஆப்பிரிக்கரின் ஒரு பகுதியினர் முந்துமாந்த நிலையிலேயே உலகின் பிற பகுதிகளுக்குப் பரவிவிட்டனர். உலகின் பிற பகுதிகளில் தனித்துவமிக்க பண்புகளோடு மானுடர் தோற்றம் பெற்றனர். உலகின் பல

இடங்களிலும் மானுடக் கலாச்சாரம் முன்னெடுக்கப்பட்டது. இந்தியாவில் குறிப்பாக அதன் தென்பகுதியில் தோற்றம் பெற்ற தமிழ்மொழி, சிறப்பாகப் பேணப்பட்டு உலகின் பிற பகுதிகளுக்கும் பரவியது.

உண்மையெனில், முன்னைத் தமிழ் ஆப்பிரிக்காவின் கிழக்கு மற்றும் வடக்குப் பகுதி வழியாக ஆப்பிரிக்கா மையப் பகுதியை நோக்கிப் பரவத் தொடங்கியிருக்கும். மொழியோடு தமிழரும் சென்றிருப்பர். இருவரும் கலந்து, மிகப் பெரிய பண்பாட்டு மாற்றங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கும்.

குமரியின் தமிழ்மொழி ஆப்பிரிக்காவுக்குச் சென்றதெனில் எப்போது சென்றதெனச் சுட்டமுடியுமா? மிகப் பழைய காலத்திலேயே சென்றிருக்க வேண்டும். மாந்தர் வரலாற்றை மீளாய்வு செய்ய வேண்டும் எனத் தெரிகிறது. உடல் மாற்றங்கள்தான் மிக மிக மெதுவாக உண்டாகுமேயோழிய, பண்பாட்டு மாற்றங்கள் சட்டென நிகழ்ந்துவிடும். ஒப்பு நோக்க, படித்தவர், கல்வி கிடைக்கப்பெற்றவர், ஒரே தலைமுறையில் மாறிவிடுவது கண்கூடு. ஏனெனில் கல்வியறிவு அத்தகைய நெடிய வீச்சுக் கொண்டது. பழங்குடியைச் சேர்ந்த ஒருவர் கல்வி கற்றார் எனில் உறுதியாக அவரிடம் பண்பாட்டு மாற்றங்கள் உண்டாகிவிடும். அவரது தலைமுறையிலிருந்து பண்பாட்டு மாற்றங்கள் தொடங்கிவிடும்.

உலக வரலாற்றின்படி, புதிய கற்காலம் (Neolithic) பன்னிரெண்டாம் ஆயிரத்தில் தொடங்கியது. அங்கிருந்து ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்வரை புதிய கற்காலம், சுருக்கமாக 12000 தொடங்கி 5000 ஆண்டுகள் முன்புவரை எனில் தமிழின் வேர்கள் இக்காலத்திற்கு முன்பே அதாவது தமிழ் மரபின்படி, இடைக்காலத்திலேயே பரவிவிட்டது. வேளாண்மையின் தொடக்கத்தையே, அதாவது முதன்முதலாக பயிர்த்தொழில் முன்னெடுக்கப்பட்ட வரலாற்றையே புதிய கற்காலத்தின் தொடக்கமாகக் கொள்கிறார்கள். அண்மைக் கிழக்கில் அதாவது மெசபதோமியப் பகுதியிலேயே பயிர்த்தொழில் தொடக்கம் பெற்றதாகச் சுட்டுகிறார்கள்.

மேற்குலத்தின் வரலாற்றாய்வாளர்கள், அறிஞர்கள் இந்தியா மற்றும் அதன் கிழக்கேயுள்ள நிலங்களின் பண்பாட்டை, அவர்களது தொல் வரலாற்றை இன்னும் சரியாக அறியவில்லை என்பது தெளிவு. உண்மையில் மானுடப் பண்பாட்டில் கிழக்கே முந்தியது. குறிப்பாக பயிர்த்தொழிலில். கிழக்கிலேயே மழைவளம் மிகுதி.

செழிப்பான நிலங்கள் அதிகம். கிழக்கின் மக்கள் எழுத்தில் பதியவில்லை என்பதற்காக, அனைத்தையும் மேற்கில் தொடங்கியதாகவே காண்பது பிழையானதாக இருக்கக் கூடும். உண்மையில் இந்தியாவே, இந்தியப் பண்பாடே கிழக்கிற்கும், மேற்குலகிற்கும் பாலம். ஏனோ இது மத்திய ஆசியாவிற்கு இடம் மாறிவிட்டது. மத்திய ஆசியாவை மேற்கு எனக் கொள்வதே பொருத்தம். ஆப்பிரிக்கா, ஆத்திரேலியா, தென்னாப்பிரிக்கா போன்றவை தெற்கு.

தமிழர் வரலாற்றிலும் சில தெளிவுகளைக் காணவேண்டியுள்ளது. முதலிரு சங்கங்கள் கடல்கோளால் அழிந்ததாகக் கூறப்படுகிறது. உலகின் தொன்மையான சமூகங்களின் மொழிகளில் இத்தகைய கடல்கோள்கள் சுட்டப்பட்டுள்ளன. குறிப்பாக சுமேரியர்கள் இதைச் சிறப்பாகச் சுட்டுகின்றனர். இதுவே அந்நிலத்தில் பின்னர் தோற்றம் பெற்ற மதங்களிலும் சுட்டப்படுகிறது. குறிப்பாக நோவா பற்றிய கதையாடல்.

சுமேரிய நிலத்தில், குறிப்பாக, பாரசீக வளைகுடாப் பகுதியில் கடல்கோள் நிகழ்ந்திருக்கலாம் என்பதை யூகிக்கலாம்போல் தெரிகிறது, பாரசீகக் குடா மிகக் குறைவான ஆழமே கொண்டுள்ளது. சராசரியே நூற்றி அறுபதடிதான். அதிக ஆழமே முந்நூறு அடிகள் எனில், அப்பகுதியில் குறிப்பாக ஈராக்கின் தற்போதைய கடல் எல்லையையொட்டி கடல்கோள் நிகழ்ந்திருக்க வாய்ப்புள்ளது. ஒப்பு நோக்க மிகப் பெரிய ஆறுகளாகச் சுட்டப்படும் யூப்ரதீசு, டைகரீசு நேரடியாகக் கடலில் சேர்கின்றன. உலகின் பெருநதிகள் அனைத்தும் மிகப் பெரிய டெல்டாக்களை ஏற்படுத்தியிருப்பது அறியத்தக்கது. மிகக் குறுகிய பள்ளமாக இருந்தாலொழிய இது சாத்தியமல்ல. ஒருவேளை இன்னும் கூடுதலான நிலத்திற்குள் அவை ஓடியிருக்கலாம். அதாவது முன்பு நிலமாக இருந்த வளைகுடாக்குள்.

இப்படி நடந்திருக்க வாய்ப்புண்டா எனில் வடக்கு அரபிக் கடலில் நிலநடுக்கம் நிகழ்ந்திருக்குமேயானால் அது பாரசீகக் குடாவை பெருமளவில் பாதித்திருக்கும். ஒப்பு நோக்க கூர்ச்சரத்தின் துவாரகை மூழ்கியதாகச் சொல்லப்படும் வரலாற்றைச் சுட்டலாம். அது போன்ற நிலநடுக்கம் அன்றிருந்த குமரியையும் பாதித்திருக்கும். குறிப்பாக அன்றைய சேர நாட்டை.

இந்தியப் பெருங்கடலின் தெற்கே நிகழும் கடல் மாற்றமே ஒட்டுமொத்த இந்தியத் துணைக்கண்டத்தையும் பாதிக்கும். மாறாக கிழக்கு இந்தியக் கடலில்

நிகழ்ந்தால் கிழக்குக் கரையே பெருமளவில் பாதிக்கும். மேற்கு தப்பி விடும். அரபிக்கடல் எனில் மேற்குக்கரையே பாதிப்புக்கு உள்ளாகும். முன்னர் அவ்வப்போது இத்தகைய கடல் மாற்றங்கள் நிகழ்ந்திருக்க வாய்ப்புள்ளது. ஏனெனில் தொல்நகரமான புகாரும் கடல்கோளுக்கு ஆளானதாக பதிவுகள் சுட்டுகின்றன.

ஒருவேளை பாரசீகக் குடாவில் நிகழ்ந்திருக்க வாய்ப்புள்ள இந்தக் கடல்கோளைத்தான் தமிழ் இலக்கியங்கள் சுட்டுகின்றனவோ? எனில், அது இடைச்சங்க காலத்திலேயே நிகழ்ந்திருக்கக் கூடும். தமிழ்ச் சங்கங்கள் அழிந்தன என்பதற்கு மாற்றாக, சங்கங்கள் இடமாற்றம் அடைந்தன எனக் கொள்ளலாமோ.

முதற்சங்கம் ஆப்பிரிக்காவில் எனில் பொருத்தமல்லவா? ஆப்பிரிக்காவின் பெரும்பான்மை மொழி பாண்டு என்பதோடு இதை ஒப்பிடலாமோ? பாண்டியர்கள் முன்னெடுத்த தமிழ்ப்பெருமையான முருகன் அடையாளம் தற்போதும் ஆப்பிரிக்காவில் புகழோடு உள்ளது. பாண்டியர்கள் பயிர்த்தொழிலை முன்னெடுத்தவர்கள் எனில் அந்த அடையாளமும் அதாவது பள்ளர்களும் ஆப்பிரிக்க நிலத்தில் பெருவாரியாக உள்ளனர்.

இந்தியா இன்னொரு ஆப்பிரிக்கா எனில் மிகையாகாது. இந்தியாவை சிறிய ஆப்பிரிக்கா எனக் கொள்ளலாம். ஆப்பிரிக்கா போன்றே ஏராளமான மொழிகள், குலங்கள், சாதிகள், உணவுகள், உடைகள். இந்தியாவிலும் ஆப்பிரிக்கா பின்பற்றும் பல்வேறு பழக்கவழக்கங்களும் பின்பற்றப்பட்டிருகின்றன. சில தற்போதும் பின்பற்றப்பட்டு வருகின்றன. எனினும் ஆங்கிலேய ஆட்சியில் நிகழ்ந்த கல்வி முன்னெடுப்புகள், தொல்மரபுகளை, பழக்க வழக்கங்களை சட்டப்படி குற்றம் எனத் தடுத்தது, சமூகச் சீர்திருத்தம் எனும் பெயரில் சிலர் மேற்கொண்டு தீவிரப் விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்தது போன்றவற்றால் இந்தியப் பெருநிலத்தின் தொல்நம்பிக்கைகள், பழக்கங்கள் பெருமளவு குறைந்துள்ளன. சில நம்பிக்கைகள் தீவிரம் குறைந்த வேறுவகைகளில் வெளிப்பட்டு வருகின்றன. எனினும் தற்போது மீண்டும் பழமைக்குத் திரும்புதல் எனும் போர்வையில் சிலர், தீவிரமான மத, குல, பழக்கவழக்கங்களைப் பின்பற்ற வலியுறுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. தற்போதைய தமிழ் தலைமுறையினர் யாரும் காது வளர்ந்து தண்டட்டி போடுவதில்லை. தமிழகக் ஊர்களில் அவை அரிதாகிவிட்டன. ஊருக்கு ஒன்றிரண்டு பேர் இருக்கலாம். ஆயினும் இடையில் மறைந்திருந்த காவடியாட்டம், குறிப்பாகப்

பறவைக் காவடி, கிரேனில், ஜேசிபியில் தொங்கும் காவடியாக மாற்றம் பெற்றுள்ளது கவனிக்கத்தக்கது.

ஆப்பிரிக்காவில் இத்தகைய விழிப்புணர்வு குறைவாகவே ஏற்பட்டிருக்கிறது. இந்தியா முழுவதையும் ஆங்கிலேயர் ஆண்டதுபோல் அல்லாமல் ஆப்பிரிக்காவை பல நாடுகளும் ஆண்டிருக்கின்றன. எனவே சட்டதிட்டங்களும் மாறுபட்டு இருக்கின்றன. இந்தியர் கல்விக்குக் கொடுத்த அல்லது இந்தியருக்குக் கல்வி மீதிருந்த நாட்டம் ஆப்பிரிக்காவில் குறைவாக இருந்ததாகக் கொள்ளலாம். எனினும் ஆப்பிரிக்கா வேகமாக முன்னேறி வருகிறது. உலகின் மற்றவருக்கும் ஆப்பிரிக்க மக்களுக்கும் ஓரிரு தலைமுறை இடைவெளியே உள்ளது எனில் பொருத்தமே.

காணொளிக் காட்சிகளில் ஆப்பிரிக்க ஊர்களைக் காணும்போது, தென்தமிழக ஊர்கள் எழுபதுகள், எண்பதுகளில் இருந்ததைப் போலவே இருக்கின்றன. அவர்களது சமையல் முறையும் தமிழகத்து ஊர்களின் சமையல் போலவே இருக்கிறது. தமிழகத்தில் உலக்கை வைத்து நெல் குத்துவது, இடிப்பது மறைந்துவிட்டது எனில், ஆப்பிரிக்காவில் தற்போதும் உள்ளதுபோல் தெரிகிறது. தமிழக ஊர்களைவிட ஆப்பிரிக்க ஊர்கள் ஓரிரு தலைமுறை பிந்தியிருக்கிறதாகக் கொள்ளலாம். அவ்வளவே. நகரங்களில் தமிழர்களைவிட ஆப்பிரிக்கர்கள் மேம்பட்டிருக்கக் கூடும்.

ஆப்பிரிக்காவும் இந்தியாவும் உறவுடையவை. நிலமாகட்டும், மக்களாகட்டும், மொழியாகட்டும். அனைத்திலும்.

சூடான், சாட் மற்றும் நைசீரியாவில் மந்தைக்காரர்கள் (Catte Herder) பக்காரா என அழைக்கப்படுகின்றனர். பக்கார (Baggaara) எனில் அரபியில் ஆட்டுக்காரர் எனப் பொருளாம். ஆப்பிரிக்காவின் இந்த ஆட்டுமந்தைக்காரர்கள் அரேபியா இனத்தவராகவே குறிப்பிடப்படுகின்றனர். தமிழில் ஆட்டுக்காரர் என அழைக்கலாமல்லவா. ஆட்டுக்காரர் எனும் தமிழ்ச் சொல் ஆட்டுக்காரா, ஆக்கர, அக்கர, பக்கர என திரிவது இயல்புதானே.

அரபுப் பழங்குடிகளான பக்கர்களின் ஒரு பிரிவினர் மெசிரியா (Messiria) என்றும், அவர்கள் பேசும் மொழி மிசிரி (Miisiirii) எனவும் அழைக்கப்படுவது

கவனிக்கத்தக்கது. மேற்கு சூடானில் பேசப்படும் இந்த மிசிரி மொழி, தமன் மொழியாகக் கூறப்படுகிறது. தமன் மொழி, சாட், சூடான் நாடுகளில் பேசப்படும் கிழக்கு சூடானிய மொழியின் கிளை மொழி.

கிழக்கு சூடானிய மொழியின் தமன் (Taman) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த இந்த முசிரி மொழி, தம (Tama) மொழியோடு தொடர்புள்ளதாக இருக்கலாமெனவும் சுட்டப்படுகிறது. தமன்மொழி, தமன் மக்கள் போன்ற பெயர்கள் தமிழ் என்பதோடு தொடர்புடையதாகத் தோன்றுகிறது. தமிழ் காலப்போக்கில் தமன் என மாறியிருக்கலாம். மாற்றத்திற்குக் காரணம் அரபிமொழி மற்றும் அரேபியர் எனில் தவறாகாது. வடக்கு, கிழக்கு, ஆப்பிரிக்க மக்களின் மொழி, உடை, உணவு, கலாச்சாரத்தில் அரபின் தாக்கம் மிக அதிகம். குறிப்பாக, இம்மக்கள் இசுலாத்தை ஏற்றுக் கொண்டபின், மொழிகளிலும் பெரும் மாற்றம் நிகழ்ந்துவிட்டது. மாற்றம் நிகழ ஆரம்பித்து நேற்றோ அதற்கு முதல் நாளோ அல்ல. ஏறக்குறைய ஆயிரத்து முந்நூறு, இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக என்பதை நினைவில் கொள்ளவேண்டும். எனினும் இசுலாமியராக மாற்றம் பெற்றாலும், ஆப்பிரிக்க மக்கள் முற்றாக இசுலாமிய பண்பாட்டுக்கு மாறிடவில்லை எனத் தெரிகிறது. ஏனெனில் தற்போதும் சூடானில் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகள் புழங்குவதாகச் சுட்டப்படுகிறது.

தமன், முசிர் எனும் பெயரை வைத்து அது சேர நாட்டைச் சேர்ந்ததாகச் சுட்ட முடியுமா? முசிறி சேர நாட்டின் புகழ்பெற்ற வணிக நகரமல்லவா? முசிறி என்பதற்கு என்ன பொருள்? திருச்சிக்கு அருகே காவிரிக் கரையில் ஒரு முசிறி இருக்கிறது. பண்டைய சேர முசிறி எங்கிருந்தது என்பதைக்கூட அறிவில் சிறந்த தமிழரால் கண்டுபிடிக்க முடியாதது விந்தையானது. தமிழர் வரலாற்று அக்கறை அவ்வளவே. பழம்பெரும் தமிழ் அடையாளங்களைக் கண்டறிவது பேரறிவுக்காரர்களுக்குப் பிடிக்கவில்லையோ? தமிழரே பெருநாகரீகங்களைப் படைத்தார் எனில், அன்னார்களது பெருமை குறையும் என்பது காரணமோ? தமிழர் நாகரிகத்தில் சிறந்திருந்தார் என்பது எல்லோருக்கும் பெருமைதானே.

தற்போதைய தமிழகத்து முசிறி காவிரி ஆற்றங்கரையோரத்தில் உள்ளது. பண்டைய துறைமுக முசிறியும் நீர்நிலைக்கருகே (கடல்) இருந்துள்ளது. அமெரிக்காவில் ஒரு மாகாணம் மிசௌரி (Missouri). அங்கு மிசௌரி எனும்

பெயரில் ஒரு ஆறும் இடம்பெற்றுள்ளது. உத்தரகாண்டின டேராடுன் அருகே முசுறி (Mussoorie) மலையிடம் அமைந்துள்ளது. மிசோரம் (Mizoram) என இந்திய மாநிலமும் உள்ளது. எனில் முசர், முசுர், முசோர், முசுறி, மிசௌரி என்பவற்றின் பொருள் என்னவாக இருக்கும்? அரபியில் அசார் (Azhar) எனில் பளபளப்பானது, ஒளி பொருந்தியது (Shining) எனப் பொருள். எனில் முசுக்கட்டை மரம் பட்டுப்பூச்சிபோல் உண்ணப்பட்டு பட்டுக் கூடைத் தருவதால்தான் அதாவது பளபளப்பைக் கொடுப்பதால்தான் முசுர் கொட்டை - முசுக்கொட்டை மரம் எனப் பெயர் பெற்றதோ? விசி - வீசி , வீசி எறிதல், தூரமாக எறிதல், வேகமாக எறிதல். விசிறி - காற்றை (வேகமாகக்) கொடுக்கும்.

எல்லாவற்றிற்கும் தமிழ்ப் பேரகராதியை நாடவேண்டுமோ? எனில் அது அறிவுக் குறையன்றோ.

வேகமாக ஓடும் ஆறு முசிறி, அவ்விடத்தில் அமைந்துள்ள ஊரும் முசிறி. இருக்கலாமோ? மிசோராம் - மிசோ - Mizo - சொந்த மக்கள். ராம் - நிலம். மிசோ மக்களின் நிலம் மிசோராம் எனச் சுட்டப்படுகிறது.

முட்டம், முசிறி - ஏதேனும் தொடர்பிருக்குமோ? முஷ்டக் குறிச்சி ஊரின் பொருள் என்னவாக இருக்கும்? முசிறியில் காவிரியாறு முட்டித் திரும்புகிறதோ.

முசில் - மிசோ - Mizo - முசோ - முசிசோ - முகி - முகில் - மிசோரம் - முகில் நிலம், உயர்ந்த நிலம், மழை நிலம்.

சேரம் - மலை நாடு. மிசேரம் -மிசோரம் - மிகப் பெரிய மலைநாடு? மீ - பெரிய. மிக்க, அதிக.

கடல்களில் தொலைதூரங்களுக்குப் படகோட்டுவதற்கு முன்னர் ஆறுகளிலேயே அதிகம் ஓட்டிப் பழகியிருப்பார்கள். அதுவே கடலிலும் ஓட்டிப் பார்த்தாலென்ன எனும் துணிச்சலைக் கொடுத்திருக்கும். மிக நீண்ட நதியான நைல் அன்று நீர்ப்பயணத்திற்கு பெருமளவில் பயன்பட்டிருக்கும். நைல் இல்லையாம் - நீளாம். நீளமான நதி எனும் பொருளில் நீள ஆறு எனத் தமிழில் சுட்டப்பட்டது காலப்போக்கில் மருவி நைல் என பெயர்பெற்று விட்டதாம் (நன்றி - தமிழறிஞர் திரு. மா.சோ. விக்டர்). ஆற்றின் இருமருங்கிலும் திரளான மக்கள் வாழ்ந்திருப்பார்கள்.

ஆற்றின் வழியாக பொருள் போக்குவரத்தும், மனிதர்களின் பயணமும் பெருமளவில் நடந்திருக்கும். உலக மானுடத்தின் தொல்பண்பாட்டிற்குக் காரணமாகக் சுட்டப்படும் நீள்ஆற்றுப் பகுதியின் நூபிய மக்கள் யார்? அவர்கள் பேசிய மொழி எது? பிற ஆப்பிரிக்க மக்களெல்லாம் கருப்பானவராக இருந்திருக்கும்போது, மேல்நைல் ஆற்றின் மக்கள் மட்டும் எப்படி சற்றே நிறமானார்கள்? அவர்களது மூக்கு நேரானதாக இருக்கிறது. உதடுகள் ஒட்டியும் இல்லாமல் உப்பியும் இல்லாமல் சரியான அளவில் இருக்கிறது. அதாவது தற்காலத்திய தமிழர் போன்று.

உதடு மட்டும் அல்ல, ஒட்டு மொத்த உடல் அமைப்புமே கிட்டத்தட்ட தமிழர் அடையாளத்தோடு மிகவும் ஒத்துள்ளது. தமிழர் என்பதைத் திராவிடர் எனச் சுட்டலாமே எனில், தாரளமாகச் சுட்டலாம். தமிழர் தவிர்த்த பிற திராவிடருக்கு அதில் ஒப்பம் இல்லை எனத் தெரிகிறது. அவர்கள் திராவிடர் அடையாளத்தை ஏற்கவில்லை என்பது தெளிவு.

ஒரு காணொளிப் பதிவில், குறிப்பிட்டதொரு தமிழ் பாடலும் அதன் இசையும் மிகவும் பிடித்திருப்பதாகவும், மொழி புரியாவிட்டாலும் பாடலை அடிக்கடி கேட்பதாகவும் ஒரு அயல்நாட்டு நண்பர் பின்னூட்டம் போட்டுள்ளார். அதை முன்னிட்டு தமிழரும், தெலுங்கும், கன்னடரும் போட்டுள்ள பின்னூட்டங்களும், காரசார விவாதங்களுமே தமிழர் யார், திராவிடர் யார், இந்தியர் யார்? மனிதர் யார் என்பதற்குப் போதுமான சான்று. ஒரு பானைக்கு ஒரு சோறு போதுமே.

பாட்டைப் பாடியது தெலுங்கராம். படத்தை இயக்கியது தெலுங்கராம். அது தெலுங்குப் பாட்டின் நகலாம் (Copy). கர்நாடக சங்கீதத்திற்கும், தமிழுக்கும் என்ன சம்பந்தம் (உறவு) இருக்காம்? அன்னார் எதை வேண்டுமானாலும் ஏற்றுக்கொள்வாராம். தமிழிலிருந்து தெலுங்கு வந்தது என்பதை ஏற்க மாட்டாராம். தெலுங்கு தனி மொழியாம். ஒருவேளை வானத்திலிருந்து நேராக தெலுங்கர் காதுகளை அடைந்திருக்குமோ?

தெலுங்கராவது பரவாயில்லை என நினைக்க வைக்கிறது கன்னடரின் பல பதிவுகள். கர்நாடக சங்கீதத்திற்கும் தமிழுக்கும் என்ன இருக்கிறதாம். மொழி பற்றிய பல காணொளிகளில், கன்னடரின் பெருவாரியான பதிவுகள், கன்னடம் தனி மொழி என்கின்றன. கன்னடம் தமிழிலிருந்து தோன்றவில்லையாம். சமற்கிருதத்திலிருந்து வேண்டுமானால் தோன்றியிருக்கலாமாம். தெலுங்கரும்,

கன்னடரும் பயன்படுத்தியுள்ள சில சொற்கள், சொல்லாடல்கள், எழுத்தில் கூறமுடியாதவை. எழுதினால் தமிழருக்குக் கோபம் வந்தாலும் வரும்.

தமிழருக்குக் கோவம் வருமா என்ன? தமிழருக்கு சினம் என்பதன் பொருள் தெரியுமா? சூடு, சொரணையற்ற தமிழர் என்பதுதான் சமீபத்திய நூற்றாண்டு வரலாறு ஆயிற்றே. அனேகமாக ஆயிரமாண்டு வரைக்கும்கூட இந்த சூடு சொரணையின்மையை நீட்டிக்கலாம்போல. சூடு, சொரணை, மானம் உள்ளவரென்றால் எதற்கு அடிமையாகப் போகிறார்?

தமிழகத்தை நாயக்கர் ஆண்டதால்தான் அன்னார் தமிழை, தமிழரைக் குறைத்து மதிப்பிடுகிறார். தமிழர் பாடப்புத்தகங்களில் தமிழர் வரலாற்று நூல்களில் நாயக்க மன்னர்கள் பற்றிய வரலாறு பெருமையாகக் கூறப்பட்டுள்ளது. எனில் தெலுங்குப் புத்தகங்களில் தமிழ் வேந்தர்கள், தற்போதைய ஆந்திரா முழுவதையும் கட்டி ஆண்டார்கள் என்பது சொல்லப்பட்டுள்ளதா? நாயக்கர் மதுரைக்கு வருவதற்கு முன்புவரை, ஏழாம் நூற்றாண்டு வரைக்குங்கூட அந்நிலத்தில் சோழர் ஆட்சி இருந்தது அவர்களது பாடப்புத்தக வரலாற்றில் இடம் பெறவில்லையா?

பரந்து விரிந்திரிந்த இந்தியா சுருங்கிக் கொண்டே வந்ததெனில், தமிழ்நாடும் அப்படித்தான், சுருங்கிச் சுருங்கிக் கடைசியில் மற்ற தென்னக மாநிலங்களைவிட மிகவும் சிறியதாகிவிட்டது. அன்றைக்கு நீண்ட விரிவு கொண்டிருந்த சென்னை மாகாணத்தில் பெருவாரியான பகுதிகள் தமிழருக்கே சொந்தமானவையாக ஆகியிருக்க வேண்டியவை. மாநிலச் சீரமைப்பில் என்ன நிகழ்ந்தது? அன்றிருந்த தமிழக அரசியலாளர், பெருந்தன்மையாக நடந்து கொண்டிருக்கலாம். எனினும் அன்றிருந்த வரலாற்று அறிஞர்கள், தமிழறிஞர்கள் என்ன செய்தார்?

மாநிலப் பிரிவினையில் தமிழ்நிலத்தைவிட இரண்டு மடங்குக்கும் அதிகமான நிலம் பெற்றுக் கொண்ட ஆந்திரா, அதன் தென்முனையிலிருந்த திருப்பதியைத் தமிழருக்கல்லவா தந்திருக்க வேண்டும். ஏன் மறுத்தது? தமிழர் எதனால் ஒத்துக் கொண்டார்? திருமலை தமிழரின் பெருஞ்சொத்தல்லவா? தென்குமரி - வடவேங்கடம் தமிழரின் கடைச்சங்க எல்லை என்பதற்குத் தக்க சான்றுகள் இருந்தும், எப்படி தெலுங்கருக்குச் சொந்தமாகும்? ஒரு மாவட்டம்தானே. அதனால் ஒன்றும் ஆந்திரத்திற்கு நிலம் குறைந்திருக்காதல்லவா? நான்கு பூதங்கள் தமிழ்நாட்டில் இடம்பெற்றிருக்க, வாயுவுக்கான பூதம் மட்டும் அங்கு போனதெப்படி?

தேமதுரத் தமிழுக்கு திருமலையில் தற்போது எத்தகைய மதிப்பிருக்கிறது என்பதைத் தமிழர் அறிந்திருக்கிறாரா? திருமலையில் தமிழுக்கு முதன்மை இடம் கொடுக்கப்பட வேண்டும் என்பதையாவது அன்றிருந்த தலைவர்கள் உறுதிசெய்திருக்கக் கூடாதா?

தமிழ்நாட்டைவிட அதிகமாக நிலம் பெற்றுக்கொண்ட கர்நாடகாவிலிருந்து மைசூரைப் பெற்றிருந்தால், காவிரிப் பெண் தடையில்லாமல் பாய்ந்தோடி வருவாளன்றோ? எத்தனை அணைகள், எத்தனை கால்வாய்கள். கன்னடர் கட்டியிருக்கும் வாய்க்கால்களுக்குள் பேருந்தே மூழ்கி விடுகிறது. தமிழர் தோண்டியிருக்கும் கால்வாய்களோ தூர் வாராமல் புதர்மண்டிக் கிடக்கின்றன. யார் புத்திசாலி?

மாநில பாகப்பிரிவினையில் மலையாள தேசத்தார் மேற்கொண்ட தந்திரங்கள் ஆச்சரியமளிக்கின்றன. அங்கேரி நாட்டில் வாழும் ஒரு மலையாள தேசத்தார் காணொளி ஒன்றைப் பதிவிட்டுள்ளார். அங்கேரியன் மொழி மலையாளம் போலவே உள்ளதாம், மலையாளத்தோடு நெருங்கிய தொடர்புடையதுபோல் தெரிகிறாம். நல்லது. எங்கோ தொலை தூரத்திலிருக்கும் அங்கேரி நாட்டு மொழி மலையாளத்தை ஒத்திருப்பது மகிழ்ச்சியானது. பாராட்டுதலுக்குரியது. எனினும் இயல்பாக எழும் கேள்வி, அங்கேரியோடு மலையாளம் ஒத்துள்ளதா அல்லது தமிழ்மொழி ஒத்துள்ளதா? எனில், பதிவு எப்படி இருந்திருக்க வேண்டும்? உண்மையிலே படித்தவர், நன்கு படித்த மலையாளி எனில், அங்கேரி மொழி தமிழோடு நெருக்கமாக உள்ளது என்றல்லவா பதிவிட்டிருக்க வேண்டும். இல்லையெனில், அவருக்கு மலையாள மொழியின் வரலாறு சரியாகக் கற்றுத்தரப்படவில்லை என்றே பொருளாகிறது. சேய் பிரித்தாலும் அது தாயின் வயிற்றிலிருந்து பிறந்ததுதானே. சேய் வேண்டுமானால் தாயைத் தெரியாதென்றோ, தாயோடு உறவில்லை என்றோ சொல்லலாம். தாய் அறிவாரன்றோ. சேய் தாயை வெறுத்தாலும்கூட அன்புத்தாய் சேயை ஒருபோதும் வெறுக்க மாட்டார், ஒதுக்க மாட்டார். சேயை நினைத்து அவர் பெருமைப்படத்தான் செய்வார். ஏனெனில் அது அவரது சேயன்றோ.

**தமிழ் சிறந்த தாய். நல்ல அம்மா. அன்புத் தெய்வம்..**

அன்னையாம் தமிழைப் போன்றே தமிழரும் பொறுமையாக இருக்கிறார். அவர்கள் அன்னையைப் போலவே தமிழர்களும் சேய்களை நன்றாக அறிந்துள்ளனர். அவர்கள் என்னதான் செய்தாலும் பார்ப்போம், பரவாயில்லை, நம்மவர்தானே, என்றேனும் புரிந்துகொள்வார் என அமைதி காக்கிறார்கள். ஆனாலும் வர வர சேய்கள் எல்லை மீறுவது நன்றாகத் தெரிகிறது. உதாரணமாக, சமீபத்தில் ஒரு நாயக்கப் பெண்ணரசியல்வாதி பேசிய தமிழ்நிலம் அவர்களுக்குரியது எனும் பேச்சு மிகப்பெரிய எல்லை மீறல். தமிழர்கள் லெமூரியாவிலிருந்து வந்தவர்களாம். ஆகவே இது ஆந்திரர்களது நிலமாம். தமிழர் இப்படியான பேச்சை எதிர்பார்த்திருக்க மாட்டார்.

தெலுங்கு டாக்டரும் நன்றாகவே பேசுகிறார், நாங்க இல்லைனா தமிழ் நாட்டுல ஒண்ணுமே நடக்காதுங்கோ.

தமிழ் நிலத்தில் வாழ்ந்து கொண்டு இப்படிப் பேச முடிவதே தமிழரின் பெருந்தன்மைக்குச் சிறந்த உதாரணம். தமிழரின் அன்புக்கும், பொறுமைக்கும், தாயுள்ளத்திற்கும் நன்றி. தமிழர் வீரத்திற்கும், மானத்திற்கும் பெயர் பெற்றவர் என்பதும் வரலாறு. திராவிடப் பிள்ளைகள் கவனம் கொள்வது நல்லது.

மாநிலப் பிரிவினையில், தமிழர் தமது நிலத்தை விட்டுக்கொடுத்துப் பெருந்தன்மையாக நடந்து கொண்டார். தமிழருக்கு நன்றாகவே தெரியும். அவருக்கு இந்த நிலம் முக்கியமல்ல. தமிழருக்குத் தமிழே முக்கியம்.

**தமிழே மூச்சு. தமிழே உயிர். தமிழே வாழ்வு..**

தமிழர் திராவிடத்தால் இழந்தது ஏராளம். தமிழர்களது ஆன்மீகச் செல்வம் சிதைக்கப்பட்டது பெரும்பிழை. தனிமனித ஒழுக்கம், சமூக அக்கறை, நாம் என்ற எண்ணம் பெருமளவு நலிந்துவிட்டது. எனினும் திராவிடம் செய்திருக்கும் அருங்கொடை தென்னகத்தார் ஒன்று, ஒரு தாய் மக்கள், அனைவரும் திராவிடர்கள் என்பதே. என்றேனும் ஒருநாள் திராவிடர்கள் நாங்கள் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் எனக் கைகோர்த்துக் கொள்வர். அன்று தமிழ்த்தாய் மட்டுமல்ல, திராவிடத் தலைவர்களும் உளம் மகிழ்வர்.

எகிப்து நாகரிகத்திற்கு உலகினர் அனைவரும் சொந்தம் கொண்டாடுகிறார்களாம். குறிப்பாக தற்போதைய எகிப்தியர் வெள்ளையாக இருப்பதை வைத்து, பல்வேறு யூகங்கள் அலையடிக்கின்றன. குறிப்பாக, அராபியர், மத்தியதரைக் கடலர்கள், அய்ரோப்பியர், மெசபதோமியர் போன்றோர் இவற்றில் முன்னிலையில் இருப்பது தெரிகிறது. போட்டியில் இந்தியரும் இருப்பது விந்தையானது. இந்தியர் எனில் வடஇந்தியரா அல்லது தென்னிந்தியரா எனும் கேள்வி எழும். தற்போதைய எகிப்தியர் குறிப்பாக மேல்பகுதி எகிப்தியர் வடஇந்தியர் போன்றே வெளுப்பாகத்தான் இருக்கிறார். எனினும் உட்பகுதி எகிப்தியர், ஊர்ப் பகுதிகளில் பயிர்த்தொழில் செய்து வாழும் எகிப்தியர் எப்படி இருக்கிறார்? அவரை வைத்தல்லவா பண்டைய எகிப்தியர் யார் என்பதை அறிய முடியும்? வெறுமனே கெய்ரோவின் எகிப்தியரை மட்டும் பார்த்துவிட்டு எகிப்தியர் அரபு, அய்ரோப்பியர் போன்று வெள்ளையானவர் எனில் எப்படி?

வடக்கு எகிப்திற்கும், தெற்கு எகிப்திற்கும் நிறம் தொடங்கி பண்பாட்டு வேறுபாடும் உள்ளதாகத் தெரிகிறது. நைல் ஆற்றை ஒட்டி வாழும் தொன்மைக்கால நுபியன்கள், அங்கிருந்து அகற்றப்பட்டு, மீள்குடியேற்றம் செய்யப்படுவதாகப் பதிவுகள் சுட்டுகின்றன. குறிப்பாக நைல் ஆற்றில் ஏராளமான அணைகள் கட்டும் திட்டமிருப்பது தெரிகிறது. மேலும் முன்னேறிய மக்களின் அரசுகள், பழமையை அழிக்க முனையும் என்பதும் உலக வரலாறு. நுபியன்கள் இருக்கும்வரை தங்களதே எகிப்தியப் பண்பாடு எனக் கூறிக்கொண்டே இருப்பர். அவர்களை அங்கிருந்து அகற்றிவிட்டால், அவர்களது பண்பாட்டை மாற்றிவிட்டால், அவர்களது வரலாற்றைத் திருத்திவிட்டால், எல்லாமே மறந்துவிடும். அதன்பின்னர் பண்டைய எகிப்தியர்கள் செக்கச் செவேல், வெள்ளை வெளேர் நிறத்தில் இருந்தார்கள் என எழுதி வைத்துவிட்டால் உலகமும் நம்பிவிடுமல்லவா?

தமிழகத்திலும் இப்படியான பண்பாட்டு மாற்றங்கள் நடந்தேறியிருக்கின்றன. உதாரணமாக புத்தமும் சமணமும் தமிழ் நிலத்திலிருந்து தடமே இல்லாமல் மறைக்கப்பட்டு விட்டது. இன்றைக்கு புத்தருக்கான கோவில்கள் எங்குமே காணோம். இந்திர மரபும் மறக்கடிக்கப்பட்டு விட்டது. இவையெல்லாம் திட்டமிட்டு நிகழ்ந்தப்பட்டவையே. அம்மரபு தொடரும்வரை அம்மக்கள் அதனை மறக்கமாட்டர்கள். மக்களை மறக்கடிக்கச் செய்ய வேண்டுமெனில், வரலாற்றைத்

திருத்த வேண்டுமெனில், மக்களை இடம்மாற்ற வேண்டும். அடையாளங்களை அழிக்க வேண்டும்.

எகிப்திய மன்னர்கள் யார்? அவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? அவர்களின் நிறமென்ன? ஏராளமான கருத்துகள் பதியப்படுள்ளன. எகிப்தின் தென்பகுதியிலிருந்து அதாவது சூடான், எத்தியோப்பிலிருந்து வந்தவரென்றும், சோமாலியாவிலிருந்து வந்தவரென்றும் ஆப்பிரிக்கப் பதிவுகள் சுட்டுகின்றன. அரேபியர் பதிவுகள் எகிப்தியர்கள் அரபியர் எனப் பதிகின்றன. எகிப்தியர் பழங்காலத்தில் இவ்வளவு அறிவுகொண்டிருந்தார் எனில் அவர் அய்ரோப்பியராகவே இருந்திருக்க வேண்டுமென அய்ரோப்பியரும் பதிவிடுகிறார். அவ்வாறே வரலாறுகளும் புனையப்படுகின்றன. எனினும் உலக மக்கள் மறந்துவிடும் ஒன்று, வரலாற்றை அப்படியெல்லாம் ஒட்டுமொத்தமாக மாற்றியும், முடித்தும் விடமுடியாது என்பதே. வரலாறு ஏதேனுமொரு தடயத்தை விட்டே செல்லும். தன்னுள் பொதிந்து வைத்திருக்கவும் செய்யும்.

எகிப்தியர் பேசிய மொழி எதுவாக இருக்கும்? தொல் அரபியா? தொல் அய்ரோப்பிய மொழிகளா? தொல் எபிரேயமா? தொல் ஆப்பிரிக்கா மொழியா? நாகரிகத்தில் இவ்வளவு உச்சம் தொட்டிருந்த பாரோக்கள் மொழியிலும் சிறந்தவர்களாவகவே இருந்திருப்பார்களல்லவா.

எகிப்தின் புகழ்பெற்ற மன்னர்களது மொழியைப் படித்தவர்கள் யார்? பெரும்பாலும் அய்ரோப்பிய அறிஞர்தானே. பாரோ மன்னர்களின் தொல்மொழி சரியாகத்தான் படிக்கப்பட்டதா? வெளிப்படுத்தப்பட்டதா? ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து, கிட்டதட்ட இரண்டாம் ஆண்டுகளுக்கு முன்புவரை தொடர்ந்து மூவாயிரம் ஆண்டுகள்வரை எகிப்திய நிலத்தைத் திறமையாக ஆண்டு வந்த பாரோ மன்னர்களின் மொழி அடையாளம் யாது?

எகிப்திய கூட்டுச் சொல்லிலிருந்து உருவாக்கப்பட்ட பெயர்தான் பாரோ (Pharah). தமிழில் பரவோன், பர்வோன் என அழைக்கப்படுகிறது. பாரோ எனில் பெரிய வீடாம் (Great, High House). வீடு என்பதை அரண்மனை எனச் சுட்டலாம். எனில் பரோ என்பது பெரியவர், உயர்ந்தவர், பெரிய வீட்டுக்காரர் எனும் பொருள் வருகிறது. தமிழில் பாரிய எனில் பெரிய எனப் பொருள். பார் - நிலம். பாராள்பவர் - நிலத்தை ஆள்பவர், உலகை ஆள்பவர் என்பதே பொருத்தமானது. எகிப்திய பாரோ

மன்னர்கள் மாபெரும் இந்த உலகத்தை ஆண்டவர்கள் எனும் பொருளிலேயே பாரோ அதாவது பாராள்பவர் எனும் சிறப்புப் பொருளில் அழைக்கப்பட்டுள்ளனர். கவனிக்க வேண்டியது பாரோ பெயரல்ல. அதுவொரு அடைமொழி,

பாரோக்களின் ஆட்சியின் பத்தொன்பதாவது அரசுரிமைக் காலத்திலிருந்து பாரோ எனில் மிகப்பெரிய (Majesty) எனும் பொருளில் பாரோ சொல் ஆளப்பட்டதாம். பாரோ - பாரிய, பெரிய எனச் சுட்டலாமோ? பாரோ - பாரிய அரசன். பாரோ - பேரோ - பேரா. பேரரசன், பேரரசர் எனும் தமிழச்சொல் காலப்போக்கில் பேரோ எனச் சுருங்கியிருக்கலாம். பேரரசன் என்பது பெயரில்லை என்பதும் ஒப்பு நோக்கத்தக்கது. பேரரசன் என்பதையே பாரோ எனத் தவறாகவும் படித்திருக்க வாய்புள்ளதல்லவா. படித்தவருக்கு தமிழில் பேரரசன் எனும் சொல் இருப்பது தெரிந்திருக்க வாய்ப்பில்லை. எனினும் அதெப்படி பாரோ என அறியப்பட்டதெனில், இங்குதான் தமிழின் பெருமை உள்ளது.

பண்டைய கிரேக்கம், உரோமமே அய்ரோப்பாவின் அத்தனை மொழிகளுக்கும் மூலமாக உள்ளன. பண்டைய கிரோக்க மொழியும், இலத்தீன் மொழியும் தமிழுக்கு மிக நெருங்கியவை. கிரேக்க, இலத்தீன மொழிகளில் தமிழின் வேர் பலமாக இருப்பதால், அவர்கள் சற்றே மாற்றியிருந்தாலும் தமிழரால் தமது தமிழ்ச்சொல்லை இனங்காண முடியும். பேரரசன் எனும் தமிழ்ச் சொல் பேரோ, பெரோ, பாரோ, பார என சிதைந்தால், அது மற்ற மொழியினருக்குத் தெரியாமல் போகலாம். எனினும் தமிழருக்கு, தமிழ் மொழியில் புலமை பெற்றோருக்கு உறுதியாகத் தெரியவரும்.

நாகரீகத்தில் இத்தனை உச்சம் தொட்டிருந்தவர்களின் மொழியும் செழிப்பானதாகவே இருந்திருக்கும். குறிப்பாக பேச்சுமொழி தனிச்சிறப்பிடம் பெற்றிருந்திருக்கும். பேச்சை எழுத்தில் வடிக்கும் முறைகள் தொடக்க நிலையில் இருந்திருக்கும். அதனால்தான் எழுத்தில் ஒரு பொருளைக் குறிக்க அந்தப் பொருளையே படமாக வரைந்துகொள்ளும் எழுத்து பாரோக்களின் காலத்தில் புகழ்பெற்றதாக இருந்திருக்கிறது. அதன்பின்னர் குறியீடுகளால் மொழியைச் சமைக்கும் காலம் வந்திருக்கும். ஒருவேளை குறியீட்டு மொழியில் சுமர்கள் சிறந்தவர்களாக இருந்திருக்கக் கூடும்.

தமிழ் விக்கியில் பார்வோன் எனும் சொல் இடம்பெற்றுள்ளது. அரபு மொழியில் ∴பிர்அவ்ன். தொல்அரபியில் பி - P எழுத்து கிடையாதாம். எனவே பார்வோன் என்பது பிர்வோன் (F) எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மையெனில், ∴பலசா - Falasha மக்கள், பலசா (Palasha) மக்கள். எனில், Falahi மொழி - Palahi. எகிப்தின் விவசாயி Falahin அல்ல, Palahin - பலாகின். தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் பளாகின் - பள்ளாகின் - பள்ளகின் - பள்ளன். ஒருவேளை பள்ளன் என்பதே பள்ளாகின் என மருவியிருக்கவும் கூடும். எனில் பாராள்வோன் என்பதையும் பள்ளன் என்பதன் திரிபுச் சொல்லாகவும் சுட்டக்கூடும். எகிப்தின் பயிர்க்குடி மக்கள் பள்ளர்கள் எனத் தெளிவாக அடையாளம் பெறும்போது, வேறென்ன சான்று வேண்டும்? எகிப்திய பாரோக்கள் பெயரை - பேரரசர்கள் எனத் துணிந்து கூறலாம். எகிப்தை ஆண்டவர்கள் பேரரசர்கள் எனில் அங்கு புழங்கியது தமிழ்மொழிதானே. எனில் புன்ட் நிலம் (Puntland), புன்ட் மொழி (Punt Language), புன்ட் மக்கள் (Punt People), புன்ட்கள் (Puntites) என்ற ஆப்பிரிக்கச் சொற்களை, பாண்டியர்கள், பாண்டிய மொழி, பாண்டிய மக்கள் என மாற்றலாமல்லவா? பாண்டிய மொழி தமிழ்தானே. இதில் உலகினர் எவருக்கும் சிறிதும் ஐயம் வராதல்லவா?

மேற்குலகில் தொல்எகிப்தியர்கள் கருப்பான மக்களா, வெள்ளையர்களா என பெரிய ஆராய்சிகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. தொல் அராபியரும் கருப்பாகவே இருந்திருக்க வேண்டும். வடக்கே பனிநாடுகளுக்குப் போன தொல்மானுடர்கள், சூழ்நிலையால் மாற்றம் பெற்று வெள்ளைத் தோலைப் பெற்றிருப்பர். அவர் திரும்பி வந்தே தெற்கில் வெள்ளைத் தோல் உண்டானது என்பதே ஏற்புடையது. உலகின் தெற்கில் கருப்பின மக்கள்தான். தற்போதே அப்படித்தான் எனில், பத்தாயிரம் வருடங்களுக்கு முன்பு எப்படி இருந்திருப்பர்?

பாண்டியர்கள் ஆப்பிரிக்கர் போன்றோ அல்லது சற்றே வெள்ளை நிறம் கொண்டவராகவோ இருந்திருக்கலாம். ஏனெனில் குமரி நாடு நடுக்கோட்டிற்கு சற்றே வடக்கில் அமைந்துள்ளது, அநேகமாக, கீழ் எகிப்தின் நூபியன்களின் நிறம் கொண்டிருக்கலாம்.

சோமாலியர்கள், சூடானியர்கள், எரித்ரியர்கள், எத்தியோப்பியர்கள் போன்றோரும், எகிப்திய மன்னர் பரம்பரைக்குச் சொந்தமானவர்களாகப் பதிவிடுகின்றனர். அவர்களைப் பொருத்தவரை, தொலைவிலிருக்கும் பாண்டிய நாடு

எகிப்தோடு தொடர்புடையதாக இருக்க வாய்ப்பில்லை. எனினும், இந்நாட்டவர்களும்கூட, பாண்டியர்கள் அவர்களைப் போன்றே கருப்பானவர்கள் என்பதை ஒப்புவார்கள். ஒருவேளை, இந்நாட்டவர் பேசும் மொழிகளும், பாண்டிய மொழியும் ஒன்று என்பதை அறிந்தால்? அறிந்தால் நாம் நிறத்தால், பண்பாட்டால் மட்டும் ஒன்றல்ல, மொழியாலும் ஒன்றானவர்கள் என உளம் பூரிப்பரா?

எகிப்தை, ஆப்பிரிக்காவை, பாண்டியர் ஆண்டார் எனில் அந்நாட்டவர் மனம் வருந்தக்கூடும். ஏனெனில் உலகெலாம் அவரவர் நிலத்தை அவரவரே ஆண்டதாக வரலாற்றை விரும்புகிறார்கள். இனிமேல் அவரவர்களே ஆள வேண்டுமெனவும் ஆசைப்படுகிறார்கள். மண்ணுக்குரியவர் எனும் சொல் இன்றைக்கு அமெரிக்கா போன்ற பல்வேறு இன, மொழி, கலாச்சாரம் கொண்ட நாடுகளிலேயே முன்னெடுக்கப்படுகிறது. எகிப்தை ஆட்சிபுரிந்த பேரரசர்கள் பேசிய மொழி தமிழ் எனில், எகிப்தியருக்கு வருத்தமொன்றும் வராது என நம்பலாம்.

சோமாலியர்களுக்கு? ஏனெனில் சோமாலியர்கள் பாரோக்கள் தாங்களே என்கிறார்கள். அவ்வாறே எரித்ரியர்களும், சூடானியர்களும் பாரோக்களுக்குச் சொந்தம் கொண்டாடுகின்றனர். சோமாலிய நாட்டின் வடகிழக்குப்பகுதி அதாவது இந்தியப் பெருங்கடலை ஒட்டியுள்ள நிலம் புன்ட் லேண்ட் (Land of Punt) என அழைக்கப்படுகிறது. எகிப்திய மொழியில் புவேனி (Pwene) எனக் குறிக்கப்பட்டுள்ளதாம். புன்ட் - பாண்டி எனவும், பொவேணி - பொருணி, பொருனை எனவும் கொண்டால் அழகிய தமிழ்ப் பெயராவதோடு, பாண்டியர்களோடும் பொருந்தமுடையதாகிறது. புவேனி - புவனி - புவன - புவனம். புவனம் - நிலம். உலகம். புவனம் சமற்கிருதமெனில் அதுவும் பொருத்தமே.

சோமாலியாவுக்கும் தமிழ்நிலத்திற்கும் நெருங்கிய தொடர்பிருப்பது தெரிகிறது. இரு பகுதிகளின் மழைக்காலம் ஒன்றுபோலவே உள்ளது. சோமாலியாவில் ஏப்ரல் தொடங்கி ஜூன் வரை மழைக்காலமாம். அக்டோபர் முதல் திசம்பர் வரை குறைவான மழைக்காலமாம். இது அப்படியே தமிழக தென்மேற்கு, வடகிழக்கு மழையோடு ஒத்துப் போகிறது.

சோமாலி மொழியில் அடி, அசி (Ati, Azi) எனில் மிகப்பெரிய எனும் பொருள் கொண்டுள்ளதாம். இவை பெண்களைக் குறிக்கவும் குறிப்பாக அழகான பெண்களைக் குறிக்கவும் பயன்படுமாம். எனில் Azi என்பதை அழகி என்பதன்

திரிபாகச் சுட்டலாமோ. சோமாலியில் அட்டெ (Addei) எனில் அரசியாம். பரகோ (Barahow - Barakow) எனில் அரசனாம். எனில் Addei - ஆதி எனவும், barakow - பகவான் எனவும் எடுத்தாளலாமோ? ஆம் எனில், அரசியும் அரசியும் - ஆதியும் பகவானும். சரியெனில் அகர முதல குறளின், ஆதி பகவன் என்பது கடவுளை அன்றி அரசியையும் அரசனையும் குறிக்கிறது எனத் தெளியலாமோ. தமிழர் மரபுப்படி, அரசியும் அரசனும் கடவுள்களின் மறுவடிவுதானே. தமிழ் மரபு என்றில்லாமல் எகிப்திய அரச மரபிலும் அரசனும் அரசியும் கடவுள் போன்றவர்கள். இன்னும் சொல்வதானால் கடவுள்களே. கடவுள்கள் போன்றே வணங்கப்பட்டிருக்கின்றனர். குறிப்பாக, இறப்பிற்குப் பின்னரும்.

சோமாலி மொழியில் ஆர் (Aar) எனில் சிங்கமாம். தமிழின் அரியோடு ஒத்துப் போகிறது. சோமாலி மொழியின்றி பள்ளா (Pala) மொழியிலும் ஆர் எனில் சிங்கமே. ஆப்பிரிக்காவின் பெரும்பாலான மொழிகள் சிங்கத்தை அர் எனக் குறிப்பிடுகின்றனவாம். எனில் சிங்கத்தைக் குறிக்கும் அரி எனும் தமிழ்ச்சொல் ஆப்பிரிக்கா முழுதும் எப்படிப் பரவியிருக்க முடியும்? அது ஆப்பிரிக்கா மொழியாக இல்லாவிட்டால் இத்தனை விரிவாகப் பரவாதல்லவா.

ஒரு குறிப்பின்படி, எகிப்திய அரசி புன்ட் (Punt) வணிகப் பயணம் செய்து ஏராளமான பரிசுகளோடு திரும்பி வந்தாராம். அவருக்குக் கொடுக்கப்பட்ட பல பொருட்களில் பொன்நகைகள், யானைத் தந்தங்கள், பத்திக் குச்சிகள், சிறுத்தையின் தோல், குரங்கு போன்றவையும் அடங்கும். எனில் இந்த அரசி எந்த நாட்டுக்குப் போயிருப்பார்? அராபியாவுக்குப் போயிருக்க மாட்டாராம். அங்கு இம்மாதிரியான பொருட்கள் இல்லையாம். சோமாலியா நிலத்திற்கு வந்ததாகக் குறிப்பிட்டு பல பதிவுகள் எடுத்தாளப்பட்டுள்ளன. ஏனெனில் சோமாலியாவிலேயே புன்ட் நிலம் உள்ளதாம். எகிப்திய அரசி பாண்டிய நாட்டிற்கு ஏன் வந்திருக்கக் கூடாது? பாண்டியர்கள் கடலோட்டுவதில் திறமையானவர்களல்லவா. புன்ட் நிலம் கடவுளின் நிலமென்றுக் குறிப்பிடப்பட்டுள்ளதாம். பாண்டியர்கள் கடவுள் பக்தியிலும் சிறந்தவர்களன்றோ.

எகிப்தின் தென்கிழக்கிலும், சோமாசியாவின் வடமேற்கிலும், எத்தியோபியாவிற்கு வடக்கிலும் அமைந்துள்ள நிலப்பகுதியின், அதாவது செங்கடலுக்கும் எத்தியோபியாவிற்கும் இடையிலுள்ள எரித்ரியா நாட்டின், பெசா

(Beja) மக்கள் பழமையானவர்களாகக் கருதப்பட்டு, எகிப்திய அரசர்களோடு தொடர்புபடுத்தப்படுகிறார்கள். எரித்ரியாவின் பெசாக்களோடு நுபியன்களும், பெசாக்களும் தொடர்புள்ளவர்களாக அறியப்படுகின்றனர். எரித்ரேயா, எகிப்து, சூடான் நாடுகளில் வாழும் இம்மக்களின் பெசா மொழி பெலம்மி (Belmmye) என்பதன் மருவாக இருக்கலாம் எனப்படுகிறது. எனில் பள்ள மொழி - (Pala) என்பதே நாளடைவில் பெல மொழி, பெச மொழி, பெசா மொழி எனத் திரிந்து, மக்களும் பெச எனக் குறிப்பிடப்பட்டிருக்கலாம். பெசா மொழி என்பதை பேச்சுமொழி எனவிம் சுட்டலாமே.

நுபியன்கள் வில் அம்பில் மிகவும் தேர்ந்தவர்களாம். மல்யுத்திலும் திறமையானவர்களாம். நுபியர்கள் ஒருவேளை சேரர்களாக இருக்கலாமா? பாரோ - சேரோ - சேர. பரவோன் - சேரமான். சூரிய, நெருப்பு வணக்கமும் ஒத்துள்ளது. ராமசேஸ் பெயரிலும் பொருத்தமே. ராம பக்தியில் சிறந்தவர் சேரர்.

எகிப்தின் பதினெட்டாவது அரசுரிமையின் பேரரசன் துட்டன்காமுன் (Tutankhamu) என சுட்டப்படுகிறது. சிறு வயதிலேயே பாரோவான துட்டகாமுன் (ஆட்சிக் காலம் பொ.ஆ.முன் 1332 - 1323) பெயர் அமென் - துட் - அனக் என எழுதப்பட வேண்டுமாம். அமென் என்பது பெயருக்கு முன்னால் வரும் சிறப்புப் பெயராம். அமென், அமுன் என்பவை மதிப்பிற்குரிய, கடவுள் போன்ற எனும் பொருளில் ஆளப்பட்டிருக்கிறது. தமிழின் கோன் எனில் பொருத்தமல்லவா. கோன் - அரசன். சேரலர்கோன் - சேர அரசன்.

துட் பேரரசரின் பிரமிடைக் கண்டறிந்து புகழடைந்தவராக கோவர்டு கார்டர் (Howard Carter , 1874 - 1939) அறியப்படுகிறார். பிரிந்தானிய தொல்பொருளாளர் மற்றும் எகிப்தியவியலாளரான கார்ட்டர், ஜார்ஜ் ஹெர்பர்ட் என்பவரிடமிருந்து நிதிபெற்று துட் பேரரசரின் பிரமிட்டை 1922இல் கண்டறிந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. துட் பேரரசரின் அறையிலிருந்து 5398 பொருள்கள் எடுக்கப்பட்டனவாம். தங்கத்தால் செய்யப்பட்ட பெட்டி, துட்ட பேரரசருக்குரிய முகமூடி, அரியனை, அம்புகள், தாமரைக் கும்பா, உணவு, ஒயின், சந்தனம் போன்ற ஏராளமான பொருட்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. எடுத்த பொருள்களை தரப்படுத்தவே கார்ட்டருக்கு பத்து வருடங்கள் ஆனதாம். பேரரசர் துட்டன் காமனின்

அறையிலிருந்து எடுத்த விலைமதிப்பற்ற தொல்பொருட்கள் உலகெங்கும் காட்சிப்படுத்தப்பட்டு வருவதாக குறிப்புகள் சுட்டுகின்றன.

துட்டக்காமன் எனும் பெயர் சேர நாட்டோடு தொடர்புடையதாக இருக்கிறது. பெயர் வேறு ஒலிப்பிலும் வழங்கப்பெற்றிருக்கலாம். குட்டன், குட்டக்கோன், குடக்கோன், போன்ற பெயர்கள் சேர நாட்டுக்கு உரியவை. துட்டக்கோமன் தந்தை பெயர் அகநடன் (Akhenaten) எனக் சுறப்படுகிறது. அகநடன் என்பதை நாடன், நாட்டன் எனக் கொள்ளலாம். அரசி பெயர் அன்க்கீசேனமுன் (Ankhesenamun) அரசியார் பெயரை கொங்க சேரமான் சற்றே என மாற்றினால் முற்றிலும் சேர நாட்டுப் பெயராகி விடுகிறதல்லவா. கொங்கு சேரமானின் மகளாக இருக்கலாமோ? பாரோ மரபில் உடன்பிறந்தாளை மணம்புரிவது வழக்கம்.

எகிப்தியப் பேரரசனான துட்டன் கைமனுக்கும், இலங்கையின் துட்டகாமுனுவுக்கும் (Dutugamunu, Tuttakaamana - பொ.ஆ.முன். 161 - 137), என்ன உறவு? எதனால் பெயர்ப் பொருத்தம்? ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான இடைவெளி இருப்பதாக அறியப்படும் நிலையில் இப்பெயர் ஒற்றுமை சுட்டுவது யாது?

துட்டகாமுனி எல்லால சோழனை (Ellalan) வென்றதாகக் கூறப்படுவதற்கும், பாரசீகத்திலிருந்ததாக அறியப்படும் இல்லத்திற்கும் (illum) ஏதேனும் உறவிருக்கலாமோ? எல்லாளன் பெயரின் பொருள் யாது? எல்லையை ஆள்பவனோ? எல்லாலன் - எள் நிலத்தை, எள் விளையும் நிலத்தை ஆண்டவனோ?

எகிப்தில், சூடானில், சோமாலியாவில், எத்தியோப்பியாவில் தமிழ் மொழியும், தமிழ்ப் பண்பாடும் செல்வாக்காக இருந்ததா? சூடானில் நீலநைலும், வெள்ளைநைலும் சேருமிடம், ஒன்றாகக் கலக்குமிடம் கார்த்தோம் (Khartoum) என அழைக்கப்படுகிறது. இரு நதிகளும் இணையும் இந்த இடம் மொக்ரன் (Al Mogran) எனப்படுகிறது. இப்பெயர்கள் அரபு மொழிப் பெயர்கள். எனினும் இந்த அரபுப் பெயர்கள் அங்கு முன்னரே புழங்கிய சூடானிய பெயர்களோடு சற்றேனும் நெருக்கம் கொண்டிருக்கும் என்பது தெளிவு.

கர்த்தோம், கர்த்தௌம், காருத்தும் என்பதை கர் - கரு, அர் - அரு, ஆறு எனத் தருவிக்கலாம். தும் (Toom), தோம் என்பதை சேரும் எனச் சுட்டலாம். எனில்

ஆறு சேரும், ஆறு சேருமிடம் கருத்தோம். ஆறுகள் ஒன்றாகக் கலக்குமிடம் கருத்தோம். தமிழின் அழகிய சொல்லான ஆறு சேருமிடம், கா்த்தோம் எனத் திரிந்து, தற்போதும் அங்கே திரிந்த வடிவில் நிலைபெற்றுள்ளது எனச் சுட்டலாமோ. ஆம் எனில், எத்தனை அதிசயம். தமிழ் புழங்கும் தமிழ்நாடு தொலைதூரத்தில் இருக்கிறது. சூடானில் இரு நைல்ஆறுகளும் சேருமிடம் தற்போதும் தமிழ் ஒலிப்பையே கொண்டுள்ளது. எனில் ஆயிரம் ஆண்டுகளுக்குமுன்பு, அரபு மொழி செல்வாக்குப் பெறுவதற்குமுன்பு, அப்பகுதியில் புழங்கியது அமிழ்தினும் இனிய தமிழ்மொழியே என்பதற்கு வேறொரு சான்று வேண்டுமோ. மிக முக்கியத்துவம் நிறைந்த நைல் ஆறுகள் சேருமிடமே தமிழில் அழைக்கப்பட்டிருக்கிறதென்பது கூடுதல் மதிப்பல்லவா?

தமிழில் ஆறுகள் சேருமிடத்திற்கு கூடுதுறை எனப் பெயா். கூடு - கூடுதல், சேருதல். கூடல் - கூடுதல். மூன்று ஆறுகள் கூடினால் முக்கூடல். அதாவது மூன்று ஆறுகள் ஒன்றோடென்று இணையும் இடம். இரண்டு ஆறுகள் சோ்ந்தாலும் கூடல்தான். மதுரைக்கு கூடல் நகா் என்றும் பெயா்.

சோ்ந்தால் கூடல். விலகினால் ஊடல்.

துறை - ஆற்றுப்படுகை. கூடுதுறை ஆறுகளின் படுகை.

மொக்ரன் - மொக்ரம் - மொக்ரும் - கலக்கும். ஆறுகள் கலக்கும் இடம் அல்லது சேரும் இடம்.

சோமாலி மொழி தற்போதும் தமிழோடு நெருங்கியுள்ளதெனில், முன்பு இன்னும் கூடுதலான நெருக்கம் கொண்டிருக்கும் என்பது தெளிவு. மாலின் வணாக்சன் (Maalin Wanaagsan) எனில், சோமாலிய மொழியில் குட்மாா்னிங், அதாவது காலை வணக்கம். தமிழ் எத்தனை அழகாகத் திரிந்திருக்கிறது? சோமாலியில் மாலை வணக்கத்திற்கு கலாப் (Galab) வணக்சன். எப்படி இருக்கிறீா் என்பதற்கு சோமாலியில் இஸ்கா வாரன் (Iska Waran). இருக்க - வாருக்க, வார எனத் திரிவது இயல்பே. நல்லா இருக்கோம் என்பதற்கு நபாட் (Nabad). பொருத்தமல்லவா.

சோமாலி பாண்டுக்கள் வேளாண்மையில் சிறந்தவர்களாம். சோமாலியில் அப்பா - அப்போ (Abbow). அம்மா - கூயா (Hooyo). ஆயா கூயாவாக மருவிவிட்டதோ. வடக்கு என்பதற்கு வகூயி (Wagooyi). தெற்கு கூன் ∴புர் (koon fur). தமிழகத்திற்கும் சோமாலிக்கும் எப்போது மொழித்தொடர்பு அறுந்தது எனத் தெரியவில்லை. எனினும் மொழிச் சிதைவைக் கண்ணுறும்போது, ஆயிரம் ஆண்டுகளுக்குமுன்பு வரையிலும்கூட, சோமாலி பகுதியில் தமிழ் ஓரளவிற்கு செம்மை வடிவிலேயே புழங்கியிருக்கும் என்பது திண்ணம். அரபு தேசங்களுக்கு அருகிலிருக்கும் நாட்டில், அரேபியர்களின் மொழி, கலாச்சாரத் தாக்கம் அதிகமிருக்கும் சோமாலியா போன்ற நாட்டிலேயே இத்தனை தெள்ளத் தெளிவாக தமிழ் புழங்கிவருவது விந்தையானது. எனில், மத்திய மற்றும் தெற்கு ஆப்பிரிக்கப் பகுதிகளில் தமிழ் எத்தகைய வடிவத்தில் இருக்கும்?

வகுயி - வடக்கு தானே. குன்புர் தென்திசையோ. தென்புலமோ. தென்புலத்தவர் எனில் பாண்டியரன்றோ. தென்னாப்பிரிக்க மொழிகளில் தென்புலத்தார் எனும் சொல் புழங்கி வருகிறது. தமிழ்நிலத்தில் தென்புலத்தார் எனில், தென்னவன் எனில் அது பாண்டியனே. ஆப்பிரிக்கர்களுக்கு? ஒருவேளை ஆப்பிரிக்காவின் தென்பகுதி பாண்டியருடையதோ? அங்குதான் தமிழ் தோன்றியிருக்குமோ? தற்போதைய தமிழரே தென்புலத்தார் எனும் சொல்லையும் அவர் யார் எனும் அடையாளத்தையும் தொலைத்துவிட்ட நிலையில், உலகின் பார்வையில் மிகஎளிய மனிதர்களாக, நாகரிகத்தில் குறைந்தவர்களாகச் சுட்டப்படும் ஆப்பிரிக்க மக்கள், தென்புலத்தாரை தற்போதும் நினைவில் வைத்திருப்பது போற்றுதலுக்குரியதன்றோ. ஏதேனும் முன்னோர் சார்ந்த, பண்பாடு சார்ந்த, உயர்ந்த, பெருங்காரணமின்றி இம்மக்களிடையே அப்படியான சொல் வெகுகாலத்திற்குப் புழங்கிவராது என்பது திண்ணம்.

சோமாலியரின் உறவுமுறைப் பெயர்கள் தமிழகத்தோடு அடையாளம் காணக்கூடியதாக இருக்கின்றன. அஞ்ஞா (Aniga) எனும் சொல் அம்மா, பாட்டியைச் சுட்டுவதாக இருக்கிறது. ஆயோ (Ayo) - ஆயாவாக இருக்கலாம். அத்தீர் (Addeer) - அத்தையோ. இள்மா (ilma) - அத்தை, இள அத்தை. ஒருவேளை சித்தியோ. யானையை மாருதி (Maroodi) என்கிறார்கள். பெயரில் ஏதோ குழப்பம் நிகழ்ந்திருப்பது தெரிகிறது. அணிலை தபக்கலி (Dabaggaalee) என்கிறார்கள்.

தவளை எனும் பெயரைத்தான் அணிலைக் குறிக்கப் பயன்படுத்துகிறார்கள் எனத் தெரிகிறது. இது தாய் தமிழோடு உறவு குறைந்ததன் வெளிப்பாடு எனலாம். மான் - கிடா.

தக் (Dhag), தகோ (Dhngo) எனில் காது. காது தகோ என மாறிவிட்டது. லுகுர் (Lugur) கழுத்து. பரோ (Faro) விரல். பங்டோ (Thigh) தொடை.

எத்தியேப்பிய மொழியில் அவோ, ஆங் (Awo) எனில் ஆம் எனப் பொருளாம். இபக்கு (Ibakku) எனில் தயவுசெய்து. பலோக் (Balock) வார்த்தை. நெபர் (neber) இரவு. எப்படி (How) என்பதற்கு என்டிக் (endict).

இன்றைய நாள் எப்படி இருக்கிறது - How is your day? கெனு என்டிக்ட் நியு - Kenu endict new? கெனு - நாள், new - இருந்தது (is). சொல்லின் அமைப்பு இலக்கணப்படி அப்படியே தமிழோடு ஒத்துத்துள்ளது.

தமிழின் எழுத்துமுறையோடு எத்தியோப்பிய எழுத்துமுறை நெருங்கியுள்ளது. எத்தியோப்பிய மொழியிலும் தமிழ் போன்றே முன்னர் தெளிவான குறில், நெடில் புழங்கியிருக்க வேண்டும். எனினும் காலமாற்றத்தால் அது மறைந்துவிட்டிருக்கலாம். காணொளிக் காட்சிகள் மூலமாக அம்காரிக் மொழியைக் கேட்கும்போது, ஒரே எழுத்து வடிவத்தை இரு இடங்களில் அதே ஒலியமைப்பில் பயன்படுத்துவது தெரிகிறது. எனில் ஒன்று நெடிலாக இருந்திருக்க வேண்டும். தமிழ் போலவே அம்காரியத்திலும் பால் வேறுபாடு சுட்டப்படுகிறது. எனினும் தமிழ்போல் அல்லாமல் அனைத்திலும் இந்த பால் வேறுபாடு சுட்டப்படுவது குறிப்பிடத்தக்கது.

எத்தியோப்பிய அம்காரியம் 231 எழுத்துக்களைக் கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. செமித்திய மொழியென்பதால் இடமிருந்து வலமாக எழுதப்படுகிறது. உயிரெழுத்துக்கள் எ, உ, ஐ, அ, எ, இ, ஒ. இவற்றோடு பிற ஒலிகள் சேர்ந்து பல்வேறு விதங்களில் மாறுகின்றன. எடுத்துக் காட்டாக,

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | எ | உ | ஐ | அ | எ | இ | ஒ |
| க | - | க, | கு, | கி, | கா, | கே, | கு, | கோ |
| h | - | ha | hu | hi | ha | he | h | ho |

ல - ல லு லி லா லே ல லோ

l - la lu li la le l lo

(இரண்டு எ- எழுத்தில், இரண்டாவதாக வருவது நெடிலாக ஆளப்படுவது ஒப்பு நோக்கத்தக்கது).

இவ்வாறே ம, ச, ர, ப, ட, ந, வ என பல்வேறு எழுத்துக்களும் உயிரோடு இணைந்து பல்வேறு ஒலிப்புகளைத் தருவிக்கின்றன. தற்போதைய சுவாகிலி மொழி, அரபு, ஆங்கிலம், போர்ச்சுக்கல், மற்றும் பாண்டு மொழிகளின் கலவையாக இருப்பதாகச் சுட்டப்படுவதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. எனில், பண்டைய சுவாகிலி பாண்டுபோல் இருந்திருக்கலாம்.

எத்தியோப்பியக் கலாச்சாரம் காலத்தால் மிகவும் பழமையானது எனவும், பல்வேறு சிறப்புக்களைப் பெற்றதாகவும் ஏராளமான பதிவுகள் கிடைக்கின்றன. முக்கியமாக மேற்குலகின் அறிஞர்கள் குறிப்பாக, மானுடவியல், தொல்பொருள் அறிஞர்கள் எத்தியோப்பியப் பண்பாட்டை சிறப்பாக வெளிக்கொணர்ந்துள்ளனர். மானுடப் பண்பாட்டிற்கு எத்தியோப்பிய நிலமும் அரிய பங்காற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது.

சுவாகிலி மொழியில் முங்கு (mungu) எனில் கடவுள். பாண்டு மொழியில் முலுங்கு எனில் கடவுள். பாண்டுவின் முலுங்கு எனும் சொல்லே எத்தியோப்பிய மொழியில் முங்கு எனத் திரிந்துள்ளது. முங்கு பெயர் முலுங்கு (Mulungu), முருங்கு (Murungu), மிலுங்கு (Mlungu), சுமா (Zuma) போன்ற பெயர்களிலும் குறிப்பிடப்படுகிறது. எனில் முருகன் எனும் அழகான தமிழ்க் கடவுள் பெயரே ஆப்பிரிக்கச் சமயத்தில் முலுங்கு, முலுகு எனப் பல்வேறு விதங்களில் மருவியிருப்பது கண்கூடு. தமிழ் நிலத்தில் முருகன் வழிபாடு சங்ககாலம் முதலே சிறப்புற்று வழங்கிவருகிறதென்பதே தமிழகம் மற்றும் ஆப்பிரிக்கா உடனான பண்பாட்டு நெருக்கத்திற்கு போதிய சான்றாகும்.

பண்டு தமிழ்நிலத்தில் அணங்கு (சூலி) பிடித்த பெண்களை பாதுகாக்கும் தெய்வமாக முருகன் அறியப்பட்டிருக்கிறான். அவ்வாறே ஆப்பிரிக்க நிலத்திலும்

முருங்கு, கெட்ட ஆவி பிடித்தவர்களைக் காப்பவராக வழிபடப்பட்டு வருவது அறியத்தக்கது.

முருங்கு, நைசர் - காங்கோ பண்பாட்டில் படைக்கும் கடவுளாக நிலைபெற்றுள்ளார் என்பதை, தமிழ் நிலத்திலும் முருகன் படைப்பவனாகக் கருதப்பட்டு வருவதோடு ஒப்பிடலாம். தற்காலத்திலும்கூட ஆப்பிரிக்க, இசுலாமிய, கிறித்தவ சமயங்களில் கடவுள் என்பதைக் குறிக்க முலுங்கு எனும் சொல்லைப் பயன்படுத்துவதாகச் சுட்டப்படுகிறது. இயேசு நாதர் Muana Wa Mulungu - Child of Mulungu என அழைக்கப்படுகிறாராம். அதாவது கடவுள் மகன். மகன் - மவன, மவனா - முவனா (Mwana). தமிழல்லவா. மற்றுமொரு ஒப்புகையாக, தமிழகத்தில் போன்றே ஆப்பிரிக்க நிலத்திலும் முருங்கு கடவுளின் வழிபாட்டிடங்கள் மலைகளின் மீதே அமைக்கப்பட்டுள்ளனவாம்.

கென்யாவில் முலுங்கு புகழ் பெற்ற விளங்குவதாகத் தெரிகிறது, ஆப்பிரிக்கப் புராணங்களின் அகராதியின்படி - A Dictionary of African Muthology, முருங்கு மிகப் பெரிய கடவுள் (Murungu -Ngai, Mwene inya, is the supreme being, the almighty, all - seer, all - giver, master of life and death, creatures of all things and of man). முருங்கோடு தொடர்புபடுத்தி ஆப்பிரிக்க நாடுகளில் படைப்புக் கொள்கை இருப்பது வியப்பு (Murungu and the fruit of the Forbidden Tree). தமிழ் நிலத்தில் முருகனோடு தொடர்புபடுத்திச் சொல்லப்பட்டுள்ள ஞானப் பழக்கதை பொருள் நிறைந்ததோ? Fruit of knowledge - Murugu? the father of god, God of colorful peacock. மத்திய கிழக்கின் இச்டி நம்பிக்கை பொருள் நிறைந்ததோ?

ஆப்பிரிக்க நம்பிக்கையின்படி, காடுகளை அழித்த, காடுகளுக்கு நெருப்பு வைத்த மனிதர்கள்மேல் கோபம் கொண்டும், தீய குணங்கள் கொண்ட மனிதர்கள்மீது கோபம் கொண்டும், மனிதர்களுக்கு எட்டாத வானத்திற்கு முருங்கு சென்று விட்டாராம். முருங்கை தொடர்பு கொள்வதற்கு ஆவிகள் துணை வேண்டுமாம். தமிழ் நிலத்திலோ பழத்திற்கு கோபித்துக்கொண்டு மலைமேல் நிற்பதாகக் கதை புனையப்பட்டுள்ளது ஒப்புநோக்கத்தக்கது.

ஆப்பிரிக்கப் பெருநிலத்தின் தொல்கதைகளும், அவர்களது தெய்வங்களும், நம்பிக்கைகளும், சடங்குமுறைகளும், வீர, தீர, சூரத்தனங்களும், அன்பும்,

பொறுமையும், கோபமும், காமமும் இன்னும் உலகத்தவருக்குத் தெரியவில்லை. தெரியும்போது உலகின் அத்தனை புதிர்களும் விடுவிக்கப்படலாம்.

அவ்வாறே இந்தியாவும், திராவிடர் எனக் குறிப்பிடப்படும் தென்மாநிலத்தாரின் அருமையும், பெருமையும், இந்தியர்களாலேயே அறிய முடியவில்லை எனும்போது அயல் நாட்டார் எங்ஙனம் அறிவது? உண்மையில் ஓரளவு மொழியறிவு கொண்டோர்கூட அறிந்துகொள்ளக் கூடியது தமிழே இந்நிலத்தின் தொல் மொழி, பெருமொழி. என்னில், அதுவல்லவோ இந்திய நாட்டின் ஆட்சி மொழியாக அறியப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு அறியப்பட்டிருந்தால் உலகின் பெருங்கவனம் தமிழ்மீது குவிந்திருக்கும், தமிழ் பல வரலாற்றுப் புதிர்களையும் அவிழ்த்திருக்கும். உருது, பார்சி, இந்துஸ்தானி, சமற்கிருதம் போன்ற பல மொழிகளின் கலவையான இந்தி மொழியை, இந்திய நாட்டின் ஆட்சிமொழியாக்கியது அரசியல். அதற்கு அன்று தமிழர் தவிர்த்து அனைவரும் ஒப்பியிருக்கிறார்கள். இந்தியா மட்டுமின்றி உலகம் முழுக்கவும் இந்தியைப் பரப்ப நடுவன் அரசுகள் பெருமுயற்சி எடுத்து வருகின்றன. உண்மையில் இந்தியத் திருநாட்டின் அரச மொழியாவதற்கு தமிழரசிக்கு மட்டுமே தனியுரிமை உள்ளது. ஏனெனில் இது தமிழ் கோலோச்சிய நிலம்.

இந்தியா மட்டுமின்றி, உலகின் பொதுமொழி ஆவதற்கும் தமிழுக்கே அதிக முன்னுரிமையும், தகுதியும் உள்ளது, உலகின் கிழக்கையும் மேற்கையும் இணைத்தது தமிழே.

ஆப்பிரிக்காவுக்குள் ஒரு குட்டி ஆப்பிரிக்கா என அழைக்கப்படத்தக்க நிலவியல் அமைப்புகள் கொண்ட கேமருன் நாட்டின் பெயருக்குப் பொருத்தமான வரலாறு அறியப்பட முடியவில்லையாம். மேற்கின் அறிஞர்கள் தொல் மொழிகளை, பழம்பெயர்களை அறிய, விடுவிக்க, மேற்கின் கண்ணாடி வழியவே பார்க்கிறார்கள். எகிப்திய எழுத்துக்களைப் படித்ததில் சற்றே பிழை இருக்கக் கூடும் என்பதன் காரணமும் அதுவே. அவர்கள் நிச்சயமாக பேரறிஞர்கள்தான். பெரும் உழைப்பு, தியாகம், அறிவுகொண்டே சுமேரியா, எகிப்திய எழுத்துக்களைப் படித்திருக்கிறார்கள். அனைத்து அறிஞர்களும் பெருமதிப்பிற்குரியவர்கள், போற்றுதலுக்குரியவர்கள் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. எனினும் அவர்கள் அணிந்திருந்த கண்ணாடியில் சற்றே குறை இருந்திருக்கலாம். அவர்கள் அணிந்த கண்ணாடி சமற்கிருதம், எபிரேயம், அரபியம், பெர்சியம், கிரேக்கம், உரோமம்

எனில் மிகையாகாது. தமிழ்க் கண்ணாடி என ஒன்று இருப்பதை அறிந்திருந்தார்களா? தமிழ்க் கண்கொண்டு பார்த்தார்களா? தமிழக வழி நின்று சொற்களைப் படித்தார்களா? வார்த்தைகளை விடுவித்தார்களா? பார்த்திருந்தால் சுமேரிய எழுத்துக்கள் எப்போதோ விடுவிக்கப்பட்டிருக்கும். என்றோ படிக்கப்பட்டிருக்கும். உலகின் மொழி வரலாறு மாறியிருக்கும். அத்தோடு உலகின் வரலாறும் மாற்றி எழுதப்பட்டிருக்கும். தமிழ்க்கண் கொண்டு பார்க்காதது அறிஞர்கள் பிழையுமன்று. தமிழ் ஒரு மாநில மொழியாக அறியப்பட்டதால், இருந்ததால், அதன் பெருமை, உயர்வு தெரியாமல் போயிற்று.

சுமேரியரோடு நெருங்கியவர் யார்? யாராக இருந்திருக்க முடியும்? ஆரியரா அல்லது திராவிடரா? இரண்டு கருத்தாக்கங்களுமே தவறானவை. வெகு அருகாமை வரலாறு கொண்டவை. கால்டுவெல் பாதிரியாருக்குமுன் இங்குள்ளோர் திராவிடர் எனும் பதத்தை அத்தனை ஙட்பமாகப் பயன்படுத்தவில்லை எனத் தெரிகிறது. திராவிட பாசை என்பதே தெற்கு, தெக்கணப் பாசை என்பதன் சிதைவே. த்ரைமிடம் - த்ரா - திரி - மூன்று - மூன்று கடல்கள் கொண்ட இடம் எனும் பொருளில் வடநாட்டவரால் அன்றைய தமிழ்நிலம் சுட்டப்பட்டிருக்கலாம். திராவிடர் என்பதிலேயே ரா - எனும் ஒலிக்குறிப்பு கவனத்தில் கொள்ள வேண்டியது. ஆரியர் பிராமணர் எனில் அவர்கள் ர, ற ஒலிகளை, பெரும்பாலும் ன - என்றுதான் ஒலிக்கிறார்கள். நன்று - நன்னு, ஒன்று - ஒன்னு. தெலுங்கிலும் அப்படித்தானோ? எனில், பண்டைத் தமிழர் தங்களை மூன்று கடல்காரர் எனும் பெருமையில் திரைவிடர் எனச் சுட்டியிருக்கக்கூடும். திரை எனில் தமிழில் கடல் எனும் பொருளுள்ளதும் கவனிக்கத் தக்கது.

ஆரியர் எனும் சொல்லை, கருத்தாக்கத்தை விதைத்தவர்கள் அய்ரோப்பியர்தான். குறிப்பாக மாக்சு முல்லரின் சமற்கிருத புகழ்ச்சி எழுத்துக்கள், உரைகள், மேற்குலகில் இந்திய மொழி என்றாலே சமற்கிருதம் எனும் நிலைக்கு வழிகோலிவிட்டது. சமற்கிருதத்திற்கும், தமிழுக்கும் உள்ள உறவு அறியப்பட்டதா எனில் இல்லவே இல்லை. சமற்கிருதம் தேவபாஷை எனும் நிலைக்கு உயர்த்தப்பட்டு, மக்களின் மனதில் ஆழ ஊன்றப்பட்டது. அரசர்களும் அக்கருத்தாக்கத்திற்கு உடன்பட்டதால் அனைத்தும் சட்டென மாறிவிட்டது. இந்தியப் பெருநிலத்திலும், பெர்சி, சுமேரியா நிலங்களிலும் நிலவிய கதைகளை அறிந்திருந்த பிராமணர்கள், மளமளவென அத்தனையையும் எழுத்தில்

கொண்டுவந்துவிட்டார்கள். இத்தனைக்கும் சமற்கிருதம் ஒரு எழுதாக் கிளவியாகக் குறிப்பிடப்படுவது வியப்பானது.

ஆர்ய எனும் சொல்லுக்கு பதிது, புதிய, புதியவா் எனும் பொருள் மேற்கு மொழிகளில் புழங்குவது கவனிக்கத் தக்கது. ஆர்ய எனில் நியோ - neo - new புதிய. இந்திய நிலத்திற்குப் புதியவா் எனும் பொருளில் அச்சொல் சுட்டப்பட்டிருக்கலாம். அன்று அவர்களது தோல்நிறம் அதற்குக் காரணமாக இருந்திருக்கக் கூடும். அதுவே அவா்களைப் பார்த்தவுடனேயே தெரிந்துகொள்ளும் விதத்தில் அமைந்திருக்கும். குடுமி போட்டுக்கொண்டதெல்லாம் பிறகாலத்தியதாக இருக்கவேண்டும். ஏனெனில், நீலகிரி மலையின் தொல்குடிகளில் குடுமி வைத்துக்கொள்ளும் பழக்கம் இருப்பது ஒப்பு நோக்கத் தக்கது.

கெமரூன், கமரூன், காமரூன் என்பதை எப்படிப் பொருள் கொள்வது? ஆப்பிரிக்காவில் ன் - விகுதியில் சில நாடுகளே இடம் பெற்றுள்ளன. கேமரூன், கபோன், பெனின், சூடான். மேலும் இந்நாடுகள் அருகருகே அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அழகிய தமிழ்ப் பெயரான காமனூா் என்பதே கேமரூன் என மருவியதாகச் சுட்டலாமோ. தமிழகத்தில் மோகனூா் உள்ளது. மோகமான ஊா். சோமனூரும் உண்டு. எனில் காமனூர்? பண்டு காமத்திற்குப் பெயர் பெற்றிருந்ததோ? காமன் வில்லைக் கொண்ட இந்திர மரபு அங்கு இருந்திருக்குமோ? ஆம். இந்திர மரபு அங்கே இருந்திருக்கிறது. யொருபா புராணவியலில் சாங்கோ (Shango), சங்கு (Shanku), இடி, மின்னல் மற்றும் போர்க்கடவுளாக அறியப்படுகிறார். கமெரூன் சனன்கா (Shannanga) குடியினா் சங்கா எனும் பெயரைக் குலப் பெயராகச் சூட்டும் வழக்கம் கொண்டவராகக் கூறப்படுகின்றனர். சங்கோ (Sango) எனில் பேரரசனாம் (Powerful King). அவரது மனைவி ஒய (Oya). யொருபா மொழியில் அர (Ara) எனில் இடி. திதிலோமா (Titiloma) எனில் எப்போதும் குழந்தை எனப் பொருளாம். ஒருவேளை திலோத்தமையாக இருக்குமோ? எப்போதும் இளமையானவா், அழகானவர். இந்திரன் இருந்தாரெனில் திலோத்தமையும் இருப்பாரல்லவா?

ஆப்பிரிக்காவில் Anunaki - அதாவது உயர்ந்தவர்கள் (People from high). சுமேரிய மொழியில் அன்னனாகி (Annanaki) எனில் ஏழு பெண்கள், ஏழு

கன்னிமார்கள். என்கி (Enki) - oloke, onioki, enioki - ruler of above. என்லில் - enile, onile, - ruler of earth. அனனோகி - இனனோகி, என்லில் - ஒன்லில் போன்று சொற்கள் மாற்றம் பெறுவது தமிழில் வெகு இயல்பு. உதாரணமாக சுமேரி, குமேரி, கமேரி, லுமேரி. இப்பெயர்களுக்குள் பொதுவான ஒற்றுமை உள்ளது. இவற்றை இடப் பெயர்கள் மட்டுமல்லாது பெண்பால் பெயர்களாகவும் சுட்டலாம்.

கமேரி - காமேரி, காமூரி, காமரூரி - காமரூன். ரூரி - ஊர் எனக் கொள்ளலாமோ? காமரூன் கடற்கரை கொண்டுள்ளது. குமரி, சுமரிகளும் கடற்கரை கொண்டுள்ளன.

காமரூன் பகுதியில் முன்பு இடிக் கடவுளான இந்திரன் செல்வாக்கோடு இருந்திருக்கலாம். காமரூன் பகுதியில் பயிர்த்தொழிலும் சிறப்பாகப் பேணப்படுவதும் கவனிக்கத்தக்கது. தமிழர்களுக்கு சங்கம் எனும் சொல்லுக்கு இலக்கியச் சான்று இல்லாமல் இருப்பது குறையாகச் சுட்டப்படுகிறது. மேற்கு ஆப்பிரிக்காவில் இந்திரனை சங்க, சங்கன் என்பதால் அது சார்ந்தும் இனி ஆராய்ந்து பார்க்கலாமன்றோ. அப்பகுதியில் மிகப்பெரிய ஆறு காங்கோ (Kongo) எனில் அதை கங்கை எனக் கொள்வதும் பொருத்தமே. ஊர் அடையாளங்களை, முன்னைப் பண்பாடுகளைச் சுட்டும்போது, கண்டறியும்போது, தமது எனச் சொந்தம் கொண்டாடும்போது, ஒன்றை மட்டும் வைத்துக் கொண்டு, ஒற்றைப் பெயரை மட்டும் வைத்துக் கொண்டு, எத்தகைய முடிவுக்கும் வரக் கூடாது, அது பிழையாகிவிடும். ஆப்பிரிக்காவின் பெரிய ஆறான காங்கோ பெயரின் உண்மையான பெயராக்கம் என்ன? பல்வேறு கூறுகளோடு ஆராய வேண்டும். அது சங்கோ கடவுளின் பெயரால் சங்க, சங்கே ஆறு எனச் சுட்டப்பட்டு, அச்சொல் அருகிலிருக்கும் நாட்டில், மொழியில் சாங்கோ எனத் திரிந்திருக்கவும் வாய்ப்புண்டல்லவா.

காமரூன் நாட்டில் தமிழ் பேசப்படுவதாக இணையத்தில் நிறையப் பதிவுகள் உள்ளன. கேட்கும்போது அவை பழந்தமிழ்ச் சொற்கள் போல்தான் தெரிகின்றன. பின்னூட்டங்கள் மூலமும் அவை உறுதி செய்யப்பட்டிருக்கின்றன. கேமரூன் என்றில்லாமல் நைசீரியா, பெனின், கானா, கபோன் போன்ற மேற்கு நாடுகளிலும் தமிழ் புழங்கி வருவதாகச் சுட்டப்படுகிறது. இந்நாடுகளில் பயிர்த்தொழில் சிறந்திருப்பதும், நெல்வேளாண்மை பரவியிருப்பதும், பள்ளா மொழியும், பள்ள மக்களும், அவர்களது பண்பாடும், சமயமும், வாழ்க்கைமுறையும் தமிழரோடு

நெருக்கமான உறவைக் காட்டுவது கண்கூடு. எனினும் அந்நிலத்திற்குச் சென்று, அம்மக்களோடு தங்கி, அவர்களோடு நெருங்கிப் பழகுவதன் மூலமே இதை உறுதி செய்ய இயலும். எனினும் காணொளிக் காட்சிகளின் வழியாக, மேற்கு ஆப்பிக்காவில் தமிழ்க் கூறுகள் அதிகம் தென்படுகின்றன என்பதை உறுதியாகவே கூறலாம்.

கானா நாட்டில் அரிசி உணவு மிகமுக்கியமான இடத்தை வகிக்கிறது. (Second most important food after maize). கானா நாட்டின் வடக்குப் பகுதியின் தோலோன் மாவட்ட நியங்பலாவின் (Nyankpala in Tolon), அவன்ஸ் அரச வேளாண்மைக்காரர் அரிசி (Avansh's Royal farmers rice) கானா மக்களால் மிகவும் விரும்பப்படுவதாகவும், அதன் விளைச்சலைப் பெருக்க, கானா அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருவதாகவும் குறிப்புகள் சுட்டுகின்றன.

உணவுக்கும் தொழிலுக்கும் அரிசி - Rice for food and job எனும் தொலைநோக்குத் திட்டத்திற்கு ஏற்ப செயல்பட்டு வரும் கானா அரசு, நாடு முழுவதும் 122 மாவடங்களில் 2,33,000 ஏக்கர் நிலத்தில் நெல் வேளாண்மையைம முன்னெடுத்து, சுமார் ஆறு இலக்கம் டன் அரிசியை உற்பத்தி செய்ய இலக்குக் கொண்டுள்ளதாக கானா உணவு மற்றும் வேளாண் அமைச்சகம் அறிவித்துள்ளது.

ஆப்பிரிக்க நாடுகளில் நெல்விளைச்சல் பெரிய அளவில் முன்னெடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தகது. கிட்டதட்ட 40 நாடுகளில் நெல் விளைச்சல் நடைபெற்ற போதிலும் சில நாடுகளில் மட்டுமே நெல்விளைச்சலில் தன்னிறைவு பெற்றுள்ளவையாகவும், பிற நாடுகள் அரிசியை இறக்குமதி செய்வதாகவும் பதிவுகள் சுட்டுகின்றன. கிழக்கு மற்றும் தெற்கு ஆப்பிரிக்க நாடுகள் நெல்சாகுபடியில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளனவாம். எகிப்து நெல் விளைச்சலுக்குப் பெயர் பெற்ற நாடாக இருப்பது குறிப்பிடத்தக்கது. நீர் வளம் இருந்தும் எத்தியோப்பிய நாடு நெல்சாகுபடியில் மிகவும் பின்தங்கியிருப்பதாகவும், அண்மைக்காலமாக தீவிரமான நெல் சாகுபடிக்கு முயற்சிகள் நடந்து வருவதாகவும் குறிப்புகள் சுட்டுகின்றன. மடகாசுகர் நெல் விளைச்சலில் கிட்டதட்ட தன்னிறைவு அடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது. அதற்குக் காரணம் அங்கு குடியேறியுள்ள கிழக்காசிய இந்தோனெசியர் என்பது அறியத்தக்கது.

ஆப்பிரிக்க நாடுகளில் கடந்த கால்நூற்றாண்டு காலமாகவே நெல்லுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. அரிசி உணவுத் தயாரிப்பது எளிதாக இருப்பதும் ஒரு காரணமாம். முன்னர் முக்கியமான நாட்களில் மட்டுமே அரிசி உணவு சமைப்பார்களாம். ஆப்பிரிக்காவோடு எத்தனையோ விதங்களில் ஒத்துப்போகும் தமிழ்நாடு, இதிலும் ஒத்துப் போவது வியப்பல்ல. முன்பு (70, 80 களில்) தமிழ்நாட்டிலும் குறிப்பாக தென் தமிழ்நாட்டில் முக்கிய நாட்கள், திருவிழாக்களின்போது மட்டுமே அரிசிச் சாப்பாடு பொங்குவார்கள். பிற நாட்களில் பெரும்பாலும் கம்பும், கேப்பையும்தான்.

மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் குறைந்தது மூவாயிரம் வருடங்களாகவே நெல் உற்பத்தி நடைபெறுகிறதாம். ஆசிய அரிசியான ஒரைசா சடைவா (Oryza sativa) வகையிலிருந்து, ஆப்பிரிக்க ஒரைசா கிளாபெர்ரிமா (oryza glaberrima) வேறுபட்டதாகக் கூறப்படுகிறது. ஆப்பிரிக்க நெல் நன்செய், புன்செய் என இரு நிலத்திலும் பயிரிடத் தக்கதாம்.

மத்திய மற்றும் அண்மைக் கிழக்காசிய நாடுகளில் அதாவது மெசபதோமியா மற்றும் பெர்சியாவில், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னரே நெல் பயிரிடப்பட்டதாகக் குறிப்புகள் உள்ளன. ஆசிய நெல், மெசபதோமியா, எகிப்து வழியாக ஆப்பிரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. எனினும் அரிசியைச் சுட்டும் ஆப்பிரிக்கப் பெயர்கள் இந்தியாவோடு (தமிழகம்) தொடர்புடையதாக இருப்பதால், இந்தியாவிலிருந்து நேரடியாகவே எகிப்திற்கு இந்திய நெல்வகை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது. அரிசியைக் குறிக்கும் ஆப்பிரிக்க அரோஜ் (Arroz) எனும் சொல் தமிழின் அரிசியோடு நெருக்கம் காட்டுகிறதல்லவா? ஆப்பிரிக்க நிலத்தில் அரிசி வேளாண்மையைப் பரப்பியதில் போர்த்துகீசியத்திற்கும் பெரும்பங்கிருப்பதாகக் கூறப்படுகிறது.

உலகில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் நெல் பயிரிடப்பட்டாலும், தெற்கு, தென்கிழக்கு மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளிலேயே பெருமளவிலான நெல் விளைவிக்கப்படுகிறது. பெரும்பாலான பிற நாடுகள் குறிப்பாக ஆப்பிரிக்க நாடுகள் இறக்குமதியையே நம்பியுள்ளன. சமீபமாக, நைசீரியா, பெனின், கானா உள்ளிட்ட மேற்கு ஆசிய நாடுகளில், பெண்கள் நெல்சாகுபடியை முன்னெடுத்து வருவது

பெருமைக்குரியது. நீர்வளமும், நிலவளவும் கொண்டுள்ள ஆப்பிரிக்க நாடுகள் நெல்விளைச்சலில் தன்னிறைவு அடையும் காலம் வெகு தூரத்திலில்லை.

கிழக்கு ஆப்பிரிக்கா தமிழ் மொழியோடு நெருங்கியுள்ளதெனில், மேற்கு ஆப்பிரிக்க தமிழரோடு நெருக்கம் காட்டுகிறது. எனில் தெற்கு? தென்னாப்பிரிக்கா? அது பாண்டியர் நிலமாக இருந்திருப்பது உறுதி.

தமிழ் (Tamil, Tamizh) எனும் பெயரே இலக்கியத்தில் இல்லையே என்கிறார்கள். தமிழ் உலகெல்லாம் பரவியிருந்தது எனில் உலகின் பிற இலங்கியங்களில் தமிழ் எனும் பெயர் இடம் பெறவில்லை என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. முன்னர் அதாவது தொல்காலத்தில் தமிழ் பாண்டி மொழி, பாண்டி நாட்டு மொழி எனும் பெயரிலேயே அறியப்பட்டிருந்திருக்குமோ? பண்டு - பழமை, பழுமையான எனும் பொருளில், பண்டு, பாண்டு மொழி என முன்னர் குறிப்பிடப்பட்டிருக்குமோ?

போஸ்ட்வான நாட்டின் நாணயம் புலா (Pula) என அழைக்கப்படுகிறது. புலா எனில் உலா, முவுலா (Mvula). அதாவது தென்னாப்பிரிக்காவில் மழை எனப் பொருளாம். முபுலா (Mfula) எனில் ஆறாம். தென்னாப்பிரிக்க சுலு மக்கள் (Zulus) புலாடி, புலதா, புயாண்டா (Fulade or Fulatha or Fuyanda) என அழைக்கப்படுகிறார்களாம். மேலும், தெம்புலதே (Thembu Lathe), பசா (Paja), பலா (Pala), தொங்கா (Donga), டொன்கா (Tonga), துங்வா (Tungwa), படா (Batau), பாண்டா (Banndau) எனப் பலவாறான பெயர்களில் அழைக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. (நன்றி - Ntuthuko Zwane)

தெம்பு லதா எனும் சொல் மிகுந்த முக்கியத்துவம் நிறைந்தது. பாண்டியர்களை தென்புலத்தார் எனச் சுட்டுவதே வழமை. எனில் தென்னாப்பிரிக்காவில் தெம்பு லதா எனும் சொல்லில் மக்கள் சுட்டப்படுகிறார்கள் எனில், கூடவே பாண்டு, பாண்டவ போன்ற பெயர்களும் வழங்கப் பெறுகின்றன எனில், கூடுதலாக அவர்கள் பேசும் மொழி பாண்டு எனும் பெயரிலேயே அழைக்கப்படுகிறதெனில், மழையை முவலா எனும் சொல்லால் அறிந்திருக்கிறார்களெனில், பல, புல, புலானி எனும் பெயர்களில் குறிப்பிடப்படும் மக்கள் தொன்மையான பள்ள மக்கள் எனில், பாண்டியர்கள் பள்ளர்கள் எனும்

முறைமை உண்டு எனில், பள்ள எனும் சொல்லுக்கு பேச்சு, மொழி என்றும் பெயருண்டு எனில், ஆப்பிரிக்காவிற்கும் தமிழகத்திற்கும் தொன்மைக்காலம் முதலே உறவிருப்பது உறுதியாகிறதல்லவா? உலகத்தவரால் மறுக்க முடியுமா? ஆப்பிரிக்க மக்களின் வாழ்வியலோடு தமிழ், தமிழர் பிணைந்துள்ளனர் எனில் தமிழர் யார்? ஆப்பிரிக்கர் யார்? மனிதர் யார்? மாந்தர் யார்?

தெம்பு லதா என்பது தென்புலத்தார்தானா? ஆங்கில மொழியாக்கம் மூலமாக அறிவதில் பிழை நேரக் கூடும். ஒரு குறிப்பிட்ட மொழியில் ஒலிகளை, சொற்களை அப்படியே ஆங்கிலத்தில் (எந்த மொழியிலும்) சுட்டிவிட முடியாது. ஒரு மொழியின் எல்லா ஒலிப்புகளையும் பிறதொரு மொழி பெற்றிருக்காது. எனினும் ஓரளவிற்கு யூகித்துக் கொள்ளலாம் என்பதே சரியாக இருக்கும்.

தென்னாப்பிரிக்க மக்களில் தெம்பு (Thembu) என ஒரு பிரிவினர் இருக்கின்றனர். லதா (Latha) எனும் பெயரிலும் இருப்பதாகப் பதிவுகள் சுட்டுகின்றன. Thembu xhosa என்பதை அதாவது xhosa மொழி பேசும் Thembu மக்களை தென்புலத்தார் எனப் பதிவிட்டுள்ளார்களோ? எனினும் உச்சரிப்பில் அது தென்புலத்தார் எனும் பொருளைக் கொடுப்பதுபோல் உள்ளது ஆராயத் தக்கது.

ஆப்பிரிக்க புலானி மக்கள் பற்றி ஏராளமான பதிவுகள், வரலாறுகள், பாராட்டுக்கள், வெறுப்புகள், பாட்டுகள் இணையத்தில் பதியப்பட்டுள்ளன. கிழக்கு ஆப்பிரிக்காவிலிருந்து மேய்ச்சலுக்காக மேற்குஆப்பிரிக்காவிற்கு இடம் பெயர்ந்தவரென்றும், தெற்கு ஆப்பிரிக்காவிலிருந்து மேற்குக்கு குடிபோனவராகவும் பல்வேறு பதிவுகள் குறிப்பிடுகின்றன. எனினும் பெரும்பாலான பதிவுகள் புலானிகள் சற்றே தனித்துவமான பண்பு கொண்டோராகவும் சுட்டுகின்றன. பளா, புலா, புல்லோ (Pullo) மக்களின், புலார் (Pulaar) மொழியின் எழுத்துக்கள்,

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ட | ல | ம | - | A | Da | La | Ma |
| ப | ச | ப | பக் | - | Ba | Sa | Pa | Ba |
| ர | எ | ப் | இ | - | Ra | E | Fa | I |
| ஓ | த | ய | வ | - | O | Ta | Ya | Wa |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ந | க | ய | ஊ | - | Na | Ka | Ya | U |
| ஜா | ச | ஹ | ஹா | - | Ja | Ca | Ha | Qa |
| க | ஞ | த | ன | - | Ga | Na | Ta | Na |

புலானி மொழி நைசர் - காங்கோ குடும்பத்தில் இடம்பெற்ற போதிலும், அது அக்குடும்பத்தின் பெரும்பாலான மொழிகளைப்போல் ஒலிப்பு (Tonal) மொழி அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. புலா மொழி செகைல், காம்பியா, மாருதானிய நாடுகளின் செனகல் ஆற்றை ஒட்டியிருக்கும் சேரர், சீரர் (Serer, Seerer) மொழியோடு உறவுடையதாகக் கருதப்படுகிறது. சேரர் மொழி, சேரர் மக்களின் மொழி. சேரர் எனும் சொல்லுக்கான பொருள் தற்போது வரை தெளிவாக அறியப்படவில்லையாம். இவர்கள் கெகுமே (Keguеme) எனவும் அழைக்கப்படுகிறார்களாம். ஒருவேளை கொங்கு கெகுமே எனத் திரிந்திருக்குமோ? சேர எனும் மொழிப் பெயரும் ஒத்துள்ளதே.

வடக்கு ஆப்பிரிக்க நிலத்தில் அல்சீரியா, வடக்கு மாலி, மருத்தானியா, மொரக்கோ, வடக்கு நைசர் ஆகியவற்றை மையமாகக் கொண்ட மக்களின் ஒரு தொகையினர் பெர்பெர்கள் (Berbers) என குறிப்பிடப்படுகின்றனர். ஆப்ரோ ஆசிய மொழிக் குடும்பத்தின் பெர்பர் மொழி பேசும் இம்மக்கள், மொரோக்கோ நீரினை வழியாக அய்ரோப்பிய நிலத்திற்கு குடியேறியதாகக் குறிப்பிடப்படுகிறது. பெர்பர் மக்கள் தங்களை உயர்ந்த மனிதர் எனும் பொருளில் இ - மழி - என் (I - mazigh - en, ஒருமையில் a - mazigh) என அழைத்துக் கொள்வதாகச் சுட்டப்படுகிறது. இ - மழி - யன், இமழியன் என்பதை தமிழன் எனக் கொண்டால் பெயர் பொருத்தம் சரியாக இருக்கிறது. தமிழன்தானா என்பது ஆராய்ச்சிக்குரியது. தமிழனாக இருக்கலாமோ எனில் இருக்கலாம். மலையன், இம்மலையன் என்பதாகவும் இருக்கலாம். மலை, மழை என்றாலே தமிழ்தான் என்பதைச் சுட்டிவிடலாமன்றோ. இம்மக்கள் அய்ரோப்பியரால் மாரி எனச் சுட்டப்பட்டிருப்பதும் ஒப்புநோக்கத் தக்கது. மாரி - மழையல்லவா. வடக்கு ஆப்பிரிக்கா பாலைநிலத்திற்குப் பெயர் பெற்றதெனில், அதற்குக் கீழேயுள்ள மேற்கு ஆப்பிரிக்கா மழைக்குப் பெயர்பெற்றதெனில், இம்மக்களை, வடக்கு ஆப்பிரிக்கர் மழைமக்கள் எனச் சுட்டியிருப்பதும் ஒப்பமே.

அய்ரோப்பிய பண்பாட்டிற்கு, குறிப்பாக மேற்கு அய்ரோப்பிய நாடுகளின் கலாச்சாரத்திற்கு வித்திட்ட மூர்கள் (Moores) பெர்பர்கள் என்றே கருதப்படுகின்றனர். இசுலாமியப் பரவல் காலகட்டத்தில் இசுலாமைத் தழுவிய பெர்பர்கள், போர்ச்சுக்கல், ஸ்பெயின், பிரெஞ்சு, உள்ளிட்ட பல நாடுகளில் பரவி மிகுந்த செல்வாக்கைப் பெற்றதாகக் கூறப்படுகிறது. அய்ரோப்பியர்கள் இம்மக்களை மாரி (Mauri), மூர் (Moors) எனும் பெயரில் அழைத்திருக்கின்றனர்.

பெர்பர் எனில் பிற நிலத்தவர், பிற நிலத்திலிருந்து வந்தவர் எனப் பொருளாம். மாரி (Mauri) என்பது மாருதானியாவின் பெர்பரைக் குறிக்கும் சொல்லாம். மாரி என்பதே மூர் என மாற்றம் பெற்றிருக்கிறது. மூர்கள் வாழ்ந்த பகுதி மெக்ரெப் (Maghrab) எனப் பெயரிடப்பட்டதாம். மாரி, மருதானிய என்பதே அரபியில் மெக்ரம், மேரப் என மாற்றம் பெற்றிருப்பது தெரிகிறது. மெக்ரர் என்றாலும் புலியியல் அடிப்படையில் பெர்பெர் பகுதியே. இப்பகுதிகளுக்கு தமழா (Tamazgha) எனவும் பெயர் சுட்டுவது வியப்பு.

பெர்பெர்கள், தமிழாக்கள், மூர்கள், மெக்ராப்கள் போன்ற சொற்கள் ஏறக்குறைய ஒரே பொருள் தருவன. இம்மக்களின் பண்பாடு அய்ரோப்பியப் பண்போடோடு இணைந்து தெற்கு, மேற்கு அய்ரோப்பிய மக்களின் வாழ்வியலில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை உண்டாக்கியிருக்கிறது. ஒருவித்தில், ஐரோப்பிய எழுச்சிக்கு வித்திட்டவர்கள் மூர்கள் எனில் பொருத்தமே.

இங்கு கவனிக்க வேண்டியது மூர்கள் யார்? கிடைக்கும் சான்றுகளிலிருந்து அவர்கள் மேற்கு ஆப்பிரிக்க மக்கள். குறிப்பாக புலா மக்களாக இருக்க வேண்டும். ஏனெனில் பெர்பெர்களின் கலப்பிற்குப்பின், ஸ்பானிய நிலத்தின் பண்பாட்டில் புலா அதாவது பலா (Palla) பெரிய இடத்தைப் பெற்றிருக்கிறது. ஸ்பானியர்களின் உணவுத் தட்டிலிருந்து, உடையிலிருந்து, திருவிழாவிலிருந்து, மொழியிலிருந்து, பள்ளா எனும் சொல் அடைந்திருக்கும் நெருக்கம் வியப்பளிப்பது.

அது புலாவா, பலாவா, பள்ளவா, புள்ளவா எனில் உறதியாக, ஐயத்திற்கு இடமின்றி பள்ளா என்றே கொள்ளலாம். பள்ளா எனும் பெயரை கடந்த நூற்றாண்டுகளில் உலகம் முழுக்க கொண்டு சென்றவர்கள் ஏசுப்பானியர்களே.

ஒருவேளை அந்நிலங்களில் இருந்த பள்ளா சொல்லை எசுப்பானியர் பயன்படுத்தியிருக்கவும் கூடும்.

ஸ்பானியர்களின் பள்ளா (Palla) நெருக்கம் கிரேக்க, உரோமம் வழியாக வந்ததா அல்லது மொராக்கோ நீரிணை வழியாக வந்ததா என்பது ஆய்வுக்குரியது. ஒருவேளை இரு வழிகளிலும் வந்திருக்கலாம்.

இங்கு கவனிக்கவேண்டியது, எசுப்பானியத்திற்கும் பள்ளாவுக்கமான தொடர்புகள். எகிப்திய பள்ளா தொடர்பு அங்கிருந்து மேற்காசியா, அதன்பின் கிரேக்கம், பின்னர் உரோமம், இறுதியில் எசுப்பானியம் எனப் பரவியதாக் கொள்வது பொருத்தப்படுடையதே. எனில் எகிப்திற்கு எங்கிருந்து? தென்னிந்தியாவிலிருந்தா அல்லது தென்னாப்பிரிக்காவிலிருந்தா?

தென்னாப்பிரிக்கா, மத்திய ஆப்பிரிக்கா, எகிப்து, பாலத்தீன், கிரேக்கம், உரோமம் எனப் பரவி வந்த பள்ளா சொல், ஸ்பானியர்கள் சென்ற இடங்களெல்லாம் பரவியிருக்கிறதெனில் மிகையாகாது. பிலிப்பைன் தீவுகளிலிருந்து அமெரிக்காவரை குறிப்பாக நடு மற்றும் தென்னமெரிக்காவில் பள்ளா, மல்லா போன்ற சொற்கள் விரவிக் காணப்படுவதற்கு எசுப்பானியப் பரவல் காரணமாக இருக்கலாமோ? அல்லது அதற்கும் வெகுகாலத்திற்கு முன்னரே அங்கும் பள்ளர், மள்ளர் பண்பாடு, மொழித்தொடர்பு தொல்காலத்திலேயே பரவிவிட்டதோ.

கடல் பல்லாரிக். தீவு பல்லாரிக். அரிசியைச் சமைக்கும் மண்பானை பெல்லா (Palla). அரிசிச் சோறு பல்லா உணவு (Palla Dish). திருவிழாவின் தீப்பந்தம் பல்லா (Falla Torch). தமிழருக்கும் எகப்பானியருக்கும் உள்ள விந்தையான ஒற்றுமை தீப்பந்த விழா. தமிழகத்தில் கார்த்திகை மாதத்தில் மழை நிற்க வேண்டும் எனும் பொருளில் தீப்பந்த விழா நடத்தப்படுகிறது. இதே போன்றதொரு விழா ஸ்பெயினிலும் நடத்தப்பட்டு வந்திருக்கிறது. காலமாற்றத்தாலும், கிறித்தவ மதத்தாலும், கார்த்திகை விழா சற்றே மாறிய வடிவத்தில் தீப்பந்த (Torch) விழாவாகத் தற்போதும் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தொன்மையான மரபுகளுக்கும், மகிழ்ச்சிக் கொண்டாங்களுக்கும் புகழ்பெற்ற பகுதியாக அறியப்படும் வேலன்சியா (Velencia) பெருநகரமுள்ள வேலன்சியா பகுதி, ஏழாம் நூற்றாண்டில் மூர்களால் ஆக்கிரமிக்கப்பட்டதாகக்

குறிப்பிடப்படுகிறது. மொராக்கோ மற்றும் அரபு மூர்களால் கைப்பற்றப்பட்ட வேலன்சியா பகுதியில், மூர்கள் தங்களது மொழி, சமயம், பழக்க வழக்கம், மற்றும் பயிர்த்தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தினார்களாம். குறிப்புகளின்படி, மூர்கள் புதியவகை பயிரை அறிமுகப்படுத்தினார்களாம். அப்பயிர் நெல் எனக் கொள்வது பொருத்தம். எனில் நெல்லோடு தொடர்புடைய மூர்கள் பள்ளர்களாக இருந்திருக்க வேண்டும். அதனால்தான் பானைக்கும், அரிசிக்கும், அங்கு பள்ளை எனும் பெயர் நிலைத்து வழங்குகிறது. தற்போதும் வேலன்சியா பகுதி நெல்விளைச்சலுக்குப் பெயர் பெற்று விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. வரலாற்றின்படி, வேலன்சியா எனும் பெயர் முன்னர் பலன்சியா (Balan Siyya) எனப் புழங்கியிருக்கிறது.

எசுப்பானியத்தின் வடகிழக்கு, பிரெஞ்சு நாட்டின் தெற்கு மற்றும் இத்தாலியின் மேற்குத் தீவுகளில் புழங்கும் கடலன், கட்டலன் (Catalan) மொழி, மேற்கு உரோமானிய மொழியாகக் குறிப்பிடப்படுகிறது. இம்மொழி வேலன்சிய மொழியோடு நெருங்கிய தொடர்புடையதாக அறியப்பட்டுகிறது. ஆங்கில ஹலோ (hello), எசுப்பானில் ஓலா (Ola) எனில், கட்டலனில் ஹோலா (Hola). கட்டலன் மொழி தமிழோடு ஏதேனும் தொடர்பு கொண்டுள்ளதா எனில், ஒலிக் குறிப்புக்களின்படி தொடர்பிருக்கலாமென்றே தெரிகிறது. தயவு செய்து என்பதற்கு ஆங்கிலத்தில் ப்ளீஸ் (Please). இது கட்டலன் மொழியில் சி யுஸ் பிளா (Si us plau). ஒலிக் குறிப்பின்படி இது சீ ஊஸ் ப்ளவ். இது அப்படியே தமிழரின் தயவு செய்து என்பதோடு பொருந்துகிறதல்லவா. ஹாய் (Hi), ஹே (Hay) என்பது கட்டானில் ஏய் (Ei) எனவும் சுட்டப்படுகிறது. தமிழிலும் ஏய் தானே (ஏய் இங்கே பாரு).

எசுப்பானியத்தின் பாடல்கள் பள்ளர் பாடல்கள் (Pallar Songs) என அழைக்கப்படுகின்றன. எசுப்பானியம் என்றில்லாமல் கிரேக்க பள்ளர்கள் பாடல்களும் அருமையான இசைத்துள்ளலோடு இருக்கின்றன. பாடல்கள் அருமை என்றாலும் இந்த பள்ளர்ஸ் பாடல்களில் காமரசம் சொட்டுவது இந்திர மரபின் நீட்சி எனலாமோ.

பஞ்சாபியர்களின் பல்லா பாடல்களும், தொங்கரா ஆட்டங்களும் புகழ் பெற்றவையன்றோ. பஞ்சாப் நிலமும் புகழ் பெற்ற பல்லா, மல்லா பகுதிதானே. பல் எனும் பெயர் சீக்கிய மக்களில் புகழ்மிக்கது. அது வீரம் எனும் பொருளில் சுட்டப்படுவது கவனிக்கத்தக்கது.

அய்ரோப்பாவின் தென்மேற்குப் போலவே வடமேற்கிலும் தமிழின் வேர்கள் பரவியுள்ளது தெரிகிறது. பின்லாந்து நாட்டின் சுயோமி (Suomi) மொழியில், காம (Kama) எனில் மிக நெருக்கமான, காதலோடு தொடர்புடைய எனும் பொருளில் ஆளப்படுகிறதாம். உரல் (Ural) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த பின்னிய மொழியில் கமரி (Kamari) எனில் படுக்கை அறையாம். அதாவது இடத்தோடு தொடர்புடையதாம். பின்னிய மொழியில் கமரா (kamara) எனில் நிலம் அல்லது இடம், எனில் குமரி என்பதோடு கமரா தொடர்புடையதாகிறது. தமிழுக்கும் தொலைவான ஆர்டிக் பகுதியிலிருக்கும் பின்னிய மொழிக்கும் எப்படி தொடர்பிருக்க முடியும்? தொடர்பு தொல்காலத்திலிருந்தே உள்ளதா அல்லது இடையில் ஏற்பட்டதா? பின்லாந்து நாட்டில் மக்கள் எப்போதிலிருந்து வாழ்ந்து வருகிறார்கள்? அவர்களது வரலாறு என்ன?

உராலிக், ஊரல் மொழிக் குடும்பத்தின் பெயர், ருஷ்யாவின் வடக்குத் தெற்காக அதாவது ஆர்டிக் தொடங்கி கசகசத்தானின் யூரல் ஆறுவரை நீண்டிருக்கும் மலைத்தொடரைக் குறித்து வைக்கப்பட்டுள்ளது. எனில் உராலிக் என்பதன் பொருள் விளக்கம் யாது? பலவாறாகச் சொல்லப்படுகிறது. இன்னும் சரியாகக் கண்டறிய இயலவில்லையாம்.

உரல் (Ural) எனில் கல் சுவராம் (Stone Belt). அது ஊரல் மலையைக் குறிக்கிறதாம். எனவே உராலிக் எனும் பெயர் வந்ததாம். தமிழில் உரல் எனில் கல். குறிப்பாக தானியங்களைக் குத்துவதற்குப் பயன்படும் கல் உரல். மரத்திலும் இருப்பதுண்டு. எனினும் கல்லில் இருப்பதே உரல்.

உரல் - கல். ஆரல் - மதில். மதில் சுவர் ஒருவேளை ருஷ்யாவின் ஆரல் மலைத்தொடர், மதில் போன்று இருபக்க நிலத்தையும் பிரிப்பதால் ஆரல் எனும் பெயர் வழங்கிற்றோ? ஆரல் மருவி, ஊரல், ஊராலிக் என ஆயிற்றோ? ஆரல் எனில் மலையோ? ஆரல்வாய் - மலைக்கணவாய். ஆரல் வாய் - பெரியவாய்.

ஊராலிக் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த பின்னிய நாட்டு மொழி (Finnish), தமிழோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதாம். இணையத்தில் நிறையப் பதிவுகள் கிடைக்கின்றன. தமிழோடு பின்னிய மொழி நெருங்கியது என்பதைவிட சுமேரிய மொழியோடு பின்னிய மொழி நெருக்கமுடையதாம். அந்தளவுக்கு

உராலிய பின்லாந்து மொழி - ஸ்வாம (Suomi) - தொல் மொழியாகக் கட்டமைக்கப்படுகிறது.

பின்லாந்தின் ஸ்வாமி மொழி உட்பட்ட உராலிக் மொழிகள் தமிழோடு நெருக்கமானவையா அல்லது சுமேரியத்தோடு நெருக்கமானவையா? தமிழோடு அதுவும் கடைச்சங்கத் தமிழோடு நெருங்கமானவை என்பதே ஏற்புடையதாக இருக்கும். ஏனெனில் மிகப் பழங்காலத்திலேயே மக்கள் வடதுருவப் பகுதிகளில் குடியேறிவிடவில்லை. கிழக்கு அய்ரோப்பியாவிலிருந்து சமீப காலங்களிலேயே மக்கள் குடியேற்றம் நிகழ்ந்ததாகக் கொள்வதே பொருத்தம். எனில் வடமேற்கு இந்தியப் பகுதிகளில் தமிழ் அதன் திரிபு நிலையில் புழங்கிய காலத்தில், யுராலிக் பகுதிகளில் சற்றே நல்ல நிலையில் தமிழ் பேசப்பட்டிருக்கும். ஏனெனில் அங்கே மாற்றங்கள் நிகழ்ந்தது பிற்காலத்திலேயே. உலகின் கடற்பயணக் காலம் வரையிலும்கூட அதாவது சில நூற்றாண்டுகளுக்குமுன்பு வரைக்கும்கூட அப்பகுதி மக்கள் எளிய வாழ்க்கையை மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஊராலிக் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மாரி மொழி (Maari) பல இலக்கம் மக்களால் பேசப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. ருஷ்யக் கூட்டமைப்பில், மாரி குடியரசாக (Mari Republic) இடம் பெற்றுள்ள மாரி நிலப்பகுதி (Mari Land), ஊரல் மலைத்தொடருக்கு கிழக்கே வியட்கா (Vyatka) ஆற்றுப் படுகையில் அமைந்துள்ளது. மாரி மக்கள் பேசும் மாரிமொழி, மலைப்பகுதி மாரி (Hill mari) மற்றும் சமவெளி - புல்வெளிப் பகுதி மாரி (Meadow mari) என இருவடிவங்களில் பேசப்படுகிறது. புல்வெளிப் பகுதியில் பேசப்படும் மாரி, மேலும் பல பேச்சுவழக்கு மொழிகளாகப் புழங்குகிறதாம்.

மாரி மக்கள் பின்லாந்து - ஊராலிக் இனமாகக் கருதப்படுகின்றனர். இம்மக்கள் வோல்கா மற்றும் காமா ஆறுகளின் வழித்தடங்களில் தொன்றுதொட்டு வாழ்ந்து வருகின்றனர். இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியது மாரி மக்கள் முன்பு சேரமிசா அல்லது சேரமிஸ் மக்கள் (Cheremisa or Cheremis) என ருஷ்ய மொழியில் அழைக்கப்பட்டிருக்கின்றனர். தாதர் (Tatar) மொழியில் (ருஷ்ய ததர்ஸ்தான் பகுதியில் வழங்கும் துருக்கிய மொழி) சிர்மிஸ் எனப் பெயர்.

2002இன் ருஷ்ய மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் 6,04,298 பேர் மாரி மக்களாகப் பதிந்துள்ளனர். 18,515 பேர் மலை மாரிகள் எனவும், 56,119 பேர் கிழக்குப் பகுதி மாரிக்கள் எனவும் பதிந்துள்ளனர். மாரிக்களில் பெரும்பாலானவர்கள் தற்போதும் ஊர்ப்பகுதிகளிலேயே அதாவது கிராமங்களிலேயே வாழ்கின்றனராம். பெரும்பாலானவர் உருஷ்ய மரபுவழி கிறித்தவர்களாக மாறினாலும், ஏராளமானோர் தற்போதும் மாரிவழி பாரம்பரிய சமய நம்பிக்கை (mari native religion) கொண்டுள்ளனராம்.

மாரிக்களின் பாரம்பரிய சமய நம்பிக்கையில் குகு சுமோ (Kugu Jumo) சிறப்பிடம் பெற்றுள்ளார். குகு சுமோ எனில் பெருங் கடவுள் (Great God). இலக்கிய ரீதியாகச் சொல்வதானால் ஒளியின் பெருங்கடவுள் (Great God of Light). உண்மையெனில் குகு சுமோ இந்திரனல்லவா. வடமொழியில் ஜீ - Ji, ஜு - Ju என்பதை பெரிய , சிறந்த எனும் பொருளில் சுட்டுகிறார்களோ - Jumo, Jummo, Sumo, Ghumo. சுமேரு – பெரிய மேரு - பெரியமலை.

மாரிக்கள் தற்போதும் பழமையான முறையில் கடவுள் வழிபாடு மேற்கொள்வதாகக் குறிப்புகள் சுட்டுகின்றன. சூரியா, சந்திர நிலைகளை வைத்தே நாட்காட்டிகள், சடங்குகள் உள்ளனவாம். மாரிக்கள் மரங்களையும், விலங்குகளையும் வணங்குகின்றனராம்.

சமவெளி மாரிக்கள் ஏறக்குறைய 140 தெய்வங்களையும், மலை மாரிக்கள் 70 தெய்வங்களையும் வணங்குகிறார்கள். எனினும் ஒன்பது கடவுள்கள் மிகவும் முக்கியமானவர்கள். குகுசுமோ - முக்கியக் கடவுள். தலைமைக் கடவுள். குகுராக் (Kugurak) - மூத்தவர் எனவும் அழைக்கப்படுகிறார். குகு சுமோ வாத்தோடு (அன்னம்?) தொடர்பு கொண்டுள்ளார்.

துல் (Tul) நெருப்புக் கடவுள். சக்சா (Saksa) வளமையின் (Fertility) கடவுள். குகு சுமோவின் இணை. குத்ரிர்ச்சோ சுமோ (Kudryrcho sumo) - இடிக் கடவுள். புரிஸோ (Purysho) - தலைவிதியின் கடவுள். தில்சி (Tylzhe) நிலவுக் கடவுள். உஷரா (Uzhara) - விடியலின் கடவுள். மிலண்டே (Mlande) பூமியின் கடவுள். ஷோசின் - அவா (Schochyn - Ava) குழந்தைப் பேற்றின் கடவுள். துன்யா (Tunya)

உலகின் (Universe) கடவுள். கெரமெட் - தீய ஆவி. அவா (Ava) - எனில் பெண் கடவுளாம்.

மாரிக்களின் சமயக் கொள்கையைப் போன்றதே பின்னியர்களுடையது. பின்னிஷ் நம்பிக்கையில் உகோ (Ukko) மூத்தவர் அதாவது grand father. உகோ - வானத்தின் கடவுள். வானிலை, அறுவடை மற்றும் இடியோடு தொடர்புடையவர். பின்னிய மொழியில் உக்கோனன் (Ukkonen) எனில் இடியாம். உக்குவின் பிற பெயர்கள் பித்கனன் (Pitkaa - long), ஈசைனைன் (Isa - father), இசொய்னன் (Iss - great).

பின்லாந்து நாட்டில் கிறித்தவம் பரவுவதற்குமுன்னர், உகோன் பெருமதிப்போடு வணங்கப் பெற்றிருக்கிறார். வாக்கு விழா (Vakka Festival) எனும் பெயரில் உகோ கொண்டாடப்பட்டிருக்கிறார். பின்னிய மொழியில் வக்கா (Vakka) எனில் கலனாம் (Vessel). இது கடவுளுக்குப் படைக்கும் உணவை, படையலைக் குறிக்கிறதாம். முன்பு விலங்குப் பலியும் நடத்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

கிறித்தவத்தின் தாக்கத்தால் பின்னிய சமயமும், இறைநம்பிக்கையும், மொழியும், பண்டைய பண்பாடும் பெருமளவில் மாறிவிட்டிருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மாரிக்களின் பெரிய வெள்ளைக் கடவுள் Osh Kugu Yumo யாராக இருக்கும்? காற்றின் கடவுளான மர்தேஷ் யுமோ (Mardesh Yumo) யார்?

மாரி எனும் சொல்லின் பொருள் இந்தோ - ஆரியன் சொல்லான மர்யா - அதாவது மனிதன் என்பதிலிருந்து தருவிக்கப்பட்டுகிறது. மரி - இறப்பு எனப் பொருள் கொள்ளப்பட்டு, மரி மொழி, மரி மக்கள் எனச் சுட்டப்பட ஏதுவாகிறது. தமிழில் மாரி எனில் மழை. மாரி மக்கள் ஆற்றங்கரைப் பகுதிகளில் குறிப்பாக வோல்கா மற்றும் காமா ஆற்றுப் பகுதிகளில் வாழ்வதால், மழையோடு தொடர்புபடுத்துவதே சிறப்பு. பெரும்பாலான மக்கள் ஊர்ப்புறங்களில் வாழ்கின்றனர், வேளாண் தொழில் புரிகின்றனர் எனில் அம்மக்கள் மாரி மக்களே. சேரர் எனும் தொன்மைச் சொல் மருவி சேர - மார - மரி எனத் திரிந்திருக்கலாம். தமிழில் மாரி எனில் மழை என்பது

தெரியாததாலேயே, சமற்கிருதத்தின் மரி, மரித்தல் என்பதோடு பொருள் விளக்கம் காணப்படுகிறது. சேரமிஸ்க்கி (Cheremissky) எனில் சேரமக்கள் தானே.

மறி - ஆடு. செம்மறி. எனில் மாரி மக்கள் குறும்பர்கள். ஆடு மேய்ப்பவர்கள். எனில் சேர - பல்லவ மரபோடு தொடர்புடையவர்கள்தானே. மரி - மரியாள் எனச் சுட்டுவது தவறென்கிறார், மதிப்பிற்குரிய தமிழறிஞர் விக்டர் அவர்கள். அது மறி, மறியாளாம். தமிழறிஞர் எபிரேய மொழியும் அறிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் எபிரேயத்தில் ஆடு, ஆட்டுக்குட்டி என்பது பெருமதிப்பிற்குரிய பெயராக இருந்ததாம். அதன் பேரில் பலருக்கும் மறி - அதாவது ஆட்டுக்குட்டி எனும் பொருளில் பெயர் வைக்கப்பட்டிருந்ததாம்.

மலை மற்றும் சமவெளி மாரிமொழிகள் சிரில்லிக் வடிவத்தில் எழுதப்படுகின்றன. மாரி மொழியில் எண்ணுப் பெயர்கள், இக் (ik) - ஒன்று, கொக் (kok) - இரண்டு, கும் (kum) - மூன்று, நூல் (Nool) - நான்கு, விக் (Vicc) - ஐந்து, நை/குட் (ny/kud) - ஆறு, சூம் (Soom) - ஏழு, கண்டாஸ் (Kandaas) - எட்டு, இந்தஸ் (Indees) - ஒன்பது, மற்றும் லு (lu) - பத்து.

மிட்/முட் - Myt/Mut - எனில் சொல் (Word).

எண்ணுப் பெயர்களில் நாலு தெளிவாகத் தெரிகிறது. நாலு - நூல், நோல் எனச் சுட்டப்படுவதில் மலையாளத்தோடு நெருங்கியதாக அறியப்படுகிறது. (ஒருவேளை இப்படியான ஒலிப்பால்தான் மலையாளத்தோடு பின்னிய, அங்கேரிய மொழிகள் நெருக்கமாக இருக்கின்றன எனச் சுட்டுகிறார்கள் போலும்). எட்டு, ஒன்பது சற்றே நெருக்கம் காட்டுகிறது. ஒருவேளை இவை தமிழின் ஒண்ணு, ரெண்டு எனும் பேச்சுவழக்கு எண்ணுப்பெயர்களின் திரிபாக இருக்கலாமோ. மலையாள எண்ணுப் பெயர்கள் தமிழ் பேச்சு வழக்கின் எணணுப் பெயரில்தானே புழங்குகின்றன.

மாரி மக்களின் சமய நம்பிக்கை, சமற்கிருத சமயக் கொள்கையோடு ஒப்பிடக்கூடியதாகக் காணலாமா என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டியதே. இரண்டும் பொருந்தி வருகின்றன எனச் சுட்டலாமோ? பெரிய வெள்ளைக் கடவுள் பிரம்மனைச் சுட்டுவதாகக் கொள்ளலாமல்லவா. வாத்து என்பது அன்னமாகவே இருக்க வேண்டும். புரிஷோ - புருஷ தத்துவதற்திற்கான அடிப்படையாக

இருக்கலாம். உஷரா - சமற்கிருத உஷாவாகச் சுட்டலாம். வாக்கு என்பது திரிபான பொருளில் சுட்டப்படுவது தெரிகிறது. வாக்கு - பேச்சு, ஒலி, ஓசை எனக் கொண்டால் வாக்தேவி, சரசுவதியோடு தொடர்புடையதாக அறியலாம். எனில் பிரம்மன் - சரசுவதி பொருத்தமாக உள்ளது. கூடவே இடிக்கடவுளும் இருக்கிறாா். சேர மரபோடு வெகுவாகப் பொருந்துவதும் ஒப்பமல்லவா.

தமிழ்போன்றே உலகின் அனைத்து மொழிகளும், பண்பாடுகளும் சுமேரிய பண்பாட்டிற்குச் சொந்தம் கொண்டாடுகின்றன. உலகின் சிறந்த ஒன்றிற்கு அனைவரும் சொந்தம் கொண்டாடுவது, போட்டிபோடுவது இயற்கையானதே. எனினும் உண்மை என ஒன்று இருக்குமல்லவா?

தமிழர்மீது அண்மைக்காலமாக பிற மொழிக்காரர்களால் சுமத்தப்படும் ஒரு குற்றச்சாட்டு, தமிழர்கள் அனைத்தையும் தமது என்கிறார்கள், உலகின் அனைத்து மொழிகளும் தங்களது என்கிறார்கள். அதாவது This is ours, that is ours - இது எங்களுடையது; அதுவும் எங்களுடையதே. இப்படிச் சொந்தம் கொண்டாடுவது பிற மொழிக்காரர்களைவிட, திராவிடச் சகோதரர்களுக்கே கடினமாக இருக்கிறது போலும். காணொளிகளில் பலவிதமான மறைமுகப் பெயர்களில், பலவாறாகப் பதிவிடுகிறார்கள். உங்கள் மொழி தொல்மொழி, பழையமொழி, செம்மொழி என்கிறீர்களே, தற்போது உங்களால் அதைப் படிக்க முடியுமா, அதற்குப் பொருள் விளக்க முடியுமா எனச் சுட்டுகிறார்கள். முடியாதெனில் நீங்கள் தமிழரில்லை என்கிறார்கள். மலையாளத் திராவிடர்களே தமிழைக் குறைத்து மதிப்பிடுகிறார்கள் எனில், மற்றவரை என்ன சொல்ல?

தமிழ் மிகப்பெருமையுடையது எனில், உலகின் மூத்தமொழி எனில், திராவிட மொழிகளின் மதிப்பும், சிறப்பும் குறையுமென்று நினைக்கிறார்களோ? தமிழோடு போட்டி போட்டல்லவா செம்மொழித் தகுதியை வாங்கினார்கள். ஈராயிரம் வருடப்பழமை என்பதை மாற்றி, ஓராயிரம் வருடப்பழமையே போதுமென்று சட்டத்தை மாற்றியது அறிந்ததுதானே. முதுபெரும்மொழியான தமிழ் செம்மொழியாக அறிந்தேற்புப் பெற்று, உலகின் உயர்தனிச் செம்மொழியாக நிலைக்கட்டும் என ஏன் நினைக்கவில்லை? தமிழ் எங்களின் தாய்மொழி, எங்களின் முந்துமொழி, இந்நிலத்தின் முதல்மொழி எனத் திராவிட மொழிக்காரர்களே ஒப்பவில்லை எனில், உலகின் பிற மொழிக்காரர்களை எப்படி ஒப்ப வைப்பது?

உலகினர் உரிய சான்றுகள் இருந்தால் ஒப்புவர். தமிழ்தான் உலகின் முதுமொழி, தொல்மொழி, உலகின் பொதுமொழி என்பதற்குச் சான்றுகள் போதுமல்லவா..

உண்மையின் பேரொளியை எதைக்கொண்டு மறைக்க முடியும்..

**மண் தமிழருடையது. தமிழருடையதே விண்ணும்.**

**இதுவும் தமிழருடையது. அதுவும் தமிழருடையது. எதுவும் தமிழருடையதே.**

**தமிழருடையதே நேற்றும் இன்றும் நாளையும்..**

# மதுசூதனன்!



**ஸ்ரீராம ஜெயம்**

புத்துலகம் செய்வோம் - இரண்டு, திருவோணத் திருவிழா புத்தகத்தின் முதல்பகுதி 2019 ஏப்ரல் ஆறாம் நாள் தொடங்கி மேம் மாதம் இருபத்தொன்றாம் நாளில் முடிக்கப்பட்டது. புத்துலகம் செய்வோம் இரண்டாவது புத்தகத்தின் முதன்மையான நோக்கம் தேவேந்திரக் குடிகளுக்கு குறிப்பிட்ட சில சாத்திர சம்பிரதாயங்களை அறிவிப்பதே. கூடவே, தேவேந்திர சமூகத்தவர் உலகில் என்ன மாதிரியான இடத்தைப் பெற்றுள்ளனர் என்பதைச் சுட்டிக் காட்டுவதும், அவர்களை மனதளவில் மேன்மைப்படுத்தும் விதத்தில், உலகமெங்கும் தேவேந்திரர் பெயருக்கு எத்தகைய மதிப்பிருக்கிறது என்பதைத் தெளிவுறுத்துவதும், தமிழகத்தின் தேவேந்திரகுல வேளாளருக்கு உலகப் பண்பாட்டில் எத்தகைய பங்குள்ளது என எடுத்துக் காட்டுவதும் பிற காரணங்களாகக் கொள்ளப்பட்டன.

இப்புத்தகத்தையும் சுருக்கமாக எழுத வேண்டும் என்றே விரும்பினோம். எனினும் இப்புத்தகத்தை எழுதுவதற்கு மேற்கொண்ட முன்தயாரிப்புகள் புத்தகத்தை சற்றே நீட்டி விட்டன.

புத்துலகம் ஒன்று புத்தகத்தை வலையேற்றியபின் நிறைய வாசிக்க ஆரம்பித்தோம். 2018இன் இறுதியில், அதாவது மார்கழி மாதத்தின் பிற்பகுதியிலிருந்து வாசிக்கத் தொடங்கினோம். முதலில் வாசித்தது ஜெயமோகனின் ‘‘இன்றைய காந்தி’’. இறுதியாக வாசித்து முடித்தது காந்தியின் ‘‘சத்திய சோதனை’’.

சத்திய சோதனை 09.03.2019ஆம் தேதி தொடங்கி 29.03.2019ஆம் தேதி அன்று முடிக்கப்பட்டது. இடையில் முதுநிலை மாணவர்களுக்கான ஆராய்ச்சித் திட்டம் முடிக்க வேண்டியிருந்ததால் தொடர்ச்சியாக வாசிக்க இயலவில்லை. தொடர்ச்சியாகப் படித்திருந்தால் ஒரு வாரத்திற்குள்ளாகவே வாசித்து முடித்திருப்போம். சத்திய சோதனையை மெதுவாக வாசித்ததிலும் ஒரு நன்மை இருக்கத்தான் செய்தது. தந்தையின் எழுத்தை ரசித்து, ருசித்து, நிறுத்தி, நிதானமாக, உள்வாங்கி வாசிக்க முடிந்தது பெருமையே. எத்தனை மகத்தான தந்தை எம் தந்தை.

மதிப்பிற்குரிய ஜெயமோகனின் இன்றைய காந்தி புத்தகத்தைக் கேள்விப்பட்ட உடனேயே அதை வாசிக்க வேண்டும் என விரும்பினோம். ஆனாலும் சில வருடங்களாகவே அதை தள்ளி வைத்துக்கொண்டே வந்தோம். காரணம் யாம் எமது தந்தையைப் பற்றி எப்படி, எவ்வளவு அறிந்திருக்கிறோமோ அதுவே எமது எழுத்தில் பதிவாக வேண்டுமென்று விரும்பினோம். காந்தியை எமது தந்தையாக பாவித்துக் கொண்டதால், தந்தை எமது உள்மனதிலிருந்தே எழவேண்டுமெனத் தீர்மானித்தோம். இன்னும் சொல்வதானால் ஜெயமோகனின் காந்தி எமது காந்தியில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது என நினைத்தோம்.

எமது புத்தகங்களை எழுதுவதற்குமுன் யாம் சில புத்தங்களைப் படிக்கக்கூடாது என முடிவெடுத்தோம். குறிப்பாக இன்றைய காந்தி, கோபல்ல கிராமம், நேருவின் உலக வரலாற்றுப் பதிவுகள் (Slimpses of World History). மூத்த படைப்பாளி மதிப்பிற்குரிய கி. இராஜநாராயணனின் கோபல்ல கிராமம் குறித்த மதிப்புரைகளை யாம் நிறையவே படித்திருந்தோம். அத்தனை எழுத்தாளர்களும் அப்புத்தக்கத்தை மிகச் சிறப்பாகப் பாராட்டியிருக்கிறார்கள். எனினும் யாம் எமது கிராமத்தை எழுத்தில் பதிய விரும்பியதால், கோபல்ல கிராமத்தின் பாதிப்பு எமது எழுத்தில் வரக்கூடாது என நினைத்தோம். அதனை முன்னிட்டே அப்புத்தகத்தை வாசிப்பதைத் தவிர்த்தோம். கோபல்ல என்பதைக் கூட கோபள்ள எனச் சுட்டிக்காட்டியிருக்க வேண்டுமோ. அது பல்ல அல்ல பள்ள என்பதே சரி. கோபல்ல - பெரிய பள்ளி. மூத்த படைப்பாளி ஏன் தவிர்த்தார் எனத் தெரியவில்லை.

நாம் யார் புத்தகத்தில் உலக வரலாற்றை எழுத முடிவெடுத்ததால் தந்தையாம் நேருவின் உலக வரலாற்றுப் பார்வை எமது புத்தகத்தில் தென்பட வேண்டாம் எனும் எண்ணத்தில், அவரது உலக வரலாற்றுப் புத்தகத்தைப் படிக்க வேண்டாம் என நினைத்தோம். புகழ்பெற்ற இந்த இரு புத்தகங்களையும் இனிமேல்தான் வாசிக்க வேண்டும்.

எமக்கு படிப்பது மிகவும் பிடிக்கும். புத்தகங்கள்மீது எமக்கு பெருங்காதல் எனச் சொல்லலாம். சிறுவயதில் புதினங்கள்மீது பெருவிருப்பம் இருந்தது. ஆயினும் நிறையப் படிப்பதற்கு வாய்ப்புக்கள் அமையவில்லை. பெரிய ஊர் என்றாலும் எமதூரில் நூல் நிலையம் இல்லை. இருந்திருக்கலாம். ஐயரும், பிள்ளைமாரும்தான் இதற்கான முன்னெடுப்புக்களைச் செய்திருக்க வேண்டும். ஊருக்கொரு நூலகம்

எனும் திட்டம் எங்களூரில் இருந்ததா எனத் தெரியவில்லை. யாம் கல்லூரிக் காலத்திலேயே சமூகவியல், மானுடவியல் புத்தகங்களின்மீது திரும்பிவிட்டோம். அன்றுதொடங்கி தற்போதுவரை யாம் பெரும்பாலும் சமூகம் சார்ந்த புத்தகங்களையே அதிகமும் வாசிக்கிறோம். கதைகள், நாவல்கள் மிகமிகக் குறைவு. சமூக மாற்றமே எமது முதன்மையான குறிக்கோள் என்பதால் அதை நோக்கியே எமது வாசிப்பும் அமைந்துவிட்டது. எமது நினைவு சரியெனில் யாம் கடைசியாக மிகவும் விரும்பிப் படித்த நாவல் சிவகாமியின் சபதம். திரு. ஜெயமோகனின் விஷ்ணுபுரம் நாவலை விரும்பிப் படித்தோம் எனச் சொல்வதற்கில்லை. நாவலைப் படிக்கும்போதே ஏன், எதற்கு எனும் கேள்விகள் மனதில் தோன்றிவிட்டதால், நாவலை மனம் விரும்பிப் படித்தோம் எனச் சொல்வதற்கில்லை. எனினும் நாவல் மகத்தான ஆக்கம்.

2019, ஜனவரி முதல் மார்ச் வரை மூன்று மாதங்களில் யாம் எவ்வளவு வாசித்தோம் எனில், இன்றைய காந்தியைத் தொடர்ந்து கூல வணிகன் சாத்தனாரின் மணிமேகலை மூலமும் உரையும் நூல். ந.மு.வேங்கடசாமி நாட்டார், ஔவை சு.துரைசாமி பிள்ளை உரையெழுதிய மணிமேகலை காப்பியத்தை முழுமையாகப் படிக்கவில்லை. தேர்ந்தெடுத்துப் படித்தோம். அவ்வாறே புலியூர்க்கேசிகனின் தெளிவுரையில் அகநானூறிலிருந்து தேர்ந்தெடுத்த சில பாடல்களை வாசித்தோம்.

ஏற்கனவே வாசித்திருந்தும் தேவநேயப் பாவாணரின் தமிழ் வரலாறு நூலை மீண்டும் ஒருமுறை முழுமையாக வாசித்தோம். அய்யாவின் மேலும் சில நூல் பகுதிகளை தமிழ்வு (Tamilvu) இணையத்தில் வாசித்தோம். குறிப்பாக அய்யாவின் கட்டுரைகள், உரைகள் நிறைய வாசித்தோம். இறுதிப் பேருரை காணொளியாவே கிடைக்கிறது. உரை கேட்டு மனம் கனத்தது. எத்தனை தெளிந்த சிந்தனையாளர், எவ்வளவு அர்ப்பணிப்பு. எத்தகையதொரு தமிழ்ப் பற்று, தமிழ்ப் புலமை. தமிழரின் புறக்கணிப்பு ஏற்கத்தக்கதல்ல.

யாம் புத்தகங்களைப் படிக்கும்போதே தேவையானவற்றை குறிப்பாகவும் எழுதிக் கொண்டோம்.

முன்னர் புலவர் கா.கோவிந்தன், க.ரத்னம் மொழியெர்ப்பில் வந்த டாக்டர் கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம் வாசித்திருந்தோம். எனினும் அதன் ஆங்கில் எழுத்தை வாசித்தால் நான்றாக இருக்கும் எனப்பட்டது. இணையத்தில் கிடைத்த A

Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages by the Rev. Robert Coldwell D.D., LL.D., புத்தகத்தை தரவிறக்கி வாசித்தோம். குறிப்பிட்ட சில இலக்கணப் பகுதி தவிர்த்து முழுமையாகவே வாசித்தோம்.

நீண்டகாலமாக வாசிக்க வேண்டுமென விரும்பி வந்த நெல்சனின் மதுரை ஆவண நூல் (The Madura Countoy - A Manual) வாசிப்பது தற்போதே சாத்தியமானது. மதுரைநாட்டு மக்கள் பற்றிய நெல்சன் துரையின் எழுத்தும், பதிவிட்ட முறையும் சிறப்பு. புத்தகத்தின் மதுரை அரச மரபு பற்றிய பதிவை தவிர்த்து பிற பகுதிகளை வாசித்தோம்.

அடுத்து வாசித்தது யாம் கல்லூரிக் காலத்திலேயே படிக்க வேண்டும் என விரும்பிய எட்கர் தர்ஸ்டனின் தென்னிந்தியக் குலங்களும், குடிகளும். நல்வாய்ப்பாக இணையத்திலேயே இப்புத்தகங்கள் விலையில்லாமல் கிடைக்கின்றன. Castes and Tribes of Southern India by Edgar Thurston C.I.E, Assisted of K.Rangachari M.A., Volume I to VII - தென்னிந்திய மானுடவியல் பண்பாட்டில் ஒரு பொக்கிசம் எனலாம். மதிப்பிற்குரிய தர்ஸ்டன் அளித்திருக்கும் முன்னுரை அருமை. யாம் ஏழு தொகுதிகளையும் ஒவ்வொரு பக்கமாக முழுமையாகக் படிக்கவில்லையெனினும், மேலோட்டமாகவாவது ஒரு பார்வை பார்த்து விட்டோம் எனலாம். முக்கியமான, எமக்கு அவசியமான தகவல்களுக்குத் தேவையான சாதிகளைப் பற்றி முழுமையாகப் படித்தோம். முதல் தொகுதியில் ஆங்கில எழுத்து A, B -யில் வரும் சாதிகளைப் பற்றிய குறிப்புகள், இரண்டாவதில் C முதல் J வரை, ஏழாவதில் T முதல் Z வரையென, மொத்தமாக தென்னியச் சாதிகளை, அவர்களின் முக்கியமான பண்பாட்டு விழுமியங்களை அறிஞர் தர்ஸ்டன் குறித்துள்ளது மிகுந்த பாராட்டுக்குரியது.

அடுத்துப் படித்தது தர்ஸ்டன் 1896 இல் எழுதிய Anthropology of the Todas and Kotas of the Nilgiri Hills and of the Brahmans, Kammalans, Pillai and Pariahs of Madras City நூல். பள்ளிகள் பற்றி தர்ஸ்டன் என்ன எழுதியிருக்கிறார் என்பதற்காகப் படித்தது. பொரும்பாலும் மானுட அங்க அளவுகளைக்கொண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

தொடர்ந்து ஆங்கில ஆட்சியின் போது, வெளியிடப்பட்ட சென்னை மாகாண மாவட்ட ஆவணப் பதிவுகளைத் தறவிறக்கி குறிப்புகள் எடுத்தோம். இவை கடந்த நூற்றாண்டின் பதிவுகள் எனும் வகையில் முக்கியமானவை. ஒரு நூற்றாண்டுக்குமுன் தமிழக்கத்தின் சாதிய அமைப்பு, மக்கள் தொகை, பழக்க வழக்கங்கள் எவ்வாறு இருந்தன என்பதற்கான சான்றுகள். சிறியளவில் கவனக் குறைவான பிழைகள் தென்பட்ட போதிலும், தட்ஸ்டனின் பதிவுகள் மீளப்பதிவு செய்யப்பட்ட போதிலும், சென்னை மாகாண மாவட்டப் பதிவுகள் மிகச் சிறந்த ஆவணங்கள் என்பதில் ஐயமில்லை. நம்மவர்கள்தான் சாதியக் கண்ணோட்டத்தோடு, விருப்பு வெறுப்போடு, உயர்வு தாழ்வோடு பதிவுகள் செய்வர், செய்திருப்பர். ஆங்கிலேயர்களுக்கு அது அவசியமில்லையல்லவா?

வெள்ளையர்கள் தின்னவேலி (Tinnevelly) என்றே குறித்திருக்கிறார்கள். அதை திருநெல்வேலி என மாற்ற, வெள்ளையத்துரைக்கு எடுத்துச் சொல்ல, அன்று படித்திருந்த நம்மவருக்குச் துணிவில்லை போலும். கொள்ளிடம் கோலிரூனாம் (Coliron). வெள்ளையருக்கு ட, டி சரியாக வரவில்லை போலும். ர, ரு நன்றாக வந்திருக்கிறது.

தின்னவேலி மாவட்ட ஆவணம் - A.J.Stuart M.C.S., திருச்சினாப்போளி (Trichinopoly) ஆவணம் - F.R.Hemingway I.C.S., வட ஆற்காடு மாவட்ட ஆவணம் I, II - Arthur F.Lox M.C.S., பெல்லாரி மாவட்ட ஆவணம் - John Kelsall, தஞ்சாவூர் மாவட்ட ஆவணம் - F.R.Heminginny I.C.S., கோயம்புத்தூர் மாவட்ட ஆவணம் - Fa. Nicholson, போன்றவை படித்ததில் முக்கியமானவை. புத்தகம் எழுதும்போது மேலதிகக் தகவலுக்கு தின்னவேலி மாவட்டம் பற்றி முதலில் பதிவிட்ட H. R. Pate மேனுவலும் வாசித்தோம். அவ்வாறே நீலகிரி மாவட்ட ஆவணம் - W. Francis பதிவையும் எழுதும்போது படித்தோம்.

இந்திய மக்கள் கணக்கெடுப்பு - சென்னை (Census of India - 1891, Madras) படித்ததில் மிகவும் பயனுள்ள புத்தகம். முழுமையாகவேப் படித்து குறிப்புகள் எடுத்துக் கொண்டோம்.

தமிழகத்தின் ஊர்ப் பெயர்களை அறிவதற்காக, தமிழகம் ஊரும் பேரும் - ரா.பி.சேதுப்பிள்ளை வாசித்தோம். நூலின் இறுதிப்பகுதியில் வரும் ஆன்மீக ஊர்ப்பெயர்கள் தவிர்த்து முழுமையாகவே வாசித்தோம்.

பழைய தமிழ்ச் சொற்களைக் கண்டறிய பிங்கல முனிவர் இயற்றிய பிங்கலந்தையென்னும் பிங்கல நிகண்டு முழுமையாகவே வாசித்தோம். மிகவும் பயனுள்ள நூலாக அமைந்ததில் எமக்கு மிக்க மகிழ்ச்சி.

மூ.அருணாசலம் பதிப்பித்த முக்கூடற்பள்ளு முழுமையாகப் படித்தோம். நூலின் பழஞ்சொற்கள் மதிப்பானவை. நூலில் இடம்பெற்றுள்ள ஆராய்ச்சிக் குறிப்பும், பின்னிணைப்பாக சேர்க்கப்படுள்ள பிற பள்ளு வகைகளின் பட்டியலும் நன்று.

மயில்வாகனம் புலவர் எழுதிய யாழ்ப்பான வைபவமாலை, குல. சுபாநாதன் முத்துராசக் கவிராயரின் கைலாய மாலை பதிப்பு நூல்களை மேலோட்டமாக வாசித்தோம்.

சீலத்திரு கச்சியப்ப முனிவர் அருளிய பேரூர்ப் புராணத்தின் பள்ளுப்படலம் படித்தோம்.

சென்னைப் பல்கலை வரலாற்றுப் பேராசிரியரான வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதரின் (V.R.Ramachandra Dikshigar M.A.,) Origin and Spread of the Tamils பேச்சுத் தொகுப்பு வாசித்தோம்.

மு.வரதராசனாரின் அறமும் அரசியலும் விசயா பதிப்பகத்திலிருந்து வாங்கிப் படித்தோம்.

இறுதியாக கங்கா தேவியின் மதுரா விஜயம் நூல் பற்றிய ஹர ஹர சாஸ்த்ரி மற்றும் சீனிவாச சாஸ்திரிகளின் முன்னோட்டம் வாசித்தோம்.

இப்புத்தகங்கள் போக ஏராளமான கட்டுரைகள், விக்கிபீடியா தகவல்கள் படித்தோம். குறிப்பாக டி.டி.கோசாம்பியின் பண்டைய இந்தியா பற்றிய கட்டுரைகள் மிகவும் மதிப்பானவை. அவ்வாறே அம்பேத்காரின் சில கட்டுரைகள், பதிவுகள் வாசித்தோம்.

2015 - இல் நாம் யார் புத்தகத்தை எழுதியபோது காணொளிக் காட்சிகள் இந்தளவிற்குப் பெருகியிருக்கவில்லை. தற்போதோ அனைத்துக் தகவல்களும், வரலாறுகளும் காணொளிகளாகவே இணையத்தில் கிடைக்கின்றன. இந்த மூன்றுமாத இடைவெளியில் யாம் பலதரப்பட்ட காணொளிகளையும் பார்த்தோம். குறிப்பாக பல்வேறு நாட்டு மக்களின் வரலாறுகள், மொழி வரலாறுகள்.

யாம் உலகின் பெரும்பாலான மொழிகளின் அரிச்சுவடி. எண்ணுப் பெயர்கள், உறவுப் பெயர்கள், வணக்க முறைமைகள், விலங்குப் பெயர்கள் போன்றவற்றை காணொளியாகப் பார்த்தோம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், பெர்சியம், துருக்கியம், குர்தியம், அரபியம், எபிரேயம், கிரேக்கம், இலத்தீனம், எசுப்பானியம், போர்த்துக்கீசியம், ஜெர்மானியம், ருஷ்யம், சீனம், கொரியம், சப்பானியம், மங்கோலியம் மற்றும் ஏராளமான ஆப்பிரிக்க மொழிகளின் காணொளிப் பதிவுகள். அவ்வாறே குறிப்பிட்ட சில மக்களின் பண்பாடுகள், ஆன்மீகம், அரசியல் போன்ற காணொளிகள்.

மத்திய ஆசியப் பகுதியில் வாழும் குர்து மக்கள் பற்றிய காணொளிகள் அதிகமாகப் பார்த்தோம். அம்மக்களுக்கும் பல்லவர்களுக்கும் ஏதேனும் தொடர்பிருக்குமோ எனும் வகையில் ஏராளமான காணொளிப் பதிவுகளைக் கண்ணுற்றோம். அவ்வாறே பாரசீகம், குர்தியம் மற்றும் துருக்கியம் மொழிகளுக்கிடையேயான மொழித் தொடர்புகள், பண்பாட்டு உறவுகள் குறித்தும் தேடிப் பார்த்தோம்.

எபிரேய மொழி, மதம், இசுரேல் வரலாறு, இசுரேல் - பாலத்தீன முரண்பாடு குறித்தும் ஏராளமான காணொளிகள் பார்த்தோம்.

சுமேரிய நாகரிகம், எகிப்தியப் பண்பாடு குறித்தான காணொளிகளும் பார்த்தோம். ஆப்பிரிக்கப் பண்பாடு பற்றி ஏராளமான காணொளிகள் கண்டோம். அவற்றைப் பார்க்குந்தோறும், தேடுந்தோறும் வந்துகொண்டே இருக்கின்றன. ஆப்பிரிக்காவில் எத்தனை விதமான மக்கள், மொழிகள், பண்பாடுகள்.. கண்கள் போதாது. முக்கியமான பழங்குடிகள் பற்றிய சில காணொளிகள் கண்டோம். காணொளிகளைப் பார்க்கும்போதும் தேவையான குறிப்புகளை எடுத்துக் கொண்டோம். குறிப்பாக காணொளிகளின் பின்னூட்டங்கள் எமக்கு மிகவும் உவப்பானவை. யார் யாரோ எங்கிருந்தெல்லாமோ பின்னூட்டங்கள் இடுகின்றனர்.

சிலர் மிகச் சிறப்பான பயனுள்ள பின்னூட்டங்களைப் பதிகின்றனர். காணொளியில் கிடைக்கும் தகவல்களைவிட பின்னூட்டத் தகவல்கள் பலவித விரிவுகளையும் நுட்பங்களையும் அளிக்கின்றன.

மதிப்பிற்குரிய பாவாணர் ஒரு கருத்தைப் பதிவிட்டுள்ளார். ஆப்பிரிக்கர் மதிப்புக் குறைந்தவராகவும், பண்பாடற்றவராகவும், எளியவராகவும் நினைக்கப்படுகின்றனர். உண்மையில் ஆப்பிரிக்கர்கள் உயர்ந்துள்ள அளவுக்குக்கூட நாம் (தமிழர்கள்) உயரவில்லை என வருத்தம் தோயக் குறிப்பிடுகிறார். எமக்கும் அது சரிதான் எனப்படுகிறது. தமிழர்களாகிய நாம் நமது மொழி உயர்ந்தது, நமது பண்பாடு சிறந்தது, நாம்தான் உலகிற்கு மொழியையும், பண்பாட்டையும் கற்றுக்கொடுத்தோம் என எவ்வளவோ பேசியும் எழுதியும் வருகிறோம். அது உண்மைதானா? ஆம் எனில் தமிழர்களாகிய நாம் தற்போது எப்படி இருக்கிறோம்? யாம் கடந்த சில வருடங்களாகவே இணையத்தை அதிகமாகப் பார்த்து வருகிறோம். எமக்குத் தெரிந்தவரை, யாம் அறிந்தவரை, மற்ற உலகினரை விட தமிழரது பின்னூட்டங்கள் மிகமிக மோசமாக இருக்கின்றன. உண்மையைச் சொல்வதானால் மிகவும் அருவறுப்பாக இருக்கின்றன. தமிழர் இடும் பின்னூட்டங்களைப் படித்தால் குமட்டலும், வாந்தியும் வருவது உறுதி. அத்தனை பதிவுகளிலும் அவ்வளவு தரம்தாழ்ந்த, அசிங்கமான சொற்கள்.

ஆப்பிரிக்கா இடும் பின்னூட்டங்கள் தரமானவையாக இருக்கின்றன. குர்துக்களின் ஒரு பின்னூட்டம் பார்த்தோம். குர்துமொழியானது பார்சி மற்றும் துருக்கி மொழிகளுள், எதனுடன் நெருங்கிய உறவுள்ளது என்பது விவாதம். அறிவுப்பூர்வமான பின்னூட்டங்கள். ஆயிரக்கணக்கான பின்னூட்டங்களில் ஒரேயொரு வசைச்சொல்கூட இல்லை. மதுரை நாயக்கர், கம்மா நாயக்கரா அல்லது பலிசா நாயக்கரா என ஓர் விவாதம். நல்ல ஆரோக்யமான, ஆதாரமான பின்னூட்டங்களை இட்டிருக்கிறார்கள் நாயக்கர்கள். தமிழர் பின்னூட்டங்கள்?

எடுத்த எடுப்பிலேயே திட்டுக்கள், வசைச்சொற்கள். குறிப்பாக மாற்று அரசியலாளர்கள்மீது, மாற்றுச் சமுதாயத் தலைவர்கள்மேல். சாதித் தமிழருக்கு மண்டையில் சரக்கு இருந்தால்தானே பின்னூட்டம் இடுவதற்கு. எதைப் பற்றியும் பெரிதாக ஒன்றும் தெரியவில்லை. இன்ன சாதியார் இப்படித்தான் என பொதுப்புத்தியில் பதிந்திருக்கிறார். அதையே அத்தனை பின்னூட்டங்களிலும், அது

சாதியானாலும், மதமானலும், அரசியல்பதிவாக இருந்தாலும் அப்படியே போட்டு வைக்கிறார். எம்மளவில் சில பெயர்கள் நினைவிலுள்ளன. இவர்கள் அனைத்துப் பின்னூட்டங்களுக்கும் போய் மோசமான வசைச்சொற்கள் பதிவதையே தொழிலாகக் கொண்டுள்ளார் போலும். மூடத் தமிழர்கள்.

தேவேந்திரரும், மீனவரொருவரும் யார் பாண்டியர் என விவாதிக்கிறார்கள். ஓரளவிற்குத் தரமாக விவாதிக்கிறார்களே என நினைக்கும்போது தரமற்ற சொற்கள் ஆரம்பித்துவிடுகின்றன. மீனவத் தோழரின் பதில்கள் அருமை. தேவேந்திரரால் பதில் சொல்ல முடியவில்லை. மீனவத் தோழர் சொல்கிறார். வருணன், வாரணன், கண்ணன், திருமாலாம். வருணன் திருமால் என்கிறார். மீனவர்கள் திருமால் வழிபாட்டோடு தொடர்புடையவர்கள் என்கிறார். பாண்டியர்கள் சிவனோடு நெருங்கியவர்கள் என ஏராளமான பதிவுகள் இருக்க, இது புதிய தகவலாக இருக்கிறது. சான்றாக மீனவப் பெண்கள் கருடத்தாழி அணிவதை சுட்டிக்காட்டுகிறார். பாண்டிய அரச மரபின் பல்வேறு பெயர்களைச் சுட்டிக்காட்டி, பாண்டிய குலத்தவர் மீனவப் பரதரோடு நெருங்கியவர் என்பதைச் சுட்டுகிறார். இன்னும் சற்றே கூடுதலான பின்னூட்டங்களைப் பெற்றிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

எதற்காக இவ்வளவும் கூறுகிறோமெனில், யாம் எந்த அளவிற்கு எம்மைத் தயாாப்படுத்திவிட்டு, தயார்படுத்திக்கொண்டு புத்துலகம் செய்வோம் இரண்டாம் பகுதியை எழுதியிருக்கிறோம் என்பதைக் குறிப்பிடவே. இவ்வளவு படித்துவிட்டு எழுதினாலும்கூட மனதுள் போதவில்லையோ எனும் எண்ணம் உண்டாகிறது. கல்விக்குக் கரை ஏது?

இவ்வளவு படித்ததும், எழுதியதும் தமிழ்ப் பண்பாடு உலகெல்லாம் எந்தளவிற்குப் பரவிக் கிடக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டவே. குறிப்பாக பண்டையத் தமிழர், அவர்தம் பண்பாடு, உலகில் எத்தகைய சிறப்பிடம் பெற்றிருக்கிறது என்பதைத் தெளிவாக்கவே.

உலகெங்கும் தமிழ்மொழி பரவியிருக்கிறது, தமிழின் வேர்கள் படர்ந்துள்ளன, தமிழர் பண்பாடு சிறந்துள்ளதெனில், அதற்குக் காரணம் யார்? தமிழகத்தில் இந்தக் கேள்வியைத் தவிர்க்கவே முடியாது. ஏனெனில் தமிழ்

நிலத்தில் தற்போதுவரை தமிழர் தம்மை சாதியாகவே உணர்கிறார். தமிழர் சாதிய நோக்கோடே செயல்படுகிறார். அவருக்கு அனைத்துமே சாதிதான்.

தமிழ், பாண்டியரால் அகிலமெங்கும் பரவியது எனில் பாண்டியர் யார்? அவர் என்ன சாதி ? தமிழகத்தில் பாண்டிய அரசுக்கு, பாண்டியர் பெயருக்கு அனைத்துச் சாதிகளுமே சொந்தம் கொண்டாடுகின்றன. நாயக்கரும் பாண்டியனென்கிறார். உண்மை என்ன ? அறிய வேண்டுமல்லவா ?

சேரர்களின் தமிழ்ப்பற்று எத்தகையது? பெரும்பாலும் தமிழர் அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. பாண்டியருக்குத்தான் கடும்போட்டி நிலவுகிறது. சேரரைச் சொந்தம் கொண்டாடும் சாதிகள் குறைவு. பெரும்பாலான சாதிகள் பொதுவில் மூவேந்தரும் தாங்களே எனச் சொல்லிவிடுகின்றன. சாதிப்பெருமை பேசும் தமிழர், அனைத்து அரசர்களும் தம்சாதி எனப் பாடும், படமெடுக்கும், படைதிரட்டும் சாதிகள், ஏதேனும் அறிவியல் முறையிலான, மற்றவர் ஏற்றுக் கொள்ளும் அளவிலான ஆய்வுகளை, சான்றுகளைச் சொன்னதுண்டா, செய்ததுண்டா எனில், அறவே இல்லை எனச் சொல்லிவிடலாம். சாதித் தமிழர்கள் இத்திசை நோக்கி சிறுதுரும்பைக்கூட கிள்ளிப் போடவில்லை.

முதலில் தமிழர் அவரவர் சாதி குறித்தே ஒன்றும் அறிந்திருக்கவில்லை. தமிழ்மொழி குறித்தோ, சங்கப்பெருமை குறித்தோ, தமிழின் சிறப்பு பற்றியோ பெரிதாக ஒன்றும் தெரியவில்லை. யாம் சொல்லுவது பெரும்பான்மையான தமிழர்களைப் பற்றி. ஒரு சிறுகூட்டத்தார் மட்டுமே ஓரளவிற்கு அறிந்துள்ளார். மற்றபடி, பொதுவான தமிழருக்கு எந்தவிதமான மொழிப்பற்றோ, தமிழர் பெருமிதமோ இல்லை. வரலாற்று அறிவு சுத்தமாக இல்லை. படித்து பட்டம் பெற்ற தமிழருக்குக்கூட வரலாற்று அறிவு இல்லை எனும்போது, ஊர்ப்புறங்களில் வாழும் சாதாரணத் தமிழர்களிடம் வரலாற்றை எப்படி எதிர்பார்ப்பது? அவரவர் ஊர்களைப் பற்றிய அறிவுகூட, வரலாறுகூடத் தெரியவில்லை எனும்போது, தமிழ் வரலாறு, இந்திய வரலாறு, உலக வரலாற்றை எப்படி அறிவது ?

தமிழரை மட்டம் தட்டுகிறோமோ? தமிழர் அறிவைக் குறைவாக மதிப்பிடுகிறோமோ? தமிழர் முதலில் தம்மை அறிய வேண்டும். தமது நிலையை

உணர வேண்டும். உலகில் தமது இடம் என்ன என்பதைத் தெளிய வேண்டுமல்லவா?

யாம் வியப்புக் கொள்வது, அறிவின்மீது நாட்டமுடைய தமிழருக்கு வரலாற்று பிரஞ்ஞை ஏன் இல்லாமல் போனது? தமிழர் தம்மை இருநூறு வருடங்களுக்கு முன்னர் ஆட்சி புரிந்த நாயக்கர் அரசு பற்றிக்கூட அறிந்திருக்கவில்லை. தமிழகத்தின் அரசியலாளர்கள் மக்களிடம் எது குறித்துமே பேசவில்லை. எந்த ஊரிலும் வரலாறு குறித்தான பேச்சுக்கள் எழவே இல்லை. அரசியலாளர்கள் எதிராளிகளை வசைபாடினார்களேயொழிய வரலாற்றைப் பேசவில்லை அரசியல் கட்சிக்காரர்கள் ஊர்களில் களப்பணியாற்றவே இல்லை. அரைநூற்றாண்டுக்கும் மேலாக, காசு கொடுத்தால்போதும், ஓட்டைப்பெற்று ஆட்சிக்கு வந்துவிடலாம் எனும் தைரியத்தில், மக்களிடம் எது குறித்துமே அரசியலாளர்கள் பேசவில்லை. அரசியல் தலைமைகள் பேசியதெல்லாம் அடுத்தவர் மீதான வசைகளே. அதுவும் மணிக்கணக்கில்.

பட்டப்படிப்பு முடித்த தமிழர்கள், ஏன் அவரவர் ஊர்களில் மக்களைக் கூட்டி வரலாற்றைப் பேசவில்லை? தமிழகத்தில் முன்னுதாரணமே இல்லை. படித்துவிட்டாலே, அறிவைப் பெற்றுவிட்டாலே, படித்தவருக்கு பொது மக்களிடமிருந்து ஒரு விலக்கம் வந்துவிடுகிறது. படித்தவர் அவரது உறவுகளிடம்கூட ஒட்டுவது இல்லை. படித்து வேலைகிடைத்தவுடன் அருகாமை பட்டணங்களில் அல்லது பணிசெய்யும் பட்டணங்களில் குடியேறி விடுகிறார். ஊர்ப்புறங்களில் படித்தவர் பெரும்பாலும் முன்னரே படித்துவிட்ட குடும்பங்களிலேயே பெண்ணெடுக்கிறார். அவர்கள் பெரும்பாலும் பட்டணங்களில் தங்குபவர்களாக இருக்கிறார்கள். முதலாம் அல்லது இரண்டாம் தலைமுறைப் படித்தவரான அப்பெண்ணும் ஊர்களில் தங்குவதை விரும்புவதில்லை. எமதனுபவத்தில் முதல் தலைமுறையாகப் படித்தவர்கூட, சொந்த ஊர்களில் தங்கவில்லை எனும்போது, வேறு ஊர்க்காரர், பட்டணத்தார் எப்படி ஊர்களில் தங்குவார்கள்?

பொதுத் தமிழருக்கு வரலாற்றறிவு, மொழியறிவு, உலக அறிவு சொல்லிக்கொள்ளும் படியாக இல்லை. உண்மையில் இவற்றின் மீது நாட்டமே இல்லை. எனினும் பேசிப்பார்த்தால் வீம்புக்காகவாவது தமக்கு எல்லாம்

தெரிந்திருப்பதுபோல் காட்டிக்கொள்வது தமிழரின் தனிச்சிறப்பு போலும். யாம் இவ்வளவு படித்திருந்தும், பேராசிரியர் பணிசெய்தும், எமது தந்தையைப் பேசிச் செயிக்க முடியாது. படிச்சவங்களுக்கு ஒண்ணுமே தெரியாது என்பது அவரது அரிய கண்டுபிடிப்பு. அவர் கூற்றில் உண்மை இல்லாமலும் இல்லை.

தமிழ் நிலத்தின் வரலாற்றுப் பேராசிரியர்கள், தமிழகத்தின் எந்த ஊருக்கும் வரவில்லை. மக்களிடம் வரலாற்றைப் பேசவில்லை. ஒவ்வொரு ஊருக்கும் ஒரு வரலாறு இருக்கிறது. அவற்றை வெளிக்கொணர வேண்டியது வரலாறு படித்த ஆசிரியர்கள், பெரும் பேராசிரியர்கள். அன்னார்கள் வகுப்பறைகளை விட்டு வெளியில் வரவேயில்லை. நம் வரலாறு இது, நமது தமிழின் வரலாறு இது, நமது பாண்டிய மன்னர்களின் வரலாறு இது, சேரர்களின் சிறப்பு இது, சோழர்களின் பெருமை இது, பல்லவர்களின் உயர்வு இது என எதைப்பற்றியும் மக்களிடம் பேசவேயில்லை.

மெத்தப் படித்த தமிழர்கள் தாமுண்டு, தமது வேலையுண்டு, தமது பெண்டிர், குழந்தைகள், சம்பாத்தியம் உண்டு என இருந்துவிட்டார்கள்.

விலங்கியல் படித்த பேராசியர்கள் நுண்ணோக்கிகளைத் தூக்கிக் கொண்டு மக்களிடம் வந்திருக்க வேண்டும். எளிய மக்களை நுண்ணோக்கியில் பார்க்கச் செய்திருக்க வேண்டும். உணவு என்றால் என்ன, நாம் உண்ணும் உணவு என்னாகிறது என்பதையெல்லாம் மக்களைக் கூட்டி விளக்கியிருக்க வேண்டும். சுகாதாரத்தின் மேன்மை குறித்துப் பேசியிருக்க வேண்டும். நுரையீரல் எவ்வாறு வேலை செய்கிறது, இருதயத்தின் அமைப்பு என்ன என்பதையெல்லாம் அந்த எளிய மனிதர்களிடம் பேசியிருந்தால் எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும்?

தமிழ்ப் பேராசிரியர்கள் என்னவெல்லாம் செய்திருக்கலாம்? எத்தனை எத்தனை கதைகள் சொல்லியிருக்கலாம்? உலகின் மொழிகளையெல்லாம் இம்மக்களுக்கு அறிமுகப்படுத்தியிருக்கலாமல்லவா.

பொறியியலாளர்கள் இயந்திரங்களைச் கழற்றி மாற்றி அவற்றின் செயல்விளக்கத்தை மக்களுக்குக் காட்டியிருக்க வேண்டும். ஒரு பொருளை எவ்வாறு வடிவமைப்பது, எவ்வாறு உண்டாக்குவது என்பதையெல்லாம்

செயல்விளக்கமாகக் காட்டியிருந்தால், மக்கள் அறிவியலை நன்கு புரிந்திருப்பார்கள்.

படித்தவர்கள் இதெல்லாம் ஊர்க்காரர்களுக்கு, படிக்காத எளிய மக்களுக்கு எங்கே புரியப்போகிறது என நினைத்து விட்டனர். மெத்தப்படித்த அறிவாளிகள் ஊர்களை எட்டிக்கூடப் பார்க்கவில்லை. அரசியல்வாதிகளும் பட்டணங்களிலேயே அதிக வாக்குகள் உள்ளதைத் தெரிந்து கொண்டு ஊர்களை ஒதுக்கி விட்டனர். பொதுவுடமைத் தோழர்கள்கூட ஊர்களுக்கு வரவில்லை என்பதே உண்மை. தோழர்கள் அறிவியலைக் கையிலெடுக்கவில்லை. மக்களைத் திரட்டி வரலாறு பேசவில்லை. கதைகள் சொல்லவில்லை.

இவ்வளவு அறிவிருந்தும் தமிழர் மனத்தின் வலிமையை உணராதது ஏன்?

புத்துலம் செய்வோம் இரண்டாவது புத்தகத்தில் எமக்கு மனநிறைவளித்த செய்தி, மானுடப் பண்பாட்டிற்குக் காரணம் இந்தியா என்பது. இது அறிய கண்டடைதல் எனலாம். எமக்கு இளவயது முதல் பிடித்தமான படிப்பே வரலாறுதான். இதை அறிவதற்காகத்தான் இயற்கை எம்மைத் தயார்ப்படுத்தியது போலும். யாம் பல ஆண்டுகள் மானுடப் பரிணாமம் குறித்துப் பேசி வந்துள்ளோம். குறிப்பாக மனிதரின் பண்பாட்டுப் பரிணாமம், எதிர்காலம் பரிணாமம் குறித்தெல்லாம் பல விதங்களில் சிந்தித்து வந்துள்ளோம். மானுட பண்பாட்டுப் பரிணாமம் இந்தியாவில் நிகழ்ந்திருக்கலாம், அதுவும் தமிழ் மொழியால் எனும் நினைப்பு அதிக மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. தமிழனாக எமது மனம் இன்பத்தில் திளைக்கிறது. நமது முன்னைப் புலவர் மரபின் பெருமிதமல்லவா இது.

யாம் தமிழ்மரபின் அருங்கனவை ஒரு வடிவத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். தமிழால் மானுடப் பண்பாட்டுப் பரிணாமம் நிகழ்ந்தியிருக்கலாம் எனத் தமிழரை ஒப்புக்கொள்ள வைக்கும் அளவிற்கு, இருக்கலாமோ என உலகத்தவரை எண்ண வைக்குமளவிற்கு, யாம் சிந்தனையை விதைத்திருக்கிறோம். சிந்தனை மேலும் செழிப்பாகுமேயன்றி குறைவுபடாது என்பது திண்ணம்.

நமது புலவர் மரபுமீது யாம் பெருமதிப்புக் கொண்டுள்ளோம். தமிழின்மீது பெருங்காதல் கொண்ட நமது புலவர் பெருமக்கள் உறுதியாகச் சுட்டுகிறார்கள் -

தமிழே உலகின் முந்துமொழி. நம் பேரன்பிற்குரிய புலவர் பெருமக்கள் மிகுந்த அறிவுமிக்கோர். உலகின் வரலாற்றை அறிந்தோர். ஆராய்ந்தோர். பிற மொழிகளிலும் நுட்பமான தேர்ச்சி கொண்டோர். சுருக்கமாகச் சொல்வதானால் அக்கருத்து அவர்களது உள்ளிருந்து எழுந்தது. அது ஒருபோதும் பொய்யாகாது.

நாம் எது சொன்னாலும் அது நம்மொழிமீது கொண்ட பற்றால், அன்பால் சொல்வதாகவே பிறர் எடுத்துக் கொள்வர், கொண்டார். எனினும் தகுந்த சான்றுகள் வழங்கினால் அவர்களுக்கு வேறு வழியில்லையல்லவா.

யாம் தமிழில் பெரும்புலமை கொண்டோனல்ல. இம்மட்டுக்குமான தமிழ் அறிவேகூட எமது நீடித்த வாசிப்பால் வந்ததே. யாம் தமிழ்மீது கொண்ட பற்றால், தமிழ் இலக்கியம் சார்ந்து சற்றே வாசிப்பதால், ஓரளவிற்குத் தமிழில் தேர்ச்சி உள்ளது. எனினும் இப்புத்தகத்தில் தேர்ந்த தமிழ்ப் பேராசிரியர் போன்று நிறைய எழுதியிருக்கிறோம். சொற்பிறப்பைச் சுட்டியிருக்கிறோம். தமிழ் அறிஞர் பிழை பொறுக்க மாட்டார். குறிப்பாக பொருள் குற்றம். யாம் நிறைய எழுதியிருக்கிறோம். பிழை இருக்கலாம். அது வேண்டுமென்றே செய்த பிழையல்ல. தமிழின் மீது கொண்ட பற்று என எடுத்துக் கொள்க.

தமிழ்தான் உலகின் முந்து மொழியா எனில், எமது அறிவிற்கு எட்டியவரை ஆம் என்றே தெரிகிறது. உலகில் தற்போதும் ஏராளமான பழங்குடி மொழிகள் புழக்கத்திலுள்ளன. அவை மிகவும் எளிய சொல்லமைப்பைக் கொண்டுள்ளதும் கவனிக்கத் தக்கது. எனினும் மானுடப்படி நிலையில், குறிப்பிட்ட அளவு வளர்ச்சியும், எளிமையும், முயன்று சொற்களை ஒலிக்காத தன்மையும், வலிந்துபேசத் தேவையில்லாததும், இயல்பாகப் பேசக்கூடியதும், மெல்லொலிகளைப் பயன்படுத்தவதும், பிற மொழிகளின் தேவையில்லாததும், தமிழ் உலகின் முதன்மைமொழியாக, பண்பட்ட மொழியாக இருக்கலாம் எனும் கருத்தை வலுவாக்குகின்றன.

உலகின் பழமையான மொழிகள் அனைத்திலும் தமிழ் கலந்துள்ளது. உலகின் அனைத்துப் பகுதிகளிலும் தமிழின் வேர் பரவியுள்ளது. எனில் முன்னர் உலகமெங்கும் புழங்கிய பெருமொழியாக தமிழ் இருந்திருக்க வேண்டும். கால மாற்றத்தில் தமிழ் ஒலிப்பில் மாற்றங்கள் ஏற்பட்டு பல்வேறு மொழிகளாகப் பிரிந்திருக்க வேண்டும்.

தமிழ் மொழியின் பெருமையைத் தமிழர் அறிந்திருக்கிறாரா? எம்மைக் கேட்டால் தமிழருக்கு அவர்தம் சாதியே முதன்மை இடம் பெற்றுள்ளது. தமிழருக்கு தமிழ், தமிழர் பெருமிதத்தை விட, சாதியே தலை தூக்கி நிற்கிறது. யாம் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் எமது எழுத்தில் தமிழரது சாதிவெறியைக் குறிப்பிட்டே வந்துள்ளோம். எனினும் கடைசியாக ஒருமுறை பேசிவிடுவதில் தவறில்லையே.

தேவேந்திரர் தமிழரது சாதிப்பற்றை, சாதிவெறியை, சாதி ஆணவத்தை, சாதித் திமிரை நன்கறிந்திருப்பார். அருகாமைக் காலங்களில் தேவேந்திரரும் சாதி ஆணவம் கொண்டெழுகிறார் என்பது திண்ணம். தேவேந்திர குலத்தார் சாதிப்பற்றை நீக்கி, தமிழ்ப் பற்று, மானுடப் பெருமையை முன்னெடுக்க வேண்டும். நம் முப்பாட்டன் பாடியவாறு, நமக்கு உலகின் மானுடரெல்லாம் உறவினராக வேண்டும்.

எமது எழுத்தில் தமிழக ஊர்களைப் பற்றி, குறிப்பாக எமது ஊரைப் பற்றி நிறையவே எழுதியுள்ளோம். எனினும் கடைசியாக ஓரிரு வார்த்தைகள் குறிப்பிட்டு விடுவது நன்று எனத் தோன்றுகிறது. எமது ஊரைப் போலவேதான் தமிழக, இந்திய, உலக அளவில் ஊர்கள் அமைந்துள்ளன என்பது தெளிவு.

கடந்த இருவாரமாக எமதூரில் இருக்கிறோம். ஊரில் தண்ணீர்ப் பிரச்சனை உச்சத்தில் இருக்கிறது. குறிப்பாக தெற்குத் தெரு எனப்படும் தேவேந்திரர், நாடார், அருந்ததியர் தெருக்களுக்கு மேல்நிலைத் தொட்டியிலிருந்து நீரே வருவதில்லை. பலமாதங்களாக உப்புத் தண்ணீர் மோட்டாரும் பழுதாகக் கிடக்கிறதாம். புழக்கத்திற்குக்கூட தண்ணீர் இல்லாமல் மக்கள் தவிக்கிறார்கள். உப்புத் தண்ணீருக்கு மக்கள் தவியாய்த் தவிப்பதை என்ன சொல்ல.

முன்னர் ஊர் முழுக்கவே மேல்நிலைத் தொட்டியிலிருந்து தண்ணீர் வந்தது. தெற்குத் தெருவிற்குகென்று தாமிரபரணி நீரின் மேல்நிலைத்தொட்டி கட்டி, சில வாரங்கள் தண்ணீர் விட்டிருக்கிறார்கள். இதைக் காரணமாக காட்டி, ஊரின் பொதுத் தண்ணீரை குறைத்துவிட்டார்கள் எனத் தெரிகிறது. தற்போது தாமிரபருணித் தண்ணீரும் வருவதில்லை. ஊரின் பொதுநீரும் வருவதில்லை. உப்புத் தண்ணீரும் இல்லை. மக்கள் என்ன செய்வார்கள்? குடங்களைத் தூக்கிக் கொண்டு அலைகிறார்கள்.

மண்டபசாலைப் பகுதியிலிருந்து மூன்று குடிநீர் லாரிகள் தெருப்பக்கம் வருகின்றன. குடம் பத்து உருபா. நாங்கள் ஒருநாள்விட்டு ஒருநாள் என பத்துக் குடம் தண்ணீர் வாங்குகிறோம். எங்கள் வீட்டு ஆழ்துளைத் தண்ணீர் சப்பையாக இருக்கிறது. குளிக்கக்கூட பயனாகவில்லை. பாத்திரங்கள் கருப்பபடிக்கின்றன.

தெற்குத்தெரு குடிநீருக்கென்று அரசு பத்து இலக்கம் உருபா ஒதுக்கியிருக்கிறது. ஓப்பந்ததாரர் செட்டிகுளம் அருகே நல்ல தண்ணீர் இருப்பதை அறிந்து அங்கே ஆழ்துளை போட்டுவிட்டாராம். கண்மாய் நிலமென்பதால் அரசு நிலமெனக் கருதி தெருக்காரர்களும் கவனிக்கவில்லை போலும். துளை போட்ட இடம் இராசகோபாலபுரத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணிக்குச் சொந்தமான பட்டா நிலமாம். பட்டா நிலத்தில் எப்படி போர் போடலாம், தண்ணீர் எடுக்கக் கூடாது என அந்த ஊர் நாயக்கர்கள் தடுத்து விட்டனர். உள்ளூர் நாயக்கர்களை அழைத்துப் போய் தேவேந்திரர்கள் பேசிப் பார்த்திருக்கிறார்கள். அவர்கள் தரப்பில் உறுதியாக மறுத்துவிட்டார்கள். அந்த நிலத்தை யாம் அறிவோம். அவ்விடத்தில் சிறியதொரு கண்மாய் இருந்தது. முன்னர் கோடையிலும் அங்கே நிர் தேங்கியிருக்கும். தற்போது மண்ணை அள்ளி குண்டும் குழியுமாகவும் கிடக்கிறது. தேவேந்திர ஆழ்துளை அருகே, கண்மாய்க் கரையில் இராஜகோபாலபுரத்திற்கு துளைபோட்டு குடிநீர் எடுக்கிறார்கள். அது ஒன்றுக்கும் உதவாத இருபது சென்ட் நிலம். நிலத்தை நாங்களே விலைக்கு வாங்கிக் கொள்கிறோம் எனக் கேட்டார்களாம். அதற்கும் மறுப்பு. நாங்களென்ன வேளாண்மைக்காக நீரெடுக்கிறோம், குடிநீருக்குத்தானே எனக் கேட்டிருக்கிறார்கள். உங்கள் தெருக்காரர்களுக்கு எங்கள் நிலத்திலிருந்து குடிநீர் எடுக்க விடமாட்டோம் என உறுதியாக மறுத்து விட்டர்களாம். இராசகோபாலபுரத்து நாயக்கர் விடாததால் ஊரின் மேற்குச்சாலை ஓரத்தில் துளைபோட நீரோட்டம் பார்த்தார்கள். வாய்க்கால் ஓரமாக நல்ல தண்ணீர் இருப்பதைக் குறித்தார்கள். அடுத்த நாள் துளைபோட இயந்திரமும் வந்துவிட்டது முதல்நாள் கூடவே இருந்து நீரோட்டம் பார்க்க உதவிய தேவர், அது தமக்குச் சொந்தமான பட்டா நிலமென்றும், அங்கே ஆழ்துளை போடக் கூடாதென்றும் தடுத்து விட்டார்.

தெருக்காரர்கள் ஆணும், பெண்ணும் கூடிவிட்டார்கள். குறிப்பாகப் பெண்கள். தண்ணீருக்காக அலைவது அவர்கள்தானே. ஒருவரும் வேலைக்குச் செல்லவில்லை. யாம்கூட மாவட்ட ஆட்சித்தலைவரைப் பார்த்து மனுக்

கொடுப்போம், அல்லது அனைவரும் அவரது அலுவலகத்தை முற்றுமையிடுவோம் என்றோம். ஏற்கனவே பி.டி.ஓ.விற்குப் பழக்கமான சிலர் அவரிடம் பேசினார்கள். அவரே தெருவுக்கு வந்து மக்களைச் சந்திப்பதாகச் சொன்னார்.

தெருவிற்கு வந்த பி.டி.ஓ.விடம் சரமாரியாகக் கேள்வி கேட்டார்கள். ஊரின் பொதுத் தொட்டியிலிருந்து நாயக்கருக்கு ஒருநாள், தேவருக்கு ஒருநாள் என சுழற்சி முறையில் விடுவதை, தெற்குத் தெருவிற்கும் ஒருநாள் விடுங்கள் என்றார்கள். எமக்கு அப்போதுதான் தெரியும் ஊரில் இப்படி முறைபிரித்து குடிநீர் விடுவது. நாயக்கருக்கும், தேவருக்கும் சாதிச் சண்டை வந்ததால், இப்படியான ஏற்பாட்டை அரசு அலவலர்கள் எடுத்தார்களாம். எனில் தெற்குப் பகுதிக்கும் நீரைப் பகிர்ந்தளிக்க வேண்டுமல்லவா? கேட்டதற்கு அங்கும் நீர் பற்றாக் குறையாம்.

இரண்டுநாளில் துளைபோடவும், உப்புத் தண்ணீருக்கு ஏற்பாடு செய்வதாகவும் உறுதியளித்தார். சொன்னவாறே உப்புத் தண்ணீர் மோட்டாரை சரிசெய்து விட்டார்கள். மற்ற தெருக்காரர்கள்கூட உருளை வண்டிகளில் நீரெடுத்துச் செல்கிறார்கள். ஓடையின் ஓரத்தில் ஆழ்துளைபோட்டு மின் மோட்டாரும் பொருத்தியாயிற்று. குடித்துப் பாருங்கள் என எம்மிடம் புதிய ஆழ்துளை நீர் கொடுத்தார்கள். பொதுநீரைவிட இது சுவையாகத்தான் இருக்கிறது. போகப்போக எப்படி மாறும் எனத் தெரியவில்லை. இனி குழாய் பதித்து மேல்நிலைத் தொட்டிக்கு நீரை ஏற்ற வேண்டும்.

குழாய் மூலம் கொண்டு வருவதில் இன்னொரு சிக்கலும் இருக்கிறது. யாம் துருப்பிடித்தாலும் பரவாயில்லை, இருப்புக் குழாய் பதியுங்கள் என்றோம். பி.வி.சி. குழாயெனில் வரும்வழியில் அவரவர் விருப்பத்திற்கு திருட்டுத்தனமாக முக்கியக் குழாயை அறுத்து இணைப்பெடுத்து விடுகிறார்கள். செய்பவர்கள் ஆதிக்க சாதியினர். பிறர் தட்டிக் கேட்க இயலாதல்லவா.

முன்பு தாமிரபருணித் தண்ணீர் வந்தபோது இப்படி நடந்திருக்கிறது. இராசகோபாலபுரத்திலிருந்து பிரித்து தாமிரபரணி நீரை எங்கள் தெருத் தொட்டிற்கு அனுப்புகிறார்கள். தொட்டிக்கு தண்ணீரே வருவதில்லை. தண்ணீர் பிரித்து அனுப்புபவரோ உங்கள் தொட்டிக்கு தண்ணீர் அனுப்புகிறோம் என்கிறார். எனில் தொட்டிக்கு ஏன் வருவதில்லை எனத் தேடியிருக்கிறார்கள். வழியில் ஒரு தேவர் அவர் வீட்டிற்கு நீரை எடுப்பதைக் கண்டு பிடித்துவிட்டார்கள். ஆனாலும் அவரிடம்

எங்கள் தெரு தொட்டிக்குச் சொல்லும் நீரை வழியில் ஏன் இழுக்கிறீர்கள் எனக் கேட்க முடியவில்லை. தேவர் சமூக ஊராட்சி பெண் அலுவலரிடம் சொல்லியிருக்கிறார்கள். அவராலும் கேட்க முடியவில்லை. பின் பி.டி.ஓ விடம் முறையிட்டு, மிகவும் கடுமை காட்டியே அந்த இணைப்பை அகற்றியிருக்கிறார்கள். தேவேந்திரர் தூண்டித்தான் இணைப்பை எடுத்துவிட்டார்கள் என அந்தப் பையனின் அப்பா கோபம் கொண்டாராம். பொதுத்தொட்டிக்கு வரும் நீரை திருட்டுத்தனமாக மோட்டார் வைத்து உறிஞ்சுவார்களாம். அதைக் கேட்டால் திட்டுவார்களாம். இப்படித்தான் இருக்கிறது ஊர்களில் நீதியும், நியாயமும்.

கிழக்கிலிருந்து தாமிரபருணி நீர் வரும் வழியில் பெரும்பாலும் வீடுகள் இல்லை. அதற்கே இப்படியெனில், புதிய ஆழ்துளை நீரோ வடக்கிலிருந்து ஊரைத் தாண்டி வரவேண்டும். வரும் வழியில் மோட்டாரை இணைத்து நீரை எடுத்தால் தேவேந்திரரால் கேட்க முடியுமா? முடியாது என்பதே நிலைமை. கேட்டால் எதிர் கேள்வி வரும். அதைத் தடுத்தால், சாதி மோதலில்தான் முடியும். தேவேந்திரர்கள் அப்படியான ஆட்கள் இல்லை. யாமறிவோம். தற்போதுதான் ஓரளவிற்கு முன்னேறி வருகிறார்கள். முன்னேற்றம் மேலும் தொடர வேண்டும். பொறுமையாக இருந்து காரியங்கள் ஆற்ற வேண்டுமல்லவா.

தேவேந்திரர் பெருமைமிகு எமது ஊரில் தொடர்ந்து வாழ்ந்து வரவேண்டுமென விரும்புகிறோம். ஆதிதிராவிடர்களில் பெரும்பான்மையோர் ஊரைக் காலி செய்துவிட்டனர். எமது சிறுவயதில் செழித்திருந்த நாடார் குடியில் இன்று சிலரே உள்ளனர். எண்ணிப் பார்த்தோமெனில் ஐந்து குடும்பங்கள் மட்டுமே ஊரில் உள்ளன. மூவர் கடை வைத்திருக்கிறார்கள். ஒருவர் நிலக்கிழார். ஒரு குடும்பம் பால்மாடு வைத்துள்ளது. அவ்வளவுதான். அனைவரும் வெளியூர்களில் தங்கிவிட்டார்கள்.

தேவேந்திரர் வசதியாகிக் கொண்டே வருகிறார்கள். கூரைவீடு ஓட்டு வீடானது. ஓட்டு வீடுகள் காரை வீடுகளாகி வருகின்றன. வெளிநாடு சென்றவர்கள் கிழக்கே நிலம் வாங்கி பெரிய வீடுகளாகக் கட்டுகிறார்கள். படித்தவர்கள்கூட அருப்புக்கோட்டைக்கு இடம் மாறவில்லை. தேவேந்திரர் ஊரின்மேல் பற்றுக் கொண்டிருப்பது நன்கு தெரிகிறது.

எனினும் தேவேந்திரர் குடியின் சமீபகாலச் செயல்பாடுகள், குறிப்பாக குடிப்பழக்கம் பெருகியிருப்பது சரியல்ல. எண்ணிப் பார்த்தால் பாதிக்கும்மேல் தினமும் குடிக்கிறார்கள். தினமும் மதுபாட்டிலோடு சங்கமடத்தில் கூடுவதைக் கவனிக்கிறோம். நாளும் குடிப்பது, பகலிலும் குடிப்பது, குடியைக் கொண்டாடுவது ஏற்புடையதல்ல. உடல் உழைப்பிற்கு ஓரளவிற்கு நல்ல வருமானம் கிடைக்கும் நிலையில் அதை பிள்ளைகளின் படிப்பு, எதிர்காலம், சேமிப்பு என இருப்பதை விட்டு குடித்தழிப்பது முறையல்ல. தெருவில் நிறையப்பேர் குடிக்கு அடிமையாய் இருப்பது கண்டிக்கத்தக்கது.

தேவேந்திரர் தெருவில் கிறித்தவமும் கூடி வருவதைக் கவனிக்கிறோம். திருமணத்தின்மூலம் வந்த அருகாமை பெண்கள், கிறித்தவத்தை முன்னெடுக்கிறார்கள். எளிய பெண்களிடம் இவ்வளவு மத நம்பிக்கையா என வியப்பு உண்டாகிறது.

தெருவில் கருப்பசாமி குடும்பிடுவதில் மிகுந்த பற்று வந்திருப்பதும் தெரிகிறது. பிற சாதியர்போல் நாமும் வெகுவிமரிசையாக, திருவிழா போன்று கருப்பசாமியைக் கொண்டாட வேண்டும் என இளையோர் விரும்புகிறார்கள். இந்த வருடம் சிறப்பாகக் கொண்டாடினார்களாம். அடுத்த வருடம் இன்னும் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமெனப் பேசுகிறார்கள்.

புத்தகம் எழுத ஆரம்பித்த 2014 தொடங்கி 2019 வரையிலான எமதூரின் வளர்ச்சி என்ன? நிறை குறைகள்? பொருளாதாரம் வளர்ந்திருக்கிறது. ஊரின் புது வீடுகளே சான்று. நாயக்கரின் தெரு பெருத்திருக்கிறது. புதுவீடுகள் நிறைய முளைத்துள்ளன. சோலார் கம்பெனிக்கு நிலத்தை விற்று, அந்தப் பணத்தில் வீடுகள் கட்டியதாகச் சொல்லப்படுகிறது. அகம்படியாரிலும் நிறைய மாடிவீடுகள் தென்படுகின்றன.

ஆயினும், ஊர் ஆளரவமின்றிக் கிடக்கிறது. மக்கள் முகங்களில் மகிழ்ச்சியைக் காணோம். தண்ணீருக்குத் தவிக்கிறார்கள். பொதுத் தண்ணீர் குடிப்பதற்கு உகந்ததல்ல. யாம் ஊரில் இருக்கும்போது செட்டிகுளம்வரை நடை சென்றோம். அழகிய செவல் மண். ஏராளமான தோட்டங்கள். மாவும், கொய்யாவும், வாழையும், தென்னையும் என தோப்பாகக் கிடக்கிறது. சுவையான நீரை செடிகளுக்குப் பாய்ச்சுகிறார்கள். தோட்டக்காரர்களுக்கு, பண்ணைக்காரர்களுக்கு

நல்ல லாபம். அருகிலேயே சத்தான, சுவையான குடிநீரை வைத்துக்கொண்டு மக்கள் குடிநீருக்கு அலைவது, அரசு இயந்திரம் நல்ல தண்ணீர் எங்கே கிடைக்கும் எனத் தேடித் திரிவது வினோதம். மக்களுக்கு குடிநீரே முக்கியம், கொய்யாச் செடிகளுக்கு குடிநீர் போக பாய்ச்சிக் கொள்ளுங்கள் என அரசு ஏன் அங்கே துளைபோட்டு எங்கள் பகுதி ஊர்களுக்குக் குடிநீர் வழங்கக் கூடாது? இது யாம் யார் புத்தகத்திலேயே குறிப்பிட்டதுதான். மீள இப்போதும் வலியுறுத்தப்படுகிறது.

அரசுகள் தொலைவாகச் சிந்திக்கவே இல்லை. அரசியலாளர்கள் ஓட்டை மட்டுமே எண்ணியது பெருந்தவறு. ஊரில் நெல்விளைச்சல் சுத்தமாக இல்லை எனத் தெரிகிறது. எவர் வீட்டிலும் இது எங்கள் வயலில் விளைந்த அரிசி எனும் பேச்சு எழவில்லை. ஊரார் பொதுவிநியோக அரிசியையும் உண்பதில்லை. மாறாக சாக்குச் சாக்காக கடைகளில் வாங்குகிறார்கள்.

கடைகளில் வாங்கிச் செல்லும் அரிசியோ கர்நாடகத்தில் விளைந்தது. இதுவல்லவோ தமிழர் முன்னேற்றம். கர்நாடக பல்லாரி மாவட்டத்திற்கு அருகேயிருக்கும் கொப்பல் (Koppal) மாவட்டம், கரடாகி (Karatagi) தாலுக்கா, பெவினகள் (Bevinahal) ஊரின் அரிசி, எங்கள் ஊர் மக்களின் வயிற்றை நிறைக்கிறது. பெவினஹள்ளி என்பதை பெவனகள் எனக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஹல்லி ஊர்ப் பெயர்களைச் சுருக்கிவிட்டார்கள் எனத் தெரிகிறது. எனில் இன்னும் சில காலத்தில் அங்கும் பள்ளிப் பெயர்கள் மறைந்துவிடக் கூடும்.

கரடாகி பகுதி அரிசி ஆலைகளுக்குப் பெயர் பெற்றதாம். பல்லரி, கொப்பல் போன்ற பகுதிகளில் நெல் அதிகம் விளைவதற்குக் காரணம் துங்கபத்ரா ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள துங்கபத்ரா அணை எனில் மிகையாகாது. அன்றைய ஐதராபாத் அரசுக்கும் சென்னை மாகாண அரசுக்குமிடையேயான ஒப்பந்தத்தின் மூலம் உருவான துங்கபத்ரா அணை (1949), பின்னர் ஆந்திரா, கருநாடகா மாநிலங்களின் கூட்டில் (1953) கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. சென்னையின் எம்.எஸ்.திருமலை ஐயங்காரை தலைமைப் பொறியாளராகக் கொண்டு கட்டப்பட்ட பம்பா சாகராவால் அதாவது துங்கபத்ரா அணையால் ஏராளமான பாசனமும், அதிகளவு மின்சாரமும் கிடைக்கிறதாம்.

கர்நாடகா, ஆந்திரா மற்றும் தெலுங்கான மாநிலங்களின் எல்லையாக அமைந்திருக்கும் துங்கபத்ரா ஆறு, அங்கிருந்து கிழக்காக ஓடி, கிருஷ்ணா

ஆறோடு சங்கமலேஸ்வரம் என்னுமிடத்தில் கலக்கிறது. சமீபகாலமாக அணை நீரைப் பங்கிடுவதில் மூன்று மாநிலத்திற்குமிடையே முரண்பாடுகள் எழுவதாகப் பதிவுகள் சுட்டுகின்றன.

துங்கபத்ரா அணைக்கருகிலேயே விசய நகரத்தின் தலைநகராக இருந்த ஹம்பி இடம்பெற்றது குறிப்பிட்டதக்கது. புதிய நகரம் எனும் பொருளில் கட்டப்பட்ட ஹொசபேட் (Hosapete) கிருஷ்ணதேவராயரின் அம்மா நாகலாம்பிகை பெயரில் நாகலாபுரம் எனும் பெயரில் கட்டப்பட்டதாம். ஹம்பி பகுதியில் இடம் பெற்றுள்ள ஆணைகொண்டி (Anegundi, Anegondi) வாலி, சுக்ரீவன், ஆஞ்சேனேயரோடு தொடர்புடைய கிஷ்கிந்தா எனப்படுகிறது. ஆஞ்சநேயர் பிறந்ததாகக் குறிப்பிடப்படும் அஞ்சனாத்ரி மலை இங்குள்ளதாம். கிஷ்கிந்தா எனில் குரங்குகள் வாழும் காடாம். ஆனை காண்டி என்பது ஆனைக்குன்று எனலாமோ? ஆனை மலையோ?

ஹம்பி பகுதி தமிழகத்தின் செஞ்சிப் பகுதி போன்று இருக்குமோ. யாம் நேரில் சென்றதில்லை. காணும் புகைப்படங்கள், காணொளிகள், செயற்கைக்கோள் வரைபடம் அவ்வாறு இருக்கக் கூடுமென்பதைச் சுட்டுகின்றன. செஞ்சி போன்றே கல்மலைகளும், கல்லோடைகளும், குன்றுகளும், சிறுமலைகளும், வயல்களுமாக ஹம்பி இருக்கிறது. ஒருவேளை அதை முன்னிட்டே செஞ்சியும் அரண்மனைப் பகுதியாக கட்டமைக்கப்பட்டிருக்கலாம்.

நேற்றுதான் கொப்பல், கிட்கிந்தா எனும் ஆணைகோண்டி பற்றிய குறிப்புகளைப் பார்த்தோம். மாலையில் குரங்கொன்று எங்கள் கொல்லைக்கு வந்துவிட்டது. யாம் எங்கள் ஊரில் இதற்கு முன்னர் குரங்கைப் பார்த்ததாக நினைவில்லை. ஒற்றைக் குரங்கு. இளவயது. கொல்லையிலிருந்த வாழைக்குருத்தைப் பிடுங்கி, குருத்தை மட்டும் ருசித்துத் தின்றது. நுனி இலையைக் கொஞ்சம் பிய்த்துத் தின்றது. அப்படியே முன்பக்கமாக வந்து கொய்யா மரத்தின் இளஞ்செடிகளைப் பறித்துத் தின்றது. சிறுவர்கள் போடும் கூச்சலில், விரட்டலில் ஓரிடத்தில் இல்லாமல் ஓடிக்கொண்டே இருக்கிறது. பக்கத்து வீட்டில் தண்ணீர் வைத்தார்கள். நிதானமாகக் குடித்தது. எமது அண்ணன் வீட்டில் தேங்காய் வாங்கித் தின்றது. மனிதர்களுக்குப் பயமில்லை எனத் தெரிகிறது. எப்படியோ கூட்டத்திலிருந்து தப்பி வந்துவிட்டது போலும்.

மூன்றுநாட்களுக்கு முன்பு, தென்னை மரத்திலேறி குரங்கொன்று அந்தப்பக்கம் போனதாக எமது அப்பா சொன்னார். யாம்தான் ஏதாவது பூனையாக இருக்கும், நம்மூரில் ஏதுப்பா குரங்கு என்றோம். கிட்கிந்தாவைப் படித்த அன்று வால்மனிதரைப் பார்த்தது மனதிற்கு மகிழ்ச்சிதான். அதைவிட அதிக மகிழ்ச்சி தமிழர் தமக்கான அரிசியைத் தாமே தம் நிலத்தில் பாடுபட்டு விளைவித்து வயிராற உண்டார் எனக் கேட்பதிலிருக்கிறது. தேனிலும் இனிய இந்தப் பெருமகிழ்வுச் செய்தியை நாம் கேட்போமா தமிழ்ச் சொந்தங்களே.

தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சைப் பகுதியின் அரிசி ஏன் எமதூரில் கிடைக்கவில்லை? செழிப்பான பொன்னியின் அரிசி கூடுதல் சுவையாக இருக்குமன்றோ? தஞ்சை டெல்டாவில் நெல் விளைகிறதா விளையவில்லையா? அல்லது விளையும் நெல்லை வெளிநாடுகளுக்கு விற்றுவிடுகிறாரா?

எமது அப்பா 60, 70களில் தஞ்சை ஜில்லாவில் வாழ்ந்திருக்கிறார். அவர் சொல்வதைப் பார்த்தால், அன்று நெல்லைவிட கரும்புத் தோட்டங்களே செழித்திருந்தனவாம். உணவுப் பயிரான நெல்லுக்கு மாற்றாக பணப்பயிரான கரும்பைப் பயிர் செய்தது யார்? ஏன்? கிடைத்த லாபம் யாருக்கு? படித்திருந்த, செல்வாக்கான சாதிகள், அரசியல் தலைகள் இதை அனுமதித்தது எப்படி?

நெல்லுக்காவது மூன்று நான்கு மாதங்கள், பழைய நெல் வகையெனில் நான்கைந்து மாதங்கள் நீர் போதும். கரும்புக்கு ஆண்டு முழுவதுமல்லவா தண்ணீர் தேவைப்படும். எமது தந்தை சொல்கிறார், அன்று பெரிய பெரிய மோட்டார் வைத்து ஓட்டுவார்கள். ஐம்பதடியிலேயே பொதுபொதுவென தண்ணீர் கொட்டும்.

கரும்புத் தோட்டப் பணியாளர்களின் ஒப்பந்ததாரராக (காண்ட்ராக்டர்) எமது அப்பா இருந்தாராம். ஆயிரம், இரண்டாயிரம் ஏக்கர் என மொத்தமாக கரும்புப் பண்ணை இருக்குமாம். வடபாதிமங்கல ஆலைக்கு வெட்டி அனுப்புவார்களாம். இராம்நாட் ஜில்லாவின் பெருவாரியான மக்கள் அன்று தஞ்சை ஜில்லாவின் வேலை செய்தார்களாம். அத்தனை பேருக்கும் வேலை கொடுத்தது கரும்புத் தோட்டங்களாம். தோட்டம் என்பதைவிட கரும்புக்காடு என்பது சரியாக இருக்குமோ.

காரைக்காலில் ஒரு முதலாளி இருந்தாராம். முதலியாராம். டாக்டருக்குப் படித்துவிட்டு தொழில் செய்யாமல் விவசாயம் பார்த்தாராம். பெரிய வீட்டில், ஊஞ்சலில் அமர்ந்திருப்பாராம். முற்றத்தில் நடந்து கொண்டே பேசுவாராம். அவர்

கூடவே நடந்து கொண்டே பேச வேண்டுமாம். அதிகமும் பேச மாட்டாராம். வேலை ஒழுங்காக நடக்கிறதா, ஏதாவது தேவையா, எவ்வளவு பணம் வேண்டும். அவ்வளவுதானாம்.

பணத்தைக் கட்டுக் கட்டாகக் கொடுப்பாராம். சில்லறையாகக் கொடுக்கவே மாட்டாராம். ஒரு உரூபா, இரண்டு, ஐந்து உரூபாக் கட்டுக்களை வாங்கிக் கொண்டு எமது அப்பா வந்துவிடுவாராம். எமது அப்பாவிடம் மரியாதையாகப் பேசுவாராம்.

எமது தந்தை சொல்படி, இரவு கரும்புக் காடுகளில் இருந்தால் அலையடிப்பது கேட்குமாம். எனில், கடற்கரை அருகே கரும்புத் தோட்டம் போட்டு, நிலத்தடி நீரையெல்லாம் உறிஞ்சியிருக்கிறார்கள். தற்போது நிலத்தடி நீரெல்லாம் உப்பாகி விட்டதல்லவா? இன்றைக்கு முன்னால் கீழைத்தஞ்சையான நாகப்பட்டினத்து நிலங்களெல்லாம் நெல் விளைச்சலுக்கு ஏற்றதாக இல்லையெனில் எது காரணம், யார் காரணம்?

அன்று வாழையும் பயிரிட்டார்களாம். அதிகம் இல்லையெனினும் சொல்லிக்கொள்ளுமளவு வாழை, தென்னை பயிரிட்டிருக்கிறார்கள். எமது தந்தை சொல்படி, இரண்டாயிரம் ஏக்கர் வைத்திருந்தவர் சிறு முதலாளியாம். தஞ்சையின் பெருஞ்சாதிக்காரர்களுக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உடைமையாக இருந்திருக்கிறது. பண்ணையின் ஓரத்தில் வேலையாட்களுக்கு சிறுசிறு குடிசைகள் போட்டுக் கொடுத்திருப்பார்களாம். வேறு எந்த வசதியுமே இருக்காதாம். எமது தந்தை சொல்கிறார் - நாம எவ்வளவோ பரவாயில்ல, தஞ்சைக்காரங்கதான் பாவம். அன்று கொத்தடிமைகளாகவே மனிதரை நடத்தியிருக்கிறார்கள். யாம் முன்னர் எழுதும்போதுகூட எதையும் மிகையாக எழுதிவிடக் கூடாதே, சான்றுகளாகக் கொள்ளத்தக்கதுதானா என மனதில் எண்ணியே வந்தோம். எம் தந்தை சரியாக நினைவில் வைத்துச் சொல்கிறார். தஞ்சையின் பள்ளரும், பறையரும் நிலவுடைமையாளர்களிடம் மாட்டிக்கொண்டு படாதபாடு பட்டிருக்கிறார்கள் என்பது உண்மையே. பொதுவுடமைக் கட்சி வந்த பின்னர்தான் பள்ளு, பறைக்கு சற்றே சுமை குறைந்திருக்கிறது. சிறிதளவு சுதந்திரமும் கிடைத்திருக்கிறது. இரு சாதியாரும் (பெரும்பாலானவர்கள்) கம்யூனிஸ்டுகளாம். முதலாளிமாரெல்லாம் காங்கிரசாம்.

எம் தந்தை இன்னொன்றையும் நுட்பமாகச் சுட்டிக் காட்டுகிறார். பெரிய சாதிக்காரர்கள் பள்ளரையும், பறையரையும் வீட்டுக்குள் விடமாட்டார்களாம். எனினும் படையாச்சி வீட்டுக்குள் போய் வருவாராம். பள்ளர், பறையர் பண்ணையார்களின் வீட்டு முற்றத்தில், கொல்லையில் நெல்மூட்டைகளைப் போட்டு விடுவார்களாம். மூட்டையை வீட்டிற்குள் தூக்கிப் போடுவது படையாச்சியாம்.

எம் தந்தை பள்ளு முத்தினா படையாச்சி என்கிறார். அதெல்லாம் அந்தக் காலமாக்கும். படையாச்சி வன்னியராகி எவ்வளவு உயர்ந்து விட்டார். சமீபமாக தேவரே பரவாயில்லையோ என்றல்லவா நினைக்க வைக்கிறார் சாதிப்பற்றில்.

எங்கள் ஊரில் முன்னைவிட மோசமாக சாதிய வெறி கூர் தீட்டப்படுகிறது. நடக்கும் சாதிச் சண்டைகளே சான்றுகள். நாயக்கரின் சாதிவெறி எங்கள் பகுதியில் கூடுதலாகி வருவதும் கண்கூடு. எல்லாம் ஆண்ட பரம்பரை எனப் பாடுவதால் வரும் கோளாறு. ஆண்டிற்கு ஒருமுறை மட்டுமே கட்டபொம்மு பூசைக்கு ஓடியவர்கள் தற்போது ஒவ்வொரு மாதமும் ஓடுகிறார்களாம். உண்மையெனில் ஓடுவதில் நல்ல முன்னேற்றம்தான். சும்மா ஓடினாலாவது பரவாயில்லை. கத்திக் கொண்டும், ஆடிக்கொண்டும், ஏதோ யுத்தத்திற்கு போவதுபோல் போனால். சமீபத்தில் பரளச்சி வழியாக மாதக் குருபூசைக்கு போனபோது, அங்கு இறங்கி ஆடியதாகவும், அதை முன்னிட்டு தேவேந்திரர்கள் நாயக்கரோடு சண்டையிட்டதாகவும் பேசுகிறார்கள். பரளச்சித் தேவேந்திரர் வேற்றூர் நாயக்கரை அடித்தால், இராசகோபாலபுரத்து நாயக்கர் தொப்பாக்கரை தேவேந்திரருக்கு எப்படித் தண்ணீர் விடுவார்? நாயக்கர் என்றால் எல்லோரும் நாயக்கர்தானே. தேவேந்திரர் எனில் அனைவரும் தேவேந்திரரன்றோ.

தமிழகத்துச் சாதிகள் ஒட்டுமொத்த சாதியக் குழாமாக, குழுவாக ஒன்றிணைகிறார்கள். பெரும் பெரும் ஆபத்துக்கள் காத்திருக்கின்றன தமிழர்களே. ஒரு ஊரில் நடக்கும் சாதிப்பகை ஒட்டு மொத்தத் தமிழகத்தையும் எரித்துச் சாம்பலாக்கக் கூடும். எந்தச் சாதியும் தப்பிக்க முடியாது. இதைத் தமிழரும், நாயக்கரும் கவனத்தில் கொண்டால் நல்லது. எல்லா நாயக்கரும் ஒன்று என ஊர் ஊருக்கு நாயக்கர் படை திரட்டினால், தமிழருக்கும் புத்திவந்து எல்லாத் தமிழரும் தமிழர் எனத் திரண்டால். படித்த தமிழன் தம்மைத் தமிழராய் நினைக்கும் காலம் வந்து கொண்டிருக்கிறது. எத்தனையோ சாதிகள் தமிழ்மண்ணில் வாழ்வதுபோல்

நாயக்கரும் வாழ்வதற்கு உரிமையுண்டு. நாங்கள் நாயக்கர் எனப் பேசினால், நாங்கள் தமிழர் எனும் பேச்சை இனித் தவிர்க்க முடியாது.

உண்மையில் நாயக்கர் சாதியினர் நல்ல மனிதர்கள். தாமுண்டு, தம் வேலையுண்டு என இருப்பார்கள். வம்புதும்புக்குப் போகமாட்டார்கள். ஒரு சமூகமாக ஒற்றுமையாக இருப்பார்கள். எளிய சாதிகளை அரவணைத்துச் செல்வார்கள். சமீப காலமாக குறிப்பாக எங்கள் பகுதியில் மாற்றங்கள் தெரிகின்றன. படித்த இளையவர்களை இணையத்தின் சாதியப் பதிவுகள் சுண்டி இழுக்கின்றனவோ. நாயக்கர் நிதானம் கொள்வது நல்லது.

எங்கள் ஊர்த் தண்ணீரை உங்கள் ஊருக்குத் தரமாட்டோம் என்கிறார்கள். அருகருகே இருக்கும் இரு ஊர்களிலேயே இப்படி எனில், மாநிலங்கள் எப்படி தண்ணீர் கொடுக்கும், எப்படி தண்ணீர் விடுவார்கள்? ஓரே ஊர்க்காரர்கள்தான். எனினும், பட்டா நிலத்தின் கரையில் போர் போடக்கூடாது, குடிநீர் எடுக்கக்கூடாது எனில், பிற மாநிலத்தவரை, பிற நாட்டவரைச் சொல்லி என்னாகப் போகிறது.

நீர் அனைவருக்கும் பொது எனும் காலம் சாத்தியம்தானா மனிதர்களே.

ஊர்கள் பொலிவிழந்து விட்டன. பாழடைந்தும் வருகின்றன. ஊர்களில் பூட்டிக் கிடக்கும், இடிந்து கிடக்கும் வீடுகளின் எண்ணிக்கை கூடுகிறது. ஊர்களைக் காலி செய்வோர் பெருகுகிறார்கள். இருப்பவர்களும் சாதிச் சண்டை, நீர்ச் சண்டை, வேலைச் சண்டை காரணமாக அருகாமை நகரங்களுக்கு சென்று நிம்மதியாக வாழ்வோமா எனத் திட்டமிடுகிறார்கள். படித்தவர்க்குக் கிராமங்கள் தேவையில்லாமல் ஆகி பலகாலமாகி விட்டது.

ஒரு தமிழராகத் தேவேந்திரர் என்ன செய்யப் போகிறார்?

அரசியலாளர்கள், அரசுகள் கிராமங்களை முற்றாகக் கைவிட்டு விட்டன. எமதூரில் கட்டிய கழிப்பறை பயன்பாட்டுக்கு வராமலேயே பாழடைந்து விட்டது. பூட்டியே கிடக்கும் கட்டிடத்திற்கு மறுபடியும் வண்ணமடித்திருக்கிறார்கள். அரசதிகாரிகள் இப்படித்தான் செயல்படுகிறார்கள். மக்கள் பணம் இப்படித்தான் பாழாக்கப்படுகிறது.

அரசுகளை நல்லரசுகளாக மாற்றுவதற்கு தேவேந்திரர் என்ன செய்யப் போகிறார்?

நிலமில்லை, நீரில்லை, விளைச்சலில்லை, வேலையில்லை, வாழ்க்கையில்லை, மகிழ்ச்சியில்லை என்பதை மாற்றி, எல்லாம், எல்லோருக்கும் இருக்கிறது எனும் நிலைக்கு ஊர்களை, தமிழ்நிலத்தை, உலகை மாற்றியமைக்க தேவேந்திரர் செய்ய வேண்டியதென்ன?

எம்மைப் பற்றி நிறையவே சொல்லி விட்டோம். இருப்பினும் மீண்டுமொருமுறை நினைவூட்டுகிறோம். யாம் எம்மைத் தேவேந்திர குலத்தவராக நினைப்பதைவிட, தமிழர் எனும் நினைப்பில்தான் மகிழ்வடைகிறோம். யாம் தமிழர், மானுடர் என்றே எம்மை நினைக்கிறோம், செயல்படுகிறோம். அதற்கேற்பவே இப்புத்தங்களை எழுதியுள்ளோம்.

இருப்பினும், யாம் தேவேந்திர குலத்தார் பற்றி ஓரளவிற்கு அறிந்திருக்கிறோம். நம்மிடம் நிச்சயமாக நல்மனம் இருக்கிறது. கடின உழைப்பு இருக்கிறது. ஆயினும் ஏதோ ஒன்று குறைகிறதே எனில் அது நம்மைப் பிறர் இளப்பமாக நினைப்பது. அந்த இளப்பத்தை, தாழ்வுணர்ச்சியை மாற்றுவதும், அகற்றுவதும், நமது கடமையன்றோ. நாம் யாருக்கும் குறைந்தவரல்ல. சொல்லப்போனால் நம்மிடம்தான் நல்ல குணங்கள் நிறைந்துள்ளன. தமிழ் உறவுகளுக்கு காலம் அதை உணர்த்தும்.

தேவேந்திரகுல வேளாளரே.. யாதும் ஊரே யாவரும் கேளிர் பாடல் நமக்காவே நம் பாட்டன் பாடியது. அந்தச் செய்யுளுக்கு நாமே தகுதியானவர்கள். உலகமெல்லாம் நமது. மானுடரெல்லாம் நம் உறவுகள். இந்த ஒற்றைச் செய்தியை வலியுறுத்தவே புத்துலகம் செய்வோம் புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன.

இவ்வுலகம் நமது தேவேந்திரர்களே..

உலகோடு தமிழென்னும் அமுதத்தால் நாம் பிணைந்துள்ளோம். உலகத்தோடு தலையாய உழவால் நாம் இணைந்துள்ளோம். மருத நிலத்தால், மருதப் பண்பாட்டால் உலகோடு சேர்ந்துள்ளோம். உலகின் பெரிய குடும்பத்திற்குச் சொந்தக்காரர்கள் நாம். நாம் மறப்போமோ. உலகம் நம் குடும்பமல்லவா.

எம் தாத்தா முனியக் குடும்பன் களத்தில் நெல்லை அளப்பாராம். குடியானவருக்கு இத்தனை மரக்கால், அரசுக்குச் சேர வேண்டியது இத்தனை மரக்கால், பிற குடியினருக்குக் கொடுக்க வேண்டியது இத்தனை மரக்கால் எனச் சரியாக அளந்து போடுவாராம். நெல் குலைகுலையாகக் காய்த்துத் தொங்குமாம். சடைசடையாகப் பின்னிக் கிடக்குமாம். எம் தந்தை சொல்லிச் சொல்லி ஆற்றுகிறார். மீன்கள் எங்கு பார்த்தாலும் வதவதவெனக் கிடக்குமாம்.

எமது தாத்தா காலத்தில் அதாவது சுதந்திரத்திற்குமுன் எங்கள் ஊரின் பெரிய கண்மாய் நீர்ப்பாய்ச்சு குடும்பமாரிடம்தான் இருந்திருக்கிறது. பெரிய கண்மாயின் நெல்வயல்களுக்கு அதாவது நாற்று நட்ட வயல்களுக்கு நெல் பாய்ச்சுவது குடும்பமார் பொறுப்பாம். மொத்தமாகப் பாய்ச்சுவர்களாம். அன்று நடவுப் பாசனம், நன்செய் பயிர் மட்டுமே மகசூல் பகிர்வில் இருந்திருக்கிறது. புன்செய் நிலங்களுக்கு மகசூல் இன்றி நிலவரி மட்டும் விதிக்கப்பட்டதாம். நடவுப் பாசனம் விளைந்து அறுவடைக்குத் தயார் எனில் அரசாங்கத்திடம் சொல்லி ஒப்புகைச் சீட்டு வாங்க வேண்டுமாம். அந்த அனுமதிச் சீட்டு இன்றி அறுவடை செய்ய இயலாதாம்.

அறுத்து களம்புடைத்த நெல்லை அளந்து போடுவது தேவேந்திரருக்கு உரிமையானதாம். நீர்ப் பாய்ச்சியது அவரன்றோ. கணக்கு சரியாக இருக்க வேண்டுமாம். அரசுக்குச் சேரவேண்டிய நெல் மாட்டுவண்டிகளில் ஏற்றப்பட்டு பரளச்சியிலிருந்த கிட்டங்கிக்குப் போய்விடுமாம். சிறு ஏமாற்று வேலையும் நடக்காதாம். அன்று வரி அவ்வளவு அதிகமில்லையாம். வயல்களுக்கு நீர் பாய்ச்சியதற்கு என நெல் அளக்கப்படுமாம். எமது அப்பா சொல்கிறார், அவரது சிறுவயதில் வீடுநிறைய நெல்மூட்டைகள் அடுக்கப்பட்டிருக்குமாம். சொந்தமான நெல்வயல்கள் வைத்திருந்ததோடு, நீர்பாய்ச்சுபவர் எனும் முறையிலும் நெல் வருமாம்.

வரலாறு ஒற்றைத் தன்மை கொண்டதல்ல. வரலாற்றை ஒற்றைப் பார்வையிலும் பார்க்கக் கூடாது. சமூகவியல் புத்தகங்களை, சாதி சார்ந்த புத்தகங்களை வாசிக்கும் ஒருவர் சட்டென முடிவுகளுக்கு வர வாய்ப்புண்டு. உதாரணமாக பள்ளரும் பறையரும் அக்காலம் தொடங்கி இக்காலம் வரை அடிமையாகவே இருந்தார். அது உண்மையா என ஆராய வேண்டும். தமிழகத்தில் எந்தப் பகுதியில் அந்நிலை இருந்தது எனும் வினாவை எழுப்ப வேண்டும். தஞ்சையில் இருந்திருக்கலாம். பிற தமிழ் நிலத்தில்? இச்சமூகங்கள் தனித்து

வாழ்ந்த ஊர்களில்? எங்கள் ஊரின் செட்டிகுளத்துப் பாதைக்கருகே இருக்கும் அந்தக் கொய்யா, மாந்தோட்டத்து நிலங்களெல்லாம் இராசகோபாலபுரத்து ஆதிதிராவிட மக்களுக்குச் சொந்தமானதாம். அவர்கள் தோட்டம் பார்த்து யாமே பார்த்திருக்கிறோம். இருபது வருடங்களுக்குமுன் எங்கிருந்தோ பணப்பை எடுத்து வந்த நிலக்கொள்ளையர் மிகமிகச் சொற்பமான விலைக்கு அந்த மக்களிடமிருந்து நிலத்தையெல்லாம் வளைத்து விட்டார்கள். அந்த நிலம் ஆதிதிராவிடச் சமூகத்தார்களிடம் இருந்திருந்தால், குடிநீருக்குத் துளைபோடுவதைத் தடுப்பாரோ. உரிமையாகக் கேட்டுப் பெறலாமன்றோ. எங்கிருந்தோ வந்தவர் நிலங்களை வளைத்து பண்ணையாக்கியிருப்பதால்தான் கொய்யாச் செடிகளுக்கு நல்ல தண்ணீர்ப் பாய்ச்சுகிறார். மக்கள் குடங்களைத் தூக்கிக்கொண்டு காடு, ரோடு என அல்லாடுகிறார்கள்.

நகரங்களில், மாநகரங்களில் இருப்பவர்கள், தமிழ்நிலத்தின் ஊர்களையே அறியாதவர்கள். அவர்கள் மனதில் வந்ததையெல்லாம் வரலாறாக, குறிப்பாக சாதி பற்றிய வரலாறாக, ஆய்வுரையாக எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். அதைப் படிக்கும் ஒருவர் சாதியப் பெருமிதம் கொள்வார் அல்லது தாழ்வும், சமூக வெறுப்பும் அடைவார். தமிழகத்தின் சாதிய வரலாறென்ன? புத்தகங்களில் எழுதி வைத்திருப்பதுபோல் இல்லை. இது திண்ணம். சாதிய மோதல்கள், வெட்டுக் குத்துக்கள் சமீபத்தவையே. முதுகுளத்தூர் கலவரத்திற்கு முன்பு குடும்பர் - மறவர் மோதல்கள் நிகழ்ந்ததாக எங்காவது பதிவுகள் உண்டா? தமிழ் நிலத்தில் சாதி இருந்தது. அது அயலவர் நிலத்தில் நடந்ததுபோல் வன்முறைக்கு இடம்தரவில்லை. அனைத்துச் சாதிகளிலும் வசதியானவர்கள் இருந்தார்கள். மக்கள் சாதிய வெறுப்பின்றி, சாதிப் பகையின்றி ஒன்றுபட்டே வாழ்ந்திருக்கிறார்கள்.

பரந்த தமிழ் நிலத்தில், எங்கோ சிறுபகுதியில் நிகழ்ந்த ஒன்றை ஒட்டு மொத்தத் தமிழ் நிலத்துக்குமானதாகச் சுட்டுவது, கட்டமைப்பது சரியான வரலாறல்ல. தமிழக சாதி வரலாற்றைச் சுதந்திரத்திற்குமுன், பின் எனப் பிரித்துப் பார்ப்பதும் அவசியம். சுதந்திரத்திற்குமுன் சாதிய ஒதுக்கல் இருந்திருக்கலாம். எனினும் அது ஒடுக்குமுறையாகவோ, வன்முறையாகவோ இருந்திருக்காது. சுதந்திரம் பெற்ற பின்னரே, குறிப்பாகக் கல்வியும், வசதி வாய்யப்புகளும் பெற்ற பின்னரே, சாதிய மேட்டிமையும், ஒடுக்குமுறையும், சாதியக் கொலைகளும்

நிகழ்ந்திருக்கின்றன, நிகழ்கின்றன. காரணம் இடைநிலைச் சாதிகளின் சாதியப் பெருமிதம் எனில் தவறாகாது.

சுதந்திரத்திற்குமுன் இடைநிலைச் சாதியர் எப்படி இருந்தார்? மறவருக்கும், குடும்பருக்கும் வாழ்நிலையில் பெரிய வேறுபாடு இல்லை. சொல்லப்போனால் குடும்பர்தான் மேலான வசதிகளோடு வாழ்ந்திருக்கிறார். சுதந்திரத்தால் ஆதிக்க சாதிகளுக்கு நிலம் வந்தது. அதிகாரம் கிடைத்தது. சட்டென மேலே வந்தார். புதிய பணக்காரர் என்பதால் தலைகால் புரியாமல் ஆடுகிறார். சுதந்திரத்திற்குமுன் நிலமுடையாளராக இருந்த வெள்ளாளர் வன்முறையாளராக இல்லை. பிற எளிய சாதியாரை ஒதுக்கியிருக்கலாமேயொழிய கழுத்துக்கு கத்தி பாய்ச்சவில்லை. தொழிலாளர்களை, குறிப்பாக தமது பெருநிலத்தில் மாடாய் உழைத்த எளிய மக்களைச் சுரண்டினார் எனச் சொல்லலாமேயொழிய அவர்களது வாழ்க்கையைச் சூறையாடினார் எனச் சொல்ல முடியாது. வெள்ளாளரும் நல்மனம் கொண்டோரே. அன்றைக்கிருந்த சமூக அமைப்பு, சொத்துச் சேர்ப்பதில் அவருக்கிருந்த ஆசை, அன்னார்களை சுயநலமாகச் சிந்திக்கத் தூண்டிருக்கலாம்.

நாயக்கர் தமிழ்ச் சாதிகளின் குறிப்பாக, குடும்பர்களின் நிலங்களையெல்லாம் பிடுங்கிக் கொண்டதாகப் பேசப்படுகிறது, பதியப்படுகிறது. அது எந்தளவிற்கு உண்மை? உண்மையாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. நிலத்தைப் பிடுங்கியிருந்தால் வன்முறை வெடித்திருக்கும். குடும்பர்கள் ஒன்றும் வீரமற்றவரல்ல. அதுவும் பாண்டி நாட்டுக் குடும்பர் மானத்திற்குப் பெயர் பெற்றவர். நிலத்தைக் கொடுத்திருக்க மாட்டார். புதிதாக ஆட்சிக்கு வந்தவரும் பிறரிடம் நிலத்தைப் பிடுங்கி தம்மவருக்குக் கொடுக்க மாட்டார். பழிபாவம் வரும் என அஞ்சுவார்கள். ஆட்சியாளர்கள் சமரசம் காணவே, அனைத்துக் குடிகளையும் அனுசரித்துப் போகவே முயல்வார்கள். புதிதாக வந்த நாயக்கருமே ஊர்களுக்கு இடையிலும், பள்ளர், பறையர் தனித்திருக்கும் ஊர்களிலும் குடிவைக்கப் பட்டிருக்கிறார்கள். குடியேறிய நிலத்தில் கண்மாய்கள் தோண்டப்பட்டிருக்கின்றன. கண்மாய் தோண்டுவதிலும் நீர்ப் பராமரிப்பிலும் குடும்பர்கள் பங்கு பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது.

பாளையப்பட்டு முறையில், ஜமீன்தாரி முறையில் பல்வேறு ஒதுக்கல்கள் நிகழ்ந்திருக்க வாய்புள்ளது. வரிவசூலில் கடுமை காட்டப்பட்டிருக்கும். சாதி முன்னெடுக்கப்பட்டிருக்கும். தொடர்ந்து வந்த ஆங்கிலேயர் கட்டுப்பாட்டில் பணமே

முக்கியமானதாக இருந்திருக்கும். கம்பனி ஆங்கிலேயர் பொருளீட்டுவதிலேயே கவனம் கொண்டிருந்தது நோக்கத்தக்கது. அக்காலத்தில் கம்பனிக்கு இவ்வளவு தொகை கட்டியாக வேண்டும் எனும் நிலையில், குடியானவர்கள்மேல் கடுமை காட்டப்பட்டிருக்கும். எனினும் பிரித்தானிய மகாராணியின் நேரடிக் கட்டுப்பாடு வந்தவுடன் மக்கள் வாழ்க்கையில் மாற்றங்கள் நிகழ்ந்தது கண்கூடு.

பள்ளர் அடிமை சாதியா எனில் இல்லை, உறுதியாக இல்லை. பயிர்த் தொழிலாளர் எனும் முறையில் உழவோடு, வயலோடு பிணைந்திருந்தார். ஐயர், வெள்ளாளர் பண்ணைகளில் உழைத்தார். மாடாய் உழைத்தார் என வேண்டுமானால் சொல்லிக் கொள்ளலாம். தஞ்சை தவிர்த்த பிற பகுதிகளில் சொந்தமாகவே பயிர் செய்தார்.

பள்ளர் ஆண்ட பரம்பரையா? இருக்கலாம். அதற்கான உடலியல், உளவியல் கூறுகள் தென்படுகின்றன. கடந்துபோன ஒன்றிரண்டு நூற்றாண்டுகளை மட்டும் வைத்து பள்ளர்களின் வரலாற்றைக் கட்டமைக்க முடியாது. பள்ளர்கள் இம்மண்ணின் மக்கள். அவர்களது வரலாறு நீண்டது, நெடியது.

உலகெல்லாம் பரவியிருக்கும் தமிழ், தமிழர் பண்பாடு, பள்ளர் பண்பாடாகவே பரவியிருப்பது இப்புதக்கத்தில் சுட்டிக்காட்டப்படுள்ளது. குறிப்பாக, மானுடப் பண்பாட்டின் முந்தைநிலம் எனக் கூறத்தக்க எகிப்திலும், மத்திய கிழக்கிலும், மாந்தரைத் தோற்றுவித்த ஆப்பிரிக்காவிலும், பள்ளர் எனும் பெயர் தற்போது வரையிலும் நிலைபெற்று வந்திருப்பது ஒப்பு நோக்கத்தக்கது.

எகிப்தின் உண்மையான மக்கள் பெல்லாகின் எனப்படுவதும், அவர்கள் எகிப்திய விவசாயக் கூலிகளாக இருப்பதும் அறியத்தக்கது. எனில் பயிர்த் தொழிலை முன்னெடுத்த எகிப்தியப் பள்ளர்களே முன்னர் செல்வச் சிறப்போடு வாழ்ந்திருக்க வேண்டும். இசுலாமிய மதத்தாலும், அராபியர்கள் ஆதிக்கத்தாலும் கொஞ்சம் கொஞ்சமாக எகிப்திய வேளாண்மக்கள் தங்களது இடத்தை இழந்திருக்க வேண்டும். அவ்வாறே கீழ்எகிப்திற்குத் தள்ளப்பட்ட எகிப்தியத் தொல்குடிகளான நுபியன்களும், கிழக்கு எகிப்தின் பெசா மக்களும் தங்களது இடத்தை இழந்துவிட்டிருப்பது தெளிவாகிறது.

இந்தியாவில் மட்டுமே சாதியக் கட்டமைப்பு இருப்பதாகப் பேசியும் எழுதியும் வருகிறோம். வரலாற்றைச் சற்றே உற்று நோக்கினால் உலகின் தொன்மையான

சமூகங்களில் சாதியப் படிநிலை இருப்பது தெரிகிறது. எகிப்திலும், இசுரேலிலும் தற்போதும் சாதியப் படிநிலை, மேலோர் கீழோர் எனும் சமூக அமைப்பு இருப்பது தெளிவாகிறது. அவர்களின் காணொளிப் பின்னூட்டங்களிலும் இவ்வாறான வேறுபாடுகள் சுட்டிக் காட்டப்படுகின்றன.

பெல்லா (Fellah) என்பது உழவர் எனும் பொருளிலேயே மத்தியகிழக்கு மற்றும் வடஆப்பிரிக்காவில் தற்போது வரையிலும் புழங்கி வருவது மிகுந்த பொருள் கொண்டது. பெல்லா என்பது பல்லாவாக (Palla) இருக்கலாமோ எனப் பல்வேறு தரவுகளையும் துழாவித் திரிந்தோம். பாலத்தீனத்தின் பலாக் (Falah) பேரும் எகிப்தியர் பெல்லாவும் ஒத்திருப்பது கண்டு மேலும் துருவிப் பார்த்தோம்.

வடக்கு, மேற்கு ஆப்பிரிக்காவின் புலா (Fulah), புலா (Fula) பெயர்களை அறிந்தபோது நம்மவர்கள்தானோ என உள்ளம் மகிழ்ந்தது. ஆப்பிரிக்க மக்களின் சந்தைகள், சங்க (Sangha) எனச் சுட்டப்படுவது பெரியதொரு திறப்பாக அமைந்தது. சந்தேகமில்லாமல் நம்மவர்கள்தானே. உலகத்தவரால் மறுக்க முடியமா?

உழவன் என்பதுதான் பெல்லாகின் என மருவியதோ? உழவன் சொல்தான் புலானி என மாறியதோ? உழவன், உழவு, உழு பெயர்கள் புலா, புலோ என மாற்றம் கண்டிருக்கலாமே. பள்ள, பள்ளம், புல்லா, புலா என மாற்றமடைந்திருக்கலாம். பள்ளத்தில்தானே ஆறு பாய்ந்தோடும். பள்ளத்தில் வாழ்வர் பள்ளர். பெல்லர், புல்லர் என மருவுவது இயற்கை.

அரபு அரிச் சுவடியில் பா (pa) ஒலிப்புக்கு மாற்றாக ∴பா (fa) இடம்பெற்றுள்ளது என்பதை ஒரு கட்டுரையில் வாசித்தவுடன் அனைத்தும் தெளிவாகிவிட்டது. நாம் யார் புத்தகத்தில் அரபிய அரிச் சுவடியைக் குறித்துள்ளோம். எனினும் அது நினைவில் இல்லை. அரபு மொழியில் பா (Baa), ∴பா (Faa) ஒலிப்பு உண்டே தவிர, பா (Paa) இல்லை. எபிரேயத்தில் பே (Pay), ∴பே (Fay) இடம் பெற்றுள்ளன.

யூத மதத்தை முன்னெடுத்த எபிரேயரும் முன்னர் வேளாளர் குடியாகவே இருந்துள்ளார். தற்போதைய இசுரேல் நாடு வேளாண்மையில் சிறந்துள்ளதும் ஒப்பு நோக்கத்தக்கது. மத்தியதரைக் கடலுக்கும், யூதாய மலைகளுக்கும் இடையேயுள்ள சிறு சமவெளிப் பகுதியில் பாயும் பல சிற்றாறுகள் மூலம், இசுரேல் பயிர்த் தொழிலை

சிறப்பாக முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. லெபனான் பள்ளத்தாக்கிலும் பயிர்த்தொழில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கிறது. தற்போதும் பயிர்த்தொழில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது. யூப்ரதிசு மற்றும் அதன் கிளையாறுகள் பாயும் சிரியாவிலும் பயிர்த்தொழில் சிறப்பிடம் பெற்று வந்திருக்கிறது. இங்கெல்லாம் வாழ்ந்த வேளாண் மக்கள் புலா, புலானி எனும் பெயர்களிலேயே சுட்டப்பட்டு வந்திருப்பது ஒப்பு நோக்கத்தக்கது.

லெபனான் மலைத் தொடரின் உயர்ந்த சிகரத்தில் கோவில் கொண்டிருந்த பால் கடவுள், இசுரேலியர்களால் எல் சடையாக (El Sadai) மாற்றப்பட்டது மிகுந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இடி, மின்னலோடு தொடர்பு கொண்டிருந்த பால் கடவுள், நெருப்போடு தொடர்புடைவராக, சடையாக மாற்றப்பட்டிருக்கிறார். சடை, சடையன், சடையாண்டி யார் என்பதை இசுரவேலர்களைவிடத் தமிழர் நன்கறிவாரன்றோ.

இந்திரன்தான் சடையாக மாறினானோ? உண்மையெனில் தமிழகத்திலும் அதுதான் நிகழ்ந்ததோ? இந்திரன், இந்திரவிழா மறைந்து சடையன், சிவராத்திரி விழாக்கள் முன்னெடுக்கப்பட்டது ஒப்புநோக்கத்தக்கதல்லவா. பயிர்த்தொழில் செய்த எபிரேயர் தேவேந்திரனை முன்னெடுத்திருப்பார். பின் வணிகராக மாற்றம் பெற்றபின் தேவேந்திரன் சடையாக, எல்சடையாக மாறிவிட்டார் போல. உண்மையில் தமிழகப் பிள்ளையும் அவ்வாறுதானே.

முன்னர் குறிப்பிட்ட தேவேந்திரர் - மீனவர் பின்னூட்டத்தில், மீனவத் தோழர் இந்திரன், இந்திர மரபே சிவன், சைவ மரபாக மாற்றம் பெற்றது எனச் சுட்டிக் காட்டுகிறார். யாம் இப்படிச் சிந்திக்கவில்லை. மேற்காசிய சிவ வழிபாடு, அரப்பா, காசுமீர், கருநாடகா, பல்லவர், சோழர் எனப் பரவியது என்பதே பொருத்தமாக இருக்கலாம் என நினைத்திருந்தோம். தமிழகத்தின் தேவேந்திர மரபே சைவ மரபாக நீட்சி கொண்டது என்பது பொருத்தமாயும் உள்ளது. சைவத்தை முன்னெடுத்த பிள்ளை, பள்ளர் மருத நிலத்தார் என்பது கூடுதல் கவனம் கொள்கிறது. வரலாற்றில், பண்பாட்டு மாற்றங்களில் எதுவுமே முற்றாக அழிவதில்லை. உருவத்தை, பெயரை மாற்றி, அது தொடரவே செய்கிறது. இந்திர மரபான பல்லவர் சைவத்தைச் சிறப்பித்தும், இந்திர மரபினரான சோழர் சிவபெருமானுக்கு தஞ்சை பெரிய கோவிலை நிர்மாணித்ததும் கவனிக்க வேண்டியது. சடையன், சடைச்சி பெயர்கள் குடும்பர் குடிகளிலேயே பெருவாரியாக இடம்பெற்று வந்திருப்பதும் அறியத்தக்கது.

தமிழருக்கு துருக்கியின் மொழியும், பண்பாடும், வரலாறும் அறியத்தக்கது. இசுலாமியராக மாற்றம் பெற்றாலும் தங்களது மொழியையும், பண்பாட்டையும் துருக்கியர்கள் கட்டிக் காத்தே வந்துள்ளனர். பழமையைப் பேணிக்கொண்டே நவீனத்தையும் கொண்டாடுவது துருக்கியர்களின் பெருஞ்சிறப்பு போலும். துருக்கியப் பண்பாடும், இடப்பெயர்களும், புவியியல் அமைப்பும், முன்னைத் தமிழரோடு பிணைந்துள்ளதாகவே படுகிறது. துருக்கியில் நெல் வேளாண்மையும் சிறப்பிடம் பெற்று வந்திருக்கிறது. குறிப்பாக மரமா பகுதி, நெல் விளைச்சலுக்கு தற்போதும் பெயர் பெற்றதாக இருப்பது கவனிக்கத்தக்கது.

இவ்வளவு விளக்கமாகச் சொல்வதற்கும், முன்பு சொன்னதை மீண்டும் ஒருமுறை நினைவூட்டுவதற்கும், ஒரு நல்நோக்கமுள்ளது தேவேந்திரர்களே. எமது புத்தகங்கள் எழுதப்பட்டதன் தலையாய நோக்கம் இம்மண்ணில் அறத்தை வளர்ப்பதே. முன்பு இம்மண்ணில் அறம் செழித்திருந்ததாம். தமிழர் அறம் வளர்த்தாராம். இடையில், காலமாற்றத்தில் அறம் குறைந்துள்ளது நன்றாகத் தெரிகிறது. மக்களின் அனைத்து வாழ்நிலைகளிலும் அறம் சிறுத்து விட்டது. மக்கள் அறத்தை மறந்தே விட்டார்கள். பலருக்கும் அறமென்றால் என்னவென்றே தெரியவில்லை. மக்களுக்கு அறத்தை நினைவுறுத்துவதும், மக்களை அறவழியில் நடத்துவதும், அறத்தை நிலைநிறுத்துவதும், அறத்தை வளர்ப்பதும் தேவேந்திரர் கடமையாகும். அதற்கே இவ்வளவு விளக்கமாகவும், விரிவாகவும் எழுதியுள்ளோம். அறம் பேணுவதும், வளர்ப்பதும் நம் கடமை. அதுவே சங்கத் தமிழருக்குப் பெருமை.

தேவேந்திரரே, புல் தானாக முளைத்து வருவதுபோல் மண்ணில் அறம் வளர்வதில்லை. அறத்தை வளர்க்க வேண்டியிருக்கிறது. மண்ணில் அறத்தை வளர்த்தவை மதங்களே. உலகின் அத்தனை மதங்களுமே மக்கள் மனங்களில் அறம் வளர்க்க எவ்வளவோ பாடுபட்டிருக்கின்றன. பாரத மண் அறமூர்த்திகளுக்குப் பெயர்பெற்றதெனில் மிகையாகாது.

எபிரேயமும், அரமேயமும் சிறப்பாக அறத்தை முன்னெடுத்திருக்கின்றன. திருடாதே என்பது பெரிய அறமல்லவா. பொய் சொல்லாதே - மிகப் பெரிய அறமல்லவா. கொல்லாதே - உலகின் உயர்ந்த அறமன்றோ. இயேசு பெருமான் அறத்தில் சிறந்தவரன்றோ. பேசிய மொழியே அறம் (Aram) அல்லவா. அரமேயம் (Aramaic) என்கிறார்கள். அறம் செழித்திருந்த நிலமெனில் பொருத்தமே. அறம்

எனில் அரமிய மொழியில் உயர்ந்ததாம், மேலானதாம், மலை போன்றதாம். காணான் (Canaan) பள்ளமாம். கீழுள்ளதாம். எனில் அரமேயம் என்பதை அறமேயம் எனச் சுட்டுவதே பொருத்தம். அறவாணர், அறமுடையவர், அறத்தில் சிறந்தவர் அரமேயர். அவர் பேசிய மொழி அறம், அறமேயம்.

காணான் என்பதையே தமிழ்ப் பெயராகச் சுட்டலாமன்றோ? வரலாற்றின்படி மோசஸ் கண்ட நிலமல்லவா அது. கனான், கனால், Canal என்பதை வாய்க்கால், பள்ளம் எனக்கொண்டு பள்ளமான பகுதி, தாழ் நிலம் எனும் பொருளில் காணான் எனச் சுட்டப்படுகிறது. அதாவது காணான் எனில் எபிரேய மொழியில் பள்ளம் எனப் பொருள் சுட்டப்படுகிறது. எனினும் கண்ட, பார்த்த எனும் பொருளில் சுட்டவதே பொருத்த முடையதாகத் தோன்றுகிறது. கணன், காணன், காணான், காணோன் என எழுத்துக்களை மாற்றிப் பார்க்கலாமோ? காணான் தமிழ் மொழியில் பொருள் கிட்டவில்லையெனில் மலையாளம், தெலுங்கு, கன்னடத்தில் தேடிப் பார்க்கலாமோ? எங்கேனும் ஒரு தமிழ்ப் பொருள் நிச்சயம் ஒளிந்து கொண்டிருக்கும். நாம் தேட வேண்டும்.

தேடுங்கள் கிடைக்கும் என்றார். பொருளுள்ள பாடலல்லவா. ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு. எத்தனை பெரிய அறம். அறமூர்த்தியன்றோ. எத்தனை அன்பு, எத்தகைய பேரன்பு. கருணைக் கடலன்றோ. ஏழை, எளியோர், முதியோர், ஆதரவற்றோர், நோய்வாய்ப்பட்டோர், புறக்கணிக்கப்பட்டோர் என அத்தனை பேரையும் நெஞ்சார வாரி அரவணைத்துக் கொண்டது இயேசுவின் திருநாமமல்லவா. திருக்குமாரன் பெயரிலான கல்விச் சேவையும், மருத்துவச் சேவையும் சிறந்த அறமன்றோ.

தமிழர் யார் புத்தகத்தில் தமிழர் பேசிய, பாடிய, போற்றிய அறமும், பாரத மண் பேசிய தர்மமும் வேறு எனச் சுட்டியிருந்தோம். எனினும் ஏதேனும் சான்று கிடைத்தால் நன்றாக இருக்குமே என நினைத்தோம். நல்கொடுப்பினையாக பெருமைமிகு பாவாணர் அதைப் பேசியிருக்கிறார். பேராசிரியர் சொல்கிறார் - தமிழரின் அறம் வேறு, ஆரியர்களின் தருமம் வேறு. அறம் என்பது நல்ல நெறிமுறைகள். தருமம் (ஆரியர் சொல்வது) - குலவொழுக்கத்தை, அதாவது வருணாசிரம தர்மத்தை. அறம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு தருமம் எனும் வடசொல்

நேரான மொழிபெயர்ப்பாகாது. எமது சிந்தனை, கருத்து சரியே என்பதற்கு வேறு சான்று தேவையில்லையன்றோ.

மானுட குலத்தின் பண்பாட்டுப் பரிணாமத்தை முன்னெடுத்தது தமிழ்தான் என்பதற்கும் ஏதேனும் சிறப்பான சான்று கிடைத்தால் நன்றாக இருக்குமே. அதற்கும் அழகான சான்று கிடைத்தது முனைவர் கே.லோகநாத முத்தரயன் பெயரில் (Dr.K.Loganatha Muttarayan).

புத்துலகம் செய்வோம் - இரண்டாவதின் முதல்பகுதியை எழுதி முடித்து 21.05.2019 ஆம் தேதியன்று மதியம் தட்டச்சு செய்யக் கொடுத்தோம். அடுத்தநாள் சுமேரியர்கள் பற்றிய காணொளிகளைப் பார்த்துக் கொண்டிருந்தோம். மனதில் சட்டென அந்த எண்ணம் வந்தது. சுமேர் மற்றும் தமிழ் (Sumerian and Tamil) என யூடியுபில் பதிவிட்டோம். அதே தலைப்பில் பேராசிரியர் லோகனாதனைப் பற்றிய ஒரு காணொளிப் பதிவு வந்தது. பேராசிரியரின் கருத்துக்களை, ஆய்வு முடிவுகளை ஆங்கில அறிஞர்கள் சுருக்கமாக வெளியிட்டுள்ளனர். தொடர்ந்து பேராசிரியரின் காணொளிகள் சிலவற்றைப் பார்த்தோம். பேராசிரியர் சிறப்பாகச் சிந்தித்திருக்கிறார். தமிழில் அழகாகவும் பேசுகிறார். சமீபத்தில்தான் பேராசிரியர் மறைந்ததாகத் தெரிகிறது. எவ்வளவு கொண்டாடப்பட்டிருக்க வேண்டிய பேராசிரியர். தமிழுலகில் அடையாளம் பெறாமல் இருந்ததற்கு எது காரணமோ? யாம் 23ஆம் தேதி புறப்பட்டு 24 ஆம் தேதி அதிகாலை எமது ஊருக்கு வந்துவிட்டோம். இங்கு பி.எஸ்.என்.எல். வலைச்சேவை கிடைக்காததால் பேராசிரியரின் கட்டுரைகளைத் தேடிப் படிக்க முடியவில்லை. யாம் மிகமிகக் குறைவாகவே பேராசிரியர் பற்றி அறிந்துள்ளோம்.

பேராசிரியர் மலேசிய சாம்ஸ் (Sams) பல்கலையில் கல்வியியல் பேராசிரியராகப் பணியாற்றியவர். உளவியல் பயின்றிருக்கிறார். தத்துவமும் அறிந்திருக்கிறார். இலண்டனில் ஆராய்ச்சி பயின்றபோது அங்கிருந்த நூல் நிலையத்தில் சுமேரியமொழி பற்றிய நூலொன்றை முதன்முதலாகப் பார்த்திருக்கிறார். அன்று தொடங்கி ஏறக்குறைய அரைநூற்றாண்டு காலம் சுமேர், சுமேர்மொழி பற்றிய ஆராயச்சிகளில், சிந்தனைகளில் திளைத்துள்ளார். மொழி சார்ந்த பல்வேறு இதழ்களில் தமது ஆராய்ச்சி முடிவுகளை எழுதியும் வந்துள்ளார். பல கட்டுரைகள் பன்னாட்டு இதழ்களில் வந்துள்ளனவாம். இத்தனை மதிப்புமிக்க

போராசிரியரை, தமிழ் அறிஞரை தாய்த் தமிழகம் அறியாமல் இருந்தது ஏற்புடையதல்ல. யாம் இருபதாண்டுகளாக தொடர்ந்து வாசித்து வருகிறோம். தமிழ் இதழ்கள் சார்ந்து பேராசிரியர் பற்றிய குறிப்புகளோ, கட்டுரைகளோ வாசித்ததாக நினைவில்லை. தமிழ், தமிழர் பற்றிய சிறந்த ஆக்கங்கள் தமிழகத்தில் திட்டமிட்டே மறைக்கப்படுகின்றனவோ? எனில் தினசரிகள், வார, மாத இதழ்கள், சிற்றதழ்கள் எதற்காகத்தான் உள்ளன? நடத்துபவர் நோக்கம்தான் என்ன? சில நாளிதழ்கள் குறிப்பிட்ட சில நடிகர், அரசியல்வாதி ஓய்வெடுக்கிறார் என்பதைக்கூட அரைப் பக்கத்திற்கு எழுதுகின்றன. தமது சாதி நடிகர், அரசியல்வாதி என்பதாலோ?

பேராசிரியரின் நீண்டகால சுமேர் மொழியாராட்சியின் முடிவு - சுமேர் மொழி தமிழ் மொழியே. தமிழின் முன்மொழி அதாவது தொல்மொழி சுமேரியம் - Sumer is Archaic Tamil. சுமேர் மொழியே பின்னர் தமிழாக மாற்றமடைந்தது.

சுமேரிய மொழி தமிழின் முதற்சங்க மொழி - Sumerian is Tamil of the First Changkam. சுமேரிய மொழி சங்க மொழி. சுமேரியாவே குமரி - Sumeru is non other than Kumari. சுமேரியப் பகுதியில் குமரி எனும் பெயர் இடம் பெற்றுள்ளதாம்.

சுமரிட்டு (Sumeritu) எனில் புனிதமான மொழியாம். சுமேர்கள் கருப்பானவர்களாம். சுமேரியர்கள் நகர நாகரிகம் கொண்டிருந்தார்களாம். சுமேரியக் கடவுள் தமுசி Damuzhi). தமுசி சந்திரக் (Moon) கடவுள். தமுசி தம்முச் (Tammuz) ஊர் அரசர்.

திராவிடர்கள் மத்திய ஆப்பிரிக்காவை தாய்நிலமாகக் (Home Land) கொண்டவர்கள். குறிப்பாக லிபிய, சூடானிய பாலைகளில் திராவிடர்களின், தொல் திராவிடர்களின் (Proto Dravidians) பண்பாடு, பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றம் பெற்றது.

எகிப்தியர்கள், ஈலமைட்டுகள், திராவிடர்கள், மங்கோலியர்கள் மற்றும் சுமேரியர்கள் மா (Maa) அல்லது மீனைச் சிறப்பிப்பவர்கள். இவர்கள் மீனை அமுன் (Amun), அமோன் அல்லது அம்மா (Amma) எனும் பெயரில் வழிபட்டனர்.

திராவிடர்களுக்கும் ஆப்பிரிக்கர்களுக்கும் ஆறாயிரம் வருடங்களுக்கு முந்திய சிவப்பு மற்றும் கருப்பு மட்பாண்டம் பொதுவானதாக இருக்கிறது.

திராவிடர்கள் ஆப்பிரிக்காவிலிருந்து ஆசியாவிற்கு இடம் பெயர்ந்தார்கள். திராவிடர்கள் 5000 - 4800 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட பகுதியில் ஆசியாவில் குடியேறினர். நாளடைவில் மத்திய ஆசியா, சீனா, தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியப் பகுதிகளுக்குப் பரவினார்கள். திராவிடர்களின் மையமாக இருந்தது பெர்சியா.

முனைவர் திரு. லோகனாதனின் பார்வையில், தொல்திராவிடர்களும், சுமேரியர்களும் ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவர்கள். ஆப்பிரிக்காவிலிருந்து புலம் பெயர்ந்தவர்கள். சுமேரியர்கள் மேற்கு ஆசியாவில் தங்கிவிட, திராவிடர்கள் இந்தியாவிற்குள் பரவினர். வரும் வழியில் அரப்பா நாகரிகத்தைத் தோற்றுவித்தனர். பாசன முறையையும், வேளாண்மையையும், சுரங்கத் தொழிலையும் அறிந்தனர். சான்றுகளாக மட்பாண்டங்களும், அவற்றின் குறியீடுகளும், எழுத்து முறைகளும் சுட்டப்படுகின்றன.

இந்திய மொழிகள் திராவிடத்தை அடிப்படையாகக் கொண்டவை. சமஸ்கிருதமும், பாளியும் சுமேரியத் தமிழிலிருந்து (Sumero Tamil) தோற்றம் பெற்றவை. சிந்துச் சமவெளி எழுத்து, சுமேரிய தமிழின் ஒரு வடிவமே. பேராசிரியரின் கணிப்பின்படி, அலக்சாந்தருக்குமுன் ஆரியப் படையெடுப்பு இல்லை. ஆரியன் எனும் சொல்லே சுமேரியத் தமிழ். அய்ரோப்பிய அறிஞர்களே சமஸ்கிருதத்தை உள்ளடக்கி இந்தோ - ஆரிய மொழியாக வகைப்படுத்தினர். சமஸ்கிருதம் தமிழோடு நெருக்கமான இலக்கண ஒற்றுமை கொண்டுள்ளது. சமஸ்கிருதம் தமிழின் ஒரு வடிவம் எனில், இந்தோ - ஆரிய மொழிக் குடும்பத்தின் நிலை?

பேராசிரியர் சொல்கிறார் - சுமேரிய மொழி தற்போதும் தமிழாக வாழ்ந்து கொண்டிருக்கிறது. மொழி மட்டுமின்றி சுமேரியப் பண்பாடும் தமிழரால் கொள்ளப்பட்டுள்ளது. தமிழறிஞரால் சுமேரிய மொழியை எளிதாக அடையாளங்கான இயலுமாம். பேராசிரியர் சுமேரிய மொழியைப் படிக்கும் அளவிற்கு ஈடுபாடு கொண்டிருந்திருக்கிறார்.

அய்யா நனம், நிங்கள் அம்மா நனம் வரிகள் தமிழோடு அப்படியே பொருந்துகிறது.

சுமேரிய சுரப்பாக் நெறியில் நிகழனம் கல்கல்லின் மிகவே மெய் கல்கல் எனக் குறிப்பிட்டுள்ளதாம். அதாவது நம்மைச் சுற்றி நடப்பதைக் கற்றுக்கொண்டால் உண்மையைக் கற்றுக் கொள்வோமாம். அதாவது உலகை ஆராய்ந்தால் உண்மையைத் தெரியலாமாம்.

அக்காடியன்கள் ஈலமைட் நிலத்தை கிச்பம் (Gizbam) அதாவது வில்லின் நிலமாகக் குறித்திருந்தார். அக் (AK) எனில் ஊருக்கு (Uruku) எனப் பொருளாம். அக்காடியத்தில் பிடு (Bitu) எனில் வீடு (Vidu - Home) அக்காடிய மொழியில் ஹெரு (Heru) எனில் தோண்டுதல், உழுதலாம் (Dig , Plough). இதுவே சேரு (Ceru), ஏறு (Eeru) என தமிழில் மாற்றம் பெற்றதாம். மாறு (Maru) எனில் குழந்தையாம் (Offspring). அக்காடிய இல (Ela) சொல்லுக்கு எழுதல் (To rise) எனப் பொருளாம். அக்காடியத்தில் நாரு (Naaru) எனில் ஆறாம் (River).

பேராசிரியர் உறுதியாகச் சொல்கிறார் - சுமேரிய மொழி தமிழின் தொல்மொழி. சுமேரிய மொழியின் ஒவ்வொரு சொல்லுக்கும் சமமான தமிழ்ச்சொல் உள்ளதாம் - Every Word in Sumerian Has an Equivalent in Tamil.

அனுனாகி (Anunnaki) எனில் உயர்ந்த மக்களாம் (People from above). மெசபதோமிய நிலத்தின் தொல்மக்கள் முதலில் அன், ஆன் (Ann) மக்கள் என்றே அழைக்கப்பட்டுள்ளனர். இம்மக்களே சுமேரிய மற்றும் எகிப்திய மக்களுக்கு மூதாதையராகக் கருதப்படுகினற்னர். இவர்களே ஐந்தாயிரம் வருடத்திற்குமுன் ஆப்பெழுத்துக்களை வடிவமைத்தவர்கள்.

என்கி (Enki) - விண்ணை ஆள்பவர்கள் (Ruler of above). என்லில் (Enlil) - மண்ணை ஆள்பவர்கள் (Ruler of Earth). என்கி ஒலோகி, ஒனைகி, இனியோக்கி (Oloke, Onioke, Enioke) எனவும், என்லில் எனைல், ஒனைல் (Enile, Onile) எனவும் அழைக்கப்பட்டனர்.

டாக்டர் லோகநாதனின் முடிவுகள் அலெக்ஸ் கூலியரின் (Alex Collier), முன்னர் உலகம் முழுமையும் பேசியமொழி தமிழே (Before the entire world spoke one language that is Tamil) எனும் புகழ்மொழிக்குக் கட்டியும் கூறுவதுபோல் உள்ளன எனலாம்.

பேராசிரியர் தத்துவங்களை இரத்தினச் சுருக்கமாகச் சொல்வதானால் - சுமேரிய மொழி தமிழ்மொழியே. தமிழின் அதாவது தொல்திராவிடத்தின் பிறந்தகம் ஆப்பிரிக்கா. ஆப்பிக்காவில் தோன்றி, மத்திய ஆசியாவில் செழிப்புற்று, சங்கமாகி, அரப்பாவில் தங்கி, தென்னிந்தியாவில் உயர்ந்து, தமிழ்நிலத்தில் செம்மொழியாக உச்சம் பெற்றுள்ளது தமிழ்.

தமிழின் தோற்றம், வரலாறு இதுவெனில் தமிழரின் வரலாறும் இதுவேயன்றோ.

யாம் பேராசிரியரை அறிந்திருக்கவில்லை. கிட்டத்தட்ட நாங்கள் இருவரும் முன்னைத் தமிழ் வரலாற்றில் ஒன்றுபடுவது வியப்பு. பேராசிரியர் எம்மைவிட மூத்தவர். எம்மைவிட இருமடங்குக்காலம் அதாவது நாற்பதாண்டுகள் தமிழ் குறித்துச் சிந்தித்தவர். இருவரும் உளவியலில், தத்துவத்தில் பட்டங்கள் பெற்றிருப்பது கூடுதல் சிறப்பு. எனினும் யாம் விலங்கியல் பேராசிரியர் என்பது சற்றே கூடுதல் பலமாக எமக்கு வாய்த்திருக்கிறது.

யாம் சிலவற்றில் பேராசிரியரிடமிருந்து மாறுபடுகிறோம். எமது புத்தகத்தில் அதை விரிவாகக் காணலாம். சுருக்கமான வேறுபாடு எனில், பேராசிரியர் தமிழின் ஆப்பிரிக்கத் தோற்றத்தை தொல் திராவிடம் - Proto Dravidian எனும் சொல்லால் சுட்டுகிறார். எமது கேள்வி - அதை ஏன் தொல்திராவிடமாகச் சுட்ட வேண்டும்? தொல்தமிழ் எனச் சுட்டுவதுதானேமுறை. ஆப்பிரிக்காவில் எங்கே திராவிடம் வந்தது? தமிழ் திராவிடமாய்ப் பிரிந்தது கடைச்சங்கத்தில் என்பதே பொருத்தம். ஆயிரம், ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்புதான், பிற திராவிட மொழிகளில் எழுத்துக்கள் வடிக்கப்பட்டிருக்கின்றன. ஈராயிரமாண்டில் சற்றே கொடுந்தமிழாக வழங்கியிருக்க வேண்டும். அதற்குமுன் தமிழ்தான். உறுதியாகக் கொள்ளலாம். உண்மையெனில் தென்னிந்தியா தாண்டி திராவிடம் எனும் சொல்லை எடுத்துச் செல்வது பொருத்தமுடையதன்று. (பேராசிரியர் எழுத்தின் சிறுபகுதியையே யாம் அறிந்திருக்கிறோம். மொத்தமாக பேராசிரியர் என்ன எழுதியிருக்கிறார் என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டியது).

தமிழ் சுமேரிய மொழி என்பதற்கும், சுமேரியமொழி தமிழ் என்பதற்கும் பாரிய வேறுபாடு இருக்கிறது. பேராசிரியர் சுமேர் தமிழின் தொல்மொழி என்கிறார். எனில் சுமேரிலிருந்து தோன்றியதே தமிழ் என்பதாக ஆகுமல்லவா. எனில் சங்கப்

பெருமிதமான கல்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய தமிழ் கேள்விக் குறியாகும். தமிழ்ப் புலவர் மரபு ஏற்காது.

தமிழில் பெரும்புலமை கொண்ட பேராசிரியர் பாவணார் போன்றவர்கள் தென்தமிழகக் குமரியே தமிழின் பிறந்தகம் என்கிறார்கள். குமரியே மாந்தனின் இருப்பிடம் எனச் சாதிக்கிறார்கள். அதையும் நாம் ஒதுக்கிவிட முடியாது. சாதிப்பது தமிழ்ப் புலவர்கள். பெரும் தமிழறிஞர்கள்.

பாவாணர் சுட்டுகிறார் – தமிழின், தமிழனின் உண்மையான பெருமைகளை அறிவதற்கு 1. உலக வரலாறு - The world history 2. ஒப்பியன் மொழிநூல் - Comparative Philology 3. குமுகாயப் பண்பாட்டு மாந்த நூல் - Social and Cultural Anthoropology ஆகிய மூன்றையும் படித்திருக்க வேண்டுமாம். மூன்றையும் தெளிவாக அறிந்துவிட்டே தமிழ், தமிழர் வரலாற்றைப் பேச வேண்டுமாம். பேராசிரியரின் வழிகாட்டலை யாம் ஏற்றுக் கொள்கிறோம். தமிழ் உலகெல்லாம் பரவியுள்ளது, உலகின் மூத்தமொழி எனில், உலக வரலாற்றை சிறிதேனும் அறியாமல் அதை எப்படி ஒருவரால் சொல்ல இயலும்? உலகின் வரலாறு அறிந்தோரே உலகு குறித்துப் பேசத் தகுதியானோர். தமிழே உலகின் முந்துமொழி எனப் பேசப் புகுவோர், கட்டாயம் உலக வரலாற்றைத் தெளிந்திருக்க வேண்டும். அவ்வாறே தமிழ்மொழி பற்றிப்பேசப் புகுமுன், உலகின் பிற மொழிகளை ஓரளவிற்காவது அறிந்துதான் பேச வேண்டும். மாந்தரின் சமதாய வரலாற்று நூல் பயிலாமல் ஒருவர் உலக மானுடர் பற்றி பேசப் புகுவது நன்றன்று.

யாம் உலக வரலாற்றை சற்றே அறிந்திருக்கிறோம். நாம் யார் புத்தகமே சான்று. மொழிகளை அறிந்துள்ளோமா எனில் உலக மொழிகளின் சுருக்கமான வரலாற்றை அறிந்துள்ளோம். மொழியின் இலக்கணமறிந்தோரே மொழியை அறிந்தார் எனில், யாம் தமிழ், ஆங்கிலம் (சற்றே) தவிர பிற மொழிகள் எதனையும் அறிந்திருக்கவில்லை. மாந்தரின் குமுகாயப் பண்பாடு அறிந்திருக்கிறோமா என்னில் ஓரளவிற்கு நன்றாகவே அறிந்துள்ளோம். இதைக் குறிப்பிடக் காரணம் புத்துலகம் செய்வோம் இரண்டு புத்தகத்தின் நம்பகத்தன்மையைச் சுட்டவே.

பேராசிரியர் லோகனாதனின் மாந்தர் வரலாறு, மானுடப் பண்பாடு குறித்த நிலை எத்தகையது எனத் தெரியவில்லை. தமிழ் குமரியில் பிறந்தது என்பதற்கும், மத்திய ஆப்பிரிக்காவில் தோற்றம் பெற்றது என்பதற்கும் பெரிய வேறுபாடு உள்ளது.

ஆப்பிரிக்காவில் தோன்றியதெனில், தென்தமிழகத்தில் உச்சம் பெற்றிருப்பது எவ்வாறு? தோன்றிய இடத்தில்தானே செல்வாக்குப் பெற்றிருக்க முடியும்?

சுமேர்மொழி தமிழின் முந்துமொழி என்பதைவிட தமிழின் பிந்தைய, திரிந்தநிலை எனச் சுட்டுவது சரியாக இருக்குமோ? முன்னைக் காலத்திலேயே குமரியிலிருந்து சுமருக்குப் பரவிவிட்ட தமிழ், தொடர்ந்து வந்த காலத்தில், தாயத்தமிழின் நெருங்கிய தொடர்பு இல்லாமல் காலப்போக்கில் சொற்களில் திரிபைக் கண்டது எனவும் சுட்டலாமன்றோ? எனில் சுமேரியாவில் முதல் சங்கம் நிகழ்ந்தது, சுமேர்மொழி முதல்சங்க மொழி எனும் பேராசிரியரின் சிந்தனை மாற்றம் காணுமே.

மாந்தர் பரிணாமத்தில், தொல்மாந்தர் பூமியெங்கும் பரவினார், மாந்தர் பரவலையடுத்து மானுடப் பண்பாடு புவியெங்கம் பரவியது, அப்படிப் பரவிய அந்தப் பண்பாடு, தமிழாக, தமிழர் பண்பாடாக இருந்தது என எடுத்துக் கொண்டால், குமரியில் தோன்றிய தமிழ் உலகெல்லாம் பரவி, பின்னர் காலமாற்றத்தில் பிற மொழிகளாகத் திரிந்து, தனது பரவல் நிலம் சுருங்கப் பெற்றுவந்து, தாய் நிலத்தில் தற்போதும் செம்மொழியாக நிலைபெற்றுள்ளது என்பது ஏற்கத் தக்கதுதானே. சுமேரிய தொல்தமிழின் ஹெரு சொல், திருந்திய தமிழில் ஏறு என மாற்றமடைந்தது என்பதைவிட, தமிழில் முன்பு வழங்கிய ஏர், ஏறு சொல், காலமாற்றத்தில் ஹெரு, ∴பெரு எனத் திரிந்தது என்பது பொருத்தமுடையதன்றோ.

பேராசிரியரின் சுமேர் மொழியறிவு மெச்சத்தக்கது. சுமேர் மொழியை நன்கறிந்தே பேராசிரியர் தமிழின் தொல்மொழி எனச் சுட்டுகிறார். எமக்கு பேராசிரியர் போன்று சுமேர் மொழியறிவு இல்லை. சுமேரிய நாகரிகம் பற்றி ஓரளவிற்கு அறிந்துள்ளோம். எனினும் சுமேர் மொழிக்கு முன்பே அந்நிலத்தில் தமிழ் புழங்கியிருக்கலாம் என்றே தோன்றுகிறது. மானுடப் பண்பாடு, மொழியியல், ஆன்மிகச் சான்றுகள் இத்திசையைச் சுட்டிக் காட்டுவதும் ஒப்பு நோக்கத்தக்கது.

ஒன்று - ஆப்பிரிக்காவில் தமிழ் தோன்றியது. அத்தமிழ், தமிழாகத் தோன்றி, சுமேரியம், அரமேயம், பெர்சியம், பாரதியம் எனப் பரவி, தமிழ்நிலத்திற்கு வந்து, தற்போதும் இங்கே புழக்கத்தில் உள்ளது. அதாவது, ஆப்பிரிக்க நிலத்தில் தோற்றம்பெற்ற தொல்மானுடர் உலகெலாம் பரவும்போதே மொழியறிவும் கொண்டிருந்தார். அது தமிழ்மொழியாக இருந்தது.

இரண்டு - ஆப்பிரிக்காவிலிருந்து பரவிய தொல்மாந்தர் உளம் கொண்டிருக்கவில்லை. மற்ற விலங்குகள்போல் தமது உள்ளுணர்வால் வழிநடத்தப்பட்டு நிலமெங்கும் பரவினர். அவ்வகையில் இந்தியப் பெருநிலத்திற்குள் பரவிய தொல்மாந்தர், குமரியில் மொழியறிவு கிடைக்கப்பெற்று, மாந்தராக மாறி, உலகெங்கும் தமது மொழியையும், பண்பாட்டையும் கடத்தினார்.

மூன்றாவது ஒன்றும் உண்டு. அது தமிழ்ப் பெரும்புலவர் மரபு முன்னெடுத்து வந்த குமரித் தோற்றம். அதாவது தொல்மாந்தர் தோற்றம்பெற்றதே குமரி நிலத்தில்தான். குமரிக் கண்டத்தில் தோன்றிய மனிதரே உலகெங்கும் பல்கிப் பெருகினார். குமரியில் தோன்றிய தமிழ், பாரதியம், சிந்து, பாரசீகம், சுமேரியம், எகிப்து, ஆப்பிரிக்கா, சுமேரியம், எபிரேயம், கிரேக்கம், உரோமம், செருமானியம், ஆங்கிலம் என மேற்கிலும், ஆசிய நாடுகளிலும் பல்வேறு மொழிகளாக மாறுபட்டு உலகமெங்கும் பரவியது.

மூன்றில் எது உண்மை? ஆப்பிரிக்காவில் தோன்றிய தமிழ் சுமேரியா வழியாக தென்குமரிக்கு வந்தது. அல்லது குமரியில் பிறந்த தமிழ் சுமேரியா வழியாக ஆப்பிரிக்காவை அடைந்தது. அங்கிருந்து இங்கா, இல்லை இங்கிருந்து அங்கா?

இங்கிருந்துதான் உறுதியாக அங்கா? இப்புத்தகத்தின் சான்றுகள்படி, குமரித்தமிழே உலகெல்லாம் பரவியது. அதற்குரிய சான்றாக பள்ளர் எனும் பெயரால், அவரது தொழிலால், மதத்தால், பண்பாட்டால் செம்மையாக நிறுவப்பட்டுள்ளது. உலகில் தானாக எதுவும் நிகழாது. குமரித்தமிழ் உலகமெங்கும் பரவியிருக்கிறது எனில் யாரால் எனும் கேள்வியை ஒருபோதும் தவிர்க்கவியலாது.

இங்கிருந்தே உலகமெல்லாம் எனும் இக்கருத்து நம் தமிழ்ப் புலவர்மரபின் உள்ளார்ந்த கருத்துமாகும். அவர் பெருமைமிகு தமிழ்ப்புலவர் என்பதால், சாதியையும், மதத்தையும் புறந்தள்ளி, தமிழ்வழியில் மட்டும் நின்று இக்கருத்திற்கு வலுச் சேர்த்தார். யாம், அனைத்துத் தமிழர்க்கும் எளிதில் புரியுமாறு, தெள்ளத்தெளிவாக விளங்குமாறு, அனைத்தையும் வெளிப்படையாக விளக்கியுள்ளோம். எமது நோக்கம் தமிழர்களை சாதியாகப் பிரிப்பதல்ல. உறுதியாக.

மாந்தர் பரவலில் மரபியில், மானுடவியல் என நிறைய இருந்தாலும் மொழியியல் எனவும் ஒன்று உள்ளதல்லவா? மொழிஞாயிறு பாவாணர் சுட்டுவது மற்ற அனைத்துச் சான்றுகளையும்விட மாந்தர் வளர்ச்சிக்கு மொழியியலே அடிப்படை. எமக்கும் இது ஒப்பமே. தொல் மாந்தர் மாந்தராக, மானுடராக மாறியதே மொழியால் எனலாம். பண்பாட்டுப் பரிணாமத்தில் மொழியே முக்கியம். அதாவது எண்ணங்களே. மாந்தர் சிந்தித்ததே மானுட வளர்ச்சி, பண்பாடு. அதுவே பண்பாட்டுப் பரிணாமம். சிந்தனைக்கு மொழி அவசியம். எனில் அந்த முதல்மொழி தமிழ் என்பதும் பொருத்தமே.

தமிழ் குமரியில்தான் தோன்றியதா என்பது சேர, சோழ பாண்டிய மரபோடு பின்னிப் பிணைந்துள்ளது. மூவேந்தரும் யார் என்பதே தமிழ் எங்கிருந்து என்பதற்குப் பதிலைக் கொடுக்கும்.

எமது புத்தகத்தில் தமிழிலிருந்தே சமஸ்கிருதமும், பாளியும் திரிந்தது என்பதைச் சுட்டியுள்ளோம். பேராசிரியரும் அதே கருத்தைக் கொண்டிருப்பது, பதிந்திருப்பது கவனிக்கத்தக்கது. பேராசிரியர் மலேயாவில் பிறந்து வளர்ந்ததால், திராவிடத்தை, திராவிட மொழிகளை நன்கு உள்வாங்க வில்லையோ? அவர் காலத்திய திராவிடக் கருத்தை பற்றிக் கொண்டாரோ? இல்லை திராவிடத்தை விட்டுவிடக் கூடாது எனும் நல்லெண்ணம் கொண்டிருந்தாரோ? பின் ஏன் ஆப்பிரிக்காவில் தோன்றியது தொல்திராவிடம் எனச் சுட்டினார்? தமிழ் என்றல்லவா அழுத்தம் திருத்தமாகப் பதிவிட்டிருக்க வேண்டும். பேராசிரியரின் ஆங்கிலக் கட்டுரைகளை வாசிக்கும் அயல்நாட்டவர் இக்கருத்தை எவ்விதத்தில் புரிந்து கொள்வார்? தமிழ் திராவிட மொழிகளாக ஆப்பிரிக்காவிலேயே திரித்து விட்டதென்றா.

புத்துலகம் செய்வோம் இரண்டின் எழுத்துக்கு நல்லதொரு சான்றாகும் வண்ணம் எமக்கு முன்னரே அது குறித்து சிறப்பாகச் சிந்தித்திருக்கும் அய்யா லோகனாதனுக்கு நன்றி.

பேராசிரியரின் புகழ் நிலைக்கட்டும். தமிழ் முன்னிலும் சிறக்கட்டும்.

மனிதர் ஆப்பிரிக்கப் பெருநிலத்தில் தோற்றம் பெற்றதை உலகினர் ஏற்றுக் கொள்கிறார். எழுபது, எண்பதாயிரம் வருடங்களுக்குமுன் புலம் பெயர்ந்த ஆப்பிரிக்க மானுடர், உலகின் அத்தனை பகுதிகளுக்கும் பரவி, பண்பாடடைந்து,

தற்காலத்திய மனிதராக மாற்றமடைந்தார் என்பதை அறிஞர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். எனினும் உலகமெல்லாம் கிடைக்கும் மிகத்தொன்மையான மானுடர் தொல்லெச்சங்கள் சுட்டுவது எதை? ஆப்பிரிக்க மாந்தர் மிகப் பழங்காலத்திலேயே உலகெங்கும் பரவிவிட்டார் என்பதைத்தானே. அவரைத் தொல்மாந்தர் என அழைப்போமாயின், உலகெங்கும் பரவிவிட்ட தொல்மாந்தர், உலகின் எப்பகுதியிலிருந்தும் அதற்கு மேம்பட்ட மானுடராகப் பரிணாமம் பெற்றிருக்க முடியுமன்றோ. இக்கருத்தே எமது புத்தகத்தில் வலிமையாக சுட்டப்படுகிறது.

மானுட வரலாற்றை தொல்மாந்தர், மாந்தர், மனிதர் எனப் பகுப்போமாயின் இனி மாறப்போகும் மனிதரை அதிமனிதர் எனச் சுட்டலாம். அப்படித்தான் மதிப்பிற்குரிய மகான் அரவிந்தர் சுட்டுகிறார். அவர் பெயர் அதிமானுடர். அதாவது சூப்பர் மேன் - Super man. அதிமனிதருக்கும் மேலே பல படிநிலைகள் உள்ளனவாம். வியப்பான சிந்தனை மகான் அரவிந்தருடையது. மகான் மொழியை, எண்ணங்களை மிக நேர்த்தியாக உள்வாங்கியிருப்பது அருமை. இது அய்ரோப்பியரின் சிந்தனையிலும் பெருத்த செல்வாக்கைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

தொல்மாந்தரே பூமியின் பெரும்பாலான பகுதிகளுக்கும் பரவிவிட்டார் எனலாம். இதுவே அறிவியலில் இருபது இலக்கம் ஆண்டுகளுக்குமுன் எனப்படுகிறது. அதாவது மற்ற விலங்குகள் பரவியதுபோல் தொல் மாந்தர் பரவலும் நிகழ்ந்தது.

தொல்மாந்தருக்குமுன் வாழ்ந்தவரை முந்து மாந்தர் எனவும் சுட்டலாம். எனினும் முந்துமாந்தருக்கு மனிதப் பண்புகளைவிட குரங்குநிலைப் பண்புகளே அதிகமும் இருந்திருக்கக் கூடும். இதைக் கருத்தில் கொண்டே மானிடப் பரிணாமத்தில் தொல்மாந்தர் முதலாவதாக இங்கு சுட்டப்படுகிறார்.

தொல்மாந்தர் மற்ற விலங்குகள்போல் உள்ளுணர்வின் வழிகாட்டலில், இயற்கையின் அரவணைப்பில் மாந்தராகப் பரிணமித்தார். இது நிகழ்ந்தது தோராயமாக ஒரு இலக்கம் ஆண்டுகளுக்குமுன் எனக் கொள்ளலாம். தொல்மாந்தர் மாந்தராகியது உள்ளுணர்வால் எனில், மாந்தர் மானுடராகியது மொழியறிவாலே எனலாம். அதாவது ஒரு இலக்கம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து பன்னிரெண்டாயிரம்

அல்லது பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்புவரை எனலாம். இக்காலத்திலேயே மொழியின் முந்து வடிவம் அதாவது தொல்மொழி தோற்றம் பெற்றிருக்க வேண்டும். இக்காலமே மானுட வரலாற்றில் பண்பாட்டுப் பரிணாமமாகச் சுட்டப்படுகிறது. இந்தத் தொல்மொழி எது என்பதே தமிழர் கேள்வி. தமிழ்மரபில் அம்மொழி தமிழ் எனப்படுகிறது. அதன் சிறப்பாலேயே தமிழ்ப் புலவர் மரபில் கல்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தமொழி எனச் சிறப்பிக்கப்படுகிறது. பெரும்பாலான நவின மனிதர்கள், அறிஞர்கள் இக்காலத்தை, இந்த வரலாற்றை அறியாமல், நவின காலத்தைக் கருத்தில்கொண்டே அதாவது பத்தாயிரம் ஆண்டுகளுக்குப் பிந்தையதான தற்காலத்திய மானுட வரலாற்றை வைத்தே மொழி வரலாற்றைப் பேசுகிறார்கள், ஆராய்கிறார்கள்.

தமிழ் மரபு, தமிழ்ப் புலவர் பேசுவது ஒரு இலக்கம் ஆண்டுக்கு முன்பிருந்த மொழியை. அதாவது மாந்தர் மனிதநிலை நோக்கி நகர்ந்து வந்தாரல்லவா, அதாவது விலங்கு நிலையிலிருந்து பண்பாடைந்துகொண்டே வந்தாரல்லவா, குடும்பமாக, கூட்டமாக வசித்தாரல்லவா, அப்போது ஏதேனுமொரு விதத்தில் ஒலிகளை, பேச்சை அறிந்திருப்பாரல்லவா. அந்த மொழி குறித்து, அது எந்த மொழி என்பது குறித்து.

சமஸ்கிருதப் பண்டிதர்கள், அறிஞர்கள், தமிழோடு போட்டிபோடும் விதத்தில் அந்தத் தொல்மொழி சமற்கிருதம் என்கிறார்கள். அதாவது உலகின் மூத்தமொழி சமஸ்கிருதமெனவும், சமஸ்கிருத்திலிருந்தே தமிழ் உட்பட உலகின் மொழிகள் தோற்றம் பெற்றதாகவும், அது தேவபாஷை எனக் கூறப்பட்டு, மற்ற மொழிகளைவிட உயர்வானதாகவும், அம்மொழி பேசுவோர் மற்ற மனிதரைவிட உயர்ந்தோராகவும் கூறுகின்றனர், எழுதுகின்றனர். நவின இந்திய அரசும் இதனை உண்மையாகக் கொண்டே தேவபாஷையைச் சிறப்பித்தும், உயர்த்தியும் வருகிறது.

அது உண்மையா? சமஸ்கிருதம் உலகின் தொல்மொழியா? உலகின் தொல்மொழி இயற்கையிலிருந்து, இயற்கையாகத் தோன்றியிருக்க வேண்டும். தொல்மொழி எளிமையானதாக இருக்க வேண்டும். உச்சரிக்க இலகுவாக இருக்க வேண்டும். சற்றே மொழியறிவு கொண்ட எவரும் ஒப்புக்கொள்ள கூடியதே இது. எனில் சமஸ்கிருத அரிச்சுவடி, ஒலிப்பு, சொற்கள், சொல்லமைப்பு எவ்விதம் உள்ளது? எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது?

அக்னி என உச்சரிக்கும்போது அடி வயிறு இறுகுகிறது, தொப்புள் சுருங்குகிறது, தொண்டை அதிர்கிறது, முகம் குறுகுகிறது, குரல் ஓங்கி ஒலிக்கிறது. சொல்லை உச்சரிப்பதற்கு கவனம் தேவைப்படுகிறது. அதை அக்கினி எனச் சுட்டக் கூடாது. அது அக்னி. மாந்தர்கள் எளிய சொற்களைப் பேசியிருப்பரா, முந்து மொழி எளிமையானதாக இருந்திருக்குமா அல்லது சமஸ்கிருதமாக இருந்திருக்குமா?

வடவர் அக்னி என்ன தென்னவர் தீ(ய்), நெருப்பு என்கிறார். அரி, எரி, அனல், தழல், அழல் எனவும் சுட்டுகிறார். அனல், கனல், ஒளி, வன்னி, சுடர் போன்ற பெயர்களும் நெருப்பிற்கு உண்டு.

சமஸ்கிருதம் Samskrita. Sam - கூட்டு, சேர்க்கை, நன்றாக எனும் பொருள் சுட்டப்படுகிறது -Together perfected well. Krta - செய்யப்பட்டது - Made, formed, work. அதாவது நன்றாகச் செய்யப்பட்டது - Well prepared, pure and perfect, polished.

அரபு மொழியில் சம (Sama) எனில் வானம் (Sky). சமஸ்கிரிப்ட் எனில் வான் எழுத்தாம் (உயர்ந்த எழுத்து). krit, Kritan, Kirtan எனில் பாடல். சம்கிரிட் எனில் உயர்ந்த பாடல். சம்கிரிட் எனில் வானவர் பாடல், பாடல் தொகுப்பு, பாடல் மொழி என்பதும் பொருத்தம். Pro Krit - புரோகிரிட், புரோகிதர் - முதன்மைப் பாடல், முதன்மையாளர். புரோகிதர்

மகவீன்றவரைக் குறிக்கும் பொதுவான சொல் தாய். அம்மை, அன்னை, ஆய், அவ்வை, மோய், ஈன்றாள், தள்ளரி போன்ற பிற பெயர்களிலும் தாய்மை சுட்டப்படுகிறது. அம்மா என்பது அருகாமை வரலாறு கொண்டதோ? தாயார் என்பதற்கும் மதர் என்பதற்கும் எவ்வளவு வேறுபாடு?

மாதா, மதர், mother. மதர் ஆங்கிலம் எனில் மாதர்? பாரதி சுட்டிய மாதர் வடமொழியா? மடந்தை தமிழ்ப் பெயர். மாந்தர், பேதை, மாது, மகடூஉ பெண் பெயர்கள். மாந்தர் மக்களைக் குறிக்கும் சொல். மாந்தா, மைந்தா, மைந்தர், பிள்ளைகளைக் குறிப்பதோ? மாந்தர் - மக்கள். மைந்தர் தம் மக்கள், மகள் - தம் பிள்ளை. மக்கள் - மக்கள் கூட்டம். மந்தி - குரங்கு. மந்திர் - சமற்கிருதத்தில். கோவில்

மதர் - ஜெர்மனியில் மட்டர் (Mutter). இலத்தினில் மாடர் (Mater). பெர்சியத்தில் மடர் (Madar). ருஷ்யத்தில் மாட் (Mat). மதர் எனும் சொல், தொல் இந்தோ - ஈரோப்பியச் சொல்லான மெக்தர் (Mehtar) என்பதிலிருந்து தருவிக்கப்பட்டதாம். சொல்வது 25.08.2012 அன்று வெளியான நியுயார்க் டைம்ஸ் பத்திரிகை (New York Times). நாளிதழ் மேலும் சுட்டுகிறது - சமஸ்கிருதம் முதல் சுவிடிஷ் வரையிலான அத்தனை மொழிகளும் துருக்கியிலிருந்து வந்ததாம் (Sanskrit to Swedish, they all came from Turkey). முதன் முதலில் இந்தோ - ஐரோப்பிய மொழி பேசியவர்கள் அனதோலியாவான துருக்கியின் அமைதியான வேளாண்காரர்களாம். காலம் ஒன்பதாயிரம் வருடங்களுக்கு முன்பாம். அவர்கள் அன்பாலேயே தங்களது மொழியைப் பரப்பினார்களாம். வாளால் அல்லவாம்.

மெக்தர் பொருள் யாது? அதன் வேர்ச் சொல் எது? அச்சொல் பிறந்தகம் துருக்கி எனில் அங்கு முக்தர் சொல் தற்போதும் புழக்கத்திலுள்ளது ஒப்பு நோக்கத்தக்கது. முக்தர் - மூத்தவர் எனில் மெக்தர்? மூத்தவர் தானே. மூத்தவர் எனில் இளையவர் இருப்பாரன்றோ. இளையவரை வைத்துத்தானே மூத்தவர். இளையவர் பிள்ளை எனில் மூத்தவர் தாய். தாய் - சேய். மகவு ஈன்றவர் தாய். மூத்தர், முக்தர், மெக்தர், மக்தர், மகதர் - பொருத்தமன்றோ. நியு யார்க் டைம்ஸ் நாளிதழுக்கு மூத்தர், மூப்பர், பெருமூப்பர், பெருமூப்பி போன்ற சொற்கள் தமிழில் இருப்பதும், அவற்றின் பொருள் தெரியாமலும் இருக்கலாம். தமிழருக்குத் தெரியுமல்லவா? துருக்கியின் உழவர்களை மூலமாகக் கொண்டு இந்தோ - அய்ரோப்பிய மொழி தோன்றியதா அல்லது அங்கு தமிழ் மொழியின் வேர்கள் ஆழம் கொண்டுள்ளதா? துருக்கி தமிழ், தமிழ்ப் பண்பாட்டோடு மிக நெருக்கம் கொண்டிருக்கிறது என்பதற்கு, அதன் இடப் பெயர்களே எளிய சான்றுகள்.

மூத்தர், முக்தர் பொருளென்ன? மூலம் எது? முத்து எனில் விதை எனப் பொருள். புளிய விதை புளிய முத்து. வேம்பின் விதை வேப்ப முத்து. முத்து - முத்தியது. சமஸ்கிருதத்தின் முக்தி, முத்தியது என்பதன் திரிபே. முத்தியது, மூத்தது. முத் - முத்து - முத்தியது. முந்தி - முந்தியது. மூத்தது. முகிழ்த்தது. மு - முத் - மூத் - பெரியது. ஒப்புநோக்க mammoth - anything surprisingly large size. மேம்மூத் - பெரியது, மூத்தது. அதாவது தற்போதைய யானைக்கு முன்னர் இருந்த

மூத்த யானை, அளவில் பெரிய யானை. மா - பெரிய - மேமூத் - மாமூத் - மிகப் பெரிய, ஆகப் பெரிய - large.

தமிழில் தாவரங்களின் விதைகளுக்கு முத்து எனவே பெயர். ஆமணக்கு முத்து. நெல் முத்து முத்தாகக் காய்த்திருக்கிறது. மூத்த - மூப்ப - மூப்பன். ஒரு செடிக்கு, தாவரத்திற்கு மூத்தது அதன் முத்தே. முத்திலிருந்தே அதாவது விதையிலிருந்தே செடி. விதையில்லாமல் செடி இல்லை.

முத்து - முத்த - முக்த - முக்தன். முத்தா - மூத்தா - மூத்தாள் - மூத்தம்மா - மூத்த அம்மா.

முத்த - சித்த - பத்த - பித்த - அத்த - முத்தன் - சித்தன் - பத்தன் - பித்தன் - அத்தன். தமிழ் இயற்கையோடு இயைந்த மொழி. அனைத்து சொற்களுக்கும் தமிழில் வேர் கொண்டது. தமிழ் வேர் ஆழமானது, உறுதியானது, பிற மொழிகளுக்கு மூலமானது.

வேம்பு - வெம்பு - வெம்மை - வெப்பம். வெம்முதல் - விம்முதல் - பருத்தல். பழம் - பழுத்தல். பல் - பலவாதல். ஒன்று பலவாதல். பழம் முதிர்தல், உதிர்தல், தவிர்தல். தவர் - தவிர - தவறுதல் - விழுதல், முடிதல், சாதல். ஊர்களில் இறப்பை தவறிட்டாங்க, தவறிப் போயிட்டாங்க என்பதே வழக்கு. தவர்தல் - தவறிப் போதல். தருதல் - தருவாதல் - நல்லவற்றை தருதல். மூத்தோர் நற்சொற்களைத் தருதல்.

புளியங்கொட்டை, வேப்பங்கொட்டை என்பதும் வழக்கே. கொட்டை - கோட்டை. கோட்டைக்குள் இருப்பது, பழத்துக்குள் இருப்பது, உள்ளுக்குள் இருப்பது கோட்டை. பழச் சதையால் மூடப்பட்டது, உறையால் சூழப்பட்டது, பாதுகாக்கப் பட்டது - கொட்டை. எதிரிகளிடமிருந்து பாதுகாக்கப்பட்டது கோட்டை. அரச மரபினர் தங்குவதற்கு அரணாவது, உறையாவது கோட்டை. கோடு - கோட்டு - கோட்ட - கோட்டம் - கோட்டை - கொட்டை. ஆங்கிலத்தில் ஃபோர்ட் (Fort). போர்ட் எனில்? அது Forte என்பதன் திரிபு. போர்ட், போர்ட்டி, போர்ட்டிகோ - வெளிச்சுற்று. Fort - Forte. கோர்ட் (Court) சுற்று. வெளி. வெளியே. ஆங்கில கோர்ட், கோட்டம் என்பதன் மருவு.

உலகின் மூத்த சொல் எது? மூலச் சொல் எது? முதல் சொல் எது? முதன்மைச் சொல் எது? உலகை ஒன்றாக்கும் சொல் எது? உலகை இணைக்கும் சொல் எது?

உலகின் விதை எது? உலகின் முத்து எது?

மக்களைக் குறிக்கும் பொதுப் பெயர்கள் மாந்தர், மானவர், மானிடர், மண்ணவர், மனிதர், நரர். மண்ணவர் - மண்ணில் பிறந்தவர். மண்ணுக்குரியவர். மண்ணுக்குரியவர் மொழி தமிழ். எனில் விண்ணவர்? அவர் மொழி?

விண்ணவர் தேவராம். அவர் வானவர். வரர், சுரர், உம்பர், மேலவர், அமரர், ஐயர், அமுதர், கடவுளர். தேவரீர் மொழி செய்யப்பட்டது எனில், எதிலிருந்து, எதை ஆதாரமாக வைத்துச் செய்யப்பட்டது? தேவரீர்கள் உண்ணும் அமுதம் எங்கிருந்து வருகிறது?

இந்தோ, இரோப்பிய மொழிகள் துருக்கியத்திலிருந்துதான் உண்டானதா? சேற்றில் வாழும் ஒரு வகை மெல்லுடலியை மட்டி என அழைக்கிறது தமிழ். ஆங்கிலத்தில் மஸ்ஸல் (Mussel), ஜெர்மானியத்தில் மஸ்செரின் (Muschein), பிரெஞ்சில் மௌலி (Moule), இத்தாலியில் கோஸ்ஸா (Cozza), எஸ்பானியத்தில் மெஜிலியன் (Mejilion), போர்த்துகீசியத்தில் மெஜில்ஹயோ (Mexilhaao), டச்சில் மொஸல் (Mossel), இலத்தீனில் டெரியோமார்ப்பா (Pteriomorpha), துருக்கியத்தில் மிட்யே (Midye).

துருக்கிய மிட்யே, பிற ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடைய ஒலிப்பாக, சொல்லாக இருக்கிறதா அல்லது தமிழின் மட்டியோடு தொடர்புடையதாக இருக்கிறதா?

மட்டி - மட்யே. தமிழும் - துருக்கியமும். தமிழின் மட்டி எனும் பெயர் அம்மெல்லுடலியின் வாழ்விடத்தை சுட்டி வைக்கப்பட்டுள்ளது. மட்டி எனில் மண். மட்டி மண்ணுக்குள் அதாவது சேற்றுக்குள் புதைந்து கொண்டு வாழக்கூடியது. ஆறுகளிலும், நீர்நிலைகளின் ஓரங்களிலும், சேற்றுப்பாங்கான இடங்களிலும் வாழும். உடல் வாழை இலை போன்று அடுக்காக அடுக்கப்பட்டு இரு ஓடுகளால் மூடப்படிருக்கும். இரு ஓடுகளும் இறுக்கமான சவ்வுகளால் பிணைக்கப்பட்டிருக்கும்.

சவ்வுகளை, சதைகளை இறுக்கியும் தளர்த்தியும் இரு ஓடுகளையும் திறந்தும் மூடியும் கொள்ளும். நீரை வடிகட்டி அதிலுள்ள நுண்ணிய உயிர்களை, சத்துக்களை எடுத்துக் கொள்ளும்.

மட்டி மண்ணுக்குள் வாழ்வது. குறிப்பாக சேற்றில். ஆங்கிலத்தில் மட் (Mud). மட்டில் வாழ்வது மட்டி. துருக்கியில் மிட்டி, மிட்யே. மஸல், மொஸல் ஆகும் போது மட்டி மிட்டி, மிட்யே ஆகாதா? உண்மையெனில் தமிழும், துருக்கியமுமல்லவா நெருங்கியவை, உறவுடையவை. ஒன்பதாயிரம் ஆண்டுகளுக்குமுன் துருக்கியில் இந்தோ - ஆரிய மொழி விவசாயிகளால் உருவக்கப்பட்டது எனில், அதற்கு முன்னர் அங்கு புழங்கியது எந்த மொழி?

மட்டி - மண், சேறு. சேறு என்பது சேற்று என்பதன் குறுக்கம். சேற்று - சேத்து - செகத்து - சேதி, சேது. சமஸ்கிருத செகம் - ஜெகம் மூலமென்ன? பூமி மண் என்பதால் தானே ஜெகம் எனப்படுகிறது. சேற்றுக் கடல் - செகதிக் கடல், சேதிக் கடல், சேதுக் கடல். சேதும், சகதியுமான கடல், மேடான கடல்.

செகதி - சகதி. செகம் - சகம். ஜெகம் - ஜகம். தொல் மனிதர் சகதி எனப் பேசியிருப்பாரா அல்லது ஜகதி எனச் சுட்டியிருப்பாரா? சி - உச்சரிப்பு எளிதா அல்லது ட்சி, ஸீ, ஜி, ஜீ, ஜே, ஜோ, ஜன், ஜின், ஜென் எளிதா?

மட்டி மண், மண்டைக்குள் மண்ணா என்பது மூளையில்லாதவரைச் சுட்டுவது. மட்டி - புரிதல், புரிந்து கொள்ளும் தன்மைக் குறைவானவர். நீரென்ன மட்டியா. அதுவே பட்டியா எனவும் சுட்டப்படும். சுட்டி எனில் மூளையில் கெட்டிக்காரர். மட்டி - சுட்டி ஒப்பு நோக்க, சிரி - பெரி. சிரி - சிரியது - சிறியது. பெரி - பெரியது. பொரி - பொரிந்தது. நெல் பொரி - அரிசி பொரிந்து, பொதிந்தி, பொருத்து, பெருத்து, பெரிதாகி பொரிகிறது. பெரிதாகிறது. சிறியது - பெரியது, சிரி - சிரித்த - சிரித்தான். வாய் பெரிதாதல். சிரிக்கும் போது வாய், உதடுகள் பெரிதாகின்றன. சிரி, சிறி, ஸ்ரீ - பெரியது, சிறந்தது, வளர்வது, உயர்வது. ஸ்ரீ - மங்கலமானது. மேன்மையானது ஸ்ரீ-யின் மூலமென்ன?

மட்டி - சிறியது. மட்டி - சிறிய வாழை வகை - மட்டி வாழைப்பழம். மெட்டி - சிறிய வளையம். கட்டி - வேனற் கட்டி - சிறிய கொப்பளம் - வேர்க்குறு - குறு வியர்வை, சிறு துளி, சிறு கட்டி. கட்டி - வெல்லக்கட்டி, சிறு இனிப்பு. கட்டு - கட்டுதல் -

ஒன்றாக்குதல், நெருக்கல், சேர்த்தல். கட்டியணைத்தல் - சேர்த்தணைத்தல். அணைக்கட்டு - நீரேச் சேர்த்தல், நீரைக் கட்டுதல். குட்டு - சிறிதாகச் குட்டுதல், கொட்டு - கொட்டுதல். கொட்டு - சிறு வாத்தியக் கருவி.

கட்டி, சிறு வெல்லக்கட்டி எங்கிருந்து வந்தது? அது எதிலிருந்து பிறந்தது? அது சுட்டித்தனமாக தாம்தான் இனிப்பானவர், இனிப்பில் சிறிந்தவர், இனிப்புச் சுவையையே உடலாகக் கொண்டவர் என எண்ணுமேயானால், எங்கிருந்து வந்தது அந்த இனிப்பு? அந்த சிறு வெல்லக்கட்டியின் இனிப்பிற்குக் காரணம் தித்திக்கும் கன்னலன்றோ.

வெல்லம் கன்னலை அறியாது இருக்கலாம். கன்னலறிவும் வெல்லத்தை.

சமஸ்கிருத மொழியை யாம் அறிந்திருக்கவில்லை. சமற்கிருத இலக்கணம் சிறிதளவும் தெரியாது. சமஷ்கிருதம் பற்றி தெளிந்தவரே, சமஷ்கிருதத்தைவிட தமிழ் சிறந்தது என்பதைப் பேச முடியும். தமிழ் சமஷ்கிருதம் இரண்டும் தெரிந்தவரே இருமொழிகளையும் ஒப்பிட்டு இரண்டில் எது மூலம், எது தொன்மையானது என்பதை ஆராய முடியும். சமஷ்கிருதமே தெரியாமல் யாம் பேசுவது முறையா? எம் முன்னோர், சமஷ்கிருதத்தை முறையாகப் பயின்ற எம் மூத்தோர்கள், அறிந்து ஆராய்ந்து சொல்லியிருக்கின்றனர். பண்டிதர் பாவாணர் போதாதா. யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம் எனப் பாடிய பாரதி போதாதா. பாரதி சமஷ்கிருதமும் அறிந்துதானே பாடினார், தமிழே கன்னலென்று..

தமிழே எங்கள் மொழி

தமிழே எங்கள் உயிர்

தமிழே எங்கள் இல்லம்

தமிழே எங்கள் சுகம்.

(நன்றி - தமிழா பாடல் குழு).

**நாடு தமிழ் நாடு**

**உலகம் தமிழ் உலகம்**

இது எம் முன்னோர், தமிழ் மூத்தோர் முடிவு. யாம் அம்முடிவுக்கு மேலும் வலுச் சேர்க்கின்றோம். கூடுதல் சான்றுகளைச் சுட்டுகின்றோம். உலகினர் மனம் மேலும் தெளிவாக வேண்டும் என்பதற்காக.

எமக்கு சமஷ்கிருதம் பிடிக்குமா? பிடிக்கும், நிறையப் பிடிக்கும். நிறைய மனப்பாடமெல்லாம் வைத்திருக்கிறோம். சமஷ்கிருதம் விண்ணோர் மொழி. பேராற்றல், பேரறிவு கொண்ட மொழி. தமிழ் பேரன்புப் புதையல். வேறுபாடு அவ்வளவே. மூலம் எது, மூத்தது எது என்பதிலேயே தமிழர் மாறுபடுகிறார். மூத்தது எளியதாகவே இருக்க முடியும். மனிதர் பொருளைப் படைக்கிறார். எடுத்த உடனேயே நுட்பமாகப் படைத்து விடுவதில்லை. பொருளைப் படைத்து, அதில் மாற்றங்கள் செய்து, புதுமைகளைப் புகுத்தி, சிறிது சிறிதாக அதை உச்சத்திற்குக் கொண்டு செல்கிறார். ஒப்பு நோக்க கணினிகள், அலைபேசிகள். அலைபேசி முதலில் பேசுவதற்கு மட்டுமே பயன்பட்டது. கடிகாரம் வந்தது, புகைப்படம் வந்தது, கணினி வந்தது. இன்றோ அனைத்துமே அலைபேசிக்குள் வந்தவிட்டது. தற்போதைய நவின அலைபேசியா முதலில் உருவாக்கப்பட்டது? இல்லையல்லவா. எளிமை வளர்ந்தது, சிறந்தது, உயர்ந்தது. கூடுதலாகி நுட்பமாகியது.

மொழிக்கும் இது பொருந்தும். மாந்தரின் தொல்மொழி எளிமையாகவே இருந்திருக்கும். வலிந்து ஒலிக்கும் ஒலிகள் புழக்கியிருக்காது. உண்மையெனில் அம்மொழி தமிழே. முன்னோர் கூற்றின்படி, பழமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய்த் திகழ்வது, வளர்வது தமிழே. தமிழின் சிறப்பு அது எளிமையாகவும் இருக்கிறது, புதுமையாகவும், நவீனமாகவும் இருக்கிறது. மாந்தரோடு, மானுடரோடு, மனிதரோடு கூடவே தானும் வளர்ந்து வருகிறது போலும்.

அல்கல் எனில் நாள். தினம் day.

அல் - இரவு. கல் - பகல், காலை. சுபகல் - இந்தியில் நாளை, காலையில். இரவும் பகலும் ஒரு நாள் Day and Night.

எல் - நாள், எல் - பகல், எல்லி - இரவு, கங்குல் - இரவு (கங்குலும் பகலும் கண்துயில் அறியாள் - இரவும் பகலும் கண்ணுறங்காமல் அரங்கரையே நினைத்துக் கொண்டிருக்கிறாள் - மகளின் நிலை கண்டு தாய் உருகுகிறார் - ஆழ்வார் பாடல்).

லில் - மண், என்லில் - மண்ணாள்பவர், சுமேரிய என்லில் பெயருக்கு மண்ணாள்பவர் - Ruler of Earth என்பது தான் பொருளா? என் - மன் - மண், லில் - அல் - அள் - ஆள் - ஆள்பவர் - மண்ணாள்பவர் பொருத்தமல்லவா.

லில் - வில் - வில்லை ஆள்பவர், வில்லில் சிறந்தவர் (ruler of bow) வில்லுக்குப் பெயர் பெற்ற ஈலமைட்டுகள்போல் சுமேரிகளும் வில்லில் சிறந்தவர்களோ? இராமாயணத்தை ஆப்பிரிக்காவோடு இணைத்து, ஆப்பிரிக்காவில் வைத்துப் பார்க்க இந்திய மனம் ஒப்புமா? இராமன் கதை ஆப்பிரிக்காவில் நிகழ்ந்திருப்பதற்கு பொருத்தமான சான்றுகள் ஏராளமாகக் கிடைக்கின்றனவே.

நாள் என்பதற்கு பகல், எல், எல்லை, அல்கல், வைகல், தினம் எனப் பல பெயர்கள் உள்ளன. காலம் என்பதைச் சுட்டும் பெயர்கள் கால், காலை, வேலை, எல்லை, கொன், போழ்து, பொழுது, செல்வி, அமையம், பாதம். முன்னை நாள் - நென்னல், நெருநல். பின்னை நாள் - பிற்றை, பின்றை.

தொல்மாந்தர் மாந்தராக மாற்றமடைந்த காலத்தில் இராமாயணம் நடந்ததோ? மாந்தர் மானுடராக மாறிய காலம் மகாபாரதமோ?

உலகம் மனிதரின் பத்தாயிரம் ஆண்டு வரலாற்றை ஓரளவிற்கு சிறப்பாக அறிந்துள்ளது. சான்றுகளின் அடிப்படையில் இவ்வரலாறு கட்டமைக்கப்பட்டுள்ளதால், இக்காலத்தின் நம்பகத்தன்மை அதிகரிக்கின்றது. கிடைத்திருக்கும் தரவுகளின் அடிப்படையில் இக்காலத்திய ஆப்பிரிக்காவின் பண்பாடே, வரலாறே முன்னோடியானதாகக் கருதப்படுகிறது. குறிப்பாக நைல் ஆற்றைச் சார்ந்த நைல் பண்பாடு, நைல் அரச மரபு சிறப்பாக அறியப்பட்டுள்ளது.

சுமேரியப் பண்பாடு நேர்த்தியாக அடையாளங் காணப்பட்டுள்ளது. அதன் ஆப்பெழுத்துப் பதிவுகள் அதன் பழமையை, வரலாற்றை சிறப்பாகச் சுட்டுகின்றன. பல முன்னோடிச் சாதனைகளுக்குச் சொந்தக்காரர்கள் சுமேரியர்கள் என்பது பெருமைப்படத் தக்கது.

காணான் நிலம் கடவுளுடனான அதன் உடன்படிக்கையால், பழமையும், சிறப்பும் கொண்டதாக அறியப்படுகிறது. மூவாயிரம் அண்டுகளுக்கு முந்தைய வரலாற்றுப் பெட்டகமாக அதன் பதிவுகள் நிலைபெற்றுள்ளன.

வேதமரபும் பழமையானதாக அடையாளம் பெற்றுள்ளது. வேதப்பாடல்கள் எழுத்து வடிவம் பெறாவிட்டாலும், மிகப் பழையவை என்றே புகழப்படுகின்றன. இந்தியப் பண்பாடும், சீனக் கலாச்சாரமும் கிழக்கின் தொன்மைக்கு சான்றாக மிளிர்கின்றன.

தமிழர் பண்பாடோ அதன் செவ்வியல் பாடல்களால் உலகின் பழமையான பண்பாடுகளுள் ஒன்றென வானோங்கி நிற்கிறது. மொழிஞாயிறு பாவாணரின் முடிவின்படி, தமிழ் உலக மொழிகளில் முந்தியது, தலைமையானது, திராவிடத்திற்குத் தாய், ஆரியத்திற்கு மூலம்.

மாந்தர் மானுடராகியது மொழியாலே எனில் அம்மொழி எது?

அம்மொழி தமிழ்தான் என்பதற்கே இத்தனை விளக்கமும்.

பன்னிரெண்டாயிரம் வருடத்திற்கு முந்திய மானுடர், தற்காலத்திய மனிதராக, அறிவியல் மனிதராக, பகுத்தறிவு மனிதராக, நவின மனிதராக, Modern Man ஆக, தலை நிமிர்ந்து நிற்கிறார், வான்முட்டி உயர்ந்துள்ளார் எனில், அது யாரால்? எந்தப் பண்பாட்டால்?

மாந்தரை மானுடராக்கியது தமிழா? மானுடரை மனிதராக்கியது தமிழா? தமிழர் பண்பாடா? தமிழர் இத்தகைய பண்பாடு கொண்டிருந்தாரா? வரலாற்றுச் சான்றுகள் உள்ளனவா?

பாண்டியர் மரபு தோராயமாக ஐம்பதினாயிரம் ஆண்டுகள் பழமையானதென பாவாணர் சுட்டுகிறார். அதற்குக் காரணம் உள்ளது. தமிழில் முச்சங்கம் இருந்தது என்பது தமிழறிஞர் முடிபு. அதனால்தான் தமிழின் தோற்றத்தை ஐம்பதினாயிரம் ஆண்டுகளுக்குக் கொண்டுசெல்கிறார்கள். மானுடரை மனிதராக்கியது தமிழ் மரபு என்பதை, தமிழ் மூவேந்தர் மரபுவழி நின்று மெய்ப்பிக்க இயலுமா? இப்புத்தகத்தில் முடியும் என்பது காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவில் மட்டுமல்ல, சுமேரியா, காணான், ஆப்பிரிக்கா பகுதிகளில் பரவியிருந்தது தமிழர் பண்பாடே என்பதற்கு, தமிழ்ப் பெயர்களும், தமிழ் மொழிக் கூறுகளும் இங்கு வெகுவாக உரிய சான்றுகளோடு சுட்டப்பட்டுள்ளன.

மானுடரை மனிதராக்கியது மருதநிலப் பண்பாடே என்றும், அப்பண்பாட்டிற்குக் காரணமான பள்ளர் குடியினர், உலகின் முந்து நாகரிகங்களில் எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளனர் என்பதும் உரிய சான்றுகளோடு இங்கு எடுத்தாளப்பட்டுள்ளது.

விண்ணுலகம் மண்ணுலகம், உயர்ந்தது தாழ்ந்தது, மலை பள்ளம், மேல் கீழ் எனும் இரட்டைகள் கொண்டு, உலகம் எப்படி ஒட்டு மொத்த மானுடப் பண்பாட்டையும் முன்னெடுத்தது என்பதும் இப்புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ளது. பள்ள மக்கள் பள்ளத்தோடு, நீரோடு, உழவோடு, மண்ணோடு பிணைந்துள்ளார். வியக்கத்தக்க ஒன்றாக அவரே தேவேந்திரர், தேவேந்திர குலத்தவர், இந்திர மரபினர் என விண்ணுலகோடும் இணைந்துள்ளார். இப்புத்தகத்தின் மையக் கருத்து விண்ணும் மண்ணும் ஒன்று என்பதே. அக்கருத்து, அத்தத்துவம் இப்புத்தகத்தில் வலுவாகக் காட்டப்பட்டுள்ளது.

பள்ளத்தில் பயிர்த்தொழிலை முன்னெடுத்து பாரெங்கும் பரப்பியது பாண்டியர் எனில், அவர் பள்ளர் எனில், மலையில், மலை நாட்டில் வணிகத்தை முன்னெடுத்துச் சிறப்பித்தவர் சேரர். அவர் தேவேந்திரர். பாண்டியர் மண்ணவர் எனில், சேரர் விண்ணவர். மண்ணும் விண்ணும் ஒன்றா எனில் ஆம்.. உறதியாக.

பாண்டியர் பண்பாடு ஆப்பிரிக்க நிலமெங்கும் நீக்கமற நிறைந்துள்ளதெனில், சேரர் பண்பாடு மேற்கு ஆசியாவெங்கும் விரிந்து பரந்துள்ளது. மருத நிலத்தின் புகழ் நிறைந்த சோழரோ கிழக்கு ஆசியா முழுதும், அமெரிக்கா வரையிலும் செறிந்துள்ளார்.

தமிழ்ர் கவனத்தில் கொள்ள வேண்டியது பாண்டிய மரபின் நீட்சியே சோழ்ர். எனில் முதலில் இரண்டு இருந்து, பின் மூன்றாகியதாகக் கொள்ளலாம். சேர மரபின் தொடர்ச்சி பல்லவர்.

தமிழின் அடியை, ஆழத்தை யாரறிவார்? தமிழ் எங்கு தோன்றினாள் என்பதை எவரறிவார்? எங்கு தோன்றினாலும் அவள் பெயர் தமிழ்தானே. அவள் குமரிப் பெண்ணாக இருக்கலாம். சுமேரியப் பெண்ணாக இருக்கலாம். பாண்டி நாட்டுப் பெண்ணாக இருக்கலாம். ஆப்பிரிக்காவின் அழகுப் பெண்ணாக இருக்கலாம். அவள் எங்கு தோன்றினும் புகழோடுதான் தோன்றுவாள். மண்ணில் தோன்றினாலும் அவள்

விண்ணையும் அறிவாள். விண்ணை அளப்பவள், விண்ணோர் புகழை உயர்த்துபவள் அவளன்றோ..

**வானமறிந்த வளர்மொழி வாழியவே..**

நதிமூலம், ரிஷி மூலம் பார்க்காதே என்பர் பெரியோர். ஆறு எங்கிருந்து வருகிறது என்பது முக்கியமல்ல. எங்கே தோன்றுகிறது? தேவையே இல்லை. ஆற்றில் நீர் வருவதுதான் முக்கியமே தவிர, ஆறு எந்த இடத்தில் உற்பத்தியாகிறது என்பதல்ல முக்கியம். முனிவர் யார், அவர் குலம் எது, எந்த சாதி, தேவையில்லை. அவர் முனிவரா, மகானா, உயர்ந்தவரா, ஞானம் கொண்டிருக்கிறாரா, போதும். முனிவர் எந்த ஊர், குலமென்ன, கோத்திரம் என்ன? பெரியோர் வாக்கு வேண்டாம் என்பதே.

அறிவிற் சிறந்தோர் எந்த நாட்டவராகவும் இருக்கலாம். அவர் அறிவைத்தான் பார்க்கவேண்டுமே தவிர அவர் எந்நாட்டவர் எனப் பிரித்துப் பார்க்கக் கூடாது.

பாண்டியர் யார்? எங்கு தோன்றினார்? யாரறிவார்? காலத்தில் பின்னோக்கிச் செல்வதார்? பாண்டியர் பள்ளரா, பரதவரா? அறிந்தோர் யார்? பாண்டியர் ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவர், ஆப்பிரிக்காவிலிருந்து வந்தவர் எனில் தமிழர் என்ன செய்வார்? பாண்டியரைக் கொண்டாடும் தமிழ்ச் சாதிகள் நிலையென்ன? ஆப்பிரிக்காவில் பாண்டியர் எனினும் அவர் மொழி உயிரினும் மேலான தமிழல்லவா? தமிழ் அவர் தமிழரன்றோ..

**யாதும் ஊரே; யாவரும் கேளிர் - இதுவே தமிழ் நெறி, தமிழர் அறம்.**

தமிழர் அறத்தில் சிறந்தவராம் தேவேந்திரகுல வேளாளர்களே. முன்னர் தமிழ் நிலத்தில் அறம் செழித்திருந்ததாம். ஊர் மக்கள் உண்ட பின்பே ஊர்க் குடும்பர் உண்பாராம். மாதம் மும்மாரி பொழிகிறதா என்பதே அரசவையின் முதல் கேள்வியாம். மும்மாரி எனில் அறம் சிறந்துள்ளது, நிறைந்துள்ளது என்பதை அரசர் அறிவாராம். மும்மாரி பொழிவதை வைத்து அரசர் நெறியோடு ஆள்கிறார் என்பதை குடிகள் அறிவராம். அரசர் அறம் பேணுவதுபோல் மக்களும் அறத்தோடு வாழ வேண்டும் எனும் நெறி அன்று இருந்ததாம். எனில், இன்றைக்கு தமிழகத்தில், அறம் எப்படி இருக்கிறது என்பதைத் தேவேந்திரர் நிச்சயம் அறிந்திருப்பார்.

தமிழ் நிலம் அறத்தில் சிறந்திருந்தது எனில் அது யாரால்? தமிழ்நாட்டில் அறம் குறைந்தது, எனில் யாரால்? தமிழகத்தில் அறம் வளர்த்தவர் யார்? வளர்க்க வேண்டியவர் யார்? தமிழகத்தில் அறத்தை பற்றிப் பேச தகுதியுடையவர் யார்?

மண் அன்பில் சிறந்தது. விண் அறிவில் உயர்ந்தது. மண்ணில் நிகழும் அனைத்திற்கும் விண்ணே சாட்சி. மண்ணை உயர்த்துவது விண்ணோர் கடமை. மண்ணவரைப் பாதுகாப்பது விண்ணுளார் கடன். மண்ணில் அறத்தைத் தழைக்கச் செய்வது விண்ணோர் பணி. மண்ணவருக்குத் தலையாயது தர்மம். வானோர்க்கு அறம்.

தேவேந்திர குலத்தவர் அறம் வளர்த்தவர், வளர்ப்பவர். அறம் வளர்வது பயிராலே, பயிர்த் தொழிலாலே. மண்ணில் அறத்தை முன்னெடுத்தது வேளாண் குடிகளே. பூமியெங்கும் அறத்தை செழிக்கச் செய்தது மருத நிலத்தாரே. உணவைப் பெருக்கியது மருதநிலமே. கொடைச் சிறப்பிற்கு மருதமே. வயிற்றின் நிறைவே மனிதரின் பிற செயல்களுக்கு ஆதாரம். உலகின் அறமும் மறமும் உழவாலே சிறக்கின்றன. உலகம் உழவராலேயே உயர்கிறது - மேலும் மேலும் மென்மேலுமென.

தமிழ் நிலத்தில் நிறைந்திருக்கும் உழவரான, ஏர் மரபினரான தேவேந்திர குல வேளாளர் அறத்தை வளர்க்க, சிறக்க, மேலும் உயர்ந்த என்ன செய்யப் போகிறார்? பூமி அவருடையது, வானம் அவருக்குச் சொந்தமானது என்னில், அறம் பேணுவதே அன்னார்களின் தலையாய பணியாகிறது.

மண்ணில் அறத்தை எப்படி வளர்ப்பது?

அறம் வளர்ப்பதற்குமுன் அறத்திற்கு எது தடையாய் இருக்கிறது, அறத்தைத் தடுப்பது எது, குலைப்பது யார் என்பதைத் தெளிய வேண்டும். அறத்திற்குப் பெரிய தடை சுயநலம், தன்னலம், தன்னலமான வாழ்க்கை. அறத்திற்கு மூலமாவது பிறர் நலம், பொதுநலம். அறத்தைத் தடுப்பது ஆசை, பேராசை. அறத்தை வளர்ப்பது அன்பு, பேரன்பு.

நாம் உறுதியாகச் கொள்ளவேண்டியது நம்மைவிட நம் முன்னோர் அனைத்திலும் சிறந்தவர்கள். கணினியைக் கண்டுபிடித்ததாலேயே நாம் பெரிய அறிவாளிகள் என நினைத்துக் கொள்ள வேண்டாம். நம் முன்னோரின் அறிவே நம்

காலத்தில் கணினியாக மலர்ந்துள்ளது. நமது அறிவுக்கு விதை போட்டவர் அவரே. நம்மைவிட நம் மூத்தோர் அன்பில் உயர்ந்தவர்கள். நாம் முப்பது, நாற்பது வருடங்களுக்குமுன் வாழ்ந்த மனிதர்களை நினைத்துப் பார்த்தாலே அவர்கள் அன்பின் பெருமையை அறிந்து கொள்ளலாம். வெளியூர்களிலிருந்து ஆட்கள் வந்துகொண்டே இருப்பார்கள். ஒவ்வொரு வீடாக உட்கார்ந்து பேசிக்கொண்டே இருப்பார்கள். கூரை வீடுகளில் நெருக்கி படுத்துக் கொள்வார்கள். இரவிலும் பேசிக்கொண்டே இருப்பார்கள். என்னப்பே நல்லாயிருக்கியா என்பதில் அத்தனை முகமலர்ச்சி. உறவினர் வீடுகளில் அவர்களிடம் கேட்காமலேயே சாப்பாட்டைப் போட்டு சாப்பிடுவார்கள். மதினி குழம்பு கொடுங்க எனக் கேட்டு வாங்குவார்கள். வயதானவர்கள் யார்வீட்டுத் திண்ணையில் வேண்டுமானாலும் படுத்துக் கொள்வார்கள். எத்தனை பாசமானவர்கள்.. பிரியமானவர்கள்.. இன்றைக்கு எப்படி இருக்கிறார்கள் தெரியுமா? யார் வீட்டுக்கும் யாரும் செல்வதில்லை. நல்லது கெட்டதுக்களுக்கு வந்தல்கூட இரவுகளில் தங்குவதில்லை. இத்தனைக்கும் வீடுகள் பெரிது பெரிதாக இருக்கின்றன.

நமக்கு முப்பது வருடங்களுக்குமுன் வாழ்ந்தவர்களே இவ்வளவு அன்பானவர்களாக இருந்தார்களெனில், முந்நூறு, நானூறு ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர்கள் எந்தளவுக்கு அன்பானவர்களாக இருந்திருப்பார்கள். மனிதர்கள் அறிவில் மேலேறுவதாக நினைத்துக்கொண்டு அன்பைத் தொலைத்து விட்டார்கள். நாம் மீட்டெடுக்க வேண்டியது அந்த அன்பை. அவர்கள் பாசத்தை. அன்பு பெருகினால் அறம் தன்னாலேயே வளரும்.

அன்பிற்கும் அறத்திற்கும் சிறிய வேறுபாடே. அன்புக்கு சரி தவறு இல்லை. அறத்திற்கு உண்டு. அன்பிற்கு இதைச் செய், அதைச் செய்யாதே என்பது கிடையாது. அறம் வளர்க்க வேண்டுமாயின் சிலவற்றை தொடர்ந்து பேண வேண்டும், சிலவற்றை முற்றாகத் தவிர்க்கவும் வேண்டும்.

அன்பானவர் திருடுவார். அவருக்கு அது தவறு என்றோ, குற்றமென்றோ தெரியாது. திருட்டு ஒருவித பழங்குடி மனநிலை. பெரும்பாலான தொல்குடிகள் முன்னர் திருடுவதையே தொழிலாகச் கொண்டிருந்தது அதனால்தான். இன்றைக்கும் பலர் ஒரு பொருளைப் பார்த்தால், கிடைத்தால் எடுத்துக் கொள்வர். அவர்களைப் பொருத்தவரை அது திருட்டில் சேராது. திருட்டு எனில் அவர்களைப் பொருத்தவரை அடுத்தவர் வீடு புகுந்து திருடுவதே.

அறத்திற்கான முதல்படி திருடாதே. பிறர் பொருளைத் திருடாதே, அபகரிக்காதே, ஏமாற்றி வாங்காதே. களவு செய்யாதிருப்பாயாக. புறம் பேசாதிருப்பாயாக. கொலைத் தொழில் புரியாதிருப்பாயாக. இப்படித்தான் நம் முன்னோர் அறம் வளர்த்தனர். உலகில் தோன்றிய அத்தனை மதங்களும் இதைத்தான் வலியுறுத்தின. திருடாதே, பொய் பேசாதே.

திருடாதே என்பது சிறிய அறம். திருடி வயிறு வளர்க்காத வாழ்க்கை நல்வாழ்க்கை. அற வாழ்க்கை. உலகில் அனைவரும் பசியாற வேண்டும், உலகில் பசியே இருக்கக்கூடாது என நினைப்பது பேரறம். உலகில் பிணியே இருக்கக்கூடாது என்பது பேரறம். உலகினர் அனைவரும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்பது பேரறம். உலகு குறித்து உலகத்தார் நல்வாழ்வு குறித்து சிந்திக்கப்படும் அனைத்தும் பேரறமாகும். தம் வாழ்வில் கடைபிடிக்கப்படும் நல்ல செயல்கள் அறமாகும். அறம் தனிமனிதருக்கு. பேரறம் சமூகத்திற்கு, உலகத்திற்கு.

உலகில் மழை செழிக்க வேண்டும், பயிர்கள் செழிக்க வேண்டும், விளைச்சல் பெருக வேண்டும், கறவைகள் நிறைய கறக்க வேண்டும்.. பேரறங்கள். பேரறங்கள் கொள்வதே தவம். பேரறத்திற்காக வாழ்பவர்களே தபசிகள். அவர்களே தபஸ்விகள், தவசீலர்கள். நற்குணங்கள் நிறைந்தோர் குணசீலர்கள். சீரம் - சீலம் - உயர்ந்தது, சீலன் - சிறந்தவன். குணத்தில் உயர்ந்தோன் குணசீலன்.

மனிதர்களால் திருடாமல் வாழ முடியாதா? எளிய அறம்தானே. முடிகிறதா? எந்தப் பிராமணராவது திருடி கையும் களவுமாகப் பிடிபட்டிருக்கிறாரா? வீடுகளில் புகுந்து கொள்ளையிட்டார் என எந்தக் காவல் நிலையத்திலாவது பதிவு செய்யப்பட்டுள்ளதா? பகைகொண்டு, கோபம்கொண்டு, பழிகொண்டு கொலை செய்தார் என எங்காவது பிராமணர் தண்டிக்கப்பட்டிருக்கிறாரா? அதுதான் பிராமணர் எனும் சொல்லுக்கு இம்மண்ணில் இந்தளவுக்கு ஏற்றம், மதிப்பு, உயர்வு கிடைத்ததற்குக் காரணம். தனிப்பட்ட முறையில் ஓரிரு பிராமணர் முன்பின்னாக இருக்கலாம். பிராமணர் அறவாழ்க்கையினர். பிராமணர்கள் நம்பிக்கைக்குரியோராக நடந்தார். அரசர்கள் நம்பினர். பெரு வணிகர்கள் நம்பினர். ஆங்கிலேயர்கள் நம்பினர். முக்கியமாக மக்கள் நம்பினர். அதனால்தான் பிராமணர்களைத் தெய்வத்திற்கு ஒப்பாக சாமி என்றனர். உயர்ந்தோரை ஐயா என்பதே தமிழர் வழக்கு. அய்யா எனில் தந்தை என்பதே பொருள். நற்குணத்தில்

உயர்ந்தோரே உயர்ந்தோர். மனிதர்களால் நற்குணத்தோடு இம்மண்ணில் வாழ முடியாதா?

தமிழ் அரசர்கள் அறம் வளர்த்தனரா? அந்தணர் அறம் பேணினாரா? எத்தனையோ கருத்துக்கள் தமிழ் மண்ணில் விதைக்கப்பட்டுள்ளன. சமீப காலங்களில் தம்மை மேதாவி, அறிவாளி என நினைக்கும் பலரும், தமிழ் முடியுடை வேந்தர்களை கடுமையாகக் சாடுகின்றனர். அவர்கள் நம் அரசர்கள். தமிழ் வேந்தர்கள். தமிழ் அறம் பிழைபட ஒருபோதும் பொறுக்காது. நம் வேந்தர் மரபில் குறைகள் இருக்கலாம். தவறுகள் நேர்ந்திருக்கலாம். அரசர் அனைவரையும் ஒருங்கிணைத்துச் செல்ல வேண்டியவர். எல்லோரையும் மனம் நிறையச் செய்வது எளிதன்று. நம் மன்னர்களை இகழ்வது நம் தந்தையரை இகழ்வதற்கு ஒப்பாகும். நம் தெய்வங்களை இழிவு செய்வதற்குச் சமமாகும்.

மண்ணில் எத்தனை அரசர்கள் தோன்றினார்கள் - மக்களை நல்வழிப் படுத்த. புவியில் எத்தனை மதங்கள் பிறந்தன - மனிதர்களைக் குணசீலர்களாக மாற்ற. உலகில் எத்தனை ஞானிகள் பிறந்தனர் - மக்களை அறவழியினராக ஆக்க.

மனிதர்களில் ஏதேனும் மாற்றங்கள் தெரிகின்றனவா. அறம் இம்மண்ணில் கூடியுள்ளதா குறைந்துள்ளதா. மனிதர்கள் அறவாணர்களாக இருக்கின்றனரா இல்லையா. எப்படி அறிவது. ஏதேனும் அளவுகோல் உள்ளதா.

மழை கூடியுள்ளதா குறைந்துள்ளதா, பசுக்கள் கூடியுள்ளனவா குறைந்துள்ளனவா, மீன்கள் கூடியுள்ளனவா குறைந்துள்ளனவா, பெண்களின் அழுகை குறைந்துள்ளதா கூடியுள்ளதா.

நம் அரசர்கள் அறம் பேணினர். அறம் வளர்த்தனர். நம் புலவர்கள் அறம் போற்றினர். அறம் ஊட்டினர். அறவழி காட்டினர். நம் முன்னோர் அறவழியில் நடந்தனர். மழை சிறந்தது. பயிர் செழித்தது. மீன்கள் பெருத்தன. பசுக்கள் கூடின. பெண்கள் ஊர்க்கதைகள் பேசிச் சிரித்து மகிழ்ந்தனர்.

நம் காலத்தில் தேவேந்திரர்களே. நம் காலத்தில் அறம் குறையலாமா? குலையலாமா? குறைவுபட விடலாமா?

நம் பாண்டியர் கட்டிக்காத்த அறத்தைப் பெருக்குவது நம் கடமையல்லவா. நம் சேரர் தலைமேல் கொண்ட அறத்தைப் பேணுவது நம் கடமையல்லவா. நம் சோழர் மனுநீதிச் சோழரல்லவா. தாய்ப் பசுவுக்கு நீதி வழங்கியது எத்தனை பெரிய அறம். நம் சோழர்கள் அல்லவா வயல்களைப் பெருக்கினர். வயிறுகளை நிறைத்தனர். எத்தனை பெரிய அறம். ஒட்டிய வயிறுகளை, வற்றிய வயிறுகளை, பசித்த வயிறுகளை, சோற்றால் பெருக்க வைத்தது சோழபரம்பரையல்லவா.

குளம் வெட்டுவது, ஏரிகள் உண்டாக்குவது எத்தனை பெரிய அறம். தாகம் தீர்ப்பது தலையாய அறமல்லவா.. தமிழர் இத்தனை வளர்ந்ததற்குக் காரணம் பாசனமல்லவா. ஆயக்குடியைப் பெருக்கியது பல்லவப் பேரரசல்லவா. கோவில் எழுப்புவது பெரிய அறம். கலைகள் வளர்ப்பது பெரிய அறம். கல்வி புகட்டுவது பெரிய அறம். குடிகளைக் காப்பது பெரிய அறம். பல்லவ மன்னர்கள் பேரறத்தினர்.

நாயக்கர் மரபை அயலவர் எனச் சுட்டலாமோ. நம் மண்ணில் அறம் வளர்த்தாரன்றோ. வானுயர்ந்த கோபுரங்களே சான்றல்லவா.

நம் அரச மரபினரின் குறைகள் தேடிக் காண வேண்டியவையாக இருக்கின்றன. குறைகள் இல்லாதார் யார்? பிழைகள் புரியாதார் யார்? நீண்ட அரச மரபில் குறைகள் தவிர்க்க முடியாதவை. நாம் நினைவில் கொள்ள வேண்டியது அறப்பிழை நிகழ்ந்ததா. அறம் பின்னுக்குத் தள்ளப்பட்டதா. இல்லை என உறுதியாகக் கூறலாமன்றோ. நம் சங்கப்புலவர் மரபிற்கே முழுப்பெருமையும் சேரவேண்டியது.

மீண்டும் நினைவூட்டுகின்றோம். நாம் வரலாற்றை மிகக் கவனமாகக் கையாள வேண்டும். வரலாறுகள் பல இருக்கும். அன்னப் பறவைபோல் பிரித்துப் பார்க்கத் தெரிந்திருக்க வேண்டும். அரச மரபிற்கு தனியறமன்று. பொது அறமே அவர்களுக்கானது. அவருடையது உலகுக்கான அறம். அதைப் பேணினாரா என்பதே முக்கியம். வரும் படையை, எதிரியைத் தடுப்பது அரச தர்மம். ஆயினும் எதிரியையும் எப்படி எதிர்கொண்டார் என்பது அறத்தில் சேரும். நம் வேந்தர்கள் இம்மண்ணில் போர் செய்வதிலும் அறம் பேணியிருக்கின்றனர்.

பிற்காலத்திய சோழர்கள் சாதிக்கு சற்றே இடங்கொடுத்தார் என்பதற்காக மொத்த மரபையுமே குறைகாண்பது தகாது. சாதியும் அரசர்களால் தோன்றவில்லை. அவர்கள் சாதிகளை ஒன்றிணைக்கவே செய்திருக்கின்றனர்.

மனிதர்கள் சுயநலத்திற்காக, சுயநல வாழ்க்கைக்காக சாதியை வளர்த்தார். தூக்கிப் பிடித்தார். வலியோர் எளியோரை வதைத்தார். அதுவும்கூட தமிழ்நிலத்தில் உழைப்பைச் சுரண்டினாரே தவிர, பிறவற்றில் சாதி வேறுபாடு இல்லை. நமது ஊர்களே சான்று. எமக்குத் தெரிந்தே ஊர்க் கூட்டமெனில் அனைத்துக் சாதியிலிருந்தும் கலந்து கொள்வார்கள். எல்லோரிடமும் கருத்துக்கள் கேட்டே முடிவெடுப்பார்கள். அண்மைக்கால சாதிவெறியை வைத்து நம் மூத்தோரை மதிப்பிடக் கூடாது.

தமிழ் மரபில் மூத்தோர் தெய்வத்திற்கு ஒப்பாவர். தெய்வமே ஆவர். மூத்தோரைப் பழிக்கக் கூடாது. நம் காலத்தை வைத்து மூத்தோரை ஆராயக் கூடாது.

நமக்கென்று ஒரு மரபிருக்கிறது. நமக்கென்று ஒரு பண்பாடு இருக்கிறது. நமக்கென்று ஒரு வரலாறு இருக்கிறது. நமக்கென்று அரசர்கள் உண்டு. நமக்கென்று புலவர்கள் உண்டு. நமக்கென்று பாட்டுக்கள் உண்டு. நமக்கென்று உடையுண்டு, இரையுண்டு, மருத்துவமுண்டு, வீரமுண்டு, காதலுண்டு, நீதியுண்டு, தர்மமுண்டு.. அறமும் உண்டு, தெய்வங்களும் உண்டு.

**நம் அரசர்கள், நம் சாமிகள், நம் தெய்வங்கள், நம் கோவில்கள்**

## நமது மண்; நமது விண்

தமிழ் மண்ணில் அறத்தை வளர்ப்பது குறித்து யாம் சிந்தித்தே வந்துள்ளோம். எம் மனதுள் அறம் வளர்க்கும் வழிமுறைகள் விதைக்கப்பட்டுள்ளன. எம் அறிவில், எமது சிந்தனையில், எம் மனதில், எமது உள்ளுணர்வில் அறம் எனப்படுவதையே இங்கு சுட்டுகிறோம். இவை அறம்தானா என்பதை மூத்தோர் தெளியுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழகத்தில் வாழும் தேவேந்திர குலத்தாரின் தலையாய பணி அறம் பேணுவது, அறம் வளர்ப்பது எனும் மரபின்படி, அறம் வளர்க்கும் வழக்கங்கள், நெறிமுறைகள் இங்கு வழங்கப்படுகின்றன. தமிழ்க் கழகத்தின் வழியில் இவ்வறங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதை நினைவில் கொள்க.

**அறம் வளரட்டும்! உலகில் அன்பு நிறையட்டும்!**

# திரிவிக்கிரமன்!



தேவேந்திர குலத்தவர் அடுத்துவரும் ஒரு ஆண்டில், பத்து ஆண்டுகளில், நூறு ஆண்டுகளில் செய்ய வேண்டியவன,

முதலாமாண்டில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பதால், தேவேந்திரர்கள் ஒரு ஆண்டிற்கு வேளாண் தொழிலில் மட்டுமே முழுமையாக ஈடுபட வேண்டும். ஒரு ஆண்டில் தானியங்களைப் பெருக்க வேண்டும், பயிறுகளை, எண்ணெய் வித்துக்களை, காற்கறிகளைப் பயிரிட வேண்டும். பழ மரங்களை, குளிர் மரங்களை நட வேண்டும்.

அடுத்து வரும் நூறுஆண்டுகளில் ஆண்டிற்கு நூறுநாள்கள் என பயிர்த் தொழிலைப் பேண வேண்டும். நூறு ஆண்டுகளுக்குப்பின் உலகின் பயிர்த்தொழில் தேவைக்கு ஏற்ற, நடைமுறைக்கு ஏற்ப, அடுத்து வரும் ஆண்டுகளுக்குத் தேவையான வேளாண் நாட்களைத் திட்டமிட்டுக் கொள்ளலாம். எம்மைக் கேட்டால் அடுத்துவரும் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஆண்டிற்குப் பத்துநாட்களாவது கட்டாயப் பயிர்த்தொழில் இருக்க வேண்டும் என்போம்.

1. ஒவ்வொரு ஊரிலும் தேவேந்திர குலத்தைச் சார்ந்தவர்களுக்கு எவ்வளவு நிலமிருக்கிறது என்பதைக் கணக்கிட்டு, ஒட்டு மொத்தமாக தமிழ்நிலத்தில் எத்தனை ஏக்கர்கள் நிலம் வைத்திருக்கிறார்கள் என்பதை அறிவிக்க வேண்டும்.

2. தேவேந்திர குலத்தவரிடம் உள்ள நகைகளைக் கணக்கிட்டு மொத்தமாக எத்தனை கிராம்கள், பவுன்கள் என்பதை அறிவிக்க வேண்டும்.

3. தேவேந்திர குலத்தவரிடம் உள்ள முகிழ்த்தப் பட்டுச்சேலைகளை கணக்கிட்டு (கல்யாணப்பட்டு தவிர்த்து), ஒரு வருடப் பழமையானவை, பத்து வருடம் பழமையாவை, அதற்கும் மேற்பட்ட காலம் பழமையானவை மொத்தம் எத்தனை என்பதை அறிவிக்க வேண்டும்.

தேவேந்திர குலத்தவர் அடுத்த ஒரு ஆண்டுக் காலத்திற்கு தெய்வங்களுக்குச் செய்ய வேண்டிய அறங்களாவன,

1. இருக்கண்குடி மாரித் தாய்க்கு, கோவிலைக் சுற்றியிருக்கம் ஊர்களைச் சேர்ந்த அதாவது பதினெட்டுப் பட்டிகளின், பதினெட்டு தேவேந்திர குல குடும்பங்களின் சார்பில், தினமும் இரண்டுபடி சர்க்கரைப் பொங்கல் படையலிட

வேண்டும். ஒவ்வொரு ஊரிலும் ஒரு குடும்பம் என குலுக்கல் முறையில் தேர்வு செய்து அறிவித்து விடவேண்டும். ஒரு குடும்பத்தவர் ஒரு முறையே பொங்கலிட வேண்டும். முதல் மாதம், இரண்டாம் மாதம் என ஒவ்வொரு மாதமும் பொங்கலிட வேண்டியவர் பட்டியல் தயாராக இருக்க வேண்டும். ஒரு ஊரில் அனைவரும் பொங்கலிட்டுவிட்டால், அடுத்துள்ள ஊரைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

2. திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு அடுத்துவரும் ஒரு வருட காலத்திற்கு நாளும் பாதயாத்திரை துவங்க வேண்டும். குறைந்தது நாற்பத்து எட்டுப்பேர் இருக்க வேண்டும். அதிகமாக எத்தனை பேர் வேண்டுமானாலும் இருக்கலாம். நடை பயணம் துவங்கப்பட்டு, தொடர்ந்து ஒவ்வொருநாள் மாலையும் அடுத்தடுத்து புறப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். நடை பயணத்தில் இரவில் தங்குவதற்கு உரிய ஏற்பாடுகள், தங்குமிடத்தில் குடிநிர், உணவு உள்ளிட்ட வசதிகள் செய்திருக்க வேண்டும். பிந்தையகுழு வருவதற்கு முன்பே முந்தையகுழு புறப்பட்டிருக்க வேண்டும். குழுக்களுக்கு வேண்டிய உணவும், தண்ணீரும் குறைவில்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

மாலைபோட்டு, திருச்சொந்தூரில் மாலைகழட்டுவது வரை பதினான்கு நாட்கள் விருதமிருப்பது நலம். முடியாதவர்கள் ஒரு வாரமாவது விரதமிடீப்பது நன்று.

நாளுக்கு ஒரு ஊர் என தமிழகத்திருக்கும் தேவேந்திர குலத்தவரின் முந்நூற்றி அறுபத்தாறு ஊர்கள் தேர்வு செய்யப்பட்டு பட்டியல் தயாராக வேண்டும். கூடுதலாக பத்து ஊர்களைத் தேர்ந்தெடுத்து வைத்துக் கொள்வதும் நல்லது.

3. திருமலைத் தெய்வத்தைச் சிறப்பிக்கும் விதமாக நாளும் ஒரு ஊர் என திருமலைக்குப் புனிதப் பயணம் மேற்கொள்ள வேண்டும். பயணத்தில் குறைந்தது முப்பது பேராவது இடம்பெற வேண்டும். ஆண், பெண், குடும்பமாக இருப்பது சிறப்பு. திருமணமானவர்கள் மட்டுமே கணக்கு. இவர்கள் தினமும் சிற்றுந்துகளிலோ, தொடர் வண்டியிலோ பயணிக்கலாம். பெருமாளுக்கு பட்டுச சரிகை வேட்டி, துண்டு சமர்பிக்க வேண்டும். அழகிய மாலையொன்று சாத்த வேண்டும். அடுத்தநாள் குழு திருமலை வந்தபின்பே, முதல்நாள் குழு திருமலையிலிருந்து புறப்பட வேண்டும்.

திருமலைக்குப் பயணமாகும் முந்நூற்றி அறுபத்தாறு ஊர்களின் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். கூடுதலாக பத்து ஊர்களையும் தேர்வு செய்து கொள்ள வேண்டும்.

4. இமயத்தின் ஸ்ரீநகரில் புகழோடு விளங்கும் ஸ்ரீவைணவ தேவிக்கு சிறப்புச் செய்யும் பொருட்டு, வாரம் ஒரு ஊர் என ஐம்பத்தியிரண்டு தேவேந்திரர் ஊர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும். குழுவில் குறைந்தது இருபது பேராவது இடம்பெற வேண்டும். பெண்களும் இடம் பெறலாம். மலையில் நடக்க வேண்டுமென்பதால் மன உறுதியுள்ளவராய் இருப்பது நல்லது. குதிரையில் அல்லாமல் நடந்தே மலை ஏறி இறங்க வேண்டும். தவிர்க்கவே முடியாத நிலையிலேயே, குதிரையைப் பயன்படுத்த வேண்டும். அதுவும் இறங்குவதற்கு மட்டுமே.

குழுவில் இடம் பெறுபவர்கள் தீர்மானிக்கப்பட்டு முன்பதிவு செய்யப்பட வேண்டும்.

இங்கிருந்து செல்லும் குழு, பத்து கைப்பிடி மண் தனித்தனியாக எடுத்துக் கொள்ளவேண்டும். கத்ராவின் அடிவாரத்தில் தொடங்கி வைஷ்ணவி மலைஉச்சியை அடையும் வழியில், ஒவ்வொரு ஆயிரம் அடிகள் என ஒன்பது பிடி மண்ணை மலையில் துவிவிட வேண்டும். பத்தாவது பிடி மண்ணை அன்னைக்குச் சமர்ப்பித்துவிட வேண்டும். அங்கிருந்து இரண்டுபடி தீர்த்தத்தை அன்னையின் ஆசி பெற்று பத்திரமாக எடுத்தவர வேண்டும்.

இந்தப் பயணங்களை எங்கிருந்து தொடங்குவது? எமது ஊருக்கு அருகிலிருக்கும் திருமலைபுரத்தில் தேவேந்திரருக்குச் சொந்தமான கருப்பசாமி கோவிலிலிருந்து தொடங்கலாம். கோவில் பரந்த இடத்தில் அமைந்துள்ளது. எமது சித்தப்பா வீட்டார் அருகே வசிக்கின்றனர். கோவிலருகே அவர்களுக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. தேவையான வசதிகளைச் செய்து கொள்ளலாம். தேவைப்படும் உதவிகளைச் செய்து கொடுக்கலாம். கோவில் முக்கியச் சாலையிலிருந்து சற்று உள்ளாக இருப்பதால் போக்குவரத்திற்குச் சிறிது சிரமமிருக்கலாம். சற்றே சிரமம் பார்ககாவிட்டால் நல்ல இடம்தான். வேறு வசதியான ஊர்களையும் பார்க்கலாம். ஊர் திருச்செந்தூருக்கு மூன்றுநாள் நடைபயணத் தொலைவிலிருப்பது நல்லது.

திருமலைபுரம் கருப்பசாமி கோவில் என்பது முடிவானால், கோவிலிலிருந்து புறப்படும் குழு மீண்டும் கோவில் வந்தே பயணத்தை முடிக்க வேண்டும். திருச்செந்தூர் செல்லும் குழு மூன்று தேங்காய் எடுத்துச் சென்று அதை முந்தைய குழுவிடம் கொடுத்துவிட வேண்டும். முந்தை குழு தேங்காயும் அத்துடன் இரண்டுபடி நாழித் தீர்த்தமும் எடுத்த வந்து, கருப்பசாமி கோவிலில் தேங்காயை சூறையடித்துவிட்டு, நீரை கருப்பசாமியின் பாதத்தில் ஊற்றிவிட வேண்டும்.

திருமலைக் குழு திருமலையின் தீர்த்தக் குளத்தில் இரண்டுபடி தீர்த்தம் எடுத்து வந்து கருப்பசாமியின் பாதத்தில் ஊற்றி பயணத்தை நிறைவு செய்ய வேண்டும். வைணவ தேவி குழுவும் அவ்வாறே.

5. தேவேந்திர குலத்தவர் அன்னை மீனாட்சிக்கு தினமும் புத்தரிசிப் பொங்கல் வைக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் நெல் அறுவடை செய்வதற்கேற்றவாறு திட்டமிட்டு நாற்று நடவேண்டும். குறைந்தது இருபதுக்கு இருபது என நானூறு சதுரடி நிலமே போதும். பத்துப்படி அரிசி கிடைக்குமளவிற்கு இருந்தாலே போதும். அன்னைக்கு இரண்டுபடி அரிசி என புத்தரிசிப் பொங்கல் வைக்க வேண்டும்.

குறைவான இடத்தில் நெல் பராமரிப்பதால் நீர்த்தேவை குறைவாகவே இருக்கும். எளிதாக வளர்த்துவிடலாம். வீடுகளுக்கு அருகில் இடமிருந்தால்கூடப் போதும். அறுவடை செய்து காயவைத்து நெல்லைக் கையால் குத்தியே அரிசியாக்க வேண்டும். இப்படித் தயாரான அரிசியை அடுத்த நாள் பொங்களுக்குப் பயன்படுத்த வேண்டும். இப்படி ஒவ்வொறு நாளும் புத்தரிசி தயாராவதுபோல் நாற்றுப் பாவ வேண்டும், அறுவடை வேண்டும், காயப்போட்டு அரிசியாக்க வேண்டும். இதில் கூடுதல் கவனத்துடன் முறையான திட்டமிடுதலோடு செய்ய வேண்டும். இப்படியான முந்நூற்று அறுபத்தாறு ஊர்களின் பட்டியல் தயாராக வேண்டும். கூடுதலாக இருபது ஊர்களைச் சேர்த்துக் கொள்ளலாம்.

6. வன்னிய குல சத்ரியர்கள் திருவண்ணாமலை அண்ணாமலையாருக்கு நித்தமும் பத்தப்படி புதுநெல்லுச் சோறு படைக்க வேண்டும். நித்தமும் அரிசி உருவாக்கும் முறையை மீனாட்சிக்குக் கூறியுள்ள முறையில் விளைவிக்கலாம்.

7. வன்னியர்கள் அடுத்து வரும் ஒரு வருட காலத்திற்கு மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி அம்மனுக்கு நித்தமும் நாற்பத்து எட்டுப்படி பொங்கல் வைத்து வழிபட வேண்டும். ஒரு ஊருக்குப் பன்னிரெண்டு பேர் என நித்தமும் நான்கு ஊர்களைச்

சேர்ந்தவர்கள் ஒவ்வொருபடி பொங்கல் வைக்க வேண்டும். இவ்வாறு ஒரு ஆண்டிற்குத் தேவையான பொங்கல் வைக்கும் ஊர்கள், பொங்கல் வைக்கும் குடும்பங்களின் பெயர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும்.

தேவேந்திரர்களை ஒருங்கிணைக்க தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பு செயலாக்கம் பெற வேண்டும். வன்னியர்களை ஒருங்கிணைக்க பாட்டாளி மக்கள் கட்சி முன்வர வேண்டும். ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட பணியை, ஒருங்கிணைப்பை ஒதுக்கி, அவர்களது முழுக் கவனமும் அதில் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக, திருச்செந்தூர் குழுவிற்கு ஒருவரை தலைமை ஒருங்கிணைப்பாளராக்கி அவருக்குக்கீழ் ஒரு குழுவை எற்படுத்தி அனைத்தும் முறையாக, திட்டமிட்டவாறு நடைபெறுகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். முடிவுகள் உடனுக்குடன் எடுக்கப்பட வேண்டும். எதற்காகவும் காத்திருக்கக் கூடாது. காலம் தாழ்த்தக் கூடாது.

இந்த ஒரு வருட அறவழி செயல்முறைகளை சரியாகத் திட்டமிட்டு, முறையாக ஒருங்கிணைக்க வேண்டும். பயணம் செய்யும் அந்தந்த ஊர்களிலேயே செலவுக்கான தொகை ஒதுக்கப்பட வேண்டும். பெரிதாக செலவாகாது. வைணவி யாத்திரைக்குக்கூட முறையாகத் திட்டமிட்டால், உரிய முறையில் பயணத்தை வகுத்தால், செலவு பெருமளவு குறையும். இரண்டாம் வகுப்புப் பயணம், ஜம்முவில் கோவில் மடத்தில் தங்கிக் கொள்ளுதல் போன்றவற்றை முறையாகத் திட்டமிடுதல் வேண்டும்.

திருமலைக்கும் முறையாகத் திட்டமிடுதல் அவசியம். வழியில் பிற கோவில்களுக்குச் செல்லுதல் கூடாது. தங்குதல் கூடாது. பயணங்களில் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது மிகவும் முக்கியம்.

சடங்குகள் முதல்நாள் தொடங்கி அடுத்த ஆண்டின் அதே நாளில் நிறைவடைய வேண்டும். இடையில் சடங்கு முறைகளை, புனிதப் பயணங்களை நிறுத்தக் கூடாது. கைவிடுதல் கூடாது. தொடங்கும்முன் நன்கு ஆராய்ந்து, சிந்தித்துத் தொடங்குதல் நல்லது. சற்றே கடினமான பணிதான். அறம் வளர்ப்பது எளிய செயலல்லவே.

காலம் தெய்வங்களால் வழிநடத்தப்படுவதைப்போல் அறமும் தெய்வங்களாலே முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. தெய்வங்கள் அறச்

செயல்களுக்கு, அறத்திற்கு எப்போதும் துணை நிற்பவை. தெய்வங்கள் தேவேந்திரர்கள் யார் என்பதை அறியும். தேவேந்திர குலத்தவர் பெருமை கொள்ளத்தக்க வகையில் தெய்வங்கள் தேவேந்திரர்களைச் சிறப்பித்து வருகின்றன என்பதும் அறியத்தக்கது.

8. தேவேந்திர குலத்தார் நான்காயிரம் கிராம் தங்கத்தை தானமளிக்க வேண்டும். யாம் இவ்வருட அட்சய திருதியை நாளில் ஒருகிராம் பொற்காசு வாங்கி எமது பூஜையறையில் வைத்து விட்டோம். மீதமுள்ள மூவாயிரத்துத் தொள்ளாயிரத்து தொன்னூற்றி ஒன்பது கிராம் பொற்காசுகளை, ஊருக்கு ஒரு காசு எனத் தானமளிக்கலாம். நல்ல வேலையில் இருக்கும் தேவேந்திரர்கள் ஒருகிராம் பொன் கொடையளிக்கலாம். நான்காயிரம் காசுகளும் நாமே கொடையளித்ததாக இருக்க வேண்டும். பாண்டிய நாட்டிலிருக்கும் பாதிச் சொத்து தேவேந்திரர்களிடம் இருக்கிறது என ஒரு பதிவைப் பார்த்தோம். உண்மையெனில் நான்காயிரம் பொன் கொடுப்பது தேவேந்திரர்க்கு எளிதல்லவா. கொடையும் சிறந்த அறம் தேவேந்திர குலத்தாரே.

ஆயிரம் தங்கக் காசுகளிலிருந்து ஒரு அழகான மகுடமொன்று உருவாக்க வேண்டும். மகுடம் நம் குமரனுக்கு. அழகிய மகுடம் செய்து ஒருநாள் பழனி தண்டபாணித் தெய்வத்துக்குச் சூட்டி அழகு பார்க்க வேண்டும். இராஜ அலங்காரத்தில் திருஆவினன்குடி முருகன் ஜொலிப்பதை பார்த்திருக்கிறீர்களா தேவேந்திரர்களே. அழகன் நம் தமிழ் அப்பன்.

தேவேந்திர குலத்தவர் அறமாகக் கொள்ள வேண்டியது, அடுத்துவரும் நூறு ஆண்டுகளுக்கு, ஆண்டுக்கு ஒரு முருகன் கோவில் என உலகின் பல்வேறு பகுதிகளிலும் கட்டியெழுப்ப வேண்டும். கோவில் வள்ளி தெய்வானையுடன் கூடிய முருகனுக்கு மட்டுமே. பிற கடவுளர்களின் சித்திரங்கள் இடம் பெறலாம். தூண்களில் புடைப்புச் சிற்பங்களாகக் காட்டலாம். எனினும் தனிக்கோவில் வேண்டாம். உலகினர் முருகன் மூலமாக பிற கடவுளர்களை அறிந்து கொள்ளட்டும்.

தேவேந்திரர் கட்ட வேண்டிய முதலாவது முருகன் கோவில் ஈராக்கின் யசிடி நிலத்தில். அம்மக்கள் மிகுந்த பாராட்டுக்குரியவர்கள். எத்தனையோ மதங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலத்தில், எவ்வளவோ அச்சுறுத்தல் இருந்தும், முருகனை இன்றும் அம்மக்கள் நினைவில் கொண்டுள்ளனர். அவர்களுக்கே முதலாவது

முருகன் திருக்கோவில். அழகும் பொலிவும் ஒரே சேர வடிக்கப்பட்ட முருகன் சிலை அங்கே நிறுவப்பட வேண்டும். முருகனின் பெருமை, அறிவு, ஞானம் அம்மக்களால் புகழப்பட வேண்டும்.

முதல் கோவில் இராக் யச்டி நிலத்தில் - குமரனுக்கு. இரண்டாவது திருக்கோவில் கேமரூன் நாட்டில் - வேலனுக்கு. மூன்றாவது போர்னியோவில் - செந்தமிழ்த் தேவனுக்கு. நான்காவது பொலிவியாவில் - சண்முகத்திற்கு. ஐந்தாவது ஈரானில் - கந்தனுக்கு. ஆறாவது திருக்கோவில் நிப்பனில் - செந்தூரானுக்கு.

தேவேந்திர குலத்தவரின் பொன் மகுடம் பழனிமலை முருகனுக்கு ஒருநாள் சாற்றிவிட்டு, கட்டப்போகும் அயல் நாடுகளின் முருகனுக்கு நிரந்தரமானதாக ஆக்கப்பட வேண்டும். அதுவும் ஒரு நாள் சூட்டி அழகு பார்த்தபின். முதலாமாண்டில் தேவேந்திரர் அளிக்கும் மகுடம் முருகனை ஒருநாள் அலங்கரித்தபின் பத்திரமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். யசிடி நிலத்தில் முதல் கோவில் எழுப்பி குடமுழுக்கு நிகழும் அன்று, இம்மணிமகுடம் சூடப்பட வேண்டும். அதன்பின் அத்திருக்கோவிலுக்கே சொந்தமாக்கப்பட வேண்டும். முதலாமாண்டு மணிமகுடம் தேவேந்திர குலத்தவருடையது. மேலும் பத்து மகுடங்கள் என நீட்டிக்கவும் வேண்டும். கால மாற்றத்தில் தமிழ் என்னும் நல்லாளால் தமிழா் ஒன்றானால் பின்னர் அனைவரும் தமிழராய் இணைத்து அளிக்கலாம். அதுவரை தேவேந்திரரே முருகனுக்கான மணிமகுடமத்திற்குப் பொறுப்பானவர்கள்.

9. அடுத்த ஆயிரம் பொற்காசுகள் தமிழின் தலைமைப் புலவருக்கு அளிக்கப்பட வேண்டியவை. நம் பெருமைமிகு கழக மரபில், அறம் பாடும் புலவர்களுக்குப் பொன்னும் மணியும் அளித்துச் சிறப்பிப்பதே முறை. நம் கழக மரபிற்கு ஏற்ப, நம் சங்க மரபின் வழியில், நம் காலத்து தலைமையான தமிழ்ப் படைப்பாளிக்கு பொற்காசுகள் கொடுத்து சிறப்பிக்க வேண்டும்.

நம் காலத்தின் தலைமை தமிழ்ப் படைப்பாளி யாா்? சங்கப் பெருமையின் தொடர்ச்சியாகக் கொள்ளத்தக்கவர், இம்மண்ணின் அறத்தைப் பற்றி அறிந்தவர், எழுத்தில் வடிப்பவா் யாா்? நாம் சரியாக அடையாளம் கண்டு சிறப்பிக்க வேண்டும்.

நம் காலத்தின் தலைமைப் படைப்பாளிக்கு ஆயிரம் பொற்காசுகளில், எண்ணூறு காசுகளிலிருந்து ஒவ்வொன்றும் ஒரு பவுன் கொள்ளுமாறு நூறு காசுகள் உருவாக்க வேண்டும். நூறு காசுகளிலிருந்து பெரியதொரு பதக்கம் உருவாக்க

வேண்டும். மீதமுள்ள நூறு காசுகளை இணைக்கும் சரடுக்குப் பயன்படுத்த வேண்டும்.

நூறு பவுன் காசுகளை இருபத்து நான்கு காசுகளாக இரு வரிசைகளில் அமைக்க வேண்டும். எனில் ஒரு பக்கத்திற்கு நாற்பத்து எட்டுப் பவுன் காசுகள் அமையும். இருபுறமும் தொன்னூற்றி ஆறு காசுகள். பெரிய பதக்கத்தில் நாற்புறமும் நான்கு காசுகள் அமைத்து நடுவில் பதக்கத்தை அமைக்க வேண்டும். பதக்கத்தின் முன்புறம் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் குறளும், பின்புறம் தமிழன்னையின் அழகிய உருவமும் இடம் பெற வேண்டும்.

நம் காலத்திலிருந்து தொடங்கும் **'தமிழ்த் தலைமகன்'** பதக்கத்தின் முதலாவது காசில், ஆயிரத்து முந்நூற்றி முப்பது குறள்களிலிருந்து தலைமகனுக்குப் பிடித்தமான, அவர் விரும்பும் ஒரு குறளைத் தேர்வு செய்து பதக்கத்தின் முன்புறத்தில் பொறிக்க வேண்டும். பின்பக்கத்தில் அவரது பெயர் பதிய வேண்டும்.

பதக்கம் அணியும் காலத்திலிருந்து வாழ்நாள்வரை அவரே தமிழின் தலைமைப் புலவர். அவருக்குப்பின் அவர் தேர்ந்தெடுக்கும், அவர் சுட்டும் ஒருவரே அடுத்த தமிழ்த் தலைமகன். அடுத்த புலவர் மரபைத் தேர்ந்தெடுக்கும் உரிமை முழுக்க முழுக்க மூத்த புலவரையேச் சாரும். தேவேந்திரர் எக்காரணம் கொண்டும் தலையிடுவதோ, பரிந்துரைப்பதோ கூடாது. மூத்த படைப்பாளி தமக்கு அடுத்தவரை, தகுதியுள்ளவர் என நினைக்கும் ஒருவரை குறிப்பாலாவது சுட்டியிருப்பது நல்லது. குறித்திருப்பதும் நல்லதே. ஏனெனில் இத்தொடர்ச்சி வழிவழியாக அடுத்தடுத்து வரும் தலைமுறைகளுக்குக் கடத்தி வரப்பட வேண்டும்.

மூத்த படைப்பாளி தமக்கு இரத்த உறவுள்ளவரை எக்காரணம் கொண்டும் அடுத்த தலைமகனாக ஆக்கக் கூடாது. ஒருவேளை மிகுந்த தகுதி இருப்பதாகக் கருதினாலும் அதைத் தவிர்த்து விடுவது நல்லது. தமிழின் தலைமைப் படைப்பாளி உறுதியாகச் சாதி பார்த்துப் பரிந்துரைக்க மாட்டார். அவரது பரிந்துரையை முழுமனதோடு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தலைமைத் தமிழ்ப் படைப்பாளிக்கு தமிழ்ப் புலமையும், அற வாழ்வும், உலகு செழித்தோங்க வேண்டும் எனும் நல்லெண்ணமுமே முக்கியம். அறம் பாடுகிறாரா, அறத்தை முன்னெடுக்கிறாரா என்பதே முக்கியம்.

ஒருவேளை மூத்த படைப்பாளி சுட்டிக்காட்டாத நிலை வருமாயின், அன்றைக்கிருக்கும் தமிழர் ஒன்றுகூடி தலைமைப் படைப்பாளியை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். போட்டி வைத்தோ, குலுக்கல் முறையிலோ தேர்வு கூடாது. மூத்தோர் அவை கூடி தகுதியானவரை ஒரு மனதாகத் தேர்வு செய்வது நல்லது.

இம்மண்ணின் அறத்தைப் பாடும் புலவர் மரபுக்குரியவருக்கு தேவேந்திரர் குலத்தவர் சிறந்ததொரு விழா நடத்தி, தமிழ்த் தலைமகன் பட்டம் சூட்டி, பொன்மாலை அணிவிக்க வேண்டும். அன்று தொடங்கி அடுத்த ஒரு வருடத்திற்கு தலைமைப் புலவன் எனும் முறையில் தமிழ்நிலத்தில் பயணம் செய்து. தமிழின் தொல்லறத்தைப் பேச வேண்டும். ஊர் மக்களைச் சந்தித்து அவர்களிடையே தமிழர் அறத்தைப் போதிக்க வேண்டும். தமிழர் மனங்களில் அறத்தைப் பதிய வேண்டும்.

தமிழ்த் தலைமகனுக்கு சிறந்தொரு பல்லக்கு உருவாக்க வேண்டும். தமிழ் நிலத்தில் தலைமைப் புலவனுக்கு தேவேந்திரரே பல்லக்குத் தூக்க வேண்டும். முப்பத்தியிரண்டு தேவேந்திர இளைஞர்களை இப்பணிக்குத் தேர்வு செய்ய வேண்டும். அவர்களுக்கு ஒத்த உடையும், தலையில் அழகியதொரு பட்டுக் குஞ்சமும் இருக்க வேண்டும். படை சீருடை போன்று உடை இருப்பது நன்று. பக்கத்திற்கு நால்வர் என பதினாறு பேர் பல்லக்குத் தூக்க வேண்டும். மாற்று முறையில் அடுத்த பதினாறு பேர் தூக்க வேண்டும்.

தமிழின் தலைமகனுக்கு பல்லக்குத் தூக்குவது தகும் தேவேந்திர குலத்தாரே. அன்று நம் மன்னன் தமது அரச கட்டிலில் அயர்ந்து தூக்கிய அந்தப் புலவனுக்கு விசிறிவிட்டானல்லவா. நம் வேந்தர் மரபு அப்படி விசிறியது தமிழின்மேல் கொண்ட பெரும் பற்றாலல்லவா. நம் புலவர் மரபு அத்தகைய பெறும்பேறு கொண்டது என்பதை நாம் மறக்கலாகாது. படை நடத்திச் சென்ற நம் அரசர்கள், எளிய புலவர்களின் அறச்சொல் கேட்டு மனம் மாறியிருக்கின்றனர். வேந்தனைவிட புலவனே, தமிழ்ப் புலமையே, தமிழ் சிறப்பானது என்பதே நம் கழக வரலாறு, நம் சங்கப் பெருமை.

தலைமைப் புலவனுக்கு அழகியதொரு மரப் பல்லக்கு உருவாக்க வேண்டும். பல்லக்கின் மேடை சற்றே உயரமாக இருப்பது நன்று. கால்களை நன்றாக வைத்துக்கொள்ளப் போதுமான இடமிருக்க வேண்டும். மேடையை வெள்ளியால் அலங்கரிப்பது அழகு. நீள் கம்புகளுக்கு தாமிரத் தகடு பொருத்திக் கொள்ளலாம்.

தலைமைப் புலவன் பயணம் செய்ய வசதியான மகிழுந்தும், பல்லக்குத் தூக்குபவர் பயனிக்க பெரியதொரு வண்டியும், பல்லக்கு உள்ளிட்ட பொருட்களை ஏற்றிக்கொள்ள லாரியும் அவசியம். வாகனத்தில் தற்காலிக இருப்பிடம் (டென்ட்) இருக்க வேண்டும். இரவு தூங்குவதற்கு நல்தொரு கட்டிலும், மெத்தையும், காற்றாடி வசதியும், (பேட்டரி, ஜெனரேட்டர்) அவசியம். சமையல் பாத்திரங்கள், பொருட்களும் எடுத்துக்கொள்ள வேண்டும். தலைமைப் புலவனுக்கு ஏதேனும் குறிப்பிட்ட உணவு வகைகள் தேவைப்படுமெனில் அதற்கும் தயாராகவே இருக்க வேண்டும். எதற்கும் பிறரைச் சார்ந்திருக்கக் கூடாது. தலைமைப் புலவனது பாதுகாப்பில் மிகுந்த கவனம் கொள்ள வேண்டும்.

அறம் பேச நம் புலவர் ஊர்களுக்குச் செல்லும்போது, ஊரின் எல்லையில் இறங்கி அங்கிருந்து பல்லக்கிலேயே ஊரைச் சுற்றி அழைத்து வரவேண்டும். ஊர் மக்கள் தலைமைப் புலவனை மேளதாளம், ஆரத்தி, வாழ்த்தொலிகளோடு வரவேற்பது நலம். ஊர் மக்களிடையே அறம் பற்றி நம் புலவர் பேசவேண்டும். மனித வாழ்வின் நோக்கம், வாழ்வின் சிறப்பு, தமிழின் பெருமை, பாரத மண்ணின் ஞானம் குறித்து சிறியதொரு உரை நிகழ்த்தலாம். அங்கிருந்து ஊர் எல்லைவரை பல்லக்கில் அமர்த்தி மகிழுந்துவரை தூக்கிச் செல்ல வேண்டும். நாளுக்கு இரண்டு மூன்று ஊர்கள் போதுமல்லவா. தமிழ்நிலத்தில் அருகருகேதான் ஊர்கள் அமைந்துள்ளன. காலையில் ஒன்று, மாலையில், இரவில் ஒன்று எனக் கொள்ளலாம். இரவில் அங்கேயே தங்கிக் கொள்ளலாம். அருகாமை நகரங்களில் தங்கிக் கொள்வதும் நல்லது.

யாம் சிலவற்றைச் சுட்டிக்காட்டியிருக்கிறோம். இதன்படியே நடக்கவேண்டுமென்பதில்லை. அனைத்தும் தமிழ்ப் புலவரின் எண்ணப்படியே, சொல்படியே நடைபெற வேண்டும். தமிழ்ப் புலவரின் முடிவே இறுதியானது. அனைத்தும் அவரின் விருப்பப்படியே. புலவர் அனைத்து வகையிலும் தனித்தவர், சுதந்திரமானவர். அவர் செய்ய வேண்டிய பணியை, பேச வேண்டிய அறத்தை, நம் தமிழ்த் தாயே தீர்மானித்துக்கொள்வார்.

பல்லக்கில்தான் நம் தமிழ்ப் புலவரை தூக்கிச் செல்ல வேண்டும். அன்புகொண்டு புலவன் மறுத்தாலும், இது நம் நடைமுறையாக இருக்கட்டும். ஊர்களைச் சுற்றி வரும்போது, புலவர் தமிழன் பெருமைக்குரிய தலைமைப் பதக்கத்தை அணிந்திருப்பது நன்று.

நம் முன்னோர் மரபு சிறக்கட்டும். தமிழ்ப் புலவனின் சொல் இம்மண்ணில் நிலைக்கட்டும்.

**வளரட்டும் சங்கப் பெருமை.. உயரட்டும் வேந்தர் புகழ்..**

10. தமிழ்க் கடவுள், தமிழ்ப் புலவன் தொடர்ச்சியில் அடுத்து வருவது தமிழ் வேந்தர் மரபு.

நம் வேந்தர் மரபு மணிமுடிக்கும், செங்கோலுக்கும் பெரும்புகழ் கொண்டது. மணிமுடி அதிகாரத்தையும், செங்கோல் அறத்தையும் சுட்டின. அத்திறத்தில், தமிழின் பெருமைக்குரிய முடியும், கோலும் அடுத்துள்ள ஈராயிரம் பொற்காசுகளால் செய்யப்படுகிறது.

முடியும், கோலும் மருத நிலத்தவருக்கே சிறப்பானவை என்பது தெளிவு. மருதத்தை மூவேந்தர் மரபாகக் கொள்வதே பொருத்தம். அவ்வகையில் மருத நிலத்தவருக்கு முடியும் கோலும் அளிப்பதே சாலச் சிறந்தது.

மருதம் எனில் பயிர்த் தொழிலே. பயிர்த் தொழிலுக்குப் பெயர் பெற்றார் தேவேந்திர குலத்தவர். ஆயின் தேவேந்திர குலத்தவரே முடிக்கும், கோலுக்கும் உரிமையானவர். தேவேந்திர குலத்தவர் இருகூட்டமாக பள்ளரென்றும், பள்ளியென்றும் பெயர் கொண்டார் என்பது வரலாறு. அவ்வகையில் ஒருவருக்கு மணிமுடியும், ஒருவருக்குச் செங்கோலும் அளிப்பது ஏற்புடையது. மணிமுடியை விண்ணையாளும் தேவேந்திரராகவும் செங்கோலை மண்ணை ஆட்சிசெய்யும் அரசராகவும் கொள்வது வெகுபொருத்தம்.

ஆம் எனில், மணிமுடி தேவேந்திரகுல வேளாளருக்கும், செங்கோல் வன்னியகுல சத்திரியருக்கும் அளிக்கப்படுகிறது. காலமாற்றத்தில் நம் குடிகள் ஒன்றுபட்டு, முடியும் கோலும் ஓரிடத்தே நிலைக்குமென்பது திண்ணம்.

இரு குடிகளில் யாருக்கு அளிப்பது? பொருத்தமானவர், தகுதியானவர் யார்? எப்படித் தேர்ந்தெடுப்பது?

ஒருவேளை தமிழர் தமிழால் ஒன்றிணைந்து, நாங்கள் தமிழ்த்தாயின் பிள்ளைகள், நாங்கள் அனைவரும் ஒன்று, எங்களுக்குள் பிரிவனை இல்லை, நாங்கள் சாதி பார்க்க மாட்டோம், குலம் பார்க்க மாட்டோம் என உறுதியளிப்பாராயின், அத்தகைய நிலை வருமேயாயின்..

வரும்காலத்தில் தமிழர் சாதி பார்க்காது ஓட்டளித்து முதல்வரைத் தேர்ந்தெடுக்கும் நிலை உருவாகுமானால்..

தமிழக மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் முதல்வருக்கு, இரு குடிகள் சார்பாக மகுடம் சூட்டி செங்கோல் வழங்கி விடலாம்தானே. காலையில் அரசு முறைப்படி பதவியேற்பு விழாவும், மாலையில் தமிழர் மரபில் முடிசூட்டும் நிகழும்படிச் செய்வது சிறப்பல்லவா.

அப்படி ஒரு நிலை வருமாயின் தேவேந்திரரும், வன்னியரும் அன்போடு தாமாக முன்வந்து, தமிழரால் சாதி பார்க்காமல் ஓட்டளித்து, ஜனநாயக முறைப்படித் தேர்வான தமிழக முதல்வருக்கு மகுடம் சூட்டி விடலாம். அன்னார் மகுடம் சூட்டுவதற்குமுன், தமிழருக்குள் சாதி பார்க்க மாட்டோமென்றும், தமிழ் நிலத்தில் சாதிக்கு இடமில்லை என்றும் உறுதிமொழி அளித்து மகுடம் சூட்டிக் கொள்ளலாம். அவ்வாறே சாதி பார்த்து, சாதியால், சாதியை முன்னிறுத்தி தாம் முதல்வராக ஆகவில்லை என்றும், தமது ஆட்சிக் காலத்தில் சாதி சார்ந்து ஒருபோதும் செயல்பட மாட்டோம் என்றும் அளிக்கும் உறுதிமொழியில், தமிழ்முதல்வருக்கு செங்கோல் வழங்கிச் சிறப்புச் சேர்க்கலாம்.

செங்கோல், மணிமுடி சூட்டும் விழாவில், தமிழ்ப் புலவரையும் இணைத்துக்கொள்ள வேண்டும். நம் தலைமைப் புலவரின் நல்வாழ்த்துக்களும் சிறப்பாக அமையும்.

தமிழர் சாதியை விடமாட்டார் எனில், சாதி பார்த்து ஓட்டளித்துத்தான் முதல்வரைத் தேர்ந்தெடுப்பார் எனில்..

அமிழ்தினும் இனிய நம் அன்னை நம்மைத் தமிழராய் இணைப்பார் என யாம் உறுதியாக நம்புகிறோம்.

இம்மண்ணில் அடுத்து என்ன நிகழ்கிறது என்பதற்கு ஏற்ப நம் முடிவுகள் மாறும் மூத்தோரே.

11. அடுத்து வரும் ஒரு வருட காலத்திற்கு, தேவேந்திரர் குலத்தவர் சார்பாக தென்முனையின் குமரியம்மனுக்கு வழக்கமாக நாள்தோறும் நடைபெறும் வழிபாட்டு முறைகளோடு, நித்தமும் இரவில் ஒரு பசுவின் பாலமுது படைக்க வேண்டும்.

அன்னைக்கு நித்தமும் சிறு அச்சுவெல்லம் படையிடலிடப்பட்டு அன்னையைக் காணவரும் அனைவருக்கும் அச்சுவெல்லக் கட்டி கொடுக்கப்பட வேண்டும். அன்னைக்கான அச்சு வெல்லம் கேரள மக்கள் சார்பில் அளிப்பது கூடுதல் சிறப்பு.

12. திருமலையின் ஸ்ரீநிவாசனுக்கு அடுத்த ஒரு வருட காலம் நித்தமும் இரவு ஒருபசுவின் சீம்பால் அமுதளிக்க வேண்டும். திருமலையைச் சுற்றியுள்ள ஊர்களிலிருந்து, சீம்பால் கிடைக்குமாறு செய்வது சிறப்பு. திருமலையப்பனுக்கான சீம்பால் தெலுங்கு மக்கள் சார்பில் அளிப்பது கூடுதல் சிறப்பு.

அடுத்து வரும் பத்தாண்டு காலத்திற்கு தேவேந்திர குலத்தவருக்கான கடமைகள்,

13. வடபாதிமங்கலத்திற்கும் கீழ்வெண்மணிக்கும் நடுவில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நம் புத்தபிரானுக்கு **புத்தொளிக் கோவிலொன்று** எழுப்பப்பட வேண்டும். கோவிலின் மையப் பரப்பு நூறு ஏக்கருக்குள் அமையுமாறு இருப்பது சிறப்பு. கோவில் வளாகத்திற்குள் நூறு ஏக்கரில் தங்குமிடங்களும், நூறு ஏக்கரில் பழத்தோட்டமும், நூறு ஏக்கரில் பூத்தோட்டமும், நூறு ஏக்கரில் புல்வெளியும், நூறு ஏக்கரில் காடும், நூறு ஏக்கரில் விளை நிலமும், நூறு ஏக்கரில் குளமும் அமைக்கப்படுவது சிறப்பு.

புத்த பெருமானின் கோவில் வட்ட வடிவில் அமைக்கப்பட வேண்டும். புத்த பிரானின் சிலையை சுற்றிலும் மூன்று சுற்றுகள் அமைக்க வேண்டும். புத்தனின் சிலையைச் சுற்றி அறுபதடித் தொலைவில் முதலாவது சுற்று அமைய வேண்டும்.

இரண்டாவது சுற்று நூற்றி இருபது அடியிலும், வெளிச்சுற்று நூற்றி எண்பது அடியிலும் அமைய வேண்டும். சிலையிலிருந்து இருபதடித் தொலைவில் பத்தடி அகலத்தில் நீர்ச் சுற்று இருக்க வேண்டும். நீர்ச் சுற்றுக்கு மேலே சூரிய ஒளி விழுமாறு இடைவெளி அமைக்க வேண்டும். நீரில் தாமரைப் பூக்களும், மீன்களும் இடம் பெறுவது சிறப்பு.

இரண்டாவது சுற்றில் தியானம் செய்வதற்குகேற்ற அமைப்புகளும், வசதிகளும் இடம் பெறுவது சிறப்பு. மூன்றாவது சுற்று புத்தர் கோவிலை வலம் வருவதுபோல் அமைப்பது நல்லது. இரண்டாவது சுற்றிலிருந்து மூன்றாவது சுற்றுக் கூரையை சற்றே தாழ்வாக அமைப்பது சிறப்பு.

புத்த சிலையின் மேற்கூரை கண்ணாடியால் அமைவதும் சிறப்பு. வானும், நிலவும், விண்மீன்களும் தெரிவது அழகு. பகலில் கண்ணாடிக் கூரையை மூடிவைக்கும் அமைப்பு இருக்க வேண்டும். காலை சூரிய உதயத்திற்குப்பின் மூடி, மாலையில் சந்திர உதயத்தின்போது திறப்பது நல்லது.

புத்தனின் பீடம் சதுர வடிவில் இருக்க வேண்டும். பீடத்தில் கலைநயமிக்க தூண்கள் அமைய வேண்டும். தூண்களின் உயரம் பதினெட்டு அடியாக வைத்து மேலே தங்கக் கூரை வேயப்பட வேண்டும்.

புத்தனின் சிலைக்கான பீடம் தரையிலிருந்து பத்தடிகள் உயர்த்தப்பட்டிருக்க வேண்டும். புத்தனின் பார்வை கிழக்கு நோக்கி இருக்க வேண்டும்.

புத்த சிலையின் உயரம் பன்னிரெண்டடிகளாகவும், எடை பன்னிரெண்டாயிரம் கிலோகவாகவும் அமைவது சிறப்பு. சிலை தாமரைப் பீடம் கொண்டிருப்பகு நல்லது. பீடம் இரண்டடியாகக் கொண்டால் முழு புத்தசிலை பதினான்கு அடியாக அமையும். புத்தசிலை தலையின் பின்பக்கம் தர்ம சக்கரம் இடம் பெற வேண்டும். சிலையில் ஆடை வடிவமைப்பு இருக்க வேண்டும். சிலை கருப்பு தவிர்த்து பிற வண்ணங்களில் இருப்பது சிறப்பு.

புத்த பகவானின் சிலை வியட்நாமில் உருவாக்கப்பட வேண்டும். புத்தன் சிலை வியட்நாமின் கோவே - Hue மாநிலத்தின், தியன் - மூ புத்தக் கோவிலிலிருந்து - Thien Mu Pagoda ஊர்வலமாக எடுத்து வரப்பட வேண்டும். ஊர்வலம் புறப்படும் நாளின் அதிகாலையில் அருகிலிருக்கும் வாசனை ஆற்றின்

நீரால் - Perfume River நீராட்டுவது நன்று. சூரிய உதயத்தின்போது ஊர்வலத்தைத் தொடங்குக. வியட்நாமிய மக்கள் புத்த பகவானுக்கு சிறப்புக்கள் செய்ய விரும்பினால் அவர்கள் வழமைப்படி சிறப்புக்கள் செய்யலாம்.

ஊர்வலப் பாதை குறித்தும் திட்டமிட வேண்டும். கூகுள் வரைபடத்திலிருந்து, வியட்நாம், லாவோஸ், தாய்லாந்து, மியான்மார் மற்றும் கிழக்கு வங்காளம் வழியாக புத்த கயாவை அடையலாம் எனத் தெரிகிறது. எனினும் ஊர்வலப் பாதை குறித்து முன்கூட்டியே நன்கு திட்டமிட்டே ஊர்வலத்தைத் தொடங்க வேண்டும்.

புத்தனின் சிலையை குதிரைகள் பூட்டிய தேரில் ஊர்வலமாகக் கொண்டுவர வேண்டும். சிரமமெனில் எந்திர வண்டியில் திறந்தநிலையாக எடுத்துவரலாம். ஊர்வலத்தின் ஒவ்வொரு கி.மீ. பயணத்திலும் ஒருமுறை புத்த சரணம் சொல்ல வேண்டும். ஒவ்வொரு பத்து கி.மீ. தூரத்திலும் நமோ தஸ்ஸ மந்திரம் பத்து முறை ஒலிக்க வேண்டும். ஊர்வலம் கிளம்பும்போதும் முடிக்கும்போதும் மணிமேகலையின் புத்த ஞாயிறு தோன்றும் காலை பாட வேண்டும். அவ்வாறே விரும்பிய நேரங்களில் புத்த மந்திரப் பாடல்களையும் ஒலி பரப்பலாம். Budddhist Song - (Peaceful Eastern Meditation Music - Great Compassion Mantra) na mo ho la da nu do la ye ye, na mo oli ye ஒலிபரப்புவது கூடுதல் சிறப்பு.

ஊர்வலம் ஒரு நாளைக்கு முப்பது, முப்பதியிரண்டு கிலோ மீட்டர் என அமைவது சிறப்பு. ஊர்வலம் வரும் பாதையின் நீர் நிலைகள், வயல்வெளிகள் மற்றும் சாலை ஓரங்கள் என நெல்மணிகள் தூவப்பட வேண்டும். பலவகையான நெல்மணிகளைச் சேர்த்து ஒரு கைப்பிடி அளவு அள்ளி பரவலாகத் தூவிக் கொண்டே வருவது சிறப்பு.

ஊர்வலம் வரும் பாதையிலுள்ள மக்களுக்கு பச்சரிசி, வெல்லம், தேங்காய்த் துருவல் கலந்த இனிப்பு அரிசி வழங்க வேண்டும். ஊர்வலத்தின் இருபுறத்தும் இருவர் வழங்கி வருவது சிறப்பு. ஊர்வலத்தில் வாசனைப் பத்திக் குச்சிகள் இடம் பெறுவது கூடுதல் சிறப்பு.

ஊர்வலத்தில் கலந்து கொள்பவர்கள் எண்ணிக்கை நூற்றி இருபது எனக் கொள்ளலாம். அதாவது நூற்றி இருபது பேர் தேவேந்திர குலத்தவராக இருக்க வேண்டும். இவர்கள் வியட்நாமிலிருந்து நடந்தே வர வேண்டுமென்பதால் உடல்

வலுவுள்ளவர்களாக இருப்பது சிறப்பு. கடினம் எனில் ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு குழு என வைத்துக் கொள்ளலாம் அல்லது முடிந்தவர் நடந்தும், சோர்வுற்றவரைத் திரும்பப் பெற்று புதியவரைச் சேர்த்துக் கொண்டும் ஊர்வலம் தொடரலாம். நூற்றி இருபது பேர் எனில் இவர்கள் இரவு தங்குவதற்கு, சமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். தூங்கும் வசதி கொண்ட மூன்று பேருந்துகள் போதும். எளிதாகச் சமாளித்து விடலாம். சமையல் மற்றும் பிற பொருட்களை வைத்துக் கொள்ள இரு லாரிகளை வைத்துக் கொள்ளலாம்.

குதிரைகளுக்கு ஓய்வும், சத்தான உணவும் கிடைக்கச் செய்வது முக்கியம். மேடான இடங்கள், பாலங்கள் எனில் மாற்று வழிகளைக் கண்டறிய வேண்டும். முடிந்தவரை ஏற்றமான பாலங்களைத் தவிர்க்க வேண்டும். நகரங்களில் சுற்றுச் சாலைகளில் பயணிக்க வேண்டும்.

புத்தகயாவில் பதினெட்டு நாட்கள் சிலை வைக்கப்பட்டு, ஒடியா வழியாக ஆந்திராவின் அமராவதி நகருக்கு ஊர்வலம் வந்து சேர வேண்டும். அங்கே பத்து நாட்கள். அங்கிருந்து நேராக காஞ்சிக்குப் புறப்பட வேண்டும். காஞ்சிபுரத்தில் மூன்று நாட்கள் தங்கலுக்குப் பின் ஊர்வலம் புத்தக் கோவிலை அடைய வேண்டும். புத்தனின் முழுக் கோவிலையும் கட்டியே பின்பே ஊர்வலம் துவங்க வேண்டும் என்பதில்லை. புத்தக் கோவிலின் வரைபடம் தயாராகிவிட்டதெனில் ஊர்வலத்தைத் துவக்கி விடலாம். ஊர்வலம் வந்து சேர்வதற்குள் குறைந்தது உள் சுற்றாவது முடிந்திருப்பது அவசியம். புத்தனின் சிலை உள் சுற்றில் நிறுவப்பட்ட பின்புகூட, பிற சுற்று வேலைகளைத் தொடர்ந்து செய்து முடிக்கலாம்.

புத்தரின் கோவில் நவீனமாக இருப்பது பொருத்தம்.

இது சற்றே கடினமான பணிதான். எனினும் அறமூர்த்தியான நம் புத்தனின் பெருமைக்குச் சிறப்புச் சேர்ப்பது தேவேந்திரர் கடமை. உலகின் அறிவை, அறத்தை முன்னெடுத்த நம் புத்தபெருமானுக்கு, உலகினருக்கு நல்வழி காட்டிய நம் பெருமூப்பனுக்கு, நம் பேராசானுக்கு, நம் அறிவுத் தந்தைக்கு, நாம் செய்யும் சிறு நன்றி செலுத்துதலே இக்கோவில். புத்தன் நமக்கு என்றும் நல்வழிகாட்டியே.

இது புத்தனுக்கான கோவில் மட்டுமன்று. இது புத்த தர்மத்தை அறிவதற்கான, புத்த தம்மத்தைப் பயில்வதற்கான அறக் கூடமாகவும் செயல்பட வேண்டும். இங்கே புத்த தர்மத்தை அறிய விரும்புபவர்கள் தங்கி அறம் பயிலவும் ஏற்பாடுகள்

செய்யப்பட வேண்டும். அவ்வாறே இளையோர் மற்றும் மாணாக்கர்கள் புத்தனை, புத்த தம்மத்தை, அதன் வரலாற்றை அறிந்துகொள்ளும் விதத்தில் நல்லதொரு காட்சிக் கூடமும் இடம்பெற வேண்டும். மொத்தத்தில், தமிழ் மண்ணில் மறைந்துபோன புத்த நினைவுகளை தமிழர் ஆழ்மனத்திலிருந்து மீட்டுக் கொண்டுவரும் பெரும் பணியே இது. நிறைவேற்ற வேண்டியது தேவேந்திரர் கடமை.

புத்தக் கோவிலை நிர்மாணிக்க உலக மக்களின், புத்த நாடுகளின் உதவியைப் பெறலாம். எனினும் இலங்கை நாட்டிலிருந்து எந்தவிதமான பொருளுதவியும் பெறக் கூடாது. கோவிலை நிர்மாணிப்பது தொடர்பாக அவர்களிடமிருந்து எவ்விதமான ஆலோசனைகளும் பெறக் கூடாது. நிறுவப்பட இருக்கும் பௌத்த விகாருக்கு இலங்கைப் பௌத்தர்களின் பொருளுதவி, வழிகாட்டல்கள் மட்டுமே தடுக்கப்படுகின்றன. பிற அனைத்திலும் அதாவது அவர்கள் இங்கு வருவதற்கும், வழிபாடுகளில் கலந்து கொள்வதற்கும், எந்தத் தடையுமில்லை. இலங்கை மாணவர்கள் வந்து பயிலலாம், தங்கலாம். பிற எதிலும் அந்நாட்டவரைப் பிரித்துக் பார்க்கக் கூடாது. உலகின் அனைத்து மக்களைப் போன்றே இலங்கை நாட்டினருக்கும் இக்கோவில் பொதுவானதே. நம் காலத்தில் அவர்கள் மேற்கொண்ட அறமற்ற போருக்காகவே அவர்களது உதவிகள் மறுக்கப்படுகின்றன. வரும் காலத்திய தமிழ்த் தலைமுறைகள் இதனை நினைவில் கொள்வது நல்லது.

**புத்தனின் மகாதம்மம் சிறக்கட்டும்..**

**நல்லாசானின் நல்லறிவு உலகை உயர்த்தட்டும்..**

14. இம்மண்ணில் அறம் வளர்த்த அறமூர்த்தியான மகாவீரருக்கு மாபெரும் **அறவர் சாலையொன்று** தமிழகத்தில் உருவாக்கப்பட வேண்டும். மகாவீரர் அறக்கூடம் திருவண்ணாமலைக்கும், வந்தவாசிக்குமிடையில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் அமைய வேண்டும். மகாவீரர் மடம் நூறு ஏக்கரில் நிர்மாணிக்கப்பட வேண்டும். விளைநிலம் தவிர்த்து பிற அனைத்தும் புத்த வழிபாட்டிடம் போன்ற அமைத்துக் கொள்ளலாம்.

கோவில் சதுர வடிவில், இரண்டு சுற்றுக் கோவிலாக அமைய வேண்டும். உள் சுற்றின் நடுவில் எண்கோண வடிவில் மகாவீரர் சிலைக்கான மேடை அமைக்கப்பட

வேண்டும். மேடையிலிருந்து முப்பத்தியிரண்டு அடி உயரத்தில் அழகிய வேலைப்பாடுள்ள எட்டுத் தூண்கள் நிறுவப்பட வேண்டும். வெள்ளிக் கூரை இடம்பெறுவது சிறப்பு.

மகாவீரருக்கான சிலை அபுமலையில் உருவாக்கப்பட வேண்டும். சிலையின் உயரம் இருபத்து நான்கு அடியாகவும், எடை 24000 கிலோவாகவும் இருப்பது சிறப்பு. நான்கு அடி பீடத்தின் மேல் இருபதடி உயரத்தில் சிலை இடம் பெறுவது நன்று.

மகாவீரர் சிலை, அபுமலையிலிருந்து ஊர்வலமாக எடுத்துவரப்பட வேண்டும். சிலையை நின்ற நிலையில் யானைகள் மூலம் எடுத்து வருவது சிறப்பு. யானைகளுக்குத் துன்பமாக இருக்கும் எனில் வாகனம் மூலம் கொண்டு வரலாம். ஏனெனில் மகாவீரர் பிறர் துன்பங்களைப் பொறுக்காதவரன்றோ. எமது தனிப்பட்ட முறையில், யானைகளுக்கு துன்பமாக இருக்காது எனில் தாராளமாக யானைகள் மூலம் சிலையை எடுத்து வரலாம். உருளைகள் பூட்டிய வண்டியில் சிலையை வைத்து இழுப்பது அத்தனை கடினமாக இருக்காது. ஏற்றமான பாலங்களைத் தவிர்த்து மாற்று வழியில் எடுத்து வரலாம். வழியிலுள்ள அனைத்து ஆறுகளிலும் பாலங்கள் இருப்பதால் எளிதாகக் கொண்டு வந்து விடலாம்.

மகாவீரர் ஊர்வலத்தின் வழியில் மக்களுக்கு நெல்பொரி அளிக்க வேண்டும். நாளும் புதிதாக நெல்பொரிகள் தயாரித்துக் கொள்வது சிறப்பு.

ஊர்வலம் அபுமலை தொடங்கி இராசஸ்தான், குஜராத், மராத்தியம் வழியாக கருநாடகத்தில் சிரவணப் பெலகோலாவை அடைவது சிறப்பு. அங்கே நாற்பத்து எட்டு நாட்கள் வைக்கப்பட்டு, அங்கிருந்து நேராக மகாவீரர் கோவிலை அடைய வேண்டும்.

மகாவீரர் கோவிலுக்கு இந்தியாவில் மட்டுமே பொருளுதவி பெற வேண்டும். பிற நாடுகளின் உதவியைத் தவிர்க்கலாம். மகாவீரருக்கான வழிபாட்டிடம் கட்டுவது தமிழ் நிலத்தில் மகாவீரரின் அறங்களை, சமணரின் தத்துவங்களை அறிவதற்கே. அதற்கேற்ப இக்கோவில் சமண மதத்தை அறியும் பள்ளியாகவும் செயல்பட வேண்டும்.

ஊர்வலத்தில் தேவேந்திர குலத்தவர் நூறு பேர் கலந்து கொள்ளலாம். சமண சமயத்தவர்கள் இடம்பெறுவதும் சிறப்பு. மகாவீரருக்கான வழிபாட்டு முறைகளுக்கு கோவில் கட்டுமான அமைப்பிற்கு, சமண சமயத்தவரின் வழிகாட்டு நெறிகளை ஏற்றுக் கொள்ளலாம்.

மகாவீரர் கோவில் சமணரது பாரம்பரிய முறையில் அமைவது நன்று.

புத்தரின் கோவில் கட்டுமானத்தில் மறையோரும், மகாவீரர் கோவில் கட்டமானத்தில் வன்னியரும் இணைந்து கொள்வது சிறப்பு. ஒருவேளை நாங்கள் தமிழர்கள் எனத் தமிழ் நிலத்தவர் ஒன்று கூடினால், தமிழர்கள் அனைவரும் இணைந்து இருகோவில்களையும் கட்டியெழுப்பது சிறப்பு. அந்நிலையில் ஊர்வலங்களில் தமிழராய் அனைவரும் இணையலாம். தேவேந்திரரும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் இணைந்து கொள்வது அவசியம்.

15. தமிழர் அனைவரும் தமிழராய்த் திரண்டெழுந்தால், நாம் அடுத்த பத்தாண்டுகளுக்குள் ஆற்ற வேண்டிய பெரும்பணி உலகத் தமிழருக்கான தலைமை நிலையத்தை திருச்சி மாநகரில் கட்டியெழுப்புவதே. உலகில் பரந்து வாழும் தமிழர்களை இணைக்கும் விதத்தில், உலக மக்களிடம் தமிழைக் கொண்டு சேர்க்கும் முறையில் ஒரு உலகத் தரமான கட்டிடம் எழுப்புவது அவசியம்.

உலகத் தமிழருக்கான தலைமைக் கட்டிடம் அத்தனை நவீன வசதிகளையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும். கட்டிடத்தின் உயரம் அய்யன் திருவள்ளுவரைப் போற்றும் விதத்தில் நூற்றிமுப்பது மாடிகள் கொண்டதாக ஆயிரத்து முந்நூறு அடிகளில் அமைப்பது சிறப்பு. உயரத்தில் முப்பது அடியைக் குறைத்துக் கொள்ளலாம். இக்கட்டிடமே தமிழ் நிலத்தின் உயரமான கட்டிடமாக, அமைய வேண்டும். 1330 அடிகள் உயரத்திற்கு மேலான கட்டிடத்தை வரும் காலங்களில் தமிழ் நாட்டில் எழுப்பக் கூடாது. இந்திய நிலத்திலும் இதைவிட உயரமான கட்டிடம் கட்டக்கூடாது என்பதை நெறியாக்கலாம். எதிர்கால உலகிற்கும் அதை நீட்டிக்கலாம்.

கட்டிடத்தின் உயரம் 1300 அடிகளாகவும், நீளம் 1300 அடிகளாகவும் அகலம் 130 அடிகளாகவும் அமையலாம். அகலம் குறைவு எனில் கூடுதலாக வைத்துக் கொள்ளலாம். கட்டிடத்தில் ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு அலுவலகப் பிரிவு எனும் அளவில் ஒவ்வொரு தளத்தையும் இரண்டாகப் பிரித்து அலவலகங்கள்

அமைக்கலாம். பரப்பளவில் சிறிய நாடுகள் எனில், தற்போதைக்குத் தமிழர் அதிகமும் வசிக்காத சிறிய நாடுகள் எனில் மூன்று, நான்கு நாடுகளின் அலுவலகங்களைக்கூட ஒரே தளத்தில் இடம் பெறச் செய்யலாம்.

தமிழகத்தின் தலைமைச் செயலகத்தை இங்கு கூட்டலாம். அதற்கேற்ற விதத்தில் இரண்டு, மூன்று மாடிகளை இணைத்தும் கட்டிட அமைப்பில் மாற்றம் செய்து கொள்ளலாம்.

உலகத் தமிழர் தலைமையகத்தில், தமிழ் மொழிக்கென்று தனிப்பட்ட பிரிவுகள் இருப்பது நலம். உதாரணமாக தமிழ் இலக்கியத்தை முன்னெடுக்க உலகத் தமிழ் இலக்கியத்துக்கென ஒரு அலுவலகம். அவ்வாறே தமிழ் மொழி வளர்ச்சிக்கென்று ஒரு பிரிவு இருக்கலாம். உலகத் தமிழர் பண்பாடு, தமிழர் கலைகள், தமிழர் திருவிழா, தமிழர் உணவு, தமிழர் மருத்துவம், தமிழர் ஆன்மீகம், உள்ளிட்ட பல பிரிவுகளுக்கும் உலகளாவிய தனித்தனி அலுவலகங்கள் அமைப்பது கூடுதல் சிறப்பு.

கட்டிடத்தின் மேலே இலங்கு ஊர்திகள் இறங்கும் வண்ணம் செய்யலாம். தினந்தோறும் இரவில் ஒரு திருக்குறளை ஒளிரும் கற்றைகளால் மாடியில் உருவாக்கிக் காட்டலாம். வானிலிருந்து பார்க்கும்போது அது அழகிய காட்சியாக அமையும்.

ஒவ்வொரு தளத்திற்கும் ஒரு அதிகாரத்தின் பெயரைச் சூட்டலாம். இரவுகளில் அந்த அதிகாரத்தின் குறள்களை அத்தளத்தில் ஒளிருமாறு செய்யலாம். கட்டிடம் முழுக்க 1333 குறட்பாக்களும் ஒளிர்வது அழகிய காட்சியாக இருக்கும்.

கட்டிடத்தை ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் அமைக்கலாம். அங்கே உலகின் அத்தனை நாடுகளிலிருந்தும் இரண்டு மூன்று மரங்கள் கொண்டுவந்து நட்டு வைக்கலாம். உலகின் அத்தனை பூச்செடிகளையும் அழகாகப் பராமரிக்கலாம். அழகுமிக்க புல்தரைகளை உருவாக்கலாம். சிறு குளங்களை உண்டு பண்ணலாம். நடைபாதைகள் அமைக்கலாம். நீரூறுக்கள் பேணலாம். தமிழர் மனது வைத்தால் எளிதாக நிலைவேறக் கூடியதே உலகத் தமிழர் தலைமையகம்.

இந்திர மரபினரே, தமிழர்கள் சாதியாய் பிரிந்து கிடக்கின்றனர். தமிழர் தம்மை சாதியாகவே உணர்கிறார். தமிழர் தமது சாதி மறந்து, சாதியைத் துறந்து,

தமிழராய், மனிதராய் ஒன்றிணைய வேண்டியது தலையாயது. அக்காலம் மலரும் என்பது திண்ணம். எனினும் அக்காலம் மலரும்வரை தமிழ்ச் சாதிகளிடையே இணக்கம் காண வேண்டியது அவசியம். தமிழரிடையே இணக்கம் பேணப்பட்டால் தமிழ்கள் தம்மை சாதியாய்ப் பார்ப்பதும், எண்ணுவதும், செயல்படுவதும் குறையும், நிற்கும் என்பது தெளிவு.

அவ்வகையில், தமிழ்ச் சாதிகளிடையே நல்லிணக்கம் நிகழும் வண்ணம் தேவேந்திரர் அடுத்த பத்து வருடங்களுக்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள்,

16. அண்மைக் காலமாக தேவேந்திரர், ஆதிதிராவிடரிடையே மனவேறுபாடுகள் எழுந்து வருவது கண்கூடாகத் தெரிகிறது. இதில் அரசியலும் கலந்திருக்கிறது என்பது அப்பட்டமானது. தேவேந்திரர், தேவேந்திரர் தலைமைகள் இந்துமத ஆதரவாளராகவும், ஆதிதிராவிடர் மதத்தை வெறுப்பவராகவும், மறுப்பவராகவும் நினைத்துக் கொண்டு, எதிரெதிர் போக்கைக் கைக்கொண்டு வருவதும் நிகழ்கிறது. தேவேந்திரர்கள் இந்து மதத்தைத் தூக்கிப் பிடிக்கும் அதே வேளையில், இந்து மதத்தின் வரலாற்றை, அது கைக்கொண்டு வந்த சாதியப் பாகுபாட்டை, தீண்டாமையை, அது கட்டமைத்திருக்கும் சமூக அடுக்கை நினைவில் கொள்வது, மறக்காமலிருப்பது உசிதமானது. கடந்த காலத்தில் நம் வரலாறென்ன, நம் முன்னோர் எப்படி வாழ்ந்தனர் என்பதும் முக்கியம். இந்து மதத்தின் தீவிர செயல்பாட்டாளர்களையும், அவர்களின் சித்தாந்தங்களையும் கருத்தில் கொண்டே இந்து மதத்தை அணுக வேண்டும். நம் காலத்திய இந்து மதத்தில் சாதிய நோக்கு சற்றே தளர்வு கொண்டுள்ளது என்ற போதிலும், அதனால் சாதியை, சாதியத்தை உதற முடியுமா என்பது பெரிய கேள்வி. இந்து மதம் பெருமைமிகு மதமே. அதன் தத்துவங்கள் இணையற்றவை, உயர்ந்தவை. எனினும் மதத்தைவிட அதைப் பின்பற்றுபவர்களே முக்கியம். மதத்தில் உயர்ந்த தத்துவங்கள் இருக்கலாம். மதம் சிறந்த கொள்கைகளைக் கொண்டிருக்கலாம். எனினும் அதைப் பின்பற்றுபவர்களின் நிலை என்ன என்பதே முக்கியம். இந்துக்கள் என்பார் யார், சாதி இந்துக்களின் குணம் எத்தகையது, பிராமணர்கள் முன்னெடுக்கும் இந்து தர்மம் எது என்பதைப் பற்றி தெளிவு தமிழ் நிலத்தில் வாழும் தேவேந்திர குலத்தவருக்கு அவசியமாகும். மனிதருக்கு எதிலும் வெறி கூடாது. மதத்தில் கூடவே கூடாது.

தத்துவார்த்த ரீதியில் உலகின் அத்தனை மதங்களும் இந்து மதங்களல்லவா. அவனன்றி எதவும் நிகழாது எனில், அவனன்றி பிறிதொரு மதம் எப்படி முளைக்கும், எப்படிப் பரவும்.

மனிதர்களின் நல்வாழ்விற்காகவே மதங்கள் தோன்றியுள்ளன. மதங்களே இல்லாமல், மதங்களின் தேவையே இல்லாமல், மனிதர்களால் நல்வழியில் நடக்க இயலுமெனில் அதுவும் நல்லதே. இத்தனை மதங்கள் செழித்திருக்கும் இந்திய நிலத்தில், மதங்கள் என்றால் என்ன, அவற்றின் தேவைகள் என்ன, அவை முன்னெடுக்கும் தத்துவங்கள் எத்தகையவை என்பதை மனிதர் அறிந்தாரில்லை. உண்மையில் மனிதருக்கு மதங்கள் குறித்த புரிதல், அறிவு பெரும்பாலும் இல்லை. அதுவே தம் மதம்மேல் வெறியும், பிற மதங்கள்மேல் வெறுப்பும் வளர ஆதாரம்.

மனிதருக்காக, மனிதரின் நல்வாழ்விற்காக, மனிதரின் எதிர்காலத்திற்காகவே மதங்களே தவிர, மதங்களுக்காக மனிதர் அல்ல. மதங்களும் அவை சுட்டும் இறைவனும் தேவையில்லை, வேண்டாமெனில் அது மனிதர்களின் சுயவிருப்பம். அத்தகைய நிலைகொண்டோர், மதப்பற்றாளர்களை, மதத்தைப் பின்பற்றுபவர்களை அறிவற்றவர்களாக, மூடர்களாக நினைப்பதும் தவறு. மனிதருக்கு உண்மை தெரியாது. இறைவன் இருக்கிறானா என்பது ஞானியருக்கே வெளிச்சம். ஆராய்பவரே அறிய முடியும். தேடுபவருக்கே கிடைக்கும். உலகின் அரிய பொக்கிசம்போல் இறைவன் இருக்கிறான். இறைவன் வேண்டாமெனில் விட்டுவிடலாம். அவனையும் அவன் அடியாரையும் தூற்றக் கூடாது.

இறைவன் வேண்டாம் என்பதற்கும், இறைவன் இல்லை என்பதற்கும் பெருத்த வேறுபாடு உள்ளது. இறைவன் இல்லை எனப் பேசினால் இந்து மதம் தவிர்த்த பிற மதத்தார் ஆதரிக்கிறார். ஆதாரிப்பவர் யார் எனில் அவர்தான் இறைவன் இருப்பதை மிக உறுதியாக நம்புகிறார். எனில் தாம் நம்பும் இறைவன் உள்ளான், பிறர் நம்பும் இறைவன் இல்லையா? தாம் பேசுவதும், எழுதுவம் அரசியலுக்காகவே எனில், அதிலும் கவனம் தேவை. இறைவன் என ஒருவன் இருக்கிறானா இல்லையா என்பதைக் காலம் தீர்மானிக்கும். உறுதியாக. அக்காலம் வரும்வரை மதங்களை கண்மூடித்தனமாக ஆதரிப்பதும், எதிர்ப்பதும் மனிதருக்கு வேண்டாம். பொறுமை தேவை.

தமிழ் நிலத்தில் வாழும் தேவேந்திரர் - ஆதிதிராவிடரிடையே எழும் முரண்பாடுகளில் முக்கியமானதொன்று அட்டவணையினரைக் குறிக்கப் பயன்படுத்தும் தற்காலத்திய சொல். தமிழகத்தின் ஊடகங்கள் அட்டவணை இனத்தவர், பட்டியலினத்தவர் எனும் சொற்களுக்கு மாற்றாக தாழ்த்தப்பட்டவர் எனும் சொல்லையே பயன்படுத்துகின்றன. தற்போது தாழ்த்தப்பட்டவர் சொல்லுக்கு மாற்றாக இக்குறிப்பிட்ட சொல்லையே குறிப்பிடுகின்றன. குறிப்பாக ஊடகங்களில், தமிழ் எழுத்துக்களில், இலக்கிய ஆக்கங்களில், அரசியல்வாதிகளின் பேச்சுக்களில், அச்சொல்லே நிலைபெற்று வருகிறது.

தேவேந்திர குலத்தவர் தமக்கு அச்சொல்லில் ஏற்பில்லை என்றும், தம்மை அச்சொல்லால் சுட்டக் கூடாது எனவும் அழுத்தம் திருத்தமாகச் சுட்டிக் காட்டுகிறார். அச்சொல்லே ஒருவித இளக்காரமாக, தாழ்வாக இருப்பதை உணர்கிறார். தேவேந்திரர் தம்மை அச்சொல்லால் சுட்ட வேண்டாமெனில், சுட்டாமலிருப்பதே முறை. அதுவே பண்பாடு.

பள்ளர் சொல்லின் மக்கள். அவருக்கு பல்லும், சொல்லும், நெல்லும் பெரிது. அதுவே அவரது வழி. அவரது பண்பாடு நீர் சார்ந்தது.

பள்ளர் சொல்லைப் பின்பற்றுபவர். பள்ளர்கள் வாக்கு வழியினர். பள்ளர்கள் என்றென்றும் சொல்லின் மக்களே. அவர்களுடையது தமிழென்னும் அமுதச் சொல்.

பறையர் பண்பாடு நிலம் சார்ந்தது. பறையர் அறிவின் மக்கள். அறிவானவர்கள். அன்பிலும் சிறந்தவர்களே. பறையருக்கும் சொல்லும், நெல்லுமே பெரிது. என்ன காரணத்தாலோ, சமீப காலத்தில் பறை எனும் கருவிக்கு பெரிய முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். பறையை தமிழர் அடையாளமாக முன்நிறுத்துவது பொருத்தமன்று. அது ஏற்புடையதல்ல. பறை எனில் சொல்லே. அது கருவியல்ல. இசைக்கருவியாக இருந்தாலும் அதில் ஒற்றைத்தன்மை இருக்கிறது. அதுவும் ஏற்புடையதல்ல. இனிவரும் காலத்தில் எதிலும் ஒற்றைத்தன்மை வேண்டாமே. மறையர் மக்கள் பறை என்பதில் தெளிவடைய வேண்டும்.

தேவேந்திரரும், மறையோரும் என்றும் நட்புள்ளவராகவும், உறவுள்ளவராகவும் நீடிக்க, அடுத்து வரும் ஒரு வருட காலத்திற்கு, தேவேந்திரர் குடியில் பிறக்கும் குழந்தைகளின் முதல் புத்தாடையை மறையோரும், மறையோர்

குடும்பங்களில் இறப்பு நிகழ்ந்தால், பிறந்த இடத்து கோடித் துணியை தேவேந்திரர் போடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தேவேந்திரர் குடும்பங்களில் குழந்தை பிறந்தால், அவ்வூரிலோ அல்லது அருகிலிருக்கும் மறையோர் ஊருக்கோ தகவல் சொல்ல வேண்டும். குழந்தை பிறந்த ஒரு வாரத்திற்குள் மறையோர் குடியிலிருந்து வயது மூத்த தம்பதியர் அக்குழந்தைக்கு முதலாவது உடை அணிவித்து, அக்குழந்தையை வாழ்த்த வேண்டும். குந்தையை வாழ்த்தவரும் மறையோர் பெரியவர்களைப் பாதம் பணிந்து வரவேற்க வேண்டும். அவர்களை உரிய மரியாதையோடு நடத்த வேண்டும். அவர்களை வழியனுப்பும்போது நூற்றியொரு உரூபா தட்சிணை கொடுத்து அன்போடு வழி அனுப்ப வேண்டும்.

மறையோர் ஊர்களில் இறப்பு நேரின் செய்தி உள்ளூர் தேவேந்திரருக்கு தெரியப்படுத்த வேண்டும். உள்ளூரில் தேவேந்திரர் இல்லாவிட்டால், அருகிலிருக்கும் ஊருக்குத் தகவல் சொல்லலாம். கோடித்துணி போர்த்த ஒரு ஆண், பெண் என குறைந்தது இருவராவது செல்லவேண்டும். நான்கு பேர் செல்வது சிறப்பு. கோடித்துணி போர்த்திவிட்டு சற்று நேரத்தில் திரும்பி விடலாம். இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்வது அவசியமில்லை.

தேவேந்திரருக்கும், மறையோருக்குமான உறவு எவ்வகையானது என்பதை, இதற்கு முன்னர் எத்தகைய உறவிருக்கிறது என்பதை வைத்தே தீர்மானிக்க வேண்டும்.

எங்கள் பகுதியில் அண்ணன் - அக்காள் உறவுள்ளது. வயதில் மூத்தோரை அண்ணன், அக்கா என இரு குடியினரும் அழைப்பார்கள். இதற்கு முன்னர் உள்ள உறவுமுறைகளை இருகுடியினரும் பின்பற்றலாம்.

மறையோர் மக்களை இம்மண்ணின் மூத்தோராகக் கருதி அவர்களுக்குரிய மரியாதையை தேவேந்திரர் குடியினர் அளிக்க வேண்டும்.

தேவேந்திர குலத்தவரை இவ்வுலகின் காவலர்களாக, இவ்வுலகின் அறத்தை முன்னெடுப்பவர்களாகக் கொண்டு, அவர்களின் சொல்லுக்கு மறையோர் குடியினர் மதிப்பளிக்க வேண்டும்.

புகழ்மிக்க தேவேந்திரரே, பெருமைமிகு மறையோரை, ஒருவர் விண்ணுக்குரியவர். ஒருவர் மண்ணுக்குரியவர். எனில் இருவரும் ஒன்றே. ஒன்றே இரண்டாக இருக்கிறது. இதை என்றும் மறவாதீர். நாம் உறவுடையவர். வரும் காலத்தில் எந்த முடிவு எடுத்தாலும் அவரவர் மனதைக் கேட்டு முடிவெடுங்கள். அது சொல்லும் நாம் யாரென, நம் வரலாறு என்னவென்று.

இரு மூத்த குடிகளின் அன்பும், நட்பும், உறவும் உலகில் நீடித்து நிலைக்கட்டும்.

**வாழிய மூத்தோர்.. வாழிய தமிழ்..**

17. நாடார் குடியினர் அன்பிற்கும், பொறுமைக்கும் பெயர் பெற்றவர். ஆயினும் சமீபத்திய பேச்சுக்கள் குறிப்பாக தேவேந்திர குலத்தவருக்கெதிரான சிலரது செயல்பாடுகள் அவ்வளவு உவப்பானவையாக இல்லை. இரு குடிகளும் பகை கொண்டோர் அல்ல. முன்னோர் அப்படி வாழவில்லை. இரண்டு குடிகளுக்குமிடையே சிறந்த புரிதலும், ஒத்துழைப்பும் தற்போது வரையிலும் நீடித்தே வருகிறது. அது நீடிக்க வேண்டும் என்பதே இரு குடியினரின் விருப்பமும். எனினும் அரசியல் ஆசை கொண்ட சிலர், அரசியல் பிழைப்பிற்கும், சாதிப் பெருமைக்கும் ஆசைப்பட்டு, இரு குடிகளுக்குமிடையே பகைமூட்ட நினைக்கிறார். இரு குடியினரும் இதை உணர்ந்து கொள்வது நல்லது.

தூத்துக்குடியின் குறிப்பிட்ட ஊரைச் சார்ந்து நிகழ்ந்த தேவேந்திரர் - நாடார் மோதலை, தமிழ்நாடு முழுவதற்குமான போட்டியாக, பகையாக முன்னெடுக்க வேண்டியதில்லை. பகை முடிவுக்கு வர வேண்டும். இருவரும் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும்.

சில சுயநலமிகளின் படை திரட்டும் செயல்கள், பிரித்தாளும் பேச்சுகள், அரசியல் சூழ்ச்சிகள் தமிழர் வாழ்வை எங்கோ கொண்டுசென்றுவிடும் என்பதை இரு குடிகளும் உணர வேண்டும். தமிழ் நிலம் எத்தனையோ படைகளைப் பார்த்துவிட்டது என்பதை தமிழ்க் குடிகள் நினைவில் கொள்வது நல்லது. படை திரட்டினால், படை நடத்தினால், தமிழர் பெருமையும், மாண்பும், வாழ்வும் என்னாகும் என்பதை அனைத்துக் குடிகளும் சற்றே எண்ணிப் பார்க்க வேண்டும். வடஇந்திய நிலத்தில் நடந்துவந்த படையெடுப்புகளை, அழிவுகளைக் கவனத்தில் கொள்ளாமல் சோழனும், பாண்டியனும் படை நடத்தியதால், தமிழர் வாழ்வும்,

வரலாறும் எப்படித் திசை மாறியது என்பதைத் தமிழ்க் குடிகள் அறிய வேண்டும். ஒருவேளை சோழன் மீதான பாண்டியனின் படையெடுப்பு நிகழாமல் இருந்திருக்குமேயானால் இந்திய வரலாறே மாறிப்போயிருக்கும். தமிழர் வாழ்வும் பெரிதாக மாற்றம் கண்டிருக்கும்.

படை நடத்தவது எளிது. எதற்காக, யாருக்கு எதிராகப் படை நடத்துகிறோம் என்பதே முக்கியம். நம் முன்னோர் தர்மத்தை நிலைநாட்டவே படை திரட்டினார், படை நடத்தினார். தமிழர்கள் நன்கு மனதில் பதியவைக்க வேண்டியது, தமிழ்க் குடிகளில் எந்தக் குடியும் வீரத்தில் குறைந்ததல்ல. தமிழரை வீரத்தால் வெல்லவே முடியாது. தமிழரை வெல்ல எளிதான வழி அன்பு மட்டுமே. தமிழ்க் குடிகள் படை திரட்டுவதை விட்டு, அன்பை முன்னெடுப்பதே சாலச் சிறந்தது.

தேவேந்திரர் - நாடார் குடிகளிடையே அன்பை மேலும் மலரச் செய்யும் விதமாக, நாடார் குடிகளின் திருமண விழாவிற்கு, பந்தக்கால் (முகூர்த்தக் கால்) நடுவது தேவேந்திர குலத்தவராக இருப்பது சிறப்பு. நாடார் குடிகளில் நடக்கும் திருமணவிழா நாள் தேவேந்திரர் குடியினருக்குத் தெரியப்படுத்த வேண்டும். தேவேந்திரர் பந்தக்கால் விழாவைச் சிறப்பாக முன்னெடுக்க வேண்டும். இதில் நடைபெற வேண்டிய சடங்கு முறைகளைப் குடிப்பெரியவர்கள் பேசி முடிவெடுக்கலாம். பந்தக்கால் மரத்தை நீராட்டி மரம் முழுவதற்கும் மஞ்சள் பூசுவது சிறப்பு. பந்தக்காலுக்குகென்று புதிய மரமாக இருப்பது நல்லது. மரம் எடுத்துச் செல்கையில் மங்கள இசை இடம் பெறுவது கூடுதல் சிறப்பு. பூரணக் குப்பமும் ஏந்தலாம். பந்தக்கால் மரத்தில் மலர் மலைகள், மாவிலைத் தோரணங்கள் சுற்றலாம். காலை சூரிய உதயத்தின்போது பந்தல்கால் நடுவது சிறப்பு. மாலையில் எனில் சூரியன் மறைவதற்குமுன் ஊன்றி விடுவது நல்லது.

முகூர்த்தக்கால் ஊன்றி சிறப்புச் செய்யும் தேவேந்திர குலத்தவருக்கு, நாடார்குடி சார்பாக மரக்கால் அரிசியும், படிச்சர்க்கரையும், பத்து தேங்காய்களும், வாழைப்பழக் குலையும் சிறப்புச் செய்ய வேண்டும். அரிசி தேவேந்திர குடியினரின் பொதுச் சமையலில் இடம் பெற வேண்டும்.

செய்முறைகள், தேவேந்திரரும், நாடாரும் ஒன்றாய் வாழும் ஊர்களுக்கு மட்டுமே பொருந்தும். அதாவது உள்ளூர்களில் வாழ்பவருக்கு மட்டுமே.

நாடார் குடியினர் நல்மனம் கொண்டோர். நம் காலத்திய தமிழ் நிலத்தின் அறிவை முன்னகர்த்தியோர். அவ்வகையில் வரும் காலத்தில் தேவேந்திரர்கள் ஏதேனும் பெரிய முடிவுகள் எடுப்பாரேயானால், நாடார்குடியின் மூத்தோர் சொல் கேட்கப்படுவது நல்லது. அவர்களின் கருத்துக்கள், வழிகாட்டல்கள் பரிசீலிக்கப்பட வேண்டும். தேவேந்திரர் இம்மண்ணில் அறத்தை முன்னெடுப்பவர் எனும் முறையில், அவர்களது அறச் செயல்களுக்கு நாடார் குடியினர் துணை நிற்க வேண்டும்.

தேவேந்திரர் - நாடார் குடிகளின் தோழமை இம்மண்ணில் சிறக்கட்டும்.

**மண்ணில் அறம் பெருகட்டும்..**

18. மறவரின், தேவர்களின் வீரம், வன்முறையாக, சாதிய வெறியாட்டமாக மாறிவருவதை குடிமூத்தோர் அறிய வேண்டும். வீரம் பெருமையானதே. எனினும் எதை முன்வைத்து இம்மண்ணின் வீரம் பெருமை கொள்கிறது என்பதே முக்கியம். சாதிக்காக, சாதிப் பெருமைக்காக, மதத்திற்காக, மொழிக்காக முன்னெடுக்கப்படும் வீரம் வீரமாகாது. இந்தியப் பெருநிலத்தில் தர்மத்திற்காக, தர்மத்தை நிலைநாட்டுவதற்காக முன்னெடுக்கப்படும் வீரமே புகழத் தக்கது. இவ்வழியில் வீரத்தை முன்னெடுத்த மாவீரர்களின் வீரத்தையே இம்மண் போற்றுகிறது. அவர்களையே தெய்வங்களாக இம்மண் நிலைநிறுத்தவும் செய்கிறது. குடிகளைக் காப்பவரே வீரர். காப்பானே வீரன். அவன் வீரம் இம்மண்ணில் பலகாலம் பேசப்படும். நினைவில் நிறுத்தப்படும். காவியங்களாக இயற்றப்படும். அவ்வகையிலேயே இராமாயணமும், மகாபாரதமும் மக்களால் நினைவு கூறப்படுகிறது, போற்றப்படுகிறது.

தற்காலத்திய தமிழ் நிலத்தில் எங்கும் எல்லாவற்றிலும் அரசியல் நுழைந்து விட்டது. எந்தக் கட்சியின் அரசியல்வாதி என்றாலும், அன்னாரின் முதன்மை நோக்கம் அரசியலாகவே இருக்கும். மக்களை வைத்து, தாம் என்ன பயனடையலாம் என்பதே அன்னார்களின் பெருநோக்கம். ஊர்களின் சாதிய வளர்பில், வெறுப்பில், சண்டைகளில், அரசியல்வாதிகளின் பங்கு என்ன என்பதையும் தேவர் குடிகள் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

தமிழ் நிலத்தில் வீரத்தை நிலைநாட்ட வேண்டிய தேவர்கள், அதற்குப் பதிலாக சாதியை நிலைநாட்டத் துடிக்கிறார்கள். இது ஏற்புடையதல்ல. எளியோரையும், பெண்களையும், குழந்தைகளையும் பாதுகாப்பதே அசலான வீரம்.

மாறாக சாதிபார்த்து அவர்களின்மீது ஏவப்படும் வீரம் தமிழர்களுக்கு தலைக்குனிவு. இப்படியான வீரம் தமிழ் மண்ணில் எப்போதும் நிகழலாகாது.

மண்ணில் தர்மத்தைக் காக்க வேண்டியது, நிலைநாட்ட வேண்டியது, தேவர்களது தலையாய பணி. அதற்கு முதலில் தர்மம் என்றால் என்ன என்பதை அறிந்திருக்க வேண்டும். தர்மத்தைக் காக்க தேர்ந்தெடுக்கப்படும் வழிமுறையும் மிக முக்கியம். தர்மத்தைப் பேணுவதில், காப்பதில், வீரம் இறுதியான நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளது. வீரத்தை முன்னெடுப்பதற்குமுன், அங்கே அன்பும், சமாதானப் பேச்சும் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும், வேறு வழியே இல்லை எனில் மட்டுமே வீரம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இம்மண்ணில் தர்மத்தை எப்படி நிலைநாட்டுவது என்பதற்கான வழிமுறைகளை முன்னோர் கண்டறிந்துள்ளனர், வகுத்துள்ளனர். அம்முறையிலேயே வீரம் முன்னெடுக்கப்பட வேண்டும். வீரம் பெண்களைக் கொல்லாது, சிறுவர்களை வெட்டாது, எதிர்த்து ஆயுதம் தூக்காத ஒருவரை வதைக்காது, எளியோரை விரட்டாது.

ஆயிதம் ஏந்தாதவர் மீதும், எதிர்த்து நிற்காதவர் மேலும், வீரத்தைக் காட்டக் கூடாது. நடுஇரவில், தூங்கிக் கொண்டிருப்பவரை வெட்டி வீழ்த்துவது ஒருபோதும் வீரமாகாது. தேவர் எனும் சொல்லுக்கே அவமானம். தேவர் எனில் உயர்ந்தோர் எனப் பொருள். மனிதரைவிட உயர்ந்தோர். அது வீரத்தில் மட்டுமே எனக் கொள்ள வேண்டியதில்லை. தேவர் அறிவில் உயர்ந்தோராக இருக்கலாம். அன்பில் உயர்ந்தோராக இருக்கலாம். மானுட சேவையில் உயர்ந்தோராக இருக்கலாம். அன்பில் உயர்ந்தோரையே இம்மண் தெய்வம் என்கிறது. படிநிலையில் அவர் தேவருக்கும் மேலானவர். தெய்வம் அவரே. மண்ணில் வீரம் போற்றப்படுகிறது. அன்பு வணங்கப்படுகிறது.

அனைத்துச் சாதியினரும் சேர்ந்து வாழும் ஊரில் நாள்முழுக்க தம்சாதிப் பாடல்களைப் போடுவது தேவருக்கு ஏற்புடையதல்ல. பிறர் அதை சுட்டிக்காட்டாமல் இருக்கலாம். எதிர்த்துக் கேட்காமல் இருக்கலாம். எனினும் இம்மண்ணில் நியாயம் என ஒன்று இருக்கிறதல்லவா. பிறர் சாதிப்பாடல்கள் போட்டால் தேவர் கம்பெடுக்கிறார், கல்லெறிகிறார். மண்ணில் வீரமே பெரிதோ? வீரத்தைவிட நீதியும்,

நேர்மையுமே முக்கியம். நீதி சாதிக்கு ஒன்றல்ல. அது அனைவருக்கும் பொதுவானது.

ஊர்களின் பேச்சு வழக்கில் இன்னும் தேவரில் சிலர் திருட்டின் மூலம் வயிறு வளர்ப்பது தெரிகிறது. திருடி வாழ்வதும், பிறர் பொருளை அபகரித்து வாழ்வதும் அறப்பிழை. பொருளுக்காக, பொன்னுக்காக, பிறரைக் கொல்வது மாபெரும் அறப்பிழை. அரசியலை பிழைப்பிற்காகப் பயன்படுத்துவதும், அரசியல் மூலமான கொள்ளையும் பெரும்பிழை. அரசியல் அறம் வளர்ப்பவர்களுக்கானது. அங்கே நிகழும் பிழை ஒட்டுமொத்த மானுட குலத்தையே பாதிக்கும். நேர்மை அதற்குரியப் பரிசை பெற்றே தீரும். உறுதியாக. அரசியலிலுள்ளோர் ஒருபோதும் நேர்மை குறையலாகாது.

மண்ணைக் காப்பதிலேயே, மக்களைக் காப்பதிலேயே தேவரின் புகழ் அடங்கியுள்ளது. தேவர்கள் பெரும் புகழுக்குரியவர்கள் எனில், இம்மண்ணில் தர்மத்தை நிலை நாட்டுபவர்களாகுக. தேவர்களால் தர்மம் புகழ் பெறட்டும். நிலைக்கட்டும்.

தேவர்குடிப் பெண்களின் மணவிழாவின்போது, மணப்பெண்ணுக்கு தேவேந்திர குலத்தவர் சார்பாக சிறப்புச் செய்ய வேண்டும். மணநாளுக்கு முந்தைய இரண்டாவது நாள், சூரிய அடைவிற்குச் சற்றுமுன் மணப்பெண்ணை நீராட்ட வேண்டும். நீராட்டின்போது சூரிய வெளிச்சம் இருப்பது நல்லது. நீராட்டும் நீர் இளஞ்சூடாக இருப்பது சிறப்பு. மஞ்சள் நீர் ஊற்றலாம். ஒருபடி பால்கொண்டு நீராட்டலாம். பால் குளிர்ச்சி என்பதால் தலையில் கொஞ்சமாக ஊற்றிக் கொள்ளலாம். நீராட்டில் வாசனைத் திரவியங்கள் இடம் பெறலாம்.

நீராட்டுக்குப்பின் தேவேந்திரர் சார்பாகக் கொடுக்கப்படும் பட்டுச்சேலையை மணமகள் உடுத்த வேண்டும். பட்டின் நிறம் பெண்ணுக்கு பொருத்தமாக இருக்குமாறு தேர்வு செய்யலாம். நிறம் கருப்பு, வெள்ளை தவிர்த்து எதுவானாலும் சரி. பெண்ணை மணமுள்ள மாலைகளால் அலங்கரிக்கலாம். அழகானதொரு மாலை அணிவிக்கலாம். பெண்ணை இருகையில் அமர்த்தி தேவேந்திரர் குலப் பெண்கள் அவருக்கு வாழ்த்துக்களும், அருளாசிகளும் வழங்க வேண்டும். மரக்கால் அரிசியும், மூன்று நெய்தீபமும், வெற்றிலையும் கொண்டு அவரை மூன்றுமுறை வலமாகச் சுற்றவேண்டும். திருப்பாவையின் ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி

பாசுரம் பாடி, வீரத்திலும், அறிவாற்றலிலும் சிறந்த பிள்ளைகள் பிறக்க வேண்டுமென வாழ்த்த வேண்டும். வாழ்த்துவதற்கென்று ஒரு பாடலை இயற்றிக் கொள்ளவதும் சிறப்பு. வாழ்த்தில் மங்களச் சொற்கள் அதிகமும் இடம்பெற வேண்டும். இறுதியில் ஆரத்தி சுற்றி, திருஷ்டி கழித்து சடங்கை முடிக்க வேண்டும்.

தேவர் தர்மத்தைக் காப்பவர். தேவேந்திரர் அறம் வளர்ப்பவர். இரு சமூகத்தவரும் இதை உணர வேண்டும். இருவருக்கும் பகை வேண்டாம். இருவரின் பகை தமிழின், தமிழரின் வீழ்ச்சியாகி விடும். தமிழரின் தரம் தாழும். முன்னோரின் புகழ் குறையும். இதை என்றும் நினைவில் கொள்க.

மண்ணில் வீரம் புகழப்படட்டும். தேவர்களின் தர்மம் மண்ணில் நிலைகொள்ளட்டும்.

**தமிழ்க்குடிகளின் பெருமை பெருகட்டும்..**

19. தமிழ் நிலத்தின் பெருமைமிகு குடிகளுள் ஒன்று பிள்ளைமார் சமூகம். பிள்ளைமார்கள் நற்குணங்கள் நிரம்பப் பெற்றவர். தனிவாழ்வில் நேர்மைக்குணம் உள்ளவர். அறிவுக்குப் பெயர் பெற்றவர். தாய்த் தமிழை வளர்த்தவர். தமிழர் வாழ்வை உயர்த்தியவர். பிள்ளை சமூகத்தின் தமிழ்த் தொண்டு போற்றுதலுக்குரியது. பிள்ளையின் சைவப் பணி வணங்கத்தக்கது.

தமிழர் தம்மைத் தமிழராய் உணர்ந்து பெருமை கொள்வதற்கு, தமிழரின் சங்க இலக்கியங்கள் வழிவழியாகக் கடத்தி வரப்பட்டதற்கு பிள்ளைகளே காரணம். குறிப்பாக சைவமடங்களின் தமிழ்ப் பணிகள் மெச்சத் தக்கன. தமிழின் உன்னத இலக்கியங்கள் அவர்கள் வழியாகவே பொக்கிசமாகப் பாதுகாக்கப்பட்டு வந்தன எனில் மிகையாகாது.

உண்மையில் பிள்ளை மிகுந்த விமர்சனத்திற்கு உரியவர். யாம் எமது புத்தகங்களில் பிள்ளைகளை சற்றே கூடுதலாக விமர்ச்சித்திருக்கிறோம். அது நம் பிள்ளைக்குத் தகுந்ததே. இத்தனை அறிவார்ந்த சமூகம், கல்வியும், செல்வமும் மிகுதியாகப் பெற்றிருந்த சமூகம், தமிழருக்குத் தலைமையேற்று வழி நடத்தியிருக்க வேண்டும். தமிழை உலகெங்கும் நீட்டியிருக்க வேண்டும்.

இம்மண்ணில் பொதுவுடைமையை முன்னெடுத்திருக்க வேண்டும். இம்மண்ணில் முளைத்த யாரும் ஊரே யாவரும் கேளிர் பிள்ளைக்குச் சொல்லப்பட்டதல்லவா. அறிவிற் சிறந்த பிள்ளை தன்னலமாக நடந்து கொண்டது ஏற்கத்தக்கதல்ல.

தமிழரின் தமிழ் இலக்கியங்களின் பெருமையெல்லாம், சாதனைகளெல்லாம் ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்பேதான். பிற்காலத்தில் அதாவது சோழர்கள் காலத்தில் முதன்மைக்கு வந்ததாகக் குறிப்பிடப்படும் பிள்ளை, அவரது மேன்மைக் காலத்தில், தமிழில் தரமான இலக்கியம் எதனையும் படைக்கவில்லை. ஆயிரம் வருடங்களாக தமிழ் இலக்கியங்களைப் படித்து பிள்ளை தம்மளவில் இன்புற்று வந்தாரேயொழிய, அது போன்ற இலக்கியங்களைப் படைக்க வேண்டும் என நினைக்கவில்லை. அவற்றைப் பரப்பவுமில்லை.

வரலாற்றில் பிள்ளை தம்மை தற்காத்துக் கொண்டார். தமிழையும் தற்காத்தார். எனினும், தமிழரைத் தற்காக்கவில்லை. பிள்ளை தம் அறிவால் தமிழரைப் பாதுகாத்திருக்க வேண்டும். பதினாறுவகைக் கறிகளோடு உண்பதும், ஊஞ்சலில் ஆடிக்கொண்டே இலக்கியம் படிப்பதும், ஆய்ச்சி மடித்துக் கொடுக்கும் வெற்றிலையைக் குதப்புவதுமாக, பிள்ளை தம் அகத்து வாழ்க்கையை சுகபோகமாகக் கழித்தார். புறத்திலோ மறவரும், கோனாரும், பள்ளரும், வெள்ளையரோடு மல்லுக்கட்டி நின்றார்.

பிள்ளை அறிவில், பண்பாட்டில் சிறந்தவர் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. இருந்தும் ஏன் புத்திசாலித்தனத்தைப் பெரிதென நினைத்துச் செயல்படுகிறார்? புத்திசாலித்தனம் சுயநலமாகவே சிந்திக்குமன்றோ. அனைத்தையும் தமக்குத் சாதகமாக ஆக்கிக்கொள்ளுமன்றோ.

தேவேந்திர குல வேளாளர் எனும் அரசாணைக்கு எதிராக பிள்ளைமார்களில் ஒரு கூட்டத்தார் தெருவில் இறங்கிப் போராடியது, கூட்டம் சேர்த்தது, வேளாளர் எனும் பெயரைக் கொடுக்காதீர்கள் என ஆட்சியர்களிடம் மனுக் கொடுத்தது ஏற்புடையதல்ல. இதில் தேவேந்திர குலத்தவரை பகையாளிகள்போலக் கருதும் பிற சமூகங்களோடு கூட்டணி சேர்ந்து செயல்பட்டது பிள்ளைகளுக்கு அழகல்ல. உண்மையில் பிள்ளையிடமிருந்தே தேவேந்திர குல வேளாளர் எனும் பெயருக்கு பலமான ஆதரவு கிடைத்திருக்க வேண்டும். அவர்தான் வழிமொழிந்திருக்க வேண்டும்.

பிள்ளையோ ஆய்ச்சியின் கண்ணழகில் கிறங்கிக் கிடக்க, வயலை உழுததும், களையெடுத்து, நீர் கட்டி, அறுத்து, களம் சேர்த்து, சிந்தாமல் சிதறாமல் நெல்மூட்டைகளை பிள்ளையின் மாளிகை முழுக்க அட்டி அட்டியாய் அடைத்ததும் தேவேந்திர குல வேளாளரன்றோ. பிள்ளையால் மறுக்க முடியுமா?

குடும்பரும், பள்ளரும் வேளாளர் இல்லையெனில் யார்தான் வேளாளர்? அறிவிற் சிறந்த பிள்ளைக்குத் தெரியாதா? நிலத்தை உழுபவரே உழவர், அவரே வேளாளரென்று தொல்காப்பியம் வேளாண் மாந்தர் இயல்பை அழகாகச் சுட்டுகிறது. 'வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி' - அதாவது வேளாளருக்கு நிலத்தை உழுது வாழும் வாழ்க்கையன்றி பிறவகையான வாழ்க்கை இல்லை. நிலத்தோடு தம் வாழ்க்கையைப் பிணைத்துக் கொண்டவரே வேளாளர். எனில், நிலத்தை உழுதவர் யார்? நிலத்தோடு தமது வாழ்க்கையைப் பிணைத்துக் கொண்டவர் யார்? வேளாண் தொழில்கள் அன்றி பிற தொழில்கள் தெரியாதார் யார்? செய்யாதார் யார்? பிள்ளை ஏரைத் தொடுவதே இல்லையெனில், யார் வேளாளர்? உழுகுடி எது?

தேவேந்திரகுல வேளாளர்களே.. பிள்ளை நம்பிள்ளை. பெருமைகள் நிறைந்த பிள்ளை. நம் பிள்ளை தமிழ்ப் பிள்ளை. அறிவுப் பிள்ளை. தமிழ் நிலத்தின் இளைய பிள்ளை. பிள்ளையைப் பாதுகாப்பது நம் கடமையன்றோ.

பிள்ளையின் கடந்துபோன வரலாற்றைத் தோண்ட வேண்டாம். பிள்ளைகளின் திணை கேட்டு அவர்களைத் திணறடிக்க வேண்டாம். நம் பிள்ளையை மருதத் திணையாகக் கொள்க. பிள்ளைகளின் தமிழ்த் தொண்டு இணையற்றது. தமிழில் சிறந்த நம்பிள்ளை வணக்கத்திற்கு உரியவராகட்டும் தேவேந்திர குலத்தாரே.

நம் காலத்தில் பிள்ளை கம்பு தூக்கவில்லை, ஆயுதம் எடுக்கவில்லை. பிள்ளையின் இக்குணம் போற்றத்தக்கது. வரும்காலத்தில் தேவேந்திர குல வேளாளர்கள் எக்காரணம் கொண்டும் தமிழ்ப் பிள்ளைமார் சமூகத்திற்கு எதிராக ஆயுதம் தூக்கக் கூடாது. இதைத் தமிழின் ஆணையாகக் கொள்க.

தமிழ் நிலத்தின் பெருமைமிகு பிள்ளைகளின் இல்லங்களில் பிறக்கும் பிள்ளைகளுக்கு, தேவேந்திர குலத்தவர் சிறப்புச் சேர்க்க வேண்டும். பிள்ளையின் இல்லத்தில் பிறக்கும் ஆண் குழந்தைக்கு தொல்காப்பியம், திருக்குறள் மற்றும்

பாரதி கவிதைப் புத்தகங்கள் பரிசளிக்கலாம். பெண் பிள்ளைக்கு மணிமேகலை, பாரதிதாசன் கவிதைகள் பரிசளிப்பது சிறப்பு. பிள்ளைகளுக்கு பரிசளிக்கும்போது குழந்தைகளுக்கு புத்தாடை அணிந்து, மணமுள்ள வெள்ளை மலர்மாலை சூடி, பிள்ளை தமிழ்த் தொண்டில் சிறக்கவும், ஞானத்தில் முதன்மையாக வேண்டுமென்றும் வாழ்த்துக. பிள்ளைகளுக்கு வலம்புரி சங்கொன்று பரிசளிக்கலாம்.

புத்தகங்கள் அளித்தபின், ஆண் குழந்தைக்கு மாணிக்கவாசப் பெருமானார் இயற்றிய திருவாசகத்தின் தொடக்கமான சிவபுராணப் பாடல்களில் முதல்வரி தொட்டு பதினாறாவது அடிவரை அதாவது நவச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க தொடங்கி ஆராத இன்பம் அருளும் மலை போற்றிவரை பாடவேண்டும். தன்மை வருமிடத்தில் அதைப் பன்மையாக மாற்றிக் கொள்ள வேண்டும். அதாவது இமைப்பொழுதும் **எம்** நெஞ்சில் போன்று. பாடி முடித்து ஸ்ரீராமஜெயம் மும்முறை சொல்லி பிள்ளையை மனதார வாழ்த்துக.

பெண்பிள்ளைக்கு பட்டாடையும், வண்ண மாலையும் சூட்ட வேண்டும். பிள்ளைக்கு அபிராமி அந்தாதியின் ஒரு பாடலைத் தேர்ந்தெடுத்துப் பாட வேண்டும். ஒரு பாடலை எப்படித் தேர்ந்தெடுப்பது? அபிராமி அந்தாதியின் நூறுபாடல்களை பத்துப் பத்தாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். பத்துப் பேர் அவரவர் மனதில் தோன்றும் ஒரு பத்தைக் குறிக்க வேண்டும். ஒருவர் முதலாவது பத்து எனக் குறித்திருக்கலாம். இன்னொருவர் ஏழாவது பத்தெனக் குறித்திருக்கலாம். பத்துப் பேரில் அதிகமாக எந்தப் பத்து குறிக்கப்பட்டுள்ளதோ அந்தப் பத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, பாடல்கள் முப்பத்து ஒன்று முதல் நாற்பது வரையிலான நாலாம்பத்தை அதிகமானோர் குறித்துள்ளனர் எனில், அந்த நாலாம் பத்தில் எந்தப் பாடல் என்பதைக் தேர்ந்தெடுக்க, மீண்டும் பத்துப் பேரும் அவரவர் மனதில் உதிக்கும் பாடல் எண்ணைக் குறித்து, அதிகமானோரால் குறிக்கப்பட்ட எண்ணுக்குரிய பாடலால் அப்பிள்ளையை மூன்று முறை வாழ்த்திப் பாட வேண்டும். பாடலுக்குப்பின் ஸ்ரீராமஜெயம் மும்முறை சொல்லி, அப்பிள்ளை நெஞ்சார வாழ்த்துக.

பெருமைகள் நிறைந்த பிள்ளைகள் தமிழ்க் குடிகளில் பிறக்கும் பிள்ளைகளுக்கு, ஆண் பிள்ளை எனில் பதினெட்டாவது நாளிலும், பெண் பிள்ளைக்கு முப்பதாவது நாளிலும் கந்த சஷ்டிக் கவசம் பாடுவதை

வழமையாக்கலாம். தமிழ்த் தலைமகனின் கவசமும், நல்லாசிகளும் நம் குழந்தைகளுக்குக் கிடைக்க பிள்ளைகள் இதை முன்னெடுப்பது பெருஞ்சிறப்பு.

**முத்தமிழ்ச் செல்வனுக்கு மங்களம்!**

**முன்நின்று காக்கும் இறைவனுக்கு மங்களம்!**

நம் அன்னை அன்பில் பெரியவள். அனைத்திலும் சிறந்தவள்.

என்றும் நமக்கு நல்லருள் புரிபவள். நம்மைக் காப்பவள்.

**அன்னையைப் போற்றுக! அன்னையே முதல் தெய்வம்!**

பிள்ளையின் தமிழ்ப் பணி தொடரட்டும். பிள்ளைகளின் புகழ் சிறக்கட்டும்.

வானுயரட்டும் மேலும்மேலுமென..

வாழ்க பிள்ளை! வளர்க தமிழ்!

**வாழிய தமிழன்னை!!**

20. தமிழகத்தில் வாழும் ஆசாரிமார்கள் மிகுந்த பண்புள்ளவர். நற்குணங்கள் நிரம்பப் பெற்றவர். நல்ல உழைப்பாளிகள். அமைதியை விரும்புபவர்களாகவும், பொறுமையுள்ளவர்களாகவும் இருப்பது கூடுதல் சிறப்பு. அனைவரையும் மரியாதையாகப் பேசும் தமிழ் நிலத்தின் ஆச்சாரியர்கள் போற்றுதலுக்குரியவர்கள்.

தேவேந்திர குலத்தாருக்கும் ஆச்சாரி குடியினருக்கும் நல்லுறவு நிலவுகிறது. அது மேன்மேலும் வளர வேண்டும், நீடிக்க வேண்டும். அவ்வகையில் தேவேந்திர குலத்தார் ஆச்சாரிமார் குடும்பங்களில் நிகழும் திருமண விழாக்களில் மணமகளுக்கு அழகுமிக்க வெண்ணிறப் பட்டுச் சேலையும், மணமகனுக்கு

கைத்தறி வேட்டியும், துண்டும் பரிசளிக்க வேண்டும். தேவேந்திரர் சார்பாக மணமகனுக்கு உளியும், சுத்தியலும் பரிசளிப்பதும் சிறப்பே.

மணமக்களை வாழ்த்தும்போது, நான்குபடி அரிசியும், நான்கு தேங்காயும், நான்கு சிப்பம் (நாற்பத்து எட்டு) நாட்டு வாழைப்பழங்களும், வெற்றிலை தாம்பாளத் தட்டும் அளிக்க வேண்டும்.

பெரியதொரு தாம்பாளத் தட்டில் தம்பதிகளை நிற்க வைத்து, மணமகனின் வலப்புறத்திலிருந்து பெண்ணின் இடப்புறமாக அமையும் விதத்தில் சற்றே பெரியதொரு மாலையால் அல்லது மல்லிகைச் சரத்தால், இருவரையும் ஒன்றாக இணைக்க வேண்டும். மணமக்களுக்கு முன்னும் பின்னும் என இருதிசைகளிலும் திசைக்கு ஒரு தேவேந்திரரர் தம்பதிகளாக, தட்டில் இரண்டு நான்கு தீபங்கள் ஏற்றி ஆரத்தி சுற்ற வேண்டும். ஆரத்தியின்போது திருப்பாவையின் நான்காம் பாடலான ஆழிமழைக்கண்ணா பாடுவது வெகு சிறப்பு. இறுதியில் திருஷ்டி சுற்றிப் போட்டு, மணமக்கள் நீடுழி வாழ வேண்டுமென்றும், ஞானத்தில் சிறந்த பிள்ளைகள் பிறக்க வேண்டுமென்றும் வாழ்த்தி விடை பெறுவது நன்று.

தம்பதிகளுக்கு அன்னை சரஸ்வதியின் அருளாசிகள் கிடைக்கும் விதமாக சற்றே பெரிய (ஒரு அடிக்கும் குறைவான) சரஸ்வதியின் மரச்சிலையொன்று பரிசளிக்கலாம். அன்னையின் அருளாசிகள் மணமக்களுக்குப் பூரணமாகக் கிடைக்க அன்னையையும் தந்தையையும் வேண்டிக் கொள்வது சிறப்பு.

ஆசாரிமார்கள் தமிழ் நிலத்தின் அறிவை முன் நகர்த்தியவர்கள். நன்கு படித்தவர்கள். சோதிட அறிவு கொண்டவர்கள். தொழில்களை வளர்த்தவர்கள். எளியதான வாழ்க்கையை மேற்கொண்டவர்கள்.

தொடரட்டும் ஆச்சாரியார்களின் அரும்பணி.

பெருகட்டும் தொழில்கள்.. வளரட்டும் கலைகள்..

ஆச்சாரியார்கள் தாம் வாழும் ஊரில் பிறக்கும் குழந்தைக்கு அழகியதொரு தொட்டிலொன்று பரிசளிக்க வேண்டும். தொட்டில் செய்வதற்கு வேண்டிய மரத்தை, மரக்கட்டைகளை தேவேந்திரர் வெட்டிக் கொடுப்பார். ஆசாரியார்கள் நேரம் கிடைக்கும்போது, மக்கள் சேவையாகக் கருதி தொட்டில் செய்ய வேண்டும்.

ஊரில் குழந்தை பிறந்த செய்தி அறிந்தவுடன் தொட்டில் பணியைத் துவக்கி விடலாம். தொட்டிலை எப்படி உருவாக்கலாம் என்பதை ஆச்சாரியார்களே தீர்மானித்துக் கொள்ளலாம். காற்றோட்டமாக, புரண்டு படுக்குமாறு இருப்பது நன்று. தொட்டில் நிலத்தில் வைக்குமாறும், ஆட்டிவிடுமாறும் குழந்தை நல்ல விதமாகத் தூங்குவதற்குப் போதுமனதாகவும் இருப்பது சிறப்பு.

குழந்தை பிறந்து நாற்பத்தெட்டாவது நாள் தொட்டில் பரிசளிக்கலாம். அதுவரையிலும் குழந்தை அம்மாவின் அரவணைப்பில் தூங்குவதே சுகம். குழந்தைக்குத் தொட்டில் வழங்கும் விழாவை நல்லதொரு நாளில், இரவு வேளையில் நிகழ்த்தலாம். முதன்முதலில் குழந்தையை தொட்டிலிடும் நிகழ்ச்சியில் வீட்டில், அறையில், நெய் தீபங்கள் ஏற்றுவது சிறப்பு. மின்சாரத்தை சற்றே நிறுத்தி வைக்கலாம். குழந்தை அறையில் பத்து தீபங்கள் இடம் பெறலாம். தொட்டிலின் மெத்தைமீது வெள்ளைப் பட்டுத்துணி போர்த்துவது சிறப்பு. தொட்டிலில் மணிகள் இடம் பெற்றிருப்பதும் நல்லது. தேவைப்படும்போது மணிகள் கழற்றி வைக்கக் கூடிய முறையில் இருப்பது நன்று.

ஆச்சார்யார்கள் அழகுக் குழந்தை சுகமாய்த் தூங்குவதற்கு பெருந்தந்தையாம் பிரம்மனே அளிக்கும் அழகிய பரிசாக இதைக் கருதி, நாலாயிரத் திவ்யபிரபந்தத்தின் பெரியாழ்வர் பாடிய - மாணிக்கம் கட்டி - தாலாட்டுப் பாடல்களை குழந்தைக்குப் பாட வேண்டும். குழந்தையை தொட்டிலில் இட்டு தொட்டிலை ஆட்டிக் கொண்டே பாடுவது அழகு. கண்ணன் தாலாட்டின் பத்துப் பாடல்களையும் பாடி குழந்தையை வாழ்த்த வேண்டும். குலசேகராழ்வார் இயற்றியுள்ள இராமர் தாலாட்டுப் பாடுவதும் சிறப்பு. குழந்தைக்கு அமைதியான, இனிதான உறக்கம் கிட்ட வேண்டுமென்றும், பெருந்தந்தையரின் அருளாசிகள் பூரணமாகக் கிடைக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொள்ளலாம்.

பெண் குழந்தையெனில் மஞ்சள் பட்டுத்துணி போர்த்தலாம். பெண் குழந்தைக்கு மாணிக்கம் கட்டி தாலாட்டுக்குப் பதிலாக குமரகுருபரர் இயற்றிய சகலகலாவல்லி மாலையின் பத்துப் பாடல்களையும் பாடுவது சிறப்பு. குழந்தை அமைதியாகத் துயில் கொள்ளுமாறும், குழந்தைக்கு அன்னை கலைவாணியின் அருள் பரிபூரணமாகக் கிடைக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொள்ளலாம்.

புண்ணிய ஆச்சாரியார்களே, உலகின் அறிவை முன்னெடுத்துச் செல்வது எளிதல்ல. உலகை அறிவால் உயர்த்துவது எளிதன்று. அறிவை வளர்ப்பதும், அறிவைப் பெருக்குவதும் சாதாரணமன்று. நம் தந்தை பெரும் ஞானம்கொண்டு உலகை, உயிர்களைப் படைக்கிறார்.

நம் பெருந்தந்தையின் ஞானம் நாளும் வளரட்டும்..

உலகில் வாழும் உயிர்களுக்கு அன்பே பெரிது. அதுவே சிறந்தது. எனினும் உயிர்களை அடுத்தடுத்த நிலைகளுக்கு உயர்த்துவதற்கு அறிவே காரணமாகிறது. அறிவாலேயே மானுட வாழ்க்கை முன் நகர்கிறது. அறிவாலே உலகம் ஏற்றம் கொள்கிறது. பேரறிவு கொண்டே உலகம் விரிவாக்கப்படுகிறது. நம் தந்தை என்றும் அறிவை விதைப்பவர். ஞானத்தை வளர்ப்பவர். அன்பைச் சிறப்பிப்பவர். நம் தந்தையின் புகழ் ஓங்கட்டும்..

உலகினரே, உலகம் உய்வதற்கும், உயர்வதற்கும், மேலும் மேலுமெனப் பல்கிப் பெருகுவதற்கும் பேரன்னையாம் கலைவாணியின் அருள் பெரிது.

**அன்னையே அறிவு! அன்னையே ஞானம்! அன்னையே வெற்றி!**

அறிக மானுடரே! தெளிக தேவர்களே!

அன்னையைப் போற்றுக!!

நாடு செழிக்கட்டும்.. மக்கள் மகிழட்டும்.. தமிழ் வளரட்டும்..

அவனி அறிவால் சிறக்கட்டும்! அகிலம் அன்பால் நிறையட்டும்!

**பேரன்னையும் பெருந்தந்தையும் போற்றி!!**

# வாமனன்!



21. தமிழ் நிலத்தில் வாழும் நாயக்கர் குடியினர் நற்குணங்கள் கொண்டோர். அமைதியை விரும்புபவர்கள். வேளாண்மையில் கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள். கடுமையான உழைப்பாளிகள். பிற தமிழ்க் குடிகளோடு நல்லுறவு பேணுபவர்கள்.

சமீபகாலமாக தமிழ்நாட்டில் வாழும் நாயக்கர் சமூகத்திற்கு எதிராக குறிப்பாக, தெலுங்கு பேசும் மக்கள்மீது முகநூல் போன்றவற்றில் கடுமையான கருத்துக்களும், விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன. இது தவறு. தவிர்க்கப்பட வேண்டும். தெலுங்கு, கன்னடம் பேசும் மக்களும் நம் குடிகளே. பல நூற்றாண்டுகளுக்குமுன் அவர்கள் பேசியதும் தமிழே. காலமாற்றத்தில், சிறிது சிறிதாக தமிழ் உச்சரிப்பில் மாற்றங்கள் உருவாகி, பிறமொழிச் சொற்கள் கலந்து, பிறிதொரு மொழியாக தமிழ் மாற்றமடைந்திருக்கிறது. தெலுங்கும், கன்னடமும் தமிழின் பிறிதொரு வடிவங்களே. தமிழர் அவர்களைப் பிரித்துப் பார்க்கக் கூடாது. வேற்றுமையாக நினைக்கக் கூடாது. தமிழர் திராவிடர்களுக்குத் தாய் போன்றவர். பிள்ளை வெறுத்தாலும் தாய் வெறுப்பரோ. தமிழர் தாயுள்ளம் கொண்டோர். அது தொடரட்டும்.

மண் எல்லோருக்கும் சொந்தமானது, உரிமையானது. இதை ஒருபோதும் மறக்கலாகாது. பிறமொழி பேசுவோர் நல்ல விதமாகப் பிழைப்பதற்காக தமிழகத்திற்கு குடிபெயர்ந்திருக்கிறார். அன்னார்களால் தமிழ் நிலத்திற்கு நன்மையே சேரும். தமிழர் மொழியால் பிறரை வெறுப்பது அறிவுடைமையாகாது. பிறமொழி பேசுவோர் தமிழை வெறுப்பதில்லை. தமிழைப் பழிப்பதில்லை. தமிழைவிடத் தம் மொழியே சிறந்தது எனப் பதியவில்லை. அவ்வகையில் அவர்களைப் பாராட்டலாம். தம்மளவில் அவர்கள் தாய் மொழியை வழிவழியாகக் கடத்தி வருகின்றனர். அது அவர்களது பண்பாடு. அவர்கள் மொழியும் பூமியில் வாழ்வாங்கு வாழட்டுமே. தெலுங்கும், மலையாளமும், துளு, கன்னடமும் நம் மொழிகளன்றோ.

திராவிடத்தால் வீழ்ந்தோம் எனும் பரப்புரை தற்போது பரவலாகி வருகிறது. அதில் உண்மை உள்ளதா எனில் ஆம், ஓரளவிற்கு. திராவிடத்தால் வீழ்ந்த தமிழ்க் குடிகள் யார், வாழ்ந்த, வளர்ந்த தமிழ்க் குடிகள் யார் யார் என்பதையும் அறிய வேண்டுமல்லவா. திராவிடத்தால், திராவிட ஆட்சியால் தமிழகத்தில் வாழும் பட்டியலின் மக்களுக்குக் கிடைத்த பெருமைகள் யாவை? தெலுங்கு பேசும்

சமூகங்களிலிருந்து பலரும் அமைச்சர்களாக இருந்தனர். கட்சிகளின் மாவட்டத் தலைவர்களாக, மாநில அளவிலான பல்வேறு பொறுப்பாளர்களாக வைத்து அழகு பார்க்கப்பட்டனர். ஆயினும் தொல் தமிழ் குடிகளான பள்ளருக்கோ, பறையருக்கோ, மலைவாழ் மக்களுக்கோ இத்தகைய வாய்ப்பு ஒருபோதும் அளிக்கப்பட்டதில்லை. அதிகமான சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும், பட்டியல் சாதியாருக்கு நல்ல பதவிகள் அனுமதிக்கப்படவில்லை. அரசியல் அதிகாரம், அரசியல் பதவி, ஆட்சியதிகாரத்தில் எத்தகைய செல்வாக்குச் செலுத்தும் என்பதை அரசியல் நுட்பமறிந்தவர் நன்கறிவர். காவல் நிலையத்திற்கு போன் போட்டு நம்ம பையனுங்கதான் விட்டுடுங்க எனப் பேசும் அரசியல்வாதியின் சொல்லை காவலதிகாரிகளால் மீற முடியாது. நம்ம பையன்தான், இந்த போஸ்டிங்கைக் கொடுத்துடுங்க என ரெக்கமண்ட் செய்யும் அரசியல்வாதியை ஆட்சியாளர்களால் மறுக்க இயலாது. மிகுந்த தைரியமுள்ள ஆட்சியர்கூட அரசியல்வாதிகளிடம் சற்றேனும் தயங்குவார். அரசியல் அதிகாரம் அத்தகைய வலிமை கொண்டது. மதயானை போல் எனில் பொருத்தம்.

திராவிட ஆட்சியால் பெரிதும் பயனடைந்தவர் யார்? உயர் சாதியாரும் இடைநிலைச் சாதியாரும், தெலுங்கரும் எனில் மிகையாகாது. தெலுங்கரில் யார் எனில் நாயக்கர் சாதியைச் சுட்ட இயலாது. குறிப்பாக தமிழக ஊர்களில் பெரும்பான்மையாக வாழ்ந்து வரும் நாயக்கர்கள். தமிழக ஊர்ப்புறங்களில் வாழும் நாயக்கர் அரசியலிலோ, ஆட்சிப் பணிகளிலோ பெரியளவில் இடம்பெறவில்லை. அவர்கள் தற்போதும் வேளாண் குடிகளாகவே வாழ்ந்து வருகின்றனர். அவர்களிடம் நிலமிருப்பதால் இது அவ்வளவாக வெளியே தெரியவில்லை.

நாயக்கர் சாதியார் தாம் நாயக்கர் எனப் பெருமை பேசுகிறாரா? பிற தமிழ்ச் சாதியார் பேசும்போது அவரும் பேசுவார்தானே. முதலில் யார் பேசியது? உறுதியாக நாயக்கர் இல்லை. அவர்கள் நாங்கள் ஆண்ட பரம்பரை என ஒருபோதும் பேசவில்லை. சில தமிழ்க் குடிகள் தொல்காலத்திலிருந்து தாங்களே தமிழகத்தை ஆண்டதாகப் பேசுகிறார். உண்மையில் அவர்தான் ஆண்டாரா எனில் உறுதியாகத் தெரியாது. ஆனால் நாயக்கர் ஆட்சி புரிந்தது உண்மை. எந்தத் தமிழராலும் மறுக்க முடியாது.

தமிழர்தான் வெற்று அரசியலுக்காக ஆண்ட பரம்பரை பேச்சை முன்னெடுக்கிறார் எனில், நாயக்கரும் அவ்வாறே பேச வேண்டுமா? தமிழ் நிலத்தில்

நாயக்கர் ஆட்சிக்கு வந்தது அன்றைக்கிருந்த அரசியல் நிலையாலே. இசுலாமியரின் முரட்டு வீரத்திற்கு ஈடுகொடுக்க முடியாமலேயே விஜயநகரப் பேரரசு, தமிழ்நிலம் நோக்கி நகர்ந்தது. அவ்வாறு நகர்ந்தது மிகச் சிறப்பான அரசியல் முன்னெடுப்பு. ஆட்சியாளர்கள் பல்வேறு கோணங்களிலும் சிந்திப்பர் என்பதற்கு விஜய நகரத்தின் மதுரை நீட்சி அழகான சான்று. நாயக்கரின் ஆட்சி விசய நகரத்தின் நீட்சிதான். நாயக்கர் கொடுங்கோலராக ஆட்சி புரியவில்லை என்பது உறுதி. இருந்திருந்தால் நிச்சயம் வரலாற்றில் பதிவாகியிருக்கும்.

இம்மண்ணில் அரச மரபுகள் இருந்த காலத்தில், அரசரை வென்றால், மொத்த நாடே சொந்தமாகும் என்பதே நியதியாகக் கடைபிடிக்கப்பட்டிருக்கிறது. மதுரையிலிருந்த சுல்தானை விஜய நகரம் வென்றது. தமிழ் நிலம் அவருக்குச் சொந்தமாகியது.

தமிழ் நிலத்தில் வாழும் நாயக்கர் சமூகத்தினர் தாங்கள் ஆண்ட பரம்பரை எனப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். ஆண்டது வரலாற்றில், பாடப்புத்தங்களில் இடம் பெற்றிருக்கிறது. வரலாறு மறைக்கப்படவில்லை. தமிழர் மறைக்கவில்லை. பல தமிழ்ச் சாதிகள் வாழும் ஊரில், நாங்க ஆண்ட பரம்பரை, நாங்க அடக்கி ஆண்டோம், இனியும் அடக்கி ஆள்வோம் எனப் பாடல்கள் போட்டால், ஊர் நடுவில் பேனர்கள் வைத்தால், தமிழர் என்ன நினைப்பார்? நாயக்கர் யாரை அடக்கி ஆண்டார்? தமிழர்களையா? தமிழர் மனங்கள் மாறிக் கொண்டிருப்பதை நாயக்கர் உணர வேண்டும். தமிழ்ச் சாதிகள் எல்லாம் தமிழராய் திரண்டெழுத்து வருகிறார். அன்றைக்கிருந்த அரசியல் வேறு. தற்போதைய தமிழ் நிலத்தின் அரசியல் வேறு.

இந்தியா முழுவதையும் நாங்கதான் கட்டி ஆண்டோம், நாங்கள் நினைத்தால் இனியும் ஆள்வோம், நாயக்கன்டா. என்ன பேனர் இது, அதுவும் தமிழ் நிலத்தில். தவிருங்கள் நாயக்கர்களே. பேனரைப் பார்க்கும் தமிழர் மனம் சற்றேனும் குறுகுறுக்கும். தமிழின் வேந்தர்கள் பெருமை மிகுந்தோர். வீரத்தில் சிறந்தோர். இது அவர்கள் நிலம். மூவேந்தரும் தடம் பதித்த மண்ணிது. நினைவில் கொள்க.

தமிழர் அறிய வேண்டியது நாயக்கர் நம்மவர், நம் உறவு. பிரித்துப் பார்க்க வேண்டாம். ஒருபோதும் பகைமை கூடாது. நிலம் அனைவருக்கும் பொது. நாயக்கரும் இந்நிலத்திற்கு உரியவரே. உரிமையானவரே. அவரை வெளியிலிருந்து வந்தவராக ஒருபோதும் பேசக் கூடாது. அப்படிப் பேசுவது

குற்றமாகும். இதை தமிழர் நினைவில் கொள்க. நாயக்கரை, பிற மொழியினரை, அனைத்திலும் அரவணைத்துச் செல்க. இங்கு வாழும் பிறகுடிகள் அனைவருக்கும் இதுவே தாய்வீடாகட்டும்.

தாய்வீடான தமிழ்நிலத்தில் வாழும் பிறமொழியினர் ஒருபோதும் தமிழைப் பழிக்காதீர். தமிழருக்கு தம் உயிரினும் மேலானது தமிழ். தமிழர் தாயைப் பழித்தாலும் பொறுப்பர், தமிழைப் பழித்தால் பொறுக்கமாட்டார் என்பதே வரலாறு.

தேவேந்திர குலத்தார் நாயக்கராலேயே தமது நிலம் பறிபோனதாகப் பேசுகிறார், எழுதுகிறார். அது எந்தளவுக்கு உண்மை எனத் தெரியவில்லை. அப்படி எங்குமே பதிவாகவில்லை. அரசியலுக்காக, தமது செல்வாக்குக்காக, சில தமிழ்க் குடிகளை, குறிப்பாக தேவர் சமூகத்தை நாயக்கர் அரசு பயன்படுத்திக் கொண்டது. தேவரும் பயன் பெற்றார். அரசியலில், ஆட்சியதிகாரத்தைத் தக்க வைப்பதில், நிலைநாட்டுவதில், இப்படித்தான் நிகழும். ஆட்சி மாற்றம் சிலருக்குச் சாதகமாக அமையும். ஒரு சிலருக்கு பாதகமாகும்.

நாயக்கர், ரெட்டியார்கள், செட்டியார்கள் வாழும் ஊர்களை நோக்கினால் அவை முன்பு வெளியாக இருந்தது தெரிகிறது. தமிழ்க் குடிகள் வாழ்ந்த ஊர்களுக்கு இடையே, நாயக்கர் குடியிறுப்புகள், ஊர்கள், புதிதாகத் தோற்றம் பெற்றதாகத் தெரிகிறது. தமிழ்க் குடிகளிடமிருந்து நிலத்தை எடுத்ததாகவோ, குடிகளை விரட்டிவிட்டு அங்கே நாயக்கரைக் குடியமர்த்தியதாகவோ தெரியவில்லை.

முன்னர் என்ன நடந்தது என உறுதியாகத் தெரியவில்லை. உறுதியாகத் தெரியாமல் எதுவொன்றையும் பேசுவதும், எழுதுவதும் பிழையாகிவிடும். நாயக்கர் குடிகள் நல்லவர்களாக, நல்ல குணங்கள் கொண்டவராகவே இருக்கிறார். வரலாற்றில் அப்படியானதொரு அறப்பிழையை நிச்சயம் செய்திருக்க மாட்டார். உறுதியாக நம்பலாம்.

எது எவ்வாறாயினும் அது கடந்துபோன காலம். தேவேந்திரருக்கு இன்றே முக்கியம். நேற்றை அறியோம், நாளையைத் தெளியோம். நம்முடையது இன்று. என்றும், எக்காலத்தும்..

நாயக்கர் இன்று எப்படி இருக்கிறார்? தேவேந்திரரோடு பகைமை கொண்டுள்ளாரா? ஒன்றிரண்டு ஊர்களில் ஏதேனும் சில ஒன்றுக்குமற்ற காரணங்களுக்காக முரண்பாடுகள், வேறுபாடுகள் நிலவலாம். மற்றபடி, தேவேந்திரர் - நாயக்கர் உறவு சிறப்பானதாகவே இருக்கிறது. தேவேந்திரர்மேல் நாயக்கர் நன்மதிப்பு வைத்திருக்கிறார். உழவுத் தொழிலை முன்னிட்டு இரு குடிகளுக்குள்ளும் அழகான நட்புறவு நிலவுகிறது.

நிலத்தை உழுபவரே உழவர் எனில், நாயக்கர்குடி மிகச் சிறந்த உழவுக் குடியன்றோ. ஊர்களில் அவர்களிடம்தான் அதிகமான வண்டிமாடுகள் இருந்தன. நாயக்கர்கள் நிலங்களை உழுவதில் கெட்டிக்காரர்கள். விவசாயம் சார்ந்த வேலைகளில் சலிப்படையாதவர்கள்.

தமிழ் நிலத்தின் மருதக் குடிகள் தேவேந்திரர் எனில், தெலுங்கு நிலத்தின் மருதக் குடிகள் நாயக்கரன்றோ. மறுக்க முடியுமா. ஆந்திர தேசத்திலும் மருத நிலம் இருக்குமன்றோ. உலகின் எப்பகுதியில் மருதக் குடிகள் வாழ்ந்தாலும், மருத நிலம் சார்ந்து, நீர் சார்ந்து, பயிர்த்தொழில் சார்ந்து, ஒத்த, ஒரே மாதிரியான பண்பாடே கிளைத்தெழும்.

திணை சார்ந்து இருவரும் ஒரே குடிகள். உழவு சார்ந்து ஒரே குடிகள். பண்பாடு சார்ந்தும் ஒரே குடிகள். பிரித்துப் பார்க்கலாமா. இரு குடிகளும் விண்ணுக்குரியவரன்றோ.

முன்னர் நடந்ததை விடுத்து, இனிவரும் காலங்களில், தேவேந்திரர் - நாயக்கர் உறவு, தொலை தூரங்களுக்கு சேர்ந்தே பயணிக்கட்டும். மொழியால் நாம் தமிழர். மொழியால் அவர் தெலுங்கர், கன்னடர். பிற அனைத்திலும் நாம் ஒன்று. நம்மிடையே நல்லுறவு வளரட்டும், தொடரட்டும். உழவுக் குடிகளால் உலகம் மேலும் உயரட்டும், நீண்டு நெடிதுயர்ந்து ஓங்கட்டும், சிறக்கட்டும். மென்மேலும்..

தமிழகத்தில், தமிழ் நிலத்தில் எத்தனையோ சாதிகள் வாழ்கின்றன. நாயக்கரும் ஒரு சாதியாக வாழட்டும். பிற தெலுங்கு, கன்னட, மலையாள மக்களும் நன்றாக வாழட்டும். நாம் அனைவரும் மனிதர்கள்தானே. இந்திக்காரருக்கும் இங்கு இடமிருக்கட்டும். வரும்காலங்களில் தமிழர் மனது போல் தமிழர் நிலமும் பெரிதாகும்.

**தமிழ் உலகின் அனைத்து மனிதருக்கும் நல்வாழ்வு நல்கும்.. உறுதியாக.**

தமிழ் நிலத்தில் தேவேந்திரரும், நாயக்கரும் வாழும் ஊர்களில், நாயக்கர் சமூகத்தின் திருமணத்திற்கு தேவேந்திரர் சார்பில் சிறப்புச் சேர்க்க வேண்டும். மணமகளுக்கு அழகியதொரு நூல் சேலையும் (கைத்தறி), மணமகனுக்கு பட்டில் வேட்டியும், துண்டும் பரிசளிக்க வேண்டும்.

ஒன்பது தட்டுக்களில் ஒன்பது நவதானியங்களை மணமக்களுக்கு சீரளிக்க வேண்டும். அரிசி மரக்கால் அளவிலும், பிற தானியங்கள் இரண்டு படியாகவும் இருப்பது நல்லது. அவர்களது வழமைப்படி, திருமணம் முடிந்தபின், மணமக்களை கிழக்கு நோக்கி நிற்க வைத்து, அவர்களைச் சுற்றி ஒன்பது நவதானியத் தட்டுக்களையும், பூக்கள், பழங்கள், மஞ்சள் குங்குமம் போன்ற மங்கலப் பொருட்கள் ஒரு தட்டிலும், பத்து தேங்காய்கள் ஒரு தட்டிலும், உடைகள் ஒரு தட்டிலுமாக மொத்தம் பதினான்கு தட்டுகள் மணமக்களைச் சுற்றி இடம்பெற வேண்டும்.

மணமக்களுக்கு மஞ்சளரிசி தூவி, திலகமிட்டு வாழ்த்த வேண்டும். ஒரு தட்டில் பத்து நெய்விளக்குகள் ஏற்றி, ஸ்ரீராம ஜெயம் சொல்லி மணமக்களை வலமாக மூன்று முறை சுற்ற வேண்டும். திருப்பாவையின் முதல் பாசுரமும், முப்பதாவது பாசுரமும் பாடி, ஸ்ரீஇராமனையும், திருக்கண்ணனையும் போன்று உலகினைக் காக்கும் சிறந்த பிள்ளைகள் பிறக்கட்டும் என மகிழ்வோடு வாழ்த்த வேண்டும்.

நாயக்கர் தம்பதிகள் தேவேந்திரக் குடிகள் அளிக்கும் நவதானியங்களிலிருந்து கைப்பிடி எடுத்து முளைப்பாரி வைக்க வேண்டும். முளைப்பாரி வளர்ந்து ஒரு வாரம், பத்து நாட்களுக்குள்ளாக, தேவேந்திரர்கள் பரிசளித்த உடைகள் அணிந்து முளைப்பாரியோடு பெருமாள் திருக்கோவில் சென்று மணமக்கள் வழிபடவேண்டும். பின்னர் முளைப்பாரியை நீர் நிலைகளில் விட்டுவிடலாம்.

தமிழ் நிலத்தில் தமிழர் - தெலுங்கர் எனும் பிரிவினையைப் போக்கும் விதமாகவும், வருங்காலத்தில் இரு குடிகளிடையேயும் நட்பும், நல்லுறவும் நீடித்து வளரும் விதமாகவும், நாயக்கர் சமூகத்தினர், தாம் வாழும் ஊரிலுள்ள பிற சமூகத்தவரின் பிள்ளைபேறு அடைந்த பெண்ணுக்கு அமுதூட்டும் சடங்கொன்றை மேற்கொள்வது நன்று. தமிழர் அவர்கள் வழக்கப்படி கட்டுச்சோறு நிகழ்ச்சியை

நடத்திக் கொள்ளலாம். அதற்கு முன்பாக நாயக்கர் சார்பாக அன்னமிடும் சடங்கை மேற்கொள்ளலாம். பெண் வெளியூரிலிருந்து மகப்பேறுக்கு தாய் வீட்டிற்கு வந்திருந்தாலும், இத்தகைய அன்னமிடும் சடங்கைச் செய்வது சிறப்பே. ஊரின் அனைத்துப் பெண்களுக்கும் ஏற்றாற்போல் ஆண்டிற்கு இருமுறை இந்நிகழ்வை நடத்தவது சிறப்பு.

நாயக்கரின் அமுதூட்டும் விழாவில், அதிகமும் சிறுதானியங்களே இடம் பெற வேண்டும். திணை, கேழ்வரகு, வரகு, சாமை, குதிரைவாலி, கம்பு, சோளம் போன்ற சிறுதானிய வகைகளில், வகைக்கு இரண்டு வகையான அன்னங்கள் செய்ய வேண்டும். அனைத்து வகைகளிலும் தோசை செய்து கொள்ளலாம். இனிப்புத் தோசை செய்யலாம். காரத் தோசை செய்யலாம். இட்லி செய்யலாம், பனியாரம் முடியுமெனில் அதுவும் செய்யலாம். ஏழு வாகைத் தானியங்களில் பதினான்கு வகை அன்னங்கள் இடம்பெற வேண்டும். அரிசிச் சோற்றில், தேங்காய், புளி, லெமன், தயிர் அன்னங்கள் இடம் பெறலாம். இவைதான் என்றில்லை. அரிசியில் நான்கு வகை அன்னங்கள், கோதுமையில் இருவகையான இனிப்புகள் என மொத்தம் இருபது வகையான அன்னங்கள், அவற்றிற்கேற்ற தொடு கறிகள், சட்னி வகைகளை செய்து கொள்ளலாம். எவ்வளவு செய்யலாம் என்பதை நாயக்கர்களே கலந்து பேசி முடிவெடுக்கலாம். பெண்ணுக்கு மட்டும் என்றில்லாமல் அவரது உறவினர்களுக்கும், சுற்றத்தாருக்கும் என சற்றே கூடுதலாகச் செய்வதும் நன்று.

அன்னங்களை ஓலைப் பெட்டியிலோ, மூங்கில் பெட்டியிலோ எடுத்துச் செல்வது சிறப்பு. முன்னர் கடகாப் பெட்டி எனும் ஒருவகைப் பெட்டி இருந்தது. அது கிடைத்தால் மிகவும் நன்று. அன்னங்களை பெட்டிகளில் இட்டு, அவற்றை பருத்தித் துணியால் சுற்றிக் கொள்ளலாம். அன்னங்களை மகப்பேற்றுப் பெண்ணின் இல்லத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லலாம். அன்னங்களோடு பூத்தட்டும், பழத்தட்டும், மங்கலப் பொருட்கள் தட்டும், வளையல்கள் தட்டும் எடுத்துச் செல்வது மிகச் சிறப்பு.

கருவுற்றிருக்கும் பெண், அன்னங்கள் ஒவ்வொன்றிலும் கொஞ்சமாவது உண்பது நன்று. பெண்ணுக்குச் சம்மதமெனில் நாயக்கர் பெண்கள் கொஞ்சம் அன்னமெடுத்து ஊட்டி விடுவதும் நன்று. தாய் - சேயை வாழ்த்தும் விதமாக, நாயக்கர் பெண்கள் பாடல்கள் பாடலாம். சாமி பாடல்கள் பாடலாம். தெலுங்கிலும் பாடல் இடம்பெறுவது கூடுதல் சிறப்பு. மகப்பேறு எளிதாக இருக்கவும், பிறக்கும்

குழந்தை அறத்தைப் பேணுமாறும், உலகம் மேலும் சிறக்குமாறும் அன்புத் தந்தையாம் சீதாராமனை வேண்டி அழகியதொரு பாடல் பாடலாம். இப்பாடலை நாயக்கரே இயற்றி, வழிவழியாகக் கடத்தியும் வரலாம். பாடல் தமிழிலும், தெலுங்கிலும் இருப்பது நன்று.

கரிசலில் பயிர்த்தொழிலை சிறப்பாக முன்னெடுத்து வரும் நாயக்கர்கள் சிறுதானியங்களையும் பெருக்க வேண்டும். சிறுதானியங்களை நாயக்கர் சமூகம் வழிவழியாகப் பாதுகாத்து வரவேண்டும். பெண்ணுக்கான அமுதூட்டும் நிகழ்வில் ஏழு தானியங்களும் இடம்பெற வேண்டும். ஊர்வலம் தொடங்கும்முன் அனைத்து சிறுதானியங்களிலும் அமுது படைக்கப்பட்டுள்ளதா என்பதை நாயக்கர் சமூகத்தின் மூத்தோர் ஒருவர் உறுதி செய்ய வேண்டும். அவர் கேட்க, கூட்டத்தினர் ஆம் எனச் சொல்வது சிறப்பு.

நாயக்கர் குடியின் அமுதுண்ட தாய் தம் கொடிவழியினருக்கு அச்சிறப்பை சுட்டிக்காட்டுவது நல்லது. ஏதேனும் சூழ்நிலையில் நாயக்கரோடு பிணக்கு நிகழுமேயானில், அன்னார்கள் தமக்கு அன்னமிட்டவர்கள் என்றும், தமிழர் உப்பிட்டவரை உள்ளவும் நினைப்பார் என்பது முன்னோர் சொல் என்பதையும் நினைவுட்டுவது நன்று. ஆம். தமிழர் தமக்கு உப்பிட்டவரை, தமக்கு நன்மை செய்தவரை, எப்போதும் நினைவில் கொண்டிருப்பார். அதற்கு நன்றிக் கடனும் செய்வார். திண்ணமிது..

மக்கள் சமூகமாகக்கூடி வாழும்போது தமக்குள் வேறுபடுவது இயல்பு. பிணக்குகள் உருவாகும். ஏதேனும் தொடர்பாக சச்சரவுகள் தோன்றும். எல்லோரும் ஒன்றுபோலவே இருக்க மாட்டார்கள். மனிதருள் வேறுபாடு எழத்தான் செய்யும். வேறுபாடு எதை முன்னிட்டு என்பதே முக்கியம். அது சாதியை, மதத்தை முன்னிட்டு எனில், அது கூடாது. அது தவறு.

வேறுபாடும், பிணக்கும் பகையாக மாறாமல் பார்த்துக் கொள்வது மனிதரின் பொறுப்பு. வேறுபாடுகளை ஊர்ப் பெரியவர்கள் ஒரு குழுவாக இணைந்து தீர்த்து வைக்கலாம். பிணக்குகளைக் களையலாம். இளையோருக்கு அறிவுறுத்தலாம். கடந்த கால வரலாற்றை நினைவுறுத்தலாம். வேறுபாடும் பிணக்கும் வளர்ந்தால் மானுட வாழ்வு அதன் மகத்துவத்தை இழக்கும் என்பதைச் சுட்டிகாட்ட வேண்டும்.

மனிதர்கள் கூடி வாழ்வதிலேதான் பெருமை இருக்கிறது. நாம் கூட்டாக வாழ்வதே சிறப்பு. நாம் கூடி வாழ்ந்தால் கோடி நன்மைகள் உண்டாகும்.

நாயக்கர்கள் எந்தச் சாதி தமிழரோடும் சாதி குறித்துப் பேச வேண்டாம். உரையாட வேண்டாம். நாயக்கருக்கு அனைத்துத் தமிழரும் ஒன்றாகட்டும். முடிந்தால் தமிழ்ச் சாதிகளை இணைக்கும் பாலமாக நாயக்கர்கள் புகழ் பெறட்டும்.

நாயக்கர் சமூகத்தவர் தம்சாதி எனப் பார்க்கக் கூடாது. சாதிபார்த்து ஓட்டளிக்கக் கூடாது. நல்லோரைத் தேர்வு செய்ய வேண்டும். தமிழ் நிலத்தில் தமிழர் தெலுங்கர் எனும் போட்டி ஒருபோதும் உருவாகக் கூடாது. நாயக்கர்கள் இதில் கவனம் கொள்க.

**வாழிய சுந்தரத் தெலுங்கு!**

தமிழ் நிலத்தில் நாயக்கரின் புகழ் சிறக்கட்டும்.

பயிர்த் தொழில் செழிக்கட்டும்..

மாரி பெய்யட்டும்; மண் மணக்கட்டும்.

**வாழ்க மக்கள்; வாழிய உலகம்!**

## ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்கு மங்களம்; சீத்தம்மா வாழி!

22. இந்தியாவை ஆறு நூற்றாண்டுகள் அடக்கி ஆண்டோம், தலைமை ஆணையிட்டால் மறுபடியும் ஆள்வோம் என்கிறது இசுலாமியரின் பதாகையொன்று. தலைமை ஆணையிட்டால் எனில், அது அல்லாவைக் குறிக்கிறதா அல்லது பதாகை வைத்தவரின் அரசியல் தலைமையைக் குறிக்கிறதா எனத் தெரியவில்லை.

இசுலாமியர் இந்தியாவை அடக்கி ஆண்டாரா? இந்தியர்கள் அடங்கிக் கிடந்தார்களா? இந்த வரலாற்றுக்குள் செல்வது தேவையில்லாதது. வரலாற்றை மிகவும் நுனிக்கி ஆராயக் கூடாது. வரலாற்றை போஸ்ட் மார்ட்டம் பண்ணக் கூடாது. வரலாறு என்பது கடந்த காலத்தை சற்றே நினைவில் கொள்வதே. வந்த பாதையை மறக்கக் கூடாதல்லவா. மீண்டுமொருமுறை அதே பாதையில் பயணிக்கக்

கூடாதல்லவா. வரலாற்றை ஓரளவுக்குத் தெரிந்திருப்பது அவசியம். மனிதருக்கு வரலாற்றுணர்வு வேண்டும். எனினும் வரலாற்றைத் தோண்டித்தோண்டி பின் செல்லத் தேவையில்லை. அது நடந்து முடிந்த ஒன்று. வரலாற்றை அறிவது பாடம். கற்றல். தவறுகளைக் களைதல், முன் நகர்தல்.

இன்றைக்கு இசுலாம் எப்படி இருக்கிறது? இதுவே நாளைய வரலாறு. நேற்றைக்கு இசுலாம் எப்பபடி இருந்தது? நபி பெருமகனாரின் இசுலாம் எப்படி இருந்தது? நபிகளார் இசுலாம் மார்க்கத்தை எதை ஆதாரமாகக் கொண்டு, எதை அடிப்படையாகக் கொண்டு, எதை அறமாகக் கொண்டு கட்டினார்? நபிகளாரின் இசுலாம்தான் முன்னெடுக்கப்பட்டிருக்கிறதா? பெருமானார் அன்பால் இழைத்து இசுலாமைக் கட்டியிருக்கிறாரா அல்லது வீரமே பெரிதென்று கட்டமைத்திருக்கிறாரா?

இசுலாம் எனில் அன்பு. இசுலாம் எனில் நல்வழி, அன்பு வழி, அமைத்திக்கான வழி. எந்த ஒன்றுமே தோன்றும்போது, உருவாகும்போது, சிறந்ததாகவே இருக்கிறது. காலப்போக்கில் சுயநலவாதிகளும், பேராசைக்காரர்களும், பித்தர்களும், அந்த ஒன்றை தமக்கானதாக மாற்றிக் கொள்கின்றனர். அனைத்தையும் அதன் மறுபக்கத்திற்கே தள்ளுகின்றனர். எதிர்ப் பக்கத்தையே முன்னிறுத்துகின்றனர். ஒப்பு நோக்க இணையம். இணையம் மானுட சமூகத்திற்கு அருங்கொடை. பெருங்கூட்டம் அதை எதற்குப் பயன்படுத்துகிறது? காமம், பணத்தாசை, பண மோசடி, வெடிகுண்டு எப்படிச் செய்வது? இணையத்தை மனிதர் எப்படி, எதற்குப் பயன்படுத்துகிறார் என்பதே முக்கியம்.

இன்றைக்கு தமிழ் நிலத்தில், பாரத மண்ணில், பூமிப் பந்தில் இசுலாம் எப்படி இருக்கிறது? எதை முன்னிறுத்துகிறது? எத்திசையில் நகர்கிறது? நபிபெருமகனாருக்கு இறக்கப்பட்ட, “அளவற்ற அருளாளன் அல்லா” எனும் ஞானம் உண்மைதானா? உலகம் ஒப்புமா?

நிகரற்ற கருணையுள்ளவன் அல்லா எனில், அவன் பெயரால் குழந்தைகளும், பெண்களும், ஏதுமறியா மனிதர்களும் வெடித்துச் சிதறுவதெப்படி? அளவற்ற அன்புள்ளவன் அல்லாவா? நபி பெருமானாரின் சொல் பிழையா? சாலையில் நடந்து செல்லும் ஒன்றுமறிய பொதுமக்கள் வாகனமேற்றி தரையோடு தரையாக நசுக்கப்படுவது எதற்கு? அல்லா பேரருளாளன் எனும் நபிமொழி தவறா?

பெருமானாரின் வாக்கில் அல்லா பெருங்கருணை கொண்டவன். அவன் பெயரால் முகமூடி அணிந்த மூடர்கள் அப்பாவி மனிதர்களின் கண்ணைக்கட்டி கழுத்தை அறுக்கிறார்கள். இவர்கள் இசுலாமியர்தானே. நபி வழியினரர்தானே. அதனால்தானே கோவையில் இவர்கள் கொடி பறக்கவிடப்படுகிறது. காசுமீரத்தில் இவர்கள் கொடி தூக்கிப் பிடிக்கப்படுகிறது. நபிகள் நாயகம் எவ்வளவு பெருமை யானவர்? அல்லா எத்தனை பெரியவன்? தமிழ் நிலத்தின் இசுலாமியர் இனிப் பேச முடியுமா?

அடக்கி ஆண்டார் எனில் அன்பாலா, அறிவாலா அல்லது வீரத்தாலா? வீரத்தால் எனில் எது வீரம்? நேருக்கு நேர் நின்று பொருதுவதே பாரதத்தின் வீரம். நேர்கொண்ட பார்வையில் தெரிந்து விடும் யார் வீரனென்று. இந்தியர் வீரத்திற்குத் தலை வணங்குவர். ஏனெனில், வீரர் மக்களைக் காப்பவர். மண்ணைக் காப்பவர். மக்களை மண்ணைக் காத்த வீரரை பாரத மண் தெய்வமாகக் கும்பிடும்.

குண்டு வைப்பது வீரமா? ஒருவர் எதிர்த்து ஆயுதம் தூக்காதவரை அவர் எதிரியல்லவே. அப்பாவி பொதுமக்களைக் கொல்வது கோழைத்தனமல்லவா. கோவை குண்டு வெடிப்பு தமிழக இசுலாமியருக்கு மாபெரும் கறை. மாபெரும் அறப்பிழை. இலங்கைக் குண்டு வெடிப்பு எதில் சேரும் இசுலாமியரே? கோவைக்கும் தொடர்பிருப்பது எதனால்? இது தமிழ் நிலமல்லவா. இது மத நல்லிணக்கம் பேணும் மண்ணல்லவா. பெருவாரியான தமிழர், தமிழ் அரசியலாளர், இசுலாமியரைத்தான் தலைக்குமேல் தூக்கிப் பிடிக்கிறார். இதுவா அவருக்குச் செலுத்தும் நன்றி.

இசுலாமியரின் செயல்களே நபிக்குப் பெருமை சேர்க்கும். அல்லாவுக்குப் புகழ் கூட்டும். இசுலாமியரின் செயல்களுக்கு அல்லா பொறுப்பாக மாட்டார். இசுலாமியரின் அனைத்துச் செயல்களுக்கும் முகம்மது நபியே பொறுப்பு. அல்லாவைக் காட்டியது நபி. அல்லாவின் வேதத்தை இறக்கியது நபி. இசுலாத்தை உருவாக்கியது நபி. படைத்தவனே பொறுப்பு. இசுலாத்தைப் படைத்தது நபி பெருமகனார். இசுலாமியர் நபிகளுக்கு, அவரது நம்பிக்கைக்கு, அவரது இறைவேதத்திற்கு, அல்லா பெரிதினும் பெரியவன் எனும் அவரது ஞானத்திற்குப் புகழ் சேர்க்கப் போகிறாரா அல்லது நபிகளாரின் பெயருக்கு சிறுமை செய்யக் காத்திருக்கிறாரா.

நபிகள் அல்லாஹ்வை நம்பினார். இசுலாமியர் நபிகளை நம்புகிறார். இசுலாமே நம்பிக்கையால் கட்டப்பட்டதே. அல்லா அன்பில் பெரியவன் என்பதே நம்பிக்கை. அல்லா சமாதானத்தில் சிறந்தவன் என்பதே நம்பிக்கை. நபிகள் இறுதி இறைத்தூதர் என்பதே நம்பிக்கை. நபிகளாரின் நம்பிக்கை ஒருபோதும் பொய்க்காது. இசுலாமிய சொந்தங்களே, நம்புங்கள். நம் நபி பெருமானாரின் நம்பிக்கை பொய்க்காது.

இசுலாம் இனிய மார்க்கம். மனிதர் நல்வாழ்விற்குப் போதுமான மார்க்கம். மனிதர் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு ஏற்ற மார்க்கம். மனிதர்களை சமத்துவமாய்ப் பார்க்கும் மார்க்கம். மனிதரை ஏற்ற தாழ்வின்றி நடத்தும் மார்க்கம். இது அன்பின் மார்க்கம். நபியின் மார்க்கம். மறவாதீர். உலகில் அன்பே பெரிது. அதனாலேயே நபி சொன்னார், இறைவன் மிகப் பெரியவன். பெரியவன் அன்பில். பெரியவன் கருணையில். தெளியும், கடைப்பிடியும்.

தமிழ் நிலத்தின் இசுலாமியர் நம்பிக்கைகொள்ள வேண்டியது, இது தமிழ் நிலம். மதத்தைவிட மனித நேயமே பெரிதென்பதைக் கடைபிடிக்கும் நிலம். மதம் என்னவெல்லாம் செய்யும் என்பதை அறிந்த நிலம். மதத்தைவிட மானுட அறத்திற்கே முன்னுரிமை கொடுத்த நிலம். இது தமிழ் நிலம். இசுலாத்தோடு மொழியால் உறவுடைய நிலம். வணிகத்தால் அன்பு கொண்ட நிலம். பண்பாட்டால் இணைந்த நிலம். தமிழ் நிலத்தில் நபிகளாரின் அறத்தைப் பேணுக. தமிழ் நிலத்தில் மதவெறி வேண்டாம். எப்போதும் கூடாது. இது அன்பின் நிலம், நல்நிலம், நன்மை செய்யும் நிலம்.. அறிக.

இசுலாமியர் பெரியாரிஸ்ட்டுகளை ஆதரிக்கிறார். எதற்கு? திராவிடக் கட்சியாரின் முன்னெடுப்புகளில் பெருவாரியாகக் கலந்து கொள்கிறார். ஏன்? இந்துக்களை, இந்து மதத்தைக் குறை கூறி, குறைத்து, திட்டிப் பேசும் அரசியலாளர் பின்னால் அணி திரள்கிறார்? எதனால்?

எதனால், எந்த உண்மையைத் தெளிந்து, எந்தத் தத்துவத்தின் அடிப்படையில், இசுலாமியர் தமிழ் நிலத்தின் கடவுள் மறுப்பாளர்களை ஆதாரிக்கிறார்? கடவுள் மறுப்பை வழிமொழிகிறார்? இசுலாமியர் இறைவன்மீது நம்பிக்கை கொண்டிருக்கிறார்தானே. அல்லாவை நம்புகிறார்தானே. இசுலாமியர் நம்புகிறார், இறைவன் இருக்கிறான். இன்னொரு சாரார் இறைவன் இல்லை எனில்

ஆதரிக்கிறார். இசுலாமியர் இறைவன் மட்டுமே இறைவனா? இந்துக்கள் இறைநம்பிக்கை கொள்ளக் கூடாதா. அவர்களுக்கென்று இறைவன் இருக்கக் கூடாதா. அவரவர் நம்பிக்கை அவரவருக்கு. இசுலாமியர் நம்பிக்கை அல்லாஹ் இறைவன். இந்துக்களின் நம்பிக்கை உலகில் எத்தனையோ இறைவன்கள். இசுலாமியர் ஓரிறையை நம்புகிறார். இந்துக்கள் இறைகளை நம்புகின்றனர். அது நம்பிக்கை எனில் இதுவும் நம்பிக்கையன்றோ.

இந்துக்கள் யார்? இந்துக்கள் என்போர் யார்? தமிழ் நிலத்தின் இந்துக்கள் யார்? பெரியார் கொள்கைக்காரர்கள் கடவுள் மறுப்பை முன்னெடுக்கிறார் எனில், அதற்குப் பல்வேறு காரணிகள் உள்ளன. ஒருவிதத்தில் அப்படியான முன்னெடுப்புகளும் தேவையே. அவர்கள் கடவுளை மறுப்பது இங்குள்ள சமத்துவமின்மையால். ஏற்றதாழ்வான சமூக அமைப்பின்மீது கொண்ட கோபத்தால். இங்குள்ள சாதியமைப்பை, சாதியக் கட்டுமானத்தை உடைப்பதற்காக அவர் கடவுள் மறுப்புக் கொள்கையைக் கையிலெடுக்கிறார். தமிழ் நிலத்திலுள்ள சமூகக் கோளாறுகளைச் சரிசெய்யவே அவர் கடவுள் மறுப்பை வளர்க்கிறார். அவர் புரிதல், ஞானம், சமூகம் ஏன் சமமாக இல்லை. இறைவன் உலகைப் படைத்தான் எனில் மனிதர்களை ஏன் இத்தனை ஏற்றதாழ்வுகளோடு படைத்துள்ளான். இறைவன் ஏன் ஒருவரை செல்வந்தராகவும், ஒருவரை ஏழையாகவும் படைக்கிறான். அவர்கள் கர்மா, முற்பிறவிக் கொள்கையை ஏற்பதில்லை. பெரியார்காரர்களின் கடவுள் மறுப்பு கடவுள்மேல் கொண்ட கோபமே. நாளைக்கே இச்சமூக அமைப்பு மாற்றம் கண்டுவிட்டால், மனிதர் அனைவரும் சமமென்றாகிவிட்டால், அவர்களது கடவுள் மறுப்பு என்னாகும்? அப்படி உண்டாக வேண்டும் என்பதே அவர்களின் கனவு, இலட்சியம். அதற்காகவே அவர்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார்கள்.

இசுலாம் மதத்தாருக்கும், பெரியார் வழித்தோன்றல்களுக்கும் என்ன உறவு? இசுலாமியர் பெரியார் மேடையில் எதற்குப் பேசுகிறார்? பேச்சிலும் தரமில்லை. இவையெல்லாம் தமிழ் நிலத்தில் தவிர்க்கப்பட வேண்டும். இசுலாமியர் இறைமறுப்பைப் பேசுவாரானால் அவர் முதலில் இசுலாம் மார்க்கத்திலிருந்து வெளியேற வேண்டும். எந்த இறைவனும் இல்லை என்பதே அவரது தெளிதலாக இருக்க வேண்டும். மாறாக அல்லா இருக்கிறான், இந்துக்களின் இறைவன் இல்லை என்பது, இம்மண்ணில் மதநல்லிணக்கத்தைக் குலைக்கும். மக்கள்

பிளவுபடுவார்கள். மக்களைப் பிளவுபடுத்தியே வயிறு வளர்க்கும் சுயநலக் கூட்டம் பிளவைப் பெரிதாக்கும். பகையை வளர்க்கும். இசுலாமியர் தெளிதல் வேண்டும்.

இந்துக்களின் இறைவனை இசுலாமியர் விமர்சிக்க வேண்டாம். நபிகளாரைப் பற்றி ஒரு வார்த்தை விமர்சிக்க முடியுமா? இசுலாமியர் கொதித்தெழுகிறாரல்லவா? இசுலாமியருக்கு ஒரு நியதி, இந்துக்களுக்கு ஒரு நியதி இருக்கக் கூடாது. இந்துக்களை, இந்து மதத்தை, இந்துக் கடவுள்களை, இந்து மதத்தாரே பார்த்துக் கொள்வார். தேவையெனில் அவர் திட்டுவார். இல்லை என்பார். பொய் என்பார். மூட நம்பிக்கை என்பார். இவர் திட்டுவதே அவர் சிந்திக்க வேண்டும் என்பதற்கே.

யார் இந்து? இந்துக்களிடமிருந்த பிளவாலே, ஒற்றுமையின்மையாலேதான் இசுலாமியர் இந்திய மண்ணில் காலூன்றினார். இந்திய நிலத்தின் கடவுளை நம்பும், கடவுளை வழிபடும் அனைவரும் இந்துக்கள் அல்ல. அப்படி சுட்டப்படுகிறாரேயொழிய அவரைப் பிற எதிலும் சேர்ப்பதில்லை. இந்துக்கள் என்பதே வெறுமே கூட்டத்திற்கு ஆள் சேர்ப்பதே. எளிய இந்திய மக்கள் மதம் பார்ப்பதில்லை. மதத்தைப் பேசுவதில்லை. மதத்தை முன்னிறுத்துவதில்லை. பிற மதங்கள்மேல் காழ்ப்புக் கொள்வதில்லை. மதவெறி என்றால் என்னவென்றே அவர்களுக்குத் தெரியாது. உண்மையில் இந்து மதம், அதன் தத்துவம், அதன் வரலாறு, அதன் எதிர்காலம் போன்ற எது குறித்தும் அவர் ஆர்வம் கொள்வதில்லை. அவர்களது முன்னோர்கள் அவர்களுக்கான தெய்வங்களையும், கடவுள்களையும் சுட்டிச் சென்றுள்ளனர். முன்னோர் வழியில், அவர் சொல்லிற்குக் கட்டுப்பட்டு, தமது குலதெய்வங்களை, கடவுள்களை வழிபட்டு வருகின்றனர்.

யார் இந்து? இந்து மதத்தின் தத்துவங்களைத் தெளிந்தவரே இந்து. இந்து மதத்தின் சடங்கியல்களைக் கடைப்பிடிப்பவரே இந்து. இந்து என்பது ஒற்றைச் சொல்லாக இருந்தாலும், உண்மையில் இது ஒன்றல்ல. பலப்பல பிரிவுகள். எத்தனையோ கடவுள்கள். அவரவருக்கு அவரவர் வழி. சைவருக்கு சிவநெறி. வைணவருக்கு பெருமாள் வழி. இவரும் அவரும் இந்து எனச் சுட்டப்பட்டாலும் இருவரும் ஒன்றல்ல. பிராமணர் என்ற போதிலும் ஐயரும் ஐயங்காரும் ஒன்றல்ல. இசுலாமியருக்கு இந்து மதத்தைப் பற்றிய புரிதல் இருப்பது நல்லது. இசுலாமியருக்கு ஒருவரே இறைவன். இந்திய ஞானம் எதையும் ஒற்றையாகப் பார்ப்பதில்லை, இறைவன் உட்பட. அதுவே இந்து மதத்தின் சிறப்பு. பல்வேறு கடவுள்களாலேயே இந்து மதம் வளர்ந்து, பல்கிப் பெருகுகிறது.

உயர்சாதி இந்துக்களும், இசுலாமியரும் மதத்தீவிரத்தில் ஒருவருக்கொருவர் குறைந்தவரல்ல. மதப்பற்று மததீவிரமாக, மதவெறியாக, மாறிவருவதற்கு, முன்னெடுக்கப்படுவதற்கு இருசாராருமே காரணம். பாதிக்கப்படுவதோ எளிய மனிதர்கள். இருசாராரும் இதை உணர வேண்டும்.

இசுலாமியர் தெளிய வேண்டியது, இசுலாம் எளிய மார்க்கம். எளிமையான மதம். மனிதர் எப்படி வாழவேண்டும் என வழிகாட்டும் நெறி. மனிதருக்கு சரியான வாழ்வு வேண்டி பல்வேறு சட்டதிட்டங்களை வகுத்துள்ள மதம். உண்மையில் மதம் இதைச் செய், இதைச் செய்யாதே என அறிவுறுத்தாது. கட்டளை இடாது. செய்தே தீர வேண்டும் என்பதைக் கடமையாக்காது.

மதங்கள் பூமியில் தத்துவங்களை முன்னெடுக்கப் பிறந்தவை. மதங்கள் தத்துவங்களால் கட்டமைக்கப்பட்டவை. தத்துவ விசாரங்களால் கண்டடையப் படுபவை. மதங்கள் உண்மையைத் தேடிக் கண்டடைய வழி காட்டுபவை. எதையும் முடிவாகச் சுட்டாதவை. மதங்களுக்கு முடிவான முடிவு, இறுதி என எதுவுமில்லை. இருக்கவும் முடியாது. உண்மையெனில், இசுலாம் உள்ளிட்ட மேற்கு மதங்கள் தத்துவ மதங்களன்று. அவைகள் எந்தத் தத்துவத்தையும் பேசவில்லை, முன்வைக்கவில்லை. மனிதர்கள் நல்ல முறையில் வாழ்வதற்கான நெறிகள் மட்டுமே கொண்டுள்ளன. மாறாக, இந்திய மதங்கள் தத்துவங்களால், கருத்துக்களால் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. உலகம் ஒன்று, இறைவன் ஒருவனே எனில், அதை மறுப்பதற்கும், தெளிவதற்கும், சந்தேகிப்பதற்கும், மீறுவதற்கும், கிழக்கின் மதங்கள் சுதந்திரமளித்துள்ளன. மேற்கோ திட்டவட்டமாக மறுத்துவிட்டது. இந்திய மதங்கள் விசாரணைக்கு உட்பட்டவை. ஒன்றுதானா என்பதை அவரவரே கண்டடைய வேண்டும். நம்பிக்கையை இந்தியத் தத்துவத்தில் சோதித்துப் பார்க்கலாம். மேற்கில் அது முடியவே முடியாது.

மேற்கின் மதங்கள் முடிவுகளைக் கொண்டுள்ளன. இறைவன் ஒருவனே, அவனன்றி வேறு இல்லை, அவனே உண்மையான கடவுள். ஒருவன்தானா என்பதை எப்படித் தெளிவது? எதைக்கொண்டு நம்புவது? நம்பு என்கின்றன ஆபிரகாமிய மதங்கள். இந்திய ஞானமோ நம்பாதே எனக் கண்சிமிட்டுகிறது. தேடு என்கிறது. உண்மைதானா என்பதைச் சோதித்துப்பார் என்கிறது. மேற்கில் இறைவன் மட்டுமே இறைவன். வேறொருவர் இறைவனாக முடியாது. கிழக்கிலோ யார்

வேண்டுமானாலும் கடவுளாகலாம். அனைவரும் கடவுள்கள். உலகம் என்றால் என்ன எனும் ஞானம், கிழக்கில் ஒருவர் கடவுளாவதற்குப் போதும்.

நபிபெருமகனார் பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் கட்டமைத்த வாழ்க்கைநெறி இசுலாம். அன்றைக்கிருந்த வாழ்க்கைமுறைக்கு, அன்றைக்கிருந்த மனிதர் பண்பாட்டிற்கு, சமூக அமைப்பிற்கு ஏற்றவாறு இசுலாம் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. உண்மையில், நபிகள் அன்றைக்குக் கட்டமைத்த இசுலாம் நெறி, அன்றிருந்த சமூகக் கட்டமைக்கு மிகவும் சிறந்தது. நபிகள் முன்னெடுத்த அன்பும், நெறிமுறைகளும் போற்றுதலுக்குரியன.

இன்றைய உலகம் வெகுதூரம் முன்னேறி வந்துவிட்டது. வாழ்க்கை முறைகள் வெகுவாக மாறிவிட்டன. மக்களின் மனங்கள் மாற்றம் கண்டுள்ளன. உலகம் வேகமாக மாறிவருகிறது. மனிதர் கண்டடைந்த அறிவியல் ஞானம், விஞ்ஞான வளர்ச்சி, அனைத்தையும் அடியோடு மாற்றிவிட்டது. உண்மையில் மனிதர் நல்வாழ்விற்கு அறிவியலே போதும். அறிவியல் மதங்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது. அறிவியல் கடவுளை கேள்விக்கு உட்படுத்துகிறது. அறிவியலுக்குக் கடவுளே தேவையில்லை. அறிவியல் சுட்டுகிறது - நோய் வருவதற்குக் கடவுள் காரணமல்ல. நோயைப் போக்க எதற்கு இறைவனிடம் கையேந்த வேண்டும்? ஏன் பிரார்த்தனை செய்ய வேண்டும்? அறிவியல் நகைக்கிறது. மருத்துவர் இருக்கிறாரே அறிவில்லையா என மனிதரைத் திட்டுகிறது. நோய்க்குக் காரணம் நுண்கிருமிகள். அவற்றை அழித்தால் நோய் தீரும். அறிவியல் அனைத்து நோய்களுக்கும் தீர்வு வைத்துள்ளது. தீர்வு இல்லையெனில் அது தேடும், கண்டடையும். உறுதியாக. தேடலே அறிவியலின் சாதனை. தீர்வே அறிவியலின் மகத்துவம்.

அரேபியப் பாலையில் தாகத்தைத் தீர்த்தது அறிவியலன்றோ. நபிகள் காலத்து அரேபியர் ஒருவாய்த் தண்ணீருக்கு தவித்திருப்பார். பாலையில் நீர் தங்கத்திற்கு நிகரென இருந்திருக்கும். அன்றைக்கு பூமியைத் தோண்டியே தண்ணீர் பெற்றனர். பாலை மணலில் எவ்வளவு தூரம் கிணறு தோண்ட இயலும்? பூமியின் ஆழம்வரை துளைபோடலாம் என்பதைக் கண்டறிந்தது அறிவியல். உலக மானுடரின் தண்ணீர் தாகத்தைத் தீர்த்தது அறிவியலல்லவா. இன்றைக்கு அரேபியாவில் தண்ணீர் மழைபோல் கொட்டுகிறது. யார் காரணம்? பாலையில் பசும் புல்வெளிகள் அமைக்கப்பட்டிருப்பது யாராலே? கடல்நீரைக் குடிநீராக மாற்றுவது எது? உப்புத்தண்ணீர் சுத்தமான, தூய குடிநீராக மாற்றப்படுவது

அருஞ்சாதனையல்லவா. இனி மனிதர் தண்ணீருக்குக் கவலையின்றி இருக்கலாமன்றோ. அறிவியலுக்கல்லவா மனிதர் நன்றி சொல்ல வேண்டும். அரேபியாவின் செல்வச் செழிப்பிற்கு டீசல் இயந்திரம் கண்டுபிடித்த அறிஞரன்றோ காரணம். அறிவியல் அறிஞர்களின் உழைப்பிற்கு உலகம் நன்றிக்கடன்பட்டிருக்கிறது இசுலாமியரே.

மதங்கள் அறிவியலை மறுப்பதுபோல் நடிக்கின்றன. அறிவியலின் அத்தனை வாய்ப்புக்களையும், நுட்பங்களையும் அனுபவித்துக் கொண்டே அதை நகையாடவும் செய்கின்றனர் மதத்தார். குழந்தை வரம் வேண்டி கோவில்களில் அழுது, புரண்டு கொண்டிருந்த மனிதர்கள் கைகளில் அழகழகான குழந்தைகளை கொடுத்தது அறிவியல்தானே. மதங்கள் சிக்கலான, புரியாத மொழியில் பேசுகின்றன. அறிவியல் மிக மிக எளிய மொழியால் எழுதப்பட்டுள்ளது. மனிதர் தம்மை அதிநவீன மனிதராக ஆக்கிக்கொண்டே, வாழ்ந்துகொண்டே, மதங்களில் மட்டும் பழமையைப் பேணுகிறார்.

மதங்களை மாறாதவையாக, மாற்றக் கூடாதவையாக, என்றென்றைக்குமான உண்மைகளைக் கொண்டதாக, அனைத்திற்கும் தீர்வுகள் வைத்திருப்பதாக மனிதர் நம்புவது ஏன்? மதங்களில் சில வாழ்வியல் முறைகள் சுட்டப்பட்டுள்ளன. அவை எக்காலத்திற்குமான வாழ்வியல் முறைகளாகக் கொள்ள வேண்டுமா? சிறிது மாற்றம் செய்துகொண்டால் இறைவன் கோவித்துக் கொள்வானா? குடுமியும், தாடியும், முடியும் வளர்க்காவிட்டால் இறைவன் தண்டிப்பானோ? தமிழர் ஞானம் அழகாகச் சுட்டுகிறது - நீட்டலும் மழித்தலும் வேண்டாம். யாருக்கு? நேர் வழியில், அறவழியில் நடக்கும் மனிதருக்கு. தீதுக்கும் நன்றுக்கும் அவரவரே பொறுப்பு. மனிதர் தம் செயலுக்கான வினைப்பயனே அனுபவித்தே தீர வேண்டும். மதவாதிகளோ இறைவன் மன்னிப்பான் என்கின்றனர். இறைவனே ஆனாலும் எல்லாவற்றையும் எப்படி மன்னிப்பான்? கொலை செய்பவரையும், குண்டு வைப்பவரையும் இறைவன் எப்படி மன்னிப்பான்? தெரியாமல் செய்ததற்கே மன்னிப்பு. விளைவுகளை அறிந்து, தெளிந்து செய்வதற்கு இறைவன் பொறுப்பாக மாட்டான்.

இன்றைக்கு உலகமே மாறிவருகிறது. உலகம் ஒன்றாகி வான்நோக்கி உயர்கிறது. மதங்களோ இறுக்குகின்றன. மதங்கள் சற்றேனும் நெகிழ்வது நல்லது. குறிப்பாக, இசுலாம் மதம் சிறிதேனும் இளக்கம் கொள்ளவேண்டும். மதங்கள் அனைத்தையும் கொண்டிருக்கவில்லை. மதங்களில் போதாமை உண்டு. மேற்கின்

மதங்கள் அப்படியே, அந்தக் காலத்திலேயே இருக்கின்றன. மேற்கின் மதஅறிஞர்கள் கீழைதேய மதங்களை, குறிப்பாக, இந்து மதத்தை அறிய வேண்டும். இந்து மதம் மக்களோடு தாமும் வளர்கிறது. கூடவே வருகிறது. இந்து மதம் கைநீட்டி மேலே இழுக்கிறது. உயர உயர மனிதரைத் தூக்கிவிடுகிறது. மேற்குலக மதங்கள் கீழே இழுக்கின்றன. பின்னால் தள்ளுகின்றன. மேற்கு பெரிய தடுமாற்றம் கொண்டுள்ளது. உண்மையில் தள்ளாடுகிறது. அறிவியலோடு மேலே மேலே பயணிக்க மறுக்கிறது. கீழேயும் இருக்க முடியவில்லை. மக்கள் மனங்கள் ஊசலாடுகின்றன. மனங்கள் கவலையடைகின்றன. அழுத்தம் கொள்கின்றன.

மதங்கள் தேங்கக் கூடாது. தேங்கினால் அவை சுட்டும் வாழ்க்கை முறைகளும் தேங்கும். நாளைய மனிதர் நிலவுக்குச் செல்கிறார் எனில், அன்னாரும் குடிமியோடும், சடையோடும், உடலை மறைத்தும்தான் போகவேண்டுமா? மதங்கள் சிந்திக்க வேண்டும். காலத்திற்கேற்ற மாற்றம் காணவேண்டும். மதங்கள் மனிதகுல நன்மைக்கே. மானுடர் மகிழ்ச்சியாக வாழ்வதற்கே. மனிதர் விடுதலைக்கே மதங்கள். கட்டிப்போட அல்ல. மனிதர் மதத்திற்காகவே வாழக் கூடாது. மதங்கள் தோன்றியது மக்களை நல்வழிப்படுத்த. மனிதரை மேலும் உயர்த்த. மனிதர் வாழ்வை பொருளுள்ளதாக்க. அனேகமாக, மதங்கள் தங்களது குறிக்கோளில் வெற்றிபெற்றுவிட்டன. தங்கள் இலக்கை அடைந்துவிட்டன. இனி மதங்களை தேவைப்படுமளவு வைத்துக் கொள்வதே மனிதருக்குச் சிறப்பு. மதங்கள் பழமையைக் கைவிட வேண்டும். புதுமைக்கு வழிவிட வேண்டும்.

நபிபெருமானார் முன்னெடுத்த மதம் எத்தகையது என்பதை மார்க்க அறிஞர்கள் தெளிய வேண்டும். நபிகளால் செய்தது அருஞ்செயல். யாம் தனிப்பட்ட முறையில் இறைவனின் எண்ணங்களை மண்ணிலிறக்குவது எத்தனை கடினமானது என்பதை அறிந்திருக்கிறோம்.

யாம் எமது எண்ணங்களை, உடல் மொழிகளை, இதுவரை எவரிடத்தும் பகிர்ந்து கொள்ளவில்லை. எமது மனைவி சற்றே அறிவார். எனினும் அவரிடமும் யாம் எதையும் தெரிவிப்பதில்லை. ஒருவேளை எம்மை நினைத்து கவலை கொள்ளக் கூடும். எமது எண்ணங்கள் மாறும்போது உடலும் மாறுகிறது. யாம் நிலைகொள்ளாமல் நடக்க ஆரம்பித்தோம் எனில், எமக்குள் மாற்றங்கள் நிகழத் தொடங்கிவிட்டன என்றே பொருள்.

மனமாற்றங்கள் சீராக நிகழ்கின்றன. அதற்குமுன் பலவிதமான என்ன மாறுபாடுகள் தோன்றுகின்றன. உலகம் வேறுபடுகிறது. மனிதர் வேறாகத் தெரிகிறார். ஒருவாரம், பத்துநாள் நிகழும் மாற்றங்களை எம்மால் தாங்கிக் கொள்ள இயல்கிறது. ஒரு மாதத்தைக்கூட யாம் சமாளித்து விடுகிறோம். சில நேரங்களில் இருமாதங்கள் வரைக்கும்கூட எண்ண மாற்றங்கள் நீடிக்கின்றன. அது அளிக்கும் மனப் போராட்டம், அழுத்தம் விவரிக்க இயலாதது. எமது கல்வியால், உலகைப் பற்றிய புரிதலால், எமது கடமை உணர்வால், எம் மூலமாக உலகிற்கு ஏதோ ஒரு நன்மை கிடைக்கப் போகிறது எனும் நல்லெண்ணத்தால், அதை எம்மால் தாங்க முடிகிறது.

நபிகளாரால் இறைவேதம் எளிதாக இறக்கி வைக்கப்பட்டதாக குரான் சுட்டுகிறது. படிக்காத நபியை இறைவன் தேர்ந்தெடுத்ததும் காரணத்தோடே. படித்தவர் எனில் சற்றேனும் ஐயப்பாடு கொள்வது உறுதி. கல்வி மனிதருக்கு சந்தேகத்தைக் கொடுக்கும். அதுவே அதன் மகத்துவம். சந்தேகம் தெளிவதே அறிவு. அறிவு உண்மையைச் சென்றடைவதே ஞானம். அறிஞரெல்லோரும் ஞானியல்ல. உண்மையைத் தெளிந்தவரே ஞானி. அவர் ஞானம் உலகை உயர்த்தும். அவர் ஞானத்தால் உலகம் முன்னிலும் சிறப்பாகும்.

நபிகளுக்கு மணியடித்ததுபோல் இறைவன் மொழி இறங்குமாம். உடல் வியர்க்குமாம். அமைதியாகப் படுத்திருப்பாராம். தமது அலுவல்களையும் தவறாமல் செய்து வருவாராம். சொல்வது எளிது. பிள்ளையைப பெற்ற தாய்க்கே அந்த வலி தெரியும்.

யாம் நபிமொழியை முன்னரே அறிந்திருந்தது எமக்கு கூடுதல் நன்மை. நபிக்கும் இப்படித்தான் நிகழ்ந்திருக்கும் எனும் எண்ணம் எமக்கு தெளிவைத் தருகிறது. நபியால் முடிந்ததெனில் எம்மாலும் முடியுமெனும் நம்பிக்கையை வளர்க்கிறது.

நபிகளைவிட யாம் அனைத்திலும் கொடுத்து வைத்திருக்கிறோம். அறிவியல் எமக்கு பெருந்துணை புரிகிறது. உலகைப் பற்றிய இன்றைய புரிதல், இன்றைய உலக ஞானம், அன்றைக்கு இருந்திருக்காது. அன்றைக்கு அப்படியொரு மகத்தான செயலைச் செய்ததே சாதனை. எமது மன அழுத்தத்தைத் தாங்க இயலவில்லை எனில், எமக்கு மனநல மருத்துவர் இருக்கிறார். இருக்கவே இருக்கிறது உறக்க

மாத்திரை. எத்தகையை மனஅழுத்தமும் நல்லுறக்கத்தில் தொலைந்துவிடும். இரவு முழுக்க ஏதேதோ எண்ணங்களோடு விழித்திருப்பது கடுமையானது. அதைத் தாங்க இயன்றவர் சிலரே. இரவின் விழிப்பு ஞானியருக்கே உரியது. எளிய மக்களுக்குத் தேவையில்லை.

நபிகளாரின் திருமணங்கள், பெண்தொடர்புகள் குறித்து பலவிதமான விமர்சனங்கள் இணையம் வாயிலாகப் பரப்பப்படுகின்றன. குறிப்பாக மதவெறியர்கள் இத்தகைய விமர்சனங்களைப் பரப்புகின்றனர். அது தேவையில்லாதது, கண்டிக்கத்தக்கது. நபிகளார் செய்தது தவறல்ல. ஒருபோதும் பிழையாகாது. அவரது முதற்கடமை, பெருங்கடமை, அல்லாவின் வேதத்தை இம்மண்ணில் இறக்குவது. அதை மிகத் திறன்படச் செய்துவிட்டார். நபி பெரும் வெற்றியாளர். தனியொரு மனிதராக ஒரு மதத்தைக் கட்டி யெழுப்புவது அருஞ்செயல். நபிகளார் எந்த நோக்கத்திற்காக இம்மண்ணில் பிறப்பெடுத்தாரோ அதை நிறைவேற்றினார். இத்தனை பெரிய சாதனை புரிந்தோர் மண்ணில் வெகு சிலரே. அவருள் நபி தலைசிறந்தவர்.

இவ்வுலகில் பெண்ணாசைக்கு மயங்காதார் யார்? ஆணால் பெண்ணாசையை அடக்க முடியாது. பெண்ணாசையை உடலால் ஒதுக்கினாலும் மனத்தால் முடியாது. மனம் அத்தனை வலிமையுடையது. காமமே உயிர்களை இயக்குகிறது. காமத்தாலே உயிர்கள் பல்கிப் பெருகுகின்றன. முறையான காமம் சாதனைகள் புரியும். தறிகெட்ட காமம் உடலை அழிக்கும். காமத்தைக் கொண்டாடும் சமூகம் சிறப்புறும். காமத்தின் பின்னால் ஓடும் சமூகம் சீரழியும், கெடும். காமம் நல்லதே. அது எப்படிக் கையாளப்படுகிறதோ அதற்கேற்ற பலனைக் கொடுக்கும்.

ஞானியர் காமத்தில் விசாரம் கொள்வர். காம எண்ணத்தை உற்று நோக்குவர். ஏன் எனும் வினா எழுப்புவர். பிறவி எதற்கு எனச் சிந்திப்பர். காமமா, கடமையா, பிறவி அறுப்பா எனத் தவிப்பர். அறிவுள்ளவர் காமத்தைவிட கடமையைப் பெரிதெனக் கொள்வர். ஞானமுள்ளவர் பிறவி விடுதலையே முக்கியமெனக் கண்டுகொள்வார்.

பெண்ணாசையை அடக்குவது மிகவும் கடினம். சித்தர்கள் பெண்ணை வெறுத்து, பெண்ணின்பத்தைத் தூற்றி, பெண்ணாசையை ஒதுக்கினர். பெண் உடலை அருவெறுப்பானதாக மனதுள் நிறுத்தி, பெண்ணாசையை மறுத்தவரும்

உண்டு. பெண்ணை மறுத்தவர் வேறொன்றைத் தேடுவதற்கே அதை மறுத்தார். தேடிக் கண்டடைந்தோர் அரிது.

காமத்தில் பெரியவன், கோவிந்தன் எனும் பெயர் கொண்டவன், இம்மண்ணில் வாழ்ந்தானாம். அவன் கோபியரோடு தாமரைத் தடாகத்தில் சல்லாபம் புரிந்தானாம். அவன் காமத்தையும் சில அறிவீனர்கள் விமர்ச்சிக்கின்றனர். அவன் நினைத்தால் இராமனாவான். காமத்தை விலக்கவும் அவனால் இயலும். அவன் விரும்பினால் பதினாறாயிரம் அழகுப் பெண்களோடு காமத்தில் திளைப்பான். அப்போதும் தன்னை இராமனாகவும் அவனால் கொள்ளமுடியும். கோபியர் ஏன் தடாகத்தைத் தேர்ந்தெடுத்தார்கள்? மனிதர் சிந்தித்ததுண்டா? மனிதர் பெண்ணாசையில் கவனம் கொண்டிருக்கிறாரேயொழிய, பெண்ணின் உடலை, அவளது காமத்தை, அவளது நுண்ணுர்வை, அழகை, உச்சத்தை, பேச்சை, அவள் மொழியை அறிந்திருக்கவில்லை. அறியவும் முயற்சிப்பதில்லை. ஆராய்ந்து பார்க்கவும் இயலுவதில்லை.

இம்மண்ணின் மகத்தான தந்தையாம் காந்தி ஆராய்ந்தார். அனைத்தையும் ஆராய்ந்த தந்தை காமத்தையும் விட்டு வைக்கவில்லை. அவர் என்ன ஆராய்ச்சிகள் செய்தார்? அவர் சொல்லவில்லை. மறைவாகவும் ஆராய்ச்சி செய்யவில்லை. பெண்ணை, அவள் காமத்தை, ஆராய்ச்சி செய்து அறிய முடியுமா? பெண் இரகசியமானவளன்றோ. அனைத்தையும் மறைப்பவளன்றோ. ஒருவேளை மனத்தின் காமத்தை அடக்க முடியுமா எனச் சோதித்திருப்பரோ.

தந்தையரின் காதலை, காமத்தை, மகன் பேசுவது சரியாக இருக்காது. தந்தையர் காமத்தை வெறுக்கவில்லை. பெண்ணை ஒதுக்கவில்லை. எதையும் ஒளிக்கவில்லை. மனிதர்கள் தந்தையரின் காமத்தை தூற்றாமலிருப்பது நல்லது.

இசுலாமியருக்கு தந்தையாம் காந்தியைப் பிடிப்பதில்லை. இசுலாமியர் மனம் அப்படி கட்டமைக்கப்பட்டிருக்கிறது. இசுலாமியரே, பெருஞானம் கொண்டோருக்கு எல்லாமே பெரிது, காமம் உட்பட. அதை அவர்கள் தங்களது மனவலிமையால் விலக்கியே பெருஞ்செயல்கள் புரிகின்றனர். நபிகளார் செய்தது அருஞ்சாதனை எனில், காந்தியடிகளார் செய்ததும் பெருஞ்சாதனையல்லவா. மகாத்மா காந்தியும் பெருவெற்றியாளரன்றோ. எடுத்த செயலை, நினைத்த காரியத்தை முடித்துக் காட்டினார்தானே. நபிகளார் போலவே, அடிகளாரும் கடமையே பெரிதெனக்

கொண்டார். கடமையிலிருந்து அணுவளவும் பிசகவில்லை, விலகவில்லை. வாழ்நாள் முழுக்க மனம் தடுமாறவில்லை. தந்தையாம் காந்தியின் பிறப்பும் பெருநோக்கத்திற்கே. இந்தியாவிற்கு விடுதலை எப்படிக் கிடைக்க வேண்டும் என்பதற்கே தந்தையாம் காந்தி பிறந்தார். அது பரிபூரணமாக நிறைவேறியது.

இசுலாமியர் காந்தி என்னும் தந்தையின் மீதான வெறுப்பை மறுபரிசீலனை பண்ண வேண்டும். தந்தை இசுலாமியர்மேல் கொண்டிருந்தது பேரன்பு. அது உண்மையான அன்பு இசுலாமியரே. எந்தை ஒருபோதும் மதத்தை முன்னெடுக்கவில்லை. அனைத்து மதங்களையும் ஆராய்ந்தார். நபிகள்மேல் நல்லெண்ணம் கொண்டிருந்தார். பிரார்த்தனையில் அல்லாவையும் சேர்த்தார். காந்தி எல்லோரையும் நம்பினார். இசுலாமியர்தான் எந்தைமேல் சந்தேகம் கொண்டார். ஆசையை வளர்த்தார். அதிகாரத்தில் மோகம் கொண்டார். நாட்டைத் துண்டாக்கினார். ஒன்று, ஒன்றாக இருந்தது இரண்டாகி, பின் மூன்றாக மாறிவிட்டது. ஒன்று மூன்றானது யாராலே இசுலாமியரே?

இந்தியா சனநாயக நாடாக மலர்ந்தது யாராலே? பிறந்ததிலிருந்து தற்போதுவரை. பாகித்தானில் எப்போது சனநாயகம் வந்தது? கால்நூற்றாண்டு கழித்துத்தானே. சற்றே வந்த சனநாயகமும் தொலைந்து, மீண்டும் அது பழைய பாதைக்குத்தானே திரும்பியது. வரலாற்றை அறிவது பாடங்களுக்கல்லவா.

பிறந்ததிலிருந்தே அந்நாட்டில் அமைதியில்லை. அங்கு நாள்தோறும் குண்டு வெடிக்கிறது. வைப்பது யார்? இசுலாமியர். பலியாவது யார்? இசுலாமியர். இருவருமே பாகித்தானியர். ஏன் இசுலாமியரே? மழலைச் செல்வங்கள் பயிலும் பள்ளிக்குள் குண்டு வெடிக்கிறார். எப்படி இசுலாமியரே? இசுலாமியர் மனதை இயக்குவது யார்? எது காரணம்? விதை போட்டது யார்? வளர்த்தது யார்? விதையொன்று போட்டால் சுரையொன்று முளைக்குமா? கத்தி எடுத்தவரின் முடிவு கத்தியாலே என்பது உலகின் பாடமல்லவா. கத்தியைத் தீட்டாதே, புத்தியைத் தீட்டு என்றது அதனாலேயே. அதை அறிந்தேதான் இந்தியாவின் மகத்தான தந்தை, அன்பு எனும் ஆயிதத்தைக் கையிலெடுத்தார். அகிம்சை எனும் நேர்வழியில் வீரநடை போட்டார். வென்றது அன்பு. வெற்றி பெற்றது அன்பின் மார்க்கம். அன்பிற்கு நிகர் ஏது இசுலாமியரே..

முகம்மது நபியவர்கள் வேறுவழியே இல்லாமல் ஆயுதம் தூக்கினார். எவ்வளவோ பேசிப் பார்த்தார். மன்றாடினார். சிரித்தார்கள். கேலி பேசினார்கள். கல்லெறிந்தார்கள். பொறுத்தார். பெருமானார் மிகவும் பொறுமை காத்தார். அன்பு மார்க்கமே என அருளாளனிடம் மன்றாடினார். ஆயிதம் வேண்டாம் என்று இடத்தை விட்டே விலகினார். துரத்தி வந்தார்கள். வெகுதூரம் விலகிச் சென்றார். அங்கும் வந்தார். வந்தவர் ஆயித்ததோடே வந்தார். வந்தவர் கொலைவெறியோடு வந்தார். விழியிருந்தும் இல்லாதோராக, செவியிருந்தும் கேட்காதோராக இருந்த அவர்களிடம், இனிப் பேசுவதில் பொருளில்லை என்றே நபிபெருமானார் ஆயுதம் எடுத்தார். ஆயுதம் தூக்கும் முன்புவரை நபி அன்பை, சமாதானத்தை முன்னெடுத்தே வந்தார். அன்று நபிகளின் அன்பும் சமாதானமும் எடுபடாமல் போனதாலேயே வாளைத் தூக்கினார். வாளைத் தூக்கியதற்காக நபியைக் குறைசொல்ல முடியாது. அங்கு சமாதானம் தோற்றது.

நபிகளார் வேறுவழியின்றி ஆயுதம் எடுத்தார். நபிக்குப் பிறகு நபிவழியில் வந்தோர் எதற்காக ஆயுதத்தைத் தூக்கினார்? நபிகள் பெருமளவில் அங்கு அமைதியை நிலை நாட்டித்தானே மறைந்தார். நபிவழியினர் நபியின் அன்பையும், சமாதானத்தையுமல்லவா முன்னெடுத்திருக்க வேண்டும்? என்ன நடந்தது இசுலாமியரே? அது அதிகாரத்திற்கான ஆசைதானே. போட்டிதானே. அது அரசியலதிகாரத்தில் கொண்ட மோகம்தானே. நபி ஆயுதத்தை தூக்கியே வைத்திருக்கவில்லை. இறுதியில் கீழே போட்டார். இறுதிப் பேருரையே சான்று.

நபி வழியினர் ஏன் ஆயுத பலத்தை நம்பினார்? தூக்கினார்? அன்று தூக்கிய ஆயிதம் இன்றுவரை கீழே போடப்படவில்லை இசுலாமியரே. இன்னும் எத்தனை காலத்திற்கு ஆயுதங்களைத் தூக்கித் திரிவது? அதுவும் அன்பே இசுலாம், அல்லா பெருங்கருணை கொண்டவன் எனக் கூறிக்கொண்டே. ஆயிதத்தை இறக்கலாமா. கீழே போடலாமா இசுலாமியரே. ஆயிதங்களைக் கீழே போட்டால்தான் அன்பின் மகத்துவம் புரியும் இசுலாமியர்களே. கொஞ்ச காலத்திற்குப் போட்டுப் பாருங்கள். என்ன நடக்கிறது என்று அறியுங்கள்.

உலகம் அன்பை நோக்கித் திரள்கிறது. அன்பால் உலக மக்கள் இணைகிறார்கள். மக்களின் இதயங்கள் அன்பால் இணைந்து வருகின்றன. உலகில் சனநாயகம் செழித்து வருகிறது. மக்களின் வாழ்வு மேலோங்கி வருகிறது.

ஆய்தங்களைக் கீழே போட இதுவே சரியான தருணம் இசுலாமியச் சொந்தங்களே.

இசுலாமியர் தனித்திருக்கிறார். எந்த இசுலாமிய நாட்டிலும் அமைதியில்லை. இசுலாமிய மக்களுக்கு சமாதானம் கிட்டவில்லை. காரணம் இசுலாமிய மதமன்று. மதத்தை தவறாகப் புரிந்து கொண்டோரே. நபி குரானை எழுதவில்லை. அவர் மறைவிற்கு வெகுகாலத்திற்குப் பின்னரே குரான் தொகுக்கப்பட்டது. குரானின் மொழிகளை அப்படியே நபிகளாரின் வாக்காகக் கொள்ள வேண்டியதில்லை. இசுலாமியருக்கு நபிகளாரின் வாழ்க்கையே செய்தி. நபிகள் சொன்னதாகச் சொல்லும் ஜிகாத், உலகிற்கு நேரிடும், மொத்த மானுடகுலத்திற்கு எதிரானதாக மாறிடும் பேரழிவைத் தடுக்கவே எனப் பொருள் கொள்ள வேண்டும். பூமிக்குப் பேராபத்தா? அதைத் தடுப்பதில், தடுக்க முனைவதில் தவறில்லை.

இப்போதைக்கு பூமி ஆபத்தில் இருக்கிறதா? நிச்சயமாக இல்லை. மக்கள் மகிழ்ச்சியில் திளைக்கிறார்கள். வயிராற உண்கிறார்கள். நோய் கொண்டு சாவதில்லை. அடுத்தவேளை உணவுக்கு இல்லையே எனும் கவலை இல்லை. இசுலாமியர் இன்றைக்கு ஜிகாத் கொள்வதில் பொருளிருக்கிறதா?

இசுலாமியரால் உலகம் அச்சம் கொள்கிறது. இசுலாமிய மதம் உலகின் மானுடரையெல்லாம் அச்சப்பட வைக்கிறது. மனிதர்களால் அச்சமின்றி பயணிக்க முடியவில்லை. அச்சமின்றி நடக்க முடியவில்லை இதுவா மதம்? பள்ளியில் படிக்கும் பெண்பிள்ளைகளைக் கடத்துகிறார். பெண்களை பாலியல் அடிமையாக்குகிறார். இதுவா நபி வழி? உலகம் நபியைப் பற்றி, அவர் பேரருளாளர் என அறுதியிட்ட அல்லாஹ் பற்றி என்ன நினைக்கும்? வருங்கால சநத்தியினர் எப்படி எடுத்துக் கொள்வார்கள்?

இசுலாமிய இளைஞர் திமிறி எழுகிறார். மதங்கொண்டு திரிகிறார். அறிவாற்றல் மிக்க இளையோர் சக்தி, ஆக்கத்திற்குப் பயன்படாமல் அழிவுக்கு, பேரழிவுக்குக் காரணமாகிறது. இது முறையா இசுலாமியப் பெருமக்களே? கல்லூரியில் பயிலும் மாணவருக்குக்கூட நபி எந்த ஆண்டில் பிறந்தார் எனத் தெரியவில்லை. நபிகள் யார் என்பதை அறிந்திருக்கவில்லை. இசுலாம் பற்றி ஒரு ஐந்து நிமிடம் பேசத் தெரியவில்லை. இவர்களா வருங்கால மார்க்க அறிஞர்கள்?

பெருமைக்குரிய இசுலாமியர்களே, நபி பெருமானாரின் வழி எது எனத் தெளியுங்கள். இளையோரை நல்வழிப்படுத்துங்கள். உலகெங்கும் வாழும் மக்கள் இசுலாமியர்மேல் அச்சம் கொள்கிறார். அச்சம் விலக்கமாகும். விலக்கம் பகையை வளர்க்கும். பகை அழிவைத் தரும். இசுலாமியர் ஆக்குபவரா அழிப்பவரா? இசுலாமியர் இறைவன் படைப்பவன்தானே? ஏதேனும் சான்று வேண்டுமா.

இந்து ஞானம் அழகாகக் சொல்லுகிறது. ராமனும் ரகீமும் ஒன்று, ராமனும் அல்லாவும் ஒன்றுதான். எதனால் இந்திய ஞானம் அப்படிச் சொல்கிறது எனச் சிந்தியும் இசுலாமியரே. பெருமைக்குரிய கபீரும், குருநானக்கும் எப்படித் தெளிந்தார் இந்துவும் இசுலாமியரும் ஒன்றென?

கிழக்கில் ஞானமும் மேற்கின் ஞானமும் சற்றே மாறுபடுகிறது. மேற்கில் இறைவன் வருவதில்லை. தூதரை அனுப்புகிறான் எனச் சொல்லப்படுகிறது, தூதர் இறைச் செய்தியை இறக்குகின்றார்.

கிழக்கின் ஞானமோ, இறைவன் இறங்கி வருவான் என்கிறது. இறைவன் தூதனுப்புவதில்லை. மூட மனிதருக்கு தூதனுப்பிப் பயனில்லை என்பது தூதுபோனவனுக்குத் தெரியாதா. தூது அனுப்பியவனும் அறிந்ததுதானே. தூதன் செய்தியை கூட்டிக் குறைத்தும் சொல்லி விடக் கூடும். அதையெல்லாம் அறிந்தேதான் நாராயணன் இறங்கி வருகிறான் - அவதாரமாக. அவன் எப்போது பிறப்பான், எப்போது அவதாரம் எடுப்பான்? உலகில் தர்மம் எப்போதெல்லாம் குறைகிறதோ அப்போதெல்லாம். தர்மத்தை நிலைநாட்ட, தர்மத்தைச் சிறப்பிக்க அவன் பிறப்பெடுப்பான், அவதாரம் மேற்கொள்வான். அவன் எப்படி தர்மத்தை நிலை நாட்டுகிறான், அறத்தை வளர்க்கிறான் என்பதே மானுடருக்குப் பாடம். இறைவன் மண்ணில் வாழ்ந்து காட்டுகிறான். வழிகாட்டியாகிறான். அவனையே பாரதத்தின் மக்கள் கடவுளென்று கொண்டாடுகின்றனர். அப்படி இறைவனான நாராயணனின் அவதாரங்களே இராமனும், கண்ணனும்.

இத்தனை விரிவாகச் சொன்னதற்குக் காரணமிருக்கிறது இசுலாமியச் சொந்தங்களே. யாம் பிற தமிழ்ச் சாதிகளை சொந்தங்களே எனச் சுட்டவில்லை. அது ஏன் இசுலாமியருக்கு மட்டும்? ஏனெனில் எம் மனத்தில் இசுலாமியர் மிகுந்த அன்புடையவர் எனும் எண்ணம் விதைக்கப்பட்டிருக்கிறது. எமக்கதில் மாற்றுக் கருத்தே இல்லை. இன்றைக்குள்ள மதங்களில் இசுலாமிய மதத்தவரே அன்பில்

சிறந்தவர். அன்பில் சிறந்தவர் இந்துவா இசுலாமியரா எனில், யாம் இசுலாமியருக்கே ஓட்டளிப்போம். இந்துக்கள் அறிவில் சிறந்தவர்கள். எமது வாழ்வனுபவத்தில் இசுலாமியக் குடிகள் அன்பானவர், எளிமையானவர், சற்றே அச்சம் கொண்டவர். மனிதர்களை நம்புபவர். ஒன்றிரண்டு குறைகள் தெரிந்தாலும் அவற்றை விலக்கி விட்டுப் பார்த்தால், மிகையான, பெருந்திரளான இசுலாமியர் நல்மனிதராக, நல்லெண்ணம் கொண்டோராகவே வாழ்கிறார். எல்லாப் புகழும் நபிபெருமானாருக்கே.

இசுலாமியர் தீவிரவாதிகளாகவே முன்னிறுத்தப்படுகிறார், கொலைகாரர்களாகவே சித்தரிக்கப்படுகிறார். அது உண்மையல்ல. இசுலாமியரில் மிகமிகச் சிலரே அவ்வாறான மனப்போக்கைக் கொண்டிருக்கிறார். அதுகூட இசுலாமியர் எளிய மனத்தவர், இளகிய மனம் கொண்டவர் என்பதாலேயே, சிலரை மூளைச் சலவை செய்து விடுகின்றனர். இதில் இசுலாமியர் பெருங்கவனம் கொள்ள வேண்டும்.

கோவையில் வெடி வைத்தது தமிழ் இசுலாமியர் அல்லவே. யாம் அப்படித்தான் நம்புகிறோம். தமிழ் மொழிக்கென்று ஒரு பண்பாடும் அறமும் இருக்கிறது. அது அம்மொழி பேசும் அனைவரிடத்தும் இருக்கும். தமிழ் அன்பில் சிறந்தது. தமிழ் பேசும் குடிகளும் அன்பில் உயர்ந்தோராகவே இருப்பர்.

தம் பிள்ளைகளை பெருமை நிறைந்தோராக வளர்ப்பதில் தமிழன்னைக்கு நிகர் எவருமில்லை..

இசுலாமியரே, நாம் சொந்தக்காரர்கள். உறவுடையவர்கள். நாம் மனத்தால் ஒன்று. குணத்தால் ஒன்று.

தமிழ் நிலத்தில் வாழும் அனைத்துக் குடிகளும் இசுலாமியர்மேல் மிகுந்த அன்பும் மதிப்பும் வைத்துள்ளனர். இசுலாமியரும் அனைத்துத் தமிழ்க் குடிகளோடும் நல்லுறவும் நல்லிணக்கமும் பேணுகின்றனர். சமீப காலமாக ஒரு சில இடங்களில் சற்றே முரண்பாடுகள் முளைத்து வருகின்றன. அவர் மதத்தார் முன்னிறுத்துகிறார். நாங்களும் மதத்தை முன்னிறுத்துகிறோம் என்பது சரியாக இருக்காது. இருதரப்பிலும் மதத்தை பின்னுக்குத்தள்ளி மனிதநேயத்தை, மானுட அன்பை, அறத்தை வளர்க்க வேண்டும்.

தமிழ் நிலத்தில் வாழும் இசுலாமியர் அறிவார், அவரோடு மிகுதியான நெருக்கமும் இணக்கமும் கொண்டிருப்பது தேவேந்திர குலத்தவர் என. இதைச் சுட்ட எமக்குத் தயக்கமிருந்தாலும் அதாவது தமிழ்ச் சாதிகளில் ஒரு சாதியை மட்டும் சுட்டிக் காட்டுகிறோமே எனும் தயக்கமிருந்தாலும், அதைச் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியமும் இருக்கிறது.

தமிழ்க் குடிகளில் அனைத்து மதங்களையும் மதிப்பவர் தேவேந்திர குலத்தவர். சாதி வெறி கொள்ளாதார் தேவேந்திர குலத்தார். உலகின் அனைத்து மதங்களும், மொழிகளும் தம்மவை, தம்முடையவை எனும் ஞானம் தேவேந்திர குலத்தவர்க்கு ஏற்பட்டிருப்பது வியப்பு. அது உண்மையும் கூட. அனைத்து மதங்களும், மொழிகளும் கொண்டதே அவர் குடும்பம். தேவேந்திர குலத்தவர் குடும்பம் பெரிது. மிகப் பெரிது. மண்ணுக்கும் விண்ணுக்குமென ஓங்கி உயர்ந்து செழித்து வளர்ந்திருக்கிறது அவரது குடும்பம். அவரது குடும்பத்தில் இசுலாமியர் அன்பானவர். கிறித்தவர் அறிவுடையவர். எபிரேயர் ஞானமுடையவர். சைவர் அன்பில் சிறந்தவர். வைணவர் அறிவில் உயர்ந்தவர். சமணம் அறிவான மதம். பௌத்தமோ ஞானம் நிறைந்தது. கிழக்கிலுள்ளோரும் மேற்கிலுள்ளோரும் அவர் குடும்பத்தார். சீனத்தின் மெய்யியலும் நிப்பனின் ஆன்மீகமும் அவருடையதே. அனைத்துக் கடவுளரும் அவருடையவர்களன்றோ..

தேவேந்திரர் உலகு காப்பவர். அனைத்துத் தெய்வங்களும் உலகம் காப்பவை. உலகை உயர்த்துபவை..

உலகைக் காப்பவர்களே கடவுள்கள்..

தோழர்களே, மதம் வெறியாகக் கூடாது. குறிப்பாக தமிழ் நிலத்தில்.

அதன் பொருட்டு, யாம் சில வழிகாட்டல்களை அறிவுறுத்துகிறோம். தமிழ் நிலத்தின் ஊர்களில் வாழும் இசுலாமியர், அவர்களது இல்லத் திருமண விழாவிற்கு ஊரிலுள்ளோர் அனைவரையும் அழைக்க வேண்டும். இசுலாமியர் வாழும் ஊரில் பிறகுடிகள் அனைவரையும் அழைக்க வேண்டும். இசுலாமியர் ஊரில் நான்கு திசைகளில் வாழும் நான்கு ஊர்க்காரர்களையும் அழைப்பது இன்னும் சிறப்பு. திருமண அழைப்பை ஒவ்வொரு வீடாகக் கொடுக்கலாம். சிரமமெனில் அவ்வூரில் எத்தனை குடிகள் வாழ்கிறார்கள் என்பதைத் தெரிந்து குடிக்கு ஒன்றென அழைப்பிதழ் கொடுக்கலாம். அவர்கள் திருமணவிழாவிற்கு வந்து

சிறப்பிக்கிறார்களோ இல்லையோ, இசுலாமியர்கள் திருமண அழைப்பிதழை கொடுத்து விடுங்கள். இசுலாமியர் நல்லிணக்கம் பேண முயன்றார் என்பது இந்நிலத்தில் பதிவாகட்டும். தமிழரை யாம் அறிவோம். மணமக்களை மனதார வாழ்த்த நிச்சயம் வருவார்.

தேவேந்திர குலத்தாரே, இசுலாமியர் நம் அன்பின் உறவு. நம் உறவு நீடித்து நிலைத்திருக்க, இசுலாமியக் குடிகளில் நிகழும் திருமணங்களுக்கு, நம் சார்பாக சிறப்புச் சேர்க்க வேண்டும். நான்கு ஊர்களிலும் நாம் வாழ்ந்தால், ஒவ்வொரு ஊர்க்காரரும் ஒவ்வொரு வகையில் திருமணத்திற்குச் சிறப்புச் சேர்க்கலாம்.

மணப்பெண்ணிற்கு அழகியதொரு மென்பட்டு பரிசளிக்க வேண்டும். புடவை சற்றேனும் பச்சை நிறம் கொண்டிருக்க வேண்டும். முழுக்க வேறு நிறங்களில் இருந்தாலும், எங்கேனும் சிறிதளவாவது பச்சை நிறம் கட்டாயம் இடம் பெற்றிருக்க வேண்டும். பச்சை, கிளிப் பச்சை, அடர் பச்சை என எவ்வகையான பச்சையிலும் புடவை இருக்கலாம். மணமகனுக்கு வெண்பட்டுத் துண்டு. துண்டை அவரது தோலில் சாற்றி வாழ்த்த வேண்டும்.

ஒரு ஊர்க்காரர் உடை எனில், அடுத்த ஊர்க்காரர் ஒரு மூட்டை அரிசி கொடுக்கலாம். இன்னொரு ஊர்க்காரர் அத்தனை பருப்பு வகைகளிலும் நான்கு படிகள் எனக் கொடுக்கலாம். மற்றொரு ஊர்க்காரர் ஆடொன்றைப் பரிசளிக்கலாம்.

திருமணப் பரிசளிக்கும் தேவேந்திர குடிகள் அனைவரும் ஒன்றி திரண்டு திருமணம் நிகழும் இடத்தில் அருகாமை தூரத்திலிருந்து ஊர்வலமாக பரிசுகளை எடுத்துச் செல்லலாம். ஒன்றுக்கும் மேற்பட்ட குடிகள் எனில் கட்டாயம் ஒன்றிணைந்தே செல்ல வேண்டும். தனித்தனி ஊராக அல்லாமல் தேவேந்திர குலத்தார் சார்பாகவே பரிசளிப்பு நிகழ வேண்டும். ஒவ்வொரு ஊரிலிருந்தும் குறைந்தது பத்து பேராவது கலந்து கொள்ள வேண்டும். பத்துப் பேருக்குக் கீழ் குறையக் கூடாது. பெண்கள் கூடுதலாகவே கலந்து கொள்ளலாம்.

திருமண விழாவிற்குச் சென்று கட்டாயம் உணவருந்தியே வரவேண்டும். மருத்துவக் காரணமன்றி பிற காரணம் கூடாது. திருமண விருந்தில் மாட்டுக்கறி தவிர்த்து பிற உணவுகளை உண்ணலாம். பொதுவில் இசுலாமியர் இப்படிச் செய்வதில்லை. எனினும் யாம் தேவேந்திர குலத்தவர் கவனத்திற்காகச் சுட்டுகிறோம். தேவேந்திர குலத்தவர் மாட்டுக் கறி உண்பதில்லை என்பது நம்

முன்னோர் மரபு. கரணத்தோடே அவ்வாறு வகுக்கப்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள். இசுலாமியரின் ஆட்டு பிரியாணி சுவை மிகுந்திருக்கும். மணக்கும். யாம் உண்டிருக்கிறோம். நம் சொந்தங்களின் திருமண விழாவில் நமது வயிறும் மனமும் நிறையட்டும். மணமக்களின் குடும்பங்கள் செழிக்கட்டும்.

இசுலாமியரின் திருமண விழாக்களுக்கு தமிழ் குடிகள் நாங்கள் தமிழர் என ஒன்றிணைந்து, தமிழ் நிலத்தில் வாழும் பிறமொழியினர் நாமெல்லாம் மனிதர் என இணைந்து, பொதுவில் சிறப்புச் செய்ய நினைப்பாரேயாகில் மிகவும் நல்லது. வரவேற்க வேண்டியது. அந்நிலையில் ஊரார் இணைந்து மாமன்முறை சீர் போன்று செய்வது வரவேற்கத்தக்கது.

மணமக்கள் அனைத்திலும் இன்புற்று பல்லாண்டு வாழ்க..

இசுலாமியர் மதமாற்றத்திற்காக ஊர் ஊராகச் செல்வதில்லை. பிரச்சாரம் மேற்கொள்வதில்லை. அது நன்று. எனினும் வருங்காலங்களில் மதமாற்றம் போன்றவற்றைக் காட்டி, பிறர் வெறுப்பை, வேற்றுமையைக் காட்டக் கூடும். அதைத் தவிர்க்கும் வகையில், தேவேந்திரர் தவிர்த்து பிற இந்து மதத்தவர் இசுலாம் மார்க்கத்தை ஏற்றால், அது குறித்து சற்றே நிதானம் வேண்டும். அவர் எதற்காக மதம் மாறுகிறார் என ஜமாத்தார் தெளிய வேண்டும். அது குறித்து அவரது குடும்பத்தார், உறவினர்கள் நிலையென்ன என்பதை அறிய வேண்டும். அவர் விரும்பித்தான் இசுலாமிய மார்க்கத்திற்கு வருகிறார் என்பது உறுதியானால், அன்னார் மார்க்க நெறியை விரும்புகிறார், அதில் விருப்பமற்ற இரத்த உறவுடையவர், அது குறித்து ஜமாத்தாரிடம் முறையிடலாம் என்பது ஜமாத் மூலமாக அறிவிப்புச் செய்யப்பட வேண்டும். அன்னாரின் பெற்றோர் சம்மதம் பெறுவது அவசியம். அவர் சம்மதமில்லையெனில், அன்றிலிருந்து முப்பது நாட்களுக்குத் தள்ளி வைக்கவேண்டும். இடையில் அன்னாருடன் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது. முப்பது நாட்களுக்குப் பின் அன்னார் மீண்டும் வந்தால் சேர்த்துக் கொள்ளலாம்.

ஜமாத்தார் பிற மதத்துப் பெண்களை இசுலாத்துக்கு மாற்றக் கூடாது. ஆண் மூலமாகவே பெண் மாறவேண்டும். கணவர் மாறினால் பெண்ணின் விருப்பமறிந்து அவரையும் இணைத்துக் கொள்ளலாம். இசுலாமிய ஆண் இந்துப் பெண்ணைத்

திருமணம் செய்யும் நிலையில் அவரை இசுலாமியப் பெண்ணாக மாற்றக் கூடாது. பெண் இந்துவாகவே தொரட வேண்டும்.

இசுலாமியரே, காதல் பொல்லாதது. எல்லை இல்லாதது. எனினும் உலகத்தார் குறிப்பாக மதத்தார் அதை அறியவில்லை போலும். நவீன வாழக்கை முறையில் காதல் வருவதற்கு நிறையச் சூழல்கள் அமைந்து விட்டன. எனினும் பெற்றோரிடமிருந்து காதல்களுக்கு பெரியளவில் எதிர்ப்பும் வருகிறது. அது அவர்கள் தங்கள் பெண்மீது கொண்ட அன்பும் அக்கறையுமெனில் மிகையாகாது. பெற்று வளர்த்தவர் அவர்தானே. அதைக் கருத்தில் கொள்வதும் அவசியம். காதலர்களும் வாழ்வில் ஒன்று சேர்ந்து இன்புற்று வாழ வேண்டும். இரண்டு பேருக்கும் நல்ல தீர்வாக, மதத்தை விடக் காதலிக்கும் பெண்ணும், காதலுமே முக்கியம், பெரிது எனக் காதலன் நினைத்தால், முடிவெடுத்தால், காதலன் அவரது அன்புக் காதலியின் மதத்திற்கு மாறிவிட வேண்டும். இசுலாமியப் பெண்ணை பிற மதத்து ஆண் காதலித்தால், அன்னார் இசுலாமிய மதத்தை ஏற்றுக் கொண்டு, அவர்களோடு வாழ வேண்டும். அவ்வாறே இந்துப் பெண்மீது பிற மதத்து ஆணுக்குக் காதல் வருமாயின், காதலே முக்கியமெனக் கருதி, இந்து மதத்திற்கு மாறிவிட வேண்டும். வீட்டோடு மருமகனாகவே இருந்துகொள்ள வேண்டியதுதான். காதல் முக்கியம், காதலிதான் முக்கியமெனில் இதுதான் சரி. வேண்டாம், முடியாது எனில், பிற மதத்து ஆண், பெண்மீது வரும் காதலில் கவனம் கொள்க. என்றேனும் ஓர் நாள் உலகம் மதத்தைவிட காதலே பெரிதெனக் கண்டு கொள்ளும். அதுவரை காதல்கள் காத்திருக்கட்டும். அந்நாள் விரைவில் வர காதலின் மன்னனான எந்தையாம் கண்ணனிடம் யாம் வேண்டிக் கொள்கிறோம்.

இசுலாமிய நடைமுறைகளில் சற்றே மாற்றம் அவசியம்போல் தெரிகிறது. குறிப்பாக பெண்களின் உடையில். இசுலாம் தோன்றிய அரேபியப் பாலைக்கு அந்த உடைபொருத்தமாக இருக்கலாம். இது தமிழ் நாடல்லவா. உடையில் சற்றே தளர்வு கொண்டால் என்ன. சிறு பெண்பிள்ளைகள்கூட முக்காடிட்டு பள்ளிகளுக்குச் செல்கிறார்கள். எமது கோவை கல்லூரி அனுபவத்தில் சொல்வதானால், சில ஆண்டுகளுக்கு முன்புவரை மாணவிகள் பர்தா அணிந்து பார்த்ததில்லை. சிலர் கல்லூரிவரை அணிந்து வந்து, வகுப்பறையிலிருக்கும்போது கழட்டி விடுவர். கல்லூரி முடிந்து வீட்டுக்குப் போகும்போது மீண்டும் அணிந்து கொள்வர். தற்போதோ அனைத்து மாணவிகளும் பர்தா அணிந்தே வகுப்பறைக்குள்

உட்கார்ந்திருக்கிறார்கள். பள்ளி கல்லூரிகளில் பர்தா அவசியத் தேவையா? சிந்திப்பீர் உறவுகளே.

ஒரு மனிதரைப் பார்க்கும்போது, அவர் இன்ன மதத்தார் எனத் தெரியக் கூடாது. அந்த அளவிற்கே மதத்தை வெளியில், பொதுவிடத்தில் காட்ட வேண்டும். மனிதர்கள் வேடம்போட வேண்டியதில்லை. நடிக்க வேண்டியதில்லை. மனம் நல்மனமாக இருக்க வேண்டியதே முக்கியம். அனைத்து மதத்தாருக்குமே இது பொருந்தும்.

கல்வி நிலையங்களில் பர்தாவைத் தவிர்ப்பது அவசியம். பர்தா உடையின் வரலாற்றை மறக்கக் கூடாது என்பதற்காக, வாரத்தில் ஒரு நாள் வெள்ளிக்கிழமை மட்டும் அணிந்து கொள்ளலாம். அதுகூட கல்வி நிலையங்களில் வேண்டாம். காலமாற்றத்தில் இப்பழக்கத்தை மாதத்திற்கு ஒரு முறையும், பின்னர் வருடத்திற்கு ஒரு நாளும் என வைத்துக் கொள்ளலாம். உடையைவிட இசுலாத்தின் வாழ்க்கை முறைதானே பெரிது.

மற்றொன்று ரம்ஜான் நோன்பிருப்பது. ஐந்து, ஆறு படிக்கும் சிறுபையன்கள்கூட நோன்பிருக்கிறார்கள். எச்சிலைக்கூட விழுங்கக் கூடாது எனும் கட்டுப்பாட்டால், வகுப்பு நடந்துகொண்டிருக்கும்போது வெளியில் போய் துப்பி வருகிறார்கள். அவ்வளவு சிறுவயதில் நாற்பதுநாள் விரதம் கடமையாகச் சொல்லப்பட்டுள்ளதா? முகம்மது நபியின் சொல்லும் முக்கியம் எனில், பத்து வயதிற்கு உட்பட்ட பையன்கள் ஒருநாள் மட்டும் விரதமிருந்தால் போதும் என்பதைக் கடைப்பிடித்தாலென்ன. பத்து முதல் இருபது வயதுள்ளோர் மூன்று நாட்களும், இருபது - முப்பது வயதுள்ளோர் ஒரு வாரமும், முப்பது - நாற்பது வயதில் பத்து நாட்களும், நாற்பதற்கு மேலுள்ளோர் உடல் நிலை முடியுமெனில் நாற்பது நாள்களும் விதரமிருக்கலாமே. நாற்பது வயதிற்குமேல் இறைவனை நோக்கிச் செல்லும் வாழ்க்கையே பொருளுள்ளதாக இருக்கும். இளவயதின் வேகம் குறையட்டுமே மார்க்கத்தாரே.

நபிகள் ஐந்துவேளைத் தொழுகையை வகுத்திருக்கிறார். வகுத்தது அனைத்து இசுலாமியருக்குமா அல்லது மார்க்கத்தை முன்னெடுத்துச் செல்லும், மாாக்கத்தை முன்னெடுப்பதையே நோக்கமாகக் கொண்ட மார்க்க அறிஞர்களுக்கு மட்டுமா? இன்றைக்கு வாழ்க்கைமுறை மாறிவிட்டதல்லவா. இன்றைய வாழ்க்கை

முறையில் நாளுக்கு ஐந்து வேளைத் தொழுகை சற்றே அயர்ச்சியைக் கொடுக்கக் கூடியது. இசுலாமியர்கள் அனைத்துத் துறைகளிலும் இருக்கிறார். வணிகம் செய்பவருக்குக்கூட ஓரளவிற்குத்தான் நேரமிருக்கும். பிற அலுவல்களிலுள்ளோர் தொழுகை கூடவில்லையே என மனஇறுக்கம் கொள்வது நல்லதல்ல. அல்லா சொன்னதை மீறிவிட்டோம் என மனம் உளையுமல்லவா.

மார்க்க அறிஞர்கள், மார்க்கத்தோடு தொடர்புடைய பணிகளில் உள்ளோர் தவிர, பிறருக்கு நாளுக்கு இரண்டு வேளை, காலையும் - இரவும் எனக் கொண்டால் தவறாகுமா? ஆசிரியராக இருக்கும் பெண்கள்கூட மதியம் அறையைப் பூட்டிக் கொண்டு தொழுகிறார். தொழுவதன் நோக்கம் அல்லாவையும், நபிகளையும் மறவாமல் இருப்பதுதானே. சற்றே தளர்த்த முடியுமா, யாருக்கேனும் விலக்குத் தரலாமா என மார்க்க அறிஞர்கள் சிந்தியுங்கள்.

எல்லா மதத்தாரும் அவரவர் மதம் சொல்லியுள்ள, விதித்துள்ள முறைகளில் நடப்பதில்லை, வாழ்வதில்லை. ஆனாலும் மதம் என வந்துவிட்டால் வெறியராகவே மாறிவிடுகிறார். இது அனைத்து மதங்களுக்குமே பொருந்தும். இசுலாமியரும் நிறையக் குடிக்கிறார். மறுக்கவே முடியாது. காலம் மாறிவிட்டது. உலகம் அறிவியல் உலகமாகி விட்டது. உலகமே குடிக்கு மயங்கிக் கிடக்கும்போது, இசுலாமியரை மட்டும் குறைகாண முடியாது. எனினும் பிற மதங்கள் மனிதருக்கு இத்தனை கட்டுப்பாடுகள் போடவில்லை. அல்லா அறிந்திருக்கிறான் - கட்டுப்பாடற்ற வாழ்க்கை தறிகெட்டுப் போய்விடும் என்பதை. எனினும் காலமாற்றத்தில் சில கூடாதுகள் மனதை இறுக்கத்தான் செய்கின்றன. மனஇறுக்கத்தைத் தவிர்ப்பதும் நல்லதுதானே. இசுலாமியர் குடிப்பதில் கட்டுப்பாடு வேண்டும். பகலில் குடிக்கக் கூடாது. பகலில் குடித்துவிட்டு பிற மனிதர்களோடு பேசும்போதும் பழகும்போதும், அவர் இசுலாமியர் குடித்திருக்கிறாரே என நினைப்பார். அல்லாவின் சொல்லை மீறுகிறாரே என எண்ணக் கூடும். பெருமைக்குரிய அல்லாவின் புகழ் கெடும். பணிக்குச் செல்லும்போது குடிக்காதீர். குடித்துவிட்டு வெளியில் சுற்றாதீர். குடிக்காமல் இருக்க முடியவில்லையே எனில், வீட்டுக்குள் மட்டும் குடித்துக் கொள்ளும்.

பெருமைக்குரிய முகம்மது நபியவர்களின் இசுலாத்தை நீர் பின்பற்றுவீரானால் ஊர்கூடி நிகழ்த்தும் கேளிக்கைகள், கொண்டாட்டங்களில் மதுவைத் தொடாதீர். மது விருந்துகளில் கலந்து கொள்ளாதீர். மது மனதைப்

போதையாக்கும். போதை அனைத்து தவறான வழிகளுக்கும் இட்டுச் செல்லும். மதுவும், போதைப் பொருளும் கூடாது என்பது அல்லாவின் சொல். ஏன் சொன்னான் எனச் சிந்திப்பீா். அது மனதைக் கெடுக்கும். சமூகத்தைத் சீரழிக்கும். அதன் பெரிய கொடுமை அதில் நுழைந்துவிட்டால் வெளியேறுவது இயலாது. மிகக் கடினம். இசுலாமியா் மது குடிக்கக்கூடாது. மது குடிக்காமல் இருக்க முடியாது எனும் இசுலாமியா் அளவோடு குடியும். கண்ணியமாக நடந்து கொள்ளும். மனிதரால் முடியவில்லை எனில் இறைவன்தான் என்ன செய்வான். என்றேனும் மனிதா் திருந்துவா். நல்மனிதராய் மாறுவா். அல்லா அருளாளன்.. மனிதரை அறிவான்.

பிறமதத்தாரைக் கொலை செய்தாா், தங்கக் கடத்தலில் சிக்கினாா், போதைப் பொருள் கடத்தி மாட்டிக் கொண்டாா் எனச் செய்திகளில் வரும் இசுலாமியப் பெயா்கள் ஏற்புடையதல்ல. திருட்டும், புரட்டும், கொலையும், கொள்ளையும், மோசடியும், பெருமகனாரின் பெருமைகளைக் குறைப்பவை. அவரது வழியினா் எனச் சொல்வதற்கே அருகதையற்றோா். அல்லாவைக் குறைத்து மதிப்பிடாதீா் இசுலாமியரே.

இசுலாமியப் பெருங்குடியினரே, இந்திய நிலத்தில் இசுலாம் மூா்க்கமாக நடந்துகொண்டதான வரலாறு இருந்தும், இசுலாம் அன்பின் வழி எனும் அசைக்க முடியாத எண்ணத்தாலேயே இத்தகைய முன்னெடுப்புக்கள் எம்மால் மேற்கொள்ளப்படுகின்றன. எம் தந்தை இசுலாத்தின் மேல் நல்லெண்ணம் கொண்டிருந்தாா். தந்தை வழியையே மகனாகிய யாமும் கொள்கிறோம். இருப்பினும் யாம் தந்தையிடமிருந்து சற்று மாறுபட்டுள்ளதையும் அறிவீராக. நடந்தது வரலாறாக இருக்கட்டும். யாம் வரலாற்றை மறக்க மாட்டோம். இனிவரும் காலத்தில் இசுலாம் உண்மையிலேயே அன்பின் வழி என உலகத்தவா் உணருமாறு அமைய வாழ்த்துகிறோம்.

அரபு நிலத்திலும், ஆப்பிரிக்க மண்ணிலும், இசுலாம் பெயரில் நிகழும் வன்முறை வெறியாட்டங்கள் நாகரிகமான மனித சமுதாயத்திற்கு ஏற்புடையவையல்ல. இசுலாமிய தீவிரவாதம் முற்றாகக் களையப்பட வேண்டும். எளிமையான, இனிமையான, அன்பான ஆப்பிரிக்க மக்களை, மதவெறியா்களாக மாற்றுவது மனித குலத்திற்கு எதிரானது. ஆடை அணிவதில் விருப்பற்று இருந்த தொல்குடிகள், தற்போது உடலை முழுதாக மறைக்கும் மனிதா்களாக மாற்றப்பட்டு

விட்டனர். உலகம் மாறி விட்டது. முன்னேறி வந்து விட்டது. இன்றைய மனிதர் உடை இல்லாமல் இருப்பது நாகரீகமன்று. இருப்பினும் முழுக்கவும் மூட வேணடியதில்லை.

ஆப்பிரிக்கச் சமூகம் ஆடையின்றி இருந்ததை, அவர்கள் நாகரீகமற்ற மனிதர், நாகரீகமற்ற சமூகத்தார் எனக் கேலிபேசி வந்த முன்னேறிய உலகத்தார், தற்போது ஆடைகளின்றி திரிவதையே நாகரீகமானதாகக் கருதுகிறார். இதைத்தானே அவர் பன்னெடுங் காலத்திற்கு முன்னரே செய்து வந்தார். யார் பண்பாட்டில் சிறந்தவர் இசுலாமியரே?

முகம்மதியர்களே, மனித சமூகம், மானுடப் பண்பாடு, அடுத்த கட்ட உயர்வு நோக்கி நகர்கிறது, முன்னேறுகிறது. மானுடப் பிறவியின் நோக்கமே அதுதான். நாம் மேலேமேலே எனப் போவதற்கே மதங்கள் பிறந்துள்ளன. நம்மை மேலே உயர்த்தவே கடவுள்கள் காத்திருக்கிறனர். அதற்கு மாறாக மானுட சமூகத்தைப் பின்னோக்கி இழுக்கும் தீவிரவாதம் உலகிலிருந்து அகல வேண்டும்.

உலகத்தோரே.. இனிவரும் காலத்தில் மததீவிரவாதத்தால் அப்பாவிப் பொதுமக்கள், குழந்தைகள், பெண்கள், எளியோர் கொல்லப்பட்டால் அதற்குக் காரணமான மதத்தார் மீது, அச்சமூகம் மீது, இருள் சூழும். அச்செயல்களுக்கு அன்னார் வழிபடும் கடவுளே பொறுப்பாக நேரிடும். கடவுளே ஆயினும் பதில் சொல்ல வேண்டி வரும். உறுதியாக. அறிக. தெளிக. இது கண்ணனின் சொல்.

இசுலாமியப் பெருமக்கள் அல்லாவை நம்புகின்றனர், அல்லாவின் தூதர் நபியை நம்புகின்றனர், குரான் வேதத்தை நம்புகின்றனர். நல்லது. இசுலாமியர் நம்பிக்கையில் சிறந்தவர். ஒப்பலாம்.

எனில், இந்துக்களின் நம்பிக்கை எத்தகையது? இந்துக்கள் என்பார் கல்லைக் கும்பிடுகிறார். கல்லைச் சிலையாக வடித்துக்கொண்டு அதைக் கடவுளாக வணங்குகிறார். நம்பிக்கையில் பெரியவர் யார் பெருங்குடி மக்களே? இந்துக்கள் தம் கடவுளுக்கு, பிற மதத்தார் பேச்சில் கல்லுக்கு அமுதூட்டுகிறார், நீரளிக்கிறார், பால் பழங்கள், பட்சணங்கள் கொடுக்கிறார். யார் நம்பிக்கை சிறந்தது பெரியோர்களே?

இந்துக்களின் நம்பிக்கை கண்ணன் பத்தாவது அவதாரனாய் - கற்கியனாய் வருவான். இந்துக்கள் நம்பிக்கை உண்மையாகுமா? வெல்லுமா?

கமலபாதக் கண்ணன் வாக்குத் தத்தமானவனன்றோ! அவன் சொல் பொய்யாகுமோ..

எம்மீது பேரன்பு செலுத்திய அன்புச் சொந்தங்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள். குறிப்பாக, திருமதி. பாத்திமா பாய் டீச்சர். சிறுபையனான எம்மை டீச்சருக்கு மிகவும் பிடிக்கும். எமது நினைவு சரியெனில் யாம் டீச்சர் அருகில்தான் தூங்கினோம். அந்த வயதில் டீச்சரை எப்படி அழைத்தோம் என நினைவில்லை. எனினும், இப்போது உறவுமுறை சொல்லி அழைக்கலாமல்லவா. டீச்சர் எமக்கு அத்தை எனும் உறவாகட்டும். நிறைமதியான பாத்திமா அத்தைக்கு நன்றி. குடும்பத்தாருக்கு நன்றி. நம் உறவு என்றும் நிலைத்திருக்கட்டும் அத்தை.

மைத்துனர் மைதீன் கானுக்கு நன்றி. கல்லூரியில் நாங்கள் ஒன்றாகவே சுற்றித் திரிந்தோம். அந்த நாட்கள் என்றும் மகிழ்வானவை, நினைக்குந்தோறும் தித்திப்பவை. நம் சொந்தம் என்றென்றும் நினைவிலிருக்கட்டும் அன்புத் தோழனே.

உதிரம் மூலமான சொந்தம் மட்டுமே சிறந்த சொந்தமா. இதயங்கள் இணைவதால் உண்டாகும் சொந்தங்கள் குறைந்தவையா உலகினரே. மனிதர்கள் இதயத்தாலும் சொந்தமாகலாம். வாருங்கள் இதயங்களால் இணைவோம், சொந்தமாவோம், நட்பாவோம். நாம் ஒரே குடும்பம். நம் குடும்பம் மிகப் பெரிது. நம் குடும்பம் மிக மிகப் பிரம்மாண்டமானது.

இசுலாம் எங்கள் வழி, தமிழ் எங்கள் மொழி என வாழும் தமிழ்ப் பெருநிலத்தின் சொந்தங்களுக்கு நன்றியும் பெருமையும்.

தமிழ் உறவுகளே.. நம் தமிழ் உலகை உய்விக்கும். தமிழ் உலகை உயர்த்தும்..

தமிழ் உலகின் அனைத்து உயிர்களையும், அனைத்து மனிதர்களையும், அனைத்து மொழிகளையும், பண்பாடுகளையும், மதங்களையும், அனைவர் கடவுள்களையும் உயர்த்தும், செழிக்கச் செய்யும், வளர்க்கும்.. வளம் சேர்க்கும்..

நம் தமிழ் வளர்மொழி.. நிறைமொழி.. மதிமொழி.. மலர்மொழி, தேன்மொழி, அமுதமொழி.. முத்துமொழி, செம்மொழி, தெய்வமொழி.. உலகின் பொது மொழி.

**பெருகுக தமிழ்! வளர்க தமிழ் ஞானம்!!**

இசுலாமியப் பெருமக்களின் வாழ்வு செழிக்கட்டும். மனம் மகிழட்டும், நிறையட்டும்..

போற்றுதலுக்குரிய நபி பெருமானாரின் புகழ் வளரட்டும்!

அன்பில் பெரியோனான அல்லாவின் அன்பு சிறக்கட்டும், அன்பில் மேலும் பெரியவன் என அவன் புகழ் உயரட்டும்..

**அன்பில் மிகப்பெரியவன் வாழி!**

23. தமிழகத்தின் கிறித்தவர்கள் நற்குணங்கள் நிரம்பியவர். குடும்பத்தை நேசிப்பவர். நேர்மைக் குணம் கொண்டவர். அதிகம் படித்தவர். அறிவை முன்னெடுப்பவர்.

அறிவு தன்னம்பிக்கையைக் கொடுக்கும். மாறாக, கிறித்தவர் எதற்காக அழுகிறார் எனத் தெரியவில்லை. எதற்கு அவர் கண்கள் அழுதழுது குழிவிழிந்து கிடக்கின்றன எனப் புரியவில்லை. கற்றவர், கல்வியில் பெரியவர் அழுவரோ? அழுகிறார் எனில், இன்னும் சொல்லப்போனால் எதற்கெடுத்தாலும் ஒப்பாரி வைக்கிறார் எனில் அவரென்ன அறிவுடையவர்? அவரென்ன கற்றவர்? கல்வி அழாது. பிறரையும் அழவிடாது. அழுபவருக்கு ஆறுதல் சொல்லும். அறிவு பிறர் கண்ணீரைத் துடைத்துவிடும் - அன்னையாம் புனிதத் தெரசா போல.

எமக்கு உலக நாடுகளிலுள்ள பிற கிறித்தவரைத் தனிப்பட்ட முறையில் தெரியாது. யாம் குறிப்பிடுவது தமிழ் நிலத்தின் கிறித்தவரையே. அனேகமாக எமது தெளிதல், எமது உலக அறிவு சரியெனில், உலகமெங்கும் வாழும் பெருவாரியான கிறித்தவர்கள், குறிப்பாக சீர்திருத்தக் கிறித்தவர்கள் பிரார்த்தனை எனும் பாவனையில் அழத்தான் செய்கின்றனர். சபைக்காரர்களின் மன்றாட்டுகள் உறுதியாக ஒப்பாரியேதான். எதற்கு இப்படி அழுகிறார்கள்? இதென்ன மதம்? ஏன் மற்றவரையும் இந்த ஒப்பாரி வழிக்கு இழுக்கிறார்கள்?

தமிழகத்தில் கிறித்தவராக இருந்தாலும் அவர் மனத்தில் தமிழ் குறித்து நல்லெண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை. அது எல்லா நிலைகளிலும் எதிரொலிக்கிறது. தமிழ் நிலத்தின் பெருங்கோவில்களில், போனால் போகிறதென்று

தமிழுக்கு சற்றே இடம் கொடுக்கப்படுவதுபோல், அன்னார்களது பிரார்த்தனைகளில் ஆங்கிலமே ஆதிக்கம் செலுத்துகிறது. அதுவும் நல்லதுதானே, தமிழக கிறித்தவர் உலகக் குடிமக்களாக மாறிவருவது சிறப்புத்தானே எனில், அங்கேதான் இடிக்கிறது சாதி. சாதி என வரும்போது மட்டும் தமிழகத்தின் கிறித்தவர் தமது சாதியை தலைக்குமேல் தூக்கிப் பிடிக்கிறார். தம் சாதியைப்போல் உண்டுமா என்கிறார், சாதியாய் அணி திரள்கிறார்.

யாம், தமிழ் நிலத்தின் கிறித்தவர் வேறு, கிறித்துவம் வேறு என நினைக்கிறோம். கிறித்தவம், அதன் கொள்கைகள், வழிமுறைகள், நன்றாகவே உள்ளன. எனினும் அதை முன்னெடுப்பவர்? தமிழ் நிலத்தின் ரோமன் கத்தோலிக்க மரபு சற்றே தளர்வோடு நடந்து கொள்வது பாராட்டத்தக்கது. எமக்குத் தெரிந்த கத்தோலிக்கத் தோழி நெற்றியில் குங்குமம் வைத்திருக்கிறார். குங்குமம், பொட்டு, பூவு வைத்தால் கிறித்தவரில்லையா? கூடாது என புதிய ஏற்பாட்டில் சுட்டப்பட்டுள்ளதா?

மதங்கள் மனிதர்களின் அன்றாட நடவடிக்கைகளில் தலையிடவே கூடாது. மனிதர்களின் சின்னச் சின்ன செயல்களையெல்லாம் மதக்கண்ணாடி கொண்டு பார்க்கக் கூடாது. மனிதர்கள் மகிழ்ச்சியாக வாழவே மதங்கள். சிறு பொட்டில் என்ன வந்துவிடும்? இப்படி கிறித்தவ மதத்தை முன்னெடுத்தது, இறுக்கியது யார்? எதற்காக?

அய்ரோப்பியக் கிறித்தவருக்கு பூச்சூடும் பழக்கமில்லை. அவர் பொட்டு வைப்பதில்லை, வளையல் அணிவதில்லை. அது அவரது பண்பாடு. வரலாற்றை உற்றுப் பார்த்தால் ஐரோப்பியருக்கென்று ஒரு வரலாறு இருப்பதாகத் தெரியவில்லை. அது புதிய நிலம். அவரது மதம், அம்மண்ணில் முளைத்ததல்ல. எந்த மண்ணில் மதம் முளைக்கிறதோ, அது அம்மண்ணின் மணத்தையும் குணத்தையுமே கொண்டிருக்கும்.

கிறித்தவர் கிறித்தவத் தமிழராக இருக்கிறார், தமிழ்க் கிருத்துவராக இல்லை. அன்னார்களுக்கு மதமே முக்கியமாகத் தெரிகிறது. தமிழருக்கு தமிழ்தான் முக்கியமாக இருக்கிறது. தமிழருக்கு தமிழ்தான் பெரிது. தமிழே தாய். அவளுக்குப் பின்பே மதம். எனில், தமிழ் நாட்டின் கிறித்தவரை தமிழராக ஏற்பதா, கிறித்தவராக ஏற்பதா?

தமிழ் நாட்டில் வாழும் கிறித்தவர், தமிழ் நிலத்தின் பெருமைக்குரிய, போற்றுதலுக்குரிய பொங்கல் திருநாளின் தித்திக்கும் பொங்கலை உண்டார் எனில், அவர் தமிழ்க் கிறித்தவர். இல்லையெனில் அவர் கிறித்தவர். அன்னாரைத் தமிழராகக் கொள்வதில் பொருளில்லை. தமிழுக்கு இத்தகைய மதவெறிகொண்டோர் தேவையில்லை.

எமதனுபவத்தில் கண்கூடாகப் பார்க்கிறோம். தைத்திருநாளைக் கொண்டாடும் விதமாக கல்லூரிகளில் மாணவர்கள் இணைந்து பொங்கல் விழாக் கொண்டாடுகிறார்கள். மாணவர்களின் பொங்கல் விழாவில் கிறித்தவர்கள் குறிப்பாக, சீர்திருத்தக் கிறித்தவர்கள் கலந்து கொள்வதில்லை. மாணவர்களில் பெரும்பாலான கிறித்தவர் பங்கு பெறுகிறார். எனினும், அவருள்ளும் சிலர் பொங்கலை உண்பதில்லை.

எமதனுபவத்தில் இசுலாமிய மாணவர்கள் முன்னின்று பொங்கல் விழாவைச் சிறப்பிக்கின்றனர். மகிழ்ச்சியாகக் கொண்டாடுகின்றனர். அவ்வாறே சரஸ்வதி பூசைகளிலும் கலந்து கொள்கின்றனர். பொரி, சுண்டல் சாப்பிடுகின்றனர். சில கிறித்தவ மாணவிகள் பொரி சுண்டலைக்கூட வாங்குவதில்லை. யாமே நேர் சாட்சியாக இருக்கிறோம். மாணவப் பருவத்திலேயே இவ்வளவு மதங்கொண்டிருந்தால், இவர்கள் நடுத்தர வயதாகும்போது எவ்வளவு வெறி கொள்வர்?

கிறித்தவப் பேராசிரியர்கள் மாணவர்கள் அன்போடு பொங்கிய பொங்கலை உண்பதில்லை. மதத்தை தலைக்குமேல் கொண்ட சிலர், அன்றைக்குப் பார்த்து விடுமுறை எடுத்து விடுகின்றனர். வந்திருக்கும் சில பேராசிரியர்களுக்கு தனியாகச் செய்த பொங்கலை அதாவது வீட்டில்செய்து எடுத்து வந்த பொங்கலைக் கொடுக்கின்றனர். சூரியனுக்குப் படைத்த பொங்கலைச் சாப்பிட மாட்டார்களாம். பொங்கல் படைப்பது சூரியனுக்குத்தானே. பேராசிரியர்களுக்குத் தெரியாதா - சூரியனால்தான் மண்ணில் உணவென. அன்னார்களை திருநீறு பூசச் சொல்லவில்லை, ஆரத்தியைத் தொட்டு வணங்கச் சொல்லவில்லை, கும்பிடச் சொல்லவில்லை. உழவர்களுக்கும் - சூரியனுக்கும் நன்றி தெரிவிக்கும் அமுதமான பொங்கல் சோற்றில் இவர்கள் மதம் பார்க்கிறார் எனில், இவர்கள் தமிழர்கள் என எப்படி ஒப்புவது?

இசுலாமியரை மதவெறி கொண்டோராக ஊடகங்கள் திட்டமிட்டு சித்தரித்து விட்டன. அதை வளர்த்தும் வருகின்றன. உண்மையில் மதவெறியோடு நடந்து கொள்வது கிறித்தவரே. தமிழர்கள் அனைத்தையும் சாதியாய்ப் பார்ப்பதால், அவரவர் சாதி கிறித்தவர்களைக் கண்டு கொள்வதில்லை. அவர்களை வளர்த்தும் விடுகின்றனர். கிறித்தவர் அனைத்திலும் மதம் பார்க்கின்றார். இது நல்லதல்ல.

யாம் பிற கிறித்தவரை விமர்சிப்பதை அன்னார்கள் தவறாக நினைக்கக் கூடும். யாம் சார்ந்துள்ள தேவேந்திர குலத்தில் இருக்கும் கிறித்தவர்களுக்கு சிலவற்றைத் தெளிவாக்க விரும்புகிறோம்.

தமிழ் நிலத்தில் வாழும் தேவேந்திர குலத்தவருக்கு தமிழே தாய் மொழி. தமிழுக்கே முதன்மை இடம். தமிழர் பண்பாட்டிற்கே முன்னுரிமை. மதம் தமிழுக்குப் பின்புதான். நீர் தமிழை முன்னால் வைக்கிறீரா அல்லது மதத்தை முன்னால் வைக்கின்றீரா என்பதை முடிவெடுத்து அறிவிக்க வேண்டும்.

மதம்தான் உமக்கு முக்கியமாகத் தெரிகிறதெனில், தமிழ் நிலத்தார் சாதியை முக்கியமாகக் கருதுகிறாரா அல்லது மதத்தையா என்பதைத் தெளிய வேண்டும். பிற தமிழர் அனைத்திலும் சாதியே பார்க்கிறார். உறுதியாக. கடையில் பொருள் வாங்கினாலும் அவரவர் சாதிக்காரர் கடையிலேயே வாங்குகிறார்.

தமிழ் நிலத்தில் மதங்களே சாதிகளாக இருக்கின்றன. ஒவ்வொரு சாதியும் ஒரு மதம். அதனால்தான் சாதிக்கு இத்தனை முக்கியத்துவம் கொடுக்கிறார். யாம் உறுதியாகவே சொல்கிறோம். இங்கு மதங்களே சாதிகளாக இருக்கின்றன.

இங்கு நீர் கிறித்தவரே என்றாலும் என்ன சாதிக் கிறித்தவர் என்றே பார்க்கப்படும். அதை வைத்தே அனைத்தும் தீர்மானிக்கப்படும். நீர் கிறித்தவர் என்பதற்காக உமது வீட்டில் பெண்ணெடுப்பாரா? பெண் கொடுப்பாரா? அதை விடும். உம்மை சமமாகவாவது நடத்துவாரா? சிந்தியும், தெளியும் கிறித்துவத் தேவேந்திரரே.

நீர் முடிவெடும். முடிவெடுத்து நீவீர் கிறித்தவர் மட்டுமே, உமக்கு சாதி இல்லை, நீவீர் சாதியிலிருந்து வெளியேறுகிறீர், இனி எக்காலத்தும் இச்சாதியோடு உமக்கு உறவில்லை என உம்மால் அறிவிக்க முடியுமா? ஆம் எனில், நீர் கிறித்தவர் மட்டுமே. நீவீர் தேவேந்திர குலத்தவரில்லை. நீவீர் தேவேந்திர

குலத்தவரில்லை எனில், சிறு சடங்கொன்றைச் செய்துவிட்டு குலத்திலிருந்து வெளியேறும்.

நீர் தேவேந்திர குலத்திலிருந்து வெளியேறுவது என முடிவெடுத்து விட்டால், தெருக்காரர்கள் முன்னிலையில், கோவில் இருந்தால் கோவில் முன்னால் இதைச் செய்யும். ஒரு மண் பானையில் ஏழுபடி பால் எடுத்துக் கொள்ளும். அதில் கைப்பிடி அளவுள்ள ஏழு சீனிக்கற்களைப் போடும். போடும்போது உமது அப்பா பெயர், தாத்தா பெயர், பாட்டன் பெயர்களைச் சொல்லிப் போடும். அதற்கு மேல் பெயர்கள் தெரியவில்லை எனில், நான்காம் தலைமுறை, ஐந்தாம் தலைமுறை, ஆறாம் தலைமுறை எனச் சொல்லிப் போடும். உம்மோடு மொத்தம் ஏழு தலைமுறை கணக்கு வர வேண்டும். கல்லைப் போட்டபின் பால் பானையைத் தலையில் வைத்து, யாம் தேவேந்திர குலத்தவனில்லை, இன்றிலிருந்து யாம் கிறித்தவன் மட்டுமே, இதற்கு வானும் மண்ணும் சாட்சி எனச் சத்தமாகச் சொல்லிவிட்டு பால்பானையைத் தலையிலிருந்து அப்படியே கீழேபோட்டு உடைத்து விடும். இது எளிய செயல்தானே. இதைச் செய்த அன்றிலிருந்தே நீவீர் கிறித்தவர். உமக்கும், தேவேந்திர குலத்திற்கும் எந்த உறவும் கிடையாது. எக்காலத்தும்.

உமது மனைவி செய்ய வேண்டியது, எட்டு அடி நீள பச்சை வண்ண நூலை எடுத்துக் கொள்க. ஒரு மண் கலயத்தில் ஒருபடி மஞ்சள் நீர் எடுத்துக் கொள்க. நூலை கையில் எடுத்து, இனி வரும் காலங்களில் எமது ஏழு தலைமுறைகளுக்கும் தேவேந்திர குலத்தோடு ஒட்டுமில்லை, உறவுமில்லை என உரக்கச் சொல்லிவிட்டு ஒவ்வொரு அடிக்கும் ஒரு துண்டுக் கயிறு என ஏழு முறை நூலைக் கத்தரித்து கலயத்தில் போடுக. கலயத்தை ஒரு முறை சுற்றி வந்து காலால் மிதித்து உடைத்து விடுக.

இச்சடங்கு கத்தோலிக்கர் தவிர்த்த பிற கிறித்தவப் பிரிவினருக்கு மட்டுமே. தேவேந்திரர் கத்தோலிக்க மதத்திலிருந்தால் அவரை கிறித்தவராக ஏற்றுக் கொள்க.

தேவேந்திர குலத்தவர்கள் இதில் உறுதியாக நில்லுங்கள். நம்மைப் பொருத்தவரை மேற்கூறிய சடங்கைச் செய்தவரே கத்தோலிக்கர் தவிர்த்த கிறித்தவர். அந்தச் சடங்கைச் செய்ய விரும்பவில்லை என்பவர், தேவேந்திரர்களின் குலதெய்வ வழிபாட்டில் கலந்துகொள்ள வேண்டும். தேவேந்திரர் தெரு சார்பாகப்

பொங்கல் விழா நடத்தினால் அன்னாரும் கலந்து கொள்ள வேண்டும். பொங்கல் உண்ண வேண்டும்.

அன்னார் நாம் கும்பிடும் பிற வழிபாட்டு முறைகளில் கலந்து கொள்ளாவிட்டாலும், பொங்கல் விழாவில் கட்டாயம் இடம் பெற்றே தீரவேண்டும். இல்லை எனில், அச்சடங்கைச் செய்து தேவேந்திரர் குலத்திலிருந்து வெளியேற வேண்டும்.

அன்னார் பால்பானையை உடைத்த பின்பு, கீழே கிடக்கும் ஏழு கற்களையும் ஒரு மஞ்சள் துணியில் கட்டி தெரு சார்பில் பத்திரமாக வைக்கவும். அன்றிலிருந்து ஓராண்டு கழித்து, சேதுக்கடலில் மஞ்சை பையை முழுக்கடித்து விடுக. கிறித்தவப் பெண் வெட்டிய ஏழு துண்டுகளை ஒரே சரடாக முடித்துக் கருப்பு நிற பையினுள் வைத்துக் கொள்க. தெருவில் ஏதேனும் பொது சமையல் செய்யும்போது நூல் பையை நெருப்பில் போட்டு விடுக.

நாங்கள் தேவேந்திர குலத்தவரே, எங்களுக்கு தமிழும், தமிழர் பண்பாடும்தான் முக்கியம், எனினும் நாங்கள் கிறித்துவில் நம்பிக்கை கொள்கிறோம், நாங்கள் கிறித்தவராகத் தொடர்கிறோம் எனத் தேவேந்திரக் கிறித்தவர் முடிவெடுத்தால் நல்லது. பாராட்டத்தக்கது. யாம் மனதார வரவேற்கிறோம்.

அந்நிலையில் சிலவற்றைத் தவிர்க்க வேண்டுகிறோம். சிலவற்றைக் கூடாது என்கிறோம். தவிர்க்க வேண்டியது அழுகை. நீர் அழக்கூட இல்லை, ஒப்பாரிதான் வைக்கிறீர். அதை நிறுத்தும். அழும் பிள்ளையை, கண்ணீர் சிந்தும் பிள்ளையை எந்தத் தகப்பனுக்கும் பிடிக்காது.

பிரார்த்தனையிலும் இடம் பொருள் வேண்டும். பிரார்த்தனையை மனதில் வேண்டிக் கொள்ளலாமில்லையா? பொது இடத்தில் வாய் விட்டு ஏன் கதறுகிறீர், அழுகிறீர். பிற மதத்தார் எவரும் இப்படி எதற்கெடுத்துதாலும் பிரார்த்திப்பதில்லை, அழுவதில்லை.

கிறித்தவ நம்பிக்கையை, மதத்தை, உம்மோடு, உமது குடும்பத்தோடு மட்டுமே வைத்துக்கொள்ள வேண்டும். உமது நம்பிக்கையை மற்றவரிடம் பரப்பக் கூடாது. பிற இடங்களுக்கு ஊர்களுக்குச் சென்று ஒருபோதும் மதப் பரப்புதலில்

ஈடுபடக் கூடாது. தேவேந்திர குலத்தார் மதப் பரப்புதலில் ஈடுபடுகிறார் என்பது குற்றத்தில் சேரும். நமக்கு எம்மதமும் சம்மதமே. அனைத்து மதங்களும் நம்மவையே.

தேவேந்திர குலத்தவர் சபைக்காரர்களிடமிருந்து விலகி இருக்க வேண்டும். சபைக்காரர்களின் இயேசுவைப் பற்றிய முன்னெடுப்புகள் ஏற்கத்தக்கதல்ல. தேவேந்திர குலத்தார் முழு இரவு ஜெபம் போன்றவற்றிலிருந்து விலகி இருங்கள்.

தேவேந்திர குலத்தவரே, உமக்கு உறுதியாகவே சொல்லுகிறோம். இயேசு கூப்பிடுகிறார், வரச் சொல்கிறார் போன்ற அழைக்கும் சபைக்காரர்களிடமிருந்து விலகியே இருங்கள். உறுதியாகவே. இவர்கள் சுட்டும் இயேசு அல்ல நமது இயேசுபிரான்.

எம் காலத்து மக்களால் இயேசு ஆண்டவராகக் கொண்டாடப்படுகிறார். வழிபடப்படுகிறார். இயேசு தம்மை ஆண்டவரின் மகன், பிள்ளை எனக் கூறியதாகச் சுட்டப்பட்டாலும், பின் வந்த காலங்களில் தந்தையும் மகனும் ஒன்று எனும் கருத்தின் அடிப்படையில், இயேசுநாதரும் ஆண்டவராக வழிபடப்படுகிறார். உலகெங்கிலும் வாழும் கோடிக்கணக்கான மக்கள் இயேசுபிரானைக் கடவுள் என நம்புகின்றனர். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் யாம் இந்த சிறுசடங்கு முறையை, தமிழ் நிலத்தில் வாழும் கிறித்தவ சகோதரர்களுக்கு அறிவிக்கின்றோம்.

கத்தோலிக்க மற்றும் தென்னியத் திருச்சபைகளின் காலை, மாலை பிரார்த்தனைகள், சிறப்பு நாட்கள் தவிர, பிற நாட்களில், தினப் பிரார்த்தனைகளை ஒலி பெருக்கியில் ஒலிபரப்பக் கூடாது. தேவாலயத்தின் உள்ளே மட்டுமே ஒலிபெருக்கிகள் பயன்படுத்த வேண்டும். அதிகாலையில் அனைத்துத் தேவாலயங்களிலும் போடப்படும் மன்றாட்டுகள், காலை நேர அமைதியைக் குலைக்கின்றன. தேவாலயங்களில் இரவு எட்டு மணி தொடங்கி, அதிகாலை ஐந்து மணி வரையிலும் எவ்வித மன்றாடுகளையும், பாடல்களையும் சத்தமாக ஒலிபெருக்கியில் ஒலிபரப்பக் கூடாது.

கத்தோலிக்கத் திருச்சபைகளில் காலை ஐந்து மணிக்கு ஒரு முறை மணிக் கூட்டின் மணி அடிக்கவும். ஆறு மணிக்கு இரண்டு முறை. ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ஒரு எண்ணிக்கையைக் கூட்டி, இரவு பத்து மணிக்கு பதினெட்டு முறை மணியடித்து, அந்த நாளினை நிறைவு செய்யவும்.

தென்னிந்தியக் திருச்சபைகளில் சரியாக காலை ஆறு மணிக்கும், மதியம் பன்னிரெண்டு மணிக்கும், மாலை ஆறு மணிக்கும் என ஒவ்வொரு முறையும் ஆறுமுறை என, நாளுக்கு பதினெட்டு முறை மணியடிக்கவும்.

திருச்சபைகளில் பெரிய மணிகள் இல்லையெனில் புதிதாக நிறுவுக. மணி பெரியதாக இல்லாவிட்டாலும் மணியோசை ஒரு கிலோ மீட்டர் சுற்றளவுக்காவது கேட்கும் அளவுக்கு இருப்பது அவசியம்.

இச்சடங்கு அன்றாடச் சடங்கு முறைகளுக்கு அப்பாற்பட்டுக் கடைபிடிக்க வேண்டியது. மணியோசையின் எண்ணிக்கையையும், நேரத்தையும் சரியாகக் கணக்கிடுக.

தமிழ் நிலத்தில் வாழும் பரதவர், தேவேந்திரர் மற்றும் வன்னிக் குடிகளைச் சார்ந்த கத்தோலிக்கக் கிறித்தவர்கள் ஒன்றிணைந்து வேளாங்கன்னி அன்னை மரியாளுக்கு தங்கத்தாலான சிலுவையொன்று சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகிறது. நாம் மூன்று குடிகளும் ஒன்றே. நமது குலங்கள் ஒத்தவையே. நாம் பள்ள நிலத்து மக்கள். கடல் என்பதற்கு பெரும் பள்ளம் என்றே பொருள். பள்ள நிலத்தில் வாழ்பவர் பள்ளர் எனில் பெரும்பள்ளத்தில் வாழ்பவர் பெரும் பள்ளரன்றோ. பள்ளி எனும் சொல் முன்பு பெருமதிப்பிற்குரியதாக இருந்திருக்கிறது. மங்களம், பெரியது, சிறப்பானது எனும் பொருளில் ஆளப்பட்ட பள்ளி சொல், பிற்காலத்திலேயே தாழ்வான பொருள் கொண்டதாக மாற்றப்பட்டிருக்கிறது.

மீனவ சமூகத்திற்கு பள்ள, மீன் பள்ளி எனும் பெயர்கள் சுட்டப்படுவதும், வங்கத்தில் மீனுக்கு பள்ள மீன் எனப் பெயர் வழங்குவதும் ஒப்பு நோக்கத்தக்கது.

நம் பெருமைமிகு தந்தையின் தியாகத்தைப் போற்றும் விதமாக, நம் பெருந்தந்தையின் பேரன்பைச் சிறப்பிக்கும் விதமாக, நம் அன்புத் தந்தையை நினைவுகூறும் விதமாக, வேளாங்கன்னித் தேவாலயத்திற்கு தங்கச் சிலுவையொன்று நம்மால் அளிக்கப்பட வேண்டும். சிலுவையின் நீளம் 108 சென்டிமீட்டராகவும், குறுக்கம் பக்கத்திற்கு 48 செ.மீ. எனவும் அமைவது சிறப்பு.

சிலுவை இலத்தீன அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும். சிலுவையின் நேர்பாகம் 6 கிலோ தங்கத்திலும், குறுக்குப் பாகம் பக்கத்திற்கு 2 கிலோ என பொற்சிலுவை மொத்தம் 10 கிலோ கிராம் எடையில் இருக்க வேண்டும்.

சிலுவையின் நீளமும், எடையும் துல்லியமாக அமைக்கப்பட வேண்டும். சிலுவையின் தடிமன் எந்தளவுக்கு இருக்க வேண்டுமென்பதை பொற்கொல்லரிடம் கேட்டுத் தெளியலாம். சிலுவைக் கோடுகளின் அகலம் 18 செ.மீ. என இருப்பது பொருத்தமன்றோ மூத்தோரே.

ஒரு கத்தோலிக்க மீனவக் குடும்பத்திடம் ஒரு கிராம் எனும் அளவில் பொன் பெறலாம். எனில் 6000 மீனவக் குடும்பங்களிடம் தங்கம் பெற வேண்டியதிருக்கும். தமிழகத்தின் பெருவாரியாக மீனவக் குடிகள் வாழ்வதால் 6000 பொற்காசுகள் பெறுவது எளிதே.

வன்னிய மற்றும் தேவேந்திரப் பெருங்குடிகளிலிருந்து 2000 கிராம் பொற்காசுகள் பெற்றுக் கொள்ளலாம்.

10,000 பொற்காசுகள் பெறப்பட்டவுடன் அவற்றை வெள்ளைப் பட்டுத் துணியில் வடவேங்கடம் முதல் கன்னியாகுமரி வரையான தமிழ் நிலத்திற்குள் பாயும் முக்கியமான பதினெட்டு ஆறுகளிலிருந்து ஒவ்வொறு குடம் நீரெடுத்துக் கொள்ளவும்.

பொற்காசு முடிப்பை கன்னியாகுமரி முனை தொடங்கி வேளாங்கன்னி வரையிலான கடற்கரையின் பதினெட்டு இடங்களில் மும்முறை முழுக்காட்டி எடுக்கவும். பதினெட்டும் மீனவக் குடிகளின் ஊராக இருக்க வேண்டுமென்பதில்லை. பதினெட்டு ஊர்களில் யாம் பரிந்துரைக்கும் சில ஊர்கள் உவரி, மணப்பாடு, திருச்செந்தூர், வீரபாண்டி பட்டணம், காயல்பட்டணம், தூத்துக்குடி, முகையூர், வாலி நோக்கம், சேதுக்கரை, மண்டபம், தேவிபட்டணம், தொண்டி, கோட்டைப்பட்டணம், கோடியக்கரை, வேதாரண்யம் போன்றவை இடம் பெறலாம். குமரி முனைக்கு மேற்கேயும் பொற்காசுகளை மூழ்கி எடுக்கலாம் எனில் குளச்சல், மண்டைக்காடு, முட்டம் போன்றவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.

ஒருவேளை மூன்று குடிகளும், கலந்து பேசி 48 கடற்கரைகளில் மூழ்கி எடுக்கலாம் எனில் கேரளாவின் கோழிக்கோடு - கப்பாட் கடற்கரை தொடங்கி நெல்லூர் வரையிலான கடல்களில் 48 இடங்களைத் தேர்வு செய்யலாம். 108 கடல்களில் மூழ்கி எடுப்பது சிறந்தது என நினைத்தால் மேற்கின் துவரகை கடல் தொடங்கி கிழக்கே சாகர்தீப் கடல்வரை தேர்ந்தெடுப்பது சிறப்பு.

பொற்காசுகளை கடலுள் மூழ்கி எடுக்கும்போது கவனம் தேவை. வேண்டுமானால் பொற்காசுகளை மூன்று பட்டுத் துணிகள் கொண்டு கட்டிக் கொள்ளலாம். முதலாவது நீலப்பட்டாலும், இரண்டாவதை பச்சைப்பட்டாலும், மூன்றாவது வெள்ளைப் பட்டாலும் இறுக்கமாகக் கட்டிக் கொள்ளலாம். ஒருமுறை பொற்காசுகளைக் கட்டிவிட்டால், இடையில் அவிழ்க்கக் கூடாது. கவனம் தேவை. பொறுமையும் அவசியம். மூத்தோர்கள் நல்ல முறையில் நிறைவேற்றுவர் எனத் திடமாக நம்புகிறோம்.

பொற்காசு முடிப்பை இறுதியாக வேளாங்கன்னிக் கடலில் மூன்றுமுறை மூழ்க்கி எடுத்துக் கொள்ள வேண்டும். பொன் முடிப்பை மாதா கோவில் வாசல் மண்டபத்தில் வைத்து, பதினெட்டு ஆறுகளின் நன்னீரை ஊற்ற வேண்டும். நன்னீரை ஊற்றும்போது வடக்கின் ஆறுகளிலிருந்து ஆரம்பிப்பது நன்று. பதினேழு ஆறுகளின் நன்னீரை ஊற்றியபின், பொன்முடிப்பை அவிழ்த்து, இறுதியாக காவிரி நீர் ஊற்ற வேண்டும். காவிரி நீரை ஊற்றும் முன் பொற்காசுகளை பெரியதொரு சல்லடையில் போட்டே ஊற்ற வேண்டும். காசுகளை நாற்திசையிலும் வானத்தை நோக்கிக் காட்டிவிட்டு, ஒருமுறை மண்ணில் வைத்து, மாதா சிலையின்முன் குவித்து விட வேண்டும். பொற்காசுக் குவிலுக்குமுன் மங்கலப் பொருட்கள் வைக்கப்பட வேண்டும். மரக்கால் அரிசி, மரக்கால் உப்பு மற்றும் மரக்கால் நவதானியங்களும், படிக்கு ஒன்றாக ஏலாக்காய் போன்ற வாசனைப் பொருட்களும், பூக்கள் வாசனைப் பொருட்கள் போன்ற பிற மங்கலபொருட்களும் காசுகளைச் சுற்றி வைக்க வேண்டும். இவ்வாறு மொத்தம் அரிசி, உப்பு, தானியங்களோடு மொத்தம் 14 தட்டுகள், மங்கலப் பொருட்கள் இடம் பெறுதல் நன்று.

பொற்காசுக் குவியலுக்கு முன்புறமாக ஒருஅடி நீளம் கொண்ட 1000 வெண்மை நிற மெழுகுவர்த்திகளும், வடப்புறம் 1000 நெய் தீபங்களும், இடப்புறம் நல்லெண்ணெய்யில் முக்கிய 1000 எள் தீபமும் வைக்கப்பட வேண்டும்.

தீபங்கள் எரியும்போதே அரிசி, உப்பு, நறுமணப் பொருட்கள், பூக்கள் உள்ளிட்ட பதினான்கு தட்டுகளிலும் உள்ள மங்கலப் பொருள்களில் மூன்று கைப்பிடி எடுத்து பொற்குவியலில் போட்டு வணங்க வேண்டும். கிறித்தவ முறைப்படி, பிரார்த்தனைகள் செய்ய வேண்டும். இதை தேவாலயத்தார் எவ்வகையில் பிரார்த்திப்பது என்பதை முடிவெடுத்துக் கொள்ளலாம். பிரார்த்தனையில் இயேசு உலக மக்களுக்காக பாரம் சுமந்தார் எனக் குறிப்பிடலாம். எனினும் வருத்தப்பட்டு

பாரம் சுமந்தார் என்பதைத் தவிர்க்கலாம். பிரார்த்தனை எப்படி இருக்க வேண்டுமென்பது முழுக்கவும் தேவாலயத்தாரின் விருப்பம் சார்ந்ததே.

பிரார்த்தனை முடிந்தபின் பொற்காசுகளை ஒவ்வொன்றாக எண்ணி ஆயிரம் ஆயிரமாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஆயிரம் காசுகளையும் ஒவ்வொரு நிறத்தாலான பட்டுத்துணிகளில் முடிந்துகொள்ள வேண்டும். கருப்பு மற்றும் சிவப்பு நிறம் தவிர்த்த பட்டுக்களே இடம்பெற வேண்டும். பட்டுத்துணிகளில் முடியப்பட்ட பத்து பொன்முடிப்புகளையும் மாதாவைச் சுற்றி வைத்துவிட வேண்டும். சிலுவை செய்யும் பொற்கொல்லர்களை அழைத்து ஒவ்வொரு முடிப்பாகத் தரவேண்டும்.

இதற்காக மாதா கோவில் மண்டபத்தில் பத்து அடி சுற்றளவுள்ள ஒரு வட்டம் வரைந்து கொள்ள வேண்டும். வட்டத்தில் எட்டு திசைகளையும் குறிக்க வேண்டும். நடுவில் இரண்டு பொற்கொல்லர்களை கிழக்கு மேற்காக எதிரெதிரே நிறுத்தி, எட்டுத் திசைக்கோடுகளின் முனையிலும் (வட்டத்திற்குள்) வெளி நோக்கிய நிலையில் எட்டு பொற்கொல்களை இடம்பெறச் செய்ய வேண்டும்.

மாதா சிலையைச் சுற்றி, மாதா சிலைக்கருகே வைக்கப்பட்டுள்ள ஒரு பொன் முடிப்பை தேவாலயத்தின் தலைமை ஆயர் எடுத்து, வட்டத்திற்குள் கிழக்கு நோக்கி நிற்கும் பொற்கொல்லரைப் பார்த்து அவரது தலைக்குமேல் வானத்தைப் பார்த்துத் தூக்கிக் காண்பித்து அவரது கைகளில் அளிக்க வேண்டும். பொற்கொல்லர்கள் பட்டாடைகள் அணிந்திருப்பது சிறப்பு. பொன்முடிப்பை பொற்கொல்லர் வாங்கி ஸ்ரீராமஜெயம் என மும்முறை சொல்லி தலையில் வைத்துக் கொள்ளவும்.

அடுத்த பொன்முடிப்பை தெற்கு வடக்காகக் கொண்டு கடிகாரச் சுற்றாக ஒவ்வொரு பொற்கொல்லரிடம் கொடுத்து வர வேண்டும். பொன்முடிப்பை தலைமை ஆயரே அளிக்கலாம் அல்லது அவரால் சுட்டப்படும் பிறரும் அளிக்கலாம். பொன்முடிப்பை வாங்கும் பொற்கொல்லர் முதலாவது பொற்கொல்லர் செய்தவாறே மூன்று முறை ஸ்ரீராமஜெயம் சொல்லி தலையில் வைத்துக் கொள்க.

பத்தாவது பொன்முடிப்பை வட்டத்துள் மேற்குத் திசைநோக்கி நிற்கும் பொற்கொல்லரிடம் கொடுக்க வேண்டும். அவர் பொன்முடிப்பைப் பெற்று மார்புக்கருகே வைத்து மூன்று முறை ஸ்ரீராம ஜெயம் சொல்லி தரையில் வைக்கவேண்டும்.

அதைத் தொடர்ந்து, முனைகளில் நிற்கும் முதலாவது பொன்முடிப்பைப் பெற்ற பொற்கொல்லா், அப்படியே வலதுபுறமாகச் சுற்றி ஒருமுறை ஸ்ரீராமஜெயம் என உரைத்து, கீழே வைக்கப்பட்டுள்ள பொன்முடிப்போடு வைக்கவேண்டும். அவ்வாறே ஒவ்வொரு பொற்கொல்லரும் வலப்புறமாகத் திரும்பி ஸ்ரீராமஜெயம் சொல்லி மெதுவாக நடந்து வந்து பொன்முடிப்பை தரையில் வைக்கவும்.

கடைசியாக, வானத்தை நோக்கிக் காட்டிய பொன்முடிப்பைத் தலையில் ஏந்தியிருக்கும் பொற்கொல்லரின் பொன்முடிப்பில் அத்தனை பொற்கொல்லரும் கைகளால் தொட்டு பத்து முறை ஸ்ரீராம ஜெயம் சொல்லி தரையில் இறக்குக.

பொற்கொல்லரே. தரையில் வைக்கப்பட்ட அனைத்து பொன்முடிப்புகளையும் வெண்பட்டொன்றால் கட்டுக. வெண்பட்டைத் தூக்கும்முன் ஓம் நமோ பகவதே வாசுதேவாய;ஓம் நமோ பகவதே ஹயகிரீவாய என ஒருமுறை அனைவரும் உரக்கச் சொல்லுங்கள். அதன் பின்னர் பொன்முடிப்பை தலைமைப் பொற்கொல்லர் வலது தோளில் வைத்து மண்டபம்வரை எடுத்து வருக. பின்னர் வாகனத்தில் வைத்துக் கொள்ளலாம்.

சிலுவையில் எவ்விதமான அலங்காரமும் இடம் பெற வேண்டாம். கலை நயத்தோடு செய்ய வேண்டுமென்பதில்லை. சிலுவை நேர்த்தியாக இருக்க வேண்டும். எவ்விதப் பிசிறும் இருக்கக் கூடாது. சிலுவையின் நீள, குறுக்கு மட்டங்களில் வளைவுகள் வரக் கூடாது. அதாவது முனைகள் நேர் கோடாகவே இருக்க வேண்டும். சிலுவையில் எழுத்துக்களோ, எண்களோ இடம்பெறக் கூடாது. எத்தனை நாட்களுக்குள் செய்வது என்பதை ஆச்சாரியார்களே தீர்மானித்துக் கொள்ளலாம்.

சிலுவையின் அளவு, வடிவத்தை நுட்பமாகத் தீர்மானித்தபின், சிலுவையை வைப்பதற்கேற்ற வகையில் சந்தனப் பேழையொன்றை தச்சர்கள் உருவாக்க வேண்டும். பேழை சிலுவையின் வடிவத்திலேயே இருக்க வேண்டும். சந்தனக் பேழை பொற்சிலுவையை கீழ்முடியில் வைத்து அதை அப்படியே மூடுமாறு பேழையின் மேல்முடி இருக்க வேண்டும். இணைப்பில்லாத சோப்பு டப்பா போல் எனில் பொருத்தமானது. சந்தன முடியிலும் கலை நுட்பம் கூடாது.

இவை போக, தேவாலயத்தார் சார்பாக ஏதேனும் குறிப்புகள் திருத்தங்கள் சொன்னால் அவற்றைப் பரிசீலிக்கலாம். இடைக்கோடு எவ்வளவு உயரத்தில் இருக்க வேண்டும் என்பதைத் தேவாலயத்தார் குறிப்பிடலாம். அவர்களது கருத்துக்களும் ஆலோசனைகளும் பரிசீலிக்கப்படலாம். எனினும் முன்னர் சுட்டிக் காடடியுள்ளவற்றில் உறுதியாக மாற்றம் கூடாது.

சந்தனப் பேழைக்குள் வைக்கப்படும் சிலுவையை முழுமையாக வைக்குமாறு தேக்கு மரப் பேழையொன்று செய்ய வேண்டும். சிலுவையின் நீள, அகலத்திற்கு ஏற்றவாறு தேக்குப்பெட்டி இருப்பது சிறப்பு. அளவுகளை ஆச்சாரியார்களே தீர்மானித்துக் கொள்ளலாம். பொற்சிலுவை ஏந்திய பேழையைத் தாங்கும் தேக்குப் பெட்டி மிகவும் நேர்த்தியோடு, கலை நயத்தோடு அழகாக இருப்பது ஆச்சாரியர்களுக்குப் புகழ் சேர்க்கும். பொன்சிலுவை வைக்கும் தேக்கு பெட்டிக்கு வெளிப்புறமாக, நடு மற்றும் இரு ஓரங்கள் என மூன்று பூட்டுக்கள் இடம் பெறுமாறு உறுதியான கொக்கிகள், வளைவுகள் இடம் பெற வேண்டும்.

பெருமைமிகு ஆச்சாரியார்கள் பொன்சிலுவை, சந்தனப் பேழை, மற்றும் தேக்குப் பெட்டியை குறிப்பிட்ட நாட்களில் முடித்துக் கொடுப்பார்கள். இவற்றின் உருவாக்கத்தின்போது ஏதேனும் ஒன்றில் விளக்கம் தேவை என நினைத்தால், ஆச்சாரியார்களின் மனதில் தோன்றும் எண்ணப்படி செய்து கொள்ளலாம். மேல் விளக்கம் பெறத் தேவையில்லை.

ஆச்சாரியார்களே, பணியைத் துவங்கும்முன், தச்சுவேலை பார்த்ததாகக் குறிப்பிடப்படும் மூத்த தச்சனான ஜோசப்பையும், அவரது மகனான தச்சன் இயேசு கிறித்துவையும் நினைவில் கொண்டு பணிகளைத் துவக்குக. அவ்வாறே உலகின் பெருந்தச்சனான, ஆச்சாரியனான, பெருந்தந்தையாம் பிரம்மனையும் துதித்து பணிகளைத் தொடங்குக.

பணிகள் முடித்து அவரவர் பணிக்கான சாத்திர சம்பரதாயங்கள் கழித்து, சிலுவையைச் சந்தனப் பேழைக்குள் வைத்து மூடி, அதன் மேலே பொன்வண்ணப் பட்டால் சுற்றி தேக்குப் பெட்டிக்குள் வைத்து விடுக. தேக்குப் பெட்டியை வெண்பட்டால் மூடி, வேளாங்கண்ணி கோவிலின் வாசலில், பேராயரிடம் முறைப்படி ஒப்படைத்து விடுக.

ஆச்சாரிகள் மாதா கோவிலின் வாசலில் கொடுக்கும் சிலுவையை கத்தோலிக்க மீனவர் - வன்னியர் - பள்ளர் சமூகத்தவரில் மூன்று தம்பதிகள் இணைந்து பெற்றுக்கொள்ள வேண்டும். பெட்டியின் நடுப்பூட்டை மீனவரும், வலதுபூட்டை தேவேந்திரரும், இடதுபூட்டை வன்னியரும் பூட்டி, சாவியை அவரவர் குலத்தார் சார்பாக பொதுவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

மாதாமுன் பெரியதொரு மெழுகுவர்த்தியும், அதன் இருபுறமும் ஒருபடி நெய் தீபமும் ஏற்றி, பொற்சிலுவைப் பெட்டியை தீபங்களுக்குமுன் தரையில் பச்சைப் பட்டை விரித்து அதன் மேல் வைக்கவேண்டும். சந்தனப் பெட்டிக்கு மணமுள்ள பூக்கள் தூவ வேண்டும்.

மேற்கண்ட சாத்திர சம்பிரதாயங்களை முடித்து, சந்தனப் பெட்டியை தேவாலயத்தாரிடம் ஒப்படைத்துவிட வேண்டும். அவர்கள் பெட்டியை கவனமாகப் பாதுகாத்து வர வேண்டும்.

வருடத்தில் ஒரு நாள், முடிந்தால் கிறித்து பிறந்த விழாநாளுக்கு முதல் நாளில் மூவரும் இணைந்து, நம் அன்புத் தந்தை சிலுவை ஏற்றதை விழாவாகக் கொண்டாட வேண்டும். ஒவ்வொரு ஆண்டின் விழாவிற்கும் ஒரு பெயர் சூட்ட வேண்டும். முதல் ஆண்டின் விழா சிலுவை ஏற்றல் என இருக்கலாம். வரும் ஆண்டுகளில் சிலுவை சுமத்தல், பாரம் ஏற்றல், பாரம் குறைத்தல், சுமை நீக்குதல், எளிய பாரம், இனிய சுமை போன்ற பல்வேறு பெயர்களில் விழா எடுக்க வேண்டும்.

சிலவை சுமத்தல் விழாவன்று காலையில் சூரிய உதயத்திற்குமுன், மாதா சிலையின்முன், மஞ்சள் பட்டு விரித்து அதன் மேல் சிலுவைப் பெட்டியை வைக்க வேண்டும். சரியாகக் காலை நான்கு மணிக்கு அவரவர் பூட்டைத் திறக்க வேண்டும்.

பூட்டைத் திறந்து பேழையை வெளியிலெடுப்பதற்குமுன்பு, ஆயிரத்தொரு தீபங்கள் சுடர்விட வேண்டும். மெழுகுதான் என்றில்லை. நெய் தீபங்களும் இடம் பெறலாம்.

பேழையிலிருந்து வெளியிலெடுக்கப்படும் பொற்சிலுவைக்கு நீராட்டல்கள், தூப, தீபங்கள், ஆராதனைகள், பிராத்தனைகள், புகழ் மாலைகள், பூச்சாற்றுகள், மங்கலப் பொருட்கள் அளித்தல், போன்ற பலவித சடங்கு முறைகளையும் மதியம் வரை மேற்கொள்ளலாம்.

சரியாக மாலை நான்கு மணிக்கு தொடங்கி ஆறு மணிக்கு முன்பாக சிலுவை சுமத்தல் விழாவை நிறைவேற்ற வேண்டும். நேரத்தை மிகத் துல்லியமாகக் கடைப்பிடிக்க வேண்டும். சிலுவையை சரியாக நான்கு மணிக்கு மாதா கோவில் மண்டப வாயிலும் பெறும் குடிகள், தேவாலயத்தை வலமாக ஒருமுறை சுற்றி வந்து, மண்டப முகப்பை அடைந்து, சரியாக ஆறு மணிக்கு சந்தனப் பெட்டியை கோவில் நிர்வகத்தாரிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.

கோவில் நிர்வாகத்தார் அவர்க்குரிய முறையில் பொற்சிலுவைக்கு சிறப்புக்கள் செய்து, இரவு எட்டு மணிக்கு முன்பாக பொற்சிலுவையை சந்தனப் பெட்டிக்குள் வைத்து பூட்டிவிட வேண்டும். எட்டு மணிக்குமேல் பூட்டுப் போடக் கூடாது. அதை கணக்கில் கொண்டு நேரத்தைத் துல்லிமாக கடைப்பிடிக்க வேண்டும்.

ஊர்வலம் எவ்வாறு நடக்க வேண்டும். சுருக்கமாகச் சொல்கிறோம். சிலுவையின் குறுக்குச் சந்திப்பில் எட்டடி நீள வெள்ளைக் கயிறொன்று முடிச்சிடப்பட வேண்டும். கயிற்றின் இரு முனைகளிலும் தலா ஒரு முடிச்சுப்போட வேண்டும்.

அந்த மையக் கயிற்றிலிருந்து வலப்புறமாக சற்றே தள்ளி எட்டடி நீள கயிறொன்று இணைக்கப்பட்டு முடிச்சிட வேண்டும். இக்கயிற்றின் நுனியை முடியக்கூடாது. அவ்வாறே மையக் கயிற்றிற்கு இடது பக்கத்திலும் எட்டடி நீள கயிறொன்று இணைக்கப்பட்டு முடிச்சிட வேண்டும். இக்கயிறின் நுனியையும் முடியக்கூடாது. எனில் மூன்று கயிறுகள் இருக்கும். மையக் கயிறு, அதோடு இணைக்கப்பட்டு, சற்றே தள்ளி முடிச்சிடப்பட்டுள்ள வலது மற்றும் இடது கயிறுகள்.

மையக் கயிறு மீனவருக்கானது. வலது, இடது கயிறுகள் தேவேந்திரர் மற்றும் வன்னியருக்குரியது. இவர்கள் வரும் ஆண்டுகளில் இடவலதாக மாற்றிக் கொள்ளலாம். முதல் ஆண்டில் இடது எனில் வருமாண்டில் வலது.

மூன்று குடியினரும் இருகைகளிலும் கயிறுகளைப் பிடித்து தங்களது முதுகில் சிலுவையை வைத்துக் கொள்ள வேண்டும். மிக நிமிர்ந்தும் வைக்கக் கூடாது. கீழே குனிந்தும் இருக்கக் கூடாது. சிலுவையின் கிடை மட்டம், அதாவது கிராஸ் மூவர் மீது தொட்டிக் கொண்டிருப்பது நல்லது. கவனத்தில் கொள்ள வேண்டியது மூன்று

குடிகளும் இணைந்து பாரத்தைச் சுமக்கின்றன, இயேசுபிரானின் தியாகத்தை நினைவு கூர்கின்றன, அந்தப் பாரத்தின் வலியை சற்றே உணர்கின்றன. அவ்வளவே.

இணைந்து பாரத்தைத் தூக்குக அன்பின் மூத்தோர்களே. பாரத்தைப் பகிர்க.

நூறு கிலோ அரிசி மூட்டையை ஒருவரே தூக்கினால் மிகுந்த பாரமாக இருக்கும். அதையே நான்காகப் பிரித்துத் தூக்கினால் எளிதாக இருக்கும். அதையே பத்துப் பத்துக் கிலோவாகப் பிரித்து பத்துப் பேர் தூக்கினார் எனில் பாரம் மிக எளிதாக இருக்குமன்றோ. பாரம் தெரியாது. வலியோ, சோர்வோ வராது. உண்மையில் மகிழ்ச்சியாகவே பாரம் தூக்கிவிடலாமன்றோ.

சிலுவை சுமக்கும் நிகழ்வின்போது தேவாலயத்தைச் சுற்றிவரும் பாதையில் இடையூறுகள் இருக்கக் கூடாது. இருபுறமும் தடுப்புகள் இருக்க வேண்டும். சிலுவை சுமக்க மூன்று பேர். அவருக்கு உதவியாக மூன்று பேர். சிலுவைக்கு முன் முப்பதடி இடைவெளியில் கழுதையொன்று செல்ல வேண்டும். கழுதை முதுகின் இருபுறத்திலும், இரு பழைய துணிப்பொதிகள் தொங்க வேண்டும். பழைய துணிகளை அன்றைக்கு வரும் மக்களிடமிருந்தே பெற்றுக் கொள்ளலாம். கழுதையின் கயிற்றில் கயிறு கட்டி அதை ஒருவர் முன்னால் இழுக்க, ஒருவர் பின்னால் நடந்து வர வேண்டும். கழுதையை சிலுவைக்கு முன்னால் நடத்திச் செல்வதற்கு இவர்கள் இருவருமே பொறுப்பு. கழுதை ஆண் கழுதையாக இருக்க வேண்டும்.

சிலுவை சுமப்பவருக்குப் பின்னே முப்பதடி தூரத்தில், நன்கு அலங்கரிக்கப்பட்ட வெள்ளைக் குதிரையொன்று நடத்தி வரப்பட வேண்டும். குதிரையின் கயிற்றைப் பிடித்து நடத்தி வரலாம். குதிரையை நடத்தி வருவதற்குப் பொறுப்பாக இருவர் இருக்கலாம்.

சிலுவை சுமப்பவர் மூவர், அவருக்கு உதவியாளர் மூவர், கழுதை மற்றும் குதிரை நடத்துபவர் தலா இருவர் என, இவர்கள் பத்துப் பேர் தவிர, பிறர் ஊர்வலப் பாதையில் இடம் பெறக் கூடாது. பிறர் சிலுவை சுமக்கும் வழியின் இருபுறமும் இடம்பெறும் தடுப்பின் பின்னாலிருந்து இவர்களைக் காண வேண்டும். பொற்சிலுவை மேல் உதிரி மலர்கள், கதம்ப மலர்கள், எடை குறைவான மங்கலப் பொருள்கள் போன்றவற்றைத் தூவலாம். இயேசுவைப் புகழ்ந்து பாடலாம், இசைக்கலாம். எனினும் யாரும் அழக் கூடாது, ஆடக் கூடாது. இது இயேசுபிரானின் தியாகத்தை

நினைவுறுத்தும் வகையில் நிகழ்ந்தப்படும் விழா. அதை மனதில் கொள்ள வேண்டும். கூட்டத்தார் விசிலடிப்பதும், கத்துவதும் கூடாது. அமைதி காக்க வேண்டும். இயேசுவின் அன்பை, தியாகத்தை எண்ணிப் பார்க்க வேண்டும்.

சிலுவை ஏற்றுச் சுற்றி வருதல் ஒரு முறை மட்டுமே. சிலுவை மாதா கோவிலின் வாசலை அடைந்தவுடன், குதிரை வாயிலைத் தாண்டி மூப்பதடித் தூரம் முன்னால் சென்று, பின் அப்படியே பின்னோக்கி நடந்து நூறடி தூரம் பின்னோக்கி கொண்டு வரப்பட வேண்டும். அதாவது முகம் திரும்பாமல் வந்த பாதையிலேயே பின்னோக்கிக் கொணடு வரப்பட வேண்டும். அவ்விடத்திலிருந்து குதிரையேற்ற இராணுவ வீரரொருவர் அக்குதிரை மேல் ஏறி, சிலுவை சுமந்த பாதையில் வலம் வர வேண்டும். குதிரை வீரரின் ஓட்டம் அதிகமாகவும் இல்லாமல், மெதுவாகவும் இல்லாமல் இருப்பது நல்லது.

ஒரு சுற்று முடிந்தவுடன் எந்த இடத்தில் முதல் குதிரையேற்றம் நிகழ்ந்ததோ அங்கிருந்து, முதலாவது வீரரோடு இன்னொரு குதிரை வீரர் சேர்ந்து கொள்ள வேண்டும். அவ்வாறே ஒன்பதாவது சுற்றுவரை, ஒவ்வொரு குதிரை வீரராகச் சேர்ந்து சுற்றி வர வேண்டும். பத்து பேர் சேர்ந்து சுற்றியவுடன், இறுதியாக அனைவரும் சேர்ந்து ஒருமுறை தேவாலயத்தைச் சுற்றி குதிரை ஏற்றத்தை நிறைவு செய்ய வேண்டும். குதிரையேற்றத்திற்கு இந்திய இராணுவம் பொறுப்பேற்றுக் கொள்ளலாம். காலம் கூடிவரும்போது, ருமேனியா அரசு குதிரையேற்றத்திற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளலாம். எமது புத்துலகம் செய்வோம் முதலாவது புத்தகத்தில் குதிரைக்கான நாடாக ருமேனியாவைக் குறிப்பிட்டுள்ளது அறியத்தக்கது.

மாதாவுக்கு அளிக்கும் முக்கியமான மங்கலப் பொருள்களாக பரதவருக்கு உப்பும், முத்துக்களும், வன்னியருக்கு ஏலக்காய், மிளகு மற்றும் மூங்கிலரிசியும், தேவேந்திரருக்கு அரிசியும், வலம்புரி சங்குகளும் பரிந்துரைக்கப்படுகிறது. அதாவது மாதாவுக்கான மங்கலப் பொருட்களில், இவை அவசியம் இடம்பெற வேண்டும். மீனவப் பெருங்குடிக்கு ஏராளமான மங்கலப் பொருட்கள் இருப்பதை அறிகிறோம். அவர்களுக்கு விருப்பமெனில், கூடுதலாக ஒரு மங்கலப் பொருளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இங்கே யாம் சில வழிமுறைகளை, எமது மனம் கூறியவாறும், அவை சரியாக இருக்குமா எனப் பலமுறைத் தெளிந்தவாறும், எதற்காக இது எனும் வினா எழுப்பி,

அதற்கான பதிலை காலத்தின் முன்னும் பின்னும் சற்றே ஓட்டிப் பார்த்தும் குறிப்பிட்டுள்ளோம். இதில் மாற்றங்கள் செய்வதானால் குடி மூத்தோர் தெளிந்து, அதற்கான காரணத்தோடு மாற்ற வேண்டும். எதற்காக, எதன் பொருட்டு, அதை மாற்றுகிறோம், அதன் எதிர்காலம் எப்படி இருக்கக் கூடும், நீடித்த மரபுமுறையில் அதில் என்னென்ன மாற்றம் நிகழக் கூடும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

எமது பரிந்துரைகள் எதையும் மாற்றக்கூடாது என்பதல்ல. தேவையெனில் மாற்றலாம். மாற்றும்போது எதற்காக எனும் கேள்வியைத் தெளிந்து மாற்றிக் கொள்க. மாற்றத்தில் மூவரும் ஒன்றுபடுவது மிக முக்கியம். எதையும் ஒத்த கருத்தின் அடிப்படையில் மாற்றுக மூத்தோரே.

சிலுவை சுமப்பவரைத் தேர்ந்தெடுக்க, விரும்பமானவர் பெயர்களை குடவோலை முறையில் தேர்ந்தெடுக்க வேண்டும். விரும்புபவரின் தகுதிகளை வரையறுப்பது முக்கியம். அன்னார் குடிகாரராய் இருக்கக் கூடாது. திருமணம் புரிந்திருக்க வேண்டும். மணமுறிவுக்கு ஆளாகியிருக்கக் கூடாது. நல்ல குணங்கள் கொண்டவராய் இருப்பது அவசியம். சண்டைக்காரரென்றோ, சுயநலவாதியென்றோ பெயர் பெற்றிருக்கக் கூடாது. ஊருக்கு ஒருவர் பெயர் இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுள் ஒருவரை பொற்சிலுவை சுமப்பவராக தேர்வு செய்து கொள்ளலாம்.

கிறித்து பிறந்த நாளுக்கு முந்தைய நாள் எனில், தேவாலயத்தில் அதுதொடர்பான விழாக்கள், நிகழ்வுகள் இருக்கக் கூடும். தேவாலயத்தார் சிலுவை ஏற்றல் நிகழ்வு அந்நாளில் நடத்துவது கடினமெனக் கருதினால் பிறிதொரு நாளில் வைத்துக் கொள்ளலாம். எனினும் விழாவானது மார்கழி ஒன்றிலிருந்து மார்கழி முப்பதுக்குள் நிகழ்வது நல்லது.

ஈஸ்டர் விரதக் காலத்தில் விழா எடுப்பது பொருத்தமாக இருக்குமே என மூத்தோர் கருதக்கூடும். எனினும் முன்பே அந்நாளில் தந்தையாம் இயேசு சிலுவை சுமந்து விட்டாரல்லவா. மறுபடியும் அதே நாட்களில் வைப்பது வேண்டாமே. அது கடந்துபோன காலமாகவே இருக்கட்டும். எமது முடிவு, ஈஸ்டர் விரதத்தின் நாட்களில், ஒருபோதும் சிலுவை ஏற்றல் விழா நிகழக் கூடாது.

ஒருவேளை மார்கழி மாதத்தில் வேண்டாமெனில், அரசு விதித்துள்ள மீன் பிடிக்கும் தடைக்காலத்தில் நிகழ்த்துவது கூடுதல் சிறப்பாக இருக்கும். மூத்தோர் இது குறித்துத் தெளிக.

கழுதை, அதுவும் அழுக்குத் துணி சுமக்கும் கழுதை எதற்காக ஊர்வலத்தில் என குடி மூத்தோர் நினைக்கக் கூடும். கழுதை யாருக்காகப் பொதி சுமக்கிறது மூத்தோர்களே? கழுதையால் பொதியின் பாரத்தைச் சுமக்க முடியுமெனில், நம்மால் சிலுவையின் பாரத்தைச் சுமக்க முடியாதா? பாரம் சுமப்பவர்கள் தெளிய வேண்டும். எத்தனையோ விலங்குகள் இருக்கையில் கழுதை ஏன் பாரம் சுமக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டது? கழுதை நன்றாகப் பாரம் சுமக்கும். எவ்வளவு பாரத்தையும் தாங்கிக் கொள்ளுமன்றோ.

நாம் பொதி சுமப்பவர்கள் மூத்தோர்களே.. உலகென்னும் பாரத்தை நம் பெருந்தந்தை அன்போடு சுமக்கிறார். நம் தந்தையின் பாரத்தில் நாமும் கொஞ்சம் சுமக்கிறோம். நாமும் கொஞ்சம் சுமையில் பங்கெடுத்துக் கொள்கிறோம்.

மூத்தோர்களே.. நம் தந்தை சிறந்தவர். அன்புள்ளவர். நம்மால் எந்தளவுக்குப் பாரம் தாங்க இயலுமோ அவ்வளவே தருவார். நம்மிடம் பாரம் தருவது நம் தந்தையால் முடியாமலோ, கடினமென்றோ அல்ல. நாம் பாரத்தை உணர வேண்டுமல்லவா. தந்தையை அறிய வேண்டுமல்லவா. பாரம் சுமப்பது எத்தனை கடினமென்று. சரிதானே குடி மூத்தோரே.

குதிரை எதற்காகவெனில், உலகின் நன்மைக்காகப் பாரம் சுமப்பவர்களை, உலகின் உயர்வு வேண்டி பாரம் இழுப்பவர்களை, தந்தையாம் பெருங்கடவுள் கைவிட மாட்டார், ஒருபோதும்.

அன்பென்னும் மழையில் அகிலத்தை நனைக்கப் பிறந்த அதிரூபன் வாழி!

ஒளியானவன் வாழி! புகழ் மைந்தன் வாழி! கருணை மகன் வாழி!

பெருந்தந்தை வாழி! மூத்தோர் வாழி! மூவுலகும் வாழி!

**மேய்ப்பனுக்கு சுபமங்களம்! மேரிமாதாவுக்கு ஜெயமங்களம்!**

இசுலாமோடு எமக்கு எப்படி இளவயதிலேயே நல்லெண்ணம் உண்டானதோ அவ்வாறே கிறித்தவத்தோடும் எமக்கு சிறுவயதிலேயே நல்லெண்ணம் தோன்றியது வியப்பு. எமது முதல் ஆசிரியர் கிறித்தவரே. திருமதி மேரி டீச்சர். கே.எம். கோட்டை என அழைக்கப்படும் கீழமுடிமன்னார் கோட்டையைச் சேர்ந்தவர். நண்பர்களில், ஆசிரியர்களில் சாதி பார்க்கக் கூடாது என்பார்கள். எனினும் தேவேந்திர குலத்தவர் அறிந்து கொள்வதற்காக இதைக் குறிப்பிடுகிறோம். ஆசிரியர் மறையோர் சமூகம். அதன் பேரிலேயே எம்மீது பேரன்பு காட்டுவார். ஆசிரியர் தேவேந்திரர் தெருவிலேயே தங்கியிருந்ததால் எமக்கு இன்னும் கூடுதலான செல்லம் கிடைத்தது. ஆசிரியருக்கு அன்பு நன்றி. கல்வி கற்றலில் எத்தனையோ ஆசிரியர்கள் கிடைத்தாலும் முதல் ஆசிரியர் கூடுதல் மதிப்பு மிக்கவரன்றோ. அவ்வகையில் எமது முதலாம் ஆசிரியரை என்றென்றும் யாம் நினைவில் கொள்வோம். எமது முதல் ஆசிரியர் வாழி!

எமது சிறுவயதின் உள்ளம் கவர்ந்தவர் எனில் அது தும்முசினம்பட்டியின் புனித வியாகுல அன்னை தேவாலயத்தின் மேரியே. சீனிமிட்டாய் சாப்பிடுவதற்காகவது ஆண்டுதோறும் சப்பரத் திருவிழாவிற்குச் சென்றுவிடுவோம். அன்னைக்கு மெழுகுவர்த்தி ஏற்றவும் மறக்க மாட்டோம். புனித வியாகுல அன்னைக்கு நன்றி!

அருப்புக்கோட்டையில் படிக்கும்போது வகுப்புத் தோழர் இராசேஷ் வீட்டுக்குச் செல்லும் போதெல்லாம் எம்மைக் இனிதாக வரவேற்பார்கள். குடும்பத்தினர் அனைவரும் இன்முகத்தோடு பேசுவார்கள். அன்பான அழகான குடும்பம். அவர்களது சொந்த ஊர் கீழமுடிமன்னார் கோட்டை என்பது வியப்பானது. அன்புத் தோழனே, நாம் இருவரும் பங்காளி என அழைத்துக் கொள்வோம். அவ்வகையில் நம் சகோதர உறவு என்றென்றும் நிலைத்திருக்கட்டும்.

தூத்துக்குடியில் படிக்கும் காலத்தில் எமது உளம் நிறைந்த திருவிழாவாக அமைந்தது தூய பனிமய மாதா பேராலயத்தின் திருவிழா. யாம் நண்பர்களோடு மிகவும் மிகழ்ச்சியாக மாதாவின் திருநாள் கொண்டாட்டதை வேடிக்கை பார்த்தோம். பனிமய மாதாவுக்கு நன்றி!

யாம் காரைக்குடியில் பணியாற்றிய காலத்தில், துறையில் எமக்கு மூத்தோராகப் பணிபுரிந்தவர் தூத்தூரைச் சேர்ந்த முனைவர் பனியடிமா சார். அங்கு

பணியாற்றிய காலத்தில் எம்மீது அன்பும், மதிப்பும் கொண்டிருந்தார். ஒருமுறை ஒரு இடத்திற்குப் போய்ட்டு வரலாமா என்றார். அவரது வண்டிபோய் நின்றது எமது வருங்கால மாமனார் வீட்டில். துறையில் ஒன்றாகப் பணியாற்றிய தமிழரசியோடு எமது திருமணம் நிகழ்ந்தது அதிசயம்தான். அன்பின் மூத்தோனே, நம் நல்லுறவு நிலைத்திருக்கட்டும்.

தொல்குடிகள் வாழி!

நீரும் நிலமும் சிறக்கட்டும்!

மீன்வளமும், பயிர் வளமும் செழிக்கட்டும்!!

உலகம் உயர்ந்தோங்குக..

**சந்திரர் சூரியர் போற்றி!**

**பாற்கடலில் பள்ளிகொள்ளும் பத்மநாபன் தாள் போற்றி!!**

இயேசுநாதர் அன்பிற்கு இலக்கணமன்றோ. கருணையின் உறைவிடமன்றோ. இயேசு நின்றது எளியோர் பக்கத்திலன்றோ. இன்றைக்கு கிறித்தவர் யார் பக்கம் இருக்கிறார்? தந்தையின் ஞானம் உலகில் அன்பே சிறந்தது. கிறித்தவர் கண்டுகொண்டதோ உலகில் அறிவே பெரியது. கிறித்துவின் போதனை என்ன? கிறித்தவத்தின் மையக் கருத்து எது? கிறித்துவின் மனம் யாருக்காக இரங்கியது?

சமீபத்தில் ஒரு கிறித்தவரின் வீட்டைப் பார்த்தோம். டாக்டராம். பெயர்ப் பலகை சுட்டுகிறது. எத்தனை அழகான நுட்பமான ஆடம்பரமான வீடு. செடிகளும், கொடிகளும், கார்களும், கண்ணாடி அலங்காரங்களும், அடடா வீடென்றால் அதல்லவா வீடு.

அருகிலேயே பெரியெதாரு சாக்கடை ஓடுகிறது. கால்வாயின் கரையில் மிகச் சிறிய ஓட்டு வீடுகளில் மக்கள் குடியிருக்கின்றனர். ஒரு வீட்டில் கதவுகூட இல்லை. பேனர் தொங்குகிறது. ஒரு அறை, அல்லது இரு சிற்றைகள் கொண்டதே வீடு. தாழ்வாக வேறு இருக்கிறது. அங்கும் மனிதர்கள் வாழ்கிறார்கள், உண்கிறார்கள், உறங்குகிறார்கள். சாக்கடை நாற்றம் பழகியிருக்குமோ.

ஏழை, எளியவர் சாக்கடையில் கிடக்கிறார். கிறித்தவர் மாடமாளிகையில் வசிக்கிறார்.

கிறித்துவப் பெருங்குடிகளே, தந்தையாம் இயேசு யார் பக்கம்? தந்தையின் இருதயம் யாருக்காக அழுதது? தந்தை சிந்திய செந்நீருக்குப் பொருளென்ன?

உலகின் மக்களெல்லாம் அன்பு கலந்து, ஒன்றுகூடி, சமாதானமாயும், மகிழச்சியாயும், வாழ்வாங்கு வாழவேண்டும் என்பதுதானே இயேசுவாம் தந்தையின் பெருவிருப்பம், பெருங்கனவு. ஈராயிரம் ஆண்டுகள் கழித்தும் அது நிறைவேறவில்லையல்லவா? எது காரணம், யார் காரணம் அறிவில் சிறந்தோரே?

கிறித்தவரே, உலகில் அறிவு தான் சிறந்ததா? அன்பிற்கு மதிப்பில்லையா? அன்பானவருக்கு இவ்வுலகில் இடமில்லையா?

இயேசு அன்பில் சிறந்த தந்தையா, அறிவில் பெரிய தந்தையா. தெளியும் கிறித்தவரே.

உலகம் ஏன் இத்தனை அன்பற்று இருக்கிறது. உலகியல் வாழ்வில் மேலும் கீழும் இருக்குமெனினும், அதன் இடைவெளி ஏன் இத்தனை அகலமாக உள்ளது. உயர்தோர் எனத் தம்மை நினைத்துக் கொள்வோர் மிக உயர்ந்த மாடிகளில் வசிக்கிறார். எளியோரே சாக்கடைக் கால்வாய்க்குள்ளும், அதன் கரைகளிலும் வாழ்கிறார். ஏன் இத்தனை பெரிய ஏற்ற தாழ்வு.

எளியோருக்காக குருதி சிந்திய நல்லிதயத்தோன் போலவே எமது இருதயமும் அந்த கழிவுநீர்க் கால்வாய் மனிதர்களை நினைத்து ஏங்குகிறது. துன்புறுகிறது. இவர்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையாதா? நல்ல இடத்தில் நல்லதொரு வீட்டில் இவர்கள் வாழ மாட்டார்களா? எம்மால் இவர்களுக்கு ஏதேனும் நல்லது செய்ய முடியாதா?

**உலகில் இருதயத்தை விஞ்சியது எது மூத்தோர்களே..**

பேரன்பின் தந்தையே, எம் கண்களால் காண்கிறோம். எம் இருதயத்தால் அறிகிறோம். இங்கு அன்பிற்கு மதிப்பில்லையோ. யாம் வாழும் நகரின் மத்தியில் பெரியதொரு ஓடை உள்ளது. முன்னர் ஓடையில் தூயநீர் ஓடியிருக்கும். இன்றோ மனிதக் கழிவுகளைச் சுமந்து ஓடுகிறது. தூர்நாற்றம், குப்பை, அசுத்தம். ஓடை

முழுதும் கழிவுநீர், கருப்புச் சாக்கடைநீர். பெருங்கூட்டமான மனிதர்கள் அதன் கரைகளில் வாழ்கிறார்கள்.

உலகில் மூளையே பெரிதெனக் கொண்டோர், அகிலத்தில் அறிவுதான் பெரியது என அறுதியிடும் மதத்தார் எங்கு வாழ்கிறார்கள் தெரியுமா? நேர்த்தியான மலர் வீடுகளில் வசிக்கின்றனர். உலகில் அனேக வழிகளில் வாழலாம் எனக் கண்டு கொண்டவரோ மேற்குமலை அடுக்குமாடிகளில் வசிக்கின்றார்.

பகட்டான, ஆடம்பரமான, நேர்த்தியான, வசதியான வாழ்க்கையை வாழ்பவருக்குக் கட்டப்பட்டவையாம் இந்த வீடுகள் - It is designed for the people who want to live lavishly with elegance. It is a luxury project and fill your life with sophistication. அங்கு வாழ்பவருக்கு வாழ்க்கையில் எந்தக் குறைபாடும் இருக்காதாம் - It enables you to live a flawless life.

புதுவீட்டுக்காரர்கள் சொல்கிறார்கள் - பகட்டான வாழ்க்கையை மறுவரையறை செய்யக் கூடியதாம் அவர்களது வீடுகள் - It is clearly redefines luxurious living with its home which are an epitone of lavish life style.

லேவிஷ் வாழ்க்கை முறையைக் கொண்டவர் யாரெனத் தெரியுமல்லவா. அந்தக் காலத்திலிருந்து தற்போதுவரை அவர்கள்தான் லேவிச வாழ்க்கையை வாழ முடிகிறது. வட்டி உறங்காதல்லவா. வட்டிக்காரரும், அடகுக்காரரும், வியாபாரியுமல்லவா இத்தனை பகட்டான வீடுகளில் வாழ முடியும். உழவரும், கைத்தொழில் செய்வோரும் இப்படியான வீடுகளை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

வட்டிக்கு ஈடாக நெஞ்சாங்குலையை அறுத்துக்கொடு எனக் கேட்டவர் யார் என்பதை நாம் அறிந்திருக்கிறோமல்லவா. வட்டிக்காரர்களின் ஆடம்பரமும், சுகபோகமும், கும்மாளமும், குதியாட்டமும், வெறியாட்டமும் அடுக்காது மூத்தோனே. இவர்கள்தான் நிலங்களையெல்லாம் வளைத்துப் போட்டிருக்கிறார்கள். கப்பல் கார்களில் பவனி வருகிறார்கள். போட்டிருக்கும் நவநாகரீக உடைகளைப் பற்றி சொல்ல வேண்டுமா.

வட்டித்தொழிலை பெருமையாக நினைப்பதை என்னவென்று சொல்வது. ஈவிரக்கமின்றி இவர்கள் பறிக்கும் வட்டி ஏழைகளின் வியர்வையல்லவா. கந்துவட்டிக்காரர்கள் குடிப்பது எளியவர்களின் இரத்தமல்லவா. உலகத்தின் மாந்தர் அனைவரையுமே இவர்கள் கடனாளிகளாக ஆக்கிவிட்டார்கள் மூத்தோனே. மக்கள் கடனாளி ஆக ஆக இவர்களுக்கு கொழுத்த லாபம். அது அன்னார்கள் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் தெரிகிறது. எல்லாவற்றிலும் பகட்டு.

உழைத்து உயர்வதல்லவா வாழ்க்கை. மனிதர் உழைத்து உயர வேண்டும். பிறரது உழைப்பை வட்டியென்னும் பெயரில் உறிஞ்சி வாழக்கூடாது.

இரண்டாம் வருகை எதற்கு? நீங்கள் பாரம் சுமந்தது யாருக்காக? அன்பே பெரிதென்று சுமந்தீர்களா? உண்மையா? உண்மையிலேயே அன்புதான் பெரியதா?

வாருமய்யா. வந்து பாரும். சாக்கடை மனிதரைப் பாரும். மாடிவீட்டு கோமான்களைப் பாரும். மலைவீட்டு சீமான்களைப் பாரும். கிறித்தவரைப் பாரும். இந்துக்களைப் பாரும். இசுலாமியரையும், அனைத்து மதத்தாரையும் பாரும். குளங்களைப் பாரும். ஆறுகளைப் பாரும். மண்ணையும், விண்ணையும் பாரும். அனைத்தையும் பாரும். அனைவரையும் பாரும். உமது காலத்திற்குப் பிறகான ஈராயிரம் வருடத்தின் உலக வரலாற்றைக் கேளும். பார்த்துவிட்டு, கேட்டுவிட்டு, பேசிவிட்டு முடிவெடும். உலகில் சிறந்தது, பெரியது அன்புதானா என்பதை.

உங்களன்பில், இரக்கத்தில், கருணையில், மிகவும் சிறியோனான, எமது வார்த்தைக்கும் சற்றே செவி மடுங்கள் தேவகுமாரனே. எம் அனுபவத்தில் இங்கு அன்பிற்கு மதிப்பில்லை. எளியோரை வலியோர் சுரண்டி வாழ்கிறார் - அனைத்திலும். உழவர் கண்ணீர் வடிக்கிறார். வட்டித் தொழிலரோ அனைத்திலும் சிறப்புற்று வாழ்கிறார். இயற்கையின், மேகத்தின், கடலின் அருங்கொடையான தண்ணீரை விற்கிறார். அமுதமாம் உணவை எடைபோட்டு விற்கிறார். மனிதருக்கு இன்றிருக்கும் பொருட்களில் பத்து சதமானம் கூடத் தேவையில்லை. குப்பையையும், வேண்டாததையும், தேவையில்லாததையும் விற்கிறார். இங்கு வணிகக் கொள்கைக்கு அளவேயில்லை. கற்றோர், பெருங்கல்வி கற்றோர் காசு பணமே பெரிதென்று திரிகிறார்.

வாரும் தந்தையே. இம்மனிதரை உங்களால் கண்கொண்டு பார்க்க முடியுமெனில் வாருங்கள். கொலைகாரனையும், கொள்ளைக்காரனையும்,

திருடனையும், பெண்களைத் துன்புறுத்துபவனையும், ஏமாற்றுபவனையும், கந்துவட்டிக்காரனையும், கலப்படக்காரனையும், கயவனையும், உமது பரிசுத்த இருதயம் தாங்கிக் கொள்ளுமெனில், தாராளமாய் வாரும் ஆண்டவராம் இயேசுவே.

இருதயமானவனே!

இரக்கமானவனே!

கருணையானவனே!

கிருபையானவனே!

பெருமையோனே!

மாறா அன்பனே!

எளியோர் சுமையே!

ஏழைகளின் அரவணைப்பே!

களைத்தோரின் நிழலே!

உழைத்தோரின் கூலியே!

சமாதானத்தில் பெரியவனே!

சமாரியனே!

நல் மேய்ப்பனே!

இறை வாக்கனே!

உங்கள் வரவு நல்வரவாகட்டும்.

தந்தையாம் மோகன்தாஸ் கரம்சந்த் காந்திக்குப் பிடித்தமான, விருப்பமான கிறித்துவுக்கு தந்தை - மகன் சார்பாக மங்களம்!

**அறவான் கிறித்துவுக்கு மங்களம்;தேவ குமாரனுக்கு ஜெய மங்களம்!**

உலகத்தீரே,

Do not make our Father’s House a House of Trade.

# சிரீதரன்!



**ஓம் நமோ பகவதே வாசுதேவாய!**

**ஓம் நமோ பகவதே ஹயகிரீவாய!**

மனிதருக்கு கல்வியும் அறிவும் சிறக்கட்டும். செல்வம் பெருகட்டும்..

தேவேந்திர குலத்தாரே,

நலம்தானே. நல்லது. நலனும், வளனும் நிறைக. நிலமும் வலமும் நீள்க. நாம் யார் என்பதும் நமது கடமை என்னவென்பதை நாம் உணர்ந்திருக்கிறோம்தானே.

புத்துலகம் செய்வோம் இரண்டு எழுதியதற்கு மூலகாரணம் இந்த சடங்கு முறைகளைக் சுட்டுவதே. அதோடு தேவேந்திரருக்கு தாம் யார், தமது குடி எத்தனை உயர்வானது, வலிமையானது, அறமானது என்பதைச் சுட்டிக்காட்டுவதும் கடமையாகக் கொள்ளப்பட்டது.

எமது சிறுவயதிலிருந்து நம் குலத்தாரைக் கவனித்து வருகிறோம். நம் குலத்தார் நல்லோர். அறத்தார். பாசம் மிக்கோர். மனதில் பட்டதைப் பேசுவோர். பகைமை வளர்க்காதோர். வம்புக்குப் போகாதார். வரும் சண்டையை எதிர்த்து நிற்போர். குடும்பம்மேல் பற்றுக் கொண்டோர். தெய்வ பக்தி மிகுந்தோர்.

தேவேந்திரக் குடிகளிடம் அனைத்தும் உண்டு. தேவேந்திரர் அன்புடையோர், அறிவுடையோர், அறமுடையோர். பொது நலமுடையோர். வீரமும் உடையோர்.

எமது புத்தகங்களில் அனைத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம். படித்துத் தெளிக. தமிழ்க்குடி இத்தனை உயர்வானது எனில் அந்த உயர்வுக்குக் காரணம் யார் என்பதும் கேட்கப்பட வேண்டுமல்லவா? தமிழ்மொழி உலகமொழியெனில் எப்படி அது உலக மொழியாக ஆனது என்பது அறியப்பட வேண்டுமல்லவா? தமிழர் கடைக்காலத்தையே அறியவில்லை. இன்னும் சொன்னால் பெருவாரியான தமிழர் சிறிது கூட அறியவில்லை. தமிழரிடம் இருப்பது அன்னார்களது சாதிப் பெருமையும், சாதித்திமிரும், சாதிவெறியும், தலைக்கணமும் மட்டுமே. சில குடிகள் தம்மை தமிழராய் நினைப்பதுகூட இல்லை. ஆயினும் அக்குடிகள்தான் தமிழ்நாட்டையே ஆண்டு கொண்டிருக்கிறார்கள், அழித்துக் கொண்டிருக்கிறார்கள். நிலத்திற்குச் சொந்தக்காரனெனில் தம் நிலம் பாழ்பட

அனுமதிப்பானோ? வியர்வை சிந்தி உழைத்தவன் எனில் பயிரைக் கருக விடுவானோ? ஏரிகளை ஏரியாக்களாக்கிக் கொள்ளையடித்த கொழுத்த பணத்தை வட்டிக்கு விட்டுப் பிழைக்கும் இவன் தமிழனல்லவே.

இது அவன் நிலமல்ல தேவேந்திரர்களே. அவன் நிலமெனில் இப்படி பாழ்பட விட்டிருக்க மாட்டான். நிலத்தையெல்லாம் கட்டிடக் காளான்களாக மாற்றியிருக்க மாட்டான். நீரையெல்லாம் உறிஞ்சி விற்றிருக்க மாட்டான். அவன் தம்மைத் தமிழனென்று சொல்லிக் கொள்கிறான். தமிழனா எனில் இல்லையென்பதே பதில். அமிழ்தினும் இனிய தமிழ் மொழியைப் பேசாத, உலகின் உயர் பண்பாடான தமிழர் பண்பாட்டை அறியாத, மொழியையும், இனத்தையும் கட்டிக்காத்த தமிழ் வேந்தர் மரபைத் தெளியாத அவனெப்படி தமிழனாக இருக்க முடியும்?

அவன் தமிழனல்ல எனில் ஆரியனா. அவனை ஆரியன் எனச் சுட்டலாமோ எனில் அதுவுமில்லை. உறுதியாக இல்லை. ஆரியன் உயர்குணமுடையோன். நல்புத்தி கொண்டோன். ஞானத்தின் வழிநடப்போன். உண்மையை அறிந்தோன்.

இவன் தமிழனுமல்ல, ஆரியனுமல்ல. பின் யார்தான் இவன்? அவன் சொல்ல மாட்டான். அனைத்தையும் ஒளித்து வைத்திருக்கிறான். முகமூடியணிந்து திரிகிறான். சாதியை, மதத்தை, சாதித்திமிரை, மதவெறியை வளர்த்தும், பெருமைமிகு தமிழினத்தின் மாண்பைக் மூடிமறைத்தும் வரும் அன்னார்கள் யாரென்பதை உலகம் வெகு விரைவில் அறியப் போகிறது.

தேவேந்திரர்களே, உண்மையை மறைக்க முடியாது, ஒளிக்க முடியாது, திருட முடியாது, பூட்ட முடியாது.

தேவேந்திர குலத்தாரே, ஒரு செடியை ஒளித்து வைத்துக்கொண்டு, அதன் சாறை மறைத்து வைத்துக்கொண்டு, அதன் உண்மையை அறிந்துவிடக் கூடாது என்பதற்காக, சாற்றோடு எதையோ கலந்து கொடுத்து, தலைமுறை தலைமுறையாக வயிறு வளர்த்து வருகிறானே, பிழைத்து வருகிறானே, இவனுக்கு அண்டத்தின் இரகசியங்கள் தெரிந்தால் என்னாகும்?

இவன் அடியையும் முடியையும் அறிந்தால் உலகம் என்னாகும்? உலகத்தையே விற்றுவிடமாட்டானா. தானாய் காடுகளில் வளர்ந்து கிடக்கும் ஒரு செடியின் மூலிகைக்கே காசு கேட்பவன், கொடுக்கும் காசுக்கேற்ப வைத்தியம்

பார்ப்பவன், உலகத்தை உயர்த்த, மானுடத்தை மேலேற்ற எவ்வளவு காசு கேட்பான்? முதலில் இவன் மானுடத்தை மேலேற்றுவானா? தாம் மேலே இருந்துகொண்டு மாற்றாரையெல்லாம் அடிமைகளாகவல்லவா ஆக்குவான், நடத்துவான்.

இவனெப்படி மானுடத்தை வளர்ப்பான், மனிதரை மேலேற்றுவான், குளம் வெட்டுவான், நீரைச் சேமிப்பான், கழனி பெருக்குவான், உயிர்காக்கும் மருந்தான அமுதத்தை விளைவிப்பான், பகிர்ந்தளிப்பான், பசி போக்குவான்.

இவன் சுயநலவாதியன்றோ. இவனுக்குத் தான்மட்டும் அனைத்திலும் சுகித்திருக்க வேண்டும். தலைமுறை தலைமுறைக்குச் சொத்துச் சேர்க்க வேண்டும். வைத்தியன் என்றால் தலைமுறை தலைமுறைக்கும் அந்த இரகசியத்தைக் கடத்த வேண்டும். அரசியலாளன் எனில் தாம், தம்பிள்ளை, அது பிள்ளை, அதன் பிள்ளை என அவனவன் குடும்பத்திற்கே பதவியும் அதிகாரமும் போகவேண்டும். புத்திசாலியன்கள், பெருத்த மூளைக்காரன்கள்.

புத்திசாலியும், பெருமூளைக்காரனும் உலகத்தை அளக்க முடியுமா தேவேந்திர குலத்தாரே. கள்ளனும், கயவனும், கபடனும், கொள்ளைக்காரனும், கொலைகாரனும், மூடனும், முட்டாப்பயலும், பெண்பித்தனும், கூழைக்கும்பிடுக்காரனும், குடிகாரனும், போதைக்கு அடிமையானவனும், மடையனும், மதிகெட்டவனும், சுயநலக்காரனும் உலகத்தை அளந்துவிட்டால் என்னாகும் தேவேந்திரரே? திருடன் உலகத்தை அளந்து விடுவானா? உலகத்தை அவன் அத்தனை இளப்பமாகவா நினைக்கிறான்?

ஒரு மோட்டார் சைக்கிளைத் திருடி, அவசர அவசரமாக அத்தனை பாகங்களையும் கழற்றி, எடைக்குப் போட்டு காசு பார்க்கிறதே இந்தத் திருட்டுக் கூட்டம், உலகத்தைத் திருடி விட்டால், திருடிக் கொண்டால், உலகின் நிலை? உயிர்களின் கதி?

களவாணிப் பயல்களுக்கே இவ்வளவு சிந்தனை, இத்தனை புத்தி இருந்தால், மூவுலகங்களையும் கட்டி ஆளும் அவனுக்கு எத்தனை அறிவிருக்கும், ஞானமிருக்கும், வீரமிருக்கும்..

அவன் பார்க்காத திருடனா, அவன் காணாத கள்ளனா? அவன் எத்தனையெத்தனை மனிதர்களைப் பார்த்திருப்பான்? எத்தனையாயிரம் யுகங்களை அறிந்திருப்பான்? அவனுக்குத் தெரியாதா திருடன்களைப் பற்றி? அவன் அனைத்திலும் உயர்ந்தவன், பெரியவன். இவன் கள்ளனெனில் அவன் கள்வர் தலைவன். அவனிடம் இவன் திருட்டெல்லாம் செல்லாது, முடியாது, இயலாது.

அவனுக்குத் தெரியும், மனிதக் கூட்டத்தில் சில பதர்கள் திருடனாகவும் ஆவானென்று. திருடர்களிடமிருந்தும், கயவர்களிடமிருந்தும் உயிர்க்குலங்களைக் காக்கும் பொருட்டு, உலகைக் காக்கும் பொருட்டு, அன்பில், அறிவில் மிகப் பெரியவனான அவன் ஆயிரமாயிரம் வேலிகளைப் போட்டு வைத்திருக்கிறான், பல்லாயிரம் தடைகளை உண்டு பண்ணியிருக்கிறான். அவனுக்கு நன்றாகவே தெரியும், இந்தப் பேராசைக்கார திருடன் எந்த எல்லைக்கும் போவானென்று. அதற்கேற்பவே அவனும் எல்லை இல்லாக் குணங்களைக் கொண்டிருக்கிறான்.

உலகனைத்திற்கும் தந்தையாம் இறைவன், அனைத்தையும் மனிதருக்குத் திறந்துவிட்டு விடவில்லை. மனிதருக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவே அளிக்கப்பட்டுள்ளது. மடைகொள்ளும் அளவே நீர் ஓடுவது தகும். அதிலும் எல்லா மனிதருக்கும் திறந்து காட்டவில்லை. தகுதியுடையோருக்கும், நுட்பமானவர்களுக்கும், இறைவனின் பெருமைகளை உணர்ந்தோருக்குமே அவை அருளப்பட்டுள்ளன. அவனைப் போலவே, அவனது அறிவை, ஞானத்தைப் பெற்ற ஞானியரும், மக்கள் வகைக்கேற்ப, அன்னார்களின் அறிவிற்கேற்பவே வழங்கியுள்ளனர். பெரும்பாலானவற்றை நேரிடையாகவும், சிலவற்றை மறைமுகமாகவும், குறிப்பிட்டவற்றை மறைபொருளாகவும், குறியீடாகவும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்திய நிலத்தின் அனைத்துக் கடவுள்களும் அரவங்களோடு தொடர்புப்படுத்திக் கூறப்பட்டுள்ளது மிகுந்த குறியீட்டுத் தன்மை கொண்டது. பாம்பு எதைக் குறிக்கிறது? எத்தனையோ விதங்களில் மனிதர்களால் நினைக்க முடியும், உள்வாங்க முடியும், கற்பனை செய்ய இயலும், விரிவாக்க இயலும். எனினும் அரவங்களைக் காலத்தின் குறியீடாகக் கொள்வது பொருத்தமன்றோ. முருகனிடமும், சிவனாரிடமும், பெருமாளிடமும் காலம் பகுக்கப்பட்டுள்ளதோ? காலத்தை அவரவர்கள் காத்து வருகிறார்களோ? ஏராளமான அம்மன்கள் பாம்புகளோடு தொடர்புடையவர்களாக குறிப்பிடப்படுவதும் அறியத்தக்கது.

உண்மையெனில் ஏன் அவ்வாறு மூன்று, நான்கு அல்லது அதற்கும் மேலாக காலம் பிரிக்கப்பட்டிருக்கிறது அல்லது பிரிக்கப்பட வேண்டும்?

காலத்தை மனிதர் அறிந்து விட்டால், அறிந்து கொண்டால் என்னாகும்? ஒருவேளை காலத்தை அறிய முடியும் மனிதர், பெரும் பேராசைக்காரனாக இருந்து விட்டால்? காலம் ஏன் காக்கப்பட வேண்டும்? மனிதர்கள் காலத்திலேயே வாழ்ந்தனர். ஒவ்வொரு மனிதருக்கும், ஒவ்வொரு உயிரினத்திற்கும் ஒரு காலக் கணக்குள்ளது. காலம் யார் கையில், யாரிடம் பத்திரமாகப் பாதுகாக்கப்பட வேண்டும்? இறைவனிடம் தானே? இங்கேதான் இந்தியமண் ஒரு நுட்பம் கொண்டுள்ளது. காலத்தை தெய்வம், இறைவன் எனக் கொள்ளாமல், அதாவது ஒற்றை இறை எனக் கொள்ளாமல், தெய்வங்கள், இறைவன்கள் எனக் கொண்டுள்ளது. மனிதர் மிக முக்கிய இரசியங்களை தனித்தனியாகப் பாதுகாத்து வைப்பதைப் போல. ஒருவேளை ஒரு துண்டு இரகசியம் கிடைத்தாலும், அதனைக் கொண்டு முழுமையை அறிய முடியாதல்லவா? இது ஒரு ஆகச் சிறந்த ஏற்பாடு. இறைவன் அறிவில் பெரியவனல்லவா.

உண்மையெனில், மனிதர்கள் இது வரையிலும் நம்பி வந்த, கருத்தில் கொண்ட காலம், ஒரே நேராக இல்லாமல், தொடர்ச்சியாக இல்லாமல், துண்டு துண்டாக, பகுதி பகுதியாக உள்ளதெனக் கொள்ளலாமோ. காலத்திற்கு ஒரு ஆரம்பமும் முடிவும் உண்டோ. காலத்தை முதலாவது காலம், இரண்டாவது காலம், மூன்றாவது காலம் எனப் பிரித்துக் பார்க்கலாமோ. எனில், ஒரு காலத்திற்கு தொடக்கம் உண்டு, முடிவும் உண்டு. ஒரு காலத்தின் தொடர்ச்சியாக இன்னொரு காலம் வரும். இப்படி காலங்கள் ஒவ்வொன்றாக வந்துகொண்டே இருக்குமோ. இப்படிக் கொள்வோமே. உதாரணமாக பத்துக் காலங்கள் உள்ளன எனில் பத்தையும் ஒன்றாக்கி ஒரு காலமாக்கிக் கொள்வது. இப்படியே பத்துப் பத்தாக காலங்களை வரிசைப்படுத்துவது. பத்துப் பத்துக் காலங்களையும் ஒன்றாகக் கட்டலாமன்றோ.

எனில் காலம், காலங்கள், காலங்களின் தொகுதி, அவற்றின் தொகுப்பான பெருங்காலம் என காலம் உள்ளது. பெருங்காலங்களின் தொகுப்பை யுகம் எனக் கொள்ளலாமோ. எனில் யுகம் என்பது பெருங்காலத் தொகுப்பு. அது பல்வேறு உட்காலத்தைக் கொண்டுள்ளது.

ஆம் எனில், ஒரு காலத்தின் தலைவன் யார்? அக்காலத்தை அறிந்தவர் யார்?

அக்காலத்தை அறிந்தவர் யார்? காலங்களைக் கொண்டவர் யார்? பெருங்காலத்தைக் கட்டுக்குள் வைத்திருப்பவர் யார்? யுகங்களை ஆள்பவர் யார்?

இங்கே ஒரு நுட்பம் இருக்கிறது. முதல்நிலைக் காலத்தை தெய்வங்கள் ஆள்கின்றன. முடிவான காலத்தை இறைவன் ஆள்கிறான். காலத்தில் பெரும் படிநிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு படியாகத்தான் செல்லமுடியும். தாவியோ, குதித்தோ செல்ல முடியாது என்பது தெளிவு.

இதைத்தான் இந்திய மரபில் கல்பம் என்கிறார்கள். கல்பம் என்பது ஒரு பெருங்காலத் தொகுதி. அக்கல்பத்தில், அக்காலத்தில் நடந்ததை, அந்தக் கல்பத்திற்குரிய, காலத்திற்குரிய பிரம்மன் முழுமையாக அறிவான். எனில், ஏராளமான பிரம்மன்கள் இருப்பார்கள். இந்திய மரபு என்ன சொல்கிறதெனில், ஆயிரம் பிரம்மன்களின் அதாவது கல்பங்களின், காலங்களின் தொகுப்பை, கால நிகழ்வுகளை அறிந்தவன் நாராயணன். ஆயிரம் பிரம்மாக்களின் காலம் ஒரு ஊழியாகக் கருதப்பட்டு, அந்த ஊழிக்கு தலைவனாக நாராயணன் இருக்கிறான்.

உண்மையெனில், ஊழிக்கு ஒரு முதலும் முடிவும் இருக்குமல்லவா. முதல் எது? முதலாவது பிரமன். முடிவு எது? இறுதியான பிரமன். பிரமன் யார்? விடை எளிது. நாராயணனின் மகன். தந்தையும் மகனும். இருவரும் ஒன்று. எனில், ஒவ்வொரு கல்பத்திற்கும் ஒரு நாராயணனன்றோ. அந்தப் பிரம்மன் என்னாகிறார்? அவன் காலத்தை, அவனது காலத்தை அறிந்தவன் என்பதால், அவனுக்கு முடிவில்லை. ஏன் முடிவில்லை? அந்தக் காலம் பாதுகாக்கப்படுகிறது. எதற்காகப் பாதுகாக்கப்பட வேண்டும்? ஏனெனில், அக்காலத்தில் நடந்த, நிகழ்ந்த எதுவும் மறுபடியும் நடப்பதில்லை. ஒரு காலத்தில் பிறந்த எதுவும் மறுபடியும் பிறப்பதில்லை. உலகில் ஒருமுறை நிகழ்ந்த எதுவும் மறுபடியும் நிகழ்வதில்லை. இதுவே நாராயணனின், ஶ்ரீமத் நாராயணனின், விஷ்ணுவின் பெருமையான பெருமை..

பிரம்மன் தனது கல்பத்தை அறிவான். நாராயணன் தனது ஊழியை, யுகத்தை அறிவான். எனில் யுகங்களுக்கு ஒரு நாராயணன் இருப்பானன்றோ. நாராயணர்களின் தொகுப்பு பெருயுகம், மகாயுகம். அது மகாவிஷ்ணுவின் கைகளில் என்றும் பத்திரமாக இருக்கும்.

மகாவிஷ்ணுவின் அன்பு, அறிவு, ஆற்றல், பெருமை எல்லாம் இதில்தான் அடங்கியுள்ளது. ஒவ்வொரு பெருயுகத்திலும் மகாவிஷ்ணு புதுமையாக, புதியதாக உலகைப் படைக்கிறார். ஒரு பெருயுகத்தில் நிகழ்ந்தது ஒருபோதும் மறுபடியும் நிகழாது. ஏனெனில் நாராயண்கள் அவரவர் காலத்தை அறிந்து அண்டவெளிகளில் சயனித்திருக்கிறார்கள். அனைத்து நாராயணர்களும் அவரவர் காலத்திற்குப் பொறுப்பு. அவர்கள் தங்களுக்குள் இணைந்திருக்கிறார்கள்.

எதனால் உலகம் இத்தனை பிரம்மாண்டமாய், இவ்வளவு பெரிதாய் தோற்றமளிக்கிறது, தோன்றியுள்ளது?

உலகம் வளர்ந்து கொண்டே, உயர்ந்து கொண்டே வருகிறது. இனியும் வளரும், உயரும் - என்றும், என்றென்றும். உலகம் நித்தியம், நிரந்தரம். உலகம் நாராயணனின் கைகளில் என்றும் பத்திரம். ஏனெனில் அதை ஆள்பவன் என்றென்றைக்கும் நிரந்தரமானவன், மங்களமானவன். அதுவே விஷ்ணுவின் ஆண்மை, அறிவு, புகழ்.. அதனால்தான் அவர் மகாவிஷ்ணு.

பரந்து விரிந்து நீண்டு நெடிதுயர்ந்திருக்கும் இவ்வுலகின் பெருந்தந்தை நாராயணான ஸ்ரீமகாவிஷ்ணுவே. அவரே இவ்வுலகின் பெரிய தந்தை.

## Sriman NARAYANAN is the GREATEST FATHER of this Great Universe..

இவ்வளவு புகழ், இவ்வளவு பெருமைகொண்ட அந்த நாராயணன்தான் வாசுகியின் வயிற்றில் பிறந்து, யாசோதையிடம் வளர்ந்து, கறவைகள் பின் சென்று, பார்த்தனுக்கு சாரதியாகி, புது யுகத்தைப் படைத்து, கலியுகத்தை முடித்து, வரும் யுகத்திற்கு வழிகாட்ட ஏழுமலைகள்மேல் நாயகனாக வீற்றிருக்கிறான். சீனிவாசப் பெருமாளான அந்தக் கோவிந்தனின் பெருமையான பெருமைகளை அறிந்ததால்தான் நாச்சியார் எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உற்றோமேயாவோம், உனக்கேநாமாட்செய்வோம் என்றார்.

### அவன் ஏன் கண்ணனாக வந்து கன்றோட்டினான் உலகத்தோரே..

அறிவியல், உலகம் பட்டெடன வெடித்துத் தோன்றியிருக்கலாம் என்றொரு கருத்தை முன்வைக்கிறது. செடி சட்டென மரமாகுமோ? அது வேர்ப் பிடித்து, இலை

விட்டு, தண்டை நீட்டி, கிளை விட்டு, கிளைகளாகப் பிரிந்து, இலைகளைப் பெருக்கியல்லவா மரமாகிறது.

ஒருவர் விதையொன்றைப் மண்ணில் ஊன்றி விட்டு வெளியூர் சென்று விடுகிறார். சில வருடங்கள் கழித்து வந்து பார்க்கும்போது, விதை முளைத்து செடியாகி மரமாகி நிற்கிறது. விதை சட்டென மரமாகி விட்டதே என அவர் நினைப்பாரோ? அவரால் அப்படிச் சொல்ல முடியுமோ? அங்கே ஒரு காலம் இருக்கிறது. விதை ஊன்றியதிலிருந்து அது மரமாவது வரை அதன் காலஎல்லை அமைந்திருக்கிறது. அதன் காலஎல்லையும் வரையறுக்கப்பட்டிருக்கிறது. இத்தனை காலத்திற்குள் விதை முளைத்து மரமாக வேண்டுமென்பது காலத்தால் தீர்மானிக்கப்படுகிறது. எனில் காலம் விதையினுள் பதிக்கப்பட்டிருக்கிறதாகக் கொள்ளலாம். அனைத்து வகை மரங்களுக்கும் கால அளவீடு உள்ளது. ஒரு விதை ஓரிரு ஆண்டுகளுக்குள்ளேயே மரமாகிவிடும். சில மரங்களுக்கு பல ஆண்டுகள் தேவைப்படும். ஒரு விதை, ஒரு செடி மரமாகிவிட்டது என்பதற்கு எது கணக்கு? அவ்விதை முளைத்து, அச்செடி வளர்ந்து, அது என்றைக்கு தமது முதலாம் விதையை, தமது முதல் காலத்தை உருவாக்குகிறதோ, அதுவே அதன் காலக் கணக்கு. அதன் பின்னர் நிகழ்வது காலத்தின் நீட்டிப்பு, தொடர்ச்சி. ஒவ்வொரு பருவத்திற்கும் ஒவ்வொரு ஆண்டிற்கும் அது விதைகளை உண்டு பண்ணும். எனில் அதன் பிறகான காலம் இரண்டாவது மூன்றாவது எனக் கணிக்கப்படும். எத்தனை காலத்திற்கு ஒரு மரம் இருக்கும்? பதில் இயற்கையிடம் இருக்கிறது, காலத்திடம் இருக்கிறது, இறைவனிடம் இருக்கிறது.

மரமொன்றின் ஆயிரமாயிரம் விதைகளில், சில மட்டும் மரமாவதன் காரணத்தை மனிதர் அறிய முடியுமா.

உலகில் படிநிலைகள் உள்ளன. பூமியிலும் சரி, வானத்திலும் சரி, பல படிநிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. படிகளின் நோக்கம் மேலேறுவதற்கே. படியேறி மேலே செல்வதே வீரம். சிகரத்தை அடைவதே வெற்றி. இறைவன் படிகளை அமைத்திருப்பதே உயிர்க்குலங்களின் மேலேற்றத்திற்கே, உயர்விற்கே. தம்மைப் போலவே அனைவரும் இறைவன்களாக ஆக வேண்டுமென்பதே இறைவனின் பெருவிருப்பமாக இருக்கும். அதற்கே அவன் காத்திருக்கிறான்.

படிநிலையில், படிமக் கோட்பாட்டில், கூர்தலறக் கொள்கையில் அதாவது பரிணாமத்தில் மீன் சட்டென மனிதராக ஆகாது. மீன் நீரில் சுவாசிக்கக் கூடியது. மனிதன் காற்றைச் சுவாசிக்கின்றான். பெருமலையொன்றில் சட்டென ஏறமுடியாதல்லவா. படிப்படியாகத்தானே ஏற முடியும். முதலில் மலையடிவாரத்திலிருந்து தொடங்க வேண்டும். அடிவாரத்திலிருந்து பாதிதூரம் அதாவது இடைப்பகுதிக்குச் சென்று சேர வேண்டும். அங்கிருந்து மேலே ஏறி உச்சியை அடைய வேண்டும்.

மீன், தண்ணீரை விட்டு மண்ணில் வாழ வேண்டுமெனில், இரண்டிற்கும் இடையில், இரண்டையும் இணைக்கும் பாலமாக ஒரு உயிரி தோன்ற வேண்டும். அது நீரிலும் நிலத்திலும் வாழ்வதாக இருக்க வேண்டுமென்பது அவசியமல்லவா? நீரில், பின்பு நீரிலும் நிலத்திலும், அதன்பின் நிலத்தில் எனில், நீரை முதலாவது, ஆதியானது என்றும், நீரும் - நிலமும் நடுவானது என்றும், நிலத்தை முடிவானது என்றும் கொள்வது பொருத்தம். முதல் - இடை - முடிவு எனச் சுட்டலாமன்றோ.

அடி - முடி எனக் கொள்வதும் பொருத்தம்தானே. மலையின் அடியும் முடியும், தொடக்கமும் முடிவும் எனில், இடையின் சிறப்பு என்ன? இடையின் முக்கியத்துவமென்ன? இடை இல்லாமல் மலையின் சிகரத்தை அறிய முடியாதா? ஏற முடியாதா?

அறிவியல் அனைத்தையும் மாற்றி விட்டது, எளிதாக்கி விட்டது. இலங்கு ஊர்தியில் ஏறினால் கீழிருந்து கிளம்புகிறது. உயரமாகிறது. நேராகப் பறந்து உச்சியை அடைந்து விடுகிறது.

அறிவியல் நினைத்தால் மீனை மனிதனாக்கும், மனிதனை மீனாக்கும். அறிவியல் மாயங்கள் செய்யக் கூடியது. மனிதர்களை மயக்கக் கூடியது. எனினும் அறிவியலுக்கும் எல்லையுண்டு. அடிவாரத்திற்கும் முகட்டுக்குமான தூரத்தை அது கடந்துதான் ஆக வேண்டும். அதற்கு காலம் வேண்டும், தேவைப்படம். சட்டெனக் கிளம்பி பட்டென அடைய முடியாது. ஆனாலும் இப்படி பட்டென, சட்டெனப் போகும், பறக்கும் ஆசையும் அறிவியலுக்கு இருக்கிறது. முயற்சித்தும் வருகிறது. கால இயந்திரமாமே.

அறிவியலா இறைவனா? விஞ்ஞானமா மெய்ஞ்ஞானமா? அறிவியல் பெரிதா இறைவன் பெரியவனா.

பூச்சிகளே இல்லாமல் இருந்தால், இறைவன் பூச்சிகளையே படைக்காமல் விட்டிருந்தால், நாத்திகர்களின் மொழியில் இயற்கையில் பூச்சிகளே தோன்றாமல் இருந்திருக்குமேயானால் அதாவது பறக்கும் உயிரினங்கள் இல்லையெனில் மனிதர்களுக்குப் பறக்கும் ஆசை வந்திருக்குமா? நம்மாலும் பறக்க முடியும் எனும் தன்னம்பிக்கை கிடைத்திருக்குமா? மனிதர் முயன்றிருப்பாரா அல்லது பறந்துதான் காட்டியிருப்பாரா? எனில், மனிதர் பறப்பதற்கு யார் காரணம்.

அறிவிற் சிறந்த தேவேந்திரரே, யாம் பெரிய பேராசிரியர் போன்று வகுப்பெடுக்கிறோமோ? யாம் இளநிலை படிக்கும் காலத்தில், யாம் வகுப்பில் முதல் மாணவனாக வருவதில், விடுதியிலிருந்த தேவேந்திர குலத்து உறவுகளுக்கு அவ்வளவு பெருமை. எம்மை மதிப்போடு நடத்துவார்கள். யாம் நமது குலத்தில் முதலாவதாக வருவோம் என அண்ணன் - செல்வக்குமார் சொன்னார். எம்மால் நம் குலம் உயர்வடையும் என்றும் வாழ்த்தினார். இதுதான் இறைவாக்கோ தேவேந்திர குலத்தாரே. மூத்தோன் சொன்னது உண்மைதானா? எம்மால் தேவேந்திர குலம் உயருமா? உயர்வடையுமா.

நமக்குத் தெரிந்ததெல்லாம் காடும் கழினியும்தானே உறவுகளே. நாமுண்டு, நம் வேலையுண்டு, நமது ஆடுகளும், மாடுகளும் உண்டு என வாழ்ந்தவர், வாழ்ந்தும் வருபவர்தானே நாம். நம் குலத்தாருக்கு பொருள் முதலிலா, கருத்து முதலிலா எனச் சிந்திக்க, எண்ண, பேச, நேரமேது? அட சித்தித்தால்தானே பேச முடியும், தெளிய முடியும், ஆராய முடியும்.

காலையில் கழனிக்குப் போனால் மாலை வரை வேலை. வரும்போதே மாட்டுக்குப் புல்லுக் கட்டும் சுமந்து வர வேண்டும். வேலையே பெரும் களைப்புக் கொடுக்கும். வீட்டிலும் வேலைகள். வேலை முடிந்து உண்பது, உறங்குவது, காலையில் எழுவது, அடுத்த நாளுக்கான தொடர் ஓட்டத்தில் ஓடுவது, மறுநாளும் இதே, ஆண்டு முழுவதும் இதே.

கதை பேசிக்கொண்டே களையெடுப்பதில் நம் குலத்தாருக்கு எத்தனை சுகம். பாட்டுப் பாடிக்கொண்டே நாற்று நடுவதில் நம் குலத்தாருக்கு எவ்வளவு பெருமை. எம் வாழ்நாளில், எமதூரில் ஒரு தேவேந்திரர்கூட உழைக்காமல் இருந்ததில்லை. உழைப்பதை இழிவாகக் கருதவில்லை. உழைக்கிறோமே என நொந்து கொள்ளவில்லை. இப்படி மாடாய் உழைக்கிறோமே என சலித்துக்

கொள்ளவில்லை. இப்படி எங்களை காட்டிலும் மேட்டிலும் திரிந்து பிழைக்க வைத்துவிட்டாயே என இறைவனைத் திட்டியதும் இல்லை. எல்லாம் தலைவிதி என மூலையில் முடங்கியும் கிடக்கவில்லை.

எம் கண்ணால் பார்த்திருக்கிறோம். காலையில் தூக்குச் சட்டிகளைத் தூக்கிக் கொண்டு மகிழ்ச்சியாகக் காட்டுக்குப் போவார்கள். அவர்கள் முகங்களில் சிறிதுகூட யாம் கவலையை, சோகத்தை, ஏக்கத்தைப் பார்த்தில்லை. பேசிக்கொண்டும், சிரித்துக்கொண்டும் வேலை செய்வார்கள். உழைக்கப் பிறந்த மக்கள். உழைப்பதைத் தவமாகக் கொண்ட மக்கள். மண்ணின் நல்ல குடியினர். நம்மை நினைத்து நிச்சயம் மண் பெருமை கொள்ளும் தேவேந்திரகுல வேளாளரே.

விண்ணும் பெருமை கொள்ளுமா? உறுதியாக. சில குடிகள், சில குலத்தார் நம்மை, நம் குலத்தை இழிவாகப் பேசுவதைப் பார்க்கிறோம். நாம் இம்மண்ணில் இழிவு எனச் சொல்லப்படும் எந்த வேலைகளையும் செய்வதில்லை. மண்ணில் இழிவான வேலையென்று எதுவுமில்லை என்பது வேறு. அது இருக்கட்டும். நாம் அப்படியான வேலைகளைச் செய்கிறோமா? உறுதியாக இல்லையல்லவா. நம் குலத்தில் திருடனே இல்லை எனச் சொல்லமுடியாவிட்டாலும், மிக மிக அரிதாகவே ஒன்றிரண்டு பேர் இருப்பார்கள். அவர்கள் உழைப்பை, அதன் மகத்துவத்தை அறியாத மூடர்கள். அவர்களை விட்டுத் தள்ளுவோம். பொதுவில் தேவேந்திர குலத்தவர் திருடுவதில்லையல்லவா. நாம் பெருமைப்பட்டுக் கொள்ளலாமே நாங்கள் உழைக்கும் மக்களென்று. சிலா் சொல்கிறார்கள், நமக்கு அறிவில்லையாம், ஒன்றுமே தெரியாதாம், பண்ணை அடிமைகளுக்கு என்ன தெரியும்?

உறவுகளே, நாம் அறிந்த நுட்பத்தை அந்த அற்பர்கள் அறிந்திருக்கவில்லை. மனிதருக்கு அறிவு என்பதே தாவர விலங்குகளைப் பற்றிய அறிவுதான். அறிவென்றாலே அது மருத நிலத்தின் அறிவே. மருதத்தாரே தாவரங்களோடும் விலங்குகளோடும் பழகியவர், அறிந்தவர், உணர்ந்தவர், வளர்த்தவர், போற்றியவர். மனித குலத்தின் முதலாம் அறிவு தாவர - விலங்கு உலகத்திலிருந்தே. அவர்களே மானுட குலத்தின் மூத்த ஆசான்கள். அவர்களே மனிதர்களின் அறிவு. அவர்களே தேவர்கள்.. மண்ணில் மரமாகவும், செடியாகவும், கொடியாகவும், விலங்குகளாகவும், மனிதர்களாகவும் பிறப்பவர்கள் தேவர்களே. வானுலகத்துத் தேவர்களே மண்ணில் பிறக்கின்றனர். அவர்களை அறிவதே அறிவு.

மண்ணில் தோன்றும் எந்த உயிரும் மறைவதில்லை, எக்காலத்தும்.. ஒருமுறை பிறந்துவிட்டால் போதும், மற்ற அனைத்தையும் இறைவன் பார்த்துக் கொள்வான். பிறந்தோரை மேலே ஏற்றுவது அவன் பொறுப்பு, கடமை. எனில், வானுலகத்துத் தேவர்கள் ஏன் மண்ணில் பிறக்கிறார்கள்? அன்பை அறியவோ. உலகில் அன்பிற்கு எத்தனை மதிப்பிருக்கிறது எனத் தெளியவோ. உலகில் சிறந்ததெது எனக் கண்டுபிடிக்கவோ. இறைவன் எத்தனை பெருமையானவன் என அறிந்து கொள்ளவோ. மரங்கள் தவம் செய்கின்றனவோ. மனிதர்கள் பள்ளிக்கூடம் சென்று அறிவைப் பெறுவது போல், அறிவைத் தெளிவது போல், தேவர்கள் அன்பை அறிய மண்ணுலகில் பிறக்கிறார்களோ?

மண் எத்தனை அன்பு நிறைந்தது. மனிதர் அறியாவிட்டாலும் தேவர்கள் அறிவாரல்லவா? கோழி ஏன் அதன் குஞ்சைப் பொரிக்க இத்தனை மெனக்கெடுகிறது? அல்லும் பகலும் ஏன் முட்டை மேலேயே படுத்துக் கிடக்கிறது? உண்பதற்குக்கூட வெளியே செல்வதில்லையே. முட்டைகளை கவிழ்த்துப் போடுகிறது, கூட்டி வைக்கிறது. உழவன் தம் பயிரை கண்ணும் கருத்துமாகப் பாதுகாப்பது போலல்லவா அந்தக் கோழி தமது முட்டைகளைப் பாதுகாக்கிறது. கோழி எதனால் அதன் முட்டைகளை அத்தனை அக்கறையாய் அடைகாக்கிறது தேவேந்திர குலத்தாரே? அதன் செயல் அன்பா? அறிவா? ஆசையா? கோழி ஆசைப்பட்டு அடைகாக்கிறதா அல்லது அன்பால் அடைகாக்கிறதா? ஒரு கோழிக்கே தம் முட்டைகள் மீது இத்தனை அன்பும், அக்கறையும், கரிசனமும், காவலும் இருக்கிறதே, உலகமென்னும் முட்டையைக் காக்கும் இறைவனுக்கு தம் உயிரினங்கள்மீது, தம் குழந்தைகள்மீது, எத்தனை அன்பிருக்கும், எவ்வளவு அக்கறையிருக்கும்..

சின்னஞ்சிறு சிட்டுக்குருவி, தம் முட்டைகள் வெளியாருக்குத் தெரியக் கூடாதென எத்தனை அன்பால் இலைகளைத் தைத்து கூட்டைக் கட்டுகிறது? அது கூடு கட்டுவதில் எத்தனை உழைப்பிருக்கிறது தேவேந்திர குலத்தாரே. சிறு குருவி. நம்மைப்போல் கைகள் இல்லை. சிறு வாய்கொண்டு ஒவ்வொரு நாராகக் கொண்டுவந்து தன் முட்டைகளுக்கு மெத்தை அமைக்கும் அந்தக் குருவியின் அன்பிற்கு ஈடேது. இலைகளை ஒன்றாக்கி அது தைக்கிறது பாருங்கள். எல்லாம் அந்தக் கண்ணனின் மாயை. இறைவன் மிகப் பெரியவன், மகாப் பெரியவன், மெகாப் பெரியவன்.. அன்பில் அறிவில் கருணையில். வீரத்திலும்தான்.

அத்தனை பெரியவன் நுண்ணியதிலும் நுண்ணியனாக இருப்பது வியப்பிலும் வியப்பு. பெரியவனான இறைவன், பெரும்பெரியவனான இறைவன், ஆகப்பெரியவனான இறைவன், மிகச் சிறியோனாக, மிகமிகச் சிறியவனாக அணுவுக்குள் அணுவாக, நுண்ணியவனாக இருப்பது எதற்கு?

காக்கை எத்தனை பாதுகாப்பாகத் தன் கூட்டைக் கட்டுகிறது, வானிலிருந்து பார்த்தால் அதன் வீடு தெரியாது. அவ்வளவு இரகசியமாகக் கட்டுகிறது அதன் குஞ்சுகளின் வீட்டை.

காக்கைக்கே இவ்வளவு இரகசியம் என்னில், அண்டங்களை, அகிலத்தைக் காக்கும் அவனுக்கு. அந்தப் பரந்தாமனுக்கு, பாற்கடல் வாசனுக்கு, நாராயணனுக்கு, கமலக் கண்ணனுக்கு.

மீன்கள் முட்டைகளை முதுகில் சுமந்து திரிகின்றன. சில வாயினுள்ளும் வைத்துக் கொள்கின்றன. என்னில், குஞ்சுகள் பொரிக்கும்வரை அம்மீன் உண்ணாதன்றோ. எத்தனை அன்பு.. என்னில், மாதவனுக்கு, இராகவனுக்கு..

கங்காருவைப் பாருங்கள். தனது வளர்ந்த குட்டியைக்கூட தமது வயிற்றுப்பையில் தூக்கித் திரிகிறது. அதன் அன்பிற்கு இணையேது தேவேந்திரர்களே.

நமது குலத்தாரில் அனேகம் பேர் சித்த வைத்தியர்களாக இருக்கின்றனர். நம் குலத்தார் வைத்தியர்கள் என்றாலும் லாட்ஜ்களில் ரூம்போட்டு வைத்தியம் பார்ப்பதில்லை. வைத்தியம் பார்ப்பதற்கும் காசு வாங்குவதில்லை. குளிகைகள் தயாரிக்க வேண்டியிருப்பின் அதற்குக் கொஞ்சம் காசு தேவைப்படும். பெரும்பாலும் நம் வைத்தியர்கள் சுற்றுப்புறங்களில் கிடைக்கும் செடி, கொடிகளையே மருந்தாகக் கொண்டிருப்பர்.

மூலிகை வைத்தியனுக்கு தாவரங்களைப் பற்றிய அறிவு வேண்டுமல்லவா? யாருக்கு இந்த அறிவு வந்திருக்கும்? யார் தாவரங்களோடு வாழ்ந்தார்களோ, அவர்களுக்கே தெரிந்திருக்கும் என்பது தெளிவு. எனில், தாவரங்களோடு நெருங்கிய சொந்தம் கொண்டவர்கள் நாமல்லவா.

நமக்கல்லவா தெரியும் மூலிகைச்செடி எது, விசச்செடி எதுவென? நமக்கல்லவா தெரியும் பயிர் எது, களை எது என? நமக்கல்லவா தெரியும் களையை எப்படி அகற்றுவது என. நமக்கல்லவா தெரியும் - பயிர்களில் உள்ள களையை பறிக்கத் தெரிந்தவனே உயிர்களில் உள்ள களையையும் பறிக்க முடியுமென. உழுது, பாரம் சுமந்து வலுவேறிய கைகளால் அல்லவா களையை சட்டெனப் பிடுங்கி எறிய முடியும்.

களையெடுப்போமா தேவேந்திர குலத்தாரே. நாம் காலமெல்லாம் பயிரில் உள்ள களைகளையே எடுத்துத் திரிந்தோம், திரிவோம் எனப் பேசித் திரிகிறது, கனாக் காண்கிறது சிறு கயவா் கூட்டம். நம்மால் மட்டுமே உயிர்களிலுள்ள களைகளையும் அகற்ற முடியும் என்பதை அந்த மூடர் கூட்டம் உணரும் காலம் வந்துவிட்டதல்லவா தேவேந்திர குலத்தார்களே.

மீனை அறிந்தது அறிவு. கொக்கை அறிந்தது அறிவு. குருவியை அறிந்ததும் அறிவு. கரிச்சானை, குளவியை, பாம்பை, இப்படி ஆயிரமாயிரம் விலங்குகளின் அறிவல்லவா நமது அறிவு. மானுட குலத்தின் பேரறிவு..

ஒரு மீனின் அறிவு மறுமீனின் அறிவோடு ஒப்பிடப்பட்டது. வேறுபாடு ஏன் என விவாதிக்கப்பட்டது. எதனால் என ஆராயப்பட்டது. ஒற்றுமையையும் வேற்றுமையும் கொண்டு இரண்டும் ஒரே சாதியென்றும், வேறுவேறு சாதி எனவும் பிரிக்கப்பட்டது, பகுக்கப்பட்டது, தொகுக்கப்பட்டது. மாந்த குலத்தின் அறிவாக அது முன்னெடுக்கப்பட்டது.

குறிஞ்சி மீனைக் குத்தி கொத்தித் தின்றிருக்கும். முல்லை சுட்டுத் தின்றிருக்கும். மருதம் குழம்பாக்கி உண்டிருக்கும். எனில் அறிவைப் பெருக்கியது மருதநிலமன்றோ. மருதத்தின் அறிவுப் பெருக்கத்திற்குக் காரணம் மண்ணும், மழையும், நீரும், நிலமும், தாவரமும், விலங்குகளுமன்றோ. மனிதருக்கு எங்கிருந்து வந்தது இத்தனையறிவு. வானத்திலிருந்து பொத்துக்கொண்டா கொட்டியது அறிவுப் பொட்டலங்கள்?

ஆரண்யகங்களில் ஏன், எதற்கு, எப்படி எனும் கேள்விகளோடு அலைந்து திரிந்தது நம் முன்னோரல்லவா. அது ஏன் ஆரண்யகங்களை முனிவர்கள் தேர்ந்தெடுத்தார்கள்? ஏன் பாலையையோ, நெய்தலையே தேடாமல் காடுகளுக்குள் போய் அறிவை, மெய்யைத் தேடினார்கள்? காடுகளிலென்ன அறிவு விதைகளாகவா

மரங்களில் தொங்கிக் கொண்டு கிடந்தது? ஏன் காடு? எங்கிருந்து வந்தது அந்த ஞானம், உபநிடதம்? எப்படி அறிந்தார் அவர்? ஏன் அறிந்தார்? யாருக்காக அறிந்தார்? முரடர்கள் நினைத்துப் பார்த்ததுண்டா?

தேவேந்திரரே, மண்ணை விடப் பெரியதொரு அறிவு உலகிலுண்டோ. அதை நாம் அறிந்திருந்தால்தானே நம் முன்னோர் மண்ணோடு மண்ணாகக் கிடந்தார், சேற்றிலும் சகதியிலும் உழன்றார். உலகில் பயிர்த்தொழிலே பெரிதெனக் கொண்டார். நம் பொறுமை நம் தாயான மண்ணைப் போன்றதல்லவா. நாம் எத்தனை பொறுமை காத்தோம் தேவேந்திர குலத்தாரே.

நாம் மண்ணை அறிந்ததுபோல், மண்ணை மதித்ததுபோல், மண்ணை வணங்கியதுபோல், மண்ணை உயர்த்தியதுபோல், மண்ணைப் பெண்ணாக, தாயாக, தெய்வமாகக் கொண்டதுபோல், நம்மை மண்ணுக்குத் தெரியுமா? நிலமென்னும் நல்லாளுக்கு தேவேந்திர குலத்தார் யார், அவர்களது பெருமையென்ன, சிறப்பென்ன என்பது தெரியுமா? தாய் தம் பிள்ளைகளை நன்கறிவாரன்றோ.. அன்னைக்குத் தெரியாதா. தன்னைத் தாயாகக் கொண்ட குடி எது, தாயாகக் கொண்ட குலத்தார் யார், விலைபேசி கூவிக் கூவி விற்கும் மடக்குடி யார், எவரென?

உலகத்தார் மண்தானே, மண்ணுக்கு என்ன தெரியும் என இறுமாப்பில் இருக்கிறார். மனிதர்களே, மண் அனைத்தையும் அறியும். மூவுலகங்களிலும் நிகழும் அனைத்தையும் நிலமகள் இங்கிருந்தே அறிவாள். அது எப்படி எனத் தெரியுமா?

மண்ணை மடந்தை என நினைத்தீரா பேராசை கொண்டோரே. மண் எல்லோருக்கும் திறந்து காட்டுமென்றா நினைக்கிறார் மனிதர்.

மனிதர்களே, தேவர்களே, தமிழ்ச் சாதிகளே, மண் எல்லோருக்கும் திறந்து காட்டாது. வானம் அனைவருக்கும் வழி விடாது.

தேவேந்திரர்களே, அன்பு நிறைந்த நமது பெருமைமிகு அம்மா, எப்படி அனைத்தையும் அறிகிறார் என அவர் சொல்லமாட்டார். அவர் எப்போது, எவ்வளவு சொல்ல வேண்டுமோ அவ்வளவுதான் சொல்லுவார். அனைத்தையும் சொல்லிவிட மாட்டார், அனைவருக்கும் சொல்லிவிடவும் மாட்டார்.

பூமியும் வானமும் அறியும் யார் நல்லோர் என. மண்ணுலகமும் விண்ணுலகமும் அறியும் எந்தக் குடி அறக்குடி என. அறத்தை முன்னெடுக்கும் குலம் எது என்பதைத் தெய்வங்கள் அறியும். உண்மையில் தெய்வங்களே அறத்திற்கான வழியைக் காட்டுகின்றன, நடத்துகின்றன.

தமிழகத்தில் வாழும் தேவேந்திர குலத்தாருக்கு பெரும்பாலான கோவில்களில், பெருங்கோவில்களில் சிறப்புகள் செய்யப்பட்டு வருவதை இப்போதுதான் தமிழ்க் குடிகள் அறியத் துவங்கியுள்ளன. அதுவும் இணையத்தின் பயனாகவே தெரிய வந்திருக்கிறது. செய்தித்தாள்கள் இவற்றையெல்லாம் எப்போதும் வெளியிட்டதில்லை. அவர்களுக்கு பட்டியல் சாதியார் எனில் பெரிய விலகலும் ஒதுக்கலும் உள்ளது தெளிவு.

அது ஏன் தேவேந்திர சமூதாயத்தவருக்கு மட்டும் நூற்றுக்கணக்கான திருக்கோவில்களில் மரியாதை கொடுக்கப்படுகிறது? தெய்வங்கள் நம்மை அறிந்திருக்கின்றன. நம் குடியின் வரலாற்றை, பெருமையை, அறவழியை தெய்வங்கள் அறிந்ததனாலேயே இந்தச் சிறப்பு.

தேவேந்திர குலத்தவர் பட்டியல் சாதியா எனில் அது இடையில் நிகழ்ந்த ஒன்று. அன்று தேவேந்திரரில் ஆங்கில அறிவு கொண்டிருந்தோர் வெகு குறைவு. நமக்குத் தெரிந்ததெல்லாம் நிலம் மட்டுமே. நாம் நிலத்தோடு உழன்று கொண்டிருக்க, ஆங்கிலம் அறிந்திருந்த சில குடிகள் சாமர்த்தியமாகக் காய் நகர்த்தி அதில் வெற்றியும் பெற்றுவிட்டனர்.

நாடாரின் கிறித்தவ மதமாற்றமும் ஆங்கிலக் கல்வியும் அவர்களை மதிப்புமிக்கவராக ஆங்கிலேயருக்குக் காட்டி விட்டது. அவ்வாறே சென்னைக்கு அருகிலிருந்த வன்னியக் குடியும் ஆங்கிலக் கல்வியால் முன்னேற்றம் கண்டு, தலைவர்களையும் உருவாக்கியது. இருவரும் ஷத்ரியர் பட்டத்தோடு தங்களது சாதிப்பெயரையும் மாற்றிக் கொண்டனர். விளைவாக, சமூகத்தில் ஒரு மனமாற்றம் நிகழ்ந்து, அவர்களுக்கு தாம் பெரியவர், உயர்ந்தவர் எனும் எண்ணத்தை விளைவித்தது. அதன் காரணமாக இரு குடிகளும் தன்னெழுச்சி பெற்று, சமூக, பொருளாதார அமைப்பில் மேலே நகர்ந்தன.

நாம் தனித்திருந்த ஊர்களில் தீண்டாமை எனும் பேச்சுக்கே இடமில்லை. அன்றைக்கிருந்த நம் மக்கள் தமிழ் நிலத்தில் நிகழ்ந்து கொண்டிருந்த அரசியல்

மாற்றங்களைக் கவனிக்கவில்லை. கிறித்தவ மதத்துக்கு மாறிய நம் குலத்தாரும் அதை வாய்ப்பாகப் பயன்படுத்தி தம்மை மறைத்தாரேயொழிய அவர்களது கல்வி அறிவால் நம் சமூகத்திற்கு நன்மைகள் கிடைக்கவில்லை. ஒரு சிலர் குறிப்பாக திரு. தேவ. ஆசிர்வாதம் போன்றவர்களின் பங்களிப்பு பாராட்டுக்குரியது. எனினும், அதற்கு முன்பே அனைத்தும் நிகழ்ந்து விட்டது. காலம் கடந்து விட்டது. நமது பெருமைகள் குறைந்து, மறைந்து எஸ்.சி. என அழைக்கும் நிலை வந்து விட்டது.

நாம் எஸ்.சி.யா? தாழ்த்தப்பட்ட மக்களா? நாம் தாழ்ந்தவர்களா? ஆம் எனில், எதில் தாழ்ந்தவர்கள்? தமிழர்களால் நாம் தாழ்ந்தவர்கள் எனச் சொல்ல முடியுமா? தமிழ் நிலத்தில் நிகழ்ந்தது அரசியல். தமிழைப்போல் தமிழர் அத்தனை உயர்ந்த குணங்கள் கொண்டிருக்கவில்லையென்பது வேதனையானது.

பறையர் தம்மை ஆதிதிராவிடர் என அழைத்துக் கொண்டார். சாதிச் சான்றிதழை ஆதிதிராவிடர் எனும் பெயரிலேயே பெற்றுக் கொண்டார். நமக்கு ஆதிதிராவிடர் - பள்ளன் எனும் பெயரில் சாதிச் சான்று. யாம் பணிக்குச் சேர்ந்தபின் ஆதிதிராவிடர் தோழரோடு ஒருமுறை சாதி பற்றிய பேச்சு வந்தது. அவர் தம்மை ஆதிதிராவிடர் என்றார். யாமோ ஆதிதிராவிடரில் யார், எந்தப் பிரிவு எனக் கேட்டோம். அவரோ ஆதிதிராவிடர் மட்டுமே எனவும் சாதிச் சான்றிதழில் அவ்வாறு மட்டுமே குறிக்கப்பட்டுள்ளதென்றும் கூறினார். எமக்கோ வியப்பு. உங்களது சாதிச் சான்றிதழைப் பார்த்தால்தான் யாம் நம்புவோம் என்றோம். மறுநாள் அவரது சாதிச் சான்றிதழைப் பார்த்தோம். ஆதிதிராவிடர் என மட்டுமே இருந்தது.

ஆதிதிராவிடர் யார்? திராவிடர் என்னும் சொல் எங்கிருந்து வந்தது? தம்மைத் தமிழர் என்றல்லவா அன்னார்கள் குறித்திருக்க வேண்டும். மூத்த தாத்தா அவ்வாறுதானே பதியச் சொன்னார். தாத்தா சொல்லிற்கு மதிப்பளித்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். ஏன் மறுத்தார்? எதற்காக ஆதிதிராவிடரை ஏற்றுக் கொண்டார்? எந்த ஞானத்தை வைத்து கடவுள் இல்லை என்கிறார்? கடவுள் மறுப்பு அன்னார்களை எங்கு வந்து நிறுத்தியிருக்கிறது என்பதை தற்போதும் உணராமல் இருப்பது ஏன்? பறையர், தமிழர், ஆதிதிராவிடரும் போய், புதிதாக ஒரு சொல்லால் தம்மை அழைத்துக் கொள்கிறார். உண்மையில் அச்சொல் குறுகிய காலத்திற்குள் உலகமெங்கும் கொண்டு செல்லப்பட்டுவிட்டது. தமிழ் இலக்கியங்கள் பட்டியலினத்தவருக்கு மாற்றாக அச்சொல்லையே பயன்படுத்துகின்றன. அதில் அன்னார்களுக்கு ஒரு பேரின்பம். பொதுப் புத்தியில்

எஸ்.சி. என்றாலே ஒரு இளக்காரமான எண்ணம் பதியப்பட்டிருக்கிறது. இப்போது இந்தச் சொல் வேறு. எதனால் அவர்களும், அவர்களது அரசியல் தலைமைகளும், அந்தச் சொல்லை ஏற்றுக் கொண்டனர்? அச்சொல்லில் மகிழ்கின்றனர்?

ஆங்கிலேயர் குறித்திருக்கிறார் - இரு சாதியாரும் - பள்ளனும் பறையனும் ஒற்றுமை காண்பதே இல்லை. எல்லாவற்றிலும் எதிரெதிராக இருக்கின்றனர். இவர்களது பகை ஆயிரம் வருடத்திற்கும் மேல் நீடிக்கிறது போலும். உண்மைதானே. என்னதான் சகோதரர் வேடம் போட்டாலும் உள்ளுக்குள் கனத்த சாதிப்பகை இருப்பது அப்பட்டமாகத் தெரிகிறதே. முக நூல் மற்றும் புலனம் அதாவது வாட்செப் போன்றவற்றில் பதியப்படும் காணொளிகலும், பின்னிணைப்புகளும் அபாரம். பதிவுகள் இரு குடியினரும் யார், அவர்களது தரமென்ன என்பதைத் தமிழர்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. அவர்களது மனங்கள் மகிழும். இரு குடிகளும் சண்டையிட்டுக் கொள்வது அன்னார்களுக்கல்லவா பெருத்த லாபம். பள்ளரும் மறவரும் மோதிக் கொண்டதாலல்லவா தமிழர் மண்ணும், தமிழின் பண்பாட்டு வேர்களும் தொலைந்து போயின. பள்ளரும் பறையரும் மோதுவதால் தமிழினத்தின் மிச்சமிருக்கும் பெருமைகளும் தொலையப் போகின்றன.

மறையோர் என யாம் குறிப்பிட விரும்பும் பறையர் சமூகத்தவர் பற்றி தனிப்பட்ட முறையில் யாம் சற்றே அறிந்துள்ளோம். மறையோர்களை யாம் உறவாகக் கருதுவதால் அவர்களை விமர்சிப்பது சரியாக இருக்காது. எனினும் சமீபத்திய அவர்களது போக்கு சரியில்லை. தேவேந்திரர் பற்றி, தேவேந்திரர் குலத்தைப் பற்றி, வாட்சாப் பின்னூட்டங்களில் குறிப்பிட்ட சில பெயர்களில் பதியும் பின்னூட்டங்கள் மிகத் தரம் தாழ்ந்தவையாக, மிக மலினமானவையாக இருக்கின்றன.

பறையர் பள்ளரை எதிரியாகவே நினைக்கிறாரோ. பதிவுகளும் பின்னூட்டங்களும் அப்படித்தான் சுட்டுகின்றன. பள்ளர் என்ன நிலைப்பாடு எடுத்தாலும் பறையர் அதற்கு எதிரான நிலைப்பாடு கொள்கிறார். பள்ளர் பட்டியலைவிட்டு வெளியேறுகிறார் எனில், அதோடு பறையருமல்லவா இணைந்திருக்க வேண்டும்? ஏன் இணையவில்லை? மேல் சாதி, பெரிய சாதி, உயர்ந்த சாதியாரோடு, தேவ சாதிகளோடு போட்டி போட முடியாதா? எனில் அவருக்கு மட்டும் எங்கிருந்து வந்தது அவ்வளவு அறிவு?

தேவர் - சாம்பவர் கூட்டணி, பறையர் - வெள்ளாளர் கூட்டு. ஆகா, அற்புதமான கூட்டணி. ஒரு பறையர் வலங்கை சாதிகளே ஒன்று சேருங்கள் என அறை கூவல் விடுக்கிறார். பள்ளர் இடங்கை சாதியாம். பள்ளருக்கு எதிராக வலங்கைச் சாதிகளையெல்லாம் கூட்டுச் சேர்க்கிறாராம். அருமையான கூட்டு.

பட்டியல் வெளியேற்றத்திற்கு எதிர்ப்பான பதிவுகள். போலியான முகமூடிப் பெயர்களோடு தரம் தாழ்ந்த விமர்சனங்கள். பட்டியலைவிட்டு வெளியே போனால் சோற்றுக்கு என்ன செய்வீர்கள். தேவேந்திரர் உழைப்பவர்களன்றோ. உழைத்து உண்பவர்களன்றோ.

தேவேந்திரகுல வேளாளர் எனில் அதற்கும் தடையாய் நிற்கிறார். தாங்களே தேவேந்திர குலத்தார் என்கிறார். இதற்கு முன் என்றைக்காவது பேசியதுண்டா, எங்காவது பதியப்பட்டுள்ளதா? அரசியலுக்கு எதை வேண்டுமானாலும் பேசலாமா, முன்னெடுக்கலாமா. வெள்ளையர் பதிவிட்டுள்ளார் - பள்ளர்கள் தேவேந்திர குலத்தார் என்று. தேவேந்திரனின் தோன்றலான அருச்சுனனையும் அருக்காணியையும் இக்குலத்தார் வழிபடுகின்றனர் எனக் குறித்துள்ளார். தேவேந்திரர் நீத்தார் சடங்குகளில் தேவேந்திரனுக்கு வழிபாடுகள், முறையிடல்கள் தற்போதும் உள்ளன. மானுவல்களிலும், மாவட்ட ஆவணங்களிலும், கல்வெட்டுக்களிலும், இலக்கியங்களிலும் பள்ளக்குடி தேவேந்திர குலம் என்றே பதிவுகள் காணக்கிடைக்கின்றன.

சிலர் பறையரைத் தூண்டி விடுகிறார். தூண்டுபவர் யார் என்பதையும் தேவேந்திரர் அறிவார். இருவரும் இப்படி அடித்துக் கொண்டால்தானே, இருவரையும் இப்படித் திசைதிருப்பினால்தானே, அன்னார்கள் சுகபோகமாக இருக்க முடியும். எல்லாம் தந்திரம். அரசியல் தந்திரம். மூத்த குடிகளான இருவரும் இப்படி முட்டிக் கொண்டு நிற்பதால்தானே யார் யாரோ நாட்டை ஆளத் துடிக்கிறார். அன்னார்களை வழிமொழிவதும், முன்மொழிவதும் யார்?

வெறும் நான்கைந்து மாவட்டங்களில் இருக்கும் நீங்கள் தமிழகத்தின் அத்தனை மாவட்டங்களிலிருக்கும் எங்களுக்குப் போட்டியா? பறையருக்கு வரலாறு தெரியவில்லையோ. உழவுக் குடிகள் இடம் பெயராது. உழவர்கள் தம் நிலத்தோடு மாண்டாலும் மாள்வாரே தவிர, நிலமென்னும் அன்னையைப் பிரியமாட்டார்.

விளைச்சலே இல்லையெனும் நிலையில் பிழைப்பிற்காக வெளியூர் போனாலும், மழைவளம் வந்தவுடன் மீண்டும் தாய் மண்ணுக்கே திரும்பி விடுவார்.

வியாபாரிகள், கலையோடு தொடர்புடையவர், நிலத்தோடு தொடர்பற்ற தொழில் செய்பவர்கள்தான் இடம்விட்டு இடம் மாறிக்கொண்டே இருப்பார்கள். அன்னார்களுக்கு பிறிதொரு இடத்தில் சிறப்பான வியாபாரம் நடக்குமெனில், அங்கே மாறிக்கொள்வர். சென்னையில் நாடார்கள் அதிகமுள்ளனர் எனில் எப்படி அதிகமானார்? வியாபாரத்தின் பொருட்டல்லவா. இன்றைக்கு பெருநகரங்களில் நாடார் குடி அதிகரித்திருப்பது வணிகத்திற்காகவல்லவா? கணக்கெடுத்துப் பாரும். நகரங்களில், பெருநகரங்களில் தேவேந்திர குலத்தார்தான் குறைவான எண்ணிக்கையில் இருப்பார். ஏனெனில் அவர்கள் உழவுக்குடிகள். ஐயர் போன்றோ, பிள்ளை போன்றோ நிலத்தைவிட்டு ஓடிப்போக மாட்டார். தென்தமிழகத்தின் தேவேந்திர குலத்தார் பத்து மாவட்டங்களில் அதிகமாக வாழ்கிறார். பத்து மாவட்டங்களில் கணிசமாக வாழ்கிறார்.

பறையரின் தொழில் எது? பறையரின் திணை எது? இதைப்பற்றியெல்லாம் இனி பேச வேண்டுமா? பறையர் சாம்பவர் குல வேளாளர் எனில் அதை ஏன் முன்னெடுக்கவில்லை? பள்ளன் தம்மைப் பள்ளன் எனச் சொல்வதற்கு ஒருபோதும் வெட்கப்படுவதில்லை. பின் ஏன் தேவேந்திர குல வேளாளர் எனக் கோருகிறார் எனில், அது குலம், குலப் பெருமைக்கு. பள்ளருக்கு தேவேந்திர குல வேளாளர் எனும் பட்டம் வந்தவுடன் அவரென்ன பயிர்த்தொழிலை விட்டு ஓடவா போகிறார், அல்லது வரலாற்றைத்தான் மறைக்கப் போகிறாரா? உலகம் அறிவை முன்னெடுத்துச் செல்கிறது. இது எதற்கும் சான்று கேட்கும் காலம். பள்ளர்கள், குடும்பர்கள் தேவேந்திரனை வழிபடுபவர்கள், அவரது வழியினர் எனச் சான்றுகள் உள்ளன. பள்ளு இலக்கியம் ஒன்றே போதும்.

பெருங்குடிகளே, இங்கு வரலாறு மிகவும் நுட்பமாக மறைக்கப்பட்டு வந்திருக்கிறது. நாம் அறிந்திருக்கவில்லை. நமக்கு அது சொல்லிக் கொடுக்கப்படவில்லை. பல்லவர் காலத்தை நாம் நுட்பமாக அறியவில்லை என்பது திண்ணம். அவர் காலம் நம் குடிகளின் ஏற்றமான காலமாக இருந்திருக்கும். அவர் காலத்தில் வள்ளுவக் குடியும் மிகச் சிறப்பாக இருந்திருப்பது தெரிகிறது. அது வரைக்குமான தமிழர் மதம் திருமால் மதமே. தொல்குடிகள் திருமால் மரபினர்தான். இது திருமால் நிலம். தமிழர் இராமன், கண்ணன் வழியினர். தொல்குடிகள் பழமை

பேணுவர். எனினும், காலப்போக்கில் சமணராகவும், பௌத்தராகவும் கொஞ்சம் மாறியிருக்கலாம்.

தமிழ் நிலத்தில் அனைத்தையும் மாற்றியது யார்? அன்னார்கள் சைவத்தை முன்னெடுத்தது அரசியலுக்கே. வைணவம் செழித்திருந்த தமிழ் மண்ணை, திருமால் வழிபாடு நிறைந்திருந்த தமிழ் நிலத்தை, சைவமாக்கியது வெள்ளாளரே. இதில் பிராமணருக்கும் பெரும்பங்கிருக்கிறது. இந்நிலத்தின் பள்ளர், பறையர், கோனார், மீனவர், நாடார், கம்மாளர் போன்ற அத்தனை குடிகளும் திருமால் நெறியினரே. தேவர்கள் குடியிலும் கள்ளரும் அகம்படியாரும் திருமால் நெறியினர். மறவரிலும் கடந்த தலைமுறைவரை கண்ணன் பெயர்களே அதிகம். மீனவர் உறுதியாகவே வைணவ மரபினர். மதுரையில் நிகழ்ந்த பாண்டிய மன்னர்களது மதமாற்றங்கள் தமிழ் நிலத்தின் மதநெறியையே குலைத்து விட்டன. திருமால் நெறி கொண்ட பாண்டியன் சமணனானான். சமணன் பின்னர் சைவனானான். இதெல்லாம் பிள்ளையால் நிகழ்ந்ததே.

கிடைக்கும் சான்றுகளின்படி, பிள்ளைதான் சமணராக இருந்து சைவமாக மாறியவர். வணிகராக இருந்தவர் சட்டென நிலவுடைமையாளரானது ஒப்புநோக்கத் தக்கது. நம் காலத்தில் நிலத்தால் இனி பயனில்லை என்றானவுடன் பட்டென பிற தொழில்களுக்குள் நுழைந்ததும் பிள்ளையல்லவா. சமணத்திற்குமுன் பிள்ளையும் திருமால் நெறியாகவே இருந்திருக்க வேண்டும். அன்றைக்கு பிள்ளை மத மதிப்புப் பெற்றவுடன் அதிகாரம் வந்தது. நிலம் வந்தது, படிப்பு வந்தது, பதவி வந்தது, எல்லாமும் வந்தது. தொல் குடிகளுக்கு என்ன வந்தது, என்ன கிடைத்தது?

மத மாற்றம் கிடைத்தது. மாறாதார் தீண்டாதாரானார். பள்ளரும், பறையரும், நாடாரும் எதனால் தாழ்த்தப்பட்டார்? அவர்கள் திருமால் மரபினர். தமிழ் நிலத்தில் நிகழ்ந்தது மிகப்பெரிய மதக்காழ்ப்பு. அத்தனையும் தந்திரமாக மூடி மறைக்கப்பட்டு விட்டது.

தொல் குடிகளான பறையரும், பள்ளரும், நாடாரும், இடையரும், மீனவரும் இன்ன பிற எளிய குடிகளும் சற்றே சிந்திக்க வேண்டும். திராவிட ஆட்சியாளர்கள் தமிழரல்லர், அவர்கள் நாயக்கர் மரபினர் எனத் தெரிவதற்கே நமக்கு ஐம்பது வருடங்களுக்கும் மேலாகி விட்டது. எல்லாம் முடிந்த பின்னரேதான் தெரிகிறதல்லவா. வாட்சப்பும், இணையச் சேவைகளும் வந்த பின்பு தானே அதுவும்.

அணையிலிருந்து ஒரு சொட்டு நீர்கூட கசியாதது போல் எவ்வளவு கச்சிதமாக நடந்தேயிருக்கிறது இது? தேவேந்திரரும், தேவரும், நாடாரும் அடித்துக் கொண்டும், வெட்டிக் கொண்டும் ஜெயில்களில் கிடக்க, நாட்டை ஆண்டவர்கள் யார்? ஆண்டது யார்? எதிர்கட்சியாக இருந்தது யார்?

மீனவருக்கு கடலில் மீன் பிடிக்கத் தெரியும். சாமத்தில் கடலுக்குப் போனால் வீட்டுக்கு எப்போது வருவாரோ. வந்து சேர்ந்தால்தான் அதுவும் நிச்சயம். பள்ளரோ நிலத்தோடு தமது வாழ்க்கையை முடித்துக் கொண்டார். இதில் பள்ளிகளையும் சேர்த்துக் கொள்ளலாம். ஆசாரிகளுக்கு தச்சுத் தொழிலே வாழ்வென்றாகிப் போனது. அரசியல் பேச, அறிவை முன்னெடுக்க எங்கே நேரமிருந்தது. நாடாருக்கு பனைத்தொழில் வாழ்க்கை. கோனாருக்கு ஆடும், மாடும். பறையருக்கு நிலம் தொடர்பான வேலைகளும், பிற சிறு வேலைகளும் என்றாகிப் போனது. மலைவாழ் மக்கள் எளிய வாழ்வினர். அவர்களுக்கு பொதுநிலத்தில் நடந்ததைப் பற்றிய தகவல்கள்கூட தெரிந்திருக்குமா என்பதே சந்தேகம்தான். அவர்கள் மனம் அரசியலுக்குள்ளேயே வராது. அவர்கள் அத்தனை எளிய மனம் கொண்டோர்.

நாம்தானே தொல் குடிகள். ஆற்று மீனவர்களையும் இதில் சேர்த்துக் கொள்ளலாம். வலையோரும் எளியோர்தானே. தொல்குடிகளெல்லாம் எளிய குடிகள். ஆசையறியாதோர். பேராசைக்கு ஆளாதோர். போதுமென்ற மனம் கொண்டோர். அடுத்தவரைக் கெடுக்கும் புத்தி இல்லாதோர். இரக்கம் கொண்டோர். அரசியல் பற்றி ஏதும் அறியாதோர்.

நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது தமிழகத்தின் இந்த தொல்குடிகளின் வரலாறு என்ன என்பதே. ஈராயிரமாண்டில் இக்குடியினர் எப்படி வாழ்ந்தார்? ஆயிரம், ஐநூறு, நூறு அண்டுகளுக்கு முன்பு எப்படி வாழ்ந்தார்? தற்போது எப்படி வாழ்கிறார்?

யாம் சுட்டிக்காட்டும் இந்தத் தொல் குடிகளிடம் அதாவது தமிழ் நிலத்திற்கு உரிய தொல்குடிகளிடம், இந்நிலத்தின் மூத்தகுடிகளிடம், தற்போதைக்கு நிலமிருக்கிறதா? இல்லை எனில், தமிழ் நாட்டின் நிலமெல்லாம் யாரிடம் இருக்கிறது? பெரிய பதவிகளை அலங்கரிப்பவர்கள் தமிழ் நிலத்தின் தொல் குடிகளா? இல்லையெனில் அவர்கள் யார்? பரந்து விரிந்த தொழிற்சாலைகளை வைத்திருப்பது தொல்குடிகளா? இல்லையெனில் யாரவர்கள்? பெரிய பெரிய வணிக

வளாகங்களுக்குச் சொந்தக்காரர்கள் இந்நிலத்திற்கே சொந்தக்காரர்களான தொல் குடிகளா, மூத்த குடிகளா, பழங்குடிகளா?

மண்ணுக்குரிவர் இம்மண்ணை ஆள வேண்டுமா அல்லது மாற்றாரா? மண்ணுக்குரியவர் ஆண்டால் அவரது ஆட்சி எப்படியிருந்திருக்கும், எப்படி இருக்கும்? மாற்றார் ஆண்டதால் இன்றைக்கு தாய் மண், தமிழர் நிலம் எப்படி சின்னாபின்னமாகிக் கிடக்கிறது.

இம்மண்ணின் தொல்குடிகள் ஆட்சிக்கு வந்திருந்தால் குளத்துக்குள் கட்டிடம் கட்ட அனுமதித்திருப்பாரா? ஆட்சியர் வளாகமே குளத்துக்குள் கட்டப்பட்டுள்ளதெனில் அறிவில்லாதார், பண்பாடு இல்லாதார், நாகரீகம் இல்லாதார், தமிழர் பண்பாடு பற்றி ஒன்றுமே தெரியாதார் யார்? தமிழ் தொல் குடியினரா அல்லது ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தவரா?

ஆட்சியாளர்கள் எங்கெங்கு நோக்கினும் பாலமாகக் கட்டுகிறார்கள். திரும்பின திசையெல்லாம் பாலத்திற்கான வேலைகள் நடக்கின்றன. தொல் குடியினரே, அவை சிறிய பாலங்கள் அல்ல. மூன்று, நான்கு கிலோ மீட்டர் நீளம் கொண்ட மேம்பாலங்கள். இந்தப் பாலங்கள் எவ்வளவு பொருள் கொண்டு, எத்தனை இயந்திரங்கள் கொண்டு, எத்தனை எத்தனை மனிதர்களின் கடும் உழைப்பு கொண்டு கட்டப்படுகின்றன என்பதை யாம் கண்ணாரப் பார்க்கிறோம். கீழேதான் அகன்ற சாலை இருக்கிறதே, அது போதாதா எனில் போதாதாம். அலுவலகத்திற்கு விரைவாக, நேரத்தோடு செல்ல முடியவில்லையாம். அதற்கு மேம்பாலமாம். அன்னார்கள் விரைவாக அலுவலகம் செல்வது அலுவல் பார்க்கவா அல்லது வெட்டிப் பேச்சும், சுத்திப் பார்க்கவுமா என்பது தனி. அது இருக்கட்டும்.

இன்றைக்குத் தமிழ் நாட்டிற்குத் தேவை, அதுவும் அத்தியாவசியமான, அவசரமான தேவை எது தொல் குடியோரே. அவர்களுக்குப் பாலங்களாக இருக்கலாம். ஏனெனில் அலுவலகத்திற்குப் பறந்து செல்ல வேண்டியவர்களும், வணிகங்களுக்கு நேரத்திற்குச் செல்ல வேண்டியவர்களும் யார் என்பது அவர்களுக்குத் தெரியும்.

நமக்கு? நம் குடியினர் குடத்தைத் தூக்கிக் கொண்டு தெருத்தெருவாக அலைகிறார் மூத்தார்களே. நெஞ்சு கொதிக்கிறது. நெஞ்சு பொறுக்குதிலையே எனப் பாடிய எம் தந்தையின் நெஞ்சு, நெஞ்சாங்குலை எத்தனை கொதித்ததோ. இன்றைய

மனிதரை, மனித வாழ்க்கையை நினைத்தே எம் நெஞ்சும் இத்தனை கொதிக்கிறதே, அன்றைக்கிருந்த மனித வாழ்க்கையை, மூடத்தனத்தை நினைத்து எம் தந்தையின் நெஞ்சு எவ்வளவு கொதித்ததோ?

குடிப்பதற்குத் தண்ணீர் வாங்கியது போய் குளிப்பதற்கும் தண்ணிர் வாங்கும் காலம் வந்து விட்டது தொல் குடியினரே. எமது ஊரில் வாங்குகிறோம். ஊரிலிருக்கும் போர்வெல் தண்ணீரில் குளித்தால் உடம்பு அரிக்கிறது. அரிப்பைச் சொறிந்தால் வெள்ளைப் படலமாகக் கிளம்புகிறது. குளிப்பதற்கும் காசு கொடுத்து நீர் வாங்கும் அவலத்தை எங்கு போய்ச் சொல்ல. யாரிடம் போய் முறையிட. சொன்னால் சம்பாதி, காசு கொடுத்து குடி, குளி, குதியாட்டம் போடு, வாழ்க்கையை என்ஜாய் பண்ணு என்றுதானே சொல்லுவார்கள்? வேறென்ன பதிலை எதிர்பார்க்க முடியும்? அவர்களுக்கு பணம்கொழுத்த மக்கள் தடையில்லாமல் வாகனங்களில் பறக்க வேண்டும், அதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வார்கள்.

எனில் தொல் குடியினர்? அன்னார்களுக்கு தொல் குடியினர், மூத்த குடியினர், மண்ணின் முதல் குடியினர் பாரமல்லவா. அவரன்றோ சாலைகளை எதிர்க்கிறார். தொல் குடிகளுக்கு அறிவிருந்தால் அதை எதிர்ப்பாரோ? எத்தனை சிறந்த திட்டம்? எவ்வளவு விரைவாகச் சென்னைக்குப் பறக்கலாம்? நோக்கம் அதுதானா மூத்தோரே.

தொல் குடியினர் உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவதில்லை. பத்து வழிச்சாலைகள் போடுவதும், பத்து கிலோமீட்டர்களுக்கு மேம்பாலங்கள் கட்டுவதும் மனிதர்கள் பறக்கவா அல்லது சிலர் கோடிகளைக் குவிக்கவா.

ஒரு பாலம் கட்ட நூறு கோடி, இருநூறு கோடி செலவிடப்படுகிறது. பாலங்களை அரசு கட்டுவதில்லை. ஒப்பந்ததாரர்களே கட்டுகின்றனர். யார் இந்த ஒப்பந்ததாரர்கள் தொல் குடியினரே? மீனவரா, பள்ளரா, பறையரா, ஆயரா அல்லது மலைவேடரா, தோடரா, இருளரா, பளியரா அல்லது வேடரா, காடரா. யாரிந்த ஒப்பந்ததாரர்கள் மூத்தோர்களே. கட்டிடங்கள் கட்டுவதில்தான் அதீத லாபம் கிடைக்கிறதெனில், பாலங்களாகக் கட்டுவதன் உண்மையாக நோக்கம்தான் என்ன?

இன்றைக்குத் தமிழகத்தின் தலையாய தேவை நிலத்தடி நீரை உயர்த்துவதல்லவா. நிலத்தடி நீரை உயர்த்துவதற்கு, குளங்களையும்,

கண்மாய்களையும், ஏரிகளையும், பேரேரிகளையும் நிரப்ப முடியாததற்கு, இவற்றில் நீர் நிரம்பாததற்கு, முதன்மைக் காரணம் இவற்றுற்கான வரத்துக்கால்வாய்கள் அடைபட்டுப் போனதுதானே.

நீர்நிலைகளின் வரத்துக் கால்வாய்களை அடைத்தது யார்? நில முதலைகள். நீரையும், நிலத்தையும் அபகரித்துக் கொண்ட இந்த பெருவாய், பெருவயிற்று முதலைகள் யார்? நிச்சயமாக தொல் குடிகள் இல்லை. உறுதியாக பழங்குடிகள் இல்லை. மறுக்க முடியுமா?

பின் யார்? ஏன் அடைத்தார்கள்? வாய்க்காலை அடைத்தால்தானே குளம் தூர்த்துப் போகும். குளம் தூர்ந்தால்தானே அதை பிளாட்டு போட்டு விற்க முடியும். குளங்களையும், நிலங்களையும் விற்றது, விற்று முதலாக்கியது யார் தொல் குடியினரே. நிச்சயமாக நாமல்ல.

நிலத்தை நாம் விற்போமா மூத்தோர்களே. நிலத்தை விற்பதும் வாங்குவதும் தாயை விற்பதற்குச் சமமல்லவா. சரிதானே மூத்தோரே. நம் தாயல்லவா இந்தப் பூமி. பெற்ற அன்னையவே விற்பானோ. அதையும் ஒருவன் வாங்கி சொந்தம் கொண்டாடுவானோ. நமக்குச் சொந்தமான தாயை, நம் நிலத்தை, நம்மிடமே காசுக்கு விற்கும் அவலத்தை என்னவென்பது. எம் நிலத்தை நீயாரடா கூறுபோட்டு விற்பது என வாங்குபவன் கேட்டிருக்க வேண்டாமோ. வாங்குபவன் வீடு கட்ட, விவசாயம் செய்யவா வாங்குகிறான். அவன் கொழுத்த லாபத்திற்கு இன்னொருவனிடம் விற்பான். இப்படியே விற்று விற்று பெருங்கூட்டமே கொழுத்த பணத்தில் திளைக்கிறது. நிலத்திற்கு உரிமையானவரோ இன்னும் ஒதுக்குப் புறங்களிலும், சாக்கடைகளிலும் கிடக்கிறார்.

மூத்தோர்களே, நம் தாயை மீட்பது என்றைக்கு? நம் தாயின் வயிறு குளிர நீர் மட்டத்தை மேலேற்றுவது எப்போது? நம் தாயின் மனம் மகிழ மண்ணில் வெள்ளமென தண்ணீர் பாய்ந்தோடுவது எக்காலம்?

நம் தாயைக் காக்க, நம் மண்ணைக் காக்க, நம் மொழியைக் காக்க, நம் பேரேறிகளைக் காக்க, நம் ஆறுகளைக் காக்க, நம் மரம், செடி கொடிகளைக் காக்க, நம் விலங்குகளைக் காக்க, நம் இயற்கையைக் காக்க, நம் கடவுள்களைக் காக்க நாம் ஒன்றிணைவது காலத்தின் கட்டாயம் தொல் மூத்தோரே, மூத்த குடியோரே.

மூத்தோரே, தேவேந்திர குலத்தாரே, இது நம் நிலம், நம் மொழி, நம் பண்பாடு. இது நமது உலகம். இது நமது அப்பன் வீட்டுச் சொத்து.

மூத்தோர்களே, உலகின் பாரம் தீர்ப்பவன், துயரம் தீர்ப்பவன், துன்பம் தீர்ப்பவன் என ஒருவன் இருக்கிறான். நம்மால் உலகிற்கு, நம் தாய்க்குப் பாரமில்லை என்பதை அவனறிவான். அவன் அனைத்தையும், அனைவரையும் அறிந்தவனன்றோ.. தாய்தான் என்றாலும் அவளும் எத்தனை பாரத்தைத்தான் சுமப்பாள். நம் தாய் அவனுக்கும் தாயல்லவா. அவன் இங்குதானே பிறந்தான், இங்கு கறந்த பாலைத்தானே குடித்தான், வெண்ணெயைத் திருடி உண்டான். அவன் மண்ணை, மனிதரை நன்கறிவான் மூத்தோரை.

அவன் யாரை நம்பி, எதை உறுதியாகக் கொண்டு, ‘தர்மத்தை நிலைநாட்ட மீண்டும் வருவோம்’ என்றான். எப்படி அவ்வளவு உறுதியாகச் சொன்னான் முன்னோடிகளே. நம்மை நம்பியல்லவா. நாம் அவன் மரபினரல்லவா. தமிழ் நிலத்தின் அத்தனை தொல்குடிகளோடும் அவன் உறவு கொண்டவனல்லவா. நம் உறவல்லவா கண்ணன். நம் கண்ணன் மூத்தோரே.

மண்ணின் மூத்தோர்களே, மரபின் மூத்தோர்களே, மொழியின் மூத்தோர்களே, பண்பாட்டின் மூத்தோர்களே. நம் கண்ணன் உலகின் பாரம் தீர்ப்பான். நம் தந்தையாம் கண்ணுக்கு நாமும் துணைபுரிவோமாக.

வெல்லட்டும் நம் தந்தையாம் கண்ணன்..

வெல்லட்டும் நம் நெஞ்சம் நிறைந்த கண்ணன்..

**எங்கள் கண்ணன் தர்மத்தை நிலைநாட்டுவான். என்றைக்குமாய்.**

சிவனாம் கண்ணன் - பாரதி பாடியிருக்கிறார். அரியும் அரனும் ஒன்று - இராகவேந்திரர் அறுதியிட்டிருக்கிறார். அரியென்றும் அயனென்றும் அரனென்றும் இருப்பது யார்? ஒன்றுதான் மூன்றாக இருக்கிறது. ஒன்று அடி, ஒன்று முடி, அடி சிவமெனில் முடி பத்பம். அடியையும், முடியையும் அறிய முடியுமா? காண முடியுமா? அறிந்தால், கண்டால் என்னாகும்?

அடியும், முடியுமாக இருப்பது யார்? விஸ்வரூப தரிசனம் கொண்டவன் யார்? விஸ்வம் யார்? விஷ்ணு யார்? விஸ்வரூபன் யார்? யுகந்தோறும் வந்துதிப்பவன் யார்?

அவனின் அடி யார்? அடியாக இருப்பது யார்? முடி யார்? முடியாக இருப்பது யார்? அடிமுடி காண்பது யார்? காணாதார் யார்? அவனை யாரால் காண முடியும்? யாரால் முடியாது? அவனை யாரால் அறிய முடியும்? யாரால் முடியாது? அவன் அடியை அறிந்தால் முடியை அறிந்ததாகுமா? அவன் அடியின் சிறப்பென்ன? அவன் முடியின் பெருமை என்ன? அவன் அடி எது?

**ஈரடியில் உலகை அளந்த அவன் அடியை அறிந்தவர் எவர்?**

அவன் அடிக்குப் பெருமை அன்பு. முடியின் சிறப்பு அறிவு. அடியாக இருப்பது சிவன். முடியாய் இருப்பது பிரம்மன். அவனே இருவராகவும், மூவராகவும் இருக்கிறான்.

அவனடியில் அன்பு நிறைக்கிறது, அவனது முடியில் அறிவு பெருகுகிறது. அடியின் பெயர் அன்பு, முடியின் பெயர் அறிவு. அடியும் முடியுமாக இருப்பது ஞானம்.

அடியை அறிந்தவர் அடியே பெரிதென்றார். முடியைத் தெளிந்தவரோ முடியே உயர்ந்ததென்றார். அடிக்கும் முடிக்கும் மனிதர் அடித்துக் கொண்டார், மதமானார். ஒன்றை அறிந்தவர் மற்றொன்றை வெறுத்தார், ஒதுக்கினார். அவரவர் மதமே, வழியே பெரிதென்றார், பரப்பினார், பாடினார், எழுதினார், திரட்டினார், கட்டினார்.

ஒன்றை அறிந்தவர் ஒன்றை மட்டுமே அறிந்தவராகிறார். அவர் முழுமையை அறியாதார். உண்மை எப்போதுமே முழு உண்மையாகவே இருக்கும், ஓரளவிற்கு உண்மை, பாதி உண்மை என உண்மையைச் சுட்ட முடியாது.

முழுமையை உணர அதன் அனைத்துப் பகுதிகளையும் அறிய வேண்டும். முழுமை இங்கே பகுக்கப்பட்டிருக்கிறது. காரணம் ஒட்டு மொத்த முழுமையையும் ஒரு மனிதர், ஒரு மதத்தார், ஒரு மொழியார் அறிவது கடினம். அப்படி இருக்கவும் கூடாது. முழுமை பிரிக்கப்பட்டு பலவாறாக, பலவிதப் பெயர்களில் கொடுக்கப்பட்டுள்ளது. தங்களுக்குக் கிடைத்த பகுதியை, தங்களுக்குக் கொடுக்கப்பட்ட முழுமையின் ஒரு பகுதியைக் கொண்டோர், அதையே முழு உண்மையெனக் கொண்டார், மயங்கினார். அது மட்டுமே உண்மையாக இருக்க முடியும் என வாதிட்டார். எதிர்த்தோரை வெறுத்தார், ஒதுக்கினார், மிரட்டினார், பணிய வைத்தார். பணியாதோரை விரட்டினார், மறுத்தாரைக் கொன்று குவித்தார்.

உண்மையின் ஒரு பகுதியை அறிந்தாலே முழுமையையும் அறிந்ததாகுமா எனில், ஆகும். அறிய முடியும். அதை நுட்பமாக அறிய வேண்டும். அதற்கு ஆராய்ச்சி வேண்டும். முயற்சிக்க வேண்டும். உண்மையை அறிய எதற்கும் துணிந்தவராக இருக்க வேண்டும். எதையும் துறப்பவராகவும் இருக்க வேண்டும். அப்படி பகுதியிலிருந்து முழுமையை அறிந்தோர், முழுமையை நோக்கிச் சென்றோரே ஞானியர் எனப் பெயரெடுத்திருக்கின்றார். மண்ணுலகில் ஞானியர் அதிகம் பிறந்த மண் எது? உலகில் அதிக தத்துவங்கள் கொண்ட நிலமெது? எந்த நாட்டில் தெய்வங்கள், கடவுள்கள் அதிகம்? அனைத்திற்கும் விடை பாரதம். எதனால் பாரதம்? இங்குதான் பகுதியிலிருந்து முழுமை நோக்கிச் சென்றவர், முழுமையை அறிந்தவர் அதிகம். இறைவனை நம்ப வேண்டுமா, அறிய வேண்டுமா? இறைவனை அறிவதே ஞானம். அவனே ஞானி.

கரும்பு இனிப்புச் சுவையால் ஆனது. கன்னலை அறிய அதன் சிறு பகுதியை அறிந்தால் அதாவது கடித்தால் போதும்.

ஞானி ஒரு சிறு பட்டாம்பூச்சியைக் கொண்டு முழுமையை அறிந்து கொள்வார். பட்டாம் பூச்சியைப் பற்றிய அறிவு, தேடல், கேள்வியே அவரை ஞானியாக்கும். சின்னஞ்சிறிய மலரைப் பார்த்தும் ஞானியாகலாம். தன்னைத் தானே அறிந்தும் ஞானியாகலாம். உண்மையில் தன்னையறிதலே பெருஞானம். அதிலுள்ள ஒரு சிக்கல் தன்னையறிந்தவர் பலருக்கும் ஞானம் வருவதற்குப் பதிலாக தலையில் கனம் வரும். அவன் ஞானியாவதற்குப் பதிலாக அஞ்ஞானியாக மாறுவான். தம்மைக் கடவுளென்பான். வேடம் தரிப்பான். தம்மைவிட்டால் உலகிற்கு வேறு வழியே இல்லை என்பான்.

கோமாளிகளுக்கும் கூத்தாடிகளுக்கும் பின்னால் போவதற்கு உலகம் என்ன அத்தனை இளக்காரமோ. உலகத்தையும், அதை இயக்கும் இறைவனைப் பற்றியும், இந்த வேடிக்கைக்காரர்கள் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கின்றனர்?

மூடர்களே, கன்னல் இனிப்பெனினும் அதன் அடியும் நுனியும் இனிப்பில் வேறுபடுவதேன்? அதற்குக் காரணமென்ன? காலத்தை அறிவீரோ? உம்மால் காலத்தை அறிய முடியுமா?

மூடர்களால் கடலின் ஆழத்தையும் வானின் நீளத்தையும் அறிய முடியுமா?

இதற்காகத்தான், இந்தப் போலிகளிடமிருந்து மக்களை, உயிர்களை, உலகைப் பாதுகாக்கத்தான் உலகின், இறைவனின் அறிவு, பகுதியாக்கப்பட்டிருக்கிறது. பகுதியாக மக்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. ஒருவேளை எவரேனும் தொகுத்துப் பார்த்தாரேயானால், அறிவென்னும் தனித்தனித் துண்டுகளை ஒன்றாக்கிப் பார்த்தாரானால், அவருக்கு முழுமையும், இறைவன் யார் என்பதும் தெரியும். உலகை முழுமையாக அறிந்தவர், இறைவனை முழுவதாக அறிந்தவர், ஒருபோதும் உலகிற்குக் கெடுதல் செய்ய மாட்டார். இறைவனோடு சேர்ந்து மேலும் உலகை செழிப்பாக்கவும், அழகாக்கவும், மக்களை உயர்த்தவும், உலகின் அறிவை விரிவாக்கவும் செய்வார். அவரே நிறைஞானி, மெய்ஞானி. அவரைத்தான் சத்குரு என்கிறோம். உண்மையான குரு, உண்மையை அறிந்த குரு. மக்களை நல்வழிப் படுத்தும் குரு. சத்குருவானவர் பேசக் கூட மாட்டார். அவர் பேச வேண்டிய தேவையே எழாது. அவரை மற்றவர் அறிந்து கொள்வர். சத்குருவின் ஞானமே மக்களை ஈர்க்கும். ஞானத்திற்கு அத்தகையே வலுவும், சிறப்பும் உண்டு. அவர் எதையும் கேட்டுப் பெற வேண்டியதில்லை. எல்லாம் தானாய் நடக்கும். சத்குரு இறைவனை அறிந்தவர் எனில், இறைவனும் சத்குருவை அறிந்திருப்பானல்லவா.

சத்குரு யார்? ரிஷி யார்? முனி யார்? மகரிஷி யார்? மகாமுனிவர் யார்? திருவண்ணாமலை அருள்மிகு ரமணர். ரமண மகரிஷி. பகவான் ஸ்ரீரமண மகரிஷி. வேறொரு உதாரணம் வேண்டுமோ.

பகவான் இரமணர் என்பதன் பொருளென்ன? ரமணர் பகவானா? பகவான், கடவுள் இரமணரெனில், அவர் இறைவனாகக் கொண்ட அருணாச்சலம் யார்? கேள்வி எழுமல்லவா? பகவான் என ரமணரே அழைத்துக் கொள்ளவில்லை. தம்மை அப்படிச் சுட்ட வேண்டுமென அவர் கூறவும் இல்லை. விரும்பவும் இல்லை. மக்களாகப் பார்த்து அவரை அப்படி அன்போடு அழைத்தனர். மகரிஷி என்றார்கள். பின்னர் பகவான் ஸ்ரீரமண மகரிஷி என அன்போடு அழைத்தனர்.

இந்து ஞானம் என்ன விளக்கம் கொடுக்கிறதெனில், கடவுள் பூமியில் நல்லவற்றை, நல்லனவற்றை எடுத்துக்காட்ட, விளக்க, அறிவுறுத்த மனிதராகப் பிறப்பெடுக்கிறார். மகான்களாகவும், ஞானியராகவும் பிறந்தது கடவுளே எனும் கருத்தின் அடிப்படையில் ஞானியரும், மகான்களும் மக்களால், பக்தர்களால் கடவுளென்று, கடவுகளுக்கு நிகரென்று கொள்ளப்படுகின்றனர், கடவுளாக வழிபாடும் செய்யப்படுகின்றனர். ரமணர் சமாதியான இடத்தில் இலிங்கம்

நிறுவப்பட்டு பூசைகள் நாள்தோறும் நிறைவேற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. உலகெங்குமே இத்தகைய நடைமுறைகள் உண்டு. கிறித்தவத்தில் புனிதர் மட்டும் கொடுப்பதும் இதைப் போன்றதொரு நடவடிக்கையே.

ரமணர் சத்குருவா? யாம் ஏற்றுக் கொள்கிறோம். ரமண மகரிஷி பற்றி சற்றே அறிந்திருக்கிறோம். சில புத்தகங்கள் படித்திருக்கிறோம். திருவண்ணாமலையில், ரமணாஸ்மத்திற்கு அருகிலேயே ஏழு ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறோம் எனில் யாம் ரமணரைப் பற்றி அறிந்திருக்கிறோம் என்பதை உறுதியாக நம்பலாம்.

யாம் முதுநிலை படிக்கும் போதுதான் முதன்முதலாக எமது ஆசிரியர் மூலம் இரமணரை அறிந்தோம். இதைப் பற்றி ‘யாம் யார்’ நூலில் குறிப்பிட்டுள்ளோம்.

எமக்கு 2003 ஆம் ஆண்டில் நிகழ்ந்த ஆன்மீக மாற்றம் எமதனுபவத்தில் பெரியது. யாம் முற்றாகவே மாறியிருந்தோம். எமது மனதில், உடலில் பலப்பல மாற்றங்கள் நிகழ்ந்தன.

அன்றைய நாளில் எமது மனதில் மிக அதீத எண்ணமொன்று உண்டானது. யாம் எம்மை சிவனாகவே நினைத்துக் கொண்டு, ஒரு விதமான மனநிலையில் இருந்தபோது மனைவியும், எமது அப்பாவும் பதறிவிட்டார்கள். நாம் பேசவே மறுத்துவிட்டோம். சூரியனையே நோக்கிக் கொண்டிருந்தோம். எம்மைப் புங்க மரத்தடியில் உட்கார வைத்துவிடுங்கள் என மனைவியிடம் தாளில் எழுதிக் காண்பித்தோம். அவர்கள் அதைச் செய்யாமல் எமக்கு ஏதோ ஆகிவிட்டதென நினைத்து விட்டனர். அருகாமை வீட்டுக்காரர்கள் வந்து விட்டார்கள். கல்லூரி நண்பர்களும் வந்துவிட்டார்கள். யாம் யாருடனும் பேசவேயில்லை. துறை நண்பர்களும், உடன் பணியாற்றுவோம் என்னென்னவோ பேசிப் பார்த்தார்கள். இனி ஒன்றும் செய்வதற்கில்லை என யாம் அமைதியாகவே இருந்து விட்டோம். சாந்தி மருத்துவமனை அழைத்துச் சென்றார்கள். பெண் மருத்துவர் இருந்தார். சில சோதனைகள் செய்தார். அமிர்தானந்தமயி போட்டாவைக் காட்டி இவர் யாரெனத் தெரிகிறதா என்றார். மாதா அமிர்தனந்தமயி என்றோம். தெளிவாகத்தானே இருக்கிறார், ஒன்றுமில்லை எனச் சொல்லிவிட்டார். நண்பர்களிடம் எம்மை ரமணாஸ்மரம் கூட்டிச் செல்லுங்கள் என்றோம். அவர்கள் மறுக்கவே எமக்கு மிகக் கடுமையான கோபம் வந்துவிட்டது. துறையில் ஆய்வுக்கூட உதவியாளராக இருந்த திரு. பலராமன் எம்மீது பேரன்பு கொண்டவர். எமக்கு குவளையில் பால் கொடுத்து

குடிக்குமாறு அன்போடு சொன்னார். அவர் சொல்லச் சொல்ல எமக்கு கோபம் அதிகமாகிக் கொண்டே போனது. ஒரு கட்டத்தில் யாம் மிகுந்த கோபத்தில் அவரை சத்தம் போட்டு விட்டோம்.

பின்னர் வீட்டில் கொண்டுவந்து விட்டார்கள். எமது மனம் அமைதியாகவே இல்லை. மனம் கொந்தளித்தது. யாம்தான் போன பிறவியில் ரமணராகப் பிறந்தோம் என்பதை மனம் உறுதியாக நம்பிவிட்டது. அதற்கேற்ப நிகழ்வுகளும் நடைந்தேறின. யாமும் ரமணர் போன்றே செப்டம்பர் ஒன்றாம் தேதிதான் முதன்முதலாக அருணாச்சலத்திடம் சென்றோம். ரமணருக்குப் போலவே, எம் மனத்திலும் அருணாச்சலம் எனக் கேட்டவுடனேயே பெரும் அன்பு தோன்றி விட்டது. குறிப்பாக சென்னையில் இருந்தபோது, இனியும் அருணாச்சலத்தைப் பார்க்காமல் இருக்க முடியாது என்றே அன்றைக்குக் கிளம்பினோம்.

எமது மனைவியிடம் மிகவும் கெஞ்சி எம்மை ரமணாச்ரமத்திற்கு அழைத்துச் செல்லுமாறு கூறினோம். பலமுறை சொல்லி, எமது அப்பாவும் சொன்னதன் பேரில் எம்மை ரமணாச்மரம் கூட்டிச் சென்றார்கள். நண்பர்களும் உடன் வந்தார்கள். யாம் ஆசிரமத்தின் முன்பக்கம் இருந்த சுவற்றில் சாய்ந்து அமைதியாக உட்கார்ந்து கொண்டோம். நண்பர்கள் பதற்றமடைந்தார்கள். உண்மையில் திருவண்ணாமலையில் எமக்கு நல்ல, இனிய நண்பர்கள் கிடைத்தார்கள். நண்பர்கள் போவதும் வருவதுமாக இருந்தார்கள். கூடிக் கூடிப் பேசினார்கள். மதியத்திற்கு மேலாகிவிட்டது. எம் மனத்தில் அடுக்கடுக்கான எண்ணங்கள், கேள்விகள். யாம் ரமணர் எனில் இவர்கள் யார்? யாம் ரமணராக இருந்தபோது இவர்கள் யாராக இருந்தார்கள்? நிலை கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தோம். மனம் ஒரு நிலையில் இல்லை. யாம் அமைதியான நேரங்களில், இயல்பான மனநிலையில் அருணாச்சலேஸ்வரா போற்றி என மனதுள் சொல்லிக் கொண்டிருப்போம். மலை சுற்றினோமெனில் ஆரம்பம் முதல் முடிக்கும் வரை அருணாச்சலா போற்றி என மனதுள் சொல்லிக் கொண்டே நடப்போம்.

அன்றைக்கு அருணாச்சலா போற்றி என மனதுள் நினைக்க முடியவில்லை. மனதுள் நினைக்கும் தோறும் மனம் பாரமானதை உணர்தோம். ரமண சத்குரு சொல்லலாமெனில் அதுவும் கூடவில்லை. யாம் முன்னர் ரமணச்ரமத்தின் மாலைவேளை பஜனைகளில் அமர்ந்து ரமணமாலை புத்தகத்தை வைத்துக்கொண்டு பாடியதுண்டு. அவ்வகையில் ரமணரின் சில பாடல்கள் மனதுள்

இருந்தன. குறிப்பாக, ரமண சத்குரு ரமண சத்குரு ரமண சத்குரு ராயனே எனும் பாடலை மனதுள் சொல்லிக் கொள்வோம். ரமரைப் பற்றிய அழகிய பாடல்களில் கும்மிப் பாட்டும் சிறப்பானது.

தங்குஞ் சிவலோகந் தன்னைவிட் டுத்தய

வாகத் திருச்சுழி தன்னில் வந்து;

அங்கு மிருக்க மனஞ்சகி யாமலே

யருண கிரிதன்னை நாடிவந்தான்.

(தம்முடைய நிரந்தர இருப்பிடமான கைலாயத்தை விட்டு, பூவுலக மாந்தர் மேலுள்ள கருணையினால் திருச்சுழியை அடைந்து சுந்தரம் ஐயர் - அழகம்மை தம்பதியினருக்கு மகனாக அவதரித்தார். பின்பு அங்கிருக்க மனமின்றி தம் சொந்த உருவமாகிய அருணாச்சலத்தை நாடி, விரும்பி வந்தடைந்தார் நம்முடைய சத்குருவான ஸ்ரீரமண மகரிஷிகள்)

புகழும் பொன்னுல கத்து வானவர்

போற்றி நின்று புகழ்ந்திடும்

திகழு நன்னில மாந்தி ருச்சுழி

தன்னில் வந்த தயாபரன்

(பெரிதும் போற்றப்படுகின்ற தேவலோகத்தைச் சேர்ந்த தேவர்கள் எல்லோரும் புகழ்ந்துரைக்கின்ற புனிதத் தலமாகிய திருச்சுழியில் அவதரித்த வள்ளல் பிரான்)

ரமணர் பற்றிய அப்பளப் பாட்டும் எமக்குப் பிடிக்கும்.

அப்பள மிட்டுப் பாரு - அத்தைச்

சாப்பிட்டுன் னாசையைத் தீரு

(மீண்டும் உண்ண வேண்டும் என ஆசை எழாதபடி ஆசையைத் தீர்த்துக்கட்டும் (ஆன்மாவான) அப்பளத்தை இட்டுச் சாப்பிட்டுப் பாரு)

ஸ்ரீரமணசத்குருவின் அருணாச்சல அக்ஷரரமணமாலை மிகவும் சிறப்புற்றது.

அருணாச்சல சிவ அருணாச்சல சிவ

அருணாச்சல சிவ அருணாச்சலா

அருணாச்சலம் என அகமே நினைப்பவர்

அகத்தை வேரறுப்பாய் அருணாச்சலா

ஈன்றிடும் அன்னையின் பெரிதருள் புரிவோய்

இதுவோ உனதருள் அருணாச்சலா

செப்படி வித்தை கற்று இப்படி மயக்குவிட்டு

உருப்படி வித்தை காட்டு அருணாச்சலா

புல்லறிவு ஏது உரை நல்லறிவு ஏது உரை

புல்லிடவே அருள் அருணாச்சலா

பெயர் நினைத்திடவே பிடித்து இழுத்தனை உன்

பெருமை யார் அறிவர் அருணாச்சலா

ஸ்ரீஇரமண சத்குரு இயற்றியுள்ள இப்பாடல் தொகுப்பு பொருள் நிறைந்தது, புகழுடையது.

அன்றைக்கு எதிலுமே மனம் கொள்ளவில்லை. எந்தப் பாடலையும், சொல்லையும் நினைவில் நிறுத்த முடியவில்லை. கல்லூரியின் மதிய உணவு இடைவேளையில் பொறுப்பு முதல்வராக இருந்த வேதியியல் துறை பரந்தாமன் சார் வந்தார். உடன் பிற பேராசிரியர்கள் சிலரும் வந்தனர். எம்மிடம் பேசினார். எமக்கு ஒன்றுமில்லை என்றோம். பேச்சுக் கொடுக்கும் விதத்தில் மேலும் பேசினார். யாம் பேசும் மனநிலையில் இல்லை. உண்மையில் யாம் எங்கோ இருந்தோம். வேறொரு உலகத்தில் இருப்பது போலவும் நினைத்துக் கொண்டோம். நீங்கள் யார் என்றோம். கல்லூரியின் முதல்வர் என்றார். பெயர் என்ன என வினவினோம். தம் பெயர் பரந்தாமன் என்றார். யாம் யார் தெரியுமா என்றோம். சற்றே திகைத்திருப்பார். நீங்க கல்லூரிக்குத்தான் முதல்வர், கிருஷ்ணமூர்த்தியாகிய யாம் இந்த உலகத்துக்கே முதல்வர் தெரியுமா என்றோம். யாம் எப்படிக் கேட்டோம், எந்த மாதிரியான தொனியில் கேட்டோம், எப்படி கையை ஆட்டி, உயர நீட்டிப் பேசினோம் என்பதை பின்னர் தமிழரசி சொல்லிக் காட்டியிருக்கிறார்.

உலகின் முதல்வரோடு பேச முடியுமா. சாரை யாம் நன்கறிவும். அமைதியான குணம் கொண்டவர். சற்று நேரம் இருந்துவிட்டு தமிழரசியோடு பேசிவிட்டுச் சென்றார். யாம் அமைதியாக இருப்பதாகவும், தாமே பார்த்துக் கொள்வதாகவும் மனைவி சொல்லவே நண்பர்கள் கல்லூரிக்குச் சென்றார்கள்.

யாம் உட்கார்ந்தோம், நின்றோம், வராந்தாவில் நடந்தோம், படுத்தோம். நேரம் ஆக ஆக எமக்கு இருப்புக் கொள்ளவில்லை. மனம் மிகுந்த பாரமாகிவிட்டது, ஒரு கட்டத்தில் மனைவி மடியில் தலைவைத்து அப்படியே படுத்துக் கொண்டோம். சற்றே அறுதலாக இருந்ததேயொழிய மனம் தகித்தது. உடலில் சட்டென வெப்பம் கூடியது, குறைந்தது, வேர்த்தது. என்ன செய்யுது, என்ன செய்யுது என மனைவியும் தவித்துப் போனார், அழுதார். ஆச்ரமத்தில் இருந்தவர்கள் கூடினர். அவர்களிடம் ஒன்றுமில்லை, கொஞ்சம் முடியவில்லை, தனியாக விடுங்கள் என்றார். எம்மைச் சுற்றி நடப்பது அனைத்தையும் அறிந்தாலும் மனம் மட்டும் அமைதியாக இல்லை. பெரும் மனக் கொந்தளிப்பு. அருணாச்சலா என சொல்லத் தொடங்கினோம்.

அருகில் இருந்தவர் மிகவும் அக்கறையோடு எம்மைப் பற்றி மனைவியிடம் விசாரித்தார். எமது மனைவிக்கு நிறைய ஆறுதல் வார்த்தைகள் சொன்னார். அவர்கள் பேசுவது கேட்கிறது. ஆனாலும் யாம் எங்கோ தொலைதூரத்தில் இருப்பதாகவும் தெரிகிறது.

ஒரு கட்டத்தில் அவர், இவரைப் பார்த்தால் ரமணர் போலவே இருக்கிறார், போன பிறவியில் இவர்தான் ரமணராக இருந்தாரோ என்னவோ எனப் பேசியது எமக்குக் கேட்டதோ இல்லையே, அப்படியே உடல் குதிக்க ஆரம்பித்து விட்டது. எம்மால் உடல் அசைவுகளை கட்டுப்படுத்த முடியவில்லை. அருணாச்சலா, ரமணா எனக் கத்திக் கொண்டே உருள ஆரம்பித்து விட்டோம். அவர் எம்மைத் தடுக்கவும், பிடித்துக் கொள்ளவும் முயன்றார். மனைவியோ விட்டுவிடுங்கள் எனச் சொல்லிவிட்டார். யாம் கைகளைக் கூப்பிக் கொண்டு அங்குமிங்கும் உருண்டோம். கால்களின் அசைவு நடனமாடுவது போன்று இருந்தது. கைகள் தாமாக எழுந்தன, அசைந்தன. உடலின் இயக்கம் எமது கட்டுப்பாட்டைவிட்டு முற்றாக விலகி விட்டது. யாம் எவ்வளவு நேரம் இப்படித் தவித்தோம் எனத் தெரியவில்லை. மனைவியின் வார்த்தையின்படி, பத்து நிமிடங்களுக்கும் அதிகம்.

உச்சகட்ட ஒரு உடல் உலுக்கலுக்குப்பின், அதிர்வுக்குப்பின், சட்டென அனைத்தும் சரியாகியது மிகுந்த ஆச்சரியம். எமக்கு நன்றாக நினைவிருக்கிறது. அவ்வளவு ஆடிய உடல், சட்டென மாறிவிட்டது. அது பெரியதொரு விடுதலை. சட்டென மன அழுத்தம் நீங்கியது. மனமும் இலகுவானது.

**ஓம் ஜெய் ஸ்ரீரமணாய!**

யாம் கைகளை உயர்த்தி அருணாச்சலா என்றோம். மண்ணைத்தொட்டு வணங்கியது நினைவிருக்கிறது. விழுந்து வணங்கினோம். அப்படியே சுவற்றில் சாய்ந்து அமர்ந்து கொண்டோம். அச்ரமம் போகும்போது உட்கார்ந்தது போலவே, இவை அனைத்தும் முடிந்ததும் அவ்வாறே அமர்ந்து விட்டோம்.

எமக்கு உதவி செய்த அந்த நல்ல மனிதர், அன்பான மனிதர் பெயர் திரு.சண்முகம் என்பதை பின்னாட்களில் நாங்கள் ஆசீரமத்தில் பார்க்கும்போது அறிந்தோம். மிகவும் இனிய மனிதர். எம்மைப் பார்க்கும் போதெல்லாம் நலம் விசாரிக்கத் தவற மாட்டார். சில நாட்களில் யாம் எமலிங்கம் செல்லும்போதும் அவரைச் சந்தித்திருக்கிறோம். இனிமையாகப் பேசுவார். சிறந்த ரமண பக்தர். அருணாச்சலம்மேல் பெரும் பற்றுக் கொண்டவர். மலை சுற்றும்போதும் சிலமுறை பேசியிருக்கிறோம். எம்மீது அன்பும், பரிவும் பாராட்டிய அந்த நல்லுள்ளம் கொண்ட பகவான் ஸ்ரீரணம பக்தருக்கு உள்ளார்ந்த நன்றிகள்.

யாம் சுற்றிச் சுழன்று, உருண்டு, புரண்டு வந்ததைக் கண்ட தமிழரசி பயந்து விட்டார் போல. எமது நண்பர்களுக்குத் தெரியப்படுத்தி விட்டார். நண்பர்கள் என்னாயிற்றோ என விரைந்து வந்தார்கள். கூடிப் பேசினார்கள். எம்மை வேலூர் - பாகாயம் அரசினர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதாக முடிவெடுத்தார்கள் போலும். அவசர ஊர்தி வந்துவிட்டது. யாம் வேண்டாம் என்றோம். எமக்கு மனம் சரியாகி விட்டது, மனதிலிருந்த பெரும் பாரம் இறங்கிவிட்டது என்றோம். ஆனாலும் மனைவி, தந்தை, நண்பர்கள் வற்புறுத்திச் சொன்னார்கள். எதற்கும் மருத்துவரைப் பார்த்துவிட்டு வருவோமே என்றார்கள். அதுவும் நல்லதற்கே என நினைத்துக் கொண்டு சரி போகலாம் என்றோம். நிறைய நண்பர்களும் உடன் வர விரும்பினார்கள். அவசர ஊர்தி என்பதால் சிலரே போதும் எனத் தீர்மானித்து தமிழரசியோடு மருத்துமனைக்குச் சென்றோம்.

வேலூர் நோக்கிய பயணத்தில் யாம் மனதளவில் வேறெங்கோ இருந்தோம். ஏதேதோ நினைவுகள். மழைமேகமாக இருந்தது. அவற்றைப் பார்த்துக் கொண்டே சென்றோம். எதைப் பார்த்தாலும், எந்தப் பொருளைப் பார்த்தாலும் புதியதாகத் தோன்றியது. அவ்வாறு யாம் நினைத்துக் கொண்டோம். வேறு ஏதோ உலகத்திற்கும் சென்று கொண்டிருப்பதாக நினைத்தோம். வேறு பால்வீதிக்குப் போவதாகவும் நினைத்துக் கொண்டோம். சூரியனைப் பார்த்து யாம் யார் எனக் கேட்டோம். சூரியனுக்குள் என்ன இருக்கும், எப்படி இருக்கும் என்றெல்லாம் நினைவு வந்தது. இவ்வளவு அலைக்கழிக்கும் மனதிலும் யாம் அமைதியாகவே இருந்தோம். யாருடனும் பேசவில்லை.

பாகாயம் மருத்துவமனையில் எம்மை இருக்கையில் அமர வைத்துவிட்டு மனைவியும் நண்பர்களும் அங்குமிங்கும் அலைந்தது நினைவுள்ளது. எமது அப்பா எமக்கு அருகிலேயே இருந்தார் என நினைக்கிறோம். அவர் இரண்டாவது முறையாக எம்மை இப்படிப் பார்க்கிறாரல்லவா. ஒருவேளை மனதில் வருத்தம் இருந்திருக்கும். எமது தந்தை எதையும் வெளிக்காட்டுவதில்லை. நல்ல மனிதர்.

மருத்துவரைப் பார்க்க ஒரு அறையில் நெடுநேரம் அமர்ந்திருந்தது நினைவுள்ளது. புல்தரை அருகே மூங்கில் மரநிழலிலிருந்த ஒரு கல்பலகையில் அமர்திருந்தது நினைவிருக்கிறது. தற்போது இதை எழுதும்போது எமது மனைவியிடம் மருத்துவமனையிலிருந்து இரவே வீட்டிற்கு வந்துவிட்டோமல்லவா என்றோம். அவரோ உங்களை ஒரு நாள் படுக்கையில் சேர்த்து கண்காணித்தார்களே நினைவில்லையா என்கிறார். எமக்கு படுக்கையில் சேர்ந்ததாக சிறிதுகூட நினைவில்லை. யாம் அன்றைக்கு மருத்துவரைப் பார்த்துவிட்டு, அடுத்தநாள் சென்று வேறொரு மருத்துவரைப் பார்த்தோம், அவர் வேலூர் கிறித்தவ மிசனரி மருத்தவமனையில் ஹார்மோன் சோதனைக்கு அனுப்பினார் என்றே நினைத்துக் கொண்டிருந்தோம்.

மனைவியோ மருத்துவமனையில் அன்றைக்கு இரவு தங்கி, அடுத்த நாள் முழுக்க இருந்துவிட்டு, மறுநாள் மதியம்தான் திரும்பினோம் என்கிறார். பெரும்பாலானவற்றை நினைவில் வைத்திருக்கும் எமக்கு இது மறந்தது வியப்பு. ஒருவேளை உறக்க மாத்திரை கொடுத்து ஆழ்ந்த உறக்கத்தில் இருந்திருப்போமோ.

நல்லது. இளம் மனநல மருத்துவர்தான் அவர். மருத்துவரைப் பார்க்க நெடுநேரமாயிற்று. மனைவி, நண்பர்களை அழைத்துப் பேசிய பின்புதான் எம்மை அழைத்ததாக நினைவுள்ளது.

மருத்துவர் நலம் விசாரித்தார். யாம் நல்ல மனநிலையிலேயே பேசினோம். மனதில் பல்வேறு எண்ணங்கள் உதிப்பதாகவும், யாம்தான் கடவுள் எனும் நினைப்பு வருவதாகவும், அதன்போது உடலில் பலவிதமான மாற்றங்கள் நிகழ்வதாகவும் சொன்னோம். அவற்றைச் சொல்ல முடியமா என்றார். அதை விரிவாக விளக்க வேண்டும், அவற்றை சுருக்கமாகச் சொன்னால் புரியாது எனக் கூறி, யாம் பிரபஞ்ச ரகசியங்களை அறிந்திருக்கிறோம், அவற்றை எல்லோரும் புரிந்து கொள்ள புத்தகமாக எழுதப் போகிறோம் என்றோம். யாம் மனதளவில் நலமாகவே உள்ளோம், எமக்கு ஒன்றும் இல்லை, மனைவிதான் பயப்படுகிறார் எனச் சொன்னோம். மருத்துவர் விரைவில் புத்தகம் எழுத வாழ்த்துக்கள் கூறி, நலமாக இருப்பீர்கள் என அனுப்பி வைத்தார். மருத்துவருக்கு நன்றி சொல்லி விடை பெற்றோம்.

எம்மை அனுப்பிவிட்டு தமிழரசியை அழைத்து வெகுநேரம் பேசினார். மாத்திரைகள் கொடுத்தார்கள். இரத்தப் பரிசோதனைக்கு கிறித்தவக் கல்லூரிக்குப் போய் இரத்த மாதிரி தரச் சொன்னார்கள். மனைவியோடு சென்று பணம் கட்டி இரத்த மாதிரி கொடுத்து வந்தோம். ஏற்கனவே யாம் சிலமுறை வேலூருக்குச் சென்றிருந்ததால் யாம்தாம் மனைவியை அழைத்துச் சென்றோம். இரத்தப் பரிசோதனை முடிவுகளை பாகாயத்திற்கே அனுப்பிவிட்டார்கள். எல்லாம் இயல்பாகவே இருந்தது. கொஞ்ச நாட்கள் மாத்திரைகள் எடுத்தால் போதுமென்று சொல்லிவிட்டார்கள். அதன் பின்னர் இருமுறை பரிசோதனைக்கும் மனைவியோடு சென்று வந்தோம்.

சமீபத்தில் ஒருநாள் மனைவியிடம் அன்றைக்கு மருத்துவரிடம் நிறைய நேரம் பேசினாயே, என்ன பேசினீர்கள் என்றோம். மனைவி சிரித்தார். சொல்லு என வற்புறுத்தினோம். அத எதுக்கு இப்பக் கேட்குறீங்க என்றார். யாம் அந்தக் காலத்தில் நடந்த எதையுமே யாருடனும் பேசவில்லை. மனதிற்குள்ளேயே வைத்துக் கொண்டோம். எமது வாழ்வின் ஒரே நோக்கம் நாம் யார் எனக் கண்டுபிடிப்பதல்லவா. யாம் ரமணர் எனில், யாம் அருணாச்சலமெனில், யாம் கண்ணனெனில், இவர்கள் யார்? எங்களுக்குள் என்ன தொடர்பிருக்கிறது? யாம் யார் எனத் தெரிவதுபோல்,

தெளிந்தது போல், இவர்கள் ஏன் தாங்கள் யாரெனத் தெரிந்திருக்கவில்லை? எமது மனம் முழுக்க இவைதான். யாம் யாரிடம், எதைப் பேசுவது? எப்படிச் சொல்லிப் புரிய வைப்பது? நண்பர், உறவினர், மனைவி, வீட்டார் என எவரிடமும் எதையும் பகிர்ந்து கொள்ளவில்லை, இதோ இன்று வரையிலும்.

யாம் பலமுறை கேட்டும் அவர் சிரித்து மழுப்பிக் கொண்டே இருந்ததும், எதற்குச் சிரிக்கிறார் என்பதும், எமக்கு பெரிய வியப்பு. கோபம் வேறு. மனநல மருத்துவர் சொன்னாராம் - யாம் படிக்கும் காலத்தில் யாரையோ ஆழமாக நேசித்தோமாம். அதை எம்மால் மறக்கவே முடியவில்லையாம். அந்த ஏக்கம்தான் எமது மனதில் இருக்கிறதாம். அந்த நினைவுகளாலேயே யாம் மனம் தடுமாறுகிறோமாம். சுருக்கமாகச் சொல்வதால் காதலின் ஏக்கம்.

இப்படியுமா மனநல மருத்துவர் இருப்பார்? யாம் அண்டத்தின் இரசிகயங்களை அறிகிறோம், அவற்றை எம்மால் முழுமையாக விளங்கிக்கொள்ளவோ, உள்வாங்கவோ இயலாமல் தடுமாறுகிறோம், அதன்போதே எமது மனம் சற்றே குழம்புகிறது, வேறொன்றும் எமக்கு இல்லை என இருக்க, நினைக்க, மருத்துவரோ மனக்குழப்பத்திற்கு காதலைக் காரணமாகக் கண்டுபிடித்தது வியப்பு. ஒருவேளை எமக்கு யாம்தான் கடவுள் எனும் நினைப்பு வருவதைப் பற்றி அவரிடம் கூறியதால் ‘சரிதான்’ என அந்த மருத்துவர் நினைத்துக் கொண்டாரோ.

இப்படி விடைதேடி, விடையைக் கண்டுபிடித்து மனநலத்திற்கு வைத்தியம் பார்த்தால் மனச்சிக்கல் கொண்டோரின் நிலை என்னாவது? மனநல மருத்துவம் சிறந்த படிப்பு. அதற்கு பொதுமருத்துவமும், மனநலத்தில் சிறப்புப் பட்டயமும் போதாது. மனநல மருத்துவர் மொழியை அறிந்திருக்க வேண்டும். மொழியாலேயே எண்ணங்கள் எனில், எண்ணங்களே மனமெனில், மனதில் எழும் எண்ணக்குவியலே, வேண்டாத எண்ணங்களே, உளச் சிக்கலுக்குக் காரணமெனில், உளவியளாளர்கள் மொழியையும், அதன் எல்லைகளையும் அறிவது அவசியம். எண்ணங்கள் எங்கிருந்து உண்டாகின்றன என்பதே முக்கியம். ஒருவர் தாம் வாழும் உலகை எப்படிப் பார்க்கிறார் என்பதே அன்னாருடைய உளவியல், சிந்தனை. அதில் எழும் தருமாற்றமே, மிகையே, தாழ்வே உளச் சிக்கல். இதை உளவியல் மருத்துவர்கள் அறிந்திருக்கிறார்களா?

உளவியல் மருத்துவர்கள் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய தகுதி உலகிலுள்ள மதங்களையெல்லாம் ஓரளவிற்கேனும் அறிந்திருப்பது. மனித மனத்தின் ஆன்மீகத்தை, ஆன்மீகத் தேடலை உளவியலாளர்கள் புரிந்திருப்பதுபோல் தெரியவில்லை. மனிதருள் நிகழும் ஆன்மீக எண்ணங்கள், மாற்றங்கள், அழுத்தங்கள் மனப்பிறழ்வை கொடுத்துவிடக் கூடியவை. ஒருவர் எதைப் பார்க்கிறார், கேட்கிறார், எதையெல்லாம் படிக்கிறார் என்பதே அவருடைய உளவியல். உளவியல் மருத்துவர்கள் இதையெல்லாம் கவனத்தில் கொள்வதே இல்லை. ஒருவரின் மனத்தில் என்ன இருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பதே உளவியல் சிகிச்சையின் வெற்றி. எமதனுபவத்தில் இப்படி எந்த மருத்துவரும் இல்லை.

யாம் உளவியலில் முதுகலைப் பட்டம் பெற்றிருக்கிறோம். எனில் சற்றே எமக்கு உளவியல் பற்றித் தெரிந்திருக்குமல்லவா. எந்த உளவியல் மருத்துவரும் எம்மிடம் நீங்கள் என்ன படித்திருக்கிறீர்கள் எனக் கேட்டதே இல்லை. அவ்வாறே நீங்கள் எதையெல்லாம் படித்திருக்கிறீர்கள் என்பதும் கேட்ககப்பட்டதேயில்லை. ஒருவர் இலக்கியம் படிக்கிறார் எனில் எந்த வகை இலக்கியம் என அறிய வேண்டும். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பதை மருத்துவர் தெளிய வேண்டும். அதை ஏன் படிக்கிறார், அது ஏன் அன்னாருக்குப் பிடித்திருக்கிறது என்பதற்கு அவரது வாழ்க்கை முறையிலிருந்து விடை தேட வேண்டும். எதற்கெடுத்தாலும் பிராய்டின் இட்டையும், காமத்தையும் முடிச்சிடுவது உளவியலல்ல. பிராய்டு சொன்னது உள்ளத்தைப் பகுத்துப் பார்க்க வேண்டும். உளவியலாருக்கு எங்கே உள்ளத்தைப் பகுத்துப் பார்க்க நேரமிருக்கிறது. கூட்டம் மொய்க்கிறது. வெறுமனே உறக்க மாத்திரை கொடுத்து அனுப்புகிறார். தூங்கினால், நன்றாகத் தூங்கினால் அனைத்தும் சரியாகிவிடுமென்பதுதான் உளவியலின் பாலபாடம். ஒருவிதத்தில் அதுவும் சரியெனினும், ஒருவருக்கு எதனால் உறக்கம் வர மறுக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பதுதானே உளவியல் மருத்துவம். அதற்குச் சிகிச்சையளிப்பவர்தானே உளவியல் மருத்துவர்.

யாம் இதுவரை நான்கு உளவியல் மருத்துவர்களைச் சந்தித்திருக்கிறோம். இரு மருத்துவர்களிடம் ஒரே ஒருமுறைதான் சென்றுள்ளோம். இருவரிடம் சிலமுறை சென்றுள்ளோம். எமதனுபவம் குறைவு என்றாலும், எமக்கு உளமருத்துவர்கள் உறக்க மாத்திரைகள்தான் கொடுத்திருக்கிறார்கள். அன்றைக்கு அது

தெரியவில்லை. இன்றைக்கு அவைகளை இணையத்தில் தேடி அறியமுடிகிறது. யாம் எப்போதுமே உளவியல் மருத்துவர்களிடம் அமைதியாகவே பேசியிருக்கிறோம். தெளிவாகவே நடந்திருக்கிறோம். உளவியில்படி சொல்வதானால் எமது பிரச்சனை இதுதான் - எமக்கு யாம் கடவுள் எனும் எண்ணம் தீவிரமாக வரும்போது சற்றே மனம் அமைதியிழக்கிறது. உறக்கம் சுத்தமாக வருவதில்லை.

யாம் உளவியல் மருத்துவர்களைக் குறை சுட்டவில்லை. பெரும்பணியாற்றுகிறார்கள். ஆயினும் அவர்களுக்கு காரணத்தைக் கண்டறிய நேரமில்லை. உலகிலேயே உளவியல் மருத்துவர்தான் அதிகம் படித்திருக்க வேண்டும்.

சில மாதங்களுக்குமுன் எமக்கு உறக்கம் வருவது சற்றே மாறுபட்டது. ஒருவாரம், பத்து நாள், ஒருமாதம் ஆனபோதும் மனதின் அழுத்தம் குறையவில்லை. புகழ்பெற்றதொரு மருத்துவமனையின் தலைமை உளவியலாளரிடம் சென்றோம். மனைவியும் உடன் வந்தார்.

அவர்கள் ஒரு அறைக்கு அழைத்துச் சென்று ஒரு படத்தைக் காட்டி அதைப் பற்றி ஒரு கதை சொல்லச் சொன்னார்கள். இக்கதையெல்லாம் தெரிந்து, படித்து, எதற்காக அக்கதை கேட்கப்படுகிறது எனத் தெளிந்துதானே யாம் உளவியலில் முதுகலைப் பட்டம் பெற்றிருக்கிறோம். அதில் சொல்லப்படும் கதையை வைத்து ஒருவரின் மனதை அறிய முடியுமோ. உள்ளத்தில் ஒன்றை வைத்துக் கொண்டு வேண்டுமென்றே ஒன்றை மாற்றிச் சொன்னால் என்னாகும்? உள்ளத்தை எதை வைத்து அறிவார்கள்?

யாம் அரசுக் கல்லூரியில் விலங்கியல் இணைப்பேராசிரியராகப் பணியாற்றுகிறோம், மேலும் யாம் உளவியலில், தத்துவத்தில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளோம், நீங்கள் எதற்காக இந்தக் கதையைச் சொல்லச் சொல்கிறீர்கள் என்பதை அறிந்துள்ளோம், இதெல்லாம் எமக்குத் தேவையில்லை, யாம் மருத்துவரை நேரிடையாகவே பார்த்துக் கொள்கிறோம், இதெல்லாம் வேண்டாம் என்றோம். அங்கிருந்த பெண் பரிசோதகர் அதை ஏற்றுக்கொள்ள வில்லை. யாம் மறுபடியும் மறுத்தோம். கதை சொல்லவெல்லாம் யாம் வரவில்லை என்றோம். இதைச் சொன்னால்தான் மருத்துவரைப் பார்க்க முடியும் என்றார். எனில்,

மருத்துவரிடம் கேளுங்கள், எம்மைப் பற்றிச் சொல்லி, யாம் உளவியலில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளதைச் சொல்லி, கதையிலிருந்து எமக்கு விலக்களிக்கச் சொல்லுங்கள் என்றோம். மேடத்திடம் கேட்டு வருகிறோம் என அப்பெண் சென்றார். யாராக இருந்தாலும் இந்த படக்கதை சொல்லிய பின்பே அவரைச் சந்திக்க வேண்டுமெனச் சொல்லிவிட்டாராம். யாமும் கதை சொல்லித்தான் உங்கள் மருத்துவரைப் பார்க்க வேண்டுமெனில், யாம் ஒருபோதும் பார்க்க மாட்டோம் எனக் கோபமாகச் சொல்லிவிட்டு வந்துவிட்டோம்.

நல்ல மனநல மருத்துவர். இணையத்தில் அவரை அப்படிப் புகழ்கிறார்கள். யாம் இனி மனநல மருத்துவர்களிடமே செல்லவே கூடாது என நினைத்துக் கொண்டோம்.

எமது செயல் சரியோ, அந்த மருத்துவரின் செயல் சரியோ. ஆயினும் யாம் மானத்தன். அன்று எமக்கு எத்தனை கோபம் வந்தது என்பதை மனைவி அறிவார். எமது கோபத்தை அறிந்தவர் வெகு சிலரே.

மடமனிதர் பணம் வாங்கிக் கொண்டு கூலிக்குக் கொலை செய்கிறார் எனக் கேள்விப்படும்போது எமக்கு எவ்வளவு கோவம் வரும் தெரியுமா உலகத்தீரே.

இரமணர் மிகப் பொறுமையாக இருந்து விட்டார். மகரிஷியல்லவா. மாமுனி மௌனத்தையே மாபெரும் தவமாகக் கொண்டுவிட்டார். அனைத்தையும் நடத்துவது அவன். அவன் செயலாலே, அவனாலே, அனைத்தும் நடத்துவிக்கப்படுகிறது, இதில் தாம் யார் எனத் தெளிந்து விட்டார்.

யாம் பகவான் இரமணரை அறிந்திருக்கிறோம். கர்மத்தைச் செய், அனைத்தையும் யாம் பார்த்துக் கொள்கிறோம் என விளித்த அந்தப் பெரும் பகவானையும் அறிந்திருக்கிறோம். எமது வழி கர்மத்தைச் செய்துவிடுவது. மற்றதெல்லாம் அவன் பாடு, அவன் பாரம்.

**எம் பாரம் உனதே கண்ணா!**

அந்த மருத்துவர் கண்டறிந்ததிலும் ஏதேனும் உண்மையிருக்குமோ? மருத்துவருக்குப் படித்துவிட்டுத்தானே மருத்துவம் பார்க்கிறார். மருத்துவரையும் நாம் குறைவாக நினைக்கக்கூடாதல்லவா. அவர்கள் பெருமைக்குரியவரன்றோ.

எம்மிடம் சில கேள்விகள் கேட்டது ஞாபகமிருக்கிறது. யாரையாவது தீவிரமாகக் காதலித்தீர்களா எனக் கேட்டாரோ? யாம் பதிலேதும் சொன்னோமோ? அதை வைத்து காதல் ஏக்கம் எனச் சொன்னாரோ?

காதல் ஏக்கம்தானா? எமதெழுத்தில் மூன்றாவது முறையாக அந்த அழகுரோஜா பற்றி எழுதுகிறோம் என நினைக்கிறோம். எம்மால் மறக்க முடியவில்லையோ. அந்த ரோஜாவின் எண்ணம் ஆழ்மனதில் பதிந்து விட்டதோ?

யாம் எமது கடமையையே பெரிதாகக் கொண்டுவிட்டதால் இதையெல்லாம் கண்டுகொள்வதே இல்லை. ஒருவேளை மனதிற்குள் இருக்குமோ? ஊருக்குச் செல்லும் சமயங்களில், அருப்புக்கோட்டை கடைவீதிகளில் சுற்றும்போதுகூட, பொருட்கள் வாங்கும் மும்முரத்தில் அப்பெண்ணின் ஞாபகம் வருவதில்லை. எனினும் அப்பெண்ணின் வீதியைப் பார்க்க நேர்ந்தால் மனதுள் ஒரு எண்ணம் எழத்தான் செய்கிறது. படிக்கும் காலத்தில் ஒருமுறை எமது ஊருக்குப் போவதற்காக அந்த பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தோம். அப்போது அந்தப் பெண் மிதிவண்டியில் அவ்வீதி வழியே சென்றார். அதுதான் அவர் வீடு இருக்கும் வீதி என அப்போதுதான் தெரியும். அதையெல்லாம் யாம் தெரிந்து கொள்ள முயற்சிக்கவில்லை. யாம் படிக்க வேண்டும், எமது குடும்பத்தை முன்னேற்ற வேண்டுமல்லவா.

ரோஜாப் பெண்ணைப் பற்றி நாட்குறிப்பில் கவிதையாக எழுதி வைத்திருக்கிறோம். இரண்டு ஆண்டுகளுக்குமுன் பழைய நாட்குறிப்புகள், ஆட்டோகிராப்களை படித்துப் பார்த்தோம். யாம்தானா அது? இத்தனையா ஆசைப்பட்டோம்?

அந்த ரோஜாவிற்கு வந்த

அதிர்ஷ்டத்தைப் பார்த்தாயா?

உன் காதோடு

ரகசியம் பேசுகிறதே!

சில கவிதைகளை யாமே எழுதியிருக்கிறோம். சிலவற்றை அன்றைய காலத்தில் வந்த புத்தகங்களிலிருந்து எடுத்திருக்கிறோம். காதல் வந்தால் கூடவே கவிதையும் வந்துவிடுவது பெருவியப்பு.

கண்மணியே! காத்திரு..

கை(ய்) பிடிப்போம்

நீ(ய்) நிலவு என்பது

எம் நெஞ்சுக்குத் தெரியும்

இதயக் கிளியே!

இரவெல்லாம் உன் கனவு

பகலெல்லாம் உன் நினைவு

நீலக்குயிலே!

நிஜமாகச் சொல்கிறோம்

நேசம் வைத்த நெஞ்சம்

நெருப்பு வைக்காது

திரித்து வைத்த நெஞ்சம்

பிரித்து வைக்காது

காதலியே..

நம்பிக்கை வைத்து

நாட்களை நகர்த்து.

05 /07/93

Colllege இல் II … ladies 4 பேர் எம்மைக் கண்டால் சிரிக்கிறார்கள். எதற்காகச் சிரிக்கிறார்கள், என்பது மட்டும் தெரியவில்லை. காரணத்தைக் கண்டறியவும் முடியவில்லை. அது ஏளனச் சிரிப்பா அல்லது வேறு சிரிப்பா என்பதை மட்டும் கண்டுபிடிக்க வேண்டும்.

20/07/93

This day morning my father has come. He gave 50 Rs to me. Then immediately he go to Virudhunagar for his own matter.

**இனியவளே!**

உம்மை மிகவும் அறிவோம். கனவில் மட்டுமே வந்து கொண்டிருக்கும் உமக்கு கடிதம் எழுதுகிறோம்.

கண்களாலே காதல் மொழி பேசுபவளே! காதெல்லாம் பொய். உன் கண்களைப் பார்க்கும்வரை இப்படித்தான் சொல்லிக் கொண்டிருந்தோம். உன் அழகிய விழிகளைப் பார்த்தபோதுதான் எமக்கு பார்வையே வந்தது.

நீய் முத்து நகருக்கு சொந்தக்காரியாய் இருக்க வேண்டும். அதுதான் முத்துப்பற்கள் தெரிய இப்படிச் சிரிக்கிறாய். உனது முல்லைச் சிரிப்பில் எமது மூச்சே நின்றுவிடும் போல் இருக்கிறது.

சிரிப்பு கூட உன்னைப் பார்த்துத்தான் சிரிக்கக் கற்றுக் கொண்டதோ!

எமது இதய வீட்டில் இன்றுதான் கிரகப்பிரவேசம். உன்னைப் பார்த்த நாளைச் சொல்கிறோம்.

சொந்தங்களைச் சொல்லிக் கொண்டு காதலிப்பதில் அர்த்தமில்லை. மனங்கள் விஸ்தரிக்கப்பட வேண்டும். கண்டவுடன் காதலா என மூளை கலவரமடைகிறது. எனினும் எம் கொள்கைக் காதலி நீயாகத்தானிருப்பாய். இப்படி மனம் சாந்தமடைகிறது.

எமது காதல் இயற்கையானது. இயல்பானதும் கூட. எமது கம்பன் காலத்து காதல் இந்த கணிப்பொறி யுகத்து காதலை கண்டிப்பாய் வெற்றிகொள்ளும். இலக்கியங்கள் தோற்பதில்லை, காதலும் அப்படித்தான்.

உனது கண்களாகிய கலங்கரை வெளிச்சத்தில்தான் எமது காதல் கப்பல் கரை சேர வேண்டும்.

உன் உள்ளத்தில் எழும் உதட்டசைவுகளில்தான் நம் வாழ்வு பயணத்திற்கு உயிர்கொடுக்க வேண்டும்.

நீ(ய்) பிசிராந்தையாய் இருப்பாய் என்ற நம்பிக்கையில் கோப்பெருஞ்சோழனாய் இங்கே யாம்.

**காதலுடன்**

**கிருஷ்ணமூர்த்தி**

நிலவே!

நீ(ய்) ஏன் இன்னும்

மலராமலேயே

இருக்கிறாய்

எம் மீது

கோபமா

8th October 1992

From this day, I start the excercise. really it is a very good plan. it gives more pleasure to my body and brain

16/03/93

கல்லூரி ஆண்டு விழா, அண்ணனுக்கு அண்ணன் மாரே என்ற பாட்டுக்கு Dance ஆடியது. மறக்க முடியாத அனுபவம்.

உயரப் பறக்கும் ஒரு கோடி

நாகணவாய்ப் பறவைகளே!

தாழப் பறவீரோ?

எம் தலைவி சுகம் கேட்டறிய!

26.03.92 அன்று Hostel Day.

அன்று நடந்த 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் முதலாவதாக வந்து ஒரு சில்வர் டம்ளர் பரிசு பெற்றது.

எமது கல்லூரி காலேஜ் day function.

மிக நல்ல, சந்தோஷமான, அழகான நாள்களில் இதற்கு முக்கிய இடம் உண்டு.

I Love India - என்ற படத்தில் வரும் குறுக்குப் பாதையிலே என்ற பாட்டிற்கு dance ஆடியது. கண்ணன், சபாபதி, செல்வத்துடன்.

What a beautiful day?

Very good

சித்திரை 5 சக ஆண்டு தொப்பலாக்கரையில் திரு.ஜான் பாண்டியன் அவர்களின் கொடியேற்று விழா நடைபெற்ற தேதி 18.04.91. வியாழக்கிழமை. நேரம் 2.50

7th October (10) 1992

(After Pooja Holidays)

எமது வாழ்வின் மிக முக்கியமான நாள். ஆம்

அன்றிலிருந்துதான் யாம் ‘‘பைபிள்’’ படிக்க

ஆரம்பிக்கிறோம். இது ஒரு நல்ல பழக்கம் என

எமக்குத் தோன்றுகிறது. ஆனால் நிச்சயமாக

யாம் கிறிஸ்டினாக மாற மாட்டோம்.

**I am a romantic lover of Hinduism.**

16/04/94

This day was the last working of our college life, she looks like a Queen. Sari is beautiful to her.

31/03/95

எமது இளங்கலை கல்லூரியின் (S.B.K.) ஆண்டு விழா. University Rank & Class First எடுத்ததற்கு பரிசு கொடுத்தார்கள். மிக நல்ல சந்தோஷமான நாள்.

எம் கல்லூரியின் கலை நிகழ்ச்சிகள் எம்மை வெகுவாக கவர்ந்தன. காலை 10.30க்கு ஆரம்பித்து 3.30 வரை நிகழச்சிகள்.

இதுபோல் இன்னொரு நாள் கிடைக்காது என நினைக்கும் போது மனம் வருந்துகிறது. கடைசியில் பிரிந்து வருவது மிகவும் கஷ்டமானது.

Very nice girl, But my bad luck, missed her.

**எங்கள் தேசம்**

பண்பாடுடைய பாரதமே
எங்கள் தேசம் - இங்குள்ள
மக்களெல்லாம் மகத்தானவர்கள்
மாண்பு மிக்கவர்கள்.
காந்தியும் கர்ஷரும் பிறந்த
கருணைமிகு தேசம்.
கம்பனையும் காளிதாசனையும் படைத்த
காவிய தேசம்.
உலக வல்லரசுகளை உதறிவிட்டு
உண்மைக்குப்பின் போகும் உன்னத தேசம்.
இங்கு
ஏக போக குண்டு வெடிப்பு
ஏராளமான உயிரிழப்பு - ஒரு புறம்
ஏழைகளின் ஏக்கப் பெருமூச்சு - மறுபுறமோ
லஞ்சப் பெருச்சாளிகளின் ஏப்பப் பெருமூச்சு.
இங்கு தான்
குஷ்பு சிலைக்கு கும்பாபிஷேகமும்
காந்தி சிலைக்கு குண்டு வைப்பும்
ஏணிந்த எதிர்ப் பரிமாணம் - சற்றே
எண்ணிப் பாருங்கள்.

ஏழைகளின் சிரிப்பில்தான்

ஏற்றமிகு இந்தியா உள்ளது.

உழைப்பவர்களுக்கு உணவில்லை

உரிய ஊதியம் இல்லை - எனவே தான்

பாரதமும் ஏழைகளைப் போன்றே

எலும்பும் தோலுமாகவே காட்சியளிக்கிறது.

இன்றோ

பண்பாட்டைப் பறை சாட்டிய பாரதத்திற்கு பசிக்கிறது.

பாலுட்ட ஆளில்லை.

பாலூட்டாவிட்டாலும் பரவாயில்லை

பாம் வைக்காமல் இருங்கள்.

**மரண எல்லை**

நண்பா!

நல்ல மனிதர்கள்

எப்போதும் பூமியில்

புதைக்கப்படுவதில்லை

அவர்கள்

விதைக்கப்படுகிறார்

அடுத்த தலைமுறைக்கு

இவர்கள் இன்றைய வித்துக்கள்

இதயத்தை சுத்தமாக்கி

இயங்கிடு

உனக்கு

இறப்பே இல்லை

வாழையடி வாழையென

வாழ்வாய்… வாழ்த்துக்கள்

- 25.07.93 - வசந்தத்திலிருந்து (தினகரன்)

**சாதனைகள் தொடரட்டும்…**

இளைஞனே!

உழைப்பையே

உன் உயர்வுக்கு

உரமாக்கிக் கொள்

உலகம் உனக்கு

உதாசீனப்படும்.

சரித்திரங்கள் எல்லாம்

சாதனையால் விளைந்தவையே

சமுதாயச் சாதியினை

சமமாக நீ(ய்) நடத்து

சமத்துவங்கள் நிலவிடவே

சாதனைகள் தொடரட்டும்..

காதல்களும் கைய் கூடும்

காதலிப்பவர் தகுதி வைத்து

உன் தகுதி உயர்ந்திருந்தால்

உலகம் உன் பின்னாலே

தேய் பிறையும் ஓர் நாள்

முழுநிலவாய் மாறுமென்ற

நம்பிக்கைத் துணையுடனே

நாளையே நீய் வென்றிடுவாய்.

கிருஷ்ணமூர்த்தி

தொப்பலாக்கரை

‘‘அழகிய ரோஜாவே

உன் அழகோடும்

உன் கனவுகளுடனும்

விடை பெறுகிறோம்’’

எமது இளநிலை ஆட்டோக்கிராபில், அதாவது நண்பர்களிடம் பெற்ற தற்கையொப்ப நாட்குறிப்பில், மேற்கண்ட கவிதையோடு ஒரு அழகிய ரோஜாவையும் வைத்து அதை அப்படியே மூடிவைத்து எங்கள் வீட்டிலிருந்த பெட்டியில் வைத்து விட்டோம். அடுத்து எப்போது எடுத்துப் பார்த்தோம் என நினைவில்லை. அந்த ரோஜா ஆய்வுக் கூடங்களில் வைக்கப்படும் உலர்ந்த மாதிரி போன்று மாறியிருந்தது. முதுநிலை, சென்னையின் போராட்ட வாழ்க்கை, வேலை கிடைத்தது, வாழ்வின் குறிக்கோள் மாறியது, பணியிட மாறுதல்கள் என எமது வாழ்வு எங்கோ போய்விட்டது.

ஊருக்குச் செல்லும்போது ஒருசில நேரங்களில் ஞாபகம் வந்திருக்கிறது. ஆயினும் மனதுள் அதை வருத்தமாக நினைக்கவேயில்லை. அது முடிந்துபோன ஒன்றாகவே நினைத்து விட்டோம். ஒருநாள் தற்செயலாக கோவை கல்லூரி பேராசிரியர்கள் பெயர்களைப் மாணவர்கள் கையேட்டில் பார்க்கையில் அதே பெயரைப் பார்த்து அதிர்ச்சியடைந்தோம் என்றே சொல்ல வேண்டும். அதே பெயர், அதே துறை, அதே படிப்பு. மனம் தடதடவென அடித்து விட்டது. துறைக்கு நேரில்போய் பார்த்து விடுவோமா எனில் மிகுந்த தயக்கம். எப்படிப் போவது? யாமோ ஒருமுறைகூட பேசியதில்லை, ஒரு வார்த்தைகூட பேசியதில்லை. எம்மைத் தெரியுமோ, ஞாபகம் இருக்குமோ, மறந்திருக்குமோ. திருமணமாகி மகிழ்ச்சியாக

இருப்பாரோ. எம்மை எப்படிப் போய், என்ன சொல்லி அறிமுகப்படுத்திக் கொள்வது? யாம் கவனித்தவரை கல்லூரியில் அவரைப் போன்ற முகமுள்ளவரைப் பார்த்ததே இல்லை. எங்காவது பார்த்திருந்தால் சட்டென முகம் தெரிந்துவிடுமே. மறக்கக் கூடிய சிரிப்பா அது. யாம் அந்த துறையின் பக்கமே போகவில்லை. கல்லூரியின் அகமதிப்பீட்டு தேர்வை ஒவ்வொரு நாளும் ஒருதுறை நடத்தும். அப்படி அத்துறைக்கு விடைத்தாள்கட்டு வாங்கும்போது கவனித்தவரை, அந்த ரோஜா முகத்தில் ஒருவரும் இல்லை. ஒருவேளை விடுமுறை எடுத்திருப்பாரோ.

சில மாதங்கள் மனப்போராட்டத்திற்குப்பின், அவர் வேறு எனத் தெரிந்து விட்டது. பெரிய நிம்மதி. எங்கிருந்தாலும் நலமுடன் வாழட்டும் என நினைத்துக் கொண்டோம்.

முதன்முதலில் ஸ்ரீவில்லிபுத்தூர் போன அன்று பேருந்தில் வாவாவா கண்ணா வா(வா) பாடலைக் கேட்ட உடனேயே சட்டென அந்தப் பெயர் நினைவில் வந்தது. அன்று தொடங்கி சில நேரங்களில் நினைவு வருகிறது. யாமும் மனதுள் இதென்ன நினைவு, ஏன் இந்த எண்ணம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

இதென்ன நினைவுகள். பேசாததற்கே, அருகில்கூட நின்று முகத்தைப் பார்க்காததற்கே இப்படி எண்ணங்கள் வருமோ. எம் வாழ்க்கைப் பயணம் வேறெதோ திசையில் பயணித்தும், அந்த நினைவுகள் தொடர்வது ஏன்?

முகநூலில் தேடினோம். பதிவு இருக்கிறது. பணியில் இருக்கிறார். வேறு தகவல்கள் இல்லை. அவரது மகிழ்ச்சியான வாழ்வில், யாம் ஏன் தேவையில்லாமல் நுழைய வேண்டும். அவர் வாழ்க்கைப் பாதையில் இனிக் குறுக்கிடுவது முறையல்லவே. அவர் நலமும் வளமும் பெற்று, அழகிய குடும்பமாய், மகிழ்ச்சியாய் வாழட்டும். மனதார வாழ்த்துகிறோம்.

உமக்கு நன்றி. உமதழகிய புன்னகைக்கு நன்றி.

**அழகிய ரோஜாவே, வாழ்க பல்லாண்டு!**

கண்ணா.. எமது காதல், காமம் பற்றியெல்லாம் நீயறிவாயல்லவா. கண்ணனுக்கு எல்லாமே தெரியுமெனில், யாம் எதை மறைக்க.

காதல் இத்தனை வலிமையானதா தந்தையே. நீங்கள் இராதையை நினைத்து ஏங்கியதாகச் சொல்வது உண்மையா. நீங்கள் சலனமற்றவரன்றோ. உங்களுக்கு மூவுலகிலும் கடமையேதும் இல்லையெனினும் உயிர்களின் உயர்வுக்காக பூமியில் அவதரித்து கடமையாற்றுகிறீர்கள்தானே.

தந்தை ஜானகியை இத்தனை காதலித்தாரா. இவ்வளவு அன்பு கொண்டவரா எந்தை. சீதம்மாவின் பிரிவை எப்படித்தான் தாங்கினாரோ. எந்தை அனைத்திலும் உயர்வு. அன்பில், பாசத்தில், கருணையில், காதலில், வீரத்தில், கடமையில். பொருத்தருள்வதிலும் நீங்களே உயர்வு தந்தையே. நாளை வாரும் என எப்படித்தான் சொன்னீர்களோ. யாம் மிகுந்த பெருமையடைகிறோம். எம் தந்தை ஸ்ரீராமன், எம் தந்தை ஜெயராமன், எம் தந்தை ஜானகிராமன். எம் தாய் ஜானகி.

எம் தந்தை வெண்ணெய் திருடிய கண்ணன். எம் தந்தை செல்வத் திருமால், திருமகள் தலைவன்..

**காதலும் புனிதமானது தந்தையே, உங்களது கீதையைப் போலவே..**

உலகத்தீரே, காதல் எத்தனை வலிமையானது என்பதைச் சுட்டிக்காட்டவே எமது கல்லூரிக் காதல்கதை சொல்லப்பட்டுள்ளதை அறிக. மேலும் உலகிற்கு ஒரு பாடமாக, நாங்கள் காதலைவிட, கடமையையே பெரிதெனக் கொண்டவர்கள், எங்களுக்குக் கடமையே பெரிது என்பதைத் தெளிவாக்கும் விதத்தில் இக்கதை சொல்லப்பட்டுள்ளதை தெளிக.

காதல் வாழ்க! காதல் வளர்க!!

காதலைப் போற்றுக..

உண்மைக் காதலுக்கு எதுவும் ஈடாகாது மனிதர்காள்!

**ராகவனே! ரமணா! ரகுநாதா!**

எமது பழைய நாட்குறிப்பை இங்கு சுட்டிக் காட்டியதற்குக் காரணம், இளம் வயதில் எமது சிந்தனைகள் எப்படி இருந்தன என்பதைக் காட்டவுமே. சான்று வேண்டுமல்லவா. வியப்பாக, எமக்கு அந்த வயதிற்கேயுரிய காதல்

எண்ணங்களைவிட, இந்த சமூகத்தின் மீதான அக்கறையே அதிகமாய் இருந்திருக்கிறது.

சில கவிதைகளை எழுதி பிரசுரத்திற்கு அனுப்புவோம் என்றெல்லாம் நினைத்திருந்த காலமது. ஆயினும் யாம் கடைசி வரை அனுப்பவில்லை.

**கவிதையும், கதையும் எழுதவோ யாம் பிறந்தோம்?**

திருவண்ணாமலைக்கு வந்த புதிதில், கதையெழுத வேண்டும், இதழ்களுக்கு அவற்றை அனுப்பி வெளியிட வேண்டும் என மனதுள் ஆசை வந்தது. அதற்கேற்ப தனிமையும் வாய்ந்ததல்லவா.

விடுமுறை நாளில் ரமணாச்சரமம் பின்வாசல் வழியாக இருந்த மலையேற்றப் பாதை வழியாக யாம் அருணாச்சல மலைமேல் ஏறுவோம். கூடவே தண்ணீர்க் குவளையும், உணவுப் பொட்டலமும், நொறுக்குத் தீனிகளும், பேப்பரும் எடுத்துக் கொள்வோம். இருநூறடி மேலே சென்றால் வலப்பக்கமாக பெரியதொரு திண்டொன்று இருக்கும். அங்கிருந்த மரநிழலில் அமர்ந்துகொண்டு, ஊரை வேடிக்கை பார்த்தும், கதைகளுக்கான குறிப்புகள் எழுதியும் உட்கார்ந்திருப்போம். அவ்வழியே கந்தாச்ரமம் போவோரும், அங்கிருந்து வருவோரும் தெரியும் என்பதால், அவர்களை வேடிக்கை பார்க்கும் முகமாவும்தான் அங்கே உட்காருவது. நிறைய வெளிநாட்டவர்களைக் காணலாம். காலணிகூட இல்லாமல் நடந்து செல்வார்கள்.

சில நாளில், அங்கிருந்து உள்பக்கமாக நகர்ந்து, அடுத்திருக்கும் குன்றின் உச்சிப் பகுதிக்குப் போய்விடுவோம். அங்கு சில மரங்களே இருக்கும். அங்கிருந்து கீழே பார்ப்பதற்கு அழகிய காட்சியாக இருக்கும். காலை உணவருந்தி, மதியத்திற்கும் சேர்த்து வாங்கிக்கொண்டு, அங்கு போய் உட்கார்ந்தோமானால் மாலையில்தான் கீழே இறங்குவோம்.

அந்தளவுக்குத் தனிமையாக இருந்திருக்கிறோம் என்பதே வியப்பாக இருக்கிறது. ஒருநாள் காலையில் எழுதத் தொடங்கி, கொஞ்சம் கொஞ்சமாக எழுதி, இரண்டு மூன்று பக்கங்கள் வரை ஒரு கதையே எழுதிவிட்டோம். கதையை எப்படி வளர்ப்பது, முடிவு எப்படி இருக்க வேண்டுமென்றெல்லாம் சிந்தித்து வைத்திருந்தோம். சட்டென மனதில் ஒரு எண்ணம். இங்கு இப்படி கதையெழுதவா

வந்தோம்? கதையெழுதவா பிறந்தோம்? புத்துலகம் செய்வதற்குப் பிறந்திருக்கிறோமா, கதையெழுதப் பிறந்திருக்கிறோமா. எழுதிய தாள்களை அப்படியே சுருட்டி, கசக்கித் தூர எறிந்து விட்டோம். மீதமிருந்த தாள்களையும் கிழித்துப் போட்டதாகவே நினைவு. இனி எப்போதும் இப்படி கதையெழுதுகிறோம், கவிதையெழுதுகிறோம் என இருக்கக் கூடாது எனத் தீர்மானமாக முடிவெடுத்துக் கொண்டோம். யாம் நிறையப் படித்தோம், நிறையச் சிந்தித்தோம், நிறைய கற்பனை வளம் கொண்டிருந்தோம். எழுதுவதற்கும் நிறைய கருக்குள் இருந்தன. எமது ஊரின் ஒவ்வொரு மனிதரைப் பற்றியும் ஒரு கதை எழுதலாமன்றோ. ஆயினும் யாம் அன்று அருணாச்சலமலை மீதமர்ந்து எடுத்த முடிவில் உறுதியாகவே இருந்தோம்.

உலகத்தோரே, யாம் கதையோ, கவிதையோ எழுதி எங்கும் வெளியிடவில்லை, யாம் யார் புத்தகம் எழுதும் காலம் வரை.

எத்தனை அன்புத் தந்தை.. தந்தைதான் அண்ணாமலை எனில், யாம் தந்தையின் தோள்மீது அமர்ந்திருந்தோம் என்றல்லவா பெருமையோடு சொல்ல வேண்டும். எத்தனை தந்தையர் தம் பிள்ளையைத் தோள்மீது தூக்கி வைக்கிறார்? அன்புத் தந்தையராலேயே இது இயலும். எம் தந்தை அன்புத் தந்தை. அன்பின் தந்தை, அன்பின் சிகரம்..

யாம் திருவண்ணாமலையில் மகிழ்ச்சியாக இருந்தோம். இரமணாச்ரமத்தில் அமைதியாய் அமர்ந்திருப்போம். கந்தாச்ரமத்தில் மனம் மகவும் அமைதியாக இருக்கும். மலை சுற்றிவரும் ஆனந்தம் அளப்பரியது..

யாம் திருவண்ணாமலையில் பணியில் சேர்ந்தது முழு நிலவு நாளன்று. மதியத்திற்கு மேல் கல்லூரிக்கு விடுமுறை என்றார்கள். காரணம் கேட்டதற்கு இன்று கிரிவல நாள் என்றார்கள். அதற்கெதற்கு அரைநாள் விடுமுறை என்றோம். மக்கள் மதியத்திலிருந்தே நடக்க ஆரம்பித்து விட்டார்கள்.

உண்மைதான். மக்கள் கூட்டம் கூட்டமாக நடக்க ஆரம்பித்தார்கள். நேரம் ஆகஆக சாலை முழுக்க, ஊர் முழுக்கவே ஆட்கள்தான். இவ்வளவு பேர் வருவார்களா என வியப்பு. அன்றைக்கு யாம் மலை சுற்றவில்லை. வெகுநேரம் அவர்களை வேடிக்கை பார்த்து நின்றோம். எமது உளவியல் ஆராய்ச்சித் திட்டத்திற்கு தட்டச்சு செய்ய இடம் தேடினோம். மின்னஞ்சல் சரிபார்க்க இணைய வசதி தேடினோம். பேருந்து நிலையமருகே ஒரு இணைய வசதி இருந்ததைக்

கண்டுபிடித்தோம். அங்கிருந்த ஒரு பெண் இனிமையாகப் பேசினார். எமது மின்னஞ்சல் பெயர் atchyuthan. அன்றைய காலத்தில் பூஜா என்னும் பெண்ணோடு - அநேகமாக வடஇந்தியாவாக இருக்கலாம் - யாம் அடிக்கடி சாட்டில் இருந்தோம். நேரில் சந்தித்ததில்லை.

அச்யுதன் எனும் பெயரை எமக்குச் சூட்டியவர் சுமதி. யாம் படித்துக் கொண்டிருந்த ஸ்ரீமத் பகவத்கீதை புத்தகத்தில் ஸ்ரீகிருஷ்ண பகவானுக்கு கீதையில் அமைந்துள்ள பெயர் என நிறையப் பெயர்கள் இடம்பெற்றிருந்தன. அவர் எம்மை நீங்கள்தான் கிருஷ்ணன் எனச் கூறி, இப்பெயர்களிலிருந்து தமக்குப் பிடித்தமான பெயரைத் தேர்ந்தெடுக்கிறோம் எனச் சொல்லி, அச்யுதன் என்னும் பெயரைச் சூட்டினார். அந்தப் பெயர் அவருக்கு மிகவும் பிடித்திருந்ததாம். அச்யுதன் எனில் தன் நிலையினின்று வழுவாதவன், அறிவை அள்ளி அள்ளிக் கொடுப்பவன், கேட்டவர்க்குக் கேட்டதை கேட்டபடி கொடுப்பவனாம்.

எங்கள் ஊர்ப் பெருமாள் கோவில் தவிர, எமக்கு நினைவு தெரிந்து யாம் சென்றது திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி திருக்கோவில்தான். அதன்பின் பெருமாள் கோவிலுக்குச் சென்றது எமக்கு நினைவு தெரிந்து சுமதியோடுதான். இருவரும் சிலமுறை சென்றுள்ளோம். பெருமாள் கோவிலுக்குச் செல்லும்முன் அருகிலிருக்கும் சிவன் திருக்கோவிலுக்கே முதலில் சென்றோம். தந்தையர் இருவரும் அருகருகே கோவில் கொண்டிருந்தது அழகு. யாம் அங்கு வருவோம் என முன்னமே தெரியுமோ. பெரிய தந்தையர்தான்.

பெருமாளை வழிபட்டபின், பெருமாள் கோவிலில் கொடுக்கும் பூக்கள், துளசி இலைகளை, சுக்லாம் பரதரம் விஷ்ணும் சுலோகம் சொல்லி அவர் எம் தலைமீது தூவுவார். எமக்கு அவர் செய்கையும், அந்த மந்திரமும் வியப்பாக இருக்கும். அதற்கு விளக்கமெல்லாம் கேட்டதில்லை. அவர் மனதில் அப்படித் தோன்றியிருக்கிறது. பெருமாளுக்குப் போட்டதை எமக்குப் போடலாமா என்றால் நீயே பெருமாள்தானப்பா என்பார்.

எம்முள் அப்படி ஒரு எண்ணம் உண்டாகியிருந்தது உண்மைதானே. யாம் எமக்கு சென்னையில் நிகழ்ந்த எதையும் அவரிடம் பகிர்ந்ததில்லை எனும்போது, அவர் மனத்தில் ஏன் அப்படியொரு எண்ணம். ஆச்சரியம்தான்.

எமக்கு பெற்றோர் வைத்த பெயர் கிருஷ்ணமூர்த்தி. யாம் கிருஷ்ணன் எனும் விழிப்புணர்விற்குப் பின்னர் எமக்குச் சூட்டப்பட்ட புதுப்பெயர் அச்யுதன். சூட்டியவர் சுமதி.

கண்ணன் சுமதி என்னும் அரசரின் மகனாக சம்பளக்கிராமத்தில் பிறப்போம் என்றானா அல்லது சுமதியின் மகனாகப் பிறப்போம் என்றானா. சுமதி எனில் அரசராகத்தான் இருக்க வேண்டுமா? பெண்ணாக இருக்கக் கூடாதா, பெண்ணுக்கும் அவள் வயிற்றில் பிறந்துதான் மகனாக வேண்டுமா? பெயர் வைத்தாலே மகன் உறவு வரும்தானே. என்னில்,

சுமதியின் மகன் யார்?

தமிழ்க் கிருஷ்ணன் யார்?

எமதெண்ணத்தில் எத்தனை சுமதிகள். சுமதியின் மகனாய்ப் பிறப்பான் என்பதை யாம் அறியாமலல்லவா இருந்திருக்கிறோம். தேவர்கள் அறிந்திருப்பார்களோ, கடவுள்கள் தெரிந்திருப்பார்களோ.

**நாடகத்தை நடத்துபவன் நாராயணனல்லவா.**

தேவர்களை அறியாதவனா பாற்கடலில் சயனித்திருக்கும் அந்த பரந்தாமன்.

கடவுள்களைத் தெரியாதவனா பாதம் நீட்டி உலகளந்த அந்த பத்மநாபன்.

லெட்சுமியே! தாயே!

அம்மா! நின்தாள் சரணம்!

ஜானகி அம்மாவுக்கு மங்களம்!

அலர்மேல் மங்கைக்கு சுபமங்களம்!

**பெருந்தேவித் தாயாருக்கு ஜெய மங்களம்!!**

மரகதத் தமால மலர் மொட்டுகளை மொய்க்கின்ற
பொன்னிறக் கருவண்டு போல்
மாதவன் மார்பினில் வாசம் புரிந்தங்கு
மெய்சிலிர்ப்பேற்றும் விழிகள்
பரவும்பல் வடிவத்தின் செல்வவள மாகிடும்
திருமகளின் அழகுவிழிகள்
பரிவோடும் அந்த இருவிழிகளின் கடைநோக்கு
மங்களம் நமக்கருள்கவே..

நீலமா மலரினிள் உள்சென்று வெளிவந்து
உலவிடும் பெண்வண்டு போல்
நீலமா முகில்வண்ணன் திருமுகம் காண்கின்ற
ஆசையால் மேல்சுழன்று
கோலங்கண்டு உடன் நாணமேற மீண்டும்
கீழ்வந்து மேல்சென்றிடும்
குறுநகையால் அலைமகள் கண்வரிசை நம்வாழ்வில்
செல்வமெல்லாம் தருகவே..

ஆனந்தமாய்ச் சற்று விழிகளை மூடிய
முகுந்தனைக் காணும் விழிகள்
ஆனந்தம் தந்தபடி இமைசிறிதும் அசையாது
இனிமையை வார்க்கும் விழிகள்
மன்மதச் சாயலைத் தன்னிலேற்கும் விழிகள்
பள்ளி கொள்ளும் பரமனின்
மனைவியாம் திருமகளின் பாதிமூடும் விழிகள்
செல்வசுகம் யாவுமருள்க..

எந்தக் கடைப்பார்வை நாரணனின் கௌஸ்துப

மார்பினில் வாழ்கின்றதோ

எந்தக் கடைப்பார்வை இந்திரனின் நீலமணிச்

சரமாய் ஒளிர்கின்றதோ

எந்தக் கடைப்பார்வை சுந்தரத் திருமாலின்

தேவைகளைத் தருகின்றதோ

அந்தக் கடைப்பார்வை வீசிடும் கமலமகள்

மங்களம் நமக்கருள்கவே..

நீருண்ட மேகமாய் காருண்டு காட்சிதரும்

விஷ்ணுவின் திருமார்பினில்

நிலைகொண்டு  ஒளிர்கின்ற மின்னலாகி அகில

உலகுக்கும் தாயுமாகி

பார்கவ குலத்தினில் அவதரித்துப் பூசை

செய்வதற் குரியதாகி

பரிமளிக்கும் வடிவம் எதுவோ அதுநம்மில்

மங்களம் பொழியட்டுமே..

மங்கலங்கள் யாவும் தன்னிடத்தில் கொண்ட

மாயன் வைகுந்தன் நெஞ்சில்

மதுகைடபர் எனும் வலிமைமிகு அசுரரை

மாய்த்தத் திருமாலின் நெஞ்சில்

மன்மதன் சென்றமர வழிசெய்த

அந்தக் கடல்குமரித் திருவின் பார்வை

புன்சிரிப்பேந்திடும் அந்தகடை கண்பார்வை

நம்மையும் அருளட்டுமே..

உலகாளும் வாய்ப்பையும் இந்திரப் பதவியையும்

வேடிக்கையாய்க் கொடுக்கும்

முரனை வெற்றி கொண்ட விஷ்ணுவிற்கு
பெரும் ஆனந்தம் தந்துநிற்கும்
நீலோத்பல மலரின் உட்புறப் பகுதிபோல்
நளினமாய்த் தோன்றிநிற்கும்
நிலமகளின் கடைநோக்கில் ஒருபாதி நம்மீது
கணமேனும் பொழியட்டுமே..

மறுமைக்குத் தேவையாய் உள்ள நற்செயல்களைச்
செய்கின்ற தகுதியில்லா
மனிதருக்குங்கூட எந்தக் கருணைப்பார்வை
சொர்க்கத்தைத் தருகின்றதோ
அந்தக்கருணைப் பார்வை கொண்டவள் தாமரை
மலர்மீது வீற்றிருக்கும்
அன்னையாம் ஸ்ரீமகாலெட்சுமியின் திருநோக்கு
தேவைகளை அருளட்டுமே..

கலைமாமகள் என்றும் கருடக் கொடியானின்
அலைமாமகள் என்றுமாய்
நிலமாலும் சாகம்பரி என்றும் பிறைசூடும்
பெம்மானின் மலைமகளுமாய்
உலகத்திலே நின்று உயிர்படைத்துக் காத்து
முடிப்பதை விளையாட்டெனச்
செய்பவள் மூவுலகம் ஆளும் நாராயணனின்
நாயகியே போற்றி போற்றி!

நல்லபல செயலுக்கு ஏற்றபடி பயன்தரும்
வேதவடிவினளே போற்றி!

நளினமிகு அழகிய குணங்களின் உறைவிடமே

ரதிதேவி போற்றி போற்றி!

எல்லையில்லா சக்தி எனவாகித் தாமரையில்

அமரும் மலர்மகளே போற்றி!

எங்கும் விளங்கிடும் பூரணமே எழில்புருச

உத்தமனின் துணையே போற்றி!

செங்கமல மலர்போன்ற சிங்கார முகங்கொண்ட

திருமகளே போற்றி போற்றி!

மந்தரமலை அசையும் பாற்கடல் தோன்றிய

மாமகளே போற்றி போற்றி!

சந்திரத் தேவனுடன் தேவரமுதத்தினுடன்

பிறந்தவளே போற்றி போற்றி!

நந்தகோவிந்த நாராயணனின் நாயகியே

நிலமகளே போற்றி போற்றி!

தங்கநிறத் தாமரையைச் செந்தளிர்க் கரமேந்தும்

செந்திருவே போற்றி போற்றி!

தரணிமண்டலம் முழுதும் அரசாட்சி செய்கின்ற

நாயகியே  போற்றி போற்றி!

தேவாதி தேவர்க்கு ஆதிமுதல் தயைபுரியும்

செல்வமே போற்றி போற்றி!

சார்ங்கமென்னும் வில்லை ஏந்திடும் இராமனின்

இல்லறமே போற்றி போற்றி!

பிருகுமுனியின் புதல்வியாய் அவதாரம் செய்தவளே

தேவியே போற்றி போற்றி!

திருமாலின் வலமார்பில் நிறைவாக உறைபவளே

திருமகளே போற்றி போற்றி!

கமலமென்னும் மலரில் ஆலயம் கொண்டவளே

இலெட்சுமியே போற்றி போற்றி!

காலடிகள் மூன்றினால் உலகினை அளந்த

தாமோதரனின் துணையே போற்றி!

ஒளிசுடரும் காந்தியும் தாமரை விழிகளும்

கொண்டவளே போற்றி போற்றி!

உலகம் அனைத்தையும் இயக்கிடும் மங்கல

நாயகியே போற்றி போற்றி!

அமரருடன் அனைவரும் அடிபணிந்தே தொழும்

அலைமகளே போற்றி போற்றி!

நந்தகோபன் குமரன் நந்த கோபாலனின்

நாயகியே போற்றி போற்றி!

செல்வங்கள் தருபவளே ஐம்புலனும் ஆனந்தம்

பெற்றிடச் செய்யும் தாயே

பல்வகைப் பதவிகள் அரியாசனங்களை

தருகின்ற கமலநயனீ

அல்லல் வினைகளைப் போக்குபவளே எங்கள்

அஞ்ஞானம் நீக்குபவளே

செல்வியே தொழுகின்றோம் உன்னையே அன்னையே

எங்களை என்றும் காப்பாய்..

தொழுகின்ற அடியார்க்குப் பொழுதெலாம் துணைநின்று

செல்வங்கள் யாவற்றையும்

முழுதாகப் பொழிகின்ற திருநோக்கு எவருடைய

கடைக்கண்ணின் கருணைநோக்கு

அந்தக்கருணை நோக்கு முரஹரியின் மனம்வாழும்

திருமகளே உனது நோக்கு

உன்னையெங்கள் மனதாலும் மெய்யாலும் சொல்லாலும்

துதிசெய்து புகழ்கின்றோம் நாங்கள்.

பத்ம மலரில் வாழும் பத்மினி பத்மத்தை

கையேந்தும் பதுமநிதியே

புத்தொளி வீசும் வெண்ஆடை மணமாலையுடன்

ஒளிர்கின்ற செல்வச்சுடரே

பகவதி ஹரிநாதனின் உயிர் நாயகியே

நெஞ்சமெல்லாம் நிறைந்தோய்

ஜெகமூவினிற்கும் பெரும் செல்வங்கள் தருபவளே

எங்களிடம் கருணை காட்டு..

தேவகங்கை நதியின் தெளிவான தூயநல்

நீரினைப் பொற்குடத்தில்

திசைகளில் மதயானைகள் ஏந்தி நீராட்டத்

திகழ்கின்ற தெய்வஅழகே

தாவுமலை கடலரசன் பெற்ற பெண்ணே உலகம்

யாவிற்குமே அன்னையே

தரணிகளின் தலைவனாம் திருமாலின் மனைவியே

காலை உனைத் துதிசெய்கிறோம்.

அரவிந்த மலர் போன்ற அழகிய கண்ணனின் ஆனந்த காதலி போற்றி!

மங்களங்கள் யாவும் தன்னிடத்தில் கொண்ட மங்கள தேவி போற்றி!

மன்மத சாயலை தன்னில் ஏற்கும் விழிகள் போற்றி!

மூன்று வடிவங்களின் உருவமாய் நிற்பவள் போற்றி!

மூவுலகிற்கும் தாயாம் மோகன இலெச்சுமி போற்றி!

அகில உலகிற்கும் தாயாய் பரிமளிக்கும் அன்னையே போற்றிபோற்றி!

கனகமழை பொழிகின்ற காருண்ய மேகமே

இலெட்சுமியே வந்தருள்கவே!

கனகதாரை என்னும்துதி கேட்டு வாழ்வில்

ஐஸ்வர்யம் தந்தருள்கவே!! (நன்றி – கனகதாராதோத்திரம்)

உலகம் செல்வச் செழிப்புற்று

மனிதர் பாக்கியம் பல பெற்று பல்லாண்டு

வாழ்கவே! பலகோடி ஆண்டு வாழ்கவே!!

**வாழிய உலகம், வளர்க உலகமெனும் உயர்ந்த செல்வம்..**

அருணாச்சலமெனும் புகழ்கொண்ட தந்தை எம்மை நன்கறிவார். 2001இல் காரைக்குடிக் கல்லூரியிலிருந்து திருவண்ணாமலைக்கு சென்னையில் நடைபெற்ற பணியிடமாற்றக் கலந்தாய்வு அறைக்குள் நுழையும் முன்புவரை மனதுள் தடுமாற்றமே. எனினும் செய்யாறு கல்லூரியின் தோழர் இரவி கலந்தாய்வுக்கு வரததால் எமக்கு திருவண்ணாமலைக்குக் பணியிடமாறுதல் கிடைத்தது. அவர் வந்திருந்தால் அவருக்கே கிடைத்திருக்கும். விதிப்படி இடமாறுதலுக்கு உள்ளாகி இருவருடம் கழித்தே மறுபடியும் இடமாறுதல் கிடைக்கும்.

எமது இடமாறுதலில் குடும்பத்தாருக்கு மகிழ்ச்சியில்லை. எனினும் யாம் காரைக்குடியிலிருந்து மகிழ்வுடனேயே திருவண்ணாமலைக்குப் புறப்பட்டோம். விழுப்புத்தில் பேருந்திலிருந்து இறங்குவதற்குள் அந்த ஓட்டுனர் பேருத்தை நகர்த்தியது ஏனோ? பெட்டியை தரையில் வைத்துவிட்டு, பெரிய பையைத் தூக்கிக் கொண்டு இறங்கும்முன்பே பேருந்தை இயக்கி, யாம் தடுமாறி கீழேஇறங்கி, பேருந்தோடு சற்றே ஓட, எமது பெட்டியோ பின்சக்கரத்தில் மாட்டிக்கொண்டு தரதரவென இழுத்துச் செல்லப்பட்டது. எனினும் அந்த ஓட்டுனர் நிறுத்தவில்லை. பெட்டி சற்றே கீறி, திறந்து, பொருட்களெல்லாம் கீழேகொட்டி, சாமி படங்கள் உடைந்து, சாமி கேசட்டுகள் நொறுக்கி, யாம் இதென்ன இப்படியாகிவிட்டதே என நடுச்சாமத்தில் அந்தப் பேருந்து நிறுத்த இருக்கையில் நெடுநேரம் அமர்திருந்தோம். ஆசையோடு திருவண்ணாமலைக்கு வரும்போது இதென்ன ஆரம்பத்திலேயே இப்படியாகி விட்டதே என மனதுள் சஞ்சலம் இருந்தது.

கல்லூயில் மகிழ்வோடே சேர்ந்தோம். திருவண்ணாமலைக் கல்லூரியில் விலங்கியல் துணைப்பாடமாக மட்டுமே இருப்பது எமக்கு முன்னரே தெரிந்திருந்தாலும், சரி பரவாயில்லை, அமைதியாக வாழலாம், நிறையப் படிக்கலாம் என்றே வந்தோம். எனினும் இங்கு விலங்கியல் தனித்துறையாக இல்லாமல், தாவரவியல் துறையோடு இணைந்திருந்ததை யாம் முன்னரே அறிந்திருக்கவில்லை. தனித்து இருக்கலாம் என வந்த எமக்கு தாவரவியல் துறையோடு இணைந்திருப்பதில் சற்றே உடன்பாடு இல்லைதான். அதையும் சரி என ஏற்றுக் கொண்டோம்.

திருவண்ணாமலைக்கு வந்தது ஜூலை மூன்று 2001. பணிமாறுதல் பெற்றது ஏப்ரல் முப்பது 2007. வீட்டைக் காலிசெய்து விட்டுக் கிளம்பியது ஜூன் மாதம் முதல் வாரத்தில். கிளம்பிய அன்று மிகவும் வேதனையாக இருந்தது. உறுதியாக வருவதாகச் சொன்ன லாரி ஓட்டுனர் வரவில்லை. சிறிய லாரி கிடைக்கவில்லை. எங்கெங்கோ சுற்றி, யாரிடமெல்லாமோ கேட்டு, லாரிப் பேட்டைக்குச் சென்று, ஒரு லாரியைப் பேசி அழைத்து வந்தோம். அன்று பலராமன் சார் எவ்வளவோ உதவினார். நடு இரவு வரை அவரும், விஜயாவும் பொருட்களை ஏற்றுவதற்கு உதவினார்கள். அவர்கள் இருவரின் உதவிகளும் பெரியவை. அச்சுதன், அக்ஷயாவை அம்மா போன்று வளர்த்ததே திருமதி. விஜயா எனில் மிகையாகாது. நல்ல அன்பான பெண்.

திருவண்ணாமலைக்கு வரும்போது யாம் ஒற்றை மனிதனாக வந்தோம். அங்கிருந்து கோவைக்குக் கிளம்பும்போதோ நான்கு பேராக, அழகான குடும்பமாகக் கிளம்பினோம். இப்படியொரு குடும்பம் எமக்கு அமையுமென்று யாம் நினைக்கவில்லை. தந்தைக்கு நன்றி சொல்வது பொருத்தமில்லையெனினும், யாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம் லாரியில் பொருட்களை ஏற்றி, மழை வரலாம் என தார்ப்பாயால் மேலேகட்டி, அதன்மேல் நாங்கள் உட்கார்ந்து கொண்டு, வானத்தைப் பார்த்தும், பேசிக்கொண்டும் கோயம்புத்தூருக்கு வந்த பயணம் மறக்க முடியாத அனுபவம். குழந்தைகள் மனதிலும் அது அப்படியே பதிந்து விட்டது.

இங்கு வருவதில் தமிழரசிக்குத் துளியும் விருப்பமில்லை. அவருக்கு சிவபெருமானான உங்கள் மீதுதான் மிகுந்த அன்பு. எமக்கும் விருப்பில்லைதான். ஆனாலும் நடந்த நிகழ்வுகள், காரண காரியங்கள் எங்களை கோயம்புத்தூருக்கு அழைத்து வந்து விட்டன.

யாம் கோயம்புத்தூருக்கு வரும்முன்பே அறிவுத் திருக்கோவில் கட்டிய அருட்தந்தை வேதாத்ரி மகரிஷியும், ஈஷா யோக நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவும் இங்கு வந்தது எதனால் தந்தையே? இவர்கள் எமக்கு மூத்தோரா?

காரைக்குடியிலிருந்தபோதே வேதாத்ரி மகரிஷியின் பிரம்ம ஞானம் புத்தகத்தை, முந்திரி மரக்கிளையில் உட்கார்ந்து படித்துத் திரிந்தது சுகமான அனுபவம். திருவண்ணாமலையிலிருந்த காலத்தில் ஈஷாயோக வகுப்பும் சென்றோம்.

அன்புத் தந்தையாம் அண்ணாமலையாரை அடிமுடி காணா அண்ணாமலை எனப் புகழ்கிறார்கள் சைவர்கள். இதிலும் தீவிர சைவர்களோ அதை பெரிய வெற்றி போன்று கொண்டாடுகிறார்கள். அதை வைத்தே சிவபெருமானை, அரியாலும், அயனாலும்கூட வெல்லமுடியாத பெருங்கடவுள் என்கிறார்கள். உலகின் அத்தனை கடவுள்களிலும் சிவனே பெரியவன் என அகம் மகிழ்வதோடு அதை பேசியும் எழுதியும் வருகிறார்கள்.

அண்ணாமலையின் அடியும் முடியும் கண்டால் என்னாகும்? உலகின் அடியும் முடியும் அறியப்பட்டால் என்னவாகும்? அது ஏன் அறியவே முடியாது எனச் சொல்லப்பட்டது?

உலகின் முதலும் முடிவும் தெரிந்தால், அறிந்தால், குறிப்பாக மனிதர் அறிந்தால், பேராசைக்கார மனிதர் அறிந்தால், மனிதரை அடிமையாக வைத்திருந்த, எப்போதும் அடிமையாகவே வைத்திருக்க நினைக்கும் மனிதர்கள் அறிந்தால், பூமியை அடிமையாக்க நினைக்கும் சாதியாரும், வானத்தை வளைத்துப்போடத் துடிக்கும் மதத்தாரும் அறிந்தால், அறிய முடிந்தால், உலகின் கதி என்னாகும் அன்புத் தந்தையே.

உலகின் தொடக்கத்தையும், அதன் முடிவையும் மனிதரால் அறிய முடிந்தால் அவர் சும்மா இருப்பாரா. உயிர்க்குலங்களை, உயிர்க்கூட்டங்களைத் தம்பிடிக்குள் வைத்துக் கொள்வாரே. மீட்சியென்பது முடியாததாகிவிடுமல்லவா.

பேராசைக்கார மனிதரால் அடியையும் முடியையும் அறிய முடியுமா? சுயநலக்கார மனிதரால் அடியையும் முடியையும் அறிய முடியுமா? பெண் பித்தரால் அடியையும் முடியையும் அறிய முடியுமா? முடியாதென்பதைவிட அறியக்கூடாதல்லவா தந்தையே.

பிட்டத்தில் அவ்வப்போது எழும் இத்தினியூண்டு குண்டலினிக்கே மனிதர்கள் இந்தக் குதியாட்டம் போடுகிறார்களே, ஒருவேளை உலகின் அடியையும் முடியையும் அறிந்தால் என்னாகும் அன்புத் தந்தையே? உலகம் தாங்குமா? உயிர்கள் பிழைக்குமா?

புறவேடக்காரர்கள், முகமூடிக்காரரர்கள் வேடம் புனைந்துகொண்டு, முடி வளர்த்துக்கொண்டு, தமக்குத்தாமே சிலை வைத்துக்கொண்டு, சிவனென்றால் யாரென்றே அறியாத கூட்டத்தாரை வைத்துக் கொண்டு கூத்தடிக்கும் மடையர்கள், அடியையும் முடியையும் அறிந்தால் என்னாகும்?

அன்புத் தந்தையாம் சிவபெருமான், அடிமுடி காண முடியாத அண்ணாமலையான், தங்கக் கட்டிலில் துயில்வாரோ. தம் மக்களெல்லாம் குடிசைகளிலும், குப்பைமேடுகளிலும், ஊருக்கு ஒதுங்குப் புறங்களிலும் வாழும்போது, தந்தை மட்டும் தங்கக் கட்டிலில் படுத்துறங்குவாரா? தங்கப் பல்லக்கில்தான் போவாரா? சில தந்தையர் போகக் கூடும்.

எங்கள் அன்புத் தந்தையாம் அண்ணாமலையான், எங்கள் பெருந்தந்தையாம் சடையன், சடாமுடியன் போகமாட்டான். ஏனென்றால் தந்தை எங்கள் தந்தை. எங்களின் அன்புத் தந்தை. எங்கள் உள்ளங்களில் என்றும் வாழும் தந்தை..

தந்தை எங்கள் தந்தையன்றோ, பள்ளக் குடியின் தந்தையன்றோ. சடையனென்றும், சடைச்சியென்றும் பெயர் கொண்டவர் பள்ளக் குடியன்றோ. சேற்று வயலில் இறங்கி நாற்று நடும் குடியின் தந்தை என்பதால்தானே தந்தையும் தாயுமாய் நடவுத் தொழிலுக்கு வருகிறார்கள். தம் மக்கள் சேற்றில் உழலும்போது தந்தை குடைபிடித்துக்கொண்டு சும்மாவா உட்கார்ந்திருப்பார்? அப்படி அமர்ந்திருந்தால் அவரென்ன தந்தை? தந்தையென மக்கள் ஏற்றுக்கொள்வார்களா? அவரைத் தந்தை என உலகம்தான் ஒப்புமா?

தாம் பெற்ற பிள்ளைகளெல்லாம் கழனிகளிலும், காடுகளிலும் மாடாய் உழைத்துக் கொண்டிருக்க, தந்தை மட்டும் சுகித்திருப்பாரோ. எங்கள் தந்தை என்பதால்தான் மண் சுமக்க வந்தார். மண் சுமப்பவருக்கல்லவா மண்ணைச் சுமப்பதன் உழைப்புத் தெரியும். பாடுபட்டு உழைப்பவருக்கல்லவா உழைப்பின் களைப்புத் தெரியும், உழைப்பின் அருமை புரியும்.

உழுவது உழவன், பயிர் செய்வது உழவன். அறுவடை செய்வது உழவன். விளைச்சல் மட்டும் அன்னாருக்கு. மாடாய் உழைத்தவனுக்கு, ஓடாய்த் தேய்ந்தவனுக்கு நல்ல நெல்லை கொடுக்கக்கூட மனமில்லாத இந்தப் பேராசைக்காரர்களா அடியையும் முடியையும் அறியப் போகிறார்கள்?

ஒருசில நல்ல புண்ணியவான்களே களத்திலேயே அளந்து கொடுப்பர். பிறரோ வீட்டிற்கு வந்து வாங்கிக்கொள் எனச் சொல்லி விடுவர். வீட்டிற்கு நெல்வாங்கப் போனால் பொக்குநெல்லைக் கலந்து கொடுப்பார். சூடடித்த நெல்லைக் கொடுப்பார்.

நேர்மையாக உழைத்தற்கு, உழைத்த உழைப்பிற்குக் கூலி கொடுப்பதற்கு, மூட்டை மூட்டையாய் நல்ல நெல்லை அடுக்கி வைத்துக்கொண்டு பொக்கு நெல்லை கொடுத்த நீங்களா சிவனாரை அறியப் போகிறீர். உங்களாலா சிவனென்னும் புனிதனின் அடியை அறிய முடியும்? அவன் பாதம் எத்தனை உயர்ந்தது எனத் தெரியுமா மூட மனிதர்களே.

உங்களாலா அன்பின் தந்தையாம் சிவனின் அடியை அறிய முடியும்? அடியவே அறிய முடியாதபோது முடியை எப்படியடா உங்களால் அறிய முடியும்?

கடவுள் இல்லையென்றா நினைத்தாய்? கடவுள் ஏதுமறியாதவன் என்றா எண்ணினாய்? கல்லாகத்தானே இருக்கிறான் என நினைத்ததால் தானே உழைத்த கூலிக்கு கல்லைக் கலந்து நெல்லைக் கொடுத்தாய்.

அந்த ஏழை மனிதர்கள், எளிய மனிதர்கள் எப்படிப் புலம்புவார்கள் தெரியுமா பெருஞ்சொத்து மனிதர்களே. அவர்கள் நினைத்தால் திருடியிருக்கலாமே. திரண்டெழுந்து வந்த அறுவடை செய்து அள்ளிக்கொண்டு போயிருந்தால் நீர் என்ன செய்திருப்பீர். சாட்டையால் விளாசியிருப்பாயோ. அடியாள் வைத்து கூலிக்கு அடிப்பாயோ.

வேலை பார்த்த கூலிக்கு இப்படி பொக்கைக் கலந்து கொடுத்துட்டாங்களே எனக் கண்ணீர் விட்ட அந்த உழுகுடிகளின் கண்ணீரை இறைவன் அறிவானடா. உழுகுடியான எங்கள் கண்ணீரையும், நாங்கள் சிந்திய செந்நீரையும் அறியாத தந்தையா எங்கள் தந்தை.

மண்வெட்டியுடன் பட்டீசுவரனும், நாற்று முடியை கையில் ஏந்திய பச்சைநாயகியும் வயல் வேலைக்குச் செல்வதைப் பார்த்திருக்கிறீர்களா அறிவில் பெரிய தமிழர்களே. எங்கள் தந்தை வயலில் இறங்கி மண் வெட்டுகிறார். எங்கள் அன்பு அம்மாவோ வயலில் இறங்கி நாற்று நடுகிறார். அவள் எங்கள் அம்மா, பச்சையம்மா, அன்னம்மா, பொன்னம்மா, மாரியம்மா, கருமாரியம்மா, தாயம்மா, தங்கம்மா, சிங்கம்மா, தமிழம்மா, தரணிக்கெல்லாம் தலைவியான அம்மா.

சிவனாம் இறைவன் பள்ளர் சாதியில் பிறந்தது எப்படி. தமிழ் நாட்டில் எத்தனையோ உயர்ந்த, உயர்வான, மதிப்பான, வீரமான, மூளையான சாதிகள் இருக்க, சிவன் எதனால் பள்ளனாகப் பிறந்து மண்வெட்டி தூக்குகிறார். தன் அன்பிற்குரிய தலைவியையும் நாற்று நட வைப்பது எதற்கு.

சிவபெருமானை மள்ளராகவும் உமாதேவியை மள்ளியாகவும் தேவேந்திர குலத்தார் கொண்டாடுவது ஏன்?

மழைக்கும், உழவுக்கும் பெயர் பெற்ற இந்திரனுக்கும், மண்வெட்டி தூக்கிக் கொண்டு வயலுக்குப் போகும் சிவனுக்கும் உள்ள உறவென்ன?

இறைவனும் இறைவியும் பள்ளனாய், பள்ளியாய் வயலுக்கு வந்துவிட்டால், பிறர் நிலை என்னாவது. தேவர்களும், கடவுள்களும் மனிதர்போல், அதுவும் சில, பல, பெரிய மூளை, பெருஞ் சொத்து, பெருநில மனிதர் போல், அத்தனை ஆசை, பேராசை இல்லாதவர் போலும். பள்ளனோடும், பள்ளியோடும் அவர்களும் வயல் வேலைக்குக் கிளம்பி விடுகிறார்களாம், வயல் வேலைகளும் செய்கிறார்களாம்.

சீலத்திரு கச்சியப்ப முனவர் அருளிய
"பேரூர்ப் புராணம்" - பாகம் - 3,
19 - பள்ளுப் படலம், பாடல்கள் - 1277 - 1345.

1277 : கயிலை நாயகன் காமரு தன்னுருப்
பயிலு மாடியிற் பார்த்தங் கழைத்தலும்
வெயில்செய் வெங்கதிர் கோடி விராயெனச்
செயிரி லாதமெய்த் தேசொடுந் தோன்றினான்.

1300 : உயர்ந்தவுந் தாமே யிழிந்தவுந் தாமே
யெனமறை யோலமிட் டுரைக்கும்
வியந்ததஞ் செய்கை யிரண்டனு ளொன்று
வேதிய னாகிமுன் காட்டிப்
பயந்தரு மிறைவர் மற்றதுங் காட்டப்
பள்ளனாய்த் திருவிளை யாட்டால்
நயந்தபூம் பணையின் வினைசெய வன்பர்
நண்ணுமு னண்ணின ரம்மா.

1302 : பட்டிநா யகர்தம் மிடம்பிரி யாத
பச்சைநா யகிபள்ளி யாகி
முட்டிலா தழலி னந்தண ருகுக்கு
ழூரியா னூன்களே யூனா
வட்டும்வா ரிழுதே யரியலா வங்க
ணளித்திடு முணவெலா முணவா
விட்டுநாயகர்கைத் தலைக்கலத் தூட்டி
யெழில்வயல் வினைசெய்வா னின்றாள்.

1303 : கடலிடைத் துளபக் கமடமுன் பிடித்த
கயமுகக் கடவுளு மீனின்
தடமுலைச் சுவைப்பால் பருகிய
மணிவேற் சாமியும் பள்ளநற் சிறாராய்
இடனகல் வயலிற் கமடமு மீனு
மெடுத்தெடுத் திரும்பணைப் புறத்துத்
திடரிடத் துறுத்திக் குறுகுறு நடந்து
சிறுவினை யாட்டயர்ந் தனரால்.

1304 : இந்திரன் பிரம னாரணன் முதலா
மிமையவர் நுகமல மேழி
வெந்திறற் கொழுவார் கயிறுகோல் பகடு
வித்துநா றனைத்துமா யங்கு
வந்தனர் பயில வன்கண நாத
ரேவல் செய் மள்ளராய் விரவி
முந்துறும் பட்டிப் பள்ளனை யடுத்துமொழிவழி
வினை தொடங் கினரால் .

1306 : திருமகள் வாணி சசிமுத லான

தேவியர் பள்ளிய ராகி

இருகையி லணிந்த குருகினந் தெழிப்ப

விட்டிடை வருந்தவார் செவியின்

மருவிய தோடு நாலவார் கூந்தன்

மல்கிய தோளின்வீழ்ந் தலைய

உருகெழு பச்சைப் பள்ளியோ டயர்ந்திட்

டொண்முடி நாறுநட் டனரால்.

வேதநாடறிய விழுப்பெரும் பொருளாய் விளங்கிய பட்டி நாயகருக்கு மங்களம்!

சீதவான் முகத்து மரகத மயிலான பச்சை நாயகிக்கு மங்களம்!

**பாததாமரைகள் போற்றி; இணையடிகள் போற்றி!**

போதியம்பலத்தாடுவார் போற்றி!

கோதிலாத நல்தோழர்கள் போற்றி!

அடி யார்? முடி யார்?

அடியை அறிவது யார்?

முடியைத் தெளிவது யார்?

அடியையும் முடியையும் அறியும் குடி எது?

முதலையும் முடிவையும் தெளியும் குலமெது?

கருத்தனுக் காக்குறிட் காமிய கன்மங்

கருத்தைத் திருத்திய∴ துந்தீபற

கதிவழி காண்பிற்கு முந்தீபற.

(பலனில் இச்சையில்லாமல் செய்யும் தர்மங்கள், மனதின் அழுக்கை அகற்றி சித்த சுத்தியைக் கொடுத்து மோட்ச வீட்டை அடைவதற்கான நேர்வழியைக் காட்டும்)

**இரமண சத்குரு தாள் போற்றி!**

புகழே நமச்சிவாயம்
புனிதம் நமச்சிவாயம்
தவமே நமச்சிவாயம்
கருணை நமச்சிவாயம்

அன்பே நமச்சிவாயம்
அருளே நமச்சிவாயம்
கனிவே நமச்சிவாயம்
பரிவே நமச்சிவாயம்

அழகே நமச்சிவாயம்
இனிமை நமச்சிவாயம்
அனலே நமச்சிவாயம்
அழலே நமச்சிவாயம்

கதிரும் நமச்சிவாயம்
சுடரும் நமச்சிவாயம்
குருவே நமச்சிவாயம்
திருவே நமச்சிவாயம்
ஒளியே நமச்சிவாயம்
உணர்வே நமச்சிவாயம்
குளிரே நமச்சிவாயம்

முகிலே நமச்சிவாயம்

பனியும் நமச்சிவாயம்

பருவம் நமச்சிவாயம்

மழையே நமச்சிவாயம்

மலரே நமச்சிவாயம்

நிலவே நமச்சிவாயம்

நினைவே நமச்சிவாயம்

அம்மை நமச்சிவாயம்

அப்பன் நமச்சிவாயம்

நன்மை நமச்சிவாயம்

நாதன் நமச்சிவாயம்

வேதம் நமச்சிவாயம்

பாதம் நமச்சிவாயம்

**அருணாச்சலனே! நின் தாள் சரணம்!**

தென்னாடுடையே சிவனே போற்றி!

விண்ணோர் புகழும் இறைவா போற்றி!

திருப்பெருந்துறை சிவனே போற்றி!

திருவிளையாடல் நாயகனே போற்றி!

பிட்டுக்கு மண் சுமந்த பாதா போற்றி!

நாயன்மார் ஏத்தும் நாதா போற்றி!

கருணைக் கடலான அருணா போற்றி!

மாமலையாளும் சோதி வடிவே போற்றி!

எளியோர் நெஞ்சில் கோவில் கொண்டாய் போற்றி!

ஈடிணை இல்லா அண்ணாமலையே போற்றி!

நிலையெனப் புகழை நிறையத் தந்தாய் போற்றி!

அலையும் மனத்தை அடக்கி வைத்தாய் போற்றி!

பரணிதீபமாய் தரணியில் ஒளிரும் அருணாச்சலம் போற்றி!

அம்மை அப்பனாய் அகிலம் காக்கும் அருணாச்சலம் போற்றி!

**சுந்தரி உண்ணாமுலையுடன் அருள்பாலிக்கும் சுந்தரன்**

**அண்ணாமலைக்கு மங்களம்!!**

# இருடிகேசன்!



**திருவேங்கடவன் திருவடிகள் சரணம்!**

கௌசல்யை மணிவயிற்றில் உதித்தவனே
கண்ணே கற்பகமே எங்கள் கனிவு நிலவானவனே
காலை புண்ணிய பூசைகள் புரிந்திட வேண்டும்
திருப்பள்ளி எழுவாய் ஸ்ரீவேங்கடேசா

திருமலை கண்ட திவ்ய வடிவானவனே
கருடக்கொடி கொண்ட கார்முகில் வண்ணனே
திருவிடம் காத்திடும் தெய்வீகத் திருமாலே
திருப்பள்ளி எழுவாய் ஸ்ரீவேங்கடேசா

திருமாலின் திருமார்பில் உறையும் தாயே
மதுகைடபரை வதைத்தவனின் நாயகியே
அடியார் வேண்டும் வரங்களைத் தருபவளே
அகிலத்தின் தாயே திருப்பள்ளி எழுவாய்

குளுமை விழிகள் கொண்ட கோமளவல்லியே
பாரதி அம்பிகை இந்திராணியாலும்
வணங்கப்படும் சீனிவாசனின் ஆருயிரே
கருணை நிலவே திருப்பள்ளி எழுவாய்

ஈடில்லாத பேரெழில் படைத்தோனே
வர்ணிக்கவே இயலாத தமிழானவனே
எங்கள் இதயமெல்லாம் அமிர்தக் கடலாகிட
திருப்பள்ளி எழுவாய் ஸ்ரீவேங்கடேசா

நான்முகனும் குமரனும் புகழ்ந்திடவே
உன்னை வணங்கிட சப்தரிசிகள் வந்திடவும்
சூரியன் எழுந்திட பிரகஸ்பதியும் போற்றிட
திருப்பள்ளி எழுவாய் ஸ்ரீவேங்கடேசா

இருளதுவும் மெல்ல மறைந்து இளங்காலையில்
இனிமையாய்த் தென்றல் வீசிடவும்
பொன்மலா் இதழ்கள் மலா்வதும் கண்டு
திருப்பள்ளி எழுவாய் ஸ்ரீவேங்கடேசா

முன்னிரவு உனக்களித்த உணவினை உண்டு
பஞ்சவா்ணக் கிளிகளுமே
உன் சரிதம் பாடுவது கேட்டிலையோ
திருப்பள்ளி எழுவாய் ஸ்ரீவேங்கடேசா

கோவிந்தா உன் திருநாமம் குரல் கொடுத்து
கோடியாய் பக்தர்கள் உன்னைக் கண்டிடவே
மனச்சுமை நீங்கப் புனிதப் படிகளில் வருவோர் கண்டு
திருப்பள்ளி எழுவாய் ஸ்ரீவேங்கடேசா

ஆயர்பாடியில் ஆச்சியர் மத்தினால் கடையும் ஓசை
ஆனந்த சாகரனே நீயும் அறியாயோ
அழகுக்கே அழகு ஆன அச்சுதனே
திருப்பள்ளி எழுவாய் ஸ்ரீவேங்கடேசா

வானவரும் உன்னருளைப் பெற்றிடவே
உன் திருச்சன்னதி வந்து நிற்பதும் காண்கிலையோ
கரம் கூப்பி நிற்கும் அஷ்டத்திக் பாலகர்களையும் அறியாயோ
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவெங்கடேசா

பொலிவு நடைதனைக் காணும் ஆவலால்
பெரிய திருவடி போன்றவரும் காத்திருக்க
கருடநடை சிம்ம நடை சார்ப்பநடை நடப்பவனே
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவேங்கடேசா

எல்லா உயிர்களிலும் என்றென்றும் நிலைத்தவனே
பூமலராம் அலர்மேல் மங்கையை நெஞ்சினில் கொண்டவனே
திருமாலே வேங்கடவா சேஷாத்ரி வாசனே
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவேங்கடேசா

அன்பும் அறனும் ஒன்றானவனே
ஆனந்தமே தந்திடும் அருள் நிதியே
பாசமே வடிவான கார்முகலே
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவேங்கடேசா

என்றென்றும் எங்களைக் காப்பவனே
ஏழேழு பிறவிக்கும் துணையானவனே
மேன்மைமிகு உயர் நிலவானவனே
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவேங்கடேசா

வாழ்வே ஞான ஒளியாகிடவே
மகிழ்வே என்றும் நிலைத்திடவே
இன்னருளைப் பொழிந்து நீயும்
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவேங்கடேசா

இன்பமே நாங்கள் கண்டிடவே
இதயமே நின்னைப் போற்றிடவே
கண்ணே மணியே கருமணியே
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவேங்கடேசா

சரணடைந்தோரைக் காப்பவனே
உன் நாமங்கள கூறி அழைத்திடும்
அடியவர்களாம் நாங்கள் மகிழ்வுறவும்
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவேங்கடேசா

கருணைக் கடலான கனிவுத் தெய்வமே
உலகினை எந்நாளும் காக்கும் லெட்சுமிகாந்தனே
பத்மநாபா ஜனார்த்தனா சக்ரபாணி
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவேங்கடேசா

ஒப்பாரும் மிக்காரும் இல்லா உத்தமனே
ஒப்பிலா அப்பனின் பாசமிகு இளையோனே
திருமகள் பூமகளால் பாதம் பற்றப்பட்டவனே
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவேங்கடேசா

மச்ச கூர்ம வராக நரசிம்ம வாமன
பரசுராம ராம பலராம யதுநந்தனா
உலகினைக் காத்திடவே கற்கியாய் வருவோனே
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவேங்கடேசா

அடியார் வேண்டும் வரங்கள் யாவுமே
அள்ளித் தந்திடும் ஸ்ரீவாசுதேவனே
உபநிஷதம் யாவற்றிலும் நிறைந்தவனே
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவேங்கடேசா

எத்துணை தவறுகள் இருந்தாலும் எம்மையே காப்பாய்
அலர்மேல் மங்கை இதயம் கவர்ந்தவனே
மதனா மதுசூதனா எங்கள் வாழ்வு வளம்பெற
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவேங்கடேசா

பொழுது புலர்ந்திட தாமரைகள் மலர்ந்திட
பக்தர்கள் மங்களா சாசனம் செய்திட
அடியவர்க்கு அடியவனான அன்பனே
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவேங்கடேசா

நீயே பரம்பொருள் உன் பாதமே மோட்சமென
மறைகள் போற்றும் பாத கமலத்தை
உன் வலது கரத்தினால் காட்டிடும் வேங்கடவா
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவேங்கடேசா

எம்மையே சரணடைக என சாரதியாகி
பார்த்தனுக்குக் காட்டிய உன் திருவடிகளை
வலது கரம் கொண்டு திருமலையில் காட்டுபவனே
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவேங்கடேசா

நீய் திருக்கண்கள் விழித்ததுமே
முதலில் காண மங்கலப் பொருட்களை ஏந்தியுமே
பிரம்மன் இந்திரன் யோகிகளுமே சன்னதி சமீபம் உள்ளனரே
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவேங்கடேசா

இனிமையென தென்றல் வீசிடவும்
வண்டுகள் சிறகடித்துப் பறந்திடவும்
மென்மலர்கள் மலர்வது கண்டு
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவேங்கடேசா

திருமகள் அணைப்பில் இன்பம் காணும் இனியவனே
நீய் கண்விழிப்பதை அன்னையுமே விரும்புவாரோ
அன்புக் கடலாம் விந்தனே கோவிந்தனே
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவேங்கடேசா

ஏழுமலைகளைக் கண்ட ஏழுமலையோனே
ஆறுகுணங்களைக் கடக்கச் செய்பவனே
ஆற்றாமை தீர்த்திடும் அருளானவனே
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவேங்கடேசா

கன்னங்கள் இரண்டும் குழைபவனே
எண்ணங்கள் யாவிலும் நிறைந்தவனே
புன்னகை உதித்திடும் புண்ணியனே
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவேங்கடேசா

வேதங்களின் உட்பொருள் ஆனவனே
வேண்டியது யாவும் தருபவனே
வாய்மை வடிவம் கொண்டவனே
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவேங்கடேசா

சகல உண்மையிலும் சுடரொளியாய் ஒளிர்பவனே
மெய்யடியார்கள் தொண்டனான திருவேங்கடவா
ஏழுமலை வாழ் எங்கள் இனிய சீனிவாசனே
திருப்பள்ளி யெழுவாய் ஸ்ரீவேங்கடேசா

உன் திருப்பார்வை பட்டோர் யாவரும்
அஷ்ட யோகம் அடைவது மெய்யே
உன் திருக்கருணை கிடைத்தால் போதும்
அஷ்டயோகம் பெறுவதும் உண்மையே

உன் திருநாமம் உச்சரிக்கும் குடும்பமெல்லாம்
அஷ்டலெட்சுமி அருள் பொலிவாள்
உன் திருப்பாதம் சரணடைந்தால்
அதுவே தான் வைகுந்தமாகும்

திருமகள் மார்பின் குங்குமத்தால்
செந்நிறமான அன்புக் கண்ணா
உலகின் தெய்வமாம் வேங்கடவா
வெற்றி வெற்றி உனக்கேதான்

நான்முகன் சிவன் போன்றோரும்
உன்னை சிரசினில் வைத்துப் போற்றிடவும்
சரணடை வோர்க்கு அருள் புரிவாய்
திருமலைத் தெய்வமே காத்திடுக

உன்னையன்றி வேறு தெய்வமில்லை
உன்னையே என்றும் புகழ்ந்திடுவோம்
வேங்கடவா எங்களைக் காத்திடுக
வெற்றியை யாவிலும் தந்திடுக

உன் திருவடி தாமரை காணவுமே
நெடுவழி கடந்து உனை அடைந்தோம்
உன்பாத கமலமே நாளும் கண்டிட
அருளினால் பொழிக வேங்கடவா

உலகின் தலைவியாம் வேங்கடவன் துணைவியே
தாமரை மலர்க் கரத்தாளே
பாசம் என்ற பூரண நிலவானவாளே
யாவர்க்கும் தாயான திருமகளே
உனை வணங்குகிறோம் அம்மா.

திருமகள் நினைவாகி கனிவுக் கடலானவனே
எல்லா உயிர்களிலும் நிலைத்துள்ளவனே
யாவும் அறிந்த துணிவு மிக்கானே
நல்லவர் இதயமான பாரிஜாத மலரானவனே
ஸ்ரீவேங்கடேசா நின் மலரடி சரணம்.

திருவடிகளை மலர்களால் அர்ச்சித்திடவும்
மலர்களுக்கு சுகங்கள் தரும் பாதங்கள் உடையவனே
தினமே வணங்கும் மனதிற்கு சுகம் தந்திடுமே
கண்களுக்கு ஆனந்தம் தந்திடும்
ஸ்ரீவேங்கடேசா நின் மலரடி சரணம்.

விடியலில் மலரும் தாமரை மலர்கள்
உன்பாத கமலங்களுக்கு இணையாமோ
பொலிவு தாமரைத் திருவடிகளுடன் கூடிய
ஸ்ரீவேங்கடேசா உன் மலரடி சரணம்.

திருமகள் பூமகள் நப்பின்னையும்
உன் பாத கமலங்கள் பற்றிடவும்
கரங்களின் சிவப்பு பாதங்களில் கண்ட
ஸ்ரீவேங்கடேசா உன் மலரடி சரணம்.

அளவற்ற மலர்களை திருவடிகள் கண்டிடவும்
உன் தொடர்பால் வாடாமல் உள்ளனவே
நின் மலரடிகள் திருமலைக்கு ஆபரணங்களே

ஸ்ரீவேங்கடவா உன் மலரடி சரணம்.

சம்சாரக் கடலைத் தாண்டிடவே

கரம் அருளும் திருமலை வாசனே

வேங்கடவா குறையில்லாத கோவிந்தா

உனக்குச் செய்யும் தொண்டே பேரின்பமே.

திருமலையில் திருக்கோவில் கொண்டு

ஸ்ரீநிவாசனாய்க் காட்சியே தந்து

குறைகள் யாவும் நீக்கிடும்

ஸ்ரீவேங்கடேசனுக்கு மங்களம்!

திருமகளுடன் இணைந்தவனாகி

அழகிய வதனங்கள் கொண்டவனாகி

தெய்வமாகவே வந்து காத்திடும்

ஸ்ரீவேங்கடேசனுக்கு மங்களம்!

திருமலைக்கு பொலிவு தந்து

திருவுக்கே திருவேயாகி

தாயுள்ளம் கொண்டவனான

ஸ்ரீவேங்கடேசனுக்கு மங்களம்!

நித்ய கல்யாண வடிவினனாகி

இளமைத் தென்றலாகவே வீசி

இதயமதில் களிப்புத் தந்திடும்

ஸ்ரீவேங்கடேசனுக்கு மங்களம்!

சகல பேரெழில் கொண்டவனாகி
எவரையும் மோகிக்கச் செய்திடும்
தோசமேயற்ற ஸ்ரீநிவாசனாம்
ஸ்ரீவேங்கடேசனுக்கு மங்களம்!

அழிவே அற்றவனாகி
குற்றமே இல்லாதவனாகி
ஞானவே வடிவானவன் ஆன
ஸ்ரீவேங்கடேசனுக்கு மங்களம்!

பரப்பிரம்மன் என்ற வாக்கினனாகி
மனதுக்குள் ஸ்ரீநிவாசனாகி
அணுவையும் அசையாமல் செய்யும்
ஸ்ரீவேங்கடேசனுக்கு மங்களம்!

கோவிந்தா என்ற குரலைக் கேட்டு
கோலாகல வாழ்வினை அளிக்கும்
குணக் குன்றமேயான
ஸ்ரீவேங்கடேசனுக்கு மங்களம்!

கரங்களால் புவனமே காத்து
நன்மைகளை நாளெல்லாம் நல்கி
அறவோர் நெஞ்சமேயான
ஸ்ரீவேங்கடேசனுக்கு மங்களம்!

யாவுமே அறிந்தவனாகி

யாவற்றுக்குமே காரணனாகி

யாகத்தின் புனிதமேயான

ஸ்ரீவேங்கடேசனுக்கு மங்களம்!

வைகுந்தம் தனையே விட்டு

திருமலை திருப்பதியை அடைந்து

கருணா மூர்த்தியாய் விளங்கும்

ஸ்ரீவேங்கடேசனுக்கு மங்களம்!

பூவுலகை இரட்சிக்கும் பரம்பொருளான

மணவாள மாமுனி போன்ற அறவோர் நெஞ்சம் நிலைத்தவனான

திருமலைத் தெய்வமாம் ஸ்ரீவேங்கடேசா! ஸ்ரீகோவிந்தா! ஏழுமலையானே!

**உனக்கு ஜெய மங்களம்! சுப மங்களம்!!**

**எந்தைக்கு என்றும் மங்களங்கள் நிறையட்டும்..**

கருட கமன கருடத்வஜ

னரஹரி னமோனமோ னமோ!

கமலாபதி கமலனாபா

கமலஜ ஜன்மகாரணிக

கமலனயன கமலாப்தகுல

னமோனமோ ஹரி னமோ னமோ!

ஜலதி பம்தன ஜலதிஸயன

ஜலனிதி மத்ய ஜம்துகல

ஜலதிஜாமாத ஜலதிகம்பீர

ஹலதர னமோ ஹரி னமோ!

கனதிவ்யரூப கனமஹிமாம்க

கனகனா கனகாய வர்ண

அனக ஸ்ரீவேம்கடாபதிபதேஹம்

னமோ னமோஹரி னமோ னமோ!

**கருடத்வஜ!!**

தேவேந்திர குலத்தாரே! வடவேங்கடத்தின் புகழ்கொண்ட நம் ஆயர் தந்தை திருக்கண் மலர்வது எதற்காக? யாருக்காக? நம் ஆராவமுதுத் தந்தை திருப்பள்ளியெழுச்சி கொண்டால் என்ன நிகழும், என்னவெல்லாம் நடக்கும்.

நடக்கும் அனைத்தும் அவன் நடத்தும் நாடகமல்லவா. ஏதோ ஒரு பெரிய திட்டம் வைத்திருக்கிறார் நம் அன்புத் தந்தை. மனிதர் இதுவரை நினைத்தே பார்த்திராத பெருந்திட்டங்கள் வைத்திருப்பார்போல் தெரிகிறது. அவரோடு சேர்ந்துகொண்டு இந்திரனும், சிவனும், பிரம்மனும் நாடகமாடுகிறார்கள். இவர்கள் உலகின் உயிர்களையெல்லாம் கடைத்தேற்ற எண்ணம் கொண்டுள்ளனர் என்பது தெளிவு. அதை நோக்கியே உலகை நடத்தி வந்திருக்கிறார்கள்.

சதுர்யுகங்கள் குறித்து நாம் சிந்திக்க வேண்டும். உலக வாழ்க்கையை சக்கரமாக உருவகித்து அதனுள் மாட்டிக் கொண்டால் வெளிவர முடியாதே எனும் எண்ணமே மனிதரை மோட்சம் நோக்கி, முக்தி நோக்கி எண்ணத் தூண்டியிருக்கிறது, ஆயினும் வைணவம் ஒரு யுகத்தை நான்கு காலமாக, நான்கு யுகங்களாகப் பிரித்துப் பார்க்கிறது. நான்காவதற்குப்பின் முதலாவது சத்ய யுகம் தோன்றுமெனில், மறுபடியும் காலச்சுழற்சிதானே, காலச்சக்கரம்தானே எனில்,

அதுதான் இல்லை. இது புது யுகம். இங்கே பழைய யுகத்தின் மனிதர்கள் பிறப்பதில்லை. புதிய மனிதர்கள், புதிய வாழ்க்கை, புதிய தேடல்கள், புதிய வழிகள், புதிய உண்மைகள். தற்போதைய மனிதர் வந்த பாதையிலேயேதான் அவர்களும் பயணிக்க வேண்டுமென்பதில்லையல்லவா. புதுப்பாதையைத் தேர்ந்தெடுக்கலாமல்லவா.

அவர்களின் பாதையை, பயணத்தைத் தீர்மானிப்பது யார்? நம் பாதையை எவர் தீர்மானித்தாரோ அவரேதான் அவர்கள் பாதையையும் தீர்மானிக்கப் போகிறார். எனினும் அது புதுப்பாதை, உறுதியாக. மனிதருக்குத் தெரியாத எத்தனை எத்தனையே இரகசியங்கள், மறைகள் அகிலத்திலுள்ளன. மனிதர் தெரிந்திருப்பதெல்லாம் மிகமிகச் சொற்பம் எனில் மிகையாகாது. இதற்கே மனிதர் இந்த ஆட்டம் ஆடுகிறார். அனைத்தையும் அறிந்தால்?

காரணத்தோடே நமது குலத்தார் சிவனையும் விஷ்ணுவையும் வழிபடும்படி நடத்தி வரப்பட்டிருக்கிறார்கள். ஒருவர் மண்ணுலகம் எனில் அவர் விண்ணுலகம். நாம் மண்ணையும் விண்ணையும் அறியும் பொருட்டே அவ்வாறு வழிநடத்தப்பட்டு வந்திருக்கிறோம். நாம் அடியும் முடியும் அறிய வேண்டுமென்பது அவர்களது திட்டம்.

நாம் உலகை அளப்பவர்கள். எப்போதும் அடியையும் முடியையும் அறிந்தே உலகை அளக்கிறோம். ஏனெனில் அடியாகவும் முடியாகவும் இருப்பவர் எவரோ அவரே தான் அளக்கவும் செய்கிறார்.

அனைத்திற்கும், எல்லாவற்றிலும் கணக்கும் அளவும் உண்டல்லவா. அளவு தெரிந்தால்தானே அதை மேலும் உயர்த்த முடியும். நாம் அடியும் முடியும் கண்டால் உலகை மேலும் விரிவாக்குவோம், பெரிதாக்குவோம். ஏனெனில் இது நம் உலகம், நம் தந்தையர். நம் தந்தையர் நமக்கு வழிவிடாமல் வேறு யாருக்கு வழிவிடுவார்கள். நமது வெற்றி தந்தையர் வெற்றியல்லவா.. நாம் உலகை அளப்பது உறுதியாக அதை இன்னும் பெரிதாக்கவே. நாம் உலகை அளந்தால்தான் உலகம் எல்லோருக்குமானதாக இருக்கும். உலகம் அனைவருக்குமானதாக இருக்கும். பிறர் அளந்தால்? முடியுமா?

உலகனைத்தையும் யார் சொத்தாகக் கொண்டிருக்கிறாரோ, உலகம் யாருக்குச் சொந்தமானதோ, அவரால் மட்டுமே இவ்வுலகை அளக்க முடியும்.

அவரும் கூட ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விதத்திலேயே அளக்கிறார் என்பது திண்ணம்.

நமது பெருந்தந்தை ஈரடிகளால் உலகை அளந்தார். அதை மனிதர் கதையெனக் கொண்டு விட்டார். புராணவரலாறு என நினைத்து விட்டார். நமது தந்தை அளந்ததற்கு சான்றுகளை யாம் வெளியிட்டிருக்கிறோம். அவை சான்று மட்டுமல்ல, யாமும் உலகை அளந்தோம் எனவும் வைத்துக் கொள்ளலாம். எனில் இது புதுவகையிலான உலகளத்தல் ஆகுமல்லவா. காலையே தூக்காமல், இருந்த இடத்திலிருந்தே, இங்கிருந்துகொண்டே உலகனைத்தையும் அளப்பது மனித மனதிற்கு எட்டாத ஒன்றுதான் இது. எனினும் கற்றிருக்கிறாரல்லவா, என்ன சொல்கிறார் எனப் பார்க்கலாம்.

உலகத்தாரால் மறுக்க முடியுமா தேவேந்திர குலத்தாரே. இதற்கு முன்பும் நாம்தான் அளந்தோம். இனியும் நாம்தான் அளப்போம். ஓங்கி உலகளந்த உத்தமன் நம் தந்தையல்லவா.. எல்லாப் புகழும் நம் தந்தைக்கல்லவா. நம் தந்தையால் ஆகாததெது? எப்போதும் நம் தந்தை அளந்து பார்த்து, அறிந்து, தெளிந்து, உணர்ந்து, அறிவால், ஞானத்தால், நெடிதுயர்ந்து நிற்கும் இவ்வுலகை அளக்கிறார், மேலும் மேலுமென உயர்த்துகிறார்..

குடும்பன், பள்ளன், மூப்பன் பற்றி விளக்கத் தேவையில்லை. காலாடி, பன்னாடி பொருள் நிறைந்த பெயர்கள். கடையன் யார்? கடையன் - கடைசியானவன், வரிசையில் கடைசியில் இருப்பவன். படிநிலையில் கடைசியில் இருப்பவன். உழுகுடி வார்த்தையில் சொன்னால் கடைமடைக்காரன்.

கடையர் - உழவுக் குடிகள், வேளாண் மக்கள், மருதநிலத்தார், வாயிற் காப்போர், பள்ளருள் ஒரு வகுப்பார்.

கடையன் - கடைசியன் - இறுதியன். நிரையில், வரிசையில், படியில், படிநிலையில் இறுதியானவன்.

யாரவன்? இறுதியில் வருபவன் யார்? அவன் பெயர் என்ன?

ஆழ்வார்கள் அழகாகப் பாடுகிறார்கள். கற்கியாய் முடிப்பான். எதை? துன்பங்களை. மனிதர்படும் துன்பங்களை, துயரங்களை, உயிர்களின்

வேதனைகளை முடிப்பான். அவன்தானே நிரையில் கடையன் தேவேந்திர குலத்தாரே.

நம் காலத்தின் ஆதியும் அந்தமும் யார். அந்தம் வேளாண்குடி எனில், கடையன் எனில், ஆதி யாராக இருக்க முடியும்?

மச்சன் யார்? மீனன் யார்? மீன் யார்? பண்டு யார்? பாண்டி யார்? பாண்டையோன் எவன்? பாண்டியன் எக்குலத்தான்?

உலகின் ஆதியும் அந்தமும், தொடக்கமும் முடிவும், அடியும் முடியும் யார்?

உயிரின் ஆதியும், அந்தமும், மூலமும், முடிவும் யார்?

நிரையில் அடி முதல் உயிரி எனில், முடி மனிதனல்லவா. இடையில் தற்போதைய கணக்குப்படி எத்தனை படிநிலைகள் உள்ளன? விலங்கியல் பேராசிரியர் எனும் முறையில் விலங்குகளை, அவற்றின் படிநிலையை யாம் நன்றாகவே அறிவோம்.

வைரசு எதிலும் சேர்ப்பில்லை. உயிருள்ளதா அற்றதா - விவாதம் நீள்கிறது. தொடக்கம் பாக்டீரியாவா எனில், அவை மிக எளிய அமைப்பு. அவற்றைவிட புரோட்டேசோவா - முதல்நிலை விலங்குகள் சற்றே சிறப்படைந்துள்ளன. எனில், அவையே அடி. முடி - மனிதன். மனிதனுக்கு மேலே?

எதனால் மனிதன் முடி? மேலும் மேலுமென போய்க்கொண்டே இருக்க வேண்டியதுதானே. ஏன் கற்கியோடு முடிகிறது? ஏன் அதன் பின்னரும் பதினொன்னாவது அவதாரம், பன்னிரெண்டாவது அவதாரம் எனச் சுட்டவில்லை? நமது பெரும்புகழுக்குரிய ஆழ்வார்கள் கற்கியாய்க் கதை முடிப்பான் என்றது எதனால்?

எல்லாவற்றிற்கும் காரணமிருக்கிறது. உலகத்தை சூட்சும உலகமென்கிறார்கள். மிகவும் சூட்சுமமானது உலகம். ஏனெனில் அதை இயக்குபவன் பெரிய சூத்ரதாரி, சூட்சுமக்காரன், மாயக்காரன், மதிக்காரன், மாயன், மாயவன், மாதவன்.

பள்ளன் என்பதைத் தாழ்வாக நினைக்கிறார். கடையன் எனில் குறைவாக நினைக்கிறார். தாழ்வும் உயர்வும் யாராலே. சூத்ரதாரி நினைத்தால் தாழ்வானவரை உயர்வானவராக்க இயலும். அவனால் கடையனை முதல்வனாக்க முடியும். தம்மை மிக உயர்ந்தவனாகக் கருதிக் கொள்பவனை கடையனிலும் கடையனாக்க அவனால் இயலும்.

அவனால் இயலாததென எதுவுமில்லை.

முன்னர் மள்ளர் எனச் சுட்டப்பட்டவர் பள்ளரே எனப் பல்வேறு இலக்கியச் சான்றுகளோடு நிறுவப்பட்டு விட்டது. இருப்பினும் தூக்கத்திலிருந்து சட்டென விழித்ததுபோல் சில குடிகள் மள்ளர் என்பது தாங்களே, தங்களைத்தான் குறிக்கிறது என்கிறார். எழுதவும் செய்கிறார். நீர் மள்ளர் என்கிறீரே, அவ்வாறெனில் நீர் பள்ளரா எனக் கேட்டால் இல்லையாம். பள்ளர் இழிவானதாம். மள்ளர்? வீரர், பெருவீரரின் பெயராம்.

இலக்கியங்கள், நிகண்டுகள் மள்ளர் எனும் பெயரை எவ்விடத்தில், எங்கே பயன்படுத்துகின்றன என்பதை, மள்ளர் பெயருக்கு ஆசைப்படும் சில குடிகள் அறிந்திருக்கிறாரா எனில் சுத்தமாக இல்லை. எந்த ஒன்றையும் படிக்காமல், எது குறித்தும் சிந்திக்காமல் பேசுகிறார், எழுதுகிறார். அனைத்தும் வேண்டுமென்றே செய்யப்படுபவை, இட்டுக்கட்டிப் பரப்பப்படுபவை.

மள்ளர் யார்? பள்ளு இலக்கியங்கள் தெளிவாகச் சொல்லிவிட்டன. பேரூர் புராணம் மள்ளரே பள்ளர் என்கிறது. வேறென்ன சான்று வேண்டும்.

கம்பனை இவர்கள் அறிந்திருக்கிறார்களா என்பதே ஐயமாக உள்ளது. தமிழில் கம்பராமாயணம் என்றொரு காவியம் இயற்றப்பட்டிருப்பதாவது தெரியுமோ தெரியாதோ. கம்பன் எத்தனை பாடல்களில், எப்படியெல்லாம் மள்ளரான உழவுக் குடிகளைச் சிறப்பித்துப் பாடுகிறார் எனப் பாருங்கள்.

பாரும், வேளாளர் யார், மள்ளர் யார், மருத நிலமெது என்பதை பெரும் புகழ்கொண்ட கவிச்சக்கரவர்த்தியான கம்பனில் காணும்.

## இராமாவதாரம் (கம்பராமாயணம்)

பால காண்டம்

2. நாட்டுப் படலம்

### கோசல நாட்டு வளம்

வரம்பெலாம் முத்தம் தத்தும் மடையெலாம் பணில மாநீர்க்
குரம்பெலாம் செம்பொன் மேதிக் குழியெலாம் கழுநீர்க் கொள்ளை
பரம்பெலாம் பவளம் சாலிப் பரப்பெலாம் அன்னம் பாங்கர்க்
கரும்பெலாம் செந்தேன் சந்தக் காவெலாம் களிவண்டு ஈட்டம் (பாடல் - 2)

### மருத நில வளம்

ஆறு பாய் அரவம் மள்ளர் அலை பாய் அமலை ஆலைச்
சாறு பாய் ஓதை வேலைச் சங்கின் வாய்ப் பொங்கும் ஓசை
ஏறு பாய் தாமரம் நீரில் எருமை பாய் துழனி இன்ன
மாறு மாறு ஆகி தம்மில் மயங்கும்மா மருத வேலி (பாடல் - 3)

நீரிடை உறங்கும் சங்கம் நிழலிடை யுறங்கும் மேதி
தாரிடை உறங்கும் வண்டு தாமரை உறங்கும் செய்யாள்
தூரிடை யுறங்கும் ஆமை துறையிடை யுறங்கும் இப்பி
போரிடை யுறங்கும் சங்கம் பொழிலிடை யுறங்கும் தோகை (பாடல் - 6)

படை உழ எழுந்த பொன்னும் பனிலங்கள் உதிர்த்த முத்தும்
இடறிய பரம்பில் காந்தும் இன மணித் தொகையும் நெல்லின்
மிடை பசுங்கதிரும் மீனும் மென் தழைக் கரும்பும் வண்டும்
கடைசியர் முகமும் போதும் கண்மலர்ந்து ஒளிரும் மதோ (பாடல் - 7)

## மருத மக்கள் எத்தகையவர்

பொருந்திய மகளிரோடு வதுவையிற் பொருந்துவாரும்
பருந்தொடு நிழல் சென்றன்ன இயல் இசைப் பயன் துய்ப்பாரும்
மருந்தினும் இனிய கேள்வி செவியுற மாந்துவாரும்
விருந்தினர் முகம் கண்டன்ன விழா அணிவிரும்புவாரும் (பாடல் - 15)

முள்ளரை முளரி வெள்ளை முளையிற முத்தும் பொன்னும்
தள்ளுற மணிகள் சிந்த சலஞ்சலம் புலம்பச் சாலில்
துள்ளிமீன் துடிப்ப ஆமை தலைபுடை சுரிப்பத் தூம்பின்
உள் வரால் ஒளிப்ப மள்ளர் உழுபகடு உரப்பு வாரும் (பாடல் - 18)

## வளம் பல பெருக்கி, மள்ளர் விருந்தோடு மகிழ்ந்திருத்தல்

எறிதரும் அரியின் சும்மை எடுத்தவான் இட்ட போர்கள்
குறிகொளும் போத்திற் கொல்வார் கொன்றநெற் குவைகள் செய்வார்
வறியவர்க்கு உதவி மிக்க விருந்துண மனையின் உய்ப்பான்;
நெறிகளும் புதையப் பண்டி நிறைத்து மண் நெளிய ஊர்வார் (பாடல் - 20)

கதிர்படு வயிலின் உள்ள கடிகமழ் பொழிலின் உள்ள,
முதிர்பல மரத்தின் உள்ள முதிரைகள் புறவின் உள்ள
பதிபடு கொடியின் உள்ள படிவளர் குழியின் உள்ள
மதுவள மலரிற் கொள்ளும் வண்டென மள்ளர் கொள்வார் (பாடல் -21)

## செல்வச் செழிப்பு

முட்டு இல் அட்டில் முழங்குற வாக்கிய
நெட்டுலைக் கழுநீர் நெடு நீத்தம் தான்
பட்ட மென் கமுகு ஓங்கு படப்பை போய்
நட்ட செந்நெல்லின் நாறு வளர்க்குமே (பாடல் - 26)

தோயும் வெண்தயிர் மத்தொலி துள்ளவும்
ஆய் வெள்வளை வாய்விட்டு அரற்றவும்
தேயு நுண்ணிடை சென்று வணங்கவும்
ஆயர் மங்கையர் அங்கை வருந்துவார் (பாடல் - 28)

## ஈகையும் விருந்தும்

பெருந் தடங்கண் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே (பாடல் - 36)

## நல்லவற்றின் நலனும் தீயன செய்யாமையும்

கூற்றம் இல்லையொர் குற்றம் இலாமையால்
சீற்றம் இல்லை தம் சிந்தையின் செம்மையால்
ஆற்ற நல்லறம் அல்லது இலாமையால்
ஏற்றம் அன்றி இழிதகவு இல்லையே (பாடல் - 39)

மருத நிலத்தாருக்கு, மள்ளருக்கு (என்றென்றும்) ஏற்றம் தானாம். இழிதகவு (ஓருபோதும்) இல்லையாம். கம்பனை மறுப்பார் உளரோ.

**உழவருக்கு, மள்ளருக்கு எத்தனை ஏற்றம் பார்த்தீரோ!**

**நம் நாச்சியர் பாடலைக் கேட்டீரோ.**

ஆழிமழைக் கண்ணா! ஒன்று நீகைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்து கொடுஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம் போல் மெய்கறுத்து
பாழியத் தோளுடைய பத்மநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய் - ( திருப்பாவை - 4).

நம் வீரத்தந்தையின் சார்ங்கமெனும் வில்லிலிருந்து சீறிக்கிளம்பும் அம்புகள்போல் உலகில் மழைபெய்ய வேண்டுமாம். நாம் மார்கழி நீராட நாச்சியாருக்குத்தான் எத்தனை ஆசை, அக்கறை. நம் அன்னையல்லவா.. இருக்காதே பின்னே. நம் ஆண்டாள் அம்மாவின் சொல் என்றும் எங்கும் நிறைவேறும் என்பது திண்ணம்.

வேளாளர் யார்? உழுபவரே வேளாளர். தொல்காப்பியம் எடுத்துரைக்கிறது, கம்பன் எடுத்துரைக்கிறான், பள்ளுப் பாடல்கள் சுட்டுகின்றன. எனில் வேளாளர் யார்? வெள்ளாளர் யார்? அத்தனை சாதிச் சான்றுகளும் வெள்ளாளர் எனவேதான் உள்ளன. வேளாளர் என்பது சாதியா, தொழிலா? சாதி எனில் அது எவர்க்குரியது? தொழிலெனில் யாருடையது? விவாதத்திற்கும் கூப்பிடுகிறார். எத்தனை பேர் வேண்டுமானாலும் வந்து பாரும் என்கிறார்.

இடையன் வரமாட்டான் என இறுமாப்பா? கடையன் வந்து என்ன செய்துவிடுவான் எனும் நினைப்பா?

வேளாளர் யார்? வேந்தர் யார்? வேளாளகுல வேந்தர் யார்? மீசை வைத்திருப்பவரெல்லாம் ஆணல்ல. மீசையை முறுக்கிக் காட்டுபவனெல்லாம் வீரனல்ல.

பெண்ணைப் பழித்தால் என்னாகும்? இராமாயணத்தையும், மகாபாரதத்தையும் நினைத்துப் பார்ப்பது நல்லது. சிலப்பதிகாரத்தையும், மணி மேகலையையும் நினைவில் கொள்வதும் நன்று.

திருவடியால் அகலிகைக்கு சாபம் தீர்த்தவன்.

திருக்கரத்தால் திரௌபதியின் மானம் காத்தவன்.

நெஞ்சில் கொண்டவர் ஒருவர், இடப்பாகம் கொண்டவர் ஒருவர், நாவில் கொண்டவர் ஒருவர். மனிதர் அறியவில்லையா.

அறிந்துமா பெண்ணைத் தூற்றுகிறது மூடர் கூட்டம்.

வேந்தன் யார்? வேந்து, வேந்தன் எனில் அது மருத நிலத்தானையேச் சுட்டும். தமிழிலக்கியங்கள் அறிந்த யாவரும் ஒப்புவர். மண்ணை ஆள்பவன் வேந்தன். அவன் மண்ணுலகின் வேந்தன் எனில், விண்ணை ஆள்பவன் விண்ணுலகின் வேந்தன். மண்ணுலகில் வாழ்பவர் மண்ணவர், மனிதர். விண்ணுலகில் விண்ணவர், தேவர்.

மண்ணை ஆள்பவன், மண்ணவர் தலைவன் மண்ணன். அது மன்னன் என வழங்கப்படுகிறது. மன்னன் சிறுநிலத்தை, சிறுநிலப்பகுதியை ஆள்பவன். அவன் அரசன். வேந்தன் பெருநிலத்தை ஆள்பவன், பேரரசன், சக்ரவர்த்தி. வேந்தர் மரபெனில் பெருநிலத்தை ஆண்டவர் என்பதே பொருள்.

தமிழ் மரபு மூவேந்தர் மரபு. மூன்று பெருநில மன்னர்கள். தமிழகத்தை ஆட்சி புரிந்த வேந்தர்கள் சேர, சோழ, பாண்டியர். அவ்வாறே பூமியின் வரலாற்றில் ஏராளமான வேந்தர்கள் இடம் பெற்றுள்ளனர். எனில் ஒட்டுமொத்த பூமியையும் யாரேனும் ஆட்சி புரிந்திருக்கிறரா எனில் முயன்றார்கள். எனினும் அது

நிகழவில்லை. அலெக்சாந்தர், நெப்போலியன் போன்றோர் முயன்றதுண்டு. இதுவரைக்கும் ஒட்டுமொத்த பூமியும், ஒரு தலைவரின் கீழ், ஒரு அரசரின் கீழ் இருந்ததாக இல்லை.

ஒட்டுமொத்த பூமிக்கும் ஒரு அரசர் இருப்பாரேயானால் அவருக்கு மனு என்று பெயர். வேறு விதத்தில் சொல்வதால் உலகின் முதலாவது மனிதருக்கு மனு எனப் பெயர். அவரிலிருந்தே மனிதர் பல்கிப் பெருகினர் என்பது மதங்களின் நம்பிக்கை. எனில் அவரே முதல் மனு. அவர் தொடங்கி ஏராளமான மனிதர்கள் பூமியை ஆட்சி செலுத்தியுள்ளனர். ஒரு மனுவின் காலம் ஒரு மனுவந்தரம்.

முதல் மனு தொடங்கி மனிதர் பல்கிப் பெருகி, ஆண்டு, நீண்டு, மானுட வாழ்க்கையின் இறுதியில் வருபவர் கடைசி மனு. முதல் மனுவுக்கும் கடைசி மனுவுக்குமான காலமே ஒரு கல்பம், கற்பம்.

முதல் மனுவுக்கும் கடைசி மனுவுக்கும் இடைப்பட்ட காலத்தில் பல மனுக்கள் பிறந்து மனிதர்களின் வாழ்க்கையை மேலே உயர்த்துகின்றனர். மனிதரின் நல்வாழ்விற்கு வேண்டிய சட்ட திட்டங்களை வகுக்கின்றனர். மானுட வாழ்வு எதை நோக்கிப் பயணிக்க வேண்டுமெனத் திட்டமிடுகின்றனர். மனுக்களின் ஒரே நோக்கம் மானுடத்தை மேலேற்றுவது. மானுடத்தை அடுத்தநிலை நோக்கி நகர்த்துவது. உண்மையில் இதைச் செய்வது, அதாவது மானுடத்தை மேலே உயர்த்துவது தேவர்களின் பணி, பொறுப்பு, கடமை. எனில் தேவர்களே, தெய்வங்களே பூவுலகில் மனுக்களாகப் பிறந்து மானுட குலத்தை மேலேற்றுகின்றனர். எனில் அவர்கள் செய்வது போற்றுதலுக்குரிய பணியன்றோ.

அதனால்தான் வேந்தர்கள் இறையாக, கடவுளாகக் கருதப்பட்டு மக்களால் வணங்கப்பட்டிருக்கின்றனர். அரசனும் தெய்வமும் ஒன்று என்றது அதனாலேயே. தமிழ் மரபில் மனு என்பதைத்தான் வேந்தர் என்கிறோம். உண்மையில் மனு என்பது ஒட்டுமொத்த நிலத்திற்கும் அரசர், மேன்மையானவர் எனப் பொருள் சுட்டப்பட்டாலும், பெருநிலத்தின் ஒரு பகுதியை ஆள்பவருக்கும் அத்தகையதொரு பெருமை கொடுக்கப்பட்டே வந்திருக்கிறது.

எனில் மண்ணின் தெய்வம் வேந்தன், இந்திரன். எதனால் இந்திரன்? இந்திரனே வேந்தனாகப் பிறக்கிறான் அதாவது இந்திரனின் சார்பாகவே அவர்

மண்ணை ஆள்கிறார். மண்ணை ஆளும் அவர் பூத்தேவர், பூலோகத் தேவர், பூலோகராயர், பூபாளராயர், புவிக் காவலர்.

அரசன் என்பவனே காவலன்தானே. குடிகளைக் காப்பவன் அரசன், வேந்தன். தேவர்களைக் காப்பவன் தேவேந்தன்.

எனில் மண்ணவர் கோனும், விண்ணவர் கோனும் ஒருவரே. அவர் இந்திரன். மண்ணை ஆளும் இந்திரன் வேந்தன், விண்ணை ஆளும் இந்திரன் தேவேந்தன், ஐந்து இந்திரியங்களை ஆளும் இந்திரன் ஐந்திரன்.

மானுடரை தேவர்களாக்குவது தேவேந்திரன் கடமை. அதற்காகவே வேதங்கள் தோன்றின.

எனில் மானுடரைப் படைப்பவன் யார்? மனுவை, முதல் மனுவைப் படைப்பவன் யார்?

இந்திரன் என்பவன் காவலன், அரசன், வேந்தன், தலைவன். அவன் படைக்கிறானா எனில் இல்லை என்பதே பதில்.

படைப்பது பிரம்மன். முதல் மனுவைப் படைப்பது பிரம்மன். புராணங்களின்படி, பிரம்மன் தன்னைப் போன்ற உருவத்திலேயே முதல் மனிதனைப் படைக்கிறான். எல்லாமே ஒன்று போலவே. குயவன் மண்ணை எடுத்து பானையைச் செய்கிறான். பிரம்மனோ மண்ணிலிருந்து தன்னைப் போலவே ஒரு மனிதனைப் படைக்கிறான். முதல் மனிதனிலிருந்து அவனுக்குத் துணையாக முதல் பெண்ணையும் படைக்கிறான். அவர்களே மனுவர்க்கத்தில் முதலாவது மானுடர்கள். பிரம்மன் மண்ணிலிருந்து முதல் மனுவைப் படைப்பதாக மேற்கின் மதங்கள் சுட்டுகின்றன.

பிரம்மன் அவனே படைக்கிறானா எனில் இல்லையாம். ஆழ்வார்கள் பாடுகின்றனர் - அந்த ஞானத்தை அளிப்பது அவனது தந்தையாம் நாராயணன்.

அவர்களுக்கு பிரமன் பெயரிட்டானா எனத் தெரியவில்லை. மனிதர் அவர்கள்தான் முதலாவது பெற்றோர், முதல் தகப்பனும் தாயும் எனும் பொருளில் ஆதாம், ஏவாள் எனச் சுட்டுகின்றனர். மனிதர் தோற்ற வரலாற்றுக்கான மேற்கின் கடவுள் படைப்புக் கொள்கையின்படி, இதுவே உலகெங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை.

கிழக்கும் கிட்டத்தட்ட இதே போன்றதொரு கருத்தே கொண்டிருக்கிறது. மேற்கு பிரம்மன் எனும் பெயரைச் சுட்டாமல் அவர்கள் மொழியிலமைந்த பெயர்களைச் சுட்டுகிறது. தமிழர் மொழிபெயர்ப்பில் அவரை, படைத்தவரை கர்த்தர் என்கிறார்கள்.

சைவ மரபில் மானுடரின் முதலாவது பெற்றோர் அப்பனும் அம்மையும். அதாவது சிவனும் பார்வதியும். அவர்களிலிருந்து உருவானவர்களே உலகின் அனைத்து மனிதர்களும்.

எனில், மேற்கும் கிழக்கும் ஒத்த திசையில் பயணிக்கிறதோ. வைணவம் அழகுறச் சுட்டுகிறது - நான்முகனை நாராயணன் படைத்தான். நான்மகன் தன்னைப் போன்றே சங்கரனைப் படைத்தான். சங்கரன் சிவனார் எனில் ஒப்பம்தானே. எனில் வைணவ மரபில் மானுட குலத்தின் முதல் தந்தையும் தாயும் சிவனும் பார்வதியும் என்பது ஏற்புடையதே.

ஆதாம், ஏவாள் எனும் பெயர் சூட்டப்பட்டவர்கள் யார். இவர்களது பெயருக்கு என்ன பொருள். இது தமிழ் பெயராக இருக்குமோ. இது குறித்தெல்லாம் தமிழறிஞர்கள் குறிப்பாக தமிழை காசு பணத்திற்கு விற்காத தமிழர்கள், தமிழை விலை பேசாத தமிழர்கள், தமிழைக் கொண்டு தம்மை வளப்படுத்திக் கொள்ளாத தமிழர்கள், தமிழ்த் தொண்டிற்கு காசோ, பணமோ, பொருளோ, விருதோ, புகழோ அறியாத தமிழர்கள், தமிழில் உண்மையான புலமை கொண்ட சில தமிழறிஞர்கள் சிந்தித்துள்ளனர், புத்தகங்களையும் எழுதியுள்ளனர். இந்த சிறப்புமிக்க அறிஞரெல்லாம் யாரென்றே தமிழருக்குத் தெரியாது போயிற்று. எளிய இந்த தமிழறிஞர்களின் போற்றுதலுக்குரிய பெரும் தமிழ்ப் பணி, தமிழ்த் தொண்டு, சிறிய அளவிற்குக்கூட தமிழ் மக்களின் கவனத்தைப் பெறவில்லை. தமிழின் பெயரைச் சொல்லி போலிகள்தாம் நிறையப் புகழையும், விருதுகளையும், அள்ளிக் குவித்திருக்கிறார்களேயொழிய, உண்மையிலேயே தமிழையே தங்களது மூச்சாக, பேச்சாக, உயிராகக் கொண்டிருந்தவர்கள் சுவடே இல்லாமல், தடமே தெரியாமல் மறைந்து விட்டனர், மறைந்தும் வருகின்றனர்.

ஆதாம், ஏவாள் தமிழ்ப் பெயரா அல்லது எபிரேயப் பெயரா என்பதைத் தெளிய இரு மொழிகளிலும் புலமை கொண்டவரால் எளிதாகச் சொல்லிவிட முடியும். பெயர்கள் காரணத்தோடே வைக்கப்பட்டிருக்கும். எபிரேய மொழியில் ஆய்

எனில் தற்போதும் மூத்த பெண், மூத்தவர், வயதில் முதிர்ந்தவர் என்றே பொருள். எனில் ஏவாள் என்பது முதல் பெண் எனும் பொருள் கொள்கிறதல்லவா. ஆய் -ஆயா - ஆவா - ஆவாள். ஆங்கிலத்தில் Eve. ஆங்கில ஈவ் சொல்லின் வேரை ஆராய்ந்தால் எளிதில் தெரிந்து விடும். எபிரேய சொல் பல நாடுகளை, மொழிகளைக் கடந்துதானே ஆங்கிலத்தை அடைந்திருக்கும். ஆதாம் - முதல் மனிதன். மானுடத்தின் முதல் தந்தை. தமிழில் ஆதன் எனில் தந்தை. தமிழ் இலக்கியங்கள் சுட்டுகின்றன. ஆதன் - ஆதம், ஆதான் - ஆதாம் எளிதுதானே.

ஏவல் எனில் ஏவப்பட்டது, வெளியிலிருந்து, பிறிதொன்றிலிருந்து ஏவப்பட்டது, மாற்றப்பட்டது எனக் கொண்டால், ஏவல் - ஏவாள், மனிதலிருந்து ஏவப்பட்டவர், உண்டாக்கப்பட்டவள். பொருத்தமல்லவா. ஏவல் - பணி, துணை. அதாவது ஆதனுக்கு துணையானவள், துணைவியானவன். ஏவள் - நெல்லைக் காரர்களுக்கு எளிதாகப் புரியும், ஏவா, ஏவே, போவே. விருதுநகரில் ஏலே, ஏப்பா, போப்பா. சில வாகனங்களில் ஆவே துணை, ஆவே மரியாள் என எழுதுகின்றனர். ஆவாளைத்தான் ஆவே என்கிறார்களோ.

பாவணர் சுட்டுகிறார் - வரலாற்றிற்கு எத்தனையோ ஆதாரங்கள் இருப்பினும் மொழியியல் ஆதாரங்களே முதன்மையானவை. தமிழர் ஒப்புவார். தமிழர் ஒப்புவார் - யார் சொன்னால். பிராமணர், இந்திக்காரர், வெள்ளைத் தோளுடையவர், வெள்ளைக்காரர் சொன்னால் ஒப்புவார். சகத் தமிழர் சொன்னால் ஒப்புவாரா. சொல்பவரின் சாதி பார்ப்பார். இந்தச் சாதிக்காரனுங்களுக்கெல்லாம் என்னவே தெரியும், வந்துட்டானுவ என்பார்.

தமிழின் பெயரில் பிழைப்பு நடத்தும், பெருவணிகம் புரியும் தமிழ் முதலாளிகளே, அயல் நாட்டார் தமிழ்ப் படிக்க ஆரம்பித்து விட்டார். உண்மையைத் தேடி அலைகிறார். மாநில மொழியாக இருந்ததாலும், படித்த, ஆங்கிலப் புலமை கொண்டிருந்த பெரிய சாதிகள், தமிழின் உயர்வை, இலக்கண இலக்கியங்களை ஆங்கிலத்தில் எழுதாததால் அவர்களுக்குத் தெரியவில்லை. தற்போதோ அவர்களே தேடுகின்றனர். விரைவில் கண்டறிந்து விடுவார். வெள்ளையர் ஒரு முயற்சி எடுத்தால் அதில் பின்வாங்குவதில்லை. அவர்கள் மனோதிடம் மிக்கவர்கள். நிச்சயம் தேடிக் கண்டுபிடிப்பார்கள். ஆதாம் என்பதே ஆதன் என்றும், அந்த முதல் தந்தையே சிவன் எனவும் அவர் ஏற்றுக் கொள்ளும் காலம் வரக்கூடும்.

பிரமன் எதை ஆதாரமாகக் கொண்டு படைக்கிறான்? வேதங்களை. பிரமன் யார் சொல்லிப் படைக்கிறான்? அவனே படைக்கிறானா? அல்லது இன்னொருவர் சொல்லிப் படைக்கிறானா? ஆதாமை பிரம்மன் படைத்தான். பிரம்மனை நாராயணன் படைத்தான்.

எனில் நாராயணன் யார்? விடை நாராயணன் எனும் சொல்லில் பொதிந்துள்ளது.

The question of who am I will leads to an answer,

that answer is - **SRI NARAYANAN.**

**NARAYANAN IS KANNAN!!**

உலகிலுள்ள அனைத்துயிர்களும் தாம் யார், who am I எனக் கேள்வி எழுப்பி அதற்கு விடை தேடினால் விடையாகக் கிடைப்பவன் எவனோ அவனே நாராயணன்.

அவன் எங்கும் நிறைந்திருப்பவன். அவன் எல்லா உயிர்களிடத்தும் கலந்திருப்பவன். உலகின் மூலம், மூலகாரணம், மூலகாரணன், முதல்வன் அவனே..

பிரம்மனும் இந்திரனும் ஒன்று. ஒருவன் படைப்பவன், ஒருவன் காப்பவன். புராணங்களில் இருவரின் காலமும் ஒன்றெனவே சுட்டப்படுகிறது. ஒவ்வொரு மனுவந்தரத்திற்கும், கற்பத்திற்கும் எத்தனை பிரம்மர்கள் உண்டோ அத்தனை இந்திரர்களும் உண்டு.

இங்கு கதைகளாகச் சொல்லப்பட்டுள்ளவையெல்லாம் கதைகளல்ல. அவற்றுள் பெரும் அறிவு, ஞானம் மறைந்துள்ளது. எபிரேயத்தின், அரபுலகின், தமிழ் நிலத்தின் கதைகளை அறிவது ஒருவரை மகிழ்ச்சிக்குள்ளாக்கும். வெகு வியப்பிலாழ்த்தும். அரபில் ஏவாலுக்கு அவ்வா, அதாவது ஹவ்வா எனப் பெயர். தமிழருக்கு எளிதாகத் தெரிந்த பெயர்தான் இது. அவ்வை. அவ்வை எனில் தமிழருக்குப் பாட்டி. பெரும் பாட்டி, பழைய பாட்டி என்றே நினைவு வரும். பாட்டில் சிறந்த பாட்டியல்லவா நம் அவ்வை. அவ்வைக்கும் அவ்வாவுக்கும் என்ன வேறுபாடு? நமக்குத் தெரிவது அரேபியருக்குத் தெரியவில்லை. என்றேனும் தெரியுமல்லவா. தெரிந்தால் அவரால் மறுக்கவே முடியாது.

அவர்களது ஆதாம் யார்? அந்நிலத்தின் அல்லா யார்? நமது சிவன் யார்?

தமிழின் அப்பாவுக்கும் அரபியின் அப்பாஸ்க்கும் என்ன வேறுபாடு? பொருளிலா, எழுத்திலா, இலக்கணத்திலா? ஸ் - எங்கிருந்து வந்தது? எதனால் வந்தது? யாரால் வந்தது? அப்பாஸ் பெரியவன், மூத்தவன். அப்பா - மூத்தவர். எபிரேயத்தில் அப்பா என்றே வழங்குகிறது. மறுக்க முடியுமா? அரபியில் ஸ் - சேர்த்தது ஏன்? அனைத்துக் காலங்களையும், அனைவர் காலங்களையும் அறிந்தவன் ஒருவன் உள்ளான் மானுடரே. அவன் ஒவ்வொரு மனிதனையும் பெயர் சொல்லிக் கூப்பிடுமளவிற்குத் தெரிந்து வைத்திருப்பவன் என்பதும் உண்மை.

ஆதாமின் வரலாறாகப் பைபிள் சுட்டும் கதைகளுக்கும், சிவனாரின் கதைகளுக்கும் உள்ள ஒற்றுமைகளை நாம் அறிந்துள்ளமோ. தமிழர் நன்கறிந்தது தான். அண்ணனுக்கும் தம்பிக்கும் சண்டை. அந்தக் காலம் தொடங்கி தற்போது வரைக்கும் சகோதரச் சண்டைகள் தீர்ந்தபாடில்லை போலும்.

படைப்பதோடு பிரம்மன் கடமை முடிந்தது போலும். அதை வளர்த்து, காத்து, உயர்த்துவது இந்திரனின் கடைமை எனத் தெரிகிறது. உண்மையெனில் மண்ணுலகமெங்கும் பரந்து விரிந்து கிடக்கும் மரபு இந்திர மரபே. ஒருவராலும் மறுக்க இயலாது. உலகின் கிழக்குத் தொடங்கி, மேற்குவரை, தெற்கு - வடக்காக அனைத்து நிலங்களிலுமே இந்திர வழிபாடு பழங்காலந்தொட்டே நிலவி வந்திருக்கிறது. ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்புவரையிலும்கூட இந்திர மரபே சிறப்புற்று விளங்கியிருக்கிறது. இந்திரன் மழைக்குரிய, நீருக்குரிய தெய்வமாகவும், அவனே நெருப்பிற்குரிய, வேள்வி வழிபாட்டுக்குரிய தெய்வமாகவும் போற்றப்பட்டு வந்திருக்கிறான்.

அதன்பின் என்னாயிற்று? அதாவது ஐநூறு, ஆயிரம் ஆண்டுகள் முன்பு வரையுலும்கூட செழிப்புற்றிருந்த இந்திர மரபு அதன்பின் என்னாயிற்று? புதுப்புதுக் கடவுள்கள் தோன்றிவிட்டாரல்லவா.

மேற்கே கிறித்துநாதர் கடவுளானார். கிழக்கே சிவன் பெருங்கடவுளாக ஆனார். இந்திர மரபு சிறிது சிறிதாக மறையத் தொடங்கியது. பிரம்மருக்கு வழிபாடு இல்லாததுபோல், நாளடைவில் இந்திரருக்கும் வழிபாடுகள் இல்லாது போயிற்று. குறிப்பாக, இந்திரனைப் புகழும் வேதங்களிலேயே வேறுகடவுளர்கள் முக்கியத்துவம் பெற்றனர். யாகங்களிலும் இந்திரருக்குப் பெருமையில்லை.

தற்காலத்தில் செய்யப்படும் யாகத்தில் முதல் பெருமை யாருக்குக் கொடுக்கிறார்கள் யாருக்கு என்பது அவர்களுக்கே வெளிச்சம்.

எபிரேயத்தில் பால் கடவுளாக இருந்த இந்திரன் சடையாக, எல்சடையாக மாற்றப்பட்டதுபோல், மாற்றத்திற்கு ஆளானது போல், தமிழ் நிலத்திலும் மாற்றம் நிகழ்ந்திருக்குமோ. பல்லவர்கள் காலத்தில்தான் சிவனார் தமிழ் நிலத்தில் நுழைக்கப்படுகிறார். அதற்குமுன் வெவ்வேறு பெயர்களில் தொன்மையான சிவவழிபாடு இருந்திருக்கிறது. அதைச் சைவமாக்கியது, சிவனுக்கென்று கோவில்கள் அமைத்தது பல்லவர்களே.

இந்திர மரபினரான பல்லவர்கள் சிவனாருக்கு ஏன் முக்கியத்துவம் கொடுத்தனர். எல்லாம் கால மாற்றம். சிவனாரும் உழவோடு தொடர்புடையவரன்றோ. இருவரும் ஒன்றெனக் கண்டிருப்பரோ. அந்த மாற்றம் தமிழ் நிலத்தில் அனைத்தையும் மாற்றிவிட்டது. இந்திர மரபினர் பின்னுக்குப் போயினர். புதுவரவான சைவ மரபினர் ஆதிக்கம் பெற்று, தமிழ் நிலத்திற்குள் பரவினர். அவரது அரசியல் செயல்பாடுகள் தமிழ் நிலத்திலிருந்த அனைத்துப் பண்பாடுகளையும் மாற்றி விட்டன.

அதுவரையிலும் வேந்தர்கள் என்பவர் இந்திர மரபினரே. வேந்தர்களை இந்திரனாகக் கொள்வதே மரபு. தமிழர் வரலாற்றின்படிப் பார்த்தால், பிற்காலச் சோழ மரபினரே சிவனாருக்குப் பெருமை சேர்ந்தனர் என்பது தெளிவு. சிவனாருக்குப் கட்டிய பெருங்கோவில் மிகச் சிறப்பு. கோவிலுக்குள் இருப்பது பெரிய மன்மதரன்றோ. ஆவுடையாரும் லிங்கமும் மன்மதக் குறியீடுகள் ஆகுமல்லவா. எனில் இந்திரமரபின் நீட்சியாகவே சைவத்தைச் சுட்டலாமோ.

தமிழ் நிலத்தில், தமிழ் வேந்தர் மரபில், தமிழிலக்கிய மரபில் விண்ணவர் கோன், அமரர் பதி எனில் இந்திரன்தான். தேவர்களின் தலைவன் எனில், அமரர்களின் அரசன் எனில், வானுலகத்தின் அதிபதி எனில் அது தேவேந்திரனே. அதை, அப்பதவியை, சட்டென்று மாற்றியவர்கள் ஆழ்வார்களும், நாயன்மார்களும் எனில் மிகையானது. ஆழ்வார்களைப் பொறுத்தவரை விண்ணவர் கோன், அமரர்களின் அதிபதி எனில் அது கண்ணனே. நாயன்மார்களுக்கு மண்ணுலகின் பதியும் விண்ணுலகின் பதியும் சிவனே. இந்திரனைவிடப் புகழ் மிக்கோனே, இந்திரனுக்குப் பதவியை அளிப்போனோ, அமரர்களின் ஏறே எனப் பாடிப்பாடியே

அவரவர் தலைவர்களை புகழில் ஏற்றிவைத்து விட்டனர். அது உண்மையும்கூட. எல்லாம் அறிந்தவர்கள் அவர்களன்றோ. விளைவாக, சில நூற்றாண்டுக்குள்ளேயே இந்திரவிழா ஆட்டம் கண்டுவிட்டதுபோல. அனேகமாக பன்னிரெண்டாம் நூற்றாண்டவராகக் குறிப்பிடப்படும் பெருங்கவி கம்பர்தான் மருதநிலத்தை வானளாவப் புகழ்ந்தவராகச் சுட்டமுடியும். பள்ளு இலக்கியங்களில்கூட பள்ளர் வாழ்க்கையும், உழவும்தான் சிறப்பாகப் பேசப்படுகிறதேயொழிய இந்திரனல்லவே.

உலகின் அறிவை வளர்த்தது பிரம்மன். அறிஞராய், ஞானியராய்ப் பிறந்து உலகின் அறிவைப் பெருக்கியது, உயர்த்தியது அவர்தானே.

உலகின் வரலாற்றை எழுதியது இந்திரன். வேந்தர்களாய்ப் பிறந்து உலகின் வீரத்தை, பண்பாட்டை முன்னெடுத்தது இந்திர மரபு. பயிர்த்தொழிலையும், வணிகத்தையும் சிறப்பித்தது இந்திர மரபு.

மட்டைப்பந்து விளையாட்டில் அதிசய நிகழ்வொன்று நடக்கும். ஒருவர் நூறு ஓட்டங்கள் எடுத்திருப்பார். இன்னொருவர் எண்பது ஓட்டங்கள் ஓடியிருப்பார். விறுவிறுப்பான ஆட்டத்தில், வெற்றிக்கு இறுதி ஆறு பந்துகளில் இருபது ஓட்டங்கள் எடுக்க வேண்டும். எட்டுப் பேர் ஆட்டமிழந்து விட்டனர். ஒன்பதாவது ஆட்டக்காரர் நன்றாக அடித்து நான்கு பந்துகளில் பதினாறு ஓட்டங்கள் எடுத்து ஐந்தாவது பந்தில் ஆட்டமிழந்து விட்டார். இப்போது பத்தாவது ஆட்டக்காரர் களமிறங்குகிறார். அது உலகக் கோப்பையின் இறுதியாட்டம் என வைத்துக் கொள்வோமே. ஆட்டத்தின் விறுவிறுப்பு, பரபரப்பு எப்படியிருக்கும்? இருப்பது ஒரு பந்து. தேவை நான்கு ஓட்டங்கள். ஒரே அடியில் பந்தை, எல்லைக் கோட்டிற்கு அனுப்பிவிட்டால் வெற்றி, மாபெரும் வெற்றி. பத்தாவது ஆட்டக்காரர் பறந்துவரும் பந்தை தைரியமாக எதிர்கொண்டு, பந்தை எல்லைக் கோட்டைத் தாண்டி அடித்துவிட்டார் என வைத்துக் கொள்வோம். அதாவது சிக்ஸர் அடித்து விட்டார். மொத்த உலகமும் யாரைக் கொண்டாடும்? ஒரு பந்தைச் சந்தித்து அதை எல்லையைத் தாண்டி அடித்தவரைத் தானே. அவரைத்தானே சகவீரர்களும் தோள்மீது சுமந்து ஊர்வலம் போவார்கள்.

படைத்தது, வளர்த்தது, காத்தது, மேலேமேலே எனத் தூக்கிவிட்டது அவர்கள். ஆழ்வார்களும், நாயன்மார்களும் என்னவெனில் அவரவர் தந்தையரைத் தூக்கிக்கொண்டுபோய் வானத்து உச்சியில் வைத்து விட்டனர். கேட்டால் எல்லாமே

அவர்களாம். பிரம்மன் யார்? யாமே பிரம்மம். இந்திரன் யார்? தேவர்களுள் இந்திரன் ஞான்.

பொல்லாதா மாயனல்லோ நம் மாயன், மாயக்காரன், மீசைக்காரன்.

**திருவோணம் வந்தல்லோ..**

அவர் மலைகளுள் மேரு. ருத்திரர்களுள் சங்கரன். ஒளிர்பவைகளுள் ஞாயிறு. மருத்துக்களுள் மரீசி. பிரகஸ்பதி அவரே. சேனைத் தலைவர்களுள் அவர் முருகக் கடவுள். நீர் நிலைகளில் அவர் கடல். மரங்களில் அரசமரம். சித்தர்களுள் அவர் கபிலமுனி. ஐராவதம் அவரே. அவர் மக்களுள் வேந்தன்.

**அஹமாத்மா குடாகேச ஸர்வபூதாசயஸ்தித:**

**அஹமாதிஸ்ச மத்யம்ச பூதானாமந்த ஏவச:**

விழிப்புடையவனே! எல்லா உயிர்களின் உள்ளத்து உறையும் ஆத்மா ஞானே. உயிர்களின் ஆதியும் இடையும் இறுதியும் ஞானே.

மாடு மேய்ந்தவருக்கா இவ்வளவு ஞானம். உலகில் இத்தனையாகவும் இருந்து கொண்டு கன்றும் ஓட்டுவதென்றால். அதெப்படி மனம் வரும். கொஞ்சம் படித்துவிட்டாலே ஒயிட்டு காலர் வேலை தவிர, வேறு எந்த வேலையும் பார்க்க மாட்டோம் என்கிறார் மனிதர். கடவுள் கன்றோட்டுவாரோ. தாம் கடவுள் எனத் தெரிந்தே, தெளிந்தே எவரேனும் கன்றுகள் பின்னால் ஓடித் திரிந்திருப்பாரோ. ஆழ்வார்கள் சும்மா பாடுகிறார்களோ. ஒருவேளை இந்த இடையர் பெரிய பெரிய ஞானியரோடு பழக்கம் வைத்திருந்திருப்பாரோ.

**ஆதித்யானாமஹம் விஷ்ணுர்!**

**ஆதித்தியர்களுள் ஞான் விஷ்ணு!**

ஈரேழு பதினான்கு புவனங்களுக்கும் இறைவனான விட்டுணுவா பூமியில் பிறந்து கன்றோட்டினார். கன்றுகளின்பின் திரிந்தார். வெண்ணெய் திருடி உண்டார். கோபியர்களின் சேலைகளை ஒளித்து வைத்தார்.

மூவுலகிற்கும் தந்தையாம் விஷ்ணுவா ஆநிரைகள் மேய்த்தது?

தந்தையாம் விஷ்ணுவா பசுக் கூட்டங்கள் ஓட்டியது?

பரந்து விரிந்துள்ள இந்த மாபெரும் உலகிற்கே தலைவனாய் இருந்தும் காதில் கடுக்கன் மாட்டுவதற்கு இப்படியுமா ஓடுவது. காதணி மாட்டுவதற்கு எவ்வளவு அடம் பிடித்திருக்கிறார் எந்தை.

எண்ணற் கரிய பிரானே! திரியை எரியாமே காதுக்கிடுவன்.

வெண்ணவே காதில் திரியை இடுவன் நீ(ய்) வேண்டியதெல்லாம் தருவன்.

இனிய பலாப்பழம் தந்து **கனநன்றணி** முலை உண்ணத் தருவன்.

புண் ஏதுமில்லை, உன் காதும் அறியும்; பொறுத்திறைப் போது இரு, நம்பீ!

உண்ணக் கனிகள் தருவன், கடிப்பொன்றும் நோவாயே காதுக்கிடுவன்,

பேர்த்தும் பெரியன அப்பம் தருவன்.

கண்ணா! கார்முகிலே! கடல் வண்ணா! காவலனே!

நாவல் பழம்கொண்டு வைத்தோம், இவை காணாய் நம்பீ!

எப்படியெல்லாம் கெஞ்சுகிறார் தாய் யசோதை. கேசவா! உனது காது குத்தும் விழாவுக்காக ஆயர் குலத்தினரெல்லாம் வந்து கூடிவிட்டனர். உன்னை வணங்குபவர்களின் மனதை விட்டு அகலாதிருக்கும் நாராயணனே.. ஆயர்களின் குலக்கொழுந்தான மாதவனே, கோவிந்தனே, திருவிக்கிரமா, திருவாயர்பாடிப் பிரானே..

கரிய கூந்தலையுடைய இளம் கோபியரோடு நீய் போய்க் கைகோத்து குரவைக் கூத்தாடி பின்னர் இங்கே வந்தால் யாம் சேர்க்க மாட்டோம். மங்கையர் விரும்பும் கரிய கூத்தலையுடைய விட்டுவே, இங்கே வருவாயாக. சமத்தாக அருகில் வந்து திரியை இட்டுக் கொள்.

வெண்ணையைத் தெரியாமல் எடுத்து உண்டதற்காக கேட்பார் பேச்சைக் கேட்டு தண்டித்தவளல்லவா நீய்.

வெண்ணெய் தின்றதற்காக உரலோடு கட்டிப் போடவில்லையா.

கண்மணியே! இந்த இடைச்சேரியில் எல்லாப் பிள்ளைகளும் காது வளர்த்துக் கொண்டிருப்பதை பார்க்கவில்லையா கண்ணா! வையம் எல்லாம் பெறும் வார்கடல் வாழும் சுறாமீன் வடிவில் செய்யப்பட்ட மகரக்குழையை உனக்காகச் செய்திருக்கிறோம். இளம் கோபியர்களை மயக்கும் சிறீதரனே! அருகே வருவாய்.

காதுகள் நொந்திடும், கில்லேன்.

காது வலிக்கும், மாட்டோம், போம்மா.

அன்னை யசோதை மகரக்குழையை மாட்டினாரா இல்லையா. காது குத்தியாயிற்று போலும், திரி மாட்டத்தான் இத்தனை பாடோ. அதையும் கழற்றிப் போட்டுவிட்டு இளம் ஆய்ச்சியரோடு கைகோத்து ஆட ஓடியாயிற்று.

இந்தக் கண்ணன் வாய்ப்பேச்சு விளையாட்டெல்லாம் விளையாடமாட்டார் போலும். பெண்பிள்ளைகளின் கையைப் பிடித்துக்கொண்டுதான் அத்தனை விளையாட்டுக்களும்.

பொல்லாத அச்சுதன். புகழுடைய மாதவக் கண்ணன்..

காது குத்துவதுதான் வலிக்கும். சரி, பரவாயில்லை. நீராடுவதற்கு என்ன. ஆய்ச்சியை இந்தப்பாடா படுத்துவது.

அப்பம் கலந்த சிற்றுண்டி அக்காரம் பாலில் கலந்து

சொப்பட ஞான் சுட்டுவைத்தேன் தின்னல் உறுதியேல் நம்பீ!

செப்பிள மென்முலையார்கள் சிறுபுறம் பேசிச் சிரிப்பர்

சொப்பட நீராட வேண்டும், சோத்தம், பிரான்! இங்கே வாராய்.

எம்பிரானே! கோபியர்கள் நீய் குளிக்க அழிச்சாட்டியம் பண்ணுவது கண்டு மறைவில் கேலி பேசிச் சிரிப்பார்கள். பாலில் வெல்லத்தைக் கரைத்துச் சர்க்கரைப் பொங்கல் அப்பம் வைத்திருக்கிறோம். அவை உனக்கு வேண்டுமென்றால் நன்றாக நீய் நீராட வேண்டும். உம்மை வணங்கிக் கேட்டுக் கொள்கிறோம், குளிக்க வாராய்.

குளிப்பதற்குத்தான் பெரும் போராட்டம். கன்றோட்டப்போம் எனச் சொல்வதற்கு முன்பே கன்றுகளை தூர ஓட்டிக்கொண்டு போயாயிற்று. கன்றின்பின் திரிவதில்தான் பெருவிருப்பம் இந்த மாயனுக்கு.

கன்னி நன்மாமதின் சூழ் தரும்பொழில்

காவிரித் தென்னரங்கம், மன்னிய சீர்மது சூதனா!

பாயும் திருவரங்கத்தில் நித்தியவாசம் செய்கின்ற மதுசூதனா! கேசவா! அழகிய உன்னை கன்றுகளை மேய்க்க அதிகாலையிலேயே எழுப்பி உணவளித்துப் போக விட்டோம். எம் நெஞ்சம் தாளவில்லை. குட்டனே! எம் மன ஆறுதலுக்கு முத்தமென்று தாராய்..

காடுகள் ஊடுபோய்க் கன்றுகள் மேய்த்து மறியோடி கார்க்கோடற்பூச்

சூடி வருகின்ற தாமோதரா! கற்றுத் தூளிகாண் உன்னுடம்பு

பேடை மயிற் சாயல் பின்னை மணாளா! நீராட்டமைத்து வைத்தோம்

ஆடி அமுதுசெய், அப்பனும் உண்டிலன், உன்னோடுடனே உண்பான்.

காட்டுக்குப் போனாலும் சும்மா மாடு மேய்ப்பதில்லை போலும். காந்தள் மலரைப் பறித்துச் சூடியிருக்கிறார். மேனியெங்கும் மண் ஒட்டியாற்று. பெண் மயிலின் சாயல்கொண்ட நம்பின்னையின் மணாளனாம். அதற்குள் பெண்ணே பார்த்தாயிற்று போலும். வெந்நீரில் நீராடியபின் சுடச்சுடச் சாப்பிடலாமாம். அப்பன் நந்தகோபன் மகனோடு சேர்ந்து உண்ண காத்திருக்கிறாராம். அழகான அன்புக் குடும்பமல்லவா கண்ணன் குடும்பம்..

**கண்ணனின் குடும்பம் வாழி!**

**வாசுதேவக் குடும்பம் நெடிது வாழி!!**

இளையோனாகிய எமக்கு காது குத்தவில்லை என்பது கூடுதல் தகவல். ஒருமுறை காதுகுத்துவது தள்ளிப் போய்விட்டதாம். யாமும் வளர்ந்து பெரிய பையனாகிவிட்டதால் அப்படியே விட்டுவிட்டார்களாம். சிறுவயதிலேயே காதில் ஓட்டை போட்டிருக்க வேண்டுமென யசோதையம்மா வருந்தியதுபோல் பொன்னம்மா வருந்தினாரா எனத் தெரியவில்லை.

தந்தைபோல் யாம் மகிழ்ச்சியாக மாடு மேய்க்கப் போனோமா எனத் தெரியவில்லை. விடுமுறை நாட்களில் மாடுமேய்க்க அனுப்புவார்கள். தூக்குவாளியில் கஞ்சியும், குச்சியொன்றும் தூக்கிக்கொண்டு, நண்பர்களோடு கிளம்பவது இன்பம்தான். அவ்வகையில் தந்தையும் மகனும் ஒன்றுதானோ. தந்தை பெரியவர் என்பதால் கன்றின் கூட்டம். எமக்கோ ஒரே மாடு. எனினும் நண்பர்கள் மாடுகளையெல்லாம் சேர்த்தால் இங்கும் கூட்டம்தான். கன்றுபோட்டு சில மாதங்கள் வரைதான் இருவேளை பால் பீய்ச்சுவார்கள். அதன்பின் காலையில் மட்டும்தான். எனில் அப்படியான மாடுகளைப் பகல் முழுதும் மேய்க்க வேண்டும். அதற்கே தூக்குச் சட்டியில் கஞ்சி. தண்ணீர் புட்டியெல்லாம் அன்று கிடையாதென்பதால், எங்காவது இருக்கும் குட்டைகளில், கிணறுகளில் தண்ணீர் குடித்துக்கொள்ள வேண்டியதுதான்.

எம் தந்தை குளிப்பதற்கு அடம் பிடித்திருக்கிறார். யாம் அப்படியெல்லாம் இல்லையென்றே தெரிகிறது. பொன்னம்மாவிடம் கேட்டால்தான் முழு உண்மையும் தெரியும். சாம்பல் வைத்து பல்துலக்க மாட்டோம் என அடம் பிடித்திருக்கிறோம். சிறுவயதில் குளிக்க வெந்நீர் போட்டுக் கொடுத்தார்களோ. நீச்சல் பழகியபின் கண்மாய்க்கு ஓடிவிடுவோம். இரகசியமாய்ச் சொல்வதானால் குளிர் காலங்களில் நீருக்குள் இறங்கப் பயந்துகொண்டு, கொஞ்சநேரம் கரையிலேயே உட்கார்ந்திருப்போம்.

மாட்டைப் பந்து விளையாட்டிற்குள்போய் கண்ணனின் லீலைகளுக்குள் நுழைந்து விட்டோம். பெரியாழ்வாருக்கு கண்ணன்மேல் எத்தனை அன்பு பார்த்தீர்களா. உண்மையிலேயே பெரிய ஆழ்வார்தான்.

**வைணவத்தின் பெரிய ஆழ்வார் வாழி! அயிரம் பெயரான் வாழி!**

உலகத்தோரே, கண்ணன் வெண்ணெயைத் திருடி உண்ணவில்லையாம். எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே வீட்டிற்குள் நுழைந்து வெண்ணெய்ப் பானையை எடுத்து உண்டாராம். பொய்கையாழ்வார் பாடுகிறார். பாடுபவரும் மிகப் புகழ்மிக்க ஆழ்வாரன்றோ. இனியும் எம் தந்தையை வெண்ணெய் திருடி உண்டார் எனச் சொல்லாதீர்கள். கறவைகள் அவருடையவை. பாலும், வெண்ணெய்யும் அவருடையது. எல்லாமே அவருடையதெனில் அது எப்படித் திருட்டாகும். அவர் பொருளை, அவருக்கு உரிமையான பொருளை எடுப்பது திருட்டல்லவே.

அறிவிற் சிறந்தோரே, ஆழ்வார்களைப் படியுங்கள். நம் வெண்ணெய்யுண்ட பெருவாயனின், கொண்டல் வண்ணனின் புகழினைக் காணுங்கள்.

**ஆழ்வார்கள் வாழி; அருளிச் செயல்கள் வாழி!**

**வாழிய தாயும் தந்தையும்!**

மானுடப் பரிணாமம், மானுட வளர்ச்சி, மனிதர் வரலாறு எங்கெங்கோ சென்று, எப்படியெப்படியோ மாறி, முட்டி, மோதி, உருண்டு, புரண்டு ஓடிவந்து இறுதிக் கட்டத்தை எட்ட, இறுதிப் பந்தில் ஓங்கியடித்து வெற்றி தேடித்தரும் வீரரைப்போல், இருதந்தையரும் அத்தனை பெயரையும், புகழையும், பெருமைகளையும் அள்ளிக் கொண்டது நியாயம்தானா, தர்மமாகுமா உலகத்தோரே.

நம் புகழ்மிக்க பெரும்தந்தையருக்குத் தகும் மூத்தோர்களே. முட்டி மோதி, உருண்டு, புரண்டு, விளையாடித் திரிந்தது அவர்கள்தானே. அவர்கள் விளையாடுகிறார்கள் மனிதர்களே. அவர்களுக்கு அனைத்துமே விளையாட்டுத்தான். வெளியிலிருந்து பார்க்கும்போது சண்டை போலவும், போர் போலவும், பெரும் யுத்தம் போலவும் தெரிகிறது. உண்மையில் அது விளையாட்டு தோழர்களே. அவர்கள் அன்புமிக்க நண்பர்களல்லவா. நண்பர்கள் என்றாலும் விளையாட்டில் விட்டுக்கொடுக்க மாட்டார்கள்போல. விட்டுக்கொடுத்து விளையாண்டால் விளையாட்டு நன்றாகவா இருக்கும். ஆர்வமாகவா இருக்கும். விளையாடும் அணிகளும் சமபலம் கொண்டவைபோல் தெரிகிறது. சமபலமான அணிகள், தேர்ந்த வீரர்கள், அனுபவமான பயிற்சியாளர்கள். ஆயினும் ஒரு அணி எப்போதும் வென்றுவிடுகிறது. அந்த அணியின் தலைவர் எப்போதும் கண்வளர்வதாகச் சொல்லப்படுகிறது. கண்துயின்றுகொண்டே எப்படித்தான் எப்போதும் வெல்கிறாரோ இந்த மாயக்கண்ணன்..

எப்போதும் வெற்றிக் கோப்பையைக் கைப்பற்றுவது அவர்தான். வாகை சூடுவது அவரணிதான். அவருக்கு எப்போதும் வெற்றி.. எதிலும் வெற்றி.. எப்போதும் வென்றான் நம் தந்தை.

**வெற்றி எப்போதும் உங்களுக்குத்தான் தந்தையே..**

எப்போதும் வென்று விடுவார் எனில் அவரோடு யார் மோதுவது. யார் மோத விரும்புவார்கள். எனினும் விளையாடவும் வேண்டுமல்லவா. எத்தனை காலம்தான்

சயனித்துக் கிடப்பது. அவரே இரண்டு அணியாக மாறிக் கொள்கிறார் போலும். அவரே நான்கு அணிகளாக, எட்டாக, பத்தாக உருவத்தை மாற்றிக்கொண்டு விளையாடுகிறாரோ.

மானுட வரலாற்றில் நான்கு அணிகள் முக்கியமானவையாகத் தெரிகின்றன. அதாவது இந்தியப் புராண மரபில் நான்கு உலகங்கள் இருப்பதாகச் சுட்டப்படுகிறது. விஷ்ணுவின் வைகுந்தம், பிரம்மனின் சத்யலோகம், சிவனின் கைலாயம் மற்றும் இந்திரன் சொர்க்கலோகம். எனில் நான்கு உலகங்கள் எனச் சொல்லலாம். இந்த நால்வர்தான் மானுட வரலாற்றில், மானுடப் படிவளர்ச்சியில் பெரும்பங்கு வகித்திருக்கின்றனர். இவர்கள்தான் உலகமாயும், உயிர்களாயும் இருக்கின்றனரோ. இவர்கள், இவர்களது உறவுடையவர்கள் எனப் பெரும் பட்டாளமே உலகில் இயங்குகிறதோ. உதாரணமாக, தமிழர் மரபில் முருகன். முருகன் எளிய வேடன் எனச் சுட்டப்பட்டாலும் அவனே தேவர்களின் படைத்தலைவனாகவும் குறிப்பிடப்படுவது கவனிக்கத்தக்கது. இவ்வாறு மண்ணில் ஏராளமான தேவர்கள், தெய்வங்கள், கடவுள்கள் நிறைந்திருப்பது கண்கூடு.

குரங்குகளை மனிதர்களாக்குவது யார்? யார் பொறுப்பு? மனிதர்களைத் தேவர்களாக்குவது, தேவர்களைத் தெய்வங்களாக்குவது, தெய்வங்களைக் கடவுள்களாக்குவது யார்? யார் பொறுப்பு.

குரங்கு எப்போது மனிதனாகியது? முதல் மனு யார்? மனிதர்களின் இறுதித் தலைவன் யார்? தேவர்களில் முதலாவது தேவன் யார்?

முதல் மனு சிவமெனில் குரங்கை மனிதனாக்கியது சிவனாரோ. தமக்கொரு பெயரைச் சூட்டிக் கொண்டவனல்லவா முதல் மனிதனாக, மனுவாக இருந்திருக்க முடியும். என்னில் மனுவுக்கு மொழியறிவு எப்படி வந்தது? தானாய் வந்ததா? அல்லது யார் மூலமாவது இறக்கப்பட்டதா? தானாய் எனில் அவனே கண்டறிந்தானோ. இயற்கையை உற்றுநோக்கி ஆராய்ந்து அறிந்தானோ. மொழி தானாய் தோன்றியதா, படைக்கப்பட்டதா.

உலகின் முதல்மனிதன் பேசிய முதல்மொழி எதுவாக இருக்கும். இயற்கை சார்ந்து இருந்திருக்கும் என்பது தெளிவு. இயற்கை எனில் பறவைகள், பூச்சிகள் விலங்குகள்தானே.

மனிதன் பேச்சுமொழியை விலங்குகளிடமிருந்தும், எழுத்தை தாவரங்களிடமிருந்தும் பெற்றிருப்பானோ, அவைகள் மூலம் அறிந்திருப்பானோ.

கிளி என்பது ஒரு பறவை. பச்சை நிறத்தில் இருக்கும். அது கீச்சு கீச்சு என ஒலியெழுப்பும். கீச்சு கீச்சு என ஒலி எழுப்பும் பறவை கிளி. கிளி எனும் பெயர் எதனால் வந்தது? அந்தப் பறவையை கிளி எனப் பெயரிட்டு அழைத்தது ஏன்? கீச்சு கீச்சு என ஒலி எழுப்பும் பறவை கீச்சு ஒலிப் பறவை. கீசு - கீச்சு - கீச்சு ஒலிப் பறவை. கீச்சொலி - கீசுஒலி - கீசொலி - கீலி - கிலி - கிளி.

கிலி - பயம். கிழி - கிழித்தல், பிளத்தல். கிளி - ஒரு பறவை. கிளி - பேச்சு. பேசும் பறவைக்கு கிளி எனப் பெயர். ஆங்கிலத்தில் அதன் பெயர் பாரட். பார - பற - பறை - பறைதல் - பேசுதல் - பேசும் பறவைக்கு Parrot. பாரட்டின் மூலம் எது? மூலச்சொல் எது? Par - கம்பி; rot - விலங்கு அல்லது தாவரம். கம்பியில் அமர்ந்திருக்கும் பறவை எனில் கிளியை கூண்டுக்குள் அடைத்து வைத்த பின்னரே வெள்ளையர் அதை கூண்டுக்கிளி எனும் பொருளில் Parrot என அழைத்திருக்க வேண்டும் அல்லது பார், ராட் சொற்களின் மூலத்தை இலத்தீனிலும், கிரேக்கத்திலும் தேட வேண்டும். தேடினால் அது தமிழிடமே வந்து நிற்கும், தமிழையே மூலமாகச் சுட்டுமென்பது தெளிவு.

பச்சைக் கிளி - பச்சை நிறத்திலிருக்கும் பறவை. கிளி - பேச்சை முன்னிட்டு. பச்சை - நிறத்தை முன்னிட்டு. வாழுமிடம் சார்ந்தும் உணவு சார்ந்தும், அதன் சூழல் சார்ந்தும்தானே பெயர்கள் முதன்முதலாக வைக்கப்பட்டிருக்கும். ஒப்பம் வெட்டுக் கிளி. இங்கு ஏன் கிளிப் பெயர். செடிகளை வெட்டுவதால் வெட்டுக் கிளியோ. ஆரம்பப் பெயர்கள் மிகவும் எளிமையாகவல்லவா இருந்திருக்கும். எனில் உலகின் முதல் மொழி, மூத்த மொழி, முந்து மொழியாக இருக்கத் தகுதியானது எது? எம்மொழிக்கு அந்தத் தகுதி இருக்கிறது தற்போதுள்ள மொழிகளில்?

பச்சைக் கிளி - green parakeet (Psittacara holochorus). இலத்தீனில் Psitta எனில் பழைய. இங்கு பழைய உலகத்தைச் சேர்ந்தவை எனும் பொருளில் அதாவது ஆப்பிரிக்க, ஆசியாவைக் சேர்ந்தவை எனும் பொருளில் சித்தா எனும் சொல் ஆளப்பட்டுள்ளது. Sitta - உரிமையானது. சிட்டா எனில் இன்னாரது நிலம் என்பதற்கான கணக்குக் குறிப்பேடு. பழைய உலகத்தவை எனும் பொருளில்

Sittacara என ஆளப்படுகிறது. கோரஸ் எனில் ஒலிதானே. எனில் ஒலி எழுப்பது கிளி. உண்மையெனில் மூலம் தமிழல்லவா.

கீசு கீசு எனப் பேசுவது, குரலெழுப்பவது கிளி என்னில், கூக் கூக் என குரலிடுவது குயிலோ. கூக் கூக் என ஒலி எழுப்புவது, கூக்கூக் ஒலி - கூக்கொலி - கூயிலி - குயிலி - குயில் பொருத்தமன்றோ.

பூச்சி - பூக்களில் வசிப்பதால் பூச்சியோ. பூக்களில் வசிப்பது பூவாசி, பூச்சி. வண்ணத்துப்பூச்சி - வண்ணமுள்ள பூச்சி. அந்திப் பூச்சி - அந்துப் பூச்சி, இறக்கையில் பூச்சுள்ளது பூச்சி. பூசு - பூச்சு - பூசுதல். சிமெண்ட் பூசுதல், வெள்ளை பூசுதல் எனில் மேற்படலம். மேலே பூச்சுக் கொண்டது பூச்சி. மேலே என்ன பூச்சு, படலம் கொண்டுள்ளன? பூச்சிகளுக்கு கைட்டின் எனும் புரதத்தாலான மேற்பூச்சு உள்ளது. இது பூச்சிகளின் உடலுக்கு பாதுகாப்புச் சுவர் போன்று, பூச்சு போன்று அமைந்திருக்கிறது. ஆங்கிலத்தில் கைட்டின் - கைட்டின் - உறை. சரியாக இருக்குமா எனில் ஆம். கோலியோப்டீரா - Coleoptera எனில் வண்டுகள், பூச்சிகளின் ஒரு வகை. Koleos எனில் பூச்சு, காப்பு. Ptera எனில் இறக்கை.

வண்டு என எதனால் அழைத்தனர் தமிழர்? எப்போதுமே ஒரு பெயரின் மூலம் தேடும் போது அச்சொல் தற்போது புழங்குவது போலவே முன்பு புழங்கியிருக்காது என்பதை அறிய வேண்டும். அது சற்றே முன்பின்னாக மாறியிருக்கலாம். அதன் எதுகைச் சொற்கள் என்ன பொருள் சுட்டுகின்றன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வண்டு என்பதில் வண் சொல்லுக்குச் சுட்டும் பொருள்கள் யாது? வண்மை எனில் குணம், வளமை, புகழ், வலிமை எனப் பல பொருள்கள் சுட்டப்படுகின்றன. வண்டுகளும் பூச்சிகளே. வண்டு - வண்டி. வண்டி - மாட்டு வண்டி எனில் முன்னால் மாடு உள்ளது, அதன் பின்னால் வண்டி இருக்கிறது. இதே போன்றுதான் வண்டும் உள்ளது. முன்னால் தலை, தொடர்ந்து பெரிய உடல். வண்டு என்பதன் முதுகைத்தான் நாம் பார்க்கிறோம். அவற்றின் வாயும், வயிறும் கீழ்நோக்கியே இருக்கும். எனில் வண்டி - பின் பகுதி, வண்டு - வண்டி - பின்பகுதி தெரிவதால் வண்டோ. மழை பெய்து வளம் வந்தவுடன் பெருகுவதால் வண்டோ, வலிமையான ஓடு உடையதால் வண்டோ.

இதெல்லாம் தமிழ் இலக்கியத்தில் பெரும் புலமையுடையவர் செய்ய வேண்டிய, நிறுவ வேண்டிய, உலகிற்கு உரத்து ஒலிக்க வேண்டிய பணி. எமதனுபவத்தில் தமிழ் பயின்றவர்களிடமே தமிழைப் பற்றிய பெருமிதம் இல்லை. அவர்கள் செய்யும் முனைவர் பட்ட ஆய்வுகள் முற்றிலும் ஏற்புடையதல்ல. தமிழில் ஆய்வு செய்ய எத்தனை எத்தனை கொள்கைகள், விளக்கங்கள், கோட்பாடுகள், கருத்துக்கள், வரலாறுகள், முடிவுகள் உள்ளன. எத்தனை இலக்கியங்கள், இலக்கணங்கள் தமிழில் பொதிந்துள்ளன. தமிழின் ஒரு சொல்லை மட்டும் ஆராய்ந்தால் போதுமே, உலகின் வரலாற்றையே சொல்லி விடலாமே. இவர்கள் என்னடாவெனில் சமீபத்திய எழுத்தாளர் யாரையாவது எடுத்துக் கொண்டு, அன்னார் எழுத்தில் பெண்களின் சித்தரிப்புகள், சமுதாயச் சித்தரிப்புகள் என ஆராய்ந்தறிந்து முனைவர் பட்டம் வாங்கிப் பெருமையடித்துக் கொள்வதை என்னவென்பது? முனைவர், டாக்டரேட் என்பதே உண்மையை, புதிய உண்மையைக் கண்டடைவது, கண்டறிவதல்லவா. அன்னார் படைப்பில் பெண்ணியக் கருத்துக்கள் என்பதில் என்ன கண்டுபிடிப்பு இருக்கிறது. சரி அதையாவது சிறப்புறப் படைத்திருக்கிறாரா எனில் அதுவும் ஒப்புக்கு எழுதியதாகவே உள்ளது. காசுக்கு எழுதியது.

காசுக்கு, பதிப்பகத்தார் கேட்டுக் கொண்டதற்கு, கணக்குக்கு, பதவிக்கு, பெயருக்கு, புகழுக்கு ஆசைப்பட்டு எழுதியதெல்லாம் தமிழ் நூலாகாது தமிழ் ஆன்றோர்களே, பெரும் புலமையாளர்களே.

தமிழே மூச்சாக, பேச்சாக, வாழ்வாகக் கொண்டிருப்பவர் எழுதுவதே தமிழ். அவரெழுதுவதே தமிழெழுத்து. அன்னாரே தமிழ்ப் புலவர், தமிழில் புலமை மிக்கார்.

யாரேனும் மொழி ஞாயிறு பாவாணர் குறித்து ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் வாங்கியுள்ளனரா? எமக்குத் தெரிந்து ஐயமே. அவரை இன்னும் புரிந்து கொள்ளவில்லை தமிழ்ச் சமூகம். பொதுத் தமிழர்தான் புரிந்துகொள்ளவில்லையெனில் தமிழ்ப் பேராசிரியர்களுக்கே அவர் யார், அவர் ஆற்றியுள்ள அரும்பணி எத்தகையது எனத் தெரியவில்லை, தெளியவில்லை. பெரும்பேரறிஞர் மேற்கொண்ட வேர்ச்சொல் அய்வுகள் மிகச் சீரியவை. ஆழம் மிக்கவை, இறுதியானவை. தமிழருக்கு தாம் யாரென்றே தெரியவில்லை, அவரெப்படி தமிழறிஞர் யாரெனத் தெளிவார்? தமிழின் காவலரே, தமிழரின் வெடிவெள்ளியே, உலகின் ஞாயிறே என்றெல்லாம் கிஞ்சித்தும்

தகுதியில்லாதோருக்கு பட்டங்களை அள்ளி இறைத்துவிட்டு, தமிழுக்காவே வாழ்ந்த பெரும்புலமை மிக்காருக்கு சிறிய சிறப்புப் கூடச் செய்யவில்லை. சிறப்புச் செய்யாவிட்டாலும் பரவாயில்லை, அவர்கள் யார் என்றே தெரியவில்லை. அப்படிக் கண்மூடிக் கிடக்கிறார் தமிழர்.

உலகின் அனைத்து மொழிகளும் தமிழிலிருந்தே உருவானவை எனச் சொன்ன சாத்தூர் சேகரன் யார்? அவரது சிறப்பு என்ன? அவரது பெருமைகள் எவ்வளவு? யார்யாருக்கெல்லாமோ விக்கிபீடியாத் தளத்தில் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. தமிழே தம் வாழ்வு எனக் கொண்ட ஒப்பற்ற தமிழறிஞர் சாத்தூர் சேகரனுக்கு ஏன் சிறு பதிவுகூட இல்லை?

ஏனெனில், அவர் தமிழர், தமிழறிஞர். தமிழறிஞருக்கு தமிழ் நிலத்தில் மதிப்பேது. அதுவும் சேகரனாரைப் போன்ற எளிய தமிழறிஞருக்கு இங்கு எப்போதுமே மதிப்பிருந்ததில்லை. உண்மைத் தமிழறிஞர்களுக்கு தம் மதிப்பைக் கூட்டத் தெரியாது போலும்.

மதிப்பிற்குரிய சேகரனார் உலக மொழியறிஞரன்றோ. தமிழ் நிலத்தில் எவரேனும் தமிழே உலகில் சிறந்த மொழி, முந்துமொழி எனப் பேசிவிட்டாலே அன்னாரை நாளிதழ், பத்திரிக்கைக்காரர்கள் சட்டென அடையாளம் கண்டுகொள்வர் போலும். அன்னார்களைப் பற்றி சற்றும் வெளியில் தகவல் பரவவிடாமல் பார்த்துக் கொள்வதில் மிகவும் சாதுர்யமாகச் செயல்படுகிறார். தமிழ் உலகின் மூத்த மொழி என அறுதியிடுவதில் யாருக்கு நட்டம்?

உலகில் எம்மொழியும் எம்மொழி என உரத்து முழக்கமிட்ட அய்யா சேகரனார், உலகின் முக்கியமான அத்தனை மொழிகளிலும் புலமை பெற்றிருந்தது வியப்பிலும் வியப்பு. தமிழ்மேல் எத்தனை பற்றும் விருப்பமும் கொண்டிருந்தால் தமிழே உலகின் தாய்மொழி என நிறுவிட இத்தனை மொழிகளை ஆழ்ந்து கற்றிருப்பார்? நூற்றி இருபது மொழிகள் நன்றாகத் தெரிந்திருக்கிறது. மேலும் இருநூறு மொழிகளைப் பற்றி தெளிவாக அறிந்திருக்கிறார். தம் வாழ்நாளெல்லாம் தமிழுக்காகவே, தமிழ்த் தொண்டிற்காகவே வாழ்ந்திருக்கிறார். இத்தகைய சிறப்புற்ற தமிழறிஞரை தமிழர் எத்தனை கொண்டாடியிருக்க வேண்டும். எவ்வளவு சிறப்புச் சேர்த்திருக்க வேண்டும். செய்தாரா. இல்லையெனில் ஏன்?

தமிழறிஞர்களின் கூற்றைத் தமிழரே நம்புவதில்லை. தமிழே உலகின் முதல்மொழி எனில், தமிழர்கள் சிரிக்கிறார்கள். இவருக்கென்ன ஏதாவது.. எனக் கேலி பேசுகிறார்கள். அறிவிற் சிறந்த தமிழ்ச் சான்றோர்களுக்கு எந்த மரியாதையும், உதவியையும் கிடைப்பதில்லை. சிரிக்கும் அன்னார்கள் மிகத் திறமையாக, தகுதியோடு வாழத் தெரிந்தவர்கள். தமிழுக்கென வாழ்ந்தவா்கள், வாழ்பவர்கள் அன்னார்களது மொழியில் வாழத்தெரியாதவர்கள் - பாவாணர் போல, சேகரனார் போல. பட்டியல் பெரிது தமிழ்களே.

மொழி சார்ந்து இருநூறுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியிக்கிறார் சேகரனார். பலநூறு ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். உலகெங்கும் பயணம் செய்து மக்களோடு பேசி, பழகி, தங்கியிருந்து, பல்வேறு ஆய்வுகளை வெளியிட்டுள்ளார். இத்தகைய சிறப்புற்ற தமிழறிஞர் குறித்து எமக்குத் தெரிந்த வரையில் யாம் படித்ததில்லை. யாம் கடந்த இருபது ஆண்டுகளாக பல்வேறு இதழ்களும் படித்து வருகிறோம். எனில் கேள்வி, எம்மைப்போன்று ஓரளவிற்கு இதழ்கள் படிக்கக் கூடியவருக்கே இந்நிலையெனில், பொதுவெளியில் சேகரனாரின் பணி, சிறப்பு யாருக்குத் தெரிந்திருக்கும். நிச்சயமாக தமிழ்மேல் பெரும்பற்றுக் கொண்ட சொற்பமானவருக்கே தெரிந்திருக்கும். எதனால் தமிழ், தமிழருக்குப் பாடுபட்டோரெல்லாம் மூடிமறைக்கப்பட்டனர், மறைக்கப்பட்டும் வருகின்றனர்? மறைப்பது யார்?

தமிழ் மொழிக்காக தம் உடல், பொருள், உயிர் என அனைத்தையும் ஈந்த சாத்தூர் சேகரன் ஐயா நினைவு கூறப்பட வேண்டுமல்லவா. தமிழே அகில மொழி, அகிலத்தின் மொழி என அறுதியிட்ட நமது சேகரனாருக்கு தமிழன்னையின் சார்பில் பெருஞ்சிறப்பொன்று செய்யப்பட வேண்டுமல்லவா. தமிழுக்காகக் தம்மையே ஈந்த தமிழறிஞர்கள் என்றென்றும் நினைவு கூறப்பட வேண்டுமல்லவா.

அரசியல்வாதிகள், ஆட்சியாளர்கள் ஒருபோதும் செய்ய மாட்டார்கள். அவர்கள் கணக்கில், ஓட்டுக்களின்மீதே கவனம் கொள்வர். தமிழ் எங்கள் மூச்சு, பேச்சு என முழங்கும் பெருத்த சாதியாரும் தமிழறிஞரை மதிக்க மாட்டார், போற்ற மாட்டார்.

தமிழ் நிலத்தை ஆளும் ஆட்சியாளர்கள் செய்யார். தமிழை விற்றுப் பிழைக்கும், தமிழைக் கொள்ளையடிக்கும் தமிழ் வியாபாரிகள் செய்யார்.

24. தேவேந்திர குலத்தாரே, நாம்தாம் நமது பெருமைக்குரிய தமிழறிஞர்களை நினைவில் கொள்ள வேண்டும். அவர்களது தமிழ்த் தொண்டைப் போற்ற வேண்டும். அன்னார்களை தலைமுறை தலைமுறையாகக் கடத்தி வரவேண்டும். நம் தமிழுக்குப் பாடுபட்ட நம் தமிழ்ப் பேரறிஞர்களை நாம் எப்படி நினைவு கூற வேண்டும். சொல்கிறோம் கேளும்.

தமிழ் மொழிக்கு சிறப்புறத் தொண்டாற்றியவர்கள் "**செந்தமிழ்ச் செல்வர்கள்**" எனும் சிறப்புப் பெயரில் அழைக்கப்பட வேண்டும். செந்தமிழ்ச் செல்வர் தமது வாழ்நாளை தமிழின் உயர்வுக்கு, தமிழின் சிறப்புக்கு, தமிழின் மேன்மைக்கு அர்ப்பணித்தவராக இருப்பார். தமிழுக்காக, அதன் வெற்றிக்காக, தம் வாழ்நாள் முழுதும் பணி செய்தவராக இருப்பார். செந்தமிழ்ச் செல்வருக்கு தமிழே பேச்சு, மூச்சு எனலாம். தமிழ் அவருக்கு உயிர். தாம் பிறந்த சாதியைவிட, குலத்தைவிட, மதத்தைவிட, அவருக்கு மொழியே முதன்மையானது. தமிழே தலையாயது. பிற அனைத்தும் அதற்குக் கீழே. அவர் பிற மொழியும் பேசலாம். தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாதவராயும் இருக்கலாம். அவர் தமது வாழ்நாளில் தமிழின் பெருமையறிந்து, தமிழின் சிறப்பறிந்து, தமிழின் வரலாறு அறிந்து அவர் தமிழை உயிராக நேசிக்கலாம். தமது தாய் மொழியைவிட, தமதுயிரைவிட, தமிழே பெரிது எனக் கொள்ளலாம், செயல்படலாம். அந்நிலையில் அன்னாரும் செந்தமிழ்ச் செல்வரே.

செந்தமிழ்ச் செல்வன் சாதியாலோ, மதத்தாலோ, மொழியாலோ வரவேண்டியதில்லை. அது தமிழின்மேல் கொண்ட பெரும் பற்றால், பெரும் அன்பால் வரவேண்டியது.

சுருங்கக் கூறின், செந்தமிழ் செல்வனின் தலைக்குமேல் தமிழ் மட்டுமே. பிற அனைத்தும் அதற்குக் கீழே.

இப்படியும் இருப்பரோ எனில் இருந்திருக்கிறார்கள், வாழ்ந்திருக்கிறார்கள். இன்றைக்குத் தமிழர் தமிழ்தான் உலகின் முதன் மொழி எனப் பேசுகிறார்கள் எனில் யாரால் இப்பெருமை வந்தது? அன்று ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன்பு சிலர் தமிழைத் தலைக்குமேல் தூக்கி வைத்ததால் அல்லவா. அன்னார்கள் அவர் காலத்தில் வாழ்ந்த மானுடரைப்போல் தாமுண்டு, தம் குடும்பம் சுற்றமுண்டு என வாழ்ந்திருப்பின், இன்றைக்கு நாம் இப்படிப் பேச முடியுமா - தமிழிலிருந்து

கிளைத்தவையே உலகின் அத்தனை மொழிகளும். விதை போட்டது, நட்டுப் பராமரித்தது அவரல்லவா. நாமோ பயிருக்குத் தண்ணீர்கூட ஊற்றாமல் வாடப் போடுகிறோம். உண்மையில் தமிழுக்குப் பாடுபட்டது, அரும்பாடுபட்டது, தமிழுக்குத் தலை கொடுத்தது நம் முன்னோரே. தமிழுக்காக தம் அரசையே துறக்கத் துணிந்திருக்கிறானே ஒரு மன்னன் - அந்த மாமன்னனாலல்லவா தமிழ் உலகின் தாய்மொழியாய் ஆனது. அவனல்லவோ தமிழ்த்தாயின் தவப்புதல்வன்.

வள்ளுவன், இளங்கோவன், கம்பன்.. எத்தனை எத்தனை பேர்.. தமிழுக்காகத் தங்கள் உடல் பொருள் ஆவியை மனமுவந்து தந்தவர். பத்தாயிரம் பாடல்கள், அதுவும் கவிநயம் சொட்டும், கருத்தாழம் மிக்க பாடல்களைப் படைப்பதென்பது எளிதான செயலா? எத்தனை உழைப்பு தேவைப்பட்டிருக்கும். தம் வாழ்நாள் பெருநோக்கமாகக் கொண்டவரல்லவா அப்படியொரு மகத்தான, புண்ணிய படைப்பை நிகழ்த்த முடியும். வள்ளுவன் தமிழின் தலைமகனல்லவா. பாரதி தமிழின் பெரும் படைப்பாளியல்லவா. நம் புலவர் மரபின் நவீனத் தந்தையல்லவா நம் பாரதி.

சில காலம் முன்னர் இம்மண்ணில் வாழ்ந்திருந்தாரே மொழிஞாயிறு பாவாணர், அவரல்லவா உண்மையான தமிழறிஞர், மொழிப் புலவர், தமிழின் தலைமகன். அவரன்றோ தமிழர் வீரத்தின், மானத்தின் தொடர்ச்சி. எத்தனை பாடுகள், எவ்வளவு இன்னல்கள். தமிழல்லவா அவர் உயிர் மூச்சாக இருந்திருக்கிறது. அவரல்லவோ செந்தமிழ்ச் செல்வன். அவராலல்லவோ தமிழுக்குப் பெருமை. அவரையல்லவோ தமிழன்னை தம் அன்புப் பிள்ளை, தம் அறிவுப் பிள்ளை எனப் பெருமையாகச் சொல்வாள். அவர் தமிழின் முத்துப்பிள்ளையல்லவா.

தேவநேயன் எனப் பெயரிடப்படிருந்தாலும் அவரைக் கிறித்தவர் எனச் சுட்டமுடியுமோ. தம் பிள்ளைகளுக்கு அவர் எத்தனை அழகிய பெயரைச் சூட்டி இன்புற்றார். மதத்தைவிட தமிழைத் தலைமேல் கொண்டவரல்லவா பெருமைக்குரிய பாவாணர்.

மொழிஞாயிறாம், தமிழ்ஞாயிறாம், தேவநேயப் பாவாணரைத் தொடக்கமாகக் கொண்டு “செந்தமிழ்ச் செல்வன்” எனும் புகழுக்குரியோரின் தமிழ்த் தலைமக்களின் வரிசை தொடங்கட்டும். நம் காலத்தின் முதலாவது செந்தமிழ்ச் செல்வன் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களே.

செந்தமிழ்ச் செல்வன் வரிசையில் அடுத்து, அடுத்தடுத்து யார்? சந்திரசேகரன் என அழைக்கப்படும் ஐயா சாத்தூர் சந்திரசேகரனாரை செந்தமிழ்ச் செல்வனாக உயர்த்தலாம், பெருமைப்படுத்தலாம். சேகரனாரின் தமிழ்ப்பணி ஐயமற பாராட்டுக்குரியது. சேகரன் அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ள நூல்கள் மதிப்புடையவை. குறிப்பாக எமது கருதுகோள்களுக்குப் பெரிதும் வலுச் சேர்ப்பவை.

புகழுக்குரிய சேகரனாரின் கூற்றுப்படி, ஆய்வு முடிவின்படி, உலகின் அனைத்து மொழிகளிலுள்ள வார்த்தைகளும் தமிழ் மொழியின் திரிபுகளே. உலக மொழிகள் யாவும் தமிழின் கிளை மொழிகள். கிடைக்கும் பதிவுகளிலிருந்து சேகரனார் மிகவும் அரும்பாடுபட்டு நூல்களை ஆக்கியிருப்பது தெரிகிறது. உலகளாவிய தமிழ், தமிழும் ஆங்கிலமும், இடைக்காலத் தமிழ் போன்ற அவா் படைத்த பல நூல்கள் பெரிதும் பாராட்டப்படுகின்றன.

யாம் சாத்தூர் சேகரனாரைத் தனிப்பட்ட முறையில் அறிந்ததில்லை. முன்னா் நாம் யார் - புத்தகத்திற்கான குறிப்புகளை இணையத்தில் தேடியபோது, குறிப்பாக பாவாணர் தொடர்பான குறிப்புகள் தேடியபோது, சாத்தூர் சேகரன் வெளியிட்டதாக ஒரு கோப்புக் கிட்டியது. அதில் ஏறத்தாழ அறுநூறு ஆங்கிலச் சொற்களை தமிழ் மூலம் கொண்டவை எனக் காட்டியிருந்தார். யாம் மலைத்து விட்டோம். உண்மையில் யாமும் தமிழுக்கும் ஆங்கிலத்திற்கும் உள்ள தொடர்புறவுகள் குறித்து சிந்தித்தே வந்தோமெனினும் அவரது முடிவுகள் வியப்பளித்தன. அப்போது எழுதிக் கொண்டிருந்த கருத்துக்கு, இது தொடர்பில்லாததாக இருந்ததால் அக்கோப்பினை சேமிப்பில் பதிந்துவிட்டு பாவாணரைத் தொடர்ந்தோம்.

அதோடு சேகரனாரை மறந்தே விட்டோம். சில மாதங்களுக்குமுன் தமிழ் - ஆங்கிலத் தொடர்பை வலுப்படுத்த எண்ணியபோதே சேகரனார் நினைவு வந்தது. எனினும் யாம் அவரது பெயரை மறந்து விட்டோம். யாம் நமது ஊர்க்காரர்தானே (சாத்தூர் - விருதுநகர் மாவட்டம்) மறந்தா போவோம் என நினைத்து அன்றைக்கு அவா் பெயரைக் குறிக்காமல் விட்டுவிட்டோம். எமது கணினியின் சேமிப்பில் தேடிச் சலித்து விட்டோம். யாம் நிறையச் சேமித்து வைத்திருக்கிறோம். விக்கிபீடியா பதிவு முதற்கொண்டு நாம் யார் புத்தகத்திற்குப் பயன்படுத்திய அத்தனை தரவுகளையும் பல்வேறு தலைப்புகளில் சேமித்து வைத்துள்ளோம். பெருங்கோப்புகளிலிருந்து அவரது கோப்புக்கான பெயரைத் தேடிக் கண்டுபிடிக்க இயலவில்லை.

சமீபத்தில் தமிழுக்குப் பாடுபட்டவர்களுக்குப் சிறப்புச் சேர்க்க வேண்டுமெனும் எண்ணத்தில் சில தமிழறிஞர்களைப் பற்றி யூடிபில் தேடினோம். கடந்த வாரத்தில் சாத்தூர் சேகரனார் பேசிய பதிவொன்று கிடைத்தது கண்டு மனம் மிக்க மிகழ்வுற்றது. சாத்தூர்க்காரரல்லவா அவர். முதிர்ந்த வயது. எனினும் மேடைப்பேச்சு அபாரம். எத்தனை மணி நேரம் பேசினாலும் கேட்கலாம். அவ்வளவு ஞானம். இந்த வயதிலும் தெளிந்த சிந்தனை. வியப்பிலும் வியப்பாக தமிழின் உலகத் தொடர்புகள் அவரிடமிருந்து வெள்ளமெனக் கொட்டுகிறது. இத்தனை தெளிந்த, சிறப்பிற்குரிய சிந்தனையாளர், அறிஞர், ஆய்வாளர், களப்பணியாளர், ஆசிரியர் பற்றி ஏன் அதிகளவில் தெரியவில்லை, பதிவுகளில்லை. எளிய குடியைச் சார்ந்தவரோ. பெரிய குடி எனில் உலகின் அத்தனை விருதுகளும் பட்டங்களும் கிடைத்திருக்குமல்லவா.

தமிழறிஞறிக்கேயுரிய எளிய உடை. எளிமையாகவும் வாழ்ந்திருப்பார். தமிழின் பெருமை உணர்ந்தோர் அப்படித்தான் இருப்பர். நல்லறிஞர் என்பது காணொளியைப் பார்த்த மாத்திரத்திலேயே தெரிகிறது. எளிய சொற்களில் மனதின் ஆழத்திலிருந்து பேசுகிறார்.

சேகரனார் பற்றிய கூடுதல் தகவல்கள் இணைய தளத்தில் கிடைக்கவில்லை. பெரிய பதிவுகள் ஒன்றும் எமது தேடலில் பெறமுடியவில்லை. முத்துக்கமலம் இணையதளம் நல்லதொரு கட்டுரை வெளியிட்டிருக்கிறது. இத்தனை பெரிய ஆய்வறிஞரைப் பற்றி விக்கிபீடியாவில் யாரேனும் தகவல்கள் பதிந்திருக்கலாமே. விக்கிபீடியா தளத்திற்குச் சான்றுகள் வேண்டுமல்லவா. தமிழறிஞரைப் பற்றி எந்த நாளிதழ், எந்த இதழ்கள் செய்தி வெளியிட்டிருக்கப் போகின்றன. இதுதான் தமிழறிஞரின், உண்மையாகத் தமிழுக்குப் பாடுபட்டோரின் உண்மை நிலை. தமிழறிஞர்கள் மனத்தால் பேசுகிறார்கள் - தமிழே உலகின் முந்துமொழி. தங்கள் அறிவால் பேசுகிறார்கள் - தமிழே உலகின் முதல்மொழி. தமிழ் தெரிந்தவராக, தமிழில் புலமை உள்ளவராக, தம்மைத் தமிழறிஞராக நினைக்கும் பிற பெரிய தமிழறிஞர்கள், பெரிய சாதி தமிழறிஞர்கள் அதை ஏற்றுக் கொள்வதில்லை. பிறருக்கோ கேலிப்பேச்சு.

உண்மை தெரியாமலேயே போகுமென்று நினைத்தீரோ? உண்மை என்றேனும் ஓர் நாள் வெளிப்பட்டே தீரும்.

நல்லதிலும் ஒரு கெடுதல் செய்தியாக, பெருமதிப்பிற்குரிய சேகரனார் அவர்கள் 2015 ஆம் ஆண்டிலேயே மறைந்துவிட்டாரெனப் பதிவுகள் சுட்டுகின்றன. அவரது விருப்பான தோழர்கள் பதிவுகள் இட்டுள்ளனர். தமிழுக்கும் தமிழ் வரலாற்றிற்கும் பெருமை சேர்ந்த சந்திர சேகரனெனும் நம் சாத்தூர் சேகரனார் செந்தமிழ்ச் செல்வனன்றோ. அது அவரது அயராத தமிழ்த் தொண்டிற்கு தமிழன்னை அளிக்கும் வெகுமதியல்லவா. தமிழறிஞருக்கு விருதால் பெருமை என்பதைவிட தமிழன்னைக்கு தமிழறிஞரால் சிறப்பு என்பதுதானே சாலப்பொருத்தம். எனினும் அன்னையும் சுரந்து அருள்பவளன்றோ..

தமிழறிஞரின் சாதி பார்ப்பது பெரும்பிழை. எமக்கு அன்புக்குரிய சேகரனாரின் சாதி குறித்து தெரியாது. இத்தனை உயர்ந்த தமிழறிஞர், தமிழ்த் தொண்டர் சாதி குறித்தெல்லாம் பேசியிருக்க மாட்டார் என உறுதியாக நம்புகிறோம்.

ஏனெனில், யாம் உறுதியாகவே உள்ளோம். யாரேனும் தம் சாதி, தம் மதம் குறித்து எழுதியோ, பேசியோ இருப்பின் அன்னாருக்கு செந்தமிழ்ச் செல்வன் எனும் சிறப்புப் பெற சிறிதும் தகுதியில்லை. செந்தமிழ்ச் செல்வன் - தமிழோடு இணைத்து உலக மானுடத்தைப் பற்றி பேசியவருக்கு மட்டுமே. வரும் காலத்தில் இதை மிகவும் உறுதியாகப் பின்பற்ற வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம். ஒருவரைச் செந்தமிழ்ச் செல்வன் எனும் உயர்வுக்குப் பரிசீலிக்கும்போது முதன்மையாகக் கொள்ள வேண்டியது தம் சாதி பற்றி, சாதிப் பெருமை பற்றி, தமது மதத்தைப் பற்றி ஏதேனும் பேசியுள்ளரா? எழுதியுள்ளரா? ஆம் எனில், அவர் எத்தனை பெரிய அறிவுடையவராக இருப்பினும் ஒதுக்கித் தள்ளுக. அன்னார் அத்தகுதிக்கு உரியவரன்று. அவ்வாறே, தமிழை உயர்த்தும் போதிலும் பிற மொழிகளைத் தாழ்த்தவும் வேண்டியதில்லை.

மதிப்பிற்குரிய சேகரனார் தமிழே சமற்கிருதத்திற்கு மூலம் எனப் புத்தகம் எழுதியுள்ளார். அது அவரது ஆராய்ச்சி நூல். அதை தக்க சான்றுகளோடு மறுக்கலாம். அதற்கு அங்கே இடமிருக்கிறது. சமற்கிருதத்தை மதிப்புக் குறைத்து எழுதவேண்டியதில்லை. அது கூடாது. தமிழர் மரபில் சமற்கிருதமும் தமிழிலிருந்து தோன்றியதுதானே. சமற்கிருத மொழியறிஞர் அதை மறுக்கலாம், வாதிடலாம். எனினும் நாம் சமற்கிருதத்தை தாழப் பார்க்கக் கூடாது. மொழி எனும் வகையில் மானுடப் பண்பாட்டிற்கு அது ஆற்றிய பங்களிப்பு பெரிது. சேகரனார் தமிழ்மேல் பெரும் பற்றுக் கொண்டவரென்பதால் பரவாயில்லை. வரும் காலத்தில் செந்தமிழ்ச்

செல்வனைத் தேர்ந்தெடுக்கும்போது ஆய்வு நோக்கில் பிற மொழிகளை நோக்கியிருக்கலாமே தவிர, உலகின் பிறமொழிகளை குறைத்து மதிப்பிட்டிருக்கக் கூடாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழருக்கு எம்மொழியும் நம்மொழியே..

யாம் முன்பே சுட்டிக் காட்டிய சுமேரிய மொழியில் பெரும் ஆராய்ச்சி மேற்கொண்ட மதிப்பிற்குரிய லோகனாதன் கிருஷ்ணன் (முக நூல் பதிவுப் பெயர்) அவர்களும் செந்தமிழ்ச் செல்வன் உயர்விற்குத் தகுதியானவரென்றே நினைத்திருந்தோம். ஆயினும் அறிஞருடைய முகநூல் பதிவுகள் வியப்பளிக்கின்றன. அறிஞர் சைவத்திற்கும் மிகுந்த முக்கியத்துவமளித்து வந்துள்ளார். பதிவுகளின்படி சைவமே சற்று தூக்கலாக உள்ளதுபோல் தெரிகிறது. சைவமும் போற்றக் கூடியதுதான். எனினும் செந்தமிழ்ச் செல்வன் எனும் உயர்விற்கு மற்ற அனைத்தையும்விட தமிழே முதன்மையாக இருக்க வேண்டுமென்பதே விதி. சைவப் பற்றாளருக்கு சைவமே முதன்மை. அன்னார்களின் தமிழ்ப் பற்றுக்கூட சைவத்தை முன்னிட்டோ?

வைணவருக்கு எல்லாமே கண்ணன். அன்னாருக்கு கண்ணனுக்குப் பின்தான் தமிழ். எனில் தமிழர் யார்? தமிழ்மீது பெறும்பற்றுக் கொண்டோர் யார், தமிழைத் தலைக்குமேல் தூக்கிப் பிடிக்கும் தமிழர் யார் எனும் கேள்விகள் தோன்றுகின்றனவல்லவா.

வயது ஏற ஏற மனிதர்கள் இறுதி நிலை நோக்கி, இறுதியான கருத்து நோக்கி நகர்ந்து வருவார்கள் எனத் தெரிகிறது. சுமேரியத் தமிழ் குறித்து பெரும் ஆராய்ச்சிகள் செய்த ஐயா லோகனாதன், ஞான் ஏன் ஓர் சைவன் எனும் தலைப்பில் முப்பது கட்டுரைகள் வெளியிட்டுள்ளார். எமது கேள்வி அது ஏன் ஞான் ஓர் தமிழன் என இல்லை என்பதே. சிறப்பான தமிழறிஞர் மறைந்துவிட்டாரென முகநூல் பதிவு சுட்டுகிறது. மறைவதற்கு ஆறு மதங்களுக்குமுன் அதாவது 18.12.14 அன்று பதிந்த இடுகை - 4, நூலிய அறிவியல் கட்டுரையில் மிகத் தெளிவாகச் சுட்டுகிறார் - உரக்க உரக்கக் கூறுகின்றோம். ஞானோர் சைவன், நீங்களும் எம்மைப்போல் சைவன் ஆகுங்கள், இறைவனை கூத்தப்பிரானாகக் கண்டு மகிழுங்கள். பேராசிரியர் சுட்டிக் காட்டியிருப்பது - இது மதவெறி அல்ல. அறிவு வழி. இது மதமாற்றமல்ல. உண்மையைக் காண அழைப்பது. இன்னொரு பதிவில் தாம் சாதிய சைவனும்

அல்ல, மெய்க்கண்டார் வழியில் செல்லும் மெய் கண்டார் வழி அறிவியல் சைவன் என்கிறார்.

டாக்டர் லோகனாதன் சுமேரிய மொழியறிஞர், சுமேரிய மொழியை ஆராய்ந்தறிந்து தமிழுக்குப் பெரும்தொண்டு செய்த தமிழறிஞர் என்பதைவிட அவரை சைவ சித்தாந்தப் பேரறிஞராகக் கொள்வதே பொருத்தமோ.

சாதி பேதங்கள் மடிந்தொழிய மெய்கண்டாரியம் செழித்தோங்கி வளர வேண்டும் என விரும்பிய உலகனார், அது ஏன் தமிழ் மொழி சிறப்புற்றாலே, தமிழைத் தூக்கிப் பிடித்தாலே சாதி பேதம் பின்னுக்குப் போய்விடும் என ஏன் சுட்டவில்லை. தமிழை மீட்க வேண்டும் என்பது சரியா அல்லது மெய்கண்டாரியத்தை மீட்க வேண்டும் என்பது சரியா.

நாற்பதாண்டுகளுக்கும்மேல் சுமேரிய மொழியைப் படித்தறிந்து, தமிழுக்கும் சுமேரியத்திற்குமான தொடர்புகளை மிகச் சீரிய முறையில் செம்மையாக வெளிக் கொணர்ந்த உலகன் என அழைக்கப்பட்ட லோகநாதன் ஐயாவிற்கு செந்தமிழ்ச் செல்வன் எனும் சிறப்புக் கொடுப்பது பொருத்தமெனினும், தம்மைத் தமிழனாக அல்லாமல் சைவனாக வெளிப்படுத்தியதால் அவ்வுயர்வு அளிக்கப்பட இயலாததாகிறது. உலகனாரின் தமிழ்த்தொண்டும், புகழும் சிறக்க வாழ்த்துக்கள்.

மறைந்த தமிழர்கள் என்பதாலே இவ்வாறு சுட்டிக் காட்டுகிறோம். இன்னும் சில தமிழர்கள் இருக்கக் கூடும். தம் வாழ்வையே தமிழுக்கென அர்ப்பணித்த தமிழறிஞர்களை அடையாளம் கண்டு அவர்களையும் மேற்குறிப்பிட்ட முறையில் சீர் தூக்கிப் பார்க்க வேண்டும். அவர்கள் உறுதியாக பாவாணருக்குப்பின் வந்தவர்களாக இருப்பது கட்டாயம். பாவாணரே தொடக்கம். பிறர் அவருக்குப்பின் வந்தவர்களாக இருப்பது அவசியம்.

தாம் வாழும் காலத்திலேயே ஒருவருக்கு சிறப்புச் சேர்ப்பதே பெருமையானது, சிறப்பானது. அவ்வகையில் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் சீரிய தமிழறிஞர்களைக் கண்டறிந்து அவர்களைச் செந்தமிழ்ச் செல்வர்களாகச் சிறப்பிக்க வேண்டும். அன்னார்கள் தமிழறிஞர்களாக இருக்க வேண்டும். சாதி, மதத்திலிருந்து விலகியிருந்திருக்க வேண்டும்.

வாழும் தமிழறிஞர்களுக்குக் கொடுக்கும்போது, அவரைப் பற்றிய அறிவிப்புச் செய்து, அன்னார் தமது சாதி, சாதிப் பெருமை குறித்தோ, தமது மதம் குறித்தோ பொதுவெளியில் பேசியதுண்டா, எழுத்தில் பதிந்ததுண்டா என்பதை நுட்பமாகக் கண்டறிவது முக்கியம். அன்னாரிடமிருந்து எழுத்துப்பூர்வமாக சாதி மதம் சார்ந்து செயல்படவில்லை, இனியும் செயல்பட மாட்டோம் என எழுத்துப்பூர்வமான உறுதிமொழி பெறுவதை கட்டாயமாக்கலாம். இது தமிழறிஞர் மனத்தில் சிறு நெருடலை ஏற்படுத்தக் கூடுமெனினும், உலகிற்கு தம்மைப் பற்றி தெளிவாக உணர வைத்துவிட்டதாகவும் தமிழறிஞர் எடுத்துக் கொள்ளலாமே.

தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழறிஞர்களில் ஒரு சிலரை செந்தமிழ்ச் செல்வன் உயர்விற்குப் பரிசிக்கலாம். குறிப்பாக மதிப்பிற்குரிய ம.சோ. விக்டர் அவர்களைப் பரிசிலிக்கலாமோ. அரைநூற்றாண்டு காலமாக தமிழ் குறித்து சிந்தித்து வருகிறார். இலக்கிய நூல்கள் படைப்பதைவிட ஆய்வு நூல்கள் படைப்பது கடினமான பணி. அதற்கு பல்வேறு நூல்களைப் படிக்க வேண்டும். தரவுகளைத் தேர வேண்டும். ஒப்பிட வேண்டும். சிந்திக்க வேண்டும். அறிஞர்களோடு உரையாட வேண்டும். ஆவணங்களைத் தேட வேண்டும்.

எபிரேயத்தின் தாய் மொழி தமிழே, சமற்கிருத தாய்மொழி தமிழே, இந்தியத் தாய் மொழி தமிழே, உலக மொழிகளில் தமிழின் வேர்ச் சொற்கள், இசுலாம் தமிழர் சமயம், குமரிக் கண்டமும் ஆப்பிரிக்கக் கண்டமும், எபிரேய மொழியில் தமிழின் வேர்ச் சொற்கள், உலகளாவிய தமிழ், The Babylonian Tamil, Tamil and Hebrew, மேற்கிலும் தமிழ், தமிழும் விவிலியமும், தமிழ் நாட்டுக் கிறித்தவம், தமிழரின் எண்ணியல், வானியலும் தமிழும், சொல் வரிசை நூல்கள் என தமிழறிஞர் தமிழ்மொழி சார்ந்து பலவித நூல்களை இயற்றியுள்ளார். தம் வாழ்வை தமிழின் மேன்மை சார்ந்தும், தமிழர் நல்வாழ்வு சார்ந்தும் அமைத்துக் கொண்ட இந்த பெருமைக்குரிய தமிழறிஞருக்கு செந்தமிழ்ச் செல்வன் உயர்வு தகுமன்றோ.

எமக்கு தமிழறிஞரோடு நேரடிப் பழக்கமோ தொடர்போ கிடையாது. தமிழறிஞர் செந்தமிழ்ச் செல்வன் எனும் சிறப்புக்குரியவராக்கப்பட வேண்டும் எனும் எண்ணத்திற்குப் பிறகே தமிழறிஞரை நினைவில் கொண்டோம். யாம் தமிழறிஞரின் எந்தப் புத்தகத்தையும் இதுவரையிலும் வாசித்ததில்லை. சமீபத்தில் சில காணொளிகளைப் பார்த்தோம். தமிழறிஞர் பேச்சிலும் சிறப்பே.

தமிழரின் வரலாற்றை மீட்டெடுக்கும் படைப்புகளைக் கொடுத்துள்ள தமிழறிஞர் ம.சோ. விக்டர் கிறித்தவரென அவரது பெயரிலிருந்தே தெரிகிறது. எனினும் கிறித்தவ மதம் சார்ந்து செயல்பட்டிருக்கிறாரா என்பதை அறிந்து செந்தமிழ் செல்வன் உயர்வு வழங்குவது சிறப்பு. தமிழறிஞர் அப்படி இல்லை எனத் தெரிகிறது. எனினும் உலகின் நன்மதிப்புக்காக இது அவசியமாகிறதல்லவா.

செந்தமிழ்ச் செல்வன் எனும் சிறப்பின் முக்கியத்துவம் என்னவெனில், சைவத்திற்கு நாயன்மார்கள்போல், வைணவத்திற்கு ஆழ்வார்கள்போல், இனி தமிழுக்கு செந்தமிழ்ச் செல்வர்கள். மிக்க பொருத்தமன்றோ. நாயன்மார்கள் சிவனே பெரிதென்று வாழ்ந்தவர்கள். ஆழ்வார்களோ திருமாலே பெரிதெனக் கொண்டவர்கள். இருவரது தமிழ்ப் பணியும் வெகு சிறப்பிற்குரியது. அவர்களால் இறைவனுக்கும் தமிழுக்கும் பெருமை, உயர்வு.

செந்தமிழ்ச் செல்வர்களுக்கோ தமிழே பெரிது. மதத்தைவிட தமிழே பெரியதெனக் கொண்டவரே செந்தமிழ்ச் செல்வர். செந்தமிழ் செல்வர் தமிழறிஞர். தம் அறிவால், ஆய்வால், தமிழ் மொழியை உயர்த்துபவர், வளர்ப்பவர், செம்மையாக்குபவர், செழிமைப்படுத்துவர்.

அவர் பிற மதத்தவராக இருக்கலாம். எனினும் தம் மதமா தமிழா என்னில் அவர் தமிழையே தேர்ந்தெடுத்திருக்க வேண்டும்.

ஆழ்வார்கள் திருமால் வழிபாட்டில், கோவில்களில் இடம்பெற்று சிறப்புச் செய்யப்படுகின்றனர், வழிவழியாக நினைவு கூறப்படுகின்றனர். நாயன்மார்களுக்கு சிவன் கோவில்களில் சிறப்புச் சேர்க்கப்படுகிறது. அத்தனை நாயன்மார்களும் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படுவதும் மரபாக இருந்து வருகிறது.

எனில், செந்தமிழ்ச் செல்வர்களை முருகன் திருக்கோவில்கள் மூலம் வழிவழியாகக் கொண்டுவரலாமல்லவா. செந்தமிழ்ச் செல்வன் என உயர்த்தப்பட்டவருக்கு, பஞ்சலோகச் சிலையொன்று உருவாக்கப்பட்டு, முருகன் கோவில்களில் வைக்கப்பட்டால், அன்னார்கள் தமிழ்ப் பணியும், வாழ்வும் என்றென்றும் நினைக்கப்படுமன்றோ. எனில் இந்து மதத்தைப் பின்பற்றுபவருக்கு இது ஏற்புடையதாகலாம். கிறித்தவத்தில் நம்பிக்கை கொண்ட தமிழறிஞருக்கு? இசுலாத்தில் நம்பிக்கையுள்ள தமிழறிஞர் சிலை மூலம் நினைவு கூறப்படுவதை ஏற்பாரா?

ஆகவேதான் யாம் மீண்டும் சுட்டுகிறோம், செந்தமிழ்ச் செல்வனுக்கு தமிழே பெரிது. கிறித்தவராக இருக்கலாம். எனினும் அன்னாருக்கு முருகன் கோவிலில் சிலையொன்று வைத்து சிறப்புச் செய்வதில் மாற்றுக் கருத்திருந்தால்? தமிழறிஞர் மறுத்தால் பரிசீலிக்கலாம். அவரை எப்படி நினைவுகூறலாம் என்பதை வேறு வழிகளில் ஆராயலாம். அன்னார்கள் மறுக்கிறார்களா என்பதைப் பார்க்கலாம். பின் இது குறித்து முடிவெடுத்துக் கொள்ளலாமோ.

செந்தமிழ்ச் செல்வனாக உயர்த்தப்படும் தமிழறிஞருக்கு இரண்டு அடிக்கு மிகாமல் ஒரு அடிக்குக் குறையாமல் அவர் விரும்பியபடி, அவரது தோற்றத்தில் பஞ்சலோக சிலையொன்று நிறுவப்பட வேண்டும். இச்சிலைகள் முருகன் ஆறுபடை வீடுகளில் சுவாமிமலை மற்றும் பழமுதிர்ச்சோலை தவிர்த்து, பிற நான்கு படை வீடுகளில் இடம்பெறச் செய்யலாம். முருகன் கோவிலின் கருவறைக்குச் செல்லும் முன்மண்டபத்தில் செந்தமிழ்ச் செல்வர்களின் சிலைகள் இடம்பெறலாம். தமிழறிஞர்கள் என்பதால் கைகூப்பிய நிலையில் சிலை இருக்க வேண்டியதில்லை. சிலை கம்பீரமாக இருப்பது நல்லது. யாம் பார்த்தவரை தமிழறிஞருக்கென்று ஒரு அறிவுச்செருக்கு இருக்கிறது. அது அவர்களது மரபிலேயே இருக்கிறது போலும். தமிழறிஞர்களது பேச்சும், மொழியாளுமையும், அந்தச் சுயமதிப்பும், பெருமிதமும், தமிழ்ப் பற்றும்.. அழகோ அழகு. முக்கியமாக அந்த மீசை.

செந்தமிழ்ச் செல்வர்களின் பிறந்த நாளுக்கு அவர்களது சிலைகளுக்கு சிறப்புச் சேர்க்கலாம். அவ்வாறே ஆண்டில் ஒரு நாள் ‘‘செந்தமிழ்ச் செல்வர்கள் விழா’’ நாளாக சிறப்புச் செய்யலாம். அவர்களது சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் செல்லலாம். இதில் மேற்கொள்ளப்பட வேண்டிய மரபுமுறைகளை ஆன்மீகப் பெரியவர்களோடு, தமிழறிஞர்களோடு கலந்து பேசியும் முடிவெடுக்கலாம்.

வரும் காலங்களில் வாழும் தமிழறிஞர்களுக்கே செந்தமிழ்ச் செல்வன் சிறப்பு. தமிழறிஞர்கள் தமக்கு இப்படியொரு சிறப்புச் செய்யப்பட்டது என்பதை அறிந்திருக்க வேண்டும். ஒருமுறை செந்தமிழ்ச் அறிவிக்கப்பட்டுவிட்டால் அடுத்து வரும் அரைநூற்றாண்டுகள் இடைவெளிவிட்டு அடுத்த செந்தமிழ்ச் செல்வனை அடையளாம் காணலாம். அதாவது நாற்பத்துஎட்டு வருடங்கள் முடிந்திருக்க வேண்டும். செந்தமிழ்ச் செல்வன் அடையாளம் காணப்பட்டு, ஆராயப்பட்டு, உறுதி செய்யப்பட்டு, அடுத்த ஒரு வருடத்திற்குள் அறிவிப்புச் செய்திடல் வேண்டும்.

அறிவது, ஆராய்வது, பரிசீலிப்பது எல்லாம் நல்லோர் குழுவால் மறைவாக ஓராண்டுக் காலத்திற்குள் நிகழ வேண்டும். இதில் எவ்வித அரசியலும் கூடாது. பரிந்துரைப்பது அறவே கூடாது. ஐம்பதி வருட இடைவெளியில் அப்படியான தமிழறிஞர் உறதியாக வெளிப்படுவார். அவரை அடையாளம் கண்டு தெளிக. அன்னார் தமிழறிஞராக இருத்தலே தகுதி. பிற எதுவும் தகுதியல்ல. அறிஞர் எனக் காட்டுவதற்காக சிலர் எழுதிக் குவிக்கக் கூடும். அவர் அறிஞர்தானா என்பதையும் தெளிதல் அவசியம். தமிழறிஞருக்கென்று சில நல்லியல்புகள் இருக்கின்றன.. அவற்றை தமிழறிஞர் கொண்டுள்ளாரா எனத் தெளிக. மற்றதெல்லாம் தமிழ்க் கடவுளான முருகன் பார்த்துக் கொள்ளட்டும்.

வாழிய செந்தமிழ்ச் செல்வர்கள்!

வளர்க தமிழறிஞர்களின் தமிழ்ப் பணி!

**வாழிய செந்தமிழ்; வாழ்க நற்றமிழர்; வாழிய பாரத மணித்திருநாடு!!**

25. இலக்கியத்திற்கு தலைமைப் புலவன் பட்டம், தமிழ்மொழியறிஞருக்கு செந்தமிழ்ச் செல்வன் எனும் உயர்வு. எனில், தமிழ்ப் பண்பாடு, தமிழர் கலாச்சாரம், தமிழர் வரலாற்று மீட்டெடுப்பு போன்ற தமிழர் மேன்மை குறித்துப் பாடுபடுபவருக்கும் சிறப்புச் செய்ய வேண்டியதும் கடமையல்லவா. தமிழர் நல்வாழ்விற்குப் பாடுபடும் அன்னார்களை, தமிழின் பெருமைகளை, கலாச்சார அடையாளங்களை உலகளாவிய அளவில் கொண்டு செல்பவருக்கு எப்படிச் சிறப்புச் சேர்க்கலாம்.

தமிழ்ச் செல்வி.. அழகாக இருக்கிறதல்லவா. எத்தனை அழகு நம் தமிழ்.. ஆம், தமிழை, தமிழரின் சிறப்பை, உலகளாவிய அளவில் முன்னிறுத்தும், கொண்டு செல்லும் பெருமைமிகு மகளிருக்கு **"தமிழ்ச் செல்வி"** எனும் சிறப்புப் பட்டம் அளித்துச் சிறப்பிக்கலாம். தமிழ்ச் செல்வி எனும் பட்டத்திற்குத் தகுதியுடையோர் தமிழை, அதன் கலாச்சார வேர்களை, தமிழர்களின் ஆழத்தை உலகளாவிய அளவில் முன்னெடுத்துச் செல்பவராக இருக்க வேண்டும்.

நம் காலத்தின் முதலாவது தமிழ்ச் செல்வியை நாம் அடையாளம் காண்டு சிறப்பிக்க வேண்டும்.

## தமிழ்ச்செல்வி வாழ்க! வாழிய தமிழ்!!

தமிழ்ச் செல்வியின் தமிழ்த் தொண்டினைப் பாராட்டும் விதமாகவும், அவரது பணிகளை நினைவு கூறும் விதமாகவும், அவருக்கு குறிப்பிட்ட சடங்கு முறைகளைச் செய்வது சிறப்பு. ஆயிரம் பேரிடமிருந்து ஆயிரம் ஒரு கிராம் பொற்காசுகள் கொடையாகப் பெறப்பட வேண்டும். ஆயிரம் பொற்காசுகளில், இரு நானூறு பொற்காசுகள் கொண்டு தமிழ்ச்செல்வியின் இரு பாதங்கள் செய்யப்பட வேண்டும். பொற்பாதங்களை தமிழ்ச்செல்வியின் பாதங்கள் அளவிற்கே, அவரது பாதங்களைப் போன்றே இடது, வலது என இரு நானூறு பொற்காசுகளில் செய்து கொள்ள வேண்டும். நூறு காசுகளில் அதாவது நூறு கிராம் பொன்னில் அழகியதொரு பதக்கமும், அடுத்த நூறு கிராமில் சிறப்பானதொரு பொற்கிரீடமும் (அழகிப் போட்டிகளில் சூட்டப்படுவது போன்று) செய்ய வேண்டும்.

தமிழ்செல்வியைத் தேர்ந்தெடுத்து அறிவிப்புச் செய்தபின் மேற்காணும் நடைமுறைகள் செய்யப்பட வேண்டும். தமிழ்ச் செல்வியை ஒவ்வொரு பதினெட்டு ஆண்டுகளுக்கும் ஒருவர் எனத் தேர்வு செய்ய வேண்டும். அவருக்கான தேர்வு, அறிவிப்பு விழா எடுப்பு போன்றவற்றை ஓராண்டுக்குள் நிறைவு செய்திட வேண்டும். எனில் நூறு ஆண்டுகளில் ஐந்து தமிழ்ச் செல்விகள் தேர்ந்தெடுக்கப்படுவர். ஆயிரம் ஆண்டுகளில் ஐம்பது தமிழ்ச் செல்விகள். ஐம்பது என்பதை நாற்பத்து எட்டு எனக் கொள்வதும் பொருத்தமுடையது.

பதினெட்டு ஆண்டுகள் முடிந்தபின்னர் ஒரு வருடத்திற்குள்ளாக விழா எடுத்தல் எனக் கொண்டால் இருபதாண்டுகள் கணக்கு சரியாக வருகிறதல்லவா.

தமிழ்ச்செல்வி தேர்வு, அவருக்கான பதக்கம், மகுடம் ஆகியவை தயாரானவுடன் அவருக்கான விழா நாளைக் குறித்துவிடலாம். விழாநாள் முழுநிலவாக இருப்பது சிறப்பு. ஆனி அல்லது ஆடியில் வரும் முழுநிலவாக இருப்பது நன்று. பங்குனி, சித்திரை முழுநிலவு நாளில் விழா எடுப்பதும் பொருத்தமே. விழாவினை ஒவ்வொரு தமிழ்ச் செல்விக்கும் ஒவ்வொரு மாத முழுநிலவில் நடத்துவதும் சிறப்பு. எனில் பங்குனி தொடங்கி ஆடி வரையிலான மாதங்களின் முழுநிலவு நாளன்று விழா நடைபெறுவது தகும். பொன் நகைகளோடு, விழா நாளில் உடுத்த தமிழ்ச்செல்விக்கு அழகியதொரு பட்டுப் புடவையும்

அணிவிப்பது கூடுதல் சிறப்பு. புடவையோடு, விழா நாளில் அவர் அணிவதற்கான பிற உடைகளையும் கொடுப்பதே முறை.

விழா சூரிய மறைவிற்கு முன்னரே தொடங்கிவிட வேண்டும். விழா நாளில் தமிழ்ச் செல்விக்கு நீராட்டும் சடங்கு நிகழ வேண்டும். நீராட்டலின் தொடக்கத்தில் சூரியன் தெரிய வேண்டும். அதாவது, கவனத்தில் கொள்ள வேண்டியது சூரியன் மறைந்திருக்க கூடாது. சூரிய வெளிச்சம் இருப்பது நன்று. சூரியனை மேகங்கள் மறைத்திருக்கலாம். எனினும் சூரியன் மறைந்திருக்கக் கூடாது. அதற்கேற்றவாறு காலத்தைச் சரியாகக் கணக்கிட வேண்டும்.

தமிழ்ச் செல்வி நீராட்டலுக்கு உலகெங்கிலுமுள்ள புகழ்பெற்ற, பெரிய, நாற்பத்தெட்டு ஆறுகளிலிருந்து புனித நீர், நற்பத்து எட்டுக் குடங்களில் எடுத்துக் கொள்ள வேண்டும். வெள்ளிக் குடமாக இருப்பது நன்று. குடங்கள் பத்துப்படி நீர் கொள்ளத்தக்கதாக இருப்பது சிறப்பு. இந்திய ஆறுகள் பதினெட்டும், உலகின் பிற பகுதிகளில் உள்ள ஆறுகள் முப்பதுமாகக் கொள்வது சிறப்பு.

புனித நீரை அப்படியே நீராட்டலுக்குப் பயன்படுத்தலாமா அல்லது இளஞ்சூடாக சூடேற்றிக் கொள்ளலாமா என்பதை தமிழ்ச் செல்வியோடு கலந்து பேசி முடிவெடுத்துக் கொள்ளலாம். இளஞ்சூடாக நீராட்ட வேண்டுமெனில் விழா நாளன்று தனியாக ஒரு பாத்திரத்தில் சூடாக்கி, பின்னர் குடத்திற்கு மாற்றிக் கொள்ளலாம்.

பல்வேறு நாடுகளிலிருந்தும் ஆற்றுநீரைக் கொண்டு வருவது எளிதே. இருபது லிட்டர் பிளாஸ்டிக் கேனில் அல்லது பத்துப்பத்து லிட்டர் கேனில் நீரெடுத்து விமானத்திலேயே அனுப்பிவிடலாம். தமிழர்கள் அனைத்து நாடுகளிலும் வாழ்வதால், அவர்கள் மூலமாக நாற்பத்து எட்டு ஆறுகளில் நீரெடுத்து அனுப்புமாறு ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

விழா மேடை திடலின் மையத்தில், பத்தடி உயரத்தில், நாற்பத்து எட்டு அடி நீள அகலத்தில் அமைக்கப்பட வேண்டும். மேடையின் நான்கு புறமும் திறந்த வெளியாக இருக்க வேண்டும். தமிழ்ச் செல்வி உடைமாற்ற, மறைவாகச் செய்ய வேண்டியவற்றிற்கு, இரு அடுக்காக திரை அமைக்கப்பட்டு, அதை தாங்கிப் பிடிக்கும் பெண்கள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அதாவது முதல் அருகில் ஒரு மறைவு, அதற்கு அடுத்து தேவையெனில் மற்றொரு மறைப்பு.

விழா மேடையிலும், மேடைக்கு அருகிலும் மின்சார விளக்குகள் பயன்படுத்தக் கூடாது. மேடையில் தீபங்கள் மற்றும் பந்தங்கள் மூலமாகவே வெளிச்சம் இருக்க வேண்டும். பந்தங்களை கையால் பிடிக்காத வண்ணம், அதற்கென்று அமைப்புகள் ஏற்படுத்தி நிலையாக இருக்குமாறு வைக்க வேண்டும். பந்தத்திலிருந்து நெருப்பு மேடையில் படாதவாறு கவனமாகக் திட்டமிட வேண்டும்.

நீராட்டலில் முதல் நீராக கங்கையும், நாற்பத்து எட்டாவது குடத்து நீராக காவிரியும் அமைய வேண்டும். நீராட்டலின்போது தமிழ்ச் செல்வியை வெள்ளிப் பலகையில் அமர்த்தி நீராட்டுவது சிறப்பு. ஒவ்வொரு ஆற்று நீரிலிருந்தும் ஒருபடி நீர் தலைக்கும், அடுத்தபடி வலது தோள், அடுத்தபடி இடது தோள், அடுத்தபடி பாதங்கள் எனும் வகையில் நான்கு படி நீர் ஊற்ற வேண்டும். தமிழ் செல்விக்குமுன் சிறியதொரு வெள்ளிப் பலகையில் பொன் பாதங்கள் வைக்கப்பட்டு இருபாதங்களுக்கும் ஒருபடி நீர் என ஊற்ற வேண்டும்.

இவ்வாறு ஒவ்வொரு ஆற்று நீராக ஊற்றியபின் மீதமிருக்கும் நீரை பெரியதொரு பாத்திரத்தில் ஊற்றி வைக்கலாம். எனில் அப்பாத்திரத்தில் நாற்பத்து எட்டு ஆறுகளின் புண்ணிய நீரும் இருக்கும். அதை விழாவைக் காண வந்திருக்கும் கூட்டத்தினர் மீது தெளித்து விடலாம்.

தமிழ்ச் செல்விக்கு அம்மனுக்குரிய நீராட்டல்கள் வைக்கலாமா என்பதை பெரியவர்கள் கலந்து பேசி முடிவெடுக்கலாம். ஆம் எனில், நாற்பத்து எட்டாவது ஆற்று நீராட்டலுக்குப்பின் பால் கொண்டு குளிராட்டலாம். முன்புகூறியது போலவே தலை, வலது இடது தோள், பாதம் மற்றும் பொற்பாதங்கள் என ஐந்துபடி பால் ஊற்றலாம். அவ்வாறே மஞ்சள் உள்ளிட்ட பிற நீராட்டங்களும் இடம்பெற வேண்டும். இறுதியாக, அனைத்து ஆறுகளின் நீரும் கலக்கப்பட்டுள்ள நீரால் நீராட்டி, நீராட்டு விழாவை முடிப்பது சிறப்பு.

நீராட்டலுக்குப்பின் தமிழ்ச் செல்விக்கு தேவையான பானங்கள், ஊட்டங்கள் அளிக்கலாம். இதன்போது மேடையை திரையால் மறைத்துக் கொள்வது உசிதம்.

யாம் விழா எப்படி நிகழ வேண்டும் என்பதை சற்றே கோடிட்டுக் காட்டியுள்ளோம். விழாக் குழுவினர் தகுந்த திட்டமிடல்களோடு, பெரியவர்களிடம், உரியவர்களிடம் கலந்துபேசி அனைத்து முன்னேற்பாடுகளையும் மிகக் கவனமாக, நேர்த்தியாக, காலக் கணிப்போடு திட்டமிடுவது அவசியம். உதாரணமாக

நீராட்டலின்போது வெளியேறும் நீரை, விழா மேடையிலிருந்து வெளியே எவ்வாறு எடுத்துச் செல்வது என்பதைத் திட்டமிட வேண்டும் அல்லது நீர் மேடைக்குக் கீழேயே போய்விடுமாறு சற்றே மிகச்சிறிய இடைவெளிவிட்டு பலகைகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது மேடையின் விரிப்பு நீராட்டலுக்குப்பின் புதிதாக மாற்றக் கூடியதாக இருக்க வேண்டும். சற்று சிந்தித்தால் ஏதேனும் நல்ல தீர்வொன்று தென்படும். அவ்வாறே நிகழத்துக.

தமிழ்ச்செல்விக்கு நாற்பத்து எட்டு நதிகளின் புனித நீராட்டல் கட்டாயமானது. பிறவற்றை தமிழ்ச் செல்வியாக ஆகுபவரின் விருப்பமறிந்து செயல்படுத்துக. பட்டு அணிந்து மிகச் சிறப்பான அலங்காரங்கள் செய்வதும் பொருத்தமே.

அலங்காரம் முடிந்தபின் மேடை எண்ணமலர்களால் கூடுதலாக அலங்கரிக்கப்படலாம். மலர்ச் சரங்கள், பூங்கொத்துகள், மலர்க் கூட்டங்கள் போன்றவை இடம் பெறலாம்.

தமிழ்ச்செல்வியை சிறப்பிக்கும் விதத்தில் அவரை வெள்ளி இருக்கையில் அமர வைத்து அவருக்கான பதக்கத்தை அணிவிக்கலாம். அவ்வாறே அவரது பொன் மகுடத்தையும் சூட்டலாம். பதக்கம் அணிவிப்பவர், மகுடம் சூட்டுபவர் என சிறப்பு விருந்தினர்கள் இடம்பெறலாம். ஆட்சியாளர்களாக இல்லாமல் தமிழறிஞர்களாக, தமிழ்ப் பற்றாளர்களாக இருப்பது நன்று. அரசியலாளர் எனில் அதில் தமக்கு ஏதாவது பெயர் கிடைக்குமா எனப் பார்க்க கூடும். ஏனெனில் நமது காலத்திய அரசியல் அவ்வளவு தரம் கெட்டுப்போய்க் கிடக்கிறது. தேர்ந்தெடுப்பதில் கவனம் கொள்க. சிறப்பு விருந்தினர்கள் உலகளாவிய அளவில் பெயர் பெற்றவர்களாக இருப்பதும் கூடுதல் சிறப்பு.

ஒவ்வொரு நிகழ்வின் போதும் மங்கல இசைகள் இடம்பெறுவது சிறப்பு. உதாரணமாக முதலாவது நீராட்டலுக்கு நாதஸ்வரம், மேளம் இடம் பெறலாம். ஒவ்வொரு நீராட்டலுக்கும் ஒவ்வொரு இசையை, இசைக் கருவிகளை மீட்டலாம். ஒரு நீராட்டலுக்கு தபேலாக்களின் இசை, ஒன்றிற்கு வயலின், ஒன்றிற்கு கிதார், ஒன்றிருக்கு மிருதங்கம் என.

மகுடம் சூட்டும்போது வீணை மீட்டுவது அருமை. பதினெட்டு வீணை இசைப்பவர்கள் சேர்ந்து ஒரு மங்கல இசையை வெளிப்படுத்துவது அருமையானதாக இருக்குமன்றோ.

எனில், இசைக்கலைஞர்களுக்கு மேடையைச் சுற்றிலும் போதுமான இடம் ஒதுக்க வேண்டியது அவசியம்.

பட்டணிந்து, பதக்கம்சூடி, மகுடம் வைத்த தமிழ்ச் செல்வி, அதன்பின்னர் மங்கல வாத்தியங்கள் முழங்க பெரியதொரு தாம்பாளத் தட்டில் பொற்பாதங்கள் வைக்கப்பட்டிருக்க, அதில் அதாவது தமிழ்ச்செல்வியின் பாதங்களில் மூன்றுபடி பால் ஊற்ற வேண்டும். இதன் போது ‘‘வாழ்க நிரந்தரம்’’ பாடல் ஒலிக்க வேண்டும். பொற்பாதங்களில் தமது பாதங்களை நுழைத்து, ‘‘அகிலம் புகழும் தமிழ்ச்செல்வியாக’’ எழுந்தருள வேண்டும். இதுவே விழாவின் உச்சம்.

ஒருவேளை தமிழ்ச் செல்விக்கு அருள்வரக் கூடுமோ. அருள் வருமெனில் தாம்பாலத்தில் பொற்பாதங்களை அணிந்திருக்கும் நிலையிலேயே தமிழ்ச் செல்வி அருள் வாக்கு உரைக்கலாம். அது தமிழ்ச்செல்வியின் உளநிலையைப் பொருத்தது. அருள் வாக்கு வெளிப்படும் நிலையில் அவரது குரல் தெளிவாகக் கேட்கும் நிலையில் ஒலிபெருக்கிகள் இடம்பெற வேண்டும். தமிழ்ச் செல்வி நிதானமாக இருக்கும் பட்சத்தில் பால் ஊற்றப்பட்ட பொற்பாதங்களை பிறிதொரு தாம்பாலத்திற்கு மாற்றி, பொற்பாதத்திற்கும், தமிழ்ச்செல்வியின் பாதத்திற்கும் எந்த ஊரில் விழா நடைபெறுகிறதோ அந்த ஊர் ஆற்றின் அல்லது அருகாமை ஆற்றின் மூன்றுபடி நீர் ஊற்றப்பட்டு மலர்கள் தூவி, மஞ்சளரிசி தூவி, பிற மங்கலப் பொருட்கள் தூவி, ஆரத்தி காண்பித்து பொற்பாதங்களை தமிழ்ச் செல்வியிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழ்ச் செல்வி உரையாட விரும்பினால் உரையாற்றலாம். தெளிந்த மனநிலையில், உடல்நிலையில் இருக்கும் நிலையில் மிகச் சுருக்கமாகவும் இல்லாமல், மிக விரிவாகவும் இல்லாமல் உரையொன்றை வழங்கலாம். எதைப்பற்றி பேசுவதென்பது தமிழ்ச் செல்விக்கே உரிமையானது. உரையில் பிறரது தலையீடு இருக்கக் கூடாது.

உரைக்குப்பின் தமிழ்ச் செல்வி உட்பட அனைவரும் மேடையிலிருந்து இறங்கிவிட வேண்டும். தமிழ்ச் செல்வியின் பாதங்கள் பச்சைப்பட்டால் தாங்கப்பட்டு, வெள்ளி இருக்கையில் வைக்கப்பட வேண்டும். பாதங்கள் மேடையின் மையத்தில் இருக்க, சுற்றிலும் ஆயிரத்து ஒரு நெய் விளக்குகள் ஏற்றப்பட வேண்டும். அனைத்து விளக்குகளும் ஏற்றப்பட்டபின், மலைமகள், கலைமகள், அலைமகளுக்குரிய

பாடல்களைப் பாட வேண்டும். இவற்றை ஓதுவார்களோ அல்லது இசை ஞானம் கொண்டோரோ பாடலாம். பாடல்களுக்குப்பின் மங்கல இசையாக பதினெட்டு நாதசுரம் மற்றும் மேளம் முழங்கப்பட்டு, பொற்பாதங்கள் தூக்கப்பட வேண்டும்.

முதலாவது பொற்பாதம் மதுரை மீனாட்சியம்மன் திருக்கோவிலில் வைக்கப்பட வேண்டும்.

மேடையிலிருந்து தமிழ்ச் செல்வியின் பொற்பாதங்களைக் தூக்குவது அடுத்த ஒரு நூற்றாண்டுக்கு தேவேந்திர குலத்தவருக்கு உரிமையாக்கப்பட வேண்டும். தேவேந்திர குலத்தவரில் பொற்பாதங்கள் தூக்க தேர்ந்தெடுக்கப்பட்டவர் அதற்குரிய மரபு நெறிகளைப் பின்பற்றியிருக்க வேண்டும். விழா நடைபெறும் நாளுக்கு முன்பான நாற்பத்தெட்டு நாட்கள் காப்புக் கட்டியிருக்க வேண்டும். பொற்பாதங்கள் தூக்குபவர் இறைநம்பிக்கை கொண்டவராகவும், தமிழின்மீது மாறாப் பற்றுக் கொண்ட வராகவும் இருப்பது சிறப்பு.

பொற்பாதம் தூக்குபவர், அன்றைக்கு வெள்ளைப்பட்டில் வேட்டியும், சட்டையும், அணிந்திருக்க வேண்டும். தலையில் வெள்ளைப் பட்டால், தலைப்பாகை கட்டியிருக்க வேண்டும். மீசை வைத்திருக்கலாம். தாடி கூடாது. பொன் நகைகள் அணிந்திருக்கக் கூடாது.

அனைத்து மங்கல நிகழ்வுகளும் முடிவுற்றபின்னர், விளக்குகள் எரிந்து கொண்டிருக்கும் நிலையில், இறுதி நிகழ்வாக, வெற்றி எட்டுத்திக்கும் எட்ட கொட்டு முரசே எனும் பாரதியின் பாடல் மூன்று வீணையில் வாசிக்கப்பட வேண்டும். வேறு எந்த பக்க வாத்தியங்களும் கூடாது. கூட்டத்தினர் அமைதி காக்கலாம்.

வீணைஇசை முடிந்த உடனேயே, தேவேந்திர குலத்தவர் சார்பாக விண்ணதிர நாற்பத்து எட்டு பேர் சேர்ந்திசைக்கும் கொட்டு மேளம் இசைக்கப்பட வேண்டும். சிறிது நேரத்திற்குப்பின், பாதம் சுமப்பவர் மேடையின்மேல் எட்டுத் திக்கும் விழுந்து விணங்க வேண்டும். பொற்பாதம் வைக்கப்பட்டீருக்கும் இருக்கையின் முன்பும் பின்பும் என இருமறை வணங்க வேண்டும். அதன்பின் பொற்பாதத்தை மும்முறை வலப்பக்கமாகச் சுற்றி வந்து, பச்சைப்பட்டு சுற்றிய நிறைமரக்காலில் பொற்பாதங்களை எடுத்துக் கொள்ள வேண்டும். நிறை மரக்கால்மேல் மஞ்சள்துணி விரிக்கப்பட்டு, அதன்மேலே பொற்பாதங்களை வைத்துக் கொள்வது சிறப்பு.

நிறைமரக்காலோடு பொற்பாதத்தை தலையில் வைத்துக் கொண்டு, மீனாட்சியம்மன் கோவிலுக்கு ஊர்வலமாகச் செல்ல வேண்டும். ஊர்வலம் ஆட்டம், பாட்டம் எனச் செல்லலாம். ஆட்டம் பாட்டம் எனினும் அதில் ஒழுங்கும், மதிப்பும் இருக்குமாறு கவனம் கொள்ளவேண்டும். பொற்பாதம் சுமப்பவர் கவனமாகச் செல்வது முக்கியம்.

மீனாட்சியம்மன் கோவிலின் அர்ச்சகர் கோவில் நுழைவு வாயிலில் (கிழக்குக் கோபுரத்தைத் திறக்கலாமோ) பொற்பாதங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பொற்பாதங்கள் அர்ச்சகர் தலைக்குமேல் பெற்றுக் கொள்ளலாமா என்பது அவரது முடிவுக்கே விடப்படுகிறது.

பொற்பாதங்கள் மீனாட்சியம்மனுக்குமுன் வைக்கப்பட்டு அதற்குரிய முறையில் சிறப்புச் செய்யப்பட வேண்டும். எத்தகைய சிறப்புகள் செய்வது என்பது கோவில் குருக்களைச் சார்ந்தது. சிறப்புகள் செய்யப்பட்ட பொற்பாதங்கள் மீனாட்சியம்மன் கருவறைக்கு வெளியே, பக்தர்கள் நின்று மீனாட்சியை வழிபடும் எல்லைக்கு முன்பாக, ஒரு வெள்ளித் தாம்பாளத் தட்டில் வைக்கப்பட வேண்டும். இவ்வாறு தினமும் நடைசாற்றப்படும்போது கருவறைக்குள்ளும் அல்லது பொற்பாதற்கென்று தனியறையிலும், நடை திறக்கும்போது வெளியேயும் பொற்பாதங்கள் இடம்பெற்று வரவேண்டும். பொற்பாதங்களை எடுக்கும்போதும், மீண்டும் வைக்கும்போதும் மீனாட்சியம்மனுக்குரிய பாடலைப் பாடுவது சிறப்பு.

மேலே யாம் சுட்டிக்காட்டியுள்ளவாறு, ஐந்து தமிழ்ச்செல்விகளின் பொற்பாதங்கள் பெறப்பட வேண்டும். பொற்பாதங்கள் அம்மன் திருக்கோவில்களில் இடம்பெறுவது சிறப்பு. முதலாவது பொற்பாதங்கள் மீனாட்சியம்மன் திருக்கோவிலிலும், தொடர்ந்து சமயபுரம் மாரியம்மன், மாங்காடு கருமாரியம்மன், கோயம்புத்தூர் கோனியம்மன், குலசேகரடிபட்டினம் முத்தாரம்மன் திருக்கோவில்களில் இடம்பெற வேண்டும். ஐந்து பொற்பாதங்கள் பெறப்பட்டபின் ஐந்து பொற்பாதங்களையும் ஒன்றாக்கி, இரு பொற்பாதங்களாக ஆக்கிக்கொள்ள வேண்டும். இவ்வாறு ஒரு நூற்றாண்டில் பெறப்பட்ட இரு பொற்பாதங்களும் (400 + 400 = 800; 800 x 5 = 4000) அதாவது நான்கு கிலோ அளவுள்ள பொற்பாதங்களும், அடுத்துவரும் ஆயிரமாண்டுக் காலத்தில் நான்கு அம்மன்கள், மூன்று சிவன் மற்றும் மூன்று பெருமாள் கோவில்களில் வைக்கப்பட வேண்டும். அதாவது நூறு

ஆண்டுகளின் கூட்டான பொற்பாதங்கள் இக்கோவில்களில் இடம்பெற வேண்டும். அப்படி முதலாவது கூட்டுப் பொற்பாதங்கள் இடம்பெற வேண்டிய திருக்கோவில் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி திருக்கோவில். அங்கே பொற்பாதங்களுக்கென தனியே ஒரு கருவறை உண்டாக்கப்பட்டு, பொற்பாதங்களுக்கான வணக்க முறைமைகள், வழிபாடுகள், நிகழ்த்தப்பட வேண்டும்.

இருபதாண்டுகளுக்கு ஒரு பொற்பாதம், நூற்றாண்டுக்கு ஒரு கூட்டுபொற்பாதம் எனில் அடுத்துவரும் ஆயிரம் ஆண்டில் பத்து கூட்டுப் பொற்பாதங்கள் கிடைக்கப்பெறும். எனில் ஒரு பாதம் (400 + 400 = 800) எந்நூறு கிராம் பொன் எனில், ஒரு கூட்டுப்பாதம் 4000 கிராம் பொன் வரும். எனில் பத்து கூட்டுப் பொற்பாதங்கள் மூலம் 40000 கிராம் அதாவது நாற்பது கிலோகிராம் பொன்னால் செய்யப்பட்ட பாதங்கள் இருக்கும்.

ஒவ்வொரு தமிழ்ச்செல்விக்கும் அளிக்கப்படும் நூறு கிராம் பதக்கம் மற்றும் நூறு கிராம் மகுடம் தமிழ்ச் செல்வியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவரின் காலம்வரை அவருக்கு உரிமையானதாக இருக்கும். அவருக்குப்பின் அது அவரது வழிமரபினருக்கு அளிக்கப்பட வேண்டுமா அல்லது பொதுவில் வழங்கப்பட்டுவிட வேண்டுமா என்பதை தமிழ்ச்வெல்வியே முடிவெடுத்துக்கொள்ளலாம். பொதுவில் கொடுத்துவிடலாம் எனில், இவ்வகையில் (100 + 100 = 200 ; 200 x 5 = 1000 ; 1000 x 10 = 10000) பத்து கிலோகிராம் பொன் கிடைக்கும்.

பொற்பாதங்கள் மற்றும் பதக்கம், மகுடம் என மொத்தமாகக் கிடைக்கும் 50000 கிராம் அல்லது ஐம்பது கிலோகிராம் பொன்னிலிருந்து, நாற்பத்து எட்டு கிலோகிராம் எடையில் தமிழின் அரசியாம் தமிழரசி சிலையும், அவருக்கு ஒரு கிலோவில் பொன்மகுடம், ஒரு கிலோவில் பதக்கமும் செய்ய வேண்டும். இவ்வாறு ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின் உருவாக்கப்படவிருக்கும் பெருமைமிகு தமிழரசி சிலை திருக்கோவிலூர் உலகளந்த பெருமாள் திருக்கோவிலினுள் இடம்பெற வேண்டும்.

புகழ்மிக்க தமிழர்களே, இவ்வாறு பத்து தமிழன்னை சிலைகள் எனில் பத்தாயிரம் வருடங்கள் கடந்திருப்போமோ. நூறு தமிழ்த்தாய் சிலைகள் உருவாகும்போது ஒரு இலக்கம் ஆண்டுகள் காலம் பயணித்திருப்போமோ. அழகிய

பயணமன்றோ. தொடரட்டும் நம் செந்தமிழ்ச் செல்வியின் பயணம் என்றென்றைக்குமாய்..

**எங்கள் தமிழ் அமிழ்தம் என்போம்..**

தமிழ்ச் செல்வி போற்றி! தமிழரசி வாழி!

**வாழிய தமிழ்த் தாய்!!**

தாயே, நின் சீரிளமை திறம் வியந்து செயல் மறந்து

வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!

**எங்கள் பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்..**

தமிழ்ச் செல்வியைத் தேர்ந்தெடுப்பதில் நெறிமுறைகள் கடைப்பிடிக்க வேண்டும். தமிழ்ச் செல்விக்கான முதல்தகுதி அவர் உலகளாவிய அளவில் தமிழ், தமிழர் பண்பாட்டை முன்னிறுத்தியவராக அறியப்பட்டிருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் சாதி பார்க்கக் கூடாது. அன்னாரது தகுதியாக சாதியை ஒருபோதும் கொள்ளக் கூடாது.

தமிழ்ச் செல்வி திருமணம் செய்திருக்க வேண்டியது நல்லது. ஒருவேளை திருமணம் செய்யாமலும் இருக்கலாம். திருமணம் செய்யாமைக்கான காரணம் என்னவென்று தெளிதல் முக்கியம். திருமணம் பிடிக்கவில்லை, திருமணத்தில் விருப்பமில்லை என்பது வேறு. தமிழ்ப்பணிக்காக திருமணம் செய்து கொள்ளவில்லை என்பது வேறு. எனினும் தமிழ்ப் பணிக்காக திருமணம் செய்யாமல் இருக்கத் தேவையில்லை. குடும்ப வாழ்வில் இருந்துகொண்டே தமிழுக்கும் சேவை செய்யலாம். ஒருவர் திருமணம் செய்யவில்லை, அன்னார் மிகச் சிறப்பான தமிழ்த் தொண்டு செய்திருக்கிறார். இன்னொருவர் திருமணம் செய்துள்ளார், ஓரளவிற்கு தமிழ்த் தொண்டும் செய்துள்ளார். இருவரில் யாரைத் தேர்ந்தெடுப்பது? திருமணம் செய்து, ஓரளவிற்கு தமிழ்த் தொண்டும் செய்தவரையே யாம் பரிந்துரைப்போம்.

தமிழ்ச் செல்விக்கு மட்டுமே இந்தத் தளர்வு. செந்தமிழ்ச் செல்வன் கண்டிப்பாகத் திருமணம் செய்திருக்க வேண்டும். குடும்பமாக வாழ வேண்டும். செந்தமிழ்ச் செல்வனாகத் தேர்ந்தெடுக்கும்போது மணவாழ்க்கையில்

இணைந்திருக்க வேண்டும். தமது இல்வாழ்க்கைத் துணையைச் சிறப்பிப்பதும் செந்தமிழ்ச் செல்வரின் கடமையன்றோ.

செந்தமிழ்ச் செல்வரின் வயது நாற்பத்துஎட்டு முதல் அறுபது எனக் கொள்ளலாம். தமிழ்ச் செல்விக்கு முப்பத்துஎட்டு முதல் ஐம்பது எனக் கொள்ளலாம். இந்த வயதிற்கு இடைப்பட்டவரைத் தேர்ந்தெடுப்பது நல்லது. மிக இளம் வயதெனில் வாழ்வின் அனுபவப்பாடம் குறைவாக இருக்கும். அறுபதுக்குமேல் எனில் அனைத்திலும் ஒரு நிலைப்பாட்டை எடுத்துவிடக்கூடும். அதன்பின் பெரும்பாலும் முடிவுகளில் மாற்றங்கள் நிகழுமா என்பது ஐயமே. இதுவே முடிவான வயதாகக் கொள்ள வேண்டியதில்லை. எமது பரிந்துரை இது. பெரியோர்கள் கலந்து பேசி யாவற்றையும் முடிவு செய்துகொள்ளலாம். மாற்றியமைக்கலாம். எம்முடையது வழிகாட்டல் மட்டுமே. இறுதியானது, முடிவானது அல்ல. எதையும் கலந்துபேசி முடிவெடுத்துக் கொள்ளலாம். முடிவில் மனதிற்கும் இடமிருப்பது நலம். உதாரணமாக, எட்டுத் திக்கும் வெற்றி எனக் கொட்டு முரசே பாடல். இப்பாடலையே அனைவருக்கும் இசைக்க வேண்டுமென்பதில்லை. பாடல்களை மாற்றிக் கொள்ளலாம். பாவேந்தர் பாடல்களும் இசைக்கலாம். கொட்டு முரசே பாடலும் நீளமானதாக உள்ளது. அப்பாடலில் குறிப்பிட்ட பத்து சந்தங்களை மட்டும் எடுத்துக் கொண்டாலே போதுமானது.

அவ்வாறே கூட்டுப் பொற்பாதங்கள் இடம்பெறும் ஆறு அம்மன் திருக்கோவில்கள், மூன்று சிவன் மற்றும் மூன்று பெருமாள் கோவில்கள் எவையெவை என்பதையும் கலந்துபேசித் தீர்மானித்துக் கொள்ளலாம். மேல்வருத்தூர்போக மீதமுள்ள ஐந்தில் குமரியம்மன் கோவிலையும் சேர்க்கலாம். பெருமாள் கோவிலில் திருவில்லிபுத்தூர் இடம்பெறுவது சிறப்பு. வடக்கே திருமலை இடம் பெறுவதும், நடுப்பகுதியான சோழநாட்டுத் திருப்பதிகளும் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதும் சிறப்பு. அனைத்தையும் பொறுமையாகக் கலந்துபேசி முடிவெடுப்பது நன்று.

விழாவை ஒருங்கிணைப்பது யார். இது பெரிய கேள்வியல்லவா. தமிழர் சாதி, மதம் துறந்து, தாம் தமிழர் என ஒன்றுபடும் காலம்வரை, ஒன்றுசேரும் நாள்வரை, தேவேந்திர குலத்தார்தான் முன்னின்று நிகழ்த்த வேண்டும். தமிழர் எனப் பொதுவில் இணையும் அனைவரையும் உடன் இணைத்துக் கொள்ளலாம். தமிழ்ச்செல்வி, செந்தமிழ்ச்செல்வன் போன்ற உயர்வுகளுக்கென்றே ஒரு அமைப்பொன்றை

உருவாக்கலாம். அது சாதி, மத, அரசியலுக்கு அப்பாற்பட்ட சுயசார்பு கொண்ட அமைப்பாக இருப்பது நன்று. அமைப்பாகத் திரளும்போது அங்கே அதிகாரம் நுழையும். எச்சரிக்கை தேவை. காலப்போக்கில் தாம் பரிந்துரைப்பவருக்கே உயர்வு, பட்டம் எனும் நிலை வரக்கூடும். கவனம் தேவை. அமைப்பு விதிகளில் உரிய விளக்கங்கள் தேவை.

தமிழர் நாங்கள் தமிழர்கள் எனத் திரண்டெழுவதற்கு இன்னும் சற்று காலமாகுமோ. எனில், அதுவரை தேவேந்திர குலத்தவரின் பங்களிப்பு, ஒத்துழைப்பு, அதிகமும் தேவைப்படும். தமிழ்ச் செல்வி, செந்தமிழ்ச் செல்வன், உயர்வுகளில் தனிப்பட்ட செல்வாக்கு நுழையாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். பல பெயர்களிலிருந்து சில பெயர்களுக்கு வர வேண்டும். சில பெயர்களை நான்கைந்து பெயர்கள் எனச் சுருக்க வேண்டும். நான்கைந்தை இரண்டு மூன்றாக்கி, இறுதியில் இரண்டில் ஒன்று எனத் தீர்மானிக்க வேண்டும். அந்தளவிற்கு தமிழ்த்தொண்டு செய்பவர்களை அடையாளங் காணவேண்டும்.

இறுதித் தேர்வுக் குழுவில் தேவேந்திர குலத்தவரிலிருந்து தகுதியான ஒரு தமிழறிஞர், இலக்கியவாதி இடம் பெறுவது அவசியம். அரசியல்வாதி வேண்டாமே. அவ்வாறே இறுதித் தேர்வுக்குழுவில் தமிழ்ப் புலவனும், முந்தைய தமிழ்ச் செல்வியும் இடம் பெறுவது சிறப்பு. அவ்வாறே தமிழகம் தழுவிய அளவில் இலக்கியத்திற்கு, பண்பாட்டிற்கு என அமைப்புகள் இருக்குமேயானால் அவர்களிலிருந்து ஒருவர் இடம் பெறுவது சிறப்பு. உதாரணமாக கம்பன் கழகம்.

தமிழ்ச் செல்வி, செந்தமிழ்ச் செல்வன் உயர்வுகளுக்கு, பெயருக்கு ஏற்றாற்போல் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டோரைத் தேர்ந்தெடுப்பதே பொருத்தமுடையது. தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாதாரை தமிழ்ச் செல்வி என வணங்குவது ஏற்புடையதல்லவே. எனினும் திராவிட மொழிகளைத் தவிர்த்த, இந்தியைத் தவிர்த்த, பிற மொழிக்காரர்கள், அயல்நாட்டவர்கள், தம் தாய்மொழியோடு தமிழையும் கற்று, தமிழின் மேன்மை கருதி, தமிழ் மொழிக்கு, தமிழர் பண்பாட்டிற்குப் பாடுபட்டிருப்பாரேயாயின், அவர்களையும் தமிழ்ச் செல்வி உயர்விற்குப் பரிசீலிக்கலாம். இது அன்னாரின் ஒப்புயர்வற்ற தமிழ்த் தொண்டு கருதியே அளிக்கப்பட வேண்டும். காலப் போக்கில் உலகமெங்கும் தமிழ்மொழி பல்கிப் பெருகும், செழித்து வளர்ந்தோங்கும். அந்நிலை வரும்வரை, அக்காலம்

வரும்வரை, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டோரையே தமிழ்செல்விக்கு தேர்வு செய்யலாம்.

திராவிட மொழிக்காரர்கள் அவரவர் தாய்மொழிக்கு முக்கியத்துவம் தருகின்றனர். வீட்டில், தம்முள் அவர் தாய்மொழியையே பேசுகின்றனர். வீட்டில், உறவில் எம்மொழி பேசப்படுகிறதோ அதுவே தாய்மொழி. அவ்வகையில் திராவிட மொழிக்காரர்களை தமிழ்ச்செல்வி உயர்விற்குப் பரிசீலிப்பது பொருத்தமற்றது. அவர்கள் தம் தாய்மொழியைவிட தமிழே உயர்ந்தது என ஒப்புதல் அளிப்பரோ. ஆம் எனில் தமிழே செம்மொழிக்கு தகுதியானது என விட்டிருப்பரே. எதற்கு அவரவர் மொழிகளையும் செம்மொழியாக்கினர். போட்டிதானே. அப்படி ஒருவேளை யாரேயினும் திராவிட மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு, காலமாற்றத்தில் தமிழின் பெருமை உணர்ந்து, தமிழே உலகின் ஒப்பற்றமொழி என அறிந்து, தமிழுக்கு தொண்டு செய்தவராக இருப்பின், அப்படியானவர்களை தமிழ்ச்செல்விக்குப் பரிசீலிக்கலாம். எனினும் இங்கே இயல்பாக எழும் சிக்கல் தமிழர் சித்திரை ஒன்றைத் தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடி வருகிறார். பிற திராவிடத்தார் அவரவர் புத்தாண்டுகளை வேறு தேதிகளிலல்லவா கொண்டாடுகிறார். திராவிடத்திற்குள் ஒரு ஒப்புமை, ஒற்றுமை இருக்கத்தான் செய்கிறது. எனினும் எமது காலத்தில் ஒற்றுமையைவிட மொழி, பண்பாட்டு வேற்றுமைகளே அதிகமும் தென்படுகின்றன. தமிழர்தான் திராவிடம் என்கிறார். பிறர் கிஞ்சித்தும் அச்சொல்லை உதிர்ப்பதில்லை. இது எமது எண்ணம். இது குறித்து அறிஞர் பெருமக்கள் ஒருமனதாய் ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

யாம் உறுதியாகச் சுட்டுகிறோம். அவர் தமிழ்ச் செல்விதான். அவர் செந்தமிழ்ச் செல்வன்தான். ஒருபோதும் திராவிடச்செல்வி என அழைக்கப் போவதில்லை.

தமிழரைப் பொருத்தவரை திராவிட மொழிகளின் தாய் தமிழ்தான். ஆயினும் அன்னார் ஒப்புவதில்லை. அவர் ஒப்பும் காலம் வரும்வரை திராவிடத்தை தமிழர் ஏற்க இயலாது. தாய் தம் பிள்ளையைப் பெருமைப்படுத்தலாம், உயர்த்தலாம், பாராட்டி சீராட்டலாம். எனினும் பிள்ளை இவள்தான் தம் தாய் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டுமல்லவா. தாயே இல்லை எனச் சுட்டினால் தமிழர் எப்படி திராவிடம் பேச முடியும்?

திராவிடத்தார் மனதில் மாற்றங்கள் நிகழட்டும். நிகழுமா என்பதைக் காலம் அறியும். அப்படி நிகழுமேயானால், அன்னார்கள் உலகளாவிய அளவில் தமிழுக்குப் பெருமை சேர்க்கும் வண்ணம் தமிழ்த்தொண்டு செய்திருப்பின் தமிழ்ச்செல்வியாக உயர்த்துக.

இத்தனை விளக்கத்திற்குக் காரணம் தமிழ் நம் மதிப்பான தாய் என்பதாலேயே. தாய் தம் பிள்ளைகளை ஒதுக்கியதாக ஒருபோதும் அறியலாகாது. திராவிட மொழிக்காரர்கள் தம்மொழி மீதுள்ள பற்றால், ஆசையால் அதை அறியாமல் இருக்கலாம், மறைத்தும் வைக்கலாம். எனினும் திராவிட மொழிக் குடும்பத்திற்கு தாயான தமிழ், தம் பிள்ளைகளையும் அரவணைத்துச் செல்ல வேண்டும் என விரும்புவாரன்றோ. அதுதானே தாய்க்குப் பெருமை, தமிழுக்குச் சிறப்பு. நம் தாய் என்றும் தாயாகவே இருப்பார்.. உணர்ந்து, அறிந்து செயல்படுக, முடிவுகள் தெரிக.

பிற தமிழர் எப்படி செயல்பட்ட போதிலும் தேவேந்திர குலத்தவர் மறக்கக் கூடாத ஒன்று, யாம் ஏற்கனவே சுட்டியதுபோல் எம்மொழியும் நம் மொழியே. தமிழ் உலகின் முந்துமொழி எனில் அதிலிருந்து கிளைத்தவையாகத்தானே பிற மொழிகள் இருக்கக் கூடும். விதை விதையாகவே இருக்க முடியாதல்லவா. கிளை விடவேண்டும், பக்கக் கிளைகள் உருவாக வேண்டும், பெருக வேண்டும், பருக்க வேண்டும். அப்போதுதானே அது மரம். மரத்தில் ஏராளமான கிளைகள் இருப்பது அதற்குப் பெருமையல்லவா. என்றைக்கும் இதனை மறக்காமல் செயலாற்றுக.

இந்தி ஒருவிதமான கலப்பாக இருக்கிறது. ஏனோ வடஇந்தியர்கள் அரசியலுக்காக இந்தியைத் தூக்கிப் பிடிக்கிறார்கள். இந்திக்காரர்கள் தமிழின் அருமையை உணர்ந்ததுபோல் தெரியவில்லை. அப்படி உணரும் காலம் வரும்வரை இந்தியை விலக்கி வைத்திருப்பதே பொருத்தமானது. அவர்கள் இந்தியை உலகமொழியாக்க முனைகிறார்கள். நாமோ உலகப் பொதுமொழியாக, பொதுமறையாக, தமிழே தகுதியுடைத்து என்கிறோம். காலம் பதில் சொல்லட்டும்.

தேவேந்திர குலத்தாரே, தமிழ்நிலத்தில் தமிழ்ப் புத்தாண்டு எது என்பது குறித்து விவாதங்கள் நடைபெற்று வருவதை யாம் கவனித்தே வருகிறோம். நம் முன்னோர் சொல் சித்திரை மாதம் ஒன்றாம் தேதியே தமிழ்ப் புத்தாண்டு. எனில் நம் பெருமைமிகு முன்னோர் காரணமின்றி அத்தகைய நிலைப்பாட்டை, புத்தாண்டு

அறிவிப்பைச் செய்திருக்க மாட்டார். எது குறித்தும் காரணத்தோடே நம் முன்னோர் சடங்கு முறைகளை வகுத்திருப்பார்கள். நம் முன்னோர் நம்பிக்கையின் அடிப்படையில் செயல்பட்டோரல்ல. காரண காரியத்தை தெளிவாக அறிந்தே, அனைத்தையும் வகுத்திருக்கின்றனர்.

இன்றைய தமிழர் மறந்து போனதொன்று, நம் பண்டைத் தமிழர் இயற்கையோடு ஒன்றிய வாழ்வை வாழ்ந்து வந்தனர் என்பது. பெருநகரங்களில் கட்டிடக் காடுகளுக்கு மத்தியில் வாழ்ந்துகொண்டு தமிழர் புத்தாண்டு தைமாதமா, சித்திரை ஒன்றா என விவாதிக்கும் தமிழரை என்னவென்பது. தமிழர் புத்தாண்டு தைமாதமா, சித்திரை மாதமா என்பதை அறிய தமிழ்நிலத்தை உற்று நோக்குவது அவசியமல்லவா. அப்படி உற்றுநோக்கித்தானே நம் முன்னோர் தமிழ்ப் புத்தாண்டை அறிந்தார்.

புது ஆண்டு என்பது புதிதாக நிகழும் பருவகாலத்தைக் குறிக்கிறது. எனில், காலம் புதிதாகப் பிறக்கிறது. எனில், இயற்கையில் புதியன நிகழ்கின்றன என்று பொருள். இயற்கை எனில் தாவர, விலங்குகள். எனில் தாவர சங்கமத்துள் நிகழும் மாறுபாடுகளை, மாற்றங்களை தமிழர் உன்னிப்பாகக் கவனித்து வந்துள்ளனர். அதில் நிகழும் புதிய மாற்றங்களுக்கு ஏற்பவே தமிழர் தமிழ்ப் புத்தாண்டை வரையறை செய்துள்ளனர்.

உண்மையெனில், தைய் மாதம் தமிழ்ப் புத்தாண்டு எனில் அதற்கு முந்தைய மார்கழி மாதத்தில், அதற்கும் முந்தைய கார்த்திகை மாதத்தில் என்னென்ன மாற்றங்கள் இயற்கையில் நிகழ்கின்றன என்பதைக் கூர்ந்து பார்க்க வேண்டும். அவ்வாறே சித்திரை ஒன்று தமிழ்ப் புத்தாண்டு எனில், அதற்கு முந்தைய பங்குனி, மாசி மாதங்களில் இயற்கையில் என்ன மாற்றங்கள் நிகழ்கின்றன என்பதையும் அறிந்து, இரண்டையும் ஒப்பிட்டே தமிழ்ப் புத்தாண்டு எது என்பதைக் கணிக்க வேண்டும். முன்னோர் அப்படித்தான் கணித்துள்ளனர். நம் காலத்திய மனிதர் அதை அறியாமல்தான் எது புத்தாண்டு என வினவுகிறார். அன்னார் நம் முன்னோர் ஞானத்தைக் குறைத்து மதிப்பிட்டுவிட்டார்.

தமிழர் பருவகாலத்தை ஆறுவிதமாகப் பிரித்துள்ளனர். உலகின் பிறபகுதிகளில் நான்கு பருவகாலமாகக் பிரிக்கப்பட்டுள்ளது. தமிழர் மரபிலும் முன்பனி, பின்பனி என்பதை பனிக்காலம் எனவும், இளவேனில், முதுவேனில்

காலத்தை வேனிற்காலம் எனவும் கொள்ளலாம். எனில் ஒவ்வொரு பருவத்திற்கும் மூன்று மாதங்களை ஒதுக்கிக் கொள்வதும் தகும். எனில் ஆவணி, புரட்டாசி, ஐப்பசியை மழைக்காலமாகச் சுட்டலாமன்றோ.

உலகினர் வசந்தகாலம் என்றொரு பருவகாலத்தைக் கொண்டிருக்கின்றனர். ஆங்கிலத்தில் ஸ்பிரிங் (Spring Season) பருவகாலம் என்கின்றனர். அதாவது குளிர் காலத்தின் முடிவில் வருவதும், கோடைகாலத்தின் துவக்கமாக வருவதும் இந்த வசந்தகாலம். எனில் தமிழர் மரபில் மாசி, பங்குனி, சித்திரை என்பதை வசந்தகாலமாகக் கணக்கிடலாம். உண்மையில் தமிழக ஊர்களில் நிகழும் பெருவாரியான விழாக்கள் இந்தக் காலத்திலேயே நடத்தப்பட்டு வருகின்றன என்பது ஒப்புநோக்கத்தக்கது.

தமிழர் காலத்தை நுணுக்கமாக ஆராய்ந்தே, ஒரு ஆண்டை ஆறுபருவகாலங்களாகப் பகுத்துள்ளனர். மாசி, பங்குனி பின்பனிக்காலம், அதிகாலையில் குளிரும். எனில் முன்பனிக் காலத்தில் மாலையில், இரவு கவிழும் நேரத்தில் குளிரும். இதைக் கணக்கில்கொண்டே கோவில் தொடர்புடைய விழாக்கள் பின்பனிக் காலத்திலும், இளவேனிற் காலத்திலும் நடத்தப்படுகின்றன.

முன்பனிக் காலமான மார்கழி தையில், இயற்கையில், நிலத்தில், மக்கள் வாழ்வியலில் என்ன மாறுபாடுகள் நிகழ்கின்றன எனில் இயற்கையில் ஒரு அதிசயம் நிகழ்கிறது. பெரும்பாலான மரங்கள் இலைகளை உதிர்த்து விடுகின்றன. தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் மட்டுமே பசுமை மாறாக் காடுகள் இடம்பெற்றுள்ளன. மற்ற நிலங்களிலுள்ள மரங்களின் இலைகள் மழைக்காலத்தின் தொடர்ச்சியான கூதிற காலத்தில், அதாவது குளிர் காலத்தில் இலைகள் கூம்பத் தொடங்கி விடுகின்றன என்பது அறியத்தக்கது. மார்கழி, தைய் மாதங்களில் பெரும்பாலான மரங்கள் மொட்டையாகக் காட்சியளிப்பதை இயற்கையைக் காண்ணுறும் யாவரும் அறியலாம். மாசி மாதத்தில் இலைகள் துளிர்க்க ஆரம்பிக்கின்றன. பங்குனிக்குள் பழையநிலைக்கு மரங்கள் வந்துவிடுகின்றன. பங்குனி இறுதியில் மரங்கள் முழுமையாகத் தழைத்து, பூக்கத் தொடங்கி விடுகின்றன. பூக்கும் காலம் பங்குனி இறுதியிலோ அல்லது சித்திரை முதல் வாரத்திலேயோ அமையலாம். இயற்கையின் இந்த அழகான மாற்றங்களை உற்றுநோக்கியே நம் முன்னைத்தமிழர் புதுமலர்கள் பூக்கும் காலத்தை புது

ஆண்டு, புத்தாண்டின் தொடக்கம் எனக் கொண்டாடியிருக்கின்றனர். விழா எடுத்திருக்கின்றனர்.

புது ஆண்டு என்பது புதிதாக மலரும் ஆண்டு. அதை வரவேற்கும் விதமாக பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன. பூக்களில் தேனுறுஞ்சும் வண்டினங்கள் பெருகுகின்றன. பறவைகள் பாடுகின்றன. குளங்கள் வற்றத்தொடங்குவதால் மீன்கள் அதிகம் கிடைக்கின்றன. பறவைகள் இனப்பெருக்கத்திற்குத் தயாராகின்றன. மொட்டை மரத்தில் எந்தப் பறவையாவது கூடுகட்டுமா? இயற்கையின் இந்த மாற்றங்களை உற்றுநோக்கியே தொல்தமிழர் சித்திரை ஒன்றாம் தேதியைத் தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடியுள்ளனர்.

ஒப்புநோக்க, தெலுங்கு மக்களின் யுகாதி, கன்னடர்களின் உகாதி புத்தாண்டுகள் சற்றே முந்தி, அதாவது தமிழ்ப் புத்தாண்டிற்கு ஒருவாரத்திற்கு முன்னர் அவர்களது புத்தாண்டு வருகிறது. அவர்களது நிலத்தில் இந்த மாற்றங்கள் சற்று முன்னரே நிகழ்கின்றன எனக் கொள்வது பொருத்தமல்லவா. இவர்களின் புத்தாண்டில் வேம்பம்பூ பச்சடி இடம் மிகுந்த முக்கியத்துவம் கொண்டது. வேம்பு முழுமையாகவே இலைகளை உதிர்த்து விடுகிறது. மரம் பட்டுப்போனது போலவே காட்சியளிக்கிறது. பின்னர் சிறிய அரும்புகள் தோன்ற ஆரம்பிக்கின்றன. முதல் அரும்புகள் தோன்றி ஒருமாதத்திற்குள்ளாக வேம்பு அழகாகத் துளிர்த்து இலைகளை உண்டுபண்ணி விடுகிறது. மறுபடியும் முதலில் இருந்த தோற்றத்திற்கே வந்துவிடுகிறது. மரங்களில் பூக்கள் முளைக்கின்றன. அப்புதிய பூக்களை, அப்புதிய மாற்றத்தை அறிந்தே அவர்கள் புத்தாண்டு நாளை கண்டறிகிறார்கள் என்பது திண்ணம்.

தைய் மாதத்தின் முதல்நாளைப் புத்தாண்டாகக் கொண்டாடலாமா எனில் அம்மாதத்தில் புதிதாக என்ன நிகழ்கிறது, அதாவது இயற்கையில் என்னென்ன புதிய மாற்றங்கள் நிகழ்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். பங்குனி, சித்திரை பூக்களின் காலம். குறிப்பாக மல்லிகை, முல்லை போன்றவை பெருமளவில் பூக்கும். அவ்வாறே கொன்றைமலர்கள் உட்பட பல்வேறு மரங்களும் பூத்துக் குலுங்குகின்றன. அதனாலேயே அது வசந்தகாலம். வசந்தகாலம் மன்மதனுக்குரியது. வசந்தன் - மன்மதன், காமன். வசந்தம் எனில் வளமை, இனிமை, மகிழ்ச்சி எனப் பொருள்.

தைய் மாதம் உழவர்களின் அறுவடைக் காலம். அறுவடைக் காலத்தை புத்தாண்டாகக் கொண்டாட முடியாதல்லவா. அறுத்துச், சேர்த்து, எல்லாம் நல்லபடியாக முடிந்து, சற்றே ஓய்வும், மனஅமைதியும் கொள்ளும் காலத்திலேயே கொண்டாட்டங்கள் நிகழ இயலும். எனில் தைய், மாசி மாதங்களில் அறுவடை முடிந்தபின், சித்திரையில் விழா எடுப்பதே தகுந்ததாக இருந்திருக்கும்.

ஒருவேளை மழைப்பொழிவு குறைந்து, விளைச்சல் நன்றாக இல்லையெனில் புத்தாண்டை எப்படிக் கொண்டாடுவது? கொண்டாட மனம் வருமா?

நம் முன்னோர் நல்மதியினர். அதனால்தான் தைய்மாதப் பிறப்பை சூரியனுக்கு நன்றி செலுத்தும் விழாவாக, பொங்கல் பெருவிழாவாகக் கொண்டாடியிருக்கின்றனர். பொங்கல்விழா தமிழரின் அறிவுக்கு அழகியதொரு சான்று.

தமிழர்கள் தமிழ்ப் புத்தாண்டாக முன்னோர் வழியில் சித்திரை ஒன்றையே கடைப்பிடித்து வரலாம். அதுவே முறை. எனினும் தைய் மாதம் முதல்நாளை பொங்கல் விழாவாக மட்டுமல்லாது தமிழர் திருநாளாக, தமிழர் புத்தாண்டாகக் கொண்டாடலாமன்றோ.

சித்திரை ஒன்று தமிழ்ப் புத்தாண்டு. தைய் மாதம் ஒன்று தமிழர் புத்தாண்டு. தமிழ்ப் புத்தாண்டு இயற்கையாக நிகழ்வது. எனினும் தமிழர் புத்தாண்டு தமிழரின் வெற்றியால் வருவது. அதென்ன தமிழர் வெற்றி? தமிழர்கள் அனைவரும் கழனிகளில் உழைத்து அனைத்துத் தமிழர்களுக்கும் போதுமான நெல்லை விளைவிப்பதால் அது தமிழர் புத்தாண்டு. புதுநெல் விளைவிப்பதால், புதுநெல் வருவதால் அதைத் தமிழர் புத்தாண்டாகக் கொண்டாடலாமே. தமிழர் வயல்களில் பாடுபட வேண்டும், அனைத்துத் தமிழருக்குமான உணவை விளைவிக்க வேண்டும். அந்நாளை தமிழர் புத்தாண்டாகக் கொள்வதும் முறைதானே. புது அரிசியில் பொங்கலிட்டு தமிழர் புத்தாண்டை மகிழ்ச்சியாக வரவேற்கலாமன்றோ.

மற்ற தமிழர் எப்படியோ. தேவேந்திர குலத்தவருக்கு தைய்மாத தமிழர் புத்தாண்டே முக்கியமானது. ஏனெனில் அனைவருக்குமான உணவை விளைவிப்பது நம் கடமையல்லவா. எனில் நெல்லை அதிகமும் விளைவித்தாலேயே அது நமக்குப் புத்தாண்டு. நெல்லை அதிகமும்

விளைவித்துவிட்டால் உணவுக்கான கவலை தீரும். உணவிருக்கிறது என்பதே மனிதருக்கான பெருமகிழ்ச்சியாக இருக்க முடியும்.

தையில் வருவது தமிழர் புத்தாண்டு. அன்று பொங்கல் திருவிழா. பொங்கல் விழாவை சிறப்பாக முன்னெடுக்க வேண்டும். பொங்கல்விழா சமயம் கடந்த பெருவிழாவாக நிகழ வேண்டும். சித்திரையில் நிகழ்வது தமிழ்ப் புத்தாண்டு. அன்று பாயாசம் செய்வதைக் கடமையாகக் கொள்ளவேண்டும். தனித்தனியாக வீடுகளில் செய்யாமல் பொதுவில் பாயாசம் செய்து அனைவருக்கும் வழங்கலாமே. அன்று போதும் போதும் எனும் அளவிற்கு தித்திப்புப் பாயாசம் அளித்திடுக.

தமிழ்ப் புத்தாண்டும் தமிழர் புத்தாண்டும் சிறக்க வாழ்த்துக்கள்..

**பொங்கலோ பொங்கல்..**

செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது.

# பற்பநாபன்!



சுருக்கமாக எழுத நினைத்த புத்தகம், அனுமார் வால்போல் நீண்டு கொண்டே செல்கிறது. சுருக்கமாக சிலவற்றை இங்கே பதிவிடுகிறோம். காலம் வாய்க்கையில் இவற்றை விரிவாக்கிக் கொள்ளலாம்.

26. தேவேந்திர குலத்தவரே, நமது பெருந்தந்தையாம் இராமனுக்கு பெரும் சிலையொன்று வடிக்க வேண்டும். மத்தியப் பிரதேசத்தில் எங்கோ ஓரிடத்தில் பெரியதொரு மலை இருக்கிறது. உண்மையில் அங்கே மலைகள் உள்ளன. ஒரு மலை மட்டும் சற்றே உயர்ந்துள்ளது. மலையின் மேல்பாகம் கல்லாக இருக்கிறது. மலையின் இடைப்பாகத்தில் மரங்கள் உள்ளன. அவை பசுமையாக காட்சியளிக்கின்றன. மலையின் அடிப்பாகத்தில், சரிவில் காடுகள் போன்று மரங்கள் வளர்ந்துள்ளது.

மலை கிழக்கு மேற்காக அமைந்துள்ளது. மேற்கின் இறுதியில் அகலமான இருவழி சாலையொன்று செல்கிறது. சாலையை அடுத்து இருப்புப் பாதையும் உள்ளது.

எனில், சாலையை ஒட்டி இராமனின் திருப்பாதங்கள் அமைந்திருக்கும். தலைப்பகுதி கிழக்கு நோக்கி இருக்கும்.

அந்த மிகப் பிரம்மாண்டமான மலை உச்சியை இராமராக வடிக்க வேண்டும். இது ஒரு மிகப்பெரிய பணி. இதற்கு அரசும், பிற மக்களும் ஒத்துழைக்க வேண்டும். எனினும் இப்பணியை நாம் முன்னின்று செய்து முடித்தாக வேண்டும்.

மலை உச்சியில் ஸ்ரீஇராமன் பள்ளிகொண்டவாறு சிலை வடிவமைக்கப்பட வேண்டும். தலையில் மணிமுடி இருக்கிறது. முகம் உயர்ந்துள்ளது. புருவங்கள் அழகாக உள்ளன. நெற்றி அகன்றுள்ளது. நாசி உயர்ந்துள்ளது. உதட்டின் பிளவுகள் நன்றாகத் தெரிகின்றன. உண்மையில் மூக்கின் சரிவு, உதடுகள், பக்கவாட்டுத் தோற்றத்தில் மிகப் பெரும் பள்ளமாகத் தெரிகின்றன.

குரல்வளை நன்றாக உயர்ந்து தெரிகிறது. அகன்ற மார்பு. வயிறு சற்றே உப்பியிருக்கிறது. பாதங்கள் நீண்டுள்ளன. பாதங்கள் இரண்டும் அருகருகே உயர்ந்து செங்குத்தாக இருக்கின்றன. தாமரை இதழ்கள்மேல் நம் அன்புத் தந்தையின் திருப்பாதங்கள் உள்ளன. பாதங்கள் அழகுற உள்ளன. சாலையை ஒட்டி நீண்டு உயர்ந்த பாதங்கள் தெரிகின்றன.

வலது கையின் ஆட்காட்டி விரல் வான்நோக்கிச் சுட்டுகிறது. மற்ற விரல்கள் மடங்கியுள்ளன. இடது கையின் விரல்கள் ஸ்ரீபாதத்தைச் சுட்டிக் காட்டுகின்றன.

நம் தந்தை ஆகாயத்தை நோக்கியவாறு அழகாக பள்ளி கொண்டுள்ளார்.

இப்படியொரு மிகமிகப் பிரம்மாண்டமான நமது தந்தையாம் ஸ்ரீஇராமருக்கு ஒரு சிலையொன்றை நிறுவிட வேண்டும். இது பெரும்பணி. மண்ணில் நெடுங்காலம் நிலைபெற்றிடும் பணி. மலையின் உச்சியை, மேற்புறத்தை உருவமாகச் செதுக்குவதில் மிகுந்த திட்டமிடலும், வேலைத்திறனும், உழைப்பும் தேவைப்படும். இது நமது பெரும் இலக்காக இருக்கட்டும். நம்மால் இப்பணியை சிறப்பாக முடிக்க இயலும். நம் தந்தையின் பேரருளால் இப்பணி பரிபூரணமாய் முடியும்.

**நம் அன்புத் தந்தையால் முடியாததென்று ஒன்றுண்டோ**

முதலில் இம்மலை மத்தியப் பிரதேசத்தில் எங்குள்ளது என்பதைக் கண்டறிய வேண்டும். அதுவே முதல் இலக்கு. யாம் குறிப்பிட்டுள்ளவாறு புனிதம்மிக்க அந்த ஸ்ரீராம மலை நிச்சயம் எங்கோ இருக்கிறது. தேடல் துவங்கட்டும். நம் தந்தை பள்ளி கொள்ளப்போகும் அப்பெருமலையைச் சரியாகக் கண்டுபிடித்து விட்டாலே, மற்ற பணிகள் மளமளவென நடந்தேறி விடும். பெருந்தந்தையாம் ஸ்ரீஇராமன் பள்ளிகொள்ளும் மலையின் அடிவாரத்தில் காலப்போக்கில் பல்வேறு விதமான இராமர் கோவில்கள் இடம்பெறும் எனத் தெரிகிறது. பல்வேறு மாநிலத்தவரும், மொழியினரும், நாட்டினரும் இராமருக்கென்று, அன்புத் தந்தைக்கென்று மலையடிவாரத்தில், மலைச்சரிவில், இராம கோவில்களை எழுப்புவர் எனத் தெரிகிறது. எனினும் அங்கு இடம்பெறும் எந்த இராமன் கோவிலிலும் கல்சிற்பம் இடம்பெறக்கூடாது. கல் தவிர்த்த பிற செம்பொன், பஞ்சலோகச் சிலைகளை வைத்துக் கொள்ளலாம். மேலே பள்ளிகொள்ளும் ஸ்ரீஇராமனுக்கு, ஜெயராமனுக்கு மட்டுமே கல்லால் உருவம். அம்மலையில் வேறு எவ்விதமான கல் உருவங்களும் இடம் பெறக்கூடாது.

இராமனுக்குரிய கோவிலில் இராமன், சீதா, லட்சுமணன் போன்றவர்களும், இராமகாதையோடு தொடர்புடையவர்களும் இடம்பெறலாம். எனினும், இராவணன் உருவம் அம்மலையில் எவ்விடத்தும் இடம்பெறலாகாது.

மலையில் இடம்பெறும் இராமன் திருக்கோவில்களில் கண்டிப்பாக அனுமன் சிலையொன்று இடம் பெற வேண்டும்.

மக்கள் வேண்டுதலுக்காகவும், உலக நன்மைக்காகவும், அம்மலையில் இராமன் சிலையொன்று வைக்க விரும்பினால், அது ஊர் சார்பாகவே நிகழ வேண்டும். தனிப்பட்ட நபராலோ, தனிப்பட்ட அமைப்பாலோ, தனிப்பட்ட மடத்தாலோ, தனிப்பட்ட நிறுவனங்களாலோ எவ்வித கோவில்களும் அங்கே இடம்பெறக் கூடாது. ஊர் சார்பாக விரும்பினால், அனைத்து மக்களும் ஒன்றாக இணைந்து ஒரு சிலையொன்றை மலையில் பிரதிட்டை செய்யலாம். வழிவழியாக அச்சிலையை வழிபட்டும் வரலாம். கவனத்தில் கொள்ளவேண்டியது, மலை முழுக்க முழுக்க இராமன் பெயருக்கே சொந்தம். வேறு தனிப்பட்ட எவருக்கும் உரிமை கோரல் இருக்கக் கூடாது. அகிலம் காக்கும் இராமனுக்கு அகிலம் புகழும் சிலையை எழுப்பிடுக.

**தந்தையின் நாமம் வாழ்க! தந்தை புகழ் மேலும் சிறக்க!!**

27. தேவேந்திர குலத்தாரே, தந்தையாம் இராமனுக்கு மத்தியப் பிரதேசத்தில் மலைமேல் திருக்கோவில் எனில், தந்தையாம் கண்ணனுக்கு உத்திரகோசமங்கை கண்மாய்க்குள் திருக்கோவில்.

தந்தையாம் கண்ணனுக்கு உத்திகோசமங்கை ஊரிலுள்ள பெரிய கண்மாயின் மேற்குக் கரையையொட்டி, அதாவது உத்தரகோசமங்கை - திருப்புல்லாணி சாலையின் கிழக்காக, கண்மாயின் மத்திய பகுதியை ஒட்டி, தெற்கு வடக்காக கண்ணனின் திருக்கோவிலொன்று அமைக்கப்பட வேண்டும்.

கோவில் கண்மாயின் ஆழத்திலிருந்து பதினெட்டடி கீழே பூமிக்குள் அமைக்கப்பட வேண்டும். அதாவது கண்மாய் பத்தடி ஆழம் இருக்கிறதெனில் அதற்குக்கீழே பதினெட்டுஅடி ஆழத்தில் அதாவது பதினெட்டுப்படி கீழே இறங்கினால் கோவிலின் தரைத்தளம் அமையுமாறு கோவிலைக் கட்டமைக்க வேண்டும். அதற்கேற்ப கோவிலைச் சுற்றிலும் மதில்சுவர் எழுப்ப வேண்டும். கோவிலினுள் நீர் கசியாத வண்ணம் உறுதியான அமைப்புடையதாக சுவர்கள் அமைக்கப்பட வேண்டும். கோவில் திறந்த அமைப்பாகவே இருக்கும்.

கோவிலடியினுள்ளே மழைத் தண்ணீரைச் சேகரித்து அதைப் பயன்படுத்துமாறோ, வெளியேற்றுமாறோ வசதிகள் செய்ய வேண்டியதும் கட்டாயம்.

உத்திரகோசமங்கை கண்மாயின் மையத்தில் அழகியதொரு கம்பம் நடப்பட்டு, தண்ணீர் முழுமையாகத் தேங்கும்போது எத்தனை அடி ஆழம் இருக்குமோ, அதைவிடக் கூடுதலாக இருபத்துநான்கு அடிகள் உயரமானதாக கல்கம்பம் அமைக்கப்பட வேண்டும். கல்கம்பம் ஒரு மீட்டர் சுற்றளவு கொண்டதாக இருப்பது நன்று. கம்பத்தின் உச்சியில் அசோகச் சக்கரம் அமைக்கப்பட வேண்டும்.

கண்மாயின் வடக்குக் கரையில், கண்மாய்க்குள்ளேயே, கரையின் உயரத்தைவிட கூடுதலாக எட்டு அடிகள் நீளம் கொண்டதான ஒரு கற்கம்பம் அமைக்கப்பட வேண்டும். கம்பத்தின் உச்சியில் சிம்மச்சிலை இடம்பெற வேண்டும்.

அவ்வாறே, கண்மாயின் தெற்குக் கரையில் அமைக்கப்படும் பத்தடிக் கம்பத்தின் உச்சியில் கருடனும், கிழக்கில் அமைக்கப்படும் பதினான்கு அடிக் கம்பத்தில் பறக்கும் குதிரையும் இடம்பெற வேண்டும்.

கோவிலின் மூலவர் ஸ்ரீருக்மணி ஸ்ரீசத்யபாமா உடனுறை ஸ்ரீகிருஷ்ணன் எனும் திருநாமம் கொள்கிறார். ஸ்ரீகிருஷ்ணன் புல்லாங்குழல் கண்ணனாகவும், வலது கால் ஊன்றிய நிலையிலும், ஸ்ரீருக்மணி, ஸ்ரீசத்யபாமா இருவரும் கண்ணனின் திருமுகத்தை நோக்கியவாறும் அமைப்பது சிறப்பு. கண்ணனின் உயரம் எட்டடியாக இருப்பது நலம். மூவருக்கும் பின்னே பசுவொன்றும், சற்றே வலது முன்புறத்தில் மயிலொன்றும் இடம் பெறுவது அழகு.

மூலவரின் கோபுரம் தரைத்தளத்திலிருந்து ஐம்பதியிரண்டு அடிகள் உயரத்திலிருப்பது நன்று. கோபுரத்தில் கண்ணன் தொடர்புடைய சிற்பங்கள் இடம் பெறுவது அழகு.

கோவிலுக்கென்று தனியாக உற்சவர் இல்லை. இக்கோவில் அமைக்கும்போதே கருவறையினுள் ஒருஅடி சதுரமுள்ள ஆயிரத்து ஒரு சதுரங்களை மூன்று புறமுள்ள சுவர்களிலும் உருவாக்க வேண்டும்.

திருக்கோவிலின் கருப்பக்கிரகத்தில் மூலவர்கள் இடம்பெறுவர். மூலவர் சிலைகள் சுவரை ஒட்டியில்லாமல் கருவறையின் மையத்தில் இருக்குமாறு

அமைக்க வேண்டும். எனில் மூன்று பக்கமும் சுவர்கள் இருக்கும். இந்தச் சுவர்களில் ஒரு அடி நீள, அகல, ஆழத்தில், வரிசை வரிசையாக ஆயிரத்தியொரு சதுரங்கள் அமைக்க வேண்டும். சதுரங்களின் இடையில் மேலிருந்து கீழாக சற்றே சிறிய இடைவெளி இருக்க வேண்டும். அந்த இடைவெளியில் தீபங்கள் மாட்டப்பட வேண்டும். எனில் கோவில் கருவறையினுள் ஆயிரத்தோரு சதுரங்களின் பக்கப்பகுதியில் ஆயிரத்தோரு தீபங்கள் இருக்கும். விளக்குகள் பித்தளையில் 100 மில்லிலிட்டர் நெய் கொள்ளும் விதத்தில் அல்லது கால்படி நெய் கொள்ளும் விதத்தில் இருக்க வேண்டும். அவற்றை கழற்றி மாட்டுவதற்கேற்ற அமைப்பும் அமைக்கப்பட வேண்டும்.

முதல் வருடத்தில் உயரதாரர்கள் மூலமாக ஒரு குழந்தைக் கண்ணன் சிலை பெறப்பட வேண்டும். குழந்தைக் கண்ணன் சிலை ஒரு அடி சதுரத்திற்குள் வைக்குமாறு இருக்க வேண்டும். எனில், இருபத்தேழு சென்டிமீட்டர் உயரத்திலும் இருபத்து நான்கு சென்டிமீட்டர் அகலத்திலும் இருக்கலாம். சிலையை சதுரத்திற்குள் வைத்து வெளியே எடுப்பது சிரமமாக இருக்குமெனில் அளவுகளை மாற்றிக் கொள்ளலாம். இருபத்திநான்கு செ.மீ. அகலத்திலும் குழந்தை கண்ணன் சிலைகளை உருவாக்கலாம். சிலைகள் பளிங்குக் கல்லில் செய்யலாம். எனினும் சிலைகளின் வண்ணம் நீலநிறமாக இருக்க வேண்டும். அனைத்து சிலைகளும் ஒத்த அளவுள்ளவையாக, நிறமுள்ளவையாக, ஒத்த தோற்றமுடையவையாக, அனைத்திலும் ஒன்றுபோல் இருக்க வேண்டும். சுருங்கக் கூறின், ஒன்றாவது சிலையின் நகல் போன்று அடுத்துவரும் ஆயிரம் சிலைகளும் அமைய வேண்டும்.

முதலாவது சிலையை தேவேந்திர குலத்தார் அளிக்கலாம். அடுத்தாண்டு இரண்டாவது சிலை இடம் பெற வேண்டும். இந்தச் சிலையை யார் அளிப்பது என்பது கண்ணன் மூலமாக கனவில் தெரிவிக்கப்படும். யார் கனவில் உத்திரகோசமங்கை கண்மாயின் பெருமாளுக்கு குழந்தை கண்ணன் சிலை வைக்க உத்தரவாகிறதோ அவர்கள் அந்த ஆண்டுக்குரிய சிலையை அளிக்கலாம். அந்த சிலை இரண்டாவது சதுரத்தில் வைக்கப்படும். ஒன்றுக்கு மேற்பட்டவர் கனவில் சிலை வைக்க உத்தரவானால்? சிலை வைக்கக் கனவு கண்டவர் கோவிலினுள் அதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் தமது உத்தரவையும் முகவரியையும் அட்டையில் குறித்து போட்டுவிடலாம். அட்டையில் உத்தரவு கிடைத்த நாளையும் குறிப்பிடலாம். பலருக்கு இப்படி உத்தரவு கிடைத்திருக்குமெனில், பெட்டியின் போடப்பட்டுள்ள

பெயர் அட்டைகளிலிருந்து சிறு குழந்தையொன்றை ஒரு சீட்டை எடுக்கச் சொல்லி ஒருவரைத் தேர்ந்தெடுக்கலாம் அல்லது கண்ணன் காலடியில் அனைத்துச் சீட்டுகளையும் கொட்டி வைத்து அவன் பெயரைச் சொல்லி ஒரு சீட்டை எடுக்கலாம். அன்னாரை அந்த ஆண்டிற்கான சிலையை அளிக்க ஏற்பாடு செய்யலாம். இந்த முடிவுகளெல்லாம் சிலைவைக்கும் நாளுக்கு இருமாதங்களுக்கு முன்பாகவே முடிக்கப்பட வேண்டும். சிலை வைக்கும் குடும்பத்தார், நாற்பத்து எட்டு நாட்கள் காப்புக்கட்டி, சிலையை அளிக்க வேண்டும்.

யாருக்குமே கண்ணனின் உத்தரவு கிடைக்கவில்லை எனில், தமிழகத்தில் வாழும் ஆயர்கள் குடும்பங்களிலிருந்து ஒரு குடும்பத்தார் கண்ணன் சிலையொன்றை அளிக்கலாம். அடுத்த ஆண்டும் அதே நிலையெனில், கண்ணன் மேல் பக்தி கொண்ட ஐயங்கார்களிலிருந்து ஒரு குடும்பத்தார் அளிக்கலாம். அவ்வாறே கண்ணன் மேல் பக்திகொண்ட நாயக்கரும் குழந்தை கண்ணன் சிலையை அளிக்கலாம். இவையெல்லாம் கண்ணன் உத்தரவு இல்லாத நிலையிலேயே. கண்ணன் உத்தரவு எனில் அது கிடைக்கப்பெற்ற குடும்பம், அவரது உறவு வழிகளே சிலையை அளிக்க வேண்டும்.

இவ்வாறு ஆண்டிற்கு ஒரு சிலையென ஆயிரமாண்டுக்கு இவ்விழாவினை சிறப்பித்து வருக. கண்ணனின் அருள்படி அனைத்தும் நல்லபடியாய் அமையும்.

குளத்துக் கண்ணனுக்கு தினப்படியான திருவமுதில் வெண்ணெய்யும் இடம் பெறட்டும். வெண்ணெய் நம் பெருமாளின் திவ்யப் பிரசாதமாக பக்தர்களுக்கு வழங்கப்படட்டும்.

கண்ணன் பிறந்தநாளன்று இந்த விழாவினை வைப்பது சிறப்பாக இருக்குமல்லவா. பெரியோர்கள் கூடிப்பேசி நாளைத் தேர்ந்தெடுக்க.

**எந்தையே.. வாழ்க நின் புகழ்.. வளர்க நின் பெரும..**

வாழிய மலைமேல் இராமன்!

வாழிய குளத்துக்குள் கண்ணன்!

**வாழிய கோவிந்தன்! வாழிய பாரதம்!**

28. தேவேந்திர குலத்தாரே, நம் பெருந்தந்தை ஸ்ரீவராகமூர்த்தியைப் போற்றும் விதமாக ஒரு சடங்கொன்று நிகழ்த்தப்பட வேண்டும். நம்மைப் பொருத்தவரை ஸ்ரீவராகர் நம் தந்தை. நம் பல்லர். நம் பெரும்பல்லர். தமது பற்களால் பூமியையே மேலே தூக்கினாரல்லவா. எத்தனை மகத்தான பெரும்பல்லர் நம் தந்தை. நம் பெருமைமிகு பல்லரை, எயிற்றிடை மண்கொண்ட நம் தந்தையை என்றென்றும் நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

பன்றி எனில் மக்கள் மனதில் கீழான பார்வை உள்ளது. மற்ற விலங்குகளைவிட பன்றியை குறைவாக மதிப்பிடுகின்றனர். எனினும் பன்றி மிகவும் வலிமையுடையது. சற்றே மூர்க்கமானதும்கூட. இன்னும் பல சிறப்பான பண்புகளையும் பன்றி கொண்டுள்ளது. நாராயணரே அனைத்தும் எனில் பன்றியும் அவரே, யானையும் அவரே, சிங்கமும் அவரே. அவரில், அவர் படைத்தவற்றில், உயர்வு தாழ்வு பார்க்கவேண்டியதில்லை. பன்றியை அவ்வாறு காண வேண்டியதில்லை. குறிப்பாக காட்டுப் பன்றிகள். காட்டுப் பன்றிகள் காட்டு வளத்திற்கு பெரும் பங்காற்றுகின்றன எனில் மிகையாகாது.

மேற்கின் மதங்கள் பன்றியை ஒதுக்கி வைப்பதாகவே தெரிகிறது. அவர்களது பண்பாட்டில் அவ்வாறான விலக்கம் இருக்கலாம். நமது பண்பாட்டில் அப்படியான விலக்கம் இல்லை. தேவேந்திர குலத்தவரின் முன்னோர் மாட்டுக்கறியை விலக்கினாரேயொழிய பன்றியை அல்ல. எமக்குத் தெரிந்தவரை தேவேந்திரர் வாழும் ஊர்களில் பன்றிக்கறியை அவ்வளவாக விரும்புவதில்லை. சில ஊர்களில் விதிவிலக்கு இருக்கலாம். ஊரிலும் ஒருசில குடும்பங்கள் விதிவிலக்காக இருக்கலாம். பொதுவில் தேவேந்திர குலத்தாருக்கு பன்றிக்கறிமேல் சற்றே விலக்கம் உண்டெனில் ஏற்புடையதே.

எனினும் எமதனுபவத்தில் வடக்கிலிருக்கும் வன்னியக் குடிகளில் பன்றிக்கறிமீது பெரிய ஒவ்வாமை இல்லை எனவே தெரிகிறது. வன்னிய ஊர்களில் பன்றிக்கறியும் விற்கப்படுவதாகவே தெரிகிறது. விதிவிலக்குகள் இருக்கலாம்.

எதற்கு இத்தகையதொரு முன்னோட்டமெனில், தேவேந்திர குலத்தவருக்கு ‘‘தந்தையை உண்ணுதல்’’ மற்றும் ‘‘தந்தையைக் காணுதல்’’ எனும் பெயர்களில் சடங்கு முறையொன்றை ஏற்படுத்த விரும்புகிறோம். இச்சடங்கு முறைகளை

குறித்து நன்கு ஆராய்ந்தே யாம் பரிந்துரைக்கின்றோம். ஏன், எதற்கு எனவும் தெளிந்துள்ளோம்.

நம் தந்தையான திருமலை வேங்கடநாதனைக் தரிசிக்க இனி தனியாகவோ, தனிக்குடும்பமாகவோ செல்லாமல், குடும்பங்கள் இணைந்து பங்காளிகள், உறவுக்காரர்கள், பெண்ணெடுத்து, பெண்கொடுத்தவர்கள் எனப் பெருங்கூட்டமாகவே திருமலைக்குச் செல்ல வேண்டும். ஒரு பேருந்து கொள்ளும் அளவிற்கு அதாவது குறைந்தது அறுபது பேர் எனும் அளவில் தந்தையைக் காணச் செல்வது சிறப்பு.

வராகமூர்த்தியே சீனிவாசன் என்பதால், நாம் சீனிவாசனைக் காணும்முன் அதாவது நம் தந்தையைக் காணும்முன் அவரை உண்ண வேண்டும். எல்லாமே தந்தைதானே. உண்பதும் தந்தையையே, உடுப்பதும் தந்தையையே. அவரன்றி பிறிதொன்று இல்லையல்லவா.

எனில் முதலில் நாம் காணவேண்டியது திருமலையை. அதாவது திருமலையில் கோவில்கொண்டுள்ள ஸ்ரீநிவாசனைக் காண்பதற்கு முன்பாக, திருமலையைக் காண்பதையே நாம் பெரும் புண்ணியமாகக் கொள்ள வேண்டும். திருமலையைக் கண்டு வணங்கிவிட்டு ஊருக்குத் திரும்பிவிட வேண்டும். அதன்பின் ஒரு வருடமோ, வருடங்கள் கழித்தோ திருமலைக்குச் சென்று தந்தையாம் ஸ்ரீநிவாசனைக் கண்குளிரக் காணவேண்டும். கவனத்தில் கொள்ளவேண்டியது, நமது முதல் தரிசனம் திருமலை, அதற்கு அடுத்த தரிசனமே தந்தையாம் சீனிவாசன்.

எனில் முதல் தரிசனத்தின்போது அதாவது குடும்பங்கள் இணைந்து திருமலையைக் காணச் செல்லும்போது பன்றி இறைச்சியை உண்ணுவதை சடங்காக்க வேண்டும். அது எவ்வாறெனில், ஏழுமலைகளாக அமைந்துள்ள திருமலையின் வடக்குப் புறத்தில், சரியான இடமாக, மலையாகத் தேர்வு செய்து, அங்கே ஒரு குடைவரைக் கோயிலொன்று உருவாக்கப்பட வேண்டும்.

குடைவரைக் கோவில் திருமலையின் வடஎல்லையில், நாற்பத்துஎட்டு அடி குடைவில், இருபத்து நான்கு அடி அகலத்தில், பதினெட்டு அடி உயரத்தில் அமைய வேண்டும். நாற்பத்து எட்டு அடியில் பத்துக்குப் பத்து எனும் அளவில் கருவறையும், அதற்கு அடுத்த பதினெட்டு அடியில் முன்மண்டபமும், அதற்கு அடுத்த இருபது

அடியில் மகாமண்டபமும் அமைய வேண்டும். மகாமண்டபத்தின் அதாவது குடைவரையின் நுழைவில் நான்கு தூண்களும், முன்மண்டப நுழைவில் நான்கு தூண்களும், கருவறை நுழைவில் இரண்டு தூண்களும் என மொத்தம் பத்துத் தூண்கள் இடம்பெற வேண்டும்.

குடைவறைக் கோவிலின் கருவறைச் சுவற்றில் தந்தையாம் சீனிவாசன் உருவம் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட வேண்டும். வேங்கடவன் மலர்ந்த தாமரையில் அமர்ந்த கோலத்தில் சிற்பம் அமைக்கப்பட வேண்டும். வேங்கடவனுக்கு எடுப்பான மீசை வடிக்கவேண்டும். பாதங்களை கருடன் தாங்குவது போன்று வடிப்பது சிறப்பு.

பத்மாவதித் தாயாருக்கு சித்திர வடிவம் மட்டுமே அளிக்கப்பட வேண்டும். தனித்த புடைப்புச் சிற்பம் தேவையில்லை. வேங்கடவன் புடைப்புச் சிற்பத்தின் இடப்புறம் தாமரை மலரில் நின்றகோலத்தில் இயற்கையான அழகிய வண்ணங்களில் பத்மாவதி தாயாரை சுவற்றில் வரைந்து கொள்ளலாம்.

திருமலையின் வடக்குப் புறத்தில் எங்கு குடைவரை அமைக்கும் விதத்தில் கடினமான மலை இருக்கிறதோ அவ்விடத்தில் குடைவரைக் கோவிலை வடிக்கலாம். குடைவரை உறுதியாக திருமலையின் வடக்கில்தான் அமைய வேண்டும்.

குடைவரைக் கோவில் அமையும் இடத்திற்கு முன்புறத்தில், எந்தவிதமான கட்டிடங்களும் அதாவது மண்டபங்கள், தங்கும் விடுதிகள், நிழற்குடைகள் போன்ற எந்தவிதக் கட்டுமானங்களும் அமைக்கக் கூடாது. தேவைப்படும் வசதிகளை தற்காலிகமாக ஏற்படுத்திக் கொள்ளலாம்.

பந்தல் அமைத்துக் கொள்ளலாம். தட்டிகள், கூரைகள் ஏற்படுத்திக் கொள்ளலாம். எதுவாக இருப்பினும் காலையில் அமைத்து மாலையில் பிரித்துவிடும், அகற்றிவிடும் அமைப்பாகவே இருக்க வேண்டும். இருள் கவியத் தொடங்கிய பின்பும், காலை புலர்வதற்கு முன்பும், குடைவரைக் கோவிலில், கோவிலுக்குமுன், பக்தர்கள் பிற பணியாளர்கள் இருப்பதற்கு அனுமதி இல்லை. இரவுகளில் கோவில் தனித்திருக்க வேண்டும்.

குடைவரைக் கோவில் அமையும் இடத்தில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவு சமப்படுத்தப்பட்டு, சமதளமாக, செடிகொடிகளற்று இருக்குமாறு சீராக்க வேண்டும். இங்கு பக்தர்களின் வாகனங்கள் நிறுத்தவும், அவர்கள் சமைக்கவும், தேவையெனில் சிறிய பந்தல் போடுவதற்கு ஏற்பவும் வசதிகள் அமைக்கப்பட வேண்டும். வாகன நிறுத்துமிடமும் ஆயிரம் ஏக்கருக்கு அப்பாலேயே அமைய வேண்டும்.

குடைவரைக் கோவிலை அடுத்திருக்கும் மலைச் சரிவில், காட்டில், ஆயிரம், இரண்டாயிரம் ஏக்கரில் காட்டுப் பன்றிகள் வளர்வதற்கு ஏற்பாடு செய்யலாம். இதை கோவில் சர்பாகவோ, அரசு சார்பாகவோ முறையாகக் கண்காணிக்க வேண்டும். முக்கியமாக காட்டுப் பன்றிகள் அங்கிருந்து வெளியேறாதவாறு தடுப்புகள் அமைப்பது அவசியம். அவற்றிற்குத் தேவையான உணவும், நீரும் முறையாக வழங்கப்பட வேண்டும். தேவைப்பட்டால் அவற்றின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தவும் வேண்டும். தேவைப்படும் கால்நடை மருத்துவர்களும், பிற பணியாளர்களும் பணியமர்த்தப்பட வேண்டும்.

குடைவரைக் கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு பன்றிக்கறியை அளிக்கும் கடையும் இடம்பெற வேண்டும். இதிலெல்லாம் நவீன தகவல் வசதிகளைப் பயன்படுத்தி ஒரு நாளில் எவ்வளவு கறி வேண்டும் என்பதைத் துல்லியமாகக் கணக்கிட்டு, பன்றிகளைக் கொல்ல வேண்டும். பன்றிகளைக் கொல்வதிலும் தெளிவான வரையறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். பன்றிகள் இரத்தம் சிந்தத் கூடாது. நீரினுள் அமிழ்த்துவது போன்ற எளிய முறைகளைப் பின்பற்றலாம்.

கொல்லப்படும் பன்றிக்கு கண்டிப்பாக பற்கள் வெளியில் தெரியுமாறு நீட்டிக் கொண்டிருக்க வேண்டும். எந்தப் பன்றி கொல்லப்படுகிறதோ அதன் பற்கள் அங்கே காட்சிக்கு வைக்கப்பட வேண்டும். இதில் கவனம் தேவை. பல் வெளியில் நீட்டியிராத பன்றி இறைச்சியை உண்ணக் கூடாது.

இந்தியக் காட்டு பன்றியை (Indian Wild Boar) உண்பது சடங்குக்காகவே. நம் தந்தை பன்றி அவதாரமெடுத்து பூமியைத் தூக்கினார் எனும் நினைவை நம்முள் பதியவே இச்சடங்கு.

குடைவரைக் கோவிலில் குறைந்தது ஒரு கிலோ, அதிகபட்சமாக மூன்று கிலோ எனும் அளவில் பன்றி இறைச்சியை வாங்கி, அங்கேயே குழம்பு சமைத்து, அரிசிச் சோறோடு பிசைந்து உண்ண வேண்டும். சோறு குழம்பு மட்டுமே. வேறு எவ்வடிவத்திலும் சமைக்கக்கூடாது. உண்ணும்போது ஸ்ரீவராகமூர்த்தியை மனதில் நினைத்துக் கொள்வதும், ஸ்ரீவராகமூர்த்திக்கு நன்றி சொல்வதும் சிறப்பு. இது சடங்குமுறை என்பதால் ஒரு சிறு கவளமாவது உண்ண வேண்டும். தேவேந்திர குலத்தவரில் எவருக்கேனும் உண்பதில் ஒவ்வாமை இருக்குமெனில் சிறு அளவாவது எடுத்து வாயில் போட்டுக்கொள்ள வேண்டும். உதாரணமாக மாத்திரை போட்டுக் கொள்வதுபோல். அப்படி நம் குலத்தில் யாரேனும் மறுப்பாரேயானால் அன்னார் திருமலை ஏறி திருமலையப்பனைக் காணக் கூடாது. முதலில் உண்ணுதல். அதன் பின்பே காணுதல்.

பன்றி இறைச்சியை குடைவரைக் கோவிலின் பெருமாளுக்குப் படைக்கக் கூடாது. அவருக்கு பிற வழிகளில் அதாவது தேங்காய் உடைத்து, மாலை சாற்றி வழிபாடு நிகழ்த்தலாம். உண்ணுவதற்குமுன் உணவுக்கு தீபாராதனை காட்டி ஸ்ரீநிவாசனுக்கு ஜெயமங்களம், ஸ்ரீவராகமூர்த்திக்கு சுபமங்களம் எனச் சொல்வது சிறப்பு.

ஸ்ரீபூவராகமூர்த்தியை பொற்றுதலுக்குரிய ஆழ்வார்கள் ஞானப்பிரான் என்றே கொண்டாடுகிறார்கள். ஞானமூர்த்தியான நம்பெருமானை ஏனம், கேழல், வராகம் மற்றும் பன்றி எனும் பெயர்களில் நாற்பதிற்கும் மேற்பட்ட பாசுரங்களில் போற்றிப் புகழ்கிறார்கள். தீதறுதிங்கள் பொங்குசுடரும்பர் உம்பர் உலகேழினோடும், ஏனமாய் நிலம்கீண்ட எம் அப்பனே கண்ணா, பெருங்கேழலார் தம்பெருங்கண் மலர்புண்டரீகம் நம்மேல், வென்றுசேர் திண்மை விலங்கல் மாமேனி, ஏனத்துருவாகி நிலமங்கை எழில்கொண்டான், வாரகமதாய் இம்மண்ணை இடந்தான் என ஆழ்வார்கள் போற்றிப் புகழும் நம் வராகப்பெருமான் வழிபாட்டின்போது, அவரது பாசுரங்களில் ஏதேனும் ஒன்றை நினைவில் நிறுத்தி அனைவரும் பாடுவது மிகவும் சிறப்பு. குறிப்பாக தீபாராதனையின்போது அனைவருக்கும் பிடித்த ஒரு பாசுரத்தைப் பாடலாம். நம் அன்னையாம் பூமிதேவியையும் நினைவில் நிறுத்துவது அழகு.

உண்ணுவதற்குமுன் திருமலையை நோக்கி, உண்ணும் நிகழ்விற்கு வற்துள்ள நாங்கள் அனைவரும் தந்தையாம் சீனிவாசனைக் காணும் நிகழ்விற்கும் சேர்ந்தே வரும்படி அருளவேண்டும் என வேண்டிக் கொள்ளலாம். மேலும்

கூடுதலான பேர் தந்தையைக் காணச் செல்ல வேண்டுமேயொழிய அதைவிடக் குறையக் கூடாதென்றும் தந்தையிடம் வேண்டிக் கொள்ளலாம்.

உண்ணும் நிகழ்வில் சிறுகுழந்தைகளுக்கு உணவளிக்க கூடாது. அவர்களுக்கு என்ன உணவு என அறியும் வயதிலேயே, அவர்களது ஒப்புதலோடே இறைச்சி உண்ணக் கொடுக்க வேண்டும். எனில் குறைந்தது பத்து வயதிற்கு மேற்பட்ட வயதாகவாவது இருப்பது சிறப்பு. அறியா வயதில் உண்பது கணக்கில் சேராது.

ஒருவர், ஒருமுறை ஸ்ரீவராகமூர்த்தியின் நினைவாக உண்டால் போதுமானது. அவர் மறுபடியும் உண்ணும் நிகழ்வில் பங்கேற்க வேண்டியதில்லை. எவரேனும் விருப்பப்பட்டு மறுபடியும் வரவிரும்பினால் அதற்குத் தடை இல்லை.

அவரவர் ஊரிலிருந்து உண்ணும் நிகழ்விற்குக் கிளம்பினால் நேராக திருமலைக்கே செல்ல வேண்டும். பிறகோவில்களுக்கு, பிறவழிபாட்டு இடங்களுக்கு, சுற்றுலாத் தலங்களுக்கு செல்லக் கூடாது. இரவில் பயணம். காலையில் திருமலை. சமைத்தல், தந்தையைக் காணுதல், உண்ணுதல், மாலைக்குள் அங்கிருந்து கிளம்புதல், நேராக ஊர் வந்து சேர்தல். வேறு எதிலும் கவனம் கொள்ளக் கூடாது.

திருமலையை ஒருமுறை பேருந்திலேயே சுற்றி வருவதும் சிறப்பு. அப்படி ஏதேனும் திருமலையைச் சுற்றி வருமாறு சாலை இருக்கிறதா எனத் தெரியவில்லை. இருப்பின் குடைவரைக் கோவிலுக்குச் செல்வதற்கு முன்பு, ஒருமுறை திருமலையை வலம் வருவதும் சிறப்பு. ஒருவேளை எதிர்காலத்தில் அப்படியான சாலை அமைக்கப்படுமாயின் ஒருமுறை திருமலையைச் சுற்றி வருவதும் நல்லதே.

அமையவிருக்கும் குடைவரைக் கோவிலின் மூர்த்திக்கு ஸ்ரீவராகர் எனவும் அன்னைக்கு பூமிதேவி எனவும் மங்களப் பெயர்கள் சூட்டுவது பொருத்தமன்றோ.

**வாழிய ஸ்ரீவராகர்; வாழிய அன்னையாம் ஸ்ரீபூமிதேவி!**

தேவேந்திர குலத்தவர் கோவில்களுக்கு குறிப்பாக குலதெய்வக் கோவில்களுக்குச் சென்றால் உறவின் முறைகளோடு செல்வதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். அதன்போது சாமிக்கு வெள்ளை கைத்தறி துண்டொன்றை

அளிக்க வேண்டும். ஒருவருக்கு ஒரு துண்டு எனில் எத்தனைபேர் வந்திருக்கிறார்களோ அத்தனை துண்டுகளையும் ஒன்றுடன் ஒன்று முடிச்சிட்டு சாமிக்கு சமிர்பிக்க வேண்டும். எத்தனை துண்டு சமர்பிக்கப்படுகிறது என்பதை சாமியிடம் சத்தமாகக் சொல்ல வேண்டும். மறுமுறை வரும்போது அதைவிட கூடுதலான எண்ணிக்கையில் துண்டுகள் அளிக்க அருளுமாறு வேண்டிக் கொள்ளலாம்.

எனில் ஸ்ரீவராகருக்கும் இவ்வாறான துண்டு அளித்தல் சடங்கை நிறைவேற்றலாம். துண்டுகளை முடிச்சிட்டு, ஒன்றாகச் சுருட்டி ஒரு பெட்டியிலோ, தாம்பாளத்திலோ வைத்து ஸ்ரீவராகருக்கு சமர்பிக்கலாம். எனில், தந்தையைக் காணும் நிகழ்விற்குச் செல்லும்போது, இதைவிடக் கூடுதலான துண்டுகள் இடம்பெற வேண்டுமல்லவா. நம் பெருமை மிகுந்த தந்தை உறுதியாக நம்மை கூடுதலாகவே வர அருளுவார்.

**நம் தந்தை எப்போதும் வென்றான்.**

**நம் தந்தை புருஷோத்தமன்..**

பார் புகழும் நம் தந்தையாம் ஸ்ரீநிவாசன் நம்மை என்றும் மறப்பதில்லை. நாமும் நம் தந்தையை என்றும் மறப்பதில்லை. இது என்றென்றும் தொடரும் பந்தம், சொந்தம், உறவு..

29. தேவேந்திர குலத்தவருக்கான சடங்குகள் புத்துலகம் செய்வோம் - ஒன்று புத்தகத்தில் கொஞ்சம் விவரிக்கப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக பின்வரும் இறப்புச் சடங்கு சுட்டப்படுகிறது. பெண்ணுக்கான இறப்புச் சடங்கில் ‘‘உடலுக்கு மணமுள்ள ஒற்றை மாலை அணிவிக்க வேண்டும்’’ என்பதன் தொடர்ச்சியாக இதைக் கொள்க.

உடல் வைக்கப்பட்டிருக்கும் இடத்தில் உடலைச் சுற்றிவருமாறு இடம் ஒதுக்க வேண்டும். உடல் வைக்கப்பட்டிருக்கும் இடத்திலிருந்து பத்தடி சுற்றளவுக்கு ஒரு வட்டமொன்று சுண்ணமாவால் உருவாக்க வேண்டும். அப்படி அவரது வீட்டருகே இடமில்லையெனில் இருக்கும் இடத்திற்குள் வட்டமொன்று உருவாக்கிக் கொள்ளலாம். எதிர்காலத்தில் இறப்பு நிகழ்ந்தவுடன் பொதுஇடத்தில் உடலை வைக்குமாறு ஏற்பாடு செய்து கொள்வது நன்று. அதற்குரிய முறைகளை

பெரியவர்கள் கலந்து பேசி முடிவெடுக்கலாம். பொதுவான திறந்தவெளி இருக்குமேயேனால் அங்கே வேப்பமரங்கள் வைத்துக் கொள்ளலாம். அங்கே இறந்தவரின் உடலை வைப்பதை வழக்கமாக்கலாம்.

பெண்ணின் கணவர், மனைவியோடு வாழ்ந்த வாழ்க்கையை சற்றே நினைவு கொள்ளும் விதத்தில், அவரது வாழ்க்கைத் துணைக்கு இறுதி மரியாதை செலுத்தும் விதமாக, மனைவியின் உடலைச் சுற்றிவர வேண்டும். இதன்போது பாம்பே ஜெயஸ்ரீ அவர்கள் பாடியுள்ள ‘‘பாயும் ஒளி நீய் எனக்கு, பார்க்கும் விழி யாமுனக்கு’’ பாடலை ஒலிபரப்ப வேண்டும். பாடல் மிகவும் பொருத்தமானது. தந்தையாம் பாரதியின் மனதை மயக்கும் வரிகளும், வீணை ஒலியும், ஜெயஸ்ரீயின் குரலும் அந்தச் சூழலுக்கு மிகவும் பொருத்தம். கணவர் தம் வாழ்க்கைத் துணைக்குப் பிரியாவிடை கொடுக்க இது சிறப்பான தருணம். ஒருவேளை கணவர் அழலாம், சுற்றிவர முடியாமல் ஆகலாம். அப்படி ஒரு சூழ்நிலையில் அவருக்கு யாரேனும் உதவலாம். முடிந்தவரை கணவரைத் தனியே விட்டுவிட்டு மற்றவர் கோட்டிற்கு வெளியே இருப்பதே தகும். முடிந்தவரை அமைதி காத்து கணவரைத் தனியே விடவும்.

கணவர் பாடல் முழுமையாக ஒலிக்கும்வரை மனைவியை மெதுவாகச் சுற்றி வரலாம். இறுதியில் மனைவியின் பாதத்தில் மலர்கள் தூவி அவரை வணங்கி விடை கொடுக்கலாம். கணவர் தைரியமாக நடந்து கொள்வது சிறப்பு. ஒருவேளை கணவர் தமது மனைவி பற்றி, அவரது புகழ் பற்றி, அவரது விரும்பம் பற்றி ஒருசில சொற்கள் பேசுவதாக இருந்தால் அதற்கும் வழிசெய்யலாம். எனினும் அவர் பேசுவது அதிகபட்சமாக மூன்று நிமிடங்களுக்குள் முடிய வேண்டும். நீளக் கூடாது.

கணவர் சுற்றி வந்தபின், பத்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் நீராடி, அணிகள் அணிந்து, கைகளில் நெய் விளக்கேற்றி, பெண்ணின் உடலைச் சுற்றி வரலாம். இத்தனை குழந்தைகள் என்றில்லை. குறைந்த அளவில் இருவராவது இடம்பெற வேண்டும். அதிகமாக பத்துப்பேர் இருக்கலாம். அதற்கும்மேல் எனில் நெருக்கமாக இருக்கும். பெண் பிள்ளைகள் அதிகம் இருக்கலாம். ஆண் பிள்ளைகளும் இடம்பெறுவது சிறப்பு. பிள்ளைகள் தீபமேற்றி சுற்றிவரும்போது, ஸ்ரீஅரவிந்தர் - அன்னை பாடலான ‘‘மலர்போல மலர்கின்ற மனம் வேண்டும் தாயே’’ எனும் பாடலை ஒலிபரப்ப வேண்டும். பாடல் மிகவும் பொருத்தமானது. அன்னை மிகுந்த சிறப்பிற்குரியவர், அன்பிற்குரியவர். மதிப்பிற்குரிய இளையராஜாவின்

குரலும் அச்சூழலுக்கு பொருத்தமானதே. குழந்தைகள் சுற்றிவந்து தீபங்களை காலடியில் வைத்து, பாதங்களுக்கு மலர்தூவி, வணங்கி, உலகம் என்றென்றும் செழித்திருக்க அருளாசிகள் வழங்குமாறு இருஅன்னையரையும் வேண்டிக் கொள்வது சிறப்பு.

பெண்ணுக்குப்போல் ஆணுக்கும் இது போன்ற சடங்குகள் செய்யலாமா எனில் ஆணுக்குத் தேவையில்லை என்பதே எமது எண்ணம். எனினும் உடலுக்கு மாலைசூட்டி, பல்லக்கில் வைக்கும்முன், அவருக்கு இராமகாதையை ஒருமுறை நினைவூட்டுவது நல்லதோ. எனில் அவரது உடலை தனியே வைத்து, கூட்டத்தார் அமைதி காக்க, சம்பூர்ண இராமாயணத்தின் - ஜெகம் புகழும் புண்ணிய கதை இராமனின் கதையே - பாடலை ஒலிபரப்புவது பொருத்தமுடையது. இறுதியாக ஒருமுறை நம் புண்ணியத் தந்தையின் புண்ணியக் கதையைக் கேட்டுக் கிளம்புவது சரியாக இருக்குமன்றோ. ஒப்பம் எனில் அவ்வாறே செய்க.

பாடல்களை ஒலிபரப்பும்போது அலைபேசியில் ஒலிபரப்பக் கூடாது. ஒலிபெருக்கிமூலம் மட்டுமே ஒலிபரப்ப வேண்டும். ஓரளவிற்கு ஒலி இருப்பது நல்லது. அதிகமான ஒலி வேண்டாம்.

இச்சடங்குகள் இறந்தவர் சற்றேனும் வயது முதிர்ந்தவராக இருப்பவர்க்கே. இளவயதில் துர்மரணம் நிகழ்ந்தவருக்கும், சுயமுடிவைத் தேடிக் கொண்டவருக்கும் தேவையில்லை. சுயமுடிவைத் தவிர்க்க வேண்டும். வாழ்க்கையைப் போராடி வெல்ல வேண்டும். எதற்கும் தீர்வொன்று இருக்கும். தீர்வைத் தேட வேண்டும் கோழைபோல் சுயமுடிவுக்குச் செல்லக் கூடாது. இது காரண காரிய உலகம். பொறுமையும், நல்லெண்ணமும், துணிவும் கொண்டு வாழ்க்கையை முழுதாக வாழ்வீர்.

தேவேந்திர குலத்தவரில் இறக்கும் பெண்ணின் பெயரை உறுதியான கல்லொன்றில் தமிழில் பொறிக்க வேண்டும். சாலக்கிராமக் கல்லாக இருந்தால் சிறப்பு. அது பெறுவது கடினம் எனில், உள்ளூரிலேயே கிடைக்கும் தரமான இறுகிய கல்லொன்றில் பெயர்களைப் பொறிக்கும் வகையில் கல்லின் அளவு இருக்க வேண்டும். பெயர்கள் படிக்கும் அளவிற்கு சற்றே பெரிதாக இருந்தால் போதும். எனில் பத்துப் பெயர்களை எழுதுவதற்கு கையடக்கக் கல்லே போதுமானது.

இறப்புநேரும் பத்துப் பெண்களின் பெயர்களை ஒரே கல்லில் பொறித்து, அதற்கு உள்ளூர் நீரால் நீராட்டி, பால், மஞ்சள் மற்றும் தேன் கொண்டு குளிர்வித்து, மஞ்சள், குங்குமம் இட்டு, பூத்தூவி வழிபட்டு, அக்கல்லை பச்சைநிறத் சிறுபையினுள் வைத்து விடுக. இவ்வாறு சேரும் பத்துக் கற்களை அதாவது நூறு பெயர்கள் பொறிக்கப்பட்ட பத்துக் கற்களை ஒன்றாக்கி, மேற்சொன்ன முறையில் சடங்கு செய்து, பத்துக் கற்களையும் மஞ்சள் பையினுள் போட்டுக் கொள்க. இவ்வாறு சேரும் பத்து மஞ்சள் பைகளின் கற்களை மேற்கூறியவாறு வழிபட்டு, வெண்ணிறப்பட்டுத் துணி சுற்றி, பச்சைப் பையினுள் வைத்துக் கொள்க. எனில் ஆயிரம் பெண்களின் பெயர் பொறித்த கற்கள் அப்பையினுள் இருக்கும். பையை மண்பானைக்குள் வைத்துக் கொள்க. இப்பையினுள்ள பெயர் பொறித்த கற்களை அதன் பிறகான காலங்களில் ஆண்டுக்கு ஒருமுறை வெளியே எடுத்து, காவிரி தீர்த்தத்தால் நீராட்டி, வழிபாடு செய்து அவர்களது நினைவைப் போற்றி வருக.

ஆண்களுக்கான நினைவு முறையாக, இராமகாதை பாடலின்போது, ஒரு வெள்ளை பட்டுத்துணியொன்றில் அன்னாரின் கால்பாதங்களை ஒற்றி எடுக்க. அன்னாரின் பாதங்களில் அரக்குநிற வண்ணம் பூசி, இருகால்களையும் சேர்ந்தாற்போல் வைத்து, நன்றாகக் கால்தடம் பதியுமாறு ஒற்றி எடுக்கவும். சற்றே கவனமாகச் செய்யவும். பாதங்களின் அச்சு சரியாக, தெளிவாக இருக்க வேண்டும். அன்னாரின் பாதஅச்சு பதிவாகியுள்ள துணியின் அச்சை, ஒரு அடி சதுரமுள்ள செப்புத் தட்டில் பதிந்து கொள்க. செப்புத் தகட்டின் பாதங்களுக்குமேலே அன்னாரது பெயரும் (முதலெழுத்து இருக்கக் கூடாது - அவரது பெயர் மட்டும்), பாதச் சுவடுகளுக்குக்கீழே அவரது பிறந்த தேதியும் மறைந்த தேதியும் குறித்துக் கொள்க.

இவ்வாறு சேரும் பத்துசெப்புத் தகடுகளை ஒரு வளையத்துள் கோர்த்துக் கொள்க. பின்னர் பத்து வளையங்களை அதாவது நூறு செப்புத் தகடுகளை ஒன்றாக பெரியதொரு வளையத்தில் கோர்த்துக் கொள்க. இப்படிச் சேரும் நூறுசெப்பு காலதடங்களை மஞ்சள் துணியால் சுற்றி, புண்ணிய நீராட்டி, பச்சைப் பட்டுச் சுற்றி வைத்துக் கொள்க. இவ்வாறு சேறும் பத்து பச்சைப்பட்டுச் சுற்றிய செப்புத் தகடுகளை பெரியதொரு வளையத்தில் ஒன்றாக மாட்டி, புண்ணியக் கடல்களில் நீராட்டுக. நீராட்டி, வெள்ளைப்பட்டுச் சுற்றி, மரப்பெட்டிக்குள் வைத்துக் கொள்க. அதன்பிறகான காலங்களில் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை செப்புக் காலடிகளை வெளியே எடுத்து நீராட்டி, பூத்தூவி வழிபாடு செய்து வருக.

எத்தனை ஆறுகளில் நீராட்டலாம், கடல்களில் நீராட்டலாம் என்பதை அன்றைய உறவுகள் தீர்மானித்துக் கொள்ளலாம். காவிரியில் நீராட்டுவதும், குமரிப் படித்துறையில் நீராட்டுவதும் கட்டாயமாக இடம்பெறலாம்.

பெண்களில், பத்துக்கற்கள் சேர்ந்தவுடன், அதாவது நூறு பெயர்கள் பொறிக்கப்பட்டவுடன், அவ்வருடத்தில், அன்னையர் நினைவைப் போற்றும் விதத்தில் தீப்பந்த விழா ஒன்றை நிகழ்த்துவது சிறப்பு. அச்சமயத்தில், விழாவில் சீதையம்மாவின் நினைவைப் போற்றும் விதத்தில் சீதைக்கு சிறப்பு வழிபாட்டு முறைகள், சடங்குகள் இடம் பெறுவது நல்லது.

ஆண்களில் நூறு செப்புத்தகடுகள் சேர்ந்தவுடன், தந்தையர் நினைவைப் போற்றும் விதத்தில், இராமபாண விழாவை நிகழ்த்துவது சிறப்பு. குளத்துக்குள் பெரியதொரு வைக்கோல் உருவத்தை நிறுத்தி (உருவம் இராவணன் போன்று இருக்க வேண்டியதில்லை. பெரியதொரு உருவமாக இருக்கலாம். வைக்கோலைச் சுற்றி மனித உருவத்தில் உடை இருப்பது அவசியம்), இறந்தோர் நினைவாக, அவர்களது பெயர்களைச் சொல்லி, குளத்து உருவத்தை நோக்கி அம்பெய்யலாம். நூறு அம்புகள் முடிந்தபின், இறுதியாக நெருப்புமுனை கொண்ட அம்பைச் செலுத்தி அந்த உருவத்தை எரிக்கச் செய்யலாம். விழா குளத்துள் நீர் குறைவாக இருக்கும் காலத்தில், கோடையில் நிகழ்த்துவது நன்று. விழாவின் போது தந்தையாம் இராமனுக்கு வழிபாட்டு முறைகள், சிறப்புகள் இடம் பெறுவது நல்லது.

பெண்களுக்கான சடங்கு, வழிபாட்டு முறைகளில் தாமரைப் பூவும், ஆண்களுக்கான சடங்கு, வழிபாட்டு முறைகளில் துளசியும் இடம் பெறுவது மிகவும் சிறப்பு.

குணசீலியான சீதையம்மா திருவடித்தாமரைகள் போற்றி!

குணசீலனான இராமப்பா திருவடித்தாமரைகள் போற்றி!

லெட்சுமி நாராயணன் போற்றி!

**மணக்கின்ற துளசி போற்றி!!**

தேவேந்திர குலத்தவருக்கென சடங்கு முறைகளைச் சொல்கிறோமே, பிற தமிழர்களுக்கு இவ்வாறான சடங்குகள் இல்லையா எனில், யாம் தேவேந்திர

குலத்தவருக்குச் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். அவர் எமது சொல்லை கேட்கக் கூடும். பிற தமிழர் தம்மைத் தமிழராக எங்கே உணர்கிறார். சாதியும், மதமும், பணமுமல்லவா முன்னால் நிற்கிறது. வந்த வழியை, கடந்துவந்த பாதையை எந்தத் தமிழர் நினைத்துப் பார்க்கிறார்.

தமிழறிஞர் ஒருவர் பிள்ளையும், பள்ளரும் ஒன்றுதான் என்கிறார். பள்ளர் வசதிக் குறைவாக இருக்கிறார், பிள்ளை வசதியாக இருக்கிறார். அவ்வளவே வேறுபாடு, பிற அனைத்திலும் இருவரும் உறவுடையவர்கள் என்கிறார். மூத்த தமிழறிஞர். உலக வரலாற்றை, தமிழ்ச் சாதிகளை நன்கறிந்த தமிழறிஞர். அவரிடம் பேட்டிகண்டு அதை யுடிபில் பதிவிட்டிருக்கிறார்கள். அதற்கு பிள்ளை எனும் பெயர் கொண்ட பதிவர்களிடமிருந்து வந்து விழுந்திருக்கும் வசைச் சொற்கள். என்னத்தைச் சொல்ல. மூத்த தமிழறிஞருக்கு தமிழ் நிலத்தில் இவ்வளவுதான் மரியாதை. அதுவும் பிள்ளைமார் சமூகத்திடமிருந்து.

யாம் பிள்ளைமார் குறித்து நன்மதிப்பே கொண்டிருந்தோம். தமிழை வளர்த்தவர்கள், போற்றியவர்கள் என அகமகிழ்ந்திருந்தோம். அது உண்மையில்லையோ. பிள்ளைகள் இத்தனை சாதிவெறி கொண்டவரா. இளையோர் இத்திசையில் பயணித்ததற்கு, பயணிப்பதற்கு எது காரணம் பிள்ளைகளே. பிள்ளையே தம்மைத் தமிழரென்று உணராவிடில், வேறு யாரிடம் போய் யாம் பேச, சடங்கு முறைகளை, வாழ்க்கை நெறிகளை எடுத்துரைக்க.

எமது நோக்கம் அனைத்துத் தமிழர்களை, தமிழர்களாய் ஒன்றிணைக்க வேண்டும், உலகத்தவர் அனைவரையும் மனிதராய் எண்ண வைக்க வேண்டுமென்பதே. அதற்கு முதல்படியாகவே தேவேந்திர குலத்தவருக்கென்று பல்வேறு சடங்கு முறைகள் கூறப்பட்டுள்ளன. தேவேந்திர குலத்தவர்கள் ஒன்றுதிரண்டு எழுவாரெனில் அது பிறரையும் எழச்செய்யும். அது நாங்கள் தமிழர்கள் எனும் ஒற்றுமையில் கொண்டு வந்து நிறுத்தும் என உறுதியாக எண்ணுகிறோம். ஒன்றுபட்ட தமிழர்கள், நாம் மானுடர் என உலகத்தவர் அனைவரையும் ஒரு நிறையாக்குவார் எனவும் உளமாற நம்புகிறோம்.

ஒட்டு மொத்தத் தமிழர்க்கென்று, உலகின் அனைத்து மானுடருக்கென்று எம்மனதில் பல்வேறு கருத்துகள், சடங்குகள், நெறிகள், கோட்பாடுகள்,

சிந்தனைகள் செறிந்துள்ளன. யாம் அவை குறித்தும் எண்ணியே வருகிறோம். காலம் கைகூடி வரும்போது அவை வெளிப்படும்.

யாம் சுட்டியுள்ள தேவேந்திர குலத்தவருக்கான இறப்புச் சடங்குகளையே அனைத்துத் தமிழர்களும் பின்பற்றலாமே. ஏதேனும் தடை இருக்குமா. தேவேந்திர குலத்தவர் எனச் சுட்டியுள்ளதை, ஊர் மக்கள் இறந்தால் வரிசைப்படி, அவர்களது பெயர்களை கல்லில் பொறித்து வரலாமே. அவ்வாறே பாதங்களையும் பதிந்து வரலாமே. நூறு எனும் எண்ணிக்கை வந்தவுடன், ஊரே திரண்டு இறந்தோர் நினைவைப் போற்றலாமே, விழாக்களைச் சிறப்பிக்கலாமே.

யாம் எதற்கு இப்படியான சடங்குகளை உருவாக்குகிறோம். அனைத்தையும் எம்மால் விளக்க இயலாது. எம் மனதில் சில எண்ணங்கள், சிந்தனைகள் தோன்றுகின்றன. யாம் அவை குறித்து நீண்டு சிந்தித்து காரண காரியங்களைத் தொடர்புபடுத்தி, அச்சடங்குகள் எதற்காக எனத் தெளிந்தே அவற்றை இங்கு உரைக்கின்றோம். இது எமது கடமையாகக் கொள்ளப்படுகிறது. மற்றதெல்லாம் தந்தையாம் கண்ணனிடம்.

அனைவரும் தமிழராய், மானுடராய் இணைந்தால் நல்லதன்றோ. இராமனுக்கான மலைக்கோவிலை உருவாக்குவதில் இராம பக்தியில் சிறந்த நாயக்கர்கள் பெரிதும் உதவலாம். தேவேந்திரரோடு நாயக்கர்களும் இணைந்து தந்தையாம் மலை இராமனை மிக அழகுற வடிக்கலாம்.

கண்ணன் குளத்துக் கோவிலைக் கட்ட தமிழ்நிலத்தின் ஆயர்கள் பெரிதும் துணை நிற்கலாம். அவ்வூர் மீனவக் குடிகளுக்கும் தொடர்புடையது எனும் முறையில் மீனவக் குடிகளும் தந்தையாம் கண்ணனின் குளத்துக்கோவில் உருவாக்கத்தில் பங்கு வகிக்கலாம்.

தமிழ்ச் செல்விக்கான விழாவில் பிள்ளைகளும், மறையோர்களும் பெரும் பங்கு வகிக்கலாம். தமிழ்ச் செல்வன் விழாவிற்கு முதலிகளும், தேவர்களும், முன்னின்று பணியாற்றலாம்.

அனைத்து தமிழ்க் குடிகளுக்கும் பொறுப்புகள் பகிர்ந்தளிக்கலாம். ஒரு குடி தேர்வில் பெரும் பங்கு வகிக்கலாம். ஒரு குடி விழா ஏற்பாட்டில், ஒருங்கிணைப்பில்

பெருந்துணை புரியலாம். அனைத்துக் குடிகளும் ஒன்றிணைந்து நிகழ்த்தும்போதே அது பெருவிழாவாக இருக்கும்.

யாம் வைணவம் சார்ந்து சில சடங்குகளை நெறிப்படுத்துவதால் யாம் வைணவத்திற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பதாக நினைக்க வேண்டியதில்லை. யாம் சைவத்தையும் போற்றுவோம். எனினும் தமிழ் நிலத்தின் குடிகள் அடுத்த என்ன செய்கிறார்கள் என்பதை அறிந்து, தெளிந்தே முக்கியமாக பிள்ளைமார் என்ன செய்யப் போகின்றார் என்பதை வைத்தே, யாம் மேலும் மேலும் என தமிழர்க்கான, மானுடருக்கான நெறியைச் சுட்டுவோம்.

பிற சாதியார் எடுக்கும் முடிவுகளைப் பொருத்து, எமது எண்ணங்களும் மாறும், உறுதியாக.

இனியும் தம்மை சாதியாகத் தமிழர் உணர்வரேயானால், செயல்படுவரேயானால், அது தமிழ் நிலத்தில், இந்திய மண்ணில் மோசமான விளைவுகளை நிகழ்த்தும் என்பது உறுதி. தமிழ்ச் சாதிகள்தாம் சிந்தித்துத் தெளிய வேண்டும்.

யாம் அனைத்துத் தமிழர்களுக்கும் பொதுவானதாக ‘‘தந்தையைப் பணிதல்’’ என்றொரு சடங்கை, நெறியை விவரிப்போம். அது என்ன மாதிரியான சடங்கு என்பதை வரும் காலத்தில் தெரிவிக்கின்றோம். தமிழராய் நாம் ஒன்றிணையாவிட்டால், தந்தையைப் பணிதல் எனும் சடங்கை சற்றே மாற்றி தேவேந்திர குலத்தவருக்கு என நெறிப்படுத்துவோம். தேவேந்திரருக்கு, தேவேந்திர குலத்தவருக்கு மூன்று தந்தையரும் ஒன்றுதான். எனினும் பிற தமிழ்ச் சாதிகளுக்கு ஒப்பமுண்டா. அந்தளவிற்கு பரந்த எண்ணமுண்டா, நல்நோக்கமுண்டா.

**மூன்று தந்தையரின் பெருமையான பெருமைகளை அறியாத தமிழர் தமிழர்தானா..**

தேவேந்திர குலத்தவரான நாங்கள் எங்களின் மூன்று பெருந்தந்தையரையும் சிறப்பிப்போம். தந்தையரில் எங்களுக்குப் பேதமில்லை. எங்கள் ஞானம் - ஒன்றே இரண்டாகி, மூன்றாகியிருக்கிறது. நான்காவதும் அதுவே. உலகெங்கும் இருப்பதுவும் அந்த ஒன்றே.

எங்களின் இந்த ஞானம், எங்களின் அன்புத் தந்தையாம் மகேந்திரவர்மனின் ஞானம். இது பல்லவர்களின் தொடர்ச்சி. தமிழ் நிலத்தில் முதன்முதலாகக் கோவில்களை நிர்மாணித்தது எங்கள் முன்னோர். எங்கள் முன்னோரின் ஞானம் மூன்று தந்தையரும் ஒன்றே. அதனடிப்படையிலேயே தேவேந்திர குலத்தவரின் அறிவுத் தந்தை மகேந்திரரும், வீரத் தந்தை நரசிம்மரும் மூன்று தந்தையருக்குமே குடைவரைக் கோவில்களை அமைத்தனர். சிவன், பிரம்மன், விஷ்ணு எனும் மூன்று தெய்வங்களையும் சிறப்பித்தது பல்லவ மரபு எனில், அம்மரபின் தொடர்ச்சியே தேவேந்திர குலத்தார் என்பதும், அன்னவர்களுக்கு என்றென்றும் மூன்று தந்தையர் என்பதும் கவனத்தில் கொள்ளத் தக்கது.

மூன்றை இரண்டாக்கியது யார்? எந்த அரச மரபு? இரண்டை ஒன்றாக்க முனைவது யார்? ஒன்றாக்கத் துடிப்பது எந்தச் சாதி?

பண்ணையடிமை பள்ளர்களுக்கு என்ன வரலாறு தெரியும் என்றா நினைக்கிறது தமிழ்ச் சாதி? எதனால், எப்படி, எப்போது பண்ணையடிமை ஆனார்? பண்ணை யார்? எப்படி, எதைக்கொண்டு, எவ்வழியில் பண்ணையானார்? பேசுவோமா அல்லது அனைத்தையும் ஒதுக்கிவிட்டு தமிழராய்த் திரண்டெழுவோமா.

இத்தனை பெருமைமிகு கோவில்கள் அமைந்திருக்கும் தமிழ்நிலத்தில் தமிழர் எப்படி சாமி கும்பிடுகிறார்? எந்த லட்சணத்தில் கோவில் திருவிழாக்களைக் கொண்டாடுகிறார்? இப்படியுமா கோவில்கள் களையிழந்து கிடப்பது? எப்படி நம் தந்தையரைச் சிறப்பிப்பது என்பது கூடவா தெரியாது இந்த தமிழ்ச் சாதிகளுக்கு?

கிராமத்தார் தமக்கென்ன வந்தது என இருக்கிறார். வேலைக்குப் போவது, இரவில் வருவது, சாப்பிடுவது, தூங்குவது. அடுத்த நாள் மீண்டும் அதே. நகரத்தார் எப்படியடா, எவ்வழியிலடா பணம் சம்பாதிப்பது, சொத்துச் சேர்ப்பது என அல்லும் பகலும் அலைந்து திரிகிறார். இதில் கோவில்களை, குளங்களை, நினைக்க தமிழர்களுக்கு நேரமெங்கே இருக்கிறது? அவருண்டு அவர் சோலியுண்டு, எவர் எக்கேடு கெட்டால் அவருக்கென்ன, சரிதானே தமிழர்காள்.

நம் பெருமைமிகு முன்னோர் இவ்வளவு பெரிய, இத்தனையாயிரம் கோவில்களைக் கட்டியெழுப்பியது எதற்காக? சற்றேனும் சிந்திக்கலாமே.

இத்தனை அழகிய, இவ்வளவு ஆனந்தமான உலகைப் படைத்திருக்கும் இறைவனுக்கு நாம் என்ன செய்கிறோம்? ஒரு சிறிய நன்றியாவது செய்ய வேண்டாமா? மழை அவன்தானே. இதமான வெயிலும், குளிர்ந்த காற்றும் அவன்தானே. ஞானியும் அவனல்லவா. அன்னையாய்த் தாங்குவதும், ஆசானாய்ப் புகட்டுவதும் அவன் தானே. எத்தனை பெரிய தந்தை அவன்.. அவனுக்கு நாம் என்ன செய்கிறோம்?

ஒரு சிறு இலையைப் பறித்துப் போடு, அதுவே போதுமென்கிறான். மலரொன்றைக் காலடியில் வைத்தாலே அவன் உள்ளம் குளிர்ந்துவிடுமாம். நாளில் ஒருமுறையாவது அவனை நினைத்துக் கொள்ளலாமே. அவனுக்கு ஆண்டில் ஒருமுறை பொங்கல் வைத்து வழிபடலாமே. மனிதர் கேட்கிறாரா? காதிருந்தும் இல்லாதது போலல்லவா மனிதர் வாழ்கிறார். மனிதருக்கு வாழத் தெரியவில்லையோ. அதையும் அவன்தான் வந்து சொல்லித் தரணுமோ.

**ஓம் நமோ பகவானே ஸ்ரீகிருஷ்ணா ஹரி..**

30. அறிவுத் தமிழர்களே, தமிழகத்தில் ஏறக்குறைய பதினாறாயிரம் ஊர்கள் இருக்கின்றன. நகரங்கள் ஆயிரத்து நூறு இருக்கின்றன. திருவரங்கம் போன்ற பெரிய கோவிலுக்கு நாளுக்கு பத்து ஊர்கள் என வழிபாட்டுக்கு ஒதுக்கலாமா, தேர்ந்தெடுக்கலாமா. எனில் ஒவ்வொரு ஊருக்கும் ஏறக்குறைய ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை இப்படியான வழிபாட்டுப் பெருமை வரும். நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் உலகக் கோப்பைபோல், ஒலிம்பிக் போட்டிகள்போல் இந்தக் கோவில் திருவிழாவை ஊர்க்காரர்கள் வெகுவிமர்சையாகக் கொண்டாடலாமல்லவா.

அருகருகே இருக்கும் பத்து ஊர்களைத் தேர்தெடுத்து அவர்களுக்கான நாளைக் குறித்துவிடலாம். பத்து ஊர்களையும் அதிகாலை தொடங்கி மதியம் வரை, மதியம் முதல் மாலை வரை, மாலையிலிருந்து இரவு வரை எனவும் மூன்று தொகுப்பாகவும் பிரித்துக் கொள்ளலாம். ஊர்க்காரர்கள் அன்றைக்கு கோவிலுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் கவனித்துக் கொள்ளலாம். கோவிலை தூய்மை செய்யலாம். கோலங்கள் வரையலாம். பூக்களால் அலங்கரிக்கலாம். அரங்கமா நகர் பெருங்கோவிலிலுள்ள அத்தனை பரிவார மூர்த்தங்களுக்கும்

மாலை சாற்றலாம். கூடை கூடையாக விருந்து வைக்கலாம். இதற்கென்றே ஊர்களில் சிறப்பான முறையில் ஏற்பாடுகள் செய்யலாம்.

ஊர்களைத் தேர்ந்தெடுத்தபின், அவ்வூரார்கள் இறைவனுக்கென்று தனித்து நெல் விளைவிக்கலாம். தானிய வகைகள் பயிர் வைக்கலாம். பூச்செடிகள் நடலாம். பழவகைகளை வளர்க்கலாம். இவைகளைப் பராமரிக்கவென்று குழுக்களை அமைக்கலாம்.

பத்து ஊர்க்காரர்களும் காவிரியில் குளித்து, புத்தாடைகள் அணிந்து, மேள தாளத்துடன், வேட்டுகள் அதிர, மங்கல வாத்தியங்கள் முழங்க, பெருந்தந்தையாம் நம் அரங்கத்தம்மானுக்கு சீர்வரிசைகள் கொண்டு செல்வது கண்கொள்ளாக் காட்சியல்லவா. சிறுவர்களும், சிறுமிகளும் எவ்வளவு மகிழ்ச்சியாகச் செல்வார்கள். இளவயதினர் ஆடிப்பாடி உற்சாகமாகச் செல்வரே. பெரியவர்கள் முகத்தில் மகிழ்ச்சி களைகட்டுமல்லவா. நம்ம ஊர், நம்ம அரங்கர், நம்ம கோவில் என்றல்லவா அவர்களது உள்ளம் குதூகளிக்கும். அரங்கமா நகரமே களைகட்டுமே. நித்தமும் அரங்கமா நகரில் திருவிழாவல்லவா. ஆண்டு முழுவதும் இப்படி ஊர்க்காரர்கள் செல்வது அரங்கத்தில் கோவில் கொண்டுள்ள நம் பெருமாளுக்கு எத்தனை ஆனந்தத்தைக் கொடுக்கும். தம் அன்புப் பிள்ளைகள் பூக்களையும், பழங்களையும், தானிய வகைகளையும், உணவுப் பண்டங்களையும், மங்கலப் பொருட்களையும் கொண்டு வருவதை எண்ணி தாயார் பூரித்துப் போவாரே. எத்தனை நல்ல பிள்ளைகளைப் பெற்றிருக்கிறோம் என தந்தையும் தாயும் உளம் மகிழ்வரே..

இதென்ன அத்தனை கடினமான காரியமா தமிழர்களே. இதென்ன இயலாத செயலா அறிவிற் சிறந்த தமிழர்காள். கொஞ்சம் மனது வைத்தால், சற்றே திட்டமிட்டால் எளிதாக முடியக் கூடிய பணிதானே. இப்படி ஊர்க்காரர்கள் திருவிழா போன்று கோவில்களை நிறைப்பதுதானே நம் இறைவர்களுக்கு, இறைவிகளுக்குப் பெருமை. அவர்கள் கோவில்களுக்குப் பெருமை. நம் முன்னோர்களுக்கும் சிறப்பு.

ஊர்க்காரர்களுக்கு என்னதான் வேலை. ஒரு வருடம் அரங்கமா நகரெனில் அடுத்த வருடம் அண்ணாமலையார் கோவில். அதற்கு அடுத்த வருடம் முருகன் கோவில். அடுத்த ஆண்டு அம்மன் கோவில். அதற்கும் அடுத்த ஆண்டு பெருமாள் கோவில். இன்னொரு சிவனார் கோவில். வருடத்திற்கு ஒரு கோவிலுக்கு திருவிழாக் கூட்டம்போல் சென்று வரவேண்டியதுதானே. என்ன குறைந்துவிடப் போகிறது. சும்மா

வெட்டிக்கதை பேசுவதை விடுத்து ஊர்க்காரர்களுக்கு ஏதேனும் உற்சாகமான வேலை கொடுப்பதும் நல்லதுதானே.

பத்து ஊர்களில் பத்தாயிரம் பேர் இருப்பாரா. அவர்கள் அனைவரையும் சுவாமி தரிசனம் காண வைக்கலாம். அது போக நகர்களிலிருந்து ஒரு பத்தாயிரம் பேரை தரிசனத்திற்கு அனுமதிக்கலாம். வெளிமாநில, வெளிநாட்டுப் பக்தர்கள் ஐந்தாயிரம் பேர் என அனுமதிக்கலாம். உள்ளூர் மக்கள் என ஐந்தாயிரம் பேர் நம் பெருந்தந்தையை தாராளமாகக் கண்குளிரக்கண்டு, வாயினால் பாடி, மனதார வேண்டி மகிழ்ந்திருக்கலாமே. ஒரு நாளைக்கு முப்பதாயிரம் பேர், மற்றும் சற்றே கூடுதலாக வரும் ஆயிரம், ஈராயிரம் பேர் எனக் கொண்டாலும் ஒரு மாதத்தில் பத்து இலக்கம் பேர் அரங்கத்தம்மனைக் காண்பது சாத்தியமல்லவா. இதை முறையாகத் திட்டமிடுவது, திட்டமிட்டவாறு செயல்படுத்துவது, அனைத்தையும் பொறுமையோடு கையாள்வது என தமிழர்கள் இணைந்து செயல்பட்டால், அது உலகினர் மத்தியில் தமிழர்க்கும், அவர்தம் தந்தையருக்கும் எத்தனை புகழைத் தேடித்தரும். இன்னும் முறையாகத் திட்டமிட்டால் ஒரு நாளில் ஐம்பதாயிரம் பேர் வரையிலும் தரிசனம் காண இயலுமல்லவா. எல்லாம் சரியாகத் திட்டமிடுதலிலும் முறையாகச் செயல்படுவதிலும் இருக்கிறது.

தமிழக ஊர்களிலுள்ள கோவில்களில் தினப்படி பூசைகள் நடப்பதில்லை. ஊர்க்காரர்களில் நிறையக் கோவில்களைக் கட்டிவைத்திருக்கிறாரேயொழிய அவற்றிற்கான சிறப்புகளைச் செய்வதில்லை. ஆண்டிற்கு ஒருமுறை திருவிழா கொண்டாடுவதோடு சரி. அன்று ஒருநாள் வெட்டிப்பந்தாவுக்காகச் செலவிடும் பணத்தில் ஆண்டு முழுவதுக்குமான பூசைகளை முடித்துவிடலாம். ஊர்க் கோவில்களில் குறைந்தது நாளுக்கு ஒருவேளையாவது படையல் வைக்க வேண்டும். காலையில் இரண்டு வாழைப்பழங்களாவது சமர்ப்பிக்க வேண்டும். மாலையில் பொங்கலோ, பாயசமோ, ஏதேனுமொரு இனிப்போ, தேங்காய் சோறு போன்ற அன்னங்களோ படையலிட வேண்டும். இது முடியாதென்பவர் கோவிலெதற்குக் கட்டுகிறார். தாம் மட்டும் உண்டு சுகித்திருப்பது எவ்வகையில் நியாயமாகும்.

அவ்வளவு பெரிய ஊர்களில் இறைவனுக்கென சில மரங்கள் வைக்கக் கூடாதா மாமனிதர்களே. ஊர்க் கோவில்களுக்கு நான்கு தென்னை மரங்கள், பத்து வாழைமரங்கள், அரை ஏக்கரில் பூச்செடிகள், கொஞ்சமாகத் துளசிச் செடிகள்

போதுமே மனிதர்களே. தினமும் ஒரு தேங்காய் உடைத்து வழிபடலாம். பழங்கள் சமர்ப்பிக்கலாம். பூக்கள் தொடுக்கலாம். துளசிமாலை சாற்றலாம். நம்மைக் காக்கும் தெய்வங்களுக்கு நாம் இது கூட செய்யக் கூடாதா. ஊரில் நல்லோர் பத்துப்பேர் இருந்தால் போதுமே. இதனை எளிதாகச் செய்துவிடலாமே. நான்கு தென்னைகளைப் பராமரிக்க முடியாதா. வாழைகளை வீடுகளுக்கு அருகில் வைத்தாலே போதுமே. அவை வளர்ந்து பலன் கொடுக்குமே. இரண்டு மாமரங்கள். நான்கு பலா மரங்கள் ஊரின் தெய்வங்களுக்குப் போதுமே. மனிதர் நினைத்தால் எதுவேண்டுமானாலும் சாத்தியம். மனிதர் மனது வைக்க வேண்டும். மனிதர் மனது வைத்து ஊரிலுள்ள தெய்வங்களுக்கெல்லாம் தினமும் படையலிட வேண்டும். பெரிதாக ஒன்றும் செலவாகாது. கொஞ்சம் உழைப்பைக் கொடுத்தால் போதும்.

மனிதர்களே. நமக்கு நல்ல மனம் வேண்டும். இறைவன் நல்ல மனங்களில் வாழ்வானாம். எவருடைய மனம் அழகாக இருக்கிறதோ, எவர் மனம் நல்லெண்ணம் கொண்டிருக்கிறதோ, எவருடைய மனம் தூயதாக இருக்கிறதோ, அம்மனமே இறைவன் வாழும் இடமாம், கோவிலாம். பெரியோர்கள் சொல்லியிருக்கின்றனர். நாம் தெய்வங்களை நம்பி இருக்கிறோம். நம் தெய்வங்களுக்கு முறைப்படி சிறப்புச் சேர்க்க வேண்டும். எமக்கென்ன வந்தது என ஊரார் இல்லாமல் எமதூர், எமது தெய்வம், எமது பணி என இருங்கள். தந்தையாம் இறைவன் நிச்சயம் நன்மைகளை அருள்வான். ஊருக்கு நல்லது நிகழும், ஊரார் வாழ்வு வளப்படும்.

யாம் நிறையப் பேசுகிறோமோ உறவுகளே. இருபது வருடங்களுக்கும் மேலாக தமிழர்களின் மேன்மையான வாழ்வு குறித்து, உலகத்தவரின் ஒப்பற்ற உயர்வு குறித்து சிந்தித்து வருவதால் இவ்வாறு பேசுகிறோம். எவ்வளவோ பேசலாம், எத்தனை வேண்டுமானாலும் எழுதலாம், என்ன செய்தோம் என்பதே கேள்வியாம், அதுவே முக்கியமாம். எமது ஒப்பற்ற தந்தை சொல்லியிருக்கிறார் - What I have done will endure, not what I have said and written. இது எமக்குச் சொன்னதுதான். தந்தை மகனுக்கு விட்டுச் சென்ற பெரும் பாடம்தான் இது. நாம் என்ன பேசுகிறோம், எழுதுகிறோம் என்பதல்ல முக்கியம், நாம் என்ன செய்கிறோம், செய்து காட்டுகிறோம் என்பதே முக்கியம்.

இது எமக்கு மட்டும் தந்தை சொன்ன செய்தியல்ல தேவேந்திரர்களே. நமக்குச் சொன்னதுதான் இது. நாம் எவ்வளவோ பேசலாம், எழுதலாம். நாங்கள்தான் முன்பு உலகாண்டோம், உலகை வென்றோம், இனியும் உலகை

ஆள்வோம். அது உண்மைதானா, உண்மையாக்க நாம் என்ன செய்கிறோம் என்பதே முக்கியம். பேச்சில் சமார்த்தியம் கூடாது. செயலில் வேண்டும். வீரன் வீரன் எனச் சொல்லித் திரிபவனல்ல உண்மையான வீரன். களத்தில் நிற்பவனே வீரன். களத்தில் நிற்பவனும் வீரனல்ல. எதிரியை நோக்கி அஞ்சாது முதலடி எடுத்து வைக்கிறானே அவன்தான் வீரன். அவனே பெருவீரன்.

தேவேந்திர குலத்தார் எனில், யார் தேவேந்திர குலத்தார், அவரது பெருமையென்ன என்பதை அறிந்து அதற்கேற்ப செயல்படவேண்டும். தேவேந்திர குலத்தார் எனில் உலகத்தார் மதித்துவிட மாட்டார். தேவர்களுக்கே தலைமையான குலத்தார் எனில் எத்தனை அன்பும், அறிவும், வீரமும், மேன்மையான வாழ்க்கையும் கொண்டிருக்க வேண்டும்? எப்படி வாழ்கிறார் என்பதிலேயே அவருக்கான மதிப்பும், உயர்வும் அடங்கியுள்ளது.

நாங்கள் மள்ளர் எனில், மள்ளராக வாழும்போதே உலகத்தார் ஒப்புவார். மல்லர் எனில் மல்லராக வாழ்ந்துகாட்ட வேண்டும். உலகம் ஏற்கும். பேசுவதையும் எழுதுவதையும் விடுத்து செயலில் காட்டுக தேவேந்திர குலத்தாரே. இந்திர குலத்தின் புகழ் என்ன, எத்தகையது என்பதை செயலில் செய்து காட்டுக இந்திர குலத்தினரே.

மனிதர்கள் மனிதர்களாக இருந்தபோது நம் தந்தை வேந்தராக இருந்தார். மனிதர்கள் தேவர்களாக ஆகும்போது நம் தந்தை தேவேந்திரனாக இருக்கிறார். தேவர்கள் தெய்வங்களாக மாறும்போது நம் தந்தை தெய்வேந்திரனாக இருப்பார்.. உறுதியாக. நம் தந்தை பெறற்கரிய தந்தை, பெரும் புகழ்கொண்ட தந்தை.

**நம் தந்தை பேராண்மையும், பெருவெற்றியும் கொண்டவர்..**

நம் தந்தையே மண்ணும் விண்ணும். நம் தந்தை இருபிறப்பாளர். நம் குடி இருகுடி. மண்ணிலும் விண்ணிலும் நாமே. மண்ணில் நாம் தமிழை வளர்க்கிறோம். விண்ணில் நாம் சமற்கிருதத்தைப் பெருக்குகிறோம். மண்ணின் அத்தனை வேந்தர்களும் நம் தந்தையே. விண்ணின் அத்தனை தெய்வங்களும் நம் தந்தையே.

**தேவர் மறை காப்பது என்றும் நம் தந்தையே!**

நம் தந்தை விண்ணின் அதிபதி. விண்ணோர் முதல். கதிர் அவனே, குளிர் நிலவும் அவனே. மழை அவனே. வெயில் அவன், முகில் அவன், வானம் அவன். மாரி அவன், வர்சம் அவன், வருடம் அவன், ஆண்டும் அவனே, யாண்டும் அவன் புகழே..

உலகை உயர்த்துவது விண்ணோர்.. ஞாலத்தைப் பெரிதாக்குவது விண்ணோர். மழையாய் பொழிவது விண்ணோர். மரமாய்த் துளிர்ப்பது விண்ணோர். பூக்களாய் மலர்வதும் வண்டுகளாய் மொய்ப்பதும் விண்ணோரே.

உலகை இயக்குவது விண்ணோர். உலகை வழிநடத்துவது விண்ணோர். விண்ணுளார் பெருமைக்குரியோர். பெரும்புகழ் நிறைந்தோர். அனைத்திலும் மூத்தோர்.

விண்ணோர் நம்மவர். மனித குலத்திற்கு அருள்மழை பொழிபவர். நல்லாசிகள் வழங்குபவர். என்றும்..

விண் வாழிய! வாழ்க விண்ணுளோர்!

**வாழிய விண்ணவர் தலைவன்!!**

அனைத்தையும் அறிந்தும், தெரிந்தும், தெளிந்துமே சொன்னான் ஆயர்குலத் தலைவன் கிருஷ்ணன். ஞானே இந்திரன். அனைத்தும் யாமே. விண்ணும் மண்ணும் அவன்தான் தேவேந்திர குலத்தாரே. அவன் மின்படை கொள்ளும்போது இந்திரன், மழுக்கொண்டால் சிவன், தாமரையை ஏந்தினால் பிரம்மன். அவனன்றி ஏதுமில்லை, அவனே அனைத்தும்..

கலியைத் தோற்றுவிப்பவனும் அவனே, கலியை முடிப்பவனும் அவனே. சத்திய யுகத்தைத் தொடங்குபவனும் அவனே. அனைத்திற்கும் அவனே சூத்ரதாரி..

**அவனே பாசுரம், அவனே ஆழ்வார்கள்.**

அவரே ஆழ்வார்களாகப் பிறந்து அவருக்கே பாசுரங்கள் இயற்றிக் கொள்கிறாரோ. பொல்லாத மாயன்தான்.

தேவேந்திர குலத்தாரே, மாயன் நம்மவன், நம் உறவு, நம் தலைவன். நம் தந்தை.

நாம் ஆயர்கள், நாம் வேடர்கள், நாம் மருதர்கள், நெய்தலரும் நாமே. பாலையும் நாம்தானே.

முல்லையும் நாம், மருதமும் நாம். முல்லைக்கு மருதத்தார் போனார், முல்லையார் மருதத்திற்கு வந்தார். குறிஞ்சியானதும், நெய்தலானதும் அவரே. அனைத்தும் உறவுடையவை, ஒன்றோடொன்று தொடர்புடையவை.

நானிலமும் நமதே. ஐந்திணையும் நமக்கே. பொழுதும் காலமும் நமக்காகவே. சேர்தலும் பிரிதலும் அவன் விளையாட்டு. காலையும் மாலையும் இயற்கையின் பகுதியல்லவா. பகலும் இரவும், அல்லும் பகலும் அவனல்லவோ. வேற்றுமை பார்ப்பதோ..

**கருணைக் கடலே கிருஷ்ணா கிருஷ்ணா..**

நம் மாயன் கலியை முடிக்க பெரிய திட்டமொன்று வைத்திருக்கிறான். பொல்லாத நம் ஆயனின் திட்டத்தை அவனே முழுதும் அறிவான். யாம் சற்றே அறிகிறோம் என நினைக்கிறோம். அவன் உலகிற்கு அவசியமானது என சிலவற்றை நமக்கு அறிவுறுத்துகிறான் போலும். எல்லாம் அவன் செயல், அனைத்தும் அவன் நடத்தும் நாடகம் என எண்ணி, நாம் நமது செயல்களைத் தொடங்குவோம். நமது பணிகளை ஆரம்பிப்போம். அனைத்தும் நல்லபடியாக நடக்கும்.

**யாவும் சுபமாக, யாவரும் நலமாக, அனைத்தும் வெற்றியாக முடியும்..**

இந்த மாயக்காரன் உறங்குகிறானாம். அவனா உறங்குவான். ஏதோ நாடகமாடுகிறான். அவன் விழித்தால், கண் மலர்ந்தால் என்னாகும் உலகத்தாரே. உலகமே விழிக்குமோ. உலகமே உயிர் பெற்று எழுமோ. முன்னோர்கள் எழுவரோ. பெருமாயக்காரன் செய்யக் கூடும். அவனால் எதுவும் முடியுமெனும்போது, இது எம்மாத்திரம். அவனே உலகமென்னும்போது, அவனே அகில உலகின் தலைவன் எனும்போது, அவனால் கூடாதது எது?

அண்டக் குலத்துக்கு அதிபதியாகி அசுரர் இராக்கதரை

இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த இருடீகேசன் தனக்கு

தொண்டக் குலத்தில் உள்ளீர்! வந்தடி தொழுது ஆயிர நாமம் சொல்லி

பண்டைக் குலத்தைத் தவிர்த்து பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு என்மினே.

பாசுரத்திற்குப் பொருளென்ன தேவேந்திர குலத்தவரே. பாசுரம் பாடியது பெரிய ஆழ்வாரல்லவா. நாராயணனே பரம்பொருள் என நிரூபித்தவர் இயற்றிய பாசுரமல்லவா. உறுதியாக பாடலும் பெரிய, சிறந்த பொருள் கொண்டதாகவே இருக்கும். பெரியாழ்வார் மூலமாகப் பாடவைத்தவன் அவனல்லவோ. எதற்காக இப்படியான பாடலை பாடவைத்தான். பாடவைத்ததன் நோக்கமென்ன. பாட்டின் பொருளென்ன. உண்மையான பொருளென்ன.

பிராம்மனோத்தமர்கள் கொள்ளும் பொருளுக்கும், தேவேந்திர குலத்தவர் கொள்ளும் பொருளுக்கும் வேறுபாடு இருக்குமோ.

ஆம் இருக்கிறது தேவேந்திரர்களே. அவர்கள் அவர்களது கண்கொண்டு, அவர்களது வாழ்நிலையிலிருந்து, அவர்களது புரிதலில், அறிவில், ஞானத்தில் பொருள் கொள்கிறார்கள். எனில் நாம்? நமக்கான பொருள்?

அண்டக் குலத்துக்கு அதிபதியாகி - பொருளென்ன? அண்டக் குலம் எது? தேவர் குலமோ. மனிதருக்கு மேம்பட்ட குலம் எனப் பொருளோ. எனில் தேவர் குலத்துக்கு அதிபதி, தேவர் குலத்துக்கு தலைவர், பதி. பொருள் எளிதுதானே. தேவர் குலத்துக்குப் பதி தேவேந்திரனல்லவா.

தொண்டக் குலத்தில் உள்ளீர், பண்டைக் குலத்தைத் தவிர்த்து பல்லாண்டு பாடுமின். எத்தனை பொருளுள்ள பாடல். தொண்டக் குலத்தைத் தவிர்க்கச் சொல்கிறார் பெரியாழ்வார். பண்டைக் குலத்தைத் கைவிடச் சொல்கிறார் பெரியாழ்வார். மனிதர் தேவராகிறார் எனில் பண்டைக் குலம் எதற்கு? அதைத் தவிர்த்து அண்டக் குலத்திற்கு வரச் சொல்கிறாரல்லவா.

பண்டைக் குலத்தைத் தவிர்க்காமல் அண்டக் குலத்திற்கு வர முடியாதா? முடியாது போல்தான் தெரிகிறது. உயர்ந்ததொன்றைப் பெற்றபின், அடைந்தபின் பழையது எதற்கு. புத்தாடை இருக்க, புதுஉடைகள் குவிந்து கிடக்க, பழையதைப் போடுவானேன். சிறந்ததொன்றிருக்க, மதிப்பில்லாத ஒன்றை கைக்கொள்வதெதற்கு.

உண்மையைத் தெளிந்தபின், பரம்பொருள் ஆர் என அறிந்தபின், அவனடி தொழுவதுதானே தேவர்களுக்குப் பெருமை. தேவர்கள் கீழிறங்குவரோ. அறிவிற் சிறந்தவரின் அறிவு குறையுமோ, வற்றுமோ, சிறுக்குமோ. அது மேலும் மேலுமெனக் கூடும்தானே.

அண்டக் குலத்துக்கு அதிபதியாகி - பிரம்மாண்டங்களுக்கெல்லாம் தலைவனாய். இப்படித்தான் பொருள் எழுதியிருக்கிறார்கள். இதென்ன பொருள், இதென்ன விளக்கம் அண்டக் குலத்தாரே.

ஒன்றே குலம், ஒருவனே தேவன். தமிழர்கள் நன்கறிந்ததுதான். எனில் கேள்வி - தமிழர்களின் அந்த ஒற்றைக் குலமெது? ஒருவனே தேவன் எனில் அந்த ஒரு தேவன் யார்?

இங்குதான் நுட்பமான பொருளிருக்கிறது அண்டக் குலத்தாரே. தமிழர் அவரவர் குலங்களை, அந்த ஒற்றைக் குலமாக்க முயல்கிறார். அவரவர் குலத்தின் பதிகளை அனைத்துக் குலங்களுக்கும் பதியாக்க முனைகிறார்.

**தமிழர்க்கான ஒரு குலமெது? ஒருபதி யார்?**

ஆழ்வர் பாடுகிறார் - பண்டைக் குலத்தைத் தவிரும். அடி பணிந்து, ஆயிரம் பெயர்களை சொல்லி பல்லாண்டு பாடும். பாடினால்? குலம் தரும், உமது துயர்கள் அடியோடு போம். இது திருமங்கையாழ்வாரின் சாசனமன்றோ. ஆழ்வார் வலம் தரும் என்கிறார். பொருளென்ன பேரறிவுத் தமிழர்களே. பெரு நிலமளிக்கும் என்பது பாசுரம். நீள் விசும்பு அருளும் என்பது ஆழ்வாரின் முடிவு..

தமிழருக்கு நீள்விசும்பு வேண்டுமெனில், யாருடைய பெயர்களைக் சொல்ல வேண்டுமோ, எவருடைய நாமங்களைப் பாட வேண்டுமோ, அவற்றைச் சொல்ல வேண்டும், பாட வேண்டும்.

அவரவர் குலபதிகளால் நீள்விசும்பு அருள முடியுமா? அண்டக் குலத்துக்கு அதிபதி யாரோ அவராலேயே நீள் விசும்பு அருள முடியும்.

அண்டக் குலத்தின் அதிபதி யார்? விடை மிக மிக எளிது. தமிழர் நன்கறிவார். மறந்து போன தமிழருக்கு நினைவூட்டுகிறோம்.

உயர்வற உயர்நலம் உடையவன் எவனோ அவன் அண்டக் குலத்திற்கு

அதிபதி.

மயர்மற மதிநலம் அருளினன் எவனோ அவனே அண்டக் குலத்தின் பதி.

அயர்வறும் அமரர்கள் அதிபதி எவனோ அவனே அமர்களின் பதி.

அமராபதி யார்? புகழ்கூடிய நம்மாழ்வார் பாடுகிறார். மனமே! அவன் சுடரடி தொழுது எழு. அந்த மலரடிகளே துயரறுக்கும். துயரங்களை வேரோடு களையும்.

**“எந்நாளெம் பெருமான் உன்றனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட**

**அந்நாளே அடியோங்களடிக் குடில் வீடு பெற்றுய்ந்தது காண்”**

வைணவத்தின் பெரியாழ்வாரின் முடிவு. பொருளைச் சிந்தியுங்கள் தமிழர்களே, உலகினோரே.

யார் பரம்பொருள்? எத்தனைமுறை நிரூபிக்க வேண்டும்? உலகின் அனைத்து மானுடரும் தெள்ளத் தெளிவாக அறியப் போகிறார் பரம்பொருள் யாரென்பதை. உலகின் அத்தனை பேரும் உற்றுக் காணப் போகிறார் கடவுள் எவரென்பதை.

உண்மையான கடவுள், உண்மையிலேயே கடவுள் யாரென்பதை அறிய வேண்டியதும் அவசியமல்லவா. அவசியம் அறிவோம் மனிதர்களே.

அறியத்தான் போகிறோம் அரியை. அரி யாரென்பதை.

அறியத்தான் போகிறோம் ஆயனை. ஆயன் ஆரென்பதை.

உலகைத் தயார்ப்படுத்துங்கள் அண்டக் குலத்தாரே. உலகினரை ஆயத்தமாக்குங்கள் தேவேந்திர குலத்தினரே. அண்டக் குலத்தின் பதியை, அரியை, ஹரியை அறிவது எதற்கு, எப்படி, எப்போது என்பதை நாமே அறிவோம்.

அறிவியுங்கள் அண்டக்குலத்தாரே. நம் பதி கண்மலரப் போகிறாரென. அறிவித்திடுங்கள் வானவர் குலத்தாரே. நம் பரந்தாமன் விழிபுலரப் போவதை. அறிவிப்புச் செய்யுங்கள் வேந்தர் குலத்தவரே. நம் பத்மநாபன் திருக்கண்கள் மலர்கிறான் என்பதை.

அறிவித்திடுங்கள் இந்திர குலத்தாரே. கிழக்கிலும் மேற்கிலும். அறிவிடுத்திடுங்கள் இந்திர மரபினரே. தெற்கிலும் வடக்கிலும். அறிவித்திடுங்கள் இந்திர வழியினரே. அகில உலகமெங்கும் - நம் பாற்கடல்வாசன் மலர்க்கண்கள் மலர்வதை. அறிவியுங்கள் வானோர்களே. எட்டுத்திக்கும் - நம் ஸ்ரீநிவாசன் தாமரைக் கண்கள் மலர்வதை - ஈரேழு புவனங்களுக்கும்.

**வந்தே விஷ்ணும் பவபயஹரம் ஸர்வலோகைக - நாதம்**

அறியும் அரி ஆரென. அறியும் ஹரி எவரென. அறியும் ஸ்ரீஹரியின் பெருமை எத்தகையதென. லெட்சுமி பதியின் புகழ் எவ்வளவென..

மனிதகுலம் தழைக்கட்டும் தந்தையருக்கெல்லாம் தந்தையே..

**அச்சுதம் கேசவம் கிருஷ்ண தாமோதரம்**

**இராமநாராயணம் ஜானகி வல்லவம்**

சத்திய யுகத்தைத் தொடங்குவது தேவேந்திரராக இருக்கட்டும். சத்திய யுகத்தை எப்படித் தொடங்குவது. சத்தியத்தை அறிந்து. சத்தியத்தை எவ்வாறு அறிவது. இறைவன் இருப்பை அனைவரும் அறியச் செய்வது. முடியுமா எனில் முடியும். சத்தியத்தை, இறைவனை, இறைவனின் இருப்பை உணர்ந்தவர், அறிந்தவர், தர்மத்தின் வாழ்வை மேற்கொள்வார். அறவழியில் வாழ்க்கையை அமைத்துக் கொள்வார். சத்தியத்தை அறிவதற்கே இத்தனை ஏற்பாடுகளும், சடங்குகளும்.

தேவேந்திரர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள கடமையின், பணியின், அருமையை உணர்ந்து, சத்தியத்தை அறிவதற்கான, இறைவன் இருப்பை உறுதி செய்வதற்கான வேலைகளைத் துவங்க வேண்டும். தேவேந்திரர் சத்தியத்தை நோக்கி அடியெடுத்து வைப்பதை தெய்வங்கள் கண்டு கொள்வார்கள். இம்மண்ணின் தெய்வங்கள் அனைத்தையும் அறிவர். அவர்கள் தேவேந்திரர் முன்னெடுக்கப் போகும் வழிமுறைகளுக்குக் காத்திருக்கின்றனர்.

எல்லாம் கைகூடிவரும் வேளை வந்தது. தேவேந்திரர் தங்கள் கடமையைச் செய்யும் தருணம் இது. கடமையைச் செய்க. மற்றதை தெய்வங்கள் பார்த்துக் கொள்ளும்.

தேவேந்திரர்கள் ஒரு ஆண்டில் நிகழ்த்த வேண்டிய சடங்கு முறைகள், வழிபாடுகள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன. தேவேந்திரர்கள் என்ன செய்ய வேண்டும், என்னவெல்லாம் செய்யக்கூடாது என்பது தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதன்படி செயல்களைத் துவக்குக.

தேவேந்திரர்கள் யார் என்பதையும், அவர்கள் எத்தகைய பெருமைகள் நிறைந்தவர்கள் என்பதையும், அவர்கள் ஆற்ற வேண்டிய பெரும் பணிகள் குறித்தும் இப்புத்தகத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதை நன்கு அறிக.

எதைச் செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்பதைத் தெளிக.

தேவேந்திரர்கள் யார் என்பதை அனைவருக்கும் விளக்குக. முதலில் தேவேந்திரர் கைவரக் கூடுவது ஒற்றுமை. ஒற்றுமையே பலம். தேவேந்திரர்களிடையே ஒற்றுமை குறைவு என்பது வெளிப்படை. தற்போதைய தலைவர்களிடையே புரிந்துணர்வு குறைவு என்பது தெளிவு. ஒருவருக்கொருவர் பொதுமேடையில் பெயர்களைக்கூட கூறமாட்டார்கள் எனில், இவர்கள் எப்படி மக்களை ஒன்றிணைக்கப் போகின்றனரோ. தெய்வங்கள்தாம் துணை நிற்க வேண்டும்.

தேவேந்திரர் தலைவர்களே, ஒன்றிணைக. ஒருங்கிணைக. மக்கள் பணியாற்றுக. இடப்பட்டுள்ள வரலாற்றுக் கடமையை ஆற்றுக.

தேவேந்திர குலத்தவரிலிருந்து தலைவர்கள் முன்னெழ வேண்டும். புத்துலகம் செய்வோம் - முதல் புத்தகத்தில் யாம் சில பெயர்களைச் சுட்டியிருக்கிறோம். அவர்கள் ஒன்றிணைந்து, பிறரையும் இணைத்து பணிகளைச் செய்ய வேண்டும்.

முதலில், யாம் புத்துலகம் செய்வோம் - ஒன்று, இரண்டு புத்தகங்களில் சுட்டியுள்ள கருத்துக்கள், சடங்கு நெறிகள் ஒப்பம்தானா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். அவற்றிற்கு அறிந்தேற்புக் கொடுக்க வேண்டும். எதுவும் யாமே முடிவு செய்ததாக, திணித்ததாக இருக்கக் கூடாது. தலைவர்கள் சடங்கு முறைகளைச் சிந்தித்து, அவை சரிதான் எனத் தெளிந்தே முடிவெடுக்க வேண்டும். எம்மிடம் மேலும் விளக்கங்கள் கேட்கத் தேவையில்லை. யாம் ஓரளவிற்குத் தெளிவாக,

விரிவாகவே சுட்டியுள்ளோம். தலைவர்களுக்கு ஒப்பம் எனில் விரைந்து பணிகளைத் துவக்கலாம்.

ஒப்பம் என்பதை எப்படி வெளிப்படுத்துவது. தலைவர்கள் எமது புத்தகங்களில் கூறப்பட்டுள்ள, சுட்டிக்காட்டப்பட்டுள்ள சடங்கு முறைகளை ஏற்கத்தக்கன என அறிக்கையொன்றை விடுத்து அதில் தலைவர்கள் கையொப்பம் இடவேண்டும். கையொப்பத்தில் தலைவர்களின் பெயர்கள் இடம்பெற வேண்டிய முறை யாதெனில், கிருஷ்ணசாமித் தேவேந்திரர், மாவீரன் ஜான்பாண்டியன், தங்கராஜ் தமிழர், செந்தில் மல்லர் மற்றும் முருகவேல் தேவர். மேற்கூறியுள்ள பட்டங்களோடே பெயர்கள் எழுதப்பட வேண்டும். இவர்கள் தவிர்த்து இப்பெயர்களை பிறர் பயன்படுத்த வேண்டாம். உதாரணமாக மள்ளர் என்பது செந்தில் மள்ளரையேச் சுட்டட்டும். பிற தேவேந்திரர்கள் இனிவரும் காலத்தில் இப்பெயர்களைக் சுட்ட வேண்டாம். வரும்காலத்தில் சாதி ஓட்டை நீக்க வேண்டும். தேவேந்திர குலத்தவருக்கு சாதி ஓட்டுக் கூடாது.

தேவேந்திரகுல வேளாளர் எனும் பெயருக்கு ஏற்ப, ஏழு குடிகளை ஒன்றிணைந்து யாவற்யையும் நிறைவேற்றுக. காலாடி, பன்னாடி, மூப்பன், கடையர் குடிகளிலிருந்து ஒவ்வொரு தலைவர்கள் அறியப்பட வேண்டும். ஏழு குடிகள் ஒன்றிணைந்து தேவேந்திர குல தலைவர்கள் எழ வேண்டும். எனில் மேற்குறிப்பிட்ட நான்கு குடிகளின் தலைவர்களும் அவர்களது பெயருக்குப் பின் காலாடி, பண்ணாடி, மூப்பன், கடையன் எனும் பட்டங்களைப் போட்டு, அந்த அறிந்தேற்பு அறிக்கையில் கையொப்பம் இடவேண்டும். அவ்வாறே குடும்பர் எனும் பட்டத்திற்கும் ஒருவரைத் தேர்வு செய்யவேண்டும். எனில் மொத்தம் பத்துப் பேரின் அறிந்தேற்பு அவ்வறிக்கையில் இடம் பெற்றிருக்கும்.

பத்து தலைவர்களும் அவரவர் பட்டங்களைப்போட்டு அறிந்தேற்புக் கொடுத்த பின்பே, யாம் மேற்கொண்டும் பேச இயலும். இல்லையெனில் யாம் அமைதி காப்போம், காத்திருப்போம். இது தொடர்பாக தலைவர்களே முடிவெடுக்க வேண்டும்.

இது பெரும்பணி. இதில் தலைவர்களாக மாறிவரும் இளையோருக்கும் உரிய வாய்ப்பளித்து அவர்களையும் அரவணைத்துச் செல்லவேண்டும். அவர்களுக்கென்று பொறுப்புகள், பணிகள் கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் திறமையானவர்கள்தான். நல்லறிவும் கொண்டுள்ளனர். எனினும் சற்றே வேகமாக

இருக்கின்றனர். பேச்சில் சற்றே நிதானம் வேண்டும். குறிப்பாக தமிழர் மீட்புக்களம் தோழர் கரிகாலன் மற்றும் தோழர் நாராயணன் போன்றோர். அவ்வாறே ரேணுகா தேவி அம்மையார்.

தேவேந்திர குலத்து இளையோருக்கு நிதானம் வேண்டும். பொறுப்பு வேண்டும். நாம்தான் அனைவரையும் தமிழர் என இணைக்க வேண்டும். நாமே சாதிப்பெயரை ஒட்டுச் சேர்த்தால் எப்படி. வரலாறு பலவிதங்களில் சொல்லப்பட்டுள்ளது. மண்ணில் பல வரலாறுகள் உள்ளன. நாம் அனைத்தையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். நம்மைப் பிறர் எளிதாக உணர்ச்சிவசப்படுத்திவிட முடியுமெனில் நமது அறிவு எத்தகையது என்பதையும் சிந்திக்க வேண்டும்.

யூடியிபில் போடும் பதிவுகளில் மிகுந்த கவனம் வேண்டும். யாம் ஏற்கனவே சுட்டியுள்ளவாறு, ஒரு வருட காலத்திற்கு அனைத்து விதமான சாதியப் பதிவுகளையும் நாம் நிறுத்துவது பொருத்தமுடையது. நமது கடமை எதுவென புத்தகத்தில் சுட்டப்பட்டுள்ளது. அக்கடமைகளில் கருத்து வைக்க இளையோரை கேட்டுக் கெள்கிறோம்.

31. எமது கருத்தில், சடங்கு முறையில் ஒப்பமெனில், யாம் சுட்டியுள்ள ஒரு ஆண்டிற்கான சடங்குகளை அதாவது இருக்கண்குடி மாரியம்மன், திருச்செந்தூர் முருகன், திருமலை சீனிவாசன், வைஷ்ணவி தேவி பயணம் போன்றவற்றைத் துவக்க வேண்டும். துவக்கநாள் விழாவினை சிறப்பாக முன்னெடுக்க வேண்டும். அவ்வாறே நான்காயிரம் பேரிடம் ஒரு கிராம் பொன்காசு பெறுவதும் நிகழ வேண்டும். எம்மிடம் முதலாவது பொற்காசைப் பெற்றுக் கொள்க. யாம்தான் முதலாவதாகப் பொன்காசு வாங்கி வைத்துக் காத்திருக்கிறோம்.

எனில், தலைவர்களின் பதவி ஏற்பு, சடங்கு நெறிகளுக்கு அறிந்தேற்பு மற்றும் சடங்குகளின் துவக்க விழா என முப்பெரும் விழாவைக் கூட்டுக. முப்பெரும் விழாவை சிறப்பாக ஒருங்கிணைக்க வேண்டும். விழாவை யாம் முன்னரே சுட்டிக்காட்டியவாறு திருமலைபுரம் கருப்பசாமி கோவிலில் வைத்துக் கொள்ளலாம் அல்லது தகுதியான பிற இடமிருப்பின் தலைவர்கள் சுட்டிக் காட்டலாம்.

துவக்க விழாவன்று கோவில்களுக்குச் செல்லும் முதலாவது குழு புறப்பட வேண்டும். அன்று மூன்று விழா மேடைகள் - கிழக்கு மேற்காக அமைக்கப்பட வேண்டும். நடு மேடை ஆறடி உயரத்தில், பதினெட்டுக்குப் பதினெட்டு அடி எனும் அளவில் இருக்க வேண்டும். இறுபுறத்து மேடையும் நான்கடி உயரத்தில் நாற்பத்தெட்டுக்கு நாற்பத்துஎட்டு அடி எனும் அளவில் இருக்க வேண்டும். மேடைக்கு பந்தல் கூடாது. அடித்தளம் மட்டுமே அமைக்க வேண்டும். மேடையில் வடக்கு தவிர பிற பக்கங்களில் இரண்டடி உயரத்திற்கு கயிற்றுத் தடுப்பு அமைக்க வேண்டும். நடுமேடை வெள்ளைத் துணியாலும், இடதுமேடை பச்சைத் துணியாலும், வலதுமேடை மஞ்சள் துணியாலும் போர்த்தப்பட்டிருக்க வேண்டும். மேடைக்கு ஓரளவிற்கு வெளிச்சம் போதும். அதிக வெளிச்சம் தேவையில்லை. நடுமேடையில் கைய் ஒலிபெருக்கிகள் நான்கு இருக்க வேண்டும். இடது மேடையில் இரண்டு கம்பி ஒலிபெருக்கிகளும் வலது மேடையில் பத்து கம்பி மைக்குகளும் தேவைப்படும்.

வழியனுப்பு விழாவிற்கு நாதஸ்வரம், மேளம் இசைப்பவர்கள் ஆறு இணையும், கொட்டுக்காரர்கள் இருபத்து நான்கு பேரும் ஏற்பாடு செய்ய வேண்டும். விழா மாலையில் துவக்கப்பட வேண்டும். இரவு எட்டு மணிக்கு முன்பாக முடிக்கப்பட வேண்டும். அதற்கேற்ப அனைத்தையும் திட்டமிட வேண்டும். இடது மேடையில் பத்து தலைவர்களும் அமர்வதற்கு வசதியாக இருக்கைள் இடம்பெற வேண்டும். தேவைப்படும் இருக்கைகளை பின்னர் போட்டுக் கொள்ளலாம். இருக்கைகள் அலங்காரமாக இருக்க வேண்டியதில்லை. எதிலும் நெகிழிப் பொருள் - பிளாஸ்டிக் பயன்படுத்தக் கூடாது. கம்பி நாற்காலி - ஒயர் சேர் இடம்பெறுவது சிறப்பு. மேடைகளில் மலர் அலங்காரங்கள், தோரணங்கள் போன்ற ஆடம்பரங்கள் கூடாது. மேடை எளிமையாக, சுத்தமாக, தூய்மையாக இருந்தால் போதுமானது.

**பெருவிழா சிறக்க வாழ்த்துகள் தேவேந்திரரே..**

32. நாம் புத்துலகத்தைத் தொடங்கலாம் என முடிவு செய்தவுடன், முதன்முதலாகச் செய்யவேண்டிய நற்செயல் ஒன்றுள்ளது. இம்மண்ணில் சாதியால் அதிகம் இழிவு செய்யப்பட்டோர் அருந்ததிய சமூகத்து மக்களே. சமூகப் படிநிலையில் அருந்ததிய மக்களே கடைசியில் வைக்கப்பட்டுள்ளனர். எமது பார்வையில் அவர்களே மிகவும் அன்பான மக்கள். உண்மையெனில் நாம் வாழும் உலகில் யார் மிகவும் அன்பான மக்களோ அவர்களிடம் ஆசிகள் பெற்றே நமது

பணிகளைத் தொடங்க வேண்டும். ஒரு விதத்தில் இது அன்பிற்கு நாம் செய்யும் போற்றுதல் எனக் கொள்ளலாமன்றோ.

யாம் இவ்வுலகில் அன்பே சிறந்ததென எண்ணுகிறோம். வானத்துத் தேவர்களுக்கு வேண்டுமானால் அறிவே சிறந்ததாக இருக்கலாம். மனிதருக்கு அன்புதான் சிறந்தது. ஒப்பமெனில், ஆம் எனில், உறுதியாய் இச்சடங்கை நிறைவேற்றுக. உலகில் அன்பே பெரிதென்பதை நிலை நாட்டுக.

தேவேந்திர குல வேளாளர் வாழும் ஊரில் அருந்ததிய மக்களில் வயதில் மூத்த தம்பதி ஒருவர் பாதம் பணிந்து நல்லாசிகள் பெறுவதை நன்மதிப்பாகக் கொள்வீர். இந்தத் தம்பதியோடு நம் தேவேந்திர குலத்தைச் சேர்ந்த ஒரு மூத்த தம்பதியையும் ஒன்றாக நிறுத்தி இருஇணைகளிடமும் மூத்தோர் ஆசியென நல்வாழ்துக்கள் பெற்று இம்மண்ணைச் சிறப்பியுங்கள்.

அருந்ததிய மூத்த அன்னைக்கு வெள்ளைப்பட்டும் தேவேந்திரர் மூத்தன்னைக்கு பச்சைப் புடவையும், அய்யாக்களுக்கு வெள்ளைப் பட்டில் வேட்டி துண்டும் அணிவித்து, அன்னையருக்கு மணமுள்ள மலர்மாலையும், அய்யாக்களுக்கு துளசிமாலையும் சூடி, கிழக்குப் பார்த்து நிறுத்தி, காலை ஞாயிறு உதயத்தின்போது, அத்தம்பதிகளைவிட வயதில் இளையவர்கள் ஸ்ரீராமஜெயம் என மும்முறை சொல்லி இருமூத்தோர்களின் பொற்பாதம் ஒருமுறை பணிந்து நமது அறச்செயல்களைத் துவக்குங்கள்.

நாம் துவங்கும் நற்செயல்கள் யாவும் இவ்வுலகிற்கு நன்மையானதாக அமைய வேண்டும் என மனதார இறைவனிடமும் வேண்டிக் கொள்ளுங்கள். நாம் நல்மனதோடு செய்யும் இவை அறச்செயல்களாக இம்மண்ணில் நிலைக்கட்டும்.

செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை வாழி!

செல்வம் மல்கு தென் திருக்குடந்தை வாழி!

சீரார் செந்நெல் கவரி வீசும் செழுநீர் திருக்குடந்தை வாழி !

**ஸ்ரீகோமளவல்லித் தாயார் சமேத ஆராவமுதனுக்கு மங்களம்!!**

இவ்வுலகில் சிறந்தது அன்பா, அறிவா எனில் எமது ஞானம் அன்பே. உண்மையில் மனிதரின் இயற்கைக் குணமே அன்புதான், அன்பாய் வாழ்வதுதான். அன்பால் கூடிவாழ்வதே மனிதருக்கு அடிப்படை. மனிதர்தான் அன்பைத் தொலைத்துவிட்டாரே.

தேவேந்திர குலத்தவரே, அன்பு மகத்தானது. அன்பிற்கு ஈடு, இணை எதுவுமில்லை. உள்ளத்தில் அன்பு நிறைந்தவரே தெய்வம். தெய்வம் வணங்கத்தக்கது, வழிபடத்தக்கது.

தெய்வங்களின் பாதங்கள் பணிக.

உலகில் அன்பின் பாதங்களே பெரிதென்பதை சான்றாக்குக.

உலகில் அன்பு சிறக்கட்டும். தெய்வங்கள் அருள்மாமழை பொழியட்டும்.

**உலகம் செழிக்கட்டும்..**

தேவேந்திரர் அறிவானவர். அறிவை முன்னெடுப்பவர். அறத்தைப் பேணுபவர். அதனாலேயே அவர்களுக்கு அன்பின் மகத்துவத்தை உணரச் செய்வதற்காக, அன்பின் எல்லையை அறிவதற்காக, இச்சடங்கை மேற்கொள்ளச் சுட்டுகிறோம்.

எனில் தமிழர். தமிழருக்கு அன்பு பெரிதா, அறிவு பெரிதா. தமிழர் எதைப் பெரிதென்கிறார்?

தமிழருக்கும் அன்புதான் சிறந்ததெனில், ஊர்களிலுள்ள அனைத்துத் தமிழருமே ஒன்றாகச் சேர்ந்து இச்சடங்கை மேற்கொள்ளலாம். ஊரினர் ஒன்றாக இணைந்தால் தேவேந்திரர் பாதம் தவிர்த்து அருந்ததியர் பாதம் மட்டுமே வணக்கப்பட வேண்டும்.

நம் காலத்தில் நமது மனிதருள், அருந்ததியரே மிகமிக அன்புமிக்கவர். பிறரால் சாக்கடையைச் சுத்தம் செய்ய முடியுமா? தாம் பெற்ற பிள்ளைகளின் மலத்தை அள்ளவே மனிதர் முகம் சுளிக்கிறார். எனில் வரலாற்றில் அம்மக்கள் கூடையில் அள்ளி தலையில் வைத்துச் சுமந்ததாகப் பதிவுகள் சுட்டுகின்றனவே, அவர் மனம் எத்தனை வலித்திருக்குமோ. அவர் வருந்தியிருக்க மாட்டார். நாமலும் இல்லையெனில் இதை யார் செய்வார் எனவே நினைத்திருப்பார். அவர்கள் நல்மனம்

கொண்டோர். அந்த மனம் எம் அன்புமிக்க பெருந்தந்தையாம் மகாத்மாவுக்கு இருந்தது. அதனால்தான் அவர் தென்னாப்பிரிக்காவில் இருந்தபோதே கழிவறையைச் சுத்தம் செய்வதைப் பழக்கமாக்கினார். மலச்சட்டியைத் தூக்க வேண்டும் என தம் அன்பு மனைவியையும் வற்புறுத்தினார். அறிவுடைய தமிழர் தம் மனைவியை இப்படிச் செய்யச் சொல்லுவரோ. தம் மனைவியை, பிள்ளைகளைப் பூப்போல் தாங்குபவரல்லவா அறிவுத் தமிழர்.

கடவுள் இல்லையென்று சொன்னதை அப்படியே நம்பிவிட்டீரோ அறிவுத் தமிழரே. அவர் ஏன் சொன்னார், எதை வைத்துச் சொன்னார் என சிந்தித்துப் பார்க்கவில்லையோ.

நீர் தந்தையாம் கடவுளை ஏமாற்ற முடியும். அவர் பெரிய அன்புள்ளம் கொண்டவராமே. கருணை மேகமாமே. காவிரி வெள்ளமாமே. நீர் ஆயர்பாடிக் கண்ணனைக்கூட ஏமாற்றிவிடக் கூடும். தந்தையாம் கண்ணனும் அன்பில் பெரியவராம். எம்மிடம் முடியாது தமிழரே. யாம் தமிழர் யாரென்பதும், அவர் மூளை எத்தனை பெரிதென்பதையும் அறிந்தே உள்ளோம். எமக்குத் தெரியாதா தமிழர் யாரென்றும், அவர் தலைக்குள் எத்தனை சாதிவெறி ஏற்றப்பட்டுள்ளது என்பதும்.

தமிழர் தலைக்கணத்தைக் குறைக்கவே, தமிழரின் சாதி மத வெறியை மண்டைக்குள் இருந்து விரட்டவே யாம் வந்துள்ளோம் தமிழரே.

அருந்ததியர் தெலுங்கரே, நாங்கள் செம்மொழித் தமிழரே என்கிறீரா. பரவாயில்லை. தெலுங்கர் தமிழரைவிட அன்பானவர். எமதனுபவத்தில் கண்டதைச் சொல்கிறோம். அவரவர் அனுபவத்திலிருந்து தேடிப்பாரும்.

பேரன்புக்குரிய அருந்ததியர் பாதம் பணிவதாக ஊரார் முடிவெடுத்தால், அதற்கு முன்பாக ஊரிலுள்ள கண்மாய்களின், குளங்களின் ஆழத்தைக் கணக்கிடுங்கள். கண்மாயின் ஆழம் எத்தனை அடி, அன்றைக்கு கண்மாயில் தண்ணீர் இருக்கிறதா இல்லையா, தண்ணீர் இருக்கிறதெனில் எத்தனை அடிக்குத் தண்ணீர் உள்ளதென்பதை ஒரு தட்டியில் தேதியுடன் எழுதி கண்மாயில் ஊன்றி வையுங்கள். அவ்வாறே ஊரிலுள்ள ஒவ்வொரு கிணற்றின் ஆழத்தையும், அன்றைக்கு அதிலுள்ள நீரின் ஆழத்தையும் தட்டியொன்றில் எழுதி கிணற்றில் ஊன்றுக. மறக்காமல் தேதியைத் குறித்துக் கொள்க.

அடுத்த ஆண்டின் அதே தேதியில் அதே கண்மாய், குளம், கிணறுகளில் எத்தனை அடி தண்ணீர் இருக்கிறதென்பதைக் கணக்கெடுங்கள். தண்ணீர் கூடுதலாக இருந்தால் உலகில் அன்பே சிறந்தது, பெரியதென நம்புங்கள். ஒப்புக் கொள்ளுங்கள். சான்று இருந்தால் ஏற்றுக்கொள்ளத்தானே வேண்டும். தமிழர் அறிவானவரன்றோ. குறைந்தால்? குறையுமோ? எனில் கடவுள் அன்பானவரல்ல எனத் துணியும். உடனே கடவுளில்லை எனக் கிளம்பி விடாதீர். பத்து ஆண்டுகளாவது காத்திரும். பத்தாண்டுகளில் கிணறுகளில் நீர் மட்டம் பத்தடிகளாவது உயர்ந்திருக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் நீர் ஊர் ஊராகச் சென்று கடவுள் அன்பானவரல்ல எனப் பேசலாம். கடவுள் இல்லை, இல்லவே இல்லை என எழுதலாம், பரப்பலாம்.

யாம் கடவுள் அன்பானவரென்று எதை வைத்துச் சொல்கிறோம், எப்படித் துணிகிறோம்? எதனால் அன்பானவர் தாள்கள் பணிந்து நற்செயலைச் துவங்குக என்கிறோம்? எமதனுபவத்தில் யாம் வினா எழுப்பி விடை தேடினோம். எமதனுபவத்தில் யாம் கண்டடைந்த ஞானம் உலகில் அன்புதான் உயர்ந்தது. கடவுள் என இருந்தால் அவர் அன்பில், கருணையில் பெரியவராகவே இருப்பார். அவரன்பிற்கு ஈடு இணை என எதுவுமிருக்க முடியாது..

எமதனுபவம் முன்னோர் சொல்லோடு ஒத்திருக்கிறது அறிவுத் தமிழர்களே. நம் முப்பாட்டன் அழுத்தம் திருத்தமாகச் சொல்லியிருக்கிறான். தமிழர் பாட்டனை நினைத்துப் பார்த்தால்தானே. மூப்பன் எழுத்தைப் படித்தால்தானே அவன் என்ன சொல்லியிருக்கிறான் எனத் தெரியும். தமிழருக்குத் தமிழ் படிக்க எங்கே நேரமிருக்கிறது, அதுவும் முப்பாட்டன் தமிழை.

முப்பாட்டன் சொல்கிறான் தமிழரே - தாள்களே பெரியவை.. தாள்களே சிறந்தவை..

**“கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**

**நற்றாள் தொழாஅர் எனின்”**

பொருள் - தூய அறிவினை உடைய கடவுளின் திருவடிகளை வணங்காதவர்க்குக் கற்ற கல்வியினால் உண்டான பயன் யாது?

நம் பெரும்புகழுக்குரிய முப்பாட்டன் கடவுளின் மூளையை வணங்குக எனச் சொல்லாமல் அவனது நற்றாள் - நல்ல, சிறந்த, உயர்ந்த, மேன்மையான பாதங்களை வணங்குமாறு சொன்னதேன் தமிழரே. பாட்டன் இரண்டாவது குறளிலேயே சொல்லிவிட்டான் - திருவடிகளைத் தொழும்.

தமிழர் எதற்கு, யாருக்குச் சிறப்புச் சேர்க்கிறார். யார் அடிகளில் விழுந்து கிடக்கிறார். மூளைக்காரர்களின் காலடிகளில், மூளையை எப்படிப் பணமாக்கலாம் எனும் வித்தை தெரிந்த பணக்காரர்களின் காலடிகளில் விழுந்து கிடக்கிறார். சுயநல அரசியலவாதிகளின் கால்களில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து கிடக்கிறார். தம்மைப் பெற்ற தாய் - தந்தை காலில் ஒருபோதும் அப்படிக் கிடந்திருக்க மாட்டார். எல்லாம் பதவி, பதவி சுகம். விழுந்தால் பெரிய பதவிகள் கிடைக்கும். பதவியை வைத்துப் பணத்தைக் குவிக்கலாம். சொத்தான சொத்துச் சேர்க்கலாம். பெண்டாட்டிக்கு நகை வாங்கிக் குவிக்கலாம். மகனுக்கு கோடிகோடியாய் முதலீடு போட்டு தொழில் தொடங்கலாம். அதற்குத்தானே விழுந்தார், விழுந்து கிடக்கிறார். தொண்டுக்காக அரசியலுக்கு வந்திருந்தால் யாமெதற்கு உமது காலில் விழுந்து கிடக்க வேண்டுமென்றல்லவா மீசையை முறுக்கியிருப்பார்.

பெருமதிப்புக்குரிய நம் முப்பாட்டன் முத்தாய்ப்பாகச் சொல்லிவிட்டான்.

**“பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீத்தார்**

**இறைவன் அடிசேரா தார்”**

இறைவன் திருவடிகளை அடைந்தவரன்றி பிறரால் பிறவிப் பெருங்கடலைக் கடக்க முடியாது.

நம் அன்புக்குரிய பாட்டன் சொல் - பணமிருந்தால் கடக்க முடியாது, பதவியை வைத்துக் கடக்க முடியாது. அவன் தாள் பணிய வேண்டும்.

உமக்கே இவ்வளவு அறிவிருக்கிறதே, உம்மைப் பெற்ற அவனுக்கு எத்தனை எத்தனை அறிவிக்கும்.

பணியத் தயாரா பேரறிவுத் தமிழர்களே. உமது மூளை தடுக்கும் தமிழரே. ஏனெனில் உமது மனம் அப்படி கட்டமைக்கப்பட்டிருக்கிறது. இவர் காலிலா விழுவது.

அவரே காவிகட்டி அடியார் போன்று வேடம் கட்டினால் மாய்ந்து மாய்ந்து விழுவீர், காலிலேயே விழுந்தும் கிடப்பீர். என்னே பக்தி, என்னே பக்தி.

சாதியடுக்கில் கீழாக, கடையராக இருப்பவர் காலிலா விழுவது. உமது சாதியார் என்ன நினைப்பார். எப்படியெல்லாம் பேசுவரோ. நீர் நினைப்பீர் தமிழரே. அதற்குத்தான் யாம் இத்தனை எழுதுகிறோம். உமக்கு அகம்பாவம் கூடுதல் தமிழரே. அது உமது சுயநல அறிவால் வந்தது. அது அவ்வளவு எளிதில் நீங்காது.

மூப்பன் அதிகாரங்களை எப்படி அடுக்கியிருக்கிறான் பாரும் அறிவுத் தமிழரே. கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல், இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல்.. எப்படி வரிசையாக, நேர்கோடாக, அடுக்கடுக்காக அதிகாரங்களை அமைத்திருக்கிறார் நம் பெருமூப்பர்.

**“அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்**

**என்றும் உரியர் பிறர்க்கு”**

அன்பு இல்லாதவர் எல்லாம் தமக்கே என்பர். அன்புடையவரோ தம் உடலைக் கூட பிறருக்கு உரியதாக்குவர்.

அன்பு சிறந்ததா, சுயநல அறிவு சிறந்ததா.

மீசையை முறுக்கும் தமிழருக்கும் பாட்டனார் சொல்லொன்றைச் அறுதியிட்டுள்ளார்.

**“அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்**

**மறத்திற்கும் அ∴தே துணை”**

அறத்தாருக்கு, அறவழியில் செல்பவருக்கு, அறம் பேணுபவருக்கு மட்டும் அன்பு பெரிதல்ல. மறத்திற்கும் அதாவது வீரத்திற்கும் அதுவே துணை. தமிழர் ஆராய்ந்து பார்ப்பரோ.

**“அன்பின் வழியது உயிர்நிலை அ∴திலார்க்கு**

**என்புதோல் போர்த்த உடம்பு”**

உயிருக்கு இருப்பிடம் அன்பின் வழியாக வரும் அறம். அவ்வன்பு இல்லாதருக்கு உள்ள உடம்பு எலும்பாலும் தோலினாலும் போர்த்தப்பட்ட வெற்றுடம்பேயாகும்.

யாம் இங்கு குறிப்பிட்டுள்ளவை மிக எளிய உரைகள் தமிழரே. எத்தனையோ பேர் பெரும் பெரும் உரைகளை, நுட்பமான உரைகளையெல்லாம் எழுதியிருக்கின்றனர்.

உயிர்களுக்கு அன்பே சிறப்பு, அதுவே வழி, அதுவே அறம். அது இல்லையெனில் அன்னார் உயிரற்றவரே, அவருக்கு எலும்பும் தோலும் இருக்கலாம். எனினும் அவருக்கு உயிர் இல்லை. உயிரற்றவருக்கு என்ன பெயர் என்பதை அறிவுத் தமிழர் அறிந்திடுக.

**பெருமை நிறைந்த நம் அய்யன் சொல்லைத் தெளிந்திடுக.**

எதற்காக ஒரு ஆண்டில் கிளம்பி விடாதீர், பத்தாண்டுகள் காத்திரும் என்கிறோம். கண்மாய்களுக்கு நீர் வரும் வழியையெல்லாம் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. கட்டிடங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. அவற்றைச் சரி பண்ணுவதற்கு சற்றே காலமாகுமல்லவா. நீர் வரும் வழியைச் சரிசெய்தால்தானே கண்மாய்க்குத் தண்ணீர் வரும். அதற்கே இந்தக் காலக்கெடு.

எமது பிள்ளைகளைப் பள்ளிக் கூடத்தில் விடும்போது ஒரு தட்டியைப் பார்க்கிறோம். ஏரிமேடு எனப் பளிச்சிடுகிறது தட்டி. புளியகுளத்தில் எங்கே ஏரிமேடு இருக்கிறது. ஒருவேளை முன்னர் அப்பகுதி ஏரியாக இருந்து, இந்தப் பகுதி மேடாக இருந்திருக்குமோ. இருந்திருக்குமோ என்ன ஏரியாகத்தான் இருந்திருக்கிறது. ஏரியெனில் பெரிய கண்மாய்தானே. அந்தக் கண்மாயை அடைத்துத்தான் இப்போது அது கான்கிரீட் காடாக மாற்றப்பட்டிருக்கிறது. அப்பகுதியைப் சற்று உற்றுப் பார்த்தாலே தெரிகிறது, அவ்விடம் பெரும் பள்ளமென. கண்மாயைத் தூர்த்து கட்டிடங்களாக மாற்றியதே அரசுத் துறைகள்தான். நம் காலத்திய ஆட்சியாளர்க்கு கண்மாயின், கண்மாய் இருப்பதன் முக்கியத்துவமே தெரியவில்லை என்பது திண்ணம். எனில் அவர்களோ அறிவுடையவர்கள்.

அறிவு என்றால் என்னவென்பதை அவர் அறிந்திலர். அவர் நினைத்துக் கொண்டிருப்பது புத்தகத்தைப் படித்தால் அறிவு வந்துவிடும், அறிவு வளர்ந்துவிடும். அதுதான் முதல் பிழை. முதல் கோணல் அங்கிருந்தே ஆரம்பிக்கின்றது.

**யார் அறிவானவர்? எது அறிவு?**

தமிழர் இன்னும் தெளிந்திலர். மானுடர் தற்போதும் அறிந்திலர். வள்ளுவர் குறள் எழுதினாரெனில் அவருக்கு அறிவு இல்லாமல் அத்தகைய பெரும் படைப்பை உருவாக்க இயலாதன்றோ. எனில் வள்ளுவர் அறிவுடையவரா எனில் இல்லை, அவர் ஞானமுடையவர். அறிவுடையவரின் புத்தகங்கள் வழிகாட்டி நூலாகாது. அதை வைத்துப் பணம் பண்ணலாம். விருதுகள் அள்ளிக் குவிக்கலாம். பெரும் படைப்பாளி எனத் தம் அறிவின்மீது கர்வம் கொள்ளலாம்.

**தம் அறவை விற்பவரின் அறிவு ஒருபோதும் ஞானமாகாது..**

ஐயன் போன்றோர் தம் அறிவு மக்களுக்குப் பயன்பட வேண்டும் எனும் உயர்ந்த நோக்கில் படைத்த படைப்புகளே காலத்தை விஞ்சி நிற்கும்.

பிள்ளை அறிவுடையவர். ஞானம் கொண்டவரல்ல. பிராமணர்களில் குறைந்த தொகையினர் ஞானம் கொண்டோர் என்பது துணிவு. பெரும்பாலான பிராமணர்களுக்கு ஞானம் கைகூடவில்லை. அதற்கு அவர்கள் வாழ்முறையே காரணம். பெரும்பாலான பிராமணர்கள் தம்மளவில், தனித்த அலகில் நல்லவர். தாமுண்டு தம் வேலையுண்டு என இருப்பவர். சமூக அளவில் அவரது இடம் பெரிய கேள்விக்குறி. சமூகத்தோடு அன்னார் எதிலும் இணைவதில்லை. அவர் எத்தனை அறிவுடையவராக இருக்கட்டும், எப்போது சமூகத்தோடு இணக்கம் காண இயலவில்லையோ, மக்கள் திரளோடு ஒன்ற முடியவில்லையோ, அது ஒருபோதும் ஞானமாகாது. ஏனெனில் ஞானமே மக்கள் திரள் மூலமாகக் கிடைப்பதுதானே. அறிவைப் புத்தகங்களிலிருந்து பெற்றுவிடக் கூடும். ஞானம் வாழ்க்கையிலிருந்து, வாழ்ந்து பெறுவது.

பட்டியல் வெளியேற்றம் - நல்ல முயற்சி, வீரமான முயற்சிதான். வெளியேறுவதும் காலத்தின் தேவையே. எனினும் நாம் சற்றே கவனம் கொள்ள வேண்டும். நாம் போட்டிபோடப் போவது யாரோடு என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இவர்கள் எத்தகையவர்கள், இவர்களின் அறிவுத்திறன் என்ன என்பதை

சற்றே நினைவில் இருத்த வேண்டும். ஏற்கனவே யாம் சுட்டியதுபோல் அவர்கள் அறிவு தனியறிவு, சுயநல அறிவு. அதை வைத்து எப்படியாவது இலக்கை அடையப் பார்ப்பர். எப்படியாவது வாழ்வில் வெற்றி என்பதை இலக்காக்குவர். நம் அறிவு வேறு. அவர்கள் அறிவெனக் கொள்வது வேறு. அன்னார்கள் நல்ல வேலை எனில் அதை அடைவதொன்றையே குறிக்கோளாகக் கொண்டுவிடுவர். நமக்கு அப்படியான குறிக்கோள் இராது, வராது. நம் மனம் இயற்கை, சமூகம், வருங்கால நலம், மானுட அறம் என்றெல்லாம் சிந்திக்கும். எல்லோருக்கும் என்பதே நம் அறிவு. தமக்கு மட்டுமே என்பதே அவரறிவு. எனில் அனைத்தையும் அவரே கைப்பற்றிவிடக் கூடும். நல்ல வேலைகள், பெரிய பதவிகள் அவர்களுக்கே எளிதாகிவிடும். இட ஒதுக்கீடு மட்டும் இல்லையெனில் அட்டவணையினர் ஆட்சித் தலைவர்களாக, பேராசிரியர்களாக ஆகியிருக்க முடியுமா குலத்தாரே. ஆட்சித் தலைவராக ஆக முடிந்ததே தவிர தற்போது வரையும் அதன் உச்சப் பதவியில் அமர முடியவில்லை என்பதையும் எண்ணிப் பார்ப்பது நன்று.

பட்டியல் சாதி, எஸ்.சி. எனில் இழிவாகவே பார்க்கிறார். ஏதோ பட்டியல் சாதியார்தான் இட ஒதுக்கீட்டில் வந்தது போன்ற சித்திரத்தை பிற சமூக இளையோர் மனதில் அழுத்தமாகப் பதிந்து விட்டார். இட ஒதுக்கீட்டால் அனைத்து சாதியாரும் பயன்பெறுகிறார். பொது வெளியிலோ எஸ்.சி. மட்டும் பயனாகிறார் எனப் பேசுகிறார்.

நாம் மானமுள்ளவர், ரோசம் கொண்டோர் என்பதால் நாங்கள் வெளியேறுகிறோம் என்கிறோம். உம்மால் முடிந்தபோது எம்மாலும் முடியும் என்கிறோம். நம்மாலும் முடியும். எப்போது முடியும்? அதற்கான வாய்ப்புகள் அனைவருக்கும் சமமாக பொதுவெளியில் கிடைக்கும்போது, இருக்கும்போது. தற்போதைய அதர்ம வாழ்க்கையில், அறமற்ற வாழ்க்கையில் அது சாத்தியம் தானா.

எனில் இடஒதுக்கீட்டின் பெயரை, வடிவத்தை, அளவை மாற்றியமைக்கலாமல்லவா. எஸ்.சி. இட ஒதுக்கீட்டை உழவர், பயிர்த்தொழிலாளர் இடஒதுக்கீடாக மாற்ற வேண்டும். பயிர் செய்வோருக்கென்று சட்டமன்றத்தொகுதிகளில் குறைந்தது பத்து சதமாவது ஒதுக்கப்பட வேண்டும். எனில் இருபத்து நான்கு பேர் கிடைப்பார்கள். அவ்வாறே ஊர்க்காரர்கள், கிராமத்தினருக்கென்று ஒரு பத்து சதத்தை ஒதுக்க வேண்டும். அதற்கு ஒரு தலைமுறையாவது ஊர்களில் வாழ்ந்திருக்க வேண்டும் என்பதை நிபந்தனையாக்க

வேண்டும். அதாவது ஒருவர் ஊர்க்காரர் சார்பாகப் போட்டியிடுகிறார் எனில் அன்னாரின் தந்தை அவரது ஆயுள் முழுக்க ஊரில் வாழ்ந்திருக்க வேண்டும். போட்டியிடுபவரின் இளமைக் காலமாவது ஊரில் கழிந்திருக்க வேண்டும். அன்னார் மீதிக்காலத்தையும் ஊரில் கழிப்போம், ஊர்களின் வளர்ச்சிக்குப் பாடுபடுவோம் என உறுதிமொழியொன்றையும் அளித்தல் வேண்டும்.

கைத்தொழிலாளருக்கென்று இடஒதுக்கீடு கொடுப்பதும் அவசியம். அறவழியினரான அவர்களெல்லாம் அரசியலுக்கு வராததால்தான், அவர்களுக்கு உரிய இடம் இல்லாததால்தான், அரசியல் தரம்கெட்டுக் கிடக்கிறது. எனில் அவர்களுக்கென்று பத்துசதம் இடம் அளிக்கலாம். பெண்களுக்கென்று குறைந்தது பத்து சதம். அருந்ததியர்க்கு ஐந்து சதம். அவ்வாறே பிராமணருக்கும் ஐந்து சதம் எனில் குறைந்தது ஐம்பது சதமான இடஒதுக்கீட்டை நல்மனம் கொண்டோருக்கும், அறவழியில் நடப்பவருக்கும், அறவழியில் மக்கள்திரளை நடத்துபவருக்கும் ஒதுக்கிவிட்டு, மீதமுள்ள ஐம்பது சதமானத்தை அறிவில் சிறந்தோருக்கு, பொதுப்பரிவினருக்கென ஒதுக்க வேண்டும்.

ஆசிரியப் பணிகளில் இடஒதுக்கீடு அவசியம் வேண்டும். ஆசிரியர்களே சமூகத்தைக் கட்டமைப்பவர்கள். எனில் எஸ்.சி. எனும் பிரிவை எடுத்துவிட்டு ஊர்க்காரர், உழவர், வேளாண்காரர் எனும் பெயர்களில் நமக்குரிய ஒதுக்கீடு தேவை. இது அறத்தை முன்னெடுப்பவர் எனும் வகையில் நமது உரிமையும்கூட. கல்லூரிப் பணிகளில் அருந்ததியருக்கும், பிராமணர்களுக்கும் அவசியமான இடஒதுக்கீடு தேவை. ஒருவர் அன்பின் எல்லை எனில் அடுத்தவர் அறிவின் எல்லை. கல்வியின் தரத்தை நிலைப்படுத்துவதற்கு இவை இரண்டுமே தேவை. கல்விக் கூடங்கள் அறிவைமட்டும் முன்னெடுப்பவை அல்ல. நாம் பிழையான புரிதல் கொண்டுள்ளோம். இளையோர் அன்பையும், அறத்தையும், வாழ்க்கையின் பொருளையும் கல்விக் கூடங்களில் கற்க வேண்டியது அவசியம். கல்வி நிலையங்களில் பெண்களுக்கும் இடமளிப்பது அவசியம். அவ்வாறே மலைவாழ் மக்களுக்கும் மூன்று சதமாவது ஒதுக்கீடு வேண்டும். அவர்கள் பெயர்களில் முன்னேறிய சாதியார் எளிதாக நுழைந்து விடுகிறார். பழங்குடிகள் யார் என்பதை மறுஆய்வு செய்வதும் அவசியம். அவர்களுக்கான ஒதுக்கீட்டை வரையறை செய்ய வேண்டும். மீதமுள்ள இடங்களை பொதுப்பிரிவில் கொண்டு வரலாம்.

தேவேந்திர குலத்தாரே, நமக்கு அனைத்து வழிகளிலும் காலம் கைகூடி வருகிறது. நமது போராட்டங்கள், நமது தியாகங்கள் பலனளிக்கத் காத்திருக்கின்றன. நமது துயரங்களுக்கு, துன்பங்களுக்கு நல்லதொரு விடிவுகாலம் பிறக்கப் போகிறது. நமது குலத்தாரின் செயல்பாடுகளும் எமதெண்ணத்தை உறுதிப்படுத்துகின்றன. நாம் உலகினை அதன் உச்சநிலையை நோக்கி நகர்த்தப் போகிறோம் போலும். இதுவரை உலகம் எண்ணிவந்த, பேசிவந்த, காத்திருந்த, மண்ணில் சொர்க்கத்தைப் படைத்தல் நம்மால் இயல்வதுபோல் தெரிகிறது, காலம் நம்மை அதற்கே தயார்படுத்தி வந்துள்ளது தெளிவு. இறைவனின் மகிமையை, அவனது அரசாட்சியை, மண்ணில் நாம் நிலைநிறுத்தப் போவது திண்ணம். நம் செயல்கள் மனித குலத்தின் மாண்புகளை உயர்த்துவதோடு, தெய்வங்களுக்கும் மகிழ்ச்சியைத் தரவல்லன.

யாம் வேண்டுவது, நாம் நன்கு சிந்தித்து நல்லதொரு முடிவை எடுக்க வேண்டும். நாம் என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்பதை ஓரளவிற்கு யாம் விளக்கியுள்ளோம். அவற்றை ஆராய்ந்து, தெளிந்து, சிந்தித்து முடிவெடுக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நம்மில் பலரும் பலவிதமாய் இதை நோக்கியே, இத்திசை நோக்கியே பயணித்து வந்துள்ளோம். நமது தனித்தனிப் பயணங்கள் இனி ஒன்றுகூடி, ஒன்றிணைந்து, ஒரே திசையில் பயணிப்பது அவசியம்.

யாம் தனிப்பட்ட முறையில் இத்திசைப் பயணத்தை சிந்தித்து வந்தோம். நம் குலத்தாரின் தலைவர்களும் இத்திசை நோக்கியே பயணித்தது வியப்பு. சமீப காலமாக நம் குலத்தார் பாரதீய ஜனதா கட்சிக்கு ஆதரவாக இருப்பதை யாம் உற்று நோக்கியே வருகிறோம். எனினும் அவர்களது வரலாற்றையும் நாம் மறக்கலாகாது. நமது வாழ்க்கை முறை வேறு, நமது வாழ்க்கை நோக்கம் வேறு. மதத்தில் நாம் சற்றே கவனம் வைக்க வேண்டும். நாம் பாதத்தில் பிறந்தவர்கள் என்பதை அவர்கள் மறக்கக் கூடும். நாம் என்றும் மறக்கலாகாது. நாம் நமது வரலாற்றை ஒருபோதும் மறக்கலாகாது தேவேந்திர குலத்தாரே.

நமக்கு நிதானம் வேண்டும், பொறுமை வேண்டும், பணிவு வேண்டும், பண்பு வேண்டும், நல்லறிவு வேண்டும். நாம் என்றும் அறவழியில் பயணிக்க வேண்டும்.

புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ளவற்றை தனிப்பட்ட முறையில் எமது, எம்முடையது என்பதில் எமக்கு விருப்பமில்லை, உடன்பாடு இல்லை. எம்மைப்

பொருத்தவரை இவை எம் தந்தையாம் கண்ணனின் கனவு. இவை எம் தந்தையாம் காந்தியின் செயல் திட்டம் எனவும் கொள்ளலாம். அதுவும் பொருத்தமன்றோ. எம் தந்தை இதற்குத்தான் தம் வாழ்நாளெல்லாம் பாடுபட்டார். அனைத்தும் தந்தையரின் செயல்களே. இவை நமது கனவாகவும் ஆக வேண்டும் எனும் எண்ணத்திலேயே இங்கு வெளிக்கொணரப்பட்டுள்ளன. இவை நமது கனவாகட்டும், நமது இலக்காகட்டும், நமது சாதனைகளாகட்டும். அவற்றே இவை தமிழர் கனவும், தமிழர் இலக்குமாகட்டும்.

**இது மானுட குலத்தின் ஒப்பற்ற கனவாகட்டும் தோழமைகளே.**

நாம் வெல்வோம் உறவுகளே. நாம் வென்று காட்டுவோம் தோழமைகளே.

**நாமும் எப்போதும் வெல்பவர்களே..**

நம் தந்தை எப்போதும் வெல்பவர் எனில் நாம் மட்டும் குறைந்தவர்களாகவா இருப்போம். நாமும் எப்போதும் வெல்வோம்.

நம் தந்தை எப்போதும்வென்றான். நம் தந்தை யுகங்களின் அதிபதி. நம் தந்தையாம் கண்ணன் யுகந்தோறும் வந்துதிப்பவர். தர்மத்தை நிலைநாட்டுபவர். உலகை அளப்பவர். ஆம். நம் தந்தை உலகளப்பவர்..

**உலகத்தோரே, நம் தந்தை தர்மத்தின் தலைவன். தர்மத்தின் காவலன்.**

நம் தந்தை உலகளந்த பெருமாள். நம் உலகளக்கும் தந்தை, நம் ஆண்டளக்கும் மாயன், எப்போதும் உலகை அளந்து அதை இன்னும் கூடுதலாக்குபவர், மேலும் பெரிதாக்குபவர்..

பிறிதொருவரால் இவ்வுலகை அளக்க முடியுமோ. எவர் இவ்வுலகமாகவும், வேறாகவும் இருக்கிறாரோ அவராலேயே இவ்வுலகை அளக்க முடியும். அவரே உலகின் தலைவர். அவரே அகிலத்தின் அதிபதி. அவரே மூவுலகின் தந்தை. அவரே உலகமனைத்திற்கும் தந்தை.. என்றும்.

நம் தந்தை அகிலத்தின் தந்தை. அகிலத்தை ஆளும் தந்தை. பரந்து விரிந்து நீண்டு நெடிதுயர்ந்து ஓங்கி வளர்ந்திருக்கும் இவ்வுலகை தமது சிறு அடியால் அளக்கும் தந்தை.

**அகிலம் பெரிதா. நம் தந்தை பெரிதா.**

நம் தந்தை பெரிதினும் பெரியவர். எது சிறந்ததோ அதிலும் சிறந்தவர் நம் தந்தை. எது உயர்ந்ததோ அதைக் காட்டிலும் உயர்ந்தவர் நம் தந்தை.

**நம் தந்தையாம் மாயன் வாழி!**

மயனெம் பெருமான் வாழி!

உலகளந்த மாயவன் வாழி!

திரிவிக்ரமமூர்த்தியின் திருப்பாதங்கள் வாழி!

திருமால் வாழி! திருவடிகள் வாழி!

திருத்தந்தையர் வாழி;தேவியர் வாழி!

அகிலம் வாழி! அனைத்துயிரும் வாழி!

வாழிய வையகம்! வாழிய வானகம்!

வளர்மொழி வாழி! வளர்மதி வாழி!

**திருவாழி ; திருவரங்கன் வாழி !!**

# தாமோதரன்!



தேவேந்திர குலத்தவர் பிற தமிழ்க் குடிகளிடம் திணை கேட்பது பொருத்தமற்றது. தமிழர்கள் திணை, துறை, பொழுது என்பதையெல்லாம் மறந்து வெகு காலமாகிவிட்டது. அவர்களிடம் போய் எந்தத் திணை, நீங்கள் எந்தத் திணையில் வருகிறீர்கள் என்றால் என்ன சொல்வார்கள். தமிழின் இலங்கியங்களை அறிந்தோர் வெகு சிலரே. மற்றவர் உண்டு, உறங்கி, வேலை செய்து என வாழ்கிறார். சிலர் வெட்டிப்பேச்சு என காலத்தைத் தள்ளுகிறார். அவர்களிடம் எதற்கு திணை, துறைப் பேச்சு.

குறுந்தொகை அழகாகச் சுட்டுகிறது. வினையே ஆடவர்க்கு உயிரே - பாடல் நூற்றி முப்பத்து ஐந்து. வினை - செயல், வேலை. வேலை செய்வதே, தொழில் பார்ப்பதே, ஆடவர்க்கு உயிராம். உயிர் எனில்? உயிர் எத்தனை பெரிதோ, எத்தனை சிறந்ததோ அத்தனை உயர்வானது ஆடவர்க்கு வேலை. குறுந்தொகை வட்டிக்கு விட்டுப் பணம் பண்ணுவதை வினை எனக் கருதியிருக்காது என உறுதியாக நம்பலாம். தமிழ் இலக்கியங்களைப் படித்தால்தானே தமிழருக்கான பண்புகள் வரும், வளரும், மிளிரும். தமிழ் இலக்கியங்கள் அறிவுப் பெட்டகங்களல்லவா, அறத்தின் கருவூலங்களல்லவா. எந்தத் தமிழர் படிக்கிறார். தமிழ்ப்புலவர் பட்டமே தமிழிலக்கியங்களைப் படிக்காமலேயே ஒருவர் வாங்கிவிடக் கூடுமெனில், அவ்வாறுதான் பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன எனில் இங்கு எதைப் பேச, எதை சுட்டிக்காட்ட. ஏதோ படிக்கிறார், ஏதோ வேலை செய்கிறார், ஏதோ வாழ்கிறார். அவரிடம் போய் எந்தத் திணை எனக் கேட்டால்.

மருதத்தாரே, அனைத்துத் தமிழரையும், உலகினர் அனைவரையுமே ஏதேனுமொரு திணையில் சேர்த்துக் கொள்ளும். அவர் அறியாமல் இருக்கலாம். மறந்துபோய் இருக்கலாம். பிள்ளைமாரை மருதத்தில் சேரும். நாடாரை முல்லையில் வையும். அருந்ததியாரை மருதத்தில் வைத்துக் கொள்ளும். கைத்தொழிலாளர் அனைவரையும், கலைத் தொழிலாளர் அனைவரையும் மருதத்தில் அரவணையும். வேறு யாரேனும் விடுபட்டுள்ளாரா. இருப்பின் அனைவரையும் மருதத்தோடு இணைத்துக் கொள்ளும். மருத நிலத்தின் பெரும்பொழுது ஆறுபருவங்களும் என்பதுபோல், ஆண்டின் பன்னிரு மாதங்களும் மருதத்தின் காலமாகக் கொள்ளப்படுவதுபோல், அனைத்து மக்களையும் மருதராகக் கொள்வதும் பொருத்தமன்றோ.

மரு என்றாலே மணம், வாசனை என்றே பொருள். மரு எனில் வளர்வது எனவும் பொருள் சுட்டலாம். மருத்து எனில் காற்று. மருத்தன் - வாயுதேவன். மருத்தன் எனில் மருத்துவன் எனவும் பொருள். மருது - பெயர்ச் சொல், மருத மரம்.

எனில் மருத்து, மாருத்து, மாருத்தி, மாருதி என மறுவலாமன்றோ.

மாருதி - காற்றின் மைந்தன். மந்தி - குரங்கு. மாந்தர் - மனிதன். மாருதி சமற்கிருதப் பெயரோ. ருது - பருவகாலம். பெண் ருதுவாகிவிட்டாள் எனில் பெரியவளாகிவிட்டாள், வளர்ந்துவிட்டாள் எனப் பொருள். இருது எனில் வயதிற்கு வராத எனப் பொருளாம். மாவென்பதை பெரிது, பெரியது எனக் கொண்டால் ருது வளர்ந்த எனச் சுட்டலாமோ. எனில் மாருதி - பெரிதாக வளர்ந்தவன்.

மருதம் - நிலவகை. மாருதம் - விரும்பத்தக்க காற்று, தென்றல் காற்று. மலையமாருதம் - மலையிலிருந்து வீசும் காற்று. மந்த மாருதம் - மெதுவாக வீசும் காற்று. மலைக்காற்று - வேகமாக வீசுமோ, ஆடிக் காற்றுப்போல. ஆடிக்காற்று மேற்கு மலைகளிலிருந்து அடிப்பதுதானே. மந்த - மெதுவான, மந்தமான. மந்தி - மெதுவாக மரம் ஏறும் விலங்கு? அப்படிச் சொல்ல முடியுமா? மந்தி - பொதுவில் குரங்கு. குறிப்பாக பெண் குரங்கு. கருவன் - ஆண் குரங்கு. வானரம் - குரங்கு. வான் போன்ற உயர்ந்த மரத்தில் வாழ்வதால் வானரமோ.

மந்தி - மதி. கூரிய அறிவு கொண்டது. மாந்தி - மாந்த - மாந்தன் - கூரிய அறிவினன்.

மரம் - பெரியது, வளர்வது. அர - அரம் - அரவம் - பெரியது, வளர்வது. வானரம் - பெரிதாக வளர்வதோ. பெரியது எனில் வாலில்லாக் குரங்கைச் சுட்டுமோ. வானரப் படை - பெரிய படையோ. வானரர்கள் - பெரியவர்களோ.

ஒரு எழுத்து வேறுபாடுதான் - மருதம், மாருதம். எழுத்துக்கூட இல்லை. ஒரு துணைக்கால். அவ்வளவே. பொருள் எத்தனை வேறுபடுகிறது? மருத நிலமெனில் மா - பெரிய, ருது - காலம் - பெரிய காலத்தின், பெரும் பொழுதின் நிலமோ. மருதம் - காற்று எனக் கொண்டால் காற்று வீசும் நிலம். தென்றல் காற்று, சுகமான காற்று வீசும் நிலம் எனக் கொள்ளலாமோ. குறிஞ்சியில் நடுங்கும். முல்லையில் குளிரும். மருதத்தில் ஓரளவிற்கு சுகமாகவே இருக்கும். பாலையில் வியர்க்குமல்லவா.

மருதத்தில் தங்கு தடையின்றி, சீராக காற்று வீசும். மலைப் பகுதிகளில் காற்று தடைபடும். உயர்ந்த மலைகளில் காற்று குறைவும் படும். எனில் மருத்து அதாவது காற்று என்பதை வைத்தே மருதம் எனும் பெயர் சுட்டியிருக்குமோ. முல்லை நிலத்தை எதை வைத்துச் சுட்டுகிறார்கள். முல்லை - முலை - மேடு, மேட்டு நிலம். முல்லை - மணமுள்ள மலர். முல் - முன் - முன்னது - முன்னை நிலம். முதல் நிலம். முல் - முள் - கூரானது. முல்லை - கூரான பூவு, முலை - கூரான உறுப்பு.

முல் - முல்லை - வெளுத்த, வெள்ளை, வெண்மைப் பூவு. அல் - அல்லை - கருப்பு - கருத்தது. இல் - இல்லை - இல்லம் - மூடியது, சுவர் கொண்டது, இருட்டிய பகுதி. விளக்கேற்றுவது புண்ணியம் எனக் காரணத்தோடுதான் சொல்லியிருப்பார்கள். மல் - மல்லை - மல்லல் - பழைய, பழமையான- பெரிய. மல் - வளமை, மல்லர் மூதூர் வளமையான முதுஊர். மால் - மாஅல் - பெரிய அல் - பெரிய கருப்போ. மால் - மால - மாலன் - மாலவன் - பெரிய கருப்பன் - பெரிய வீரன். கல் - கல்லு - பெரியது - கடினமானது - கருமையானது. மெல் - மென்னுவது - உடைப்பது. நெல் - இருபக்கமும் கூர் முனை கொண்டதோ. வாள் கூரானது, வேல் - கூர் முனை கொண்டது. நெ - நெடியது, நீண்டது எனில் நெடிதாய் வளர்வது நெல்லோ. அரி - உள்ளிருப்பது. அரிசி - நெல்லுக்குள் இருப்பது. அரி – சிவப்பு - சிவந்த அரிசியோ. கில் - கிள் - துண்டாக்குவது. கிள் - கிள்ளு - கிள்ளல் - கிள்ளுதல் - கீரைத் தண்டிலிருந்து கீரையை, கீரை இலையைக் கிள்ளுதல் - அதாவது துண்டாக்குதல். கீரை ஆய்ந்தவருக்கும் தெரியும் - சிறுவர்களுக்கு கீரை ஆய்வது மிகவும் பிடிக்கும். கீரைத்தண்டை ஒடித்துப் போடுவது அதைவிடப் பிடிக்கும். கில் - kill - ஆங்கிலச் சொல்லோ. அது கிள் எனில் பொருத்தமல்லவா.

ஆங்கிலத்தில் அண்டர் எனில் கீழே, அடியில் எனப் பொருள். தமிழில் அண்டர் - வானோர், தேவர், மேலானவர் எனப் பொருள். அதாவது பெரியவர். அண்டா - பெரிய பாத்திரம். எனில் துண்டா - சிறிய பாத்திரம். துண்டு - துண்டா - துண்டுதுண்டாக, சிறியதாக. எனில் குண்டா. சிறியது. குண்டு - சிறிய நிலம். குட்டை - சிறு நீர்ப்பரப்பு. குன்று - சிறிய மலை. குன்றி மணி - சிறிய விதை. வித்த - வித்து - விதை. விதை - மேலானது, உயிருள்ளது. அவித்து - அவித்தல். நெல்லை அவித்தல் - அவித்த நெல் முளைக்காது. அவித்த - இல்லாத, உயிரற்ற.

அண்டர் - Under - அடியில். அண்டர் - வானோர் - மேலுகத்தார் - மேலோர் - தமிழின் சொல் ஆங்கிலத்தில் எதிர்பதமாக பொருள் கொண்டுள்ளதோ.

அதை Under - அண்டர் எனக் கொள்ளாமல் உண்டர் என உச்சரித்தால். அண்டர் என்பது அருகாமை, அருகிலுள்ளவர் எனும் பொருள் சுட்டுமோ. அண்டி, அண்டிப் பிழைத்தல், ஒருவரைச் சார்ந்து பிழைத்தல்.

அண்டர் எனில் ஆயர், மேய்ப்பர் எனவும் ஒரு பொருளுண்டு.

விண்டர் - Winter - பருவகாலம். தண்டர் - Thunder - இடி. கண்டர் - Hunter - வேட்டைக்காரர். Counter - கவுண்டர் - கணக்காளர். Mounter - Mountaineer - மவுண்டர் - மவுண்டைனர் - மலையர் - மலையேற்றவர். கவுண்டர் முல்லை நிலத்தவரோ.

இப்படியே எழுதிக் கொண்டிருந்தால் புத்தகத்தை எப்போது முடிப்பது. தமிழில் முதுகலைப் பட்டம் பெறவேண்டும் என்பதும் எமது ஆரம்ப கால கொள்கைகளுள் ஒன்றாக இருந்தது. ஒருவேளை தமிழைக் கூடுதலாகப் படித்திருந்தால் புத்தகத்தை முடிக்கவே இயலாது போய்விடுமோ.

ஜுலை மாதத்து சொல்வனம் இணைய இதழில் புகழ்பெற்ற எழுத்தாளர் திரு. நாஞ்சில் நாடன் சக்கடா எனும் தலைப்பில் கட்டுரையொன்றை எழுதியுள்ளார். அக்கடா, துக்கடா, பக்கடா, கச்சடா என டாவில் முடியும் வார்த்தைகளின் மூலத்தை ஆராய்கிறார். சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரை. தமிழறிஞர் சமீபகாலமாகவே சிறப்பான சொல்லாராய்ச்சிக் கட்டுரைகளை சொல்வனம் இதழில் எழுதி வருவது குறிப்பிடத்தக்கது. தமிழறிஞர் கட்டுரை தமிழின் ர - வகைச் சொற்கள் இந்தியில் டா - வாக மாறுவதைச் சுட்டிக் காட்டுகிறது. எடுத்துக்காட்டாக சாரி - சாடி, பூரி - பூடி, பருவா - படுவா.

வண்டியைக் குறிக்க சகடம், சகடை, சகடு, சகடி, சகடிகை, சகாடு எனப் பல்வேறு சொற்கள் இருப்பதை இலக்கியச் சான்றோடு சுட்டிக் காட்டி, சக்கடா என்பது தமிழ்ச் சொல் ஆகாதா என வினாவுகிறார். சக்ர, சக்ரா, சக்கரா என்பவை வண்டி உருளப் பயன்படும் சக்கரம் என்பதன் பொருள்தானே, வண்டியல்லவே எனவும் சுட்டியுள்ளார். யாம் சக்கரம் என்பது சக்ராவிலிருந்து வந்ததல்ல என்பதைச் சுட்டும் விதமாக ஏற்கனவே குறிப்பொன்றை இங்கு சுட்டிக் காட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இங்கு இதைச் சுட்டுவது அதற்கல்ல. யாமறிந்த வரை புகழுக்குரிய திரு. நாஞ்சில் நாடன் மிகச்சிறந்த தமிழறிஞர். அவரது மொழியிலேயே சொல்வதானால் கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளாக இலத்தியத்தோடு, எழுத்தோடு தொடர்புடையவர். இலக்கியங்கள் படைத்து வருபவர். சமூகத்தின் மீது பெறும் பற்றுக் கொண்டவர். யாமறிந்த வரையில் சமூகக் கேடுகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தும் வருகிறார். எழுத்தாளர் வீதியில் இறங்கிப் போராட வேண்டியதில்லையே. தம் எழுத்தில் பதிந்தாலே போதுமல்லவா. தீதம் நன்றும் - சமூக அக்கறை கொண்ட சிறந்த ஆக்கம்.

கட்டுரையின் இறுதியில் தமிழறிஞர் கூறுகிறார் - தாம் மொழியறிஞன் அல்லன். வேர்ச்சொல் ஆய்வாளன் அல்லன். மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் போன்றோரோடு ஒப்பிடும் தகுதி கொண்டோன் அல்லன். என்றாலும் கற்றுக்கொள்ள விழையும் ஓர் எளிய மாணவன். கட்டுரை ஜுலை 23 ஆம் தேதி இதழில் வெளியாகியுள்ளது.

இத்தனை பெரிய, உயர்ந்த தமிழறிஞரே, தமிழ் இலக்கியங்களில் பெரும் புலமை கொண்ட பெருந் தமிழறிஞரே, தம்மை அடக்கமாகச் சுட்டுகிறார் எனில், யாம் வேர்ச்சொல் ஆராய்ச்சி பண்ணுவதை எதில் சேர்ப்பது? எமது நோக்கம் இலக்கியத் திறனாய்வோ, வேர்ச்சொல் ஆராய்ச்சியோ அல்லவே. சமூக மாற்றவல்லவோ எமது பெரும்பணி.

இந்த எளிமை, தன்னடக்கம் அவருக்கு அவரது ஆசான் பெரும்புகழ் கம்ப நாடனிலிருந்து வந்திருக்க வேண்டும். கவிச் சக்கரவர்த்தி எனப் போற்றப்பட்டவரே தம்மை எத்தனை எளிமையாகக் காட்டிக் கொள்கிறார். தமிழறிஞர் கம்பனில் தோய்தவர். கம்பராமாயணத்தில் நுண்மாண் நுழைபுலம் கொண்டவர்.

இத்தனை உயர்ந்த தமிழறிஞர், சாகித்ய விருது பெற்றிருந்த சமயத்தில், எமது கல்லூரியின் தமிழ்த் துறை முப்பெரும் விழாவிற்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார் போலும். சட்டென ஒரு வாத்திய முழக்கம் கேட்டு யாம் வெளியே வந்து பார்த்தோம் தமிழறிஞரை வாசலிலிருந்து துறைத்தலைவர் அழைத்துச் செல்கிறார். கூடவே இரண்டு மூன்று மாணவர்கள், ஒற்றை டமரா மேளம்.

பேர் பெற்ற தமிழறிஞர், சாகித்ய அகாதமி விருதுபெற்ற பெரும் இலக்கியவாதி கல்லூரிக்கு வருகிறார் எனில், எவ்வளவு மகிழ்ச்சியும் ஆராவாரவும்

இருக்க வேண்டும். யாம் சற்று நேரம் நின்று பார்த்தோம். தமிழறிஞர் அவர் பாட்டுக்கு விறுவிறுவென நடந்து செல்கிறார். முன்னால் டமரா டமரா எனச் சத்தம். இப்படியுமா தமிழறிஞரைச் சிறப்பிப்பது? தமிழுக்கு உழைப்பவரை, தமிழறிஞரை தோளில் சுமந்து செல்ல வேண்டாமோ? மங்கல இசையும், வாழ்த்தொலிகளும் முழங்க வேண்டாமோ? கல்லூரிப் பேரராசிரியரெல்லாம் வரிசையில் நின்று தமிழறிஞரைப் வாழ்த்தவும், போற்றவும் வேண்டாமோ? முதல்வர் வாயிலில் நின்று மாலைபோட்டு அழைத்துச் சென்றிருக்க வேண்டாமோ?

இதுவே ஒரு அரசியல்வாதியோ, நடிகரோ வந்தால் எவ்வளவு மதிப்பிருக்கிறது பேராசிரியப் பெருந்தகைகளே. தமிழுக்கும் தமிழறிஞர்களும் உயர்கல்வி நிலையங்களிலேயே இவ்வளவுதான் மரியாதை எனில், வேறெங்கு மதிப்பும் மரியாதையும் கிடைக்கும்?

**“நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்**

**மண்மாண் புனைபாவை யற்று”**

நுண்ணிதாய் மாட்சிமைப்பட்டுப் பல நூல்களையும் நுணகிக்கற்ற அறிவு இல்லாதவனுடைய எழுச்சியும், அழகும், சுண்ணச் சாந்தினால் மாட்சிமைப்படப் புனைந்தமைந்த படிமையின் எழுச்சியும் அழகும் போலும் - பாவாணர் உரை.

ஆணுக்கு புற அழகைவிட அக அழகே முக்கியமல்லவா.

ஆண் அழகுள்ளவனாக இருக்கலாம். அது உண்மையான அழகன்று. ஆணுக்கு அழகு அறிவு. பல நூல்களைக் கற்ற அறிவு, நூல்களை நுணிகிக் கற்ற அறிவு.

தமிழ் கற்றோருக்கு, தமிழ் அறிஞருக்கு, தமிழில் பேரறிவு கொண்டோருக்கு, கற்ற செருக்கு, வித்தையின் கர்வம், கற்றவர் எனும் ஆணவம் வருவதில்லை. அவருக்கு தாம் தமிழறிஞர் எனும் செருக்கு இருக்கும். ஏனெனில் அவர் முடிவு தமிழே உலகின் முந்துமொழி. அது  தமிழின் சிறப்புக் கருதி அவருக்கு வரும் அறிவுச் செருக்கு. அது இருக்கும்தானே..

கல்விக்குக் கரை இல என்பதைத் தமிழறிஞர் அறிவர். அதுவே தம்மை மாணாக்கராக நினைக்க வைக்கிறது. எனில் யாமும் மாணவரன்றோ. இளைய மாணவர் எனில் இன்னும் பொருத்தமல்லவா.

இளையோருக்கு ஒரு வேகம் இருக்கும். ஒரு துடிப்பு இருக்கும். இளையோா் எதிலும் துணிவு கொள்வர். அப்படித் துணிந்தே யாம் சொற்பொருளாராய்ச்சி செய்வதாகக் கொள்க தமிழில் புலமை மிக்க தமிழறிஞா்களே.

சொல்லாய்வை விடுத்து தேவேந்திர குலத்தவருக்கு என ஒன்றிரண்டு நெறிகளைச் சுட்டி இப்புத்தகத்தை நிறைவு செய்கிறோம். மனதுள் நிறையச் சொல்ல வேண்டுமென ஆசை உள்ளது. காலத்தோடும் ஒரு செயலை முடிக்க வேண்டுமன்றோ.

மாஅல் - திருமால். நீர் செல நிமிர்ந்த மாஅல் போல. மாஅல் போல - பெரிய திருமால் போல, விண்ணளவு உயர்ந்த திருமாலைப் போல, மகாபலி பெருமன்னன் தீரை ஊற்ற ஓரடியால் உலகத்தை அளப்பதற்காக நிமிர்ந்த திருமாலைப் போல.

மாஅல் - இசைநிறை அளபெடை. அளபெடை - எழுத்தின் ஒலிக்கு மாத்திரை கூட்டுதல். செய்யுளிசைக்கோ, சொல்லிசைக்கோ அல்லாமல் வெறுமனே இனிய இசைக்காக, இசை கூட்டி எழுதுதல் இன்னிசை அளபெடை.

நனந்தலை யுலகம் வளைகி நேமியொடு

வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை

நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்,

பாடிமிழ் பனிக்கடல் பருகி, வலனேர்பு

கோடுகொண் டெழுந்த கொடுஞ்செலவு எழிலி,

பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை (1- 6)

- முல்லைப்பாட்டு - பாடியவர் நப்பூதனார்.

முகிலானது, அகன்ற இடத்தையுடைய உலகத்தை வளைத்து, சங்கும் சக்கரமும் ஆகிய குறிகளை உடையவனும், திருமகளை அணைத்தவனும்,

வலிமையான கைகளை உடையவனும், மாபலி தன் கையிலே நீர் ஊற்றிய பொழுது விண்ணளவு உயர்ந்தவனுமாகிய திருமாலைப்போல, ஒலி முழங்குகின்ற குளிர்ச்சி உடைய கடல்நீரைப் பருகி வலப்பக்கமாக எழுந்து, மலைகளை இடமாகக் கொண்டு, விரைந்து சென்று பெரிய மழையைப் பெய்த சிறுபொழுதாகிய மாலை நேரம், பிரிவுத் துன்பத்தைத் தருவதாக இருக்கிறது.

பாடல் போருக்குச் சென்ற தலைவனின் பிரிவாற்றாமையால் தலைவி பாடியது.

கொடுஞ்செலவு எழிலி - விரைந்து செல்லும் முகில் - அழகிய சொல்லாக்கமன்றோ.

இதே போன்ற வரிகள், வருணனைகள், பத்துப்பாட்டின் மற்றொரு நூலான நெடுநல்வாடையிலும் இடம் பெற்றுள்ளது சிறப்பு.

''அருங்கடி மூதூர் மருங்கில் போகி,

யாழிசை இனவண்டு ஆர்ப்ப, நெல்லோடு,

நாழிகொண்ட நறுவீ முல்லை

அரும்பவிழ் அலரி தூஉய்க், கைதொழுது

பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப'' (7 - 11)

- பாடலாசியர் நக்கீரனார்.

அரிய காவலுடைய முதுஊர் அருகில் போய், யாழ் இசையைப் போன்று வண்டுகள் ஆரவாரிக்க, நாழியில் நெல்லுடன், நறுமணமான மலர்களையுடைய முல்லைக் கொடியின் அரும்புகளில் புதிதாக மலரும் பூக்களைத் தூவி, கைதொழுது, வயதில் முதிர்ந்த பெண்கள் நற்சொல்லுக்காகக் காத்து நின்றனர்.

இறைவனாம் திருமாலை நெல்லும் பூக்களும் கொண்டு வழிபடுவர் என்பது பாடல் வரிகளால் புலனாகிறது.

இரும்செய் விளக்கின்

நெல்லு மலருந் தூஉய்க்கை தொழுது

மல்ல லாவன மாலை யயர - (வரி 44 - 45)

“அகனக ரெல்லா மரும்பவிழ் முல்லை

நிகர்மலர் நெல்லொரு தூஉய்ப்,

பகன்மாய்ந்த மாலை”

மாலையில் அரும்பு அவிழும் முல்லை மலரோடு நெல்லும் தூவி இல்லுறை தெய்வத்தை வணங்கினர் - சிலப்பதிகாரம் (9 : 1 - 3) அழகாய்ச் சுட்டுகிறது.

முன்பு மலர்களை வைத்தே பொழுதை அறிந்தனராம். நாள் எனில் மலராம். பூக்கள் மலர்வதுபோல் ஒரு நாளும் மலர்கிறதோ.

செழுஞ்செய் நெல்லின் விளைகதிர் கொண்டு

தடந்தாள் ஆம்பல் மலரொடும் சூடி - அகநானூறு (78 : 17 - 18)

முன்னைத் தமிழ்கள் ஆம்பல் பூவோடு நெற்கதிரையும் தலைமுடியில் சூடி மகிழ்ந்திருக்கிறார்கள்.

நீரொடு சொரிந்த ஈரிதழ் அல்லி

பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தூய் - (அகம் 86 - 15 - 16)

அன்று நெல்லைத் தூவிய முறைமைதான் தற்போதும் அரிசி வடிவில் மங்களமாகத் தூவப்படுகிறது என்பது தெளிவு.

நெல்நாகரிகத்தை இன்றளவும் கடைபிடித்து வருவது மருத நிலமக்களன்றோ. அவரன்றோ உழவர். அவரன்றோ பயிர்த்தொழில் செய்வோர். அவரன்றோ வேளாளர். வேளாண்மை செய்பவர்.

மேழியர் யார்? உழவர் யார்? உழுகுடி எது? கிழார் யார்? கிழவன் யார்? உழவன் யார்? மழவன் யார்?

மள் யார்? மள்ளர் யார்?

வில்லர் யார்? சொல்லர் யார்?

சொல்லின் உழவன் யார்?

மல்லல் மூதூர் எது? தென்திருவரங்கம் எது?

பெருமாள் யார்? திருமால் யார்?

உலகளந்த மாயன் யார்?

நம் தந்தை,

**ஆழி முதல்வன்!**

முது மொழி முதல்வன்!

மன்னுயிர் முதல்வன்!

உலகு ஆள் மன்னவன்!

மாய மள்ள!

பொரு திறல் மல்ல!

பொரு விறல் மள்ள!

மலர் மார்பன்!

திருவின் கணவன்!

திருமறு மார்பன்!

அந்தணர் அருமறை!

வானோர் தலைவன்!

மாசு இல் சேவடியோன்!

**ஓங்கி உலகளந்த உத்தமன்!**

நம் தந்தை சொல்லில் அடங்காப் பெரும்புகழ் கொண்டோன்

நம் தந்தை யாவர்க்கும் இருநிலம் அருளுபவன்

நம் தந்தை ஈரடியால் அகிலத்தை அளந்த அப்பன்

நம் தந்தை அண்டர் பிரான், விண்ணவர் கோமான்

நம் தந்தையின் பெருவிழா திருவோணத் திருவிழா

நம் தந்தை உலகளப்பவர்

அன்றும் இன்றும் என்றென்றும்

அன்னும் இன்னும் என்னென்னைக்குமாய்

வாருங்கள் தேவேந்திரர்களே!

நம் எந்தையின் தாள் பணிவோம்; மூத்தப்பன்

ஏழ்படி கால் தொடங்கி; எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்.

சேருங்கள் தேவேந்திர குலத்தாரே!

வழிவழியாய் திருவோணத் திருவிழவில்

பாடுங்கள் தமிழர்களே!

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு

பலகோடி நூறாயிரம்

நினையுங்கள் மானுடர்களே!

பல்லாண்டை, பவித்திரனை, பரமேட்டியை,

சார்ங்கமென்னும் வில்லாண்டானை

போற்றுங்கள் தேவர்களே!

நல்லாண்டை! நம்பெருமாளை!

சாற்றுங்கள் தெய்வங்களே!

தேனும் பாலும்! நீரும் மலரும் நெல்லும்! ஒலியும் ஒளியும்!

ஏற்றுங்கள் கடவுள்களே!

கோவிந்தனை! கருடங்கொடியோனை!

**கிளி வாழி! கருடன் வாழி!**

பரசுராமன் வாழி! பலராமன் வாழி!

வங்கக் கடல்கடைந்த மாதவன் தாள் போற்றி!

தென்னரங்கம் பள்ளி கொண்ட திருவரங்கன் திருவடிகள் சரணம்!

ஸ்ரீதரன் வாழி! பூவராகன் வாழி!

பேரருளாளன் வாழி! பெருநிலம் வாழி!

**வாழி இராமன்! வாழிய கிருஷ்ணன்!!**

33. நம் ஒப்பிலா அப்பனை, அமரர்க்கு முதல்வனை, ஆம் முதல்வனை, நாம் என்றென்றும் நினைவில் கொள்ளும் விதமாய், நம் குடிகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு திருவோணத் திருவிழாவில் சடங்கொன்றை நிறைவேற்றுவதை நம் கடமையாகக் கொள்வோம் குல மூத்தோரே.

நம் குடிகளில் பிறக்கும் ஆண்குழந்தைக்கு மூன்றிலிருந்து ஐந்து வயதிற்குள்ளாக 'சேவடி செவ்வித் திருக்காப்பு' 'திருமண் காப்பு' 'திருவோணக் காப்பு' 'திருவடி திருக்காப்பு' போன்று ஏதேனுமொரு பெயரில் அக்குழந்தையின் பாதம் பணிவதை விழா போன்று சிறப்பிக்க வேண்டும். ஆண்குழந்தைக்கு காதணி விழா வேண்டுமா என்பதைத் தெளியுங்கள். அப்படி வைப்பதாயின், நெருங்கிய சுற்றத்தாரை மட்டும் அழைத்து எளிமையாக நடத்துங்கள். காதணி சடங்கை விழா போன்று நடத்த வேண்டாம். திருவோணத் திருக்காப்பை பெருவிழாவாக நடத்திச் சிறப்பிக்கலாம்.

'பாதம் பணியும் விழா' நாளில் அதிகாலையில் பையனின் வலதுபாதத்தின் அடிப்பாகத்தில் சங்கும், மேற்புறத்தில் சக்கரமும் மருதாணியால் இட்டுக்கொள்ள வேண்டும். விழாவில் பையன் வாமனன் போன்று அலங்கரிக்கப்பட்டிருப்பது சிறப்பு. கண்ணன், இராமன் போன்றும் அலங்கரித்துக் கொள்ளலாம். பையனுக்கு புனித நீராட்டுவது நன்று. நீராட்டலில் பையனின் தந்தைவழி உறவினர்கள் புனித நீரைத் தலையிலும், தாய்வழி உறவினர்கள் புனிதப் பாலை பாதங்களிலும் ஊற்றுவது நன்று. ஆண்வழி உறவுப்பெண்கள் மஞ்சள் நீரும், பெண்வழி உறவுப் பெண்கள் வெற்றிலை நீரும் பாதத்தில் ஊற்றுவது நல்லது.

நீராட்டு, அலங்கரித்தல் முடிந்தபின் பையனின் காலில் மணமுள்ள மலர்ச்சரம் கட்ட வேண்டும். கழுத்தில் துளசிமாலை அணிய வேண்டும். குலத்தார் அனைவரும் வயது வேறுபாடின்றி பையனது பாதங்களை தலையில் தாங்கலாம்.

ஆண்கள் அவர்களது தலையில் மஞ்சளரிசி வைத்துக்கொண்டு பையனது பாதத்தை தலையில் ஏந்தலாம். பெண்கள் முல்லை, மல்லிகை போன்ற மலர்களை அவர்கள் தலையில் வைத்து அதன்மீது பாதத்தைத் தாங்கலாம்.

பாதம்பணியும் விழாவில், பையனது வயதொத்த அல்லது பத்து வயதிற்குக் குறைவான பிறபையன்கள் பாதத்தை தலையில் தாங்கக் கூடாது.

நம் காலத்துப் பெண்பிள்ளைகள் அனைத்திலும் தங்களுக்கும் பங்கு வேண்டும் என்கிறார்கள், போராடுகிறார்கள். நாங்கள் மட்டும் எதில் குறைவு என்கிறார்கள். நம்மைப் பொறுத்தவரை ‘‘அப்பா நாராயணன், அம்மா நாராயணன் - ஆண் நாராயணன், பெண் நாராயணன்’’ எனில் பெண்களுக்கும் திருவடித் திருக்காப்பு விழா நடத்தலாமன்றோ. எனினும் விழா பையனுக்குப் போலில்லாமல் சற்றே மாறுபட்டிருக்கலாம். இருவருக்கும் ஒன்று போலவே நிகழ்த்த வேண்டியதில்லையல்லவா.

பெண்ணுக்கு முதல்நாள் இரவிலேயே மருதாணி பூசிவிடுக. மருதாணியை நிலவொளியில் பூசுவது சிறப்பு. மருதாணி பூசும்போது பாதத்தின் அடிப்பகுதியில் சக்கரமும், மேற்புரத்தில் சங்குக் குறியும் இடுக. புனித நீராட்டில் பையனுக்கு மாற்றாக நடத்துக. அதாவது பெண்ணின் தாய்வழி உறவுகள் புனித நீரையும், தந்தைவழி உறவுகள் புனித பாலையும் ஊற்றுக. பாதத்தைத் தாங்கும்போது ஆண்கள் தங்கள் தலையில் வெற்றிலையும், பெண்கள் துளசியும் வைத்து திருவடியைத் தாங்குக.

பெண்ணுக்கு ஒரு வயது முதல் இரண்டு வயதிற்குள் இச்சடங்கை நிறைவேற்றுக. திருப்பாத விழாவிற்கு முன்னதாகவே காதணிவிழா முடித்திருக்க வேண்டும். இதில் கவனம் கொள்க. பெண்ணின் காதணிவிழாவையும், திருப்பாத விழாவையும் ஒன்றாக வைக்கக் கூடாது. பெண்ணுக்கும் காதணிவிழாவை எளிமையாக நிகழ்த்தலாம். திருப்பாத விழாவை சிறப்பாக நடத்தலாம். பெண்ணுக்கு திருப்பாத விழா வேண்டாம் என பெற்றோர், பெரியவர்கள் விரும்பினால், காதணி விழாவை சிறப்பாக முன்னெடுக்கலாம். பெரியவர்களிடம் கலந்து தீர்மானிக்க. எம்மைக் கேட்டால் பெண்பிள்ளைகளின் திருப்பாதங்களையும் பணியலாம்.

இரண்டு வயது எனில் குழந்தையன்றோ. எனில் ஆறு வயதிற்கு மேற்பட்டோர் குழந்தையின் பாதம் தாங்கலாம். அதற்குக் கீழுள்ள குழந்தைகள் வேண்டாம்.

பெண்ணிற்கான பாதவணக்கத்தில் உள்ளூரில் வாழ்பவர்களே இடம்பெற வேண்டும். தாய்மாமன் முறையில் மிகநெருங்கிய உறவின்முறைகள் இடம் பெறலாம். எனினும் உறவின்முறை எனும் முறையில் அருகாமை ஊர்க்காரர்களைத் தவிர்க்கலாம்.

பெண்திருப்பாதம் தாங்கும் விழாவில் அவரை மகாலெட்சுமியாக, ஆண்டாள் நாச்சியாராக அலங்கரிப்பது சிறப்பு.

பெண்ணின் வலதுதிருவடியில் துளசிச்சரம் சூட்டி அத்திருவடியைத் தொட்டு தலையில் சூடுக.

பெண்பிள்ளையின் திருவடி தாங்குவதை முறைப்பையன்கள் தயங்கினால் அவர்களை விலக்கி விடலாம், வற்புறுத்தக் கூடாது.

திருவடி தாங்குவது யாருக்கும் கட்டாயமில்லை. யாரையும் வற்புறுத்தக்கூடாது.

நம் தந்தை அகிலத்தை அளப்பவர். யுகந்தோறும் நம் உத்தமத் தந்தை உலகை ஓங்கி அளந்தே அதை மேலும் உயர்த்துகிறார். எனில் வரும் காலத்திலும் நம் தந்தை உலகளப்பார். நாம் நம் **திருவோணத் தந்தையின்** திருவடிகளைத் தாங்குபவர்கள்.. அது என்றென்றும் நமது குலத்தாரிடம் நிலைபெற வேண்டும். கண்ணனுக்கு, நாராயணனுக்கு குலபேதம் இல்லை. அப்படிப் பார்க்க கூடாது. எனினும் நம் குலத்தில் பிறந்தால் அவர் உலகளப்பார். திண்ணமிது. அதைக் கைக்கொண்டு வரவே, இச்சடங்கு முறைகள். நம் வழிமரபில் வருபவர், எதற்காகச் இச்சடங்கு என எண்ணுவர். அதன் மூலம் நம் தந்தையை நினைவு கூர்வர்.

இது நம் குலத்தாருக்கு மட்டும் உரியதல்ல. கடவுள் எக்குலத்தில், எம்மொழியில் வேண்டுமானாலும் பிறப்பவர். தமிழனாய்ப் பிறந்தால் ஓங்கி உலகளக்கும் உத்தமனாகத் தோன்றுவார் என்பது இம்மண்ணில் நிலைபெறட்டும். எனில் தமிழர் அனைவரும் திருவோணத் திருவிழாவைச் சிறப்பிக்கலாம். அன்று

இவ்வுலகத்தை அளந்தவனின் திவ்விய திருப்பாதங்களைப் போற்றலாம், பணியலாம், தாங்கலாம்.

வானமறிந்த அனைத்தும் அறிந்து வளரும் மொழி தமிழ் எனில், தமிழோடு நம் அச்சுதனான, மாதவனான, கண்ணனும் வளர்கிறார் என்றே பொருள். தமிழ் கொண்டுதான் நம் உத்தமத் தந்தை உலகளக்கிறாரோ. ஆம் எனில், தமிழையும், உத்தமத் தந்தையையும், அவர் திருவடிகளையும் என்றென்றைக்குமாய்த் தமிழர் நினைவில் கொள்வது தமிழுக்கும், தமிழருக்கும் என்றென்றும், மேலும் மேலும் சிறப்புச் சேர்க்கும். உறுதியாய்..

**நம் உத்தமத் தந்தையின் சேவடிகள் போற்றி!**

செம்மலர் போற்றி!

செம்மொழி போற்றி!

செந்நெல் போற்றி!

**உய்யவந்த விண்ணகரப் பெருமாளே போற்றி!**

திருப்பாத வணக்க விழா ஒருமுறைதான் நிகழ்த்தப்பட வேண்டும். எனினும் **திருவோணத் திருவிழாவைச்** சிறப்பிக்கும்போது, அவ்விழா நாளில் சிறுவர்கள், சிறுமிகள் கண்ணன், பலராமன், இராமன், பரசுராமராமன், வாமனமூர்த்தி போன்ற திருமால் வேடங்கள் புனைவதும் அழகோ அழகு. மச்ச, கூர்ம. வராக வேடங்களும் அழகல்லவா. கல்கியனாய் வேடமிடுவதும் தகுமோ. தகுமெனில் பரியனாய், குதிரை முகத்தனாகவும் வேடம் தரித்துக் கொள்ளலாம். வேடங்கள் போடுவதுதற்கு வயது தடையில்லை. எனினும் அப்பா, மகன் என இருவரும் வேடங்கள் போடுவது நன்றாகவா இருக்கும். மகனுக்கு வேடம்போடும் வயது வந்துவிட்டதெனில் தந்தை மகனது வேடத்தைக் கண்டுகளிப்பதை எண்ணிப் பெருமைப்பட்டுக் கொள்ளலாமே. ஒருவேளை அப்பா விரும்பினால் தலையில் பீலியும், கையில் குழலும் வைத்துக் கொள்வது பொருத்தமன்றோ. பெண்கள் பத்து வயதுவரை வேடமிடலாம். விரும்பினால் திருமணம் வரையிலும்கூட போட்டுக் கொள்ளலாம். தாயானபின் குழந்தைகளுக்கு வேடமிட்டு மகிழலாமல்லவா. புதுமணத் தம்பதிகள் கண்ணன் -

ருக்மணியாக, சீதை - இராமனாக வேடமிட்டுக் கொள்வது பொருத்தமாகவும் அழகாகவுமிருக்கும். வேங்கடவன் - அலர்மேல் மங்கையும் பொருத்தமல்லவோ.

தேவேந்திர குலத்தாரே, நம் ஓங்கு புகழ்த் தந்தையின் திருவோணத் திருவிழாவை மகிழ்வோடும், சுற்றத்தோடும் சிறப்பியுங்கள். நம் வாமனத் தந்தைக்குப் பல்லாண்டு பாடுங்கள். திருப்பாவை பாடுங்கள். நம் பேராயன் பாதம் பணியுங்கள். நம் மாயன் செவ்வடி தாங்குங்கள். நம் உபேந்திரர் மலரடிகள் போற்றுங்கள். நம் வேங்கடக் கிருஷ்ணனை மனதில் நினையுங்கள்.

நம் திரிவிக்ரம மூர்த்தியின் திருவடிகள்

உலகை உயர்த்தும்..

நம் உலகளந்த பெருமாளின் திருப்பாதங்கள்

உலகைக் காக்கும்..

வாழிய தேவேந்திரர்; வாழிய உபேந்திரர்

**வாழிய உலகம்; வாழிய உயிர்க்குலம்!!**

குலத்தாரே,

இவை இறுதியான சடங்கு முறைகளன்று. அனைத்துமே மானுதலுக்கு உட்பட்டவை. எம் மனதில் தோன்றியதை முறைப்படுத்திக் கூறியுள்ளோம். மேலும் எண்ணங்கள் தோன்றி வளப்படுத்தும்போது இவை மேலும் வளரும். குறையாதென்பது திண்ணம். சிலவற்றை மாற்றியமைக்க வேண்டி வரலாம். அடுத்து தமிழகத்தில் நிகழ்வதற்கேற்ப எமது சிந்தையும் செயலும் மாறக்கூடும்.

இச்சடங்கு முறைகள் ஒட்டுமொத்தத் தமிழரையும் அறிந்தே, உள்வாங்கியே சுட்டப்பட்டுள்ளன. எனவே தமிழரெல்லாம் தமிழராய் திரண்டெழும்போது, சிலவற்றை, குறிப்பாக குல அடையாளங்களை விடவேண்டி வரலாம். அதற்கும் நாம் தயாராகவே இருத்தல் வேண்டும்.

நமக்கு எல்லோரும் மனித குலமல்லவா. நமக்கு எல்லோரும் ஓர் நிறையல்லவா. நாம் மறப்போமா.

34. மூத்தோர்களே, எம் நெஞ்சில் கனலாற் இருக்குமோர் எண்ணம் இலங்கைத் தமிழருக்காய்த் தங்கள் இன்னுயிரை மாய்த்துக்கொண்ட அந்த அறத்தமிழர்களைப் பற்றியது. இலங்கையில் வாழும் தமிழர்கள் மொழியால் உறவுடையவர்கள். தொப்புள் கொடி உறவுள்ளவர். எனினும் தனிப்பட்ட முறையில் அவர்களை அறிந்திலர். இவர்களது குருதிவழி உறவினரும் அல்லர். இருந்தும் அம்மக்களின் நல்வாழ்விற்காக, பெரிதினும் பெரிதான, அரிதினும் அரிதான தங்கள் உயிரையே கொடுத்தார்கள் எனில், அது எத்தனை பெரிய தியாகம்.

எமது தனிப்பட்ட முறையில் யாம் இவற்றை ஆதரிக்கவில்லை. எம்மைப் பொருத்தவரை இவர்கள் வேறுவழிகளில் போராடியிருக்கலாம். தந்தையாம் காந்தியின் வழி நல்வழியல்லவா. உயிரை மாய்த்ததற்குப் பதிலாக, இலங்கைத் தமிழருக்கு சேவை செய்வதே தம் வாழ்நாள் குறிக்கோளாய்க் கொண்டிருக்காலம். பிற எத்தனையோ வழிகளில் தங்களது போராட்டத்தை, உதவியை, சேவையை வழங்கியிருக்கலாம். இலங்கைச் சொந்தங்களுக்காய் வதையுண்டு இறந்தது கொடுஞ்செயல். தம் உயிரைவிட பிறரது நலனே மேலானது என முடிவெடுத்த இவர்களது செயல்களை அருஞ்செயல் என்றுதான் உரைக்க வேண்டும். அது நடந்துவிட்டது. இனி அது அருஞ்செயல் எனவே கருதப்பட வேண்டும்.

இலங்கைத் தமிழருக்காய் தங்களது இன்றுயிரைத் தந்தவர்கள் என பலரது பெயர்கள் இணையத்தில் சுட்டப்பட்டுள்ளன. பலரும் கடிதமொன்றை எழுதிவிட்டே உயிரை மாய்த்திருக்கின்றனர். கடிதம் எழுதாமல் இலங்கைத் தமிழருக்காய் உயிரை மாய்த்தார் எனில் அது உண்மையிலேயே இலங்கைத் தமிழருக்காகத்தானா என்பதைத் தெளிவாக்கவேண்டும். தீர விசாரித்து உறுதிப்படுத்த வேண்டும். ஏனெனில் இவர்களது தியாகத்தை நினைவு கூறும் விதமாக, அன்னார்களது தியாகத்தைப் போற்றும் விதமாக, ஒரு ஆண்டுக் காலத்திற்கு இவர்களுக்கு சடங்கொன்று நிகழ்ந்தப்பட வேண்டும். எனில், உண்மையான தியாகிகள் பெயரே சடங்கு நெறிகளில் இடம்பெற வேண்டும்.

சடங்கு நெறிகளை அனைத்துத் தமிழர்களும் ஒன்றிணைந்து செய்வது சிறப்பு. அந்நிலை வருமென உறுதியாய் நம்புகிறோம். இல்லையெனில், தேவேந்திர

குலத்தவர் ஒன்றிணைந்து இச்சடங்கு முறைகளை ஓராண்டு காலத்திற்கு நிகழ்த்துக.

இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டின் ஜனவரி மாதம் தொடங்கி, முள்ளிவாய்க்கால் நிகழ்வுக்கு முன்வரையிலும் பலர் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். இவர்களது பெயர்களை இங்கே யாம் குறிப்பிடவில்லை. விக்கிபீடியா தளத்தில், குறிப்புகளும் பிற இணைய தளங்களில் விரிவான செய்திகளும் இடம் பெற்றுள்ளன. அவர்களது பெயர்களைக் கண்டறிக. தமிழ் நாட்டிலும், மலேசியா, சுவிட்சர்லாந்து, கனடா என பிற நாடுகளிலுமாக, பதினெட்டுப் பெயர்கள் வருமெனத் தெரிகிறது. தொன்னூற்றி ஐந்தாமாண்டில் அப்துல் ரவூப் அவர்கள் உயிர்த் தியாகம் செய்ததாக குறிப்புகள் சுட்டுகின்றன. எனில் அவருக்குச் சடங்குகள் செய்யலாமா என அவரது குடும்பத்தாரிடம் விளக்கமும் சம்மதமும் பெறுவது அவசியம். அவர்களுக்கு ஒப்பும் எனில் மட்டுமே அவரின் பெயரை சடங்கு முறைகளில் சேர்க்க வேண்டும். அவ்வாறே சிறையிலிருந்த மூன்று இலங்கைத் தமிழர்க்காக உயிர்த்தியாகம் செய்த செங்கொடியையும் சேர்க்க வேண்டுமா என்பதையும் தீர்மானிக்க வேண்டும். அன்புத்தோழி செங்கொடி இலங்கைத் தமிழருக்காய் தொடர்ந்து பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டதாய்ச் செய்திகள் சுட்டுகின்றன எனில் அவரது தியாகமும் போற்றுதலுக்குரியதே.

தம் இனத்தின் நல்வாழ்விற்காக, இளவயதுகளில் தங்கள் நல்லுயிரை ஈந்த நம் உறவுகளின் உயிர்க்கொடை ஈடுஇணையற்ற தியாகம். எனில் நம் தியாகிகள் தெய்வங்களுக்கு ஒப்பாவர், தெய்வமேயாவர். கொடிய வேதனையையும் பொருட்படுத்தாது உயிர் கொடையளித்த நம் தெய்வங்களுக்கு நாம் பெருஞ்சிறப்புச் சேர்க்க வேண்டும். அவர்கள் தியாகம் தமிழ்ச் சமூகத்தில் என்றும் நினைவில் நிறுத்தப்பட்டவும் வேண்டும்.

இப்படி யாம் புகழ்மொழிகள் கூறுவதையும், அவர்கள் தெய்வத்திற்கு நிகரானவர்கள் எனக் குறிப்பிடுவதையும் நினைத்து, யாம் இப்படியான உயிர்த்தியாகங்களை ஆதரிப்பதாகவும், வரும் காலத்தில் மேலும் இவ்வாறு நிகழ்த்தலாம் எனவும் தமிழர் உட்பட எந்த மனிதரும் நினைக்கக் கூடாது, செயல்படக் கூடாது. எமது ஆசான் தந்தையாம் காந்தியே. எமது வழிமுறை கடைசிவரைப் போராடுவது. எமது வழி காந்திய வழி, எமது வழி புத்தன் வழி, எமது வழி அறிவின் வழி. யாம் இப்படியான உயர்த்தியாகங்களை ஆதரிக்கவில்லை.

எனினும் எம் காலத்தில் இது நிகழ்ந்து விட்டதால், அந்த தியாகத்தை மதிக்க வேண்டியதும் கடமையாகிறது. அவர்கள் தமக்கென, தம் குடும்பத்திற்கெனவா மாண்டார்? தம் சுயநலத்திற்காக மாண்டாரா? அவர் செய்தது சிறந்த பொதுநலமல்லவா. எம் வார்த்தை கேட்டால், தியாகிகள் தமிழரின் பொதுநலத்தை தவறாகக் கணித்துவிட்டாரென்றே சொல்வோம். அவர்கள் எம்காலத்துத் தமிழரின் சுயநலம் என்னவென்பதை அறியாத இளைஞர்கள். தமிழ், தமிழினம் என செய்திகளில் பார்த்து, மனம் பதறித் துடித்த எளியவர்கள். நல்மனம் கொண்டோர். தம் இறப்பு தமிழகத்தில் பெரிய ஆதரவைப் பெறும், அரசியல் மாற்றம் நிகழும், இலங்கைத் தமிழர் வாழ்வில் மாற்றமும், ஏற்றமும் வரும் என்றெல்லாம் அருங்கனவு கண்டவர்கள். தியாக சீலர்களின் அருங்கனவு பலித்ததா, அவர்களது தியாகங்களுக்கு தமிழ் நிலத்தில் என்ன மரியாதை கிடைத்தது என்பது இங்கே வரலாறாய் இருக்கிறது. அதை வைத்தே தமிழரை எடைபோட்டுக் கொள்ளலாம், தமிழர் சுயநலமுடையவரா, பொதுநல முடையவரா என்பதை.

இங்கு யார் தமிழர் என்பதும், யார் தமிழராய் வாழ்கிறார் என்பதும் பெரிய கேள்வி. தம் சுகம், தம் குடும்ப நலம், தம் சுற்றத்தார் வளம் என மட்டுமே வாழும் சுயநலத் தமிழர்கள் நிறைந்திருக்கும் தமிழ்நாட்டில், இப்படியொரு மாபெரும் தியாகத்தைச் செய்வதற்குமுன் சற்றே நினைத்துப் பார்த்திருக்க வேண்டாமா இந்த தியகசீலர்கள். தமிழர் எனும் போர்வையில், தமிழர் எனும் முகமூடியில் இங்கு யார் யாரோ வாழ்கிறாரே. அறியவில்லையோ இந்த தவசீலர்களுக்கு. இங்கு போலியான தமிழறிஞர்களும், மட்டமான தமிழ்ச் சிந்தனையாளர்களும் நிறைந்துள்ளனர் என்பதைத் தெளியவில்லையா இந்த அறசீலர்கள். எதற்கு இப்படியொரு தியாகம்? நெருப்பறியுமா இவர் அறத்தார், இவர் தியாகத்தார், இவர் நல்லோர், இவரை எரிக்க வேண்டாமென. எத்தனை பேர், எத்தனையாயிரம் பேர் இந்த ஒப்பற்ற தியாகத்தைக் கண்டு கண் பதறினார், மனம் வருந்தினார்? அவரவர் அவரவர் கருமங்களை, தொழில்களைச் செய்தார்.

உத்தமசீலர்களின் அருஞ்சிறப்பை சிந்தியுங்கள் பேரினத் தமிழர்களே. எந்த முடிவை எடுப்பதற்கு முன்னும் சற்றே சிந்தித்து, தெளிந்து, ஆராய்ந்து, அறிந்து, காலத்தை முன்னும் பின்னும் நோக்கி முடிவெடுங்கள்.

சாத்தூர் - கோவில்பட்டி இடையே, கன்னியாகுமரி - ஸ்ரீநகர் நெடுஞ்சாலையிலிருந்து கிழக்கே, ஒன்றுமுதல் இரண்டு கிலோமீட்டர்

தூரத்திற்குள்ளாக தமிழினத்திற்காக ஆகப்பெரும் தியாகம் செய்த இந்த அறவர்களுக்கு **“ஒப்பற்ற அறவர் கோவில்”** அமைக்கப்பட வேண்டும். இரு நகரங்களுக்குமிடையேயான தூரம் 25 கி.மீ. என கூகுள் சுட்டுகிறது. எனில் சாத்தூரிலிருந்து 12 மற்றும் 14 வது கி.மீ. க்கு இடைப்பட்ட தூரத்தில், இக்கோவில் அமையலாம். மிகச் சரியாக பன்னிரெண்டரை கி.மீ. என அமைய வேண்டியதில்லை. எனினும் 12 கி.மீ- க்குக் குறையக் கூடாது. 14 கி.மீ- க்கு மிகக் கூடாது.

ஒப்பற்ற அறவர் கோவில் வட்ட வடிவில் அமைக்கப்பட வேண்டும். கோவிலின் மையப்புள்ளியிலிருந்து சரியாக 180 அடிகள் தூரத்திற்கு அதாவது 360 அடிகள் சுற்றளவில் அறவர் கோவில் அமைய வேண்டும்.

அறவர் கோவிலில் மொத்தம் ஒன்பது சுற்றுகள் அமைக்க வேண்டும். தரைதளம், சீராக சமமாகப்பட்டபின், தரையிலிருந்து மூன்று அடி உயரத்திலும், தரையிலிருந்து மூன்றடி ஆழத்திலும் மாறி மாறி இந்தச் சுற்றுகள் அமையும். பத்தாவது சுற்றானது வெளியே தரைக்குச் சமமான அளவில் அமையும்.

எனில் மையச் சுற்றின் சுற்றளவு 8 அடிகள், எனில் மையப் புள்ளியிலிருந்து எட்டு அடிகள் தள்ளி, வட்ட வடிவில், மூன்று அடிகள் உயரத்தில் இந்த மேடை அமையும். இந்த உள்மேடையே முதன்மையானது. இதனைச் சுற்றியே பிற மேடைகள் அமையும்.

உள் மையமேடையில் இலங்கைத் தமிழருக்காய் நல்லுயிரை ஈந்த அறவோர் நினைவாக மூன்று நடுகற்கள் தென்திசை நோக்கி நடப்பட வேண்டும். அறவர் கோவிலின் மையக்கல் அறவாளர் சீகம்பட்டி கிருஷ்ணமூர்த்திக்கு. மையக்கல்லுக்கு வலதுநடுகல் அறவாளர் முத்துக்குமாருக்கு. இடதுநடுகல் சுவிட்சர்லாந்தின் பன்னாட்டு அவை முன்றலில் தமதுயிரை நல்கிய அறவாளர் முருகதாசனுக்கு.

அறவாளர் கிருஷ்ணமூர்த்தி நடுகல்லின் உயரம் 60 செ.மீ. கிடைநீளம் 18 செ.மீ. அகலம் 24 செ. மீ.

அறவாளர் முத்துக்குமார் நடுகல் - உயரம் 60 செ. மீ. கிடைநீளம் 24 செ.மீ. அகலம் 18 செ.மீ.

அறவாளர் முருகதாசன் நடுகல்லின் உயரம் 60 செ.மீ. கிடைநீளம் 18 செ.மீ. அகலம் 18 செ.மீ.

மூன்று நடுகற்களும் மேடையில் 12 செ.மீ ஆழத்தில் ஊன்றப்பட வேண்டும். எனில் நடுகற்களின் உயரம் மேடைக்கு மேலே 48 செ.மீ. என இருக்கும். மைய நடுகல்லிலிருந்து தலா 32 செ.மீ. தள்ளி இருபுறத்தும் மற்ற நடுகற்கள் ஊன்றப்பட வேண்டும்.

கிருஷ்ணமூர்த்தியின் நடுகல் குஜராத்திலிருந்து பெறப்பட வேண்டும். வெள்ளை வண்ணத்தில் கிரானைட் கல்லாக இருக்க வேண்டும். முத்துக்குமாருக்கான நடுகல் கருப்பு நிறமாக இருக்க வேண்டும். கல்லை தமிழ்நாட்டிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். முருகதாசனுக்கான நடுகல் சுவிச்சர்லாந்திலிருந்து பெறுவது சிறப்பு. அங்கே எந்தமாதிரியான வண்ணத்தில் கல் கிடைக்கிறதோ அதையே வைத்துக் கொள்ளலாம்.

நடுகற்களை ஊன்றும்முன் மூவரும் இன்னுயிரை நல்கிய இடத்திலிருந்து மண் எடுத்து வந்து நடுகல் குழியினுள் போட்டு அதன்மீது நடுகல் நடலாம். இவர்கள் மூவரும் உடல் பற்றி எரிந்தபோது அங்குமிங்கும் அலைந்திருப்பர். மண் எடுப்பதாயின் அந்த இடத்தை, இடங்களை அறிந்தோரிடம் கேட்டு, அந்த இடத்திலிருந்து, இடங்களிலிருந்து மண் எடுப்பது அவசியம். எனில், இரண்டுபடி மண் எடுத்துக் கொள்ளலாம்.

மண் போட்டபின், அதன்மேல் முத்துக்குமார் நடுக்கல்லில் 334 ஒரு கிராம் பொற்காசுகளும், 333 பத்துக் கிராம் வெள்ளிக் காசுகளும், 333 முத்துக்களும் இட வேண்டும். பவளங்கள், மரகதம் போன்ற பிற அருமணிகளை ஒரு கைப்பிடி கையால் அள்ளிப் போட வேண்டும். அவற்றை எண்ணிப் போடக் கூடாது. தானிய வகைகளும் அள்ளிப் போட வேண்டும்.

கிருஷ்ணமூர்த்திக்கு ஒரு முத்து கூடுதலாகவும், முருகதாசனுக்கு ஒரு வெள்ளிக் காசு கூடுதலாகவும், மற்றவை 333 எனும் அளவிலும் இருக்க வேண்டும். எனில் மூவருக்கும் 344, 333, 333 என மொத்தம் ஆயிரம் எண்ணிக்கை வரும். இந்த எண்ணிக்கையில் கவனம் கொள்வது அவசியம். உள்ளே போடுவதற்கு முன்பே சரிபார்த்துக் கொள்வது நல்லது. போடும்போது ஒவ்வொன்றாக அல்லாமல் மொத்தமாகவே போட்டு விடலாம்.

நடுகல் ஊன்றப்படும் நடுமேடையில் எண்திசைகள் சுட்டப்பட வேண்டும். திசைகள் குறிக்கப்பட்டபின், கிழக்கு, மேற்கு, வடக்கு திசை எல்லைகளில் அதாவது மையப்புள்ளியிலிருந்து சரியாக 180வது அடியின் முடிவில் நான்குக்கு நான்கு அடி எனும் சதுர அளவில் தரையில் நான்கு வலம்புரி வெண்சங்குகள் பதியப்பட வேண்டும். தெற்குத் திசையில் இரண்டு அடிகள் அளவுகொண்ட ஆறுகோண வடிவத்தில் ஆறு சங்குகள் பதியப்பட வேண்டும்.

வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்குத் திசைகளின் 180வது அடி எல்லையில் ஒவ்வொரு பகுதியும் இரண்டடி அளவுகளில் எண்கோணங்கள் அளக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியிலும் ஒரு வலம்புரி சங்கு என மொத்தம் எட்டு சங்குகள் பதிய வேண்டும். எனில் மொத்தமாக வட்டத்திற்குள் 50 சங்குகள் பதியப்பட்டிருக்கும்.

மைய நடுகல் மேடையின் வடமேற்கு, வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்குத் திசைகள் என நான்கு தூண்கள் 18 அடி உயரத்திற்கு எழுப்பப்பட வேண்டும். தூண்கள் இரண்டு அடி கன சதுரமாக இருப்பது நல்லது. தூண்கள் மேலும் கீழும் தாமரையால் தாங்கப்படுவது போன்று வடிக்கப்படுவது சிறப்பு. ஒரு அடி இடைவெளியில் ஒரு தாமரைப் புடைப்பு என அமைப்பதும் சிறப்பு.

உள்வட்டத்தின் முடிவிலிருந்து 10 அடி தூரத்திற்கு தரைத்தளத்திலிருந்து 3 அடிகள் பள்ளம் தோண்டி அடுத்த அடுக்கை உருவாக்க வேண்டும். இவ்வாறு அடுத்தடுத்த அமைய வேண்டிய அடுக்குகளின் தூரங்கள் - உள் அடுக்கிலிருந்து 8, 10, 14, 12, 18, 16, 24, 30 மற்றும் 48 அடிகள். இவற்றுள் 8, 14, 18, 24 மற்றும் 48 அடிகள் தரையிலிருந்து மேடைகளாக அமையும். 10, 12, 16 மற்றும் 30 அடிகள் தரையிலிருந்து பள்ளங்களாக அமையும்.

எனில், இரண்டாவது மேடை 14 அடிகள் கொண்டதாக இருக்கும். இம்மேடையில் 8 தூண்கள் இடம் பெற வேண்டும். தூரத்திற்கேற்றவாறு தூண்களின் கனஅளவை வைத்துக் கொள்ளலாம். எனினும் தூண்கள் சதுர அளவானதாகவே அமைக்கப்பட வேண்டும். மேடையின் உயரம் 14 அடிகளாக இருக்க வேண்டும். தூண்களில் ஒவ்வொரு இரண்டடிப் புடைப்பிலும் நான்கு பக்கங்களிலும் கிளிகள் இடம்பெறலாம்.

அடுத்த மேடை 18அடிகள் அகலத்தில் அமையும். இம்மேடையின் உயரம் 12 அடிகள். தூண்களின் எண்ணிக்கை 16. தூண்களின் ஒருஅடி இடைவெளியில் அமையும் புடைப்புகளின் நான்கு திசைகளிலும் மயில் சின்னம் அமைய வேண்டும்.

அடுத்த மேடை 24 அடிகள் அகலம் கொண்டதாக இருக்கும். மேடையின் மீது 10 அடிகள் உயரத்தில் 32 தூண்கள் இடம் பெறும். தூண்களின் புடைப்புகளில் கருடன் சின்னம் இடம்பெற வேண்டும்.

வெளிச்சுற்று மேடை 48 அடிகள் அகலத்தில் அமையும். தூண்களின் உயரம் 18 அடிகள். தூண்களின் எண்ணிக்கை 64. தூண்களின் ஒவ்வொரு இரண்டுஅடி இடைவெளியிலும், இரண்டு அடிகள் புடைப்பு உருவாக்கப்பட வேண்டும். புடைப்பின் தெற்குப் பகுதியில் மீன் சின்னமும், வடக்கில் சிங்கமும், கிழக்குப் புலியும், மேற்கில் வில், அம்பும் இடம்பெற வேண்டும்.

தூண்களை அமைக்கும்போது உள்மேடையிலிருந்து கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என அமைக்கப்படும் நான்கு அடிகள் பாதையில் அதாவது உள்மேடையிலிருந்து வெளிச்சுற்று வரைக்குமான நான்குஅடி இடைவெளியில் எந்தத் தூணும் இடம்பெறக் கூடாது. எனில் உள்மேடையிலிருந்து வெளிச்சுற்றும் 180 அடிகள் வரையிலும் நான்கு அடிகள் இடைவெளியில் பாதையொன்று இருக்கும். அதாவது நான்கு சதுரங்களில் பதியப்படும் சங்குகள் வரை. இதற்கேற்பவே தூண்கள் அமைக்கப்பட வேண்டும். தூண்கள் ஒற்றையாக அமைக்க முடியுமெனில் அவ்வாறே அமைக்கலாம். மேற்கூரையைத் தாங்கும் விதத்தில் அவற்றின் கனஅளவைத் தீர்மாணித்துக் கொள்ளலாம். கட்டிடப் பொறியாளர்கள் நன்கறிவார்கள். அவர்களது வழிகாட்டலில் அறவர் கோவிலை அமைக்கலாம். ஒரு சிறிய மைதானம் அளவிற்கு இக்கோவில் அமையும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அறவர் கோவிலில் தரையிலிருந்து மூன்று அடிகள் பள்ளத்தில் உள்ளிருந்து முறையே 10, 12, 16, 30 அடிகள் அகலத்தில் நான்கு திசைப் பாதைகளிலும் 4 அடிகள் அகலத்தில் இணைப்புப் பாதையொன்று உருவாக்கப்பட வேண்டும். பள்ளத்தைக் கடக்க படிகள் அமைக்கப்படக் கூடாது. தரைப்பாலம்போன்று பாதை அமைக்கலாம்.

நடுகல் மேடையைச் சுற்றியிருக்கும் முதலாவது பள்ளத்தில் புற்கள் வளர்க்க வேண்டும். முதலாவது பள்ளம் பசுமையாக இருப்பது நல்லது.

இரண்டாவது பள்ளத்தில் நீர் நிரப்பப்பட்டு நீரில் வளர்ப்பு மீன்கள், வண்ண மீன்கள் இடம்பெறுமாறு செய்யலாம். எனில் வாரத்திற்கு ஒருமுறை பழையநீரை அகற்றவும், புதுநீரைப் பாய்ச்சவும் வசதிகள் அமைக்க வேண்டும். மின் மோட்டார் இணைப்பு தேவைப்படும்.

மூன்றாவது பள்ளத்தில் அதாவது 16 அடிகள் அகலம் கொண்ட பள்ளத்தில் பல்வேறு விதமான மூலிகைச் செடிகளும் வளர்க்கலாம்.

நான்காவது 30 அடிகள் பள்ளத்தில் பல்வேறு விதமான பூச்செடிகளை நட்டுப் பராமரிக்கலாம். பூச்செடிகளை ஒரு தொகுப்பாக வளர்க்க வேண்டும். உதாரணமாக ரோஜாச் செடிகளை ஒரு தொகுப்பாக நடலாம். அவற்றுள்ளும் சிகப்பு, வெள்ளை என பல்வேறு வண்ணங்கள் கொண்ட ரோஜாக்களை ஒவ்வொரு தொகுப்பாக வளர்க்கலாம். அவ்வாறே மல்லிகை, முல்லை போன்ற மலர்ச் செடிகளும். செடிகளின் உயரத்தில் கவனம் வேண்டும். மூன்றுஅடி மேடையைத் தாண்டி வளராததுபோல் அல்லது ஒருஅடி கூடுதலான உயரம் உள்ளது போல் இருக்கலாம். பூச்செடிகளின் உயரத்தில் கவனம் வேண்டும்.

அறவாளர் முத்துக்குமார் 29.01.2009 அன்று பகல் 10. 48 - 11. 00 மணியளவில் உயிர்த் தியாகம் செய்துள்ளார். அவரை ஆரம்பம் எனக் கொண்டால், பிப்ரவரி 2009 தொடங்கி அதாவது பள்ளப்பட்டி ரவி (02.02.2009) முதல் ஏப்ரல் 2009வரை அதாவது சுப்ரமணி (23.04.2009) வரை நிறையப்பேர் உயர்த் தியாகம் செய்துள்ளனர். அறவாளர் கிருஷ்ணமூர்த்தி 18.04.2011 அன்று காலை ஐந்துமணிக்கு உயிர்த்தியாகம் செய்துள்ளார். சுவிட்சர்லாந்தில் அறவாளர் முருகதாசன் 12.02.2009 அன்று இரவு 8 - 15 மற்றும் 9 - 45 க்கு இடைப்பட்ட நேரத்தில் உயிர்த் தியாகம் செய்துள்ளார். அதாவது இந்த நேரங்களில் அவர்கள் உடலில் நெருப்பு வைத்திருக்கின்றனர்.

எனில், உயிர்த் தியாகம் செய்தோரை மூன்று தொகுப்பாக வைத்துக் கொள்ளலாம். பிப்ரவரி 2009, மார்ச்சு 2009 மற்றும் ஏப்ரல் 2009. சரியெனில், முத்துக்குமார் நடுகல்லின் முன்பக்கத்தில் தமிழில் அவரது பெயரைப் பொறித்து கீழே அடைப்புக்குள் பிறந்த தேதி மற்றும் மறைந்த தேதியை பொறிக்கலாம்.

நடுக்கல்லின் பின்பக்கத்தில் 2009, பிப்ரவரி மாதம் உயிர்த்தியாகம் செய்தோரின் பெயர்களைப் பெறிக்கலாம்.

முருகதாசன் நடுக்கல்லில் முன்புறம் அவரது பெயர், பிறப்பு, மறைவு தேதிகளும், 2009 மார்ச் மாதம் உயிர்த் தியாகம் செய்தோரின் பெயர்களை நடுக்கல்லின் பின்புறத்தில் பொறிக்கலாம்.

அவ்வாறே கிருஷ்ணமூர்த்தியின் நடுக்கல்லின் முன்புறம் அவரது பெயர், பிறப்பு, மறைவு தேதிகளும், பின்புறம் 2009 ஏப்ரல் மாதத்தில் உயிர்த்தியாகம் செய்தோரின் பெயர்களும் பொறிக்க வேண்டும். பெயர்களில் இறுதியில் 29.08.2011 அன்று உயிர்த் தியாகம் செய்த செங்கொடியின் பெயர், பிறப்பு, மறைந்த தேதியோடு இடம்பெற வேண்டும். செங்கொடிக்கு ஏற்கனவே கோவில் ஒன்று எழுப்பப்பட்டுள்ளதாக சில பதிவுகள் சுட்டுகின்றன. அது உண்மையெனில், நடுக்கல்லில் அவரது பெயர் இடம்பெற வேண்டாம்.

கிருஷ்ணமூர்த்தியின் நடுக்கல்லில் அவருக்கு முன்பாகவே உயிர்த்தியாகம் செய்தோரின் பெயர்கள் இடம்பெறுவது சரியாக இருக்காதெனில், 2009 இல் உயிர்த்தியாகம் செய்தோரை இரு தொகுப்பாகப் பிரித்து, முத்துக்குமார் மற்றும் முருகதாசன் நடுகற்களின் பின்புறத்தில் பொறித்துக் கொள்ளலாம். இது குறித்து பெரியவர்களிடம் கலந்து பேசி முடிவெடுத்துக் கொள்ளலாம். எம்மைக் கேட்டால் மூன்று தொகுப்பாகவே பெயர்களைப் பதிந்து கொள்ளலாம் என்போம். இதில் எமதெண்ணமே முடிவாக இருக்க வேண்டியதில்லை.

மையத்திலிருந்து நாற்புறமும் 180 அடிகள் தூரத்தில் அமையும் நான்கு திசைகளின் நாற்சதுர சங்குகளைத் தொடர்ந்து, ஒருஅடி இடைவெளியில் ஏழு கோடுகள் அமைக்கப்பட வேண்டும். அதாவது ஒவ்வொரு அடி தூரத்திலும் சிறு பள்ளமொன்று வட்டமாக அறவர் கோவிலைச் சுற்றிலும் அமைக்க வேண்டும். பள்ளம் கொஞ்சம் சுண்ணாம்பு கொட்டிவைக்கும் அளவிற்கு சிறுபள்ளமாக இருந்தால் போதும். குளிர், கோடை காலத்திலேயே சுண்ணாம்பு போடமுடியும். மழைக்காலத்தில் போடமுடியாது. எனில் மழைக்காலத்தில் அந்த சிறிய பள்ளத்தில் பதியுமாறு சுண்ணாம்பில் மூழ்கி எடுத்து காயவைக்கப்பட கொச்சக் கயிறு (தென்னை நார்கயிறு) இடம்பெற வேண்டும். கயிறு அந்தப் பள்ளத்திற்குள் முழுமையாகப் பதிய வேண்டும். சரியான வட்டத்தில் தொடர்ச்சியாகவும் இருக்க

வேண்டும். இதற்கேற்ப கொச்சக் கயிறுகளை சிறப்பாக உருவாக்கிக் கொள்வது நல்லது. இரவில் மட்டுமே சுண்ணாம்பு அல்லது சுண்ணாம்பில் மூழ்கப்பட்ட கொச்சம். பகல் பொழுதில் தேவை இல்லை. எனில் கொச்சக் கயிறுகளை கவனமாகச் சுருட்டி வைப்பது முக்கியம். எனில் முழுக் கோவிலையும் ஏழு சுற்றுக்களில் சுற்றுமாறு ஏழு சுற்றுக் கொச்சங்கள் தேவைப்படும்.

அறவர் கோவிலின் கிழக்குப் பகுதியில் சங்கு பதிக்கப்பட்டு, அதற்கடுத்து ஏழு அடிகளில் ஏழு சுற்றுக்கள் சுண்ணாம்புக் கோடுகளுக்கு அடுத்து, நான்கு அடிகள் நீள, அகல, உயரத்தில் மேடையொன்று அமைக்கப்பட வேண்டும். மேடைக்கு மேலே எட்டுஅடி உயரத்திற்கு அதன் நான்கு முனைகளிலும் 18 செ. மீ. கனஅளவிற்கு நான்கு சதுரதூண்கள் அமைக்கப்பட்டு, அதற்கு மேலே மேற்கூரை எட்டு அடிகள் சுற்றளவில் அமைக்க வேண்டும். மேடையின் நடுவின், கிழக்குத் திசையை நோக்கியவாறு புத்தரின் சிலையொன்று இடம்பெற வேண்டும். சிலை புதிதாகச் செய்யப்படாமல் சமீபகாலத்தில் பூமியிலிருந்து கண்டெடுக்கப்பட்டு கோவில்களிலோ, அருட்காட்சியகங்களிலோ இடம்பெற்றிருக்கும் புத்தர் சிலையை நிறுவிக் கொள்ளலாம். நான்கு அடி பீடம் என்பதால், சிலை இரண்டடி அகலத்தில் நான்கடி உயரத்தில் இடம்பெறுவது சிறப்பு.

வடக்குத் திசையில் சங்கு, ஏழு கோடுகளை அடுத்து, எட்டு அடிகள் நீள, அகல உயர பீடத்தில் நான்கு அடிகள் உயரம் கொண்ட அனுமன் கற்சிலையொன்று இடம் பெற வேண்டும். சிலை வலது கையில் கதையை தோளில் அணைத்தவாறும், இடது கையில் சஞ்சீவ மலையைத் தூங்கியவாறும், வலது காலை நீட்டி, இடது சாலை சற்றே மடித்தவாறும் இடம்பெறுவது சிறப்பு. அதாவது சஞ்சீவ மலையைத் தூக்கிக் கொண்டு புறப்படத் தயரான நிலையைச் சுட்டுமாறு சிலையின் அமைப்பிருப்பது நல்லது. எட்டு அடி பீடத்தின் மேல் பத்தடி உயரத்தில் கூரை அமைக்கப்பட வேண்டும். கூரையின் பரப்பு பதினெட்டு அடிகளாக அதாவது கூரையின் நாற்புறமும் எட்டுஅடிகள் நீட்சி கொண்டதாக அமைக்கப்பட வேண்டும்.

அறவர் கோவிலின் மேற்குப் பகுதியில், சங்கு, சுண்ணக் கோடுகள் தாண்டி, மூன்றுஅடி உயர மேடையில், பத்தடி நீள அகலத்தில் நவக்கிரகங்கள் இடம் பெற வேண்டும். மேடையின் நாற்புறமும் ஒருஅடி கனஅகலத்தில் நான்கு தூண்கள் 14 அடிகள் உயரத்தில் அமைக்கப்பட வேண்டும். மேற்கூரை சுற்றிலும் ஆறுஅடிகள் நீட்சி கொண்டதாக அமைக்கலாம்.

தெற்குத் திசையில், ஏழு சுற்றுக்கள் தாண்டி, இருபத்து நான்குஅடி உயரத்தில் கல்தம்பம் ஊன்ற வேண்டும். கல்தம்பத்தின் கீழ்பகுதியில் நான்கடியில் புடைப்பாக வடக்கில் சக்கரமும், தெற்கில் சங்கும், கிழக்கில் சூரியனும் மேற்கில் சந்திரனும் இடம்பெற வேண்டும்.

அறவர் கோவிலின் இறுதிச்சுற்றான 48அடி மேடையின் தெற்குப் பகுதியில் மட்டும் சமதளத்திலிருந்து அதாவது தரையிலிருந்து மேடையில் ஏறுவதற்கு இரும்பாலான நான்கு படிகள் கொண்டு படிக்கட்டு அமைப்பு இருக்க வேண்டும். படிக்கட்டுகள் இரவில் அகற்றுவதற்கேற்றவாறு தற்காலிகமானதாக அதாவது காலையில் அங்கே வைத்து இரவில் எடுத்து விடுமாறு அமைக்க வேண்டும்.

மற்றவர் நல்வாழ்விற்காக தமது உயிரைத் தியாகம் செய்த இவர்கள் தெய்வங்களே. எனில் தெய்வங்களுக்குரிய பூசைமுறைகளை நடுகற்களுக்கும் அளிக்கலாம். எனில் காலையில் நடைதிறப்பது முதல், இரவில் நடைஅடைப்பது வரை தெய்வங்களுக்குரிய வழமையைப் பின்பற்றலாம்.

நடுகற்கள் ஊன்றிய நாளிலிருந்து அடுத்து வரும் ஒருவருட காலத்திற்கு இந்த சடங்கு முறைகளைப் பின்பற்றலாம். அறவர் கோவிலின் நாள்பூசை காலை 4.10 மணிக்கு தொடங்கப்பட வேண்டும். இரவு 10.10 மணிக்கு கோவில் சாத்தப்பட வேண்டும். அதாவது இரவு 10.10 மணிக்கு சாத்தப்பட வேண்டும். அதாவது இரவு 10.10 மணிக்கு தெற்கு வாயிலின் படிக்கட்டு அகற்றப்பட்டு, தம்பத்தின் முன்பாக பூசணி உடைத்து சூடம் ஏற்றுவதோடு அன்றைய நாள் முடிவுற வேண்டும். அவ்வாறே காலையில் தம்பத்தின்முன் சரியாக 4.10 மணிக்கு பூசணி வைத்து சூடமேற்ற வேண்டும். காலையில் சூடமேற்றும்போது பாரதியின் ‘‘வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி வாழிய வாழியவே’’ பாடல் பாட வேண்டும். பாடலை ஒலிபெருக்கியிலும் போடலாம். அறவர் கோவிலின் நாட்களை இப்பாடலைத் துவக்கமாகக் கொண்டே துவங்க வேண்டும். இரவு முடிக்கும்போது, பாரதிதாசனின் ‘‘தமிழுக்கும் அமுதென்று பேர்’’ பாடல் ஒலிக்க வேண்டும். இந்த இரண்டு பாடல்களுக்கும் இடைப்பட்ட காலமே அறவர் கோவிலின் ஒருநாள்.

அறவர் கோவிலுக்கான சடங்கு முறைகளில் தினமும் இரண்டு ஊர்கள் இடம்பெற வேண்டும். ஒரு ஊர் அதிகாலை முதல் நண்பகல் வரையிலும், அடுத்த ஊர் நண்பகல் முதல் இரவுவரையிலும் அன்றைக்கான சடங்கு முறைகளுக்கும்,

கோவில் வழிபாட்டு முறைமைகளுக்கும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். அறவர் கோவிலுக்கு சிறப்புச் சேர்க்கும் ஊர்களை விருப்பத்தின் அடிப்படையிலேயே தேர்வு செய்ய வேண்டும். தமிழ் நிலத்தின் முழுப்பகுதியிலிருந்தும் ஊர்களைத் தேர்வு செய்யலாம். எனினும் கோவில் அமைந்திருக்கும் பகுதி தெற்கே மிகவும் தள்ளி அமைந்திருப்பதால் வடக்கு, மேற்கு மாவட்டங்களைச் சேர்ந்தோருக்கு வந்து செல்வது சிரமமாக இருக்கும். அதைக் கருத்தில்கொண்டு, ஒரு ஆண்டிற்கான அறவர் கோவில் வழிபாட்டு முறைகளுக்கு விருப்பமான ஊர்களை திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டகளைச் சேர்ந்த ஊர்களை மட்டுமே தேர்வு செய்வது பொருத்தமானது. எனில் இம்மூன்று மாவட்டகளிலிருந்து எழுநூற்றி முப்பது ஊர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும். ஏதேனும் ஒரு ஊர்க்காரர்கள் தவிர்க்க இயலாத சூழ்நிலையில் வர இயலவில்லையெனில் அதை ஈடுசெய்யும் விதமாக கூடுதலாக அதாவது இருப்பாக (ரிசர்வ்) முப்பது ஊர்களைத் தேர்வு செய்து கொள்ளலாம். எனில் மொத்தம் 760 ஊர்களின் பெயர்கள் தயாரிக்கப்பட்டு, ஒரு நாளைக்கு எந்த இருஊர்கள் என்பதை குலுக்கல் மூலம் தேர்ந்தெடுத்து, ஓராண்டுக்கும், தேதிவாரியாக காலை, மாலை என இருவேளைக்குமாக ஊர்களின் பெயர்ப் பட்டியல் தயாரிக்க வேண்டும்.

அறவர்கள் சாதி, மதம் பாராது உயிர்த் தியாகம் செய்துள்ளனர். எனில் தமிழர்களும் அறவர் கோவிலுக்கு சாதி பாராது வழிபாட்டு முறைகளுக்குப் பொறுப்பேற்கலாம். தேவேந்திர குலத்தார்தான் செய்ய வேண்டுமென்பதில்லை. ஒருவேளை பிற தமிழ்ச்சாதிகள் அறவர்கோவில் வழிபாட்டிற்கு இணங்காதபட்சத்தில், மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த தேவேந்திர குலத்தவரின் எழுநூற்று அறுபது ஊர்களைத் தேர்வு செய்து கொள்ளலாம். பிற தமிழர்கள் சாதிபாராது ஒன்றிணைந்தாலும் தேவேந்திரர்களின் ஊர்கள் அதிகமும் இந்த அறப்பணியில் ஈடுபடுவது பெருமைக்குரியது.

சடங்குகள் அதிகாலை நான்குமணி முதல் நண்பகல் பன்னிரண்டு மணிவரை ஒரு தொகுப்பாகவும், மதியம் இரண்டுமணி முதல் இரவு பத்து மணிவரை ஒரு தொகுப்பாகவும் இடம்பெற வேண்டும். எனில் நாளில் பதினாறு மணி நேரம் வரும் (8+8). எனில், நாளுக்கு பதினாறுமுறை நீராட்டும், ஆராதனைகளும், படையல்களும் இடம்பெற வேண்டும்.

நாளுக்கு பதினாறுமுறை நடுகற்களை நீராட்ட வேண்டும். இதற்கு பதினாறு இடங்களிலிருந்து நீரெடுத்துக் கொள்வது அவசியம். அறவர் கோவிலின் எண்திசை அருகாமை ஊர்கள் எட்டு, ஒவ்வொரு நாளும் சடங்குகள் செய்யும் இரு ஊர்கள், சாத்தூர் மற்றும் கோவில்பட்டி ஊர்களின் நீர் (ஆழ்துளை நீரோ, கிணற்று நீரோ எடுத்துக் கொள்ளலாம். நீர் இவ்வூர்களின் நீராக இருக்க வேண்டும். பிற ஊர்களிலிருந்து வரும் குடிநீர் எடுக்கக் கூடாது) தாமிரபருணி நீர், கன்னியாகுமாரியில் முக்கடல் சங்கமிக்கும் கடல் நீர், திருச்செந்தூரின் நாழிக்கிணறு நீர், சங்கரன் கோவில் அல்லது தென்காசி கோவில் குளத்துநீர் என மொத்தம் பதினாறு ஊர்களின் நீரைக்கொண்டு தினமும் பதினாறு நீராட்டல்கள் இடம்பெற வேண்டும். கூடுதல் நீருக்கு அறவர் கோவில் அமையுமிடத்தின் நீரைப் பயன்படுத்த வேண்டும்.

இந்த நீரோடு, நாளுக்கு ஒருமுறை குளிர்ச்சி தரக்கூடிய பொருள்களான பால், தயிர், இளநீர், தேன், கரும்புச் சாறு, சந்தனம், உள்ளிட்ட பதினாறு வகைப் பொருட்களை அபிசேகத்திற்குப் பயன்படுத்தலாம். குளிர்ச்சியான மூலிகைச் சாறுகளையும் பயன்படுத்தலாம். அவ்வாறே நல்லெண்ணெய், நெய், போன்றவற்றையும் பயன்படுத்தலாம். இவ்வகையில் பதினாறுவகை அபிசேகப் பொருட்கள் இடம்பெற வேண்டும். அவ்வாறே நாளுக்கு பதினாறுவகை அன்னங்களும், பதினாறுவகை பருப்பு வகைகளும் படையலில் இடம் பெற வேண்டும்.

நீராட்டுக்கள், அபிசேகங்கள், படையல்களை காலை, மாலை எனப் பிரித்துக் கொள்வதும், அவ்வாறே காலை, மாலையில் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் இன்னின்னது எனப் பிரித்துக் கொள்வதும் நல்லது. இவற்றை ஒரு அட்டவணையாகத் தயாரித்து கொண்டால், அதாவது காலை தொடங்கி, இரவுவரை ஒவ்வொரு மணி நேரத்திற்கும் செய்ய வேண்டியவற்றை, தேவைப்படுகின்றவற்றை அட்டவணையாக போட்டுக்கொண்டால், எளிதாக இருக்கும். ஊர்க்காரர்கள் குழப்பமின்றி பொருட்களை எடுத்து வருவதற்கும் வசதியாக இருக்கும்.

ஊர்க்காரர்கள் சார்பாக, சூரியன் எழும் நேரத்தில் மூன்று சர்க்கரைப் பொங்கல்கள் வைக்க வேண்டும். இவற்றை மூன்று நடுகற்களுக்கும் படையலிட வேண்டும். அவ்வாறே மாலையில் சூரியன் மறைந்தபின் சேமியா, பருப்பு, சவ்வரிசி என மூன்று விதமான பாயாசங்கள் வைத்து படையலிட வேண்டும்.

இரவு வழிபாட்டை முடிக்கும்போது, நடுகற்கள் பீடத்தைச் சுற்றி, பத்தடி உயரத்திற்கு இருஅடுக்கில் புதிதாக வேயப்பட்ட தென்னந்தட்டிகளைக் கொண்டு அடைக்க வேண்டும். அதாவது ஒன்பது மணி பூசைக்குப்பின் தெற்குப்பகுதி தவிர மற்ற மூன்று பகுதிகளும் தென்னந்தட்டிகளால் அடைக்கப்பட வேண்டும்.

மூன்று பக்கமும் அடைத்தபின், அன்றைய நாளுக்கான இறுதிப் பூசையைத் தொடங்க வேண்டும். நீராட்டுகள், படையல்கள், தீபாராதனைகள் முடிந்தபின், மூன்று நடுகற்களையும், குளத்து மண்ணால் முழுக்கப் பூசி மூடிவிட வேண்டும். மண்ணை அதாவது சகதி மண்ணைப் பூசியபின், அதன்மேல் வாழை மட்டைகளைச் சுற்றிலும் வைத்துக் கட்டிவிட வேண்டும். மண்ணும், வாழை மட்டையும் அன்றைய நாளின் மாலை சடங்குக்குரிய ஊரிலிருந்து எடுத்து வரப்பட வேண்டும். மாலை சடங்குக்குரியவர்கள் அவர்களது ஊரிலுள்ள குளங்களிலிருந்து மண்ணை எடுத்து, அவற்றிலிருந்து கற்களை நீக்கி சுத்தம் செய்து, எடுத்து வர வேண்டும். அறவர் கோவிலில் அந்த மண்ணோடு நீர் சேர்த்து பதினான்கு ஊர்களிலிருந்து எடுத்து வந்த (கன்னியாகுமரி, திருச்செந்தூர் நாழிக் கிணறு தவிர) நீரைச் சேர்த்துக் குளப்பிக் கொள்ள வேண்டும். இந்த மண் சாந்தையே நடுகற்களை மூட பயன்படுத்த வேண்டும். இதனை ஒவ்வொரு நாளும் பின்பற்ற வேண்டும்.

நடுகற்களுக்கு மண்சாந்து சாற்றி, வாழை வைத்துக் கட்டியபின் (மேல், நடு, இடை என மூன்று இடங்களில் பச்சை நிற நூல் கொண்டு), நடுகற்களுக்குமுன் ஒருபடி நெய்தீபம் ஏற்றி வைத்து, தெற்கு திசையையும் அடைத்துவிட வேண்டும். அனைவரும் தெற்கு வாசல் வழியாக வெளியேறியபின் அன்றைய பூசைமுறைகள் முடிகின்றன.

அடுத்தநாள் அதிகாலையில் தெற்கு வாசல் தென்னந்தட்டியை நீக்கி, முதலில் முக்கடல் நீரால் நீராட்டுவதோடு அன்றைய நாள் துவங்குகிறது. காலை சடங்குமுறைக்கு வரும் ஊர்க்காரர்கள், அவர்களது ஊரிலிருந்து பசுமாட்டுச் சாணம் எடுத்து வர வேண்டும். பன்னிரெண்டு மணி பூசை முடிந்தபின் இந்த சாணம் கொண்டு மூன்று நடுகற்களும் முழுதாக பூசி மூடப்பட வேண்டும். சாணம் பூசியபின், வெள்ளை நூல்துணியால் சுற்றிக் கட்டிவிட வேண்டும். பின்னர் பச்சைத் துணியால் மேடையச் சுற்றிலும் நான்கடி உயரத்திற்குச் சுற்றிக் கட்டிவிட வேண்டும். இரண்டு மணி நேரம் கழித்து இரண்டுமணிக்கு பூசை ஆரம்பிக்கும்போது, முதலில் நாழிக்கிணறு நீர் கொண்டு நடுகற்களை நீராட்ட வேண்டும்.

பூசைக்குப் பயன்படுத்திய மண்பூச்சையும், சாணத்தையும் அன்றைக்குரிய ஊர்க்காரர்களிடம் கொடுத்து விட வேண்டும். அவர்கள் அந்தந்த ஊர் வயல்களில் அவற்றைப் போட்டு விடலாம்.

அறவர் கோவிலில் பசுமாட்டுச் சாணத்திற்கும், கோமியத்திற்கும் என இரண்டு பாத்திரங்கள் அல்லது தொட்டிகள் வைக்க வேண்டும். அருகாமை ஊர்க்காரர்கள் அவரவர் ஊர்களில் கிடைக்கும் சாணத்தையும், கோமியத்தையும் அந்த பாத்திரங்களில் போடலாம். அறவர் கோவிலைச் சுற்றிலும் அதிகாலைப் பூசைகள் துவங்குவதற்குமுன் சாணம் தெளிப்பது நல்லது. அவ்வாறே மாலையில் கோமியமும் தெளிக்கலாம். மண்பூச்சு மற்றும் சாணத்தை நீக்கியபின், நடுகற்களுக்கு கோமியத்தால் நீராட்டுவதும் நல்லது.

ஊர்களைத் தேர்ந்தெடுத்தபின் அந்த ஊர்க்காரர்களுக்குத் தீட்டு இல்லை. பூசைசெய்யும் அன்றைக்கு அந்த ஊரில் இறப்பு நிகழ்ந்தால் தீட்டாகக் கருதலாம். எனினும் இறப்பு நேர்வதற்கு முன்னரே கிளம்பியிருந்தால் அது தீட்டாகாது. முதல்நாள் இறப்பு நிகழ்ந்திருந்தாலும் மறுநாள் பூசைகளில் கலந்து கொள்ளலாம். கவனத்தில் கொள்ள வேண்டியது, மாலை பூசைசெய்யும் ஊரில் அன்றைய நாள் காலையிலோ, கிளம்புவதற்கு முன்பாகவே இறப்பு நிகழ்ந்தால் மட்டுமே அதைத் தீட்டாகக் கருத வேண்டும். அவ்வாறே காலைபூசை செய்யும் ஊரில் அன்றைக்கு இரவில் இறப்பு ஏதும் நேர்ந்திருக்கக் கூடாது. மற்றபடி எவ்விதத் தடையும் இல்லை. அறவர் கோவிலுக்குக் கிளம்பியபின் ஏதேனும் இறப்பு நிகழுமேயானால் பூசைகளை முடித்துவிட்டே ஊருக்குத் திரும்புதல் வேண்டும்.

அறவர் கோவிலின் படையல்கள் கோவில் அமைவிடத்திலேயே தயாராக வேண்டும். எனில், ஒரு சமையற் கூடமொன்று இருப்பது நல்லது. சமையல் கூடம் தற்காலிகமானதாக அமைத்துக் கொள்ளலாம். அவ்வாறே குளிப்பதற்கும், உடை மாற்றுவதற்கும் அமைவிடம் இருப்பது சிறப்பு. இவற்றையும் தற்காலிமானதாக அமைத்துக் கொள்ளலாம்.

அறவர் கோவிலில் வாரம் ஒருமுறை காலையில் சுதர்சன யாகமும், மாலையில் லெட்சுமி யாகமும் செய்வது சிறப்பு.

அறவர் கோவிலில் ஆடம்பரமான விளக்குகளோ, அதிகமான விளக்குகளோ இடம் பெறக்கூடாது. கோவில் நடை சாத்தியபின் எந்தவொரு விளக்கும் இடம்பெறக் கூடாது.

அறவர் கோவிலில் சிறப்பான முறையில் ஒலிபெருக்கி வசதிகள் செய்யலாம். பக்திப்பாடல்கள், தமிழ்ப் பாடல்கள், போன்றவற்றை ஒலிபரப்பலாம். கந்த சஷ்டிக் கவசம், அபிராமி அந்தாதி, விஷ்ணு சகஸ்ரநாமம் போன்றவை இடம்பெறலாம். காதல் பாட்டுக்களும் ஒலிபரப்புவது இனிமையானது.

அறவர் கோவில் அமையுமிடத்தின் அருகாமையில் அமைந்துள்ள கோவில்களிலிருந்து அறவர் கோவிலுக்கு சிறப்புகள் செய்யலாம். அவ்வாறே அறவர் கோவிலை சுற்றி அமைந்திருக்கும் பெரிய கோவில் சார்பாகவும் அறவர் கோவிலுக்கு தினப்படி சிறப்புகள் செய்யலாம்.

தமிழர்களே, தமிழர் நல்வாழ்விற்காக, தங்களது இன்னுயிரை நல்கிய இந்த அறவோன்களின் ஒப்பற்ற அறவர் திருக்கோவிலை செம்மையாக உருவாக்குக. ஒரு ஆண்டிற்கான நெறிமுறைகளைத் தவறாது பின்பற்றுக. எல்லாம் தமிழருக்கு, உலகிற்கு நன்மையாகவே முடியும்.

தேவேந்திரகுலப் பெருமக்களே, நம் குலத்தாருக்கு ஏர்முனையும் எழுதுகோல் முனையும் பெருமை நிறைந்தவை. அப்பெருமைகளை நாம் மீட்டெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். ஏர்முனையும், எழுதுமுனையும் நம்மைவிட்டு என்றும் செல்லக் கூடாது. அப்படிச் சென்றதாலேயே தமிழர் தரம் குறைந்தார் என்பது வரலாறு. தமிழர் உணவை காசுக்கு விற்கிறார். எழுத்தை, அறிவை கூவிக்கூவி காசுக்கு விற்கிறார். நாம் உணவையும் அறிவையும் காசுக்கு விற்பவரல்லர் என்பதை உறுதிப்படுத்திக் காட்டுக. தமிழர் மனதில் நம்மைப் பற்றிய மதிப்பு தானாக உயரும். உலக அரங்கில் நாங்கள் தமிழர்கள் என தலை நிமிரவும் வழி ஏற்படும்.

**உலகம் நம் குடும்பம். நாம் இதை ஒருபோதும் மறக்கலாகாது.**

இப்புத்தகத்தில் யாம் சுட்டிக்காட்டியுள்ள வழிமுறைகளைச் சீர்தூக்கிப் பார்த்து, நல்ல முடிவை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். அவ்வாறே வரும் காலத்தில் எந்தவொரு முடிவெடுப்பதற்கு முன்னும் தேவேந்திர குலத்தாரின்

பெரியவர்களும், தலைவர்களும், அரசியலாளர்களும், அறிஞர்களும் மனதில் நிறுத்த வேண்டியது,

1. எடுக்கும் முடிவு சமூகத்திற்கு நன்மையானதா?
2. இயற்கைக்கு நன்மையளிக்குமா?
3. பெண்களுக்கு, முன்னோருக்கு நன்மையானதா?
4. குறிப்பிட்ட செயல்/முடிவு வளர்ச்சிக்கானதா?
5. முன்னோக்கிய மாற்றமா?
6. சாதியைக் காட்டுகிறதா?
7. மதத்தைத் தூண்டுகிறதா?
8. செயல் மக்களைப் பிரிக்கிறதா, இணைக்கிறதா?
9. தர்மமான செயலா?
10. மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடியதா?
11. உடலுக்கு, மனதிற்கு நிறைவளிப்பதா?
12. ஆன்மீக முன்னேற்றம் உண்டா?
13. பொருளாதார அளவீடுகள் கவனிக்கப்படுகின்றனவா?
14. செயல் அவசியமானதா, அத்தியாவசியமானதா, பயனுள்ளதா?
15. கற்றலை ஊக்குவிக்கிறதா?
16. குறிப்பிட்ட செயல் மனித உடலில், மனதில், சமூகத்தில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தும்?
17. நீடித்த காலத்தில் அதன் பங்களிப்பு என்னவாக இருக்கும்?

18. செயல் நல்லதுதானா, மனம் என்ன சொல்கிறது? கற்றவர், ஞானியர், பெண்கள், முதியவர், இளையோரின் கருத்துக்கள் என்ன?

எடுக்கும் முடிவுகள், அதற்கான விளைவுகள் குறுகிய காலத்தில், நீடித்த காலத்தில் எவ்வாறு இருக்கும் என்பதையும் சிந்தித்துத் தெளிவது அவசியம். எடுக்கும் முடிவுகள், செய்யும் செயல்கள் எத்தகைய மாற்றங்களைக் கொண்டுவரும் என்பதைத் தெளிந்தே எந்தவொரு செயலையும் துவங்க வேண்டும். சிந்தித்துச் செயல்படுங்கள். செயல்களில் சுயநலமோ, வெறுப்போ, பகையோ, ஆசையோ இல்லையெனில் உறுதியாக அச்செயல் நன்மையானதாகவே இருக்கும், நல்லதாகவே முடியும். சிந்தித்து முடிவெடுங்கள், துணிந்து துவக்குங்கள், உறுதியாக வெற்றி கிட்டும்..

**புத்துலகத்தைத் துவக்குக தேவேந்திரரே.**

இன்று நாம் துவங்குகிறோம் எனில் நேற்று நாம்தான் துவக்கினோம் என்பது சான்றாகிறது. நாளையும் நாம்தான் துவங்குவோம் என்பதும் உறுதியாகிறது.

எங்கும் புகழ் துவங்க அறப்பணிகளை, நற்செயல்களைத் துவக்குக மூத்தோரே.

**இது நம் நிலம், நம் நாடு, நம் உலகம், நம் இறைவன்.**

‘பரியேறும் பெருமாள்’ அழகிய படம். பரியனின் தந்தையை எளியதொரு பயிர்த்தொழிலாளியாகக் காட்டியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

முதல் படத்திலேயே முத்திரை பதித்த தோழர். மாரி செல்வராஜ், படத்தைத் தயாரித்த தோழர். பா.ரஞ்சித் மற்றும் படக்குழுவினர் அனைவருக்கும் பாராட்டுக்கள், வாழ்த்துக்கள்.

பரியேறும் பெருமாள். அழகிய பெயரன்றோ. பெருமாள் பரியேறுவது நம்மைப் பொருத்தது தேவேந்திரர்களே. நாமிருக்க நம் பெருமாள் பரியேறுவதெதற்கு? நம்மால் முடியும்போது நம் தந்தை பரியேறுவானேன்? நம் தந்தை பரியேறமாட்டார். தந்தை பரியேறினால் தாங்குவதார்? அவர் பரியேறக் கூடாது என்பதற்கே இத்தனையும், இவ்வளவும். தமிழ் நன்கறிந்திருக்கிறது. தமிழர் அறியும் காலமும் வந்தது.

நம் தந்தை பரியனல்லவா. பரியன், பரிமுகத்தான், குதிரை முகம் கொண்டவர். ஞானத்தை அள்ளி அள்ளி இறைக்கும் ஹயக்கிரீவர். நம் தந்தை எடுப்பது பத்தாவது அவதாரம் எனச் சுட்டப்படுகிறது. நம்மைப் பொருத்தவரை அது பத்தாவதல்ல, பதினெட்டாவது அவதாரம்.

ஆம். நம் கண்ணனின் பதினெட்டாவது அவதாரம் பரியன், பரிமுகத்தன், ஹயக்கிரீவர். மொத்த உலகையும் அறிவால் உயர்த்தப்போகும் அவதாரம் ஹயக்கிரீவர். வராக அவதாரமெடுத்து உலகைக் தூக்கியதுபோல் நம் மாபெரும் தந்தை பரியன் அவதாரமெடுத்து உலகத்தை உயர்த்தப் போகிறார்.

நம் தந்தைக்கு அனைத்து வகையிலும் துணைநிற்க வேண்டியது நம் கடமை. ஏனெனில் தந்தை அவதாரங்கள் செய்வது நமக்காவே, நம் உயர்விற்கே..

மருதம் பெருஞ்சிறப்பிற்குரியது. இந்திரன் மட்டுமல்லாது மாயோனும், சேயோனும் வணக்கப்பட்ட, வழிபடப்பட்ட சிறப்பிற்குரியது. இருவரும் மிகுதியாக வழிப்படப்பட்டது மருதத்திலே எனில் மிகையாகாது. அவ்வகையில் நமக்கு அனைத்துத் தெய்வங்களும் துணை நிற்கும். அனைத்துக் கடவுள்களும் நம் பக்கம்.

நம் மண்ணின் கருப்பசாமி, வெள்ளைச்சாமி, முனியசாமி, சோலைச்சாமி, குருசாமி எனப் பல்வேறு பெயர்களில் வழிபடப்பட்டுவருவது நம் தந்தையே, நம் தந்தையரே. சற்றே ஆராய்ந்து பார்த்தோமெனில் அனைத்துமே திரேதா யுகத்தோடு தொடர்புடையதாக இருப்பது தெளிவு.

கருப்பசாமியாக நாம் கொண்டாடி வருவது கண்ணனே. வெள்ளைச்சாமி பலராமன். இருவரும் நமது காலத்திற்கு சற்று முன்புவரைக்கும் பெரும் தெய்வமாக வழிபடப்பட்டிருக்கிறார்கள். அதாவது எமது தந்தை காலத்தைச் சேர்ந்தவர் பலருக்கு வெள்ளைச்சாமி எனும் பெயர் சூட்டப்பட்டிருந்தது கவனிக்கத்தக்கது. தேவேந்திரரிலும், நாடாரிலும், தேவரிலும் நிறைய வெள்ளைச்சாமிகள் இருந்தார்கள். அவர்கள் அறிந்து வைத்தார்களோ என்னவோ, அவர்கள் முன்னோர் வைத்திருந்தார்கள். அதனால் அவர்களும் முன்னோர் மரபைப் பின்பற்றி தம்வழியினருக்கு வைத்தார்கள். எனினும் இப்படியான பெயர்கள் இனிவரும் காலத்தில் புழக்கத்தில் இருக்குமா என உறுதியாகக் கூற இயலவில்லை. தற்போதைய தலைமுறையினர் பெயர்களை மிகமிக நவீனமாக வைக்கத் தொடங்கி விட்டனர். வரும் தலைமுறையினர் தம் பிள்ளைகளுக்கு கருப்பசாமி,

வெள்ளைச்சாமி எனப் பெயர் வைப்பாரோ. ஒருவேளை ஒயிட் ஷாமி என வைக்கக் கூடும். எதற்குக் சொல்கிறோமெனில், நம் குலத்தார் சில பெயர்களை விடாது கடத்திவர வேண்டும். பெயரில்தான் அனைத்தும் இருக்கிறது. ஒருவேளை எமது பெற்றோர் எமக்கு கிருஷ்ணமூர்த்தி என்பதற்குப் பதிலாக வேறொரு பெயர் வைத்திருந்தால், யாம் இந்தப் புத்தகங்களையே எழுதியிருக்க மாட்டோம். சரிதானே.

**வாழிய எம் தந்தை வாசுதேவக் கிருஷ்ணன்.**

**தாமரைத் தாள்கள் போற்றி தந்தையே .**

35. நம் குலத்தில் கருப்பசாமி, வெள்ளைச்சாமி, குருசாமி, முனியசாமி, கண்ணன், இராமன், அச்சுதன், கோவிந்தன், மாதவன், வாமனன், பத்மனாபன், அருணாச்சலம், முருகன், லெட்சுமி, பார்வதி, கலைவாணி, ஆண்டாள், மீனாட்சி போன்ற பெயர்களை ஒவ்வொரு ஊரிலும் மரபாகச் சூட்டி வர வேண்டும். பிள்ளைகளுக்குப் பெற்றோர் பெயர் சூட்டுவதை விட சமூகத்தார் பெயர் சூட்டுவதே பொருத்தமாக இருக்கும். ஊரில் இப்படியான பெயர்கள் உச்சரிக்கப்படுவதும், அழைக்கப்படுவதும் நல்லது. முருகா இங்க வாப்பா என அழைப்பதும், கோவிந்தா எப்படி இருக்கே எனக் கேட்பதும் அழகல்லவா.

எனில் குறைந்தபட்சம் இந்தப் பெயர்களாவது மரபாகச் சுட்டப்பட்டு வரலாமன்றோ. இப்பெயர்களோடு செல்வன், செல்வி, சந்திரன், சூரியன் போன்ற பெயர்களும், வாசவன், வாசவி போன்ற பெயர்களையும் சேர்த்துக் கொள்ளலாமன்றோ.

குறைந்தபட்சம் ஒரு பெயராவது இருப்பது நல்லது. ஊரில் அப்பெயர் கொண்ட ஒருவர் மறைந்துவிட்டால் அடுத்துப் பிறக்கும் குழந்தைக்கு அந்தப் பெயரையே சூட்டி விடலாம். அப்படிச் செய்தால் மரபாக ஒரு பெயராவது நிலைத்து வரும். பெண் பிள்ளைகள் திருமணமாகிச் சென்றுவிட்டால், அடுத்து பிறக்கும் பெண்பிள்ளைக்கு அந்தப் பெயரைச் சுட்டி மகிழலாமே.

முனியசாமி என்பதும் அழகான பெயர். விஷ்ணுவைக் குறிக்கிறது. முனி எனில் உயர்ந்தவர், தெய்வம் எனப் பொருள் சுட்டுகிறது போலும்.

முனி - முனிவன். முனி - முடி - முடித்தல் - முனிதல் - தொடர்தல், தொடர்ந்து வருதல். முனி - புத்தன். முனி - வில், இராமன். முனி - முன்னை, முன்னவன், முதல் முதலாமவன். முனி - முன்பக்கம் முன்னது. முனி - நுனி.

தேவேந்திரனுக்கு தமிழ்நிலத்தில் திருக்கோவில் கட்டுவதற்கு முயற்சிகள் நடந்து வருவதை யாம் அறிந்தே இருக்கிறோம். எனினும் இதை நாம் சற்றே கவனமாகச் செய்ய வேண்டும். முதலில் இந்திர மரபை, மூவேந்தர் மரபை மீட்டெடுக்க வேண்டும். இழந்த தமிழ், தமிழர் பெருமையை நிலை நாட்ட வேண்டும். நிலமனைத்தையும் பொதுவில் வைக்க வேண்டும். அந்நிலை வந்தால் மட்டுமே நாம் வென்றவராவோம். வென்றவருக்கே, வெற்றி பெற்றவருக்கே மண்ணில், உலகில் மதிப்பும், மரியாதையும். தமிழருக்கு உலகத்தவருக்கு இந்திரன், தேவேந்திரன், இந்திர மரபு, வேந்தர் மரபு, தேவேந்திரன் குலத்தார் மரபு, அதன் முக்கியத்துவம், பெருமை தெரிய வேண்டும். அதன்பின் தேவேந்திரனுக்கு கோவில் எழுப்புவது பெருமையானதாக இருக்கும். தமிழரும் இந்திரன் யார் என்பதையும், வேந்தன் என்பவன் எப்படித் தோன்றினான் என்பதையும் அறிந்து கொள்வார்.

**வாழிய இந்திரன்; வணக்கம் தந்தையே!**

**மூவேந்தர் போற்றி; முத்தமிழ் போற்றி!**

**முன்னோர் போற்றி!**

யாம் தேவேந்திர குலத்தவருக்கென்று சேர மரபைச் சுட்டியுள்ளோம். மூவேந்தர் மரபுமே நமக்குப் பொருத்தமெனினும், நாம் ஒரு மரபைப் போற்றி வருவதும், நம் தமிழ் உறவுகள் மூலம் பாண்டியர், சோழர் போற்றப்பட்டு வருவதும் பெருமையல்லவா. நமக்குரியவர் மூவருமே. நாம் சேர மரபை முன்னெடுக்கிறோம். எனில் பாண்டியரும், சோழரும் நமக்கு தூரமல்ல. நாம் விட்டுக் கொடுக்கிறோம். மூவரும் மூவேந்தர் மரபை முன்னெடுக்க வேண்டும் என்பதற்கே இந்த ஏற்பாடு. மூவேந்தர் மரபை எக்காரணம் கொண்டும், எக்காலத்திலும் நாம் பிரித்துப் பார்க்கக் கூடாது. அவ்வாறே மூன்று பெருந்தந்தையரும். நமக்கு மூவரும் என்றும், எக்காலத்தும் ஒன்றே.

உழவர் திருநாளை நாம் என்றென்றும் பின்பற்றுவதுபோல், சிறப்பித்து வருவதுபோல், அன்னை சரஸ்வதி பூசையையும் நாம் வெகு சிறப்பாக முன்னெடுத்து வரவேண்டும். கல்வி நிலையங்களில் சரஸ்வதி பூசை நிகழ்வதற்கு இப்போதே

முனுமுனுப்புகள் எழ ஆரம்பித்துவிட்டன. பிற மதத்தவர்கள் மனதால் வெறுக்கிறார்கள். தங்கள் மதத் தலைவர்கள் பிறந்த நாளையும் கொண்டாடுவோம் என்கிறார்கள். மாணவர்களைத் தூண்டிவிட்டு முதல்வரிடம் சண்டை போட வைக்கிறார்கள். வரும் காலத்தில் நிலைமை மோசமாகலாம். எனில் தமிழ் நிலத்திலிருக்கும் கல்விக் கூடங்களில் பொங்கல் விழாவும், சரஸ்வதி பூசையும் நமது உரிமையாக்கப்பட வேண்டும். இந்த இரு நிகழ்வுகளைத் தாண்டி கல்விக் கூடங்களில் மதம் தொடர்பான பிற எவ்வித நிகழ்வுகளும், விழாக்களும் நிகழக் கூடாது. இதில் போட்டி போடுவதற்கு ஒன்றுமே இல்லை. பொங்கல் தமிழரது பெருமை. சரஸ்வதி இந்திய ஞானத்தின் சிறப்பு. இவை இரண்டையும் வழிவழியாகப் பின்பற்றி வர வேண்டியது நம் கடமை.

தமிழர், இந்தியர், அனைவரும் நம்மவர்களே, நம் உறவுகளே. நாம் யாரையும் மொழி, நாடு சார்ந்து பிரித்துப் பார்க்கக் கூடாது. நமக்கு என்றென்றைக்கும் **'நாம்'** என்பதே பொருள்மிக்கது. நமக்கு எதிலும் பன்மையே. கடைப்பிடித்து வாருங்கள்.

தமிழ் நிலத்தில் அண்மைக் காலங்களில் நடக்கும் நிகழ்வுகள் அத்தனை உவப்பானதாக இல்லை. குறிப்பாக சாதிய முன்னெடுப்புகள். யாம் இதைப் பலமுறை சுட்டிவிட்டோம். இறுதியாக ஒருமுறை சுட்டுவிடுவதும் நல்லதல்லவா. தமிழர் சாதியாய், குலமாய் ஒன்று திரள்கிறார். அதில் அவருக்கு அத்தனை பெருமை. தமிழர் கவனத்தில் கொள்ள வேண்டியது ஆப்பிரிக்காவில் என்ன நிகழ்ந்தது என்பதையே. தமிழருக்கு ஆப்பிரிக்க நிலத்தவர், பண்பாட்டில், வாழ்வியல் முறைமையில் குறைந்தவர் எனும் எண்ணமுள்ளது வெளிப்படை. எனில் அவர் நம்மைவிட வெகு காலத்திற்கு முன்பே சாதியாய், இனமாய் திரண்டெழுந்து ஒருவரையொருவர் அடித்துக் கொண்டார். கிட்டத்தட்ட ஐம்பது வருடங்களுக்கு முன்பே இப்படி அடித்துக் கொண்டார் எனில், தமிழர் இனிமேல்தான் அடித்துக் கொள்ளப் போகிறார் எனில், பண்பாட்டில், அறிவில் உயர்தோர் யார், குறைந்தோர் யார்? ஆப்பிரிக்க நிலத்தில் முன்னரே நிகழ்ந்தது தமிழ் நிலத்தில் இனிமேல்தான் நிகழப் போகிறதெனில், முன்னேறியவர் யார்? ஆப்பிரிக்கரா, தமிழரா? சிந்திப்பீர். ஆப்பிரிக்க நிலத்தவர் தங்களுக்குள் அடித்துக் கொண்டதால் என்னவெல்லாம் நிகழ்ந்தது, குறைந்தது, எதெல்லாம் இழக்கப்பட்டது என்பதை அறிந்து, அதை விலக்கி, அமைதி கொண்டு, தற்போதோ அனைத்திலும் முன்னேறிக்

கொண்டிருக்கிறார். அறிவிற் சிறந்தவராகச் சுட்டப்படும் தமிழரோ, தற்போதுதான் சாதிகளாய், துணைச் சாதிகளாய் அணிதிரள்கிறார். ஆப்பிரிக்காவினர் ஆயுதம் தூக்கி அடித்துக்கொண்டதால் எதையெல்லாம் இழந்தார், பறிகொடுத்தார் என்பதை தமிழர் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு சாதி, ஒரு இனம் ஆயுதம் தூக்கினால் அது அடுத்தடுத்த சாதிகளுக்கும் பரவும். ஆப்பிரிக்காவாவது பரந்துபட்ட நிலம். தமிழகமோ சிறிய நிலம். பல்வேறுபட்ட சாதிகளும், குடிகளும் நெருங்கி வாழ்கின்றனர். இங்கே ஒரு குடி ஆயுதம் தூக்கினால், அதன் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழர் குடிகள் தங்களுக்குள் அடித்துக் கொண்டால் அது யாருக்கு சாதகமாய் அமையும் என்பதை அறிய வேண்டும். இந்தியா சிதைய வேண்டும், உடைய வேண்டும் என சில, பல நாடுகள் ஏங்குகின்றன என்பதும் உண்மை. ஒரு சாதிக்கு பேரழிவு ஆயுதங்கள் கிடைத்தால், அதன் எதிராளி சாதிக்கு எப்படியும் ஆயுதங்கள் கிடைத்துவிடும். நாடுகள் காத்துக் கொண்டிருக்கின்றன. அருவாள், வேல்கள் சண்டைக்கும், நவீன ஆயுதங்கள் மூலமான சண்டைக்கும் பெருத்த வேறுபாடு உள்ளதை தமிழர் அறிய வேண்டும். வெட்டினால், குத்தினால் சிலர்தான். பேரழிவு ஆயுதங்களைத் தூக்கினால் மனிதரைக் கொன்று குவிக்க முடியும். ஆப்பிரிக்காவில் இப்படித்தான் கோர அழிவுகள் நிகழ்ந்தன. போட்டிக் குழுக்களுக்கு போட்டி போட்டு ஆயுதங்கள் வழங்கப்பட்டன. முடிவில், இலக்க, இலக்கமான எளிய மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர், மொத்தமாக அழிக்கப்பட்டனர். இதுவே வரலாறு. தமிழர் உலக வரலாற்றிலிருந்து பாடம் படிக்க வேண்டாமா. எந்தச் சாமி புண்ணியமோ, நம் மண்ணில் அப்படியான பேரழிவுகள் நிகழவில்லை. எமது காலத்திற்கு சற்று முன்னர் நிகழ்ந்த முதுகுளத்தூர் கலவரம் பேரழிவை நிகழ்த்தியதாகச் சுட்டப்படுகிறது. எனினும் திறமையான சட்டம் ஒழுங்கினால் அது விரைவாக கட்டுப்படுத்தப்பட்டது சிறப்பிற்குரியது. தமிழ்ச் சாதிகள் அனைவரும் ஒன்றுபட்டு வாழ்வதே தமிழுக்கும் தமிழ் நிலத்திற்கும் பெருமை தரும். மாறாக வேற்றுமையாய்ப் பார்ப்பாரெனில், தமிழர் ஒற்றுமை குலையுமெனில், தமிழர் சாதியாய் திரள்கிறார் எனில், தமிழர் தாம் மட்டும் காலத்தால் பின்னால் போகாது, உலகையே பின்னால் போக வைக்கிறார் என்றே பொருளாகும். தமிழர் காலத்தை பின்னுக்கு இழுக்கிறார் என்பதே பெரிய இழுக்கு. காலத்தைப் பின்னுக்கிழுப்பது தமிழுக்கு, அதன் அறிவுக்கு, பண்பாட்டுக்கு எதிரானது, விரோதமானது.

**தமிழரே, சிந்தித்துச் செயல்படும்.**

தமிழ் நிலத்தில் சமீப காலமாய் திராவிட கட்சிகள் மீதும், அதன் ஆட்சியாளர்கள் மீதும் பெரிய அவதூறுகள் பரப்பப்பட்டு வருகின்றன. திராவிடக் கட்சிகளின் தலைவர்கள் தமிழருக்கு மாற்றார் எனவும், அவர்தாம் தமிழர் வாழ்வை கெடுத்தார் எனவும், தமிழகத்தின் வளர்ச்சியைக் குலைத்தார் எனவும், தமிழுக்கு ஒன்றும் செய்யவில்லை எனவும் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. அவர்கள் ஆட்சி இருந்ததும் ஒரு விதத்தில் நன்மையே.

சாதியை முன்னெடுக்கும் தமிழர் ஒருவேளை அந்த உச்ச பதவியைப் பிடித்திருப்பாரேயாயின், அது பிற சாதிகளை அடக்கி ஒடுக்குவதில் போய் முடிந்திருக்கலாம். எனில் பெருமளவில் அது வன்முறைக்கு வித்திட்டிருக்கும். அன்னார் தம் சாதிக்கே அனைத்திலும் முன்னுரிமை கொடுத்திருக்கக் கூடும். இப்படித்தான் ஆப்பிரிக்காவில் நிகழ்ந்தது தமிழரே. அங்கே தலைமைப் பதவிக்கு, பதவிகளுக்கு வந்தவர்கள் தாம் சார்ந்த சாதிக்கு, இனத்திற்கு மட்டுமே அதீத முக்கியத்துவமும், பெரிய வாய்ப்புகளும், அரசியல் மேலாண்மைகளும் கொடுத்தார்கள். அதன் விளைவுகள் எண்ணிப் பார்க்க முடியாதவை. நம் இந்தியாவின் வடக்கிலும் இதுதான் நிகழ்ந்தது தமிழரே. அங்கே குடிகள் அடக்கி ஒடுக்கப்பட்டனர். தடியெடுத்தவன் தண்டல்காரன் என்பதே தற்போதும் வடக்கின் நிலை. அனேகமாக கிழக்கிலும் அதுதான் நிலை போலும். அந்நிலைக்கு, அவர்கள் நிலைக்கு, தமிழ்நாடு பரவாயில்லை எனில், அதற்கு இங்கு இருந்த ஆட்சித் தலைவர்களும் ஒரு காரணம். ஊழல் செய்தார், நிர்வாகம் சரியில்லை என்பதையெல்லாம் காலப்போக்கில் சரிசெய்து விடலாம். ஒருவேளை பேரிழப்புகள் நிகழ்ந்திருந்தால். அதைத் தடுத்தது திராவிடத் தலைமைகள் எனில் மிகையாகாது. அவர்கள் எளிய பின்புலம் கொண்டவர்கள் என்பதால் தமிழ்ச் சாதிகள் அனைத்தையும் அரவணைத்துப் போகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. குறைந்தபட்சம் ஓட்டுக்காகவாவது, எப்படியாவது ஆட்சிக்கு வருவதற்கு என்றாவது, பெரும்பாலான சாதிகளை அணைத்தே ஆட்சியை வழிநடத்திச் சென்றார். ஒருவேளை தமிழ்ச் சாதிகள், தமது சாதியையே பெருமையான சாதியாக நினைக்கும் தமிழ்ச் சாதியொன்று பல்லாண்டு காலம் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருந்தால்.

தமிழரே, இங்கிருக்கும் அரசியல் அதிகாரம் எல்லையற்றது என்பதை அறிவீர். தலைமை அமைச்சருக்கு அன்றைய ராஜாவைவிட அதிக அதிகாரம்

அளிக்கப்பட்டுள்ளதை சிந்தியும். தற்போது தமிழ்ப் பற்றும், தமிழர் பற்றும் கூர்தீட்டி வரப்படுகின்றன. அதைவிட அதிக கூராக, வலிமையாக, சாதிப் பற்றும், சாதிய வெறியும் கூர்தீட்டப்படுவதையும் அறியும். சாதிவெறி கொண்ட தமிழ்ச் சாதி, ஆட்சிக்கு வந்தால் என்ன நிகழும் என்பதை சற்றே சிந்தியும். அதைத் தடுப்பதற்கு என்ன தேவை என்பது குறித்து எண்ணிப்பாரும். தமிழ்ச் சாதிகளில், அனைத்து மக்களையும், அனைத்துச் சாதிகளையும் அரவணைத்துச் செல்லக் கூடிய, ஒன்றிணைத்துப் பயணிக்கக் கூடிய சாதி, சாதிகள் எவை என்பதையும் சிந்தியும்.

தமிழரே, சாதிப் பகையை விடும். தமிழால் ஒன்றிணையும். மனிதராய் சமூகத்தை வழிநடத்தும். இனி தமிழ் நிலத்தில் சாதியின் பெயரால் வன்முறை வெறியாட்டம் நிகழக்கூடாது தமிழரே. நிகழுமேயானால் அத்தனை தமிழரும் பதில் சொல்ல வேண்டி வரும்.

யாருக்குப் பதில் சொல்ல எனக் கேட்கிறீரா? கேட்கும் வல்லமை கொண்டவன் ஒருவன் இருக்கிறான் தமிழரே. அவன் யாரென்பதை அவன் கேட்கும்போது அறிவீர். எதற்கும் சிந்தித்துச் செயல்படும்.

தமிழரே, தமிழராய்த் திரண்டெழும். அன்பால் இணையும். அறிவால் மேலெழும். உலகத்தை இணையும். உயர்த்தும்..

**மாண்புடைய தமிழ் நிலத்தின் தேவர்களே,**

36. மனிதரைத் தேவராக்குவது தேவர்களின் பெருங்கடமை என்பதை அறியுங்கள். மனிதர்கள் தேவராகினர் என்பதை அறிவிக்கும் காலம் மிக அன்மையில் வந்துவிட்டதை உணருங்கள். அதற்கான காலம் கைகூடி வந்துள்ளதை உலகிற்கு அறிவித்திடுங்கள்.

தேவேந்திரர்கள் முப்பெரும் விழா நடத்தி, தங்களது ஆன்மிகப் பயணத்தை, சடங்கு முறைகளைத் துவக்கிய 48நாட்களுக்குள்ளாக, தமிழகத்திலுள்ள தேவர்கள் மாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டும். மாநாட்டை கோவையில் கூட்டுவது பொருத்தமானது.

மாநாட்டிற்கு தமிழ்நிலத்தில் வாழும் தேவர்கள் - மறவர், அகமுடையார், கள்ளர் குடியினர் அழைக்கப்பட வேண்டும். தேவர்கள் வாழும் ஊர்களிலிருந்து

குறைந்தது நான்கு பேராவது இடம்பெற வேண்டும். இரு ஆண், இரு பெண் என இடம் பெறுவது சிறப்பு. அவர்கள் படித்தவர்களாக, பண்புடையவர்களாக இருப்பது நல்லது.

மாநாட்டிற்கு தேவர் சமூகத்தின் முன்னணித் தலைவர்கள், அரசியலாளர்கள், இலக்கியவாதிகள், நடிகர்கள், திரைப்படம் தொடர்புடையவர்கள் என அனைவரையும் அழைக்கலாம்.

மாநாட்டிற்கு வருவதற்குமுன் தேவர்கள் வாழும் ஊர்களில், கருப்பசாமி எனும் பெயர் கொண்ட கோவில்களிலிருந்து ஒருபடி மண் எடுத்து வர வேண்டும். கருப்பசாமி கோவில் முன்பக்கத்தில், அல்லது கிழக்குத் திசையில் ஒருபடி நாழி மண் எடுக்க வேண்டும். கோவிலின் தெய்வம் கருப்பசாமி என இருக்க வேண்டும். அதாவது கருப்பு என்பதை ஒட்டாகக் கொண்டிருக்க வேண்டும். கருப்பசாமி, கருப்பண்ணசாமி, கருப்பு எனும் பெயர்களை முன்னொட்டாகவோ, பின்னொட்டாகவோ கொண்ட கோவில்களின் நாழிமண்ணை மஞ்சள் நிறப் பட்டாலும், பதினெட்டாம்படி கருப்பசாமி என பதினெட்டு எனும் ஒட்டைக் கொண்ட கருப்பசாமி கோவிலின் நாழிமண்ணை பச்சைநிறப் பட்டாலும் சுற்றிக் கொள்க. பதினெட்டு எனும் பெயர் கொண்ட கருப்பசாமி கோவில் நாழியில், அந்தக் கோவில் இடம்பெற்றுள்ள ஊர், வட்டம், மாவட்டத்தை ஒரு குறிப்புச் சீட்டில் எழுதித் தொங்கவிடுக. அதைப் பற்றிய குறிப்பேட்டில் வரிசை எண், கோவில் பெயர், ஊர், வட்டம், மாவட்டம், ஊர்காரர்கள் இருவரின் அலைபேசி எண்கள் - அவர்களது பெயருடன் இடம் பெற வேண்டும். இந்த குறிப்பேடு இரண்டு படிகள் வேண்டும். எம்மிடம் ஒன்று இருக்கட்டும். எமக்கு பல்வேறு கனவுகள் வருகின்றன. ஏதேனும் தேவை ஏற்படின் குறிப்பிட்ட ஊரின் பதினெட்டாம்படிக் கருப்பசாமிக்கு யாம் சில சாஸ்திர சம்பிரதாய முறைகளைச் சொல்ல வேண்டி வரலாம். அதற்கே இந்தக் குறிப்பேடு.

தேவர்கள் வாழும் ஊர்களில், தேவேந்திரர்கள் மட்டும் வாழ்ந்து, அவர்கள் கருப்பசாமியைக் குலதெய்வமாகக் கும்பிட்டால் அந்தக் கருப்பசாமி கோவிலின் நாழிமண் வெண்ணிற பட்டுத் துணியால் சுற்றப்பட வேண்டும். தேவர்கள் வாழும் ஊர்களில் தேவேந்திரர் உட்பட பிற சமூகங்களும் வாழ்ந்து, அவர்கள் கருப்பசாமியைக் குலதெய்வமாக வழிபட்டால், அவர்களது கருப்பசாமி கோவில் நாழிமண் நீலப்பட்டால் சுற்றப்பட வேண்டும்.

மாநாட்டு மேடைமுன் இந்த நாழிமண்கள் மாவட்டம், மாவட்டத்தில் வட்டம் வாரியாக, அந்தந்த பட்டுத்துணி நிறத்தோடு ஒன்றாக வைக்கப்பட வேண்டும். இந்த நாழி மண்ணுக்கு சிறப்புகள், ஆராதனைகள், வழிபாடுகள் செய்யப்பட்டு, பெரியதொரு குதிரையொன்று உருவாக்கப்படும். அக்குதிரை வெண்கலக் காப்போடு கடலூர் கடற்கரையில் நிறுத்தப்படும். கடலூர் என்பது மாறுபாட்டுக்கு உட்பட்டது. அன்றைக்கு எழும் எண்ணத்திற்கு ஏற்ப மாறுபடும் அல்லது தேவர் சமூகத்தவர் ஏதேனும் பரிந்துரை செய்தால், அந்த ஊரில் இந்தக் குதிரை நிறுத்தப்படும்.

முதன்மை மேடை எட்டடி உயரத்தில், நாற்பத்தெட்டு அடி நீள அகலத்தில் நிறுவப்பட வேண்டும். மேடையில் சில காணொளிகள் ஒளிபரப்பபடலாம். அதற்கேற்ப ஒளிவீச்சி - புரெஜெக்டர், திரை இருக்க வேண்டும். திரை மேடையில் தற்காலிகமாக வைக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

முதன்மை மேடைக்கு வலது புறத்தில் 101 அடிகள் தள்ளி, 30 அடிகள் அகலத்தில் 300 அடிகள் நீளத்தில் 4 அடிகள் உயரத்தில் மேடையொன்று அமைக்க வேண்டும். மேடையில் மூன்று அடிகள் நீள அகலத்தில் ஆயிரம் சதுரங்கள் இடம்பெற வேண்டும். இந்த மேடையின் முன்பாக எட்டு அடி நீள அகல உயரத்தில் பத்தடிகள் முன்புறமாகத் தள்ளி ஒரு மேடையொன்று அமைய வேண்டும்.

இம்மேடைக்கு கேரளாவிலிருந்து 1000 செண்டை மேளக்காரர்கள் அழைக்கப்பட வேண்டும். செண்டை மேளத்தில் பெண்களும் இடம்பெறலாம். இவர்களுக்கு தலைமையானவர் என ஒருவர் வேண்டும். அவர் எட்டடி தனி மேடையில் முன்புறமாக நின்று இவர்களது மேளத்தை வழிநடத்த வேண்டும்.

முதன்மை மேடையின் இடது புறத்தில் 101 அடி இடைவெளியில், 30 அடி நீளம், 30 அடி அகலத்தில், நான்கு அடி உயரத்தில் மேடையொன்று அமைக்க வேண்டும். இங்கே மூன்றடி இடைவெளியில் வரிசைக்குப் பத்துப் பேர் என நூறு பேர் இடம் பெறுவர். இம்மேடைக்கு கொட்டடிப்பவர்கள் 100 பேர் அழைக்கப்பட வேண்டும். அவர்களுக்குத் தலைமையானவர் என ஒருவர் இருக்க வேண்டும். அவரது மேடை ஆறடி நீள, அகல, உயரத்தில் அவர்களது மேடைக்கு பத்தடிகள் முன்னே அமைக்கப்பட வேண்டும். இருமேடைகளிலும் சரியான அளவில், எண்ணிக்கையில், ஒளி, ஒலி அமைப்புகள், ஒலிபெருக்கிகள் இடம்பெற வேண்டும்.

முதன்மை மேடை வெண்மை நிறத்திலும், அதாவது வெள்ளை நிற தரைவிரிப்புகள், அலங்காரத்தோடும், வலது மேடை பச்சை நிறத்திலும், இடது மேடை மஞ்சள் நிறத்திலும் அமைய வேண்டும்.

பெருமைக்குரிய தேவர்களே, தேவேந்திரர்கள் அவர்களது சடங்கு முறைகளைத் துவக்கினால் மட்டுமே இந்த மாநாடு. அவர்கள் துவங்கவில்லை எனில் இம்மாநாடு தேவைப்படாது. நினைவில் கொள்க. அவர்கள் துவங்கிவிட்டாரெனில் அடுத்து நாற்பத்துஎட்டு நாட்களுக்குள் மாநாடு நடந்தாக வேண்டும். எக்காரணம் கொண்டும் தாமதம் கூடாது.

தேவர் எனும் பெருமைக்கு ஏற்றவாறு தமிழகத்துத் தேவர்கள் செயல்படுவார்கள் என உறுதியாய் நம்புகிறோம்.

புகழுக்குரிய தேவர்கள் நல்ல முடிவாக எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**வளர்க தேவர்கள் புகழ்.. வாழிய உலகம்..**

**பெருமைமிகு நாடார்களே,**

37. தேவர்கள் மாநாடு நடந்த, அடுத்த முப்பது நாட்களுக்குள் சென்னையில் உலகத் தமிழர் மாநாட்டைக் கூட்டுவது நாடார்களின் கடமையாகிறது. உலகத் தமிழர்களில் சிறந்த அரசியல் தலைவர்களை, அறிஞர்களை, ஆன்மீகவாதிகளை, எழுத்தாளர்களை, மதிப்பானவர்களை, தொழில் முனைவோர்களை அழைக்க வேண்டியது நாடார்களின் பொறுப்பு. அந்த மாநாட்டில் யாம் அடுத்து தமிழர்கள் மேற்கொள்ள வேண்டியவற்றை, மேற்கொள்ள வேண்டிய செயல்திட்டங்களை, பணிகளை எடுத்துரைப்போம்.

**உயரட்டும் நாடார் புகழ்.. பெருகட்டும் தமிழர் வாழ்வு..**

நேற்று நல்ல நாள். வரலெட்சுமி நோன்பு. கடந்த சில நாட்களாகவே நல்ல மழை பொழிகிறது. பூமி குளிர்ந்ததை அறிகிறோம். மழைவளம் செழிக்கட்டும் தாயே! மக்கள் நல்வாழ்வு பெறட்டும்.. மக்களின் இல்லங்களும், உள்ளங்களும் செழிக்க அருளுக அன்னையே! அரங்கத்து நாயகியே!

திங்கள் போற்றி!

ஞாயிறு போற்றி!

மாமழை போற்றி!

காவிரி போற்றி!

**திருவரங்கத்துத் தாயார் திருவடிகள் போற்றி!!**

இன்று 10.08.2019. தமிழகமெங்கும் காஞ்சி மாநகரின் புகழ் பெருகியிருக்கிறது. மக்களின் மனங்களில் அத்திவரதர் புகழ் கொண்டிருக்கிறார். காஞ்சியும், புத்தனும், பல்லவரும், எம்பெருமானாரும், பெருந்தேவித் தாயாரும், வரமளிக்கும் வரதரும் வாழிய பல்லாண்டு!

காஞ்சியின் புகழ் பெருகட்டும்! உலகம் உயரட்டும்!

வாழிய உலகம்! வாழிய அரங்கம்!

**வாழிய அரங்கன்!**

(புத்துலகில் சந்திப்போம்)

# புறநானூறு

## வாழச் செய்த நல்வினை!

பாடியவர் : ஔவையார்

சிறப்பு : சேரமான் மாரி வெண்கோவும், பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருங்கிருந்தாரைப் பாடியது.

திணை : பாடாண்

துறை : வாழ்த்தியல்

நாகத் தன்ன பாகார் மண்டிலம்
தமவே யாயினும் தம்மொடு செல்லா;
வெற்றோர் ஆயினும் நோற்றோர்க்கு ஒழியும்;
ஏற்றப் பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து,
பாசிழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய
நாரறி தேறல் மாந்தி, மகிழ் சிறந்து,
இரவலர்க்கு அருங்கலம் அருகாது விசி,
வாழ்தல் வேண்டும், இவண் வரைந்த வைகல்;
வாழச் செய்த நல்வினை அல்லது,
ஆழுங் காலைப் புணைபிறிது இல்லை;
ஒன்று புரிந்து அடங்கிய இருபிறப்பாளர்
முத்தீப் புரையக் காண்தக இருந்த
கொற்ற வெண்குடக் கொடித்தேர் வேந்திர்;
யான் அறி அளவையோ இவ்வே; வானத்து
வயங்கித் தோன்றும் மீனினும், இம்மெனப்
பரந்து இயங்கும் மாமழை உறையினும்,

உயர்ந்து மேந்தோன்றிப் பொலிக, நும்நாளே! (368)

## வேலி ஆயிரம் விளைக!

பாடியவர் : கல்லாடனார்

பாடப்பட்டோன் : பொறையாற்றுக் கிழான்

திணை : பாடாண்

துறை : கடைநிலை

தண்துளி பலபொழிந்து எழிலி இசைக்கும்
விண்டு அனைய விண்தோய் பிறங்கல்
முகடுற உயர்ந்த நெல்லின் மகிழ்வரப்
பகடுதரு பெருவளம் வாழ்த்திப் பெற்ற
திருந்தா மூரி பரந்துபடக் கெண்டி,
அரியல் ஆர்கையர் உண்டு இனிது உவக்கும்
வேங்கட வரைப்பின் வடபுலம் பசித்தென,
ஈங்குவந்து இறுத்தஎ(ம்) இரும்பேர் (ஒக்கல்)
நீர்கை விடுக்கும் பண்பின் முதுகுடி
நனந்தலை மூதூர் விளவலின்,
‘முன்னும் வந்தோன மருங்கிலன் இன்னும்
அளியன் ஆகலின், பொருநன் இவன்’ என,
நின்னுணர்ந்து அறியுநர் எ(ம்) உணர்ந்து கூறக்,
காண்கு வந்திசிற் பெரும, மாண்தக
இருநீர்ப் பெருங்கழி நுழைமீன் அருந்தும்
ததைந்த தூவியும் புதாஅஞ் சேக்கும்
துதைந்த புன்னைச் செழுநகர் வரைப்பின்,
நெஞ்சமர் காதல் நின்வெய் யோளடு,

இன்துயில் பெறுகதில் நீயே; வளஞ்சால்
துளிபதன் அறிந்து பொழிய,
வேலி ஆயிரம் விளைக நின் வயலே! (392)

**அவிழ் நெல்லின் அரியல்!**

| | | |
|---|---|---|
| பாடியவர் | : | மதுரை நக்கீரர் |
| பாடப்பட்டோன் | : | சோழநாட்டு பிடவூர்கிழார் மகன் பெருஞ்சாத்தன் |
| திணை | : | பாடாண் |
| துறை | : | கடைநிலை |

மென் புலத்து வயல் உழவர்
வன் புலத்துப் பகடு விட்டுக்
குறு முயலின் குழைச் சூட்டொடு
நெடு வாளைப் பல் உவியல்
பழஞ் சோற்றுப் புக வருந்திப்
புதல் தளவின் பூச் சூடி
அரில பறையாற் புள்ளோப்பி,
அவிழ் நெல்லின் அரியலா ருந்து;
மனைக் கோழிப் பைம்பயி ரின்னே,
கானக் கோழிக் கவர் குரலொடு,
நீர்க் கோழிக் கூப்பெயர்க் குந்து;
வேயன்ன மென் தோளால்,
மயில் அன்ன மென் சாயலார், கிளிகடி யின்னே;
அகல் அன்னற் புள்இரீஇ யுந்து; ஆங்கப்,
பலநல்ல புலன் அணியும்
சீர்சான்ற விழுச் சிறப்பின்,

சிறுகண் யானைப் பெறலருந் தித்தன்
செல்ல ாநல்லிசை உறந்தைக் குணாது,
நெடுங்கை வேண்மான் அருங்கடிப் பிடவூர்
அறப்பெயர்ச் சாத்தன் கிளையேம், பெரும!
முன்நாள் நண்பகல் சுரன்உழந்து வருந்திக்,
கதிர்நனி சென்ற கனையிருள் மாலைத்,
தன்கடைத் தோன்றி, எ(ம்) உறவு இசைத்தலின்,
தீங்குரல் .... கின் அரிக்குரல் தடாரியடு,
ஆங்கு நின்ற எற் கண்டு,
சிறிதும் நில்லான், பெரிதுங் கூறான்,
அருங்கலம் வரவே அருளிஎன் வேண்டி,
ஐயென உரைத்தன்றி நல்கித், தன்மனைப்
பொன்போல் மடந்தையைக் காட்டி இவளை
எ(ம்)போல் போற்று என்றோனே; அதற்கொண்டு,
அவன்மறவ லேனே, பிறர்உள்ள லேனே;
அகன் ஞாலம் பெரிது வெம்பினும்,
மிக வானுள் எரி தோன்றினும்,
குள மீனோடும் தாள் புகையினும்,
பெருஞ்செய் நெல்லின் கொக்குஉகிர் நிமிரல்
பசுங்கண் கருனைச் சூட்டொடு மாந்த,
‘விளைவு ஒன்றோ வெள்ளம் கொள்க!’ என,
உள்ளதும் இல்லதும் அறியாது,
ஆங்குஅமைந் தன்றால்; வாழ்க, அவன் தாளே! (396)

## பலநாளும் தலைநாளும்!

பாடியவர் : ஔவையார்

பாடப்பட்டோன் : அதியமான் நெடுமான் அஞ்சி

திணை : பாடாண்

துறை : பரிசில் கடாநிலை

ஒருநாள் செல்லலம்; இருநாட் செல்லலம்;
பன்னாள் பயின்று, பலரொடு செல்லினும்
தலைநாள் பொன்ற விருப்பினன் மாதோ;
அணிபூண் அணிந்த யானை இயல்தேர்
அதியமான்; பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினும், நீட்டாதாயினும், யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத்து தது அது; பொய்யா காதே;
அருந்தே மாந்த நெஞ்சம்!
வருந்த வேண்டா; வாழ்க, அவன் தாளே! (101)

## வாழ்க திருவடிகள்!

பாடியவர் : காவரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார்

பாடப்பட்டோன் : பிட்டங்கொற்றன்

திணை : பாடாண்

துறை : இயன்மொழி

இன்று செலினுந் தருமே; சிறுவரை
நின்று செலினுந் தருமே; பின்னும்,
‘முன்னே தந்தனென்’ என்னாது, துன்னி

வைகலும் செலினும், பொய்யலன் ஆகி,
யாம் வேண்டி யாங்குத் தன்இறை உவப்ப
அருந்தொழில் முடியரோ, திருந்துவேல் கொற்றன்;
இனமலி கதச்சேக் களனொடு வேண்டினும்,
களமலி நெல்லின் குப்பை வேண்டினும்,
அருங்கலம் களிற்றொடு வேண்டினும், பெருந்தகை
பிறர்க்கும் அன்ன அறத்தகை யன்னே,
அன்னன் ஆகலின், எந்தை உள்ளடி
முள்ளும் நோவ உற்றாக தில்ல!
ஈவோர் அரியஇவ் உலகத்து,
வாழ்வோர் வாழ, அவன் தாள் வாழியவே! (171)

**அவலம் தீரத் தோன்றினாய்!**

| | | |
|---|---|---|
| பாடியவர் | : | மாறோக்கத்து நப்பசலையார் |
| பாடப்பட்டோன் | : | மலையமான் சோழிய வேனாதி திருக்கண்ணன் |
| திணை | : | வாகை |
| துறை | : | அரச வாகை |

அணங்குடைஅ வுணர் கணம்கொண்டு ஒளித்தெனச்
சேண்விளங்கு சிறப்பின் ஞாயிறு காணாது,
இருள்கண் கெடுத்த பருதி ஞாலத்து
இடும்பைகொள் பருவரல் தீரக், கடுந்திறல்
அஞ்சன் உருவன் தந்து நிறுத்தாங்கு,
அர சிழந்து இருந்த அல்லற் காலை,
முரசுஎழுந்து இரங்கும் முற்றமொடு, கரைபொருது
இரங்குபுனல் நெரிதரு மிகுபெருங் காவிரி

மல்லல் நன்னாட்டு அல்லல் தீரப்,
பொய்யா நாவிற் கபிலன பாடிய,
மையணி நெடுவரை ஆங்கண் ஒய்யெனச்
செருப்புகல் மறவர் செல்புறம் கண்ட
எள்ளறு சிறப்பின் முள்ளூர் மீமிசை,
அருவழி இருந்த பெருவிறல் வளவன்
மதிமருள் வெண்குடை காட்டி, அக்குடை
புதுமையின் நிறுத்த புகழ்மேம் படுந!
விடர்ப்புலி பொறித்த கோட்டைச், சுடர்ப்பூண்
சுரும்பார் கண்ணிப், பெரும்பெயர் நும்முன்
ஈண்டுச் செய் நல்வினை
யாண்டுச் சென்று உணீஇயர்,
உயர்ந்தோர் உலகத்துப் பெயர்ந்தனன் ஆகலின்,
ஆறுகொள் மருங்கின் மாதிரம் துழவும்
கவலை நெஞ்சத்து அவலந் தீர
நீதோன் றினையே - நிரைத்தார் அண்ணல்!
கல்கண் பொடியக், கானம் வெம்ப
மல்குநீர் வரைப்பில் கயம்பல உணங்கக்,
கோடை நீடிய பைதறு காலை,
இருநிலம் நெளிய ஈண்டி,
உரும்உரறு கருவிய மழைபொழிந் தாங்கே! (174)

## கவரி வீசிய காவலன்!

பாடியவர் : மோசிசீரனார்

பாடப்பட்டோன் : சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை

திணை : பாடாண்

துறை : இயன்மொழி

மாசற விசித்த வார்புஉறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய, மஞ்ஞை
ஒலிநெடும் பீலி ஒண்பொறி, மணித்தார்,
பொலங்குழை உழிஞையடு, பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை உருகெழு முரசம்
மண்ணி வாரா அளவை, எண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியாது ஏறிய எம்மைத் தெறுவர,
இருபாற் படுக்குநின் வாள்வாய் ஒழித்ததை
அதூஉம் சாலும், நற் றமிழ்முழுது அறிதல்;
அதனோடும் அமையாது, அணுக வந்து, நின்
மதனுடை முழவுத்தோள் ஓச்சித் தண்ணென
வீசி யோயே; வியலிடம் கமழ,
இவன்இசை உடையோர்க்கு அல்லது, அவனது
உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்;
வலம்படு குருசில்! நீ(ய்) ஈங்குஇது செயலே? (50)

**கரும்பனூரன் காதல் மகன்!**

பாடியவர் : புறத்திணை நன்னகனார்

பாடப்பட்டோன் : கரும்பனூர் கிழான்

திணை : பாடாண்

துறை : இயன்மொழி

ஊனும் ஊணும் முனையின், இனிதெனப்
பாலிற் பெய்தவும், பாகிற் கொண்டவும்
அளவுபு கலந்து, மெல்லிது பருகி,
விருந்து உறுத்து, ஆற்ற இருந்தெனமாகச்,
'சென்மோ, பெரும! எம் விழவுடை நாட்டு?' என,
யாம்தன் அறியுநமாகத் தான் பெரிது
அன்புடை மையின், எம்பிரிவு அஞ்சித்
துணரியது கொளாஅ வாகிப், பழம்ஊழ்த்துப்,
பயம்பகர் வறியா மயங்கரில் முதுபாழ்ப்
பெயல்பெய் தன்ன, செல்வத்து ஆங்கண்
ஈயா மன்னர் புறங்கடைத் தோன்றிச்,
சிதாஅர் வள்பின் சிதர்ப்புறத் தடாரி
ஊன்சுகிர் வலந்த தெண்கண் ஒற்றி,
விரல்விசை தவிர்க்கும் அரலையில் பாணியின்,
இயல்பாடு அகற்றல் யாவது? புலம்பொடு
தெருமரல் உயக்கமும் தீர்க்குவெம்; அதனால்
இருநிலம் கூலம் பாறக், கோடை
வருமழை முழக்கு இசைக்கு ஓடிய பின்றைச்,
சேயை யாயினும், இவணை யாயினும்
இதற்கொண்டு அறிநை; வாழியோ, கிணைவ!

சிறுநனி, ஒருவழிப் படர்க என்றோனே - எந்தை
ஒலிவெள் அருவி வேங்கட நாடன்;
உறுவரும் சிறுவரும் ஊழ்மாறு உய்க்கும்
அறத்துறை அம்பியின் மான, மறப்பின்று
இருங்கோள் ஈராப் பூட்கைக்
கரும்பன் ஊரன் காதல் மகனே! (381)

## தென்குமரி!

பாடியவர் : குறுங்கோழியூர் கிழார்
பாடப்பட்டோன் : சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை
திணை : வாகை
துறை : அரச வாகை; இயன்மொழியும் ஆம்.

தென் குமரி, வட பெருங்கல்,
குண குட கடலா வெல்லை,
குன்று, மலை, காடு, நாடு
ஒன்று பட்டு வழிமொழியக்,
கொடிது கடிந்து, கோல் திருத்திப்,
படுவது உண்டு, பகல் ஆற்றி,
இனிது உருண்ட சுடர் நேமி
முழுது ஆண்டோர் வழி காவல!

குலை இறைஞ்சிய கோள் தாழை
அகல் வயல், மலை வேலி,
நிலவு மணல் வியன் கானல்,

தெண் கழிமிசைச் சுடர்ப் பூவின்,
தண் தொண்டியோர் அடு பொருந!
மாப் பயம்பின் பொறை போற்றாது,
தீடு குழி அகப் பட்ட
பீடு உடைய எறுழ் முன்பின்
கோடு முற்றிய கொல் களிறு,
நிலை கலங்கக் குழி கொன்று,
கிளை புகலத் தலைக்கூடி யாங்கு
நீ(ய்) பட்டஅரு முன்பின்,
பெருந் தளர்ச்சி பலர் உவப்பப்,
பிறிது சென்று, மலர் தாயத்துப்
பலர் நாப்பண் மீக் கூறலின்,
‘உண் டாகிய உயர் மண்ணும்,
சென்று பட்ட விழுக் கலனும்,
பெறல் கூடும், இவன் நெஞ்சு
உறப்பெறின்’ எனவும்,

‘ஏந்து கொடி இறைப் புரிசை,
வீங்கு சிறை, வியல் அருப்பம்,
இழந்து வைகுதும், இனிநாம், இவன்
உடன்று நோக்கினன், பெரிது’ எனவும்,
வேற்று அரசு பணி தொடங்குநின்
ஆற்ற லொடு புகழ் ஏத்திக்,
காண்கு வந்திசின், பெரும! ஈண்டிய
மழையென மருளும் பல் தோல், மலையெனத்
தேன்இறை கொள்ளும் இரும்பல் யானை,

உடலுநர் உட்க வீங்கிக், கடலென
வான்நீர்க்கு ஊக்கும் தானை, ஆனாது
கடுஒடுங்கு எயிற்ற அரவுத்தலை பனிப்ப,
இடியென முழங்கு முரசின்,
வரையா ஈகைக் குடவர் கோவே! (17)

## முழங்கு முந்நீர்!

பாடியவர் : குடபுலவியனார்

பாடப்பட்டோன் : பாண்டியன் நெடுஞ்செழியன்

திணை : பொதுவியல்

துறை : முதமொழிக் காஞ்சி; பொருண்மொழிக் காஞ்சியும் ஆம்.

முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்த பட்ட வியன் ஞாலம்
தாளின் தந்து, தம்புகழ் நிறீஇ;
ஒருதாம் ஆகிய உரவோர் உம்பல்!
ஒன்றுபத்து அடுக்கிய கோடிகடை இரீஇய
பெருமைத்து ஆக நின் ஆயுள் தானே!
நீர்த் தாழ்ந்த குறுங் காஞ்சிப்
புக் கதூஉம் இன வாளை,
நுண் ஆரல், பரு வரால்,
குரூஉக் கெடிற்ற, குண்டு அகழி;
வான் உட்கும் வடிநீண் மதில்;
மல்லல் மூதூர் வய வேந்தே!
செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்,
ஞாலம் காவலர் தோள்வலி முருக்கி,

ஒருநீ ஆகல வேண்டினும், சிறந்த
நல்இசை நிறத்தல் வேண்டினும், மற்றதன்
தகுதி கேள், இனி, மிகுதியாள!
நீர்இன்றி அமையா யாக்கைக்கு எல்லாம்,
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே;
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தோடு நீரே;
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே;
வித்திவான் நோக்கும் புல்புலம் கண்ணகன்
வைப்புற்று ஆயினும், நண்ணி ஆளும்
இறைவன் தாட்குஉத வாதே; அதனால்,
அடுபோர்ச் செழிய! இகழலாது வல்லே
நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம, இவண்தட் டோரே;
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே! (18)

**இருமுந்நீர்!**

| | | |
|---|---|---|
| பாடியவர் | : | குறுங்கோழியூர்கிழார் |
| பாடப்பட்டோன் | : | மாந்தரஞ் சேரல் இரும்பொறை |
| திணை | : | வாகை |
| துறை | : | அரச வாகை |

இரு முந்நீர்க் குட்டமும்,
வியன் ஞாலத்து அகலமும்,
வளி வழங்கும் திசையும்,

வறிது நிலைஇய காயமும், என்றாங்கு
அவை அளந்து அறியினும், அளத்தற்கு அரியை;
அறிவும், ஈரமும், பெருங்க ணோட்டமும்;
சோறு படக்கும் தீயோடு
செஞ் ஞாயிற்றுத் தெறல் அல்லது
பிறிது தெறல் அறியார் நின் நிழல்வாழ் வோரே;
திருவில் அல்லது கொலைவில் அறியார்;
நாஞ்சில் அல்லது படையும் அறியார்;
திறனறி வயவரொடு தெவ்வர் தேய, அப்
பிறர்மண் உண்ணும் செம்மல், நின் நாட்டு
வயவுறு மகளிர் வேட்டு உணின் அல்லது,
பகைவர் உண்ணா அருமண் ணினையே;
அம்பு துஞ்சும்கடி அரணால்,
அறம் துஞ்சும் செங்கோலையே;
புதுப்புள் வரினும், பழம்புள் போகினும்,
விதுப்புற அறியா ஏமக் காப்பினை;
அனையை ஆகல் மாறே,
மன்னுயிர் எல்லாம் நின்அஞ் சும்மே! (20)

**நெல் அரியும்!**

| | | |
|---|---|---|
| பாடியவர் | : | மாங்குடி கிழார் |
| பாடப்பட்டோன் | : | பாண்டியன் தலையானங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் |
| திணை | : | பொதுவியல் |
| துறை | : | பொருண்மொழிக் காஞ்சி |

நெல் அரியும் இருந் தொழுவர்
செஞ் ஞாயிற்று வெயில் முனையின்,
தென் கடல்திரை மிசைப்பா யுந்து;
திண் திமில் வன் பரதவர்
வெப் புடைய மட்டுண்டு,
தண்குரவைச் சீர்தூங் குந்து;
தூவற் கலித்த தேம்பாய் புன்னை
மெல்லிணர்க் கண்ணி மிலைந்த மைந்தர்
எவ்வளை மகளிர்த் தலைக்கை தரூஉந்து;
வண்டுபட மலர்ந்த தண்ணறுங் கானல்
முண்டகக் கோதை ஒண்டொடி மகளிர்
இரும் பனையின் குரும்பை நீரும்,
பூங் கரும்பின் தீஞ் சாறும்
ஓங்கு மணற் குலவுத் தாழைத்
தீ(ய்) நீரோடு உடன் விராஅய்,
முந்நீர் உண்டு முந்நீர் பாயும்;
தாங்கா உறையுள் நல்லூர் கெழீஇய
ஓம்பா ஈனக் மாவேள் எவ்வி
புனலம் புதவின் மிழலையடு, கழனிக்
கயலார் நாரை போர்வில் சேக்கும்,
பொன்னணி யானைத் தொன்முதிர் வேளிர்,
குப்பை நெல்லின் முத்தூறு தந்த
கொற்ற நீள்குடைக், கொடித்தேர்ச் செழிய!
நின்று நிலைஇயர் நின் நாண்மீன்; நில்லாது
படாஅச் செலீஇயர், நின்பகைவர் மீனே; நின்னொடு
தொன்றுமூத்த உயிரினும், உயிரொடு

நின்று மூத்த யாக்கை யன்ன, நின்
ஆடுகுடி மூத்த விழுத்திணைச் சிறந்த
வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த
இரவன் மரக்கள் ஈகை நுவல,
ஒண்மொடி மகளிர் பொலங்கலத்து ஏந்திய
தண்கமழ் தேறல் மடுப்ப, மகிழ்சிறந்து,
ஆங்குஇனிது ஒழுகுமதி, பெரும! ஆங்கது
வல்லுநர் வாழ்ந்தோர், என்ப, தொல்லிசை,
மலர்தலை உலகத்துத் தோன்றிப்
பலர்செலச் செல்லாது, நின்று விளிந்தோரே! (24)

**சேற்று வளர்!**

பாடியவர் : உறையூர் முதுகண்ணன் சாத்தனார்
பாடப்பட்டோன் : சோழன் நலங்கிள்ளி
திணை : பொதுவியல்
தறை : முதுமொழிக் காஞ்சி

சேற்று வளர் தாமரை பயந்த, ஒண்கேழ்,
நூற் றிதழ் அலரின் நிறை மண் டன்ன,
வேற்றுமை இல்லா விழுத்திணைப் பிறந்து,
வீற்றிருந் தோரை எண்ணுங் காலை,
உரையும் பாட்டும் உடையோர் சிலரே;
மரைஇலை போல மாய்ந்தி சினோர் பலரே;
புலவர் பாடம் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான ஊர்தி
எய்துப என்ப, தம் செய்வினை முடித்து எனக்

கேட்பல்; எந்தை! சேட் சென்னி! நலங்கிள்ளி!
தேய்தல் உண்மையும், பெருகல் உண்மையும்,
மாய்தல் உண்மையும், பிறத்தல் உண்மையும்,
அறியா தோரையும், அறியக் காட்டித்,
திங்கள் புத்தேள், திரிதரும் உலகத்து,
வல்லார் ஆயினும், வல்லுநர் ஆயினும்,
வருந்தி வந்தோர் மருங்கி நோக்கி,
அருள வல்லை ஆகுமதி; அருளிலர்
கொடா அமை வல்லர் ஆகுமா;
கெடாஅத் துப்பின்நின் பகைஎதிர்ந் தோரே! (பாடல் 27)

**வடாஅதுபனிபடு!**

| | | |
|---|---|---|
| பாடியவர் | : | காரிகிழார் |
| பாடப்பட்டோன் | : | பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி |
| திணை | : | பாடாண் |
| துறை | : | செவியறிவுறூஉ; வாழ்த்தியலும் ஆம். |

வாடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்,
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்,
கீழது முப்புணர் அடுங்கிய முறைமுதற் கட்டின்
நீர்நிலை நிவப்பின் கீழும், மேலது
ஆனிலை உலகத் தானும், ஆனாது,
உருவும் புகழும் ஆகி, விரிசீர்த்
தெரிகோல் ஞமன்ன் போல, ஒரு திறம்

பற்றல் இலியரோ! நின் திறம் சிறக்க!
செய்வினைக்கு எதிர்ந்த தெவ்வர் தேஎத்துக்,
கடற்படை குளிப்ப மண்டி, அடர்ப் புகர்ச்
சிறுகண் யானை செவ்விதின் ஏவிப்,
பாசவற் படப்பை ஆர்எயில் பலதந்து,
அவ்வெயில் கொண்ட செய்வுறு நன்கலம்
பரிசின் மாக்கட்கு வரிசையின் நல்கிப்,
பணியினர் அத்தை நின் குடையே; முனிவர்
முக்கண் செலவர் நகர்வலஞ் செயற்கே!
இறைஞ்சுக, பெரும! நின் சென்னி; சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே!
வாடுக, இறைவ நின் கண்ணி! ஒன்னார்
நாடுசுடு கமழ்புகை எறித்த வானே!
செலிஇயர் அத்தை, நின் வெகுளி; வால் இழை
மங்கையர் துனித்த வாள்முகத்து எதிரே!
ஆங்க, வென்றி எல்லாம்
வென்றுஅகத்து அடக்கிய
தண்டா ஈகைத் தகைமாண் குடுமி!
தண்கதிர் மதியம் போலவும், தெறுசுடர்
ஒண்குதிர் ஞாயிறு போலவும்,
மன்னிய, பெரும! நீ(ய்) நிலமிசை யானே! (6)

**ஆன்முலை!**

| | | |
|---|---|---|
| பாடியவர் | : | ஆலந்தூர்கிழார் |
| பாடப்பட்டோன் | : | சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் |

திணை : பாடாண்

துறை : இயன்மொழி

‘ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்,
மாண்இழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்,
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்,
வழுவாய் மருங்கின் கழுவாயும் உள’ என,
‘நிலம்புடை பெயர்வ தாயினும், ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்’ என,
அறம் பாடின்றே ஆயிழை கணவ!
காலை அந்தியும், மாலை அந்தியும்,
புறவுக் கருவன்ன புன்புல வரகின்
பாற்பெய் புன்கம் தேனோடு மயக்குக்,
குறுமுயற் கொழுஞ்சூடு கிழித்த ஒக்கலொடு,
இரத்தி நீடிய அகன்தலை மன்றத்துக்,
கரப்பில் உள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி,
அமலைக் கொழுஞ்சோறு ஆர்ந்த பாணர்க்கு
அகலாச் செல்வம் முழுவதும் செய்தோன்,
எங்கோன், வளவன் வாழ்க! என்று, நின்
பீடுகெழு நோன்தாள் பாடோம் ஆயின்,
படுபறி யலனே, பல்கதிர்ச் செல்வன்;
யானோ தஞ்சம்; பெரும! இவ் வுலகத்துச்
சான்றோர் செய்த நன்றுண் டாயின்,
இமையத்து ஈண்டி, இன்குரல் பயிற்றிக்,
கொண்டல் மாமழை பொழிந்த
நுண்பகல் துளியினும் வாழிய, பலவே! (34)

## பிறர்கென முயலுநர்!

பாடியவர் : கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

திணை : பொதுவியல் துறை

துறை : பொருண்மொழிக் காஞ்சி

உண்டால் அம்ம, இவ்வுலகம்; இந்திரர்;
அமிழ்தம் இயைவ தாயினும்,
இனிது எனத்
தமியர் உண்டலம் இலரே; முனிவிலர்!
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்,
புகழ்எனின், உயிருங் கொடுக்குவர்,
பழியெனின்,
உலகுடன் பெறினும், கொள்ளலர், அயர்விலர்;
அன்ன மாட்சி அனைய ராகித்,
தமக்கென முயலா நோன்தாள்,
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே! (182)

## கற்கை நன்றே!

பாடியவர் : ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்

திணை : பொதுவியல்

துறை : பொருண்மொழிக் காஞ்சி

உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்,
பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே!
பிறப்பு ஓர் அன்ன உடன்வயிற்று உள்ளும்,
சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்,

ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்,

‘மூத்தோன் வருக’ என்னாது, அவருள்

அறிவுடை யோன் ஆறு அரசும் செல்லும்;

வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்;

கீழ்ப்பால் ஒருவன் கற்பின்

மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே! (183)

## வேந்தர்க்குக் கடனே!

பாடியவர் : மோசிகீரனார்

திணை : பொதுவியல்

துறை : பொருண்மொழிக் காஞ்சி

நெல்லும் உயிர் அன்றே, நீரும் உயிர் அன்றே;

மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;

அதனால், யான்உயிர் என்பது அறிகை

வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே. (186)

## உண்பதும் உடுப்பதும்!

பாடியவர் : மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்

திணை : பொதுவியல்

துறை : பொருண்மொழிக் காஞ்சி

தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி

வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்,

நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்

கடுமாய் பார்க்கும் கல்லா ஒருவருக்கும்,

உண்பழி நாழி; உடுப்பவை இரண்டே;
பிறவும் எல்லாம் ஓரொக் குமே;
அதனால், செல்வத்துப் பயனே ஈதல்;
துய்ப்பேம் எனின், தப்புந பலவே! (189)

**மயக்குறு மக்களை இல்லோர்!**

பாடியவர் : பாண்டியன் அறிவுடை நம்பி

திணை : பொதுவியல்

துறை : பொருண்மொழிக் காஞ்சி

படைப்புப்பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வர் ஆயினும்,
இடைப்படக்
குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி,
இட்டும், தொட்டும், கல்வியும், துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்,
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் - தாம் வாழும் நாளே! (188)

**யாதும் ஊரே!**

பாடியவர் : கணியன் பூங்குன்றன்

திணை : பொதுவியல்

துறை : பொருண்மொழிக் காஞ்சி

யாது மூரே; யாவருங் கேளிர்;
தீது நன்றும் பிறர்தர வாரா;

நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன;
சாதலும் புதுவ தன்றே; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே;
முனிவின்,
இன்னா தென்றலு மிலமே; மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன
மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே;
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே! (192)

## இழத்தலினும் இன்னாது!

பாடியவர் : பெருந்தலைச் சாத்தனார்
பாடப்பட்டோன் : குமணன்
திணை : பாடாண்
துறை : பரிசில்விடை

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே;
துன்னரும் சிறப்பின் உயர்ந்த செல்வர்,
இன்மையின் இரப்போர்க்கு ஈஇயாமையின்,
தொன்மை மாக்களின் தொடர்பு அறியலரே;
தாள்தாழ் படுமணி பாடுநர்க்கு அருகாக்
கேடில் நல்லிசை வயமான் தோன்றலைப்

பாடி நின்றென்ன ஆகக், கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல், எ(ம்)
நாடுஇழந் ததனினும் நனிஇன் னாது என,
வாள்தந் தனனே, தலை எமக்கு ஈயத்,
தன்னிற் சிறந்தது பிறிதுஒன்று இன்மையின்;
ஆடுமலி உவகையோடு வருவல்,
ஓடாப் பூட்கைநிற் கிழமையோன் கண்டே! (165)

## யாமும் செய்வோம்!

| | | |
|---|---|---|
| பாடியவர் | : | ஆவூர் மூலங் கிழார் |
| பாடப்பட்டோன் | : | சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன். |
| திணை | : | வாகை |
| துறை | : | பார்ப்பன வாகை |

நன்றாய்ந்த நீள் நிமிர்சடை
முது முதல்வன் வாய் போகாது,
ஒன்று புரிந்த ஈரி ரண்டின்,
ஆறுணர்ந்த ஒரு முதுநூல்
இகல் கண்டோர் மிகல் சாய்மார்,
மெய் அன்ன பொய் உணர்ந்து,
பொய் ஓராது மெய் கொளீஇ,
மூவேழ் துறையும் முட்டின்று போகிய
உரைசால் சிறப்பின் உரவோர் மருக!
வினைக்கு வேண்டி நீ(ய்) பூண்ட
புலப் புல்வாய்க் கலைப் பச்சை

சுவல் பூண்ஞான் மிசைப் பொலிய;
மறம் கடிந்த அருங் கற்பின்,
அறம் புகழ்ந்த வலை சூடிச்,
சிறு நுதல், பேர் அகல் அல்குல்,
சில சொல்லின் பல கூந்தல், நின்
நிலைக் கொத்திநின் துணைத் துணைவியர்
தமக்கு அமைந்த தொழில் கேட்பக்;
காடு என்றா நாடுஎன்று ஆங்கு
ஈரேழின் இடம் முட்டாது
நீர் நாண நெய் வழங்கியும்,
எண் நாணப் பல வேட்டும்,
மண் நாணப் புகழ் பரப்பியும்,
அருங் கடிப் பெருங் காலை,
விருந்து உற்றநின் திருந்து ஏந்துநிலை,
என்றும், காண்கதில் அம்ம, யாமே!
குடாஅது
பொன்படு நெடுவரைப் புயல் ஏறு சிலைப்பின்,
பூவிரி புதுநீர்க் காவிரி புரக்கும்
தண்புனற் படப்பை எம்மூர் ஆங்கண்,
உண்டும் தின்றும் ஊர்ந்தும் ஆடுகம்;
செல்வல் அத்தை யானே; செல்லாது,
மழைஅண் ணாப்ப நீடிய நெடுவரைக்
கழைவளர் இமயம்போல,
நிலீஇயர் அத்தை, நீ(ய்) நிலமிசை யானே! (166)

## வைகம் வாரீர்!

பாடியவர் : பொத்தியார்

பாடப்பட்டோன் : கோப்பெருஞ்சோழன்

திணை : பொதுவியல்

துறை : கையறு நிலை

பாடுநர்க்கு ஈத்த பல்புக ழன்னே;
ஆடுநர்க்கு ஈத்த பேரன் பினனே;
அறவோர் புகழ்ந்த ஆய்கோ லன்னே;
திறவோர் புகழ்ந்த தின்நண் பினனே;
மகளிர் சாயல்; மைந்தர்க்கு மைந்து;
துகளறு கேள்வி உயர்ந்தோர் புக்கில்;
அனையன் என்னாது, அத்தக் கோனை,
நினையாக் கூற்றம் இன்னுயிர் உய்த்தின்று;
பைதல் ஒக்கல் தழீஇ, அதனை
வைகம் வம்மே, வாய்மொழிப் புலவீர்!
'நனந்தலை உலகம் அரந்தை தூங்கக்,
கெடுவில் நல்லிசை சூடி,
நடுகல் ஆயினன் புரவலன்' எனவே! (221)

## மூவேந்தர் முன் கபிலர்!

பாடியவர் : கபிலர்

பாடப்பட்டோன் : வேள்பாரி

திணை : நொச்சி

துறை : மகண் மறுத்தல்

அளிதோ தானே, பாரியது புறம்பே!

நளி கொள் முரசின் மூவிரும் முற்றினும்,

உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே

ஒன்றே, சிறியிலை வெதிரின்

நெல்விளை யும்மே;

இரண்டே, தீஞ்சுளைப் பலவின்

பழம் ஊழ்க் கும்மே;

மூன்றே, கொழுங்கொடி வள்ளிக்

கிழங்கு வீழ்க்கும்மே;

நான்கே, அணிநிற ஓரி பாய்தலின், மீது அழிந்து,

திணி நெடுங் குற்றம் தேன்சொரி யும்மே;

வான் கண் அற்று, அதன் மலையே;

வானத்து

மீன்கண் அற்று, அதன் சுனையே; ஆங்கு

மரந்தொறும் பிணித்த களிற்றினிர் ஆயினும்,

புலந்தொறும் பரப்பிய தேரினிர் ஆயினும்.

தாளின் கொள்ளலிர், வாளின் தாரலன்;

யான்அறி குவென், அது கொள்ளும் ஆறே;

சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி,

விரையலி கூந்தல் நும் விறலியர் பின்வர,

ஆடினிர் பாடினிர் செலினே,

நாடும் குன்றும் ஒருங்குஈ யும்மே! (109)

## நல்லவனோ அவன்!

பாடியவர் : வெண்ணிக் குயத்தியார்

பாடப்பட்டோன் : சோழன் கரிகாற் பெருவளத்தான்

திணை : வாகை

துறை : அரச வாகை

நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி,
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!
களிஇயல் யானைக் கரிகால் வளவ!
சென்று அமர்க் கடந்த நின் ஆற்றல் தோன்ற
வென்றோய், நின்னிலும நல்லன் அன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை,
மிகப் புகழ் உலகம் எய்திப்,
புறப்புண் நாணி, வடக் கிருந்தோனே! (66)

## கொடைமடமும் படைமடமும்!

பாடியவர் : பரணர்

பாடப்பட்டோன் : வையாவிக் கோப்பெரும் பேகன்

திணை : பாடாண்

துறை : இயன்மொழி

அறுகுளத்து உகுத்தும், அகல்வாய் பொழிந்தும்,
உலுமிடத்து உதவாது உவர்நிலம் ஊட்டியும்,
வரையா மரபின் மாரி போலக்,
கடாஅ யானைக் கழற்கால் பேகன்
கொடைமடம் படுதல் அல்லது,
படைமடம் படான் பிறர் படைமயக் குறினே! (142)

## பகைவரும் வாழ்க!

பாடியவர் : வடமண்ணக்கன் தாமோதரனார்

பாடப்பட்டோன் : பிட்டங்கொற்றன்

திணை : பாடாண்

துறை : இயன்மொழி

ஏற்றுக உலையே; ஆக்குக சோறே;
கள்ளும் குறைபடல் ஓம்புக; ஒள்ளிழைப்
பாடுவல் விறலியர் கோதையும் புனைக;
அன்னவை பலவும் செய்க;
என்ன தூஉம்
பரியல் வெண்டா வருபதம் நாடி,
ஐவனங் காவல் பெய்தீ நந்தின்,
ஒலிதிகழ் திருந்துமணி நளியிருள் அகற்றும்
வன்புல நாடன், வயமான் பிட்டன;
ஆரமர் கடக்கும் வேலும், அவனிறை
மாவள் ஈகைக் கோதையும்
மாறுகொள் மன்னரும், வாழியர் நெடிதே! (172)

## நெஞ்சும் திறப்போர் நிற்காண் குவரே!

பாடியவர் : கள்ளில் ஆத்திரையனார்

பாடப்பட்டோன் : ஆதனுங்கன்

திணை : பாடாண்

துறை : இயன்மொழி

எந்தை; வாழி; அதனுங்க! எ(ம்)
நெஞ்சம் திறப்போர் நிற்காண் குவரே;
நின்யான் மறப்பின், மறக்குங் காலை,
எ(ம்) உயிர் யாக்கையிற் பிரியும் பொழுதும்,
எ(ம்) யாம் மறப்பின், மறக்குவென் - வென்வேல்
விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைந்த
உலக இடைகழி அறைவாய் நிலைஇய
மலர்வாய் மண்டிலத் தன்ன, நாளும்
பலர்புரவு எதிர்ந்த அறத்துறை நின்னே! (175)

**பாண்பசிப் பகைஞன்!**

| | | |
|---|---|---|
| பாடியவர் | : | கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் |
| பாடப்பட்டோன் | : | ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறன் |
| திணை | : | வாகை |
| துறை | : | வல்லாண்முல்லை; பாணாற்றுப் படையும் ஆம். |

நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே;
இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே;
இறையுறு விழுமம் தாங்கி அமர்அகத்து
இரும்புசுவைக் கொண்ட
விழுப்புண்நோய் தீர்த்து
மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி,
வடுவின்றி வடிந்த யாக்கையன், கொடையெதிர்ந்து
ஈர்ந்தை யோனே, பாண்பசிப் பகைஞன்;
இன்மை தீர வேண்டின், எம்மொடு

நீயும் வம்மோ? முதுவாய் இரவல!
யாம்தன் இரக்கும் காலைத், தான்எம்
உண்ணா மருங்குலவ் காட்டித், தன் ஊர்க்
கருங்கைக் கொல்லனை இரக்கும்,
'திருந்திலை நெடுவேல் வடித்திசின்' எனவே! (180)

## நீயே புறவின்!

பாடியவர் : கோவூர் கிழார்

பாடப்பட்டோன் : சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்

திணை : வஞ்சி

துறை : துணை வஞ்சி

நீயே, புறவின் அல்லல் அன்றியும், பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை;
இவரே, புலனுமுது உண்மார் புன்கண் அஞ்சித்,
தமதுபகுத்து உண்ணும் தண்ணிழல் வாழ்நர்?
களிறுகண்டு அழூஉம் அழாஅல் மறந்த
புன்றலைச் சிறாஅர் மன்று மருண்டு நோக்கி,
விருந்திற் புன்கண்நோ வுடையர்;
கெட்டனை யாயின் நீ(ய்) வேட்டது செய்ம்மே! (46)

## நாடன் என்கோ!

பாடியவர் : பொய்கையார்

பாடப்பட்டோன் : சேரமான் கோக்கோதை மார்பன்

திணை : பாடாண்

துறை : புலவராற்றுகப் படை

நாடன் என்கோ? ஊரன் என்கோ?
பாடிமிழ் பனிக்கடற் சேர்ப்பன் என்கோ?
யாங்கனம் மொழிகோ, ஓங்குவான் கோதையை?
புனவர் தட்டை புடைப்பின், அயலது
இறங்குகதிர் அலமரு கழனியும்,
பிறங்குநீர்ச் சேர்ப்பினும்,
புள் ஒருங்கு எழுமே! (49)

**போர்க்களத்தானே!**

பாடியவர் : காவற்பெண்டு : காதற்பெண்டுமாம்.

திணை : வாகை

துறை : ஏறாண் முல்லை

சிற்றில் நற்றூண்பற்றி, நின்மகன்
யாண்டு உளன் ஆயினும் அறியேன்,
ஓரும் புலி சேர்ந்து போகிய கல்அளை போல,
ஈன்ற வயிறோ இதுவே;
தோன்றுவன் மாதோ, போர்க்களத் தானே! (86)

## வாழிய வாழியவே!

வருநர்க்கு வரையாது தருவன் - சேரன் வாழி!

வறுங்கலம் நிறைப்போன் - சோழன் வாழி!

பான்பசிப் பகைஞன் - பாண்டியன் வாழி!

இல்லோர் ஒக்கல் தலைவன் - அதியன் வாழி!

வேண்டுப வேண்டுப வேண்டுவழி உதவும் வேந்தர் மரபு வாழி! - மன்னுக பெரும!

அறவர் அறவன், மறவர் மறவன், மள்ளர் மள்ளன், தோல்லோர் மருகன் - அவன் தாள் வாழி!

நெல்லின் செம்மல் மூதூர் வாழி!

உலகு புரத்தருளும் மாரி வாழி!

காவிரி புரக்கும் நன்னாடு வாழி!

நெடியோன் நிழல்வாழ்வோர் வாழி!

வாழ்க அவன் தாளே!

மன்னன் வாழி, மண்மகள் வாழிய!

பண்ணன் வாழி, பண்மகள் வாழிய!

விண்ணன் வாழி, விண்மகள் வாழிய!

நெல் வாழி!

நெடுமொழி வாழி!

நெடியோன் வாழி!

நெடுந்தாள் வாழி!

எந்தை வாழி! வாழிய நெடிதே!

மன்பதை காக்கும் நீள்குடி வாழி!

தென்புலம் காவல் வாழிய!

நெல்லும் நீரும் எல்லார்க்கும் எளிய அறநெறி முதற்றே அரசின்

கொற்றம் என்னும் தொல்லோர் சென்ற நெறியது வாழி!

வாழிய ஏரின் வாழ்நர் குடி!

வாழிய நன்மொழி!

இமயமும் பொதியமும் வாழி!

வாள்ஏர் உழவ வாழி!

புகழ்சால் மாற வாழி!

நல்நாட்டுப் பொருந வாழி!

மழவர் பெரும வாழி!

விண்உயர் புள்கொடியோய்! நின்திறம் சிறக்க!

நின் சீர்தாள் வாழி! உலகோர் பெறுக நின்தன் நிழல்!

பால்நிற உருவின் பனைக் கொடியோனும் நீல்நிற உருவின்

நேமியோனும் நீடு வாழிய!

தேவராஜன் வாழி; சுந்தரராஜன் வாழி!

அறவர் வாழி! குரவர் வாழி!

ஆயர் வாழி! மாயர் வாழி!

வாழிய முதலியும் பிள்ளையும்!

வாழிய குடவரும் வடவரும்!

வாழிய நெய்தலர்! வாழிய தொழிலோர்!
வாழிய பாணர்! வாழிய பறையர்!

வாழிய தலைவன் தலைவி!
வாழிய உழவன் உழத்தி!
மறவர் வாழி! மள்ளர் வாழி!

நூல் வாழி! நூலோர் வாழி!
திசை வாழி! திங்கள் வாழி!
வாழிய எட்டும் பத்தும் பதினெட்டும்!
வாழிய அணிகளும் காப்பியங்களும்!

வேலவர் வாழி! மாலவர் வாழி!
நானிலம் வாழி! நான்மறை வாழி!
ஊரன் வாழி! நாடன் வாழி!

பூட்டுக ஏரை! ஓட்டுக போரை!
ஆற்றுக தொழிலை! நூற்றுக நூலை!
ஏற்றுக தேரை! போற்றுக ஊரை!
**குழலன் வாழி! குறளன் வாழி!**

**பெரிய பெருமாள் வாழி; பெரிய பிராட்டியார் வாழி!**

**ஸர்வமும் ஸகலமும் கிருஷ்ணா கிருஷ்ணா!**

**ஸர்வம் கிருஷ்ணார்ப்பணம்!**

அன்பே உயர்ந்தது அவனியிலே - கண்ணன்
அன்பே உயர்ந்தது அவனியிலே..

நம்பினோர் கெடுவதில்லை -

நான்குமறைத் தீர்ப்பு.

# ஆயிரம் பெயரான்

எமது உள்ளம் நிறைந்த, உள்ளங்கவர்ந்த கன்னலென்னும் கண்ணனுக்கு ஓராயிரம் தமிழ்ப் பெயர்கள் சூட்டி மகிழ்கிறோம். ஏற்றுக் கொள்ளுங்கள் எந்தையே. உங்கள் அன்பு மகன் என்பதில் எமக்கு ஈடில்லாப் பெருமையும், இணையில்லா மகிழ்வும். இந்த ஓராயிரம் புகழ்மிக்க தமிழ்ப் பெயர்களால் பெறற்கரிய, போற்றற்கரிய, எந்தையின் புகழ் தமிழ்நிலத்தில் பல்லாண்டுகள் நிலைக்கட்டும். பேராயிரம் உடையான் வாழி!

புகழ்கொண்ட அலர்மேல்மங்கைஉறை மார்பினான பெருமைமிகு எந்தை திருவேங்கடவனுக்கு மங்களம்.

**வளர்க அரங்கமாநகர்; வாழிய தமிழ்**

# கண்ணன்

1

விண்ணகரன் வேங்கடவன் நல்லூரான் குளத்தான்

விண்ணன் அண்ணன் தண்ணன் வண்ணன்

அன்பன் அறிவன் அறவன் காவலன்

அரியன் பரியன் பெரியன் உரியன்

மன்னன் நன்னன் சின்னன் அன்னன்

மலயன் மலரன் மருதன் கடலன்

காரணன் சாரணன் வீரணன் சூரணன்

நெல்லன் சொல்லன் மல்லன் வில்லன்

உழவன் மழவன் கிழவன் பழவன்

கனியன் இனியன் பனியன் முனியன்

2

இன்றன் நன்றன் கன்றன் வென்றன்

அதியன் மதியன் பதியன் பொதியன்

ஆதியன் வேதியன் சோதியன் போதியன்

விடியன் இடியன் அடியன் முடியன்

மீனன் ஏனன் வானன் மேனன்

நீரன் நாரன் வாரன் காரன்

ஆரன் மாரன் பாரன் வேரன்

கீழையன் மேலையன் தெக்கன் வடக்கன்

குறவன் கறவன் இறைவன் துறைவன்

அய்யன் நெய்யன் மெய்யன் உய்யன்

3

அருகன் தருகன் முருகன் மருகன்

மாடன் நாடன் வீடன் கூடன்

பள்ளன் கள்ளன் மள்ளன் மறவன்

மயிலன் குயிலன் கிளியன் களியன்

மாலன் மூலன் பாலன் ஆலன்

ஒளியன் வளியன் அளியன் உளியன்

வழியன் விழியன் ஆழியன் ஊழியன்

ஊற்றன் ஆற்றன் நாற்றன் சேற்றன்

பார்த்தன் தீர்த்தன் போர்த்தன் கூர்த்தன்

கார்த்தன் மூர்த்தன் ஆர்த்தன் கீர்த்தன்

4

சிங்கன் புங்கன் துங்கன் தங்கன்

சிம்மன் பெம்மன் பொம்மன் உம்மன்

வலன் வளன் உளன் உள்ளன்

நாளன் கோளன் ஆளன் வாளன்

முத்தன் வைரன் பவளன் மாணிக்கன்

குட்டன் குடவன் அச்சன் பச்சன்

கடம்பன் குடம்பன் குடும்பன் குடுமியன்

குரும்பன் சேரன் தேரன் ஊரன்

சோழன் வேழன் யாழன் வாழ்வன்

வழுதியன் மாறன் மதுரன் பொழுதன்

5

பாண்டியன் படையன் மதுரையன் மதுசூதனன்

பல்லவன் வில்லவன் வல்லவன் கொல்லவன்

கண்ணியன் திண்ணியன் வன்னியன் மன்னியன்

பெற்றவன் நற்றவன் உற்றவன் பற்றவன்

செற்றவன் கற்றவன் ஏற்றவன் வீற்றவன்

இடையன் கடையன் விடையன் சடையன்

நடையன் உடையன் கொடையன் குடையன்

அரையன் திரையன் கரையன் சுரையன்

பிறையன் மறையன் வையகன் வானகன்

அச்சுதன் அனந்தன் கோவிந்தன் கோபாலன்

6

அருவன் உருவன் பருவன் கருவன்

ஆதன் பூதன் நாதன் பாதன்

நாவன் பாவன் பூவன் காவன்

ஆவன் மாவன் தாவன் மூவன்

மேகன் மோகன் காமன் சோமன்

நெடியன் நீண்டன் அண்டன் ஆண்டன்

பாணன் பாடன் இசையன் விசையன்

எண்ணன் உண்ணன் பன்னன் ஆலியான்

படவன் படகன் பளியன் இருளன்

வேதன் போதன் வேள்வியன் விளக்கன்

7

ஆயன் மாயன் பாயன் வேயன்

அத்தன் புத்தன் வித்தன் சொத்தன்

அழகன் அமுதன் தேனன் தெள்ளன்

அரிமுகன் பரிமுகன் நான்முகன் வான்முகன்

சுற்றன் உற்றன் அகத்தன் சுகத்தன்

கந்தன் குந்தன் விந்தன் முந்தன்

செழியன் சோழியன் பூழியன் மேழியன்

செந்தமிழன் தெளுகன் சளுகன் துளுகன்

சேந்தன் வேந்தன் கருடன் புருடன்

தாயன் தாமரையன் ஆனந்தன் அவதாரன்

8

நீதியன் நிதியன் நதியன் உதியன்

தெய்வன் அய்வன் நெய்வன் உய்வன்

வளர்வன் மலர்வன் மகிழ்வன் துயில்வன்

காதலன் போதலன் பாதளன் பரிமளன்

கரும்பன் சுரும்பன் அரும்பன் இரும்பன்

அடுக்கன் துடுக்கன் சடுக்கன் மிடுக்கன்

உலகன் நிலகன் வலகன் திலகன்

குன்றன் குயவன் கூரன் சூரியன்

முதலன் மூத்தன் காப்பன் கருப்பன்

பகலன் புகலன் பலவன் நளவன்

9

புள்ளன் புகழன் புனிதன் புண்ணியன்

நாயகன் நான்மறையன் மீட்பன் வைகுந்தன்

கருணையன் காலடியன் மூவுலகன் நானிலத்தன்

உண்மையன் தூயவன் பவித்ரன் வாக்கன்

குறளன் திறலன் அறளன் பிறளான்

பரமன் பிரமன் அயனன் வியனன்

மதன் மாதன் தாதன் தூதன்

திங்களன் மங்களன் புத்தியன் சத்தியன்

அஞ்சன் விஞ்சன் நெஞ்சன் துஞ்சன்

அணுவன் அணுக்கன் நுணுக்கன் நுட்பன்

10

மிக்கன் மிகையன் தப்பான் ஒப்பான்

தொகையன் தோகையன் வகையன் வாகையன்

கோதன் கோதிலன் மொழியன் பொழியன்

பயிரன் பாயிரன் அயிரன் ஆயிரன்

உயிரன் உயரன் வயிரன் கயிரன்

அறிஞன் அற்புதன் தத்துவன் உத்தமன்

உண்டன் உமிழ்ந்தன் குழலன் கழலன்

பகவன் பசுவன் அசுவன் விசுவன்

கூடலன் ஊடலன் வதனன் விதானன்

பொன்னன் புதுவன் அருளன் அபயன்

11

பண்பன் மாண்பன் வனப்பன் வாணியன்

மண்ணாளன் விண்ணாளன் கண்ணாளன் பெண்ணாளன்

ஞாலன் ஞானன் ஞாயிரன் ஞாலவரசன்

நல்லோன் முன்னோன் உறவோன் உலகோன்

ஏரன் மின்னலன் வரதன் விரதன்

பாற்கடலன் பற்பநாபன் பரமபதன் அருளாளன்

ஆழ்வான் ஆள்வன் ஆட்சியன் அதிகாரன்

எழிலன் மகிழன் தியானன் மோனன்

மணாளன் குணாளன் மணவாளன் கல்யாணன்

சங்கன் சக்கரன் சாரங்கன் சங்காரன்

12

செல்வன் சென்னியன் பெருமான் பெருந்தவன்

அம்பன் நம்பன் கம்பன் உம்பன்

அகரன் அரசன் அமிர்தன் அரங்கன்

இந்திரன் சந்திரன் சங்கரன் மன்மதன்

மதிவாணண் அறவாணன் அதிசயன் ஆண்டவன்

எல்லன் எயினன் ஏந்தலன் ஏழுமலையன்

தத்தன் தித்தன் திதியன் கதியன்

மத்தன் மாதவன் முகுந்தன் முடிவிலன்

கபிலன் அசோகன் அஞ்சனன் சீனிவாசன்

ஒப்பிலான் ஓவியன் வீரன் தீரன்

13

வருணன் வாரணன் மிதுனன் மேதினன்

அகன் மாசிலன் முகிலன் அகிலன்

ஆகமன் அந்தணன் கம்மியன் பூத்தேவன்

அருமன் தருமன் தயாளன் தம்பிரான்

சித்திரன் செங்கோன் சேரமான் செருமான்

பொருநன் செருநன்  தச்சன் உச்சன்

வானவன் வங்கன் கங்கையன் காவிரியன்

பண்ணன் சாத்தன் துணைவன் நேமியன்

அமரன் வாசன் வாசவன் பாசுரன்

மாரியன் மோரியன் ஆரியன் வாரியன்

14

கதிரன் குதிரன் அதிரன் புதிரன்

மகரன் மாவரன் உகரன் நிகரன்

நித்தியன் அத்தியன் சயனன் வெற்றியன்

பல்லன் பன்மையன் பல்லியன் மருத்தன்

அம்புயன் பங்கயன் அரவிந்தன் பரந்தாமன்

கன்னலன் கண்ணிமையன் தேசிகன் விட்டலன்

நாகன் நளினன் போகன் சுபன்

காந்தன் கள்வன் கேள்வன் துணிவன்

தாடாளன் தாளாளன் வேளாளன் தோளாளன்

பாலகன் மதலையன் புதல்வன் புத்திரன்

15

உன்னதன் சுந்தரன் சேகரன் சிகரன்

நெறியன் நியாயன் வாய்மையன் நன்மையன்

நடன் நடனன் பரதன் நிருத்தன்

தனன் வளப்பன் செழுமையன் நகையன்

கோமளன் முறுவலன் வாமன் ஈசன்

கருணன் அருணன் இரவோன் பகலோன்

காத்தன் கூத்தன் அருச்சுனன் கிருட்டினன்

குட்டுவன் கொங்கன் பொறையன் வரையன்

வளவன் செம்பியன் தென்னவன் மீனவன்

நிபுணன் பண்டிதன் ஆசிரியன் மேதையன்

16

கரியன் காரியன் புரியன் பாரியன்

வண்டண் நண்டன் அண்டன் தண்டன்

சிவன் சீவன் சீதன் சீலன்

விசும்பன் அம்பரன் அந்தரன் ஆகாயன்

சலனன் மாருதன் கோதையன் மாபலன்

அழலன் தழலன் அனலன் கனலன்

கமலன் விமலன் அமலன் நிமலன்

புனலன் கயலன் நித்தன் உலகளந்தான்

மலரோன் படைப்போன் மறையோன் வாசுதேவன்

கோழுநன் நந்தன் பலதேவன் நீலாம்பரன்

17

முதல்வன் முனிவன் முனைவன் முன்னவன்

புலவன் கரியவன் கந்தருவன் அலங்காரன்

மேலவன் ஆதித்தன் தெய்வதன் மருத்துவன்

மதனன் காமகன் கோமகன் மோகனன்

வள்ளன் துடுப்பன் வல்லோன் வாகனன்

கானகன் வானரன்  மாந்தன் மானுடன்

உரையன் பறையன் வாதியன் பாதியன்

குருவன் குரவன் துருவன் வருவன்

மாயவன் மன்னவன் சீராமன் சிரீதரன்

அணியன் நணியன் மணியன் மாணியன்

18

அணையன் சுனையன் சுன்னன் சோணன்

அரன் அயன் பரன் வரன்

நரன் நாரதன் கின்னரன் கெருடன்

மனன் வனன் சினன் குணன்

ஆவினன் கோவினன் பாவினன் நாவினன்

கோபுரன் கோயிலன் கோவலன் கோவர்த்தன்

சாத்திரன் ஓதுவன் சூத்திரன் சேத்திரன்

பாகன் பாதையன் வேலன் வாலன்

காலன் நேரன் கணக்கன் எண்ணிலன்

நீலன் நிலவன் நினைவன் தலைவன்

19

கருத்தன் வெள்ளையன் சிவப்பன் பச்சையன்

இச்சையன் கச்சியன் சோலையன் சாலையன்

தாளன் தோளன் தோழன் நண்பன்

குமரன் குறும்பன் தாமோதரன் விக்ரமன்

செப்பன் திருத்தன் விருத்தன் அர்த்தன்

கோத்தன் தோடன் காடன் கணியன்

ஒட்டன் பிட்டன் பட்டன் முட்டன்

திறலோன்  தேரோன் திவ்வியன் திராவிடன்

ஏடன் எழுத்தன் இயலன் ஒலியன்

அசன் ஆசான் சனன் சிம்மாசனன்

20

ஆக்கன் நோக்கன் கானன் பார்ப்பன்

ஓதன் ஊதன் உரலன் தளும்பன்

ஆதவன் யாதவன் கோமான் ஓராண்

அளக்கன் அளந்தன் கடமையன் கற்கியன்

உவன் உப்பன் உவப்பன் உவச்சன்

மச்சன் நட்சத்திரன் சுதந்திரன் தமிழரசன்

முதுவன் தொன்மையன் மனையன் மேனியன்

மனத்தன் சித்தன் சிந்தையன் சித்தார்த்தன்

வடிவன் வசியன் வச்சிரன் மஞ்சன்

கற்பன் பொற்பன் விற்பன் சிற்பன்

21

ஆமையன் ஆண்மையன் ஆனேறன் மாரனன்

குண்டலன் கொண்டலன் குவலயன் பூமியன்

குகன் குசன் சிதன் பிதன்

ஏமன் ஏணன் தூணன் வேணன்

மகவன் மனுவன் அணங்கன் களஞ்சியன்

இதழன் இனிப்பன் இறும்பூதன் பூணன்

ஊக்கன் ஊர்தியன் கணன் கந்தரன்

பக்கன் பாக்கன் பாங்கன் பதக்கன்

நவன் சவிரன் நனியன் நாஞ்சிலன்

நாவலன் நானிலன் தீவன் தீபன்

22

விடங்கன் விரையன் விறப்பன் வெம்மையன்

வள்ளுவன் இளங்கோவன் பாரதியான் பாவாணன்

முரசன் முழவன் பீலியன் பழனன்

வசனன் வாக்கினன் விளம்பன் வியாசன்

இயக்கன் இயமன் ஈசானன் குபேரன்

பானன் பாகவதன் திருமாலன் வைணவன்

சமரன் சாமரன் சமரசன் சமாதானன்

ஐந்திரன் மந்திரன் தந்திரன் தனயன்

தானையன் சேனையன் திணையன் பணையன்

கீதன் சுருதியன் இருக்கன் சமயன்

23

களன் களமன் கம்பளன் பூபாலன்

கனன் குணகன் அதிகன் பெருக்கன்

அப்பன் அம்மன் பதுமன் புதுமன்

ஆட்டன் வேட்டன் கூட்டன் ஈட்டன்

நம்பிரான் தகப்பன்  பிரியன் பிராணன்

அம்மான் ஆடலன் அடலன் சிங்காரன்

செய்கையன் பொய்கையன் நிரம்பன் நிறைஞ்சன்

அமிழ்தன் அம்ருதன் ஆகாரன் ஆதாரன்

வீமன் அனுமன் விதுரன் விராடன்

சொக்கன் சொப்பனன் கக்கன் திக்கன்

24

சான்றோன் சங்கமன் காப்பியன் உற்சவன்

நின்றனன் நிமிர்ந்தனன் இருந்தனன் கிடந்தனன்

தொடக்கன் தொடரன் வெல்பவன் ஆற்றலன்

பயனன் பள்ளியன் வெள்ளியன் வெளிச்சன்

அர்ச்சன் காட்சியன் மாயக்காரன் இரத்தினன்

உந்தியன் மலரவன் விரிஞ்சன் மகவான்

செம்மையன் மெய்ம்மையன் ஒழுக்கன் நல்வினையன்

புன்னகையன் பூவிழியன் மகரந்தன் வாசனன்

விதியன் விட்டுவன் விடுதலையன் பரமாத்மன்

பொன்னியன் பொருணையன் பருணியன் யமுனன்

25

கவினன் கவிஞன் கலைஞன் இளைஞன்

நாமன் தேவன் ராமன் ரங்கன்

சுரத்தன் சுரங்கன் புரத்தன் புரந்தரன்

பூரணன் முகிழ்த்தன் செவ்வியன் தெய்வீகன்

தேராளன் பேராளன் பாராளன் மலையாளன்

தோணியன் கேணியன் காணியன் கண்ணன்

பெருங்கடலன் நெடுவிசும்பன் நல்லியதன் நற்றமிழன்

பொற்பாதன் பொன்முடியன் நல்லொளியன் அருள்விழியன்

மூவேந்தன் முக்கனியன் முத்தமிழன் முத்தந்தையன்

திருவிழாவன் திருநாளன்  திருவோணன் திருவரங்கன்

உலகங்காப்போன் உய்யவந்த விண்ணகரன்.

தெள்ளுத் தமிழமுதம் சிறக்கட்டும். நாளும்..

தித்திக்கும் தமிழிசை வளரட்டும். என்றும்..

## இராமன்!

இராகவன் இலக்குவன் இரமணன் அயோத்திமன்
அறக்கடவுளன் ஆராவமுதன் இன்னமுதன் மாறாஇன்பன்
செங்கரும்பன் செழுந்தேனன் மலைமுகிலன் திருமலையன்
பிரபந்தன் பேரின்பன் பெருஞ்செல்வன் சாளக்கிரமன்

புத்தரிசியன் நல்லாசிரியன் நால்வேதன் நாலாயிரன்
அன்புடையன் மாண்புடையன் சிறுகுளத்தன் வானுயரன்
முத்தாரன் முழுமையன் முழுநிலவன் மூச்சுக்காற்றன்
ஊர்வலன் உலகாளன் திருப்பதியன் திவ்வியதேசன்

குடந்தையன் குணசீலன் அவனியான் ஆளவந்தான்
தித்திப்பன் சங்கீதன் சாமவேதன் செங்கோலன்
இளவரசன் கோக்கவிஞன் படைத்தலைவன் குமாரதேவன்
அயிராவதன் ஆயிரங்கண்ணன் தேவேந்திரன் வேள்விநாயகன்

விண்ணவர்கோன் வீரராகவன் இரகுராமன் திருவரங்கத்தம்மான்
பெருந்தேவன் பிரமதேவன் புதுச்சொல்லன் பெரியபெருமான்
திருமலையான் சோலைமலையான்  பாம்பணையன் பல்லாயிரன்
பல்லாண்டான் மல்லாண்டான் வில்லாண்டான் நல்லாண்டான்

கண்ணழகன் கண்மணியன் புல்லாங்குழலன் புகழ்மொழியன்
பூவிழியன் மைகுழலன் தேனமுதன் தென்றல்காற்றன்
பூவிதழன் மதுவண்டன் பொன்னழகன் காமவடிவன்
புன்னகையன் பொன்நகையன் புதுமனையன் திருவின்கணவன்

திருவிழியன் கமலமுகத்தன் பாட்டுடைத்தலைவன் தெய்வீகப்பண்ணன்

திரைகடலன் திருவல்லிக்கேணியான் சங்குசக்கரதாரியன் கருப்பண்ணன்

வெள்ளிநிலவன்  ஒளிமுகத்தான் கருணைச்சூரியன் சமநீதியன்

சுப்ரபாதன் விசுபரூபன் ஓங்காரநாமன் வெற்றிப்பாதையன்

வைப்புநிதியன் தாணுமாலையன் துளசித்தளிரன் அழகியமணவாளன்

தெய்வத்துக்கரசன் தேவாதிதேவன்  திருவாழ்மார்பன்  சுரிசங்கினஆழியன்

நீலமேகப்பெருமான் காளமேகப்பெருமான்

நித்யகல்யாணன் சக்கரவர்த்தித்திருமகன்.

# நாராயணன்!

**ஒன்றன்**

நீர்வண்ணன் கார்வண்ணன் நீலவண்ணன் முகில்வண்ணன்

மணிவண்ணன் கடல்வண்ணன்  பால்வண்ணன் பச்சைவண்ணன்

குடக்கூத்தன் மாயக்கூத்தன் குடமாடுகூத்தன் கூத்தப்பிரான்

சாரநாதன் நாதநாதன் கமலநாதன் உலகநாதன்

வைகுண்டநாதன் பரமபதநாதன் வையங்காத்தான் ஊரகத்தன்

மாயப்பிரான் கள்ளப்பிரான் அமலனாதிபிரான் ஆலிலைப்பிரான்

ஒப்பிலியப்பன் திருக்குறளப்பன் பாம்பணையப்பன் மலையப்பன்

கூடலழகன் கள்ளழகன் தேவப்பெருமான் திரிவிக்ரமன்

புருடோத்தமன் திருவனந்தன் தெய்வநாயகன் வல்வில்ராமன்

அருள்மாகடலன் பரிமளரங்கநாதன் அனந்தபத்மநாபன் உய்யவந்தபெருமான்

திருவரங்கத்தமுதன் ஆண்டளக்குமையன் காய்சினவேந்தன்

மகரநெடுங்குழைக்காதன்

நின்றநாராணனன் அற்புதநாராயணன் அம்ருதநாராயணன் சத்யநாராயணன்

**இரண்டன்**

| | |
|---|---|
| ஆழிமழைக் கண்ணன் | மழை பொலொளிவண்ணன் |
| தாமரைக் கண்ணன் | கொண்டல் வண்ணன் |
| நந்தா விளக்கன் | நந்தன் மதலையன் |
| யசோதை இளஞ்சிங்கன் | தேவகி மைந்தன் |
| கோசலை மதலையன் | தயரதன் புதல்வன் |
| மைதிலி மணவாளன் | நப்பின்னை மணாளன் |
| திருமகள் கேள்வன் | நிலமகள் தலைவன் |
| ராதையின் கள்வன் | கோதையின் காதலன் |
| தாமரையாள் நாயகன் | செந்தாமரைக் கண்ணன் |

| | |
|---|---|
| அலர்மேல்மங்கை உடனுறைபவன் | திருமறு மார்வன் |
| வலனேந்து சக்கரத்தான் | கருடக் கொடியோன் |
| அண்டமாளும் மதியன் | பெருவிசும்பருளும் பேரருளாளன் |
| தீமனத்தரக்கர் திறலழித்தவன் | சுற்றக் குழாத்திளங்கோவன் |
| வெற்றிவேல் முருகன் | செந்தமிழ்ச் செல்வன் |
| வானுயர் வழியன் | வெண்குடை வேந்தன் |
| லெட்சுமி நாராயணன் | திருப்பாற்கடல் பள்ளிகொண்டான் |

**மூன்றன்**

மூவரில் முன் முதல்வன்

தொண்டரானவர்க்கு இன்னருள் செய்வன்

வெண்ணெய் விழுங்கும் விகிர்தன்

உலகம் புகழும் கதைக்காரன்

நிலமங்கை நல் துணைவன்

காமன் தன் தாதை

பாரைப் பிளந்த பரமன்

பையுடை நாகப்பகைக் கொடியான்

பைந்நாகனைப் பள்ளி கொண்டான்

மைத்த கருங்குஞ்சிமைந்தன்

திருவுக்கும் திருவாகிய செல்வன்

மல்லாண்ட திண்தோள் மணிவண்ணன்

அன்றுலக மூன்றினையும் அளந்தவன்

அமரர்க்கு அரிய ஆதிப்பிரான்

அமரர்கள் தம் பெருமான்

அரங்கத்து அரவி னணையான்

அல்லிக் கமலக் கண்ணன்

அண்டக் குலத்துக்கு அதிபதியன்

தேனுடைக் கமலத் திருவினுக்கரசன்

கூடாரை வெல்லுஞ்சீர் கோவிந்தன்

வண்டுண் பூமகள் நாயகன்

ஓங்கி உலகளந்த உத்தமன்

**நான்கன்**

செங்கன் திருமுகத்துச் செல்வத் திருமாலன்

உலகினில் தோற்றமாய் நின்ற சுடரன்

நிலமகள் செவ்வி தோய வல்லன்

கரிசேர் பூம்பொழில்சூழ் கனமாமலை வேங்கடவன்

குறை வொன்று மில்லாத கோவிந்தன்

குவலயத்தோர் தொழுதேத்தும் ஆதியன் அமுதன்

கல்தேன் பாய்ந்தொழுகும் கமலச்சுனை வேங்கடவன்

புவனம் படைத்துண்டுமிழ்ந்த தேவர்கள் நாயகன்

பாலகனாய் ஆலிலையில் பள்ளியின்பம் ஏய்ந்தான்

அணியார் பொழில் சூழ் அரங்க நகரப்பன்

கோவலனாய் வெண்ணெய் உண்ட வாயன்

வங்கக் கடல் கடைந்த மாதவன்

கண்ணன் நெடுமால் கடல்கடைந்த காரோதவண்ணன்

எல்லா இடரும் கெடுமாறு அருள்பவன்

**ஐந்தன்**

இராக்கதர்வாழ் இலங்கை பாழாளாகப் படை பொருதான்

இலங்கொளிசேர் அரவிந்தம் போன்று நீண்ட கண்ணாளன்

தெய்வத் திருமாமலர் மங்கை தங்கு திருமார்பன்

செழுந்தட நீர்க்கமலம் தீவிகை போல்காட்டும் திருக்கோவிலூரான்

கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்

பல்லாண்டு  பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரன்

பணங்களாயிர முடைய நல்லரவணைப் பள்ளிகொள் பரமன்

மல்லலம் சீர் மதிள் நிரிலங்கையழித்த வில்லாளன்

ஆலமாாமரத்தினிலைமேல் ஒரு பாலகனாய்  ஞாலமேலும் உண்டான்

தேனும் பாலும் அமுதுமாய திருமால் திருநாமன்

வாசமலர்ப் பொழில் சூழ் வடமதுரைப் பிறந்தான்

வண்டு வாழ்பொழில் சூழ் அரங்கநகர்மேய அப்பன்

ஏனமாகி இருநிலனும் பெருவிசும்பும் எய்தாவண்ணம் கடந்தோன்

**ஆறன்**

உடம்புருவில் மூன்றொன்றாய்  மூர்த்தி வேறாய் உலகுய்ய  நின்றான்

உளங்கனிந்திருக்கும் அடியவர் தங்கள் உள்ளத்துள் ஊறிய தேனன்

உவந்த உள்ளத்தனாய் உலகமளந்து அண்டமுற நிவந்த நிள்முடியன்

நிமலன் நின்மலன் நீதிவானவன் நிள் மதிலரங்கத்து  அம்மான்

கடல் மல்லைத் தலசயனத்துத் தாமரைக் கண்துயிலமர்ந்த தலைவன்

கையிலங்காழி சங்கன் கருமுகில் திருநிறத்தன் பொய்யிலன் மெய்யன்

அம்பரம் ஊடறுத் தோங்கி உலகளந்த உம்பர் கோமான்

தேரேறு சாரதியாய் எதிர்த்தார்சேனை செருக்களத்துத் திறலழியச் செற்றான்

சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கு இனியன்

மதிளரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும் மணிவண்ண னம்மான்

**ஏழன்**

கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர்மார்பன்

செம்பொன் கமுகினம் தான் கனியும் செழுஞ்சொலை சூழ் நம்பன்

வெள்ளியான் கரியான் அணிநிற வண்ணன் வின்னவர் தமக்கு இறைவன்

பார்மன்னு தொல்புகழ்ப் பல்லவர் கோன் பணிந்த பரமேச்சுர விண்ணகரன்

பிறவாத பேராளன் பெண்ணாளன் மண்ணாளன் விண்ணோர் தங்கள் அறவாளன்

துயாய் சுடர் மாமதி போல் உயிர்க்கெல்லம் தாயாயளிக்கின்ற தண்தாமரைக் கண்ணன்

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று கப்பம் தவிர்க்கும் கலியன்

அண்டமும் இவ்வலை கடலும் அவனிகளுமெல்லாம் அமுது செய்த திருவயிற்றன்

பேராளன் ஆயிரம் பேருடைய வாளன் பின்னைக்கு மணவாளன் பெருமையன்

வாமனன் கற்கி மதுசூதன் மாதவன் தார்மன்னு சாரதியன் தடமார்பன்

செந்நாள் தோற்றித் திருமதுரையிற்சிலைகுனித்து ஐந்தலைய பைந்நாகத் தலைப் பாய்ந்தவன்

அன்பொடு தென் திசை நோக்கிப் பள்ளி கொள்ளும் அணியரங்கன்

**எட்டன்**

நீண்ட மலைகளும் மாமணிகளும் மலர்மகளும் மங்கையும் சங்கமம் தங்குகின்ற அலைகடலன்

யாவருமாய் யாவையுமாய் எழில் வேதப் பொருள்களுமாய் மூவருமாய் முதலாய மூர்த்தியுமாயானவன்

**ஒன்பதன்**

பூமங்கை தங்கிப் புலமங்கை மனினிப் புகழ் மங்கை எங்கும் திகழப் புகழ்சேர்வன்

கான ஒண்கும் குரங்கும் முசுவும் படையா அடலரக்கர் மானமழித்து நின்ற வென்றியம்மன்

சேலார்ந்த நெடுங்கழனி சோலை சூழ்ந்த திருவரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும் மாலோன்

**பத்தன்**

சங்குமலி தண்டு முதல் சக்கரம் முன் ஏத்தும் தாமரைக் கண் நெடிய பிரான்

பகலும் இரவும் தானேயாய்ப் பாரும் விண்ணும் தானேயாய நிகரில் சுடராய் இருளாகி நின்றான்

மாறாத மலர்க்கமலம் செங்கழுநீர் ததும்பி மதுவெள்ளம் ஒழுக வயலுழவர் மடையடைப்ப மாறாத பெருஞ்செல்வன்

கெண்டையும் குறளும் புள்ளும் கேழலும் அரியும் மாவும் ஆண்டமும் சுடரும் அல்லாவற்றனும் ஆயன்

**பதினொன்றன்**

மேயார் தடங்கண் கருங்கூந்தல் ஆய்ச்சி மறைய வைத்ததயிர் நெய்யார் பாலோடு அமுதுநெய்த நேமியங்கை மாயன்

**பன்னிரெண்டன்**

நெல்லில் குவளை கண்காட்ட நீரில் குமுதம் வாய் காட்ட அல்லிக் கமலம் முகம் காட்டும் கழனியூரன்

உலகமாண்ட தென்னாடன் குடகொங்கன் சோழன் வாழியவே!

உலகினைப் பாய்போல் கொண்டவன் வாழி!

திருவடி வாழி! மணிமுடி வாழி!

**திவ்விய தேசங்கள் வாழி!**

**திவ்வியப் பாசுரங்கள் வாழி!**

## வாழிய ஸ்ரீமந் நாராயணன்!!

இப்புத்தகத்தின் முடிவில்,

எழுத்துப்பிழை நீக்க சற்றே தாமதமாகி விட்டது. யாம், முழுமையாக எழுதி முடித்தே எழுத்துப் பிழை நீக்கினோம். பிழை நீக்குவதற்குமுன், சமற்கிருதத்தில் சகஸ்ரநாமம் அதாவது விஷ்ணுவுக்கு ஆயிரம் பேர்கள் இருப்பதுபோல் தமிழிலும் ஆயிரம் பெயர் இருந்தால் நன்றாக இருக்குமே எனும் எண்ணம் மனதில் உதித்தது. அந்த எண்ணம் தோன்றிய அப்பொழுதே, அதாவது இரவு உறக்கத்தின்போதே அருகில் தாளை வைத்துக்கொண்டு மனதில் தோன்றிய பெயர்களை குறிக்க ஆரம்பித்து விட்டோம். ஒரு நாளைக்குள் சுமார் இருநூறு பெயர்களைக் குறித்து விட்டோம்.

ஆரம்பத்தில் கண்ணன், இராமனுக்குத் தலா நானூறு பெயர்கள், நாராயணனுக்கு இருநூறு பெயர்கள் என ஆயிரம் பேர்களைக் குறிப்பிடலாம் எனும் எண்ணமிருந்தது. கண்ணன் பெயர்களை எமது மனத்திலிருந்தும், இராமன் பெயர்களை கம்பராமாயணத்திலிருந்தும், நாராயணன் பெயர்களை நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்திலிருந்தும் சுட்டலாம் என நினைத்துக் கொண்டோம். எனினும் எமது மனத்திலிருந்து மளமளவென கண்ணன் பெயர்களை மட்டுமே அறுநூறுவரை எழுதிவிட்டோம். மேலும் சற்றே முயற்சித்ததில் அதாவது நிகண்டுகளைப் பார்த்ததில் கூடுதலாக இருநூறு பெயர்களைக் குறித்துவிட்டோம். சரி இராமனுக்கும், நாராயணனுக்கும் ஆளுக்கு நூறுபெயர்களாவது கொடுக்கலாமே எனும் எண்ணம் வந்தது. ஆயினும் இன்னும் இருநூறு பெயர்கள் மட்டும்தானே, அவற்றை முடித்துவிட்டால் கண்ணனுக்கு மட்டுமே ஆயிரம் பெயர்கள் வந்துவிடுமே எனும் பேராசையில், ஆயிரம் பெயர்களையும் கண்ணனுக்கே சூட்டி விட்டோம். உண்மையிலேயே எம் தந்தை மாயக்காரர்தான். என்ன மாயம்செய்து எம் மனத்தைக் கொள்ளையடித்தாரே, அவருக்கே ஆயிரம் பெயர்களையும் சூட்டுமாறு அடியேனை ஆட்கொண்டு விட்டார். அனைத்தும் அவர் செயல். எல்லாம் அவரின் புகழ்.

இராமனுக்கென்று நூற்றி எட்டு திருநாமங்களாவது இருக்கட்டுமே எனும் ஆசையில், இராமனுக்கு 108 தமிழ்ப் பெயர்களைக் சூட்டியுள்ளோம். காலம் கைகூடியால் பின்னர் இராமனுக்கும் ஆயிரம் அழகுத் தமிழ்ப் பெயர்களைச் சூட்டி மகிழலாம் என நினைத்திருக்கிறோம்.

நாராயணன் நாமங்களை எண்வரிசையில் சுட்டியிருக்கிறோம். பெரும்பாலான பெயர்களை திருமங்கையாழ்வார் பாசுரங்களிலிருந்து எடுத்தாண்டுள்ளோம். முடிந்தால் பின்வரும் காலத்தில் பிரபந்தப் பாடல்களிலிருந்து நாராயணனுக்கும் ஆயிரம் அழகுப் பெயர்களை சூட்டி மகிழலாம். அவர் விரும்பினால் அனைத்தும் நல்லவிதமாகவே முடியும். திண்ணமிது.

கண்ணனுக்கு சாதிப் பெயர்களைச் சுட்டவேண்டுமா எனும் தயக்கம் கடைசிவரை இருந்துகொண்டே இருந்தது. காலமாற்றத்தில், தமிழர் சாதி கடந்து வாழநேரும்போது, முன்னைத் தமிழர்கள் இப்படியான சாதிகளாய் வாழ்ந்தார் எனும் வரலாறு அறியப்படட்டும் எனும் எண்ணத்திலேயே இவை சுட்டப்பட்டுள்ளன. கண்ணனின் பெயர்களாகவாவது இவை காலத்தில் நிலைபெறட்டும். ஏதோ காரணத்தோடே எம் மனத்தில் இந்த எண்ணம் உண்டானதாக நினைக்கிறோம். எல்லாம் நன்மைக்கே என எடுத்துக் கொள்ளலாமன்றோ.

அவ்வாறே, புறநானூறு பாடல்களிலிருந்து சிறந்த பாடல்கள் என எம் மனதில் தோன்றிய முப்பத்தியிரண்டு பாடல்களைச் சுட்டியுள்ளோம். இதுவும் காரணத்தோடே இங்கு எடுத்தாளப்பட்டுள்ளதாகக் கொள்க.

உலகெலாம் எவ்வாறு தமிழ் பரவியுள்ளதை என்பது இப்புத்தகத்தின் முதல் பகுதியில் சுட்டப்பட்டுள்ளது. கடந்த நூற்றாண்டின் அதாவது ஆங்கிலேய ஆட்சியின் கடைசிப் பகுதியில் அவர்கள் மேற்கொண்ட சாதிவாரிக் கணக்கெடுப்புகள் இப்புத்தகத்தில் எடுத்தாளப்பட்டுள்ளன. சென்னை மாகாணத்தின் கணக்கெடுப்புகளைச் சுட்டும்போதே, பிற மாகாணங்களின் அதாவது, பாம்பே மற்றும் கல்கத்தா மாகாணங்களின் விவரணைகளும் முக்கியமானவை என்றே மனதில் பட்டது. எனினும் அதனையும் சேர்த்தால் மிக விரிவாகப் போய்விடுமே எனும் எண்ணத்தில் அவற்றைத் தவிர்த்தோம். ஆயினும், மனத்தில் அது ஒரு குறையாக இருந்துகொண்டே இருந்தது.

எழுத்துப்பிழை நீக்கும் சமயத்தில் இரு மாகாணங்களின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு விவரங்களைச் சற்றே படித்துப் பார்த்தோம். குறிப்பாக, Imperial Census of 1881, Operation and Results in the Presidency of Bombay - including Sind by -J.A. Baines FSS. Vol. I - Text, மற்றும் Census of India -1891 Vol. V, The Lower Provinces of Bengal and their Feudatories - C.J. Odonnell

புத்தகங்களைப் படித்துப் பார்ததோம். இவற்றின் சாதிப் பட்டியல்கள் - The Caste table மிகப் பயனுள்ளவை என்பது தெளிவு. மேலும் சில வடஇந்திய சாதிகள் குறித்தும் சில தகவல்களைப் படித்துப் பார்த்தோம். குறிப்பாக குர்மிக்கள் (Kurmi) பற்றிய தகவல்கள். அவ்வாறே மர்வர் (Marwar) மற்றும் கள்வர் (Kalwar) பற்றிய தகவல்களும் தேடிப் படித்தோம். தக்காணத்தின் பெருந்தெய்வமாக அறியப்படும் கந்தோபர் (Khandoba) பற்றியும் அறிந்தோம்.

அன்றைய பாம்பே மற்றும் கல்கத்தாவின் கணக்கெடுப்பு விவரங்களை இங்கே விவரிக்க ஆரம்பித்தால் அது நீண்டு செல்லும். இவற்றை அறிந்ததிலும் ஒரு நன்மை இருக்கத்தான் செய்கிறது. அதாவது எமது கருதுகோளான முன்னைத் தமிழே வடஇந்தியாவில் திரிந்து வழங்குகிறது என்பதற்கு இந்த இருமாகாணங்களின் கணக்கெடுப்புப் பதிவுகளே தக்க சான்றுகளாக அமைகின்றன. ஆங்கிலேயரின் இக்கணக்கெடுப்புகளில் பிழை இருக்கலாம். தவறுகள் இருக்கலாம். எனினும் அவர்கள் சுட்டிய பெயர்களை ஒருவராலும் மறுக்க முடியாதல்லவா. நமக்கு அது போதுமே.

பீகாரின் கள்வர் கள் விற்பவர் எனில், அது தமிழ்ப் பெயரன்றோ. கள் என்பது அழகிய தமிழ்ச் சொல்லன்றோ. அது ஆங்கிலேய ஆட்சி வரையிலும் அதே பெயராலேயே வடஇந்திய நிலத்தில் அழைக்கப்பட்டு வந்திருக்கிறதெனில், அங்கு முன்னர் புழங்கிய மொழியும் தமிழன்றோ. மறுப்பார் யார்?

இராசபுதனத்தின் மர்வர் வீரத்திற்குப் பெயர் பெற்றவராம். மரு - maru- எனில் பாலையாம் - desert. வாட் - wat - எனில் குறிப்பிட்ட பகுதியாம் - particular area. மர்வர், மர்வார் என்பதற்குப் பொருள் பாலையின் ஒரு பகுதியாம் - region of desert. எனில் தமிழ் இலக்கியத்தில் சுட்டப்படும் பாலை மக்களான மறவர் என்பதே ராசபுதனத்தில் மர்வர் என வழங்கப்பட்டு வருவது அறியத்தக்கதல்லவா.

அன்றைய பாம்பே மாகாணத்தில் அதிக எண்ணிக்கையில் இருந்த சாதியாக - 34,63,055 பேர் - மகாராட்டிரத்தின் குன்பி - Kunbi வேளாண்சாதி குறிப்பிடப்படுகிறது. கன்பி - Kanbi எனவும் குறிப்பிடப்படும் இந்த வேளாண் சாதிக்கும், பீகார், உத்திரப்பிரதேசத்தின் குர்மி வேளாண் சாதிக்குமான தொடர்புறவுகள் எத்தகையது? வங்காளக் கணக்கெடுப்பில், அன்றைய பீகாரில் 12,52,744 பேர்

தங்களை குர்மி எனப் பதிந்துள்ளனர். அவ்வாறே அன்றைய பிகாரில் சுமார் 11,92,557 பேர் தங்களை கொய்ரி - Koiri எனும் வேளாண் சாதியாகக் குறிப்பிட்டுள்ளனர். கொய்ரிக்கும் அன்றைய ஒரியாவின் வேளாண் சாதியான குருரியாவுக்கும் - Ghururia உள்ள தொடர்பு எத்தகையது?

சற்றே சிந்தித்தால், கடந்த நூற்றாண்டு வரைக்கும்கூட, ஒட்டு மொத்த இந்திய நிலத்திலும் ஒரேவகையான பண்பாடே நிலவி வந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. தூரத்திற்கேற்றவாறு பண்பாடுகள் சற்றே மாறியுள்ளன. அவ்வாறே பெயர்களும் சற்றே திரிந்துள்ளன. பெருவாரியான இந்தியர் அதாவது இந்திய வேளாண் சாதிகளும், தொழில் சாதிகளும் மாறியது சுதந்திரத்திற்குப் பின்பே எனில் சரியே. இதைக்கூட இன்னும் சற்றே பின்நகர்த்தி, தொன்னூறுகளில் ஏற்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையின் மாற்றங்கள் என்றுகூடச் சுட்டலாம் போல. அந்தளவிற்கு இந்திய மனங்கள் பழமையில் இருந்துள்ளன என்பதே இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியது.

குடும்பா -குறும்பா - குர்மி - கொர்மி - கொர்வா - குன்பி - கன்பி - குர்னி - கோலி - பாலி - பாலே போன்ற பல்வேறு பெயர்களோடு தொடர்புடையவர்கள் வேளாண் சாதிகளாக இருப்பது ஆழ்ந்த பொருள்கொண்டது. இவர்களிடையே ஒத்த பண்பாடுகள், வாழ்க்கை முறைகள் இருப்பதும் ஒப்புநோக்கத் தக்கது. வங்காளத்தின் வேளாண்சாதி எதனால் ப்ர்மி - Barmi என அழைக்கப்படுகிறார். ஒரியாவின் வேளாண் சாதியாக பாளா - Baula சுட்டப்படுவது எதனால். பீகாரின் வேளாண் சாதியான பிண்ட் - Bind யார். அவர் வேளாண்சாதியாகவும், மீனவராகவும் சுட்டப்படுவதன் பொருளென்ன. பாண்டியைத்தான் பிண்ட் என்கிறார்களல்லவா.

கிர்ஷ்மி - Krsmi எனில் குர்மிகளுக்கு உழவராம் - Plough man. கோபியருக்கு கொரிஸ் - Koeris எனப் பொருளாம். குர்மன், குர்மின் எனவும் அழைக்கப்படும் குர்மிக்கள் மகாபாரதத்தோடு தங்களை அடையாளம் காண்பது மிகுந்த பொருள் கொண்டது. கங்கைச் சமவெளிப் பகுதியின் புகழ்பெற்ற குர்மி வேளாண் குடிகளுக்கும், தமிழ் நிலத்தின் குறும்பர்களுக்கும், குடும்பர்களுக்குமான உறவுகள் ஆராயப்பட வேண்டியவையல்லவா.

அன்றைக்கு மாகாணத்தில் அதிக எண்ணிக்கையில் இருந்த வங்காளத்தின் கைபர்தா - Kaibartta வேளாண் சாதிக்கும், தமிழ் நிலத்தின் களப்பிரர்களுக்கும் ஏதேனும் தொடப்பு இருக்குமா. ஏனெனில் வங்காளத்தின் பூவிற்பவர்கள் மாலைக்காரர் என அழைக்கப்படுகிறார். மாலைக்காரர், மாலை விற்பவர், பூக்கட்டி விற்பவரைக் குறிக்கும் மாலைக்காரர் தமிழ்ப் பெயர்தானே. சந்தேகமில்லையே. ஆனால் அவர்கள் மாலைக்காரர் (Garland makers) என்பதற்கு சமற்கிருதத்திலிருந்து பொருள் தருவிப்பதை, விளக்கம் சொல்வதை எப்படி ஏற்றுக் கொள்வது? Mali or malakar - mala and akar - a person who shapes mala. Origin of the word malakar came from Sanskrit - சமற்கிருதத்திலிருந்து தோன்றியதாகச் சுட்டப்படும் பொருள் விளக்கம் ஏற்கும் விதமாகவா இருக்கிறது. மாலைக்கார் தமிழ்ச் சொல் எனத் துணிந்து சுட்டலாம். அதற்கு தமிழின் மா, மல், மலை, மாலை என்பதன் பொருள் விளக்கம் அறிய வேண்டும். மா - எனில் பெரியது. மா - அழகானது. மலை - உயர்ந்தது. வட்டமானது. சுற்றுக் கொண்டது. மாலை - வட்டமானது. பெரியது. கண்ணி, சரம். பூக்களை ஒன்றாகச் சேர்த்துக் கட்டப்பட்டது. அதன் காரணமாக பெரிய உருவம் கொள்வது. தமிழின் மா - ஒலிப்பு சமற்கிருதத்தில் மகா எனப்படுகிறது. தழிழ்ச் சொல்லான மாலைக்காரர் என்பதை மலக்கார் எனக் கொண்டு பொருள் சுட்டுகிறார்களோ. அதனால்தான் மலா, அகா எனப் பதம் பிரிக்கிறார்கள். மாலைக்காரர் எனும் தமிழ்ச் சொல்லின் உண்மையான உச்சரிப்பு அங்கே அதாவது கிழக்கு இந்தியாவில் காலமாற்றத்தில் மருவி விட்டது எனக் கொள்ளாமன்றோ. ஆனாலும் மாலைக்காரர் என்பது மலக்கார் எனவே மாறியுள்ளது ஒப்பு நோக்கத்தக்கது. இப்படித்தான் இந்திய நிலமெங்கும் முன்னைத் தமிழ்ச் சொற்கள் மாறியும், மருவியும், திரிந்தும், சிதைந்தும் தற்போதும் புழங்கி வருகின்றன எனில் மிகையாகாது.

தமிழகத்தில் வெற்றிலைக் கொடிக்குப் பெயர் பெற்றவர் என குறிப்பிட்ட சாதியைச் சுட்ட முடியும். வங்காளத்தில் தம்புலி - தாம்பூலி -Tambuli வெற்றிலை வளர்ப்பவராம் - Betel growers. அன்றைய கணக்கெடுப்பில் வங்கத்தில் மாலைக்காரர்கள் 1,39,657 பேரும், தாம்பூலக்காரர்கள் 99,889 பேரும் இடம்பெற்றிருந்தனராம். வெற்றிலையை தாம்பூலம் எனச் சுட்டுவதன் அடிப்படையில் தாம்பூலக்காரர் என அழைக்கப்பட்டனரோ. வங்கத்திலும் ஒரியாவிலும் வெற்றிலைக்கு பருள் - barul எனப் பெயராம். காய்கறி விற்பவரை காடிக் (Vegetable

seller) என அழைப்பதன் பொருளென்ன. காய்கறி என்பதைத்தான் காடிக் என்கிறார்களோ. தமிழின் ஆயர்தான் வடக்கில் பாயலாகி விட்டதோ. Bayal - cow herds. எனில் வடக்கில் வெற்றிலைக்கு அதாவது தாம்பூலத்திற்கு கிலி Khili எனும் பெயர் எப்படி வந்தது. கிலி என்பது வெற்றிலை அதாவது இலை என்பதைத்தான் கிலி என்கிறார்கள் என்பது பொருத்தமன்றோ. கிலிவாலா - Khili wala - வெற்றிலை விற்பவர்.

வேட்டையாடுபவர் வேடர். தமிழின் வேடர் பல்வேறு மொழிகளும் பலவாறாகத் திரிந்துள்ளது. எனினும் அதன் ஒலிவடிவம் முற்றாக மாறிவிடவில்லை. அப்படி மாறவும் செய்யாது. வேடர் என்பது பேடர் -Bedar என மாறியுள்ளது. பேடர் என்றாலும் அவர் மெற்கொள்வதும் வேட்டைத் தொழில்தான். எனில் தமிழின் வேடர்தான் பேடராகத் திரிந்துள்ளது எனத் துணிந்து சொல்லலாம். பேடர் என்பது பேராத் - Berad எனவும் மாறியுள்ளது. அதுவே பெடியா - Bedia எனவும் சுட்டப்படுகிறது. பெடியா என்றாலும் Hunter தான்.

தமிழின் பரதவர் எனும் சொல்லும் பலவாறாக மாறியுள்ளது. பெருயா - Berua, Patra - பத்ரா, Berad - பெரத், சாம்பார் - Chaambhaar போன்றவை சில உதாரணங்கள். மேற்கிந்தியாவின் மாங்கலாக்கள் - maangeles - ஒருவேளை மீன்காரரோ. மீனவர், மீன்காரார் என்பதைத்தான் மாங்களர் எனச் சுட்டுகின்றனர் போலும். தமிழின் பாதவர்தான் இப்படி மாறியிருக்கிறதா எனில், ஆம் என உறுதியாகச் கொள்ளலாம். தமிழின் சங்க இலக்கியத்தில் அதாவது குறைந்தது ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலேயே தமிழில் பரதவர் என்னும் சொல்வழக்கு இருந்துள்ளமை அறியத்தக்கது.

தக்காணத்தின் புகழ்பெற்ற காக்கும் கடவுளான காந்தோபா தமிழின் கந்தப்பன் எனில் மிகையாகாது. தமிழ் நிலத்தின் கந்தப்பன்தான் இந்தியாவின் மத்திய பகுதியில், குறிப்பாக மராத்தியத்தில் காந்தோபா என வணங்கப்பட்டு வருகிறார். கந்தோபா என்பதற்கான மூலமாக Khadga - Sword, Pa - Father சுட்டப்படுகிறது. அதாவது வாளால் எதிரிகளை அழித்து மக்களைக் காக்கும் தந்தையாம், கடவுளாம். தமிழின் மரபின்படி இது பொருத்தமில்லையல்லவா. தமிழில் கந்தன், கடம்பன் போன்ற பல பெயர்கள் முருகனுக்குச் சுட்டப்படுவது குறிப்பிடத்தக்கது.

தமிழின் கந்தசாமியைப் போன்றே மராத்தியத்தின் கந்தோபாவிற்கும் இரு மனைவியர். ஒருவர் மகால்சா - Mhalsa, இன்னொருவர் பனை, பானு, பானுபாய் - Banai, Banu, Banubai. மகல்சா மிகவும் அடக்கமானவராம், உயர்ந்த குடியில் பிறந்தவராம், நாகரிகமானவராம். பனை இதற்கு நேர்மாறானவராம். எனில் யார் இந்த பனை எனில், Banai is believed to be the daughter of Indra - பனை இந்திரனின் மகளாக இருக்கலாமென நம்பப்படுகிறது. தமிழர்க்குப் போதுமே. இப்போது எல்லாம் புரிந்துவிட்டதல்லவா - தெய்வானையைத்தான் பனை, பானு எனச் சுட்டுகிறார்கள். தமிழில் தெய்வானை உயர்குலத்தவராக அதாவது தேவர் குலத்தவராக அறியப்பட, மராத்தியத்திலோ அவர் அப்படியே வள்ளியின் குணத்தவராகக் மாற்றிக் கூறப்படுகிறார். மகிசி என்பதைத்தான் மகல்சா என்கிறார்களோ. எனில் இது பல்வேறு கருத்துக்களுக்கும் இடம்தரக் கூடியது. கதம்பர்களின் நிலம் மைசூரு என்பதும், அங்கே முக்கியத் தெய்வமாக இருப்பது மகிசி என்பதும் அறியத்தக்கது. மகல்சாவுக்கு சமைக்கக் கூடத் தெரியாதாம். எனில் உறுதியாக அவர் நமது வள்ளிக் குறத்திதானே.

தமிழ் மொழியும், தமிழர் பண்பாடும், தமிழ் நிலத்தின் வரலாறும் இந்தியா முழுமைக்கும் எப்படிப் பரவியுள்ளது, காலப்போக்கில் எப்படியெல்லாம் திரிந்துள்ளது எனப்தற்குச் சான்றுகள் போதுமல்லவா. இன்னும் வேண்டுமெனில் யாம் கொடுப்பதற்குத் தயாராகவே உள்ளோம். கிடைக்கும் சான்றுகளிலிலிருந்து எமது எண்ணம், அறிவு, சிந்தனை சரியே. அதாவது உயர்தனிச் செம்மொழியான நம் தமிழே முன்பு இந்திய நிலமெங்கும் செழித்திருந்தது. இந்தியா என்றில்லாமல் முன்பு உலகமெங்கும் பரந்து விரிந்திருந்ததும் நமது அமுதத் தமிழே.

இப்புத்தகத்தின் முடிவாகக் கொள்ளவேண்டியது, தமிழ்ப் பலவர் மரபு காலமெல்லாம் சுட்டி வந்த “தமிழே உலகின் முந்துமொழி” என்பது சரியே. அக்கூற்று உண்மையே. குமரியில் தோன்றிய தமிழ்தான் முன்பு பாரத நிலமெங்கும் புழங்கியது. குமரியின் முந்துமொழியே உலகெங்கும் பரவியிருக்கிறது. மானுடகுலத்தின் முந்துமொழியான தமிழ் மொழியே, காலப்போக்கில் உலகின் பல்வேறு மொழிகளாக மாற்றம் கண்டுள்ளது.

தமிழ்க் கடவுளாம் முருகப் பெருமான் திருவடிகள் போற்றி!

**வாழிய ஞானத்தந்தை; வாழிய அன்னையர்!!**

கடந்த திசம்பர் (2018) முதல் செப்டம்பர் மாதம் (2019) வரை, அதாவது கடந்த பத்து மாதங்களாக எமது முழுச் சிந்தனையும், செயலும், ஆற்றலும் இப்புத்தகத்திற்கே முழுமையாகக் கொள்ளப்பட்டது. அதில் எமக்கு மிகுந்த பெருமையே. எமது முயற்சி, உழைப்பு ஏதோ ஒருவிதத்தில் மானுட சமூகத்திற்கு நன்மையாக அமையும் என்பதே எமது எண்ணம், நம்பிக்கை. எமது நம்பிக்கை தமிழின்மீது, தமிழ்ப் புலவர் மரபின்மீது கொண்ட நம்பிக்கை. அது நிச்சயம் வெற்றி பெறும் என்பது திண்ணம்.

இப்புத்தகத்தை சிறப்பாகத் தட்டச்சு செய்த ஸ்ரீராகவிக்கும், அழகுற எழுத்துப் பிழைநீக்கம் செய்த ஸ்ரீஅனுஷ்யாவுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

நன்றி - ஸ்ரீசங்கரரின் கனகதார தோத்திரம் - வாரஸ்ரீ அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு - பாம்பே சகோதரிகள் பாடியது, ஸ்ரீவேங்கடேச சுப்ரபாதம் - தமிழ் மொழிபெயர்ப்பு - ஸ்ரீசித்ரா மற்றும் ஸ்ரீஅலர்மேலு பாடியது, ஸ்ரீரங்கநாத பிள்ளை பெருமாள் அய்யங்காரின் ஊஞ்சல் இராகமாலிகா, ஸ்ரீஅனவ்ஸ்கா கே. அப்பாசாமியின் மங்கள வாழ்த்துப் பாடல், ஸ்ரீஅருணாச்சலக் கவியின் ஸ்ரீராமச்சந்திரனுக்கு மங்கள வாழ்த்துப் பாடல்.

உலகினர் அனைவருக்கும் நன்றி. நன்றி தோழமைகளே.

**வாழிய செந்தமிழ்; வாழ்க நற்றமிழர்!**

வாழிய பாரத மணித் திருநாடு!

வாழிய எங்கள் அன்னையாம் தேமதுரத் தமிழ்!

வாழிய தமிழ்ப் புலவர் மரபு; வாழிய தமிழ் வேந்தர் மரபு!

வாழ்க நிரந்தரம்; வாழிய தமிழ்மொழி!

வாழ்க மக்கள்; வாழிய உலகம்!

வாழிய காவிரி; வாழிய கண்ணன்!

**பேரன்னையர், பெருந்தந்தையர் வாழிய வாழியவே!!**

மங்களமான, மங்களங்கள் நிறைந்த எமதன்பு அறிவுத் தந்தைக்கு, ஞானத்தின் ஒளியான எந்தைக்கு பல்லாண்டும், மங்களங்களும்..

கண்ணனின் இணையடித் தாமரைகள் போற்றி!

கமலபாதங்கள் சரணம் தந்தையே!

கிருஷ்ணாய வாசுதேவாய

தேவகிநந்தனாய ச

நந்தகோப குமாராய

கோவிந்தாய நமோ நமஹ!

வாசுதேவசுதம் தேவம்

கம்ச சாணுர மர்த்தனம்

தேவகி பரமானந்தம்

கிருஷ்ணம் வந்தே ஜகத் குரும்!

மங்களம் மங்களம் ஜெயமங்களம் சுபமங்களம்!!

நித்ய கல்யாணனுக்கும் நீலமேக வண்ணனுக்கும்

பண்டரிநாதனுக்கும் பாண்டவர் சகாயனுக்கும்

கொண்டல் வண்ணனுக்கும் கோதண்ட இராமனுக்கும்

முக்தியளிப்பவருக்கும் மூவுருவானருக்கும்

மங்களம் மங்களம் ஜெயமங்களம் சுபமங்களம்!!

கோவைமணி வாயனுக்கு மாயனுக்கு மங்களம்!

கோதண்டக் கையனுக்கு மெய்யனுக்கு மங்களம்!

கிருஷ்ண நந்த முகுந்த காகுத்தனுக்கு மங்களம்!

வாமன மாதவ கோவிந்த இராகவனுக்கு மங்களம்!

லெட்சுமியின் தலைவனுக்கு மங்களம்!

திருமறுமார்பனுக்கு மங்களம்!

கோசலை மதலைக்கு தயரதன் மைந்தனுக்கு மங்களம்!

மைதிலி மணவாளனுக்கு மங்களம்!

சங்கு சக்கரத்தானுக்கு மங்களம்!

ருக்மணி சத்யபாமா சுந்தரனுக்கு மங்களம்!

திருமாலுக்கு மங்களம்!

திவ்வியப் பிரபந்தங்களுக்கு மங்களம்!

திருமகளுக்கு மங்களம்!

திவ்விய தேசங்களுக்கு மங்களம்!

கீதாசார்யனுக்கு வெற்றி வீரனுக்கு மங்களம்!

யமுனையின் நாயகனுக்கு அயோத்தியா வாசனுக்கு

நித்ய செய மங்களம்.. நித்ய சுப மங்களம்..

**ஹரி:ஓம்**

திருவாழி! திருவாழி சங்கம் வாழி!

திருவனந்தன் கருடன் சேனையர்க்கோன் வாழி!

அருள்மாறன் முதலாம் ஆழ்வார்கள் வாழி!

அளவில் குணத்தெதிராசன் அடியார் வாழி!

இருநாலு திருவெழுத்தின் ஏற்றம் வாழி!

ஏழ்உலகும் நான்மறையும் இனிது வாழி!

பெருவாழ்வு தந்தருளும் பெருமான் வாழி!

பெற்றதாயினும் ஆயினசெய்யும் திருமந்திரம் வாழி!

பெரிய கோவிலுக்கு மங்களம்!

பெரிய பிராட்டி பெரிய பெருமாளுக்கு மங்களம்!

**ஸ்ரீரங்க நாயகிக்கு மங்களம்!!**

**திருவரங்க மணவாளருக்கு மங்களம்!!**

**ஓம் நமோ நாராயணாய நமஹ!!**

மனத்துள்ளான் மாகடல் நீருள்ளான் மலராள்

தனத்துள்ளான் தண்துழாய் மார்பன் - சினத்துச்

செருநர்உகச் செற்றுகந்த தேங்கோத வண்ணன்

வருநரகம் தீர்க்கும் மருந்து

- ஸ்ரீபேயாழ்வார் திருவடிகள் போற்றி!



# 19 MAY Friday

| 1989 | Su | Mo | Tu | We | Th | Fr | Sa | Su | Mo | Tu | We | Th | Fr | Sa | Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| APR | - | - | - | - | - | - | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| - | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | - | - | - | - | - | - |

[illegible]

7th october [illegible]
([illegible])
[illegible]

[illegible]

[illegible]

"[illegible]" [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

romantic
I am a lover of [illegible]

# நாங்கள் காப்பவர்கள்

நாங்கள் காப்பவர்கள்
நாங்கள் மண்ணைக் காப்போம்
மழையைக் காப்போம்
மரத்தைக் காப்போம்
மனிதரைக் காப்போம்

நாங்கள் மண்ணைப் பொன்னாக்குவோம்
மழையை உணவாக்குவோம்
பயிரை உயிராக்குவோம்
விதையை மரமாக்குவோம்
நாங்கள் காப்பவர்கள்

நாங்கள் மண்ணைக் காக்க மண்ணாவோம்
மழையைக் காக்க மழையாவோம்
மொழியைக் காக்க மொழியாவோம்
உயிரைக் காக்க உயிராவோம்
நாங்கள் காப்பவர்கள்

நாங்கள் உயிர்களைக் காப்போம்
உலகங்களைக் காப்போம்
உறவுகளைக் காப்போம்
உள்ளங்களைக் காப்போம்
நாங்கள் காப்பவர்கள்

நாங்கள் எளியோரைக் காப்போம்
பெண்களை பேணிப் பாதுகாப்போம்
முன்னோரைக் காத்து நிற்போம்
தெய்வங்களுக்கும் காவல் இருப்போம்
நாங்கள் காப்பவர்கள்

நாங்கள் இயற்கையைக் காப்போம்
இறைவனைக் காப்போம்
இதயங்களைக் காப்போம்
ஈரேழு உலகங்களையும் காப்போம்
நாங்கள் காப்பவர்கள்

நாங்கள் காப்பவர்கள்
நாங்கள் அணுவைப் பாதுகாப்போம்
அண்டத்தைப் பாதுகாப்போம்
அகிலத்தைப் பாதுகாப்போம்
அனைத்தையும் பாதுகாப்போம்
நாங்கள் காப்பவர்கள்

நாங்கள் காப்பவர்கள்
எங்களுக்குத் தோல்வி இல்லை
எங்களுக்குத் துயரமில்லை
எங்களுக்கு வலி இல்லை
எங்களுக்கு வருத்தமில்லை
நாங்கள் காப்பவர்கள்

நாங்கள் காப்பவர்கள்
நாங்கள் வெல்வோம்
எப்போதும் நாங்களே வெல்வோம்
நாங்கள் எப்போதும் வெல்வோம்
நாங்கள் காப்பவர்கள்

நாங்கள் அன்பால் காத்து நிற்போம்
அறிவால் காத்து நிற்போம்
வீரத்தால் காத்து நிற்போம்
ஞானத்தால் காத்து நிற்போம்
நாங்கள் என்றென்றும் காத்து நிற்போம்.

தமிழ் கிருஷ்ணா